# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டம்

---

*(2007 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 20 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---


*2007, மாச்சு மாதம் 23 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

**விலை : ரூபா** **தபாற் செலவு : ரூபா**

உள்ளடக்கம்

*பிரிவு* *பக்கம்*


1. சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும் 1

பாகம் I

**கம்பெனிகளைக் கூட்டிணைத்தலும் தொடர்புபட்ட கருமங்களும்**

*கம்பெனிகளின் அத்தியாவசியத் தனிப்பண்புகள்*

2. கம்பெனியொன்றின் சட்ட அந்தஸ்தும் தகைமையும் 1

3. வெவ்வேறு வகைப்பட்ட கம்பெனிகள் 2

**கம்பெனிகளைக் கூட்டிணைத்தல்**

4. கம்பெனியொன்றைக் கூட்டிணைக்கும் முறை 3

5. கம்பெனியைக் கூட்டிணைத்தல் 4

**கம்பெனியின் பெயர்கள்**

6. பெயர் பற்றிய தேவைப்பாடுகள் 5

7. பெயர்கள் மீதான மட்டுப்பாடு 5

8. பெயர் மாற்றம் 7

9. பெயர் பற்றிய பகிரங்க அறிவித்தல் 9

10. பெயரை மாற்றுவதற்கான பணிப்பு 9

11. கம்பெனியின் அந்தஸ்து மாற்றப்படுவதன்மீது பெயர் மாற்றம் 11

12. கம்பெனிப் பெயரினதும் கம்பெனி இலக்கத்தினதும் பயன்பாடு 12

*பிரிவு* *பக்கம்*

**அமைப்பகவிதிகள்**

13. அகவிதிகளின் உள்ளடக்கம் 14

14. மாதிரி அமைப்பக விதிகளின் ஏற்புடைமை 14

15. அமைப்பக விதிகளை ஏற்றங்கீகரித்தல் அல்லது திருத்துதல் 15

16. அமைப்பக விதிகளின் பயன் 16

17. அமைப்பக விதிகளில் குறிக்கோள்கள் பற்றிய கூற்றின் பயன் 16

18. அமைப்பக விதிகளின் பிரதியொன்றைப் பெறுவதற்கு பங்குதாரர்களுக்குள்ள உரிமை 17

**கம்பெனி ஒப்பந்தங்கள் முதலியன**

19. ஒப்பந்தஞ் செய்யும் முறை 18

20. அற்றோனித் தத்துவகாரர்கள் 20

21. பணிப்பாளர்கள், அலுவலர்கள், மற்றும் முகவர்கள் ஆகியோரின் அதிகாரம் 22

22. அமைப்பு வழி அறிவித்தல் இல்லை 22

**கூட்டிணைப்பிற்கு முன்னரான ஒப்பந்தங்கள்**

23. கூட்டிணைப்பிற்கு முன்னரான ஒப்பந்தங்கள் வலுவாக்கப்படலாம் 22

24. கூட்டிணைப்பிற்கு முன்னரான ஒப்பந்தங்களில் உட்கிடையான கட்டுறுத்துகள் 23

25. வலுவாக்கச் செய்யத் தவறுதல் 24

*பிரிவு* *பக்கம்*

**ஆவணங்கள் கம்பெனியால் மெய்யென்றுறுதி செய்யப்படல்**

*26. ஆவணங்கள் கம்பெனியால் மெய்யென்றுறுதி செய்யப்படல்* *24*

## பாகம் II

**தனியார் கம்பெனிகள்**

*27. தனியார் கம்பெனியின் அமைப்பக விதிகள்* *24*

*28. கம்பெனி தனியார் கம்பெனியாக இல்லாதொழிதல்* *25*

*29. கம்பெனி தனியார் கம்பெனியாக வரலாம்* *26*

*30. தனியார் கம்பெனிகள் அக்கறை பற்றிய இடாப்பை வைத்திருக்கத் தேவையில்லை* *26*

*31. பங்குதாரர்களின் ஏகமனதான உடன்பாடு* *27*

## பாகம் III

**உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பெனிகள்**

*32. உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பெனியொன்றைக் கூட்டிணைப்பதற்கான விண்ணப்பம்* *29*

*33. உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பெனி அமைப்பக விதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்* *30*

*34. தருமக் கம்பெனிகளினதும் வேறு கம்பெனிகளினதும் பெயர்களில் "வரையறுக்கப்பட்ட" என்பதைத் தவிர்ப்பதற்கான தத்துவம்* *30*

*35. உத்தரவாதத்தினால் வரையறுக்கப்பட்ட கம்பெனிகளுக்கு ஏற்புடையனவான ஏற்பாடுகள்* *32*

## பாகம் IV

**பங்குகளும் தொகுதிக்கடன்களும் முற்பகர்வு**


36. முற்பகர்வுக்குத் தேதியிடுதல் 33

37. முற்பகர்விலுள்ள விபரங்கள் பற்றிக் குறிப்பான தேவைப்பாடுகள் 33

38. நிபுணரால் அளிக்கப்பட்ட கூற்றைக் கொண்டுள்ள முற்பகர்வை வழங்குவதற்கு அவரின் சம்மதம் 37

39. முற்பகர்வில் பெயரை உள்ளடக்குவதற்கு வங்கியினது அல்லது சட்டத்தரணியினது அல்லது கணக்காய்வாளரினது சம்மதம் அவசியம் 38

40. முற்பகர்வைப் பதிவுசெய்தல் 39

41. முற்பகர்விலுள்ள பிறழ்கூற்றுக்களுக்கான குடியியற் பொறுப்பு 42

42. முற்பகர்விலுள்ள உண்மையற்ற கூற்றுகளுக்கான குற்றவியற் பொறுப்பு 48

43. விற்பனைக்கென பங்குகளின் அல்லது தொகுதிக் கடன்களின் கொடை முனைவைக் கொண்டுள்ள ஆவணம் ஒரு முற்பகர்வாகக் கருதப்படுதல் 48

44. முற்பகர்வுகள் தொடர்பான ஏற்பாடுகளின் பொருள் கோடல் 50


**பிரித்தொதுக்குகை**


45. ஆகக்குறைந்த ஒப்பப்பணம் பெறப்பட்டாலொழிய, பிரித்தொதுக்குகை செய்வதற்குத் தடை 51

46. ஒழுங்கற்ற பிரித்தொதுக்குகையின் பயன் 52

47. பங்குகளுக்கும் தொகுதிக்கடன்களுக்குமான விண்ணப்பங்களும், அவற்றின் பிரித்தொதுக்குகையும் 53

48. பொதுமக்களுக்குப் பங்குகளை அல்லது தொகுதிக் கடன்களை கொடை முனைவு செய்தல் பற்றிய குறிப்பீட்டின் பொருள்கோடல் 55

*பிரிவு* *பக்கம்*

**பங்குகளின் தன்மையும் வகைகளும்**


49. பங்குகளின் தன்மையும் வகைகளும் 56


**பங்குகளை வழங்குதல்**


50. தொடக்கப் பங்குகள் 57

51. பங்குகளை வழங்குதல் 57

52. பங்குகளை வழங்குவதற்கான பிரதிபயன் 59

53. புதிய வழங்குகைகளுக்கான முன்வாங்கு உரிமைகள் 59

54. பங்குகளை வழங்கும் விதம் 60


**பங்குகள்மீதான அழைப்புகள்**


55. பங்குகள் மீதான அழைப்புகள் 60


**பங்குதாரர்களுக்கு விநியோகித்தல்**


56. விநியோகித்தல்கள் 61

57. கடனிறுக்க வகையுடைமைப் பரீட்சிப்பு 62

58. கூறப்பட்ட மூலதனம் 63

59. கூறப்பட்ட மூலதனத்தைக் குறைத்தல் 64

60. பங்கிலாபங்கள் 66

61. பகிர்ந்தளிப்புத் தொகைகளை அறிவிடுதல் 66

62. பங்குதாரரின் பொறுப்பைக் குறைத்தல் பகிர்ந்தளிப்பொன்றாதல் 68

**பங்குகளை மீள் கொள்வனவு செய்தல்**

63. கம்பெனி அதன் சொந்தப் பங்குகளைக் கொள்ளுதல் செய்ய லாம் அல்லது மீட்கலாம் 69

64. சொந்தப் பங்குகளை கொள்வனவு செய்தல் 70

65. பங்குகளைக் கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தத்தை வலி யுறுத்துதல் 71

**பங்குகளை மீளல்**

66. "மீளப்படற்பாலது" என்பதன் பொருள் 72

67. கம்பெனியின் விருப்புத் தெரிவின் பேரில் மீளல் 72

68. பங்குதாரின் விருப்புத் தெரிவின் பேரில் மீளல் 73

69. நிர்ணயிக்கப்பட்ட தேதியன்று மீளுதல் 73

**பங்குகளைக் கொள்வனவு செய்தல் தொடர்பிலான நிதியுதவி**

70. நிதியுதவி அளிப்பதன் மீதான மட்டுப்பாடுகள் 74

71. 70 ஆம் பிரிவினால் தடை செய்யப்படாத கொடுக்கல் வாங்கல் கள் 75

**குறுக்குப் பங்கு வைத்திருப்புகள்**

72. கொளிக் கம்பெனியில் துணைநிலைக் கம்பெனி பங்குகள் வைத்திருப்பதன் மீதான நிலைப்பாடு 77

**பங்குகளினதும் தொகுதிக்கடன்களினதும் கைமாற்றமும், உரித்துப் பற்றிய சான்றும், பிறவும்**

73. கைமாற்றற் சாதனம் சமர்ப்பிக்கப்பட்டாலன்றி கைமாற்றல் பதிவு செய்யப்படுதலாகாது 78

74. சட்டமுறைப் பிரதி நிதியினால் கைமாற்றஞ் செய்யப்படுதல் 79

*பிரிவு* *பக்கம்*

75. கைமாற்றுபவரின் வேண்டுகோளின் பேரில் கைமாற்றத்தைப் பதிவு செய்தல் 79

76. கைமாற்றத்தைப் பதிவு செய்வதற்கு மறுத்தல் பற்றிய அறிவித்தல் 79

77. கைமாற்றங்களை அத்தாட்சிப்படுத்தல் 80

78. சான்றிதழ்களை வழங்குவது தொடர்பில் கம்பெனியின் கடமைகள் 81

79. சான்றிதழ் உரித்தின் சான்றாக இருத்தல் 83

80. மரண சாதன அதிகாரப்பத்திரம் முதலியன வழங்கப்பட்டதற்கான சான்று 83

**தொகுதிக்கடன்கள் பற்றிய சிறப்பு ஏற்பாடுகள்**

81. தொகுதிக்கடன்கள் வைத்திருப்போர் இடாப்பை பார்வையிடுவதற்கும் ஏதேனும் நம்பிக்கைப் பொறுப்பு உறுதியின் பிரதிகளை பெற்றுக் கொள்வதற்கும் தொகுதிக்கடன் வைத்திருப்போர்களினதும் பங்கு தாரர்களினதும் உரிமை 83

82. நம்பிக்கைப் பொறுப்பாளராகச் செயற்படுவதிலிருந்து பணிப்பாளர்கள் தடை செய்யப்படுதல் 85

83. இடையறா தொகுதிக்கடன்கள் 85

84. குறித்தசில விடயங்களில் மீட்கப்பட்ட தொகுதிக் கடன்களைத் திரும்ப வழங்கும் தத்துவம் 86

85. தொகுதிக் கடன்களுக்கு ஒப்பப்பணம் வழங்குவதற்கு ஆன ஒப்பந்தங்களின் குறித்த நிறைவேற்றம் 88

பாகம் V

**பங்குதாரர்களும் அவர்களுடைய உரிமைகளும் கடப்பாடுகளும்**

86. பங்குதாரர் என்பதன் பொருள் 88

**பங்குதாரருக்குள்ள பொறுப்பு**


87. பங்குதாரருக்குள்ள பொறுப்பு 89

88. அழைப்புகளுக்கான பொறுப்பு 90

89. பொறுப்பு அதிகரிக்கப்படுவதற்கு பங்குதாரர்கள் உடன்பட வேண்டும் 91


**பங்குதாரர்களுக்குள்ள தத்துவங்கள்**


90. பங்குதாரர்களுக்கு ஒதுக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகித்தல் 91

91. சாதாரண தீர்மானம் மூலம் தத்துவங்கள் பிரயோகிக்கப்படுதல் 92

92. சிறப்புத் தீர்மானம் மூலம் தத்துவங்கள் பிரயோகிக்கப்படுதல் 92


**சிறுபான்மைப் பங்குகளை உடமை நீக்குவதற்கு உள்ள உரிமைகள்**


93. பங்குகளைக் கொள்வனவு செய்யுமாறு பங்குதார கம்பெனியைத் தேவைப்படுத்தலாம் 93

94. கொள்வனவு செய்யுமாறு தேவைப்படுத்தும் அறிவித்தல் 94

95. கம்பெனி கொள்வனவு செய்தல் 95

96. மூன்றாந் திறத்தவரால் பங்குகள் கொள்வனவு செய்யப்படுதல் 97

97. நீதிமன்றம் விலக்களிக்கலாம் 97

98. கம்பெனி கடனிறுக்க வகையற்றதாக இருத்தல் நீதிமன்றம் விலக்களிப்பு வழங்கலாம் 99

99. பங்குதாரரின் உரிமைகளை மாற்றுதல் 100

100. பங்குகளைக் கொள்வனவு செய்வதற்கு பங்குதாரர் கம்பெனியை தேவைப்படுத்தலாம் 101

101. வழக்குகள் செல்லுபடியற்றனவாகா 101

## பாகம் VI

### தாக்கீடுகளைப் பதிவுசெய்தல்

*பதிவாளரிடம் தாக்கீடுகளைப் பதிவுசெய்தல்*


102. இலங்கையில் பதிவு செய்யப்பட்ட கம்பெனிகளால் உருவாக்கப் பட்ட தாக்கீடுகளைப் பதிவுசெய்தல் 102

103. குறித்தசில விடயங்களில், பதிவு செய்யப்படாத தாக்கீடுகள் வறிதாதல் 107

104. கொள்ளப்பட்ட ஆதனம் மீது மீதான தாக்கீடுகளைப் பதிவு செய்தல் கம்பெனியின் கடமையாதல் வேண்டும் 108

105. தாக்கீடுகள் இடாப்பு பதிவாளரால் வைத்திருக்கப்படுதல் 109

106. தொகுதிக் கடன்கள் மீது பதிவுச்சான்றிதழைப் புறக்குறிப்பிடுதல் 110

107. திருப்தி மற்றும் விடுவித்தல் பற்றிய பதிவீடுகள் 111

108. தாக்கீடுகள் இடாப்பைத் திருத்துதல் 111


### கம்பெனியின் தாக்கீடுகள் இடாப்பு பற்றியனவும், தாக்கீடுகளை உருவாக்கும் சாதனங்களின் பிரதிகள் பற்றியனவுமான ஏற்பாடுகள்


109. தாக்கீடுகளை உருவாக்கும் சாதனங்களின் பிரதிகள் கம்பெனியால் வைத்திருக்கப்படுதல் வேண்டும் 112

110. கம்பெனியின் தாக்கீடுகள் இடாப்பு 112


### தாக்கீடுகள் இடாப்பை மீளாய்வு செய்தல்


111. தாக்கீடுகள் இடாப்பை மீளாய்வு செய்தல் 113

**கடல்கடந்த கம்பெனிகளுக்கு இப்பாகத்தின் ஏற்புடைமை**

112. கடல்கடந்த கம்பெனி ஒன்றினால் உருவாக்கப்பட்ட தாக்கீடுகளுக்கும் கொள்ளப்பட்ட தாக்கீட்டுக்கு அமைவான ஆதனத்திற்கும் இப்பாகத்தின் ஏற்புடைமை 115

## பாகம் VII

**முகாமையும் நிருவாகமும்**

*பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்*

113. கம்பெனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் 115

114. பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தை மாற்றுதல் 116

115. பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தை மாற்றுவதற்கான தேவைப்பாடு 116

**கம்பெனிப் பதிவேடுகள்**

116. கம்பெனிப் பதிவேடுகளின் அமைவிடம் 118

117. பதிவேடுகளின் படிவம் 121

**கம்பெனிப் பதிவேடுகளைப் பார்வையிடுதல்**

118. பணிப்பாளர்களினால் பதிவேடுகள் பார்வையிடப்படுதல் 121

119. பங்குதாரர்களினால் கம்பெனிப் பதிவேடுகள் பார்வையிடப்படுதல் 122

120. கம்பெனிப் பதிவேடுகளின் பகிரங்கப் பார்வையிடுதல் 123

121. பார்வையிடும் முறை 124

122. ஆவணங்களின் பிரதிகள் 124

**பங்கு இடாப்பு**

123. கம்பெனி, பங்கு இடாப்பைப் பேணுதல் 125

*பிரிவு* *பக்கம்*

124. பங்கு இடாப்பு இடம் 126

125. இலங்கைக்கு வெளியே இடாப்பில் பதிவு செய்யப்பட்டுள்ள பங்குகளின் விடயத்தில் முத்திரைத் தீர்வைகள் 128

126. பங்குதாரர்களின் சுட்டு 128

127. இடாப்பை மூடுவதற்கான தத்துவம் 129

128. இடாப்பைத் திருத்துவதற்கான நீதி மன்றத்தின் தத்துவம் 129

129. நம்பிக்கைப் பொறுப்புகள் பங்கு இடாப்பில் பதிவீடு செய்யப்படுதலாகாது 131

130. பங்கு இடாப்பு சான்றாதல் 131


**ஆண்டு விபரத்திரட்டு**


131. ஆண்டு விபரத்திரட்டு 133

132. தனியார் கம்பெனியால் ஆண்டு விபரத் திரட்டுடன் வெளிப்படுத்துகையும் சான்றிதழும் அனுப்பப்படுதல் வேண்டும் 133


**கூட்டங்களும் கூட்ட நடவடிக்கைகளும்**


133. ஆண்டுப் பொதுக் கூட்டம் 134

134. தேவைப்படுத்துகையின் மீது அதிவிசேட பொதுக் கூட்டத்தைக் கூட்டுதல் 136

135. கூட்டங்களைக் கூட்டுவதற்கான அறிவித்தலின் கால அளவு 137

136. கூட்டங்களும் வாக்குகளும் தொடர்பிலான ஏற்பாடுகள் 139

137. கூட்டம் நடாத்துவதற்கு கட்டளையிடுவதற்கான நீதிமன்றத்தின் தத்துவம் 140

138. பிற கம்பெனிக் கூட்டங்களில் கம்பெனிகளும் கடன்தருநர்களும் பிரதிநிதித்துவஞ் செய்தல் 141

| பிரிவு | பக்கம் |
|---|---|
| 139. பதிலிகள் | 142 |
| 140. வாக்கெடுப்பொன்றைக் கோருவதற்கான உரிமை | 145 |
| 141. வாக்கெடுப்பொன்றிலான வாக்களிப்பு | 145 |
| 142. தேவைப்படுத்துகையின்மீது பங்கு தாரர்களின் தீர்மானங்களைச் சுற்றியனுப்புதல் | 146 |
| 143. விசேட தீர்மானங்கள் | 149 |
| 144. கூட்டத்திற்குப் பதிலான தீர்மானம் | 150 |
| 145. விசேட அறிவித்தல் தேவைப்படும் தீர்மானங்கள் | 152 |
| 146. ஒத்தி வைக்கப்பட்ட கூட்டங்களின் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் | 152 |
| 147. பங்குதாரர்கள் கூட்டங்களினதும் பணிப்பாளர்கள் கூட்டங்களினதும் நடவடிக்கை நிகழ்ச்சிக் குறிப்புகள் | 153 |
| **கணக்குப் பதிவேடுகள்** | |
| 148. கணக்குப் பதிவேடுகளை வைத்திருப்பதற்கான கடமை | 154 |
| 149. கணக்குப் பதிவேடுகள் வைத்திருக்கப்பட்டிருக்கும் இடம் | 156 |
| **நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கான கடமை** | |
| 150. நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கான கடப்பாடு | 157 |
| 151. நிதிக் கூற்றுக்களின் உள்ளடக்கமும் வடிவமும் | 158 |
| 152. தொகுதி நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பதற்குள்ள கடப்பாடு | 158 |
| 153. தொகுதி நிதிக் கூற்றுக்களின் உள்ளடக்கமும் வடிவமும் | 159 |
| **கணக்காய்வாளர்** | |
| 154. கணக்காய்வாளர் நியமனம் | 162 |

*பிரிவு* *பக்கம்*

155. கணக்காய்வாளர்களின் கட்டணங்களும் செலவுகளும் 163

156. கணக்காய்வாளராக பங்குடைமையை நியமித்தல் 164

157. கணக்காய்வாளரின் தகைமைகள் 164

158. சுயமான மீள் நியமனம் 166

159. முதலாவது கணக்காய்வாளர் நியமனம் 166

160. கணக்காய்வாளரை மாற்றீடு செய்தல் 167

161. கணக்காய்வாளராக பதவி வகிக்காதொழிகின்ற ஆளினால் செய்யப்படும் கூற்று 167

162. கணக்காய்வாளர் அக்கறை முரண்பாட்டைத் தவிர்த்தல் 169

163. கணக்காய்வாளரின் அறிக்கை 169

164. கணக்காய்வாளர் தகவல்களை அணுகிப் பெறுதல் 170

165. பங்குதாரர்களின் கூட்டத்தில் கணக்காய்வாளர் சமுகமாயிருத்தல் 172

166. ஆண்டறிக்கையை தயாரிப்பதற்கான கடப்பாடு 172

167. ஆண்டறிக்கையை பங்குதாரர்களுக்கு அனுப்புதல் 173

168. ஆண்டறிக்கையின் பொருளடக்கம் 173

169. அறிக்கை முதலியவற்றை அனுப்பத் தவறுதல் 176

**நிதிக் கூற்றுக்களைப் பதிவு செய்தல்**

170. நிதிக் கூற்றுக்களைப் பதிவுசெய்தல் 176

**பொருள்கோடல்**

171. ஐந்தொகைத் தேதி 177

*பிரிவு* *பக்கம்*

**கம்பெனி அலுவல்களின் புலனாய்வு**


| | | |
|---|---|---|
| 172. | பங்குதாரர்களின் விண்ணப்பத்தின்மீது கம்பெனியின் அலுவல் களைப் புலனாய்வு செய்தல் | 178 |
| 173. | வேறு விடயங்களில் கம்பெனியின் அலுவல்களைப் புலனாய்வு செய்தல் | 179 |
| 174. | தொடர்புடைய கம்பெனிகளின் அலுவல்களைப் பற்றிய புல னாய்வை மேற்கொள்வதற்கான பரிசோதகர்களின் தத்துவம் | 181 |
| 175. | புலனாய்வின் மீது ஆவணங்களையும் சான்றையும் காண்பித்தல் | 181 |
| 176. | பரிசோதகரின் அறிக்கை | 184 |
| 177. | பரிசோதகரின் அறிக்கை மீதான நடவடிக்கைகள் | 185 |
| 178. | கம்பெனியின் அலுவல்களைப் புலனாய்வு செய்வதற்கான செலவுகள் | 187 |
| 179. | பரிசோதகரின் அறிக்கை சான்றாதல் | 189 |
| 180. | கம்பெனியின் சொத்துவத்தைப் புலனாய்வு செய்வதற்குப் பரி சோதகர்களை நியமித்தலும் அதற்கான அவர்களது தத்துவங்களும் | 189 |
| 181. | பங்குகளில் அல்லது தொகுதிக்கடன்களில் அக்கறை கொண் டுள்ள ஆட்களைப் பற்றித் தகவல்களைப் பெறவுள்ள தத்துவம் | 192 |
| 182. | பங்குகள் அல்லது தொகுதிக் கடன்கள் மீது மட்டுப்பாடுகளைச் சுமத்துவதற்குள்ள தத்துவம் | 193 |
| 183. | சொத்துக்களையும் பொறுப்புக்களையும் சரிபார்ப்பதற்கு பதிவாள ருக்குள்ள தத்துவம் | 196 |


**முகாமைத் தத்துவங்கள்**


| | | |
|---|---|---|
| 184. | கம்பெனியின் முகாமை | 197 |
| 185. | பாரிய கொடுக்கல் வாங்கல்கள் | 197 |
| 186. | தத்துவங்களைக் கையளித்தல் | 199 |

**பணிப்பாளர்களின் கடமைகள்**


187. கம்பெனியின் நலன்கருதியும் நல்லெண்ணத்துடனும் செய லாற்றுவதற்கு பணிப்பாளர்களுக்குள்ள கடமை 200

188. பணிப்பாளர்கள் சட்டத்துக்கும் அகவிதிகளுக்கும் இணங்கி யொழுகுதல் 200

189. பணிப்பாளரின் கவனத்தராதரம் 200

190. தகவலையும் ஆலோசனையையும் பயன்படுத்தல் 201


**பணிப்பாளரொருவர் அக்கறை கொண்டுள்ள விடயத்தில் கொடுக்கல் வாங்கல்**


191. "அக்கறை கொண்டவராகவுள்ள" என்பதன் பொருள் 202

192. அக்கறையை வெளியிடுதல் 203

193. கொடுக்கல் வாங்கல்களை வறிதாக்குதல் 204

194. மூன்றாம் திறத்தவர்களின் மீதான பயன் 205

195. குறித்தசில விடயங்களில் 192 ஆம், 193ஆம் பிரிவுகள் ஏற்புடையன வல்லாததாதல் 206

196. அக்கறை கொண்டுள்ள பணிப்பாளர் வாக்களிக்கலாம் 206

197. கம்பெனித் தகவலைப் பயன்படுத்துதல் 207


**பங்குகளில் பணிப்பாளருக்குள்ள அக்கறைகளை வெளிவிடுதல்**


198. "இயைபான அக்கறை" என்பதன் பொருள் 208

199. குறித்தசில விடயங்களில் இயைபான அக்கறைகள் புறக்கணிக் கப்படுதல் 212

200. பங்குக்கையாளுகை பற்றி பணிப்பாளர்களினால் வெளி விடப்படுதல் 213

*பிரிவு* *பக்கம்*

**பணிப்பாளர்களை நியமித்தலும் அகற்றுதலும்**

201. பணிப்பாளர்களின் எண்ணிக்கை 214

202. பணிப்பாளர்களுக்குள்ள தகைமைகள் 214

203. பணிப்பாளரின் சம்மதம் தேவைப்படும் 216

204. முதலாவது பணிப்பாளரையும் அடுத்துப் பின்னரான பணிப் பாளர்களையும் நியமித்தல் 216

205. பணிப்பாளர்களின் நியமனம் பற்றித் தனிப்பட்ட முறையில் வாக்க ளித்தல் 216

206. பணிப்பாளர்களை அகற்றுதல் 217

207. பணிப்பாளர் பதவிவகிக்காதொழிதல் 218

208. கடைசியாக எஞ்சியுள்ள பணிப்பாளர் பதவி விலகுதல் 219

209. பணிப்பாளரின் செயல்களினது செல்லுபடியாந்தன்மை 219

**பணிப்பாளரின் ஓய்வுபெறும் வயது**

210. பணிப்பாளர்களுக்கான வயதெல்லை 219

211. கம்பெனி அவ்வாறு தீர்மானித்தால் வயதெல்லை ஏற்புடையதாத லாகாது 220

212. வயதை வெளிப்படுத்துவதற்குப் பணிப்பாளர்களுக்குள்ள கடமை 221

**பணிப்பாளர்களின் தகைமையீனங்கள்**

213. கம்பெனியின் முகாமை செய்வதிலிருந்து தடை செய்யப்பட்ட ஆட்கள் 222

214. நீதிமன்றம் பணிப்பாளர்களைத் தகைமையற்றவர்களாக்கலாம் 223

**பணிப்பாளர் தொடர்பான நானாவித ஏற்பாடுகள்**


215. சபையின் நடவடிக்கைகள் 225

216. ஊதியமும் ஏனைய நன்மைகளும் 225

217. பணிப்பாளர்களுக்கான கடன்களின் மீதான மட்டுப்பாடுகள் 227

218. நட்டோத்தரவாதமும் காப்புறுதியும் 230

219. கடனிறுக்க வகையின்மையின்மீது பணிப்பாளர்களுக்குள்ள கடமை 233

220. மூலதனத்தின் பாரதூரமான இழப்பின்மீது பணிப்பாளர்களுக்குள்ள கடமை 234


**செயலாளர்கள்**


221. செயலாளர் 235

222. செயலாளரின் தகைமைகள் விதித்துரைக்கப்பட வேண்டும் 236


**பணிப்பாளர்களும் செயலாளர்களும் பற்றிய இடாப்பு**


223. பணிப்பாளர்களும் செயலாளர்களும் பற்றிய இடாப்பு 236


**ஒடுக்கத்தையும் பிறழ் முகாமையையும் தடுத்தல்**


224. ஒடுக்கம் 238

225. பிறழ்முகாமை 239

226. எவர் நீதிமன்றத்துக்கு விண்ணப்பம் செய்யலாம் என்பது 240

227. ஒடுக்குதல் நடவடிக்கைகளின்போது 224 ஆம் பிரிவின்கீழ் அல்லது 225ஆம் பிரிவின்கீழ் செயலாற்றுவதற்கு நீதிமன்றத்துக்குள்ள தத்துவம் 242

| பிரிவு | | பக்கம் |
|---|---|---|
| 228. | 224 ஆம் பிரிவின்கீழான அல்லது 225 ஆம் பிரிவின் கீழான விண்ணப்பத்தின் மீது நீதிமன்றத்துக்குள்ள தத்துவங்கள் | 242 |
| 229. | 224 ஆம் பிரிவின் கீழான அல்லது 225ஆம் பிரிவின் கீழான கட்டளையினால் கம்பெனியின் அமைப்பக விதிகளை மாற்று வதன் பயன் | 244 |
| 230. | 224 ஆம் பிரிவின் கீழ் அல்லது 225 ஆம் பிரிவின்கீழ் விண்ணப்பத் துக்குப் பிரதிவாதிகளைச் சேர்த்தல் | 245 |
| 231. | குறித்தசில உடன்படிக்கைகளை முடிவுறுத்துவதன் அல்லது திரிபுபடுத்துவதன் விளைவுகள் | 245 |
| 232. | "பங்குதாரர்" என்பதன் விஸ்தரிக்கப்பட்ட பொருள் | 247 |


**மட்டுப்படுத்தற் கட்டளைகள்**


| | | |
|---|---|---|
| 233. | மட்டுப்படுத்தற் கட்டளைகள் | 247 |


**விளை வழக்குகள்**


| | | |
|---|---|---|
| 234. | விளை வழக்குகள் | 248 |
| 235. | விளை வழக்கின் செலவுகள் கம்பெனியினால் கொடுத்துத் தீர்க்கப் படுதல் | 250 |
| 236. | அனுமதியளிக்கப்படுமிடத்து, நீதிமன்றத்துக்குள்ள தத்துவங்கள் | 250 |
| 237. | விளை வழக்கின் இணக்கம், இணக்கத்தீர்வு அல்லது மீளப் பெறுகை | 251 |


**வலுவாக்கம்**


| | | |
|---|---|---|
| 238. | பணிப்பாளர்களின் குறித்த சில நடவடிக்கைகளை வலுவாக்குதல் | 251 |


## பாகம் VIII

**ஒன்றிணைப்புகள்**


| | | |
|---|---|---|
| 239. | ஒன்றிணைப்புகள் | 252 |
| 240. | ஒன்றிணைப்பு முன்மொழிவு | 252 |

*பிரிவு* *பக்கம்*

241. ஒன்றிணைதல் முன்மொழிவை அங்கீகரித்தல் 254

242. குறுகிய வடிவ ஒன்றிணைதல் 258

243. ஒன்றிணைத்தல் முன்மொழிவைப் பதிவு செய்தல் 260

244. ஒன்றிணைத்தற் சான்றிதழ் 261

245. ஒன்றிணைத்தற் சான்றிதழின் பயன் 262

246. பெரும்பான்மையால் அங்கீகரிக்கப்பட்ட உத்தேசத்திட்டம் அல்லது ஒப்பந்தத்தை சம்மதிக்காத பங்குதாரரின் பங்குகளைக் கொள்ளலுக்கான தத்துவம் 263

## பாகம் IX

### கடன் கொடுத்தோருடனான இணக்கங்கள்

247. பொருள்கோடல் 265

248. இணக்க முன்மொழிவு 266

249. முன்மொழியப்பட்ட இணக்கம் பற்றிய அறிவித்தல் 267

250. இணக்கத்தின் பயன் 269

251. இணக்கத்தை வேறுபடுத்தல் 270

252. நீதிமன்றத்துக்குள்ள தத்துவங்கள் 270

253. கம்பெனியை ஒழித்துக்கட்டுவதில் இணக்கத்தின் பயன் 272

254. இணக்கத்துக்கான செலவு 273

## பாகம் X

### ஒழுங்கேற்பாடுகள், ஒன்றிணைப்புகள் மற்றும் இணக்கங்கள் நீதிமன்றத்தினால் அங்கீகரிக்கப்படுதல்

255. பொருள்கோடல் 274

256. ஒழுங்கேற்பாடுகள், ஒன்றிணைப்புகள், இணக்கங்கள் என்பன நீதிமன்றத்தினால் அங்கீகரிக்கப்படுதல் 274

257. நீதிமன்றம் மேலதிகக் கட்டளைகளை ஆக்கலாம் 277

258. VIII ஆம் பாகத்தின் ஏற்புடைமை 278

259. இப்பாகத்தின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட இணக்கத்துக்கு 253 ஆம் பிரிவு ஏற்புடையதாதல் 278

## பாகம் XI

### கரைகடந்த கம்பெனிகள் தொடர்பான ஏற்பாடுகள்

260. இப்பாகத்தின் பொருள் கோடல் 279

261. இலங்கைக்கு வெளியே தொழிலுக்காகக் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனி 279

262. கரைகடந்த கம்பெனிக்குப் பதிவுச் சான்றிதழ் அளித்தல் 280

263. கரைகடந்த கம்பெனி தொழிலைத் தொடர்ந்து நடாத்துதல் 282

264. இலங்கையில் தொழில் கொண்டு நடாத்துதலைத் தடைசெய்தல் 283

265. கரைகடந்த கம்பெனி என்ற தொழிலைப் புரியாதொழிதல் 283

## பாகம் XII

### ஒடுக்குதல்

(I) முதனிலையானவை

### *ஒடுக்கும்முறைகள்*

266. உதவுதொகை செலுத்துநர் என்பதன் வரை விலக்கணம் 283

267. ஒடுக்கும் முறை 283

**உதவுதொகை செலுத்துநர்**

268. பங்குதாரர்களினதும் கடந்தகால பங்குதாரர்களினதும் பொறுப்பை வலுவுறுத்துவதற்கு ஒழிப்போனுக்குள்ள தத்துவம் 284

269. பணஞ் செலுத்தப்படாத அழைப்புகளுக்காக கடந்தகால பங்கு தாரர்களுக்குள்ள பொறுப்பு 284

**(II) நீதிமன்றத்தின்மூலம் ஒடுக்கப்படுதல்**

***கம்பெனியானது நீதிமன்றத்தின்மூலம் ஒடுக்கப்படக்கூடிய சந்தர்ப்பங்கள்***

270. கம்பெனியானது நீதிமன்றத்தின் மூலம் ஒடுக்கப்படக்கூடிய சந்தர்ப்பங்கள் 285

271. தனிசுகளைச் செலுத்த முடியாமை பற்றியதன் வரைவிலக்கணம் 286

**ஒடுக்குவதற்கான மனுவும் அதன் பயன்களும்**

272. ஒடுக்குவதற்கான விண்ணப்பம் 287

273. மனுவைக் கேட்பதன்மீது நீதிமன்றத்துக்குள்ள தத்துவங்கள் 288

274. கம்பெனிக்கெதிரான வழக்கு நடவடிக்கைகளை நிறுத்துவதற்கான அல்லது மட்டுப்படுத்துவதற்கான தத்துவம் 289

275. ஒடுக்குதல் தொடங்கப்பட்ட பின்னர் ஆதனக் கையாளுதல்கள் முதலியவற்றை வறிதாக்குதல் 290

276. பற்றுகை முதலியவற்றை வறிதாக்கல் 290

**ஒடுக்குதலைத் தொடங்குதல்**

277. நீதிமன்றத்தின் மூலமான ஒடுக்குதல் தொடங்கப்படுதல் 291

**ஒடுக்குதல் கட்டளையின் விளைவுகள்**

278. கட்டளையின் பிரதிப் பதிவாளருக்கு அனுப்பிவைத்தல் 291

*பிரிவு* *பக்கம்*

279. ஒடுக்குதலின் மீது வழக்கு நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்படுதல் 291

280. ஒடுக்குதல் கட்டளையின் பயன் 292

**ஒடுக்குதலில் உத்தியோகபூர்வமான பெறுநர்**

281. அலுவலக முறையான பெறுநர் 292

282. குறித்தசில விடயங்களில் அலுவலக முறையான பெறுநர் நீதிமன்றத்தினால் நியமிக்கப்படுதல் 292

283. கம்பெனியின் அலுவல்கள் பற்றிய கூற்று அலுவலக முறையான பெறுநருக்குச் சமர்ப்பிக்கப்படுதல் 292

284. அலுவலக முறையான பெறுநரினாலான அறிக்கை 295

**ஒழிப்போர்**

285. ஒழிப்போரை நியமிப்பதற்கு நீதிமன்றத்துக்குள்ள தத்துவம் 296

286. தற்கால ஒழிப்போரின் நியமனமும் தத்தவங்களும் 296

287. ஒழிப்போனின் நியமனம், மகுடம் முதலியன 296

288. அலுவலக முறையான பெறுநர் அல்லாத ஆள் ஒழிப்போனாக நியமிக்கப்படுமிடத்தான ஏற்பாடுகள் 298

289. ஒழிப்போர் பற்றிய பொது ஏற்பாடுகள் 298

290. கம்பெனியின் ஆதனத்தினது கட்டுக்காப்பு 299

291. கம்பெனியின் ஆதனத்தை ஒழிப்போனுக்கு உரித்தாக்கல் 299

292. ஒழிப்போனின் தத்துவங்கள் 300

293. ஒழிப்போனின் தத்துவங்களின் பிரயோகமும் கட்டுப்பாடும் 303

294. ஒழிப்போனால் வைத்திருக்கப்பட வேண்டிய புத்தகங்கள் 304

295. வங்கிக்கு ஒழிப்போனின் கொடுப்பனவுகள் 305

| *பிரிவு* | | *பக்கம்* |
|---|---|---|
| 296. | ஒழிப்போனின் கணக்குகள் பற்றிய கணக்காய்வு | 305 |
| 297. | ஒழிப்போன்மீது பதிவாளரின் கட்டுப்பாடு | 306 |
| 298. | ஒழிப்போர்களை விடுவித்தல் | 307 |


**பரிசோதனைக்குழு**


| | | |
|---|---|---|
| 299. | பரிசோதனைக் குழு நியமிக்கப்படல் வேண்டுமா என்பதைத் தீர்மானிப்பதற்கு கடன் தருநர்களினதும் உதவுதொகை செலுத்துநர்களினதும் கூட்டங்கள் | 308 |
| 300. | பரிசோதனைக் குழுவின் அமைப்பும் நடவடிக்கைகளும் | 309 |
| 301. | பரிசோதனைக் குழு இல்லாதவிடத்து நீதிமன்றத்திற்குள்ள தத்துவம் | 310 |


**நீதிமன்றத்தினால் செய்யப்படும் ஒடுக்குதலின் விடயத்தில்**
**நீதிமன்றத்திற்குள்ள பொதுத் தத்துவங்கள்**


| | | |
|---|---|---|
| 302. | ஒடுக்குதலை நிறுத்திவைப்பதற்கான தத்துவம் | 311 |
| 303. | உதவுதொகை செலுத்துநர்களின் நிரலை நிர்ணயித்தலும் சொத்துக்களைப் பயன்படுத்தலும் | 311 |
| 304. | ஒழிப்போனிடம் ஆதனம் ஒப்படைக்கப்படுதல் | 312 |
| 305. | உதவுதொகை செலுத்துநரால் கம்பெனிக்கு போமதியாகவுள்ள தனிசுகளைக் கொடுப்பனவு செய்தலும் எந்த அளவுக்கு எதிரீடு அனுமதிக்கப்படும் என்பதும் | 312 |
| 306. | கம்பெனிக்குப் போமதியாகவுள்ள பணங்கள் வங்கிக்குச் செலுத்தப்படுதல் | 313 |
| 307. | விசேட முகாமையாளரை நியமித்தல் | 314 |
| 308. | கடன்தருநர்களாலும் உதவுதொகை செலுத்துநர்களாலும் புத்தகங்கள் பார்வையிடப்படுதல் | 314 |

*பிரிவு* *பக்கம்*

309. ஒதுக்குதலுக்கான செலவுத் தொகைகளை இருப்புச் சொத்துக்களிலிருந்து செலுத்துமாறு கட்டளையிடுவதற்கான தத்துவம் 315

310. கம்பெனியின் ஆதனத்தை வைத்திருப்பவரெனச் சந்தேகிக்கப்படும் ஆட்களை கட்டளையிட்டழைப்பதற்கான தத்துவம் 315

311. ஊக்குவிப்போர் பணிப்பாளர்கள் முதலானவர்களைப் பகிரங்க விசாரணை செய்யும்படி கட்டளையிடுவதற்கான தத்துவம் 316

312. விசாரணை செய்யப்படுகின்ற ஆள் அல்லது அலுவலர் சட்டத்தரணியொருவரினால் பிரதிநிதித்துவம் செய்யப்படுதல் 317

313. தலைமறைவாயிருக்கும் உதவுதொகை செலுத்துநரைக் கைது செய்வதற்கான தத்துவம் 318

314. நீதிமன்றத்தின் தத்துவங்கள் திரண்டவையாதல் 318

315. நீதிமன்றத்தின் குறித்தசில தத்துவங்களை ஒழிப்போனுக்குக் கையளித்தல் 319

316. கம்பெனியைக் கலைத்தல் 320

317. நீதிமன்றத்தின் கட்டளையை வலுவுக்கிடும் முறை 320

318. ஒடுக்குதல் கட்டளையை வேறொரு நீதிமன்றத்தில் வலுவுக்கிடுதல் 320

### (III) தன்னிச்சையான ஒடுக்குதல்

### *தன்னிச்சையான ஒடுக்குதலுக்கான தீர்மானங்களும் தன்னிச்சையான ஒடுக்குதலின் ஆரம்பமும்*

319. கம்பெனி எந்தச் சூழ்நிலைகளில் தன்னிச்சையாக ஒடுக்கப்படலாம் என்பது 321

320. தன்னிச்சையான ஒடுக்குதலுக்கான தீர்மானம் பற்றிய அறிவித்தல் 321

321. தன்னிச்சையான ஒடுக்குதலின் ஆரம்பம் 322

### தன்னிச்சையான ஒடுக்குதலின் விளைவுகள்

322. கம்பெனியின் தொழில், நிலைவரம் என்பனமீது தன்னிச்சையான ஒடுக்குதலின் பயன் 322

323. தன்னிச்சையான ஒடுக்குதல் ஆரம்பமான பின்னர் கைமாற்றங்கள் முதலியனவற்றைத் தவிர்த்தல் 322

### கடனிறுக்க வகையுடைமை பற்றிய வெளிப்படுத்துகை

324. தன்னிச்சையாக ஒடுக்குவதற்கான உத்தேசத்தின் விடயத்தில் கடனிறுக்க வகையுடைமை பற்றிய சட்டமுறையான வெளிப்படுத்துகை 323

### பங்குதாரர்களின் தன்னிச்சையான ஒடுக்குதலுக்கு ஏற்புடைத்தான ஏற்பாடுகள்

325. பங்குதாரர்களின் தன்னிச்சையான ஒடுக்குதல் தொடர்பிலான ஏற்பாடுகள் 324

326. ஒழிப்போரை நியமிப்பதற்கும் அவர்களின் ஊதியத்தை நிர்ணயிப்பதற்கும் கம்பெனிக்குள்ள தத்துவம் 324

327. ஒழிப்போனின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புவதற்கான தத்துவம் 324

328. கம்பெனிக்குரிய ஆதனத்தின் விற்பனைக்கு கிரயமாக பங்குகள் முதலியவற்றை ஏற்றுக் கொள்வதற்கு ஒழிப்போனுக்குள்ள தத்துவம் 325

329. கடனிறுக்கவகையின்மையின் விடயத்தில் கடன்தருநர்களின் கூட்டத்தை அழைப்பதற்கு ஒழிப்போனுக்குள்ள தத்துவம் 327

330. ஒவ்வோர் ஆண்டின் இறுதியிலும் பொதுக்கூட்டத்தை அழைப்பதற்கு ஒழிப்போனுக்குள்ள கடமை 327

| பிரிவு | | பக்கம் |
|---|---|---|
| 331. | இறுதிக் கூட்டமும் கலைத்தலும் | 327 |
| 332. | கடனிறுக்க வகையின்மையின் விடயத்தில் ஆண்டுக் கூட்டங்கள், இறுதிக் கூட்டங்கள் என்பன பற்றிய மாற்று ஏற்பாடு | 329 |


**கடன்தருநர்களின் தன்னிச்சையான ஒடுக்குதலொன்றுக்கு ஏற்புடைத்தான ஏற்பாடுகள்**


| | | |
|---|---|---|
| 333. | கடன்தருநர்களின் ஒடுக்குதல் ஒன்றுக்கு ஏற்புடைத்தான ஏற்பாடுகள் | 330 |
| 334. | கடன்தருநர்களின் கூட்டம் | 330 |
| 335. | ஒழிப்போனை நியமித்தல் | 332 |
| 336. | சோதனைக் குழுவை நியமித்தல் | 332 |
| 337. | ஒழிப்போனின் ஊதியத்தை நிர்ணயித்தலும் பணிப்பாளர்களின் தத்துவங்கள் இல்லாதொழிதலும் | 333 |
| 338. | ஒழிப்போனின் பதவியில் ஏற்படும் வெற்றிடத்தை நிரப்புவதற்கான தத்துவம் | 333 |
| 339. | கடன்தருநர்களின் தன்னிச்சையான ஒடுக்குதலொன்றுக்கு 328 ஆம் பிரிவு ஏற்புடையதாதல் | 333 |
| 340. | ஒவ்வோராண்டின் முடிவிலும் கம்பெனியின் கூட்டங்களையும் கடன்தருநர்களின் கூட்டங்களையும் அழைப்பதற்கு ஒழிப்போனுக்குள்ள கடமை | 334 |
| 341. | இறுதிக் கூட்டமும் கலைக்கப்படுதலும் | 334 |


**தன்னிச்சையான ஒடுக்குதல் ஒவ்வொன்றுக்கும் ஏற்புடைத்தான ஏற்பாடுகள்**


| | | |
|---|---|---|
| 342. | தன்னிச்சையான ஒடுக்குதல் ஒவ்வொன்றுக்கும் ஏற்புடைத்தான ஏற்பாடுகள் | 336 |

*பிரிவு* *பக்கம்*

343. கம்பெனியின் ஆதனத்தைப் பகிர்ந்தளித்தல் 337

344. தன்னிச்சையான ஒடுக்குதலின் ஒழிப்போனுக்குள்ள தத்துவங்களும் கடமைகளும் 337

345. தன்னிச்சையான ஒடுக்குதலில் ஒழிப்போனை நியமிப்பதற்கும் அகற்றுவதற்கும் நீதிமன்றத்திற்குள்ள தத்துவம் 338

346. ஒழிப்போனை தமது நியமனம் பற்றி அறிவித்தல் கொடுத்தல் 338

347. ஒழுங்கேற்பாடு எப்போது கடன் தருநர்களைப் பிணிக்கும் என்பது 339

348. கேள்விகளைத் தீர்மானித்துக்கொள்வதற்கென அல்லது தத்துவங்களைப் பிரயோகித்துக்கொள்வதற்கென நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்கும் தத்துவம் 339

349. தன்னிச்சையான ஒடுக்கலுக்கான செலவுத் தொகைகள் 340

350. கடன்தருநர்களினதும் உதவுதொகை செலுத்துநர்களினதும் உரிமைகளுக்கான பேணல் 340

**(IV) ஒடுக்குதல் நீதிமன்றத்தின் மேற்பார்வைக்கு அமைந்தது**

351. மேற்பார்வைக்கமைய ஒடுக்குதல்செய்யும்படி கட்டளையிடுவதற்கான தத்துவம் 340

352. மேற்பார்வைக்கமைய செய்யப்படும் ஒடுக்குதலுக்கான மனுவின் பயன் 341

353. மேற்பார்வைக்கமைய செய்யப்படும் ஒடுக்குதலுக்கு 275ஆம், 276 ஆம் பிரிவுகள் ஏற்புடையனவாதல் 341

354. ஒழிப்போரை நியமிப்பதற்கு அல்லது அகற்றுவதற்கு நீதிமன்றத்திற்குள்ள தத்துவம் 341

355. மேற்பார்வைக் கட்டளையின் பயன் 341

பிரிவு பக்கம்

**உரிமைக்கோரிக்கைகளை எண்பித்தலும் வகைப்படுத்தலும்**

356. ஏல்தகவான உரிமைக்கோரிக்கைகள் 342

357. பிணைப்பொறுப்பற்ற கடன்தருநர்களால் செய்யப்படும் உரிமைக் கோரிக்கை 343

358. பிணைப்பொறுப்புடைய கடன்தருநர்களின் உரிமைகளும்கடமைகளும் 344

359. உரிமைக் கோரிக்கையின் தொகையை ஆய்ந்தறிதல் 349

360. ஆய்ந்தறியப்பட்ட தொகையொன்றினால்லாத உரிமைக் கோரிக்கை 350

361. குற்றப்பணங்களும் தண்டங்களும் 350

362. ஒடுக்குதல் ஆரம்பமான பின்னர் செலுத்தப்படற்பாலதான தனிசுகள் தொடர்பிலான உரிமைக் கோரிக்கைகள் 350

363. பரஸ்பர வரவும் எதிரீடும் 351

364. உரிமைக் கோரிக்கைகள் மீதான வட்டி 352

365. முன்னுரிமை உரிமைக்கோரிக்கைகள் 353

366. வேறு கடன்தருநர்களின் உரிமைக்கோரிக்கைகளும் மிதமிஞ்சிய இருப்புச் சொத்துக்களைப் பகிர்ந்தளித்தலும் 353

**வறிதாகக்கூடிய கொடுக்கல் வாங்கல்கள்**

367. முன்னுரிமைப் பயனுடைய கொடுக்கல் வாங்கல்கள் 354

368. வறிதாக்கற்படற்பாலதான அறவீடு 355

369. வர்த்தகமில்லாத கொடுக்கல்வாங்கல்கள் 358

370. வறிதாக்கப்படற்பாலதான கொடுக்கல்வாங்கல்களையும் தாக்கீடுகளையும் தள்ளுபடிசெய்வதற்கான நடவடிக்கைமுறை 360

| *பிரிவு* | | *பக்கம்* |
|---|---|---|
| 371. | வேறு கட்டளைகள் | 361 |
| 372. | கொடுக்கல்வாங்கல்களையும் தாக்கீடுகளையும் தள்ளுபடிசெய்தல் தொடர்பிலான மேலதிக ஏற்பாடுகள் | 363 |
| 373. | முன்னுரிமைகள் முதலிய தொடர்பில் பொருள்கோடல் | 364 |


**ஒடுக்குதலுக்கு முன்னரான துர்ப்பழக்கங்களும் அலுவலர்களின் பொறுப்புகளும்**


| | | |
|---|---|---|
| 374. | ஒடுக்குதலை எதிர்பார்த்து புரியப்படும் மோசடி முதலியன | 364 |
| 375. | மோசடியான வியாபாரம் | 369 |
| 376. | பணத்தை மீளச்செலுத்துமாறு அல்லது ஆதனத்தை திருப்பிக் கொடுக்குமாறு ஆட்களை தேவைப்படுத்துவதற்கு நீதிமன்றத் திற்குள்ள தத்துவம் | 369 |
| 377. | பாரபந்தமுள்ள ஆதனத்தை உரிமை கோரிக்கை கைவிடல் | 371 |
| 378. | கம்பெனியின் விடயத்தில் தீர்வை நிறைவேற்றல் அல்லது நடுக்கட்டல் பற்றி கடன் தருநருக்குள்ள உரிமைகளின் மட்டுப்பாடு | 375 |
| 379. | தீர்வை நிறைவேற்றுகையில் எடுக்கப்பட்ட பொருட்கள் தொடர்பில் பிசுக்காலுக்குள்ள கடமைகள் | 376 |


**ஒடுக்குதலுக்கு முன்னிகழ்ந்த அல்லது ஒடுக்குதலின் போக்கிலான தவறுகள்**


| | | |
|---|---|---|
| 380. | ஒழித்துக்கட்டப்படும் கம்பெனிகளின் அலுவலர்களால் புரியப்படும் தவறுகள் | 378 |
| 381. | முறையான கணக்குகள் வைக்கப்படாதவிடத்து எழும் பொறுப்பு | 381 |
| 382. | கம்பெனியின் ஒழுக்கறை அலுவலர்களுக்கும் உறுப்பினர்களுக்கும் எதிரான குற்றவழக்கு | 382 |

**ஒடுக்குதல் தொடர்பான குறைநிரப்பு ஏற்பாடுகள்**


| | | |
|---|---|---|
| *383.* | *ஒழிப்போரின் தகைமைகள்* | *385* |
| *384.* | *ஒழிப்போனாக நியமித்தலை பாதிக்கும் ஊழல் தூண்டுகை* | *386* |
| *385.* | *விபரத்திரட்டுகள் முதலியவற்றைத் தயாரிப்பதற்கு ஒழிப்போனுக்குள்ள கடமையை வலியுறுத்துதல்* | *386* |
| *386.* | *கம்பெனியொன்று கலைத்தலில் உள்ளமை பற்றிய அறிவிப்பு* | *387* |
| *387.* | *கம்பெனிகளின் ஒடுக்குதலின் மீது முத்திரை வரியிலிருந்து குறித்தசில ஆவணங்களுக்கு விலக்களித்தல்* | *387* |
| *388.* | *கம்பெனியின் புத்தகங்கள் சான்றாதல்* | *388* |
| *389.* | *கம்பெனியின் புத்தகங்களையும் பத்திரங்களையும் கையுதிர்த்தல்* | *388* |
| *390.* | *முடிவுறாதிருக்கும் ஒழித்துக்கட்டுதல்கள் பற்றிய தகவல்* | *390* |
| *391.* | *கடன்தருநர்களினதும் உதவு தொகை வழங்குநர்களினதும் ஒத்திவைக்கப்பட்ட கூட்டங்களில் நிறைவேற்றப்படும் தீர்மானம்* | *390* |


**நீதிமன்றத்துக்குள்ள குறைநிரப்புத் தத்துவங்கள்**


| | | |
|---|---|---|
| *392.* | *கடன்தருநர்களின் அல்லது உதவுதொகை செலுத்துநரின் விருப்பங்களை அறிவதற்கான கூட்டங்கள்* | *390* |


**கலைத்தல் பற்றிய ஏற்பாடுகள்**


| | | |
|---|---|---|
| *393.* | *கம்பெனியின் கலைப்பை வறிதானதென வெளிப்படுத்துவதற்கு நீதிமன்றத்துக்கு உள்ள தத்துவம்* | *391* |
| *394.* | *பதிவாளர் இடாப்பில் இருந்து தொழிலறு கம்பெனியை நீக்கி விடலாம்* | *392* |
| *395.* | *கலைக்கப்பட்ட கம்பெனியின் ஆதனம் அரசுக்கு உரித்தாதல்* | *394* |

**கம்பெனிகளின் கலைத்தல் கணக்கு**

*396.* கம்பெனிகளின் கலைத்தற் கணக்கைத் தாபித்தல் *395*

*397.* கம்பெனிகள் கலைத்தற் கணக்கிற்கும் அதிலிருந்தும் செய்யப்படும் கொடுப்பனவுகள் *396*

*398.* அத்தியாவசிய சேவைகளை விநியோகிக்க மறுத்தல் தடை செய்யப்படலாம் *396*

**விதிகளும் கட்டணங்களும்**

*399.* ஒடுக்குதலுக்கான விதிகளும் கட்டணங்களும் *397*

பாகம் XIII

**நிர்வாகிகள்**

*நிர்வாகிகளின் நியமனம்*

*400.* பொருள்கோடல் *398*

*401.* நிர்வாகியை நியமிப்பதற்கு சபைக்குள்ள தத்துவம் *398*

*402.* நிர்வாகியின் நியமனம் பற்றி பொறுப்பு வைத்திருப்பவர்களுக்கு அறிவித்தல் *400*

*403.* நிர்வாகியின் நியமனத்தின் பயன்பாடு *400*

**ஆரம்பநிலைக் கூட்டமும் நியமனத்தின் உறுதிப்படுத்துகையும்**

*404.* ஆரம்பநிலைக் கூட்டத்தைக் கூட்டுவதற்கு நிர்வாகிக்குள்ள கடமை *402*

*405.* நிர்வாகியின் உறுதிப்படுத்துகையின் பயன் *403*

| பிரிவு | | பக்கம் |
|---|---|---|
| | **நிர்வாகியின் பிரேரணைகள்** | |
| 406. | பிரேரணைகள் பற்றிய கூற்று | 404 |
| 407. | கடன் தருநர்களின் கூட்டத்தால் பிரேரணைகள் பரிசீலனை செய்யப்படல் | 405 |
| 408. | நிர்வாகி பதவி வகித்தலை இல்லாதொழிலுக்குமிடத்து விளைவாந் தன்மையதான கட்டளைகள் | 406 |
| 409. | பிரேரணைகளுக்கான பொருளளவிலான மீளாய்வு களின் அங்கீகாரம் | 406 |
| | **நிருவாகம் பற்றிய அறிவித்தல்** | |
| 410. | நிருவாகியின் நியமனம்பற்றிய அறிவித்தல் | 407 |
| 411. | நிருவாகம்பற்றிய அறிவித்தல் | 407 |
| | **நிருவாகி** | |
| 412. | நிருவாகியின் தகைமைகள் | 408 |
| 413. | நிருவாகியின் செயல்களின் வலிதுடையதாம் தன்மை | 410 |
| 414. | நியமனத்துக்கான சம்மதம் | 410 |
| 415. | நிருவாகியின் பதவியில் வெற்றிடம் | 410 |
| | **நிருவாகியின் தத்துவங்கள்** | |
| 416. | நிருவாகியின் தத்துவங்கள் | 412 |
| 417. | பொறுப்பிக்கப்பட்ட ஆதனம் முதலியவற்றை கையாளு வதற்கான தத்துவம் | 413 |
| 418. | நிருவாகியின் பொதுவான கடமைகள் | 416 |

*பிரிவு* *பக்கம்*

419. நிருவாகியை விடுவித்தல் அல்லது நிருவாகியை நியமிக்கின்ற தீர்மானத்தை வேறுபடுத்தல் 416

420. நிருவாகியின் ஊதியமும் செலவுகளும் 418

421. நிருவாகிக்குள்ள பொறுப்பு 418

422. பொறுப்பிலிருந்து விடுவிப்பு 420

**கம்பெனியின் அலுவல்களைக் கண்டறிதலும் புலனாய்வு செய்தலும்**

423. தகவல் முதலியன வழங்குவதற்காக கம்பெனிக்கும் பணிப்பாளர்களுக்கும் உள்ள கடப்பாடுகள் 421

**நானாவிதமானவை**

424. கடன்தருநர்களின் குழு 422

425. கடன்தருநர்களினதும் உறுப்பினர்களினதும் அக்கறைகளைப் பாதுகாத்தல் 422

426. பெறுநர்கள் தொடர்பிலான ஏற்பாடுகளின் நிருவாகிக்கு விண்ணப்பம் செய்தல் 424

பாகம் XIV

**மிதக்கும் தாக்கீடுகள்**

427. கம்பெனி மிதக்கும் தாக்கீடு வழங்கலாம் 424

428. மிதக்கும் தாக்கீட்டை உருவாக்கும் சாதனம் 426

429. மிதக்கும் தாக்கீடொன்றை உருவாக்கும் சாதனத்தின் ஏற்பாடுகள் 427

430. மிதக்கும் தாக்கீட்டுக்கு அமைய உள்ள ஆதனத்தை நடுக்கட்டலுக்குமுன் கையாளுதல் 427

*பிரிவு* *பக்கம்*

431. மிதக்கும் தாக்கீடுகளின் வரிசை 429

432. மிதக்கும் தாக்கீடுகளை மாற்றுதலும் விடுவித்தலும். 432

433. ஆதனத்துக்கு எச்சூழ்நிலைகளில் மிதக்கும் தாக்கீடு நடுக்கட்டல் செய்கிறது 433

பாகம் XV

**பெறுநர்களும் முகாமையளர்களும்**

434. பொருள்கோடல் 437

**பெறுநரை நியமிப்பதற்குள்ள தத்துவம்**

435. பெறுநரை நியமிப்பதற்கான தத்துவத்தை சாதனம் அளிக்கலாம் 439

**பெறுநர்களின் தகைமைகள்**

436. பெறுநர்களின் தகைமைகள் 439

**பெறுநரை நியமித்தல்**

437. சாதனத்தின்கீழ் பெறுநரை நியமித்தல் 441

438. பெறுநரை நியமிப்பதற்கான தத்துவத்தின் எல்லை 442

439. நீதிமன்றம் பெறுநரை நியமிக்கலாம் 443

440. பெறுநரின் நியமனம் பற்றிய அறிவித்தல் 444

441. பெறுநராண்மை பற்றிய அறிவித்தல் 445

442. பெறுநர் பதவியில் வெற்றிடம் இருத்தல் 446

*பிரிவு* *பக்கம்*

**பெறுநர்களின் தத்துவங்கள்**

443. பெறுநர்களின் தத்துவங்கள் 447

444. பெறுநர்களிடையேயுள்ள முன்னுரிமை 448

445. பங்குகள் மீதான அழைப்புகள் விடுப்பதற்கான தத்துவம் 449

446. ஆவணங்களை நிறைவேற்றுதல் 450

447. கம்பெனியினதும், பணிப்பாளர்களினதும் கடப்பாடுகள் 450

448. பெறுநர்களினது செயல்களின் வலிதுடைமை 451

449. ஆதன விற்பனைக்கு ஈடுபெறுபவரின் சம்மதம் 452

**பெறுநர்களின் கடமைகள்**

450. பெறுநர்களின் பொதுவான கடமைகள் 453

451. ஆதனத்தை விற்கும் பெறுநரின் கடமை 454

452. பாதுகாப்போ அல்லது நட்டோத்தரவாதமோ கிடையாது 454

453. பணம் தொடர்பிலான கடமை 454

454. கணக்கீட்டுப் பதிவுகள் 454

**பெறுநர்களின் அறிக்கைகள்**

455. பெறுநரால் செய்யப்படும் முதலாவது அறிக்கை 455

456. பெறுநரினாற் செய்யப்படும் மேலதிக அறிக்கைகள் 457

457. அறிக்கைகள் தயாரிப் பதற்கான காலநீடிப்பு 458

458. அறிக்கைகளைப் பெறுவதற்கு உரித்துடைய ஆட்கள் 459

459. அறிக்கைகளைப் பார்வையிடுவதற்கு உரித்துடைய ஆட்கள் 460

460. *இச்சட்டத்தின் ஏற்பாடுகள் எவையும் மீறப்படுதல்பற்றி அறிவிப்பது கடமையாதல்* 460

461. *பெறுநராண்மை முடிவடைதல் பற்றிய அறிவித்தல்* 460

**கம்பெனியின் கடப்பாடுகளுக்காக ஆதனத்தையும் பொறுப்பையும் பிரயோகித்தல்**

462. *முன்னுரிமையுள்ள உரிமைக்கோரிக்கைகள்* 461

463. *ஒழிக்கப்பட்டதன்மேல் பெறுநருக்குள்ள தத்துவங்கள்* 462

464. *பெறுநருக்குள்ள பொறுப்பு* 463

465. *பொறுப்பிலிருந்தான நிவாரணம்* 465

**பெறுநர்களை நீதிமன்றம் மேற்பார்வை செய்தல்**

466. *பெறுநர்களை நீதிமன்றம் மேற்பார்வை செய்தல்* 466

467. *நீதிமன்றம் பெறுநராண்மையை முடிவுறுத்தலாம் அல்லது மட்டுப்படுத்தலாம்* 469

468. *பெறுநரின் கடமைகளை வலுவுறுத்துவதற்கான கட்டளைகள்* 470

469. *பெறுநராண்மையிலுள்ள ஆதனத்தைப் பாதுகாக்கின்ற கட்டளைகள்* 474

**அவசிய சேவைகளை வழங்குவதற்கு மறுத்தல்**

470. *அவசிய சேவைகளை வழங்குவதற்கு மறுத்தலைத் தடைசெய்தல்* 475

## பாகம் XVI

**கம்பெனிகள் பதிவாளர் தலைமையதிபதியும் பதிவுசெய்தலும்**

*அலுவலர்களை நியமித்தல்*

471. *அலுவலர்களை நியமித்தல்* 476

*பிரிவு* *பக்கம்*

472. பதிவாளர் முடிவுகளிலிருந்ததான மேன்முறையீடுகள் 477


**இடாப்புக்களும் ஆவணங்களைப் பதிவுசெய்தலும்**

473. இடாப்புகள் வைத்திருக்கப்படுதல் வேண்டும் 477

474. இலச்சினைமூலம் ஆவணங்களை உண்மைப்படுத்தல் 479

475. ஆவணங்கள், ஆவணங்களின் பிரதிகள், அறிவித்தல்கள் முதலியனவற்றைப் பதிவுசெய்தல் 479

476. ஆவணங்களின் மொழிபெயர்ப்புகள் கோப்பிடப்படுதல் வேண்டும் 480

477. கட்டணங்கள் 481

478. செலவுகளையும் கட்டணங்களையும் அறவிடுதல் 482


**நிதியம்**

479. நிதியம் 483


**ஆவணங்களைப் பார்வையிடலும் காண்பித்தலும், விவரத் திரட்டுக்களை ஆக்குவதற்கும் புத்தகங்களைக் காண்பித்தலுக்கும் பார்வையிடலுக்கும் கம்பெனிக்குள்ள கடமையை வலியுறுத்தலும்**

480. பதிவாளரினால் வைத்திருக்கப்படும் ஆவணங்களை பார்வையிடுதலும் காண்பித்தலும் அவை பற்றிய சான்றும் 484

481. பதிவாளர் தலைமையதிபதிக்கு விவரத்திரட்டுக்களைச் செய்வதற்கு கம்பெனிக்கு உள்ள கடமையை வலியுறுத்தல் 486

482. கம்பெனிகள் தொடர்பான தகவலைச் சட்டமுறையற்று வெளிப்படுத்துதல் 487

483. தவறு சந்தேகிக்கிப்படுமிடத்து புத்தகங்கள் காண்பித்தலும் பார்வையிடலும் 487

*பிரிவு* *பக்கம்*

484. தகவல்கள் கோருவதற்கும் புத்தகங்கள், இடாப்புகள் மற்றும் ஆவணங்களைப் பார்வையிடுவதற்கும் பதிவாளருக்குள்ள தத்துவம் 489

## பாகம் XVII

### உளதாயிருக்கும் கம்பெனிகளுக்கு சட்டத்தை ஏற்புடைத்தாக்கல்

485. உளதாயிருக்கும் கம்பெனிகளுக்கு சட்டத்தை ஏற்புடைத்தாக்கல் 490

486. உளதாயிருக்கும் கம்பெனிகளின் அமைப்பக விதிகள் தொடர்பிலான ஏற்பாடுகள் 492

487. உளதாயிருக்கும் கம்பெனிகளின் கம்பெனி இலக்கங்கள் தொடர்பிலான ஏற்பாடுகள் 492

## பாகம் XVIII

### கடல் கடந்த கம்பெனிகள்

488. பொருள்கோடல் 494

489. கடல்கடந்த கம்பெனிகளினால் ஆதனங்களும் விபரங்களும் பதிவாளருக்கு ஒப்படைக்கப்படல் வேண்டும் என்பது 495

490. கடல்கடந்த கம்பெனிகள் நிலங்களை வைத்திருப்பதற்குள்ள தத்துவம் 497

491. ஆவணங்கள் முதலிய மாற்றப்பட்டவிடத்து விபரத்திரட்டு பதிவாளரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்பது 497

492. கடல்கடந்த கம்பெனியின் நிதிக்கூற்றுக்கள் 498

493. கடல்கடந்த கம்பெனியின் பெயர் 498

494. கம்பெனியின் பெயரையும் விபரங்களையும் குறிப்பிடுவதற்குள்ள கடப்பாடு 501

495. கடல்கடந்த கம்பெனிமீதான சேர்ப்பித்தல் 502

*பிரிவு* *பக்கம்*

496. இலங்கையில் கம்பெனியானது தொழிலிடம் ஒன்றைக் கொண்டிராதொழியும்போது பதிவாளருக்கு அறிவிக்கப்பட வேண்டும் என்பது 503

497. கடல்கடந்த கம்பெனியின் இலங்கையில் உள்ள சொதுக்களை ஒழித்தல் 503

498. இணங்கி ஒழுகாமைக்கான தண்டங்கள் 504

499. இப்பாகத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்கான கடமையை வலுவுக்கு கொண்டுவருதல் 504

**பங்குகளின் விற்பனைமீதும், பங்குகளின் விற்பனைக்கான கொடை முனைவுமீதும் உள்ள மட்டுப்பாடுகள்**

500. முற்பகர்வுக்குத் தேதியிடலும் அதனகத்து அடங்கியிருக்கப்பட வேண்டிய விபரங்களும் 505

501. நிபுணரின் இசைவு, ஒதுக்குகை என்பன பற்றிய ஏற்பாடுகள் 509

502. முற்பகர்வினை பதிவுசெய்தல் 510

503. பிரிவு 500, பிரிவு 501 அல்லது பிரிவு 502 என்பவற்றை மீறுவதற்கான தண்டம் 511

504. முற்பகர்வில் உள்ள பிறழ்கூற்றுகளுக்கான குடியியல் பொறுப்பு 511

505. முற்பகர்வுகள் பற்றிய ஏற்பாடுகளின் பொருள்கோடல் 512

பாகம் XIX

**மதியுரை ஆணைக்குழு**

506. மதியுரை ஆணைக்குழுவை நியமித்தல் முதலியன 512

பாகம் XX

**கம்பெனிகள் பிணக்குகள் சபை**


507. கம்பெனிகள் பிணக்குகள் சபை 515

508. சபை உறுப்பினர்கள் பிணக்குகளை மத்தியஸ்தம் செய்யலாம் 516

509. மத்தியஸ்த நடவடிக்கை தொடர்பில் சிறப்புரிமை 518

510. மத்தியஸ்தம் தொடர்பில் கொடுபடற்பாலதான கட்டணங்கள் 518


பாகம் XXI

**தவறுகள்**

*பல்லினத் தவறுகள்*


511. பிழையான கூற்றிற்கான தண்டனை 519

512. பதிவேடுகளைப் பொய்யாக்குவதற்கான தண்டம் 519

513. "வரையறுக்கப்பட்டது" என்ற சொல்லை முறைகேடாகப் பயன்படுத்துவதற்குள்ள தண்டம் 520


**தவறுகள் பற்றிய பொது ஏற்பாடுகள்**


514. குறித்தசில தவறுகளை இணங்குதல் 520

515. சுருக்கமுறையாக விளங்கற்பாலனவான தவறுகள் 521

516. குற்றப்பணங்களை விதித்தலும் பிரயோகித்தலும் 522

517. தனிப்பட்ட வழக்குத்தொடுநர்கள் தொடர்பிலான பேணல்கள் 522

518. சிறப்புரிமைத் தகவல்கள் தொடர்பிலான பேணல்கள் 522

*பிரிவு* *பக்கம்*


## பாகம் XXII

**பல்லினமானவை**

*இருபதுக்கு மேற்பட்ட உறுப்பினர்களோடு கூடிய பங்காண்மையைத் தடை செய்தல்*


519. இருபதுக்கு மேற்பட்ட உறுப்பினர்களோடுகூடிய பங்காண்மையை தடைசெய்தல் 522


**நீதிமன்றத்துக்கான விண்ணப்பமும் ஆற்றுப்படுத்துகையும்**


520. நடவடிக்கைமுறை 524

521. இடைக்கால நிவாரணம் வழங்கல் 525

522. சட்டத்தரணிகளுக்கும் வங்கியாளர்களுக்குமான பேணல்கள் 527

523. கம்பெனிமீது ஆவணங்களைச் சேர்ப்பித்தல் 528

524. சான்றாக ஏற்றுக்கொள்ளப்படவேண்டிய ஆவணங்கள் 528

525. குறித்தசில வரையறுக்கப்பட்ட கம்பெனியினால் தொடரப்படும் வழக்குகளிலான செலவுத்தொகைகள் 529

526. குறித்தசில விடயங்களில் நிவாரணம் வழங்குவதற்கு நீதிமன்றத்துக்குள்ள தத்துவம் 529

527. ஒழுங்குவிதிகள் 530

528. ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல் 531


**பொருள்கோடல்**


529. பொருள்கோடல் 531

**நிலைபெயர்கால ஏற்பாடுகளும் பேணல்களும்**

530. நிலைபெயர்கால ஏற்பாடுகள் 547

531. பேணல்கள் 549

532. ஒடுக்குவதற்காக முடிவுறாதிருக்கும் நடவடிக்கைகளுக்கான பேணல்கள் 550

பாகம் XXIII

**நீக்கங்களும் திருத்தங்களும்**

533. நீக்கங்கள் 551

534. 1996 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தின் முதலாம் அட்டவணைக்கான திருத்தம் 551

**முதலாம் அட்டவணை** 552

**இரண்டாவது அட்டவணை** (பிரிவு 31(1)) 579

**மூன்றாவது அட்டவணை** (பிரிவு 35(1)) 580

**நான்காவது அட்டவணை** (பிரிவு 37(1)) 581

**ஐந்தாவது அட்டவணை** (பிரிவு 131) 591

**ஆறாவது அட்டவணை** (பிரிவு 186) 593

**ஏழாவது அட்டவணை** (பிரிவு 249(2)) 594

**எட்டாவது அட்டவணை** (பிரிவு 355(2)) 601

**ஒன்பதாவது அட்டவணை** 602

**பத்தாவது அட்டவணை** 606

**பதினொராவது அட்டவணை** 609

**பன்னிரண்டாவது அட்டவணை** 613

**பதின்மூன்றாவது அட்டவணை** 616

## 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டம்

[2007 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 20 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ. ஓ 44/2005

**கம்பெனிகள் தொடர்பிலான சட்டத்தைத் திருத்துவதற்கும் திரட்டுவதற்குமானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

**1.** (1) இச்சட்டம் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

(2) இச்சட்டத்தின் ஏற்பாடுகள் வர்த்தமானியில் வெளியிடப் படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடிய அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும். (இது இதனகத்துப் பின்னர் “நியமிக்கப்பட்ட தேதி” எனக் குறிப்பீடுசெய்யப்படும்).

## பாகம் I

### கம்பெனிகளைக் கூட்டிணைத்தலும் தொடர்புபட்ட கருமங்களும்

*கம்பெனிகளின் அத்தியாவசியத் தனிப்பண்புகள்*

கம்பெனி யொன்றின் சட்ட அந்தஸ்தும் தகைமையும்.

**2.** (1) இச்சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியொன்று காலத்துக்குக்காலம் அது எப்பெயரால் பதிவுசெய்யப்படுகின் றதோ அப்பெயர்கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும்.

(2) கம்பெனியொன்று இலங்கைக்கு உள்ளேயும் வெளியேயும் —

(அ) இச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமை வாக, ஏதேனும் தொழிலை அல்லது செயற்பாட்டைக் கொண்டுநடாத்துவதற்கு அல்லது பொறுப்பேற்ப தற்கு, ஏதேனும் செயலைச் செய்வதற்கு அல்லது ஏதேனும் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடுவதற்குத் தகைமையையும் ; அத்துடன்

(ஆ) இலங்கையின் அல்லது வேறு ஏதேனும் நாட்டின் எழுத்திலான ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக் கமைய, (அ) என்னும் பந்தியின் நோக்கங்களுக்கு அவசியமான எல்லா உரிமைகளையும் தத்துவங் களையும் அத்துடன் சிறப்புரிமைகளையும்,

கொண்டிருத்தல் வேண்டும்.

*வெவ்வேறு வகைப்பட்ட கம்பெனிகள்.*

**3.** (1) இச்சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியொன்று, ஒன்றில் —

(அ) எந்தப் பங்குகளை வைத்திருப்பவர்கள் கம்பெனியின் சொத்துக்கள் எவையுமிருப்பின் அவற்றுக்கு உதவு தொகை செலுத்தும் பொறுப்புடையவர்களாக இருக் கின்றார்களோ அந்தப் பங்குகளைச் சார்ந்திருப் பனவாக, கம்பெனியின் அமைப்பக விதிகளில் குறித்துரைக்கப்பட்ட அப்பங்குகளை வழங்கும் ஒரு கம்பெனியாக (இச்சட்டத்தில் “வரையறுக்கப்பட்ட கம்பெனி” ஒன்றெனக் குறிப்பீடுசெய்யப்படும்) ; அல்லது

(ஆ) எந்தப் பங்குகளை வைத்திருப்பவர்கள் கம்பெனியின் அமைப்பக விதிகளின்கீழ் அதன் சொத்துக்களுக்கு உதவுதொகை செலுத்துவதற்கு வரையறுக்கப்படாத பொறுப்பொன்றை உடையவர்களாக இருக்கின்றார் களோ அந்தப் பங்குகளை வழங்குகின்ற ஒரு கம்பெனி யாக, (அது இச்சட்டத்தில் “வரையறுக்கப்படாத கம் பெனி” ஒன்று எனக் குறிப்பீடுசெய்யப்படும்) ; அல்லது

(இ) எந்தக் கம்பெனியின் உறுப்பினர்கள், அது ஒழித்துக் கட்டப்படும்பட்சத்தில், கம்பெனியின் அமைப்பக விதிகளில் குறித்துரைக்கப்பட்ட தொகையொன்றில் கம்பெனியின் சொத்துக்களுக்கு உதவுதொகை செலுத்துவதற்குப் பொறுப்பேற்கின்றார்களோ, அந்த பங்குகளை வழங்காத ஒரு கம்பெனியாக (இச்சட்டத்தில் “உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பெனி” ஒன்று எனக் குறிப்பீடுசெய்யப்படும்).

இருக்கலாம்.

(2) வரையறுக்கப்பட்ட கம்பெனியொன்று, தனியார் கம்பெனி யொன்றாக அல்லது கரைகடந்த கம்பெனியொன்றாகக் கூட்டிணைக்கப்படுமிடத்து, முறையே பாகம் II என்பதன் அல்லது பாகம் XI என்பதன் ஏற்பாடுகள் அத்தகைய கம்பெனிக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

**கம்பெனிகளைக் கூட்டிணைத்தல்**

கம்பெனி யொன்றைக் கூட்டிணைக்கும் முறை.

**4.** (1) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, எவரேனும் ஆள் அல்லது ஆட்கள், உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பெனியொன்றைத் தவிர்ந்த வேறொரு கம்பெனியைக் கூட்டிணைப்பதற்காக, பின்வரும் ஆவணங்களுடன் ஆரம்பப் பங்குதாரர்கள் ஒவ்வொருவராலும் கையொப்பமிடப்பட்ட விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் அதற்கெனப் பதிவாளருக்கு விண்ணப்பமொன்றைச் செய்வதன்மூலம் விண்ணப்பிக்கலாம் :—

(அ) அத்தகைய ஆளின் அல்லது ஆட்களின் அறிவுக் கெட்டியவரை கம்பெனியின் பெயர், உளதாம் கம்பெனியொன்றின் அதே பெயராக அல்லது அதன் பெயரையொத்ததாக இருக்கவில்லை எனக்கூறும் வெளிப்படுத்துகை ஒன்று ;

(ஆ) கம்பெனியின் அமைப்பக விதிகள், இதற்கான முதலாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள அமைப்பக விதிகளினின்று வித்தியாசப்படுமாயின், ஆரம்பப் பங்குதாரர்கள் ஒவ்வொருவராலும் கையொப்பமிடப் பட்ட அமைப்பகவிதிகள் ;

(இ) கம்பெனியின் பணிப்பாளரொருவராகச் செயலாற்றுவதற்கு 203 ஆம் பிரிவின்கீழ் ஆரம்பப் பணிப்பாளர்கள் ஒவ்வொருவரினதும் சம்மதம் ; அத்துடன்

(ஈ) கம்பெனியின் செயலாளராகச் செயலாற்றுவதற்கு 221ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் ஆரம்பச் செயலாளரின் சம்மதம்.

(2) கம்பெனியொன்று இரண்டிற்குக் குறையாத பங்குதாரர்களைக் கொண்டிருத்தலாகாது. ஆயினும் ஒரேயொரு பங்குதாரர் இலங்கை அரசாங்கத்தின் சார்பில் பங்குகளை வைத்திருக்கின்றவரான திறைசேரியின் செயலாளராக அல்லது தனி ஆள் ஒருவராக கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக இருக்குமிடத்து, கம்பெனியொன்று அத்தகைய ஒரேயொரு பங்குதாரரைக் கொண்டிருக்கலாம்.

கம்பெனியைக் கூட்டிணைத்தல்.

**5.** (1) விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கூட்டிணைப்பதற்கான விண்ணப்பமொன்று கிடைக்கப்பெற்றதன்மீது பதிவாளர் —

(அ) கம்பெனியின் விவரங்களை இடாப்பில் பதிதல் வேண்டும் ;

(ஆ) அக்கம்பெனிக்கு, அதன் கம்பெனி இலக்கமாக தனித்தன்மைவாய்ந்த இலக்கமொன்றைக் குறித்தொதுக்குதல் வேண்டும் ; அத்துடன்

(இ) விண்ணப்பித்த கம்பெனிக்கு விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் கூட்டிணைப்புச் சான்றிதழ் ஒன்றை வழங்குதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட கூட்டிணைப்புச் சான்றிதழ் —

(அ) கம்பெனியின் பெயரையும் இலக்கத்தையும் ;

(ஆ) கம்பெனி கூட்டிணைக்கப்பட்ட தேதியையும் ;

(இ) கம்பெனி வரையறுக்கப்பட்ட ஒரு கம்பெனியா, வரையறுக்கப்படாத ஒரு கம்பெனியா அல்லது உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட ஒரு கம்பெனியா என்பதையும்;

(ஈ) கம்பெனி, ஒரு தனியார் கம்பெனியா என்பதையும் ; அத்துடன்

(உ) கம்பெனி, ஒரு கரைகடந்த கம்பெனியா என்பதையும்,

குறித்துரைத்தல் வேண்டும்.

(3) ஏதேனும் கம்பெனி தொடர்பில் இப்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட கூட்டிணைப்புச் சான்றிதழொன்று -

(அ) கம்பெனியொன்றைக் கூட்டிணைத்தல் தொடர்பில் இச்சட்டத்தின்கீழான எல்லாத் தேவைப்பாடுகளும் இணங்கியொழுகப்பட்டுள்ளன ; அத்துடன்

(ஆ) கம்பெனி அத்தகைய கூட்டிணைப்புச் சான்றிதழில் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று இச்சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ளது,

என்ற நிகழ்வுக்கு முடிவான சான்றாதல் வேண்டும்.

### கம்பெனியின் பெயர்கள்

**6.** (அ) நிரற்படுத்தப்பட்ட கம்பெனியொன்றல்லாத வேறு வரையறுக்கப்பட்ட ஒவ்வொரு கம்பெனியினதும் பெயர் "வரையறுக்கப்பட்ட" என்ற சொல்லில் அல்லது "வ/ப" என்ற சுருக்கத்துடன் முடிவடைதல் வேண்டும் ;

*பெயர் பற்றிய தேவைப் பாடுகள்.*

(ஆ) ஒவ்வொரு தனியார் கம்பெனியினதும் பெயர், "வரையறுக்கப்பட்ட (தனியார்)" என்ற சொற்களில் அல்லது "வ/ப.... (தனி)" என்னும் சுருக்கங்களுடன் முடிவடைதல் வேண்டும் ;

(இ) நிரற்படுத்தப்பட்ட கம்பெனியொன்றாக இருக்கும் வரையறுக்கப்பட்ட கம்பெனி ஒவ்வொன்றினதும் பெயர் "வரையறுக்கப்பட்ட பகிரங்கக் கம்பெனி" என்ற சொற்களில் அல்லது "வ.ப.க." என்னும் சுருக்கங்களுடன் முடிவடைதல் வேண்டும்.

**7.** (1) கம்பெனியொன்று –

*பெயர்கள் மீதான மட்டுப்பாடு.*

(அ) வேறு ஏதேனும் கம்பெனியின் அல்லது ஏதேனும் பதிவுசெய்யப்பட்ட கடல்கடந்த கம்பெனியின் அதே பெயர்கொண்ட ;

(ஆ) கம்பெனி அதன் பெயருக்கு "வரையறுக்கப்பட்ட" என்ற சொல்லை சேர்த்துக்கொள்ளாமலேயே 34 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்றின்கீழ் பதிவு செய்யப்படவிருக்கும் கம்பெனியொன்றாக இருந்தாலன்றி, "வர்த்தக மன்றம்" என்ற சொல்லைக் கொண்ட ; அல்லது

(இ) பதிவாளரது கருத்தில் பிறழ்வழி இட்டுச்செல்லுகின்ற,

ஒரு பெயரால் பதிவுசெய்யப்படுதலாகாது.

(2) தேசிய நலனைக் கருத்திற்கொண்டு, வழங்கப்பட்ட அமைச்சரின் சம்மதத்துடனன்றி, கம்பெனி எதுவும் —

(அ) "சனாதிபதி", "சனாதிபதியின்" என்ற அல்லது பதிவாளரது அபிப்பிராயத்தில், சனாதிபதியின் ஆதரவை அல்லது அரசாங்கத்துடனான அல்லது ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்துடனான தொடர்பை உணர்த்துகின்ற அல்லது உணர்த்தக் கருதுகின்ற சொற்களை ; அல்லது

(ஆ) "மாநகர" அல்லது "கூட்டிணைக்கப்பட்ட" என்ற அல்லது பதிவாளரது அபிப்பிராயத்தில் ஏதேனும் மாநகர சபையுடன் அல்லது வேறு உள்ளூரதிகார சபையுடன் அல்லது பாராளுமன்றச் சட்டத்தால் கூட்டிணைக்கப்பட்ட ஏதேனும் சங்கத்துடன் அல்லது குழுமத்துடன் தொடர்பை உணர்த்தக் கருதுகின்ற சொற்களை ; அல்லது

(இ) "கூட்டுறவு" அல்லது "சங்கம்" என்ற சொற்களை ; அல்லது

(ஈ) "தேசிய", "அரச" அல்லது "இலங்கை" என்ற அல்லது பதிவாளரது அபிப்பிராயத்தில் அரசாங்கத்துடன் அல்லது அதன் ஏதேனும் திணைக்களத்துடன் ஏதேனும் தொடர்பை உணர்த்துகின்ற அல்லது உணர்த்தக் கருதுகின்ற சொற்களை,

கொண்ட பெயரொன்றினால் பதிவுசெய்யப்படுதல் ஆகாது.

(3) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக ஒரு பெயர் இன்னொன்றைப் போன்றதாகவே இருக்கின்றதா என்பதைத் தீர்மானிக்கையில் பின்வரும் சொற்கள் கருத்திற்கெடுத்துக்கொள்ளப்படுதலாகாது :—

(அ) *

(ஆ) பின்வரும் சொற்கள் மற்றும் சொல்லமைப்புகள் பெயரில் காணப்படுமிடத்து :—

---

* தமிழில் ஏற்புடையதாகாது

(i) "கம்பெனி" ;

(ii ) "மற்றும் கம்பெனி" ;

(iii) "வரையறுக்கப்பட்ட ............... கம்பெனி" ;

(iv) "வரையறுக்கப்பட்ட ............... மற்றும் கம்பெனி";

(v) "வரையறுக்கப்பட்ட" ;

(vi) "வரையறுக்கப்படாத" ;

(vii) "வரையறுக்கப்பட்ட ............... (தனியார்)" ;

(viii) "வரையறுக்கப்பட்ட பகிரங்கக் கம்பெனி".

(இ) ஆறாம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட சுருக்கக்குறிகள், அவை பெயரின் முடிவில் காணப்படுமிடத்து ;

(ஈ) எழுத்துக்களின் வடிவம், பருமன், உச்சரிப்புகள், எழுத்துக்களுக்கிடையிலான இடைவெளிகள், நிறுத்தக் குறிகள் ; அத்துடன்

(உ) "மற்றும்" அல்லது "&"

**8.** (1) ஒரு கம்பெனியானது விசேட தீர்மானத்தின் மூலமும் பதிவாளரின் எழுத்திலான முன்னங்கீகாரத்துடனும் அதன் பெயரை மாற்றஞ்செய்யலாம். பெயர் மாற்றம்.

(2) கம்பெனியொன்று (1) ஆம் உட்பிரிவின்கீழ் அதன் பெயரை மாற்றத் தீர்மானித்துள்ளவிடத்து, மாற்றஞ்செய்யப்பட்ட பத்து வேலைநாட்களுக்குள் பதிவாளருக்கு மாற்றம் பற்றிய அறிவித்தலை விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் கொடுத்தல் வேண்டும்.

(3) கம்பெனியொன்று அதன் பெயரை மாற்றியுள்ளதென்ற அறிவித்தல் கிடைக்கப்பெற்றதன்மீது, பதிவாளர் —

(அ) இடாப்பில் முந்திய பெயரினிடத்தில் புதிய பெயரைப் பதிதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) (i) பெயர் மாற்றத்தையும் ; அத்துடன்

(ii) கம்பெனி ஒரு தனியார் கம்பெனியாகியுள்ள விடத்து அல்லது ஒரு தனியார் கம்பெனியாக இல்லாதொழிந்துள்ளவிடத்து, அம்மாற்றம் பற்றிய நிகழ்வையும்

சுட்டிக்காட்டுவதற்கு விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் புதிய கூட்டிணைப்புச் சான்றிதழொன்றை வழங்குதல் வேண்டும்.

(4) பெயர் மாற்றமானது, கம்பெனியின் எவையேனும் உரிமைகளை அல்லது கடப்பாடுகளை பாதித்தலாகாது, அல்லது கம்பெனியால் அல்லது கம்பெனிக்கெதிராக எடுக்கப்படும் எவையேனும் சட்ட நடவடிக்கைகளைப் பயனற்றதாக்குவதாகாது. அதன் முந்திய பெயரில் அதற்கெதிராகத் தொடர்ந்து நடாத்தப்பட்டிருக்கக்கூடிய அல்லது தொடங்கப்பட்டிருக்கக்கூடிய சட்ட நடவடிக்கைகள் எவையும் அதன் புதிய பெயர்கொண்டு அதற்கு எதிராகக் கொண்டுநடாத்தப்படலாம் அல்லது தொடங்கப்படலாம்.

(5) கம்பெனியொன்று (2) ஆம் உட்பிரிவுக்கு இணங்கியொழுகத் தவறுமிடத்து —

(அ) கம்பெனி, தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப் பணத்திற்கு ஆளாதலும் வேண்டும் ; அத்துடன்

(ஆ) தவறுகையிலுள்ளவரான கம்பெனியின் அலுவலர் ஒவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

பெயர் பற்றிய பகிரங்க அறிவித்தல்.

**9.** (1) ஒரு கம்பெனியானது இச்சட்டத்தின்கீழ் அது கூட்டிணைக்கப்பட்ட முப்பது வேலைநாட்களுக்குள்ளாக —

(அ) கம்பெனியின் பெயரையும் கம்பெனியின் இலக்கத்தையும் ; அத்துடன்

(ஆ) கம்பெனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தின் முகவரியையும்,

குறித்துரைத்து அது கூட்டிணைக்கப்பட்டமை பற்றிய பகிரங்க அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.

(2) கம்பெனியொன்று 8 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க அதன் பெயரை மாற்றுகின்றவிடத்து, அத்தகைய மாற்றத்தின் பின்னர் இருபது வேலை நாட்களுக்குள்ளாக –

(அ) கம்பெனியின் முன்னைய பெயரையும் ;

(ஆ) கம்பெனி இலக்கத்தையும் ;

(இ) கம்பெனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தின் முகவரியையும் ; அத்துடன்

(ஈ) கம்பெனியின் புதிய பெயரையும்,

குறித்துரைத்து அதனைப் பற்றிய பகிரங்க அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.

(3) கம்பெனியொன்று (1) ஆம் அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழ் தேவைப்படுத்தப்பட்ட அறிவித்தலை வெளியிடத் தவறுமிடத்து–

(அ) கம்பெனி, தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப் பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

(ஆ) பதிவாளர் இயைபான அறிவித்தலை வெளியிடச் செய்வித்தல் வேண்டும்.

பெயரை மாற்றுவதற்கான பணிப்பு.

**10**. (1) ஏழாம் பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், பதிவாளர் பின்வரும் சந்தர்ப்பங்களில் கம்பெனியொன்றை அதன் பெயரை மாற்றுமாறு பணிக்கலாம் –

(அ) தற்செயலாக அல்லது வேறுவகையில் 6 ஆம் பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற பெயரொன்றுடன் அது பதிவுசெய்யப்பட்டுள்ளவிடத்து ;

(ஆ) (i) முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட கம்பெனியின் பெயரானது, குழறுபடியை ஏற்படுத்தும் சாத்தியமுள்ள அளவுக்கு வேண்டுகோள் விடுக்கும் கம்பெனியின் பெயரையொத்திருக்குமிடத்தும் ; அத்துடன்

(ii) முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட கம்பெனி, ஆட்சேபிக்கப்படும் பெயரால் பதிவுசெய்யப்படுவதற்கு முன்னரே வேண்டுகோள் விடுக்கும் கம்பெனியானது, அதன் தற்போதைய பெயரால் பதிவுசெய்யப்பட்டிருந்தவிடத்தும் ;

ஒன்பதாம் பிரிவின்கீழ் வேறொரு கம்பெனியால் அல்லது பதிவுசெய்யப்பட்ட கடல்கடந்த கம்பெனியொன்றால் ஆட்சேபிக்கப்பட்ட பெயரைப் பற்றிய பகிரங்க அறிவித்தல் கம்பெனியால் கொடுக்கப்பட்ட மூன்று மாதங்களுக்குள்ளாக அவ்வாறு செய்யுமாறு பதிவாளருக்கு வேண்டுகோளொன்று விடுக்கப்படுமிடத்து ; அல்லது

(இ) அவ்வாறு செய்யுமாறு எவரேனும் ஆளினால் பதிவாளருக்கு வேண்டுகோளொன்று விடுக்கப்படுமிடத்தும் அத்துடன் கம்பெனியை இனங்காணும் நோக்கத்திற்கு அப்பெயருக்காக நல்லெண்ணத்துடன் விண்ணப்பிக்கப்படவில்லையென பதிவாளர் திருப்தியுறுமிடத்தும்.

(2) கம்பெனியொன்று (1) ஆம் உட்பிரிவின்கீழ் பதிவாளரால் பணிப்பொன்று வழங்கப்பட்ட தேதியிலிருந்து ஆறு வாரங்களைக் கொண்டவொரு காலப்பகுதிக்குள்ளாக அல்லது பதிவாளர் அவரது தற்றுணிபின்பேரில் அனுமதிக்கக்கூடியவாறான அத்தகைய நீண்டகாலப் பகுதிக்குள்ளாக, அத்தகைய பணிப்புக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

(3) இப்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட பணிப்பொன்றுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற கம்பெனியொன்று தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

கம்பெனியின் அந்தஸ்து மாற்றப் படுவதன்மீது பெயர் மாற்றம்.

**11.** (1) கம்பெனியொன்று தனியார் கம்பெனியொன்றாக இல்லாதொழியுமிடத்து, அது, "(தனியார்)" என்னும் சொல்லை விட்டுவிடுவதன்மூலம் 8 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க அதன் பெயரை மாற்றத் தீர்மானித்திருப்ப தாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) தனியார் கம்பெனியொன்றல்லாத கம்பெனியொன்று 29ஆம் பிரிவின்கீழ் தனியார் கம்பெனியொன்றாக வருமிடத்து, அது அதன் பெயரில் "வரையறுக்கப்பட்ட ............." என்னும் சொல்லுக்குப் பதிலாக "வரையறுக்கப்பட்ட ............. (தனியார்)" என்னும் சொற்களை இடுவதன்மூலம் 8 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க அதன் பெயரை மாற்றத் தீர்மானித்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) வரையறுக்கப்பட்ட கம்பெனியொன்று நிரற்படுத்தப்பட்ட கம்பெனியொன்றாக வருமிடத்து, அது, அதன் பெயரில் "வரை யறுக்கப்பட்ட" என்னும் சொல்லுக்குப் பதிலாக "வரையறுக்கப் பட்ட பகிரங்கக் கம்பெனி" என்னும் சொற்களை இடுவதன்மூலம் 8 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க அதன் பெயரை மாற்றத் தீர்மானித்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) வரையறுக்கப்பட்ட கம்பெனியொன்று நிரற்படுத்தப்பட்ட கம்பெனியொன்றாக இல்லாதொழியுமிடத்து, அது, அதன் பெயரில் "வரையறுக்கப்பட்ட பகிரங்கக் கம்பெனி" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வரையறுக்கப்பட்ட" என்னும் சொல்லை இடுவதன்மூலம் 8 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடு களுக்கிணங்க அதன் பெயரை மாற்றத் தீர்மானித்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) கம்பெனியொன்று இப்பிரிவின்கீழ் அதன் பெயரை மாற்றத் தீர்மானித்திருப்பதாகக் கருதப்படுமிடத்து, அத்தகைய மாற்றத் தின் பின்னர் பத்து வேலை நாட்களுக்குள்ளாக அம்மாற்றம் பற்றிய பகிரங்க அறிவித்தல் கொடுத்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய அறிவித்தலின் பிரதியொன்றை பதிவாளருக்கு அனுப்புதலும் வேண்டும். அத்துடன் 8 ஆம் பிரிவின் (3) ஆம், (4)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய பெயர்மாற்றத்திற்கும் அது தொடர்பிலும் ஏற்புடைத்தாதலும் வேண்டும்.

(6) கம்பெனியொன்று (5) ஆம் உட்பிரிவின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுமிடத்து –

(அ) கம்பெனி தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும் ; அத்துடன்

(ஆ) தவறுகையிலுள்ளவரான கம்பெனியின் அலுவலர் ஒவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல், ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

கம்பெனிப் பெயரினதும் கம்பெனி இலக்கத்தினதும் பயன்பாடு.

**12.** (1) கம்பெனியொன்று –

(அ) கம்பெனியின் எல்லாத் தொழில் சம்பந்தமான கடிதங்களிலும் ;

(ஆ) கம்பெனியின் எல்லா அறிவித்தல்களிலும் வேறு அலுவலகமுறையான வெளியீடுகளிலும் ;

(இ) கம்பெனியின் சார்பில் கையொப்பமிடப்பட்ட எல்லா மாற்றுண்டியல்களிலும் வாக்குறுதிப்பத்திரங்களிலும் புறக்குறிப்புகளிலும், காசோலைகளிலும் காசுக்கான அல்லது பண்டங்களுக்கான கட்டளைகளிலும் ;

(ஈ) கம்பெனியின் எல்லா விலைப்பட்டியல்களிலும் பற்றுச்சீட்டுகளிலும் கடன் பத்திரங்களிலும் ;

(உ) கம்பெனியின் சட்டபூர்வமான கடப்பாடொன்றை உருவாக்குகின்றவையும் அல்லது அதற்கான சான்றாயிருப்பனவும் கம்பெனியினால் வழங்கப்பட்டவையும் அல்லது கையொப்பமிடப்பட்டவையுமான வேறு எல்லா ஆவணங்களிலும் ; அத்துடன்

(ஊ) கம்பெனி இலச்சினை எதுவுமிருப்பின் அதிலும்,

அதன் பெயரும் கம்பெனி இலக்கமும் தெளிவாகக் குறிப்பிடப்படுவதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(2) கம்பெனி ஒவ்வொன்றும் அதன் பெயரும் அதன் கம்பெனி இலக்கமும் அதன் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தில் தெளிவாக வெளிக்காட்டப்படுவதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(3) கம்பெனியொன்று (1) ஆம் உட்பிரிவின் அல்லது (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுமிடத்து -

(அ) கம்பெனி தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும் ; அத்துடன்

(ஆ) தவறுகையிலுள்ளவரான கம்பெனியின் அலுவலர் ஒவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

(4) (அ) கம்பெனியொன்றின் சட்டபூர்வமான கடப்பாடொன்றை உருவாக்குகின்ற அல்லது அதற்குச் சான்றாயிருக்கும் ஆவணமொன்று கம்பெனியால் அல்லது அதன் சார்பில் வழங்கப்படுமிடத்து அல்லது கையொப்பமிடப்படுமிடத்து ; அத்துடன்

(ஆ) கம்பெனியின் பெயரும் கம்பெனி இலக்கமும் ஆவணத்தில் சரியாகக் குறிப்பிடப்படாதவிடத்து ;

(இ) அந்த ஆவணத்தை வழங்கிய அல்லது அதில் கையொப்பமிட்ட ஆள், எந்த ஆளின் பெயரில் கடப்பாடு உறப்பட்டதோ அந்த ஆள் ஆவணம் வழங்கப்பட்ட அல்லது கையொப்பமிடப்பட்ட நேரத்தில் கடப்பாடு கம்பெனியால் உறப்பட்டது என்பதை அறிந்திருந்தாரென எண்பித்தாலன்றி ; அல்லது

(ஈ) அவ்வாள், அவ்வாறு, ஆளாவது நியாயமற்றதும் ஒப்புரவற்றதுமாகும் என நீதிமன்றம் திருப்தியுற்றாலன்றி,

கம்பெனி கடப்பாட்டை நிறைவேற்றத் தவறினால், ஆவணத்தை வழங்கிய அல்லது ஆவணத்தில் கையொப்பமிட்ட ஒவ்வோராளும் கம்பெனியைப் போன்ற அதே அளவில் பொறுப்பாளியாதல் வேண்டும்.

(5) ஓராம், (2) ஆம் உட்பிரிவுகளின் நோக்கங்களுக்காக கம்பெனியொன்று, அவ்வாறு செய்வது பிறழ்வழி இட்டுச்செல்வதாயிருந்தாலன்றி, அதன் பெயரில் ஏதேனும் சொல்லின் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட சுருக்கக் குறியீடொன்றைப் பயன்படுத்தலாம்.

## அமைப்பகவிதிகள்

*அகவிதிகளின் உள்ளடக்கம்.*

**13.** கம்பெனியொன்றின் அமைப்பு அகவிதிகள், இதற்கான முதலாம் அட்டவணையைத் தவிர, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாக இராத ஏதேனும் கருமத்திற்கும் அத்துடன் குறிப்பாக பின்வருவனவற்றிற்கும் ஏற்பாடு செய்யலாம் :—

(அ) கம்பெனியின் குறிக்கோள்கள் ;

(ஆ) கம்பெனியின் பங்குதாரர்களின் உரிமைகளும் கடப்பாடுகளும் ; அத்துடன்

(இ) கம்பெனியின் முகாமையும் நிருவாகமும்.

*மாதிரி அமைப்பக விதிகளின் ஏற்புடைமை.*

**14.** இதற்கான முதலாவது அட்டவணையில் தரப்பட்டுள்ள அமைப்பு அகவிதிகள் (இதனகத்துப்பின்னர் "மாதிரி அமைப்பு அகவிதிகள்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) மாதிரி அகவிதிகளை புறநீக்கம் செய்கின்ற திரிபுபடுத்துகின்ற அல்லது அவற்றிற்கு ஒவ்வாதனவாகும் அமைப்பக விதிகளை கம்பெனி ஏற்றங்கீகரிக்கும் அளவுக்குத் தவிர, உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்டவொரு கம்பெனியைத் தவிர, வேறு ஏதேனும் கம்பெனி தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்.

அமைப்பக விதிகளை ஏற்றங்கீகரித்தல் அல்லது திருத்துதல்.

**15.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அதன் அமைப்பக விதிகளில் அடங்கியுள்ள எவையேனும் நிபந்தனைகளுக்கும் அமைய, ஒரு கம்பெனி ஏதேனும் நேரத்தில், விசேட தீர்மானத் தின்மூலம் —

(அ) புதிய அமைப்பகவிதிகளை ஏற்றங்கீகரிக்கலாம் ;

(ஆ) அது முதலாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள அமைப்பகவிதிகளிலிருந்து வித்தியாசப்படும் அமைப்பகவிதிகளைக் கொண்டிருந்தால், அத்தகைய அகவிதிகளை அதன் அமைப்பகவிதிகளாக ஏற்றங்கீ கரிக்கலாம் ; அல்லது

(இ) அதன் அமைப்பகவிதிகளை மாற்றலாம்.

(2) கம்பெனியொன்று விசேட தீர்மானமொன்றினால் அதன் அமைப்பகவிதிகளை மாற்றுமிடத்து, தீர்மானத்தினதும் அத்துடன் எவையேனும் புதிய அமைப்பகவிதிகளினதும் அல்லது கம்பெனியின் அமைப்பகவிதிகளுக்கான எவையேனும் திருத்தங் களினதும் முழு உரையையும் எடுத்துக்காட்டி பத்து வேலை நாட்களுக்குள் பதிவாளருக்கு அத்தகைய தீர்மானம் பற்றிய அறிவித்தலைக் கொடுத்தல் வேண்டும்.

(3) கம்பெனியொன்று (2) ஆம் உட்பிரிவின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுமிடத்து -

(அ) கம்பெனி தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

(ஆ) தவறுகையிலுள்ளவரான கம்பெனியின் அலுவலர் ஒவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

அமைப்பக விதிகளின் பயன்.

**16.** கம்பெனியொன்றின் அமைப்பகவிதிகள், 89 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, அது கம்பெனிக்கும் அதன் பங்குதாரர்களுக்குமிடையிலான ஓர் ஒப்பந்தம் என்றாற்போன்று கம்பெனியையும் அதன் பங்குதாரர்களையும் பிணித்தல் வேண்டும். குறிப்பாக, அமைப்பக விதிகளின்கீழ் எவரேனும் பங்குதாரரால் கம்பெனிக்குச் செலுத்தப்படற்பாலதான எல்லாப் பணமும் அப்பங்குதாரரிடமிருந்து கம்பெனிக்கு வருமதியான தனிசொன்றாதல் வேண்டும்.

அமைப்பக விதிகளில் குறிக்கோள்கள் பற்றிய கூற்றின் பயன்.

**17.** (1) கம்பெனியொன்றின் அமைப்பகவிதிகள் கம்பெனியின் குறிக்கோள்களை எடுத்துக்காட்டுமிடத்து, அமைப்பக விதிகள் வெளிப்படையாக வேறுவகையில் ஏற்பாடு செய்தாலன்றி, அக்குறிக்கோள்களுக்குட்படாத ஏதேனும் அலுவலை அல்லது செயற்பாட்டை கொண்டுநடாத்துவதில் அமைப்பகவிதிகளால் மட்டுப்பாடு விதிக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) கம்பெனியொன்றின் அமைப்பக விதிகள் கம்பெனி ஈடுபடக்கூடிய தொழிலின்மீது அல்லது செயற்பாடுகள்மீது ஏதேனும் மட்டுப்பாட்டிற்கு ஏற்பாடு செய்யுமிடத்து -

(அ) கம்பெனியின் தகைமையும் தத்துவங்களும் அத்தகைய மட்டுப்பாட்டால் பாதிக்கப்படுதலாகாது ; அத்துடன்

(ஆ) கம்பெனியின் செயல் எதுவும் அல்லது கம்பெனியால் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தம் அல்லது கடப்பாடெதுவும் அத்துடன் கம்பெனியால் அல்லது கம்பெனிக்கு ஆதனத்தின் அறுதிமாற்றம் எதுவும், அது அத்தகைய மட்டுப்பாட்டிற்கு முரணாகச் செய்யப்பட்டது என்ற நிகழ்வின் காரணத்தால் மட்டும் செல்லுபடியற்றதாதல் ஆகாது.

(3) இரண்டாம் உட்பிரிவிலுள்ள எதுவும் –

(அ) கம்பெனி அவ்வாறு செய்வதற்கு ஒப்பந்தமொன்றை அல்லது பிணிக்கும் வேறு கடப்பாட்டைச் செய்திருந்தாலன்றி, அமைப்பு அகவிதிகளால் விதிக்கப்பட்ட மட்டுப்பாடொன்றுக்கு ஒவ்வாத முறையொன்றில்

செயற்படுவதினின்று கம்பெனியைத் தடைசெய்வதற்கு 233 ஆம் பிரிவின்கீழ் நீதிமன்றத்திற்கு விண்ணப்பமொன்றைச் செய்வதற்கு கம்பெனியின் பங்குதாரர் ஒருவருக்குள்ள அல்லது பணிப்பாளர் ஒருவருக்குள்ள ஆற்றலை ; அல்லது

(ஆ) 188 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக செயற்படுவதற்கு கம்பெனியின் பணிப்பாளரொருவருக்குள்ள பொறுப்பை.

பாதித்தலாகாது.

அமைப்பக விதிகளின் பிரயொன்றைப் பெறுவதற்கு பங்குதாரர் களுக்குள்ள உரிமை.

**18.** (1) ஏதேனும் நேரத்தில் கம்பெனியின் அமைப்பகவிதிகளின் பிரதியொன்றுக்கு கம்பெனியிடம் எழுத்துமூலம் வேண்டுகோள் விடுக்கும் உரிமை பங்குதாரர் ஒருவருக்குண்டு என்பதுடன் (2) ஆம் உட்பிரிவிற்கமைய, அத்தகைய வேண்டுகோள் கிடைக்கப்பெற்ற ஐந்து வேலை நாட்களுக்குள்ளாக கம்பெனி அத்தகைய வேண்டுகோளுக்கு இணங்கியொழுகுதலும் வேண்டும்.

(2) எந்தக் கம்பெனியிடம் (1) ஆம் உட்பிரிவின்கீழ் வேண்டுகோள் விடுக்கப்படுகின்றதோ அந்தக் கம்பெனி —

(அ) அமைப்பகவிதிகளின் பிரதியொன்றை வழங்குமுன்னர் ஐந்நூறு ரூபாவுக்கு மேற்படாத கட்டணமொன்றைச் செலுத்துமாறு பங்குதாரரை தேவைப்படுத்தலாம் ; அல்லது

(ஆ) முந்திய ஆறு மாதங்களுக்குள் அப்பங்குதாரருக்குப் பிரதியொன்று வழங்கப்பட்டிருந்தால் அமைப்பக விதிகளின் பிரதியொன்றை வழங்க மறுக்கலாம்.

(3) கம்பெனியொன்று (1) ஆம் உட்பிரிவின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுமிடத்து —

(அ) கம்பெனி தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு ஆளாதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) தவறுகையிலுள்ளவரான கம்பெனியின் அலுவலர் ஒவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப் பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

**கம்பெனி ஒப்பந்தங்கள் முதலியன**

ஒப்பந்தஞ் செய்யும் முறை.

**19.** (1) ஓர் ஒப்பந்தம் அல்லது வலுவுக்கிடப்படற்பாலதான வேறு கடப்பாடு ஒரு கம்பெனியால் பின்வருமாறு செய்துகொள்ளப் படலாம் :—

(அ) இயற்கை ஆளொருவரால் செய்துகொள்ளப்படின் எழுத்திலிருத்தல் வேண்டுமெனவும் அவ்வாளால் கையொப்பமிடப்பட்டு நொத்தாரிசுவால் சான்றுப் படுத்தப்படவேண்டுமெனவும் சட்டத்தால் தேவைப் படுத்தப்பட்ட கடப்பாடொன்று கம்பெனியின் சார் பில் —

(i) கம்பெனியின் பணிப்பாளர்கள் இருவரால் ;

(ii) பணிப்பாளர் ஒருவர் மட்டுமே இருந்தால் அப் பணிப்பாளரால் ;

(iii) கம்பனியின் அமைப்பகவிதிகள் அவ்வாறு ஏற்பாடு செய்யின் வேறு எவரேனும் ஆளினால் அல்லது வகுப்பினரான ஆட்களினால் ; அல்லது

(iv) கம்பெனியால் நியமிக்கப்பட்ட அற்றோனித் தத்துவக்காரர் ஒருவரால் அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவர்களால்,

கம்பெனியின் பெயரின்கீழ் கையொப்பமிடப்பட்டு நொத்தாரிசுவால் நிறைவேற்றப்பட்டு எழுத்தில் செய்துகொள்ளப்படலாம் ;

(ஆ) இயற்கை ஆளொருவரால் செய்துகொள்ளப்படின், எழுத்தில் இருத்தல் வேண்டும் எனவும் அவ்வாளினால் கையொப்பமிடப்பட வேண்டும் எனவும் சட்டத்தால் தேவைப்படுத்தப்பட்ட கடப்பாடொன்று கம்பெனியின் வெளிப்படையான அல்லது உட்கிடையான அதிகாரத்தின்கீழ் செயற்படும் ஆளொருவரால் கையொப்பமிடப்பட்டு கம்பெனியின் சார்பில் எழுத்தில் செய்துகொள்ளப்படலாம். ;

(இ) இயற்கை ஆளொருவரால் செய்துகொள்ளப்படின், எழுத்தில் இருத்தல் வேண்டுமெனச் சட்டத்தால் தேவைப்படுத்தப்படாத கடப்பாடொன்று கம்பெனியின் சார்பில், கம்பெனியின் வெளிப்படையான அல்லது உட்கிடையான அதிகாரத்தின் கீழ் செயற்படும் ஆளினால் எழுத்திலோ அல்லது வாய்மூலமாகவோ செய்துகொள்ளப்படலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் ஒப்பந்தமொன்றுக்கு அல்லது வேறு கடப்பாட்டிற்கு —

(அ) அவ்வொப்பந்தம் அல்லது கடப்பாடு இலங்கையில் செய்து கொள்ளப்படினும் சரி அல்லாவிடினுஞ்சரி ; அத்துடன்

(ஆ) ஒப்பந்தம் அல்லது கடப்பாடு எந்தச் சட்டத்திற்குட்பட்டதோ அந்தச் சட்டம் இலங்கையின் சட்டமாயிருப்பினுஞ்சரி அல்லாவிடினுஞ்சரி,

ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் நோக்கத்திற்காக, கம்பெனியொன்று அவ்வாறு செய்வது பிறழ்வழி இட்டுச் செல்வதாயிருந்தாலன்றி, அதன் பெயரில் உள்ள ஏதேனும் சொல்லின் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட சுருக்கக் குறிப்பைப் பயன்படுத்தலாம்.

அற்றோனித் தத்துவ காரர்கள்.

**20.** (1) கம்பெனியொன்று, அதன் அமைப்பகவிதிகளுக்கமைவாக, 19 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க எழுத்தில் நிறைவேற்றப்பட்ட சாதனமொன்றின்மூலம் ஆளொருவரை பொதுவாகவாயினுஞ்சரி அல்லது குறித்துரைக்கப்பட்ட விடயமொன்று தொடர்பிலானுஞ்சரி, அதன் அற்றோனித்தத்துவகாரராக நியமிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட சாதனத்திற்கிணங்க அற்றோனித் தத்துவகாரரால் நிறைவேற்றப்படும் எந்தவொரு செயலும் கம்பெனியைப் பிணிப்பதாதல் வேண்டும்.

(3) (122 ஆம் அத்தியாயமான) அற்றோனித் தத்துவகாரரின் தத்துவங்கள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளும் இயற்கை ஆளொருவரால் நிறைவேற்றப்பட்ட அற்றோனித் தத்துவங்கள் தொடர்பிலான சட்டத்தின் ஏற்பாடுகளும் கம்பெனியொன்றால் நிறைவேற்றப்பட்ட அற்றோனித்தத்துவமொன்று தொடர்பில், கம்பெனியானது இயற்கை ஆளொருவராக இருந்தாற்போன்றும், அத்துடன் ஒழித்துக்கட்டுதலின் ஆரம்பம் அல்லது ஒழித்துக் கட்டுதல் இல்லாவிடில், இடாப்பிலிருந்து கம்பெனியின் பெயரை நீக்குதலானது, ஆளொருவரின் இறப்பு என்றாற் போன்றும், அவசியமான திரிபுகளுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

பணிப்பாளர்கள், அலுவலர்கள், மற்றும் முகவர்கள் ஆகியோரின் அதிகாரம்.

**21.** (1) ஒரு கம்பெனி அல்லது கம்பெனியின் கடப்பாடொன்றை உத்தரவாதம் செய்யுமொருவர் அல்லது கம்பெனியின்கீழ் உரிமை கோரும் எவரேனும் ஆள் —

(அ) கம்பெனியின் அமைப்பகவிதிகள் இணங்கியொகப் படவில்லை என ;

(ஆ) இச்சட்டத்தின் 223 ஆம் பிரிவின்கீழ் கோப்பிடப்பட்ட மிக அண்மைத்தான அறிவித்தலில் அல்லது 131 ஆம் பிரிவின்கீழ் ஒப்படைக்கப்பட்ட ஆண்டுத் திரட்டில் பெயர் குறிப்பிடப்பட்ட ஆட்கள் விடயத்திற்கேற்ப கம்பெனியின் பணிப்பாளர்களோ அல்லது செயலாளரோ அல்ல என ;

(இ) கம்பெனியின் ஒரு பணிப்பாளராக, அலுவலராக அல்லது முகவராக கம்பெனியால் வெளிக்காட்டப்பட்ட ஆளொருவர் —

(i) முறையாக நியமிக்கப்பட்டிருக்கவில்லை என ; அல்லது

(ii) கம்பெனியின் தொழிலில் வழக்கமான அல்லது அக்கம்பெனியால் கொண்டு நடாத்தப் படும் வகையினைச் சேர்ந்த தொழிலைக் கொண்டுநடாத்தும் கம்பெனியொன்றின் பணிப்பாளரொருவருக்கு, அலுவலரொரு வருக்கு அல்லது முகவரொருவருக்கு வழமை யான தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கும் கடமைகளைப் புரிவதற்கும் அதிகாரம் கொண்டிருக்கவில்லை என ; அல்லது

(ஈ) ஆவணத்தை வழங்குவதற்கு உள்ளவாறான அல்லது வழமையான அதிகாரம்கொண்ட கம்பெனியின் எவரேனும் பணிப்பாளரால் அல்லது செயலாளரால் அல்லது எவரேனும் அலுவலரினால் அல்லது முகவ ரால் வழங்கப்பட்ட ஆவணமொன்று செல்லுபடியான தல்ல அல்லது உண்மையானதல்ல என,

அவ்வாள், முரணானதை அறிந்திருந்தாலன்றி, அல்லது கம்பெனியுடன் அவ்வாளின் நிலைமையின் அல்லது தொடர்பில் பயனைக்கொண்டு அறிந்திருக்க வேண்டியிருந்தாலன்றி, அக்கம்பனியுடன் அல்லது அக்கம்பெனியிடமிருந்து உரிமைக ளைப் பெற்றுள்ள எவரேனும் ஆளுடன் கொடுக்கல் வாங்கல் செய்யும் ஆளொருவருக்கெதிராக வலியுறுத்துதலாகாது.

(2) அவ்வுட்பிரிவின் (ஆ) முதல் (ஈ) வரையிலான பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆளொருவர் மோசடியாகச் செயற்படு கின்ற அல்லது கம்பெனியின் சார்பில் கையொப்பமிடப்பட்டுள்ள தாகத் தோன்றும் ஆவணமொன்றில் கள்ளவொப்பமிடுகின்ற ஒரு நிலைமையிலுங்கூட, கம்பெனியுடன் கொடுக்கல்வாங்கல்கள் செய்கின்ற அல்லது கம்பெனியிடமிருந்து உரிமைகளைப் பெற் றுள்ள ஆள் மோசடிபற்றி அல்லது கள்ளவொப்பம் பற்றி உள்ள வாறே அறிந்திருந்தாலன்றி, (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

*அமைப்பு வழி அறிவித்தல் இல்லை.*

**22.** நூற்றிஐந்தாம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக, ஆளொருவர் கம்பெனியொன்றின் அமைப்பக விதிகள் அல்லது ஒரு கம்பெனி தொடர்பிலான வேறு ஏதேனும் ஆவணம் கோப்பிடப்படுவதற்கெனப் பதிவாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்ற அல்லது கம்பெனியின் ஏதேனும் அலுவலகத்தில் பார்வைக்குள்ளது என்ற காரணத்தினால் மட்டும், அதில் அடங்கியுள்ளவற்றால் பாதிக்கப்படுதலாகாது அல்லது அவற்றைப் பற்றிய அறிவித்தலைப் பெற்றிருப்பதாக அல்லது அவற்றைப் பற்றி அறிந்திருப்பதாகக் கருதப்படுதலாகாது.

## கூட்டிணைப்பிற்கு முன்னரான ஒப்பந்தங்கள்

*கூட்டிணைப்பிற்கு முன்னரான ஒப்பந்தங்கள் வலுவாக்கப் படலாம்.*

**23.** (1) இச்சட்டத்தின் இப்பிரிவினதும் 24 ஆம், 25 ஆம் பிரிவுகளினதும் நோக்கத்திற்காக, “கூட்டிணைப்பிற்கு முன்னரான ஒப்பந்தம்” என்பது –

(அ) கம்பெனியொன்று கூட்டிணைக்கப்படுவதற்கு முன்னர் அதனால் செய்துகொள்ளப்பட்டுள்ளதாகக் கொள்ளப்படும் ஒப்பந்தமொன்று ; அல்லது

(ஆ) கம்பெனியொன்று கூட்டிணைக்கப்படுவதற்கு முன்னரும் அத்துடன் கூட்டிணைப்பை உத்தேசித்தும் அதன் சார்பில் ஆளொருவரால் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தமொன்று

எனப் பொருள்படும்.

(2) ஏதேனும் சட்டத்தில் முரணாக உள்ளது எது எவ்வாறிருப்பினும், கூட்டிணைப்பிற்கு முன்னரான ஒப்பந்தமொன்று ஒப்பந்தத்தில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்குள்ளாக, அல்லது அத்தகைய காலப்பகுதி குறித்துரைக்கப்படாவிடில், அது எந்தக் கம்பெனியின் பெயரில் அல்லது எந்தக் கம்பெனியின் சார்பில் செய்துகொள்ளப்பட்டுள்ளதோ அந்தக் கம்பெனியின் கூட்டிணைப்பின் பின்னர் நியாயமானதொரு காலத்துக்குள்ளாக வலுவாக்கப்படலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் வலுவாக்கப்பட்டதான, கூட்டிணைப்பிற்கு முன்னரான ஒப்பந்தமொன்று, அது செய்துகொள்ளப்பட்ட நேரத்தில் கம்பெனியானது ஒப்பந்தத்திற்கான ஒரு திறத்தவராக இருந்தாற்போன்று செல்லுபடியாதலும் வலுவுக்கிடப்படற்பாலதாதலும் வேண்டும்.

(4) கூட்டிணைப்பிற்கு முன்னரான ஒப்பந்தமொன்று 19 ஆம் பிரிவின்கீழ் கம்பெனியொன்றின் சார்பில் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தைப் போன்று அதே முறையில் கம்பெனியொன்றால் வலுவாக்கப்படலாம்.

கூட்டிணைப் பிற்கு முன்னரான ஒப்பந்தங்களில் உட்கிடையான கட்டுறுத்துகள்.

**24.** (1) ஏதேனும் சட்டத்தில் முரணாக உள்ளது எது எவ்வாறிருப் பினும், கூட்டிணைப்பிற்கு முன்னரான ஒப்பந்தமொன்றில், முரணான கருத்து ஒப்பந்தத்தில் வெளிப்படையாகத் தெரிவிக் கப்பட்டிருந்தாலன்றி அவ்வொப்பந்தத்தில் —

(அ) கம்பெனி, ஒப்பந்தத்தில் குறித்துரைக்கப்படக்கூடிய வாறான அத்தகைய காலப்பகுதிக்குள்ளாக அல்லது காலப்பகுதி குறித்துரைக்கப்படாவிடில், ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்ட பின்னர் நியாயமானவொரு காலப்பகுதிக்குள்ளாக கூட்டிணைக்கப்படும் எனவும்; அத்துடன்

(ஆ) கம்பெனி, ஒப்பந்தத்தில் குறித்துரைக்கப்படக் கூடிய வாறான அத்தகைய காலப்பகுதிக்குள்ளாக அல்லது காலப்பகுதி குறித்துரைக்கப்படாவிடில் அத்தகைய கம்பெனி கூட்டிணைக்கப்பட்ட பின்னர் நியாயமான ஒரு காலப்பகுதிக்குள்ளாக ஒப்பந்தத்தை வலுவாக்கும் எனவும் கம்பெனியின் பெயரில் அல்லது அதன் சார்பில் அத்தகைய ஒப்பந்தத்தைச் செய்து கொள்வ தாகக் கருதப்படும் ஆளினால் உட்கிடையான கட்டு றுத்து ஒன்றிருத்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட உட்கிடையான கட்டுறுத்தொன்றின் மீறுகைக்கான வழக்கொன்றில் அறவிடப் படற்பாலதான சேதவீட்டுத்தொகை, ஒப்பந்தம் கம்பெனியால் வலுவாக்கப்பட்டிருந்திருப்பின், ஒப்பந்தத்தின்கீழ் கம்பெனியால் நிறைவேற்றப்படாத கடப்பாடுகளின் மீறுகைக்கான சேதவீடுக ளாக கம்பெனிக்கெதிரான வழக்கொன்றில் அறவிடப்படற் பாலதான அதே சேதவீட்டுத்தொகையாதல் வேண்டும்.

(3) கம்பெனியொன்று, அது கூட்டிணைக்கப்பட்ட பின்னர் (23ஆம் பிரிவின்கீழ் கம்பெனியால் வலுவாக்கம் செய்யப்பட்ட ஒப்பந்தமொன்றாயிராத) கூட்டிணைப்பிற்கு முன்னரான ஒப்பந்த மொன்றைப் போன்ற அதே நியதிகளில் அல்லது அதற்குப் பதிலீ டாக ஒப்பந்தமொன்றைச் செய்துகொள்ளுமிடத்து (1) ஆம் உட்பிரி வின்கீழ் ஆளொருவருக்குள்ள பொறுப்பு விடுவிக்கப்படுதல் வேண் டும்.

வலுவாக்கச் செய்யத் தவறுதல்.

**25.** கம்பெனியொன்று, கம்பெனி கூட்டிணைக்கப்பட்ட பின்னர் வலுவாக்கம் செய்யப்படாத, கூட்டிணைப்புக்கு முன்னரான ஒப்பந்தமொன்றைப் பின்பற்றி ஆதனத்தைப் பெற்றுள்ளவிடத்து, ஆதனம் எந்தத் திறத்தவரிடமிருந்து கொள்ளப்பட்டதோ அந்தத் திறத்தவரால் அதன் பொருட்டு செய்யப்பட்ட விண்ணப்பமொன்றின்மீது நீதிமன்றம் —

(அ) கூட்டிணைப்பிற்கு முன்னரான ஒப்பந்தத்தின்கீழ் பெறப்பட்ட ஆதனத்தை அத்திறத்தவரிடம் திருப்பிக் கொடுக்குமாறு கம்பெனியைப் பணித்து ;

(ஆ) ஒப்பந்தத்தை முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ செல்லுபடியாக்கி ; அல்லது

(இ) கொள்ளப்பட்ட ஆதனம் தொடர்பில் அத்திறத்தவருக்குச் சாதகமாக வேறு ஏதேனும் நிவாரணமளித்து,

கட்டளையொன்றை ஆக்கலாம்.

### ஆவணங்கள் கம்பெனியால் மெய்யென்றுறுதி செய்யப்படல்

ஆவணங்கள் கம்பெனியால் மெய்யென்றுறுதி செய்யப்படல்.

**26.** கம்பெனியால் மெய்யென்றுறுதி செய்யப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட ஆவணமொன்று அல்லது நடவடிக்கைகளின் பதிவேடொன்று கம்பெனியின் பணிப்பாளர் ஒருவரால், செயலாளர் ஒருவரால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட வேறு அலுவலர் ஒருவரால் கையொப்பமிடப்படுதல் வேண்டும்.

## பாகம் II

### தனியார் கம்பெனிகள்

தனியார் கம்பெனியின் அமைப்பக விதிகள்.

**27.** தனியார் கம்பெனியொன்றின் அமைப்பகவிதிகள் —

(அ) கம்பெனியால் வழங்கப்பட்ட பங்குகளை அல்லது வேறு பிணையங்களை பொதுமக்களுக்கு கொடை முனைவு செய்வதிலிருந்து கம்பெனியைத் தடை செய்கின்றவையும் ; அத்துடன்

(ஆ) அதன் பங்குதாரர்களின் எண்ணிக்கையை –

(i) கம்பெனியின் ஊழியர்களான ; அல்லது

(ii) அத்தகைய கம்பெனியின் ஊழியர்களாக இருக்கும்போது கம்பெனியின் பங்குதார்களாக வந்தவர்களும் கம்பெனியின் ஊழியர்களாக இல்லாதொழிந்த பின்னர் பங்குதாரர்களாகத் தொடர்ந்திருந்தவர்களுமான கம்பெனியின் முன்னைய ஊழியர்களான,

பங்குதாரர்களை உட்படுத்தாமல், ஐம்பதுக்கு வரையறுக்கின்றவையுமான,

ஏற்பாடுகளை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

கம்பெனி தனியார் கம்பெனியாக இல்லா தொழிதல்.

**28.** (1) தனியார் கம்பெனியொன்று 27 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுக்கு இனிமேலும் இணங்கியொழுகாத விதத்தில் அதன் அமைப்பக விதிகளை மாற்றுமாயின் –

(அ) அக்கம்பெனி தனியார் கம்பெனியொன்றாக இல்லாதொழிதல் வேண்டும் ;

(ஆ) அக்கம்பெனிக்கு 30 ஆம், 31 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள் ஏற்புடையதாகாதொழிதல் வேண்டும் ; அத்துடன்

(இ) அக்கம்பெனி 11 ஆம் பிரிவிற்கிணங்க அதன் பெயரை மாற்றியிருப்பதாக கருதப்படுதல் வேண்டும்.

(2) தனியார் கம்பெனியொன்று 27 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுமாயின் –

(அ) அக்கம்பெனி ஒரு தனியார் கம்பெனியாக இல்லாதொழிதல் வேண்டும் ;

(ஆ) அக்கம்பெனிக்கு 30 ஆம், 31 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள் ஏற்புடையாதொழிதல் வேண்டும் ; அத்துடன்

(இ) அக்கம்பெனி 11 ஆம் பிரிவிற்கிணங்க அதன் பெயரை மாற்றியுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) தனியார் கம்பெனியின் இணங்கியொழுகத் தவறப்பட்டமை தொடர்பில் —

(அ) இணங்கியொழுகத் தவறியமை தற்செயலின் காரண மாகும் ;

(ஆ) இணங்கியொழுகத் தவறியமை சீராக்கப்பட்டுள்ளது ; அல்லது

(இ) விடயத்தின் எல்லாச் சூழ்நிலைகளிலும் அத்தகைய முடிவை எடுப்பது நீதியானதும் ஒப்புரவானதுமாகும்,

என நீதிமன்றம் திருப்தியுறுமிடத்து, அது (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாகா எனத் தீர்மானிக்கலாம்.

*கம்பெனி தனியார் கம்பெனியாக வரலாம்.*

**29.** வரையறுக்கப்பட்ட கம்பெனியொன்று அதன் அமைப்பக விதிகள் 27 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகும் விதத்தில் அமைப்பகவிதிகளை மாற்றுமிடத்து —

(அ) அக்கம்பெனி ஒரு தனியார் கம்பெனியாக வருதல் வேண்டும் ;

(ஆ) அக்கம்பெனி 11 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க அதன் பெயரை மாற்றியிருப்பதாக கருதப்படுதல் வேண்டும்.

*தனியார் கம்பெனிகள் அக்கறை பற்றிய இடாப்பை வைத்திருக்கத் தேவையில்லை.*

**30.** (1) தனியார் கம்பெனியொன்று அதன் பங்குதாரர்களின் ஏகமனதான தீர்மானத்தின்மூலம் அக்கறைகள் பற்றிய இடாப்பொன்றை வைத்திருப்பதனைத் தவிர்க்கலாம் என்பதுடன் அத்தகைய தீர்மானமொன்று வலுவிலிருக்கும்போது ஏதேனும் விடயம் கம்பெனியொன்றின் அக்கறைகள் பற்றிய இடாப்பில் பதியப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தும் இச்சட்டத்தின் ஏற்படாடெதுவும் அத்தகைய தனியார் கம்பெனிக்கு ஏற்புடைத் தாதல் ஆகாது.

(2) எவரேனும் பங்குதாரர் அக்கறைகள் பற்றிய இடாப்பொன்றை வைத்திருக்குமாறு தாம் தேவைப்படுத்துவதாக கம்பெனிக்கு எழுத்தில் அறிவித்தல் கொடுப்பாராயின், (1) ஆம் உட்பிரிவின் கீழான ஏகமனதான தீர்மானமொன்று பயனுடைய தாயில்லாதொழிதல் வேண்டும்.

*பங்குதாரர்களின் ஏகமனதான உடன்பாடு.*

**31.** (1) தனியார் கம்பெனியொன்றின் எல்லாப் பங்குதாரர்களும் கம்பெனியால் எடுக்கப்பட்டுள்ள அல்லது எடுக்கப்படவுள்ள ஏதேனும் நடவடிக்கைக்கு எழுத்தில் உடன்படுமிடத்து —

(அ) கம்பெனியின் அமைப்பகவிதிகளில் முரணான ஏற்பாடெதுவும் எவ்வாறிருப்பினும் அந்த நடவடிக்கையை எடுத்தல் கம்பெனியால் செல்லுபடியாகும் வகையில் அதிகாரமளிக்கப்படுவதாகக் கருதப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) இதற்கான இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட இச்சட்டத்தின் பிரிவுகளின் நிரலில் அடங்கியுள்ள ஏற்பாடுகள் அந்நடவடிக்கைக்கும் அந்நடவடிக்கை தொடர்பிலும் ஏற்புடையனவாதல் ஆகாது.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் எந்த விடயங்கள் உடன்பட்டுக் கொள்ளப்படலாமோ அந்த விடயங்களை மட்டுப்படுத்தாமல் அவ்வுட்பிரிவின் ஏற்பாடுகள், அத்தனியார் கம்பெனியின் பங்குதாரர்கள் எல்லோரும் —

(அ) கம்பெனியால் பங்குகள் வழங்கப்படுவதற்கு ;

(ஆ) கம்பெனியால் பகிர்வொன்று செய்யப்படுவதற்கு ;

(இ) கம்பெனியில் பங்குகளின் மீள்கொள்வனவுக்கு அல்லது மீட்புக்கு ;

(ஈ) கம்பெனியில் பங்குகளைக் கொள்வனவு செய்யும் நோக்கத்திற்காக அல்லது அது தொடர்பில் கம்பெனியொன்றால் நிதியுதவி வழங்கப்படுவதற்கு ;

(உ) பணிப்பாளரொருவருக்கு வேதனம் செலுத்துவதற்கு அல்லது பணிப்பாளரொருவருக்கு கடனொன்று வழங்குவதற்கு அல்லது பணிப்பாளரொருவருக்கு வேறு ஏதேனும் நலனொன்றை உரித்தாக்குவதற்கு ; அல்லது

(ஊ) அக்கறையுடைய பணிப்பாளரொருவருக்கும் கம்பெனிக் குமிடையில் ஒப்பந்தமொன்று செய்துகொள்ளப்படு வதற்கு,

உடன்படுமிடத்து அல்லது ஒருப்பாடு கொள்ளுமிடத்து அவ்வுட் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் கம்பெனியொன்றால் பகிர் வொன்று செய்யப்படுமிடத்தும் அத்துடன் கம்பெனி அப்பகிர்வு செய்யப்படுவதன் விளைவாக கடனிறுக்கவகையற்ற தன்மை பற்றிய சோதனையை திருப்திப்படுத்தத் தவறுமிடத்தும் அத்தகைய பகிர்வு செல்லுபடியாகும் வகையில் செய்யப்படாததாகக் கருதப் படுதல் வேண்டும்.

(4) பங்குதாரர் ஒருவருக்கு (3) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட, செல்லுபடியற்றதாகக் கருதப்படும் பகிர்வொன்று —

(அ) நல்லெண்ணத்துடனும் கம்பெனி கடனிறுக்க வகை யற்ற தன்மைபற்றிய சோதனையைத் திருப்திப்படுத்தத் தவறியமைபற்றி அறிந்திராமலுமேயே பங்குதாரர் பகிர்வைப் பெற்றாலன்றியும் ;

(ஆ) அத்தகைய பகிர்வின் செல்லுபடியாகுந்தன்மையைப் பொறுத்து பங்குதாரர் தமது நிலைமையை மாற்றிக் கொண்டிருந்தாலன்றியும் ; அத்துடன்

(இ) இச்சூழ்நிலைகளின் காரணமாக மீள்கொடுப்பனவை முழுமையாக அல்லது சொற்பமாவது தேவைப் படுத்துவது நியாயமற்றதாக இருந்தாலன்றியும்,

கம்பெனியால் அத்தகைய பங்குதாரரிடமிருந்து அறவிடப்படலாம்.

(5) செல்லுபடியான முறையில் செய்யப்பட்டிருப்பதாகக் கருதப் படாத பகிர்வொன்றைச் செய்தபின்னர் கம்பெனி கடனிறுக்க வகையற்ற தன்மை பற்றிய சோதனையைத் திருப்திப்படுத்த இயலுமாயிருக்கும் என நம்புவதற்கு நியாயமான ஏதுக்கள் காணப்படாதவிடத்து, எந்தப் பங்குதாரர்களுக்கு பகிர்வு செய்யப்பட்டதோ அந்தப் பங்குதாரர்களிடமிருந்து பகிர்வின் எந்த அளவை கம்பெனியால் மீட்டுப்பெற இயலாதிருக்கின்றதோ அந்த

அளவை கம்பெனிக்கு மீளச் செலுத்துவதற்கு அத்தகைய பகிர்வு செய்யப்படுவதற்கு உடன்பட்ட பங்குதாரர் ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில் பொறுப்பு ஆளாதல் வேண்டும்.

(6) அறவிடுவதற்காக (4) ஆம் அல்லது (5) ஆம் பிரிவின்கீழ் பங்குதாரர் ஒருவருக்கெதிராக வழக்கொன்று கொணரப்படுமிடத்தும் அத்துடன் கம்பெனி குறைந்த தொகையொன்றின் பகிர்வொன்றைச் செய்வதன் மூலம் கடனிறுக்க வகையற்ற தன்மைபற்றிய சோதனையைத் திருப்திப்படுத்தியிருக்கலாம் என நீதிமன்றம் திருப்தியுறுமிடத்தும், நீதிமன்றமானது, இச்சூழ்நிலைகளின்கீழ் கம்பெனி தக்கவிதத்தில் செய்திருக்கக்கூடிய ஏதேனும் பகிர்வின் பெறுமதிக்குச் சமமான தொகையொன்றை –

(அ) பிடித்து வைத்திருப்பதற்கு பங்குதாரரை அனுமதிக்கலாம் ; அல்லது

(ஆ) அத்தொகை தொடர்பிலான பொறுப்பிலிருந்து பங்குதாரரை விடுவிக்கலாம்.

## பாகம் III

### உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பெனிகள்

*உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பெனியொன்றைக் கூட்டிணைப்பதற்கான விண்ணப்பம்.*

**32.** எவரேனும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்கள் அதன் ஆரம்ப உறுப்பினர்கள் ஒவ்வொருவராலும் கையொப்பமிடப்பட்ட விதித்துரைக்கப்பட்ட படிவங்களில் பின்வரும் ஆவணங்களுடன் பதிவாளருக்கு விண்ணப்பமொன்றைச் செய்வதன்மூலம், உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பெனியொன்றை அமைப்பதற்கென விண்ணப்பிக்கலாம் :–

(அ) கம்பெனியின் அமைப்பகவிதிகள் ;

(ஆ) கம்பெனியின் பணிப்பாளரொருவராகச் செயலாற்றுவதற்கு, 203 ஆம் பிரிவின்கீழ் ஆரம்பப் பணிப்பாளர்கள் ஒவ்வொருவரினதும் சம்மதம் ; அத்துடன்

(இ) கம்பெனியின் செயலாளராகச் செயலாற்றுவதற்கு 221ஆம் பிரிவின்கீழ் ஆரம்பச் செயலாளரின் சம்மதம்.

உத்தர வாதத்தால் வரையறுக் கப்பட்ட கம்பெனி அமைப்பக விதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**33.** (1) உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பெனியொன்று–

(அ) கம்பெனியின் குறிக்கோள்களையும் ; அத்துடன்

(ஆ) அத்தகைய கம்பெனி ஒழித்துக்கட்டலுக்கு உட்படுத்தப் படும் பட்சத்தில் கம்பெனியின் சொத்துக்களுக்குப் பங்களிப்புச் செய்ய கம்பெனிகள் உறுப்பினர்கள் ஒவ் வொருவரும் பொறுப்பேற்கும் தொகையையும்,

எடுத்துரைக்கும் அமைப்பகவிதிகளைக் கொண்டிருத்தல் வேண் டும்.

(2) ஓராம் உட்பிரிவில் தரப்பட்டுள்ள எதுவும் இதற்கான முதலாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள அமைப்பகவிதிகளின் குறித்துரைக்கப்பட்ட வாசகங்கள் அக்கம்பெனிக்கு ஏற்புடை யத்தாதல் வேண்டும் என அதன் அமைப்பகவிதிகளில் ஏற்பாடு செய்வதிலிருந்து, உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பெனி யொன்றைத் தடை செய்தலாகாது என்பதுடன் அத்தகைய ஏதே னும் ஏற்பாடு அதற்கிணங்க பயனுடையதாதலும் வேண்டும்.

தருமக் கம்பெனி களினதும் வேறு கம்பெனி களினதும் பெயர்களில் “வரையறுக் கப்பட்ட” என்பதைத் தவிர்ப்பதற்கான தத்துவம்.

**34.** (1) உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பெனியொன் றாக அமைக்கப்படவுள்ள கழகமொன்று வர்த்தகம், கலை, விஞ்ஞானம், மதம், தருமம், விளையாட்டுத்துறை என்பவற்றை அல்லது வேறு ஏதேனும் பயனுள்ள குறிக்கோளை ஊக்குவிப்ப தற்காக அமைக்கப்படவுள்ளதெனவும் அத்துடன் அதன் இலாபங் கள் எவையுமிருப்பின் அவற்றை அல்லது வேறு வருமானத்தை அதன் குறிக்கோள்களை ஊக்குவிப்பதில் பிரயோகிக்கவும் அத்துடன் அதன் உறுப்பினர்களும் ஏதேனும் பங்கு இலாபத்தின் கொடுப்பனவைத் தடைசெய்யும் முன்னுறுகின்றது எனவும் பதிவாளர் திருப்தியுறுமிடத்து –

(அ) பதிவாளர் அதன் பெயருக்கு “வரையறுக்கப்பட்ட” என் னும் சொல்லைச் சேர்க்கமால் உத்தரவாதத்தால் வரை யறுக்கப்பட்ட கம்பெனியொன்றாகப் பதிவு செய்யப்பட வேண்டுமென உரிமத்தின்மூலம் அக்கழகத்தைப் பணிக்கலாம் ; அத்துடன்

(ஆ) கழகம் அதற்கிணங்க பதிவுசெய்யப்படலாம் என்பது டன் பதிவுசெய்யப்படுவதன்மீது எல்லாச் சிறப்புரிமை களையும் துய்க்கலாம் என்பதுடன் இப்பிரிவின் ஏற்

பாடுகளுக்கமைய, வரையறுக்கப்பட்ட கம்பெனியொன்றின் எல்லாக் கடப்பாடுகளுக்கும் அமைந்ததாதலும் வேண்டும்.

(2) (அ) உத்தரவாதத்தினால் வரையறுக்கப்பட்ட கம்பெனியொன்றின் குறிக்கோள்கள், (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டவற்றுக்கும் அவற்றின் இடைநேர்விளைவான அல்லது அவற்றுக்கு உகந்தனவான குறிக்கோள்களுக்கும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளனவென்றும் ; அத்துடன்

(ஆ) அதன் அமைப்பகவிதிகளினால் கம்பெனியானது அதன் இலாபங்களை அல்லது வேறு வருமானத்தை அதன் குறிக்கோள்களை மேம்படுத்துவதில் பயன்படுத்துவதற்குத் தேவைப்படுத்தப்படுகின்றதென்றும் அதன் உறுப்பினர்களுக்கு ஏதேனும் பங்கிலாபத்தைச் செலுத்துவதிலிருந்து தடைசெய்யப்பட்டுள்ளதென்றும்,

பதிவாளரின் திருப்திக்கு எண்பிக்கப்படுமிடத்து, பதிவாளர், உரிமத்தின்மூலம் "வரையறுக்கப்பட்ட" என்ற சொல் உட்பட அல்லது அதன் விட்டுவிடுகை உள்ளடங்க, அதன் பெயர் மாற்றமொன்றை விசேட தீர்மானத்தின்மூலம் செய்யும்படி கம்பெனிக்கு அதிகாரமளிக்கலாம். 8 ஆம் பிரிவின் (2), (3), (4), (5) ஆகிய உட்பிரிவுகளின் ஏற்பாடுகள், இவ்வுட்பிரிவின்கீழான பெயர் மாற்றத்துக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) இப்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்று, கழகமானது (1) ஆம் உட்பிரிவின் தேவைப்பாடுகளுக்கு இசைந்தொழுகுகின்றது என்பதை உறுதிப்படுத்தும் நோக்கத்துக்காகப் பதிவாளர் அவசியமென எண்ணுகின்றவாறான அத்தகைய நியதி நிபந்தனைகளுக்கமைவாக இருக்கலாம். நியதிகளும் நிபந்தனைகளும் கழகத்தைப் பிணிப்பனவாகவிருத்தல் வேண்டுமென்பதுடன், பதிவாளர் அவ்வாறு பணிப்பின், அத்தகைய கம்பெனியின் அமைப்பகவிதிகளினுட் சேர்க்கப்படுதலும் வேண்டும்.

(4) பதிவாளரின் எழுத்திலான முன்னங்கீகாரமின்றி, இப்பிரிவின்கீழ் எந்தக் கம்பெனிக்கு உரிமமொன்று வழங்கப்பட்டுள்ளதோ அந்தக் கம்பெனியின் அமைப்பகவிதிகளில் மாற்றங்கள் எவையும் செய்யப்படலாகாது.

(5) இப்பிரிவின்கீழ் எந்தக் கம்பெனிக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளதோ அந்தக் கம்பெனி தொடர்பில் 6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதலாகாது.

(6) இப்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட உரிமம் ஒன்று எக்கம்பெனிக்கு வழங்கப்படுகின்றதோ அக்கம்பெனி (1) ஆம் உட்பிரிவின் அல்லது (3) ஆம் உட்பிரிவின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுமிடத்து, அவ்வுரிமம் பதிவாளரினால் எந்நேரத்திலும் ஒழிக்கப்படலாம். உரிமமொன்று இல்லாதொழிக்கப்பட்டதன் மேல் பதிவாளர், கம்பெனியின் பெயரில் “வரையறுக்கப்பட்ட” என்ற சொல்லை இடாப்பில் பதிவீடு செய்தல் வேண்டும். அத்துடன் கம்பெனியானது, இப்பிரிவின் ஏற்பாடுகளினால் வழங்கப்பட்ட விலக்களிப்புக்களையும் சிறப்புரிமைகளையும் துய்க்காதொழிதல் வேண்டும். 8 ஆம் பிரிவின் (3) ஆம், (4) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள் இவ்வுட்பிரிவின்கீழான பெயர் மாற்றத்துக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

(7) ஆறாம் உட்பிரிவின்கீழ் உரிமமொன்று ஒழிக்கப்படுமுன்னர், பதிவாளர் தமது முன்னம் பற்றி எழுத்திலான அறிவித்தலொன்றைக் கம்பெனிக்குக் கொடுத்தல் வேண்டும். அத்துடன் இல்லாதொழிப்புக்கு எதிராகக் கேட்கப்படுவதற்கான சந்தர்ப்பமொன்றைக் கழகத்துக்கு அல்லது கம்பெனிக்கு அளித்தல் வேண்டும்.

(8) எக்கழகம் தொடர்பில் இப்பிரிவின்கீழான உரிமமொன்று வலுவிலுள்ளதோ அக்கழகம் அதன் குறிக்கோள்கள் தொடர்பில் அதன் அமைப்புவிதியின் ஏற்பாடுகளை மாற்றுமிடத்து, பதிவாளர், உரிமத்தை ஒழிப்பது தகுதியானதென அவர் கண்டாலொழிய, உரிமம் எந்த நியதி நிபந்தனைகளுக்கமைய வழங்கப்பட்டதோ அந்நியதி நிபந்தனைகளை வேறுபடுத்தலாம், அவற்றுக்கு எதுவும் சேர்க்கலாம் அல்லது அவற்றை மாற்றலாம்.

உத்தரவாதத்தினால் வரையறுக்கப்பட்ட கம்பெனிகளுக்கு ஏற்புடையனவான ஏற்பாடுகள்.

**35.** (1) இதற்கான மூன்றாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட இச்சட்டத்தின் பிரிவுகள் பற்றிய நிரலில் அடங்கியுள்ள ஏற்பாடுகள், உத்தரவாதத்தினால் வரையறுக்கப்பட்ட ஒரு கம்பெனிக்கும் அதுதொடர்பிலும் ஏற்புடையனவாதலாகாது.

(2) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட பிரிவுகள் அல்லாத இச்சட்டத்தின் ஏற்பாடுகள் –

(அ) கம்பெனியானது, ஒரு வரையறுக்கப்பட்ட கம்பெனி என்றாற்போன்றும் ;

(ஆ) பங்குதாரர்கள் பற்றிய குறிப்பீடுகள் கம்பெனியின் உறுப்பினர்கள் பற்றிய குறிப்பீடுகள் என்றாற்போன்றும் ;

(இ) ஒவ்வோர் உறுப்பினரும் கம்பெனியில் ஒருபங்கை வைத்திருந்தார் என்றாற்போன்றும் ; அத்துடன்

(ஈ) பங்கு இடாப்புப் பற்றிய குறிப்பீடுகள் உறுப்பினர்கள் பற்றிய இடாப்புக்கான குறிப்பீடுகள் என்றாற்போன்றும்,

அவசியமான எல்லாத் திரிபுகளுடனும் உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பெனியொன்றுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

## பாகம் IV

### பங்குகளும் தொகுதிக்கடன்களும்

*முற்பகர்வு*

**36.** ஒரு கம்பெனியினால் அல்லது அதன் சார்பில், அல்லது அமைத்துருவாக்கப்படவுள்ள ஒரு கம்பெனி தொடர்பாக வழங்கப்பட்ட முற்பகர்வு ஒன்று தேதியொன்றைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய தேதி, முரணானது எண்பிக்கப்பட்டாலொழிய, அத்தகைய முற்பகர்வின் வெளியீட்டுத் தேதியாக எடுத்துக் கொள்ளப்படுதலும் வேண்டும். முற்பகர்வுக்குத் தேதியிடுதல்.

**37.** (1) ஒரு கம்பெனியினால் அல்லது அதன்சார்பில் அல்லது அக்கம்பெனி அமைத்துருவாக்கப்படுவதில் ஈடுபட்டிருக்கின்ற அல்லது அக்கறைகொண்டிருக்கின்ற அல்லது ஈடுபட்டிருந்த அல்லது அக்கறை கொண்டிருந்த எவரேனுமாளினால் அல்லது அவர் சார்பில் வழங்கப்பட்ட ஒவ்வொரு முற்பகர்வும் இதற்கான நான்காம் அட்டவணையின் I ஆம் பாகத்தில் குறித்துரைக்கப் முற்பகர்விலுள்ள விபரங்கள் பற்றிக் குறிப்பான தேவைப்பாடுகள்.

பட்டுள்ள தகவலைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், அவ்வட்டவணையின் II ஆம் பாகத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள அறிக்கைகளைத் தருதலும் வேண்டும். I ஆம், II ஆம் பாகங்களின் ஏற்பாடுகள், அவ்வட்டவணையின் III ஆம் பாகத்தில் அடங்கியுள்ள ஏற்பாடுகளுக்கமைய பயனுடையனவாதல் வேண்டும்.

(2) ஒரு கம்பெனியில் பங்குகளுக்கான அல்லது ஒரு கம்பெனியின் தொகுதிக்கடன்களுக்கான விண்ணப்பகாரரொருவரை இப்பிரிவின் ஏதேனும் தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுகுதலை விட்டழிக்கத் தேவைப்படுத்துகின்ற அல்லது பிணிக்கின்ற அல்லது முற்பகர்வில் குறிப்பாகக் குறிப்பீடுசெய்யப்படாத ஏதேனும் ஒப்பந்தம், ஆவணம், அல்லது கருமம் பற்றிய அறிவிப்பினால் அவர் பாதிக்கப்படுவதாகக் கொள்ளப்படுகின்ற நிபந்தனையொன்று வறிதானதாதல் வேண்டும்.

(3) ஒரு கம்பெனியிலான பங்குகளுக்கான அல்லது ஒரு கம்பெனியின் தொகுதிக்கடன்களுக்கான விண்ணப்பப்படிவம் எதையும் வழங்குதல் அத்தகைய படிவம் இப்பிரிவின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுகின்ற முற்பகர்வு ஒன்றுடன் வழங்கப்பட்டாலொழிய, சட்டமுறையானதாதலாகாது :

ஆயின், இவ்வுட்பிரிவின் ஏற்பாடுகள், விண்ணப்பப் படிவமானது, ஒன்றில் —

(அ) பங்குகள் அல்லது தொகுதிக்கடன்கள் தொடர்பில் பொறுப்பேற்பு உடன்படிக்கையொன்றைச் செய்துகொள்வதற்கு ஆளொருவருக்குச் செய்யப்பட்ட நல்லெண்ணத்துடனான அழைப்பொன்று சம்பந்தமாக ;

(ஆ) பொதுமக்களுக்கு கொடை முனைவுசெய்யப்பட்டிராத பங்குகள் அல்லது தொகுதிக்கடன்கள் தொடர்பாக ; அல்லது

(இ) பங்குபரிவர்த்தனையொன்றில் நிரலிடப்பட்டதும் பொதுமக்களுக்கு கொடைமுனைவு செய்ததுமான கம்பெனியொன்றினால் வர்த்தக பத்திரங்களின் வழங்கல் தொடர்பாக,

வழங்கப்பட்டதெனக் காட்டப்படுமிடத்து, ஏற்புடையனவாதலாகாது.

(4) முதலாம், இரண்டாம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக் கமைய, (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாகச் செய லாற்றுகின்ற எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

(5) இப்பிரிவின் தேவைப்பாடுகள் எவற்றோடும் இணங்கியொழு காத அல்லது அவற்றுள் எவற்றையும் மீறுகின்ற பட்சத்தில், பணிப்பாளரொருவர் அல்லது முற்பகர்வை வழங்குவதற்குப் பொறுப்பாகவுள்ள வேறு ஆள், பின்வரும் சந்தர்ப்பங்களில் அத்தகைய இணங்கியொழுகாமை அல்லது மீறுகை காரணமாக ஏதேனும் பொறுப்பை உறுதலாகாது —

(அ) வெளிவிடப்படாத ஏதேனும் கருமம் தொடர்பாக அதுபற்றி அவர் அறிந்திருக்கவில்லையென அவர் எண்பித்தால் ; அல்லது

(ஆ) இணங்கியொழுகப்படாமை அல்லது மீறுகையானது அவர் பால் கருதா நிகழ்வுப்பிழை காரணமாக எழுந்த தென அவர் எண்பித்தால் ; அல்லது

(இ) இணங்கியொழுகப்படாமை அல்லது மீறுகையானது, நீதிமன்றத்தின் அபிப்பிராயத்தில் பொருண்மையற்ற தாகவிருந்த, அல்லது வேறுவகையில் விடயத்தின் எல்லாச் சூழ்நிலைகளையும் கவனத்துட்கொண்டு பார்க்கையில் நியாயமாக மன்னிக்கப்படவேண்டிய அத்தகையதான ஏதேனும் கருமம் தொடர்பிலானதாக விருந்தால்,

ஆயின், இதற்கான நான்காம் அட்டவணையின் 17 ஆம் பந்தி யில் குறித்துரைக்கப்பட்ட கருமங்கள் தொடர்பிலான கூற் றொன்றை ஒரு முற்பகர்வில் உள்ளடக்கத் தவறுகின்ற பட்சத்தில், பணிப்பாளர் அல்லது வேறு ஆள் எவரும், வெளிவிடப்படாத கருமங்கள் பற்றி அவர் அறிந்திருந்தாரென எண்பிக்கப்பட்டா லொழிய, அத்தவறுதல் தொடர்பிலான ஏதேனும் பொறுப்பை உறுதலாகாது.

(6) இப்பிரிவின் ஏற்பாடுகள், பங்குகளுக்கான அல்லது தொகுதிக்கடன்களுக்கான விண்ணப்பகாரர் வேறு ஆட்களுக்குச் சாதகமாகக் கைதுறப்பதற்கான உரிமையை உடையவராக விருப்பினுஞ்சரி உடையவராக இல்லாதிருப்பினுஞ்சரி, முற்பகர்வு ஒன்று அல்லது ஒரு கம்பெனியிலுள்ள பங்குகள் அல்லது ஒரு கம்பெனியின் தொகுதிக்கடன்கள் தொடர்பான விண்ணப்பப் படிவமொன்று அக்கம்பெனியின் ஏலவேயுள்ள பங்குதாரர்களுக்கு அல்லது தொகுதிக்கடன்கள் வைத்திருப்போருக்கு வழங்கப்படு வதற்கு ஏற்புடையனவாதலாகாது. மேற்கூறப்பட்டவாறு தவிர, இப்பிரிவின் ஏற்பாடுகள், ஒரு கம்பெனி அமைத்துருவாக்கப்பட்ட தன்மீது, அல்லது ஒரு கம்பெனி அமைத்துருவாக்கப்படுவது தொடர்பாக வழங்கப்பட்டதாயிருப்பினுஞ்சரி, ஒரு முற்பகர்வுக்கு அல்லது விண்ணப்பப்படிவத்துக்கு ஏற்புடையனவாதல் வேண் டும்.

(7) இப்பிரிவிலுள்ளதெதுவும், ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் அல்லது (இப்பிரிவு தவிர்ந்த) இச்சட்டத்தின்கீழ் ஆளொருவர் உறக்கூடியதான ஏதேனும் பொறுப்பை வரையறுத் தலோ அல்லது குறைத்தலோ ஆகாது.

(8) நாற்பதாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க முற்பகர்வு ஒன்று பதிவுசெய்தலுக்காக அனுப்பப்பட்டு பதிவாளரினால் பதிவுசெய் யப்பட்டுள்ளவிடத்து, இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளி லுள்ளதெதுவும் முற்பகர்வானது பதிவுசெய்யப்பட்டுள்ள தென்றும் வழங்கப்பட்டுள்ளதென்றும் அதன் பிரதிகள் விண்ணப் பஞ் செய்யப்பட்டதன்மீது கிடைக்கக்கூடியனவாகவுள்ளனவென் றும் கூறுகின்ற ஏதேனும் அறிவித்தல், சுற்றறிக்கை அல்லது விளம்பரம் வழங்கப்படுவதை அல்லது வெளியிடப்படுவதைத் தடைசெய்வதாக, அத்தகைய அறிவித்தல், சுற்றறிக்கை அல்லது விளம்பரம் கம்பெனியிலுள்ள எவையேனும் பங்குகளுக்காக அல்லது கம்பெனியிலுள்ள தொகுதிக்கடன்களுக்காக ஒப்பப் பணஞ்செலுத்தும்படி அல்லது அவற்றைக் கொள்வனவுசெய்யும் படி பொதுமக்களுக்கு விடுக்கப்படும் ஏதேனும் அழைப்பைக் கொண்டிராதிருப்பின், கருதப்படுதலோ அல்லது பொருள் கொள்ளப்படுதலோ ஆகாது.

*நிபுணரால் அளிக்கப்பட்ட கூற்றைக் கொண்டுள்ள முற்பகர்வை வழங்குவதற்கு அவரின் சம்மதம்.*

**38.** (1) ஒரு கம்பெனியிலுள்ள பங்குகளுக்காக அல்லது ஒரு கம்பெனியின் தொகுதிக்கடன்களுக்காக ஒப்பப்பணஞ்செலுத்தும் படி ஆட்களுக்கு அழைப்பை விடுப்பதும், நிபுணரொருவரினால் செய்யப்பட்டதெனக் கொள்ளப்படுகின்ற கூற்றொன்றை உள்ளடக்கியுள்ளதுமான முற்பகர்வு ஒன்று —

(அ) அதில் கூற்றானது எந்தப் படிவத்திலும் சந்தர்ப்பத்திலும் உள்ளடக்கப்பட்டுள்ளதோ அந்தப் படிவத்திலும் சந்தர்ப்பத்திலும் கூற்று உள்ளடங்குவதாக, அத்தகைய நிபுணர், முற்பகர்வின் வழங்குகைக்கு அவரது எழுத்திலான சம்மதத்தைக் கொடுத்திருந்து அத்துடன் முற்பகர்வின் பிரதியொன்று பதிவுசெய்யப்படுவதற்காக ஒப்படைக்கப்படுமுன்னர் அவ்வெழுத்திலான சம்மதத்தை மீளப்பெறாதிருந்தாலொழிய ; அத்துடன்

(ஆ) அத்தகைய நிபுணர் (அ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்டவாறு தனது சம்மதத்தைக் கொடுத்திருந்து அதனை மீளப்பெறவில்லையென்னும் கூற்றொன்று முற்பகர்வில் காணப்படுவதாக இருந்தாலொழிய,

வழங்கப்படுதலாகாது.

(2) இப்பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக ஏதேனும் முற்பகர்வு வழங்கப்படுமிடத்து, அக்கம்பெனியும், அதன் வழங்குகைக்கு அறிந்துகொண்டு ஒரு திறத்தவராகவுள்ள ஆளொவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

(3) இப்பிரிவின் நோக்கத்துக்காக, "நிபுணர்" என்ற பதம் ஒரு பொறியியலாளர், பெறுமான மதிப்பீட்டாளர், கணக்காய்வாளர், கணக்கீட்டாளர் மற்றும் இவற்றையொத்த உயர்தொழில்சார் தகைமைகளையுடைய வேறெவரேனும் ஆள் ஆகியோரை உள்ளடக்கும்.

முற்பகர்வில் பெயரை உள்ளடக்குவதற்கு வங்கியினது அல்லது சட்டத்தரணியினது அல்லது கணக்காய்வாளரினது சம்மதம் அவசியம்.

**39.** (1) ஒரு கம்பெனியிலுள்ள பங்குகளுக்காக அல்லது கம்பெனியின் தொகுதிக்கடன்களுக்காக ஒப்பப்பணஞ் செலுத்தும்படி ஆட்களை அழைக்கின்ற ஏதேனும் முற்பகர்வில், அக்கம்பெனியின் வங்கியாளர்களாக அத்தகைய முற்பகர்வில் அதன் பெயரைச் சேர்ப்பதற்கு அத்தகைய வங்கி அதன் எழுத்திலான சம்மதத்தைக் கொடுத்திருந்து, பதிவுசெய்வதற்கென முற்பகர்வின் பிரதியை ஒப்படைக்குமுன்னர் அதன் எழுத்திலான சம்மதத்தை மீளப் பெற்றிருக்காதிருந்தாலொழிய, வங்கியெதுவும் அக்கம்பெனியின் வங்கியாளர்களாகப் பெயர்குறிக்கப்படுதலாகாது :

ஆயின், வங்கியொன்று, இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, கம்பெனியின் வங்கியாளர்களாக முற்பகர்வில் அதன் பெயரைச் சேரத்துக்கொள்வதற்கு சம்மதத்தை அது கொடுத்துள்ள காரணத்தினால் மட்டும் அத்தகைய முற்பகர்வின் வழங்குகைக்கு அதிகாரமளித்துள்ளதெனக் கருதப்படுதலாகாது.

(2) கம்பெனியிலுள்ள பங்குகளுக்காக அல்லது கம்பெனியின் தொகுதிக்கடன்களுக்காக ஒப்பப்பணஞ்செலுத்தும்படி ஆட்களை அழைக்கின்ற ஒரு முற்பகர்வில் அக்கம்பெனியின் சட்டவறிஞராக அவரது பெயரை அத்தகைய முற்பகர்வில் சேர்ப்பதற்கு அத்தகைய சட்டத்தரணி தமது எழுத்திலான சம்மதத்தைக் கொடுத்திருந்து பதிவுசெய்வதற்கான அந்த முற்பகர்வின் பிரதியொன்று ஒப்படைக்கப்படுமுன்னர் அச்சம்மதத்தை மீளப்பெற்றிருந்தாலொழிய, கம்பெனிச் சட்டவறிஞரொருவராகப் பெயர் குறிப்பிடப்படுதலாகாது :

ஆயின், சட்டத்தரணி ஒருவர் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கம்பெனிச் சட்டவறிஞராக அவரது பெயரை ஒரு முற்பகர்வில் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கு அவர் சம்மதம் கொடுத்திருந்த காரணத்தினால் மட்டும், அத்தகைய முற்பகர்வின் வழங்குகையை அதிகாரமளித்துள்ளாரென கருதப்படுதலாகாது.

(3) கம்பெனியிலுள்ள பங்குகளுக்காக அல்லது கம்பெனியின் தொகுதிக்கடன்களுக்காக ஆட்களை அழைக்கின்ற முற்பகர்வொன்றில் கணக்காய்வாளர் எவரும், அக்கம்பெனிக் கணக்காய்வாளராக அவரது பெயர் அத்தகைய முற்பகர்வில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு அவரது எழுத்திலான சம்மதத்தைக்

கொடுத்திருந்து, பதிவுசெய்வதற்காக முற்பகர்வின் பிரதியொன்று ஒப்படைக்கப்படுமுன்னர் கம்பெனிக் கணக்காய்வாளர் அவரது பெயர் அத்தகைய முற்பகர்வில் சேர்க்கப்படுவதற்குத் தமது எழுத்திலான சம்மதத்தை மீளப்பெற்றிருக்காதிருந்தாலொழிய, அத்தகைய கணக்காய்வாளர் கம்பெனிக் கணக்காய்வாளராகப் பெயர்குறிப்பிடப்படுதலாகாது :

ஆயின், கணக்காய்வாளரொருவர், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கம்பெனியின் கணக்காய்வாளராக அவரது பெயரை ஒரு முற்பகர்வில் சேர்த்துக்கொள்வதற்கான சம்மதத்தை அவர் கொடுத்துள்ள காரணத்தினால் மட்டும் அத்தகைய முற்பகர்வின் வழங்குகைக்கு அதிகாரமளித்துள்ளாரெனக் கருதப்படுதலாகாது.

(4) இப்பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக ஏதேனும் வங்கியின் சட்டத்தரணியின் அல்லது கணக்காய்வாளரின் பெயர் ஒரு கம்பெனியின் முற்பகர்வு எதிலும் உள்ளடக்கப்படுமிடத்து, கம்பெனியும் அதன் வழங்குகைக்கு அறிந்துகொண்டே திறத்தவரொருவராகவுள்ள ஆளொவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப் பட்டதன்மேல் இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

*முற்பகர்வைப் பதிவுசெய்தல்.*

**40.** (1) ஒரு கம்பெனியினால் அல்லது அதன் சார்பில் அல்லது அமைத்துருவாக்கப்படவுள்ள ஒரு கம்பெனி தொடர்பாக, முற்பகர்வொன்றின் வெளியீட்டுத் தேதியன்று அல்லது அத்தேதிக்கு முன்னர் அத்தகைய முற்பகர்வில் கம்பெனியின் பணிப்பாளரொருவராக அல்லது உத்தேசப் பணிப்பாளரொருவராகப் பெயர்குறிக்கப்பட்ட ஒவ்வோர் ஆளினாலும் அல்லது எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட அவரது முகவரினாலும் ஒப்பமிடப்பட்டும்-

(அ) 38 ஆம் பிரிவினால் தேவைப்படுத்தப்பட்டவாறு முற்பகர்வின் வழங்குகைக்கு ஒரு நிபுணரிடமிருந்து பெறப்பட்ட எழுத்திலான சம்மதம் ;

(ஆ) அத்தகைய முற்பகர்வில் கம்பெனியின் பணிப்பாளராக அல்லது கம்பெனியின் உத்தேசப் பணிப்பாளராகப் பெயர்குறிப்பிடப்பட்ட ஆளொவ்வொருவரி

னாலும், ஒரு முற்பகர்வின் வழங்குகை தொடர்பான இச்சட்டத்தின் ஏற்பாடுகளைத் தாம் வாசித்துள்ளா ரென்றும், அந்த ஏற்பாடுகள் இணங்கியொழுகப் பட்டுள்ளனவென்றும் பொருள்படச் செய்யப்பட்டு கீழொப்பமிடப்பட்ட வெளிப்படுத்துகையொன்று ; அத்துடன்

(இ) பொதுவாக வழங்கப்பட்ட முற்பகர்வின் விடயத்தில் இதற்கான நான்காம் அட்டவணையின் II ஆம் பாகத்தின்கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறு ஏதேனும் அறிக்கையைச் செய்கின்ற ஆட்கள் அவ்வட்டவணை யின் 30 ஆம் பந்தியில் கூறப்பட்டவாறான அத்தகைய எவையேனும் சீராக்கங்களை அத்தகைய முற்பகர்வில் செய்துள்ளவிடத்து அல்லது காரணங்களைக் கொடுக் காது அத்தகைய முற்பகர்வில் சுட்டிக்காட்டியுள்ள விடத்து, சீராக்கங்களை எடுத்துக் காட்டியும் அவற்றிற் கான காரணங்களைக் கொடுத்தும் அத்தகைய ஆட்க ளினால் ஒப்பமிடப்பட்ட எழுத்திலான கூற்றொன்று,

அதன்மீது புறக்குறிப்பிடப்பட்டும் அல்லது அதனுடன் இணைக் கப்பட்டும் அத்தகைய முற்பகர்வின் பிரதியொன்று பதிவுசெய்வ தற்காகப் பதிவாளரிடம் ஒப்படைக்கப்பட்டாலன்றி, முற்பகர்வு எதுவும் வழங்கப்படுதலாகாது.

(2) ஒவ்வொரு முற்பகர்வும் முகப்பில் –

(அ) இப்பிரிவினால் தேவைப்படுத்தப்பட்டவாறு பதிவு செய்வதற்காகப் பிரதியொன்று ஒப்படைக்கப்பட்டுள்ள தெனக் குறிப்பிடுதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) அவ்வாறு ஒப்படைக்கப்பட்ட பிரதியின்மீது புறக் குறிப்பிடப்படவேண்டுமென அல்லது அதனோடு இணைக்கப்படவேண்டுமென இப்பிரிவினால் தேவைப்படுத்தப்பட்ட எவையேனும் ஆவணங் களைக் குறித்துரைக்கின்றவையும், முற்பகர்வில் உள்ளடக்கப்பட்டுள்ளவையுமான கூற்றுக்களை தருதல் வேண்டும், அல்லது அவற்றுக்குக் குறிப்பீடு செய்தல் வேண்டும்.

(3) பதிவாளர் —

(அ) அதன் பிரதி இப்பிரிவினால் தேவைப்படுத்தப்பட்ட முறையில் ஒப்பமிடப்பட்டிருந்தாலொழியவும் ;

(ஆ) மேற்கூறப்பட்டவாறு குறித்துரைக்கப்பட்ட ஆவணங்கள் (எவையேனுமிருப்பின்) அவை அதன்மீது புறக்குறிப்பிடப்பட்டிருந்தாலொழியவும் அல்லது அதனோடு இணைக்கப்பட்டிருந்தாலொழியவும் ;

(இ) இப்பிரிவின்கீழ் பதிவாளருக்கு அதன் பிரதி ஒப்படைக்கப்பட்ட தேதியைக் கொண்டிருந்தாலொழியவும், அல்லது 36 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் அத்தகைய முற்பகர்வில் உட்புகுத்தப்படவேண்டிய எதிர்காலத் தேதியொன்றைக் கொண்டிருந்தாலொழியவும் ; அத்துடன்

(ஈ) இதனகத்துமுன்னர் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு அது எதிர்காலத் தேதியொன்றைக் கொண்டிருக்குமிடத்து, பதிவாளரிடம் சேர்ப்பிக்கப்படும் அறிவித்தல்மூலம் அத்தேதி உறுதிப்படுத்தப்பட்டிருந்தாலொழியவும் அல்லது மாற்றப்பட்டிருந்தாலொழியவும்,

முற்பகர்வொன்றைப் பதிவுசெய்தலாகாது.

(4) இப்பிரிவின்கீழ் பதிவாளரிடம் முற்பகர்வொன்றின் பிரதியொன்று ஒப்படைக்கப்படாமல் அல்லது அவ்வாறு ஒப்படைக்கப்பட்ட பிரதியின்மீது (1) ஆம் உட்பிரிவின்கீழ் குறிப்பீடுசெய்யப்பட்டவாறு தேவைப்பட்ட ஆவணங்கள் புறக்குறிப்பிடப்படாமல், அல்லது அதனோடு இணைக்கப்படாமல் முற்பகர்வொன்று வழங்கப்படுமிடத்து, அக்கம்பெனியும் முற்பகர்வின் வழங்குகைக்கு அறிந்துகொண்டே ஒரு திறத்தவராகவுள்ள ஆளொவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

முற்பகர் விலுள்ள பிறழ்கூற்றுக் களுக்கான குடியியற் பொறுப்பு.

**41.** (1) இப்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக, ஒரு கம்பெனியிலுள்ள பங்குகளுக்காக அல்லது கம்பெனியின் தொகுதிக்கடன்களுக்காக ஒப்பப்பணஞ்செலுத்தும்படி முற்பகர்வொன்று ஆட்களை அழைக்கின்றவிடத்து, அத்தகைய முற்பகர்வின்மீது நம்பிக்கைகொண்டு எவையேனும் பங்குகளுக்காக அல்லது தொகுதிக்கடன்களுக்காக ஒப்பப்பணஞ்செலுத்திய எல்லா ஆட்களுக்கும் அத்தகைய முற்பகர்வில் உள்ளடக்கப்பட்ட ஏதேனும் உண்மையற்ற கூற்றுக் காரணமாக அவர்கள் அடைந்திருக்கக் கூடிய ஏதேனும் நட்டத்துக்காக அல்லது சேதத்துக்காக, பின்வரும் ஆட்கள் நட்டஈடு செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும்; அதாவது –

(அ) முற்பகர்வு வழங்கப்பட்ட நேரத்தில் கம்பெனியின் பணிப்பாளராக இருந்த ஆளொவ்வொருவரும் ;

(ஆ) முற்பகர்வில் பணிப்பாளரொருவராகத் தமது பெயர் குறிப்பிடப்படுவதற்கு தம்மை அதிகாரமளித்துள்ளவரும், பணிப்பாளரொருவராக முற்பகர்வில் பெயர் குறிக்கப்பட்டவருமான அல்லது ஒன்றில் உடனடியாக அல்லது ஒரு காலஇடைவெளிக்குப் பின்னர் ஒரு பணிப்பாளராக வருவதற்கு உடன்பட்டுள்ள ஆளொவ்வொருவரும் ;

(இ) கம்பெனியின் ஊக்குநராகவுள்ள ஆளொவ்வொருவரும் ; அத்துடன்

(ஈ) முற்பகர்வு வழங்குவதற்கு அதிகாரமளித்துள்ள ஆளொவ்வொருவரும் ;

ஆயின், 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் ஒரு முற்பகர்வின் வழங்குகைக்கு எவரேனுமாளின் சம்மதம் தேவைப்பட்டிருந்து, அத்துடன் அத்தகைய ஆள் அத்தகைய சம்மதத்தைக் கொடுத்துமிருக்குமிடத்து, அத்தகைய ஆள், அத்தகைய சம்மதத்தைக் கொடுத்திருந்த காரணத்தினால், நிபுணரொருவர் என்ற முறையில் அவரினால் செய்யப்பட்டதாகக் கொள்ளப்படுகின்ற உண்மையற்ற கூற்றொன்று தொடர்பில் தவிர, முற்பகர்வின் வழங்குகைக்கு அதிகாரமளித்துள்ள ஆளொருவராக இவ்வுட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் ஆளாதலாகாது.

(2) முதலாம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் எவரேனும் ஆள்—

(அ) கம்பெனியின் பணிப்பாளரொருவராக வருவதற்குச் சம்மதமளித்திருந்து, முற்பகர்வு வழங்கப்படுமுன்னர் அவர் தமது சம்மதத்தை மீளப்பெற்றாரென்றும், அம் முற்பகர்வானது அவரது அதிகாரமோ சம்மதமோ இன்றி வழங்கப்பட்டதென்றும் ;

(ஆ) முற்பகர்வானது, தமக்குத் தெரியாமல் அல்லது தமது சம்மதமின்றி வழங்கப்பட்டதென்றும், அது வழங் கப்பட்டமை குறித்து அறியவந்ததும் தமக்குத் தெரியா மல் அல்லது தமது சம்மதம் இன்றி அது வழங்கப் பட்டதென அவர் உடனடியாக நியாயமான பகிரங்க அறிவித்தல் கொடுத்துள்ளாரென்றும் ;

(இ) முற்பகர்வு வழங்கப்பட்ட பின்னரும் அதன் கீழான ஏதேனும் பிரித்தொதுக்குகை செய்வதற்கு முன்னரும், அத்தகைய முற்பகர்வில் ஏதேனும் உண்மையற்ற கூற்றுப்பற்றி அவர் அறியவந்ததும் அதற்கான தமது சம்மதத்தை மீளப்பெற்று அத்துடன் மீளப்பெற்றமை பற்றியும் அதற்கான காரணங்கள் பற்றியும் நியாய மான பகிரங்க அறிவித்தல் கொடுத்துள்ளாரென்றும் ; அல்லது

(ஈ) (i) ஒரு நிபுணரின் அல்லது அலுவலக முறையான பகிரங்க ஆவணத்தின் அல்லது கூற்றின் அதி காரத்தின்மீது செய்யப்படவேண்டியது எனக் கொள்ளப்படாததான, ஒவ்வோர் உண்மையற்ற கூற்றுத் தொடர்பாகவும், அவர், கூற்றானது உண்மையானதென நம்புவதற்கு நியாயமான ஏதுவை உடையவராகவிருந்தாரென்றும், விடயத் துக்கேற்ப பங்குகளின் அல்லது தொகுதிக்கடன் களின் பிரித்தொதுக்குகைக் காலம்வரை அக்கூற் றானது உண்மையானதென நம்பினாரென்றும்;

(ii) நிபுணரொருவரினால் செய்யப்பட்ட கூற்றொன் றெனக் கொள்ளப்படுகின்ற அல்லது எது நிபுண ரொருவரின் அறிக்கையின் அல்லது பெறுமான

மதிப்பீட்டின் பிரதியொன்றாக அல்லது அறிக்கையிலிருந்தான அல்லது பெறுமான மதிப்பீட்டிலிருந்தான பிரித்தெடுத்த பகுதியொன்றாகக் கொள்ளப்படுகின்றதோ அதில் அடங்கியுள்ள ஒவ்வோர் உண்மையற்ற கூற்றுத் தொடர்பாகவும் அது கூற்றை நேரியதாகப் பிரதிபலித்துள்ளதென்றும், அல்லது விடயத்துக்கேற்ப அறிக்கையிலிருந்தான அல்லது பெறுமான மதிப்பீட்டிலிருந்தான சரியானதும் நேரியதுமான பிரதியாக அல்லது பிரித்தெடுத்த பகுதியாக இருந்ததென்றும், அக்கூற்றை ஆக்கிய ஆள் அதனை ஆக்குவதற்குத் தகுதி உள்ளவரென நம்புவதற்கு அவருக்கு நியாயமான ஏது இருந்ததெனவும் அத்துடன் முற்பகர்வின் வழங்குகைக்காலம் வரை அதை நம்பினார் எனவும் அத்துடன் முற்பகர்வின் வழங்குகைக்கு 38 ஆம் பிரிவின்கீழ் தேவைப்படுத்தப்பட்ட சம்மதத்தை அவ்வாள் கொடுத்திருந்தாரென்றும், பதிவுசெய்வதற்காக முற்பகர்வின் பிரதியொன்று ஒப்படைக்கப்படுமுன்னர் அல்லது அவர் அறிந்தவரை, அதன்கீழான பிரித்தொதுக்குகைக்குமுன்னர் அவர் சம்மதத்தை மீளப்பெற்றிருக்கவில்லையென்றும் ; அத்துடன்

(iii) ஆளொருவரினால் அவரது அலுவலகமுறையான தன்மையில் செய்யப்பட்ட ஒரு கூற்றெனக் கொள்ளப்படுகின்ற அல்லது எது அலுவலகமுறையாக வழங்கப்பட்ட பகிரங்க ஆவணத்திலிருந்தான ஒரு பிரதியாக அல்லது பிரித்தெடுத்த பகுதியாக உள்ளதெனக் கொள்ளப்படுகின்றதோ அதில் அடங்கியுள்ள உண்மையற்ற கூற்று ஒவ்வொன்றும் தொடர்பாகவும் அது கூற்றின் அல்லது ஆவணத்திலிருந்தான பிரதியின் அல்லது பிரித்தெடுத்த பகுதியின் சரியானதும் நேரியதுமான பிரதிபலிப்பாக இருந்ததென்றும்,

எண்பிப்பாராயின், அவர் பொறுப்புக்கு ஆளாதலாகாது :

ஆயின், நிபுணரொருவர் என்ற முறையில் தம்மால் செய்யப்பட்டதெனக் கொள்ளப்படுகின்ற உண்மையற்ற கூற்று தொடர்பில் முற்பகர்வின் வழங்குகைக்கு அதிகாரமளித்துள்ள ஆளொருவர் என்ற வகையில் 38 ஆம் பிரிவின்கீழ்த் தேவைப் படுத்தப்பட்ட சம்மதத்தைக் கொடுத்துள்ளமை காரணமாக, பொறுப்புக்கு ஆளான ஆளொருவரின் விடயத்தில் இவ்வுட்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதலாகாது.

(3) இவ்வுட்பிரிவின் ஏற்பாடுகள் புறத்திருக்க, 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் தேவைப்படுத்தப்பட்ட, நிபுணரொருவர் என்ற முறையில் அவரினால் செய்யப்பட்டதெனக்கொள்ளப்படுகின்ற உண்மையற்ற கூற்றுத் தொடர்பில் முற்பகர்வொன்றின் வழங்குகைக்கு அதிகாரமளித்துள்ள ஆளொருவராக அவரது சம்மதத்தைக் கொடுத்திருந்தமை காரணமாக (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் பொறுப்பாகும் ஒருவர் —

(அ) முற்பகர்வின் வழங்குகைக்கு 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் தமது சம்மதத்தைக் கொடுத்திருந்து முற்பகர்வின் பிரதியொன்றைப் பதிவுசெய்வதற்கென ஒப்படைக்குமுன் அவர் தமது சம்மதத்தை எழுத்தில் மீளப்பெற்றுக்கொண்டாரென ;

(ஆ) முற்பகர்வின் பிரதியொன்றைப் பதிவுசெய்வதற்கென ஒப்படைத்தபின்னரும் அதன்கீழான பிரித்தொதுக்குகைக்கு முன்னரும், அவர் அந்த உண்மையற்ற கூற்றுப்பற்றி அறியவந்த பின்னர், தமது சம்மதத்தை எழுத்தில் மீளப்பெற்றதும் அம்மீளப்பெறுகை பற்றியும் அதற்கான காரணம்பற்றியும் நியாயமான பகிரங்க அறிவிப்பைக் கொடுத்துள்ளாரென ; அல்லது

(இ) அக்கூற்றைச் செய்வதற்குத் தாம் தகுதிவாய்ந்தவராக இருந்தாரென்றும், அக்கூற்று உண்மையானதென நம்புவதற்கு அவருக்கு நியாயமான ஏது இருந்ததென்றும் விடயத்துக்கேற்ப பங்குகளை அல்லது தொகுதிக் கடன்களைப் பிரித்தொதுக்கும் காலம்வரை அவ்வாறு நம்பினாரென்றும்,

எண்பிப்பாராயின், அவர் அவ்விதம் பொறுப்பாதலாகாது.

(4) (அ) முற்பகர்வானது, கம்பெனியின் பணிப்பாளரொருவராக அல்லது அத்தகைய கம்பெனியின் பணிப்பாளரொருவராக வருவதற்கு உடன்பட்டிருப்பதாக ஆளொருவரின் பெயரைக் கொண்டுள்ளவிடத்தும், அவர் பணிப்பாளரொருவராக வருவதற்கு அவரது சம்மதத்தை அளிக்காதவிடத்தும் அல்லது முற்பகர்வின் வழங்குகைக்கு முன்னர் தமது சம்மதத்தை மீளப்பெற்றுள்ளவிடத்தும், அத்துடன் அத்தகைய முற்பகர்வை வழங்குவதற்கு அதிகாரமளித்திராதவிடத்தும் அல்லது சம்மதித்திராதவிடத்தும் ; அல்லது

(ஆ) முற்பகர்வின் வழங்குகைக்கு 38 ஆம் பிரிவின்கீழ் ஆளொருவரின் சம்மதம் தேவைப்படுத்தப்பட்டு, ஒன்றில் அவர் அச்சம்மதத்தைக் கொடுத்திராதவிடத்து, அல்லது முற்பகர்வின் வழங்குகைக்கு முன்னர் அதனை மீளப்பெற்றிருக்குமிடத்து,

எந்தப் பணிப்பாளருக்கு தெரியாமலும் அல்லது அவரது சம்மதம் இன்றியும் முற்பகர்வு வழங்கப்பட்டதோ அந்தப் பணிப்பாளர் தவிர, கம்பெனியின் பணிப்பாளர்களும் அத்தகைய முற்பகர்வின் வழங்குகைக்கு அதிகாரமளித்த வேறெவரேனும் ஆளும் விடயத்துக்கேற்றாற்போல, (அ) என்னும் பந்தியின்கீழ் பெயர்குறிப்பிடப்பட்ட ஆளுக்கு அல்லது (ஆ) என்னும் பந்தியின்கீழ் எந்த ஆளின் சம்மதம் தேவைப்படுத்தப்பட்டதோ அந்த ஆளுக்கு, விடயத்துக்கேற்ப முற்பகர்வில் அவரது பெயர் உட்புகுத்தப்பட்டமை காரணமாக அல்லது நிபுணரொருவர் என்ற முறையில் அவரினால் செய்யப்பட்டதாகக் கொள்ளப்படுகின்ற கூற்றொன்று அதன்கண் உள்ளடக்கப்பட்டமை காரணமாக, அல்லது அது தொடர்பில் அவருக்கெதிராகக் கொண்டுவரப்பட்ட ஏதேனும் வழக்கு நடவடிக்கைக்கு அல்லது சட்டநடவடிக்கைக்கு எதிராகத் தாம் எதிர்வாதிடுவதில் அவர் ஆளாக்கப்படக்கூடிய எல்லாச் சேதவீடுகளுக்கும், செலவுத் தொகைகளுக்கும், செலவுகளுக்கும் எதிராக நட்டோத்தரவாதமளிப்பதற்கு ஆளாதல் வேண்டும் :

ஆயின், இவ்வுட்பிரிவின் நோக்கங்களுக்காக, நிபுணரொருவர் என்ற முறையில் ஆளொருவரினால் செய்யப்பட்டதாகக் கொள்ளப்படுகின்ற ஒரு கூற்றினை ஒரு முற்பகர்வில் உள்ளடக்கு

வதற்கு 38 ஆம் பிரிவின்கீழ் தேவைப்படுத்தப்பட்ட சம்மதத்தை அவர் கொடுத்துள்ளார் என்பதே காரணமாக மட்டும் அத்தகைய முற்பகர்வின் வழங்குகைக்கு அதிகாரமளித்துள்ளாரெனக் கருதப்படுதலாகாது.

(5) எந்த ஆள் பணிப்பாளர் ஒருவராக இருப்பதன் காரணமாக அல்லது பணிப்பாளர் ஒருவராகப் பெயர்குறிக்கப்படுவதன் காரணமாக அல்லது பணிப்பாளர் ஒருவராக வருவதற்கு உடன்பட்டுள்ளதன் காரணமாக அல்லது முற்பகர்வின் வழங்குகைக்கு அதிகாரமளித்துள்ளதன் காரணமாக அல்லது நிபுணரொருவர் என்ற முறையில் அவரினால் செய்யப்பட்டதெனக் கொள்ளப்படுகின்ற கூற்றொன்றை அத்தகைய முற்பகர்வில் உள்ளடக்கியமை காரணமாக இப்பிரிவின்கீழான ஏதேனும் கொடுப்பனவைச் செய்வதற்கு ஆளாகவருகின்றாரோ அந்த ஆளொவ்வொருவரும், அவ்வாறு ஆளாகவந்துள்ள ஆள் மோசடியான பிறழ்பகர்வுக் காகக் குற்றவாளியாகவிருந்தாலொழியவும் மற்றைய ஆள் குற்றத்திற்கு ஆளாகாமலும் இருந்தாலொழியவும், தனியாக வழக்குத் தொடுக்கப்பட்டிருப்பின் எந்த ஆள் அதே கொடுப்பனவைச் செய்வதற்கு ஆளாக வந்திருக்கக்கூடுமோ அந்த வேறு ஆளிடமிருந்து ஒப்பந்தத்தின் விடயங்களிற்போன்று, உதவுதொகையை அறவிடலாம்.

(6) இப்பிரிவின் நோக்கங்களுக்காக —

(அ) "ஊக்குநர்" என்பது, முற்பகர்வின் தயாரிப்புக்கு அல்லது உண்மையற்ற கூற்றைக் கொண்டுள்ள அதன் பாகத்தைத் தயாரிப்பதற்குத் திறத்தவரொருவராக விருந்த ஊக்குநரொருவர் என்று பொருளாகும் ; ஆனால் கம்பெனி அமைத்துருவாக்குகையை நாடிப் பெறுவதில் ஈடுபட்டுள்ள ஆட்களுக்காக உயர் தொழில் சார் தன்மையில் அவர் செயலாற்றுகின்றமை காரணமாக எவரேனுமாளை உள்ளடக்காது ; அத்துடன்

(ஆ) "நிபுணர்" என்பது, 38 ஆம் பிரிவிலுள்ள அதே பொருளைக் கொண்டிருக்கின்றது.

முற்பகர்விலுள்ள உண்மையற்ற கூற்றுகளுக்கான குற்றவியற் பொறுப்பு.

**42.** (1) வழங்கப்பட்ட முற்பகர்வொன்று ஏதேனும் உண்மையற்ற கூற்றை உள்ளடக்குமிடத்து, அத்தகைய முற்பகர்வின் வழங்குகைக்கு அதிகாரமளித்த ஒவ்வோராளும் அக்கூற்றானது பொருண்மையற்றது என அல்லது அக்கூற்று உண்மையானதென அவர் நம்புவதற்கு அவருக்கு நியாயமான ஏது இருந்ததெனவும், முற்பகர்வு வழங்கப்பட்ட காலம்வரை கூற்றானது உண்மையான தென நம்பினாரெனவும் அவர் எண்பித்தாலொழிய, தவறொன் றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப் பளிக்கப்படுவதன்மேல் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டாண்டுகளை விஞ்சாத ஒரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும், ஆளாதலும் வேண்டும்.

(2) ஆளொருவர், நிபுணரொருவராக அவரினால் செய்யப்பட்ட தெனக் கொள்ளப்படுகின்ற கூற்றொன்றினை முற்பகர்வொன்றில் உள்ளடக்குவதற்கு 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளினால் தேவைப் படுத்தப்பட்ட சம்மதத்தை அவர் கொடுத்துள்ளார் என்பதே காரணமாக மட்டும், அத்தகைய முற்பகர்வின் வழங்குகைக்கு அதிகாரமளித்துள்ளாரென இப்பிரிவின் நோக்கங்களுக்காகக் கருதப்படுதலாகாது.

(3) சட்டத்துறைத் தலைமையதிபதியின் அனுமதியுடனன்றி, (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழான ஏதேனும் தவறு தொடர்பில் குற்றவழக்கெதுவும் தொடுக்கப்படலாகாது.

விற்பனைக்கென பங்குகளின் அல்லது தொகுதிக் கடன்களின் கொடை முனைவைக் கொண்டுள்ள ஆவணம் ஒரு முற்பகர்வாகக் கருதப்படுதல்.

**43.** (1) ஒரு கம்பெனியிலுள்ள எவையேனும் பங்குகளை அல்லது அக்கம்பெனியின் தொகுதிக்கடன்களை அப்பங்குகள் அல்லது தொகுதிக்கடன்கள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எவற்றையும் பொதுமக்களுக்கு விற்பதற்கென கொடைமுனையும் நோக்குடன் கம்பெனியானது பிரித்தொதுக்குகின்றவிடத்து அல்லது பிரித்தொதுக்க உடன்படுகின்றவிடத்து, பொதுமக் களுக்கு விற்பனை செய்வதற்கான கொடைமுனைவு எந்த ஆவணத்தின்மூலம் செய்யப்படுகின்றதோ அந்த ஆவணம் எல்லா நோக்கங்களுக்காகவும், கம்பெனியினால் வழங்கப்பட்ட முற்பகர் வொன்றெனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், முற்பகர்விலுள்ள, பொருளடக்கம் பற்றியும் முற்பகர்விலுள்ள கூற்றுகள் தொடர்பிலும் விட்டுவிடுகை தொடர்பிலுமான

பொறுப்புப் பற்றியதும் அல்லது வேறு வகையில் முற்பகர்வுக ளுடன் தொடர்புடையனவுமான அல்லது எழுத்திலான ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகள் பங்குகள் அல்லது தொகுதிக்கடன்கள் ஒப்பப்பணத்துக்காகப் பொதுமக்களுக்கு கொடைமுனைவு செய்யப்பட்டிருந்தன என்றாற்போன்றும், எவையேனும் பங்குகள் அல்லது தொகுதிக்கடன்கள் தொடர்பில் அந்த கொடைமுனைவை ஏற்றுக்கொள்ளும் ஆட்கள் அப்பங்குகளுக்காக அல்லது தொகுதிக் கடன்களுக்காக ஒப்பப்பணஞ் செலுத்துநர்கள் என்றாற்போன்றும், ஆனால், அந்த ஆவணத்தில் அடங்கியுள்ள உண்மையற்ற கூற்றுகள் தொடர்பில் அல்லது அது தொடர்பில் வேறுவகையான எவ்வாட்களினால் கொடைமுனைவு செய்யப்படுகின்றதோ அவ்வாட்களின் பொறுப்பு ஏதேனுமிருப்பின் அதற்குப் பங்க மின்றி, ஏற்புடையனவாதலும் அதற்கிணங்கப் பயனுடையன வாதலும் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, பொதுமக்களுக்கு பங்குகளை அல்லது தொகுதிக்கடன்களை விற்கமுனைகின்ற நோக்கத்துடன் பங்குகளின் அல்லது தொகுதிக்கடன்களின் பிரித்தொதுக்கலொன்று அல்லது அவற்றைப் பிரித்தொதுக்கு வதற்கான உடன்படிக்கையொன்று, செய்யப்பட்டதென —

(அ) பொதுமக்களுக்கு விற்பனை செய்வதற்காகப் பங்கு களின் அல்லது தொகுதிக்கடன்களின் கொடைமுனை வொன்று, பிரித்தொதுக்கலின் பின்னர் அல்லது பிரித்தொதுக்குவதற்கான உடன்படிக்கையின் பின்னர் ஆறு மாதங்களினுள் செய்யப்பட்டதென்றும் ; அல்லது

(ஆ) கொடைமுனைவு செய்யப்பட்ட தேதியில், பங்குகள் அல்லது தொகுதிக்கடன்கள் தொடர்பில் கம்பெனியி னால் பெறப்பட வேண்டிய முழுமையான பிரதிபயனும் அவ்வாறு பெறப்பட்டிருக்கவில்லையென்றும்,

காட்டப்பட்டால், முரணானது எண்பிக்கப்பட்டாலன்றி, கருதப்படு தல் வேண்டும்.

(3) நாற்பதாம் பிரிவின் ஏற்பாடுகள், கொடைமுனைவைச் செய்கின்ற ஆட்கள், முற்பகர்வொன்றில் ஒரு கம்பெனியின் பணிப்பாளர்ளாகப் பெயர் குறிப்பிடப்பட்ட ஆட்கள் என்றாற்

போன்று, இப்பிரிவு தொடர்பில் ஏற்புடையதாதல் வேண்டும் என்பதுடன், 37 ஆம் பிரிவின் ஏற்பாடுகள், ஒரு முற்பகர்வில் கூறப்படவேண்டுமென அப்பிரிவினால் தேவைப்படுத்தப்பட்ட கருமங்களோடு சேர்த்து மேலதிகமாக –

(அ) கொடைமுனைவானது, எந்தப் பங்குகள் அல்லது தொகுதிக்கடன்கள் தொடர்பானதோ அந்தப் பங்குகள் அல்லது தொகுதிக்கடன்கள் தொடர்பிலும் கம்பெனியினால் பெறப்பட்ட பிரதிபயனின் தேறிய தொகையையும் ; அத்துடன்

(ஆ) சொல்லப்பட்ட பங்குகள் அல்லது தொகுதிக்கடன்கள் எந்த ஒப்பந்தத்தின்கீழ் பிரித்தொதுக்கப்பட்டுள்ளனவோ அல்லது பிரித்தொதுக்கப்பட வேண்டியுள்ளனவோ அந்த ஒப்பந்தம் எவ்விடத்திலும் எந்நேரத்திலும் பார்வையிடப்படலாம் என்பதையும்,

கூறுவதற்கு முற்பகர்வொன்று தேவைப்படுகின்றது என்றாற் போன்று இப்பிரிவு தொடர்பில் ஏற்புடையதாதல் வேண்டும்.

(4) இப்பிரிவு எந்த கொடைமுனைவு தொடர்பானதோ அந்த கொடைமுனைவைச் செய்கின்ற ஆள் ஒரு கம்பெனியாக அல்லது ஒரு குழுமமாக உள்ளவிடத்து, மேற்கூறப்பட்ட ஆவணம் விடயத்துக்கேற்ப கம்பெனியின் இரு பணிப்பாளர்களினால் அல்லது பங்காளிகளுள் அரைவாசிக்குக் குறையாதோரினால் கம்பெனியின் அல்லது குழுமத்தின் சார்பில் ஒப்பமிடப்படின் போதுமானதாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய எவரேனும் பணிப்பாளர் அல்லது பங்காளர் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட அவரது முகவர் மூலம் ஒப்பமிடலாம்.

முற்பகர்வுகள் தொடர்பான ஏற்பாடுகளின் பொருள் கோடல்.

**44.** இச்சட்டத்தின் இப்பாகத்தின் முற்போந்த ஏற்பாடுகளின் நோக்கங்களுக்காக –

(அ) ஒரு முற்பகர்வில் உள்ளடக்கப்பட்ட கூற்று ஒன்று அது எந்தப் படிவத்திலும் எந்தச் சந்தர்ப்பதிலும் அது உள்ளடக்கப்படுகின்றதோ அந்தப் படிவத்திலும் சந்தர்ப்பத்திலும் அது பிறழ்வழி இட்டுச்செல்வதாக இருப்பின் அது உண்மையற்ற கூற்றொன்றாகக் கருதப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) கூற்றொன்றை முற்பகர்வொன்று கொண்டிருப்பின் அல்லது அத்தகைய முற்பகர்வின் முகப்பில் தோன்றும் ஏதேனும் அறிக்கையில் அல்லது அமைப்புப்புறவிதியில் அடங்கியிருப்பின் அல்லது குறிப்பீட்டின்மூலம் அத்தகைய முற்பகர்வில் உள்ளடக் கப்படின் அல்லது அத்துடன் சேர்த்து வழங்கப்படின், அத்தகைய முற்பகர்வில் அக்கூற்று சேர்க்கப்பட்டதாகக் கருதப்படுதல்.

### பிரித்தொதுக்குகை

ஆகக்குறைந்த ஒப்பப்பணம் பெறப்பட்டாலொழிய, பிரித்தொதுக் குகை செய்வதற்குத் தடை.

**45.** (1) இதற்கான நான்காம் அட்டவணையின் 5 ஆம் பந்தியிற் குறித்துரைக்கப்பட்ட விபரங்களுக்காக ஏற்பாடுசெய்வதற்கெனப் பணிப்பாளர்களின் அபிப்பிராயப்படி, பங்குமூலதனத்தின் வழங்குகைமூலம், திரட்டப்படவேண்டிய ஆகக்குறைந்த தொகையாக முற்பகர்வில் கூறப்பட்ட தொகை ஒப்பப்பணமாகச் செலுத்தப் பட்டிருந்தாலொழியவும், அவ்வாறு கூறப்பட்ட தொகைக்காக விண்ணப்பத்தின்மீது செலுத்தப்படற்பாலதான பணத்தொகை கம்பெனிக்குச் செலுத்தப்பட்டு கம்பெனியினால் பெறப்பட்டிருந்தாலொழியவும், பொதுமக்களுக்கு ஒப்பப்பணத்துக்கென முனையப்பட்ட ஒரு கம்பெனியின் ஏதேனும் பங்குமூலதனத்தின் பிரித்தொதுக்குகை செய்யப்படுதலாகாது.

இவ்வுட்பிரிவின் நோக்கங்களுக்காக, பணத்தொகையொன்றுக்கான காசோலை கம்பெனியினால் நல்லெண்ணத்துடன் பெறப்பட்டு அத்துடன் கம்பெனியின் பணிப்பாளர்கள் காசோலைக்குப் பணஞ்செலுத்தப்படாமலிருக்கலாம் எனச் சந்தேகிப்பதற்குக் காரணமெதனையும் கொண்டிராதிருப்பின், அப்பணத் தொகையானது, கம்பெனிக்குச் செலுத்தப்பட்டதாகவும் அக்கம் பெனியினால் பெற்றுக் கொள்ளப்பட்டதாகவும் கருதப்படுதல் வேண்டும்.

(2) ஒப்பப்பண நிரல்கள் மூடப்பட்ட தேதியிலிருந்து அறுபது நாட்கள் முடிவுறுவதனுள் (1) ஆம் உட்பிரிவில் தரப்பட்டுள்ள நிபந்தனைகள் இணங்கியொழுகப்படாதுள்ளவிடத்து, பங்குகளுக்கான விண்ணப்பகாரர்களிடமிருந்து பெறப்பட்ட ஏதேனும் பணத்தொகை உடனடியாக வட்டியின்றி அவர்களுக்கு மீளச் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், ஒப்பப்பண நிரல்கள்

மூடப்பட்ட தேதியிலிருந்து எழுபத்தைந்து நாட்களினுள் அத்தகைய பணம் அவ்வாறு மீளச் செலுத்தப்படாதிருப்பின், கம்பெனியின் பணிப்பாளர்கள் எழுபத்தைந்தாவது நாள் முடிவுற்றதிலிருந்து, சட்டமுறையான வீதத்திலான வட்டியுடன் அப்பணத்தை மீளச் செலுத்துவதற்குக் கூட்டாகவும் தனித்தனியாகவும் ஆளாதலும் வேண்டும் :

ஆயின், பணிப்பாளரொருவர் அப்பணத்தைத் திருப்பிக் கொடுப்பதில் ஏற்பட்ட தவறுகை அவர்பால் ஏதேனும் பிறழ் நடத்தை காரணமாக அல்லது கவனயீனம் காரணமாக ஏற்பட வில்லையென எண்பித்தால் அப்பொறுப்புக்கு ஆளாதலாகாது.

(3) பங்குகளுக்காக விண்ணப்பித்த விண்ணப்பகாரர் எவரையும் இப்பிரிவின் ஏதேனும் தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுகாது விட்டழிவதற்குத் தேவைப்படுத்துகின்ற அல்லது பிணிக்கின்ற ஏதேனும் நிபந்தனை வறிதானதாதல் வேண்டும்.

(4) இப்பிரிவின் ஏற்பாடுகள், ஒப்பப்பணத்துக்கெனப் பொது மக்களுக்கு கொடை முனைவுசெய்யப்பட்ட பங்குகளின் முதலாவது பிரித்தொதுக்குகையை அடுத்துப் பின்வருவதான பங்குகளின் ஏதேனும் பிரித்தொதுக்குகைக்கு ஏற்புடையனவாதலாகாது.

ஒழுங்கற்ற பிரித்தொதுக் குகையின் பயன்.

**46.** (1) நாற்பத்தைந்தாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாகக் கம்பெனியொன்றினால் விண்ணப்பகாரரொருவருக்குச் செய்யப்பட்ட பிரித்தொதுக்குகையொன்று, பிரித்தொதுக்குகைத் தேதியிலிருந்து ஒருமாதத்தினுள் விண்ணப்பகாரரின் தூண்டுதலின்பேரில் வறிதாக்கப்படற்பாலதாதல் வேண்டுமென்பதுடன், கம்பெனியானது ஒடுக்கப்பட்டுக் கொண்டிருப்பது எது எப்படியிருப்பினும், அவ்வாறு வறிதாக்கப்படற்பாலதாதலும் வேண்டும்.

(2) ஒரு கம்பெனியின் எவரேனும் பணிப்பாளர் 45 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுள் எவற்றையும் மனதறிய மீறுகின்றவிடத்து அல்லது மீறுகின்றமையை அனுமதிக்கின்றவிடத்து அல்லது அதற்கு அதிகாரமளிக்கின்றவிடத்து, கம்பெனி அல்லது பிரித்தொதுக் குகைபெறுநர் எந்த நட்டத்தை, சேதவீடுகளை அல்லது செலவுகளை அதன்மூலம் அடைந்திருந்தாரோ அல்லது உற்றிருந்தாரோ அவற்றுக்காக முறையே கம்பெனிக்கும் பிரித்தொதுக்குகை பெறுநருக்கும் நட்டஈடு செலுத்துவதற்கு அவர் ஆளாதல் வேண்டும் :

ஆயின், பிரித்தொதுக்குகைத் தேதியிலிருந்து இரண்டாண்டுகள் முடிவுற்றபின்னர் அத்தகைய ஏதேனும் நட்டத்தை, சேதவீடுகளை அல்லது செலவுகளை அறவிடுவதற்கான வழக்கு நடவடிக்கைகள் எவையும் தொடங்கப்படுதலாகாது.

பங்குகளுக்கும் தொகுதிக் கடன்களுக்குமான விண்ணப்பங்களும், அவற்றின் பிரித்தொதுக்குகையும்.

**47.** (1) பொதுவாக வழங்கப்பட்ட முற்பகர்வொன்றைப் பின்பற்றி ஒரு கம்பெனியிலுள்ள அல்லது கம்பெனியின் எவையேனும் பங்குகளின் அல்லது தொகுதிக் கடன்களின் பிரித்தொதுக்குகை எதுவும் செய்யப்படுதலாகாது என்பதுடன், அவ்வாறு வழங்கப்பட்ட ஒரு முற்பகர்வினைப் பின்பற்றிச் செய்யப்பட்ட விண்ணப்பங்களின் மீது, முற்பகர்வு முதற்றடவையாக எத்தேதியன்று வழங்கப்படுகிறதோ அத்தேதிக்குப்பின்னர் மூன்றாம் நாள் தொடங்கும்வரை அல்லது (இதனகத்துப் பின்னர் இச்சட்டத்தில் “ஒப்பப்பண நிரல்களைத் திறக்கும் நேரம்” எனக் குறிப்பீடு செய்யப்படுவதான) முற்பகர்வில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய நேரம் (ஏதேனுமிருப்பின்) அந்நேரம் வரை வழக்கு நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படுதலுமாகாது.

(2) முற்பகர்வானது, பொதுவாக முதற்றடவையாக வழங்கப்படும் நாள் பற்றிய (1) ஆம் உட்பிரிவிலுள்ள குறிப்பீடானது, அது ஒரு செய்தித்தாள் விளம்பரமாக முதற்றடவையாக வழங்கப்படும் தேதிபற்றிக் குறிப்பீடு செய்வதாகப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும் :

ஆயின், அது வேறேதேனும் முறையில் எத்தேதியன்று முதற்றடவையாக வழங்கப்பட்டதோ அத்தேதிக்குப்பின்னர் மூன்றாம் நாளுக்கு முன்னர் செய்தித்தாள் விளம்பரமொன்றாக அவ்வாறு வழங்கப்படாதிருப்பின், சொல்லப்பட்ட குறிப்பீடு, அத்தகைய முறையில் அது முதற்றடவையாக எத்தேதியன்று அவ்வாறு வழங்கப்பட்டதோ அத்தேதியைக் குறிப்பீடு செய்வதாகப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

(3) ஒரு பிரித்தொதுக்குகையின் செல்லுபடியாந்தன்மை, இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின் ஏதேனும் மீறுகையினால் பாதிக்கப்படலாகாது, ஆனால் அத்தகைய ஏதேனும் மீறுகை ஏற்படும் பட்சத்தில் —

(அ) கம்பெனியானது தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்

மேல் இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பண மொன்றுக்கு ஆளாதலும் வேண்டும் ; அத்துடன்

(ஆ) கம்பெனியின் தவறுகையிலுள்ளவரான ஒவ்வோர் அலுவலரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பண மொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

(4) விற்பனைக்கெனப் பங்குகளை அல்லது தொகுதிக்கடன்களை கொடைமுனைவுசெய்கின்ற முற்பகர்வொன்றுக்கு இப்பிரிவை ஏற்புடையதாக்குவதில், முற்போந்த உட்பிரிவுகள், பிரித்தொதுக் குகைபற்றிய குறிப்பீட்டுக்குப் பதிலாக, விற்பனைபற்றிய குறிப்பீட்டை இடுவதன்மூலமும், கம்பெனியும் கம்பெனியின் தவறுகையிலுள்ளவரான ஒவ்வோர் அலுவலரும் பற்றிய குறிப்பீட் டுக்குப் பதிலாக, எவ்வாளினால் அல்லது எவ்வாளின்மூலம் கொடைமுனைவுசெய்யப்படுகின்றதோ அத்துடன் எவ்வாள் மனதறியவும் வேண்டுமென்றும் மீறுகையை அதிகாரமளிக்கின் றாரோ அல்லது அனுமதிக்கின்றாரோ அவ்வாள் பற்றிய குறிப் பீட்டை இடுவதன்மூலம் பயனுறுவனவாதல் வேண்டும்.

(5) பொதுவாக வழங்கப்பட்ட முற்பகர்வு ஒன்றினைப் பின்பற்றிச் செய்யப்பட்ட ஒரு கம்பெனியிலுள்ள அல்லது கம்பெனியின் பங்குகளுக்கான அல்லது தொகுதிக்கடன்களுக்கான ஒரு விண்ணப்பம், ஒப்பப்பண நிரல்கள் திறக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்றாம் நாள் முடிவுற்றபின்னர்வரை, அல்லது சொல்லப்பட்ட மூன்றாம் நாள்முடிவுறு முன்னர் 41 ஆம் பிரிவின் ஏற்பாடுக ளின்கீழ் முற்பகர்வுக்குப் பொறுப்பாகவுள்ள எவரேனுமாளினால் ஒரு பகிரங்க அறிவித்தலைக் கொடுக்கின்ற ஆளின் பொறுப்புடை மையை அப்பிரிவின்கீழ் விலக்கிவைக்கின்ற அல்லது வரையறுக்கின்ற பயனைக்கொண்டுள்ள அந்த அறிவித்தல் கொடுக்கப்படும்வரை, ஒழிக்கப்படற்பாலதாதலாகாது.

(6) இப்பிரிவின் நோக்கங்களுக்காக ஏதேனும் நாளுக்குப் பின்னரான மூன்றாம் நாளைத் தீர்மானிக்கையில், ஒரு வங்கி விடுமுறை நாளாகவுள்ள அல்லது பகிரங்க விடுமுறை நாளாகவுள்ள ஏதேனும் இடையிடும் நாள் புறக்கணிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு தீர்மானிக்கப்பட்டவாறான

மூன்றாம் நாள் ஒரு வங்கி அல்லது பகிரங்க விடுமுறை நாளாகவே உள்ளவிடத்து, சொல்லப்பட்ட நோக்கங்களுக்காக, வங்கி விடு முறை நாளாகவிராத அல்லது பகிரங்க விடுமுறை நாளாகவிராத அதற்குப் பின்னரான முதலாம் நாள் பதிலீடு செய்யப்படுதலும் வேண்டும்.

பொது மக்களுக்குப் பங்குகளை அல்லது தொகுதிக் கடன்களை கொடை முனைவு செய்தல் பற்றிய குறிப்பீட்டின் பொருள்கோடல்.

**48.** (1) பொதுமக்களுக்கு எவையேனும் பங்குகளை அல்லது தொகுதிக்கடன்களை கொடைமுனைவுசெய்தல் பற்றி இச்சட்டத் திலுள்ள குறிப்பீடு எதுவும், அதன்கண் அடங்கியுள்ள முரணான ஏதேனும் ஏற்பாட்டுக்கமைவாக, சம்பந்தப்பட்ட கம்பெனியின் பங்குதாரர்களாக அல்லது தொகுதிக்கடன்கள் வைத்திருப்போ ராக அல்லது முற்பகர்வை வழங்குகின்ற ஆளின் வாடிக்கையா ளர்களாக அல்லது வேறெந்த முறையிலும் தெரிவு செய்யப் பட்டோராயினுஞ்சரி, பொதுமக்களின் ஏதேனும் பிரிவினருக்கு அவற்றை கொடைமுனைவு செய்தல் பற்றிய குறிப்பீடொன்றை உள்ளடக்குவதாகப் பொருள்கொள்ளப்படல் வேண்டுமென்பது டன், பங்குகளுக்காக அல்லது தொகுதிக்கடன்களுக்காக ஒப்பப் பணஞ்செலுத்தும்படி பொதுமக்களை அழைத்தல் பற்றி இச்சட்டத் திலுள்ள அல்லது ஒரு கம்பெனியின் அமைப்பகவிதிகளிலுள்ள குறிப்பீடுகள் முற்போந்த ஏற்பாடுகளுக்குகமைவாக, அதே போன்று பொருள்கொள்ளப்படுதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள், ஏதேனும் கொடை முனைவை அல்லது அழைப்பைப் பெறுகின்றவர்கள் அல்லாத வேறு ஆட்களினால் ஒப்பப்பணஞ்செலுத்தப்படுவதற்கு அல்லது கொள்வனவினை செய்யப்படுவதற்கு பங்குகள் அல்லது தொகுதிக்கடன்கள் கிடைக்கக்கூடியனவான வருவதனை நேரடியா கவோ மறைமுகமாகவோ விளைவிப்பதாகக் கருதப்படாத வாறான அல்லது வேறு வகையாக அதனைச் செய்கின்றவர்களும் பெறுகின்றவர்களுமான ஆட்களின் ஒரு குடிலிடை முயற்சியாக வுள்ள எல்லாச் சந்தருப்பங்களிலும் அது தகுந்தமுறையில் கொள்ளப்படமுடியுமாயின், அக்கொடைமுனைவு அல்லது அழைப்பு பொதுமக்களுக்குச் செய்யப்பட்டதாகக் கணிக்கப் படுதலைத் தேவைப்படுத்துவதாக எடுத்துக்கொள்ளப்படுதலா காது. அத்துடன் குறிப்பாக —

(அ) பங்குகளுக்காக அல்லது தொகுதிக்கடன்களுக்காக ஒப்பப் பணஞ்செலுத்தும்படி பொதுமக்களுக்குச் செய்யப்படும் அழைப்புகளைத் தடைசெய்கின்ற ஒரு

கம்பெனியின் அமைப்பக விதிகளிலுள்ள ஏற்பாடொன்று, மேற்கூறப்பட்டவாறானதெனத் தகுந்த முறையில் கொள்ளப்படக்கூடிய உறுப்பினர்களுக்கு அல்லது தொகுதிக்கடன்கள் வைத்திருப்போருக்கு ஆன அழைப்பொன்றைத் தடைசெய்வதாகப் பொருள் கொள்ளப்படுதலுமாகாது ; அத்துடன்

(ஆ) தனியார் கம்பெனிகள் தொடர்பான இச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள் கொள்ளப்படுதலும் வேண்டும்.

### பங்குகளின் தன்மையும் வகைகளும்

பங்குகளின் தன்மையும் வகைகளும்.

**49.** (1) ஒரு கம்பெனியிலுள்ள பங்கு அசைவுள்ள ஆதனமாதல் வேண்டும்.

(2) கம்பெனியின் அமைப்பகவிதிகளுக்கமைவாக, ஒரு கம்பெனியிலான பங்கு, அதனை வைத்திருப்பவருக்குப் பின்வருவனவற்றை அளித்தல் வேண்டும் :—

(அ) ஏதேனும் தீர்மானத்தின்மேல் கம்பெனியொன்றின் கூட்டமொன்றிலான வாக்கெடுப்பின்மீது ஒரு வாக்குக்கான உரிமை ;

(ஆ) கம்பெனியினாற் செலுத்தப்பட்ட பங்கிலாபங்களில் சமபங்குக்கான உரிமை ;

(இ) ஒழித்துக்கட்டுதலின்மேல் கம்பெனியின் மேன்மிகைச் சொத்துக்களின் விநியோகத்தில் சமபங்குக்கான உரிமை.

(3) கம்பெனியொன்று வெவ்வேறு வகுப்பினவான பங்குகளை வழங்கலாமென்பதுடன், குறிப்பாக —

(அ) மீட்கப்படற்பாலனவான ;அல்லது

(ஆ) விநியோகங்களுக்கு முந்துரிமைகள் அளிக்கின்ற ; அல்லது

(இ) விசேட, வரையறுக்கப்பட்ட அல்லது நிபந்தனையுடனான வாக்களிப்பு உரிமைகளை அளிக்கின்ற அல்லது வாக்களிப்பு உரிமைகள் எவற்றையும் அளிக்காத

பங்குகளை வழங்கலாம்.

(4) ஒரு கம்பெனியிலுள்ள பங்கெதுவும் பெயரளவிலான பெறுமதியை அல்லது சமபெறுமதியைக் கொண்டிருத்தலாகாது.

(5) ஒரு கம்பெனியிலுள்ள பங்கு அதனது அமைப்பக விதிகளில் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் கைமாற்றப்படற்பாலதாகும் என்பதுடன், அத்தகைய அமைப்பகவிதிகள், ஒரு பங்கு எந்த அளவுக்குக் கைமாற்றப்படற்பாலதோ அந்த அளவை வரையறுக்கலாம் அல்லது மட்டுப்படுத்தலாம்.

**பங்குகளை வழங்குதல்**

**50.** (1) ஐந்தாம் பிரிவின்கீழ் கம்பெனியொன்று கூட்டிணைக்கப்பட்டதனை உடனடுத்து, கம்பெனியானது, கூட்டிணைப்புக்கான விண்ணப்பத்தில் பெயர்குறிக்கப்பட்ட ஒவ்வொரு பங்குதாரருக்கும் அவ்வாள் உரித்துடையவராகவுள்ள பங்குகளை வழங்குதல் வேண்டும். தொடக்கப் பங்குகள்.

(2) இருநூற்றி நாற்பத்தி நான்காம் பிரிவின்கீழ் ஒன்றிணைப்புச் சான்றிதழொன்று வழங்கப்படுவதனை உடனடுத்து, ஒன்றிணைக்கப்பட்ட கம்பெனி, ஒன்றிணைப்பு உத்தேசத்தின்கீழ் பங்குகளுக்கு உரித்துள்ள ஒவ்வோராளுக்கும், அவ்வாள் உரித்துடையவராகவுள்ள பங்குகளை வழங்குதல் வேண்டும்.

**51.** (1) பிரிவுகள் 52, 53 என்பவற்றின் ஏற்பாடுகளுக்கும் கம்பெனியின் அமைப்பகவிதிகளுக்கும் அமைவாக, ஒரு கம்பெனியின் சபை, தோதானவர்களென அது கருதுகின்றவாறான அத்தகைய ஆட்களுக்கு அத்தகைய பங்குகளை வழங்கலாம். பங்குகளை வழங்குதல்.

(2) வழங்கப்பட்ட பங்குகள் 49 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் தரப்பட்டுள்ளவற்றைத் தவிர்ந்த வேறு உரிமைகளை அளிக்குமாயின் அல்லது வைத்திருப்பவர்மீது ஏதேனும் கடப்பாட்டைச் சுமத்துமாயின் அப்பங்குகளுடன் இணைந்துள்ள உரிமைகளையும் கடப்பாடுகளையும் தருகின்ற வழங்குகை நியதிகளைச் சபையானது அங்கீகரித்தல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட வழங்குகை நியதிகள் —

(அ) கம்பெனியின் அமைப்பகவிதிகளுடன் ஒத்திருப்பன வாகவிருத்தல் வேண்டுமென்பதுடன், அவை அவ்வாறு ஒத்திருப்பனவாகவிராத அளவுக்குச் செல்லுபடியற்றனவாயும் பயனெதுவுமில்லாதன வாயும் இருத்தலும் வேண்டும் ;

(ஆ) அமைப்பகவிதிகளின் பாகமாகவமைவனவாகக் கருதப்படுமென்பதுடன், 15 ஆம் பிரிவுக்கிணங்கத் திருத்தவும்படலாம்.

(4) இப்பிரிவின்கீழ் எவையேனும் பங்குகள் வழங்கப்பட்டதிலிருந்து இருபது வேலை நாட்களினுள் கம்பெனியானது —

(அ) பின்வருவனபற்றி விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் பதிவாளருக்கு அறிவித்தல் கொடுத்தல் வேண்டும் :—

(i) வழங்கப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை ;

(ii) 58 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறு பங்குகள் எந்தப் பிரதிபயனுக்காக வழங்கப்பட்டுள்ளனவோ அந்தப் பிரதிபயனின் தொகை அல்லது அதன் பெறுமதி ; அத்துடன்

(iii) பங்குகளை வழங்கியதனையடுத்து கம்பெனியின் கூறப்பட்ட மூலதனத் தொகை ;

(ஆ) இரண்டாம் உட்பிரிவின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட எவையேனும் வழங்குகை நியதிகளின் பிரதியொன்றைப் பதிவாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

(5) கம்பெனியொன்று (4) ஆம் உட்பிரிவின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுமிடத்து —

(அ) கம்பெனியானது தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப் பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும் ; அத்துடன்

(ஆ) தவறுகையிலுள்ளவாறான கம்பெனியின் ஒவ்வோர் அலுவலரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப் பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

பங்குகளை வழங்கு வதற்கான பிரதிபயன்.

**52.** (1) எவையேனும் பங்குகளை வழங்குமுன்னர், சபையானது —

(அ) பங்குகள் எப்பிரதிபயனுக்காக வழங்கப்படுமோ அப் பிரதிபயன்பற்றி முடிபுசெய்தல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) அதன் அபிப்பிராயப்படி அப்பிரதிபயன் கம்பெனிக்கும் ஏலவேயுள்ள பங்குதாரர்களுக்கும் நீதியானதெனவும் நியாயமானதெனவும் தீர்மானித்தல் வேண்டும்.

(2) பங்கொன்று எந்தப் பிரதிபயனுக்காக வழங்கப்படுகின்றதோ அந்தப் பிரதிபயன், கம்பெனியின் காசு, வாக்குறுதிப்பத்திரங்கள், எதிர்காலச் சேவைகள், ஏதேனும் வகையினதான ஆதனம், அல்லது வேறு பிணையப் பொறுப்புகள் உட்பட, எந்த வடிவத்தையும் எடுக்கலாம்.

(3) பிரதிபயன் பெற்றுக்கொண்டதன்மேல், கம்பெனியானது இருபது நாட்களைக் கொண்ட காலப்பகுதியொன்றினுள் பங்குகளின் பிரித்தொதுக்குகையையொன்றைச் செய்தல் வேண்டும்.

புதிய வழங்குகைகளுக்கான முன்வாங்கு உரிமைகள்.

**53.** (1) கம்பெனியின் அமைப்பகவிதிகளுக்கமைவாக, வாக்களிப்பு அல்லது விநியோகத்தில் உரிமைகள் தொடர்பான ஏலவேயுள்ள பங்குகளுக்குச் சமமாக அல்லது அவற்றுக்கு மேலாக உள்ள பங்குகளைக் கம்பெனியொன்று வழங்குமிடத்து, அப்பங்குகள், ஏலவேயுள்ள பங்குகளை வைத்திருப்போருக்கு கொடை முனைவு செய்தலானது ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பின் அப்பங்கு

தாரர்களின் உறவடிப்படையிலான வாக்களிப்பு, விநியோகித்தல் உரிமைகளைப் பேணக்கூடிய அத்தகைய ஒரு முறையில் கொடை முனைவு செய்யப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் கம்பெனியொன்று செய்வதற்குத் தேவைப்படுத்தப்பட்ட கொடைமுனைவொன்று நியாயமான வொரு காலப்பகுதிக்கு ஏற்றுக்கொள்ளுகைக்குக் கிடைக்கக்கூடிய தாதல் வேண்டும்.

பங்குகளை வழங்கும் விதம்.

**54.** (1) பங்குவைத்திருப்பவரின் பெயர் பங்கு இடாப்பில் பதிவீடு செய்யப்படும்போது பங்கொன்று வழங்கப்பட்டதாகக் கருதப்படும். அத்துடன் அத்தகைய பதவீடு 51 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் இணக்கத்திற்கு முன்னதாகச் செய்யப்படுதல் வேண்டும்.

(2) எந்தப் பங்கானது அதனை வைத்திருப்பவர்மீது ஒரு கம்பெனிக்கான பொறுப்பைச் சுமத்துகின்றதோ அந்தப் பங்கைக் கம்பெனியானது, வழங்குதல், அது எவ்வாளுக்கு வழங்கப்படுகிறதோ அவ்வாள் அப்பங்கை வைத்திருப்பவராக வருதற்கு எழுத்தில் சம்மதிக்கும் அத்தகைய காலம்வரை செல்லுபடியற்றதாயும் பயனெதுவும் இல்லாததாயும் இருத்தல் வேண்டும்.

### பங்குகள்மீதான அழைப்புகள்

பங்குகள் மீதான அழைப்புகள்.

**55.** (1) ஒரு பங்கின்மீது அல்லது பங்குதாரரினால் புரியப்பட்ட, பங்குடன் இணைந்த வேறேதேனும் கடப்பாட்டின்மீது அழைப் பொன்று விடுவிக்கப்படுமிடத்து, கம்பெனியானது, பத்து வேலை நாட்களினுள் பின்வருவனபற்றி விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் பதிவாளருக்கு அறிவித்தல் கொடுத்தல் வேண்டும் :—

(அ) 58 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறாக அழைப்பின்தொகை அல்லது அதன் பெறுமதி ; அத்துடன்

(ஆ) அழைப்பை விடுத்ததனையடுத்து கம்பெனியின் கூறப்பட்ட மூலதனத் தொகை.

(2) கம்பெனியொன்று (1) ஆம் உட்பிரிவின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுமிடத்து —

(அ) கம்பெனியானது தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப் பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும் ; அத்துடன்

(ஆ) தவறுகையிலுள்ளவரான கம்பெனியின் ஒவ்வோர் அலுவலரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பண மொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

**பங்குதாரர்களுக்கு விநியோகித்தல்**

**56.** (1) எவரேனும் பங்குதாரருக்குக் கம்பெனியொன்றினால் விநியோகித்தலொன்று, செய்யப்படுமுன்னர், அத்தகைய விநியோ கித்தல் — *விநியோகித் தல்கள்.*

(அ) இரண்டாம் உட்பிரிவின்கீழ் சபையினால் அதிகார மளிக்கப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) கம்பெனியின் அமைப்பகவிதிகள் வேறுவகையாக ஏற்பாடு செய்தாலொழிய, சாதாரணத் தீர்மானித்தின் மூலம் பங்குதாரர்களினால் அங்கீகரிக்கப்படல் வேண் டும்.

(2) கம்பெனியொன்றன் சபையானது, கம்பெனியானது, விநி யோகித்தல் செய்தபின்னர் உடனடியாகக் கடனிறுக்கவகையுள்ள மைப் பரீட்சிப்பைத் திருப்திப்படுத்துமெனத் திருப்திப்பட்ட விடத்து, தோதானதென அது கருதுகின்றவாறான அத்தகைய நேரத்திலும் அத்தகைய தொகையிலும் விநியோகித்தலொன்றை அதிகாரமளிக்கலாம். ஆயின், அத்தகைய சபை, கணக்காய்வாளர் களிடமிருந்து கடனிறுக்க வகையுள்ளமை பற்றிய சான்றிதழொன் றைப் பெறுதல் வேண்டும்.

(3) விநியோகித்தலொன்றுக்குச் சாதகமாக வாக்களிக்கின்ற பணிப்பாளர்கள், தமது அபிப்பிராயத்தில் விநியோகித்தலானது செய்யப்பட்ட பின்னர் உடனடியாகக் கம்பெனியானது கடனிறுக்க வகையுள்ளமைப் பரீட்சிப்பைத் திருப்திப்படுத்துமெனக் கூறிச் சான்றிதழொன்றில் ஒப்பமிடுதல் வேண்டும்.

(4) இப்பிரிவின் நோக்கங்களுக்காகக் கடனிறுக்கவகையுள்ளமைப் பரீட்சிப்பை ஏற்புடையதாக்குவதில் “தனிசுகள்” என்பது, எந்தப் பங்குகள் தொடர்பில் விநியோகித்தலானது செய்யப்படுகின்றதோ அந்தப் பங்குகளுக்கு மேலாகவுள்ள பங்குகளின் மீது நிலையான முந்துரிமை விபரத்திரட்டுகளை, நிலையான முந்துரிமை விபரத்திட்டு விநியோகித்தல்களை அதிகாரமளிப்பதற்குச் சபைக்குள்ள தத்துவத்துக்கமையவுள்ளதெனக் கூறப்பட்ட விடத்துத்தவிர, உள்ளடக்கும்.

(5) இரண்டாம் உட்பிரிவின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகத்தவறுகின்ற பணிப்பாளரொருவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

கடனிறுக்க வகையுடைமைப் பரீட்சிப்பு.

**57.** (1) கம்பெனியொன்று –

(அ) வழமையான தொழில் நெறிமுறையின்போது போமதியாக வருகின்ற அதன் தனிசுகளை செலுத்துவதற்கு அதனால் இயலக்கூடியதாக இருந்தால் ; அத்துடன்

(ஆ) கம்பெனியினது சொத்துக்களின் பெறுமதியானது –

(i) அதன் பொறுப்புக்களின் பெறுமதியைவிட அதிகமானதாக இருந்தால் ; அத்துடன்

(ii) கம்பெனியின் கூறப்பட்ட மூலதனத்தைவிட அதிகாரமானதாக இருந்தால்,

கடனிறுக்க வகையுடைமைப் பரீட்சிப்பைத் திருப்திப்படுத்திவிட்டதாகக் கருதப்படல் வேண்டும்.

(2) கம்பெனியொன்று கடனிறுக்கவகையுடைமைப் பரீட்சிப்பை திருப்திப்படுகின்றதா என்பது பற்றித் தீர்மானிக்கையில் சபையானது –

(அ) இச்சட்டத்தின் 151 ஆம் பிரிவுடன் இசைவாகத் தயாரிக்கப்பட்ட கம்பெனியின் மிக அண்மைய நிதிக் கூற்றுக்களைக் கவனத்திற்கெடுக்க வேண்டும் ;

(ஆ) கம்பெனியின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் பெறுமதிகளைப் பாதிக்குமென பணிப்பாளர்கள் தெரிந்திருக்கின்ற அல்லது தெரிந்திருக்கவேண்டிய சந்தர்ப்ப சூழ்நிலைகளைக் கவனத்திற்கெடுக்க வேண்டும் ;

(இ) சொத்துக்கள் பொறுப்புக்களின் நியாயமான பெறுமதி மதிப்பீடொன்றை அல்லது பெறுமதியை மதிப்பீடு செய்கின்ற வேறு முறையைக் கவனத்திற்கெடுக்கலாம்.

**58.** (1) ஐம்பத்தொன்பதாம் பிரிவுக்கு அமைவாக, கம்பெனியொன்று தொடர்பில் கூறப்பட்ட மூலதனம் என்பது,– கூறப்பட்ட மூலதனம்.

(அ) பங்குகள் வழங்கப்படுதல் தொடர்பில் ; அத்துடன்

(ஆ) பங்குகள் மீதான அழைப்புகள் தொடர்பில்,

கம்பெனியால் பெறப்பட்ட அல்லது கம்பெனிக்கு வருமதியான அத்துடன் செலுத்தப்படற்பாலதான எல்லாத் தொகைகளினதும் கூட்டு மொத்தத் தொகை எனப் பொருள்படும்.

(2) காசு, தவிர்ந்த வேறு பிரதிபயனுக்காகப் பங்கொன்று வழங்கப்படுகின்றவிடத்து, சபை, (1) ஆம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, அத்தகைய பிரதிபயனின் காசுப் பெறுமதியைத் தீர்மானித்தல் வேண்டும்.

(3) அழைப்புகள் மீது கொடுப்பனவு செய்வதற்கான கடப்பாடொன்று தவிர்ந்த வேறு கடப்பாடு ஒன்று பங்கொன்றுடன் இணைக்கப்பட்டிருக்கின்றவிடத்தும், அத்தகைய கடப்பாடு பங்குதாரரினால் நிறைவேற்றப்படுகின்றவிடத்தும் –

(அ) சபை, அந்நிறைவேற்றுகை தொடர்பான காசுப் பெறுமதி எதுவும் இருப்பின், அக்காசுப் பெறுமதியைத் தீர்மானித்தல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) அந்நிறைவேற்றுகையின் காசுப் பெறுமதியானது, (1)ஆம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, பங்குமீது செலுத்தப்பட்ட அழைப்பொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

*கூறப்பட்ட மூலதனத்தைக் குறைத்தல்.*

**59.** (1) மூன்றாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, கம்பெனியொன்று, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க அது பொருத்தமானதெனக் கருதுகின்றவாறான அத்தகைய தொகைக்கு அதன் கூறப்பட்ட மூலதனத்தை சிறப்புத் தீர்மானத்தின் மூலம் குறைக்கலாம்.

(2) கம்பெனியொன்றினது கூறப்பட்ட மூலதனத்தின் உத்தேசிக்கப்பட்ட குறைப்பொன்று பற்றிய பகிரங்க அறிவித்தலானது, கூறப்பட்ட மூலதனத்தைக் குறைப்பதற்கான தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு முன் அறுபது நாட்களுக்குக் குறையாமல், கொடுக்கப்படுதல் வேண்டும்.

(3) கம்பெனியொன்று, கம்பெனியின் கடன்தருநரின் முற்சம்மதம் இன்றி அல்லது கூறப்பட்ட மூலதனத்தைக் குறைக்கும்போது குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகள் திருப்திப்படுத்தப்பட்டிருந்தால் ஒழிய, குறித்துரைக்கப்பட்ட ஒரு தொகைக்குக் கீழே அதன் கூறப்பட்ட மூலதனத்தைக் குறைக்கமாட்டாதென கடன்தருநர் ஒருவருடன் எழுத்தில் உடன்பட்டுக்கொள்ளலாம். அத்தகைய ஏதேனும் உடன்படிக்கையை மீறி, கூறப்பட்ட மூலதனத்தைக் குறைப்பதற்காக நிறைவேற்றப்படும் தீர்மானம் ஒன்று, செல்லுபடியற்றதாதல் வேண்டும் என்பதுடன் பயன் எதுவும் உடையதாதலும் ஆகாது.

(4) (அ) அறுபத்தெட்டாம் பிரிவின்கீழ், பங்குதாரரின் விருப்பத் தெரிவின்பேரில் அல்லது 69 ஆம் பிரிவின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட ஒரு தேதியன்று பங்கொன்று மீட்கப்படுகின்றவிடத்து ; அல்லது

(ஆ) தொண்ணூற்றி ஐந்தாம் பிரிவின்கீழ் பங்கொன்றைக் கம்பெனி கொள்வனவு செய்கின்றவிடத்து;

அத்துடன் மீட்பின் அல்லது கொள்வனவின் விளைவாக, இவ்வுட்பிரிவு இல்லாது விட்டால், கடனிறுக்க வகையுடைமைப் பரீட்சை

யைக் கம்பெனி திருப்தியளிக்கத் தவறும் எனச் சபை திருப்திப் படுகின்றவிடத்து ;

(இ) சபையானது, கணக்காய்வாளர்களின் கடனிறுக்க வகையுள்ளமைச் சான்றிதழைப் பெற்றுக் கொண்டபின்னர், கம்பெனி எத்தொகையினால் கடனிறுக்க வகையுடைமைப் பரீட்சையைத் திருப்திப்படுத்தத்தவறுமோ, அத்தொகையினால் கம்பெனியின் கூறப்பட்ட மூலதனம் குறைக்கப்படுதல் வேண்டுமெனத் தீர்மானித்தல் வேண்டும் ; அத்துடன்

(ஈ) சபையின் தீர்மானம், இப்பிரிவின் (1) இல் இருந்து (3) வரையிலான உட்பிரிவுகளில் உள்ள ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், பயனுடையனவாதல் வேண்டும்.

(5) அதன் கூறப்பட்ட மூலதனத்தைக் குறைத்துள்ள கம்பெனியொன்று, அத்தகைய குறைப்புச் செய்யப்பட்ட நாளிலிருந்து பத்து வேலை நாட்களுக்குள்ளாக, குறைக்கப்பட்ட தொகையையும் அதன் கூறப்பட்ட மூலதனத்தின் குறைக்கப்பட்ட தொகையையும் குறித்துரைக்கின்றதான குறைப்புப் பற்றிய அறிவித்தலைப் பதிவாளருக்குக் கொடுத்தல் வேண்டும்.

(6) இரண்டாம் அல்லது (5) ஆம் உட்பிரிவின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்குக் கம்பெனியொன்று தவறுகின்றவிடத்து —

(அ) கம்பெனியானது தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும் ; அத்துடன்

(ஆ) தவறுகையில் உள்ளவரான கம்பெனியின் அலுவலர் ஒவ்வொருவரும், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

பங்கிலாபங்கள்.

**60.** (1) பங்கிலாபமொன்றானது, கம்பெனி ஒன்று அதன் சொந்தப் பங்குகளைக் கொள்ளலோ அல்லது கம்பெனியினால் பங்குகள் மீட்கப்படுதலோ அல்லாமல், அக்கம்பெனியின் இலாபங்களிலிருந்து செய்யப்படும் பகிர்ந்தளிப்பொன்றாகும்.

(2) கம்பெனியொன்றின் சபையானது –

(அ) கம்பெனியின் அமைப்பகவிதிகளின்கீழ் பங்குகளோடு இணைந்துள்ள ஏதேனும் பொறுப்புக்கு விகிதாசாரமாக பங்கிலாபத் தொகை குறைக்கப்பட்டவிடத்துத் தவிர ; அல்லது

(ஆ) வேறுவகையாகக் கொடுபடற்பாலதான பங்கிலாபத்திலும் குறைந்த பங்கிலாபத்தினை அல்லது பங்கிலாபம் எதனையும் பெறாதிருப்பதற்கு பங்குதாரர் எழுத்தில் உடன்பட்டுக்கொண்டுள்ளவிடத்துத்தவிர,

வகுப்பொன்றிலுள்ள சில பங்குகள் தொடர்பில், ஆனால், அவ் வகுப்பிலுள்ள ஏனைய பங்குகள் தொடர்பில் அல்லாமல், அவ் வகுப்பில் உள்ள ஏனைய பங்குகளைக் காட்டிலும், அவ்வகுப்பிலுள்ள ஒருசில பங்குகள் தொடர்பில் கூடுதலான தொகையிலான பங்கிலாபமொன்றுக்கு அதிகாரமளித்தல் ஆகாது.

பகிர்ந்தளிப்புத் தொகைகளை அறிவிடுதல்.

**61.** (1) பகிர்ந்தளிப்புச் செய்யப்பட்டதை உடனடுத்துப் பின்னர் கடனிறுக்கவகையுடைமைப் பரீட்சையைக் கம்பெனியொன்று திருப்திப்படுத்தாத ஒரு நேரத்தில், பங்குதாரர் ஒருவருக்குச் செய்யப்பட்ட பகிர்ந்தளிப்புத் தொகையானது –

(அ) பங்குதாரர் அப்பகிர்ந்தளிப்புத் தொகையை நல்லெண்ணத்துடனும், கடனிறுக்கவகையுள்ளமைப் பரீட்சையைத் திருப்திப்படுத்துவதற்குக் கம்பெனி தவறியது பற்றி அறியாமலும், பெற்றிருந்தாலொழிய ;

(ஆ) பகிர்ந்தளிப்பின் வலிதுடைமைமீது நம்பிக்கை கொண்டு தமது நிலையைப் பங்குதாரர் மாற்றிக் கொண்டு இருந்தாலொழிய ; அத்துடன்

(இ) சந்தர்ப்ப சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு பார்க்கையில் மீள் கொடுப்பனவை முழுமையாகச் செய்யும்படி அல்லது ஒன்றுமே கொடுக்காது விடும் படி தேவைப்படுத்துவது நியாயமற்றதாக இருந்தா லொழிய,

பங்குதாரரிடமிருந்து கம்பெனியால் அறவிடப்படலாம்.

(2) ஓராம் உட்பிரிவானது எப்பகிர்ந்தளிப்பொன்றுக்கு ஏற்புடையதாகின்றதோ, அப்பகிர்ந்தளிப்பு தொடர்பில் 56 ஆம் பிரிவில் தரப்பட்டுள்ள நடவடிக்கைமுறை பின்பற்றப்படாமலிருக் கின்றவிடத்து அல்லது சான்றிதழ் ஒப்பமிடப்பட்ட நேரத்தில் கடனிறுக்கவகையுடைமைப் பரீட்சையைக் கம்பெனி திருப்திப்படுத் தும் என நம்புவதற்கு நியாயமான ஏதுக்கள் இருக்காதவிடத்து, விடயத்துக்கேற்றவாறு,—

(அ) நடவடிக்கைமுறை பின்பற்றப்படுவதை உறுதி செய்வ தற்கு நியாயமான நடபடிகளை எடுக்கத்தவறிய ; அல்லது

(ஆ) சான்றிதழில் ஒப்பமிட்ட,

பணிப்பாளர் ஒவ்வொருவரும், பங்குதாரர்களிடமிருந்து எவ்வளவு பகிர்ந்தளிப்புத் தொகையை அறவிடுவதற்குக் கம்பெனி இயலாதிருக்கின்றதோ, அவ்வளவு பகிர்ந்தளிப்புத் தொகையைக் கம்பெனிக்கு மீளச் செலுத்துவதற்கு, தனிப்பட்ட முறையில் ஆளாதல் வேண்டும்.

(3) இப்பிரிவின்கீழ் பணிப்பாளர் ஒருவருக்கு அல்லது பங்கு தாரர் ஒருவருக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட வழக்கொன்றில், குறைவான தொகையொன்றைக்கொண்ட பகிர்ந்தளிப்பொன்றைச் செய்வதன் மூலம் கம்பெனி கடனிறுக்க வகையுடைமைப் பரீட்சை யைத் திருப்திப்படுத்தியிருக்க முடியுமென நீதிமன்றம் திருப்திப்படு கின்றவிடத்து, நீதிமன்றம் சரியாகச் செய்யப்பட்டிருக்கக்கூடிய ஏதேனும் பகிர்ந்தளிப்பின் பெறுமதிக்குச் சமமான —

(அ) தொகையொன்றை வைத்திருப்பதற்குப் பங்குதாரரை அனுமதிக்கலாம் ; அல்லது

(ஆ) தொகை தொடர்பில் பொறுப்பிலிருந்து பணிப்பாளரை விடுவிக்கலாம்.

பங்குதாரரின் பொறுப்பைக் குறைத்தல் பகிர்ந்தளிப் பொன்றாதல்.

**62.** (1) கம்பெனியொன்று விடயத்துக்கேற்றவாறு, மாற்றலுக்கு, கொள்ளலுக்கு அல்லது மீட்புக்குமுன் வைத்திருக்கப்பட்ட பங்கொன்று தொடர்பில் பங்குதாரரொருவருக்கு கம்பெனிக்குள்ள பொறுப்பை இல்லாதாக்குகின்ற முறையில் அல்லது குறைக்கின்ற விதத்தில் —

(அ) அதன் அமைப்பு விதிகளை மாற்றுகின்றவிடத்து ; அல்லது

(ஆ) அதனால் வழங்கப்பட்ட பங்குகளைக் கொள்ளுகின்றவிடத்து அல்லது 67 ஆம் பிரிவின்கீழ் பங்குகளை மீட்கின்றவிடத்து,

61 ஆம் பிரிவின் (1) ஆம் மற்றும் (3) ஆம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, பொறுப்பு இல்லாதாக்கப்பட்டதானது அல்லது குறைக்கப்பட்டதானது, பொறுப்பானது எப்பகிர்ந்தளிப்புத் தொகையினால் குறைக்கப்பட்டதோ, அப்பகிர்ந்தளிப்புத் தொகையொன்றென்றவாறு எடுத்துக்கொள்ளப்படல் வேண்டும்.

(2) அக்கம்பெனியுடன் ஒன்றிணைந்த கம்பெனி ஒன்றின் பங்குதாரர் ஒருவருக்குள்ள பொறுப்பானது, ஒன்றிணைப்புக்கு முன்னர் வைத்திருக்கப்பட்ட பங்கொன்று தொடர்பில் —

(அ) எப்பங்காக அல்லது பங்குகளாக அப்பங்கு மாற்றப்பட்டிருக்கின்றதோ, அப்பங்கொன்று அல்லது பங்குகள் தொடர்பில் அவ்வொன்றிணைக்கப்பட்ட கம்பெனிக்கு அப்பங்குதாரருக்குள்ள பொறுப்பை விடக்கூடுதலானதாக இருக்கின்றவிடத்து ; அல்லது

(ஆ) ஒன்றிணைப்பில் அப்பங்கு இல்லாதாக்கப்பட்டதன் மூலம் இல்லாதாக்கப்பட்டிருக்கின்றவிடத்து,

ஒன்றிணைப்பினால் பயனுறுத்தப்பட்ட பொறுப்புக்குறைப்பானது 61 ஆம் பிரிவின் (1) மற்றும் (3) ஆம் உட்பிரிவுகளின் நோக்கங்களுக்காக அப்பொறுப்பானது எத்தொகையினால் குறைக்கப்பட்டதோ, அத்தொகைக்கு அப்பங்குதாரருக்கு ஒன்றிணைக்கப்பட்ட கம்பெனியினால் செய்யப்பட்ட பகிர்ந்தளிப்பு ஒன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

### பங்குகளை மீள் கொள்வனவு செய்தல்

*கம்பெனி அதன் சொந்தப் பங்குகளைக் கொள்ளுதல் செய்யலாம் அல்லது மீட்கலாம்.*

**63.** (1) கம்பெனியொன்று அதன் சொந்தப் பங்குகளில் எவற்றையும் —

(அ) 64 ஆம் பிரிவின்கீழ் அல்லது 67 ஆம் பிரிவின்கீழ் ; அல்லது

(ஆ) கம்பெனியானது தனியார் கம்பெனியொன்றாக இருந்தால், 31 ஆம் பிரிவின்கீழ் எல்லாப் பங்குதாரர்களின் உடன்பாட்டுடன் அல்லது ஒருப்பாட்டுடன் ; அல்லது

(இ) இச்சட்டத்தின்கீழ் நீதிமன்றத்தினால் ஆக்கப்பட்ட கட்டளையொன்றுக்கு இணங்க,

ஆனால் வேறு வகையிலல்லாமல், கொள்வனவு செய்யலாம் அல்லது வேறு வகையில் கொள்ளலாம்.

(2) கம்பெனியொன்று, 66 இலிருந்து 69 வரையிலான ஏற்பாடுகளுக்கிணங்க, ஆனால் வேறு வகையிலல்லாமல், எப்பங்கொன்றானது மீட்கப்படற்பாலதாக இருக்கின்றதோ, அப்பங்கை மீட்கலாம்.

(3) கம்பெனியொன்றினால் கொள்ளப்பட்ட அல்லது மீட்கப்பட்ட பங்கொன்று, விடயத்துக்கேற்றவாறு, அத்தகைய கொள்ளலின் அல்லது மீட்பின்மேல் உடனடியாக இல்லாதாக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) கம்பெனியொன்றினால் பங்குகள் கொள்ளப்பட்டதை அல்லது மீட்கப்பட்டதைத் தொடர்ந்து உடனடியாக, கம்பெனியானது, விடயத்துக்கேற்றவாறு அவ்வாறு கொள்ளப்பட்ட அல்லது மீட்கப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை மற்றும் வகுப்பு பற்றி பதிவாளருக்கு அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.

(5) நாலாம் உட்பிரிவின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்குக் கம்பெனியொன்று தவறுகின்றவிடத்து —

(அ) கம்பெனியானது தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்துக்கு ஆளாதலும் வேண்டும் ; அத்துடன்

(ஆ) தவறுகையில் உள்ளவரான கம்பெனியின் அலுவலர் ஒவ்வொருவரும், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்துக்கு ஆளாதலும் வேண்டும்.

சொந்தப் பங்குகளை கொள்வனவு செய்தல்.

**64.** (1) கம்பெனியொன்று அத்தகைய கம்பெனியின் அமைப்பக விதிகள் அவ்வாறு செய்வதற்கு ஏற்பாடு செய்தால், சபையின் அங்கீகாரத்துடன், அதன் சொந்தப் பங்குகளைக் கொள்வனவு செய்வதற்கு அல்லது வேறு வகையில் கொள்வதற்கு உடன்படலாம்.

(2) கம்பெனியொன்று அதன் சொந்தப் பங்குகளைக் கொள்வனவு செய்ய கொடைமுனைவு செய்வதற்கு அல்லது உடன்படிக்கை செய்வதற்கு முன்னதாக அத்தகைய கம்பெனியின் சபையானது —

(அ) அக்கொள்ளலானது கம்பெனியின் நலனுக்கானதாக இருக்கின்றது எனவும் ;

(ஆ) கொடைமுனைவின் அல்லது உடன்படிக்கையின் நியதிகளும், பங்குகளுக்கு செலுத்தப்படவேண்டிய பிரதிபயனும் கம்பெனியின் கணக்காய்வாளரைப் பொறுத்தவரை ஒரு பெறுமதியுடையதாக இருக்கின்றன எனவும் ; அத்துடன்

(இ) பங்குகள் பெறுமதியை மதிப்பீடு செய்வதற்கு முக்கியமானதாக இருக்கின்றதும் பங்குதாரர்களுக்கு வெளிப்படாத காரணத்தால் பங்குகளுக்கு கொடை முனைவு செய்யப்பட்ட கொடைமுனைவொன்றின் பிரதிபலனின் நியதிகள் கொடைமுனைவை ஏற்றுக் கொள்ளுகின்ற பங்குதாரர்களுக்கு நியாயமற்றதாக இருக்கின்றதுமான அத்தகவல் எதுவும் அதற்குத் தெரியாது எனவும்,

தீர்மானம் எடுத்தல் வேண்டும்.

(3) கம்பெனியானது, —

(அ) கொடைமுனைவு பூரணமாக ஏற்கப்பட்டால் எல்லாப் பங்குதாரர்களினதும் அவரவருக்குரிய வாக்களிக்கும் மற்றும் பகிர்ந்தளிக்கும் உரிமைகளைப் பாதிக்காதிருக்கின்ற ஒருமுறை தவிர்ந்த வேறொரு முறையில் அப்பங்குகளைக் கொள்வதற்கு கொடைமுனைவு ஒன்றைச் செய்யுமுன்னதாக ; அல்லது

(ஆ) எல்லாப் பங்குதாரர்களினதும் அவரவருக்குரிய வாக்களிக்கும் மற்றும் பகிர்ந்தளிக்கும் உரிமைகளை பாதிக்காது விடுகின்ற முறை தவிர்ந்த வேறொரு விதத்தில் பங்குகளைக் கொள்வதற்கு உடன்படிக்கை செய்வதற்கு முன்னதாக,

சபையானது, விடயத்துக்கேற்றவாறு கொடைமுனைவைச் செய்வது அல்லது உடன்படிக்கை செய்துகொள்வது எப்பங்குதாரர்களுக்குக் கொடைமுனைவு செய்யப்படவில்லையோ அல்லது எப்பங்குதாரர்களுடன் உடன்படிக்கை எதுவும் செய்யப்படவில்லையோ அப்பங்குதார்களுக்கு நீதியானதா என்பது பற்றித் தீர்மானம் எடுத்தல் வேண்டும்.

பங்குகளைக் கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தத்தை வலியுறுத்துதல்.

**65.** (1) அதன் பங்குகள் கம்பெனியினால் கொள்ளப்படுவதற்கு ஏற்பாடு செய்கின்ற கம்பெனியொன்றுடன் செய்துகொள்ளப்படும் ஒப்பந்தமானது, ஒப்பந்தத்தை நிறைவேற்றிய பின்னர், கடனிறுக்க வகையுடைமைப் பரீட்சையைத் திருப்திப்படுத்தக் கம்பெனி தவறும் அளவுக்குத்தவிர அக்கம்பெனிக்கெதிராகக் குறிப்பாக வலியுறுத்தப்படற்பாலதாதல் வேண்டும். அத்துடன் ஒப்பந்தத்தை நிறைவேற்றிய பின்னர் கடனிறுக்க வகையுடைமைப் பரீட்சையைத் திருப்திப்படுத்துவதற்கு அதனால் இயலாமல் போகும் என்பதை எண்பிக்கும் பொறுப்பு கம்பெனியின் மேலாதல் வேண்டும்.

(2) கம்பெனியொன்று (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஒப்பந்தம் ஒன்றை முழுமையாக நிறைவேற்றும் வரை, ஒப்பந்தத்துக்கான மற்றைய திறத்தவர், அவ்வாறு செய்வதற்கு கம்பெனி சட்டமுறையாக இயலக்கூடியதாக வந்ததும் வெகுவிரைவாக கொடுப்பனவு செய்யப்படுவதற்கு உரித்துடையவரான உரிமைக்

கோரிக்கையாளர் ஒருவரென்ற அந்தஸ்தை அல்லது கம்பெனியானது ஒழிக்கப்படும் சந்தர்ப்பத்தில் கடன் தருநர்களின் கீழமைந்தவராக ஆனால், மற்றப் பங்குதாரர்களைவிட முன்னுரிமை கொண்டவராகக் கணிக்கப்படுவதற்கான அந்தஸ்தைக் கொண்டவராதல் வேண்டும்.

**பங்குகளை மீளல்**

*"மீளப்படற் பாலது" என்பதன் பொருள்.*

**66.** இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக,—

(அ) கம்பெனியானது விருப்பத்தெரிவின்பேரில் ;

(ஆ) பங்கு வைத்திருப்பவரின் விருப்புத்தெரிவின் பேரில் ; அல்லது

(இ) அமைப்பகவிதிகளில் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று,

குறித்துரைக்கப்பட்ட அல்லது வாய்ப்பாடொன்றைக் குறிப்பீடு செய்வதன் மூலம் கணக்கிடப்படவேண்டிய அல்லது கம்பெனியுடன் தொடர்பற்ற அல்லது கம்பெனியில் அக்கறையற்ற பொருத்தமான தகைமைபெற்ற ஆளொருவரினால் நிர்ணயிக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட பிரதிபயனொன்றுக்காக, கம்பெனியால் அப்பங்கு மீளப்படுவதற்கு கம்பெனியின் அமைப்பகவிதிகள் ஏற்பாட்டைச் செய்யுமாயின் அப்பங்கு மீளப்படற்பாலதாகும்.

*கம்பெனியின் விருப்புத் தெரிவின் பேரில் மீளல்.*

**67.** (1) மீளலானது கம்பெனியின் நலனுக்கானதெனச் சபை முன்னரே தீர்மானம் செய்திருந்தால், கம்பெனியின் விருப்புத் தெரிவின்பேரில் மீளப்படற்பாலதான பங்கொன்றை மீளுவதற்கான விருப்புத்தெரிவொன்றை கம்பெனியொன்று பிரயோகிக்கலாம்.

(2) கம்பெனியின் விருப்புத்தெரிவின்பேரில் பங்கொன்றை மீளுவதானது —

(அ) அறுபத்திநாலாம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக பங்கானது கம்பெனியினால் கொள்ளப்படுதல் ஆகவும் ; அத்துடன்

(ஆ) ஐம்பத்தாறாம் பிரிவின் நோக்கங்களுக்காக பகிர்ந்தளிப்பொன்றாகவும்,

கருதப்படுதல் வேண்டும்.

பங்குதாரின் விருப்புத் தெரிவின் பேரில் மீளல்.

**68.** (1) பங்கை வைத்திருப்பவரின் விருப்புத்தெரிவின்பேரில் பங்கொன்று மீளப்படற்பாலதாக இருக்கின்றவிடத்தும், பங்கை வைத்திருப்பவர் பங்கை மீளுமாறு கம்பெனியைத் தேவைப்படுத்துகின்ற முறையான அறிவித்தலைக் கம்பெனிக்குக் கொடுக்கின்றவிடத்தும் —

(அ) கம்பெனியானது அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று அல்லது தேதியெதுவும் குறித்துரைக்கப்பட்டிராவிட்டால், அறிவித்தல் கிடைக்கப்பெற்ற தேதியன்று பங்கை மீளுதல் வேண்டும் ;

(ஆ) பங்கானது மீளப்பட்ட தேதியன்று அது இல்லாதாக்கப்பட்டு விட்டதாகக் கருதப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(இ) முந்திய பங்குதாரர் மீளுதலின்மீது செலுத்தப்படற்பாலதான பணத்தொகைக்கு மீளப்பட்ட தேதியிலிருந்து கம்பெனியின் பிணைப்பொறுப்பில்லாத கடன்தருநர் ஒருவராக இருத்தல் வேண்டும்.

(2) இப்பிரிவின் கீழான மீளுகையொன்று, 56 ஆம் பிரிவின் நோக்கங்களுக்காக பகிர்ந்தளிப்பொன்றாக அமைத்தலாகாது ; ஆனால் 61 ஆம் பிரிவின் (1) மற்றும் (3) ஆம் உட்பிரிவுகளின் நோக்கங்களுக்காக பகிர்ந்தளிப்பொன்றாக கருதப்படுதல் வேண்டும்.

நிர்ணயிக்கப்பட்ட தேதியன்று மீளுதல்.

**69.** (1) குறித்துரைக்கப்பட்ட தேதியன்று பங்கொன்றானது மீளப்படற்பாலதாக இருக்கின்றவிடத்து —

(அ) கம்பெனியானது அத்தேதியன்று பங்கை மீளுதல் வேண்டும் ;

(ஆ) பங்கானது அத்தேதியன்று இல்லாதாக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(இ) முந்திய பங்குதாரர் மீளுகையின் மீது செலுத்தப்படற்பாலதான பணத்தொகைக்கு அத்தேதியிலிருந்து, கம்பெனியின் பிணைப்பொறுப்பில்லாத கடன்தருநர் ஒருவராகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) இப்பிரிவின் கீழான மீளுகையொன்று, 56 ஆம்பிரிவின் நோக்கங்களுக்காக பகிர்ந்தளிப்பொன்றாக அமைதலாகாது, ஆனால் 61 ஆம் பிரிவின் (1) மற்றும் (3) ஆம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக பகிர்ந்தளிப்பொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

**பங்குகளைக் கொள்வனவு செய்தல் தொடர்பிலான நிதியுதவி**

*நிதியுதவி அளிப்பதன் மீதான மட்டுப்பாடுகள்.*

**70.** (1) கம்பெனியொன்று, இப்பிரிவுக்கு இணங்கத்தவிர அதன் சொந்தப் பங்குகளைக் கொள்ளல் செய்யும் நோக்கத்துக்காக அல்லது அது தொடர்பாக நேரடியாக அல்லது மறைமுகமாக நிதியுதவி அளித்தலாகாது.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், கம்பெனியொன்று, —

(அ) அத்தகைய நிதியுதவியை அளிப்பது கம்பெனியின் நலனுக்காக இருக்குமென ;

(ஆ) நிதியுதவியானது எந்நியதி நிபந்தனைகளின்மீது அளிக்கப்படுகிறதோ, அந்நியதி, நிபந்தனைகள், கம்பெனிக்கும், அந்நிதியுதவியைப் பெறாத பங்குதாரர்கள் எவர்களுக்கும் நேரியவையாகவும் நியாயமானவையாகவும் இருக்கின்றனவென ; அத்துடன்

(இ) நிதியுதவியை அளித்த பின்னர் உடனடியாகக் கம்பெனியானது, கடனிறுக்கவகையுடைமைப் பரீட்சையைத் திருப்திப்படுத்துமென,

சபை முன்னரே தீர்மானம் செய்திருந்தால், அதன் சொந்தப் பங்குகளைக் கொள்ளல் செய்யும் நோக்கத்துக்காக அல்லது அது தொடர்பாக நிதியுதவியளிக்கலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் நிதியுதவியின் தொகை, கம்பெனியினால் கொடுக்கப்பட்டதும், இன்னமும் வெளிநிலுவையாக உள்ளதுமான ஏதேனும் வேறு நிதியுதவியுடன் சேர்த்துக் கம்பெனியின் கூறப்பட்ட மூலதனத்தின் பத்து சதவீதத்தை விஞ்சுகின்றவிடத்து, கம்பெனியானது அதன் கணக்காய்வாளர் அல்லது அதற்குக் கணக்காய்வாளர் ஒருவர் இல்லாமலிருந்தால், அதன் கணக்காய்வாளராகச் செயலாற்று வதற்குத் தகைமைபெற்ற ஆள் ஒருவர் –

(அ) அவர் கம்பெனியினது அலுவல்களின் நிலைமை பற்றி விசாரணை செய்திருக்கின்றார் எனவும் ; அத்துடன்

(ஆ) கம்பெனியானது, நிதியுதவியளித்த பின்னர் உடனடி யாகக் கடனிறுக்க வகையுள்ளமைப் பரீட்சையைத் திருப்திப்படுத்தும் என்ற சபையின் அபிப்பிராயமா னது, எல்லாச் சூழ்நிலைகளிலும் நியாயமானதல்ல என்பதைக் காட்டுவதற்கான எவ்விடயம் பற்றியும் அவர் அறிந்திருக்கவில்லையெனவும்,

பயன்படும் சான்றிதழொன்றை அவரிடமிருந்து முதலில் பெற்றுக் கொண்டாலொழிய நிதியுதவியளித்தலாகாது.

(4) இப்பிரிவின்கீழ் நிதியுதவி அளிப்பதானது 56 ஆம் பிரிவின் நோக்கங்களுக்காக பகிர்ந்தளிப்பொன்றாக அமைதல் ஆகாது.

(5) கம்பெனியொன்று இப்பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாகச் செயலாற்றுகின்றவிடத்து, தவறுகையில் உள்ளவரான கம்பெனி யின் அலுவலர் ஒவ்வொருவரும், தவறொன்றுக்குக் குற்றவாளி யாதல் வேண்டும் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் பத்து இலட்சம் ரூபாவை விஞ்சாத ஒரு குற்றப்பணத்துக்கு அல்லது ஐந்தாண்டுகளை விஞ்சாத ஒரு காலப்பகுதிக்கான மறியற் றண்டனைக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை அத் துடன் குற்றப்பணம் ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

70 ஆம் பிரிவினால் தடை செய்யப்படாத கொடுக்கல் வாங்கல்கள்.

**71.** (1) எழுபதாம் பிரிவின் ஏற்பாடுகள் –

(அ) நிதியுதவி அளிப்பதற்கான ஒரு கம்பெனியின் பிரதான நோக்கமானது, அக்கொள்ளலின் நோக்கத்துக்காக

அதை அளிப்பதாக இல்லாதிருந்தால் அல்லது நிதியுதவி வழங்குதலானது கம்பெனியின் வேறு ஏதேனும் பாரிய நோக்கமொன்றின் இடைநேர் விளைவான பகுதியொன்றாகவிருந்தால் ; அத்துடன்

(ஆ) நிதியுதவியானது அக்கம்பெனியின் நலன்களைக் கருத்தில் கொண்டு நல்லெண்ணத்துடன் கொடுக்கப்பட்டதாக இருந்தால்,

அக்கம்பெனி அதன் சொந்தப் பங்குகளைக் கொள்ளும் நோக்கத்துக்காக அல்லது அக்கொள்ளல் தொடர்பில் அதனால் நிதியுதவி அளிக்கப்படுவதற்கு ஏற்புடையதாதலாகாது.

(2) எழுபதாம் பிரிவின் ஏற்பாடுகள் –

(அ) ஐம்பத்தாறாம் பிரிவன்கீழ் பங்குதாரர் ஒருவருக்கு அங்கீகரிக்கப்படும் பகிர்ந்தளிப்பொன்று ;

(ஆ) கம்பெனியினால் பங்குகள் வழங்கப்படுதல் ;

(இ) கம்பெனியினால் பங்குகள் மீளக் கொள்வனவு செய்யப்படுதல் அல்லது மீளப்படுதல் ;

(ஈ) IX ஆம் பாகத்தின் ஏற்பாடுகளின்கீழ் எய்தப்பட்ட சமரசம் ஒன்றின் நியதிகளின் பிரகாரம் அல்லது X ஆம் பாகத்தின் ஏற்பாடுகளின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட சமரசமொன்றின் அல்லது ஒழுங்கேற்பாடொன்றின் பிரகாரம் செய்யப்பட்ட எதுவும் ;

(உ) கம்பெனியொன்றின் சாதாரண தொழில்முறையானது, பணம் கடன் கொடுப்பதை உள்ளடக்குகின்றவிடத்து, அக்கம்பெனியின் சாதாரண தொழில் நெறிமுறையின் போது அக்கம்பெனியினால் பணம் கடனாகக் கொடுக்கப்படுதல் ;

(ஊ) ஒரு கம்பெனியின் நலனை முன்னிட்டு ஊழியர்கள் பங்குத் திட்டம் ஒன்றின் நோக்கங்களுக்காக அக்கம்பெனியினால் நல்லெண்ணத்துடன் வழங்கப்படும் நிதியுதவி ;

(எ) ஒரு கம்பெனியில் பங்குகளின் பயனுகர் சொத்தாண்மையைக் கொள்வதற்கு அக்கம்பெனியின் பணிப்பாளர்கள் தவிர்ந்த ஊழியர்களை இயலச் செய்யும் கருத்துடன் அவ்வாட்களுக்கு நல்லெண்ணத்துடன் அக்கம்பெனியினால் கடன்கள் வழங்கப்படுதல்.

என்பன தொடர்பில் ஏற்புடையனதாதலாகா.

**குறுக்குப் பங்கு வைத்திருப்புகள்**

*கொளிக் கம்பெனியில் துணைநிலைக் கம்பெனி பங்குகள் வைத்திருப்பதன் மீதான நிலைப்பாடு.*

**72.** (1) (இப்பிரிவில் "கொளிக் கம்பெனி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) வேறொரு கம்பெனியின் துணை நிலைக் கம்பெனியொன்றாக இருக்கின்ற கம்பெனி ஒன்று —

(அ) அக்கொளிக் கம்பெனியில் பங்குகளைக் கொள்ளுதலாகாது ;

(ஆ) கொளிக் கம்பெனியின் துணைநிலைக் கம்பெனியொன்றாக அது வருவதற்கு முன் துணைநிலைக் கம்பெனியினால் கொள்ளப்பட்ட எவையேனும் பங்குகளை கொளிக் கம்பெனியில் தொடர்ந்து வைத்திருக்கலாம், ஆனால், அப்பங்குகளுடன் சார்ந்திருக்கும் வாக்களிப்பதற்கான ஏதேனும் உரிமையை அது பிரயோகித்தல் ஆகாது.

(2) ஓராம் உட்பிரிவிலுள்ள எதுவும் —

(அ) கொளிக் கம்பெனியில் நம்பிக்கைப் பொறுப்பாளர் ஒருவராக அல்லது சட்டப்பிரதிநிதியாக மட்டும் பங்குகளை வைத்திருக்கின்றதும், அப்பங்குகளில், பயனுகர் அக்கறை எதுவும் கொண்டிராததுமான ஒரு கம்பெனிக்கு ; அல்லது

(ஆ) அதன் சாதாரண தொழில் நெறிமுறையின்போதும் அத்துடன் வழக்கமான நியதிநிபந்தனைகள் மீதும் அதனால் செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கலொன்றின் நோக்கங்களுக்காக பிணைப்பொறுப்பென்ற வகையில் கொளிக் கம்பெனியில் உள்ள பங்குகளில் அக்கறையொன்றை வைத்திருக்கும் கம்பெனிக்கு,

ஏற்புடையதாதல் ஆகாது.

(3) கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்று –

(அ) இச்சட்டம் தொடங்குவதற்கு கொளிக் கம்பெனியில் முன்னர் பங்குகள் வைத்திருக்கும் ஒருவராக வந்தவிடத்து, அது அக்கம்பெனியின் உறுப்பினரொருவராகத் தொடர்ந்து இருக்கலாம். ஆனால், அப்பங்குகள் தொடர்பில், கம்பெனியின் எவையேனும் கூட்டங்களில் வாக்களிக்கும் உரிமை எதனையும் அது கொண்டிருக்கமாட்டாது ; அத்துடன்

(ஆ) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் பயனைக் கொண்டும் இவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் பயனைக் கொண்டும், கொளிக் கம்பெனியொன்றின் உறுப்பினர் ஒருவராகத் தொடர்ந்து இருப்பதற்கு அனுமதிக்கப்படுகின்றவிடத்து, கம்பெனியிலுள்ள முழுமையாகச் செலுத்தப்பட்ட பங்குகளின் பிரித்தொதுக்குகையொன்று, கம்பெனியின் ஒதுக்கு நிதிகளை மூலதனப்படுத்தல் என்ற வகையில் செல்லுபடியுள்ள முறையில் செய்யப்படலாம் ; இப்பங்குகள் கூட வாக்களிக்கும் உரிமையைக் கொண்டிருக்கமாட்டா.

(4) ஓராம், (2) ஆம் அத்துடன் (3) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள் துணைநிலைக் கம்பெனியொன்றாக இருக்கும் கம்பெனியொன்றுக்கான நியமத்தர் ஒருவர் தொடர்பில், கம்பெனிக்கான குறிப்பீடு ஒன்று நியமத்தருக்கான குறிப்பீடு ஒன்று என்றவாறு ஏற்புடைத்தாதல் வேண்டும்.

## பங்குகளினதும் தொகுதிக் கடன்களினதும் கைமாற்றமும், உரித்துப் பற்றிய சான்றும், பிறவும்

கைமாற்றற் சாதனம் சமர்ப்பிக்கப் பட்டாலன்றி கைமாற்றல் பதிவு செய்யப்படுதலாகாது.

**73.** கம்பெனியொன்றின் அமைப்பகவிதிகளில் முரணாக உள்ளது எது எப்படியிருப்பினும், தகுந்த கைமாற்றற் சாதனமொன்று கம்பெனிக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தாலொழிய கம்பெனியின் பங்குகளின் அல்லது தொகுதிக் கடன்களின் கைமாற்றமொன்றைப் பதிவு செய்தல் கம்பெனிக்குச் சட்டமுறையானதாதலாகாது :

ஆயின், இப்பிரிவிலுள்ள எதுவும், சட்டச் செயற்பாட்டினால் கம்பெனியிலுள்ள எவையேனும் பங்குகளுக்கான அல்லது அதன் தொகுதிக் கடன்களுக்கான உரிமையை எந்த ஆளுக்குக் கைமாற்றியுள்ளதோ அந்த எவரேனும் ஆளைப் பங்குதாரராக அல்லது தொகுதிக் கடன் வைத்திருப்பவராகப் பதிவு செய்வதற்கு கம்பெனிக்குள்ள தத்துவமெதனையும் பாதித்தலாகாது.

சட்டமுறைப் பிரதிநிதியினால் கைமாற்றஞ் செய்யப்படுதல்.

**74.** கம்பெனியொன்றின் இறந்த பங்குதாரர் ஒருவரின் சட்ட முறைப் பிரதிநிதி கம்பெனியின் பங்குதாரரொருவராக அவரே இல்லாதிருக்கும் போதிலும்கூட, அச்சட்டமுறைப் பிரதிநிதியால் செய்யப்பட்ட அப்பங்குதாரருடைய பங்குகளின் அல்லது வேறு அக்கறைகளின் கைமாற்றமொன்று அச்சட்டமுறைப் பிரதிநிதி யானவர், கைமாற்றுச் சாதனத்தை எழுதி நிறைவேற்றும் நேரத்தில் அவர் அத்தகைய பங்குதாரரொருவராக இருந்தார் என்றாற் போன்று செல்லுபடியானதாதல் வேண்டும்.

கைமாற்றுபவரின் வேண்டுகோளின் பேரில் கைமாற்றத்தைப் பதிவு செய்தல்.

**75.** கம்பெனியொன்றிலுள்ள பங்கு அல்லது வேறு அக்கறை எதனையும், கைமாற்றுபவரின் விண்ணப்பத்தின்மீது பதிவுக்கான விண்ணப்பம், கைமாற்றம் பெறுபவரினால் செய்யப்பட்டது என்றாற்போன்று கம்பெனியானது, அதே முறையிலும் அதே நிபந்தனைகளுக்கு அமையவும் கைமாற்றம் பெறுபவரின் பெயரை அதன் பங்கு இடாப்பில் பதிதல் வேண்டும்.

கைமாற்றத்தைப் பதிவுசெய்வதற்கு மறுத்தல் பற்றிய அறிவித்தல்.

**76.** (1) கம்பெனியொன்று பங்குகள் அல்லது தொகுதிக் கடன்கள் எவற்றினதும் கைமாற்றம் ஒன்றைப் பதிவு செய்வதற்கு மறுக்கின்றவிடத்து, கம்பெனியானது, கைமாற்றம், கம்பெனியிடம் எத்தேதியன்று கொடுக்கப்பட்டதோ அத்தேதியிலிருந்து இரு மாதங்களுக்குள்ளாக அத்தகைய மறுப்புப் பற்றிய அறிவித்த லொன்றை கைமாற்றம் பெறுபவருக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுடன் இணங்கி ஒழுகக் கம்பெனியொன்று தவறுகின்றவிடத்து —

(அ) கம்பெனியானது தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்; அத்துடன்

(ஆ) கம்பெனியின் தவறுகையில் உள்ளவரான அலுவலர் ஒவ்வொருவரும், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாவொரு குற்றப் பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

*கைமாற்றங் களை அத்தாட்சிப் படுத்தல்.*

**77.** (1) கம்பெனியிலுள்ள பங்குகளின் அல்லது அதன் தொகுதிக் கடன்களின் ஏதேனும் கைமாற்றற் சாதனம், கம்பெனி ஒன்றினால் அத்தாட்சிப்படுத்தப்படுதலானது, கைமாற்றற் சாதனத்திற் பெயர் குறிப்பிடப்பட்ட கைமாற்றுபவருக்கு அப்பங்குகளில் அல்லது தொகுதிக் கடன்களில் முதற்றோற்றளவிலான உரித்தொன்று இருப்பதாக அவற்றின் முகப்பில் காட்டுகின்றவாறான அத்தகைய ஆவணங்கள் கம்பெனிக்குக் காண்பிக்கப்பட்டுள்ளதென்பதற்கு அத்தகைய அத்தாட்சிப்படுத்துகையை நம்பிச் செயலாற்றுகின்ற எவரேனும் ஆளுக்கு கம்பெனியினால் செய்யப்படும் பகர்வொன் றாகக் கொள்ளப்படுதல் வேண்டும். ஆனால், அப்பங்குகளுக்கு அல்லது தொகுதிக் கடன்களுக்கு, கைமாற்றுபவர் ஏதேனும் உரித்தைக் கொண்டிருக்கிறார் என்பதற்கான பகர்வாகக் கொள் ளப்படுதலாகாது.

(2) கவனயீனமாகக் கம்பெனியொன்றினால் செய்யப்பட்ட பொய்யான அத்தாட்சிப்படுத்துகையொன்றை நம்பி ஆள் எவரும் செயலாற்றுகின்றவிடத்து, அவ்வத்தாட்சிப்படுத்துகை மோசடி யாகச் செய்யப்பட்டது என்றாற்போன்று கம்பெனி அவர்களால் அதே பொறுப்புக்கமைந்ததாக இருத்தல் வேண்டும்.

(3) இப்பிரிவின் நோக்கங்களுக்காக –

(அ) கைமாற்றற் சானதமொன்று, "சான்றிதழ் வைப்பிடப் பட்டது" என்ற சொற்களை அல்லது ஒத்த பயன் கொண்ட சொற்களைக் கொண்டிருந்தால், அத்தாட்சிப் படுத்தப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும் ;

(ஆ) (i) சாதனத்தை வழங்குகின்ற ஆள், கம்பெனியின் சார்பில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட கைமாற்றற் சாதனங்களை வழங்குவதற்கு அதிகாரமளிக்கப் பட்ட ஆள் ஒருவராக இருக்குமிடத்து ; அத்து டன்

(ii) அத்தாட்சிப்படுத்துகை, கம்பெனியின் சார்பில் கைமாற்றங்களை அத்தாட்சிப்படுத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஆள் ஒருவரால் அல்லது ஒன்றில் கம்பெனியின் அல்லது கூட்டிணைக் கப்பட்ட குழுவொன்றின் அவ்வாறு அதிகார மளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரால் அல்லது சேவையாளரால் ஒப்பமிடப்பட்டிருக்கின்ற விடத்து,

கைமாற்றற் சாதனத்தின் அத்தாட்சிப்படுத்துகை கம்பெனி ஒன்றினால் செய்யப்பட்டதாகக் கருதப்படு தல் வேண்டும்.

(இ) (i) கையால் எழுதப்பட்டாலும் சரி அல்லா விடினுஞ்சரி, எவரேனும் ஆளின் கையொப்பம் மூலம் அல்லது முதல் எழுத்தொப்பம்மூலம் அது அத்தாட்சிப்படுத்தப்பட்டிருக்கின்றதெனக் கொள்ளப்படுகின்றவிடத்து ; அத்துடன்

(ii) அவரினால் அல்லது கம்பெனியின் சார்பில் கைமாற்றலை அத்தாட்சிப்படுத்தும் நோக்கத் துக்காக கையொப்பத்தை அல்லது முதலெழுத் தொப்பங்களைப் பயன்படுத்துவதற்கு அதிகார மளிக்கப்பட்ட எவரேனும் ஆளினால் அங்கே கையொப்பம் அல்லது முதல் எழுத்தொப்பம் வைக்கப்படவில்லை என்று காண்பிக்கப்படாத விடத்து,

அத்தாட்சிப்படுத்துகையொன்று அவ்வாளினால் ஒப்பமிடப் பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

*சான்றிதழ்களை வழங்குவது தொடர்பில் கம்பெனியின் கடமைகள்.*

**78.** (1) கம்பெனி ஒவ்வொன்றும், அதன் பங்குகளில், தொகுதிக் கடன்களில், தொகுதிக்கடன் தொக்குகளில் எவற்றையேனும் பிரித்தொதுக்கிய தேதியிலிருந்து இரு மாதங்களுக்குள்ளும், அத்துடன் ஏதேனும் அத்தகைய பங்குகளின், தொகுதிக்கடன்க ளின் அல்லது தொகுதிக்கடன் தொக்குகளின் கைமாற்றமொன்று, கம்பெனியிடம் இடப்பட்ட தேதியில் இருந்து இரு மாதங்களுக்குள், அப்பங்குகளினதும், தொகுதிக்கடன்களினதும் அல்லது தொகு

திக்கடன் தொக்குகளினதும் வழங்குகைக்கான நிபந்தனைகள் வேறுவகையில் ஏற்பாடு செய்தாலொழிய, பிரித்தொதுக்கப்பட்ட அல்லது கைமாற்றப்பட்ட எல்லாப் பங்குகளினதும் தொகுதிக் கடன்களினதும் சான்றுப்படுத்தல்களையும் அத்துடன் எல்லாத் தொகுதி கடன் தொக்குகளினதும் சான்றிதழ்களையும் பூர்த்தி செய்து, ஒப்படைப்பதற்குத் தயாராக வைத்திருத்தல் வேண்டும்.

இவ்வுட்பிரிவின் நோக்கங்களுக்காக, "கைமாற்றம்" என்னும் சொல் உரிய முறையில் முத்திரையிடப்பட்டதும் மற்றும்படிக்குச் செல்லுபடியானதுமாக இருக்கும் கைமாற்றம் ஒன்று எனப்பொருள்படும் ; அத்துடன் அது, எக்காரணத்துக்காகவும் மறுப்பதற்கு கம்பெனி உரித்துடையதும் அத்துடன் கம்பெனி பதிவு செய்யாததுமான அத்தகைய கைமாற்றம் ஒன்றை உள்ளடக்காது.

(2) ஓராம் உட்பிரிவின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதற்கு கம்பெனியொன்று தவறுகின்றவிடத்து –

(அ) கம்பெனி தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாவொரு குற்றப் பணத்திற்கு ஆளாதலும் வேண்டும் ; அத்துடன்

(ஆ) தவறுகையில் உள்ளவரான கம்பெனியின் அலுவலர் ஒவ்வொருவரும், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதில் புரியப்பட்ட ஏதேனும் தவறுகையைச் சீர்படுத்தும்படி கம்பெனியைத் தேவைப்படுத்தும் அறிவித்தலொன்று எக்கம்பெனிக்குச் சேர்ப்பிக்கப்படுகின்றதோ, அக்கம்பெனி எதுவும், அத்தகைய அறிவித்தல் சேர்ப்பிக்கப்பட்ட தேதியில் இருந்து பத்து நாட்களுக்குள் அத்தவறுகையைச் சீர்படுத்தத் தவறுகின்றவிடத்து, நீதிமன்றம் சான்றிதழ்கள் அல்லது தொகுதிக் கடன்கள் தம்மிடம் ஒப்படைக்கப்படுவதற்கு உரித்துடைய ஆளின் விண்ணப்பத்தின் மீது, கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலத்துக்குள்ளாகத் தவறுகையைச் சீர்படுத்தும்படி கம்பெனியையும், கம்பெனியின் எவரேனும் அலுவலரையும் பணித்துக் கட்டளை

யொன்றை ஆக்கலாம், அத்துடன், அத்தகைய கட்டளை எதுவும், விண்ணபப்த்தினதும் விண்ணபப்த்திற்கு இடைநேர் விளைவான வையும் ஆன எல்லாச் செலவுகளையும் கம்பெனியினால் அல்லது தவறுகைக்குப் பொறுப்பான கம்பெனியின் அலுவலர் எவரினாலும் பொறுப்பேற்கப்பட வேண்டுமென்று ஏற்பாடு செய்யலாம்.

*சான்றிதழ் உரித்தின் சான்றாக இருத்தல்.*

**79.** எவரேனும் பங்குதாரர்களினால் வைத்திருக்கப்படும் எவையேனும் பங்குகளைக் குறித்துரைக்கின்றதும், கம்பெனியின் பணிப்பாளர் ஒருவரினால் அல்லது செயலாளரினால் கம்பெனியின் பெயரின்கீழ் ஒப்பமிடப்பட்ட சான்றிதழ் ஒன்றானது, அப் பங்குகளுக்கு அப்பங்குதாரர்களுக்குள்ள உரித்தின் முதற்றோற்றச் சான்றாதல் வேண்டும்.

*மரண சாதன அதிகாரப் பத்திரம் முதலியன வழங்கப்பட்ட தற்கான சான்று.*

**80.** ஆளெவருக்கும் வழங்கப்பட்டுள்ள எவ்வாவணத்தைக் கம்பெனி ஒன்றுக்குச் சமர்ப்பித்தல் இறந்த ஆளொருவரின் இறுதி விருப்பாவணமொன்றின் மரண சாதன அதிகாரப்பத்திரமொன்றுக்கு அல்லது மரணச் சொத்தின் நிருவாகத் தத்துவப் பத்திரங்களுக்கு அல்லது நிறைவேற்றுநராக இருப்பதற்கான உறுதிப்படுத்துகையொன்றுக்குச் சட்டப்படி போதுமான சான்றாக இருக்குமோ, அவ்வாவணம், அதன் கம்பெனியின் அமைப்பு அகவிதிகளில் எது எப்படியிருப்பினும், அவ்வாறு வழங்கப்பட்டதற்குப் போதுமான சான்றாகக் கம்பெனியால் ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

### தொகுதிக்கடன்கள் பற்றிய சிறப்பு ஏற்பாடுகள்

*தொகுதிக் கடன்கள் வைத்திருப்போர் இடாப்பை பார்வையிடு வதற்கும் ஏதேனும் நம்பிக்கைப் பொறுப்பு உறுதியின் பிரதிகளை பெற்றுக் கொள்வதற்கும் தொகுதிக்கடன் வைத்திருப் போர்களினதும் பங்கு தாரர்களினதும் உரிமை.*

**81.** (1) தொகுதிக்கடன்களை வழங்கியுள்ள கம்பெனி ஒவ்வொன்றும், கம்பெனியின் தொகுதிக்கடன்கள் வைத்திருப்போர் பற்றிய இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டும். அந்த இடாப்பு, (பார்வையிடுதலுக்கு ஒவ்வொரு நாளிலும் இரண்டு மணித்தியாலங்களுக்குக் குறையாமல், அனுமதிக்கக்கூடியதாக, பொதுக் கூட்டமொன்றில் கம்பெனி விதிக்கக்கூடிய அத்தகைய நியாயமான மட்டுப்பாடுகளுக்கு அமைய) முறையாக மூடப்பட்டிருக்கும்போது தவிர, கம்பெனியில் அத்தகைய எவையேனும் தொகுதிக் கடன்களை அல்லது பங்குகளை வைத்திருப்போர் கட்டணமொன்று இன்றியும், வேறு எவரேனும் ஆள் பத்து ரூபா கட்டணமொன்று அல்லது கம்பெனியினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான குறைவான பணத்தொகையைச் செலுத்தியதன்மீதும், பார்வையிடுவதற்காகத் திறந்துவைத்திருக்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, இடாப்பொன்று, கம்பெனியின் அமைப்பு அகவிதிகளில் உள்ள அல்லது தொகுதிக் கடன்களிலுள்ள அல்லது தொகுதிக்கடன் தொக்கின் விடயத்தில் தொக்குச் சான்றிதழ்களில் உள்ள அல்லது நம்பிக்கைப் பொறுப்பு உறுதியில் உள்ள அல்லது தொகுதிக் கடன்களுக்கு அல்லது தொகுதிக்கடன் தொக்குக்கு பிணைப்பொறுப்பளிக்கும் வேறு ஆவணத்தில் உள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க, ஏதேனும் ஆண்டில் முழுவதுமாக முப்பது நாட்களுக்கு மேற்படாமல் அதில் குறித்துரைக்கப்பட்க்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு அல்லது காலப்பகுதிகளுக்கு மூடப்பட்டால் இடாப்பொன்று தக்கவாறு மூடப்பட்டுவிட்டதாகக் கருதப்படல் வேண்டும்.

(3) மேலே கூறப்பட்டுள்ளவாறு, பதிவு செய்யப்பட்டவரான தொகுதிக் கடன்களை வைத்திருப்பவர் அல்லது பங்குதாரர் எவரும் அல்லது வேறு எவரேனும் ஆள், பிரதி செய்யப்படத் தேவைப்படும் ஒவ்வொரு பக்கத்துக்கும் பத்து ரூபாவை விஞ்சாத ஒரு பணத்தொகையை செலுத்தியதன் மேல் கம்பெனியின் தொகுதிக் கடன்களை வைத்திருப்போர் இடாப்பின் அல்லது அதன் ஏதேனும் பாகத்தின் பிரதியொன்றைக் கொடுத்துதவுமாறு தேவைப்படுத்தலாம்.

(4) எவையேனும் தொகுதிக்கடன்கள் வழங்கப்படுவதைப் பிணைப் பொறுப்பளித்துக்கொள்வதற்கான ஏதேனும் நம்பிக்கைப் பொறுப்பு உறுதியின் பிரதியொன்று, அத்தகைய தொகுதிக் கடன்களை வைத்திருக்கின்ற ஒவ்வொருவரினதும் வேண்டு கோளின்பேரில், அச்சிட்டப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பு உறுதி ஒன்றின் விடயத்தில் பத்து ரூபா கொண்ட பணத்தொகையொன்று அல்லது கம்பெனியினால் குறித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய குறைவான பணத்தொகை செலுத்தப்பட்டதன்மேல் அல்லது நம்பிக்கைப் பொறுப்பு உறுதி அச்சிடப்படாதுள்ளவிடத்து, பிரதி செய்யப்பட வேண்டுமெனத் தேவைப்படும் ஒவ்வொரு நூறு சொற்களுக்கும் ஒரு ரூபாவை விஞ்சாத ஒரு பணத்தொகை செலுத்தப்பட்டதன்மேல், அவருக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

(5) இடாப்பைப் பார்வையிடுவதற்கு மறுக்கப்படுகின்றவிடத்து அல்லது மேலே கூறப்பட்டுள்ளவாறு பிரதியொன்று மறுக்கப்படுகின்றவிடத்து அல்லது அனுப்பப்படாதவிடத்து –

(அ) கம்பெனியானது தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு ஆளாதாலும் வேண்டும் ; அத்துடன்

(ஆ) கம்பெனியில் தவறுகையில் உள்ளவரான அலுவலர் ஒவ்வொருவரும், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

(6) ஐந்தாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவாறு கம்பெனியொன்று தவறுகையில் உள்ளவிடத்து, நீதிமன்றம் கட்டளை மூலம் இடாப்பு உடனடியாகப் பார்வையிடப்படக் கட்டாயப்படுத்தலாம் அல்லது மேலே கூறப்பட்டவாறு தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் பிரதிகள் அவை தேவைப்படுகின்ற ஆளுக்கு அனுப்பப்படுதல் வேண்டுமெனப் பணிக்கலாம்.

*நம்பிக்கைப் பொறுப் பாளராகச் செயற்படு வதிலிருந்து பணிப்பாளர்கள் தடை செய்யப்படுதல்.*

**82.** கம்பெனியொன்றின் பணிப்பாளர் ஒருவர், கம்பெனியின் தொகுதிக் கடன்களை வைத்திருப்பவர்களுக்கு நம்பிக்கைப் பொறுப்பாளர் ஒருவராக நியமிக்கப்படுவதற்கு இயலாதவராய் இருத்தல் வேண்டும் :

ஆயின், இப்பிரிவின் ஏற்பாடுகள், 1982 யூலை 2 ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் செய்யப்பட்ட நியமனமொன்றின் பயனைக்கொண்டு கம்பெனியின் தொகுதிக் கடன்களை வைத்திருப்பவர்களின் நம்பிக்கைப் பொறுப்பாளர் ஒருவராகப் பதவி வகிக்கின்ற கம்பெனியொன்றின் பணிப்பாளர் எவருக்கும் ஏற்புடையனவாதலாகாது, அத்துடன், அதற்கிணங்க, அந்நிய மனம் முடிவுறுத்தப்படும்வரை அத்தகைய நம்பிக்கைப் பொறுப்பாளர் ஒருவராக அத்தகைய பணிப்பாளர் எவரும், பதவியில் தொடர்ந்து இருக்கலாம்.

*இடையறா தொகுதிக் கடன்கள்.*

**83.** எவையேனும் தொகுதிக் கடன்களில் அல்லது எவையேனும் தொகுதிக் கடன்களுக்குப் பிணைப்பொறுப்பளிப்பதற்கான ஏதேனும் உறுதியில் உள்ள நிபந்தனையொன்று அவை நியமிக்கப்பட்ட தேதிக்கு முன்னரோ அல்லது பின்னரோ வழங்கப்பட்டாலுஞ்

சரி அல்லது எழுதி நிறைவேற்றப்பட்டாலுஞ்சரி எதிர்பாராச் சம்பவம் நிகழ்வதன் மீது மட்டும், எவ்வாறாயினும் அது எத்தனை சேய்மையானதாயினும் அல்லது காலப்பகுதியின் முடிவில் மட்டும், அது அவ்வாறு நீண்டதாயினும், அதனால் தொகுதிக் கடன்கள் மீட்டெடுக்கப்படற்பாலனவானதல்லாததாக அல்லது மீட்டெடுக்கப்படற்பாலனவானதாக செய்யப்படுகின்றன என்ற காரணத்தி னால் மட்டும் செல்லுபடியற்றதாதல் ஆகாது.

குறித்தசில விடயங்களில் மீட்கப்பட்ட தொகுதிக் கடன்களைத் திரும்ப வழங்கும் தத்துவம்.

**84.** (1) கம்பெனியொன்று முன்னர் வழங்கப்பட்ட எவையேனும் தொகுதிக் கடன்களை மீண்டிருக்கின்றவிடத்து —

(அ) கம்பெனியின் அமைப்பு அகவிதிகளில் அல்லது கம்பெனியினால் செய்துகொள்ளப்பட்டுள்ள ஏதேனும் ஒப்பந்தத்தில், வெளிப்படையாகவோ அல்லது உட்கிடையாகவோ முரணாக ஏதேனும் ஏற்பாடு இருந்தாலொழிய ; அல்லது

(ஆ) கம்பெனி, அப்பயன்பட தீர்மானமொன்றை நிறை வேற்றுவதன்மூலம் அல்லது வேறு ஏதேனும் செயல் மூலம் தொகுதிக்கடன்கள் இல்லாதாக்கப்படுதல் வேண்டுமென்ற அதன் முன்னதைத் தெளிவாகக் காட்டியிருந்தாலொழிய,

கம்பெனியொன்றில், அதே தொகுதிக்கடன்களை மீள வழங்கு வதன் மூலம் அல்லது அவற்றுக்குப் பதிலாக வேறு தொகுதிக் கடன்களை வழங்குவதன் மூலம், தொகுதிக் கடன்களை மீள வழங்கும் தத்துவத்தை எப்போதும் கொண்டிருத்தல் வேண்டு மென்பதுடன், அத்தத்துவத்தை கொண்டிருந்துள்ளதாக எப்போ தும் கருதப்படுதலும் வேண்டும்.

(2) மீளப்பட்ட தொகுதிக்கடன்கள் மீள் வழங்குகையின்மீது, தொகுதிக்கடன்களுக்கு உரித்துடைய ஆள், தொகுதிக் கடன்கள் ஒருபோதும் மீளப்படவில்லை என்றாற்போன்று, அதே முன்னுரிமைகளைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், அவற்றை எப்போதும் கொண்டிருந்ததாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(3) கம்பெனியொன்று காலத்துக்குக் காலம் நடப்புக் கணக்கின்மீது அல்லது வேறு வகையில் முற்பணங்களைப் பெறுவதற்காக அதன் தொகுதிக்கடன்களுள் எவற்றையும் வைப்பிலிட்டிருக்கின்றவிடத்து, அத்தொகுதிக்கடன்கள், அவ்வாறு வைப்பிலிடப்பட்டிருக்கும்போது, கம்பெனியின் கணக்கின் பற்றுவைப்பு நிலை இல்லாதொழிந்து போய்விட்டது என்ற காரணத்தினால் மட்டும் தொகுதிக் கடன்கள் மீட்கப்பட்டுவிட்டதெனக் கருதப் படுதலாகாது.

(4) கம்பெனியொன்றுக்கு இப்பிரிவினால் கொடுக்கப்பட்ட அல்லது வைத்திருக்கப்பட்டதாகக் கருதப்படும் தத்துவத்தின் கீழ் தொகுதிக்கடன் ஒன்றின் மீள் வழங்குகை அல்லது அதன் இடத்தில் இன்னொரு தொகுதிக் கடன் வழங்குகை, முத்திரைத் தீர்வையின் நோக்கங்களுக்காகப் புதிய ஒரு தொகுதிக் கடனின் வழங்குகையாகக் கருதப்படுதல் வேண்டும். ஆனால் வழங்கப்பட வேண்டிய தொகுதிக்கடன்களின் தொகையை அல்லது எண்ணிக்கையை மட்டுப்படுத்துகின்ற ஏதேனும் நோக்கத்துக்காக அது அவ்வாறு கருதப்படுதலாகாது :

ஆயின், தொகுதிக்கடன் தகுந்தவாறு முத்திரையிடப்படவில்லையென அவர் அறிந்திருந்தால் அன்றியும் அல்லது அவரது அசட்டை இல்லாமல் அத்தொகுதிக்கடன் தகுந்தவாறு முத்திரையிடப்படவில்லையென்பதை அவர் கண்டறிந்திருக்கக்கூடியதாயிருந்தாலன்றியும், தகுந்தவாறு முத்திரையிடப்பட்டதாகத் தென்படும் இப்பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் மீள வழங்கப்பட்ட தொகுதிக் கடனின் பிணைப்பொறுப்பின் மீது பணம் இரவல் கொடுக்கும் ஆளெவரும், அவரது பிணைப் பொறுப்பை வலுவுக்கிடுவதற்கான எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில், தொகுதிக்கடனை, முத்திரைத் தீர்வைக் கொடுப்பனவு இல்லாமல் அல்லது அது தொடர்பிலான தண்டக் கொடுப்பனவு எதுவும் இல்லாமல், சான்றாக முன்வைக்கலாம். அத்தகைய ஏதேனும் விடயத்தில், சரியான முத்திரைத் தீர்வையையும் தண்டத்தையும் செலுத்துவதற்குக் கம்பெனி இலக்காதல் வேண்டும்.

(5) நியமித்த தேதிக்கு முன்னர் மீளப்பட்ட தொகுதிக்கடன்கள் அத்தேதிக்குப் பின்னர் மீள வழங்கப்படுதலானது, அத்தேதிக்கு முன்னர் உருவாக்கப்பட்ட ஏதேனும் ஈட்டின் அல்லது தாக்கீட்டின் கீழ் அல்லது அதன் பயனாக ஆளெவரும் கொண்டிருந்திருக்கக் கூடிய ஏதேனும் உரிமை அல்லது முன்னுரிமைக்குப் பங்கம் விளைவித்தலாகாது.

*தொகுதிக் கடன்களுக்கு ஒப்பப் பணம் வழங்கவதற்கு ஆன ஒப்பந்தங்களின் குறித்த நிறைவேற்றம்.*

**85.** கம்பெனியின் எவையேனும் தொகுதிக்கடன்களைப் பொறுப்பேற்று அவற்றுக்குப் பணம் செலுத்துவதற்காகக் கம்பெனி ஒன்றுடன் செய்யப்பட்ட ஒப்பந்தமொன்று, குறித்த நிறை வேற்றத்துக்கான கட்டளை ஒன்றின் மூலம் வலுவுக்கிடப்படலாம்.

## பாகம் V

### பங்குதாரர்களும் அவர்களுடைய உரிமைகளும் கடப்பாடுகளும்

*"பங்குதாரர்" என்பதன் பொருள்.*

**86.** (1) இச்சட்டத்தில், "பங்குதாரர்" என்னும் பதம் –

(அ) கம்பெனியில் அப்போதைக்கு ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட பங்குகளை வைத்திருப்பவர் என பங்கு இடாப்பில் எவ்வாளின் பெயர் பதியப்பட்டிருக்கிறதோ, அவ்வாள் ;

(ஆ) ஆளொருவரின் பெயர் பங்குதாரர் இடாப்பில் பதியப்படும் வரை, கம்பெனியொன்று பதிவு செய்யப்பட்ட நேரத்தில் அக்கம்பெனியானது கூட்டிணைக் கப்படுவதற்காகச் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றில் பங்குதாரர் ஒருவராகப் பெயர் குறிக்கப்பட்ட ஆள் ஒருவர் ;

(இ) பங்கு இடாப்பில்ஆள் ஒருவரின் பெயர் பதியப் படும்வரை, ஒன்றிணைக்கப்பட்ட கம்பெனியொன்றில் பங்குதாரர் ஒருவராகப் பதிவு செய்யப்பட்ட ஒன்றி ணைப்புப் பிரேரணை ஒன்றின் கீழ் பங்கு இடாப்பில் தமது பெயர் பதியப்படுவதற்கு உரித்துடையவரான ஆளொருவர் ;

(ஈ) பங்கு இடாப்பில் ஆளொருவரின் பெயர் பதியப்படும் வரை, பங்கொன்றானது கைமாற்றப்பட்ட எவ்வாள் ஒருவரின் பெயர் இடாப்பில் பதியப்பட்டு இருக்க வேண்டுமோ, ஆனால் பதியப்பட்டிருக்கவில்லையோ, அவ்வாள் ஒருவர்,

எனப் பொருள்படும.

(2) கம்பெனியொன்றில் உள்ள எவையேனும் பங்குகள் தொடர்பில் 129 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் பங்கு இடாப்பில் ஏதேனும் நம்பிக்கைப் பொறுப்புப் பற்றிய அறிவித்தல் ஒன்று பதியப்பட்டிருக்கின்றவிடத்து, எவ்வாளின் நன்மைக்காக அப்பங்குகள் நம்பிக்கைப் பொறுப்பில் வைத்திருக்கப்படுகின்றனவோ, அவ்வாள் —

(அ) கம்பெனியில் பங்குதாரர் ஒருவராகக் கருதப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) அப்பங்குகள் தொடர்பில், அத்தகைய எல்லா உரிமைகளையும் சிறப்புரிமைகளையும் அனுபவித்தல் வேண்டுமென்பதுடன், அப்பங்குகளை வைத்திருப்பவர் என்றவாறாக அவரின் பெயர் பங்கு இடாப்பில் பதியப்பட்டிருந்தாற்போன்று, இச்சட்டத்தின் கீழான அத்தகைய எல்லாக் கடமைகளுக்கும், கடப்பாடுகளுக்கும் அமைவாக இருத்தலும் வேண்டும்.

(3) எவ்வாளுக்குப் பங்குகள் கைமாற்றப்பட்டுள்ளனவோ, அவ்வாளின் பெயரைப் பங்கு இடாப்பில் பதிவதற்குக் கம்பெனியொன்று பிழையாகத் தவறுகின்றவிடத்து, அவ்வாள்

(அ) கம்பெனியில் பங்குதாரர் ஒருவராகக் கருதப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) அப்பங்குகள் தொடர்பில், அத்தகைய எல்லா உரிமைகளையும் சிறப்புரிமைகளையும் அனுபவித்தல் வேண்டுமென்பதுடன், அப்பங்குகளை வைத்திருப்பவர் என்றவாறாக அவரின் பெயர் பங்கு இடாப்பில் பதியப்பட்டிருந்தாற்போன்று, இச்சட்டத்தின் கீழான அத்தகைய எல்லாக் கடமைகளுக்கும் கடப்பாடுகளுக்கும் அமைவாக இருத்தலும் வேண்டும்.

### பங்குதாரருக்குள்ள பொறுப்பு

**87.** (1) பங்குதாரர் ஒருவர், பங்குதாரர் ஒருவராக இருக்கின்ற காரணத்தினால் மட்டும், கம்பெனியின் ஏதேனும் செயலுக்கு தவறுகைக்கு அல்லது கடப்பாடொன்றுக்குப் பொறுப்பாளியாக மாட்டார்.

பங்குதாரர்களுக்குள்ள பொறுப்பு.

(2) கம்பெனிக்குப் பங்குதாரர் ஒருவருக்குள்ள பொறுப்பானது, கம்பெனியின் அமைப்பகவிதிகளில் அல்லது இச்சட்டத்தின் கீழ் வெளிப்படையாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு, ஏதேனும் பொறுப்புக்கு மட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது.

(3) இப்பிரிவிலுள்ளது எதுவும், பங்குகள் வழங்கப்படுவதற்கான ஒப்பந்தமொன்று உட்பட, பங்குதாரரினால் புரியப்பட்ட ஏதேனும் தீங்குக்காக அல்லது நம்பகக் கடமையொன்றை மீறியதற்காக அல்லது வேறு வழக்கிடத்தகு பிழைக்கான ஒப்பந்தம் ஒன்றின்கீழ் கம்பெனியொன்று தொடர்பாகப் பங்குதாரர் ஒருவருக்குள்ள பொறுப்பைப் பாதித்தலாகாது.

அழைப்புகளுக்கான பொறுப்பு.

**88.** (1) இருநூற்று அறுபத்தொன்பதாம் பிரிவுக்கு அமைய, பங்கொன்று, அதை வைத்திருப்பவரை அழைப்புகளுக்குப் பொறுப்பாக ஆக்குகின்றவிடத்து அல்லது அப்பங்கை வைத்திருப்பவர் மீது பொறுப்பொன்றை வேறுவகையில் சுமத்துகின்ற விடத்து, அப்பொறுப்பானது அப்போதைக்கு அப்பங்கை வைத்திருப்பவரைச் சார்ந்ததாதல் வேண்டுமே தவிர, தற்போது பங்கை வைத்திருப்பவரின் பெயரில் பங்கானது, பதிவுசெய்யப்படுவதற்கு முன்னர் பொறுப்பு வலுவுக்கிடப்படற்பாலதானதாக வந்திருப்பினுஞ்சரி, அல்லாவிடினுஞ்சரி, அப்பங்கை முன்னர் வைத்திருந்த ஒருவரைச் சார்ந்ததாய் இருத்தலாகாது.

(2) (அ) அப்பங்கொன்று வழங்கப்படுவது தொடர்பில் செலுத்தப்படற்பாலதான பிரதிபயன் முழுவதும் அல்லது அதன் பாகம் திருப்திப்படுத்தப்படாமல் இருக்கின்றவிடத்து ; அத்துடன்

(ஆ) எவ்வாளுக்குப் பங்கு வழங்கப்பட்டதோ, அவ்வாள் இனிமேலும் அப்பங்கை வைத்திருக்காதவிடத்து,

திருப்திப்படுத்தப்படாது அப்பிரதிபயன் தொடர்பிலான பொறுப்பானது, பின்னர் பங்குகளை வைத்திருப்பவர்களைச் சார்ந்ததாதல் ஆகாது, ஆனால், அது, பங்கு எவ்வாளுக்கு வழங்கப்பட்டதோ அவ்வாளின் அல்லது பங்கு வழங்கப்பட்ட நேரத்தில் அப்பொறுப்பை ஏற்றுக்கொண்ட வேறு எவரேனும் ஆளின் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

**89.** கம்பெனிகளின் அமைப்பகவிதிகளில் முரணாக உள் ளது எது எப்படியிருப்பினும், பங்குதாரரர் ஒருவர், விடயத்துக் கேற்றவாறு, தீர்மானத்தினால் பிணிக்கப்படுவதற்கு பங்குதாரரர் எழுத்தில் உடன்பட்டுக்கொண்டாலொழிய அத்தகைய தீர்மானம் அல்லது அப்பங்குகளை வைத்திருப்பது கம்பெனிக்கு பங்குதார ருக்குள்ள பொறுப்பை அதிகரிக்கின்றவிடத்து —

*பொறுப்பு அதிகரிக் கப்படுவதற்கு பங்குதாரர்கள் உடன்படுதல் வேண்டும்.*

(அ) அதன் அமைப்பகவிதிகளை மாற்றுகின்ற தீர்மான மொன்றினால் பிணிக்கப்படுதலாகாது ; அல்லது

(ஆ) கம்பெனியில் அதிக பங்குகளைக் கொள்வதற்கு அல் லது வைத்திருப்பதற்குத் தேவைப்படுத்தப்படுதல் ஆகாது.

**பங்குதாரர்களுக்குள்ள தத்துவங்கள்**

**90.** (1) இச்சட்டத்தினால் ஒரு கம்பெனியின் பங்குதாரர்களுக்கு ஒதுக்கப்பட்ட தத்துவங்கள் —

*பங்குதாரர் களுக்கு ஒதுக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகித்தல்.*

(அ) பங்குதாரர்களின் கூட்டமொன்றில் ; அல்லது

(ஆ) 144 ஆம் பிரிவின் பிரகாரம் நடாத்தப்படும் கூட்ட மொன்றுக்குப் பதிலாக, தீர்மானமொன்றின் மூலம்,

மட்டுமே பிரயோகிக்கப்படலாம்.

(2) கம்பெனியின் அமைப்பகவிதிகள் மூலம் கம்பெனி யொன்றின் பங்குதாரர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள தத்துவங்கள், அமைப்பகவிதிகளுக்கு அமைய —

(அ) பங்குதாரர்களின் கூட்டமொன்றில் ; அல்லது

(ஆ) 144 ஆம் பிரிவைப் பின்பற்றி நடாத்தப்படும் கூட்ட மொன்றுக்குப் பதிலாக, தீர்மானமொன்றின்மூலம்,

பிரயோகிக்கப்படலாம்.

*சாதாரண தீர்மானம் மூலம் தத்துவங்கள் பிரயோகிக்கப் படுதல்.*

**91.** இச்சட்டத்தினால் அல்லது கம்பெனியொன்றின் அமைப்பு அகவிதிகளில் வேறுவகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலொழிய, பங்குதாரர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள தத்துவமொன்று, சாதாரண தீர்மானமொன்றின் மூலம் பிரயோகிக்கப்படலாம்.

*சிறப்புத் தீர்மானம் மூலம் தத்துவங்கள் பிரயோகிக்கப் படுதல்.*

**92.** (1) கம்பெனியொன்றின் அமைப்பகவிதிகளில் முரணாக உள்ளது எது எப்படியிருப்பினும், பங்குதாரர்கள் —

(அ) கம்பெனியின் அமைப்பு அகவிதிகளை மாற்றுவதற்கு;

(ஆ) இச்சட்டத்தின் 185 ஆம்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) அல்லது (ஆ) என்னும் பந்திகளின் நோக்கங்களுக்காகப் பிரதான கொடுக்கல் வாங்கலொன்றை அங்கீகரிப்பதற்கு;

(இ) இச்சட்டத்தின் 241 ஆம் பிரிவின்கீழ் கம்பெனியின் ஒன்றிணைப்பொன்றை அங்கீகரிப்பதற்கு ;

(ஈ) கம்பெனியின் கூறப்பட்ட மூலதனத்தைக் குறைப்பதற்கு ;

(உ) இச்சட்டத்தின் 319 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) அல்லது (இ) என்னும் பந்தியின் பிரகாரம் கம்பெனி தன்னிச்சையாக ஒடுக்கப்படும் எனத் தீர்மானிப்பதற்கு ;

(ஊ) கம்பெனியொன்றின் பெயரை மாற்றுவதற்கு ; அல்லது

(எ) கம்பெனியொன்றின் அந்தஸ்தை மாற்றுவதற்கு,

தத்துவமொன்றைப் பிரயோகிக்கும்போது, அத்தகைய தத்துவம், சிறப்புத் தீர்மானத்தின் மூலம் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் (அ), (ஆ), அல்லது (இ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டிருக்கும் தத்துவமொன்று தொடர்பில் நிறைவேற்றப்பட்ட சிறப்புத் தீர்மானமொன்று, இன்னொரு சிறப்புத் தீர்மானத்தினால் மட்டுமே இல்லாதொழிக்கப்படலாம்.

(3) ஒராம் உட்பிரிவின் (ஈ) அல்லது (உ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள தத்துவம் ஒன்று தொடர்பில் நிறைவேற்றப்பட்ட சிறப்புத் தீர்மானமொன்று, அதன் பின்னர் இல்லாதொழிக்கப்படமுடியாது.

### சிறுபான்மைப் பங்குகளை உடமை நீக்குவதற்கு உள்ள உரிமைகள்

*பங்குகளைக் கொள்வனவு செய்யுமாறு பங்குதார் கம்பெனியைத் தேவைப் படுத்தலாம்.*

**93.** தொண்ணூற்றி இரண்டாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் தரப்பட்டுள்ள தத்துவத்தைப் பிரயோகிப்பதன்மீது வாக்களிப்பதற்குப் பங்குதாரரொருவர் உரித்துடையவராக இருக்கின்றவிடத்தும், அத்துடன் உத்தேசிக்கப்பட்ட மாற்றம் செய்தலானது கம்பெனி ஈடுபடக்கூடியவாறான அத்தகைய தொழிலின்மீது அல்லது செயற்பாடுகள் மீது, அல்லது 92ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) அல்லது (இ) என்னும் பந்தியில் தரப்பட்டுள்ளவாறான தொழிலின் மீது அல்லது செயற்பாடுகள் மீது மட்டுப்பாடொன்றைச் சுமத்துகின்றவிடத்து அல்லது அகற்றுகின்றவிடத்தும், அத்துடன், பங்குதாரர்கள் அத்தத்துவங்களைப் பிரயோகிப்பதெனத் தீர்மானிக்கின்றவிடத்தும், அத்துடன், —

(அ) பங்குதாரரின் பெயரில் பதிவு ெய்யப்பட்டு அதே பயனுகர் சொந்தக்காரரைக் கொண்டுள்ள பங்குகளோடிணைந்துள்ள சகல வாக்குகளையும் அத்தத்துவத்தைப் பிரயோகிப்பதற்கு எதிராக அளிக்கின்றவிடத்தும்; அல்லது

(ஆ) தத்துவத்தைப் பிரயோகிப்பதற்கான தீர்மானம் 144ஆம் பிரிவின்கீழ் நிறைவேற்றப்பட்டிருக்கின்றவிடத்து, அத்துடன் பங்குதாரர், பங்குதாரரின் பெயரில் பதிவு செய்யப்பட்டனவும், அதே பயனுகர் சொந்தக்காரரைக் கொண்டனவுமான பங்குகள் தொடர்பில், தீர்மானத்தில் ஒப்பமிட்டிருக்காதிருக்கின்றவிடத்தும்,

அப்பங்குதாரர், 94 ஆம் பிரிவுக்கு இணங்க அப்பங்குகளைக் கொள்வனவு செய்வதற்குக் கம்பெனியைத் தேவைப்படுத்துவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

கொள்வனவு செய்யுமாறு தேவைப் படுத்தும் அறிவித்தல்.

**94.** (1) தொண்ணூற்றுமூன்றாம் அல்லது 100 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பயனைக்கொண்டு, பங்குகளைக் கொள்வனவு செய்யுமாறு கம்பெனியைத் தேவைப்படுத்துவதற்கு உரித்துடையவரான கம்பெனியொன்றினது பங்குதாரர் ஒருவர் —

(அ) பங்குதாரர்களின் கூட்டமொன்றில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பத்து வேலை நாட்களுக்குள் ; அல்லது

(ஆ) பங்குதாரர் ஒருவருக்குத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட தேதிபற்றிய அறிவித்தல் எத்தேதியன்று கொடுக்கப் பட்டதோ, அத்தேதிக்குப் பின்னர் பத்து வேலை நாட்கள் முடிவுறுவதற்கு முன் 144 ஆம் பிரிவின்கீழ் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றவிடத்து,

அப்பங்குகளைக் கொள்வனவு செய்யுமாறு கம்பெனியைத் தேவைப் படுத்துகின்ற எழுத்திலான அறிவித்தலொன்றைக் கம்பெனிக்குக் கொடுக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அறிவித்தல் ஒன்றைப் பெற்றுக் கொண்ட இருபது நாட்களுக்குள், சபையானது —

(அ) கம்பெனியினால் பங்குகள் கொள்வனவு செய்யப்படுவதற்கு உடன்பட்டுக்கொள்ளுதல் வேண்டும் ;

(ஆ) பங்குகளைக் கொள்வனவு செய்வதற்கு உடன்படுவதற்கு வேறு ஆள் எவரையும் ஒழுங்கு செய்தல் வேண்டும் ;

(இ) தொண்ணூற்று ஏழாம் பிரிவின்கீழான அல்லது 98 ஆம் பிரிவின் கீழான கட்டளை ஒன்றுக்காக நீதிமன்றத்திற்கு விண்ணப்பித்தல் வேண்டும் ; அல்லது

(ஈ) விடயத்துக்கேற்றவாறு, 92 ஆம்பிரிவுக்கு இணங்க, தீர்மானம் இல்லாதொழிக்கப்படுவதற்காகச் சம்பந்தப்பட்ட நடவடிக்கை எடுப்பதற்கு முன் ஒழுங்குசெய்தல் வேண்டும் அல்லது சம்பந்தப்பட்ட நடவடிக்கை எடுப்பதில்லையெனப் பொருத்தமான முறையில் முடிபுசெய்தல் வேண்டும்.

அத்துடன், இவ்வுட்பிரிவின் கீழ் எடுக்கப்பட்ட சபையின் முடிபு பற்றிப் பங்குதாரருக்கு எழுத்திலான அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.

கம்பெனி கொள்வனவு செய்தல்.

**95.** (1) கம்பெனியினால் பங்குகள் கொள்வனவு செய்யப்படுதலுக்கு, 94 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் சபை உடன்படுகின்றவிடத்து, அது, அவ்வுட்பிரிவின்கீழ் அறிவித்தல் கொடுத்ததன்மேல் அல்லது அவ்வாறு செய்த ஐந்து வேலை நாட்களுக்குள் —

(அ) கொள்ளப்பட இருக்கும் பங்குகளுக்கு நேரியதும் மற்றும் நியாயமான விலையொன்றைக் குறித்தல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) குறிக்கப்பட்ட விலைபற்றி அப்பங்குகளை வைத்திருப்பவருக்கு அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அறிவித்தலொன்று பங்குதாரரினால் பெற்றுக்கொள்ளப்பட்டதன்மேல், கம்பெனியினால் பங்குகள் கொள்வனவு செய்யப்பட்டுவிட்டன எனக் கருதப்படுதல் வேண்டும்.

(3) சபையினால் குறிக்கப்பட்ட விலை நேரியதல்ல அல்லது நியாயமானதல்ல எனக் கருதுகின்ற பங்குதாரர் ஒருவர், உடனடியாகக் கம்பெனிக்கு ஆட்சேபனை அறிவித்தலொன்றைக் கொடுத்தல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழ் பங்குதாரர் ஒருவருக்கு அறிவித்தல் கொடுத்த பத்து வேலைநாட்களுக்குள், விலைக்கு ஆட்சேபம் எதுவும் கம்பெனிக்குக் கிடைத்திருக்காவிட்டால் -

(அ) கம்பெனி குறிக்கப்பட்ட விலையை உடனடியாகப் பங்குதாரர்களுக்குச் செலுத்துதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) பங்குதாரர், உடனடியாக, கம்பெனியின் பங்குகள் தொடர்பில், பங்குச் சான்றிதழ் எதனையும் ஒப்படைத்தல் வேண்டும்.

(5) ஓராம் உட்பிரிவின்கீழ் பங்குதாரர் ஒருவருக்கு அறிவித்தல் கொடுத்த பத்து வேலை நாட்களுக்குள், விலைக்கு ஆட்சேபனை எதுவும் கம்பெனிக்குக் கிடைத்திருந்தால், கம்பெனி, ஐந்து வேலை நாட்களுக்குள் -

(அ) எது நேரியதானதும் நியாயமானதுமான விலையாக இருக்கின்றதென்ற வினாவைக் கம்பெனியின் கணக் காய்வாளர்களுக்கு ஆற்றுப்படுத்தல் வேண்டும் ; அத் துடன்

(ஆ) பங்குகள் தொடர்பில், சபையினால் குறிக்கப்பட்ட விலைக்குச் சமமான ஒரு தற்காலிக விலையைச் செலுத் துதல் வேண்டும்.

கம்பெனியினால் தற்காலிக விலை செலுத்தப்பட்டதன்மேல், பங்குதாரர், உடனடியாகப் பங்குகள் தொடர்பிலான பங்குச் சான்றிதழ் எதனையும் கம்பெனியிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

(6) ஐந்தாம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் ஆற்றுப் படுத்துகையொன்று செய்யப்படுகின்றவிடத்து, கொள்வனவு செய்யப்படவிருக்கும் பங்குகளுக்கு நேரியதும் நியாயமானதுமான விலையொன்றை விரைவாகத் தீர்மானித்தல் வேண்டும்.

(7) ஆறாம் உட்பிரிவின்கீழ் தீர்மானிக்கப்பட்ட விலையானது -

(அ) ஏற்கனவே செலுத்தப்பட்ட தற்காலிக விலையை விஞ்சுகின்றவிடத்து, கம்பெனியானது, பங்குதாரருக் குப் போமதியாகவுள்ள மீதியை உடனடியாகச் செலுத் துதல் வேண்டும், அல்லது

(ஆ) ஏற்கனவே செலுத்தப்பட்ட தற்காலிக விலையைவிடக் குறைவாகவிருக்கின்றவிடத்து, பங்குதாரர் அவ்வாறு விஞ்சியிருக்கும் தொகையைக் கம்பெனிக்கு உடனடி யாகத் திருப்பிக்கொடுத்தல் வேண்டும்.

(8) கணக்காய்வாளர்கள், (7) ஆம் உட்பிரிவின்கீழ் செலுத்தப் படற்பாலதான ஏதேனும் மீதிமீது, அல்லது மீளச் செலுத்தப்பட வேண்டிய ஏதேனும் விஞ்சு தொகைமீது, செலுத்தப்பட்ட தற்காலிக விலை நியாயமானதா என்பதைக் கவனத்துக்கெடுத்து பொருத்த மானதென அவர்கள் கருதக்கூடியவாறான அத்தகைய வீதத்தில் வட்டியைத் தீர்மானிக்கலாம்.

(9) ஐந்தாம் உட்பிரிவின் (அ) எனும் பந்தியின்கீழ் வினா வொன்றைக் கணக்காய்வாளர்களுக்கு, கம்பெனி ஆற்றுப்படுத்தத் தவறுகின்றவிடத்து, (3) ஆம் உட்பிரிவின்கீழ் ஆட்சேபனை அறிவித்தல் ஒன்றை விடுத்திருக்கின்றதும் அத்துடன் (6) ஆம் உட்பிரிவின்கீழ் தீர்மானிக்கப்பட்டவாறான விலையுடன்

திருப்தியடையாததுமான பங்குதாரர் ஒருவர் பங்குகளுக்கான நேரியதும் நியாயமுமான விலை தீர்மானிக்கின்ற நோக்கத்திற்கு பொருத்தமானதும் சரியானதுமான ஆள் ஒருவரை நியமிக்குமாறு கோரி நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் செய்யலாம், அத்துடன் நீதிமன்றமானது, அது தீர்மானிக்கின்றவாறான அத்தகைய ஆளை நியமிக்கலாம். நீதிமன்றத்தினால் அவ்வாறு நியமிக்கப் பட்ட ஆளொருவர் (8) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க அக்கறையைத் தீர்த்தளிக்கலாம்.

(10) இப்பிரிவின்கீழ் கம்பெனியொன்றினால் செய்யப்படும் பங்குகளின் கொள்வனவொன்றானது, 56 ஆம் பிரிவின் நோக்கங் களுக்காகப் பகிர்ந்தளிப்பொன்றாகக் கருதப்படுதலாகாது. ஆனால், 61 ஆம் பிரிவின் (1) ஆம் மற்றும் (3) ஆம் உட்பிரிவுகளின் நோக்கங் களுக்காகப் பகிர்ந்தளிப்பொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

*மூன்றாந் திறத்தவரால் பங்குகள் கொள்வனவு செய்யப்படுதல்.*

**96.** (1) தொண்ணூற்றைந்தாம் பிரிவின் ஏற்பாடுகள், அவசிய மாகக்கூடியவாறான அத்தகைய திரிபுகளுக்கு அமையவும், அத்துடன், குறிப்பாக அப்பிரிவில் சபைக்கும் கம்பெனிக்கும் செய்யப்பட்ட ஆற்றுப்படுத்துகைகள் அவ்வாளுக்குச் செய்யப்பட்ட ஆற்றுப்படுத்துகைகள் என்றாற்போன்று, 94 ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளுக் கிணங்க, கொள்வனவுக்காக கம்பெனியானது எவ்வாளுடன் உடன்படிக்கையொன்றைச் செய்துகொண்டிருக்கின்றதோ அவ் வாளினால் செய்யப்படும் பங்குகளின் கொள்வனவுக்கு ஏற்புடை யனவாதல் வேண்டும்.

(2) செய்யப்பட்ட ஒழுங்கேற்பாட்டுக்கு இணங்கக் கொள்வனவு செய்யப்படவிருக்கின்ற பங்குகளை வைத்திருக்கின்ற ஒவ்வொரு வருக்கும், விடயத்துக்கு ஏற்றவாறு 95 ஆம் பிரிவின் (6) ஆம் அல்லது (9) ஆம் உட்பிரிவுகளின்கீழ் குறிக்கப்பட்ட அல்லது தீர் மானிக்கப்பட்டவாறான விலையில் பங்குகளைக் கொள்வனவு செய்வதற்கு உடன்பட்டிருந்த ஆளின் தவறுகை காரணமாக, அத்தகைய பங்கு வைத்திருப்பவருக்கு ஏற்படக்கூடிய ஏதேனும் நட்டம் தொடர்பில் கம்பெனியினால் நட்டோத்தரவாதமளிக்கப் படுதல் வேண்டும்.

*நீதிமன்றம் விலக் களிக்கலாம்.*

**97.** (1) தொண்ணூற்று நாலாம் பிரிவின்கீழ் எக்கம்பெனி யொன்றுக்கு அறிவித்தலொன்று விடுக்கப்பட்டிருக்கின்றதோ அக்கம்பெனி -

(அ) கொள்வனவானது கம்பெனிக்கு விகிதாசாரமற்ற முறையில் சேதம் விளைவிக்குமென்ற ; அல்லது

(ஆ) கம்பெனியானது கொள்வனவுக்கு நிதியளிப்பதற்கு நியாயமான வகையில் தேவைப்படுத்த முடியாதென்ற ஏதுமீது அறிவித்தலானது எப்பங்குகள் தொடர்பாக அமைந்துள்ளதோ, அப்பங்குகளைக் கொள்வனவு செய்யும் கடப்பாட்டிலிருந்து அதனை விலக்கிவிடும் கட்டளை ஒன்றுக்காக நீதிமன்றத்துக்கு விண்ணப் பிக்கலாம்.

(2) இப்பிரிவின்கீழ் விண்ணப்பமொன்று செய்யப்பட்டதன்மேல், நீதிமன்றமானது, பங்குகளைக் கொள்வனவு செய்வதற்கான கடப்பாட்டிலிருந்து கம்பெனிக்கு விலக்களிக்கின்ற கட்டளை யொன்றை ஆக்கலாம், அத்துடன் பின்வரும் கட்டளையொன்று உட்பட, பொருத்தமானதென அது கருதுகின்ற அத்தகைய வேறு ஏதேனும் கட்டளையையும் ஆக்கலாம் :-

(அ) பங்குதாரர்களின் தீர்மானமொன்றைத் தள்ளி வைத்தல் ;

(ஆ) கட்டளையில் குறித்துரைக்கப்பட்டுள்ள நடவடிக்கை எதனையும் எடுக்குமாறு அல்லது எடுக்காதிருக்கு மாறு கம்பெனியைப் பணித்தல் ;

(இ) பாதிக்கப்பட்ட பங்குதாரர்களுக்கு நட்டஈடு செலுத்து மாறு கம்பெனியைத் தேவைப்படுத்துதல் ; அல்லது

(ஈ) நீதிமன்றத்தினால் கம்பெனி ஒடுக்கப்படுதல்.

(3) தொண்ணூற்று நாலாம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்திக்கு இணங்க, பங்குகளைக் கொள்வனவு செய்வதற்கு இன்னோராளை ஒழுங்குசெய்வதற்கு கம்பெனியானது நியாய மான முயற்சிகளை எடுத்திருக்கின்றது என நீதிமன்றம் திருப்திப் பட்டாலொழிய, அது, இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் கட்டளை ஒன்றை ஆக்குதலாகாது.

கம்பெனி கடனிறுக்க வகையற்றதாக இருந்தால் நீதிமன்றம் விலக்களிப்பு வழங்கலாம்.

**98.** (1) தொண்ணூற்று நாலாம் பிரிவின்கீழ் கம்பெனி ஒன்றுக்கு அறிவித்தலொன்று கொடுக்கப்பட்டிருக்கின்றவிடத்து, அத்துடன் —

(அ) பங்குகள் கம்பெனியினால் கொள்வனவு செய்யப்பட்ட பின்னர் கம்பெனியானது கடனிறுக்க வகையுடைமைப் பரீட்சையை திருப்திப்படுத்தத் தவறும் எனச் சபை கருதுகின்றவிடத்து ; அத்துடன்

(ஆ) தொண்ணூற்று நாலாம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளுக்கிணங்க, இன்னோராளினால் பங்குகள் கொள்வனவு செய்யப்படுவதற்குக் கம்பெனி நியாயமான முயற்சிகளை எடுத்திருந்தும் அவ்வாறு செய்ய இயலாமல் போய்விட்டவிடத்து,

கம்பெனி அப்பங்குகளைக் கொள்வனவு செய்வதற்கான கடப்பாட்டிலிருந்து அதனை விலக்களிப்பதற்கான கட்டளையொன்றுக்காக, நீதிமன்றத்துக்கு விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டும்.

(2) நீதிமன்றமானது (1) ஆம் உட்பிரிவின்கீழ் விண்ணப்பமொன்று செய்யப்பட்டதன்மேல், பங்குகளைக் கொள்வனவு செய்ததன் பின்னர் கடனிறுக்க வகையுடைமைப் பரீட்சையைத் திருப்திப்படுத்துவதற்கு தவறும் எனவும், அத்துடன் கம்பெனியானது, 94ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்திக்கிணங்க, இன்னோர் ஆளினால் பங்குகள் கொள்வனவு செய்யப்படுவதற்கு நியாயமான முயற்சிகள் எடுத்திருக்கிறதெனத் திருப்திப்படுகின்றவிடத்து —

(அ) பங்குகளைக் கொள்வனவு செய்வதற்கான கடப்பாடுகளில் இருந்து கம்பெனிக்கு விலக்களிக்கின்ற கட்டளையொன்றை ;

(ஆ) பங்குகளைக் கொள்வனவு செய்வதற்கான கடப்பாட்டை இடைநிறுத்துகின்ற கட்டளையொன்றை ; அல்லது

(இ) 97 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப் பட்டுள்ள ஏதேனும் கட்டளை உட்பட, அது பொருத்த மானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய வேறு கட்டளையை,

ஆக்கலாம்.

(3) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, கொள்வனவுக்குப் பின்னர் கம்பெனி கடனிறுக்க வகையுடைமைப் பரீட்சையைத் திருப்திப் படுத்தத் தவறுமா என்பதைத் தீர்மானிக்கையில், கம்பெனி யொன்றின் கூறப்பட்ட மூலதனம் கருத்திற்கொள்ளப்படுதலா காது.

பங்குதாரரின் உரிமைகளை மாற்றுதல்.

**99.** (1) பங்குகளுடன் சார்ந்த உரிமைகளைப் பாதிக்கக்கூடிய நடவடிக்கை எதனையும் அக்கறை கொண்டுள்ள ஒவ்வொரு குழுவினதும் சிறப்புத் தீர்மானமொன்றின்மூலம் அந்நட வடிக்கைக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தாலொழிய, கம்பெனி யொன்று எடுத்தலாகாது.

(2) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, பங்கொன்றுடன் சார்ந் துள்ள உரிமைகள், பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண் டும் :-

(அ) வாக்களிக்கும் உரிமைகள் மற்றும் பகிர்ந்தளிப்புக ளுக்கான உரிமைகள் உட்பட, இச்சட்டத்தின்கீழ் அல் லது கம்பெனியின் அமைப்பகவிதிகளின்கீழ் பங் கொன்றுடன் சார்ந்த உரிமைகள், சிறப்புரிமைகள், மட் டுப்பாடுகள் மற்றும் நிபந்தனைகள் ;

(ஆ) 53 ஆம் பிரிவின்கீழான முன்வாங்குரிமைகள் ;

(இ) இப்பிரிவில் தரப்பட்டுள்ள அத்துடன் கம்பெனியின் அமைப்பகவிதிகள் திருத்தப்படுவதற்கு அல்லது மாற்றப்படுவதற்கு அமைப்பகவிதிகளினால் தேவைப்படுத்தப்படும் வேறேதேனும் நடவடிக்கை முறை கம்பெனியினால் அவதானிக்கப்பட வேண்டு மென்ற உரிமை ; அத்துடன்

(ஈ) கம்பெனியின் அமைப்பகவிதிகள் திருத்தப்படுவதற்கு அல்லது மாற்றப்படுவதற்கு, அமைப்பகவிதிகளினால் தேவைப்படுத்தப்படும் நடவடிக்கை முறையொன்று திருப்திப்படுத்தப்படாமல் அல்லது மாற்றப்படாமல் இருப்பதற்கான உரிமை.

பங்குகளைக் கொள்வனவு செய்வதற்கு பங்குதாரர் கம்பெனியை தேவைப் படுத்தலாம்.

**100.** அக்கறையுள்ள குழுவொன்றானது, பங்குகளைச் சார்ந்த உரிமைகளைப் பாதிக்கின்ற நடவடிக்கையொன்று எடுப்பதற்கு அங்கீகாரம் வழங்கியிருக்கின்றவிடத்தும், அந்நடவடிக்கை எடுப்பதற்கு கம்பெனியானது உரித்துடையதாக வருகின்றவிடத்தும், அத்துடன் -

(அ) அக்கறைகொண்ட குழுவின் உறுப்பினராக இருந்தவரும் அதே பயநுகர் சொந்தக்காரரைக் கொண்டுள்ளவருமான பங்குதாரர் ஒருவர் தம்பெயரில் பதிவு செய்யப்பட்ட பங்குகளுடன் சார்ந்த எல்லா வாக்குகளையும் நடவடிக்கையை அங்கீகரிப்பதற்கு எதிராக வழங்கியுள்ளவிடத்து ; அல்லது

(ஆ) நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு அங்கீகாரம் வழங்குகின்ற தீர்மானம் 144 ஆம் பிரிவின்கீழ் நிறைவேற்றப்பட்டிருக்கின்றவிடத்து, அக்கறைகொண்ட குழுவின் உறுப்பினர் ஒருவராக இருந்தவரும், அதே பயனுகர் சொந்தக்காரரைக் கொண்டிருப்பவருமான பங்குதாரர் ஒருவர், அப்பங்குதாரரின் பெயரில் பதிவுசெய்யப்பட்ட பங்குகள் தொடர்பிலான தீர்மானத்தில் ஒப்பமிடாதவிடத்து,

94 ஆம் பிரிவுக்கிணங்க அப்பங்குகளைக் கொள்வனவு செய்வதற்குக் கம்பெனியைத் தேவைப்படுத்துவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

வழக்குகள் செல்லுபடியற்றன வாகா.

**101.** பங்குகளைச் சார்ந்த உரிமைகளைப் பாதிக்கின்ற நடவடிக்கை எதுவும் கம்பெனி ஒன்றினால் எடுக்கப்படுவது, அந்நடவடிக்கை 99 ஆம் பிரிவின்கீழ் அங்கீகரிக்கப்படவில்லை என்ற நிகழ்வின் காரணத்தினால் மட்டும், செல்லுபடியற்றதாதல் ஆகாது.

## பாகம் VI

### தாக்கீடுகளைப் பதிவுசெய்தல்

*பதிவாளரிடம் தாக்கீடுகளைப் பதிவுசெய்தல்*

*இலங்கையில் பதிவு செய்யப்பட்ட கம்பெனிகளால் உருவாக்கப்பட்ட தாக்கீடுகளைப் பதிவுசெய்தல்.*

**102.** (1) எந்தவொரு தாக்கீடுக்கு இப்பிரிவு ஏற்புடைத்தாகுமோ அந்தவொரு தாக்கீட்டை கம்பெனி ஒன்று உருவாக்குகின்றவிடத்து, அத்தாக்கீடு எச்சாதனத்தால் உருவாக்கப்படுகின்றதோ அல்லது சான்றுப்படுத்தப்படுகின்றதோ அச்சாதனத்தின் பிரதியொன்றை (3) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள காலத்தினுள், இச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்படுவதற்காக பதிவாளரிடம் ஒப்படைக்கப்படச் செய்வித்தல் கம்பெனியின் கடமையாதல் வேண்டும். சாதனத்தின் பிரதியுடன், அப்பிரதி உண்மையான பிரதி ஒன்றென்றும் தாக்கீட்டின் விதித்துரைக்கப்பட்ட விபரங்களைக் கொண்டுள்ளதென்றும் உறுதிப்படுத்தப்பட்டுக் கம்பெனியின் பணிப்பாளரினால் அல்லது செயலாளரினால் அல்லது ஒரு சட்டத்தரணியால் வழங்கப்பட்ட விதித்துரைக்கப்பட்ட படிவத்திலான சான்றிதழொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(2) இப்பிரிவானது பின்வரும் தாக்கீடுகளுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும் :—

(அ) ஏதேனும் தொகுதிக்கடன் வழங்குநருக்குப் பிணைப் பொறுப்பளிக்கும் நோக்கத்துக்கான தாக்கீடொன்று ;

(ஆ) கம்பெனியின் அழைக்கப்படாத பங்குமூலதனத்தின் மீதான தாக்கீடொன்று ;

(இ) தனியாளொருவரால் எழுதி நிறைவேற்றப்பட்டால் எந்தவொரு சாதனம் விற்பனை உண்டியலொன்றாகப் பதிவுசெய்யப்படவேண்டிய தேவையாகுமோ அந்தவொரு சாதனத்தால் உருவாக்கப்பட்ட அல்லது சான்றுப்படுத்தப்பட்ட தாக்கீடொன்று ;

(ஈ) எங்கு அமைந்திருப்பதாயினுஞ்சரி காணி மீதான அல்லது காணியின் ஏதேனும் அக்கறை மீதான தாக்கீடொன்று ;

(உ) கம்பெனியின் புத்தகத் தனிசுகள் மீதான தாக்கீடொன்று ;

(ஊ) கம்பெனியின் பொறுப்பு முயற்சி மீதான அல்லது ஆதனம் மீதான மிதக்கும் தாக்கீடொன்று ;

(எ) அழைக்கப்பட்டு ஆனால் செலுத்தப்படாத அழைப்புக்கள் மீதான தாக்கீடொன்று ;

(ஏ) கப்பலொன்று மீதான அல்லது வானூர்தி ஒன்று மீதான அல்லது கப்பலொன்றிலான அல்லது வானூர்தி ஒன்றிலான ஏதேனும் பங்கு மீதான தாக்கீடொன்று ;

(ஐ) 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, புலமைச் சொத்துச் சட்டக்கோவைச் சட்டத்தின் கருத்தினுள் நன்மதிப்பு மீதான அல்லது புலமைச்சொத்து மீதான தாக்கீடொன்று ; அத்துடன்

(ஒ) எந்த நம்பிக்கைப்பொறுப்புப் பற்றுச்சீட்டுக்கு (86 ஆம் அத்தியாயமான) நம்பிக்கைப்பொறுப்புப் பற்றுச் சீட்டுக்கள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவு ஏற்புடைத்தாகின்றதோ அந்த நம்பிக்கைப்பொறுப்புப் பற்றுச்சீட்டு அல்லது 1990 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, உள்நாட்டு நம்பிக்கைப்பொறுப்புப் பற்றுச் சீட்டுக்கள் சட்டத்தின் கருத்திற்குள்ளான உள்நாட்டு நம்பிக்கைப்பொறுப்புப் பற்றுச்சீட்டு.

(3) இப்பிரிவின்கீழ் பதிவுசெய்யப்படவேண்டுமெனத் தேவைப் படுத்தப்பட்ட சாதனமொன்று -

(அ) இலங்கையினுள் எழுதி நிறைவேற்றப்பட்ட சாதனமொன்றின் விடயத்தில், சாதனம் எழுதி நிறைவேற்றப் பட்ட தேதியிலிருந்து இருபத்தொரு வேலை நாட்களுக்கிடையில் பதிவுசெய்யப்படல் வேண்டும் ; அல்லது

(ஆ) இலங்கைக்கு வெளியே எழுதி நிறைவேற்றப்பட்ட சாதனமொன்றின் விடயத்தில், சாதனம் எழுதி நிறைவேற்றப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்களினுள் பதிவுசெய்யப்படுதல் வேண்டும்.

(4) தாக்கீடொன்று இலங்கையில் உருவாக்கப்பட்டு ஆனால் இலங்கைக்கு வெளியேயுள்ள ஆதனத்தைக் கொண்டிருக்குமிடத்து, ஆதனம் எந்நாட்டில் அமைந்திருக்கின்றதோ அந்நாட்டின் சட்டத்திற்கிணங்க தாக்கீட்டைச் செல்லுபடியாக்குவதற்கு அல்லது பயனுடையதாக்குவதற்கு மேலும் நடவடிக்கைகள் அவசியமாக லாம் என்பது எவ்வாறிருப்பினும், தாக்கீட்டை உருவாக்குகின்ற அல்லது உருவாக்குவதாகக்கொள்ளப்படுகின்ற சாதனம், இப்பிரி வின் ஏற்பாடுகளின்கீழ் பதிவுசெய்யப்படுவதற்காக அனுப்பப் படலாம்.

(5) கம்பெனியொன்றின் எவையேனும் புத்தகத் தனிசுகளின் கொடுப்பனவுக்குப் பிணைப்பொறுப்பளிப்பதற்காக உரிபெயர் சாதனமொன்று வழங்கப்பட்டுள்ளவிடத்து. கம்பெனிக்குச் செய்யப்படும் முற்பணத்துக்குப் பிணைப்பொறுப்பளிக்கும் நோக் கத்துக்காக அச்சாதனத்தை வைப்புச்செய்தல், இப்பிரிவின் நோக் கங்களுக்காக அப்புத்தகத் தனிசுகள் மீதான தாக்கீடொன்றாகக் கணிக்கப்படுதலாகாது.

(6) காணி மீதான தாக்கீடொன்றுக்கு வைத்திருப்பவரை உரித்து டையதாக்கும் தொகுதிக்கடன்களை வைத்திருத்தல், இப்பிரிவின் நோக்கங்களுக்காக, காணியிலான ஓர் அக்கறையாகக் கணிக்கப் படுதலாகாது.

(7) தொகுதிக்கடன் தொடர்ச்சியொன்றை வைத்திருப்பவர்கள் எந்த ஏதேனும் தாக்கீட்டின் நன்மைக்கு இணைநிலையாக உரித்து டையவர்களாகின்றனதோ அந்த ஏதேனும் தாக்கீட்டைக் கொண்டி ருப்பதற்கான அல்லது வேறு ஏதேனும் சாதனத்துடன் தொடர்பு றுத்தி வழங்குவதான அத்தொடர்ச்சி கம்பெனி ஒன்றினால் உருவாக்கப்படுகின்றவிடத்து, அத்தாக்கீட்டைக் கொண்டிருக்கும் உறுதி எழுதி நிறைவேற்றப்பட்ட தேதியிலிருந்து அல்லது அத்த கைய ஒரு உறுதி இல்லாதுவிட்டால் அத்தொடர்ச்சியைச் சேர்ந்த எவையேனும் தொகுதிக்கடன்கள் எழுதிநிறைவேற்றப்பட்ட தேதியி லிருந்து பதினைந்து வேலை நாட்களினுள், பின்வரும் விவரங்க ளான, அதாவது :—

(அ) முழுத்தொடர்ச்சியினால் பிணைப்பொறுப்பளிக்கப் பட்ட மொத்தத் தொகை ;

(ஆ) அத்தொடர்ச்சியை வழங்குவதற்கு அதிகாரமளிக்கும் தீர்மானங்களின் தேதிகளும் பிணைப்பொறுப்பு உருவாக்கப்படுகின்றதான அல்லது வரைவிலக்கணப் படுத்தப்படுகின்றதான மேவும் உறுதி ஏதேனும் இருப்பினும் அவ்வுறுதியின் தேதியும் ;

(இ) தாக்கீடு செய்யப்பட்ட ஆதனத்தின் பொதுவான விவரணமொன்று ; அத்துடன்

(ஈ) தொகுதிக்கடன்கள் வைத்திருப்போருக்கான நம்பிக்கைப் பொறுப்பாளர்கள், எவரேனுமிருப்பின், அவர்களின் பெயர்கள்,

என்பன விதித்துரைக்கப்பட்ட முறையில் சரிபார்க்கப்பட்ட தாக்கீட்டை கொண்டிருப்பதான உறுதியின் பிரதியொன்றுடன் சேர்த்து அல்லது அத்தகைய உறுதி எதுவும் இல்லாதுவிட்டால், அத்தொடர்ச்சியைச் சேர்ந்த தொகுதிக்கடன்களுள் ஒன்றினைச் சேர்த்து பதிவாளருக்க ஒப்படைக்கப்பட்டால் அல்லது அவரால் கிடைக்கப் பெறப்பட்டால், அது இப்பிரிவின் நோக்கங்களுக்குப் போதுமானதாதல் வேண்டும் :

ஆயின், அத்தொடர்ச்சியைச் சேர்ந்த தொகுதிக்கடன்கள் தொடர்பான ஒன்றுக்கு மேற்பட்ட வழங்குகைகள் செய்யப்படுகின்றவிடத்து, ஒவ்வொரு வழங்குகையின் தேதி மற்றும் தொகை பற்றிய விவரங்கள் இடாப்பில் பதியப்படுவதற்காக பதிவாளருக்கு அனுப்பப்படுதல் வேண்டும். அத்தகைய விபரங்களை அனுப்பத் தவறுதல் வழங்கப்பட்ட தொகுதிக்கடன்களின் செல்லுபடியாந் தன்மையைப் பாதித்தலாகாது.

(8) (அ) முழுமையாக அல்லது நிபந்தனையுடன் கம்பெனியில் எவையேனும் தொகுதிக்கடன்களுக்கு ஒப்பப் பணம் வழங்கியமையை அல்லது ஒப்பப்பணம் வழங்க இணங்கியமையை ; அல்லது

(ஆ) அத்தகைய எவையேனும் தொகுதிக்கடன்களுக்கு முழுமையாகவெனினும் நிபந்தனையுடனெனினும் ஒப்பப்பணங்களை பெற்றுத் தந்தமையை அல்லது பெற்றுத் தர இணங்கியமையை.

*கருத்திற்கொண்டு எவரேனும் ஆளுக்கு கம்பெனி ஒன்றினால் ஒன்றில் நேரடியாக அல்லது மறைமுகமாக ஏதேனும் தரகு, விடுதொகை அல்லது கழிவு செலுத்தப்பட்டுள்ளவிடத்து வழங்கப் பட்டுள்ளவிடத்து, இப்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் பதிவுசெய்யப் படுதலுக்காக அனுப்பப்படத் தேவைப்படுத்தப்பட்ட விபரங்கள், அவ்வாறு செலுத்தப்பட்ட அல்லது வழங்கப்பட்ட தரகின், கழிவின் அல்லது விடுதொகையின் தொகை அல்லது வீதச் சதவிகிதம் பற்றிய விபரங்களை உள்ளடக்குதல் வேண்டும். அத்தகைய விபரங்களை அனுப்பத் தவறுதலானது வழங்கப்பட்ட தொகுதிக் கடன்களின் செல்லுபடியாந்தன்மையைப் பாதித்தலாகாது.*

*(9) கம்பெனியின் ஏதேனும் தனிசுக்கான பிணைப்பொறுப்பாக எவையேனும் தொகுதிக்கடன்கள் வைப்புச் செய்யப்படுதல், (8)ஆம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, கழிவுடன் தொகுதிக்கடன்கள் வழங்குகையாகக் கணிக்கப்படுதலாகாது.*

*(10) இப்பிரிவின் கீழ் தாக்கீடொன்றைப் பதிவுசெய்தலானது அதன்கண் அக்கறையுள்ள எவரேனும் ஆளின் விண்ணப்பத்தின் மீது பயனுறுத்தபடலாம். கம்பெனியல்லாது வேறு ஆளொருவரின் விண்ணப்பத்தின் மீது பதிவானது செய்யப்படுகின்றவிடத்து, அவரால் பதிவாளருக்குச் செலுத்தப்பட்ட எவையேனும் கட்டணங் களின் தொகையை கம்பெனியிடமிருந்து அறவீடு செய்வதற்கு அந்த ஆள் உரித்துடையவராதல் வேண்டும்.*

*(11) கம்பெனியால் உருவாக்கப்பட்ட ஏதேனும் தாக்கீடு பற்றிய அல்லது இப்பிரிவின்கீழ் பதிவுசெய்யப்படுதல் தேவைப்பாடாக அமைகின்ற தொடர்ச்சியொன்றைச் சேர்ந்த தொகுதிக்கடன்களின் வழங்குகை பற்றிய விபரங்களைப் பதிவுக்காக பதிவாளருக்கு அனுப்புவதில் ஏதேனும் கம்பெனி தவறுகின்றவிடத்து, அப்போது, அப்பதிவு வேறு ஆளொருவரின் விண்ணப்பத்தின் மீது செய்யப்பட்டிருந்தாலன்றி —*

*(அ) கம்பெனி தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஐம்பதினாயிரம் ரூபாவிற்கு மேற்படாத குற்றப்பணமொன்றிற்கு ஆளாதலும் வேண்டும் ; அத்துடன்*

(ஆ) தவறுகைக்குட்பட்ட கம்பெனியின் ஒவ்வொரு அலுவலரும் தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஐம்பதினாயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப் பணமொன்றிற்கு ஆளாதலும் வேண்டும்.

(12) இப்பிரிவின் ஏற்பாடுகள், அசைவுள்ளதாயினுஞ்சரி அசை வற்றதாயினுஞ்சரி ஏதேனும் ஆதனத்தின்மீது தாக்கீடொன்றை உருவாக்குகின்ற அல்லது உருவாக்குவதாகக்கொள்ளப்படுகின்ற ஏதேனும் ஆவணத்தின் அல்லது சாதனத்தின் பதிவு தொடர்பி லான வேறெதேனும் எழுத்திலான சட்டத்திற்கு மேலதிகமான தாகவிருத்தல் வேண்டும். அத்துடன் அதற்குப் பதலீடானதாக விருத்தல் ஆகாது.

(13) இச்சட்டத்தின் இப்பாகத்தின் நோக்கத்திற்காக "தாக்கீடு" என்பது ஈட்டையும் உள்ளடக்குகின்றது.

குறித்தசில விடயங்களில், பதிவு செய்யப்படாத தாக்கீடுகள் வறிதாதல்.

**103.** (1) இப்பாகத்தின் ஏற்பாடுகளுக்கமைய, தாக்கீடு ஒவ்வொன்றும், கம்பெனியின் ஆதனத்தின் அல்லது பொறுப்பு முயற்சி மீது ஏதேனும் பிணைப்பொறுப்பை அளிக்கின்றவரையில், விடயத்திற்கேற்றாற்போன்று, இச்சட்டத்தின் 102 ஆம் பிரிவினால் அல்லது 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் 91 ஆம் பிரிவினால் குறித்துரைக்கப்பட்ட முறையிலும் காலத்தினுள்ளும் பதிவுசெய்யப்பட்டிருந்தாலன்றி அல்லது பதிவுசெய்தலுக்கான காலம் இச்சட்டத்தின் 108 ஆம் பிரிவின்கீழ் அல்லது 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் 97 ஆம் பிரிவின்கீழ் நீடிக்கப்பட்டிருந்தால், அத்தகைய நீடிக்கப்பட்ட காலத்தினுள், பதிவுசெய்யப்பட்டிருந்தாலன்றி, ஒழிப்போனுக்கும் கம்பெனியின் எவரேனும் கடன்தநருக்கும் எதிராக வறிதாதல் வேண்டும்.

(2) இப்பிரிவிலுள்ளதெதுவும் தாக்கீடொன்றினால் பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட பணத்தின் மீள்கொடுப்பனவிற்கான ஒப்பந்தம் அல்லது கடப்பாடு எதனையும் பாதித்தலாகாது. இப்பிரிவின்கீழ் தாக்கீடொன்று வறிதானால், அது பிணைப் பொறுப்பளித்த பணமானது, உடனடியாகக் கொடுபடற்பாலதாக வருதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் நோக்கத்திற்காக, "தாக்கீடு" என்பது, 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் 91 ஆம் பிரிவின்கீழ் அல்லது இச்சட்டத்தின் 102 ஆம் பிரிவின்கீழ் பதிவுசெய்யப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்டதான 1982 யூலை 2 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் உருவாக்கப்பட்ட தாக்கீடொன்று என்று பொருள்படும்.

கொள்ளப்பட்ட ஆதனம் மீது மீதான தாக்கீடுகளைப் பதிவு செய்தல் கம்பெனியின் கடமையாதல் வேண்டும்.

**104.** (1) இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட கம்பெனியொன்று, ஆதனம் கொள்ளப்பட்ட பின்னர் கம்பெனியால் உருவாக்கப் பட்டிருந்தால் இப்பாகத்தின்கீழ் பதிவுசெய்யப்படத் தேவைப்படுத் தப்பட்டிருக்கக்கூடியதான தாக்கீடொன்றுக்கு அமைவானதாக வுள்ள ஏதேனும் ஆதனத்தைக் கொள்ளுமிடத்து, அக்கம்பெனி யானது, (2) ஆம் உட்பிரிவினால் குறித்துரைக்கப்பட்டுள்ள காலத்தினுள் –

(அ) தாக்கீடு பற்றிய விதித்துரைக்கப்பட்ட விபரங்கள் ; அத்துடன்

(ஆ) அத்தாக்கீடு உருவாக்கப்பட்ட அல்லது சான்றுபடுத்தப் படுகின்ற சாதனம் எதுவும் இருப்பின் (சரியான பிரதி ஒன்றென விதித்துரைக்கப்பட்ட முறையில் உறுதிப் படுத்தப்பட்டுள்ள) பிரதி ஒன்று

என்பவற்றைப் பதிவுசெய்யப்படுவதற்காக பதிவாளருக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

(2) (அ) அந்த ஆதனம் இலங்கைக்கு வெளியே அமைந்ததாக வும் தாக்கீடு இலங்கைக்கு வெளியே உருவாக்கப் பட்டதாகவும் இருந்தால், கொள்ளுகை பூரணப்படுத் தப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் ; அல்லது

(ஆ) மற்றெல்லா விடயங்களில் கொள்ளுகை பூரணப் படுத்தப்பட்ட தேதியிலிருந்து இருபத்தொரு வேலை நாட்களினுள்,

ஓராம் உட்பிரிவின்கீழ் பதிவுசெய்யப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்டுள்ள தாக்கீட்டின் விபரங்கள் பதிவாளருக்கு ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.

(3) கம்பெனி ஒன்று இப்பிரிவுடன் இணங்கியொழுகத் தவறு கின்றவிடத்து –

(அ) கம்பெனி தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டு மென்பதுடன் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப் பண மொன்றிற்கு ஆளாதலும் வேண்டும் ; அத்துடன்

(ஆ) தவறுகையிலுள்ள கம்பெனியின் ஒவ்வொரு அலுவல ரும் தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டு மென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பண மொன்றிற்கு ஆளாதலும் வேண்டும்.

*தாக்கீடுகள் இடாப்பு பதிவாளரால் வைத்திருக் கப்படுதல்.*

**105.** (1) பதிவாளரானவர், ஒவ்வொரு கம்பெனி தொடர்பிலும், இப்பாகத்தின்கீழ் பதிவுசெய்யப்படுதல் தேவைப்படுத்தப்படுவ தான எல்லாத் தாக்கீடுகளையும் கொண்ட இடாப்பொன்றை விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் வைத்திருத்தல் வேண்டும் என்பதுடன் விதித்துரைக்கப்பட்ட கட்டணக் கொடுப்பனவின் மீது அத்தகைய தாக்கீடுகள் தொடர்பான பின்வரும் விபரங்களை அந்த இடாப்பில் பதிவீடு செய்தலும் வேண்டும் :–

(அ) தொகுதிக்கடன்கள் தொடர்ச்சியொன்றை வைத்திருப் போர் எத்தாக்கீடின் நன்மைக்கு உரித்துடையவர்களாக இருக்கின்றனரோ அத்தாக்கீடின் விடயத்தில் 102 ஆம் பிரிவின் (8) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட் டுள்ள விபரங்கள் ;

(ஆ) வேறேதேனும் தாக்கீடின் விடயத்தில் ;

(i) அத்தாக்கீடு கம்பெனியால் உருவாக்கப்பட்ட தாக்கீடொன்றாக இருப்பின், அதன் உருவாக் கத்தேதி ; அத்துடன் அத்தாக்கீடானது கம்பெனியால் கொள்ளப்பட்ட ஆதனம் மீது உளதான தாக்கீடொன்றாக இருப்பின் ஆதனம் கொள்ளப்பட்ட தேதி ;

(ii) தாக்கீட்டினால் பிணைப்பொறுப்பு அளிக்கப் பட்ட தொகை ;

(iii) தாக்கீடு செய்யப்பட்ட ஆதனம் பற்றிய சுருக்கமான விபரங்கள் ; அத்துடன்

(iv) தாக்கீடுக்கு உரித்துடையோரான ஆட்கள்.

(2) பதிவாளரானவர் இப்பாகத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டதான தாக்கீடெதனதும் பதிவு பற்றியதும் அதனால் பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட தொகையைக் கூறுவதுமான சான்றிதழொன்றை விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் வழங்குதல் வேண்டும். அச்சான்றிதழானது பதிவுதொடர்பில் இப்பாகத்தின் தேவைப்பாடுகள் இணங்கியொழுகப்பட்டுள்ளன என்பதற்கு முடிவான சான்றாதலும் வேண்டும்.

(3) இப்பாகத்தின்கீழ் தாக்கீடொன்றைப் பதிவுசெய்தலானது, இப்பிரிவின் கீழான தாக்கீடுகள் பற்றிய இடாப்பில் பதிவுசெய்யப்பட்ட தாக்கீடின் விபரங்களைப் பற்றி ஆனால் தாக்கீடை உருவாக்குகின்ற அல்லது சான்றுபடுத்துகின்ற சாதனத்தின் உள்ளடக்கங்களைப் பற்றி அல்லாமல், எல்லா ஆட்களுக்குமான அறிவித்தலொன்றாக அமைதல் வேண்டும்.

தொகுதிக் கடன்கள் மீது பதிவுச்சான்றிதழைப் புறக்குறிப்பிடுதல்

**106.** (1) கம்பெனியானது 105 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் வழங்கப்படும் ஒவ்வொரு பதிவுச் சான்றிதழினதும் பிரதியொன்றை கம்பெனியால் வழங்கப்படுவதும் அதன் கொடுப்பனவு அவ்வாறு பதிவுசெய்யப்பட்ட தாக்கீடினால் பிணைப்பொறுப்பளிக்கப்பட்டிருப்பதுமான ஒவ்வொரு தொகுதிக்கடன்மீதும் அல்லது தொகுதிக்கடன் தொக்குச் சான்றிதழ்மீதும் புறக்குறிப்பிடுவித்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் உள்ளது எதுவும் ஏதேனும் தாக்கீடு உருவாக்கப்படுவதற்கு முன்னர் கம்பெனியால் வழங்கப்பட்ட ஏதேனும் தொகுதிக்கடன்மீது அல்லது தொகுதிக்கடன் தொக்குச் சான்றிதழ் மீது அவ்வாறு வழங்கப்பட்ட ஏதேனும் தாக்கீடின் பதிவுச் சான்றிதழைப் புறக்குறிப்பிடுவிப்பதற்கு கம்பெனி ஒன்றைத் தேவைப் படுத்துவதாகப் பொருள்கொள்ளப்படுதலாகாது.

(3) இப்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் தொகுதிக்கடன்மீது அல்லது எத்தொகுதிக்கடன் தொக்குச் சான்றிதழ்மீது பதிவுச் சான்றிதழொன்றின் பிரதியொன்று புறக்குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்டுள்ளதோ அத்தொகுதிக்கடன்மீது

அல்லது தொகுதிக்கடன் தொக்குச்சான்றிதழ்மீது அப்பிரதி அவ்வாறு புறக்குறிப்பிடப்படாது ஒப்படைப்பை ஆளெவரும் அறிந்துகொண்டு வேண்டுமென்றே அதிகாரமளிக்கின்றவிடத்து அல்லது அனுமதிக்கின்றவிடத்து, அவர், வேறேதேனும் பொறுப்புக்குப் பங்கமின்றி தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் இரண்டு இலட்சம் ரூபாவிற்கு மேற்படாத குற்றப்பணமொன்றிற்கு ஆளாதலும் வேண்டும்.

*திருப்தி மற்றும் விடுவித்தல் பற்றிய பதிவீடுகள்.*

**107.** (அ) எத்தனிசுக்கென ஏதேனும் பதிவுசெய்யப்பட்ட தாக்கீடு வழங்கப்பட்டதோ, அத்தனிசு முழுமையாக, அல்லது பகுதியாக செலுத்தப்பட்டுள்ளதென அல்லது திருப்தி செய்யப்பட்டுள்ளதென ; அல்லது

(ஆ) தாக்கீடு செய்யப்பட்ட ஆதனத்தின் அல்லது பொறுப்பு முயற்சியின் ஏதேனும் பாகம் தாக்கீடிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதென அல்லது கம்பெனி ஒன்றின் ஆதனம் அல்லது பொறுப்பு முயற்சியின் ஒரு பாகமாக அமையாதொழிகின்றதென,

பதிவாளர் திருப்திப்படுகின்றவிடத்து, முழுமையான அல்லது பகுதியளவிலான திருப்தி நிருபமொன்றை அல்லது விடயத்திற்கேற்றாற்போன்று ஆதனத்தின் அல்லது பொறுப்பு முயற்சியின் ஒரு பாகம் தாக்கீடிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளது அல்லது கம்பெனியின் ஆதனத்தின் அல்லது பொறுப்பு முயற்சியின் ஒரு பாகமாக அமையாதொழிந்துள்ளது என்னும் நிகழ்வை இடாப்பில் பதியலாம்.

*தாக்கீடுகள் இடாப்பைத் திருத்துதல்.*

**108.** நீதிமன்றமானது –

(அ) இச்சட்டத்தால் தேவைப்படுத்தப்பட்ட காலத்துள் தாக்கீடொன்றைப் பதிவுசெய்யாது விட்டுவிடல் ; அல்லது

(ஆ) ஏதேனும் அத்தகைய தாக்கீடு தொடர்பான அல்லது திருப்தி நிருபத்திலுள்ள ஏதேனும் விவரம் விட்டுவிடல் அல்லது பிறழ்கூற்று,

தற்செயல் நிகழ்வாகுமென அல்லது கருதாப் பிழை காரணமாக அல்லது வேறு ஏதேனும் போதிய காரணத்தினால் நிகழ்ந்தது என அல்லது கம்பெனியின் கடன்தருநர்களின் அல்லது பங்குதாரர்களின் நிலைக்குப் பங்கம் விளைவிக்கக்கூடிய தன்மையுடையதன்று என அல்லது வேறு காரணங்களுக்காக நிவாரணம் வழங்குதல் நீதியானதும் நியாயமானதுமாகும் எனத் திருப்தியடைந்தால், நீதிமன்றமானது, கம்பெனியின் அல்லது அக்கறையுள்ள வேறு எவரேனுமாளின் விண்ணப்பத்தின்மீதும் நீதியானதும் உசிதமானதுமென நீதிமன்றத்திற்குத் தோன்றும் அத்தகைய நியதிகள் நிபந்தனைகள்மீதும், விடயத்திற்கேற் றாற்போன்று பதிவுசெய்தலுக்கான காலம் நீடிக்கப்படுதல் வேண்டும் என அல்லது விட்டுவிடல் அல்லது பிறழ்கூற்று, திருத்தப்படுதல் வேண்டுமெனக் கட்டளையிடலாம்.

**கம்பெனியின் தாக்கீடுகள் இடாப்பு பற்றியனவும், தாக்கீடுகளை உருவாக்கும் சாதனங்களின் பிரதிகள் பற்றியனவுமான ஏற்பாடுகள்**

*தாக்கீடுகளை உருவாக்கும் சாதனங்களின் பிரதிகள் கம்பெனியால் வைத்திருக் கப்படுதல் வேண்டும்.*

**109.** ஒவ்வொரு கம்பெனியும் இப்பாகத்தின்கீழ் பதிவுசெய்யப் படுதல் தேவைப்படுத்தப்படுவதான ஏதேனும் தாக்கீடை உருவாக் கும் ஒவ்வொரு சாதனத்தினதும் பிரதியொன்றை அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தால் அல்லது 116 ஆம் பிரிவின்கீழ் பதிவாளருக்கு அறிவிக்கக்கூடியவாறான அத்தகைய வேறு இடத்தில் வைத்திருத்தல் வேண்டும். ஒரு சீர்நிலைத் தொகுதிக் கடன்களின் தொடர்ச்சி விடயத்தில் அத் தொடர்ச்சியின் தொகுதிக் கடனொன்றின் பிரதியொன்று போதியதாதல் வேண்டும்.

*கம்பெனியின் தாக்கீடுகள் இடாப்பு.*

**110.** (1) ஒவ்வொரு வரையறுக்கப்பட்ட கம்பெனியும் –

(அ) அதன் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தில் அல்லது 116 ஆம் பிரிவின்கீழ் பதிவாளருக்கு அறிவிக்கக்கூடிய வாறான அத்தகைய வேறு இடத்தில் தாக்கீடுகள் இடாப்பு ஒன்றை வைத்திருத்தல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) ஒவ்வொரு விடயத்திலும்,

(i) தாக்கீடு செய்யபப்ட்ட ஆதனத்தின் சுருக்கமான வொரு விவரணம் ;

(ii) தாக்கீட்டின் தொகை ;

(iii) காவுநருக்கான பிணைப்பொறுப்புகள் விடயத்தில் தவிர, தாக்கீடுக்கு உரித்துடைய ஆட்களின் பெயர்கள் ;

என்பவற்றை குறித்துரைப்பனவான கம்பெனியின் ஆதனத்தைக் குறிப்பாகப் பாதிப்பனவான எல்லாத் தாக்கீடுகளையும் கம்பெனியின் பொறுப்பு முயற்சிமீதான அல்லது ஏதேனும் ஆதனம் மீதான எல்லா மிதக்கும் தாக்கீடுகளையும் அந்த இடாப்பில் பதிவீடு செய்தல் வேண்டும்.

(2) இப்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் செய்யப்படத் தேவைப்படுத்தப்படும் ஏதேனும் பதிவீடு செய்யத் தவறப்படுகின்றமையை தெரிந்துகொண்டும் வேண்டுமென்றே அதிகாரமளிக்கின்ற அல்லது அனுமதிக்கின்ற கம்பெனியின் எவரேனும் அலுவலர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் இரண்டு இலட்சம் ரூபாவிற்கு மேற்படாத குற்றப்பணமொன்றிற்கு ஆளாதலும் வேண்டும்.

### தாக்கீடுகள் இடாப்பை மீளாய்வு செய்தல்

*தாக்கீடுகள் இடாப்பை மீளாய்வு செய்தல்.*

**111.** (1) பதிவாளர், காலத்துக்குக்காலம், கம்பெனி ஒன்றுக்கு எழுத்தில் வழங்கப்பட்ட அறிவித்தல்மூலம், அத்தகைய அறிவித்தல் கிடைத்ததன் பதினைந்து வேலை நாட்களினுள் —

(அ) கம்பெனியின் ஆதனம் அல்லது பொறுப்பு முயற்சி தொடர்பில் இப்பாகத்தின்கீழ் அல்லது 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் IIIஆம் பாகத்தின்கீழ் அல்லது (145 ஆம் அத்தியாயமான) கம்பெனிகள் கட்டளைச் சட்டத்தின் III ஆம் பாகத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டனவும் முழுமையாகத் திருப்திசெய்யப்படாத அல்லது வேறுவகையில் கம்பெனியின் ஏதேனும் ஆதனத்திற்கு ஏற்புடைத்தாவதில் இருந்து இல்லாதொழிந்தனவுமான எல்லாத் தாக்கீடுகள் தொடர்பாக 102 ஆம் பிரிவின்கீழ் ஏற்பாடு செய்யப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்படும் விபரங்கள் ;

(ஆ) எந்த சாதனத்தின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியினால் அத்தகைய ஒவ்வொரு தாக்கீடும் உருவாக்கப்படுகிறதோ அல்லது சான்றுப்படுத்தப்படு கிறதோ அந்த சாதனத்தின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி ஏதேனும் இருந்தால் அது ;

(இ) அத்தகைய ஒவ்வொரு தாக்கீடின் பதிவின்மீது பதிவாளரால் வழங்கப்பட்ட, சான்றிதழின் பிரதி ஒன்று ;

(ஈ) இப்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட தகவல் அவரது அறிவுக்கு எட்டியவரையில் அதன் தகவல் ஒவ்வொன்றும் முழுமையானதும் சரியானதுமானதென்பதை உறுதிப்படுத்தி கம்பெனியின் பணிப்பாளர் ஒருவரால் அல்லது செயலாளரினால் சத்தியம்செய்யப்பட்ட அல்லது உறுதிப்படுத்தப்பட்ட சத்தியக்கடதாசி,

என்பவற்றை அவருக்கு ஒப்படைக்குமாறு கம்பெனியைத் தேவைப்படுத்தலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் வழங்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட ஆவணங்களைக் கம்பெனி ஒன்றிடமிருந்து பெற்றதன் பின்னர், பதிவாளர், அவரால் வைத்திருக்கப்படும் தாக்கீடுகள் இடாப்பை மீளாய்வு செய்தல் வேண்டுமென்பதுடன் இடாப்பின் செம்மைத்தன்மையை உறுதிப்படுத்துவதற்குத் தேவைப்படக்கூடியவாறாக இடாப்பில் அத்தகைய பதிவீடுகளைச் செய்தலும் வேண்டும்.

(3) பதிவாளர், இப்பிரிவின் கீழான மீளாய்வொன்றைப் பின்பற்றி, முழுமையான அல்லது பகுதியளவிலான தாக்கீடொன்றின் திருப்தி நிருபமொன்றை அல்லது ஆதனத்தின் அல்லது பொறுப்புமுயற்சியின் பாகம் தாக்கீடிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளது அல்லது கம்பெனியின் ஆதனம் அல்லது பொறுப்பு முயற்சியின் ஒரு பாகமாக அமையாதொழிந்துள்ளது எனும் நிகழ்வை பதிதலாகாது.

(4) கம்பெனி ஒன்று (1) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அறிவித்தலொன்றுடன் இணங்கியொழுகுவதில் தவறுகின்ற விடத்து —

(அ) கம்பெனி தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஐம்பதினாயிரம் ரூபாவிற்கு மேற்படாத குற்றப் பணமொன்றிற்கு ஆளாதலும் வேண்டும் ; அத்துடன்

(ஆ) தவறுகையில் உள்ளவாறான கம்பெனியின் அலுவலர் ஒவ்வொருவரும் தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஐம்பதினாயிரம் ரூபாவிற்கு மேற்படாத குற்றப் பணமொன்றிற்கு ஆளாதலும் வேண்டும்.

**கடல்கடந்த கம்பெனிகளுக்கு இப்பாகத்தின் ஏற்புடைமை**

*கடல்கடந்த கம்பெனி ஒன்றினால் உருவாக்கப் பட்ட தாக்கீடு களுக்கும் கொள்ளப்பட்ட தாக்கீட்டுக்கு அமைவான ஆதனத்திற்கும் இப்பாகத்தின் ஏற்புடைமை.*

**112.** இச்சட்டத்தின் இப்பாகத்தின் ஏற்பாடுகள், கடல்கடந்த கம்பெனி ஒன்றினால், இலங்கையிலுள்ள ஆதனத்தின்மீது உருவாக்கப்பட்ட தாக்கீடுகள் தொடர்பிலும் இலங்கையிலுள்ள கொள்ளப்பட்டதான ஆதனத்தின் மீதான தாக்கீடுகள் தொடர்பிலும் ஏற்புடைத்தாதல் வேண்டும்.

## பாகம் VII

### முகாமையும் நிருவாகமும்

### *பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்*

*கம்பெனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம்.*

**113.** (1) கம்பெனி ஒவ்வொன்றும் பதிவுசெய்யப்பட்ட அலுவலக மொன்றை, இலங்கையில் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அதற்கு எல்லாத் தொடர்பாடல்களும் அறிவித்தல்களும் முகவரியிட்டனுப்பப்படலாம்.

(2) பிரிவு 114ற்கமைய, குறிப்பிட்ட ஒரு நேரத்தில் கம்பெனி ஒன்றின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகம், அந்த நேரத்தில் அதன் பதிவுசெய்யப்பட்ட அலுவலகமாக இடாப்பில் விவரிக்கப்பட்டுள்ள இடமாகும்.

(3) கம்பெனி ஒன்றின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகமானது, எவரேனும் பட்டயக்கணக்காளரின், சட்டத்தரணியின் அல்லது வேறெவரேனும் ஆளின் அலுவலகத்தில் இருந்தால், பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தின் விவரணமானது பின்வருவன வற்றைக் கூறல் வேண்டும் :-

(அ) கம்பெனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் பட்டயக்கணக்காளர், சட்டத்தரணி, அல்லது வேறு எவ ரேனும் ஆளின் அலுவலகத்தில் உள்ளது ; அத்துடன்

(ஆ) அவ் அலுவலகங்களின் அமைவிடத்தின் விவரங்கள்.

பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தை மாற்றுதல்.

**114.** (1) கம்பெனியின் அமைப்பகவிதிகளுக்கும் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கும் அமைய, கம்பெனி ஒன்றின் சபையானது எந்நேரத்திலும் கம்பெனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தை மாற்றலாம்.

(2) மாற்றம் பற்றிய விதித்துரைக்கப்பட்ட படிவத்திலான அறிவித்தல், பதிவுசெய்யப்படுவதற்காக பதிவாளருக்கு வழங்கப் படல் வேண்டும் என்பதுடன் அம்மாற்றமானது பதிவாளரினால் அவ்வறிவித்தல் பெறப்பட்டதன் பின்னர் ஐந்து வேலை நாட்களில் அல்லது அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று பயனுறுதல் வேண்டும்.

பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தை மாற்று வதற்கான தேவைப்பாடு.

**115.** (1) பதிவாளரானவர் -

(அ) அதன் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தில் கம்பெனிக்கு ; அத்துடன்

(ஆ) பதிவாளரிடம் ஒப்படைக்கப்பட்ட ஆவணங்களி லிருந்து கம்பெனியின் பணிப்பாளரொருவராக இருக் கின்றதாகத் தோற்றும் ஒவ்வோர் ஆளுக்கும் அந்த ஆவணங்களில் காட்டப்பட்டுள்ளவாறாக அவரது பிந்திய முகவரியில்,

ஒப்படைக்கப்பட்ட அல்லது அனுப்பப்பட்ட எழுத்திலான அறிவித்தல்மூலம் கம்பெனி ஒன்றை அதன் பதிவுசெய்யப்பட்ட அலுவல கத்தை மாற்றுமாறு தேவைப்படுத்தலாம்.

*(2)* பதிவாளரினால் தேதியிடப்பட்டு கையொப்பமிடப்பட வேண்டியதான அறிவித்தல் -

(அ) அறிவித்தல் பெறப்பட்ட தேதிக்குப் பின்னர் இருபது வேலைநாட்களுக்கு முன்னரான தேதி ஒன்றாகவிராத அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட தேதி ஒன்றின் மூலம் கம்பெனியானது அதன் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தை மாற்றுமாறு தேவைப்படுத்தப்பட்டுள்ளது என்பதையும் ;

(ஆ) அம்மாற்றம் தேவைப்படுவதற்கான காரணங்களையும் ; அத்துடன்

(இ) அத்தகைய தேவைப்பாட்டிற்கு எதிராக 472 ஆம் பிரிவின்கீழ் நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்வதற்கான உரிமையைக் கம்பெனி கொண்டுள்ளது என்பதையும்,

குறிப்பிடுதல் வேண்டும்.

*(3)* கம்பெனியானது அதன் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தை —

(அ) அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தேதியளவில் ; அல்லது

(ஆ) நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்திருந்து அத்துடன் மேன்முறையீடு விலக்கப்பட்டிருந்தால், நீதிமன்றத்தின் தீர்மானத்தின் பின்னர் ஐந்து வேலை நாட்களினுள்,

மாற்றுதல் வேண்டும்.

*(4)* கம்பெனி ஒன்றானது இப்பிரிவுடன் இணங்கியொழுகத் தவறுகின்றவிடத்து —

(அ) கம்பெனி தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்

மேல் ஐம்பதினாயிரம் ரூபாவிற்கு மேற்படாத குற்றப் பணமொன்றிற்கு ஆளாதலும் வேண்டும் ; அத்துடன்

(ஆ) தவறுகையில் உள்ளவரான கம்பெனியின் ஒவ்வொரு அலுவலரும் தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப் பணமொன்றிற்கு ஆளாதலும் வேண்டும்.

**கம்பெனிப் பதிவேடுகள்**

கம்பெனிப் பதிவேடுகளின் அமைவிடம்.

***116.*** (1) மூன்றாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, கம்பெனி ஒன்று அதன் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தில் பின்வரும் ஆவணங்களை வைத்திருத்தல் வேண்டும் :-

(அ) கூட்டிணைப்புச் சான்றிதழும் கம்பெனியின் அமைப்பக விதிகளும் ;

(ஆ) இறுதிப் பத்து வருடங்களினுள் நடந்த எல்லாக் கூட்டங்களினதும் நிகழ்ச்சிக் குறிப்புக்களும் நிறைவேற்றப்பட்ட பங்குதாரர்களின் தீர்மானங்களும் ;

(இ) அத்தகைய இடாப்பொன்றை வைத்திருக்கவேண்டிய அவசியம் இல்லாததான தனியார் கம்பெனி ஒன்றாக அது இருந்தால் ஒழிய, அக்கறைகள் இடாப்பொன்று;

(ஈ) இறுதிப் பத்து வருடங்களினுள் நடைபெற்ற எல்லாக் கூட்டங்களினதும் நிகழ்ச்சிக் குறிப்புக்களும் நிறைவேற்றப்பட்ட பணிப்பாளர்களின் தீர்மானங்களும் பணிப்பாளர்களின் குறிப்புக்களும் ;

(உ) இறுதிப் பத்து வருடங்களினுள் இச்சட்டத்தின்கீழ் பணிப்பாளர்களினால் வழங்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட சான்றிதழ்கள் ;

(ஊ) பிரிவு 223இன்கீழ் வைத்திருக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட, பணிப்பாளர்களினதும், செயலாளர்களினதும் இடாப்பு ;

(எ) பிரிவு 166 இன் கீழ் தயாரிக்கப்பட்ட வருடாந்த அறிக்கைகள் உட்பட இறுதிப் பத்து வருடங்களின் போதான எல்லாப் பங்குதாரர்களுக்கும் அல்லது ஒரே வகுப்பினதான பங்குகளை வைத்திருப்போர் எல்லோருக்குமான எல்லா எழுத்திலான கடிதத் தொடர்புகளினதும் பிரதிகள் ;

(ஏ) கம்பெனியின் பூரணமாக்கப்பட்ட இறுதிப் பத்து வருட கணக்கீட்டுக் காலப்பகுதிகளுக்காக இச்சட்டத்தின்கீழ் நிறைவேற்றப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப் பட்ட எல்லா நிதிக் கூற்றுக்களினதும் குழு நிதிக்கூற்றுக் களினதும் பிரதிகள் ;

(ஐ) தாக்கீடுகளை உருவாக்குகின்ற அல்லது சான்றுப் படுத்துகின்ற சாதனங்களின் பிரதிகளும் 109 ஆம் , 110 ஆம் பிரிவுகளின்கீழ் வைத்திருக்கப்படவேண்டு மெனத் தேவைப்படுத்தப்பட்ட தாக்கீடுகளின் இடாப்பும் ;

(ஒ) பிரிவு 123 இன் கீழ் வைத்திருக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட பங்கு இடாப்பு ;

(ஓ) கம்பெனியின் நடைமுறைக் கணக்கீட்டுக் காலப் பகுதிக்கும் பூரணமாக்கப்பட்ட இறுதிப்பத்து கணக் கீட்டுக் காலப்பகுதிகளுக்குமாக 148 ஆம் பிரிவின்கீழ் வைத்திருக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத் தப்பட்ட கணக்கீட்டுப் பதிவேடுகள்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், பத்து வருட காலப்பகுதிகளுக்கான, (1) ஆம் உட்பிரிவின் (ஆ), (ஈ), (உ) மற்றும் (எ) எனும் பந்திகளிலுள்ள குறிப்பீடுகளும் பத்து பூரண மாக்கப்பட்ட கணக்கீட்டுக் காலப்பகுதிக்கான, அவ்வுட்பிரிவின் (ஏ) மற்றும் (ஓ) எனும் பந்திகளிலுள்ள குறிப்பீடுகளும், அவ்வாறு செய்வது அவசியமானதும் பொருத்தமானதும் எனப் பதிவாளர் கருதுகின்றவிடத்து அவரினால் ஒரு குறைந்த காலப்பகுதிக்குக் குறைக்கப்படலாம்.

(3) (அ) ஓராம் உட்பிரிவின் (அ) முதல் (ஐ) வரையிலான பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆவணங் கள் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தில் அல்லாது இலங்கையில் ஒரு இடத்தில் வைத்திருக்கப்பட லாம், இது பற்றிய அறிவித்தல் பதிவாளருக்கு, (4)ஆம் உட்பிரிவுக்கிணங்க வழங்கப்படவேண்டும் ;

(ஆ) ஓராம் உட்பிரிவின் (ஒ) எனும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆவணங்கள், 124 ஆம் பிரிவுக் கிணங்க, பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தில் அல்லாத ஒரு இடத்தில் வைத்திருக்கப்படலாம் ;

(இ) ஓராம் உட்பிரிவின் (ஓ) எனும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆவணங்கள், 149 ஆம் பிரிவுக் கிணங்க, பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தில் அல்லாத ஒரு இடத்தில் வைத்திருக்கப்படலாம்.

(4) கம்பெனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தில் ஏதேனும் பதிவேடுகள் வைக்கப்படவில்லையானால் அல்லது அப்பதிவேடு கள் வைத்திருக்கப்படும் இடம் மாற்றப்பட்டால் கம்பெனியானது விடயத்திற்கேற்றாற்போல அப்பதிவேடுகள் முதலாவதாக வைத்திருக்கப்படும் அல்லது வேறெங்காயினும் மாற்றப்படும் நாளிலிருந்து பத்து வேலை நாட்களுக்குள்ளாக அப்பதிவேடுகள் வைத்திருக்கப்படும் இடம் அல்லது இடங்கள் பற்றி பதிவாளருக்கு அறிவித்தல் கொடுக்கப்படுவதை கம்பெனி உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(5) கம்பெனி ஒன்று (1) ஆம் உட்பிரிவின் அல்லது (4) ஆம் உட்பிரிவின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகத் தவறினால் —

(அ) கம்பெனி தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டு மென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் இரண்டு இலட்சம் ரூபாவிற்கு ஆளாதலும் வேண்டும்; அத்துடன்

(ஆ) தவறுகையில் உள்ளவரான கம்பெனியின் ஒவ்வொரு அலுவலரும் தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஒரு இலட்சம் ரூபாவிற்கு மேற்படாத குற்றப்பண மொன்றிற்கு ஆளாதலும் வேண்டும்.

**117.** (1) கம்பெனி ஒன்றின் பதிவேடுகள் எழுத்திலான படிவத்தில் அல்லது பதிவேடுகளை உள்ளடக்கும் ஆவணங்களும் தகவலும் தெளிவாக அணுகக் கூடியதும் எழுத்திலான படிவத்திற்கு மாற்றப்படக்கூடியதுமான இலகுவில் அணுகக்கூடியதுமான ஒரு படிவத்தில் அல்லது முறையில் வைத்திருக்கப்படுதல் வேண்டும். பதிவேடுகளின் படிவம்.

(2) ஒரு கம்பெனியானது பதிவேடுகள் பொய்யாக்கப்படுவனைத் தடுப்பதற்கும் அவைகளின் ஏதேனும் பொய்யாக்கலைக் கண்டு பிடிப்பதற்கும் போதிய வழிவகைகள் இருக்கின்றன என்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(3) கம்பெனி ஒன்று (2) ஆம் உட்பிரிவின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகத் தவறுகின்றவிடத்து –

(அ) கம்பெனியானது தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் இரண்டு இலட்சம் ரூபாவிற்கு மேற்படாத குற்றப் பணமொன்றிற்கு ஆளாதலும் வேண்டும் ; அத்துடன்

(ஆ) கம்பெனியின் தவறுகையில் உள்ளவரான அலுவலர் ஒவ்வொருவரும், தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஒரு இலட்சம் ரூபாவிற்கு மேற்படாத குற்றப்பண மொன்றிற்கு ஆளாதலும் வேண்டும்.

### கம்பெனிப் பதிவேடுகளைப் பார்வையிடுதல்

**118.** (1) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, கம்பெனி ஒன்றின் பணிப்பாளர் ஒவ்வொருவரும், நியாயமான அறிவித்தலை வழங்கியதன்மேல், பணிப்பாளரினால் குறித்துரைக்கப்படும் நியாயமானதொரு நேரத்தில், கட்டணமின்றி, கம்பெனியின் எழுத்திலான பதிவேடுகளைப் பார்வையிடுவதற்கு உரித்துடையவராவார். பணிப்பாளர்களினால் பதிவேடுகள் பார்வையிடப்படுதல்.

(2) கம்பெனியால் அதன் சார்பில் விண்ணப்பமொன்று செய்யப்பட்டதன்மேல் –

(அ) பணிப்பாளர் ஒருவர் பதிவேடுகளைப் பார்வையிடுவது கம்பெனியின் நலனுக்கு உகந்ததல்லதென ; அல்லது

(ஆ) உத்தேச பார்வையிடுதலானது பணிப்பாளரது கடமைகளுடன் சரியாகப் பொருந்தாத நோக்கத்திற்கானதென

நீதிமன்றம் திருப்திப்பட்டால், பார்வையிடுவதற்காக பதிவேடுகளை கிடைக்கப்பாலதாகச் செய்தலானது என அல்லது அவற்றைப் பார்வையிடுதலை அது பொருத்தமானதென எண்ணுகின்ற ஏதேனும் முறையில் வரையறுக்குமாறு பணிக்கலாம்.

பங்குதாரர்களினால் கம்பெனிப் பதிவேடுகள் பார்வையிடப் படுதல்.

**119.** (1) பிரிவு 120 கீழ் பொதுமக்கள் பார்வையிடுதலுக்காக பதிவேடுகள் கிடைக்கப்பாலதாகச் செய்யப்படுவதற்கு மேலதிகமாக, கம்பெனி ஒன்று, கம்பெனியின் பங்குதாரரினால் அல்லது கம்பெனி மீதான பார்வையிடுதலுக்கான அத்தகைய நோக்கம் பற்றிய எழுத்திலான அறிவித்தலொன்றைச் சேர்ப்பிக்கின்றவரான, அந்நோக்கத்திற்கென பங்குதாரினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பெற்ற ஆள் ஒருவரினால் 121 ஆம் பிரிவில் விவரிக்கப்பட்டுள்ள முறையில் பார்வையிடுதலுக்காக பின்வரும் பதிவேடுகளைக் கிடைக்கப்பாலதாக வைத்திருத்தல் வேண்டும் :—

(அ) பங்குதாரர்களின் எல்லாக் கூட்டங்களினதும் தீர்மானங்களினதும் குறிப்புகள் ;

(ஆ) வருடாந்த அறிக்கைகள், நிதிக்கூற்றுக்கள் மற்றும் தொகுதி நிதி கூற்றுக்கள் உட்பட, முற்போந்த பத்து ஆண்டுகளின் போதான, எல்லாப் பங்குதாரர்களுக்கும் அல்லது ஒரு வகுப்பைச் சார்ந்த பங்குகளைக் கொண்டவர்களான எல்லோருக்குமான எழுத்திலான தொடர்பாடல்களின் பிரதிகள் ;

(இ) இச்சட்டத்தின்கீழ் பணிப்பாளர்களினால் வழங்கப்பட்ட சான்றிதழ்கள் ; அத்துடன்

(ஈ) கம்பெனியின் அக்கறைகள் இடாப்பு.

(2) கம்பெனி ஒன்று (1) ஆம் உட்பிரிவின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகத் தவறுகின்றவிடத்து —

(அ) கம்பெனி தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் , இரண்டு இலட்சம் ரூபாவிற்கு மேற்படாத குற்றப்பணமொன்றிற்கு ஆளாதலும் வேண்டும் ; அத்துடன்

(ஆ) தவறுகையில் உள்ள கம்பெனியின் அலுவலர் ஒவ்வொருவரும் தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஒரு இலட்சம் ரூபாவிற்கு மேற்படாத குற்றப்பணமொன்றிற்கு ஆளாதலும் வேண்டும்.

கம்பெனிப் பதிவேடுகளின் பகிரங்கப் பார்வையிடுதல்.

**120.** (1) கம்பெனி மீதான பார்வையிடுதலுக்கான அத்தகைய நோக்கம் பற்றிய எழுத்திலான அறிவித்தலைச் சேர்ப்பிக்கின்றவாறான எவரேனும் ஆளினால் 121 ஆம் பிரிவில் விவரிக்கப்பட்டுள்ள முறையில் கம்பெனி ஒன்று பின்வரும் பதிவேடுகளைப் பார்வையிடுதலுக்குக் கிடைக்கற்பாலதாக வைத்திருத்தல் வேண்டும் :–

(அ) கம்பெனியின் கூட்டிணைத்தற் சான்றிதழ் ;

(ஆ) அவை மாதிரி அமைப்பகவிதிகளாக இல்லாதிருந்தால் கம்பெனியின் அமைப்பகவிதிகள் ;

(இ) பங்கு இடாப்பு ;

(ஈ) பணிப்பாளர்களினதும் செயலாளர்களினதும் இடாப்பு ;

(உ) கம்பெனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தின் விபரங்கள் ;

(ஊ) தாக்கீடுகளை உருவாக்குகின்ற அல்லது சான்றுப்படுத்துகின்ற சாதனங்களின் பிரதிகளும் 109 ஆம், 110 ஆம் பிரிவுகளின்கீழ் வைக்கப்பட்டுள்ள தாக்கீடுகளின் இடாப்பும்.

(2) கம்பெனி ஒன்று (1) ஆம் உட்பிரிவின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகத் தவறுகின்றவிடத்து –

(அ) கம்பெனி தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் இரண்டு இலட்சம் ரூபாவிற்கு மேற்படாத குற்றப்பணமொன்றிற்கு ஆளாதலும் வேண்டும் ; அத்துடன்

(ஆ) தவறுகையில் உள்ள கம்பெனியின் அலுவலர் ஒவ்வொருவரும் தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஒரு இலட்சம் ரூபாவிற்கு மேற்படாத குற்றப்பண மொன்றிற்கு ஆளாதலும் வேண்டும்.

பார்வையிடும் முறை.

**121.** (1) பிரிவு 119 அல்லது பிரிவு 120 கீழ் பார்வையிடப்படக் கூடிய ஆவணங்கள், பார்வையிடும் காலப்பகுதியின் போது ஒவ்வொரு வேலை நாளும் மு.ப. 9.00 மணிக்கும் பி.ப. 4.00 மணிக்கும் இடையில், கம்பெனியின் பதிவேடுகள் வைக்கப்பட்டுள்ளதான இடத்தில், பார்வையிடுதலுக்காக கிடைக்கப்பாலதாக விருத்தல் வேண்டும்.

(2) ஆவணத்தின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி ஒன்று சம்பந்தப்பட்ட ஆளுக்கு அல்லது பங்குதாரருக்கு, கட்டணமின்றி வழங்கப்பட்டிருந்தால், (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள முறையில் ஆவணமொன்று பார்வையிடுதலுக்காக கிடைக்கப்பாலதாகச் செய்யப்படுதல் அவசியமற்றதாகும்.

(3) இப்பிரிவில், "பார்வையிடும் காலப்பகுதி" என்னும் சொற்றொடர், சம்பந்தப்பட்ட ஆளினால் அல்லது பங்குதாரரினால் பார்வையிடுதலுக்கான நோக்கம் பற்றிய அறிவித்தலானது கம்பெனிக்குச் சேர்ப்பிக்கப்பட்ட நாளினை பின்வரும் மூன்றாம் வேலை நாள் அன்று தொடங்கி சேர்க்கப்பட்ட நாளிற்குப் பின்னரான எட்டாவது வேலை நாளன்று முடிவடையும் காலப்பகுதி என்று பொருளாகும்.

ஆவணங்களின் பிரதிகள்.

**122.** (1) ஆளொருவர், 119 ஆம் பிரிவின்கீழ் அல்லது 120 ஆம் பிரிவின்கீழ் அவரால் பார்வையிடுதலுக்கென கிடைக்கப்பாலதாகச் செய்யப்பட்டுள்ள ஆவணமொன்றின் பிரதியொன்றை அல்லது பிரித்தெடுக்கப்பட்ட பகுதியை, அத்தகைய பிரதியின் அல்லது பிரித்தெடுக்கப்பட்ட பகுதிக்காக அவர் எழுத்திலான

வேண்டுகோள் ஒன்றைச் செய்ததன் பின்னரும் கம்பெனியால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான நியாயமான பிரதிபண்ணும் மற்றும் நிருவாகக் கட்டணத்தைச் செலுத்தியதன் பின்னரும் ஐந்து வேலை நாட்களினுள் அவருக்கு அனுப்பி வைக்குமாறு, தேவைப் படுத்தலாம்.

(2) கம்பெனி ஒன்று (1) ஆம் உட்பிரிவின்கீழ் எவரேனும் ஆளினால் செய்யப்பட்ட வேண்டுகோளுடன் இணங்கியொழுகை யில் ஆவணமொன்றின் பிரதி ஒன்றை அல்லது பிரிதெடுக்கப்பட்ட பகுதியை வழங்கத் தவறுகின்றவிடத்து —

(அ) கம்பெனி தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டு மென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஐம்பதினாயிரம் ரூபாவிற்கு மேற்படாத குற்றப்பண மொன்றிற்கு ஆளாதலும் வேண்டும் ; அத்துடன்

(ஆ) தவறுகையில் உள்ளவாறான கம்பெனியின் ஒவ்வொரு அலுவலரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஐம்பதினாயிரம் ரூபாவிற்கு மேற்படாத குற்றப் பணமொன்றிற்கு ஆளாதலும் வேண்டும்.

### பங்கு இடாப்பு

கம்பெனி, பங்கு இடாப்பைப் பேணுதல்.

**123.** (1) பங்குகளை வழங்கியுள்ள கம்பெனி ஒவ்வொன்றும், பின்வருவனவற்றைக் கொண்டுள்ளதும் கம்பெனியால் வழங்கப் பட்ட பங்குகளைப் பதிவீடு செய்துள்ளதுமான பங்கு இடாப்பொன் றைப் பேணுதல் வேண்டும்

(அ) கடந்த பத்து ஆண்டுகளின்போது பங்குதாரர் ஒருவ ராக இருக்கின்றவரான அல்லது இருந்தவரான ஒவ் வொரு ஆளினதும் பெயரும் கடைசியாக அறியப்பட்ட முகவரியும் ;

(ஆ) கடந்த பத்து ஆண்டுகளுக்குள் ஒவ்வொரு பங்குதாரரி னாலும் வைத்திருக்கப்படும் ஒவ்வொரு வகுப்பினதான பங்குகளின் எண்ணிக்கை ;

(இ) கடந்த பத்தாண்டுகளுக்குள் ஒவ்வொரு பங்குதார ருக்குமான —

(i) பங்குகளின் ஏதேனும் வழங்கலின் ;

(ii) அவர்களிடமிருந்து பங்குகள் மீளக் கொள் வனவு செய்யப்பட்ட அல்லது மீட்கப்பட்ட ; அல்லது

(iii) அவர்களினால் அல்லது அவர்களுக்கான பங்குகளின் கைமாற்றல்,

தேதியும், கைமாற்றம் தொடர்பில், யாருக்கு அல்லது யாரிட மிருந்து பங்குகள் கைமாற்றம் செய்யப்பட்டனவோ அவ்வாளின் பெயரும்.

(2) கம்பெனி ஒன்று (1) ஆம் உட்பிரிவின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகத் தவறுகின்றவிடத்து –

(அ) கம்பெனி தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் இரண்டு இலட்சம் ரூபாவிற்கு மேற்படாத குற்றப் பணமொன்றிற்கு ஆளாதலும் வேண்டும் ; அத்துடன்

(ஆ) தவறுகையில் உள்ளவரான கம்பெனியின் ஒவ்வொரு அலுவலரும் தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஒரு இலட்சம் ரூபாவிற்கு மேற்படாத குற்றப் பணமொன்றிற்கு ஆளாதலும் வேண்டும்.

பங்கு இடாப்பு இடம்.

**124.** (1) கம்பெனி ஒன்றின் பங்கு இடாப்பு, அவை அமைப்பக விதிகளினால் அந்நோக்கத்திற்கென அனுமதிக்கப்பட்டிருந்தால், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட இடாப்புக்களாகப் பிரிக்கப் பட்டு வெவ்வேறு இடங்களில் வைக்கப்படலாம்.

(2) பிரதான இடாப்பானது இலங்கையில் வைத்திருக்கப்படல் வேண்டும்.

(3) பங்கு இடாப்பொன்றானது, வெவ்வேறு இடங்களில் வைத்திருக்கப்படும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட இடாப்பு களாகப் பிரிக்கப்பட்டுள்ளவிடத்து –

(அ) ஒவ்வொரு இடாப்பும வைத்திருக்கப்பட்டுள்ள இடம் பற்றிய அறிவித்தல், பங்கு இடாப்பானது அவ்வாறு பிரிக்கப்பட்டதன் அல்லது இடாப்பு வைத்திருக்கப் படும் இடமானது மாற்றப்பட்டதன் பின்னர் பத்து வேலை நாள்களினுள் பதிவாளருக்கு ஒப்படைக்கப் படல் வேண்டும் ;

(ஆ) ஒவ்வொரு இடாப்பினதும் பிரதி ஒன்று பிரதான இடாப்பானது வைத்திருக்கப்பட்டுள்ள இடத்தில் வைத்திருக்கப்படல் வேண்டும் ; அத்துடன்

(இ) பிரதான இடாப்பில் தவிர, இடாப்பொன்றும் பதிவு ஒன்று செய்யப்பட்டிருந்தால் நேரொத்த பதிவொன்று, பிரதான இடாப்புடன் வைத்திருக்கப்படும் அவ்விடாப் பின் பிரதியில், பத்து வேலை நாட்களினுள் செய்யப் படுதல் வேண்டும்.

(4) பங்கு இடாப்பானது பிரிக்கப்படாதிருக்குமிடத்தும், பிரதான இடாப்பானது கம்பெனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தில் வைத்திருக்கப்படாதிருக்குமிடத்தும், அது வைத்திருக்கப்படும் இடம் பற்றிய அறிவித்தல், அது அங்கு வைத்திருக்கப்படா தொழிந்ததன் பின்னர் அல்லது அது வைத்திருக்கப்பட்டுள்ள இடமானது மாற்றப்பட்டதன் பின்னர் பத்து வேலை நாட்களினுள் பதிவாளருக்கு ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.

(5) இப்பிரிவில், கம்பெனி ஒன்று தொடர்பில் “பிரதான இடாப்பு” என்பது –

(அ) பங்கு இடாப்பானது இரண்டு அல்லது அதற்கு மேற் பட்ட இடாப்புக்களாகப் பிரிக்கப்படாதிருந்தால், பங்கு இடாப்பு என்று ;

(ஆ) பங்கு இடாப்பானது இரண்டு அல்லது அதற்கு மேற் பட்ட இடாப்புக்களாகப் பிரிக்கப்பட்டிருந்தால், பதிவா ளருக்கு அனுப்பப்பட்ட கடைசி அறிவித்தலில் பிரதான இடாப்பாக விபரிக்கப்பட்டுள்ள இடாப்பு என்று,

பொருள்படும்.

(6) கம்பெனி ஒன்று (3) ஆம் உட்பிரிவின் அல்லது (4) ஆம் உட்பிரிவின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகத் தவறுகின்றவிடத்து –

(அ) கம்பெனி தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஓரிலட்சம் ரூபாவிற்கு மேற்படாத குற்றப்பணமொன்றிற்கு ஆளாதலும் வேண்டும் ; அத்துடன்

(ஆ) தவறுகையில் உள்ளவாரான கம்பெனியின் ஒவ்வொரு அலுவலரும் தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கு ஆளாதலும் வேண்டும்.

இலங்கைக்கு வெளியே இடாப்பில் பதிவு செய்யப் பட்டுள்ள பங்குகளின் விடயத்தில் முத்திரைத் தீர்வைகள்.

**125.** இலங்கைக்கு வெளியே வைக்கப்பட்டுள்ள இடாப்பு ஒன்றில் பதிவுசெய்யப்பட்டுள்ள பங்கு ஒன்றைக் கைமாற்றம் செய்யும் சாதனமொன்று இலங்கைக்கு வெளியே அமைந்துள்ள ஆதனத்தின் கைமாற்றமொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் இலங்கையில் எழுதி நிறைவேற்றப்பட்டாலன்றி இலங்கையில் விதிக்கப்படற்பாலதான முத்திரைத் தீர்வையிலிருந்து அதற்கு விலக்களிக்கப்படுதலும் வேண்டும்.

பங்குதாரர் களின் சுட்டு.

**126.** (1) ஐம்பது பங்குதாரர்களுக்குக் கூடுதலானவர்களைக் கொண்டுள்ள கம்பெனி ஒவ்வொன்றும், (பங்கு இடாப்பு அதனிலேயே ஒரு சுட்டாக அமைவதான அத்தகையவொரு படிவத்தில் இருந்தாலன்றி,) கம்பெனியின் பங்குதாரர்களின் பெயர்களின் சுட்டொன்றை வைத்திருத்தல் வேண்டுமென்பதுடன் பங்கு இடாப்பில் ஏதேனும் மாற்றம் செய்யப்படுகின்ற தேதியிலிருந்து பத்து வேலை நாட்களினுள் அச்சுட்டில் அவசியமான ஏதேனும் மாற்றத்தைச் செய்தலும் வேண்டும்.

(2) சுட்டானது ஒவ்வொரு பங்குதாரர் தொடர்பிலும், இடாப்பில் அந்த பங்குதாரரின் கணக்கை இலகுவில் கண்டுபிடிக்கக் கூடியதாக போதிய சுட்டுதலைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) இப்பிரிவின்கீழ் வைக்கப்பட்ட சுட்டொன்று, 129 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவானது ஏற்புடைத்தாகின்றதான கம்பெனி ஒன்றின் பெயரைக் கொண்டிருக்கின்றவிடத்து, எந்த

ஆளின் அல்லது ஆட்களின் நன்மைக்கு அக்கம்பெனியின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள பங்குகள் நம்பிக்கையில் வைத்திருக்கப்பட்டுள்ளதோ அந்த ஆள் அல்லது ஆட்கள் தொடர்பில் அக்கம்பெனியால் வழங்கப்படும் எல்லா எழுத்திலான அறிவித்தல்களும் அச்சுட்டுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(4) கம்பெனி ஒன்று (1) ஆம் உட்பிரிவின், (2) ஆம் உட்பிரிவின் அல்லது (3) ஆம் உட்பிரிவின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகத் தவறுகின்றவிடத்து –

(அ) கம்பெனி தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஓரிலட்சம் ரூபாவிற்கு மேற்படாத குற்றப்பணமொன்றிற்கு ஆளாதலும் வேண்டும் ; அத்துடன்

(ஆ) தவறுகையில் உள்ளவரான கம்பெனியின் அலுவலர் ஒவ்வொருவரும் தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஐம்பதினாயிரம் ரூபாவிற்கு மேற்படாத குற்றப் பணமொன்றிற்கு ஆளாதலும் வேண்டும்.

**127.** கம்பெனியொன்று வர்த்தமானியிலும் கம்பெனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அமைந்துள்ளதும் பங்கு இடாப்பு வைக்கப்பட்டிருப்பதுமான மாவட்டத்தில் விநியோகிக்கப்படும் ஏதேனும் புதினப் பத்திரிகையிலும் வெளியிடப்பட்ட அறிவித்தலின் பின்னர், ஒவ்வோர் ஆண்டிலும் முழுவதுமாக முப்பது வேலை நாட்களுக்கு மேற்படாத ஏதேனும் காலத்திற்கு அல்லது காலங்களுக்கு பங்கு இடாப்பை மூடலாம்.

இடாப்பை மூடுவதற்கான தத்துவம்.

**128.** (1) (அ) எவரேனுமாளின் பெயர், போதிய காரணமின்றி, கம்பெனியின் பங்கு இடாப்பில் பதிவீடு செய்யப்படுகின்றவிடத்து அல்லது அதிலிருந்து விட்டு விடப்படுகின்றவிடத்து ; அல்லது

இடாப்பைத் திருத்துவதற்கான நீதிமன்றத்தின் தத்துவம்.

(ஆ) எவரேனும் ஆள் பங்குதாரரொருவராக இல்லாதொழிந்துவிட்டால் எனும் நிகழ்வை இடாப்பில் பதிவீடு செய்வதில் தவறுகை செய்யப்படுகின்றவிடத்து அல்லது அவசியமற்ற தாமதம் ஏற்படுகின்றவிடத்து,

இன்னலுறும் ஆள் அல்லது கம்பெனி அல்லது கம்பெனியின் எவரேனும் பங்குதாரர், இடாப்பைத் திருத்துவதற்கென நீதிமன்றத்திற்கு விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.

(2) இப்பிரிவின்கீழ் விண்ணப்பமொன்று செய்யப்படுகின்ற விடத்து, நீதிமன்றமானது, இடாப்பு திருத்தப்படுதலுக்கும் இன்னலுறும் எவரேனும் திறத்தவரினால் உறப்பட்ட ஏதேனும் சேதங்களை கம்பெனி செலுத்துதலுக்கும் கட்டளையிடலாம்.

(3) இப்பிரிவின்கீழ் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றின் மீது நீதிமன்றமானது —

(அ) அவரது பெயரை இடாப்பில் பதிவீடு செய்வித்துக் கொள்வதற்கான அல்லது அதிலிருந்து விட்டுவிடுதலை செய்வித்தற்கான விண்ணப்பத்திற்குத் திறத்தவரான எவரேனும் ஆளின் உரித்து தொடர்பான எவ்வினாவையும், அவ்வினா பங்குதாரர்களுக்கிடையில் எழுவதாயினுஞ்சரி அல்லது பங்குதாரர்களெனச் சார்த்தப்பட்டோருக்கிடையில் எழுவதாயினுஞ்சரி அல்லது ஒரு திறம் பங்குதாரர்கள் அல்லது பங்குதார்களெனச் சார்த்தப்பட்டோருக்கும் மறுதியும் கம்பெனிக்குமிடையில் எழுவதாயினுஞ்சரி ; அத்துடன்

(ஆ) இடாப்பின் திருத்தத்திற்கான முடிவுக்கு அவசியமான அல்லது உசிதமான வேறேதேனும் வினாவையும்,

முடிவுசெய்யலாம்.

(4) நீதிமன்றமானது இடாப்பைத் திருத்துவதற்குப் பணித்து கட்டளையொன்றைச் செய்தால், கம்பெனி கட்டளை செய்யப்பட்ட பத்து வேலை நாட்களினுள் கட்டளையின் பிரதி ஒன்றைப் பதிவாளருக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

(5) கம்பெனி ஒன்று (4) ஆம் உட்பிரிவின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகத் தவறுகின்றவிடத்து —

(அ) கம்பெனி தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்

மேல் ஓரிலட்சம் ரூபாவிற்கு மேற்படாத குற்றப்பண மொன்றிற்கு ஆளாதலும் வேண்டும் ; அத்துடன்

(ஆ) தவறுகையில் உள்ளவாறான கம்பெனியின் ஒவ்வொரு அலுவலரும், தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பண மொன்றிற்கு ஆளாதலும் வேண்டும்.

நம்பிக்கைப் பொறுப்புகள் பங்கு இடாப்பில் பதிவீடு செய்யப் படுதலாகாது.

**129.** (1) இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட கம்பெனிகளின் விடயத்தில் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, வெளிப் படையான, உட்கிடையான அல்லது அமைத்துருவான ஏதேனும் நம்பிக்கைப் பொறுப்புப் பற்றிய அறிவித்தல் எதுவும் பங்கு இடாப்பில் பதிவீடு செய்யப்படுதலாகாது அல்லது பதிவாளரால் பெற்றுக்கொள்ளப்படற்பாலதுமாகாது.

(2) (அ) 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கையில் பிணைப்பொறுப்புக்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பெற்ற பங்குப் பரிவர்த்தனைத் தொகுதி ஒன்றிற்கான மத்திய வைப்பகம் ஒன்றாகச் செயலாற்றுவதே அதன் பிரதான தொழிலாக உள்ள ; அத்துடன்

(ஆ) அச்சட்டத்தால் தாபிக்கப்பட்ட இலங்கையின் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக் குழுவுடனான கலந்தாலோசனையில் அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டனவுமான,

ஒரு கம்பெனியாக இருக்கும் ஏதேனும் நம்பிக்கைப் பொறுப்பின் நம்பிக்கைப்பொறுப்பாளர் பற்றிய அறிவித்தலைக் கம்பெனியானது அதன் இடாப்பில் பதிதல் வேண்டும் என்பதுடன் பதிவாளர் அதனைப் பொறுத்தலும் வேண்டும்.

பங்கு இடாப்பு சான்றாதல்.

**130.** (1) பங்கு ஒன்றை வைத்திருப்பவராக பங்கு இடாப்பில் ஆளொருவரின் பெயரைப் பதிவீடு செய்தல் பங்கிற்கான உரித்து அவ்வாளில் உரித்தாக்கப்பட்டுள்ளது என்பதற்கு முதற்றோற்றச் சான்றாதல் வேண்டும்.

(8) இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாடுகள் அல்லது கம்பெனி யொன்றின் அமைப்பக விதிகள் எது எவ்வாறிருப்பினும், திறை சேரியின் செயலாளர் கம்பெனியொன்றின் பங்கொன்றினை வைத் திருப்பவராக இருக்குமிடத்து, பங்கை வைத்திருப்பவராக திறை சேரியின் செயலாளரின் சம்மதம் அத்தகைய தீர்மானத்திற்கு சார்பாக வாக்களித்தாலன்றி இப்பிரிவில் குறிப்பீடுசெய்யப்படும் தீர்மானமெதுவும் வலிதுடையதாத லாகாது.

விசேட அறிவித்தல் தேவைப்படும் தீர்மானங்கள்.

**145.** இச்சட்டத்தில் இதனகத்துப்பின்னர் அடங்கியுள்ள ஏதே னும் ஏற்பாட்டினால், தீர்மானமொன்று பற்றி விசேட அறிவித்தல் தேவைப்படுத்தப்படுமிடத்து அத்தீர்மானம் பிரேரிக்கப்படுகின்ற கூட்டத் தேதிக்கு முன்னராக இருபத்தெட்டு நாட்களுக்குக் குறையாமல், அதனைப் பிரேரிப்பதற்கான முன்னம் பற்றிய அறிவித்தல் கம்பெனிக்குக் கொடுக்கப்பட்டிருந்தாலன்றி, அத்தீர்மானம் பயனுறுவதாதலாகாது ; அத்துடன் கம்பெனியா னது அக்கூட்டம் பற்றி, அறிவித்தல் கொடுக்கும் அதே நேரத்திலும் அதேமுறையிலும் அத்தகைய ஏதேனும் தீர்மானம் பற்றி பங்கு தாரர்களுக்கு அறிவித்தல் கொடுத்தல் வேண்டும் ; அல்லது அது சாத்தியமில்லாவிட்டால், கூட்டத் தேதிக்கு முன்னராக பதினைந்து வேலை நாட்களுக்குக் குறையாமல் தோதான விநியோகமுள்ள புதினப்பத்திரிகையொன்றில் விளம்பரம்மூலம் அல்லது கம்பெனியின் அமைப்பக விதிகளால் அனுமதிக்கப்பட்ட வேறு ஏதேனும் முறையில் அதுபற்றி அவர்களுக்கு அறிவித்தல் கொடுத் தல் வேண்டும் :

ஆயின், அத்தகையவொரு தீர்மானத்தைப் பிரேரிப்பதற்கான முன்னம் பற்றிய அறிவித்தல் கொடுக்கப்பட்ட பின்னர், அறிவித் தல் தேதியிலிருந்து இருபத்தெட்டு நாட்கள் அல்லது அதற்குக் குறைவான நாட்கள் கொண்ட தேதியொன்றில் கூட்டமொன்று கூட்டப்படுமிடத்து அறிவித்தலானது இப்பிரிவால் தேவைப்படுத் தப்படும் காலப்பகுதியினுள் கொடுக்கப்பட்டிராதபோதிலும், அதன் நோக்கங்களுக்காக தகுந்த முறையில் கொடுக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

ஒத்தி வைக்கப்பட்ட கூட்டங்களின் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.

**146.** நியமிக்கப்பட்ட தேதிக்கு பின்னர் —

(அ) கம்பெனியொன்றின் ;

(ஆ) கம்பெனியொன்றின் ஏதேனும் வகுப்பைச் சார்ந்த பங்குகளை வைத்திருப்பவர்களின் ;

(இ) கம்பெனியொன்றின் பணிப்பாளர்களின், ஒத்திவைக் கப்பட்ட கூட்டமொன்றில் தீர்மானமொன்று நிறைவேற் றப்படுகின்றவிடத்து, அத்தீர்மானம் எல்லா நோக்கங் களுக்காகவும், அது உண்மையாக நிறைவேற்றப்பட்ட தேதியன்று நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், முந்திய தேதியன்று நிறைவேற் றப்பட்டதாகக் கருதப்படுதலுமாகாது.

*பங்குதாரர்கள் கூட்டங்களினதும் பணிப்பாளர்கள் கூட்டங்களினதும் நடவடிக்கை நிகழ்ச்சிக் குறிப்புகள்.*

**147.** (1) ஒவ்வொரு கம்பெனியும், பொதுக்கூட்டங்களினதும் அதன் பணிப்பாளர்களின் கூட்டங்களினதும், எல்லா நட வடிக்கைகளினதும், நிகழ்ச்சிக் குறிப்புகளை அந்த நோக்கத்துக் கென வைத்திருக்கப்படும் புத்தகங்களில் பதிவீடுசெய்யப்படச் செய்வித்தல் வேண்டும்.

(2) நடவடிக்கைகள் எந்தக் கூட்டத்தில் மேற்கொள்ளப் பட்டனவோ அந்தக் கூட்டத்தின் தவிசாளரால், அல்லது அதனை யடுத்து அமையும் கூட்டத்தின் தவிசாளரால் ஒப்பமிட்டதாகக் கொள்ளப்படும் எவையேனும் அத்தகைய நிகழ்ச்சிக் குறிப்புகள், அத்தகைய நடவடிக்கைகளுக்கான சான்றாதல் வேண்டும்.

(3) விடயத்திற்கேற்றவாறு, ஏதேனும் பொதுக்கூட்டத்தில் அல்லது கம்பெனியின் பணிப்பாளர்களின் கூட்டமொன்றிலான நடவடிக்கைகள் பற்றிய கூட்ட நிகழ்ச்சிக் குறிப்புகள் இப்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்கச் செய்யப்பட்டுள்ளவிடத்து, அதற்கு முரணானது எண்பிக்கப்படும்வரை கூட்டம் தகுந்தமுறையில் நடாத்தப்பட்டு கூட்டப்பட்டதெனக் கருதப்படுதல் வேண்டுமென் பதுடன் அக்கூட்டத்தில் செய்யப்பட்ட பணிப்பாளர்கள் முகாமை யாளர்கள் அல்லது ஒழிப்போரது எல்லா நியமனங்களும் செல்லுபடியுடையனவெனவும் கருதப்படுதல் வேண்டும்.

(4) கம்பெனியொன்றின் ஒவ்வொரு பணிப்பாளரும் முன்னை நாட் பணிப்பாளரும், அவர் அக்கம்பெனியின் பணிப்பாளரொருவ ராக இருக்கும் போதான அல்லது இருந்த போதான காலப் பகுதியின்போது நடாத்தப்பட்ட அத்தகைய கம்பெனியின் பணிப் பாளர் சபையினது எல்லாக் கூட்டங்களினதும் கூட்ட நிகழ்ச்சிக் குறிப்புக்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளைக் கம்பெனிச் செயலாளரிடமிருந்து பெறுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(5) கம்பெனியொன்று (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுகின்றவிடத்து, –

(அ) கம்பெனி தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஓரிலட்சம் ரூபாவை விஞ்சாததான குற்றப்பணத் திற்கு ஆளாதலும் வேண்டும் ; அத்துடன்

(ஆ) கம்பெனியின் தவறுகைக்குட்படும் ஒவ்வொரு அலுவலரும், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாததான குற்றப் பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

**கணக்குப் பதிவேடுகள்**

கணக்குப் பதிவேடுகளை வைத்திருப்ப தற்கான கடமை.

**148.** (1) ஒவ்வொரு கம்பெனியும் கம்பெனியினது கொடுக்கல் வாங்கலை சரியானமுறையில் பதிவுசெய்கின்றதும் விளக்குவது மான கணக்குப் பதிவேடுகளை வைத்திருத்தல் வேண்டும். அத்து டன் அப்பதிவேடுகள் –

(அ) கம்பெனியின் நிதி நிலைமையை எந்நேரத்திலும் நியாயமான செம்மையுடன் தீர்மானிக்கப்பட இயலச் செய்கின்றவாறாகவும் ;

(ஆ) இந்தச் சட்டத்திற்கிணங்க நிதிக் கூற்றுக்களைத் தயாரிப் பதற்கு பணிப்பாளர்களை இயலச்செய்வனவாகவும் ; அத்துடன்

(இ) கம்பெனியின் நிதிக்கூற்றுக்களை உடனடியாக தகுந்த முறையிலும் கணக்காய்வுக்குட்படுத்துவதுடன் இயலச் செய்வனவாகவும் இருத்தல் வேண்டும்.

(2) ஒராம் உட்பிரிவில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளை மட்டுப்படுத்தாமல் கணக்குப் பதிவேடுகள் பின்வருவனவற்றைக் கொண்டனவாகவிருத்தல் வேண்டும் :–

(அ) ஒவ்வொருநாளும் கம்பெனியால் பெற்றுக்கொள்ளப் படுவதும் செலவழிக்கப்படுவதுமான பணத்தினது

பதிவுகளும் அத்துடன் அத்தகையனவும் எக்கருமங்கள் தொடர்பில் செலவழிக்கப்பட்டுள்ளதோ அக்கருமங்களும் ;

(ஆ) கம்பெனியினது சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய பதிவேடு ;

(இ) கம்பெனியினது தொழில் பொருட்களைக் கையாள்வதில் சம்பந்தப்பட்டிருந்தால், —

(i) ஒவ்வொரு சில்லறை வியாபாரத்தைக் கொண்டு நடாத்துகின்ற ஒரு சாதாரண நெறிமுறையின் போது காசுக்காக விற்கப்பட்ட பொருள் தவிர்ந்த, பொருட்களின் வாங்கலுக்கும் விற்றலுக்குமான ஒரு பதிவேடு, அது பொருள்களையும், வாங்குவோரையும், விற்போரையும் ; அத்துடன் இயைபான பட்டியல்களையும் கொண்டு நடாத்தப்படும்.

(ii) நிதியாண்டின் போதான ஏதேனும் கையிருப்பெடுத்தலுக்கான பதிவேடுகளுடன் சேர்த்து, நிதியாண்டின் முடிவில் உள்ள கையிருப்பின் பதிவேடொன்று.

(ஈ) கம்பெனியினது தொழில் சேவைகளை வழங்குவதில் சம்பந்தப்பட்டிருந்தால், வழங்கப்பட்ட சேவைகளின் பதிவேடொன்றும் அத்துடன் இயைபான பட்டியல்களும்.

(3) கம்பெனியொன்று இப்பிரிவின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகத் தவறுகின்றவிடத்து —

(அ) கம்பெனியானது தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாததான குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும் ; அத்துடன்

(ஆ) கம்பெனியின் தவறுகைக்குட்பட்ட ஒவ்வொரு அலுவலரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாததான குற்றப் பணமொன்றுக்கு ஆளாதல் வேண்டும்

கணக்குப் பதிவேடுகள் வைத்திருக்கப் பட்டிருக்கும் இடம்.

**149.** (1) கம்பெனியொன்று இலங்கையில் அதனது கணக்குப் பதிவேடுகளை வைத்திருத்தல் வேண்டும். எவ்வாறாயினும் பதிவாளர், தேசிய பொருளாதாரத்திற்கு அல்லது கம்பெனியின் பங்குதாரரின் நலனுக்குப் பங்கமில்லையெனக் கருதினால் அவர் கம்பெனியொன்றை இலங்கைக்கு வெளியே அதனது கணக்குப் பதிவேடுகளை வைத்திருப்பதற்கு அனுமதிக்கலாம்.

(2) பதிவேடுகள் இலங்கையில் வைத்திருக்கப்படாவிட்டால் –

(அ) (i) கம்பெனியின் நிதி நிலைமைகளை நியாயமான செம்மையுடன், ஆறு மாதங்களை விஞ்சாத கால இடைவெளிகளில் வெளிக்காட்டுகின்ற ;அத்துடன்

(ii) இச்சட்டத்திற்கிணங்க, கம்பெனியினது நிதிக் கூற்றுகள் மற்றும் ஏதேனும் தொகுதி நிதிக் கூற்றுக்களையும் அத்துடன் இச்சட்டத்தின்கீழ் பேணப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படுவதால் வேறு ஆவணத்தையும் தயாரிப்பதனை இயலச் செய்கின்ற ;

கம்பெனியின் செயற்பாடுகளுக்கான கணக்குகளும் விபரத் திரட்டுக்கும் இலங்கைக்கு அனுப்பப்பட்டு இலங்கையிலுள்ள ஓரிடத்தில் வைத்திருக்கப்படுவதனை கம்பெனியானது உறுதி செய்தல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) பந்தி (அ) என்பதன்கீழ் தேவைப்படுத்தப்பட்ட கணக்குப் பதிவேடுகளும் கணக்குகளும் விபரத் திரட்டுகளும் எவ்விடத்தில் வைக்கப்படுகின்றதோ அவ்விடம் பற்றிய அறிவித்தல் பதிவாளருக்குக் கொடுக்கப்படல் வேண்டும்.

(3) கம்பெனியொன்று (2) ஆம் உட்பிரிவின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகத் தவறுகின்றவிடத்து –

(அ) கம்பெனியானது தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாததான குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும் ; அத்துடன்

(ஆ) கம்பெனியின் தவறுகைக்குட்படுகின்ற ஒவ்வொரு அலுவலரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாததான குற்றப்பணமொன்றுக்கு ஆளாதல் வேண்டும்.

**நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கான கடமை**

நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கான கடப்பாடு.

**150.** (1) கம்பெனியின் ஐந்தொகைத் தேதிக்குப் பின்னர் ஆறு மாதங்களுக்குள் அல்லது பதிவாளரால் தீர்மானிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய நீடிக்கப்பட்ட காலத்தினுள், ஒவ்வொரு கம்பெனியின் சபையும் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகின்ற நிதிக் கூற்றுக்களானவை, —

(அ) கம்பெனி தொடர்பிலும் அவ் ஐந்தொகை திகதி தொடர்பிலும் பூர்த்தி செய்யப்பட்டது ;

(ஆ) நிதிக்கூற்றுக்கள் இச்சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கிணங்க உள்ளது என அதன் தயாரிப்புக்கு பொறுப்பான ஆளினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டது ; அத்துடன்

(இ) கம்பெனியின் சார்பில் கம்பெனியிலுள்ள இரண்டு பணிப்பாளர்களாலும் அல்லது கம்பெனி ஒரு பணிப்பாளரை மட்டும் கொண்டிருந்தால் அந்தப் பணிப்பாளராலும் தேதியிடப்பட்டு ஒப்பமிடப்பட்டது

என்று உறுதிப்படுத்தல் வேண்டும்.

(2) ஒராம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுடன் சபை இணங்கியொழுகத் தவறுகின்றவிடத்து, கம்பெனியின் தவறுகைக்குட்பட்ட ஒவ்வொரு பணிப்பாளரும் தவறொன்றுக்குக்

குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப் பட்டதன்மேல் ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பண மொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

*நிதிக் கூற்றுக்களின் உள்ளடக்கமும் வடிவமும்.*

**151.** (1) கம்பெனியொன்றின் நிதிக்கூற்றுக்கள் –

(அ) ஐந்தொகை திகதியன்றுள்ளவாறாகக் கம்பெனியின் அலுவல்களின் நிலைமை ; அத்துடன்

(ஆ) அவ் ஐந்தொகைத் திகதியன்று முடிவடைகின்ற கணக்கீட்டுக் காலத்திற்கான விடயத்திற்கேற்றவாறு கம்பெனியின் இலாபம் அல்லது நட்டம் அல்லது வரவு செலவு,

பற்றி உண்மையானதும் நேரியதுமான நோக்குமதிப்பீடொன்றைக் கொடுத்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளை மட்டுப்படுத்தாமல் கம்பெனியின் நிதிக் கூற்றுக்கள் பின்வருவன வற்றுடன் இணங்கியொழுகுதல் வேண்டும் :–

(அ) நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கத்தையும் வடிவத்தை யும் குறிப்பிடுகின்ற, இந்தச் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகள் ; அத்துடன்

(ஆ) வேறு ஏதேனும் சட்டத்தின்கீழ் கம்பெனியின் நிதிக் கூற்றுக்களுக்கு ஏற்புடையனவான எவையேனும் தேவைப்பாடுகள்.

*தொகுதி நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பதற்குள்ள கடப்பாடு.*

**152.** (1) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க, கம்பெனியின் ஐந்தொகைத் திகதியன்று ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட துணைநிலைக் கம்பெனிகளை வைத்திருக்கும் கம்பெனி யின் சபையானது 150 ஆம் பிரிவுடன் இணங்கியொழுகுகின்ற மைக்கு மேலதிகமாக அப்பிரிவில் குறிப்பிடப்பட் திகதியினுள் 153ஆம் பிரிவுடன் இணங்கியொழுகுகின்ற தொகுதி நிதிக் கூற்றுக் கள் :–

(அ) அத்தகு தொகுதி மற்றும் அந்த ஐந்தொகைத் தேதி தொடர்பிலும் பூர்த்திசெய்யப்பட்டது ;

(ஆ) நிதிக் கூற்றுக்கள் இச்சட்டத்தின் தேவைப்பாடுகளுக் கிணங்க உள்ளது என அதன் தயாரிப்புக்குப் பொறுப் பான ஆளினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டது ; என்ப துடன்

(இ) கம்பெனியின் சார்பில் இரண்டு பணிப்பாளர்களாலும் அல்லது கம்பனி ஒரு பணிப்பாளரை மட்டுமே கொண்டிருந்தால் அந்தப் பணிப்பாளர் திகதியிடப் பட்டு ஒப்பமிடப்பட்டது.

(2) கம்பெனியொன்று ஐந்தொகைத் திகதியன்று வேறொரு கம்பெனியின் முழுமையாகச் சொந்தமாகவுள்ள துணைநிலைக் கம்பெனியாக இருந்தால், அக்கம்பெனி தொடர்பில், ஐந்தொகைத் திகதி மற்றும் தொகுதி நிதிக்கூற்றுகள் தேவைப்படுத்தப் படுதல் ஆகாது.

(3) ஓராம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுடன் சபையானது இணங்கியொழுகத் தவறுகின்றவிடத்து, கம்பெனி யின் தவறுகைக்குட்பட்ட ஒவ்வொரு பணிப்பாளரும் தவறொன்றுக் குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப் பட்டதன் மேல் ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாததான குற்றப் பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

*தொகுதி நிதிக் கூற்றுக்களின் உள்ளடக்கமும் வடிவமும்.*

**153.** (1) தொகுதியொன்றின் நிதிக்கூற்றுக்கள் –

(அ) ஐந்தொகைத் தேதியன்று உள்ளவாறாக கம்பெனியின தும் அதனது துணைக் கம்பெனிகளினதும் அலுவல் களின் நிலைமை ; அத்துடன்

(ஆ) அந்த ஐந்தொகைத் தேதியன்று முடிவடைகின்ற கணக் கீட்டுக் காலத்திற்கான விடயத்திற்கேற்றவாறு கம்பெனியினதும் அதனது துணைக் கம்பெனியினதும் இலாபம் அல்லது நட்டம் அல்லது வரவு, செலவு,

பற்றிய உண்மையானதும் நேரியதுமான நோக்கு மதிப்பீடொன் றைக் கொடுத்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளை மட்டுப்படுத்தாமல் தொகுதியொன்றின் நிதிக் கூற்றுக்கள் பின்வருவனவற்றுடன் இணங்கியொழுகுதல் வேண்டும் :—

(அ) தொகுதி நிதிக் கூற்றுக்களின் உள்ளடக்கத்தையும் வடிவத்தையும் குறிப்பிடுகின்ற இந்தச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகள் ; அத்துடன்

(ஆ) வேறேதேனும் சட்டத்தின்கீழ் தொகுதி நிதிக்கூற்றுகளுக்கு ஏற்புடையதான எவையேனும் தேவைப்பாடுகள்.

(3) தொகுதி நிதிக் கூற்றுகள் எந்தக் கணக்கீட்டுக் காலத்திற்கு தொடர்புடையதாகவிருக்கின்றதோ அக்கணக்கீட்டுக் காலத்தின் போது துணைநிலைக் கம்பெனியொன்று, கம்பெனியொன்றின் துணைநிலைக் கம்பெனியாக வருமிடத்து, அத்தொகுதிக்கான திரட்டிய இலாப நட்டக் கூற்று அல்லது திரட்டிய வரவு செலவுக் கூற்றானது, அது ஒரு துணைநிலைக் கம்பெனியொன்றாக எந்தக் கணக்கீட்டுக் காலத்தின் போதான ஒவ்வொரு பாகத்திற்கும் அத்துடன் அக்கணக்கீட்டுக் காலத்தின் வேறு ஏதேனும் பாகத்திற்கு இல்லாமல் துணைநிலைக் கம்பெனியின் இலாபம் அல்லது நட்டத்துடன் தொடர்புடையதாதல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, கம்பெனியொன்றின், துணை நிலைக் கம்பெனியொன்றின் ஐந்தொகைத் திகதியானது அக்கம்பெனியின் ஐந்தொகை திகதிபோன்று இல்லாது இருக்குமிடத்து, தொகுதி நிதிக் கூற்றுகள், —

(அ) துணைநிலைக் கம்பெனியின் ஐந்தொகைத் திகதியானது அக்கம்பெனியின் ஐந்தொகைத் திகதியை மூன்று மாதங்களை விட அதிகமாக முற்போகாது இருந்தால், அத்திகதில் முடிவடைகின்ற, கணக் கீட்டுக் காலத்திற்கான துணைநிலைக் கம்பெனியின் நிதிக்கூற்றுகளை உள்ளடக்குவதாதல் வேண்டும். அல்லது கம்பெனியின் கணக்கீட்டுக்காலத்தைப் போன்ற ஒரு காலம் தொடர்பில் பூர்த்திசெய்யப்பட்ட துணை நிலைக் கம்பெனியின் இடைக்கால நிதிக்கூற்றுகளை உள்ளடக்குவதாதல் வேண்டும் ; அல்லது

(ஆ) வேறு ஏதேனும் விடயத்தில், கம்பெனியின் கணக்கீட்டுக் காலத்தைப் போன்ற ஒரு காலம் தொடர்பில் பூர்த்திசெய்யப்பட்ட துணைநிலைக் கம்பெனியின் இடைக்கால நிதிக் கூற்றுக்களைக் உள்ளடக்குவதாதல் வேண்டும்.

(5) மூன்றாம், ஆறாம் உட்பிரிவுகளினதும் ஏற்பாடுகளுக்கமைவாக, தொகுதி நிதிக் கூற்றுக்கள், 151 ஆம் பிரிவுக்கிணங்க தயாரிக்கப்பட்டு கம்பெனியின் ஒவ்வொரு துணைநிலைக் கம்பெனியினதும் நிதிக்கூற்றுகளை உள்ளடக்குவதாதல் வேண்டும்.

(6) ஏழாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக —

(அ) சம்பந்தப்பட்ட மிகச் சிறிய தொகை என்ற நோக்கில் அவ்வாறு செய்வதற்கு அது நடைமுறைச் சாத்திய மற்றது அல்லது கம்பெனியின் பங்குதாரர்களுக்கு உண்மையான பெறுமதி இருக்காது அல்லது பங்குதாரர்களின் பெறுமதியின் விகிதாசாரத்திற்கு மேலாக செலவுக்குட்படும் அல்லது தாமதமாகும் என்று ;

(ஆ) விளைவானது, கம்பெனியினை அல்லது ஏதேனும் அதனது துணைநிலைக் கம்பெனிகளை பிழையாக வழிநடத்துவதாக அல்லது அவற்றுக்கு தீங்கானதாக இருக்கும் என்று ;

(இ) அக்கம்பெனியினதும் அதன் துணைநிலைக் கம்பெனியினதும் மிகவும் வித்தியாசமாகவிருந்து அவை ஒரே ஒரு பொறுப்புமுயற்சி போல் நியாயமாகக் கருதப்பட முடியாது என்று,

கம்பெனியின் சபையானது அபிப்பிராயப்படுகின்றவிடத்து, ஒரு கம்பெனியால் தயாரிக்கப்பட்ட தொகுதி நிதிக்கூற்றுகள் அந்தக் கம்பெனியின் துணைநிலைக் கம்பெனியொன்றின் நிதிக்கூற்றுகள் உள்ளடக்கப்படத் தேவையில்லை.

(7) பதிவாளர் பொருத்தமானதென்று கருதுகின்றதான அத்தகைய நியதி நிபந்தனைகள் மீது கொடுக்கப்படக்கூடியதான பதிவாளரின் எழுத்திலான முன் அங்கீகாரமின்றி ஒரு கம்பெனியினால்

தயாரிக்கப்பட்ட தொகுதி நிதிக்கூற்றுகள் (6) ஆம் உட்பிரிவின்கீழ் அந்தக் கம்பெனியின், துணைநிலைக் கம்பெனியின் நிதிக்கூற்று களை தவிர்த்துவிடுதலாகாது.

**கணக்காய்வாளர்**

*கணக்காய்வாளர் நியமனம்.*

**154.** (1) ஒரு கம்பெனியானது ஒவ்வொர் ஆண்டுக்கூட்டத்தி லும் —

(அ) அந்தக் கூட்ட முடிவிலிருந்து அடுத்த ஆண்டுக்கூட்ட முடிவுவரை பதவி வகிப்பதற்கு ; அத்துடன்

(ஆ) எவ் ஐந்தொகைத் திகதிக்கு நிதிக்கூற்றுகள் கணக்காய்வு செய்யப்பட்டதோ அவ் ஐந்தொகைத் திகதியின் அடுத் துப் பின்னர் கணக்கீட்டுக் காலத்திற்கான கம்பெனி யின் நிதிக்கூற்றுகளையும் அத்துடன் கம்பெனியானது தொகுதி நிதிக்கூற்றுகளை தயாரிக்கும்படி தேவைப் படுத்தப்பட்டால் அந்தத் தொகுதி நிதிக்கூற்றுகளையும் கணக்காய்வு செய்வதற்கு,

கணக்காய்வாளர் ஒருவரை நியமித்தல் வேண்டும்.

(2) கணக்காய்வாளர் பதவியிலான ஏதேனும் அமைய வெற்றி டத்தை கம்பெனியொன்றின் சபை நிரப்பலாம். ஆனால், அவ் வெற்றிடம் தொடர்ந்திருக்கும் வேளையில் எஞ்சியிருக்கும் அல்லது தொடர்ந்திருக்கும் கணக்காய்வாளர் எவரேனுமிருப்பின் அவர் கணக்காய்வாளராக தொடர்ந்து கடமையாற்றலாம்.

(3) (அ) கம்பெனியொன்றின் ஆண்டுப் பொதுக்கூட்ட மொன்றில் கணக்காய்வாளர் அல்லது மீளநிய மனம் செய்யப்படாதவிடத்து அத்துடன் (2) ஆம் உட்பிரிவின்கீழ் தீர்மானம் எதுவும் நிறைவேற்றப் படாதவிடத்து ; அல்லது

(ஆ) கணக்காய்வாளர் பதவிக்கான அமைய வெற்றிட மொன்று அத்தகைய வெற்றிடம் நிகழ்ந்து ஒரு மாதத்தினுள் நிரப்பப்படாதவிடத்து ;

பதிவாளர் கணக்காய்வாளர் ஒருவரை நியமிக்கலாம்.

(4) மூன்றாம் உட்பிரிவின்கீழ் கணக்காய்வாளர் ஒருவரை நியமிப்பதற்கு உரித்துடையதான பதிவாளரின் தத்துவம் பிரயோகிக்கப்படற்பாலதாய் வரும் திகதியிலிருந்து ஐந்து வேலைநாட்களுக்குள் கம்பெனியொன்று அந்நிகழ்வு பற்றிய எழுத்திலான அறிவித்தலைப் பதிவாளருக்கு கொடுத்தல் வேண்டும்.

(5) கம்பெனியானது நான்காம் உட்பிரிவின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகத் தவறுகின்றவிடத்து, —

(அ) அக்கம்பெனி தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாததான குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும் ; அத்துடன்

(ஆ) அக்கம்பெனியின் தவறுகைக்குட்படும் ஒவ்வொரு அலுவலரும் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாததான குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

*கணக்காய்வாளர்களின் கட்டணங்களும் செலவுகளும்.*

**155.** ஒரு கம்பெனியின் கணக்காய்வாளர் ஒருவரின் கட்டணங்களும் செலவுகளும், —

(அ) கணக்காய்வாளர் கம்பெனியின் கூட்டமொன்றில் நியமிக்கப்பட்டால் அத்தகைய கூட்டத்தில் கம்பெனியினால் அல்லது அக்கூட்டத்தில் கம்பெனி தீர்மானிக்கின்றவாறு அத்தகைய முறையில் நிர்ணயிக்கப்படல் வேண்டும் ;

(ஆ) கணக்காய்வாளர் பணிப்பாளர்களால் நியமிக்கப்பட்டால் பணிப்பாளர்களால் நிர்ணயிக்கப்படல் வேண்டும் ; அல்லது

(இ) கணக்காய்வாளர் பதிவாளரால் நியமிக்கப்பட்டால் பதிவாளரால் நிர்ணயிக்கப்படல் வேண்டும்.

*கணக்காய்வாளராக பங்குடைமையை நியமித்தல்.*

**156.** (1) பங்குடைமையொன்றின் பங்காளர்களின் கம்பெனியொன்றில் கணக்காய்வாளர்களாக நியமிக்கப்பட்டிருப்பதற்கு தகுதிவாய்ந்த ஆட்களாக இருந்தால், அப்பங்குடைமை அக்கம்பெனியின் கணக்காய்வாளராக இருப்பதற்கு குழுமத்தின் பெயரால் நியமிக்கப்படலாம்.

(2) நூற்றைம்பத்தேழாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, கம்பெனியொன்றின் கணக்காய்வாளராக இருப்பதற்கு குழுமத்தின் பெயரால் பங்குடைமையொன்றின் நியமனமானது, காலத்திற்குக்காலம் குழுமத்தில் பங்காளர்களாக இருக்கும் எல்லா ஆட்களினதும் நியமனமாகக் கருதப்படுதல் வேண்டும்.

*கணக்காய்வாளரின் தகைமைகள்.*

**157.** (1) ஆளொருவர், அவர் -

(அ) இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் உறுப்பினர் ஒருவராக ; அல்லது

(ஆ) பதிவுசெய்யப்பட்ட ஒரு கணக்காளராக இருந்தாலன்றி, கம்பெனியொன்றின் கணக்காய்வாளரொருவராக, நியமிக்கப்படுதலோ அல்லது கடமையாற்றுதலோ ஆகாது.

(2) ஒராம் உட்பிரவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் ஆளொரு வர் அவர் இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தின் உறுப்பினரொருவராக இருந்தாலன்றி, அந்த ஆள் தனியார் கம்பெனியொன்று அல்லது உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பெனியொன்று அல்லாத கம்பெனியொன்றின் கணக்காய்வாளரொருவராக நியமிக்கப்படுதலோ அல்லது கடமையாற்றுதலோ ஆகாது.

(3) பின்வரும் ஆட்கள் எவரும் கம்பெனியொன்றின் கணக்காய்வாளரொருவராக நியமிக்கப்படுதலோ அல்லது கடமையாற்றுதலோ ஆகாது :—

(அ) கம்பெனியின் பணிப்பாளர் அல்லது ஊழியர் ;

(ஆ) கம்பெனியின் பங்காளர் ஒருவராக உள்ள ஆளொருவர் அல்லது கம்பெனிப் பணிப்பாளரின் ஊழியத்திலுள்ள ஒருவர் அல்லது கம்பெனி ஊழியர் ஒருவர் ;

(இ) ஒழிப்போன் ஒருவர் அல்லது நிருவாகி ஒருவர் அல்லது கம்பெனியின் ஆதனம் தொடர்பில் பெறுநர் ஒருவர் ;

(ஈ) கூட்டிணைக்கப்பட்ட குழு ஒன்று ;

(உ) பந்தி (அ), (ஆ) அல்லது (இ) என்பவற்றின் பயனைக் கொண்டு ஆளொருவர் தொடர்புபட்ட கம்பெனி ஒன்றின் கணக்காய்வாளராக நியமிக்கப்படுதலோ கடமையாற்றுதலோ ஆகாது.

(4) மூன்றாம் உட்பிரிவின் (அ), (ஆ) அல்லது (இ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் பதவியை வகிக்கின்றவரான ஆளொருவர், அத்தகைய ஆள் அப்பதவியை வகிக்காதொழிந்த பின்னர் இரண்டாண்டு காலப்பகுதிக்குக் கம்பெனியொன்றின் கணக்காய்வாளரொருவராக நியமிக்கப்படாதிருக்கலாம் அல்லது செயலாற்றாதிருக்கலாம்.

(5) பின்வருவனவற்றுக்கு ஏற்பாடுசெய்வதற்காக ஒழுங்குவிதிகள் ஆக்கப்படலாம் :—

(அ) பதிவுசெய்யப்பட்ட கணக்காய்வாளர் ஒருவராக வருவதற்கு அவசியமான தகுதிகள் ;

(ஆ) கணக்காய்வாளர்களைப் பதிவுசெய்வதற்கான நடவடிக்கைமுறை ;

(இ) அத்தகைய பதிவுசெய்தலுக்காக செலுத்தப்படற்பாலதான கட்டணங்கள்.

சுயமான மீள் நியமனம்.

**158.** (1) நூற்றைம்பத்தொன்பதாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட கம்பெனியின் கணக்காய்வாளர் ஒருவர் தவிர, கம்பெனியொன்றின் கணக்காய்வாளர் ஒருவர் -

(அ) அவர் நியமனத்திற்கான தகைமையற்றவராக இருந்தாலன்றி ;

(ஆ) கூட்டத்தில் கம்பெனியானது, அவருக்குப் பதிலாக வேறொருவரை நியமிப்பதான தீர்மானமொன்றை நிறைவேற்றினாலன்றி ; அல்லது

(இ) கணக்காய்வாளர், அவர் மீள நியமிக்கப்படுவதற்கு விரும்பவில்லை என்று அறிவித்தல் கொடுத்திருந்தாலன்றி,

கம்பெனியின் ஆண்டுப் பொதுக் கூட்டமொன்றில் மீள நியமிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) கணக்காய்வாளர் ஒருவர், அவருக்குப் பதிலாக நியமிக்கப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கின்ற ஆள் இறந்தால், அல்லது அவ்வாறு நியமிக்கப்படுவதற்கு அவர் தகுதியற்றவராக இருந்தால் அல்லது தகுதியற்றவராக வந்தால் அல்லது அவ்வாறு நியமிக்கப்படுவதிலிருந்து தகைமையற்றவரானால், சுயமாகவே மீளநியமிக்கப்படமாட்டார்.

முதலாவது கணக்காய்வாளர் நியமனம்.

**159.** (1) கம்பெனியொன்றின் முதலாவது கணக்காய்வாளர் முதலாவது ஆண்டுப் பொதுக்கூட்டத்திற்கு முன்னர் கம்பெனியின் சபையினால் நியமிக்கப்படலாம் அத்துடன் அவ்வாறு நியமிக்கப்பட்டால் அந்தக் கூட்டம் முடியும்வரை பதவிவகிப்பார்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் கணக்காய்வாளர் ஒருவரைச் சபை நியமிக்காதுவிட்டால், கம்பெனியானது கம்பெனிக் கூட்டமொன்றில் முதலாவது கணக்காய்வாளரை நியமித்தல் வேண்டும்.

(3) கணக்காய்வாளர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை என்று பங்குதாரர்களால் ஏகமனதான தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டால், அப்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க கணக்காய்வாளர் ஒருவரை நியமிப்பதற்கு சபையோ அல்லது கம்பெனியோ தேவைப்படுத்தப்பட மாட்டாது. அத்தகைய ஒரு தீர்மானம் முதலாவது வருடாந்தக் கூட்ட ஆரம்பத்தில் பயனுடையதாகதொழிதல் வேண்டும்.

*கணக்காய்வாளரை மாற்றீடு செய்தல்.*

**160.** (1) கம்பெனியானது –

(அ) அவ்வாறு செய்வதற்கான உத்தேசமொன்று பற்றிய ஆகக்குறைந்தது இருபது நாட்கள் எழுத்திலான அறிவித்தலை கணக்காய்வாளருக்கு கொடுத்திருந்தாலன்றி ; அத்துடன்

(ஆ) ஒன்றில் எழுத்திலாயினும்சரி அல்லது கணக்காய்வாளராலாயினும்சரி அல்லது பங்குதாரர்களின் கூட்டத்தில் அவரது பிரதிநிதி உரையாற்றுவதன்மூலம் வேறோர் ஆளின் நியமனத்தின்மீது பங்குதாரர்களுக்கு முறையீடு செய்வதற்கு நியாயமான சந்தர்ப்பத்தைக் கணக்காய்வாளர் கொடுத்திருந்தாலன்றி,

மீள நியமிக்கப்படுவதற்கு தகுதியுடைய கணக்காய்வாளரின் இடத்தில் புதிய கணக்காய்வாளர் ஒருவரை நியமித்தல் ஆகாது.

(2) இப்பிரிவின்கீழ் பங்குதாரர்களுக்கு முறையீடு செய்வதற்காக கணக்காய்வாளர் ஒருவர் நியாயமான கட்டணங்களும் செலவுகளும் கம்பெனியினால் கொடுக்கப்படுவதற்கு உரித்துடையவராவார்.

*கணக்காய்வாளராக பதவி வகிக்கா தொழிகின்ற ஆளினால் செய்யப்படும் கூற்று.*

**161.** (1) கணக்காய்வாளர் ஒருவர் பதவி விலகினால் அல்லது வேறு காரணங்களுக்காக பதவி வகிக்காதொழிந்தால் கம்பெனியில் பங்குதாரர்கள் அல்லது கம்பெனியின் கடன்தருநர்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்படவேண்டுமென அவர் கருதும், அவர் பதவிவகிக்காதொழிந்தமையுடன் தொடர்புபட்ட வேறு எவையேனும் சூழ்நிலைகள் பற்றிய ஒரு கூற்றை, அல்லது அத்தகைய எவையும் இல்லையென்று கருதினால் எதுவும் இல்லையென்றொரு கூற்றை கம்பெனிக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

(2) கணக்காய்வாளர் -

(அ) பதவி விலகினால், பதவி விலகல் அறிவித்தலுடன் ;

(ஆ) மீள நியமிக்கப்படுவதற்குத் தான் விரும்பவில்லை என அவர் அறிவித்தல் கொடுத்தால் அவ்வறிவித்தலுடன்;

(இ) வேறேதேனும் காரணத்திற்காக அவர் பதவிவகிக்கா தொழிந்தால் பதவிவகிக்காதொழிந்த பத்து வேலை நாட்களுக்குள்ளாக,

ஓராம் உட்பிரிவின்கீழ் தேவைப்படுத்தப்படும் கூற்று அவரால் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

(3) கணக்காய்வாளர், பங்குதாரர்களது அல்லது கடன்தருநர் களது கவனத்திற்குக் கொண்டுவரப்படவேண்டுமென நம்புகின்ற சூழ்நிலைகளைக் கூறியிருந்தால், கம்பெனியானது -

(அ) பங்குதாரர் ஒவ்வொருவருக்கும் கூற்றின் பிரதி யொன்று அனுப்புதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) பதிவாளருக்குக் கூற்றின் பிரதியொன்றை ஒப்படைத்த லும் வேண்டும் :

ஆயின், அக் கம்பெனியானது, (அக்கட்டளையின் செலவுகள் கணக்காய்வாளரினால் செலுத்தப்படவேண்டிய கட்டளை ஒன்றின் மூலம் பெறப்பட்ட) நீதிமன்றத்தின் அனுமதியுடன், பங்குதாரர் களுக்குப் பிரதிகளை அனுப்புவதிலிருந்து அல்லது அவ்வாறு கூட்டப்படும் கூட்டத்தில் முறையீடுகளை வாசித்ததிலிருந்து தவிர்த்துக்கொள்ளலாம்.

(4) கணக்காய்வாளர் ஒருவர் ஓராம் உட்பிரிவின் தேவைப்பாடு களுக்கு இணங்கியொழுகத் தவறுமிடத்து, அவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப் பட்டதன்மேல் இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப் பணமொன்றிற்காளாதலும் வேண்டும்.

(5) கம்பெனியொன்று உட்பிரிவின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுமிடத்து,—

(அ) கம்பெனியானது தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப் பணம் ஒன்றிற்காளாதலும் வேண்டும் ; அத்துடன்

(ஆ) கம்பெனியின் தவறுகைக்குட்பட்ட ஒவ்வோர் அலுவலரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்றாளாதலும் வேண்டும்.

கணக்காய் வாளர் அக்கறை முரண்பாட்டைத் தவிர்த்தல்.

**162.** கம்பெனியொன்றின் கணக்காய்வாளர் ஒருவர் இச்சட்டத்தின்கீழ் கணக்காய்வாளர் ஒருவரின் கடமைகளை மேற்கொள்ளுகையில் அவரது தீர்மானமானது, கம்பெனியுடன் அல்லது அதன் துணைநிலைக் கம்பெனிகள் ஏதேனுமுடன் உள்ள தொடர்பு அல்லது அக்கறை காரணமாக, பாதிக்கப்படாதிருப்பதை உறுதிப்படுத்தல் வேண்டும்.

கணக்காய் வாளரின் அறிக்கை.

**163.** (1) கம்பெனியொன்றின் கணக்காய்வாளர் ஒருவர், பங்குதாரர்களுக்கு அவரால் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மீதான அறிக்கையொன்றைச் செய்தல் வேண்டும்.

(2) கணக்காய்வாளரின் அறிக்கை -

(அ) கருத்தின் ஆதாரம் ;

(ஆ) கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் வரையறைகள்;

(இ) கணக்காய்வாளர், தேவைப்படும் எல்லாத் தகவல்களையும் விளக்கங்களையும் பெற்றுக்கொண்டாரா ;

(ஈ) கணக்கீட்டுப் பதிவுகளின் பரிசோதனை ஒன்றிலிருந்து தோன்றுமளவுக்கு, கணக்காய்வாளரின் அபிப்பிராயத்தில், கம்பெனியால் உரிய கணக்கீட்டுப் பதிவுகள் வைத்திருக்கப்பட்டனவா ;

(உ) கணக்காய்வாளரின் அபிப்பிராயத்தில், நிதிக்கூற்றுக்களும் மற்றும் ஏதேனும் தொகுதி நிதிக்கூற்றுக்களும், அவை எக்கருமங்கள் தொடர்பானவையோ, அவை பற்றிய உண்மையானவையும் நேரியவையுமான நோக்கு மதிப்பைத் தருகின்றனவோ, அத்துடன் அவ்வாறு அவை தராவிட்டால், எந்த விடயங்கள் தொடர்பில் அவை அவ்வாறு தருவதற்குத் தவறுகின்றதோ அவ்விடயங்கள் ; அத்துடன்

(ஊ) கணக்காய்வாளரின் அபிப்பிராயத்தில், நிதிக்கூற்றுக்களும் மற்றும் ஏதேனும் தொகுதி நிதிக் கூற்றுக்களும், விடயத்திற்கேற்றாற்போல, 151 ஆம் மற்றும் 153 ஆம் பிரிவுகளின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுகின்றனவா, அல்லது அவை அவ்வாறில்லாவிட்டால், எந்த விடயங்கள் தொடர்பில் அவை அவ்வாறு இணங்கியொழுகத் தவறுகின்றனவோ அவ்விடயங்கள்,

என்பவற்றைக் குறிப்பிடல் வேண்டும்.

(3) கம்பெனியொன்றின் கணக்காய்வாளர், அவரது அறிக்கையைக் கம்பெனிக்கு ஒப்படைக்கும் அதேநேரத்தில் -

(அ) கம்பெனியுடனான அல்லது அதன் ஏதேனும் துணை நிலைக் கம்பெனிகளுடனான கணக்காய்வாளரின் (கணக்காய்வாளர் என்ற தன்மையில் இல்லாதபோது) ஏதேனும் தொடர்பு, அல்லது கணக்காய்வாளரின் எவையேனும் அக்கறைகள் இருப்பது பற்றிய ; அத்துடன்

(ஆ) கம்பெனியால், கம்பெனியின் கணக்காய்வாளராகப் பதவி வகிக்கும் ஆள் அல்லது குழுமத்துக்கு கணக்காய்வுக் கட்டணங்கள் மற்றும் செலவுகளாகச் செலுத்தப்படற்பாலதான தொகைகள், அத்துடன் அத்தகைய ஆள் அல்லது குழுமத்தால் வழங்கப்படும் வேறு சேவைகளுக்காகக் கம்பெனியால் செலுத்தப்படற்பாலதான தனிவேறான விடயமான, ஏதேனும் கட்டணங்கள் என்னும் செலவுகள் பற்றிய

கூற்றொன்றைக் கம்பெனிக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

*கணக்காய்வாளர் தகவல்களை அணுகிப் பெறுதல்.*

**164.** (1) கம்பெனியொன்றின் சபையானது, கம்பெனியொன்றின் கணக்காய்வாளர் ஒருவர், கம்பெனியின் கணக்கீட்டுப் பதிவேடுகளையும் மற்றும் ஏனைய ஆவணங்களையும், எல்லா நேரங்களிலும் அணுகிப்பெறுதலை உறுதிப்படுத்தல் வேண்டும்.

(2) கம்பெனியொன்றின் கணக்காய்வாளர் ஒருவர், கணக்காய்வாளர் என்ற வகையில் தனது கடமைகளை நிறைவேற்றுவதற்கு அவசியமானது என எண்ணுகின்றவாறான அத்தகைய தகவல்கள் மற்றும் விளக்கங்களை கம்பெனியின் பணிப்பாளர் ஒருவரிடமிருந்து அல்லது ஊழியர் ஒருவரிடமிருந்து தேவைப்படுத்துவதற்கு உரித்துடையவராவார்.

(3) கம்பெனியொன்றின் சபையானது (1) ஆம் உட்பிரிவின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுமிடத்து, தவறுகைக்குட்பட கம்பெனியின் ஒவ்வொரு பணிப்பாளரும், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

(4) இரண்டாம் உட்பிரிவின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறும் அல்லது தவறான தகவல்களை வழங்கும் பணிப்பாளர் ஒருவர் அல்லது ஊழியர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(5) நாலாம் உட்பிரிவின்கீழ் குற்றமொன்று சாட்டப்பட்ட ஊழியர் ஒருவர், —

(அ) தேவைப்படுத்தப்பட்ட ஊழியர் ஒருவர் தேவைப்படுத்தப்பட்ட தகவல்களை அவர் வசம் அல்லது அவரது கட்டுப்பாட்டில் வைத்திருக்கவில்லை ;

(ஆ) அவர் வகித்த நிலை காரணமாக அல்லது அவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட கடமைகள் காரணமாக, அவர், தேவைப்படுத்தப்பட்ட விளக்கங்கங்களைத் தரமுடியாதிருந்தார்,

என அவர் எண்பித்தால், அது அவருக்கு எதிர்வாதமொன்றாக இருக்கும்.

*பங்குதாரர்களின் கூட்டத்தில் கணக்காய்வாளர் சமுக மாயிருத்தல்.*

**165.** (1) கம்பெனியொன்றின் சபையானது, கம்பெனியின் கணக்காய்வாளர் ஒருவர், —

(அ) கம்பெனியின் பங்குதாரர்களின் ஒவ்வொரு கூட்டத் திலும் சமுகமாயிருப்பதற்கு அனுமதிக்கப்படுவத னையும் ;

(ஆ) பங்குதாரர்களின் கூட்டமொன்று தொடர்பாக, பங்கு தார் ஒருவர் பெறுவதற்கு உரித்துடையதான அறிவித் தல்கள் மற்றும் கடிதத் தொடர்புகளைப் பெறுவதனை யும் ; அத்துடன்

(இ) அவர் சமுகமளித்துள்ள ஒரு கூட்டத்தில், கணக்காய் வாளர் எனும் தன்மையில் அவருடன் தொடர்புபடு வதான கூட்ட அலுவல்களின் எப்பாகந் தொடர்பிலும் கேட்கப்படுவதனையும்,

உறுதிப்படுத்தல் வேண்டும்.

(2) கம்பெனியொன்றின் சபையானது ஒராம் உட்பிரிவுக்கு இணங்கியொழுகத் தவறினால், தவறுகைக்குட்பட்ட கம்பெனியின் பணிப்பாளர் ஒவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், ஓர் இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

**பங்குதாரர்களுக்கான ஆண்டறிக்கை**

*ஆண்டறிக்கையை தயாரிப்பதற்கான கடப்பாடு.*

**166.** (1) ஒவ்வொரு கம்பெனியின் சபையும், கம்பெனியின் ஐந்தொகைத் தேதிக்குப் பின்னரான ஆறு மாதங்களுக்குள்ளாக அத்தேதியன்று முடிவடையும் கணக்கீட்டுக் காலப்பகுதியின்போது கம்பெனியின் அலுவல்கள் தொடர்பான ஆண்டறிக்கையொன்றி னைத் தயாரித்தல் வேண்டும்.

(2) கம்பெனியொன்றின் சபையானது (1) ஆம் உட்பிரிவின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுமிடத்து, தவறு கைக்குட்பட்ட கம்பெனியின் பணிப்பாளர் ஒவ்வொருவரும், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், ஓர் இலட்சம் ரூபாவை விஞ் சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

**167.** (1) கம்பெனியொன்றின் சபையானது, பங்குதார்களின் ஆண்டுப் பொதுக் கூட்டத்தை நடாத்துவதற்காக நிர்ணயிக்கப்பட்ட தேதிக்கு முன்னர் பதினைந்து வேலை நாட்களுக்குக் குறையாமல், ஆண்டறிக்கையொன்றின் பிரதியொன்றைக் கம்பெனியின் ஒவ்வொரு பங்குதாரருக்கும் அனுப்பச் செய்தல் வேண்டும் : ஆண்டறிக்கையை பங்குதாரர் களுக்கு அனுப்புதல்.

ஆயின், கம்பெனியொன்று இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்துடனான கலந்தாலோசனையின்பேரில், விதித்துரைக் கப்படக்கூடியவாறான சுருக்கமான வடிவத்திலான, நிதிக்கூற்றை ஆண்டறிக்கையோடு சேர்த்து, முதற்தடவையிலேயே, ஒவ்வொரு பங்குதாரருக்கும் அனுப்பலாம் :

ஆயின், மேலும் கம்பெனியானது, ஒவ்வொரு பங்குதாரரும் அவ்வாறு அவர் தேவைப்படுத்தினால், குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் பூரண நிதிக் கூற்றொன்றையும் பெறுவதற்கு உரித்துடையவர் என்பதை, அவருக்கு அறிவித்தல் வேண்டும்.

(2) கம்பெனியொன்றின் சபையானது, (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுடன் இணங்கத் தவறுமிடத்து, கம்பெனியின் பணிப் பாளர் ஒவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண் டும் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், ஓர் இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண் டும்.

**168.** (1) சபையின் ஆண்டறிக்கையானது எழுத்திலிருத்தல் வேண்டும் என்பதுடன் தேதியிடலும் வேண்டும். அத்துடன் (2)ஆம் உட்பிரிவுக்கு அமைய, — ஆண்டறிக்கையின் பொருளடக்கம்.

(அ) பங்குதாரர்கள் கம்பெனியின் அலுவல்களின் நிலைமை பற்றிய ஒரு மதிப்பீட்டைப் பெறுவதற்கு அவர்களுக்கு முக்கியமானது எனவும் கம்பெனியின் அல்லது அதன் ஏதேனும் துணைநிலைக் கம்பெனிக ளின் தொழிலுக்குத் தீங்காக அமையாது எனவும் சபை நம்புகின்றளவுக்கு, கணக்கீட்டுக் காலப்பகுதியில் —

(i) கம்பெனியின் அல்லது அதன் ஏதேனும் துணைநிலைக் கம்பெனிகளின் தொழிலின் தன்மையை ; அல்லது

(ii) வேறொரு கம்பெனியின் பங்குதாரர் என்ற வகையிலோ அல்லது வேறு வகையிலோ, கம்பெனிக்கு எத்தொழில் வகைகளில் ஓர் அக்கறை இருக்கின்றதோ அத்தொழில் வகையில்,

உள்ள ஏதேனும் மாற்றத்தை விவரித்தல் வேண்டும்.

(ஆ) நூற்றைம்பத்தோராம் பிரிவுக்கிணங்க பூர்த்தி செய்யப்பட்டு கையொப்பமிடப்பட்ட, கணக்கீட்டுக் காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்களையும் 152 ஆம் பிரிவுக்கிணங்கப் பூர்த்தி செய்யப்பட்டு கையொப்பமிடப்பட்ட, கணக்கீட்டுக் காலப்பகுதிக்கான ஏதேனும் தொகுதி நிதிக் கூற்றுக்களையும் உள்ளடக்குதல் வேண்டும் ;

(இ) கணக்காளர் ஒருவர் கம்பெனியால் நியமிக்கப்பட்டிருக்கின்றவிடத்து, நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏதேனும் தொகுதி நிதிக் கூற்றுக்கள் மீதான அந்தக் கணக்காய்வாளரின் அறிக்கையையும் உள்ளடக்குதல் வேண்டும்;

(ஈ) கணக்கீட்டுக் காலப்பகுதியில் கணக்கீட்டுக் கொள்கையில் செய்யப்பட்ட ஏதேனும் மாற்றத்தை விவரித்தல் வேண்டும் ;

(உ) கணக்கீட்டுக் காலப்பகுதியில் அக்கறைகள் இடாப்பில் செய்யப்பட்ட பதிவுகளின் விவரங்களைக் கூறுதல் வேண்டும் ;

(ஊ) கணக்கீட்டு காலப்பகுயின்போது பணிப்பாளரால் பெறப்பட்ட ஊதியம் அல்லது வேறு நன்மைகள் பற்றிய விவரங்களைக் கூறுதல் வேண்டும் ;

(எ) கணக்கீட்டுக் காலப்பகுதியின்போது கம்பெனியால் செய்யப்பட்ட நன்கொடைகளின் மொத்தத் தொகையைக் கூறுதல் வேண்டும் ;

(ஏ) கணக்கீட்டுக் காலப்பகுதியின் முடிவில் உள்ளவாறாக கம்பெனியின் பணிப்பாளராகப் பதவி வகிக்கும்

ஆட்களின் பெயர்களையும் மற்றும் கணக்கீட்டுக் காலப் பகுதியின்போது, கம்பெனியின் பணிப்பாளராகப் பதவி வகிக்காதொழிந்த எவரேனும் ஆட்களின் பெயர்களையும் கூறுதல் வேண்டும் ;

(ஐ) கம்பெனியின் கணக்காளராகப் பதவி வகிக்கும் ஆட்களுக்கு அல்லது குழுமத்துக்குக் கணக்காய்வுக் கட்டணங்களாக கம்பெனியினால் செலுத்தப்படற்பாலதான தொகைகளையும் மற்றும் அந்த ஆளினால் அல்லது அந்தக் குழுமத்தால் வழங்கப்படும் வேறு சேவைகளுக்காக, தனிவேறான விடயமாக கம்பெனியினால் செலுத்தப்படற்பாலதான கட்டணங்களையும் கூறுதல் வேண்டும் ;

(ஒ) கணக்காய்வாளர் கம்பெனியுடன் அல்லது அதன் ஏதேனும் துணைநிலைக் கம்பெனிகளுடன் கொண்டுள்ள (கணக்காய்வாளர் என்ற தன்மையில் அல்லாத) ஏதேனும் உறவு அல்லது அவற்றில் கணக்காய்வாளருக்குள்ள அக்கறைகள் பற்றிய விவரங்களைக் கூறுதல் வேண்டும் ;

(ஓ) சபையின் சார்பில் —

(i) கம்பெனியின் பணிப்பாளர்கள் இருவரால், அல்லது கம்பெனி ஒரு பணிப்பாளரை மாத்திரம் கொண்டிருந்தால் அப்பணிப்பாளரால்; அத்துடன்

(ii) கம்பெனியின் செயலாளரால்,

கையொப்பமிடப்படல் வேண்டும்.

(2) கம்பெனியின் ஆண்டறிக்கையில் தொகுதி நிதிக் கூற்றுக்களை உள்ளடக்கவேண்டுமென தேவைப்படுத்தப்படும் கம்பெனியொன்று, அதன் துணைநிலைக் கம்பெனிகள் தொடர்பில் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) தொடக்கம் (ஒ) வரையான பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட தகவல்களை உள்ளடக்கல் வேண்டும்.

(3) எல்லாப் பங்குதாரர்களும் அவ்வாறு செய்வது தேவையில்லை என எழுத்தில் உடன்பட்டால், கம்பெனியொன்றின் ஆண்டறிக்கையானது (1) ஆம் உட்பிரிவின் (அ) மற்றும் (ஈ) இலிருந்து (ஒ) வரையான பந்திகளின் எவையேனும் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுக வேண்டிய தேவையில்லை. அத்தகைய உடன்படிக்கை எதுவும் ஆண்டறிக்கையில் குறிப்பிடப்படல் வேண்டும்.

*அறிக்கை முதலியவற்றை அனுப்பத் தவறுதல்.*

**169.** கம்பெனியொன்றின் அமைப்பு விதிகளில் அடங்கியுள்ள ஏற்பாடுகளுக்கமைய, இச்சட்டத்தின் கீழான ஏதேனும் தேவைப்பாட்டுக்கிணங்க பங்குதாரர் ஒருவருக்கு ஆண்டறிக்கையொன்றை, அறிவித்தலை அல்லது வேறு ஆவணத்தை அனுப்பத் தவறுவது, அவ்வாறனுப்பத் தவறியது தற்செயலானதாக இருந்தால், கம்பெனியின் பங்குதாரர்களின் கூட்டமைப்பொன்றிலான நடவடிக்கைகளின் செல்லுபடியைப் பாதித்தலாகாது.

### நிதிக் கூற்றுக்களைப் பதிவு செய்தல்

*நிதிக் கூற்றுக்களைப் பதிவுசெய்தல்.*

**170.** (1) தனியார் கம்பெனியல்லாத ஒவ்வொரு கம்பெனியும், கம்பெனியின் நிதிக் கூற்றுக்கள் மற்றும் எவையேனும் தொகுதி நிதிக் கூற்றுக்கள் கையொப்பமிடப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட பின் இருபது வேலை நாட்களுக்குள் அக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளரது அறிக்கையின் பிரதியொன்றுடன் சேர்த்து அக்கூற்றுக்களின் பிரதிகள், பதிவு செய்தலுக்காகப் பதிவாளரிடம் ஒப்படைக்கப்படுதலை உறுதிப்படுத்தல் வேண்டும்.

(2) பதிவாளர், எழுத்திலான அறிவித்தல் மூலம், அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய கணக்கீட்டுக் காலப்பகுதிகள் தொடர்பில் கம்பெனியின் நிதிக் கூற்றுக்களையும் மற்றும் தொகுதி நிதிக் கூற்றுக்களையும் அக்கூற்றுக்கள் மீதான எவரேனும் கணக்காய்வாளரின் அறிக்கையின் பிரதிகளுடன் சேர்த்து இருபது நாட்களுக்குள் தனக்கு ஒப்படைக்குமாறு தனியார் கம்பெனியொன்றைத் தேவைப்படுத்தலாம்.

(3) இப்பிரிவின்கீழ் பதிவாளரிடம் ஒப்படைக்கப்படும் பிரதிகள் செம்மையான பிரதிகள் என கம்பெனியின் இரண்டு பணிப்பாளர்களால் அல்லது கம்பெனியானது ஒரேயொரு பணிப்பாளரைக் கொண்டிருக்குமிடத்து அப்பணிப்பாளரால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

ஐந்தொகைத் தேதி.

**171.** (1) இரண்டாம் மற்றும் (3) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய, கம்பெனியொன்று ஒவ்வொரு பஞ்சாங்க ஆண்டிலும் ஐந்தொகைத் தேதியொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) எந்த ஆண்டில் கம்பெனியொன்று கூட்டிணைக்கப்படுகிறதோ அவ்வாண்டில், அதன் முதலாவது ஐந்தொகைத் தேதியானது கூட்டிணைக்கப்பட்ட ஆண்டைத் தொடர்ந்து வரும் ஆண்டிலும் மற்றும் அதனை அமைத்துருவாக்கிய அல்லது கூட்டிணைத்த தேதிக்குப் பின்னர் பதினைந்து மாதங்களைவிடப் பிந்தாமலும் இருந்தால், ஐந்தொகைத் தேதியொன்றைக் கொண்டிருப்பதற்குத் தேவைப்படலாகாது.

(3) கம்பெனியொன்று தனது ஐந்தொகைத் தேதியை மாற்றுகின்றவிடத்து, பஞ்சாங்க ஆண்டொன்றில் —

(அ) ஏதேனும் இரண்டு ஐந்தொகைத் தேதிகளுக்கிடையிலான காலப்பகுதி பதினைந்து மாதங்களை விஞ்சாதிருந்தால் ; அத்துடன்

(ஆ) பதிவாளர், ஐந்தொகைத்தேதி மாற்றப்பட முன்னர் அதனை அங்கீகரித்தால்,

ஐந்தொகைத் தேதியொன்றைக் கொண்டிருப்பதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(4) பதிவாளர் (3) ஆம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, நிபந்தனையுடனோ அல்லது நிபந்தனையின்றியோ ஐந்தொகைத் தேதிமாற்றமொன்றை அங்கீகரிக்கலாம்.

(5) கம்பெனியொன்று தனது ஐந்தொகைத் தேதியை மாற்றுகின்றவிடத்து, ஏதேனும் இரண்டு ஐந்தொகைத் தேதிகளுக்கிடையிலான காலப்பகுதி பதினைந்து மாதங்களை விஞ்சலாகாது.

(6) ஐந்தொகைத் தேதியொன்றை ஏற்றல் அல்லது மாற்றுதலானது அந்தப் பயனுக்குப் பதிவாளரினால் அறிவித்தலொன்றைப் பெற்றதன்மேல், பயனுடையதாதல் வேண்டும்.

(7) கம்பெனியொன்றின் சபையானது, சபையின் அபிப்பிராயத்தில் அதற்கெதிரான நல்ல காரணங்கள் இருந்தாலன்றி, கம்பெனியின் ஒவ்வொரு துணைநிலைக் கம்பெனியின் ஐந்தொகைத் தேதியும் கம்பெனியின் அதே ஐந்தொகைத் தேதியாக இருப்பதனை உறுதி செய்தல் வேண்டும்.

(8) கம்பெனியொன்றின் ஒரு துணைநிலைக் கம்பெனியின் ஐந்தொகைத் தேதியானது கம்பெனியின் அதே தேதியல்லாததாக இருக்குமிடத்து, ஏதேனும் குறிப்பிட்ட தொகுதி நிதிக் கூற்றுக்களின் நோக்கங்களுக்காகத் துணை நிலைக்கம்பெனியின் ஐந்தொகை தேதி கம்பெனியின் ஐந்தொகைத் தேதிக்கு முந்தினதாக இருத்தல் வேண்டும்.

**கம்பெனி அலுவல்களின் புலனாய்வு**

பங்குதாரர்களின் விண்ணப்பத்தின்மீது கம்பெனியின் அலுவல்களைப் புலனாய்வு செய்தல்.

**172.** (1) பதிவாளர் –

(அ) விசேட தீர்மானத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட கம்பெனியின் விண்ணப்பத்தின்மீது ;

(ஆ) பங்குகளை வழங்கியிருக்கும் கம்பெனியொன்றின் விடயத்தில், ஒன்றில், ஐம்பது பங்குதாரர்களின் விண்ணப்பத்தின்மீது, அல்லது வழங்கப்பட்ட பங்குகளில் ஐந்திலொன்றுக்குக் குறையாத பங்குகளை வைத்திருக்கும் பங்குதாரர்களின் விண்ணப்பத்தின் மீது ;

(இ) பங்குகளை வழங்கியிருக்காத கம்பெனியொன்றின் விடயத்தில், கம்பெனியின் உறுப்பினர் இடாப்பிலுள்ள ஆட்களில் ஐந்திலொன்றுக்குக் குறையாத எண்ணிக்கையினரின் விண்ணப்பத்தின்மீது,

பதிவாளர் பணிக்கும் அத்தகைய முறையில் கம்பெனியொன்றின் அலுவல்களைப் புலனாய்வு செய்வதற்கும் அவற்றின்மீது அறிக்கை செய்வதற்குமாக பரிசோதகர் ஒருவரை அல்லது ஒருவருக்கு மேற்பட்ட தகுதி வாய்ந்த பரிசோதகர்களை நியமிக்கலாம்.

(2) ஓராம் பிரிவின் கீழான விண்ணப்பமொன்று, விண்ணப்ப தாரர் அல்லது விண்ணப்பதாரர்கள் புலனாய்வினைத் தேவைப் படுத்துவதற்கு நல்ல காரணத்தினைக் கொண்டிருப்பதைக் காட்டும் நோக்கத்திற்காக, பதிவாளர் தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய சான்றினால் ஆதாரப்படுத்தப்படல் வேண்டும்.

(3) பதிவாளர், அத்தகைய பரிசோதகர்களை நியமிப்பதற்கு முன்னர் அத்துடன் காலத்துக்குக்காலம் அது அவசியமானதென அவர் கருதுகின்றவாறு புலனாய்வின் செலவுகளைச் செலுத்து வதற்கான பிணைப்பொறுப்பினைத் தரும்படி விண்ணப்பதாரரை அல்லது விண்ணப்பதார்களைத் தேவைப்படுத்தலாம்.

(4) ஆளொருவர் (3) ஆம் உட்பிரிவின்கீழ், ஏதேனும் தொகையை, தேவைப்படுத்தப்படுகின்றவாறும் மற்றும் அவ்வாறு செய்வதற்குத் தேவைப்படுத்தப்படுகின்றபோதும் பிணைப்பொறுப்பு வகையாக கொடுத்துதவத் தவறுமிடத்து, பதிவாளர் தனது பூரண தற்று ணிபில், ஏற்கனவே செலுத்தப்பட்ட ஏதேனும் பிணைப்பொறுப்பு பறிமுதல் செய்யப்படவேண்டுமெனப் பணிக்கலாமென்பதுடன், புலனாய்வையும் முடிவுறுத்தலாம்.

*வேறு விடயங்களில் கம்பெனியின் அலுவல்களைப் புலனாய்வு செய்தல்.*

**173.** (1) நூற்றெழுபத்துரெண்டாம் பிரிவின் ஏற்பாடுகளுக்குப் பங்கமின்றி, பதிவாளர் —

(அ) நீதிமன்றமானது, கட்டளையின்மூலம் பதிவாளரால் நியமிக்கப்பட்ட பரிசோதகரொருவரால் கம்பெனியின் அலுவல்கள் புலனாய்வு செய்யப்படவேண்டுமென வெளிப்படுத்தப்படுமிடத்து, பதிவாளர் பணிக்கின்ற வாறான அத்தகைய முறையில் கம்பெனியொன்றின் அலுவல்களைப் புலனாய்வு செய்தவற்கும், அதன்மீது அறிக்கை செய்வதற்குமாக தகுதி வாய்ந்த பரிசோதகர் ஒருவரை அல்லது ஒருவருக்கு மேற்பட்ட பரிசோதகர் களை நியமித்தல் வேண்டும் ;

(ஆ) (i) அதன் கடன்தருநரை அல்லது வேறெவரேனும் ஆளின் கடன்தருநரை ஏமாற்றம் முன்னத்துடன் அல்லது வேறு வகையில் மோசடியான அல்லது சட்ட முரணான நோக்கமொன்றுக்காக அல்லது அதன் பங்குதார்களின் ஏதேனுமொரு பாகத்

தினருக்கு அநியாயமாகப் பங்கமாயிருக்கும் முறையொன்றில் அதன் அலுவல்கள் நடாத்தப் படுகின்றதென ;

(ii) ஏதேனும் மோசடியான அல்லது சட்டமுரணான நோக்கமொன்றிற்காக அமைத்துருவாக்கப்பட்ட தென ;

(iii) அதன் அமைத்துருவாக்கத்துடன் அல்லது அதன் அலுவலகங்களின் முகாமையுடன் சம்பந்தப்பட்ட ஆட்கள், அவை தொடர்பில், அது தொடர்பில் அல்லது அதன் பங்குதாரர்கள் தொடர்பில் மோசடி, அதிகாரத் துஷ்பிரயோகம் அல்லது வேறு துர்நடத்தைக் குற்றம்புரிந்துள்ள தாக ;

(iv) அதன் பங்குதாரர்களுக்கு அதன் அலுவல்கள் தொடர்பில் நியாயமாக அவர்கள் எதிர்பார்க்கக் கூடியவையான எல்லாத் தகவல்களும் கொடுக் கப்படவில்லையென ;

(v) இச்சட்டத்தின் நோக்கங்களுள் எதற்காகவும் அவ் வாறு செய்வது அவசியமானது,

எனக் குறிப்பிடும் சூழ்நிலைகள் உள்ளனவெனப் பதிவாளருக்குத் தோன்றினால், அவர் கம்பெனியொன்றின் அலுவல்களைப் புலனாய்வு செய்வதற்கும் அதன்மீது பதிவாளருக்கு அறிக்கை செய்வதற்குமாக தகுதிவாய்ந்த பரிசோதகர் ஒருவரை அல்லது ஒருவருக்கு மேற்பட்ட பரிசோதகர்களை நியமிக்கலாம்.

(2) பரிசோதகர் ஒருவர், அவர் செய்கின்ற ஏதேனும் அறிக்கை வெளியீட்டுக்கல்ல என்பதுடன், அத்துடன், அத்தகைய ஏதேனும் சந்தர்ப்பத்தில், 176 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய அறிக்கை தொடர்பில் ஏற்புடைத்தாதல் ஆகாது என்ற நிபந்தனையின்மேல் இப்பிரிவின்கீழ் நியமிக்கப்படலாம்.

தொடர்புடைய கம்பெனிகளின் அலுவல்களைப் பற்றிய புலனாய்வை மேற்கொள்வதற்கான பரிசோதகர்களின் தத்துவம்.

**174.** கம்பெனியொன்றின் அலுவல்களைப் புலனாய்வு செய்வதற்கென 172 ஆம் பிரிவின்கீழ், அல்லது 173 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட பரிசோதகர் ஒருவர், தனது புலனாய்வின் நோக்கங்களுக்காக, கம்பெனியின் துணைநிலைக் கம்பெனியாக, அல்லது கொளிக் கம்பெனியாக, அல்லது அதன் கொளி கம்பெனியின் துணைநிலைக் கம்பெனியொன்றாக இருக்கின்ற அல்லது ஏதேனும் இயைபான நேரத்திலிருந்து வேறேதேனும் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றின் அலுவல்களையும் புலனாய்வு செய்தல் அவசியமானதென எண்ணுகின்றவிடத்து, அவர் பதிவாளரின் எழுத்திலான முன்னங்கீகாரத்துடன் அவ்வாறு செய்வதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டும் என்பதுடன், அதன் மீதான அவரின் புலனாய்வின் பெறுபேறுகள், முதற் குறிப்பிட்ட கம்பெனியினது அலுவல்களின் புலனாய்வுடன் எவ்வளவு தூரம் இயைபானவையென அவர் கருதுகின்றாரோ அவ்வளவு தூரத்துக்கு அந்த வேறு கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவல்கள்மீது அறிக்கை செய்தலும் வேண்டும்.

புலனாய்வின்போது ஆவணங்களையும் சான்றையும் காண்பித்தல்.

**175.** (1) நூற்றெழுபத்துரெண்டாம் பிரிவின்கீழ் அல்லது 173ஆம் பிரிவின்கீழ் பரிசோதகர் ஒருவர் நியமிக்கப்படுமிடத்து, கம்பெனியின் எல்லாப் பணிப்பாளர்களுக்கும், அலுவலர்களுக்கும் மற்றும் முகவர்களுக்கும், அத்துடன் 174 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பயனைக்கொண்டு புலனாய்வு செய்யப்படுவதான வேறேதேனும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் எல்லாப் பணிப்பாளர்களுக்கும் அலுவலர்களுக்கும் மற்றும் முகவர்களுக்கும் -

(அ) கம்பெனியின் அல்லது கம்பெனி தொடர்பான அல்லது விடயத்திற்கேற்றவாறு, வேறு கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அல்லது குழு தொடர்பிலான தனது கட்டுக்காப்பிலுள்ள தத்துவத்திலுள்ள எல்லாப் புத்தகங்களையும் ஆவணங்களையும் பரிசோதகர்களுக்குக் காண்பித்தல் ;

(ஆ) பரிசோதகரின் முன்னர் வருகைதருமாறு தேவைப்படுத்தப்படும்போது அவ்வாறு செய்தல் ; அத்துடன்

(இ) புலனாய்வு சம்பந்தமாக அவர்கள் நியாயமாகக் கொடுக்கக்கூடியவையான எல்லா உதவிகளையும் பரிசோதகர்களுக்குக் கொடுத்தல்,

கடமையாதல் வேண்டும்.

(2) பரிசோதகர் ஒருவர், கம்பெனியின் அல்லது வேறு கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவலர்களையும், முகவர்களையும் அதன் தொழில் தொடர்பில் சத்தியம் அல்லது உறுதிப்பாட்டின் மீது பரிசோதனை செய்யலாம் என்பதுடன், அத்தகைய எவரேனும் ஆளுக்குச் சத்தியம் ஒன்றை எடுத்தோதுவிக்கலாம் அல்லது அவரின் உறுதிப்பாட்டை எடுக்கலாம்.

(3) கம்பெனியின் அல்லது வேறு கூட்டிணைக்கப்பட்ட குழுவின் எவரேனும் அலுவலர் அல்லது முகவர், இப்பிரிவின்கீழ் காண்பிப்பது அவரது கடமையானதான ஏதேனும் புத்தகத்தை அல்லது ஆவணத்தைப் பரிசோதகருக்குக் காண்பிக்க மறுக்குமிடத்து, அல்லது விடயத்திற்கேற்றவாறு கம்பெனியின் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவல்கள் தொடர்பில், பரிசோதகரால் கேட்கப்பட்ட ஏதேனும் கேள்விகளுக்குப் பதிலளிக்க மறுக்குமிடத்து, பரிசோதகர் அம்மறுப்பை நீதிமன்றத்திற்கு எழுத்தில் அத்தாட்சிப்படுத்தலாம் என்பதுடன் நீதிமன்றம் அவ்வழக்கினை விசாரணை செய்யலாம் ; அத்துடன் சார்த்தப்பட்ட தவறாளருக்கு எதிராக அல்லது அவர் சார்பில் கொணரப்படக்கூடியவர்களான எவரேனும் சாட்சிகளைக் கேட்டபின்னரும், எதிர்வாதமாகத் தரப்படக்கூடியதான ஏதேனும் கூற்றினைக் கேட்ட பின்னரும், தவறாளரை அவர் நீதிமன்றத்தை அவமதித்ததற்குக் குற்றவாளியாகக் காணப்பட்டாற்போன்று தண்டிக்கலாம்.

(4) பரிசோதகரொருவர் தனது புலனாய்வின் நோக்கத்திற்காக, சத்தியம் அல்லது உறுதிப்பாட்டின்மீது சோதிப்பதற்குத் தனக்குத் தத்துவம் அற்ற ஆளொருவர் அவ்வாறு சோதனை செய்யப்படுதல் அவசியமானதென எண்ணுகின்றவிடத்து, அவர் நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்கலாம் என்பதுடன், நீதிமன்றம் தகுதியானதெனக் காணின் அவ்வாளுக்கு அதன் முன்னர் வருகைதருமாறும், புலனாய்வுக்கு இயைபான ஏதேனும் கருமத்தின்மீது, சத்தியம் அல்லது உறுதிப்பாட்டின்மேல் சோதனை செய்யப்படுமாறும் கட்டளையிடலாம் ; அத்துடன் அத்தகைய ஏதேனும் சோதனையின் மீது -

(அ) பரிசோதகர் ஒன்றில் தானாகவே தோன்றலாம் அல்லது சட்டத்தரணியொருவரால் பிரதிநிதித்துவப் படுத்தலாம் ;

(ஆ) நீதிமன்றம் தகுதியானதென எண்ணும் அத்தகைய வினாக்களைச் சோதனை செய்யப்படும் அத்தகைய ஆட்களிடம் கேட்கலாம் ;

(இ) நீதிமன்றம் அவரிடம் கேட்கும் அல்லது அவரிடம் கேட்கப்படுவதற்கு அனுமதிக்கும் அத்தகைய எல்லா வினாக்களுக்கும் சோதனை செய்யப்படும் ஆள் விடைய ளித்தல் வேண்டும் ;

(ஈ) சோதனை செய்யப்படும் ஆள், அவரால் அளிக்கப் பட்ட விடைகள் எவற்றையும் விளக்குவதற்கு அல்லது தகைமையாக செய்வதற்கு அவரை இயலச்செய்யும் நோக்கத்துக்காக அவரிடம் வினாக்களைக் கேட்கக் கூடியவரான சட்டத்தரணியொருவரால் அவரது சொந்தச் செலவில் பிரதிநிதித்துவப்படுத்தப்படலாம்;

(உ) சோதனை எழுத்தில் பதிவுசெய்யப்படல் வேண்டும் என்பதுடன், சோதனை செய்யப்படும் ஆள் பதிவில் கையொப்பமிடலும் வேண்டும் ; அத்துடன்

(ஊ) நீதிமன்றத்திலான எவையேனும் பணிப்புரைக ளுக்கமைய, இப்பிரிவின் கீழான சோதனையொன்றின் பதிவானது இச்சட்டத்தின் கீழானவையெனும் வழக்கு நடவடிக்கைகளில் சான்றாக ஏற்கத்தக்கதாதல் வேண் டும்.

(5) நாலாம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில் உள்ளடக் கப்பட்டுள்ளது எது எப்படியிருப்பினும், நீதிமன்றம் தகுதியான தென எண்ணுகின்ற அத்தகைய செலவுத் தொகைகளை சோதனை செய்யப்பட்ட ஆளுக்கு அனுமதிக்கலாம். அவ்வாறு அனுமதிக்கப் பட்ட செலவுத் தொகைகள் எவையும் புலனாய்வுக்கான செலவுக ளின் ஒரு தொகையாகச் செலுத்தப்படல் வேண்டும்.

(6) இப்பிரிவில், அலுவலர்களுக்கான அல்லது முகவர்களுக் கான குறிப்பீடு எதுவும், விடயத்திற்கேற்றவாறு கடந்தகாலத் தவர்களும் தற்போதுள்ளவர்களுமான, அலுவலர்களை அல்லது முகவர்களை உள்ளடக்குதல் வேண்டும் ; அத்துடன், கம்பெனி யொன்று அல்லது வேறு கூட்டிணைக்கப்பட்ட குழு தொடர்பில்

"முகவர்கள்" எனும் சொல்லமைப்பு, அந்த ஆட்கள் கம்பெனியின் அல்லது வேறு கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவலர்களாக இருப்பவர்களாயினுஞ்சரி, இல்லாதிருப்பவர்களாயினுஞ்சரி அதன் வங்கியாளர்களையும் சட்டத்தரணிகளையும் மற்றும் அதனால் கணக்காளராக ஊழியத்திலமர்த்தப்பட்ட எவரேனும் ஆட்களையும் உள்ளடக்குதல் வேண்டும்.

*பரிசோதகரின் அறிக்கை.*

**176.** (1) பரிசோதகர் ஒருவர் –

(அ) புலனாய்வு நடைபெற்றுக்கொண்டிருக்கையில் இடைக்கால அறிக்கைகளைச் செய்யவேண்டுமெனப் பதிவாளரால் பணிக்கப்பட்டால், அவர் அவ்வாறு செய்தல் வேண்டும் ;

(ஆ) புலனாய்வொன்றின் முடிவின் மேல் பதிவாளருக்கு எழுத்திலான இறுதியறிக்கையொன்றைச் செய்தல் வேண்டும்.

(2) நீதிமன்றம் கட்டளையொன்றைப் பின்பற்றி, 173 ஆம் பிரிவின்கீழ் பரிசோதகர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய பரிசோதகர் செய்யப்பட்ட ஏதேனும் அறிக்கையின் பிரதியை நீதிமன்றத்துக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்.

(3) பதிவாளர் தகுதியானதென எண்ணினால் –

(அ) பரிசோதகரால் செய்யப்பட்ட ஏதேனும் அறிக்கையின் பிரதியொன்றை கம்பெனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்துக்கு அனுப்பலாம் ;

(ஆ) வேண்டுகோளின்மீதும் விதித்துரைக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்தியதன்மீதும் -

(i) கம்பெனியின் அல்லது 174 ஆம் பிரிவின் பயனைக்கொண்டு, அறிக்கையிற் கையாளப்பட்ட வேறேதேனும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் வேறெவரேனும் ஆளுக்கு அல்லது கம்பெனியின் பங்குதாரர் எவருக்கும் ;

(ii) எவ்வாளின் நடத்தைபற்றி அறிக்கையிற் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ளதோ அத்தகைய எவரேனும் ஆளுக்கு ;

(iii) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அல்லது கம்பெனியின் கணக்காய்வாளருக்கு ;

(iv) புலனாய்வுக்கான விண்ணப்பகாரர்களுக்கு ;

(v) கம்பெனிக்கு அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவிற்கு அல்லது வேறுவகையாக கடன்தருநரொருவர் என்றவகையில் நிதிசார் அறிக்கையில் கூறப்பட்ட விடயங்களினால் பாதிக்கப்படுவதாக பதிவாளருக்குத் தோன்றுகின்றதோ அவ்வேறெவரேனும் ஆளுக்கு ;

ஏதேனும் அறிக்கையின் பிரதியொன்றைக் கொடுத்துதவுதல் வேண்டும் ; அத்துடன்

(இ) அறிக்கையை அச்சிடச் செய்வித்தலும் பிரசுரித்தலும் வேண்டும்.

பரிசோதகரின் அறிக்கை மீதான நடவடிக்கைகள்.

**177.** (1) நூற்றி எழுபத்தாறாம் பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் அறிக்கையிலிருந்து எவரேனும் ஆள் கம்பெனி தொடர்பாகவோ அல்லது 174 ஆம் பிரிவின்கீழ் அதன் அலுவல்கள் புலனாய்வு செய்யப்பட்டதான வேறேதேனும் கூட்டிணைக்கப்பட்ட குழு தொடர்பாகவோ அவர் குற்றப் பொறுப்புக்கு ஆளாகக்கூடிய ஏதேனும் தவறுக்குக் குற்றவாளியாக உள்ளார் எனப் பதிவாளருக்குத் தோன்றினாலும், சட்டத்துறைத் தலைமையதிபதியினால் குற்றவழக்குத் தொடுப்பானது பொறுப்பேற்கப்பட வேண்டிய விடயம் ஒன்றாக அது உள்ளது எனப் பதிவாளருக்குத் தோன்றினாலும் அவர் அக்கருமத்தைச் சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு ஆற்றுப்படுத்துதல் வேண்டும்.

(2) ஒராம் உட்பிரவின் ஏற்பாடுகளின்கீழ், சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் கருமத்தில், அந்த விடயமானது குற்றவழக்கொன்று தொடுக்கப்படுவதற்கு வேண்டியதொன்றானதென சட்டத்துறைத் தலைமையதிபதி கருதுகின்றவிடத்து, அவர் அதற்கிணங்க நடவடிக்கைகளைத்

தொடுத்தல் வேண்டும் என்பதுடன் (வழக்கு நடவடிக்கைகளிலுள்ள எதிராளி தவிர்ந்த), விடயத்திற்கேற்றாற்போன்று கம்பெனியின் அல்லது மேற்கூறப்பட்டவாறு, வேறு கூட்டிணைக்கப்பட்ட குழுவின் எல்லா அலுவலர்களும் முகவர்களும், குற்ற வழக்குத் தொடர்பில் அவர்களுக்கு நியாயமாகக் கொடுப்பதற்கு இயலக்கூடியவையான எல்லா உதவிகளையும் அவருக்குக் கொடுத்தல் கடமையாதலும் வேண்டும். அத்துடன் 175 ஆம் பிரிவின் (6) ஆம் உட்பிரவின் ஏற்பாடுகள் அப்பிரிவின் நோக்கங்களுக்காக அவை ஏற்புடையனவாதல்போன்று இவ்வுட்பிரிவின் நோக்கங்களுக்காகவும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழ் நியமிப்பதற்கு முடியுமாக இருக்கும் ஒழிப்போன் ஒருவருடன் அல்லது இருப்புச் சொத்துடன் ஏதேனும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விடயத்தில் 173 ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (i) ஆம் உட்பந்தியில் அல்லது (ii) ஆம் உட்பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்டவாறான அத்தகைய எவையேனும் சூழ்நிலைகளின் காரணமாக அவ்வாறு செய்தல் உசிதமானதென 176 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் அறிக்கையிலிருந்து பதிவாளருக்குத் தோன்றுகின்றவிடத்து அவர், ஒழிப்போன் ஒருவரை நியமிக்குமாறு நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

(4) நூற்றி எழுபத்தாறாம் பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் அறிக்கையிலிருந்து, கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் பொது மக்கள் நலனுக்காக வழக்கு நடவடிக்கைகள் தொடுக்கப்படல வேண்டும் என பதிவாளருக்குத் தோன்றினால், அவர் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பெயரிலும் அதற்கு பதிலாகவும் அத்தகைய வழக்கு நடவடிக்கைகளைத் தொடுக்கலாம்.

(5) நான்காம் உட்பிரிவின்கீழ் தொடுக்கப்பட்ட எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில் அல்லது வழக்கு நடவடிக்கைகள் தொடர்பில், கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் உறப்பட்ட எவையேனும் செலவுத் தொகைகளுக்காக அல்லது செலவுக்காகப் பதிவாளர் அதற்கு நட்டோத்தரவாதமளித்தல் வேண்டும்.

கம்பெனியின் அலுவல்களைப் புலனாய்வு செய்வதற்கான செலவுகள்.

**178.** (1) நூற்றி எழுத்தி இரண்டாம் பிரிவின் அல்லது 173 ஆம் பிரிவின்கீழ் பதிவாளரால் நியமிக்கப்பட்ட பரிசோதகரொருவரின் புலனாய்வொன்றின் செலவுகளும், அதன் இடைநேர்விளைவான செலவுகளும் பதிவாளரால் முதற் சந்தர்ப்பத்தில் ஈடுசெய்யப் படுதல் வேண்டும்.

(2) கீழ்க்காணும் ஆட்கள், குறித்துரைக்கப்பட்ட அளவிற்குப் பதிவாளருக்கு மீளச் செலுத்துவதற்குப் பொறுப்பானவர்களாதல் வேண்டும் -

(அ) சட்டத்துறைத் தலைமையதிபதியினாலான புலனாய்வின் விளைவாகத் தொடுக்கப்பட்ட குற்றவழக்கொன்றின்மீது குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட எவரேனுமாள் அல்லது 177 ஆம் பிரவின் (4) ஆம் உட்பிரிவின்கீழ் தொடுக்கப்பட்ட வழக்கு நடவடிக்கைகளில் செலவுகளை முழுமையாக அல்லது பகுதியளவில் செலுத்துவதற்கு அல்லது கட்டளையிடப்பட்ட எவரேனும் ஆள் கட்டளையில் குறித்துரைக்கக்கூடியவாறாக அத்தகைய அளவுக்குச் சொல்லப்பட்ட செலவுகளைச் செலுத்துவதற்கு அதே வழக்கு நடவடிக்கைகளில் கட்டளையிடப்படலாம்.

(ஆ) நூற்றி எழுபத்தேழாம் பிரிவின் (4) உட்பிரிவின்கீழ் எக்கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பெயரில் வழக்கு நடவடிக்கைகள் தொடுக்கப்பட்டனவோ அக்கூட்டிணைக்கப்பட்ட குழுவானது, அவ்வழக்கு நடவடிக்கைகளின் விளைவாக அதனால் அறவிடப்பட்ட ஏதேனும் பணத்தொகையின் அல்லது ஆதனத்தின் தொகைக்கு அல்லது பெறுமதிக்குப் பொறுப்புடையதாதல் வேண்டும் ; அத்துடன் கூட்டிணைக்கப்பட்ட குழு பொறுப்புடையதாக இருக்கும் பணத்தொகை அறவிடப்பட்ட பணத்தின்மீது அல்லது ஆதனத்தின்மீது முதற் பொறுப்பொன்றாதல் வேண்டும்.

(இ) புலனாய்வின் விளைவாக சட்டத்துறைத் தலைமையதிபதியால் குற்றவழக்கொன்று தொடுக்கப்பட்டாலன்றி—

(i) பதிவாளரின் சொந்தப் பிரேரணையின் மீதிலல்லாது வேறுவகையில் பரிசோதகர் நியமிக்கப்

பட்டுள்ளவிடத்து, அறிக்கையிற் கையாளப்பட்ட ஏதேனும் கூட்டிணைக்கப்பட்ட குழுவானது, பதிவாளர் வேறுவகையில் பணிக்கின்றவாறான அளவுக்குத் தவிர, பொறுப்புடையதாதல் வேண்டும் ; அத்துடன்

(ii) நூற்றி எழுத்திரெண்டாம் பிரிவின் ஏற்பாடுகளின் பரிசோதகர் நியமிக்கப்பட்டுள்ளவிடத்து, புலனாய்வுக்காக விண்ணப்பமொன்றைச் செய்யும் எவரேனும் ஆள், பதிவாளர் பணிக்கக் கூடியவாறான அத்தகைய அளவு, ஏதேனுமிருப்பின் அந்த அளவுக்குப் பொறுப்புடையவராதல் வேண்டும்.

(3) பதிவாளரின் சொந்தப் பிரேரணையின் மீதிலல்லாது வேறுவகையில் நியமிக்கப்பட்ட பரிசோதகரொருவரின் அறிக்கையானது தகுதியானதென அவர் எண்ணினால் அவரது புலனாய்வின் விளைவாக (2) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளின்கீழ் கொடுப்பதற்குத் தோதானதென அத்தகைய பரிசோதகர் எண்ணும் பணிப்புகள், எவையேனும் இருப்பின் அவற்றிற்கிணங்க விதப்புரையொன்றினையும் உள்ளடக்கலாம் என்பதுடன், பதிவாளர் அவ்வாறு பணிப்பின், அதனை உள்ளடக்குதலும் வேண்டும்.

(4) நூற்றி எழுபத்தேழாம் பிரிவின் ( (5) ஆம் உட்பிரிவின்கீழ் உறப்பட்ட செலவுகள் உட்பட) (4) ஆம் உட்பிரிவின்கீழ் கொணரப்பட்ட வழக்கு நடவடிக்கைகளில் அல்லது வழக்கு நடவடிக்கைகள் தொடர்பில் பதிவாளரால் உறப்பட்ட எவையேனும் செலவுத் தொகைகள் அல்லது செலவுகள் இப்பிரிவின் நோக்கங்களுக்காக அவ்வழக்கு நடவடிக்கைகள் எழக் காரணமாகவிருந்த புலனாய்வின் செலவுகளாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) பதிவாளருக்கு மீளச் செலுத்துவதற்காக (2) ஆம் உட்பிரிவின் (அ), (ஆ) என்னும் பந்திகளின் ஏற்பாடுகளினால் சுமத்தப்பட்ட ஏதேனும் பொறுப்பானது, மீளச் செலுத்துவதற்கான பதிவாளரின் உரிமையின் திருப்திக்கு அமைவாக, (2) ஆம் உட்பிரிவின் (இ) எனும் பந்தியின் கீழான பொறுப்புக்கு எதிராக எல்லா ஆட்களுக்கும் நட்டோத்தரவாதம் செலுத்துவதற்கான பொறுப்பொன்

றாதல் வேண்டுமென்பதுடன் (அ) எனும் பந்தியின் ஏற்பாடு களினால் சுமத்தப்பட்ட அத்தகைய ஏதேனும் பொறுப்பானது, மேற்சொல்லப்பட்டதற்கமைவாக (ஆ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளின் கீழான பொறுப்புக்கு எதிராக எல்லா ஆட்களுக்கும் நட்டோத்தரவாதம் செலுத்துவதற்கான பொறுப்பொன்றாதலும் வேண்டும்.

(6) இரண்டாம் உட்பிரிவின் (அ), (ஆ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளின்கீழ் அல்லது (இ) என்னும் பந்தியின் (i) ஆம் உட்பந்தியின் அல்லது (ii) ஆம் உட்பந்தியின்கீழ் பொறுப்புக்குள் ளாகும் எவரேனுமாள், விடயத்திற்கேற்றாற்போல், அதே பந்தி யின் அல்லது உட்பந்தியின்கீழ் பொறுப்புக்குள்ளாகும் வேறெவ ரேனுமாளிடமிருந்து, அதன் கீழான அவர்களது அவ்வப் பொறுப் புக்களின் தொகைக்கிணங்க, உதவுதொகைக்கு உரித்துடையவ ராதல் வேண்டும்.

(7) இப்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் பதிவாளரின் கொடுத்துத் தீர்க்கப்படவேண்டிய செலவுதொகைகள், அதன்கீழ் அறவிடப் படாதவரையில் இந்நோக்கத்திற்கெனப் பாராளுமன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பணங்களிலிருந்து செலுத்தப்படல் வேண் டும்.

பரிசோதகரின் அறிக்கை சான்றாதல்.

**179.** நூற்றி எழுத்பத்திரெண்டாம் அல்லது 173 ஆம் பிரிவு களின் கீழ் நியமிக்கப்பட்ட பரிசோதகரொருவரின் ஏதே னும்அறிக்யையின் பிரதியொன்று ஏதேனும் சட்ட நடவடிக்கை களில், அவ்வறிக்கையில் அடங்கியுள்ள ஏதேனும் கருமம் தொடர் பில் பரிசோகரின் அபிப்பிராயத்தின் சான்றாக ஏற்றுக் கொள்ளத் தக்கதாதல் வேண்டும்.

கம்பெனியின் சொத்துவத்தைப் புலனாய்வு செய்வதற்குப் பரிசோதகர் களை நியமித்தலும் அதற்கான அவர்களது தத்துவங்களும்.

**180.** (1) ஏதேனும் கம்பெனியின் (உண்மையான அல்லது வெளிப்படையான) வெற்றியில் அல்லது தோல்வியில் நிதிசார் அக்கறை கொண்டுள்ள அல்லது கொண்டிருந்த அல்லது கம்பெனியைக் கட்டுப்படுத்தும் ஆற்றலுடைய அல்லது அதன் கொள்கையில் முக்கியமான அளவுக்குச் செல்வாக்குப் பிரயோகிக் கும் ஆற்றலுடைய உண்மையான ஆட்களைத் தீர்மானிக்கும் நோக்கத்துக்காக, கம்பெனியின் பங்குகளின் சொத்துவம் மீதும் வேறு வகையில் கம்பெனி தொடர்பிலும் புலனாய்வு செய்யும் அறிக்கை சமர்ப்பிக்கவும் ஒரு பரிசோதகரை அல்லது ஒருவருக்கு

மேற்பட்ட பரிசோகர்களை நியமிப்பதற்கு நல்ல காரணம் உண்டென பதிவாளருக்குத் தோன்றுமிடத்து, அவர் அவ்வாறு பரிசோதகரை அல்லது பரிசோதகர்களை நியமிக்கலாம்.

(2) இப்பிரிவின்கீழ், பரிசோதகரொருவரின் நியமனம், கருமங்கள் தொடர்பிலாகவாயினும் சரி அல்லது எவ்வளவு காலத்துக்கு அது நீடிக்கப்படுமோ அவ்வளவு காலம் தொடர்பிலாகவாயினும் சரி அல்லது வேறுவகையானதாயினும் சரி அவரது புலனாய்வின் நோக்கெல்லையை வரைவிலக்கணப்படுத்தலாமென்பதுடன் குறிப்பாக புலனாய்வை குறிப்பான பங்குகளுடன் அல்லது தொகுதிக் கடன்களுடன் தொடர்புபட்ட கருமங்களுக்கு வரையறை செய்யலாம்.

(3) பரிசோதகரொருவரது நியமனத்தின் நியதிக்கமைவாக, சட்டப்படி பிணிக்காததாயிருப்பினுங்கூட, நடைமுறையில் கடைப் பிடிக்கப்படுவதாகவும் அல்லது கடைப்பிடிக்கப்பட்டதாகவும் அல்லது கடைப்பிடிக்கப்படும் சாத்தியமுடையதாகவும், அத்துடன் அவரது புலனாய்வின் நோக்கத்துக்கு இயைபானதாக இருக்கின்ற தாகவும் உள்ள ஓர் ஒழுங்கேற்பாடு அல்லது உடன்பாடு உள்ள தைச் சுட்டிக்காட்டும் எவையேனும் சூழ்நிலைகளின் புலனாய்வுக்கு அவரது தத்துவங்கள் நீடித்தல் வேண்டும்.

(4) கம்பெனியொன்றின் குறிப்பான பங்குகள் அல்லது தொகு திக்கடன்கள் தொடர்பில், இப்பிரிவின் ஏற்பாடுகளின் கீழான புலனாய்வொன்றுக்கெனக் கம்பெனியின் பங்குதாரர்களால் பதிவாளருக்கு விண்ணப்பமொன்று செய்யப்பட்டுள்ளவிடத்தும், விண்ணப்பகாரர்களின் எண்ணிக்கை அல்லது அவர்கள் கொண்டிருக்கும் பங்குகளின் தொகை 172 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) அல்லது (இ) உட்பந்திகளின்கீழ் பரிசோதக ரொருவரின் நியமனத்திற்கான விண்ணப்பமொன்றிக்குத் தேவைப்படுவதிலும் பார்க்க குறைவாக இல்லாதவிடத்தும், பதிவாளரானவர், (5) ஆம், (6) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுக ளுக்கு அமைவாக புலனாய்வினை நடாத்துவதற்குப் பரிசோதக ரொருவரை நியமித்தல் வேண்டும். பரிசோதகரொருவர் நியமிக்கப் படும் போது, அவரது நியமனக் காலமானது, புலனாய்வுக்கு நியாயமற்றதெனப் பதிவாளர் திருப்திப்பட்டவையான அக்கருமங் கள் தவிர்ந்தவையானதாயிருத்தல் வேண்டும்.

(5) பதிவாளரானவர், அவர் அவ்விண்ணப்பத்தை விழலான தென கருதுகின்றவிடத்து (4) ஆம் உட்பிரிவின்கீழ் பரிசோதக ரொருவரை நியமனம் செய்தலாகாது.

(6) நான்காம் உட்பிரிவின் கீழான விண்ணப்பமொன்றின் மீது பதிவாளரானவருக்கு, 181 ஆம் பிரிவினால் அளிக்கப்பட்ட தத்து வங்களின் புலனாய்வு செய்யப்படுவதற்கு நாடப்படும் கருமங்களின் நோக்கத்துக்காகப் போதுமானதெனத் தோற்றுகின்றவிடத்து, அவர் அதற்குப் பதிலாக அப்பிரிவின்கீழ் அவர், புலனாய்வை நடாத்தலாம்.

(7) இப்பிரிவினது ஏற்பாடுகளின் கீழான ஏதேனும் புலனாய் வின் நோக்கங்களுக்காக, கம்பெனியின் அல்லது வேறேதேனும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவல்களுக்கு குறிப்பீடுகள் பற்றிய அவசியமான திரிபுகளுடன் (8) ஆம், (9) ஆம் உட்பிரிவு களின் ஏற்பாடுகளுக்கு அமைவாக 174 ஆம், 175 ஆம் , 176 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(8) கம்பெனியின் அல்லது எந்தக் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் சொத்துவம் கம்பெனியின் சொத்துவத்துடன் சேர்த்துப் புலனாய்வு செய்யப்பட்டதோ அந்தக் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் வெற்றியில் அல்லது தோல்வியில் ' அல்லது வெளிப்படையான வெற்றியில் அல்லது தோல்வியில் நிதிசார் அக்கறை கொண்டிருந்த எல்லா ஆட்கள் தொடர்பிலும் அல்லது எவ்வாட்கள் நிதிசார் அக்கறை கொண்டுள்ளவர்களென அல்லது நிதிசார் அக்கறை கொண்டிருந்தவர்களென நம்புவதற்குப் பரிசோதகர் நியாயமான காரணமுடையவராயுள்ளாரோ அவ்வெல்லா ஆட்கள் தொடர்பிலும் அல்லது அவற்றின் கொள்கையைக் கட்டுப்படுத்தும் அல்லது கட்டுப்படுத்திய அல்லது கொள்கையில் முக்கியமான அளவுக்குச் செல்வாக்குப் பிரயோ கிக்கும் அல்லது பிரயோகித்த எல்லா ஆட்கள் தொடர்பிலும் அல்லது எவ்வாட்கள் கொள்கையைக் கட்டுப்படுத்துபவர்களென அல்லது கட்டுப்படுத்தியவர்களென அல்லது கொள்கையில் முக்கியமான அளவுக்குச் செல்வாக்குப் பிரயோகிக்கின்றனரென அல்லது பிரயோகித்துள்ளனரென நம்புவதற்குப் பரிசோகர் நியாயமான காரணமுடையவராயுள்ளாரோ அவ்வெல்லா ஆட்கள் தொடர்பிலும் (மற்றவர்கள் சார்பில் மட்டும் அக்கறை கொண்ட ஆட்களுட்பட) விடயத்திற்கேற்றாற்போல் கம்பெனியின்

அல்லது வேறு கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவலர்கள் அல்லது முகவர்கள் தொடர்பில் அவை ஏற்புடையனவாறு 174ஆம், 175 ஆம் மற்றும் 176 ஆம் பிரிவுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(9) இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட அறிக்கையொன்றின் ஏதேனும் பகுதியை வெளிப்படுத்துவதற்குத் தகுந்த காரணம் இல்லையென பதிவாளர் கருதும்போது, அவர் அப்பகுதியை தவிர்ப்பதன் மூலம் 176 ஆம் பிரிவின்கீழான அறிக்கையை வெளியிடலாம்.

(10) இப்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் புலனாய்வின் செலவுகள் பாராளுமன்றத்தால் இந்நோக்கத்திற்கென ஏற்பாடு செய்யப்பட்ட பணங்களிலிருந்து பதிவாளரால் கொடுக்கப்பட வேண்டும்.

*பங்குகளில் அல்லது தொகுதிக் கடன்களில் அக்கறை கொண்டுள்ள ஆட்களைப் பற்றித் தகவல்களைப் பெறவுள்ள தத்துவம்.*

**181.** (1) கம்பெனியொன்றின் எவையேனும் பங்குகளின் அல்லது தொகுதிக்கடன்களின் சொத்துவத்தைப் புலனாய்வு செய்வதற்கு நற்காரணமுண்டெனவும் இந்நோக்கத்திற்கெனப் பரிசோதகரொருவரை நியமித்தல் அவசியமற்றதெனவும் பதிவாளருக்குத் தோன்றுகின்றவிடத்து, எந்த ஆள் —

(அ) அப்பங்குகளில் அல்லது தொகுதிக்கடன்களில் அக்கறை கொண்டுள்ளவரென அல்லது அக்கறை கொண்டிருந்தவரென ; அல்லது

(ஆ) அவற்றில் அக்கறை கொண்ட எவரேனும் ஆளின் அற்றோனித்தத்துவகாராக அல்லது முகவராக அப்பங்குகள் அல்லது தொகுதிக் கடன்கள் தொடர்பில் செயலாற்றுகிறாரென அல்லது செயலாற்றியுள்ளாரென,

நம்புவதற்குப் பதிவாளர் நியாயமான காரணத்தினைக் கொண்டுள்ளாரோ அவ்வெவரேனும் ஆளை, அப்பங்குகளில் அல்லது தொகுதிக் கடன்களிலுள்ள தற்போதைய அல்லது கடந்தகால அக்கறைகள் பற்றி அவரிடமுள்ள அல்லது அவர் பெறக்கூடும் என நியாயமாக எதிர்பார்க்கக்கூடிய ஏதேனும் தகவலையும், அக்கறைகொண்ட ஆட்களின் பெயர்களையும் முகவரிகளையும்

அத்துடன், பங்குகள் அல்லது தொகுதிக்கடன்கள் தொடர்பில் அவர்கள் சார்பில் செயலாற்றுகின்ற அல்லது செயலாற்றியுள்ள எவரேனும் ஆட்களின் பெயர்களையும் முகவரிகளையும் அவருக்குக் கொடுப்பதற்குப் பதிவாளர் தேவைப்படுத்தலாம்.

(2) ஆளொருவர் ஒரு பங்கினை அல்லது தொகுதிக்கடனை அல்லது அவற்றிலுள்ள ஏதேனும் அக்கறையைக் கொள்ளுவதற்கு அல்லது கையுதிர்ப்பதற்கு அல்லது அவை தொடர்பில் வாக்களிப்பதற்கு ஏதேனும் உரிமையைக் கொண்டிருப்பாராயின் அல்லது அவற்றில் அக்கறை கொண்டுள்ள வேறு ஆட்களின் உரிமைகளில் எவற்றையும் பிரயோகிப்பதற்கு அவரது சம்மதம் அவசியமானதாகவிருப்பின் அல்லது அவற்றில் அக்கறை கொண்டுள்ள வேறு ஆட்கள் தமது உரிமைகளை அவரது அறிவுறுத்தல்களுக்கு இணங்கப் பிரயோகிப்பதற்குத் தேவைப் படுத்தப்படக்கூடியவர்களாயிருப்பின் அல்லது பரீட்சயப் பட்டவர்களாயிருப்பின், அவர் அப்பங்கில் அல்லது தொதிக் கடனில் அக்கறையொன்றினைக் கொண்டுள்ளாரென இப்பிரி வின் நோக்கங்களுக்காகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் அவரிடம் தேவைப்படுத்தப்பட்ட தகவலைக் கொடுப்பதற்குத் தவறும் அல்லது அத்தகைய ஏதேனும் தகவலைக் கொடுக்கையில் முக்கிய விபரமொன்றில் பொய்யான தென அவரறியும் ஏதேனும் கூற்றினைச் செய்யும் அல்லது முக்கிய விபரமொன்றில் பொய்யான ஏதேனும் கூற்றினை அசட்டுத் துணிவுடன் செய்யும் ஆளெவரும், தவறொன்றுக்குக் குற்றவாளி யாதல் வேண்டுமென்பதுடன், பத்து இலட்சம் ரூபாவினை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஐந்து வருடங்களுக்கு மேற்படாதவொரு காலத்துக்கான இரு வகையிலொருவகை மறியற் றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண் டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

*பங்குகள் அல்லது தொகுதிக் கடன்கள் மீது மட்டுப் பாடுகளைச் சுமத்து வதற்குள்ள தத்துவம்.*

**182.** (1) நூற்றி எண்பதாம் பிரிவின் அல்லது 181 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழான புலனாய்வொன்று சம்பந்தமாக, வழங்கப்பட்ட அல்லது வழங்கப்படவுள்ள எவையேனும் பங்குகள் பற்றி இயைபான நிகழ்வுகளைக் கண்டறிவதில் இடையூறுள்ள தெனவும், அவ்விடையூறுக்கு, பதிவாளரால் தேவைப்படுத்தப் பட்டவாறாக புலனாய்வுக்கு உதவுவதற்குச் சம்பந்தப்பட்ட ஆட்க ளின் அல்லது அவர்களில் சிலரின் விருப்பமின்மை முழுமை

யான அல்லது முக்கியமான காரணமாயுள்ளதெனவும் பதிவாளருக்குத் தோன்றுகின்றவிடத்து, பதிவாளர், மேற்கொண்டுவரும் கட்டளைவரை இப்பிரிவில் சுமத்தப்பட்ட மட்டுப்பாடுகளுக்கு பங்குகள் அமைந்தவையாதல் வேண்டுமெனக் கட்டளை மூலம் பணிக்கலாம்.

(2) எவையேனும் பங்குகள், இப்பிரிவினால் சுமத்தப்பட்ட மட்டுப்பாட்டிற்கு அமைந்தவையாக உள்ளனவெனப் பணிக்கப்பட்டுள்ள வரை —

(அ) அப்பங்குகளின் கைமாற்றம் எதுவும் அல்லது வழங்கப்படாத பங்குகளின் விடயத்தில், அவர்களுடன் வழங்கப்படவுள்ள உரிமையின் கைமாற்றம் எதுவும், அத்துடன் அவர்களின் வழங்குகை எதுவும் வறிதானதாதல் வேண்டும் ;

(ஆ) அப்பங்குகள் தொடர்பில் வாக்களிக்கும் உரிமை எதுவும் பிரயோகிக்கப்படற்பாலதாதலாகாது ;

(இ) அப்பங்குகளின் உரிமைகொண்டு அல்லது அவர்களுக்குச் செய்யப்பட்ட கொடைமுனைவு எதனையும் பின்பற்றி மேற்கொண்டும் பங்குகள் வழங்கப்படுதலாகாது ;

(ஈ) மூலதனம் தொடர்பாகவாயினும் சரி வேறு வகையிலாகவாயினும் சரி, அப்பங்குகள் மீது கம்பெனியிடமிருந்து போமதியாகவுள்ள எவையேனும் பணத்தொகைமீது, ஒழித்துக்கட்டுதலொன்றின்போது தவிர, கொடுப்பனவு எதுவும் செய்யப்படுதலாகாது.

(3) பதிவாளர், பங்குகள் (2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட மட்டுப்பாடுகளுக்கு அமைந்தவையாதல் வேண்டுமெனப் பணித்து, கட்டளையொன்றினை ஆக்குமிடத்து அல்லது பங்குகள் அவற்றிற்கு அமைந்தவையாக இருப்பதிலிருந்து இல்லாதொழிதல் வேண்டுமெனப் பணித்து கட்டளையொன்றினை ஆக்க மறுக்குமிடத்து, அத்தகைய கட்டளையில் இன்னலுற்ற எவரேனுமாள் 472ஆம் பிரிவின் கீழான கட்டளைக்கெதிராக மேன்முறையீட்டு

நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்யலாமென்பதுடன் மேன் முறையீட்டு நீதிமன்றமானது அது பொருத்தமானதென கருதின், பங்குகள் அம்மட்டுப்பாடுகளுக்கு அமைந்தவையாக இருப்ப திலிருந்து இல்லாதொழிதல் வேண்டுமெனப் பணிக்கலாம்.

(4) பங்குகளின் கைமாற்றமொன்றை அனுமதிக்கும் நோக்குடன் செய்யப்படவுள்ளதென வெளிப்படுத்தப்பட்டதான (2) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட மட்டுப்பாடுகளுக்கு பங்குகள் அமைந் தவையாக இருப்பதிலிருந்து இல்லாதொழிதல் வேண்டுமெனப் பணிக்கும் கட்டளை எதுவும், பதிவாளரினால் அல்லது மேன் முறையீட்டு நீதிமன்றத்தினால் ஆக்கப்பட்டிருப்பின் கைமாற் றத்திற்கு முன்னர் கொள்ளப்பட்ட ஏதேனும் உரிமை பற்றியதாய் அல்லது செய்யப்பட்ட ஏதேனும் கொடைமுனைவு பற்றியதாய் அவை இருக்கும் வரையில், (2) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியிலும் (ஈ) என்னும் பந்தியிலும் குறித்துரைக்கப்பட்ட மட்டுப் பாடுகளை முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ தொடர்ந் தும் வைத்திருக்கலாம்.

(5) (அ) அவரது அறிவுக்கெட்டியவரை அப்போதைக்கு (2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட மட்டுப்பாடுகளுக்கு அமைந்தவையாகவுள்ள எவையேனும் பங்குகளை அல்லது அத்தகைய பங்குகளுடன் வழங்கப்படும் ஏதேனும் உரிமை யைக் கையுதிர்ப்பதற்கு ஏதேனும் உரிமையைப் பிரயோகிக்கும் அல்லது பிரயோகிப்பதாகக் கொள்ளப்படும் ;

(ஆ) பங்குகளைக் கொண்டிருப்பவராகவாயினும்சரி பதிலியாகவாயினும்சரி, அத்தகைய எவையே னும் பங்குகள் தொடர்பில் வாக்களிக்கும் அல்லது அவர்கள் தொடர்பில் வாக்களிக்க பதிலியொருவரை நியமிக்கும் ; அல்லது

(இ) அத்தகைய எவையேனும் பங்குகளைக் கொண்டி ருப்பவராயிருந்து, மட்டுப்பாடுகளை கவனத்திற் கெடுக்க வேண்டியதை அறிந்தவரெனத் தாம் அறியாதுள்ள, ஆனால் பங்குகளைக் கொண்டி ருப்பவராகவோ பதிலியாகவோ அப்பங்குகள் தொடர்பில் வாக்களிப்பதற்கு அத்தகைய மட்டுப்

பாடுகளைத் தவிர, உரித்துடையவரெனத் தாம் அறிந்துள்ள எவரேனும் ஆளுக்கு அறிவிக்கத் தவறும்,

ஆளெவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் ஐந்து இலட்சம் ரூபாவினை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டாண்டுகளுக்கு மேற்படாதவொரு காலத்துக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(6) ஏதேனும் கம்பெனியின் பங்குகள் (2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட மட்டுப்பாடுகளுக்கு முரணாக வழங்கப்பட்டுள்ளவிடத்து, —

(அ) கம்பெனி தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும் ;

(ஆ) தவறுகைக்கு ஆளாகும் கம்பெனியின் ஒவ்வோர் அலுவலரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் ஓர் இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

(7) பதிவாளரின் சம்மதத்தாலன்றி அல்லது சம்மதத்துடனன்றி இப்பிரிவின் கீழ்க் குற்றவழக்கொன்று தொடுக்கப்படுதலாகாது.

(8) இப்பிரிவின் ஏற்பாடுகள் பங்குகள் தொடர்பில் அவை ஏற்புடையனவாதல் போன்று தொகுதிக்கடன்கள் தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

*சொத்துக்களையும் பொறுப்புக்களையும் சரிபார்ப்பதற்கு பதிவாளருக்குள்ள தத்துவம்.*

**183.** ஏதேனும் கம்பெனியின் இருப்புச் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் சரிபார்ப்பதற்கு, பதிவாளர் தத்துவமுடையவராதல் வேண்டும்.

### முகாமைத் தத்துவங்கள்

*கம்பெனியின் முகாமை.*

**184.** கம்பெனியொன்றின் அமைப்பகவிதிகளில் அடங்கியுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக, —

(அ) கம்பெனியொன்றின் தொழில் மற்றும் அலுவல்கள் கம்பெனியின் சபையினால் அல்லது கம்பெனியின் சபையின் பணிப்புரையின் அல்லது மேற்பார்வையின் கீழ் முகாமை செய்யப்படுதல் வேண்டும் ;

(ஆ) கம்பெனியொன்றின் சபையானது, கம்பெனியின் தொழில் மற்றும் அலுவல்களின் முகாமையை முகாமை செய்வதற்கும் நெறிப்படுத்துவதற்கும் அத்துடன் மேற்பார்வை செய்வதற்கும் அவசியமான சகல தத்துவங்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

*பாரிய கொடுக்கல் வாங்கல்கள்.*

**185.** (1) கம்பெனியொன்று, ஏதேனும் பாரிய கொடுக்கல் வாங்கலானது, —

(அ) விசேட தீர்மானம் மூலம் அங்கீகரிக்கப்பட்டாலொழிய;

(ஆ) விசேட தீர்மானம் மூலம் அடுத்துப்பின்னதான அங்கீகாரத்திற்கு அமைவாக இருந்தாலொழிய ;

(இ) கம்பெனியின் சகல பங்குதாரர்களினாலும் எழுத்தில் சம்மதிக்கப்பட்டாலொழிய ; அல்லது

(ஈ) கம்பெனி கூட்டிணைக்கப்பட்ட நேரத்தில் உள்ளடக்கப்பட்டதான அதன் அமைப்பகவிதிகளின் ஏற்பாடொன்றின் மூலம் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடுவதற்கு கம்பெனி, வெளிப்படையாக அங்கீகரிக்கப்பட்டிருந்தாலொழிய,

அத்தகைய கொடுக்கல் வாங்கலில் ஈடுபடுதலாகாது.

(2) இப்பிரிவில், —

"இருப்புச் சொத்து" பற்றிய குறிப்பீடானது உருவப் பொருளாயினும் சரி அருவப் பொருளாயினும் சரி ஏதேனும் வகையான ஆதனத்தையும் உள்ளடக்கும் ;

"பாரிய கொடுக்கல் வாங்கல்" என்பது –

(அ) கொள்ளலுக்கு முன்னர் கம்பெனியின் இருப்புச் சொத்துக்களின் பெறுமதியில் அரைவாசிக்கும் கூடுதலாக இருக்கும் பெறுமதிகொண்ட இருப்புச் சொத்தின் அடுத்துறுவதாயினுஞ்சரி அல்லா விடினுஞ்சரி கொள்ளுகை அல்லது கொள்ளுதற் கான உடன்படிக்கை ;

(ஆ) கம்பெனியின் இருப்புச் சொத்துக்களின் பெறுமதி யில் அரைவாசிக்கும் அதிகமான அல்லது அவை முழுவதையும் அடுத்துறுவதாயினுஞ்சரி அல்லா விடினுஞ்சரி கையுதிர்த்தல் அல்லது கையுதிர்ப்ப தற்கான உடன்படிக்கை ;

(இ) கொள்ளலுக்கு முன்னர் கம்பெனியின் இருப்புச் சொத்துக்களின் பெறுமதியில் அரைவாசிக்கும் கூடுதலாக இருக்கும் பெறுமதிகொண்ட உரிமை களில் அல்லது அக்கறைகளைக் கம்பெனிகொள் ளும் அல்லது கடப்பாடுகளை அல்லது பொறுப்புக் களை கம்பெனி உறும் பயன்கொண்ட அல்லது அத்தகைய பயனைக் கொண்டிருக்கக்கூடிய கொடுக் கல் வாங்கலொன்று ; அல்லது

(ஈ) கம்பெனியால் கொண்டு நடாத்தப்படும் தொழிலின் தன்மையைக் கணிசமானளவுக்கு மாற்றும் நோக்கம் கொண்ட அல்லது பயனைக் கொண்ட கொடுக்கல் வாங்கலொன்று அல்லது ஒரு தொடரான உறவு பட்ட கொடுக்கல் வாங்கல்கள்.

(3) (அ) கம்பெனியின் ஆதனம் முழுவதன் மீதும் அல்லது ஏதேனும் பாகத்தின்மீதும் மிதக்கும் தாக்கீ டொன்றை எக்கொடுக்கல்வாங்கலின்மீது கம்பெனி யொன்று வழங்குகின்றதோ அல்லது வழங்குவதற்கு உடன்படுகின்றதோ அக்கொடுக்கல் வாங்கலுக்கு ;

(ஆ) கம்பெனியொன்றின் ஆதனம் முழுவதன்மீதும் அல்லது ஏதேனும் பாகத்தின் மீதும் மிதக்கும் தாக்கீ

டொன்றை உருவாக்கும் சாதனமொன்றைப் பின் பற்றி நியமிக்கப்பட்ட பெறுநரொருவரினால் செய்து கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கலொன்றுக்கு ;

(இ) கம்பெனியொன்றின் நிருவாகியொருவரினால் அல்லது ஒழிப்போனால் செய்துகொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல் ஒன்றுக்கு,

இப்பிரிவில் உள்ளதெதுவும் ஏற்புடையதாகாது.

**186.** (1) கம்பெனியின் அமைப்பகவிதிகளின் ஏற்பாடுகளில் அடங்கியுள்ள எவையேனும் மட்டுப்பாடுகளுக்கு அமைவாக, கம்பெனியொன்றின் சபையானது. ஆறாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட இச்சட்டத்தின் பிரிவுகளுள் எதன்கீழானது மான தத்துவங்கள் தவிர்ந்த தத்துவங்களுள் ஏதேனும் ஒன்றை அல்லது அவற்றுக்கு மேற்பட்டவற்றை பணிப்பாளர்கள் குழு வொன்றுக்கு, கம்பெனியின் பணிப்பாளரொருவருக்கு அல்லது ஊழியருக்கு வேறு எவரேனும் ஆளுக்குக் கையளிக்கலாம். *தத்துவங்களைக் கையளித்தல்.*

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் தத்துவமொன்றைக் கையளிக்கின்ற சபையொன்று, —

(அ) சபையானது, தத்துவத்தைப் பிரயோகிப்பதற்கு முன்னர், இச்சட்டத்தின் மூலமும் மற்றும் கம்பெனியின் அமைப்பகவிதிகள் மூலமும் கம்பெனியின் பணிப்பாளர்கள் மீது சுமத்தப்பட்ட கடமைகளுக்கு இணக்கமாக கையளிப்பாளர் தத்துவத்தைப் பிரயோகிக்கமாட்டார் என நம்புவதற்கான காரணத்தைக் கொண்டிருக்குமிடத்து ; அல்லது

(ஆ) சபையானது, முறையாகப் பயன்படுத்தப்பட்ட நியாயமான வழிமுறைகள் மூலம் கையளிப்பாளரினால் தத்துவம் பிரயோகிக்கப்பட்டமையைக் கண்காணிப்பதற்குத் தவறியுள்ளவிடத்து,

சபையினால் அத்தத்துவம் பிரயோகிக்கப்பட்டிருப்பதைப் போன்று கையளிப்பாளரினால் தத்துவம் பிரயோகிக்கப்பட்டமைக்குப் பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.

**பணிப்பாளர்களின் கடமைகள்**

*கம்பெனியின் நலன்கருதியும் நல்லெண்ணத்துடனும் செயலாற்றுவதற்கு பணிப்பாளர்களுக்குள்ள கடமை.*

**187.** (1) கம்பெனியொன்றின் பணிப்பாளரொருவராகக் கடமைகளைப் புரிகின்ற அல்லது தத்துவங்களைப் பிரயோகிக்கின்ற ஆளொருவர் நல்லெண்ணத்துடன் செயலாற்ற வேண்டும், அத்துடன் (2) ஆம் உட்பிரிவுக்கமைவாக, கம்பெனியின் நலனுக்குகந்தது எதுவென அவ்வாள் நம்பும் விதமாகவும் செயலாற்ற வேண்டும்.

(2) வேறொரு கம்பெனியின் முழுமையாகச் சொந்தமாகவுள்ள துணைநிலை கம்பெனியொன்றின் பணிப்பாளரொருவர், கம்பெனியின் அமைப்பகவிதிகளினால் அவ்வாறு செய்வதற்கு வெளிப்படையாக அனுமதிக்கப்பட்டால், அவர் பணிப்பாளரொருவராகவிருக்கும் கம்பெனியின் நலன்களுக்கு உகந்தனவல்லாதனவாக இருப்பினும் கூட, அவ்வேறு கம்பெனியின் நலனுக்குகந்ததென அவர் நம்புமொருவிதத்தில் செயற்படலாம்.

*பணிப்பாளர்கள் சட்டத்துக்கும் அகவிதிகளுக்கும் இணங்கியொழுகுதல்.*

**188.** கம்பெனியொன்றின் பணிப்பாளரொருவர் இச்சட்டத்தின் ஏற்பாடுகளையும் அல்லது கம்பெனியின் அமைப்பகவிதிகளில் அடங்கியுள்ள ஏற்பாடுகளுள் எதனையும் மீறுகின்ற முறையில் செயலாற்றுதல் ஆகாது அல்லது செயலாற்ற கம்பெனியுடன் உடன்படுதல் ஆகாது.

*பணிப்பாளரின் கவனத்தராதரம்.*

**189.** கம்பெனியொன்றின் பணிப்பாளரொருவர் என்றவகையில் தத்துவங்களைப் பிரயோகிக்கின்ற அல்லது கடமைகளை நிறைவேற்றுகின்ற ஆளொருவர்,—

(அ) முன்பின் யோசனையில்லாது அல்லது பாரிய கவனயீனமான முறையில் செயலாற்றுதல் ஆகாது ;

(ஆ) அவரது அறிவும் அனுபவமும்கொண்ட ஆளொருவரிடம் நியாயமாக எதிர்பார்க்கக்கூடியதான அதே அளவு திறனையும் கவனத்தையும் பிரயோகித்தல் வேண்டும்.

தகவலையும் ஆலோசனையையும் பயன்படுத்தல்.

**190.** (1) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக கம்பெனியொன்றின் பணிப்பாளரொருவர் பின்வரும் ஆட்களுள் எவரினாலேனும் தயாரிக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட அறிக்கைகள், கூற்றுக்கள் மற்றும் நிதிசார் தரவுகள் அத்துடன் வேறு தகவல் என்பவற்றின்மீதும் அல்லது நிபுணத்துவ ஆலோசனை மீதும் தங்கியிருக்கலாம் :—

(அ) கம்பெனியின் ஊழியரொருவர் ;

(ஆ) ஆளின் உயர்தொழிற் தேர்ச்சிக்குட்பட்டதாக அல்லது நிபுணத்துவ திறமைக்குட்பட்டதாக இருப்பதாகப் பணிப்பாளர் நம்புகின்ற கருமங்கள் தொடர்பில், உயர்தொழில்சார் ஆலோசகரொருவர் அல்லது நிபுணரொருவர் ;

(இ) பணிப்பாளரின் அல்லது பணிப்பாளர் குழுவின் பெயர்குறித்த அதிகாரத்துக்குட்பட்ட கருமங்கள் தொடர்பில், வேறு எவரேனும் பணிப்பாளர் அல்லது சேவையாற்றாத பணிப்பாளர்கள் குழு,

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள், பணிப்பாளரொருவருக்கு, அவர் —

(அ) நல்லெண்ணத்துடன் செயலாற்றினால் ;

(ஆ) சூழல் நிலைகளினால் விசாரணைக்கான அவசியம் சுட்டிக்காட்டப்பட்டவிடத்து, முறையான விசாரணை செய்தால் ; அத்துடன்

(இ) அவ்வாறு நம்பிக்கை வைப்பது அவசியமற்றது என்ற அறிவில்லாதிருந்தால்,

அவ்வாறு இருந்தால் மாத்திரமே ஏற்புடையனவாகும்.

(3) இச்சட்டத்தில் அடங்கியுள்ள ஏற்பாடுகள் கம்பெனியொன்றின் பணிப்பாளர்கள் அல்லது அலுவலர்களின் கடமை பொறுப்புத் தொடர்பில் வேறு ஏதேனும் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு மேலதிகமாகவும் தரக்குறைப்பனவற்றதாகவும் உள்ளன.

## பணிப்பாளரொருவர் அக்கறை கொண்டுள்ள விடயத்தில் கொடுக்கல் வாங்கல்

*"அக்கறை கொண்டவராக வுள்ள" என்பதன் பொருள்.*

**191.** (1) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, கம்பெனியொன்றின் பணிப் பாளர் –

(அ) கொடுக்கல் வாங்கலொன்றுக்கான திறத்தவரொரு வராக அல்லது கொடுக்கல் வாங்கலிலிருந்து முக்கிய நிதிசார் நன்மையொன்றை பெற்றுக்கொள்பவராக அல்லது பெறக்கூடியவராக ;

(ஆ) கொடுக்கல் வாங்கலுக்கான வேறொரு திறத்தவரில் முக்கிய நிதிசார் அக்கறைகொண்டவராக ;

(இ) (i) கம்பெனியின் கொளிக் கம்பெனியாக அதாவது கம்பெனியானது முழுமையாகச் சொந்தமான துணைநிலைக் கம்பெனியாக இருக்கும் கொளிக் கம்பெனியொன்றாக ;

(ii) கம்பெனியின் முழுமையாக சொந்தமான துணை நிலைக் கம்பெனியொன்றாக ;

(iii) கம்பெனியின் முழுமையாகச் சொந்தமான துணைக் கம்பெனியொன்றாக இருக்கும் கொளிக் கம்பெனியொன்றின் முழுமையாகச் சொந்தமாக இருக்கும் துணைநிலைக் கம்பெனியொன்றாக,

இருக்கும் திறத்தவரொருவராக அல்லது ஆள் ஒருவராக இராத கொடுக்கல் வாங்கலுக்கான வேறொரு திறத்தவராக அல்லது கொடுக்கல் வாங்கலிலிருந்து முக்கிய நிதிசார் நன்மையைப் பெற்றுக்கொள்பவராக அல்லது பெறக்கூடியவராக அல்லது பணிப்பாளர், அலுவலர், வேறொரு திறத்தவரின் நம்பிக்கைப் பொறுப்பானவரொருவராக ;

(ஈ) கொடுக்கல் வாங்கலுக்கான வேறொரு திறத்தவரின் பெற்றோராக, பிள்ளையாக அல்லது வாழ்க்கைத் துணையாக அல்லது கொடுக்கல் வாங்கலிலிருந்து முக்கிய நிதிசார் நன்மையைப் பெற்றுக்கொள்பவராக அல்லது பெறக்கூடியவராக ;

(உ) வேறுவகையாக, நேரடியாக அல்லது மறைமுகமாகக் கொடுக்கல் வாங்கலில் முக்கிய அக்கறைகொண்டவராக,

இருந்தால், மாத்திரமே கம்பெனி திறத்தவராகவுள்ள கொடுக்கல் வாங்கலில் பணிப்பாளர் அக்கறைகொண்டவராகவிருப்பார்.

(2) பணிப்பாளர் அல்லது வேறு ஆள் தனிப்பட்ட முறையில் பகுதியளவிலோ அல்லது முழுமையாகவோ ஏற்றுக்கொண்ட பொறுப்புகளுக்காக கம்பெனியின் உத்தரவாதத்தின்கீழ், நட்டோத்தரவாதமொன்றின்கீழ் அல்லது பிணைப்பொறுப்பொன்றினை வைப்புச் செய்வதன்மூலம் தனிசு அல்லது கடப்பாடு தொடர்பில் மூன்றாம் திறத்தவரின் வேண்டுகோளின்பேரில் பணிப்பாளருடன் எவ்வித தொடர்பும் வைத்திருக்காத மூன்றாம் திறத்தவருக்கு பிணைப்பொறுப்பைக் கம்பெனி வழங்குதல் மாத்திரம் கொடுக்கல் வாங்கலில் உள்ளடங்கியிருந்தால், கம்பெனியொன்றின் பணிப்பாளர் ஒருவர், கம்பெனியொன்று திறத்தவராக இருக்கும் கொடுக்கல் வாங்கலொன்றில் அக்கறை கொண்டுள்ளார் எனக் கருதப்பட முடியாது.

அக்கறையை வெளியிடுதல்.

**192.** (1) கம்பெனியொன்றின் பணிப்பாளர், கம்பெனியுடனான கொடுக்கல் வாங்கலொன்றை அல்லது உத்தேசக் கொடுக்கல் வாங்கலொன்றைச் செய்வதற்கு அவர் அக்கறைகொண்டுள்ளாரென்ற நிகழ்வை அறிந்த பின்னர் உடனடியாக, அந்த அக்கறையின் தன்மையையும் அளவையும் அக்கறைகள் இடாப்பில் பதிவீடு செய்வித்தல் வேண்டுமென்பதுடன், கம்பெனிக்கு ஒருவருக்கு மேற்பட்ட பணிப்பாளர்கள் இருப்பின், அந்த அக்கறையின் தன்மையையும் அளவையும் பற்றிக் கம்பெனியின் சபைக்கு வெளியிடுதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, பணிப்பாள ரொருவர் இன்னொரு பெயர்குறிக்கப்பட்ட கம்பெனியின் அல்லது வேறு ஆளின் ஒரு பங்குதாரர், பணிப்பாளர், அலுவலர் அல்லது நம்பிக்கைப்பொறுப்பாளர் என்பவராகவுள்ளார், அல்லது இன்னொரு பெயர்குறிக்கப்பட்ட கம்பெனியுடன் அல்லது ஆளுடன் வேறுவகையில் தொடர்புபட்டுள்ளார் என்றும், பதிவீட்டு அல்லது வெளிவிடுகைத் தேதிக்குப் பின்னர் அக்கம்பெனியுடன் அல்லது ஆளுடன் செய்துகொள்ளப்படக்கூடிய ஏதேனும் கொடுக்கல் வாங்கலில் அக்கறைகொண்டுள்ளவரெனக் கொள்ளப்பட வேண்டும், என்னும் பொருள்பட அக்கறைகள் இடாப்பில் பதி வீடு செய்யப்பட்ட அல்லது சபைக்கு வெளிவிடப்பட்ட பொது அறிவித்தலொன்று அக்கம்பெனியுடனான அல்லது ஆளுட னான ஏதேனும் கொடுக்கல்வாங்கல் தொடர்பாக அக்கறை பற்றிய போதிய வெளிவிடுகையாதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகு வதற்குப் பணிப்பாளரொருவர் தவறியமை, கம்பெனியினால் அல்லது பணிப்பாளரினால் செய்துகொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கலின் செல்லுபடியாந்தன்மையைப் பாதித்தலாகாது.

(4) ஓராம் உட்பிரிவின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற பணிப்பாளர் ஒவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படு வதன்மேல் இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத் துக்கு ஆளாதலும் வேண்டும்.

கொடுக்கல் வாங்கல்களை வறிதாக்குதல்.

**193.** (1) கம்பெனியின் பணிப்பாளரொருவர் எந்தக் கொடுக்கல் வாங்கலில் அக்கறைகொண்டுள்ளாரோ கம்பெனியினால் செய்து கொள்ளப்பட்ட அந்தக் கொடுக்கல்வாங்கலொன்று, கொடுக்கல் வாங்கலின் பின்னர் ஆறு மாதங்கள் முடிவுறுமுன்னரும், அதில் பணிப்பாளரின் அக்கறை எல்லாப் பங்குதாரர்களுக்கும் (கம் பெனியின் ஆண்டறிக்கைமூலமாகவாயினுஞ்சரி அல்லது வேறு வகையிலாகவாயினுஞ்சரி) வெளியிடப்படுமுன்னரும் எந்நேரத்தி லும் வறிதாக்கப்படலாம்.

(2) கொடுக்கல்வாங்கலொன்று, அதன்கீழ் கம்பெனியானது, நியாயமான பெறுமதியைப் பெற்றால், இப்பிரிவின்கீழ் வறிதாக் கப்படுதலாகாது.

(3) இரண்டாம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, கம்பெனியொன்று கொடுக்கல்வாங்கலின்கீழ் நியாயமான பெறுமதியைப் பெறுகின்றதாவென்பது பற்றிய கேள்வி, கொடுக்கல்வாங்கல் செய்துகொள்ளப்பட்ட நேரத்தில் கம்பெனிக்கும் அக்கறைகொண்டுள்ள பணிப்பாளருக்கும் தெரிந்த தகவலின் அடிப்படையின்மீது தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(4) கம்பெனியினால் அதன் தொழிலின் சாதாரண நெறிமுறையின்போது கொடுக்கல்வாங்கலொன்று வழமையான நியதிநிபந்தனைகளின்மீது செய்துகொள்ளப்படின், கம்பெனியானது, கொடுக்கல்வாங்கலின்கீழ் நியாயமான பெறுமதி பெற்றுள்ளதென ஊகிக்கப்படுதல் வேண்டும்.

(5) இப்பிரிவின் நோக்கங்களுக்காக —

(அ) கொடுக்கல்வாங்கலொன்றை நிலைநாட்ட நாடுகின்றவரும், கொடுக்கல்வாங்கல் செய்துகொள்ளப்பட்ட நேரத்தில் பணிப்பாளரின் அக்கறையை அறிந்திருந்தவரும், அல்லது அறிந்திருக்கவேண்டியவருமான ஆளொருவர், நியாயமான பெறுமதியை நிலைநாட்டுவதற்கான பொறுப்பை உடையவராயிருத்தல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) வேறேதேனும் விடயத்தில், கம்பெனியானது, அது நியாயமான பெறுமதி பெறவில்லை என்பதை நிலைநாட்டுவதற்கான பொறுப்பைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(6) பணிப்பாளரொருவர் எந்தக் கொடுக்கல்வாங்கலில் அக்கறை கொண்டுள்ளாரோ அந்தக் கொடுக்கல்வாங்கல், இப்பிரிவை அல்லது கம்பெனியின் அமைப்பகவிதிகளைப் பின்பற்றி அல்லாது, பணிப்பாளரின் அக்கறை என்ற ஏதுவின்மீது வறிதாக்கப்படுதலாகாது.

*மூன்றாம் திறத்தவர்களின் மீதான பயன்.*

**194.** நூற்றித்தொண்ணூற்றி மூன்றாம் பிரிவின்கீழ் கொடுக்கல்வாங்கலொன்றை வறிதாக்கல், ஆளொருவர் கொள்ளுதல் செய்துள்ள ஆதனத்தில் அல்லது ஆதனத்துக்கான அவ்வாளின் உரித்தை அல்லது அக்கறையை, ஆதனமானது —

(அ) கம்பெனியல்லாத ஆளொருவரிடமிருந்து ;

(ஆ) பெறுமதியுள்ள பிரதிபயனுக்காக ; அத்துடன்

(இ) எந்தச் சூழ்நிலைகளின் விளைவாகக் கொடுக்கல் வாங்கல் வறிதாக்கப்படற்பாலதாக வருகின்றதோ அந்தச் சூழ்நிலைகள் பற்றிய அறிவித்தலின்றி நல்லெண்ணத்துடன்,

கொள்ளுதல் செய்யப்பட்டிருப்பின், பாதித்தலாகாது.

*குறித்தசில விடயங்களில் 192 ஆம், 193ஆம் பிரிவுகள் ஏற்புடையன வல்லாததாதல்.*

**195.** பிரிவுகள் 192, 193 என்பவற்றில் அடங்கியுள்ளதெதுவும்—

(அ) 216 ஆம் பிரிவுக்கிணங்கப் பணிப்பாளரொருவருக்குக் கொடுக்கப்பட்ட ஊதியம் அல்லது வேறேதேனும் நன்மை ; அல்லது

(ஆ) 218 ஆம் பிரிவுக்கிணங்கக் கொடுக்கப்பட்ட நட்டோத்தரவாதம் அல்லது வழங்கப்பட்ட காப்புறுதி,

தொடர்பாக ஏற்புடையதாதலாகாது.

*அக்கறை கொண்டுள்ள பணிப்பாளர் வாக்களிக்கலாம்.*

**196.** கம்பெனியின் அமைப்பகவிதிகளில் அடங்கியுள்ள ஏற்பாடுகளுக்கமைய, கம்பெனியினால் செய்துகொள்ளப்பட்ட அல்லது செய்துகொள்ளப்படவுள்ள கொடுக்கல்வாங்கலில் அக்கறை கொண்டுள்ள கம்பெனியின் பணிப்பாளரொருவர், அப்பணிப்பாளர் அக்கொடுக்கல்வாங்கலில் அக்கறைகொண்டிராத திறத்தவர் என்றாற்போன்று —

(அ) அக்கொடுக்கல்வாங்கல் தொடர்பான ஒரு கருமத்தின் மீது வாக்களிக்கலாம் ;

(ஆ) அக்கொடுக்கல்வாங்கல் தொடர்பான கருமம் எந்தக் கூட்டத்தில் எழுகின்றதோ அந்தக் கூட்டத்தில் வருகை தந்து ஒரு கூட்ட நடப்பெண்ணின் நோக்கத்துக்காக அக்கூட்டத்திற் சமுகமளித்துள்ள பணிப்பாளர்களுட் சேர்க்கப்படலாம் ;

(இ) கம்பெனியின் சார்பில் அக்கொடுக்கல்வாங்கல் தொடர்பான ஆவணமொன்றை ஒப்பமிடலாம் ; அத்துடன்

(ஈ) அக்கொடுக்கல்வாங்கல் தொடர்பாகப் பணிப்பாளரென்ற முறையில் வேறேதேனும் காரியத்தைச் செய்யலாம்.

கம்பெனித் தகவலைப் பயன்படுத்துதல்.

**197.** (1) கம்பெனியொன்றன் பணிப்பாளர் அல்லது ஊழியர் என்றமுறையில், வேறுவகையில் அவருக்குக் கிடைத்திருக்க முடியாத தகவலை உடையவராகவுள்ள பணிப்பாளர் ஒருவர்,—

(அ) கம்பெனியின் நோக்கங்களுக்காக ; அல்லது

(ஆ) சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறு ; அல்லது

(இ) இரண்டாம் உட்பிரிவிற்கிணங்க ; அல்லது

(ஈ) எந்தச் சூழ்நிலைகளில் கம்பெனியின் அமைப்பகவிதிகள் அவ்வாறு செய்யும் பணிப்பாளருக்கு அதிகாரமளிக்கின்றதோ அந்த வேறேதேனும் சூழ்நிலைகளில்

தவிர, அத்தகவலை எவரேனுமாளுக்கு வெளியிடுதலாகாது, அல்லது அத்தகவலைப் பயன்படுத்துதலோ அத்தகவலின்மீது செயலாற்றுதலோ ஆகாது.

(2) கம்பெனியின் பணிப்பாளரொருவர் —

(அ) பணிப்பாளர் (3) ஆம் உட்பிரிவின்கீழ் அவ்வாறு செய்யும்படி சபையினால் முதலில் அதிகாரமளிக்கப்படின்; அத்துடன்

(ஆ) அதிகாரவளிப்புப் பற்றிய விபரங்கள் அக்கறைகள் இடாப்பில் பதிவீடுசெய்யப்படின்,

தகவலை வெளிவிடலாம், பயன்படுத்தலாம் அல்லது அதன்மீது செயலாற்றலாம்.

(3) சபையானது, தகவலை வெளியிடுதல் பயன்படுத்துதல் அல்லது அதன்மீது செயலாற்றுதல் கம்பெனியைப் பங்கப்படுத்தும் சாத்தியமுடையதாகவிராதெனத் திருப்திப்படின், அவ்வாறு செய்யுமாறு பணிப்பாளருக்கு அதிகாரமளிக்கலாம்.

**பங்குகளில் பணிப்பாளருக்குள்ள அக்கறைகளை வெளிவிடுதல்**

"இயைபான அக்கறை" என்பதன் பொருள்.

**198.** (1) ஒரு கம்பெனியின் பணிப்பாளர் ஒருவர் –

(அ) அப்பங்கின் நன்மைபெறும் சொந்தக்காரராகவிருப்பின் ;

(ஆ) பங்குடன் இணைந்துள்ள ஏதேனும் வாக்களிக்கும் உரிமையைப் பிரயோகிப்பதற்கான தத்துவம் உடையவராகவிருப்பின் ;

(இ) பங்குடன் இணைந்துள்ள ஏதேனும் வாக்களிக்கும் உரிமைகளின் பிரயோகத்தைக் கட்டுப்படுத்துவதற்கான தத்துவத்தை உடையவராகவிருப்பின் ;

(ஈ) பங்கைக் கொள்ளுதல் செய்வதற்கான அல்லது கையுதிர்ப்பதற்கான தத்துவத்தை உடையவராகவிருப்பின் ;

(உ) இன்னோராளினால் பங்குகொள்ளுதல் செய்யப்படுவதனை அல்லது கையுதிர்க்கப்படுவதனைக் கட்டுப்படுத்துவதற்கான தத்துவத்தை உடையவராகவிருப்பின் ; அல்லது

(ஊ) பங்குதொடர்பான ஏதேனும் நம்பிக்கைப்பொறுப்பு, உடன்படிக்கை, ஒழுங்கை அல்லது உடன்பாடு என்பவற்றின்கீழ், அல்லது அவற்றின் பயனைக்கொண்டு, (அவ்வாள் அதற்கான திறத்தவராகவிருப்பினுஞ்சரி அல்லவாயினுஞ்சரி) -

(i) எந்நேரத்திலும் அப்பங்குடன் இணைந்துள்ள வாக்களிக்கும் ஏதேனும் உரிமையைப் பிரயோகிப்பதற்குத் தத்துவமுடையவராகவிருப்பின் ;

(ii) எந்நேரத்திலும் அப்பங்குடன் இணைந்துள்ள வாக்களிக்கும் ஏதேனும் உரிமையின் பிரயோகத்தைக் கட்டுப்படுத்துவதற்குத் தத்துவமுடையவராகவிருப்பின் ;

(iii) எந்நேரத்திலும் அப்பங்கைக் கொள்ளுதல் செய்வதற்கான அல்லது கையுதிர்ப்பதற்கான தத்துவமுடையவராகவிருப்பின் ; அல்லது

(iv) எந்நேரத்திலும் இன்னோராள் அப்பங்கினைக் கொள்ளுதலை அல்லது கையுதிர்த்தலைக் கட்டுப்படுத்துவதற்குத் தத்துவமுடையவராக விருப்பின்,

200 ஆம் பிரிவின் நோக்கங்களுக்காக, ஒரு கம்பெனியினால் வழங்கப்பட்ட பங்கில் (அப்பணிப்பாளர் பங்கு இடாப்பில் அப்பங்கை வைத்திருப்பவராகப் பதிவுசெய்யப்பட்டிருப்பினுஞ்சரி அல்லா விடினுஞ்சரி), இயைபான அக்கறை உடையவராகவிருப்பார்.

(2) ஆளொருவர் (கம்பெனியின் பணிப்பாளரொருவராகவிருப்பினுஞ்சரி அல்லாவிடினுஞ்சரி) (1) ஆம் உட்பிரிவின் பயனைக் கொண்டு ஒரு பங்கில் இயைபான அக்கறையை உடையவராக வுள்ளவிடத்தும் -

(அ) அவ்வாள் அல்லது கம்பெனியின் பணிப்பாளர்கள் –

(i) அப்பங்குடன் இணைந்துள்ள வாக்களிக்கும் உரிமையைப் பிரயோகித்தல் ;

(ii) அப்பங்குடன் இணைந்துள்ள வாக்களிக்கும் ஏதேனும் உரிமையின் பிரயோகத்தைக் கட்டுப்படுத்தல் ;

(iii) அப்பங்கைக் கொள்ளுதல் செய்தல் அல்லது கையுதிர்த்தல் ; அல்லது

(iv) அப்பங்கு இன்னோராளினால் கொள்ளப்படுதலை அல்லது கையுதிர்த்தலைக் கட்டுப்படுத்துவதற்கான தத்துவம் பிரயோகிக்கப்படுதல்,

தொடர்பாக அதன் பணிப்புகள், அறிவுறுத்தல்கள், அல்லது விருப்பங்கள் என்பவற்றுக்கிணங்கச் செயலாற்றுவதற்கும் பழகியுள்ளவிடத்தும் அல்லது சட்டப்படியாக வலுவுறுத்தப் படற்பாலதான அல்லது அவ்வாறல்லாத கடப்பாடொன்றின்கீழ் உள்ளவிடத்தும் ;

(ஆ) கம்பெனியின் பணிப்பாளரொருவர், அவ்வாளின் இருபது சதவீதமான அல்லது அதற்கதிகமான பங்குக ளுடன் இணைந்துள்ள வாக்களிக்கும் உரிமையைப் பிரயோகிப்பதற்கான தத்துவத்தையுடையவராக விருக்குமிடத்தும் ;

(இ) கம்பெனியின் பணிப்பாளரொருவர் அவ்வாளின் இருபது சதவீதமான அல்லது அதற்கதிகமான பங்கு களுடன் இணைந்துள்ள வாக்களிக்கும் உரிமையின் பிரயோகத்தைக் கட்டுப்படுத்துவதற்கான தத்துவத்தை யுடையவராகவிருக்குமிடத்தும் ;

(ஈ) கம்பெனியின் பணிப்பாளரொருவர் அவ்வாளின் இருபது சதவீதமான அல்லது அதற்கதிகமான பங்குகளைக் கொள்ளுதல் செய்வதற்கான அல்லது கையுதிர்ப்பதற்கான தத்துவத்தையுடையவராக விருக்குமிடத்தும் ; அல்லது

(உ) கம்பெனியின் பணிப்பாளரொருவர் அவ்வாளின் இருபது சதவீதமான அல்லது அதற்கதிகமான பங்குகளின் கொள்ளுதலை அல்லது கையுதிர்த்தலைக் கட்டுப்படுத்துவதற்கான தத்துவத்தையுடையவராக விருக்குமிடத்தும்,

அப்பணிப்பாளர் அப்பங்கில் இயைபான அக்கறை கொண் டுள்ளவராக இருப்பார்.

(3) ஓராம் உட்பிரிவின் (ஆ) முதல் (ஊ) வரையிலான பந்திகளிற் குறிப்பீடுசெய்யப்பட்ட தத்துவமொன்றையுடைய, அல்லது உடையவராகவிருக்கக்கூடிய ஆளொருவர் அத்தத்துவம் —

(அ) வெளிப்படையாகக் கூறப்பட்டதான உட்கிடையானதா;

(ஆ) நேரடியானதா மறைமுகமானதா ;

(இ) சட்டப்படி வலியுறுத்தப்படற்பாலதா அல்லதா ;

(ஈ) குறிப்பிட்டவொரு பங்குடன் தொடர்புபட்டதா அல்லதா ;

(உ) கட்டுப்பாட்டுக்கு அல்லது மட்டுப்பாட்டுக்கு அமைந்ததா அல்லது கட்டுப்பாட்டுக்கு அல்லது மட்டுப்பாட்டுக்கு அமைந்ததாக்கப்படக்கூடியதா ;

(ஊ) தற்போது பிரயோகிக்கப்படற்பாலதா அல்லது எதிர்காலத்தில் பிரயோகிக்கப்படற்பாலதா ;

(எ) ஒரு நிபந்தனை நிறைவேற்றப்பட்டதன்மீது மட்டுமே பிரயோகிக்கப்படற்பாலதா ;

(ஏ) தனியாகப் பிரயோகிக்கப்படற்பாலதா அல்லது கூட்டாக இன்னோராளுடன் அல்லது ஆட்களுடன் பிரயோகிக்கப்படற்பாலதா,

என்பதைப் பொருட்படுத்தாது, அப்பங்கில் இயைபான அக்கறையைக் கொண்டுள்ளவராக இருப்பார்.

(4) கூட்டாக இன்னோராளுடன் அல்லது ஆட்களுடன் பிரயோகிக்கப்படற்பாலதான (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட தத்துவமொன்று, இருவருள் எவரினாலும் அல்லது அவ்வாட்களுள் எவர்களினாலும் பிரயோகிக்கப்படற்பாலதாகக் கருதப்படும்.

(5) இப்பிரிவில் உள்ள தத்துவம்பற்றிய குறிப்பீடு, ஏதேனும் நம்பிக்கைப்பொறுப்பு, உடன்படிக்கை, ஒழுங்கேற்பாடு அல்லது உடன்பாடு என்பற்றின் அல்லது அவற்றுள் எவற்றினதும் அது சட்டப்படியாக வலியுறுத்தப்படற்பாலதாகவிருப்பினுஞ்சரி அல்லவாயினுஞ்சரி, முறிகளிலிருந்து அல்லது முறியின் விளைவாகப் பிரயோகிக்கப்படமுடியுமான ஒரு தத்துவம் பற்றிய குறிப்பீட்டையும் உள்ளடக்கும்.

குறித்தசில விடயங்களில் இயைபான அக்கறைகள் புறக்கணிக் கப்படுதல்.

**199.** (1) இருநூறாம் பிரிவின் நோக்கங்களுக்காக —

(அ) இயைபான அக்கறையைக் கொண்டுள்ள ஆயின் சாதாரணதொழில், பணம் கடன்கொடுத்தலை அல்லது நிதிசார் சேவைகளை வழங்குதலை அல்லது இரண்டையும் கொண்டுள்ளதாக அல்லது உள்ளடக்கு வதாக இருப்பின் அத்துடன் அவ்வாள் இயைபான அக்கறையை, அவ்வாளின் தொழிலினது சாதாரண நெறிமுறையின்போது செய்துகொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கலின் நோக்கங்களுக்காகக் கொடுக் கப்பட்ட பிணைப்பொறுப்பாக மட்டுமே கொண்டி ருப்பின் ; அல்லது

(ஆ) அவ்வாள், இன்னோராளின் சார்பில் அப்பங்கைக் கொள்ளுதல் செய்வதற்கு அல்லது கையுதிர்ப்பதற்கு அந்த வேறு ஆளுக்காகச் செயலாற்றுவதன் காரண மாக மட்டும் இயைபான அக்கறையைக் கொண்டி ருப்பின் ; அல்லது

(இ) அவ்வாள், கம்பெனியின் உறுப்பினர்களது, அல்லது ஒரு வகுப்பினரான உறுப்பினர்களது குறிப்பிட்ட கூட்டத்தில் வாக்களிப்பதற்குப் பதிலியொருவராக நியமிக்கப்பட்டமை காரணமாக மட்டும் இயைபான அக்கறையைக் கொண்டிருப்பின் ; அல்லது

(ஈ) அவ்வாள் —

(i) நம்பிக்கைப் பொறுப்புக் கூட்டுத்தாபனமாக அல்லது நியமத்தர் கம்பெனியாக இருப்பின் ; அத்துடன்

(ii) அந்த நம்பிக்கைப்பொறுப்புக் கூட்டுத்தாப னத்தின் அல்லது நியமத்தர் கம்பெனியின் தொழிலினது சாதாரண நெறிமுறையில் இன்னோராளுக்காகச் செயலாற்றுவதன் காரணமாக மட்டும் இயைபான அக்கறையைக் கொண்டிருப்பின் ; அல்லது

(உ) பங்கானது, எந்த நம்பிக்கைப் பொறுப்புக்கு அமைந்த தாகவுள்ளதோ அந்த நம்பிக்கைப் பொறுப்பின் நம்பிக் கைப் பொறுப்பாளராக அவ்வாள் இருக்கிறாரென்ற நிகழ்வு காரணமாக மட்டும் அவ்வாள் இயைபான அக்கறையைக் கொண்டிருப்பின்,

பங்கொன்றில் ஆளொருவருக்குள்ள இயைபான அக்கறைபற்றிக் கணக்கெதுவும் எடுக்கப்படுதலாகாது.

(2) ஓராம் உட்பிரிவின் (உ) என்னும் பந்தியின் நோக்கங்க ளுக்காக ஆளொருவர், நம்பிக்கைப் பொறுப்பின் வருமானத் திலிருந்து அல்லது ஆதனத்திலிருந்து ஊதியமளிக்கப்படுவதற்கு நம்பிக்கைப் பொறுப்பாளர் என்ற முறையில் அவர் உரித்து டையவராக இருப்பதனைப் பொருட்படுத்தாது, நம்பிக்கைப் பொறுப்பாளராக இருக்கலாம்.

பங்குக் கையாளுகை பற்றி பணிப்பாளர் களினால் வெளி விடப்படுதல்.

**200.** (1) (அ) நியமிக்கப்பட்ட தேதியன்று ஒரு கம்பெனியின் பணிப்பாளராகவுள்ளவரும் ; அல்லது

(ஆ) அதன்பின்னர் ஒரு கம்பெனியின் பணிப்பாள ராக வருகின்றவரும்,

கம்பெனியால் வழங்கப்பட்ட எவையேனும் பங்குகளில் இயைபான அக்கறையுடைய ஆளெவரும் உடனடியாக,—

(இ) இயைபான அக்கறை எந்த எண்ணிக்கையின வான மற்றும் வகுப்பினவான பங்குகளில் வைத்திருக்கப்படுகிறதோ அவற்றையும் இயை பான அக்கறையின் தன்மையையும் சபைக்கு வெளியிடுதல் வேண்டும் ; அத்துடன்

(ஈ) பந்தி (அ) என்பதன்கீழ் சபைக்கு வெளிவிடப் பட்ட விபரங்கள் அக்கறைகள் இடாப்பில் பதிவீடு செய்யப்படுவதனை உறுதிப்படுத்து தல் வேண்டும்.

(2) ஒரு கம்பெனியினால் வழங்கப்பட்ட பங்குகளிலான இயை பான அக்கறையைக் கொள்ளுதல் செய்கின்ற அல்லது கையுதிர்க் கின்ற கம்பெனியின் பணிப்பாளரொருவர், கொள்ளுதலுக்கு அல்லது கையுதிர்த்தலுக்குப் பின்னர் உடனடியாக —

(அ) (i) விடயத்துக்கேற்ப இயைபான அக்கறை எந்த எண்ணிக்கையினவான மற்றும் வகுப்பினவான பங்குகளில் கொள்ளுதல் செய்யப்பட்டதோ அவற்றையும் அல்லது இயைபான அக்கறை எந்த எண்ணிக்கையினவான அல்லது வகுப்பினவான பங்குகளில் கையுதிர்க்கப்பட்டதோ அவற்றையும் ;

(ii) இயைபான அக்கறையின் தன்மை ;

(iii) செலுத்தப்பட்ட அல்லது பெறப்பட்ட பிரதிபயன் ; அத்துடன்

(iv) கொள்ளுதல் செய்யப்பட்ட அல்லது கையுதிர்க் கப்பட்ட தேதி,

என்பவற்றைச் சபைக்கு வெளியிடுதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) பந்தி (அ) என்பதன்கீழ் சபைக்கு வெளிவிடப்பட்ட விபரங்கள், அக்கறைகள் இடாப்பில் பதிவீடுசெய்யப் படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும் .

**பணிப்பாளர்களை நியமித்தலும் அகற்றுதலும்**

பணிப்பாளர்களின் எண்ணிக்கை.

**201.** ஒரு கம்பெனியானது பணிப்பாளர் ஒருவரையாவது கொண்டிருத்தல் வேண்டும். மாறாக ஒரு பகிரங்கக் கம்பெனி ஆகக்குறைந்தது இரண்டு பணிப்பாளர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

பணிப்பாளர் களுக்குள்ள தகைமைகள்.

**202.** (1) இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் தகைமையற்ற வராக்கப்படாத எவரேனுமாள் கம்பெனியின் பணிப்பாளராக நியமிக்கப்படலாம்.

(2) பின்வரும் ஆட்கள் கம்பெனியின் பணிப்பாளராக நியமிக்கப் படுவதிலிருந்து அல்லது பதவிவகிப்பதிலிருந்து தகைமையற்ற வராதல் வேண்டும் :—

(அ) பதினெட்டு வயதுக்குட்பட்ட ஆள் ;

(ஆ) பொறுப்பு விடுவிக்கப்படாத கடனிறுக்கவகையற்ற ஆள் ;

(இ) 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டம் நீக்கப்படாதிருந்தால், அச்சட்டத்தின்கீழ் ஒரு கம்பெனியின் பணிப்பாளராகவிருப்பதிலிருந்து தடைசெய்யப்படுகின்ற அல்லது தடைசெய்யப்படக் கூடிய அல்லது கம்பெனியின் மேம்பாட்டில், அமைப் பில் அல்லது முகாமையில் அக்கறை கொள்வதி லிருந்து அல்லது பங்குபற்றுவதிலிருந்து தடை செய்யப் படுகின்ற அல்லது தடை செய்யப்படக்கூடிய ஆளொரு வர் ;

(ஈ) இச்சட்டத்தின் 213 ஆம் பிரிவின்கீழ் அல்லது 214 ஆம் பிரிவின்கீழ் ஒரு கம்பெனியின் பணிப்பாளராக அல்லது ஊக்குநராகவிருப்பதிலிருந்து தடைசெய்யப் படுகின்ற அல்லது அதன் முகாமையில் அக்கறை கொள்வதிலிருந்து அல்லது பங்குபற்றுவதிலிருந்து தடைசெய் யப்படுகின்ற ஆளொருவர் ;

(உ) சித்த சுவாதீனமற்றவராகவுள்ளாரென நீதித் தீர்ப் பளிக்கப்பட்டுள்ள ஆளொருவர் ;

(ஊ) இயற்கையான ஆளொருவராகவிராத ஆளொருவர் ;

(எ) குறிப்பிட்ட ஏதேனும் கம்பெனி தொடர்பாக, அக்கம் பெனியின் அமைப்பக விதிகளில் அடங்கியுள்ள, பணிப்பாளர்களுக்கான எவையேனும் தகைமைக ளுடன் இணங்கியொழுகாத ஆளொருவர்.

(3) பணிப்பாளரொருவராக இருப்பதற்குத் தகைமையற்றவராக வுள்ள, ஆனால் பணிப்பாளரொருவராகச் செயலாற்றுகின்ற ஆளொவருர், ஒரு கம்பெனியின் பணிப்பாளர் மீது கடமை யொன்றை அல்லது கடப்பாடொன்றைச் சுமத்துகின்ற, இச்சட்டத் தின் ஏதேனும் ஏற்பாட்டின் நோக்கங்களுக்காக ஒரு பணிப்பாள ராகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

*பணிப்பாளரின் சம்மதம் தேவைப்படும்.*

**203.** ஆளொருவர், விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் –

(அ) பணிப்பாளராகவிருப்பதற்குச் சம்மதித்திருந்தாலொழியவும் ; அத்துடன்

(ஆ) ஒரு கம்பெனியின் பணிப்பாளராக நியமிக்கப்படுவதிலிருந்து அல்லது பதவி வகிப்பதிலிருந்து அவர் தகைமையற்றவரல்லரென அத்தாட்சிப்படுத்தியிருந்தாலொழியவும்,

ஒரு கம்பெனியின் பணிப்பாளர் ஒருவராக நியமிக்கப்படுதலாகாது.

*முதலாவது பணிப்பாளரையும் அடுத்துப் பின்னரான பணிப்பாளர்களையும் நியமித்தல்.*

**204.** (1) கூட்டிணைத்தலுக்கான விண்ணப்பத்தில் அல்லது ஒன்றிணைத்தல் உத்தேசத்தில் பணிப்பாளராகப் பெயர்குறிக்கப்பட்ட ஆளொருவர், விடயத்துக்கேற்ப, கூட்டிணைத்தல் தேதியிலிருந்து அல்லது ஒன்றிணைத்தல் உத்தேசம் பயனுள்ளதாகவரும் தேதியிலிருந்து, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க அவ்வாள் பணிப்பாளராகப் பதவிவகிக்காதொழியும்வரை, பணிப்பாளராகப் பதவிவகித்தல் வேண்டும்.

(2) ஒரு கம்பெனியின் அடுத்துப்பின்னரான பணிப்பாளர்கள் எல்லோரும், கம்பெனியின் அமைப்பகவிதிகள், வேறுவகையாக ஏற்பாடு செய்தாலொழிய, சாதாரணத் தீர்மானத்தின்மூலம் நியமிக்கப்படுதல் வேண்டும்.

*பணிப்பாளர்களின் நியமனம் பற்றித் தனிப்பட்ட முறையில் வாக்களித்தல்.*

**205.** (1) கம்பெனியின் அமைப்பகவிதிகளில் அடங்கியுள்ள ஏற்பாடுகளுக்கமைய, ஒரு தனியார் கம்பெனியாகவிராத ஒரு கம்பெனியின் பங்குதாரர்கள்,–

(அ) தீர்மானமானது, ஒரு பணிப்பாளரை நியமிப்பதற்கானதாகவிருப்பின் ; அல்லது

(ஆ) தீர்மானமானது, கம்பெனியின் பணிப்பாளர்களாக இரண்டு அல்லது அதற்குமேற்பட்ட ஆட்களை நியமிப்பதற்கான ஒரு தனியான தீர்மானமாகவும், அதன்மீது அவ்வாறு வாக்களிக்கப்படவேண்டுமென்ற தனியான தீர்மானம் அதற்கெதிராக வாக்கொன்று அளிக்கப்படாமல் முதலில் நிறைவேற்றப்பட்டிருப்பின்,

மட்டுமே பணிப்பாளரொருவரை நியமிப்பதற்கான தீர்மானத்தின்மீது வாக்களிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஏற்பாடுகளுக்கு முரணாகப் பிரேரிக்கப்பட்ட தீர்மானம், அதனைப் பிரேரிப்பதற்கு அந்நேரத்தில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டிருப்பினுங்கூட, வறிதாதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகள், இச்சட்டத்தின் 209ஆம் பிரிவில் அடங்கியுள்ள ஏற்பாடுகளின் தொழிற்பாட்டை வரையறுத்தலாகாது.

(4) இன்னொரு நியமனம் இல்லாதவிடத்து, ஓய்வுபெறும் பணிப்பாளர்களின் தானாகவே செய்யப்படும் மீள் நியமனத்துக்கான ஏற்பாடெதுவும், (1) ஆம் உட்பிரிவிற்கு முரணான தீர்மானமொன்று நிறைவேற்றப்படுவதன்மேல் ஏற்புடையதாதலாகாது.

(5) இப்பிரிவிலுள்ளதெதுவும், வாக்குச்சீட்டுமூலம் அல்லது வாக்கெடுப்புமூலம் இரு பணிப்பாளர்கள் அல்லது அதற்குமேற்பட்ட பணிப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதனைத் தடுத்தலாகாது.

*பணிப்பாளர்களை அகற்றுதல்.*

**206.** (1) ஒரு கம்பெனியின் அமைப்பகவிதிகளில் அடங்கியுள்ள ஏற்பாடுகளுக்கமைய, அந்நோக்கத்துக்காக அல்லது பணிப்பாளரின் அகற்றுகையை உள்ளடக்குகின்ற நோக்கங்களுக்காக அழைக்கப்பட்ட ஒரு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட சாதாரணத் தீர்மானத்தின்மூலம் பணிப்பாளரொருவர் பதவியிலிருந்து அகற்றப்படலாம்.

(2) கூட்டத்தை அழைக்கின்ற அறிவித்தல், கூட்டத்தின் நோக்கம் அல்லது கூட்டத்தின் ஒரு நோக்கம் பணிப்பாளரை அகற்றுதலாகுமெனக் கூறுதல் வேண்டும்.

(3) பணிப்பாளரொருவரை அகற்றுவதற்கெனக் கருதப்பட்ட தீர்மானமொன்றுபற்றி அறிவித்தல் கொடுக்கப்படுமிடத்து, எல்லாப் பங்குதாரர்களுக்கும் அதன் பிரதிகள் அனுப்பும்படி வேண்டுகோள்விடுத்து அத்தகைய அறிவித்தலுக்குப்பின்னர் பதினான்கு நாட்காலத்தினுள் சம்பந்தப்பட்ட பணிப்பாளர் முறையீடுகள் செய்யுமிடத்து, கம்பெனியானது சொல்லப்பட்ட

முறையீடுகளின் பிரதிகளை எல்லாப் பங்குதாரர்களுக்கும் அனுப்புதல் வேண்டும். கம்பெனியின் தவறுகை காரணமாக முறையீடுகள் அனுப்பப்படாவிடின், சம்பந்தப்பட்ட பணிப்பாளர் கூட்டத்தில் முறையீடுகள் வாசிக்கப்படவேண்டுமெனத் தேவைப் படுத்தலாம் :

ஆயின், கம்பெனியானது, சம்பந்தப்பட்ட பணிப்பாளரினால் செலவுகள், செலுத்தப்படுவதற்கான கட்டளையொன்றன்மீது பெறப்பட்ட நீதிமன்ற அனுமதியுடன், அவதூறான கருமமொன் றுக்கு அவசியமற்ற பிரசித்தம் பெறுவதற்கென இப்பிரிவின் ஏற்பாடுகள் சம்பந்தப்பட்ட பணிப்பாளரினால் துர்ப்பிரயோகம் செய்யப்படுகின்றனவெனக் கம்பெனியானது நீதிமன்றத்தைத் திருப்திப்படுத்தமுடியுமானதாக இருக்குமிடத்து ஒன்றில் அத்தகைய முறையீடுகளைப் பங்குதாரர்களுக்கு அனுப்பாது அல்லது கூட்டத்தில் அத்தகைய முறையீடுகளை வாசிக்காது விலக்கலாம்.

பணிப்பாளர் பதவிவகிக்கா தொழிதல்.

**207**. (1) கம்பெனியொன்றின் பணிப்பாளர் என்ற பதவி –

(அ) இரண்டாம் உட்பிரிவுக்கிணங்கப் பணிப்பாளர் தமது பதவியிலிருந்து விலகினால் ;

(ஆ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க அல்லது கம் பெனியின் அமைப்பகவிதிகளுக்கிணங்கப் பதிவாளர் பதவியிலிருந்து அகற்றப்பட்டால் ;

(இ) இருநூற்று இரண்டாம் பிரிவின் ஏற்பாடுகளின் நியதிக் ளுக்கிணங்கப் பணிப்பாளரொருவராகவிருப்பதிலி ருந்து பணிப்பாளர் தகைமையற்றவராக்கப்பட்டால் ;

(ஈ) பணிப்பாளர் இறந்தால் ;

(உ) இருநூற்றிப் பத்தாம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவினைப் பின்பற்றி, பணிப்பாளர், பதவியை வறிதாக்கினால் ; அல்லது

(ஊ) கம்பெனியின் அமைப்பகவிதிகளுக்கிணங்க வேறு வகையாக, பணிப்பாளர் பதவியை வறிதாக்கினால்,

வறிதாக்கப்படுதல் வேண்டும்.

*(2) கம்பெனியொன்றன் பணிப்பாளர், எழுத்திலான பதவி விலகல் பற்றிய அறிவித்தலை ஒப்பமிட்டு கம்பெனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தில் அதனை ஒப்படைப்பதன்மூலம் பதவி விலகலாம். 208 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய அறிவித்தலானது, அது பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தில் பெறப்படும் போது அல்லது அறிவித்தலிற் குறித்துரைக்கப்பட்ட பிந்திய நேரத்தில் பயனுடையதாகும்.*

*கடைசியாக எஞ்சியுள்ள பணிப்பாளர் பதவி விலகுதல்.*

***208.*** *(1) கம்பெனியொன்றுக்கு ஒரு பணிப்பாளர் மட்டுமே உள்ளவிடத்து, பதவிவிலகல் பற்றிய அறிவித்தலைப் பெறுவதற்கும் ஒன்று அல்லது அதற்குமேற்பட்ட புதிய பணிப்பாளர்களை நியமிப்பதற்கும் என அப்பணிப்பாளர் பங்குதாரர்களின் கூட்டமொன்றை அழைக்கும்வரை, அப்பணிப்பாளர் பதவியிலிருந்து விலகாதிருக்கலாம்.*

*(2) அறிவித்தலொன்றின் நியதிகளைப் பொருட்படுத்தாது, ஒரு கம்பெனியின் தனிப் பணிப்பாளரினால் கொடுக்கப்பட்ட அந்த அறிவித்தல், (1) ஆம் உட்பிரிவிற்கிணங்க அழைக்கப்பட்ட பங்குதாரர்களின் கூட்டத்தேதிவரை, பயனுடையதாதலாகாது.*

*பணிப்பாளரின் செயல்களினது செல்லுபடியாந்தன்மை.*

***209.*** *பணிப்பாளரொருவர் என்ற முறையில் ஆளொருவரின் செயல்கள் —*

*(அ) ஆளின் நியமனம் குறைபாடுடையதாகவிருந்தது ; அல்லது*

*(ஆ) அந்த ஆள் அத்தகைய நியமனத்துக்குத் தகைமையுடையவரல்லர்,*

*என்பதனைப் பொருட்படுத்தாது, செல்லுபடியுடையனவாதல் வேண்டும்.*

### பணிப்பாளரின் ஓய்வுபெறும் வயது

*பணிப்பாளர்களுக்கான வயதெல்லை.*

***210.*** *(1) பிரிவு 211 இன் ஏற்பாடுகளுக்கமைய, ஆளெவரும் எழுபது வயதை அடைந்திருப்பின், ஒரு பகிரங்கக் கம்பெனியின் அல்லது ஒரு பகிரங்கக் கம்பெனியின் துணைநிலைக் கம்பெனியாகவுள்ள ஒரு தனியார் கம்பெனியின் பணிப்பாளராக நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவராதலாகாது.*

(2) பிரவு 211 இன் ஏற்பாடுகளுக்கமைய, ஒரு பகிரங்கக் கம்பெனியின் அல்லது ஒரு பகிரங்கக் கம்பெனியின் துணைநிலைக் கம்பெனியாகவுள்ள ஒரு தனியார் கம்பெனியின் பணிப்பாளரொருவர் —

(அ) அவர் எந்த ஆண்டுப் பொதுக்கூட்டம் தொடங்குவதனை உடனடுத்து எழுபது வயதை அடைகின்றாரோ அந்த ஆண்டுப் பொதுக்கூட்டம் முடிவடைவதன்மேல்; அல்லது

(ஆ) அவர் எழுபது வயதை அடைந்தபின்னர் பணிப்பாளர் ஒருவராக மீள நியமிக்கப்படின், அந்த மீள் நியமனத்தை அடுத்துவரும் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில்,

பதவியை வறிதாக்குதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் ஆளொருவர் பதவியிலிருந்து ஓய்வுபெறுமிடத்து, இன்னொரு நியமனத்தைச் செய்யாதவிடத்து, ஓய்வுபெறும் பணிப்பாளர்களின் தானாகவே செய்யப்படும் மீள்நியமனத்துக்கான ஏற்பாடு எதுவும் ஏற்புடையதாதலாகாது ; அத்துடன் அவர் எந்தக் கூட்டத்தின் முடிவில் ஓய்வுபெறுகின்றாரோ அந்தக் கூட்டத்தில் வெற்றிடம் நிரப்பப்படாவிடின், அமைய வெற்றிடமொன்றாக அது நிரப்பப்படலாம்.

(4) இப்பிரிவில் "பகிரங்கக் கம்பெனி" என்பது, ஒரு தனியார் கம்பெனியொன்றல்லாத வரையறுக்கப்பட்ட ஒரு கம்பெனி என்று பொருளாகும்.

கம்பெனி அவ்வாறு தீர்மானித்தால் வயதெல்லை ஏற்புடையதாதலாகாது.

**211.** (1) பிரிவு 210 இல் அடங்கியுள்ளதெதுவும், 210 ஆம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட வயதெல்லை அப்பணிப்பாளருக்கு ஏற்புடையதாதலாகாதென வெளிப்படுத்தி பொதுக்கூட்டமொன்றில் கம்பெனியினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானமொன்றினால் அவரது நியமனம் செய்யப்படின் அல்லது செய்யப்பட்டிருப்பின் அல்லது அங்கீகரிக்கப்படின் அல்லது அங்கீகரிக்கப்பட்டிருப்பின், எழுபது வயதை அடைந்துள்ள பணிப்பாளரொருவரின் நியமனத்தை தடுத்தலாகாது. எவ்வறாயினும் பொதுக்கூட்டமொன்றில் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் தீர்மானம் அவரது நியமனத்திலிருந்து ஒரு வருடத்திற்கு மட்டும் வலிதானதாக இருக்கும்.

(2) கம்பெனிக்குக் கொடுக்கப்பட்ட அல்லது கம்பெனியினால் அதன் பங்குதாரர்களுக்குக் கொடுக்கப்பட்ட (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்படும் ஏதேனும் தீர்மானம் பற்றிய அறிவித்த லொன்று அது எவ்வாளுடன் தொடர்புபட்டதோ அவ்வாளின் வயதைக் கூறுதல் வேண்டும்.

வயதை வெளிப்படுத்து வதற்குப் பணிப்பாளர் களுக்குள்ள கடமை.

**212.** (1) எழுபது வயதை அல்லது அத்தகைய குறைவான வயதை (ஏதேனுமிருப்பின்) அடைந்துள்ள ஒரு நேரத்தில் கம்பெனி யொன்றின் பணிப்பாளராக நியமிக்கப்படுகின்ற, அல்லது அவர் அறிந்தவரை நியமிக்கப்படுவதற்கு முன்மொழியப்படுகின்ற எவரேனுமாள், அவரது வயதுபற்றிக் கம்பெனிக்கு அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.

(2) கம்பெனியின் பணிப்பாளரொருவராக முன்னைய நியமனம் முடிவுறுவதன்மேல் ஆளொருவர் மீள நியமிக்கப்படுதல் தொடர்பாக (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், முன்னைய ஏதேனும் சந்தர்ப்பத்தில் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அவ்வாளினால் அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளவிடத்து ஏற்புடையனவாதலாகாது.

(3) (அ) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளினால் தேவைப் படுத்தப்பட்டவாறு அவரது வயதுபற்றிய அறிவித் தலைக் கொடுக்கத் தவறுகின்ற ; அல்லது

(ஆ) அவரது வயது காரணமாகச் செல்லுபடியற்றதாக வுள்ள, அல்லது முடிவுற்றதாகவுள்ள ஏதேனும் நியமனத்தின்கீழ் பணிப்பாளராகச் செயலாற்று கின்ற,

எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென் பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

(4) இரண்டாம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் நோக்கத்துக்காக, செல்லுபடியற்றதாகவுள்ள அல்லது முடிவுறுத்தப்பட்டதாக வுள்ள ஒரு நியமனத்தின்கீழ் பணிப்பாளரொருவராகச் செயலாற்றியுள்ள ஆள், விடயத்துக்கேற்ப செல்லுபடியற்ற

நியமனத் தேதியிலிருந்தான அல்லது நியமனம் முடிவுறுத்தப்பட்ட தேதியிலிருந்தான காலப்பகுதிபூராகவும், அதன்கீழ் அவர் செயலாற்றிய கடைசி நாள் வரை அவ்வாறு தொடர்ந்து செயலாற்றியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும்.

**பணிப்பாளர்களின் தகைமையீனங்கள்**

கம்பெனியின் முகாமை செய்வதிலிருந்து தடை செய்யப்பட்ட ஆட்கள்.

**213.** (1) ஆளொருவர் –

(அ) மறியற்றண்டனையினால் தண்டிக்கப்படற்பாலதானதும் இச்சட்டத்தின் கீழானதுமான ஏதேனும் தவறுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவிடத்து ;

(ஆ) நேர்மையற்ற அல்லது மோசடியான செயலொன்றை உட்படுத்தியுள்ள தவறுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவிடத்து ;

(இ) (97 ஆம் அத்தியாயமான) கடனிறுக்க வகையின்மைக் கட்டளைச் சட்டத்தின்கீழ் கடனிறுக்க வகையற்றவரென நீதித் தீர்ப்பளிக்கப்படின் ; அல்லது

(ஈ) சித்தசுவாதீனமற்றவரென நீதித் தீர்ப்பளிக்கப்படின், அத்தகைய ஆள், விடயத்துக்கேற்ப குற்றத்தீர்ப்பின் பின்னர் அல்லது நீதித் தீர்ப்பின் பின்னர் ஐந்தாண்டுக் காலப்பகுதியின்போது, அவ்வாள் நீதிமன்ற அனுமதியைப் பெறுவதற்கு முதலில் விண்ணப்பமொன்றைச் செய்தாலொழிய, ஒரு கம்பெனியின் பணிப்பாளராக அல்லது ஊக்குநராக இருத்தலாகாது, அல்லது எவ்வகையிலும் நேரடியாகவோ மறைமுகமாகவோ ஒரு கம்பெனியின் முகாமையில் சம்பந்தப்பட்டிருத்தலோ அல்லது பங்குபற்றுதலோ ஆகாது, நீதிமன்றம் தகுதியானதென எண்ணக்கூடியவாறான அத்தகைய நியதி நிபந்தனைகளின்மீது அனுமதி கொடுக்கப்படலாம்.

(2) இப்பிரிவின்கீழ் நீதிமன்ற அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கு முன்னம்கொண்டுள்ள ஆளொருவர், அத்தகைய அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கான அவரது முன்னம்பற்றி பத்து நாட்க

ளுக்குக் குறையாத அறிவித்தலைப் பதிவாளருக்குக் கொடுத்தல் வேண்டும்.

(3) பதிவாளரும், நீதிமன்றம் தகுதியானவரென எண்ணுகின்றவாறான அத்தகைய வேறு ஆட்களும் இப்பிரிவின்கீழான ஏதேனும் விண்ணப்பத்தின் கேட்பின்போது வருகைதந்து கேட்கப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவுக்கு அல்லது இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளைக்கு முரணாகச் செயலாற்றுகின்ற ஆளொருவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் பத்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்துக்கு அல்லது ஐந்தாண்டுகளை விஞ்சாத ஒரு காலப் பகுதிக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(5) இப்பிரிவில், "கம்பெனி" என்ற பதம், இலங்கையில் தொழில் கொண்டுநடாத்துகின்ற கடல்கடந்த கம்பெனியொன்றையும் உள்ளடக்கும்.

*நீதிமன்றம் பணிப்பாளர்களைத் தகைமையற்றவர்களாக்கலாம்.*

**214.** (1) ஆளொருவர் —

(அ) இருநூற்றிப்பதின்மூன்றாம் பிரிவின்கீழ் ஒரு கம்பெனியின் பணிப்பாளராகவிருப்பதிலிருந்து தடைசெய்யப்படுமிடத்து ;

(ஆ) கம்பெனியின் பணிப்பாளரொருவராக இருக்கையில் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதற்கு விடாப்பிடியாகத் தவறியுள்ளவிடத்து ;

(இ) இலங்கை தவிர்ந்த வேறேதேனும் நாட்டில் நேர்மையற்ற அல்லது மோசடியான செயல்களை உட்படுத்துகின்ற தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவிடத்து ; அல்லது

(ஈ) கடனிறுக்க வகையற்றதாகவந்த ஒரு கம்பெனியின் பணிப்பாளராகவிருந்து, அக்கம்பெனியின் அல்லது வேறேதேனும் கம்பெனியின் பணிப்பாளரென்றமுறை

யில் அவ்வாளின் நடத்தை, கம்பெனியொன்றின் பணிப்பாளராகவிருப்பதற்கு அவர்களைத் தகுதியற்ற வராக்குமிடத்து, அவ்வாள், நீதிமன்ற அனுமதியின்றி ஒரு கட்டளையின் குறித்துரைக்கப்படக்கூடியவாறாகப் பத்தாண்டுகளை விஞ்சாத அத்தகைய காலப்பகுதிக்கு ஒரு கம்பெனியின் பணிப்பாளராக அல்லது ஊக்கு நராக இருத்தலோ அல்லது எவ்வழியிலும் நேரடியா கவோ மறைமுகமாகவோ அக்கம்பெனியின் முகாமை யில் சம்பந்தப்பட்டிருத்தலோ அல்லது பங்குபற்று தலோ ஆகாதென நீதிமன்றம் கட்டளையாக்கலாம்.

(2) இப்பிரிவின்கீழ் கட்டளையொன்றுக்கு விண்ணப்பிப்பதற்கு முன்னங்கொண்டுள்ள ஆளொருவர் எவ்வாளுக்கெதிராகக் கட்டளை நாடப்படுகின்றதோ அவ்வாளுக்கு அம்முன்னம்பற்றிப் பத்து வேலைநாட்களுக்குக் குறையாத அறிவித்தலைக் கொடுத்தல் வேண்டும். விண்ணப்பம் கேட்கப்பட்டதன்மேல், எவ்வாளுக் கெதிராகக் கட்டளை நாடப்படுகின்றதோ அவர்கள் தோன்றிச் சாட்சியமளிக்கலாம் அல்லது சாட்சிக்காரர்களை அழைக்கலாம்.

(3) இப்பிரிவின்கீழான கட்டளையொன்றுக்கான விண்ணப்பம், பதிவாளரினால், அல்லது எவ்வாளுக்கெதிராகக் கட்டளை நாடப்படுகின்றதோ அவ்வாள் பணிப்பாளராகவிருந்த ஒரு கம்பெனியின் ஓர் ஒழிப்போனினால் அல்லது நிருவாகியினால் அல்லது அத்தகைய ஏதேனும் கம்பெனியின் பங்குதாரராகவுள்ள அல்லது கடன்தருநராகவுள்ள அல்லது அவ்வாறு இருந்த ஆளொருவரினால் செய்யப்படலாம்.

(4) சம்பந்தப்பட்ட ஆள், கட்டளையானது எந்தக் கருமங்களுக் கான ஏதுவின்மீது செய்யப்படவுள்ளதோ அந்தக் கருமங்கள் தொடர்பில் குற்றமுறையாக ஆளாகவிருப்பினுங்கூட, இப்பிரிவின் கீழ் கட்டளையொன்று ஆக்கப்படலாம்.

(5) நீதிமன்றப் பதிவாளர், இப்பிரிவின்கீழான கட்டளை யொன்றை ஆக்கிய பின்னர் செயல்முறைக்குகந்தவரை விரைவாக, கட்டளையானது ஆக்கப்பட்டுள்ளதெனப் பதிவாளருக்கு அறிவித் தல் கொடுத்தல் வேண்டுமென்பதுடன், பதிவாளரானவர் —

(அ) கட்டளை எவ்வாளுக்கெதிராகச் செய்யப்படுகின்றதோ அவ்வாளின் பெயரை வர்த்தமானியில் வெளிவிடு வித்தலும் வேண்டும் ; அத்துடன்

(ஆ) தகுதியானதென அவர் எண்ணுகின்றவாறு கட்டளை ஆக்கப்பட்டமை பற்றி அத்தகைய மேலதிக அறிவித்தல் கொடுக்கலாம்.

(6) இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றுக்கு முரணாகச் செயலாற்றுகின்ற ஆளொவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் பத்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஐந்தாண்டுகளை விஞ்சாதவொரு காலப் பகுதிக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு, அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(7) இப்பிரிவில் "கம்பெனி" என்பது, இலங்கையில் தொழிலை நடாத்துகின்ற கடல்கடந்த கம்பெனியொன்றையும் உள்ளடக்கும்.

**பணிப்பாளர் தொடர்பான நானாவித ஏற்பாடுகள்**

**215.** கம்பெனியொன்றன் அமைப்பகவிதிகள் ஒரு கம்பெனியின் சபையினது நடவடிக்கைகளை ஆளுதல் வேண்டும்.

*சபையின் நடவடிக்கைகள்.*

**216.** (1) பிரிவு 217இன் ஏற்பாடுகளுக்கமைய, கம்பெனியின் சபையானது, அமைப்பகவிதிகளினால் அல்லது சாதாரணத் தீர்மானத்தினால் அவ்வாறு செய்யும்படி அதிகாரமளிக்கப்படின்,—

*ஊதியமும் ஏனைய நன்மைகளும்.*

(அ) பணிப்பாளரென்ற முறையில் அல்லது வேறேதேனும் தன்மையில் அளிக்கப்பட்ட சேவைகளுக்காக, கம்பெனியினால் பணிப்பாளரொருவருக்கு ஏதேனும் ஊதியம் கொடுப்பனவு செய்யப்படுவதை அல்லது ஏனைய நன்மைகள் வழங்கப்படுவதை ;

(ஆ) பதவியிழப்புக்காகப் பணிப்பாளரொருவருக்கு அல்லது முன்னைநாள் பணிப்பாளரொருவருக்குக் கம்பெனியினால் நட்டஈடு கொடுப்பனவுசெய்யப்படுவதை ;

(இ) பந்திகள் (அ) வில் அல்லது (ஆ) வில் குறிப்பீடுசெய்யப்பட்ட காரியங்களுள் ஏதேனுமொன்றைச் செய்வதற்கு ஒப்பந்மொன்றைச் செய்துகொள்வதை,

அவ்வாறு செய்வது கம்பெனிக்கு நியாயமானதெனச் சபை திருப்திப்படின் அங்கீகாரமளிக்கலாம்.

(2) சபையானது, விடயத்துக்கேற்ப, கொடுப்பனவு செய்தமையை அல்லது நன்மை வழங்கியமையை அல்லது ஒப்பந்தம் செய்துகொண்டமையை அங்கீகரித்த பின்னர் உடனடியாகக் கொடுப்பனவு அல்லது நன்மை அல்லது ஒப்பந்தம் பற்றிய விவரங்கள் அக்கறைகள் இடாப்பில் பதிவீடு செய்யப்படுவதன உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் அதிகாரமளிக்கப்பட்ட ஓர் ஒப்பந்தத்திற்கிணங்கப் பணிப்பாளரொருவருக்கு ஊதியம் கொடுப்பனவு செய்தல் அல்லது வேறேதேனும் நன்மைகொடுத்தல் அப்பிரிவின்கீழ் தனிவேறாக அதிகாரமளிக்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படலாகாது.

(4) ஓராம் உட்பிரிவின்கீழ் ஒரு கொடுப்பனவை, நன்மையை, அல்லது ஒப்பந்தத்தை அங்கீகரிப்பதற்குச் சாதகமாக வாக்களிக்கின்ற பணிப்பாளர்கள், தமது அபிப்பிராயப்படி கொடுப்பனவைச் செய்தல் அல்லது நன்மையை வழங்குதல், அல்லது ஒப்பந்தத்தைச் செய்துகொள்ளுதல் கம்பெனிக்கு நியாயமானதென்றும் அந்த அபிப்பிராயத்தைக் கொண்டிருப்பதற்கான காரணங்களையும் கூறுகின்ற சான்றிதழொன்றை ஒப்பமிடுதல் வேண்டும்.

(5) எந்தக் கொடுப்பனவுக்கு அல்லது வேறு நன்மைக்கு (1) ஆம் உட்பிரிவு ஏற்புடையதாகின்றதோ அந்தக் கொடுப்பனவு செய்யப்படுமிடத்தும் அல்லது வேறு நன்மை வாங்கப்படுமிடத்தும், ஒன்றில் —

(அ) ஓராம், (4) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள் இணங்கியொழுகப்படாதவிடத்தும் ; அல்லது

(ஆ) நாலாம் உட்பிரிவின்கீழ் கொடுக்கப்பட்ட சான்றிதழில் தரப்பட்டுள்ள அபிப்பிராயத்துக்கு நியாயமான ஏதுக்கள் இராதவிடத்தும்,

கொடுப்பனவானது எந்தப் பணிப்பாளருக்கு அல்லது முன்னைநாள் பணிப்பாளருக்குச் செய்யப்படுகின்றதோ அந்த நன்மையானது எந்தப் பணிப்பாளருக்கு அல்லது முன்னைநாள் பணிப்பாளருக்கு வழங்கப்படுகின்றதோ அந்தப் பணிப்பாளர், கொடுப்பனவுத் தொகைக்காக, அல்லது நன்மையின் பணம் பெறுமதிக்காக, கொடுப்பனவு அல்லது நன்மை, அது செய்யப்பட்ட அல்லது வழங்கப்பட்ட நேரத்தில் கம்பெனிக்கு நியாயமானதாகவிருந்ததென அவர் எண்பிக்கும் அளவு வரை தவிர, கம்பெனிக்குத் தனிப்பட்ட முறையில் ஆளாதல் வேண்டும்.

(6) இப்பிரிவிலுள்ளதெதுவும், பணிப்பாளர்களுக்கான ஊதியக் கொடுப்பனவைச் செய்வதற்கு அல்லது ஏனைய நன்மைகளைக் கொடுப்பதற்கு பங்குதாரர்களினால் அதிகாரமளிக்கப்படுவதனை ஏற்பாடுசெய்வதிலிருந்து கம்பெனியின் அமைப்பகவிதிகளைத் தடுத்தலாகாது என்பதுடன், இப்பிரிவின் (1) முதல் (5) வரையிலான உட்பிரிவுகளின் ஏற்பாடுகள், கம்பெனியின் அமைப்பக விதிகளிலுள்ள அத்தகையவோர் ஏற்பாட்டைப் பின்பற்றி பங்குதாரர்களினால் அங்கீகரிக்கப்பட்ட ஊதியக் கொடுப்பனவைச் செய்வதற்கு அல்லது வேறேதேனும் நன்மையைக் கொடுப்பதற்கு ஏற்புடையனவாதலாகாது.

*பணிப்பாளர்களுக்கான கடன்களின் மீதான மட்டுப்பாடுகள்.*

**217.** (1) முப்பத்தோராம் பிரிவினதும் இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவினதும் ஏற்பாடுகளுக்கமைய, கம்பெனியானது -

(அ) கம்பெனியின் அல்லது தொடர்புபட்ட கம்பெனியின் பணிப்பாளருக்குக் கடன்கொடுத்தலாகாது ; அல்லது

(ஆ) கம்பெனியின் அல்லது தொடர்புபட்ட கம்பெனியின் பணிப்பாளருக்கு எவரேனுமாளினாற் கொடுக்கப்பட்ட கடன் சம்பந்தமாக ஏதேனும் உத்தரவாதத்தைச் செய்து கொள்ளுதல் ஆகாது அல்லது ஏதேனும் பொறுப்பை வழங்குதல் ஆகாது.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள், ஒரு கம்பெனி —

(அ) கம்பெனியினால் பணிப்பாளருக்கு முற்பணமாகக் கொடுக்கப்பட்ட தொகைகளின் கூட்டுமொத்தம் இருபத்தையாயிரம் ரூபாவை அல்லது இச்சட்டத்தின் பாகம் XIX இன்கீழ் அமைத்துருவாக்கப்பட்ட மதியுரை ஆணைக்குழுவின் சிபார்சுமீது காலத்திற்குக் காலம் அமைச்சரால் விதித்துரைக்கப்படக்கூடிய வாறான அத்தகைய உயர்வான பணத்தொகையை விஞ்சாதவிடத்து, பணிப்பாளருக்குக் கடன் வழங்குதலி லிருந்து ;

(ஆ) தொடர்புபட்ட கம்பெனியொன்றுக்குக் கடன்வழங்கு தலிலிருந்து அல்லது தொடர்புபட்ட கம்பெனிக்கு எவரேனுமாளினால் வழங்கப்பட்ட கடன் சம்பந்தமாக உத்தரவாதமொன்றைச் செய்துகொள்வதிலிருந்து அல்லது பிணைப்பொறுப்பு அளிப்பதிலிருந்து ;

(இ) கம்பெனியின் நோக்கங்களுக்காகப் பணிப்பாளரினால் உறப்பட்ட அல்லது உறப்படவுள்ள செலவினத்தை ஈடுசெய்வதற்கு அல்லது கம்பெனியின் அலுவல ரென்ற முறையில் அவரது கடமைகளைப் புரிவதனை இயலச்செய்யும் நோக்கத்துக்காக அவருக்கு நிதிகள் வழங்குவதிலிருந்து ; அல்லது

(ஈ) பணம் கடன்கொடுத்தல் என்ற தொழில் கம்பெனியி னால் கொண்டுநடாத்தப்படுமிடத்து, அத்தொழிலின் சாதாரண நெறியில் கடன்வழங்குவதிலிருந்து,

அக்கம்பெனியைத் தடுத்தலாகாது.

(3) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணான ஏதேனும் கடன் கொடுக்கப்படுமிடத்து, கடனானது கம்பெனியின் விருப்பத் தெரிவின் பேரில் வறிதாக்கப்படற்பாலதாதல் வேண்டும் என்பது டன், கடன்தொடர்பான ஏதேனும் உடன்படிக்கையின் நியதிகள் எவ்வாறிருப்பினும், கடனானது கம்பெனியினால் வறிதாக்கப்படு வதன்மேல் உடனடியாக மீளச்செலுத்தப்படற்பாலதாதலும் வேண் டும்.

(4) பணிப்பாளரொருவருக்குக் கடன் ஒன்றைக் கொடுப்பது அல்லாத கொடுக்கல்வாங்கலொன்று (1) ஆம் உட்பிரிவிற்கு முரணாக கம்பெனியொன்றினால் செய்துகொள்ளப்படுமிடத்து,-

(அ) அக்கொடுக்கல்வாங்கலிலிருந்து விளைகின்ற ஏதேனும் நட்டத்துக்காக அல்லது சேதத்துக்காகப் பணிப்பாளர் கம்பெனிக்கு நட்டோத்தரவாதம் அளிப்பதற்கு ஆளாதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) கொடுக்கல்வாங்கலானது,-

(i) கம்பெனிக்கு, அதனால் உறப்பட்ட ஏதேனும் நட்டத்துக்காக அல்லது சேதத்துக்காக (அ) என்னும் பந்தியின்கீழ் நட்டோத்தரவாதம் அளிக்கப்பட்டிருந்தாலொழிய ; அல்லது

(ii) இப்பிரிவு மீறப்பட்டமையே ஏற்படுத்திய சூழ்நிலைகள் பற்றிய உண்மையான அறிவித்தலின்றி, நல்லெண்ணத்துடனும் பெறுமதிக்காகவும் பணிப்பாளர் அல்லாத ஆளொருவரினால் கொள்ளப்பட்ட எவையேனும் உரிமைகள் அதன் வறிதாக்குகையினால் பாதிக்கப்பட்டாலொழிய,

கம்பெனியின் விருப்பத்தெரிவின்பேரில் வறிதாக்கப்படற்பாலதாதல் வேண்டும்.

(5) கம்பெனியொன்று, (1) ஆம் உட்பிரிவின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுமிடத்து -

(அ) கம்பெனியானது, தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப் பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும் ; அத்துடன்

(ஆ) இயைபான கொடுக்கல்வாங்கலைச் செய்துகொள்ளும்படி கம்பெனிக்கு அதிகாரமளிக்கும் அல்லது அனுமதிக்கும் கம்பெனியின் ஒவ்வொரு பணிப்பாளரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஓர் இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

நட்டோத்தர வாதமும் காப்புறுதியும்.

**218.** (1) இப்பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு தவிர —

(அ) பணிப்பாளர் அல்லது ஊழியர் என்ற தன்மையில் ஏதேனும் செயலுக்காக அல்லது செய்யாமைக்காக ஏதேனும் பொறுப்புத் தொடர்பில் ; அல்லது

(ஆ) அத்தகைய ஏதேனும் பொறுப்புத் தொடர்பான ஏதேனும் உரிமைக்கோரிக்கையை அல்லது வழக்கு நடவடிக்கையை எதிர்வாதிடுவதில் அல்லது இணங்கித் தீர்ப்பதில் அப்பணிப்பாளரினால் அல்லது ஊழியரினால் உறப்பட்ட எவையேனும் செலவுகள் தொடர்பில்,

கம்பெனியொன்று, கம்பெனியின் அல்லது ஒரு தொடர்புபட்ட கம்பெனியின் பணிப்பாளரொருவருக்கு அல்லது ஊழியரொருவருக்கு நட்டோத்தரவாதமளித்தலாகாது, அல்லது நேரடியாகவோ மறைமுகமாகவோ அவருக்காகக் காப்புறுதி செய்தலாகாது.

(2) கம்பெனியொன்று, அதன் அமைப்பகவிதிகளினால் வெளிப்படையாக அதிகாரமளிக்கப்படின்,—

(அ) பணிப்பாளர் அல்லது ஊழியர் என்ற தன்மையில் ஏதேனும் செயலுக்கான அல்லது செய்யாமைக்கான பொறுப்புத் தொடர்பான ஏதேனும் வழக்கு நடவடிக்கையில் ; அத்துடன்

(ஆ) எந்த வழக்கு நடவடிக்கையில் தீர்ப்பு அவருக்குச் சாதகமாகக் கொடுக்கப்படுகின்றதோ அல்லது அவர் விடுவிக்கப்படுகின்றாரோ அல்லது எந்த வழக்கு நடவடிக்கை நிறுத்தப்படுகின்றதோ அல்லது 526 ஆம் பிரிவின்கீழ் எந்த வழக்கு நடவடிக்கையில் அவருக்கு நிவாரணம் அளிக்கப்படுகின்றதோ அந்த வழக்கு நடவடிக்கையில்,

கம்பெனியின் அல்லது தொடர்புபட்ட கம்பெனியின் பணிப்பாளரொருவரினால் அல்லது ஊழியரொருவரினால் உறப்பட்ட எவையேனும் செலவுகளுக்காக, அவருக்கு நட்டோத்தரவாதமளிக்கலாம்.

(3) கம்பெனியொன்று, அதன் அமைப்பகவிதிகளினால் வெளிப்படையாக அதிகாரமளிக்கப்படின், —

(அ) பணிப்பாளர் அல்லது ஊழியர் என்ற தன்மையில் ஏதேனும் செயலுக்காக அல்லது செய்யாமைக்காக, கம்பெனி அல்லது தொடர்புபட்ட கம்பெனி அல்லாத எவரேனுமாளுக்கான பொறுப்பு தொடர்பில் ;அல்லது

(ஆ) அத்தகைய ஏதேனும் பொறுப்புத் தொடர்பான ஏதேனும் உரிமைக் கோரிக்கையை அல்லது வழக்கு நடவடிக்கையை எதிர்வாதிடுவதில் அல்லது இணக்கித் தீர்ப்பதில் அப்பணிப்பாளரினால் அல்லது ஊழியரினால் உறப்பட்ட செலவுகள் தொடர்பில்,

கம்பெனியின் அல்லது தொடர்புபட்ட கம்பெனியின் பணிப்பாளரொருவருக்கு அல்லது ஊழியரொருவருக்கு நட்டோத்தரவாதமளிக்கலாம். இது குற்றவியற்பொறுப்பாக அல்லது பணிப்பாளரொருவரின் விடயத்தில் 187 ஆம் பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட கடமையின் மீறுகை தொடர்பிலான பொறுப்பாக இருத்தலாகாது.

(4) கம்பெனியொன்று, அதன் அமைப்பகவிதிகளினால் வெளிப்படையாக அதிகாரமளிக்கப்படினும் சபையின் முன்னங்கீகாரத்துடனும் —

(அ) குற்றவியற் பொறுப்பாகவிராததும், பணிப்பாளர் அல்லது ஊழியர் என்ற தன்மையில் ஏதேனும் செயலுக்கானதும் அல்லது செய்யாமைக்கானதுமான பொறுப்புத் தொடர்பில் ;

(ஆ) அத்தகைய ஏதேனும் பொறுப்புத் தொடர்பான ஏதேனும் உரிமைக் கோரிக்கையை அல்லது வழக்கு நடவடிக்கையை எதிர்வாதிடுவதில் அல்லது இணக்கித் தீர்ப்பதில் அப்பணிப்பாளரினால் அல்லது ஊழியரினால் உறப்பட்ட செலவுகள் தொடர்பில் ; அல்லது

(இ) எந்தக் குற்றவியல் வழக்கு நடவடிக்கையில் அப்பணிப் பாளர் அல்லது ஊழியர் விடுவிக்கப்படுகின்றாரோ அந்த வழக்கு நடவடிக்கைகளை எதிர்வாதிடுவதில் அப்பணிப்பாளரினால் அல்லது ஊழியரினால் உறப் பட்ட செலவுகள் தொடர்பில்,

கம்பெனியின் அல்லது தொடர்புபட்ட கம்பெனியின் பணிப்பாள ரொருவருக்காக அல்லது ஊழியரொருவருக்காகக் காப்புறுதி செய்யலாம்.

(5) ஒரு கம்பெனியின் அல்லது தொடர்புபட்ட கம்பெனியின் எவரேனும் பணிப்பாளருக்கு அல்லது ஊழியருக்கு அளிக்கப்பட்ட ஏதேனும் நட்டோத்தரவாதம் அல்லது அவருக்காகச் செய்யப்பட்ட காப்புறுதி என்பன பற்றிய விவரங்கள் உடனடியாக அக்கறைகள் இடாப்பில் பதிவீடுசெய்யப்படுவதனைக் கம்பெனியின் சபை யானது உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(6) இப்பிரிவுக்கு முரணாக அளிக்கப்பட்ட நட்டோத்தரவாத மொன்று வறிதானதாதல் வேண்டும்.

(7) ஒரு கம்பெனியின் அல்லது தொடர்புபட்ட கம்பெனியின் பணிப்பாளருக்காக அல்லது ஊழியருக்காகக் காப்புறுதி செய்யப் படுமிடத்தும், ஒன்றில் (4) ஆம் உட்பிரிவின் அல்லது (5) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் இணங்கியொழுகப்படாதுள்ளவிடத்தும், பணிப்பாளர் அல்லது ஊழியர், காப்புறுதிசெய்யப்பட்ட நேரத்தில் கம்பெனிக்கு நியாயமானதாகவிருந்ததென அவர் எண்பிக்கும் அளவுக்குத் தவிர, காப்புறுதியைச் செய்யும் செலவுக்காகக் கம் பெனிக்குத் தனிப்பட்ட முறையில் ஆளாதல் வேண்டும்.

(8) இப்பிரிவில் —

"பணிப்பாளர்" என்பது, முன்னைநாள் பணிப்பாளரொரு வரையும் உள்ளடக்கும் ;

"காப்புறுதிசெய்தல்" என்பது, காப்புறுதிச் செலவுகளை நேரடியாகவேனுஞ்சரி மறைமுகமாகவேனுஞ்சரி கொடுப்பனவு செய்தலையும் உள்ளடக்கும் ;

"ஊழியர்" என்பது, முன்னைநாள் ஊழியரொருவரையும் உள்ளடக்கும் ;

"நட்டோத்தரவாதமளித்தல்" என்பது, பொறுப்பு எழுமுன்னராயினுஞ்சரி எழுந்தபின்னராயினுஞ்சரி பொறுப்பிலிருந்து நிவாரணமளித்தலையும் அல்லது மன்னிப்பளித்தலையும் உள்ளடக்கும் ; அத்துடன்

"நட்டோத்தரவாதம்" என்பது, நேரொத்த கருத்தை உடையது.

*கடனிறுக்க வகையின்மையின் மீது பணிப்பாளர்களுக்குள்ள கடமை.*

**219.** (1) ஒரு கம்பெனியின் தனிசுகள் வருமதியாக வந்தவாறாக அவற்றைச் செலுத்துவதற்குக் கம்பெனியானது, இயலாதுள்ளதென நம்புகின்ற கம்பெனியின் பணிப்பாளரொருவர், சபையானது கம்பெனியை ஒடுக்குவதற்கு நீதிமன்றுக்கு விண்ணப்பித்து, ஒழிப்போன் ஒருவரை அல்லது நிருவாகி ஒருவரை நியமிக்க வேண்டுமா அல்லது கம்பெனியின் தொழிலை மேலும் கொண்டு நடாத்த வேண்டுமாவென்பதைச் சீர்தூக்கிப் பார்ப்பதற்குச் சபையின் கூட்டத்தை உடனடியாக அழைத்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட பணிப்பாளர் அப்பிரிவின் தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுகத் தவறுமிடத்தும். அத்தவறுகை புரியப்பட்ட நேரத்தில் கம்பெனியானது, அதன் தனிசுகளை, அவை வருமதியாகவந்து கொண்டிருக்கையில் செலுத்துவதற்கு இயலாதிருந்தவிடத்தும், அத்துடன் கம்பெனியானது, ஒழித்துக்காட்டுவதில் அடுத்துப்பின்னர் இடப்படுமிடத்தும், நீதிமன்றமானது, கம்பெனியின் ஒழிப்போனினது அல்லது கடன்கொடுத்தவரினது விண்ணப்பத்தின்மீது, கம்பெனியானது தொடர்ந்தும் அதன் தொழிலைக் கொண்டுநடாத்தியதன் விளைவாகக் கம்பெனியின் கடன் கொடுத்தோரினால் உறப்பட்ட ஏதேனும் நட்டம் முழுவதற்கும் அல்லது அதன் ஏதேனும் பாகத்துக்கும் பணிப்பாளர் ஆளாதல் வேண்டுமெனக் கட்டளையொன்றை ஆக்கலாம்.

(3) (அ) ஓராம் உட்பிரிவின்கீழ் அழைக்கப்பட்ட ஒரு கூட்டத்தில் சபையானது கம்பெனியை ஒடுக்குவதற்காக நீதிமன்றத்திற்கு விண்ணபித்து ஒழிப்போன் ஒருவரை அல்லது நிருவாகி ஒருவரை நியமிப்பதற்குத் தீர்மானிக்காவிடின் ;

(ஆ) அக்கூட்டம் நடைபெற்ற நேரத்தில், கம்பெனியானது அதன் தனிசுகளை, அவைவருமதியாக வந்து கொண்டிருக்கையில் செலுத்துவதற்கு இயன்றதாக விருந்ததென நம்புவதற்கு நியாயமான ஏதுக்கள் எவையும் இருக்காவிடின் ; அத்துடன்

(இ) கம்பெனியானது அடுத்துப்பின்னர் ஒழித்துக்கட்டுதலில் இடப்படின்,

நீதிமன்றமானது, கம்பெனியின் ஒழிப்போனின் அல்லது கடன் தருநரின் விண்ணப்பத்தின்மீது, கூட்டத்துக்கு வருகைதந்து கம்பெனியை ஒடுக்குவதற்காக நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்கின்றமைக்குச் சார்பாக வாக்களித்து அத்துடன் ஓர் ஒழிப்போனை அல்லது நிருவாகியை நியமிப்பதற்குச் சாதகமாக வாக்களித்த அப்பணிப்பாளர்கள் தவிர்ந்த பணிப்பாளர்கள், கம்பெனி தொடர்ந்தும் வியாபாரம் செய்தமையின் விளைவாகக் கம்பெனியின் கடன்தருநரினால் உறப்பட்ட ஏதேனும் சட்டத்தின் முழுமைக்கும் அல்லது அதன் ஏதேனும் பாகத்துக்கும் ஆளாதல் வேண்டுமெனக் கட்டளையொன்றை ஆக்கலாம்.

மூலதனத்தின் பாரதூரமான இழப்பின்மீது பணிப்பாளர்களுக்குள்ள கடமை.

**220.** (1) கம்பெனியொன்றின் தேறிய சொத்துக்கள் அதன் கூறப்பட்ட மூலதனத்தின் அரைவாசிக்குக் குறைவாகவுள்ளவென அக்கம்பெனியின் பணிப்பாளரொருவருக்கு எந்நேரத்திலும் தோன்றினால், சபையானது, அந்நிகழ்வைப் பணிப்பாளர் அறியவந்தபின்னர் இருபது வேலைநாட்களினுள் இப்பிரிவின் நோக்கங்களுக்காகக் கம்பெனியின் பங்குதார்களினது அதிவிசேட பொதுக் கூட்டமொன்றை அழைத்தல் வேண்டும் ; அது, அத்தகைய கூட்டம் அழைக்கப்பட்ட அத்தேதியிலிருந்து நாற்பது, வேலைநாட்களுக்குப் பிந்தாமல் நடாத்தப்படல் வேண்டும்.

(2) இப்பிரிவின்கீழ் கூட்டமொன்றை அழைக்கின்ற அறிவித்தல், சபையினால் தயாரிக்கப்பட்ட அறிக்கையொன்றுடன் சேர்த்தனுப்பப்படல் வேண்டும் ; அது –

(அ) கம்பெனியினால் உறப்பட்ட நட்டங்களின் தன்மையும் அளவும் பற்றியும் ;

(ஆ) கம்பெனியினால் உறப்பட்ட நட்டங்களுக்கான காரணம் அல்லது காரணங்கள் பற்றியும் ;

(இ) அத்தகைய மேலதிக நட்டங்களைத் தடுப்பதற்கு அல்லது உறப்பட்ட நட்டங்களை மீளளிப்பதற்குச் சபையினால் எடுக்கப்பட்டுவரும் நடபடிகள், எவையேனுமிருப்பின் அவைபற்றியும்,

பங்குதாரர்களுக்கு மதியுரை வழங்குதல் வேண்டும்.

(3) இப்பிரிவின்கீழ் அழைக்கப்பட்ட கூட்டமொன்றிலான அலுவல், பணிப்பாளர்களினால் தயாரிக்கப்பட்ட அறிக்கையையும் கம்பெனியின் நிதி நிலைமையையும் கலந்தாராய்வதாதல் வேண்டும். கூட்டத் தவிசாளர், பொதுவில் கம்பெனியின் அறிக்கையும் முகாமையும் தொடர்பாகக் கேள்விகள் கேட்பதற்கும் அவைபற்றிக் கலந்தாராய்ந்து கருத்துரை தெரிவிப்பதற்கும் பங்குதார்களுக்கு நியாயமான சந்தர்ப்பம் அளிக்கப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(4) கம்பெனியின் சபையானது, (1) ஆம் உட்பிரிவிற்கு இணங்கியொழுகத் தவறுமிடத்து, அறிந்துகொண்டும் வேண்டுமென்றும் தவறுகையை அதிகாரமளிக்கின்ற அல்லது அனுமதிக்கின்ற அல்லது தவறுகை தொடர்ந்துபுரியப்படுவதனை அனுமதிக்கின்ற பணிப்பாளர் ஒவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

## செயலாளர்கள்

**221.** (1) ஒவ்வொரு கம்பெனிக்கும் செயலாளரொருவர் இருத்தல் வேண்டும். செயலாளர்.

(2) ஆளெவரும், விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் —

(அ) அத்தகைய கம்பெனியின் செயலாளராகவிருப்பதற்குச் சம்மதித்திருந்தாலொழியவும் ; அத்துடன்

(ஆ) இருநூற்றியிருபத்தி இரண்டாம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ், அக்கம்பெனி தொடர்பாக விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய தகைமைகளை அத்தகைய ஆள் கொண்டுள்ளாரென அத்தாட்சிப்படுத்தியிருந்தாலொழியவும்,

அத்தகைய ஆள் கம்பெனியின் செயலாளராக நியமிக்கப்படுதலாகாது.

(3) கூட்டிணைப்பு விண்ணப்பமொன்றில் அல்லது ஒருங்கிணைப்பு முன்மொழிவொன்றில் கம்பெனியொன்றின் செயலாளராகப் பெயர்குறிப்பிடப்பட்ட ஆளொருவர், விடயத்துக்கேற்ப கம்பெனியின் கூட்டிணைப்புத் தேதியிருந்து அல்லது ஒன்றிணைப்பு முன்மொழிவு பயனுள்ளதாகவரும் தேதியிலிருந்து, அவ்வாள் இச்சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகளின்கீழ் அல்லது கம்பெனியின் அமைப்பகவிதிகளில் அடங்கியுள்ள எவையேனும் ஏற்பாடுகளின்கீழ் பதவிவகிக்காதொழியும்வரை, செயலாளராகப் பதவி வகித்தல் வேண்டும்.

(4) கம்பெனியின் அமைப்பகவிதிகள் வேறுவகையாக ஏற்பாடு செய்தாலொழிய, சபையானது, கம்பெனியின் செயலாளரை நியமிப்பதற்கான அல்லது அகற்றுவதற்கான தத்துவத்தை உடையதாதல் வேண்டும்.

செயலாளரின் தகைமைகள் விதித்துரைக்கப்பட வேண்டும்.

**222.** இச்சட்டத்தின்கீழ் விதித்துரைக்கப்பட்ட ஒரு தொகையிலான மொத்த விற்பனை வரவை அல்லது கூறப்பட்ட மூலதனத்தைக் கொண்டுள்ள ஒவ்வொரு கம்பெனியினதும் செயலாளர், செயலாளர் ஆற்றுவதற்குக் கோரப்படும் கடமைகளின் தன்மையைக் கருத்திற்கொண்டு, விதித்துரைக்கப்படக்கூடிவாறான அத்தகைய தகைமைகளை உடையவராதல் வேண்டும்.

### பணிப்பாளர்களும் செயலாளர்களும் பற்றிய இடாப்பு

பணிப்பாளர்களும் செயலாளர்களும் பற்றிய இடாப்பு.

**223.** (1) கம்பெனி ஒவ்வொன்றும், அதன் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தில், அல்லது 116 ஆம் பிரிவின்கீழ் பதிவாளருக்கு அறிவிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு இடத்தில், அதன் பணிப்பாளர்களும் செயலாளர்களும் பற்றிய இடாப்பொன்றை, அவர்கள் ஒவ்வொருவரும் தொடர்பில் —

(அ) ஒரு தனியாளின் விடயத்தில், தற்போதைய பெயரும் குடும்பப் பெயரும், முன்னைய ஏதேனும் பெயரும் அல்லது குடும்பப் பெயரும், வழமையான வதிவிட முகவரியும் தொழில்முயற்சியும் ;

(ஆ) கூட்டுத்தாபனமாகவுள்ள ஒரு செயலாளரின் விடயத்தில், அதன் கூட்டிணைப்புப் பெயரும் பதிவுசெய்யப்பட்ட அல்லது பிரதான அலுவலகமும்,

பற்றிய விவரங்களைக் கொண்டதாய் வைத்திருத்தல் வேண்டும்.

(2) (அ) கம்பெனியின் பணிப்பாளர்களிலான அல்லது செயலாளரிலான மாற்றமொன்று ; அல்லது

(ஆ) கம்பெனியின் பணிப்பாளர் அல்லது செயலாளர் ஒருவர் தொடர்பில் இடாப்பில் அடங்கியுள்ள விபரங்களிலான மாற்றமொன்று,

பற்றிய விதித்துரைக்கப்பட்ட படிவத்திலான அறிவித்தல் பதிவுக்காகப் பதிவாளரிடம் ஒபடைக்கப்படுவதனைக் கம்பெனியானது உறுதிப்படுத்தல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழான அறிவித்தலொன்று –

(அ) மாற்றம் ஏற்பட்ட தேதியைக் குறித்துரைத்தல் வேண்டும் ;

(ஆ) புதியவொரு பணிப்பாளரை அல்லது செயலாளரை நியமிப்பதன்விடயத்தில், விடயத்துக்கேற்ப, 203 ஆம் பிரிவின்கீழ் அல்லது 211 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் தேவைப்பட்ட சம்மதப்படிவத்தையும் சான்றிதழையும் அறிவித்தலுடன் இணைத்தல் வேண்டும் ; அத்துடன்

(இ) (i) ஒரு பணிப்பாளரின் அல்லது செயலாளரின் நியமனத்தின் அல்லது பதவி நீங்கலின் விடயத்தில், ஏற்படுகின்ற மாற்றத்தை ; அல்லது

(ii) பணிப்பாளரொருவர் அல்லது செயலாளரொருவர் இறக்கின்றவிடத்தில் கம்பெனியானது மாற்றம் பற்றி முதன்முதலாக அறியவருகின்றதிலிருந்து அல்லது ஒரு பணிப்பாளர் அல்லது செயலாளர் தொடர்பில் இடாப்பில் அடங்கியுள்ள விபரங்களிலான மாற்றம் பற்றிக் கம்பெனியானது முதன்முதலாக அறியவருகின்றதிலிருந்து,

இருபது வேலைநாட்களினுள் பதிவாளருக்கு ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.

(4) கம்பெனியொன்று இப்பிரிவின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுமிடத்து –

(அ) கம்பெனியானது தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் ஓரிலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும் ; அத்துடன்

(ஆ) கம்பெனியின் தவறுகைபுரிந்துள்ள அலுவலர் ஒவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

## ஒடுக்கத்தையும் பிறழ் முகாமையையும் தடுத்தல்

ஒடுக்கம்.

**224.** (1) பிரிவு 226 இன் ஏற்பாடுகளுக்கமைய, கம்பெனியின் அலுவல்கள் எவரேனும் பங்குதாரரை அல்லது பங்குதாரர்களை ஒடுக்கும் முறையில் (அத்தகைய முறைப்பாட்டைச் செய்யும் பங்குதாரர் அல்லது பங்குதாரர்கள் உட்பட) நடாத்தப்படுகின்றனவெனக் கம்பெனிக்கெதிராக முறைப்பாடு ஒன்றைச் செய்கின்ற அத்தகைய கம்பெனியின் எவரேனும் பங்குதாரர் அல்லது பங்குதார்கள் நீதிமன்றத்துக்கு இப்பிரிவின் ஏற்பாடுகளின் கீழான கட்டளையொன்றுக்காக விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் விண்ணபத்தின்மீது, கம்பெனியின் அலுவல்கள், கம்பெனியின் எவரேனும் பங்குதாரரை அல்லது பங்குதாரர்களை ஒடுக்கும் முறையில் நடாத்தப்படுகின்றனவென நீதிமன்றம் அபிப்பிராயப் படுமிடத்து, நீதிமன்றம், முறைப்பாடு செய்யப்பட்ட கருமங்களுக்குப் பரிகாரம் அளிக்கும் நோக்குடன், தகுதியானதென அது எண்ணுகின்றவாறான அத்தகைய கட்டளையை ஆக்கலாம்.

(3) நீதிமன்றத்தினால் ஆக்கப்படுகின்ற இறுதியான கட்டளையொன்று முடிவுறாதிருக்கையில், நீதிமன்றமானது, வழக்கு நடவடிக்கைக்கான திறத்தவரொருவரின் விண்ணப்பத்தின் மீது, நீதியும் ஒப்புரவுமாகவுள்ளதென அதற்கு தோன்றுகின்றவாறான அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகள்மீது கம்பெனியின் அலுவல்களின் கொண்டுநடாத்துதலை ஒழுங்குபடுத்துவதற்காக அது அவசியமானதென கருதுகின்றவாறான இடைக்காலக் கட்டளையொன்றை ஆக்கலாம். 521 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் இதன்கீழ் ஆக்கப்படும் ஏதேனும் இடைக்கால கட்டளைக்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

**225.** (1) பிரிவு 226 இன் ஏற்பாடுகளுக்கமைய — பிறழ்முகாமை.

(அ) கம்பெனியின் அலுவல்கள் கம்பெனியின் அக்கறைகளுக்குப் பங்கம் விளைவிக்கக்கூடிய ஒரு முறையில் நடாத்தப்படுகின்றனவென்றும் ; அல்லது

(ஆ) (கம்பெனியின் தொகுதிக்கடன் வைத்திருப்போர் அல்லது எவ்வகுப்பையும் சேர்ந்த பங்குதாரர்கள் உட்பட, எவரேனும் கடன்தருநரினால் அல்லது அவர்களின் நன்மைகருதி ஏற்பட்ட மாற்றமொன்றாகவிராத) முக்கியமான மாற்றமொன்று அதன் பணிப்பாளர் சபையிலான அல்லது அதன் முகவரிலான அல்லது செயலாளரிலான அல்லது அதன் முகவராக அல்லது செயலாளராகச் செயலாற்றுகின்ற குழுமத்தின் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அமைப்பிலான அல்லது கட்டுப்பாட்டிலான அல்லது கம்பெனியின் பங்குகளினது சொத்தாண்மை யிலான அல்லது எத்தகையதுமான வேறெந்த முறையிலுமான

மாற்றத்தினாலேனுஞ்சரி, கம்பெனியின் முகாமையில் அல்லது கட்டுப்பாட்டில் நடைபெற்றுள்ளதென்றும், அத்தகைய மாற்றம் காரணமாக, கம்பெனியின் அலுவல்கள் கம்பெனியின் அக்கறைகளுக்குப் பங்கம் விளைவிக்கக்கூடியவொரு முறையில் நடாத்தப்படக் கூடிய சாத்தியம் உண்டென்றும்,

கூறுகின்ற முறைப்பாட்டொன்றை உடையவராயுள்ள ஒரு கம்பெனியின் எவரேனும் பங்குதாரர் அல்லது பங்குதாரர்கள் நீதிமன்றத்துக்கு இப்பிரிவின் ஏற்பாடுகளின் கீழான கட்டளையொன்றுக்காக விண்ணப்பம் செய்யலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் விண்ணப்பத்தின்மீது, கம்பெனியின் அலுவல்கள் (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்டவாறு நடாத்தப்படுகின்றனவென அல்லது அவ்வுட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட கம்பெனியின் முகாமையில் அல்லது கட்டுப்பாட்டில் ஆன ஏதேனும் முக்கிய மாற்றம் காரணமாக, கம்பெனியின் அலுவல்கள் மேற்கூறப்பட்டவாறு நடாத்தப்படக்கூடிய சாத்தியம் உண்டென நீதிமன்றம் அபிப்பிராயப்படுமிடத்து, நீதிமன்றம், முறைப்பாடு செய்யப்பட்ட அல்லது அஞ்சப்பட்ட கருமங்களைப் பரிகரிக்கும் அல்லது தடுக்கும் நோக்குடன், தகுதியானதென அது எண்ணக்கூடியவாறான அத்தகைய கட்டளையை ஆக்கலாம்.

(3) நீதிமன்றத்தினால் ஆக்கப்படுகின்ற இறுதியான கட்டளையொன்று முடிவுறாதிருக்கையில் நீதிமன்றமானது, வழக்கு நடவடிக்கைக்கான திறத்தவரொருவரின் விண்ணப்பத்தின்மீது, நீதியும் ஒப்புரவுமாகவுள்ளதென அதற்கு தோன்றுகின்றவாறான அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகள் மீது கம்பெனி அலுவல்களின் கொண்டு நடாத்துதலை ஒழுங்குபடுத்துவதற்காக அது அவசியமானதென கருதுகின்றவாறான இடைக்காலக் கட்டளையொன்றை ஆக்கலாம். 521 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் இதன்கீழ் ஆக்கப்படும் ஏதேனும் இடைக்காலக் கட்டளைக்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

*எவர் நீதிமன்றத்துக்கு விண்ணப்பம் செய்யலாம் என்பது.*

**226.** (1) பிரிவு 224 இன் அல்லது பிரிவு 225 இன் கீழான விண்ணப்பமொன்று, விண்ணப்பம் செய்யப்படுமுன்னர் ஆறு மாதங்களின் போது எந்நேரத்திலும் —

(அ) பங்குதாரர்களின் மொத்த எண்ணிக்கையில் ஐந்து சதவீதத்துக்குக் குறையாதவராக அல்லது குறையாத வர்களாக அமைகின்ற ; அல்லது

(ஆ) கம்பெனியின் பொதுக் கூட்டமொன்றில் வாக்களிக்கும் உரிமைகளின் ஐந்து சதவீதத்துக்குக் குறையாததை ஒன்றாகக் கொண்டமைந்த பங்குகளை வைத்திருக் கின்ற,

பங்குதாரரொருவரினால் அல்லது பங்குதாரர்களினால் மட்டுமே செய்யப்படலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, எவையேனும் பங்கு கள் கூட்டாக இரண்டு அல்லது அதற்குமேற்பட்ட ஆட்களினால் வைத்திருக்கப்படுமிடத்து, அத்தகைய ஆட்கள் ஒரு பங்குதார ராகவே கணக்கிடப்படுதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் கீழ் ஒரு கம்பெனியின் பல்வேறு பங்குதாரர்கள் விண்ணப்பமொன்றைச் செய்வதற்கு உரித்துடை யோராகவிருக்குமிடத்து, அவர்களுள் எவரேனும் ஒருவர் அல்லது அதற்கதிகமானோர் எஞ்சியுள்ள பங்குதாரர்களின் எழுத்திலான சம்மதத்தைப்பெற்று அவர்கள் எல்லோரினதும் சார்பிலும் அவர் களின் நன்மைக்காகவும் விண்ணப்பத்தைச் செய்யலாம்.

(4) பிரிவு 224 இன் அல்லது பிரிவு 225 இன் ஏற்பாடுகளின் கீழான விசாரணையொன்று முடிவுற்றதன்மேல், விண்ணப்பத் தைச் செய்கின்ற கம்பெனியின் பங்குதாரர் அல்லது பங்குதாரர் கள், அலைக்கழிக்கும் முறையில் அல்லது காரணம் எதுவுமின்றி அல்லது உண்மையான காரணம் இன்றி அவ்வாறு செய்துள்ளார் அல்லது செய்துள்ளனர் என நீதிமன்றம் தீர்ப்பளிக்குமிடத்து, நீதிமன்றம், அத்தகைய பங்குதாரருக்கெதிராக அல்லது பங்குதார் களுக்கெதிராகச் செலவுகள் பற்றிய ஏதேனும் அளிப்புடன் சேர்த்து மேலதிகமாக, நீதிமன்றத்தினால் நிர்ணயிக்கப்பட வேண்டிய கட்ட ளைத் தேதியிலிருந்து ஐந்தாண்டுகளை விஞ்சாத ஒரு காலப் பகுதிக்கு அத்தகைய பங்குதாரர் அல்லது பங்குதார்கள் கம்பெனி யின் பணிப்பாளராக அல்லது முகவராக அல்லது செயலாளராக அல்லது முகாமையாளராக நியமிக்கப்படுவதற்குத் தகைமை

யற்றவராதல் வேண்டுமெனப் பணிக்கலாம். அல்லது பங்குதாரர் அல்லது பங்குதாரர்கள் மேற்கூறப்பட்ட காலப்பகுதியினுள் கம்பெனியின் ஏதேனும் கூட்டத்தைக் கூட்டுவதற்கு அல்லது கூட்டும்படி தேவைப்படுத்துவற்கு உரிமை கொண்டிருத்தலாகா தென்று அல்லது கம்பெனியின் ஏதேனும் கூட்டத்தில் தாமாகவோ அல்லது பதிலி மூலமாகவோ சமுகமளிப்பதற்கு உரிமை கொண்டிருத்தலாகாதென்று அல்லது அத்தகைய கூட்டத்தில் தாமாகவோ அலலது பதிலிமூலமாகவோ கைகளை உயர்த்து வதன்மூலம் அல்லது வாக்கெடுப்பின்மூலம் வாக்களிப்பதற்கு உரிமைகொண்டிருத்தலாகாதென்று பணிக்கலாம்.

*ஒடுக்குதல் நடவடிக்கை களின்போது 224 ஆம் பிரிவின்கீழ் அல்லது 225ஆம் பிரிவின்கீழ் செயலாற்றுவதற்கு நீதிமன்றத்துக்குள்ள தத்துவம்.*

**227.** பாகம் XII இன் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் ஒரு கம்பெனி தொடர்பிலான ஒடுக்குதல் நடவடிக்கையின் ஏதேனும் கட்டத்தில், கம்பெனியை ஒடுக்குதல் கம்பெனியின் பங்குதாரரொருவரின் அக்கறைகளுக்குப் பங்கம் விளைவிக்கும் என நீதிமன்றமொன்று அபிப்பிராயப்படுமிடத்து, ஒன்றில் 224 ஆம் பிரிவின் அல்லது 225 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் நீதிமன்றத்துக்கு விண்ணப்பமொன்று செய்யப்பட்டிருந்தது என்றாற்போன்று அதேமுறையில் அவ்விரு பிரிவுகளுள் ஒன்றின் ஏற்பாடுகளின்கீழ் செயலாற்றுவது நீதிமன்றத்துக்குச் சட்டமுறை யானதாதல் வேண்டும்.

*224 ஆம் பிரிவின்கீழான அல்லது 225 ஆம் பிரிவின் கீழான விண்ணப்பத்தின் மீது நீதிமன்றத்துக் குள்ள தத்துவங்கள்.*

**228.** பிரிவு 224 இனால் அல்லது பிரிவு 225 இனால் நீதிமன்றத்துக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி அத்தகைய பிரிவுகளுள் ஒன்றின்கீழ் ஆக்கப்பட்ட ஏதே னும் கட்டளை —

(அ) எதிர்காலத்தில் கம்பெனியின் அலுவல்கள் நடாத்தப் படுவதனை ஒழுங்குபடுத்துவதற்கு ஏற்பாடு செய்ய லாம் ;

(ஆ) கம்பெனியின் எவரேனும் பங்குதாரர்களின் பங்குகள் அல்லது அக்கறைகள் அதன் ஏனைய பங்குதாரர்களி னால் அல்லது கம்பெனியினால் கொள்வனவு செய்யப் படுவதற்கு ஏற்பாடு செய்யலாம் ;

(இ) ஒரு புறத்தில் கம்பெனிக்கும் மறுபுறத்தில் பின்வரும் ஆட்களுள் எவருக்கும், அதாவது —

(i) முகாமைப் பணிப்பாளருக்கும் ;

(ii) வேறெவரேனும் பணிப்பாளருக்கும் ;

(iii) பணிப்பாளர் சபைக்கும் ;

(iv) முகவருக்கும் அல்லது சேவையாளருக்கும்; அல்லது

(v) முகாமையாளருக்கும் ,

இடையில் எவ்வாறாயினும் பெறப்பட்ட ஏதேனும் உடன் படிக்கையை விடயத்தின் எல்லாச் சூழ்நிலைகளிலும் நீதி மன்றம் நீதியானதும் ஒப்புரவானதும் என அபிப்பிராயப் படக்கூடியவாறான அத்தகைய நியதிநிபந்தனைகளின் மேல் எவ்வாறாயினும் முடிவுறுத்துவதற்கு, தள்ளிவைப்ப தற்கு அல்லது திரிபுபடுத்துவதற்கு அவ்வாறு ஏற்பாடு செய்யப்படலாம்.

(ஈ) விடயத்தின் எல்லாச் சூழ்நிலைகளிலும் நீதியானதும் ஒப்புரவானதும் என நீதிமன்றம் அபிப்பிராயப்படக் கூடியவாறான அத்தகைய நியதி நிபந்தனைகளின் மேல், கம்பெனிக்கும் (இ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்படாத எவரேனும் ஆளுக்கும் இடையிலான ஏதேனும் உடன்படிக்கையை முடிவுறுத்துவற்கு, தள்ளி வைப்பதற்கு அல்லது திரிபுபடுத்துவதற்கு ஏற்பாடு செய்யலாம் ; ஆனால் எப்பொழுதும், அத்தகைய உடன்படிக்கை எதுவும், சம்பந்தப்பட்ட திறத்தவருக்கு உரிய அறிவித்தல் கொடுத்தபின்னரன்றியும் கேட்கப் படுவதற்கான சந்தர்ப்பமொன்றை அத்தகைய ஆளுக் குக் கொடுத்தபின்னரன்றியும், முடிவுறுத்தப்படு தலோ, தள்ளி வைக்கப்படுதலோ அல்லது திரிபுபடுத் தப்படுதலோ ஆகாது ;

(உ) ஒரு தனியாளினால் அல்லது அவருக்கெதிராக ஆக்கப்பட்டிருப்பின் அல்லது செய்யப்பட்டிருப்பின், அவரது கடனிறுக்கவகையற்றமையின் விடயத்தில் மோசடியான முந்துரிமையாகக் கருதப்பட்டிருக்கக் கூடியதான, விடயத்துக்கேற்ப, விண்ணப்பத் தேதிக்கு

அல்லது ஒடுக்குதல் நடவடிக்கைகள் தொடங்கும் தேதிக்கு நேர்முன்னரான மூன்று மாதங்களினுள் கம்பெனியினால் அல்லது அதற்கெதிராக ஆக்கப்பட்ட அல்லது செய்யப்பட்ட ஏதேனும் கைமாற்றத்தை, பண்டங்களின் ஒப்படைப்பை, கொடுப்பனவை, எழுதி நிறைவேற்றுகையை அல்லது ஆதனம் தொடர்பான வேறு செயலைத் தள்ளிவைத்தற்கு ஏற்பாடு செய்யலாம் ; அத்துடன்

(ஊ) நீதிமன்றத்தின் அபிப்பிராயப்படி எந்தக் கருமத்துக்காக ஏற்பாடுசெய்வது நீதியானதும் ஒப்புரவானதுமாக உள்ளதோ அந்த வேறேதேனும் கருத்துக்கு ஏற்றபாடு செய்யலாம்.

*224 ஆம் பிரிவின் கீழான அல்லது 225ஆம் பிரிவின் கீழான கட்டளையினால் கம்பெனியின் அமைப்பக விதிகளை மாற்றுவதன் பயன்.*

**229.** (1) பிரிவு 224 இன் அல்லது பிரிவு 225 இன் கீழான கட்டளையொன்று கம்பெனியின் அமைப்பகவிதிகளில் ஏதேனும் மாற்றத்தைச் செய்கின்றவிடத்து, அப்போது, இச்சட்டத்தின் வேறேதேனும் ஏற்பாட்டில் அடங்கியுள்ள முரணான எதுவும் எவ்வாறிருப்பினும், கட்டளையில் அனுமதிக்கப்பட்ட அளவுவரை தவிர (ஏதேனுமிருப்பின்), நீதிமன்றத்தின் அனுமதியுடனன்றி, கட்டளையுடன் ஒவ்வாததாகவிருக்கும் அமைப்பகவிதிகளிலான எத்தகையதுமான ஏதேனும் மாற்றத்தைச் செய்வதற்குக் கம்பெனியானது தத்துவமுடையதாதலாகாது.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, கட்டளையினால் செய்யப்பட்ட மாற்றங்கள், எல்லாம் தொடர்பிலும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க அவை கம்பெனியினால் உரியமுறையில் செய்யப்பட்டிருந்தனவென்றாற்போன்று அதே பயனைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், சொல்லப்பட்ட ஏற்பாடுகள் அவ்வாறு மாற்றப்பட்ட அமைப்பகவிதிகளுக்கு அதற்கிணங்க ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(3) ஒரு கம்பெனியின் அமைப்பக விதிகளை மாற்றுவதற்கான அல்லது மாற்றுவதற்கு அனுமதி அளிப்பதற்கான கட்டளை ஒவ்வொன்றினதும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்று, அத்தகைய கட்டளை ஆக்கப்பட்டபின்னர் பத்துநாட்களினுள் கம்பெனியினால் பதிவாளருடன் கோப்பிடப்படுதல் வேண்டும், அவர் அதனைப் பதிவுசெய்தலும் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதில் தவறுகை புரியப்படுமிடத்து –

(அ) கம்பெனியானது, தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஓரிலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும் ; அத்துடன்

(ஆ) தவறுகை புரிந்தவராகவுள்ள கம்பெனியின் ஒவ்வோர் அலுவலரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

*224 ஆம் பிரிவின் கீழ் அல்லது 225 ஆம் பிரிவின்கீழ் விண்ணப்பத்துக்குப் பிரதிவாதிகளைச் சேர்த்தல்.*

**230.** இருநூற்றி இருபத்திநான்காம் பிரிவின் அல்லது 225 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் விண்ணப்பத்துக்குப் பிரதிவாதியாகப் பெயர்குறிப்பிடப்படாத ஒரு கம்பெனியின் முகாமைப் பணிப்பாளர் அல்லது வேறெவரேனும் பணிப்பாளர், முகவர் அல்லது செயலாளர் அல்லது முகாமையாளர் அல்லது வேறெவரேனுமாள் அத்தகைய விண்ணப்பத்துக்கான ஒரு பிரதிவாதியாகச் சேர்க்கப்படுவதற்கு விண்ணப்பிக்குமிடத்து, நீதிமன்றம், அவ்வாறு செய்வதற்குப் போதிய காரணம் உண்டெனத் திருப்திப்படுமிடத்து, அவர் அதற்கிணங்கப் பிரதிவாதியாகச் சேர்த்துக்கொள்ளப்படலாமெனப் பணித்தல் வேண்டும்.

*குறித்தசில உடன்படிக்கைகளை முடிவுறுத்துவதன் அல்லது திரிபுபடுத்துவதன் விளைவுகள்.*

**231.** (1) பிரிவு 224 இன் அல்லது பிரிவு 225 இன்கீழ் ஆக்கப்பட்ட நீதிமன்றக் கட்டளையொன்று 228 ஆம் பிரிவின் (ஈ) என்னும் பந்தியில் அல்லது (உ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்படுகின்றவாறானதைப் போன்ற உடன்படிக்கையொன்றை முடிவுறுத்துமிடத்து, தள்ளிவைக்குமிடத்து அல்லது திரிபுபடுத்துமிடத்து –

(அ) ஒன்றில் உடன்படிக்கையைப் பின்பற்றி அல்லது வேறுவகையாக, சேதவீடுகளுக்கான அல்லது பதவியிழப்புக்கான நட்டஈட்டுக்காக அல்லது வேறேதேனும் தொடர்பில் எவரேனுமாளினால் கம்பெனிக்கெதிராக எத்தகையதுமான உரிமைக்கோரிக்கையெதுவும் செய்யப்படுவதற்குக் கட்டளையானது இடமளித்தலாகாது ; அத்துடன்

(ஆ) எந்த முகாமைப் பணிப்பாளரின் அல்லது வேறு பணிப்பாளரின், முகவரின், செயலாளரின் அல்லது முகாமையாளரின் உடன்படிக்கை அவ்வாறு முடிவுறுத்தப்படுகின்றதோ அல்லது தள்ளிவைக்கப்படுகின்றதோ அந்த ஆள் எவரும், உடன்படிக்கையை முடிவுறுத்துகின்ற அல்லது தள்ளிவைக்கின்ற கட்டளைத் தேதியில் அத்தகைய முகவரின் அல்லது செயலாளரின் இணைப்பாளராகவிருந்த அல்லது அடுத்துப் பின்னர் வருகின்ற ஆள் எவரும், உடன்படிக்கையை முடிவுறுத்துகின்ற கட்டளைத்தேதியிலிருந்து ஐந்தாண்டுக் காலப்பகுதிக்கு, நீதிமன்ற அனுமதியிருந்தாலொழிய, கம்பெனியின் முகாமைப் பணிப்பாளராக அல்லது வேறு பணிப்பாளராக, முகவராக, செயலாளராக அல்லது முகாமையாளராக நியமிக்கப்படுதலோ அல்லது செயலாற்றுதலோ ஆகாது.

(2) (அ) ஒரு கம்பெனியின் முகாமைப் பணிப்பாளராக அல்லது வேறு பணிப்பாளராக, முகவராக அல்லது செயலாளராக அல்லது முகாமையாளராக (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளுக்கு முரணாக மனதறியச் செயலாற்றுகின்ற எவரேனுமாள் தவறொன்றுக்குக்குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட தன்மேல் பத்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப் பணத்துக்கு ஆளாதலும் வேண்டும் ;

(ஆ) இப்பிரவின் ஏற்பாடுகளின்கீழான தவறொன்று ஓர் ஆட்கள் குழுவினாற் புரியப்படுமிடத்து —

(i) அந்த ஆட்கள் குழு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருப்பின், அக்கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஒவ்வொரு பணிப்பாளரும் அலுவலரும் ; அல்லது

(ii) அந்த ஆட்கள் குழுவானது, குழுமமொன்றாகவிருப்பின், குழுமத்தின் பங்காளி ஒவ்வொருவரும்,

அத்தகைய தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும் :

ஆயின், அத்தகைய ஆளெவரும், தவறானது தாம் அறியாமல் புரியப்பட்டதென்று அல்லது அத்தகைய தவறு புரியப்படுவதனைத் தடுப்பதற்கு உரிய எல்லா விழிப்புக்கவனத்தையும் தாம் பிரயோகித்தாரென்று அவர் எண்பித்தால், அத்தயை தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படலாகாது.

"பங்குதாரர்" என்பதன் விஸ்தரிக்கப்பட்ட பொருள்.

**232.** "பங்குதாரர்" பற்றி 224 முதல் 228 வரையிலான பிரிவுகளிலுள்ள குறிப்பீடொன்று பின்வருவோருக்கான குறிப்பீட்டையும் உள்ளடக்குதல் வேண்டும் :—

(அ) பங்குதாரரொருவரின் இறப்புமூலம் பங்குகள் எவ்வாளை வந்தடைந்தனவோ அவ்வாள் ;

(ஆ) இறந்துபோன பங்குதாரரொருவரின் நிறைவேற்றுநர் அல்லது நிருவாகி ; அல்லது

(இ) பிரிவு 224 இன் கீழ் அல்லது 225 இன்கீழ் விண்ணப்பம் செய்யப்படுவதற்கு முன்னரான ஆறுமாதங்களினுள் எந்நேரத்திலும் பங்குதாரராகவிருந்த ஆள்.

## மட்டுப்படுத்தற் கட்டளைகள்

மட்டுப்படுத்தற் கட்டளைகள்.

**233.** (1) நீதிமன்றம், இப்பிரிவின்கீழ் செய்யப்பட்ட விண்ணப்பத்தின்மீது, கம்பெனியின் அமைப்பக விதிகளை அல்லது இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டை மீறக்கூடிய நடத்தையில் ஈடுபட உத்தேசிக்கின்ற கம்பெனியொன்றை அல்லது கம்பெனியின் பணிப்பாளரொருவரை, அந்நடத்தையில் ஈடுபடாதிருக்குமாறு மட்டுப்படுத்தி கட்டளையாக்கலாம்.

(2) (அ) கம்பெனியினால் ; அல்லது

(ஆ) கம்பெனியின் பணிப்பாளரால் அல்லது பங்குதாரரால்,

விண்ணப்பமொன்று செய்யப்படலாம்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழான கட்டளையை நீதிமன்றம் ஆக்குகின்றவிடத்து, தகுதியானதென அது எண்ணுகின்றவாறான அத்தகைய விளைவாந்தன்மையினவான நிவாரணத்தையும் அது வழங்கலாம்.

(4) இப்பிரிவின்கீழான கட்டளையொன்று நடந்துமுடிந்த நடத்தை அல்லது நடத்தை நெறி தொடர்பாக ஆக்கப்படுதலாகாது.

(5) நீதிமன்றம், (1) ஆம் உட்பிரிவின்கீழ் விண்ணப்பமொன்றின் இறுதித் தீர்மானத்துக்கு முன்னர் எந்நேரத்திலும், இடைக்காலக் கட்டளையாக, அவ்வுட்பிரிவின்கீழ் ஆக்குவதற்கு அதற்குத் தத்துவ மளிக்கப்பட்டுள்ள ஏதேனும் கட்டளையை ஆக்கலாம். அத்தகைய கட்டளை, நீதிமன்றத்தின் தற்றுணிபின்படி மறுதிறத்தவரில்லா மல் அல்லது பிரதிவாதிக்கான அறிவித்தலின்பின்னர் ஆக்கப் படலாம். பிரதிவாதி, மனுதாரருக்கான அறிவித்தலுடன் மறுதிறத் தவரில்லாக் கட்டளையை இல்லாதொழித்தற்கான அல்லது வேறுபடுத்துவதற்கான கட்டளையொன்றுக்காக விண்ணப்பிக்க லாம்.

(6) ஐந்நூற்றி இருபத்தொராம் பிரிவின் ஏற்பாடுகள் இப்பிரி வின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் இடைக்காலக் கட்டளைக்கு ஏற்புடை யதாதலாகாது.

### விளை வழக்குகள்

விளை வழக்குகள்.

**234.** (1) இப்பிரிவின் மூன்றாம், நான்காம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய, நீதிமன்றம், கம்பெனியின் பங்குதாரரின் அல்லது பணிப்பாளரின் விண்ணப்பத்தின்மீது –

(அ) கம்பெனியின் அல்லது அக்கம்பெனியின் ஏதேனும் துணைநிலைக் கம்பெனியின் பெயரிலும் சார்பிலும் வழக்கு நடவடிக்கைகளைக் கொண்டுவருவதற்கு ; அத் துடன்

(ஆ) விடயத்துக்கேற்ப, கம்பெனியின் அல்லது துணை நிலைக் கம்பெனியின் சார்பில் வழக்கு நடவடிக்கை களைத் தொடர்ந்து நடாத்தும் எதிர்வாதிடும், அல்லது நிறுத்தும் நோக்கத்துக்காக, கம்பெனி அல்லது ஏதே னும் துணைநிலைக் கம்பெனி ஒரு திறத்தவராகவுள்ள வழக்கு நடவடிக்கைகளில் இடையீடு செய்வதற்கு,

அப்பங்குதாரருக்கு அல்லது பணிப்பாளருக்கு அனுமதியளிக்க லாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் நீதிமன்றத்துக்கு அளிக்கப்பட்ட தத்துவங்கள் வரையறுக்காமல், அவ்வுட்பிரிவின்கீழ் அனுமதி வழங்குவதா அல்லது அனுமதி வழங்காதுவிடுவதா என்பதைத் தீர்மானிப்பதில் நீதிமன்றம்,—

(அ) வழக்கு நடவடிக்கைகள் வெற்றியீட்டக்கூடிய சாத்தியம்;

(ஆ) பெறப்படக்கூடிய சாத்தியங்கொண்ட நிவாரணம் தொடர்பாக வழக்கு நடவடிக்கைகளின் செலவுகள் ;

(இ) நிவாரணம் பெறுவதற்காகக் கம்பெனியினால் அல்லது துணைநிலைக் கம்பெனியினால் எடுக்கப்பட்ட ஏதேனும் வழக்கு ;

(ஈ) விடயத்துக்கேற்ப, தொடங்கப்படும் தொடர்ந்து நடாத்தப்படும் எதிர்வாதிடப்படும் அல்லது நிறுத்தப்படும் வழக்கு நடவடிக்கைகளில் கம்பெனியின் அல்லது துணைநிலைக் கம்பெனியின் அக்கறைகள்,

என்பன பற்றிக் கவனத்துட்கொள்ளுதல் வேண்டும்.

(3) ஒன்றில் —

(அ) கம்பெனி அல்லது அதன் துணைநிலைக் கம்பெனி, விடயத்துக்கேற்ப, வழக்கு நடவடிக்கைகளைக் கொண்டுவருவதற்கோ, விழிப்புக்கவனத்துடன் தொடர்ந்து நடாத்தவோ அல்லது எதிர்வாதிடவோ அல்லது நிறுத்தவோ முன்னங்கொள்ளவில்லையென; அல்லது

(ஆ) வழக்கு நடவடிக்கைகளின் நடாத்துகை, பணிப்பாளர்களுக்கோ அல்லது முழுமையாகப் பங்குதாரர்களின் தீர்மானத்துக்கோ விடப்படாதிருத்தல் கம்பெனியின் அல்லது துணைநிலைக் கம்பெனியின் நன்மைக்கானதென,

நீதிமன்றம் திருப்திப்பட்டால் மட்டுமே, வழக்கு நடவடிக்கைகளைக் கொண்டுவருவதற்கான அல்லது வழக்கு நடவடிக்கைகளில் இடையீடுசெய்வதற்கான அனுமதி (1) ஆம் உட்பிரிவின்கீழ் அளிக்கப்படலாம்.

(4) விண்ணப்பம் பற்றிய அறிவித்தல் விடயத்துக்கேற்ப, கம்பெனிக்கு அல்லது துணைநிலைக் கம்பெனிக்குச் சேர்ப்பிக்கப் படுதல் வேண்டும்.

(5) கம்பெனி அல்லது துணைநிலைக் கம்பெனி தோன்றிக் கேட்கப்படலாமென்பதுடன், விடயத்துக்கேற்ப, வழக்கு நடவடிக் கைகளைக் கொண்டுவருவதற்கு தொடர்ந்து நடாத்துவதற்கு, எதிர் வாதிடுவதற்கு, அல்லது நிறுத்துவதற்கு அது முன்னங்கொண் டுள்ளதா அல்லவாவென நீதிமன்றத்துக்குத் தெரிவித்தலும் வேண்டும்.

(6) இப்பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு தவிர, ஒரு கம்பெனி யின் பங்குதாரர் அல்லது பணிப்பாளர், கம்பெனியின் அல்லது கம்பெனியின் துணைநிலைக் கம்பெனியின் பெயரில் அல்லது சார்பில் கம்பெனியின் பங்குதாரர் அல்லது பணிப்பாளர் ஒருவர் எவையேனும் வழக்கு நடவடிக்கைகளைக் கொண்டுவரவோ அல்லது அவற்றில் இடையீடு செய்யவோ உரித்துடையவராத லாகாது.

*விளை வழக்கின் செலவுகள் கம்பெனியினால் கொடுத்துத் தீர்க்கப்படுதல்.*

**235.** நீதிமன்றம், வழக்கு நடவடிக்கைகளைக் கொண்டு வருவதற்கு அல்லது அவற்றில் இடையீடுசெய்வதற்கு 234 ஆம் பிரிவின்கீழ் எந்தப் பங்குதாரருக்கு அல்லது பணிப்பாளருக்கு அனுமதியளிக்கப்படுகின்றதோ அந்தப் பங்குதாரரின் அல்லது பணிப்பாளரின் விண்ணப்பத்தின்மீது, 237 ஆம் பிரிவின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் இணக்கத்தீர்வு, இணக்கம் அல்லது இடைநிறுத்துகை தொடர்பான எவையேனும் செலவுகள் உட்பட, வழக்கு நடவடிக்கைகளைக் கொண்டுவருவதிலான அல்லது அவற்றில் இடையீடுசெய்வதிலான நியாயமான செலவுகளின் முழுமையும் அல்லது அவற்றின் பாகம் கம்பெனியினால் கொடுத்துத்தீர்க்கப்படல் வேண்டுமெனக் கட்டளையிடலாம்.

*அனுமதியளிக் கப்படுமிடத்து, நீதிமன்றத்துக்குள்ள தத்துவங்கள்.*

**236.** நீதிமன்றம், எந்நேரத்திலேனும் 234 ஆம் பிரிவின்கீழ் நீதிமன்ற அனுமதியுடன், விடயத்துக்கேற்ப பங்குதாரரொருவரி னால் அல்லது பணிப்பாளரொருவரினால் கொண்டுவரப்பட்ட எவையேனும் வழக்கு நடவடிக்கைகள் தொடர்பாக அல்லது பங்குதாரர் அல்லது பணிப்பாளர் இடையீடு செய்கின்ற எவையே னும் வழக்கு நடவடிக்கைகள் தொடர்பாகத் தகுதியானதென அது எண்ணக்கூடியவாறான ஏதேனும் கட்டளையை ஆக்கலாம்;

அத்துடன் இப்பிரிவின்கீழ் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொது மையை வரையறுக்காது -

(அ) வழக்கு நடவடிக்கைகளின் நடாத்துகையைக் கட்டுப் படுத்துமாறு பங்குதாரரை அல்லது வேறெவரேனு மாளை அதிகாரமளிக்கின்ற கட்டளையொன்றை ஆக்கலாம் ;

(ஆ) வழக்கு நடவடிக்கைகளின் நடாத்துகைக்கான பணிப்பு களை விடுக்கலாம் ;

(இ) வழக்கு நடவடிக்கைகள் தொடர்பாகத் தகவல் அல்லது உதவி வழங்குமாறு கம்பெனியை அல்லது பணிப் பாளர்களைத் தேவைப்படுத்துகின்ற கட்டளையாக்க லாம் ; அல்லது

(ஈ) வழக்கு நடவடிக்கைகளிலான எதிர்வாதியினாற் செலுத்தப்படும்படி கட்டளையிடப்பட்ட ஏதேனும் தொகை, முழுமையாக அல்லது பகுதியளவில், விடயத் துக்கேற்ப, கம்பெனிக்கு அல்லது துணைநிலைக் கம்பெனிக்குப் பதிலாக, கம்பெனியின் அல்லது துணைநிலைக் கம்பெனியின் முன்னைநாள் மற்றும் தற்போதைய பங்குதாரர்களுக்குச் செலுத்தப் படல் வேண்டுமெனப் பணித்துக் கட்டளையாக்கலாம்.

*விளை வழக்கின் இணக்கம், இணக்கத்தீர்வு அல்லது மீளப் பெறுகை.*

**237.** விடயத்துக்கேற்ப, ஒரு பங்குதாரரினால் அல்லது பணிப் பாளரினால் கொண்டுவரப்பட்ட அல்லது அவற்றில் பங்குதாரர் அல்லது பணிப்பாளர் இடையீடுசெய்கின்ற வழக்கு நடவடிக் கைகள் எவையும், 234 ஆம் பிரிவின்கீழ் நீதிமன்ற அனுமதியுடன் நீதிமன்ற அங்கீகாரமின்றி இணக்கித்தீர்க்கப்படலாம், அல்லது இணக்கப்படலாம் அல்லது நிறுத்தப்படலாம்.

### வலுவாக்கம்

*பணிப்பாளர்களின் குறித்த சில நடவடிக்கைகளை வலுவாக்குதல்.*

**238.** (1) ஒரு கம்பெனியின் பணிப்பாளரினால் அல்லது பணிப்பாளர் சபையினால் பங்குதாரர்களுக்கு அல்லது வேறு எவரேனுமாளுக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவமொன்றின் கொள்ளப்பட்ட பிரயோகமானது, அத்தத்துவம் பிரயோகிக்கப் படக்கூடியவாறான அதேமுறையில் அப்பங்குதாரர்களினால்

அல்லது அவ்வாளினால் வலுவாக்கப்படலாம் அல்லது அங்கீகரிக்கப்படலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் வலுவாக்கப்பட்ட தத்துவத்தின் கொள்ளப்பட்ட பிரயோகமானது, அத்தத்துவத்தின் தகுந்ததும் செல்லுபடியானதுமான பிரயோகமாக இருப்பதெனவும் எப்போதும் இருந்துள்ளதெனவும் கருதப்படும்.

(3) பணிப்பாளரொருவரினால் அல்லது பணிப்பாளர் சபையினால் தத்துவமொன்றின் கொள்ளப்பட்ட பிரயோகத்தின் இப்பிரிவின் கீழான வலுவாக்கம் அல்லது அங்கீகாரம், பணிப்பாளரின் அல்லது சபையின் நடவடிக்கை தொடர்பாக, வலுவாக்கம் அல்லது அங்கீகாரம் தவிர, பிரயோகிக்கப்படக்கூடிய தத்துவமொன்றைப் பிரயோகிப்பதிலிருந்து நீதிமன்றத்தைத் தடுத்தலாகாது.

## பாகம் VIII

### ஒன்றிணைப்புகள்

ஒன்றிணைப்புகள்.

**239.** இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கம்பெனிகள் ஒன்றிணைந்து ஒரு கம்பெனியாகத் தொடர்ந்திருக்கலாம் ; இது ஒன்றிணையும் கம்பெனிகளுள் ஒன்றாகவிருக்கலாம், அல்லது ஒரு புதிய கம்பெனியாகவிருக்கலாம். அத்தகைய ஒன்றிணைப்புப் பற்றிய பகிரங்க அறிவித்தல் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

ஒன்றிணைப்பு முன்மொழிவு.

**240.** (1) ஒன்றிணைவதற்கு முன்மொழிகின்ற ஒவ்வொரு கம்பெனியும், 241 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க, ஒன்றிணைப்பின் நியதிகளையும் குறிப்பாகப் பின்வருவனவற்றையும் தருகின்ற ஒன்றிணைப்பு முன்மொழிவொன்றை அங்கீகரித்தல் வேண்டும் :—

(அ) ஒன்றிணைந்த கம்பெனியின் பெயர் ஒன்றிணையும் கம்பெனிகளுள் ஒன்றினது பெயரைப் போன்றதாகவே இருப்பின், அப்பெயர் ;

(ஆ) ஒன்றிணைந்த கம்பெனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் ;

(இ) ஒன்றிணைந்த கம்பெனியின் பணிப்பாளர்கள் ஒவ்வொருவரினதும் முழுப்பெயரும் வதிவிட முகவரியும் ;

(ஈ) ஒன்றிணைந்த கம்பெனியின் செயலாளரினது முழுப் பெயரும் முகவரியும் ;

(உ) பின்வருவனவற்றைக் குறித்துரைத்து ஒன்றிணைந்த கம்பெனியின் பங்குக் கட்டமைப்பு :-

(i) கம்பெனியினது பங்குகளின் எண்ணிக்கை ;

(ii) 49 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் தரப்பட்டவற்றிலிருந்து வித்தியாசப்படின், கம்பெனியின் ஒவ்வொரு பங்குக்கும் இணைந்துள்ள உரிமைகள், சிறப்புரிமைகள், வரையறைகள் மற்றும் நிபந்தனைகள் ;

(ஊ) ஒன்றிணைகின்ற கம்பெனி ஒவ்வொன்றினதும் பங்குகள் ஒன்றிணைந்த கம்பெனியின் பங்குகளாக மாற்றப்படவேண்டிய முறை ;

(எ) ஒன்றிணைகின்ற கம்பெனியின் பங்குகள், ஒன்றிணைந்த கம்பெனியின் பங்குகளாக மாற்றப்படவேண்டியிராவிடின், அப்பங்குகளை வைத்திருப்போர் ஒன்றிணைந்த கம்பெனியின் பங்குகளின் இடத்தில் பெறவேண்டிய ஏதேனும் பிரதிபயன் ;

(ஏ) பந்தி (எ) என்பதில் விவரிக்கப்பட்ட வகையினதான கொடுப்பனவு தவிர, ஒன்றிணைகின்ற கம்பெனியின் பங்குதாரர் ஒருவருக்கு அல்லது பணிப்பாளர் ஒருவருக்குச் செய்யப்படவேண்டிய ஏதேனும் கொடுப்பனவு;

(ஐ) ஒன்றிணைதலைப் பூர்த்திசெய்வதற்கும், ஒன்றிணைந்த கம்பெனியின் அடுத்துப் பின்னரான முகாமைக்கும் தொழிற்பாட்டுக்கும் ஏற்பாடுசெய்வதற்கும் அவசியமான ஏதேனும் ஒழுங்கின் விபரங்கள் ;

(ஒ) ஒன்றிணைதலானது, பயனுள்ளதாக வருவதற்கு முன்னப்பட்ட தேதி.

(2) ஒன்றிணைந்த கம்பெனியின் முன்மொழியப்பட்ட அமைப்பக விதிகள், மாதிரி அமைப்பக விதிகளிலிருந்து வித்தியாசப்படின், முன்மொழியப்பட்ட அமைப்பகவிதிகளின் பிரதியொன்று ஒன்றிணைதல் முன்மொழிவுடன் இணைக்கப்பட்டு அதன் பாகமாக அமைதல் வேண்டும்.

(3) ஒன்றிணைகின்ற கம்பெனிகளுள் ஒன்றின் பங்குகள், ஒன்றிணைகின்ற கம்பெனிகளுள் இன்னொன்றினால் அல்லது அதன் சார்பில் வைத்திருக்கப்படுமிடத்து, ஒன்றிணைதல் முன்மொழிவானது –

(அ) கொடுப்பனவின்றி அப்பங்குகள் இல்லாதாக்கப்படுவதற்காக அல்லது ஒன்றிணைதல் பயனுள்ளதாக வரும்போது ஏனைய பிரதிபயன் வழங்கப்படுவதற்காக ஏற்பாடு செய்தல் வேண்டும் ;

(ஆ) அப்பங்குகளை ஒன்றிணைந்த கம்பெனியின் பங்குகளாக மாற்றுவதற்கு ஏற்பாடுசெய்தலாகாது.

ஒன்றிணைதல் முன்மொழிவை அங்கீகரித்தல்.

**241.** (1) ஒன்றிணைதல் முன்மொழிவொன்று பங்குதாரர்களுக்கு முன்வைக்கப்படுமுன்னர், ஒன்றிணைகின்ற கம்பெனியொன்றன் சபையானது –

(அ) அதன் அபிப்பிராயப்படி ஒன்றிணைதலானது, கம்பெனியின் அதியுயர்ந்த தன்மைக்காகவுள்ளதென்றும் ; அத்துடன்

(ஆ) ஒன்றிணைந்த கம்பெனி, ஒன்றிணைதலானது, பயனுள்ளதாக வந்தபின்னர் உடனடியாக, கடனிறுக்க வகையுள்ளமைப் பரீட்சிப்பைத் திருப்திப்படுத்துமென அது திருப்திப்படுகின்றதென்றும்,

தீர்மானம் எடுத்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் தேவைப்பட்ட தீர்மானத்துக்குச் சாதகமாக வாக்களிக்கும் பணிப்பாளர்கள், தமது அபிப்பிராயப்படி அவ்வுட்பிரிவில் தரப்பட்டுள்ள நிபந்தனைகள் திருப்திப்படுகின்றனவெனக் கூறியும் அந்த அபிப்பிராயத்தைக் கொண்டிருப்பதற்கான காரணங்களை எடுத்துக்கூறியும் சான்றிதழொன்றை ஒப்பிடுதல் வேண்டும்.

(3) ஒன்றிணைகின்ற கம்பெனி ஒவ்வொன்றினதும் சபையானது, கம்பெனியின் ஒவ்வொரு பங்குதாரருக்கும், ஒன்றிணைதலானது பயனுள்ளதாகவருவதற்கு முன்மொழியப்பட்டதற்கு முன்னர் இருபது வேலை நாட்களுக்குக் குறையாமல் பின்வருவனவற்றை அனுப்புதல் வேண்டும் :-

(அ) ஒன்றிணைதல் முன்மொழிவின் பிரதியொன்று ;

(ஆ) ஒவ்வொரு சபையினதும் பணிப்பாளர்களினால் கொடுக்கப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகள் ;

(இ) 93 ஆம் பிரிவின்கீழ் பங்குதாரர்களின் உரிமைகளைத் தருகின்ற கூற்றொன்று ;

(ஈ) பணிப்பாளர் என்ற தன்மையிலேனுஞ்சரி அல்லது வேறுவகையாகவேனுஞ்சரி, முன்மொழிவில் எவரேனும் பணிப்பாளருக்குள்ள எவையேனும் முக்கிய அக்கறைகள் பற்றிய கூற்றொன்று ;

(உ) கம்பெனியும் அதன் பங்குதாரர்களும், முன்மொழியப்பட்ட ஒன்றிணைதலின் தன்மையையும் சிக்கல்களையும் நியாயமான பங்குதாரர் ஒருவர் விளங்கிக்கொள்வதை இயலச்செய்வதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய மேலதிகத் தகவலும் விளக்கமும்.

(4) ஒன்றிணைகின்ற கம்பெனி ஒவ்வொன்றினதும் சபை, ஒன்றிணைதலானது, எத்தேதியன்று பயனுள்ளதாக வருவதற்கு முன்னப்பட்டதோ அத்தேதிக்கு முன்னர் இருபது வேலை நாட்களுக்குக் குறையாமல் —

(அ) ஒன்றிணைதல் முன்மொழிவின் பிரதியொன்றைக் கம்பெனியின் ஒவ்வொரு பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கடன்தருநருக்கும் அனுப்புதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) (i) ஒன்றிணைகின்ற கம்பெனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலங்களிலும், குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய வேறு இடங்களிலும்,

வழமையான வேலை மணித்தியாலங்களின் போது, ஒன்றிணைகின்ற கம்பெனியின் எவரேனும் பங்குதாரரினால் அல்லது கடன்தருநரினாலும், அல்லது ஒன்றிணைகின்ற கம்பெனி எந்த ஆளுக்குக் கடப்பாடுடையதாகவுள்ளதோ அந்த ஆளினால் ஒன்றிணைதல் முன்மொழிவின் பிரதிகள் சோதனைக்குக் கிடைக்கக்கூடியனவாகவுள்ளனவென்றும் ; அத்துடன்

(ii) ஒன்றிணைகின்ற கம்பெனியின் பங்குதாரர் அல்லது கடன்தருநர் அல்லது ஒன்றிணைகின்ற கம்பெனி எந்த ஆளுக்குக் கடப்பாடுடையதாகவுள்ளதோ அந்த ஆள், ஒன்றிணைகின்ற கம்பெனியொன்றுக்கு வேண்டுகோள் விடுப்பதன்மேல் ஒன்றிணைதல் முன்மொழிவின் பிரதியொன்று கட்டணமின்றி வழங்கப்படுவதற்கு உரித்துடையவராகவுள்ளாரென்றும்,

பொருள்பட்ட ஒரு கூற்று உட்பட, முன்மொழியப்பட்ட ஒன்றிணைதல் பற்றிப் பகிரங்க அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.

(5) ஒன்றிணைதல் முன்மொழிவு —

(அ) 92 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க, ஒவ்வோர் ஒன்றிணைகின்ற கம்பெனியின் பங்குதாரர்களின் விசேட தீர்மானத்தினால் ; அத்துடன்

(ஆ) ஒன்றிணைதல் முன்மொழிவிலுள்ள ஏற்பாடொன்று ஒன்றிணைகின்ற கம்பெனியின் அமைப்பக விதிகளுக்கான திருத்தத்தில் அடங்கியிருப்பின் அல்லது அக்கம்பெனி தொடர்பாக வேறுவகையில் முன்மொழியப்படின், ஓர் அக்கறைக்கு தொகுதியின் அங்கீகாரத்தைத் தேவைப்படுத்தின் அந்த அக்கறைத் தொகுதியொன்றின் விசேட தீர்மானத்தினால்,

அங்கீகரிக்கப்பட்டால், பயனுறுத்தப்படலாம்.

(6) இப்பிரிவின் நோக்கத்துக்காக, ஒன்றிணைக்கப்பட்ட கம்பெனியின் கூறப்பட்ட மூலதனத்தைக் கணக்குக்கு எடுக்காமல் கடனிறுக்க வகையுடைமைப் பரீட்சை பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

(7) இரண்டாம் உட்பிரிவின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற பணிப்பாளரொருவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப் பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

(8) ஒன்றிணைகின்ற முன்மொழிவொன்றுக்குப் பயன்கொடுத்தல், ஒன்றிணைகின்ற கம்பெனியொன்றின் கடன்தருநரை அல்லது ஒன்றிணைகின்ற கம்பெனி எவ்வாளுக்குக் கடப்பாட்டின்கீழ் உள்ளதோ அவ்வாளை நியாயமற்ற முறையில் பங்கப்படுத்தும் என நீதிமன்றமொன்று திருப்திப்படின், அது ஒன்றிணைப்பானது பயனுள்ளதாக வருகின்ற தேதிக்கு முன்னர் எந்நேரத்திலும் செய்யப்பட்டதும் அவ்வாளினால் அதற்கெனச் செய்யப்படுவதுமான விண்ணப்பத்தின்மேல் முன்மொழிவு தொடர்பாகத் தகுதியானதென அது எண்ணக்கூடியவாறான ஏதேனும் கட்டளையை ஆக்கலாம் என்பதுடன், இப்பிரிவின் பொதுமையை வரையறுக்காமல் —

(அ) முன்மொழிவுக்கு பயன்கொடுத்தலாகாதெனப் பணிக்கின்ற ;

(ஆ) முன்மொழிவை அல்லது அதன் ஏதேனும் பாகத்தை மீளச் சீர்தூக்கிப் பார்க்கும்படி கம்பெனியை அல்லது அதன் சபையைப் பணிக்கின்ற,

கட்டளையை ஆக்கலாம்.

(9) எட்டாம் உட்பிரிவின் கீழான கட்டளை, நீதிமன்றம் தகுதியானதென எண்ணுகின்றவாறான அத்தகைய நியதிநிபந்தனையின் மீது ஆக்கப்படலாம்.

குறுகிய வடிவ ஒன்றிணைதல்.

**242.** (1) ஒரு கம்பெனியும், அதனால் நேரடியாகவோ மறைமுகமாகவோ முழுமையாகச் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஏனைய கம்பெனிகளும், —

(அ) ஒன்றிணைதலானது, ஒவ்வோர் ஒன்றிணைகின்ற கம்பெனியினதும் சபையின் தீர்மானத்தினால் அங்கீகரிக்கப்படின் ; அத்துடன்

(ஆ) (i) ஒன்றிணைக்கப்பட்ட கம்பெனி அல்லாத ஒவ்வோர் ஒன்றிணைகின்ற கம்பெனியினதும் பங்குகள், கொடுப்பனவோ அல்லது வேறு பிரதிபயனோ இன்றி இல்லாதாக்கப்படுமென்றும் ;

(ii) ஒன்றிணைக்கப்பட்ட கம்பெனியின் அமைப்பக விதிகள், முதலிற் குறிப்பீடு செய்யப்பட்ட கம்பெனியின் அமைப்பக விதிகளைப் போன்றனவாகவிருக்குமென்றும் ;

(iii) ஒன்றிணைக்கப்பட்ட கம்பெனி, ஒன்றிணைதல் பயனுள்ளதாக வந்தபின்னர் உடனடியாக, கடனிறுக்க வகையுடைமை பரீட்சையைத் திருப்திப்படுத்துமென சபையானது, திருப்திப்படுகின்றதென்றும்; அத்துடன்

(iv) தீர்மானத்தில் பெயரிடப்பட்ட ஆள் அல்லது ஆட்கள் புதிய கம்பெனியின் பணிப்பாளர் அல்லது பணிப்பாளர்கள் என்றும்,

ஒவ்வோரு தீர்மானமும் ஏற்பாடு செய்யின் 240 ஆம் பிரிவினதும் 241 ஆம் பிரிவினதும் ஏறபாடுகளுக்கு இணங்கியொழுகாமல், (முதலிற் குறிப்பீடு செய்யப்பட்ட கம்பெனியாகவுள்ள) ஒரு கம்பெனியாக ஒன்றிணைந்து தொடர்ந்திருக்கலாம்.

(2) ஒவ்வொன்றும் அதே கம்பெனியினால் நேரடியாக அல்லது மறைமுகமாக முழுமையாகச் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கம்பெனிகள், 240 ஆம் பிரிவின் அல்லது 241 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகாமல், —

(அ) ஒன்றிணைதலானது, ஒவ்வோர் ஒன்றிணைகின்ற கம்பெனியினதும் சபையின் தீர்மானத்தினால் அங்கீ கரிக்கப்படின் ; அத்துடன்

(ஆ) (i) ஒன்றிணைகின்ற கம்பெனிகளுள் ஒன்றைத் தவிர, மற்றெல்லாவற்றினதும் பங்குகள் கொடுப்பனவு அல்லது வேறு பிரதிபயன் இன்றி இல்லாதாக்கப்படுமென்றும் ;

(ii) ஒன்றிணைக்கபட்ட கம்பெனியின் அமைப்பக விதிகள், அதன் பங்குகள் இல்லாதாக்கப்படாத ஒன்றிணைகின்ற கம்பெனியின் அமைப்பக விதிகளைப் போன்றனவாகவிருக்குமென்றும் ;

(iii) ஒன்றிணைக்கப்பட்ட கம்பெனி, ஒன்றிணைத்தல் பயனுடையதாக வருகின்ற பின்னர் உடனடி யாக, கடனிறுக்கவகையுடைமைப் பரீட்சையை திருப்திப்படுத்துமென்றும் ; அத்துடன்

(iv) தீர்மானத்தில் பெயரிடப்பட்ட ஆள் அல்லது ஆட்கள் புதிய கம்பெனியின் பணிப்பாளர் அல்லது பணிப்பாளர்கள் என்றும்,

ஒவ்வொரு தீர்மானமும் ஏற்பாடு செய்யின் ஒரு கம்பெனியாக ஒன்றிணைந்து தொடர்ந்திருக்கலாம்.

(3) ஒவ்வோர் ஒன்றிணைகின்ற கம்பெனியினது சபை, ஒன்றி ணைதலானது எத்தேதியன்று பயனுள்ளதாக வருவதற்கு முன்னப் படுகின்றதோ அத்தேதிக்கு முன்னர் இருபது வேலைநாட்க ளுக்குக் குறையாமல் —

(அ) கம்பெனியின் ஒவ்வொரு பிணைப்பொறுப்பளிக்கப் பட்ட கடன்தருநருக்கும் முன்மொழியப்பட்ட ஒன்றி ணைத்தல் எழுத்திலான அறிவித்தல் கொடுத்தல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) முன்மொழியப்பட்ட ஒன்றிணைத்தல் பற்றிப் பகிரங்க அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.

(4) இப்பிரிவின்கீழான ஒன்றிணைத்தலை அங்கீகரிக்கும் தீர்மானங்கள், ஒன்றாக எடுக்கப்படுகையில், அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒன்றிணைத்தல் முன்மொழிவொன்றாக அமைவதாகக் கருதப்படல் வேண்டும்.

(5) விடயத்துக்கேற்ப, (1) ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழ் தேவைப்படுத்தப்பட்ட ஒரு தீர்மானத்துக்குச் சாதகமாக வாக்களிக்கும் பணிப்பாளர்கள், தமது அபிப்பிராயப்படி (1) ஆம் உட்பிரிவில் அல்லது (2) ஆம் உட்பிரிவில் தரப்பட்டுள்ள நிபந்தனைகள் திருப்திப்படுத்தப்பட்டுள்ளனவென்று கூறியும், அந்த அபிப்பிராயத்தைக் கொண்டிருப்பதற்கான காரணங்களை எடுத்துக்கூறியும் சான்றிதழொன்றை ஒப்பமிடல் வேண்டும்.

(6) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, ஒன்றிணைக்கப்பட்ட கம்பெனியின் கூறப்பட்ட மூலதனத்தைக் கணக்குக்கு எடுக்காமல் கடனிறுக்கவகையுடைமைப் பரீட்சை பிரயோகிக்கப்படல் வேண்டும்.

(7) ஐந்தாம் உட்பிரிவின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற பணிப்பாளர் ஒருவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

ஒன்றிணைத்தல் முன்மொழிவைப் பதிவு செய்தல்.

**243.** ஒன்றிணைத்தலைச் செய்யும் நோக்கத்துக்காக, —

(அ) அங்கீகரிக்கப்பட்ட ஒன்றிணைத்தல் முன்மொழிவு ;

(ஆ) 241 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது 242 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின்கீழ் தேவையான ஏதேனும் சான்றிதழ் ;

(இ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் கம்பெனியின் அமைப்பக விதிகளுக்கும் இணங்க ஒன்றிணைத்தலானது, அங்கீகரிக்கப்பட்டுள்ளதெனக் கூறி, ஒவ்வோர் ஒன்றிணைகின்ற கம்பெனியினது சபையினாலும் ஒப்பமிடப்பட்ட சான்றிதழ் ;

(ஈ) ஒன்றிணைக்கப்பட்ட கம்பெனியின் பணிப்பாளராக ஒன்றிணைத்தல் முன்மொழிவில் பெயர்குறிப்பிடப் பட்ட ஆட்களுள் ஒவ்வொருவரிடமிருந்தும், 203 ஆம் பிரிவினால் தேவைப்படுத்தப்பட்டவாறு அக்கம்பெனி யின் பணிப்பாளராகச் செயலாற்றுவதற்கான சம்மதம்; அத்துடன்

(உ) ஒன்றிணைக்கப்பட்ட கம்பெனியின் செயலாளராக ஒன்றிணைத்தல் முன்மொழிவில் பெயர்குறிப்பிடப் பட்ட ஆளிடமிருந்து, 221 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரி வினால் தேவைப்படுத்தப்பட்டவாறு அக்கம்பெனியின் செயலாளராகச் செயலாற்றுவதற்கான சம்மதம்,

பதிவுக்காகப் பதிவாளரிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

*ஒன்றிணைத்தற் சான்றிதழ்.*

**244.** (1) பதிவாளர், 243 ஆம் பிரிவின்கீழ் தேவையான ஆவணங் களைப் பெற்றபின்னர் உடனடியாக —

(அ) ஒன்றிணைக்கப்பட்ட கம்பெனி, ஒன்றிணைகின்ற கம்பெனிகளுள் ஒன்றாகவிருப்பின், விதித்துரைக்கப் பட்ட படிவத்தில் ஒன்றிணைத்தற் சான்றிதழ் ஒன்றை வழங்குதல் வேண்டும் ; அல்லது

(ஆ) ஒன்றிணைக்கப்பட்ட கம்பெனி ஒரு புதிய கம்பெனியாக விருப்பின் —

(i) கம்பெனிபற்றிய விபரங்களை இடாப்பில் பதவீடு செய்தல் வேண்டும் ; அத்துடன்

(ii) விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் ஒன்றிணைத்த சான்றிதழ் ஒன்றையும், விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் கூட்டிணைத்தற் சான்றிதழ் ஒன்றை யும் வழங்கு தல் வேண்டும்.

(2) ஒன்றிணைத்தல் முன்மொழிவொன்று, ஒன்றிணைத்தல் பய னுள்ளதாகவருவதற்கு முன்னப்பட்ட தேதியைக் குறித்துரைக்கு மாயின், அத்துடன் அத்தேதி, பதிவாளர் எத்தேதியன்று ஆவணங் களைப் பெறுகின்றாரோ அத்தேதியாக அல்லது அதற்குப் பிந்திய

தேதியாகவிருக்குமாயின், ஒன்றிணைத்தற் சான்றிதழும், ஏதேனும் கூட்டிணைத்தற் சான்றிதழும் ஒன்றிணைத்தல் முன்மொழிவில் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று பயனுள்ளதாக வருகின்றதெனக் கருதப்படுதல் வேண்டும்.

(3) அத்தகைய ஒன்றிணைத்தல் பற்றிய அறிவித்தல் கம்பெனியால் பொதுமக்களுக்குக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

ஒன்றிணைத்தற் சான்றிதழின் பயன்.

**245.** ஒன்றிணைத்தற் சான்றிதழொன்றில் காட்டப்பட்ட தேதியில் —

(அ) ஒன்றிணைத்தல் பயனுள்ளதாகவரும் ;

(ஆ) ஒன்றிணைகின்ற கம்பெனிகளுள் ஒன்றைப்போன்ற அதே பெயரை அது கொண்டிருப்பின், ஒன்றிணைக்கப்பட்ட கம்பெனி ஒன்றிணைத்தல் முன்மொழிவிற் குறித்துரைக்கப்பட்ட பெயரை உடையதாதல் வேண்டும்;

(இ) பதிவாளர், ஒன்றிணைக்கப்பட்ட கம்பெனியைத் தவிர, ஒன்றிணைகின்ற கம்பெனிகள் தொடர்பான எல்லா விபரங்களையும் இடாப்பிலிருந்து அகற்றுதல் வேண்டும் ;

(ஈ) ஒன்றிணைக்கப்பட்ட கம்பெனி, ஒன்றிணைகின்ற கம்பெனிகளுள் ஒவ்வொன்றினதும் ஆதனம், உரிமைகள், தத்துவங்கள், மற்றும் சிறப்புரிமைகள் எல்லாவற்றுக்கும் அடுத்துறுகின்றது ;

(உ) ஒன்றிணைக்கப்பட்ட கம்பெனி, ஒன்றிணைகின்ற கம்பெனிகளுள் ஒவ்வொன்றினதும் பொறுப்புக்கள், மற்றும் கடப்பாடுகள் எல்லாவற்றுக்கும் அடுத்துறுகின்றது ;

(ஊ) ஒன்றிணைகின்ற கம்பெனியொன்றினால் அல்லது அதற்கெதிராக முடிவுறாதுள்ள வழக்கு நடவடிக்கைகள், ஒன்றிணைக்கப்பட்ட கம்பெனியினால் அல்லது அதற்கெதிராகத் தொடர்ந்து நடாத்தப்படலாம் ;

(எ) ஒன்றிணைகின்ற கம்பெனிக்குச் சாதகமான அல்லது அதற்கெதிரான ஒரு குற்றத்தீர்ப்பு, விதிப்பு, கட்டளை அல்லது தீர்ப்பு ஒன்றிணைக்கப்பட்ட கம்பெனியினால் அல்லது அதற்கெதிராக வலுவுறுத்தப்படலாம் ;

(ஏ) ஒன்றிணைக்கப்பட்ட கம்பெனியின் கூறப்பட்ட மூலதனம், ஒன்றிணைகின்ற கம்பெனிகளுள் ஒவ்வொன்றினதும் கூறப்பட்ட மூலதனம் பணத்தொகையாக இருத்தல் வேண்டும் ; அத்துடன்

(ஐ) ஒன்றிணைகின்ற கம்பெனிகளிலுள்ள பங்குதாரர்களின் பங்குகளை அல்லது உரிமைகளை மாற்றுவதற்கு ஏற்பாடு செய்கின்ற ஒன்றிணைப்பு முன்மொழிவின் எவையேனும் ஏற்பாடுகள் அவற்றின் தாற்பரியத்துக்கிணங்க பயனுடையனவாதல் வேண்டும்.

பெரும்பான்மையால் அங்கீகரிக்கப்பட்ட உத்தேசத்திட்டம் அல்லது ஒப்பந்தத்தை சம்மதிக்காத பங்குதாரரின் பங்குகளைக் கொள்ளலுக்கான தத்துவம்.

**246.** (1) கம்பெனியொன்றின் வாக்களிக்கும் உரிமையை வைத்திருப்பவர்களுக்கு செய்யப்பட்ட கொடைமுனைவைப் பின்பற்றி எவரேனும் ஆள் அத்தகைய கம்பெனியின் வாக்களிக்கும் உரிமையின் தொண்ணூறு வீதத்திற்குக் குறையாததைக் கொள்ளுமிடத்து, அவ்வாள் அத்தகைய கொள்ளலின் மூன்று மாதங்களினுள் அத்தகைய பங்குகளைக் கொள்ளலுக்கான விருப்பத்தை, வாக்களிக்கும் உரிமையைக் கொண்டிருக்கின்ற நிலுவையிலுள்ள பங்குகளை வைத்திருக்கின்ற எல்லாப் பங்குதாரர்களுக்கும் விதித்துரைக்கப்பட்ட முறையில் அறிவித்தல் கொடுக்கலாமென்பதுடன், தனது பங்குகளின் கொள்ளலுக்கு அத்தகைய அறிவித்தல் கிடைத்ததிலிருந்து பதினான்கு நாட்களுள் நீதிமன்றத்திற்கு எவரேனும் பங்குதாரரினால் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றின் மேல்,நீதிமன்றம் வேறுவகையாக கட்டளையிடுவது பொருத்தமானதெனக் கருதினாலொழிய, மேற் குறிப்பிடப்பட்ட கொடைமுனைவின் கீழ் ஆக்கப்பட்ட நியதிகளிலும் பார்க்கக் குறையாத நியதிகள்மீது அத்தகைய பங்குகளை கொள்ளுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட கொள்ளல் தொடர்பிலான அறிவித்தலின் பிரதியொன்று எக்கம்பெனியின் பங்குகள் அவ்வாறு கொள்ளப்படுகின்றனவோ அக்கம்பெனிக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

(3) எவரேனும் ஆள், அத்தகைய அறிவித்தல் கொடுக்கப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாதம் காலாவதியானதன் மேல் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் அறிவித்தல் கொடுத்திருக்கு மிடத்து, அத்தகைய ஆள் எக்கம்பெனியின் பங்குகள் அவ்வாறு கொள்ளப்படவுள்ளதோ அக்கம்பெனிக்கு செலுத்தவேண்டிய பிரதிபலனை அனுப்புதல் வேண்டுமென்பதுடன் அக்கம்பெனி யின், கம்பெனி செயலாளர் எல்லா அத்தகைய பங்குகளையும் வைத்திருப்பவராக அத்தகைய கொள்ளுதல் செய்தவரை பதிவீடு செய்தல் வேண்டும்.

(4) கம்பெனியால் பெறப்பட்ட ஏதேனும் பிரதிபயன் எப்பங்கு தொடர்பில் பணத்தொகை அல்லது அத்தகைய பிரதிபயன் பெறப்பட்டதோ அப்பங்குகளுக்கு உரித்துடையவரான ஆள் அல்லது ஆட்களுக்கான நம்பிக்கையில் கம்பெனியால் வைத்தி ருக்கப்படுதல் வேண்டும். அத்தகைய கம்பெனியின் செயலாளர் ஏதேனும் முறையற்ற காலதாமதமின்றி எல்லாப் பங்குதாரருக்கும் உரிய அத்தகைய பிரதிபயனை அனுப்புதல் வேண்டும்.

(5) அத்தகைய இடைவேளைகளில் செய்யப்பட்ட நியாயமான விசாரணையின் பின்னரும் நாளாந்தப் புதினப் பத்திரிகையில் மும்மொழிகளிலும் அறிவித்தல் வெளியிடப்பட்ட பின்னரும், ஏதேனும் பிரதிபலனுக்கு உரித்தான ஆள் காணப்பட முடியாதவிடத்தும், பிரதிபலன் பெறப்பட்டதிலிருந்து அல்லது கம்பெனி ஒடுக்கப்படுவதிலிருந்து ஆறு ஆண்டுகள் கழிந்துள்ள விடத்தும், ஏதேனும் வட்டியுடனான பிரதிபலன், அதிலிருந்து செலுத்துமதியாகவுள்ள பங்கிலாபம் அல்லது வேறு நன்மைகள் கம்பெனியால் பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு செலுத்தப் படுதல் வேண்டும் –

(6) கம்பெனி ஒடுக்கப்படும் விடயத்தில் ;

(*a*) நம்பிக்கை முடிவுறுத்தப்படுதல் வேண்டும் ;

(*b*) கம்பெனி அல்லது விடயத்திற்கேற்றவாறாக ஒழிப் போன் காசு அல்லாத பிரதிபயனையும், பிரதிபலனி லிருந்து செலுத்துமதியாகவிருக்கின்ற காசு அல்லாத ஏதேனும் நன்மையையும் விற்றல் வேண்டும் ;

*(c)* (i) அது காசாக இருக்குமளவுக்கு பிரதி பயனை;

(ii) மேலுள்ள (ii) ஆம் பந்தியின்கீழான ஏதேனும் விற்பனையிலிருந்தான கிடைப்பனவுகளை ; அத்துடன்

(iii) பிரதிபலனிலிருந்து செலுத்துமதியாகவிருக்கின்ற ஏதேனும் வட்டி, பங்கிலாபம் அல்லது வேறு நன்மைகளை,

பிரதிநிதித்துவம் செய்கின்ற பணத்தொகையொன்று, பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளரின் பெயரில் வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(7) மேலே குறிப்பிடப்பட்டவாறாக அத்தகைய விசாரணை மற்றும் ஊடக அறிவித்தலின் செலவினங்கள் (4) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட நம்பிக்கையில் வைத்திருக்கப்படும் பணம் அல்லது வேறு ஆதனத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

## பாகம் IX

### கடன் கொடுத்தோருடனான இணக்கங்கள்

**247**. இச்சட்டத்தின் இப்பாகத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய — பொருள்கோடல்.

"இணக்கம்" என்பது, ஒரு கம்பெனிக்கும் அதன் கடன்தருநருக்கும் இடையிலான இணக்கம் என்று பொருள் ஆகும் என்பதுடன் —

(அ) கம்பெனியின் எல்லாத் தனிசுகளையும் அல்லது அதன் பாகத்தையும் இல்லாதாக்குகின்ற;

(ஆ) அதன் கடன்தருநரின் உரிமைகளை அல்லது தனிசொன்றின் நியதிகளை வேறுபடுத்துகின்ற ; அல்லது

(இ) தனிசொன்றைச் செலுத்துவதற்குக் கம்பெனியின் இயலுமாந்தன்மையின் சாத்தியத்தைப் பாதிக்கின்ற, கம்பெனியின் அமைப்பகவிதிகளின் மாற்றம் தொடர்பாகவிருக்கின்ற ;

இணக்கமொன்றையும் உள்ளடக்கும் ;

"கடன்தருநர்" என்பது, ஒழித்துக்கட்டுதலில், கம்பெனியினால் ஆளொருவருக்குத் தனிசு ஒன்று வருமதியாகவுள்ளதென 356 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க உரிமைகோருவதற்கு உரித்துடையவராகவிருக்கும் அந்த ஆளையும் உள்ளடக்கும் ; அத்துடன்

"முன்மொழிபவர்" என்பது, 248 ஆம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்டவரும், இச்சட்டத்தின் இப்பாகத்தினது ஏற்பாடுகளுக்கிணங்க இணக்கமொன்றை முன்மொழிபவருமான ஆளொருவர் என்று பொருளாகும்.

இணக்க முன்மொழிவு.

**248.** (1) பின்வரும் ஆட்களுள் எவரும், கம்பெனியொன்று தனிசுகள் வருமதியாகவருகின்றபோது அவற்றைச் செலுத்த முடியாதுள்ளது அல்லது முடியாததாகவரும் சாத்தியம் கொண்டது என நம்புவதற்கு அவ்வாளுக்குக் காரணமிருப்பின், இப்பாகத்தின்கீழ் இணக்கமொன்றை முன்மொழியலாம் —

(அ) கம்பெனியின் சபை ;

(ஆ) கம்பெனியின் ஆதனமும் பொறுப்பு முயற்சிகளும் தொடர்பாக நியமிக்கப்பட்ட பெறுநரொருவர் ;

(இ) பாகம் XIII இன் கீழ் நியமிக்கப்பட்ட கம்பெனியின் நிருவாகியொருவர் ;

(ஈ) கம்பெனியின் ஒழிப்போன் ஒருவர் ; அல்லது

(உ) நீதிமன்றத்தின் அனுமதியுடன், கம்பெனியின் எவரேனும் கடன்தருநர் அல்லது பங்குதாரர்.

(2) ஓராம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியின்கீழ் நீதிமன்றம் கடன்தருநருக்கு அல்லது பங்குதாரருக்கு அனுமதியளிக்குமிடத்து, நீதிமன்றமானது, கடன்தருநர் அல்லது பங்குதாரர் இணக்க மொன்றை முன்மொழிவதினை இயலச் செய்வதற்கு, கம்பெனி யின் கடன்தருநரின் பெயர்களையும் முகவரிகளையும் கொண்ட நிரலொன்றை, அவர்களுள் ஒவ்வொருவருக்கும் வருமதியாக வுள்ள தொகைகளையும் அல்லது குறித்துரைக்கப்படக்கூடிய வாறான அத்தகைய வேறு தகவலைக் காட்டி, குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய காலத்தினுள் கடன்தருநருக்கு அல்லது பங்குதாரருக்கு வழங்கும்படி கம்பெனியால் பணிக்கின்ற கட்டளை யொன்றை ஆக்கலாம்.

*முன்மொழியப்பட்ட இணக்கம் பற்றிய அறிவித்தல்.*

**249.** (1) முன்மொழிபவர் கம்பெனியின் ஒவ்வொரு வகுப்பின ருமான கடன்தருநர் தொடர்பாக முன்மொழியப்பட்ட இணக்கத் தினால் பாதிக்கப்படுவோரும் முன்மொழிபவர் அறிந்துள்ளோ ருமான கடன்தருநர் பற்றிய நிரலொன்றைத் தொகுத்தல் வேண்டும்; முன்மொழிபவர் பின்வருவனவற்றையும் தருதல் வேண்டும் :—

(அ) அவர்களுள் ஒவ்வொருவருக்கும் வருமதியாகவுள்ள அல்லது வருமதியாகவுள்ளதென மதிப்பீடு செய்யப் பட்ட தொகை ; அத்துடன்

(ஆ) இணக்கத்தை அங்கீகரிக்கின்ற தீர்மானத்தின்மீது அவர்களுள் ஒவ்வொருவரும் அளிப்பதற்கு உரித் துள்ள வாக்குகளின் எண்ணிக்கை.

(2) முன்மொழிபவர், முறையே அறிந்த ஒவ்வொரு கடன்தரு நருக்கும், கம்பெனிக்கும், எவரேனும் பெறுநரக்கும் அல்லது நிரு வாகிக்கும் அல்லது ஒழிப்போனுக்கும் —

(அ) தீர்மானத்தின்மீது வாக்களிக்கும் நோக்கத்திற்காக, கடன்தருநரின் கூட்டமொன்றை அல்லது எவையே னும் இரண்டு அல்லது அதற்கதிகமான வகுப்பின ரான கடன்தருநரின் கூட்டமொன்றை நடாத்துவதற் கான முன்னம்பற்றி, இதற்கான ஏழாம் அட்டவணை யிற் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாட்டுக்கிணங்க வுள்ள அறிவித்தலொன்று ; அத்துடன்

(ஆ) (i) முன்மொழிபவரின் பெயரையும் முகவரியையும் அவர் எந்தத் தன்மையில் செயலாற்றுகின்றாரோ அந்தத் தன்மையையும் கொண்டுள்ளதும்;

(ii) வழமையான தொழில் மணித்தியாலங்களின் போது எந்த முகவரிக்கும் தொலைபேசி எண்ணுக்கும் விசாரணைகள் நெறிப்படுத்தப்படலாமோ அந்த முகவரியையும் தொலைபேசி எண்ணையும் கொண்டுள்ளதும் ;

(iii) முன்மொழியப்பட்ட இணக்கத்தின் நியதிகளையும் அதற்கான காரணங்களையும் தருகின்றதும்;

(iv) இணக்கம் அங்கீகரிக்கப்படின் கம்பெனியின் கடன்தருநருக்கு ஏற்படுவனவான நியாயமான எதிர்பார்க்கக்கூடிய விளைவுகளைத் தருகின்றதும் ;

(v) முன்மொழியப்பட்ட இணக்கத்தில் பணிப்பாளரொருவருக்குள்ள ஏதேனும் அக்கறையின் அளவைத் தருகின்றதும்

(vi) முன்மொழியப்பட்ட இணக்கமும் கடன்தருநர் கூட்டத்தில் அல்லது எவையேனும் வகுப்பினரான கடன்தருநர் கூட்டத்தில் முன்மொழியப்பட்ட அதற்கான ஏதேனும் திருத்தமும் எல்லாக் கடன்தருநரையும் அல்லது அவ்வகுப்பைச் சேர்ந்த எல்லாக் கடன்தருநரையும், 250 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க அங்கீகரிக்கப்படின், பிணிப்பதாகவிருக்குமென விளக்குகின்றதும் ; அத்துடன்

(vii) இணக்கம் அங்கீகரிக்கப்படுவதனை அடுத்து அதனை வேறுபடுத்துவதற்காக, முன்மொழியப்பட்ட இணக்கத்தின் பாகமாக முன்மொழியப்பட்ட ஏதேனும் நடவடிக்கைமுறையின் விபரங்களைக் கொண்டிருக்கின்றதும் ;

ஆன கூற்றொன்று ; அத்துடன்

(இ) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட கடன்தரு நரின் நிரலின் அல்லது நிரல்களின் பிரதியொன்று,

என்பவற்றைக் கொடுத்தலும் பதிவாளரிடம் ஒப்படைத்தலும் வேண்டும்.

இணக்கத்தின் பயன்.

**250.** (1) கூட்டத்தில் முன்மொழியப்பட்ட ஏதேனும் திருத்தம் உட்பட, இதற்கான ஏழாம் அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாட்டுக்கிணங்க நடாத்தப்பட்ட கடன்தருநரின் கூட்டத்தில் அல்லது ஒரு வகுப்பினரான கடன்தருநரின் கூட்டத்தில், இணக்க மானது, ஏதேனும் திருத்தமுற்பட, அட்டவணையின் 5 ஆம் பந்திக்கிணங்கக் கடைப்பிடிக்கப்படின், கடன்தருநரினால் அல்லது அந்த வகுப்பினரான கடன்தருநரினால் அங்கீகரிக்கப்பட்ட தாகக் கருதப்படும்.

(2) இப்பாகத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க ஒரு கம்பெனியின் கடன்தருநரினால் அல்லது ஒரு வகுப்பினரான கடன்தருநரினால் அங்கீகரிக்கப்பட்ட, ஏதேனும் திருத்தம் உட்பட இணக்கமொன்று கம்பெனியைப் பிணிப்பதாகும் என்பதுடன், 249 ஆம் பிரிவின்கீழ் முன்மொழிவு பற்றிய அறிவித்தல் அவர்களுக்குக்கொடுக்கப் பட்ட, —

(அ) எல்லாக் கடன்தருநரையும் ; அல்லது

(ஆ) ஒரு வகுப்பினரான கடன்தருநருக்கு அதிகமான வகுப்புகள் இருப்பின், அவ்வகுப்பைச் சேர்ந்த எல்லாக் கடன்தருநரையும் ,

பிணிப்பதாகும்.

(3) ஏதேனும் திருத்தம் உட்பட, இணக்கமொன்றை முன்மொழி கின்ற தீர்மானம், ஒரு வகுப்புக்கு அதிகமான வகுப்புக்களைச் சேர்ந்த கடன்தருநரின் வாக்குக்கு முன்வைக்கப்படுமிடத்து, முரணானது தீர்மானத்தில் வெளிப்படையாகக் கூறப்பட்டா லொழிய, ஒவ்வொரு வகுப்பினராலும் இணக்கத்தின் அங்கீகரிப் பானது, ஏதேனும் திருத்தம் உட்பட தீர்மானத்தின் மீது வாக்களிக்கின்ற ஏனைய ஒவ்வொரு வகுப்பினரினாலும் ஏதேனும் திருத்தம் உட்பட, இணக்கத்தை அங்கீகரித்தலை நிபந்தனையாக்கக் கொண்டுள்ளதென ஊகிக்கப்படல் வேண்டும்.

(4) முன்மொழிபவர், வாக்களித்தலின் பெறுபேறு பற்றிய எழுத்திலான அறிவித்தலை முறையே ஒவ்வோர் அறிந்த கடன்தருநரும் கம்பெனிக்கும் எவரேனும் பெறுநருக்கும் அல்லது நிருவாகிக்கும் அல்லது ஒழிப்போருக்கும், பதிவாளருக்கும் கொடுத்தல் வேண்டும்.

இணக்கத்தை வேறுபடுத்தல்.

**251.** (1) இருநூற்றைம்பதாம் பிரிவின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட இணக்கம் ஒன்றில் —

(அ) அங்கீகரிக்கப்பட்டவாறான இணக்கத்தில் கூட்டிணைக் கப்பட்ட வேறுபாட்டுக்கான ஏதேனும் நடவடிக்கை முறைக்கிணங்க ; அல்லது

(ஆ) முன்மொழியப்பட்ட ஏதேனும் வேறுபாடு முன் மொழியப்பட்ட ஓர் இணக்கம் என்றாற்போன்று, அவசியமானவாறான அத்தகைய திரிபுகளுடன் அந் நோக்கத்துக்காக ஏற்புடையதாகவேண்டியதான இப் பாகத்தில் ஏற்பாடுசெய்யப்பட்ட தேவைப்பாட்டுக் கிணங்க இணக்கத்தின் வேறுபாட்டை அங்கீகரிப்பதன் மூலம்,

வேறுபடுத்தப்படலாம்.

(2) இப்பாகத்தின் ஏற்பாடுகள், இப்பிரிவிற்கிணங்க வேறு படுத்தப்பட்ட ஏதேனும் இணக்கத்துக்கு ஏற்புடையனவாதல் வேண் டும்.

நீதிமன்றத் துக்குள்ள தத்துவங்கள்.

**252.** (1) முன்மொழிபவரின் அல்லது கம்பெனியின் விண்ணப் பத்தின்பேரில், நீதிமன்றம் —

(அ) அவ்வாறு செய்வது நீதியானதாக இருக்குமென நீதிமன்றம் திருப்திப்பட்டால், இப்பாகத்தின் ஏற்பாடுகளின்கீழ் சுமத்தப்பட்ட நடவடிக்கைமுறைசார் தேவைப்பாடுதொடர்பான பணிப்புகளை விடுக்க லாம் ; அல்லது அத்தகைய ஏதேனும் தேவைப்பாட்டை விட்டழிப்புச் செய்யலாம் அல்லது வேறுபடுத்தலாம் ; அல்லது

(ஆ) எத்தேதியன்று முன்மொழியப்பட்ட இணக்கம்பற்றிய அறிவித்தல் கொடுக்கப்பட்டதோ அத்தேதிக்கு முந் தாமல் தொடங்குகின்றதும், அதன்மீதான வாக்களிப் பின் பெறுபேறுபற்றிய அறிவித்தல் எத்தேதியன்று கொடுக்கப்பட்டதோ அத்தேதிக்குப் பின்னர் பத்து வேலை நாட்களுக்குப் பிந்தாமல் முடிவுறுகின்றது மான கட்டளையிற் குறித்துரைக்கப்பட்ட ஒரு காலப் பகுதியின்போது —

(i) கம்பெனியொன்றிடமிருந்து வருமதியாகவுள்ள தனிசொன்று தொடர்பான வழக்கு நடவடிக்கை கள் நிறுத்தப்படல் வேண்டுமென்றும் ; அல்லது

(ii) கம்பெனியிடமிருந்து வருமதியான தனிசொன் றின் கொடுப்பனவை வலுவுறுத்துவதற்குக் கடன்தருநர் வேறேதேனும் வழிமுறையை எடுப்ப தனைத் தவிர்த்தல் வேண்டுமென்றும்,

கட்டளையிடலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் அடங்கியுள்ள தெதுவும் ஒரு பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கடன்தருநரின் கம்பெனியின் எந்த ஆதனத்தின்மீது பொறுப்புள்ளவராகவிருக் கின்றாரோ அந்த ஆதனத்தை அக்காலப்பகுதியின்போது கைப்பற் றுவதற்கு காசாகப் பெறுதல், அதுதொடர்பில் பெறுநரொருவரை நியமிப்பதற்கு அல்லது வேறுவகையாக அதனைக் கையாள்வதற்கு அவருக்குள்ள உரிமையைப் பாதித்தலாகாது.

(3) ஓர் இணக்கத்தின்மீது வாக்களிப்பதற்கு உரித்துடையவராக விருந்த கம்பெனியின் கடன்தருநர் ஒருவரின் விண்ணப்பத்தின் மீது —

(அ) கூட்டம்பற்றி அல்லது 249 ஆம் பிரிவின்கீழ் அறிவிக் கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட கருமங்கள் தொடர்பாகப் போதியதாகவிராத அறிவித்தல் அக்கடன்தருநருக்கு கொடுக்கப்பட்டதென்றும் ;

(ஆ) இணக்கம்பற்றிய அங்கீகாரத்தைப் பெறுவதில் வேறே தேனும் முக்கிய ஒழுங்கீனம் இருந்ததென்றும் ; அல் லது

(இ) இணக்கத்துக்கெதிராக வாக்களித்த ஒரு கடன்தருநரின் விடயத்தில், இணக்கமானது அந்தக் கடன்தருநருக்கு அல்லது அக்கடன்தருநர் எந்தக் கடன்தருநர் வகுப்பைச் சேர்ந்தவராகவுள்ளாரோ அந்தக் கடன்தருநர் வகுப் புக்கு நியாயமற்ற முறையில் பங்கம் விளைவிப்பதாக வுள்ளதென்றும்,

நீதிமன்றம் திருப்திப்படுமிடத்து, அத்தகைய கடன்தருநர் இணக் கத்தினால் பிணிக்கப்பட்டவரல்லரென நீதிமன்றம் கட்டளை யொன்றை ஆக்கலாம் அல்லது தகுதியானதென அது எண்ணக் கூடியவாறான வேறு ஏதேனும் கட்டளையை ஆக்கலாம்.

(4) மூன்றாம் உட்பிரிவின்கீழான விண்ணப்பமொன்று, வாக்க ளித்தல் பற்றிய பெறுபேறு, கடன்தருநருக்கு எத்தேதியன்று கொடுக் கப்பட்டதோ அத்தேதிக்குப் பின்னர் பத்து வேலை நாட்களுக்குப் பிந்தாமல் செய்யப்படல் வேண்டும்.

கம்பெனியை ஒழித்துக் கட்டுவதில் இணக்கத்தின் பயன்.

**253.** (1) பிரிவு 250 இன் கீழ் இணக்கமொன்று அங்கீகரிக்கப் படுமிடத்து, நீதிமன்றம் –

(அ) கம்பெனியின் ;

(ஆ) கம்பெனியின் ஆதனம் தொடர்பாக நியமிக்கப்பட்ட பெறுநரொருவரின் ;

(இ) நிருவாகியொருவரின் ; அல்லது

(ஈ) நீதிமன்ற அனுமதியுடன், கம்பெனியின் எவரேனும் கடன்தருநரின் அல்லது பங்குதாரரின் விண் ணப்பத்தின் மேல், கம்பெனியானது ஒழித்துக்கட்டு தலில் இடப்பட்டால் இணக்கமானது எந்த அளவுக்கு (ஏதேனுமிருப்பின்), பயனுள்ளதாகத் தொடர்ந்திருந்து கம்பெனியின் ஒழிப்போனைப் பிணிப்பதாகவிருக் குமோ அந்த அளவு தொடர்பில் நீதிமன்றம் தகுதி யானதென எண்ணுகின்றவாறான அத்தகைய கட்ட ளையை ஆக்கலாம்.

(2) பிரிவு 250 இன் கீழ் இணக்கமொன்று அங்கீகரிக்கப்படுமிடத்தும், கம்பெனியானது அடுத்துப்பின்னர் ஒழித்துக்கட்டுதலில் இடப்படுமிடத்தும், நீதிமன்றம் —

(அ) ஒழிப்போனின் ;

(ஆ) கம்பெனியின் ஆதனம் தொடர்பாக நியமிக்கப்பட்ட பெறுநரொருவரின் ; அல்லது

(இ) நீதிமன்ற அனுமதியுடன், கம்பெனியின் எவரேனும் கடன்தருநரின் அல்லது பங்குதாரரின்,

விண்ணப்பத்தின்மேல், இணக்கமானது எந்த அளவுக்கு (ஏதேனுமிருப்பின்) பயனுள்ளதாகத் தொடர்ந்திருந்து கம்பெனியின் ஒழிப்போனைப் பிணிப்பதாகவிருக்குமோ அந்த அளவுதொடர்பில் நீதிமன்றம் தகுதியானதென எண்ணுகின்றவாறான அத்தகைய கட்டளையை ஆக்கலாம்.

**254.** நீதிமன்றம் வேறுவகையாகக் கட்டளையிட்டாலொழிய, முன்மொழியப்பட்ட இணக்கத்தின்மீது வாக்களிக்கும் நோக்கத்துக்காகக் கடன்தருநரின் கூட்டமொன்றை ஒழுங்குபடுத்தி நடாத்துவதில் உறப்பட்ட செலவு — இணக்கத்துக்கான செலவு.

(அ) கம்பெனியினால் கொடுத்துத்தீர்க்கப்படுதல் வேண்டும் ;

(ஆ) ஒரு பெறுநரினால் அல்லது ஒழிப்போனினால் உறப்படின், பெறுநராண்மையின் அல்லது ஒழித்துக்கட்டலின் செலவாகவிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும் ;

(இ) ஒரு நிருவாகியினால் உறப்படின், நிருவாகத்தின் செலவாகவிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும் ; அல்லது

(ஈ) வேறெவரேனுமாளினால் உறப்படின், அவ்வாளுக்குக் கம்பெனியிடமிருந்து வருமதியாகவுள்ள தனிசொன்றாக இருப்பதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், கம்பெனியானது ஒழித்துக்கட்டுதலில் இடப்பட்டால், ஒன்பதாம் அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட முன்னுரிமை ஒழுங்குவரிசையின்படி செலுத்தப்படற்பாலதாகும்.

## பாகம் X

## ஒழுங்கேற்பாடுகள், ஒன்றிணைப்புகள் மற்றும் இணக்கங்கள் நீதிமன்றத்தினால் அங்கீகரிக்கப்படுதல்

பொருள்கோடல்.

**255.** இச்சட்டத்தின் இப்பாகத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய —

"ஒழுங்கேற்பாடு" என்பது, ஒரு கம்பெனியின் பங்குமூலதனத்தை அத்துடன் கூறப்பட்ட மூலதனத்தை அல்லது கம்பெனியின் பங்கு மூலதனத்தை அல்லது கூறப்பட்ட மூலதனத்தை மீள ஒழுங்குபடுத்துதலையும் உள்ளடக்கும் ;

"கம்பெனி" என்பது, பதிவுசெய்யப்பட்ட கடல் கடந்த கம்பெனியொன்றையும் உள்ளடக்கும் ; அத்துடன்

"கடன்தருநர்" என்பது, ஓர் ஒழித்துக்கட்டுதலில், ஆளொருவருக்குத் தனிசொன்று கம்பெனியிடமிருந்து வருமதியாகவுள்ளதென 357 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க உரிமைகோருவதற்கு உரித்துள்ளனராகவிருக்கும் அந்த ஆளையும் உள்ளடக்கும்.

ஒழுங்கேற்பாடுகள், ஒன்றிணைப்புகள், இணக்கங்கள் என்பன நீதிமன்றத்தினால் அங்கீகரிக்கப்படுதல்.

**256.** (1) இச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளில் அல்லது ஒரு கம்பெனியின் அமைப்பகவிதிகளில் அடங்கியுள்ள ஏற்பாடுகளில் எது எவ்வாறிருப்பினும், நீதிமன்றம் —

(அ) ஒரு கம்பெனியின் ;

(ஆ) பாகம் XIII இன் கீழ் நியமிக்கப்பட்ட ஒரு நிருவாகியின்; அல்லது

(இ) நீதிமன்ற அனுமதியுடன், ஒரு கம்பெனியின் எவரேனும் பங்குதாரரின் அல்லது கடன்தருநரின்

விண்ணப்பத்தின்மேல், ஒருங்கேற்பாடு அல்லது ஒன்றிணைப்பு அல்லது இணக்கம் ஒன்று, கம்பெனியையும், நீதிமன்றம் குறித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய வேறு ஆட்களையும் அல்லது வகுப்பினரான ஆட்களையும் பிணிப்பதால் வேண்டுமெனக் கட்டளையிடலாம். அத்தகைய ஏதேனும் கட்டளை நீதிமன்றம் பொருத்தமானதெனக் கருதுகின்றவாறான அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகள்மீது ஆக்கப்படலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான கட்டளையொன்றை ஆக்குமுன்னர், நீதிமன்றம், கம்பெனியின் அல்லது நிருவாகியின் அல்லது எவரேனும் பங்குதாரரின் அல்லது கடன்தருநரின் அல்லது அக்கறை கொண்டுள்ளவரென நீதிமன்றத்துக்குத் தோன்றுகின்ற வேறு ஆளின் விண்ணபத்தின்மேல் அல்லது அதன் சொந்தப் பிரேரணையின் மீது, பின்வரும் கட்டளைகளுள் ஏதேனுமொன்றை அல்லது அவற்றுக்கு அதிகமானவற்றை ஆக்கலாம் :—

(அ) நீதிமன்றம் தகுதியானதென எண்ணக்கூடியவாறானதும் விண்ணப்பம் தொடர்பானதுமான அத்தகைய தகவலுடன், விண்ணப்பம் பற்றிய அறிவித்தல் நீதிமன்றம் குறித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் அத்தகைய முறையிலும் அத்தகைய ஆட்களுக்கும் அல்லது வகுப்பினரான ஆட்களுக்கும் கொடுக்கப்படவேண்டுமென்ற கட்டளை ;

(ஆ) முன்மொழியப்பட்ட ஒழுங்கேற்பாட்டை அல்லது ஒன்றிணைப்பை அல்லது இணக்கத்தை நீதிமன்றம் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் சீர்தூக்கிப் பார்ப்பதற்கும் தகுதியெனத் தீர்மானிக்கப்படின், அங்கீகரிப்பதற்கும் ஒரு கம்பெனியின் பங்குதாரர்களின் அல்லது ஏதேனும் வகுப்பினரான பங்குதாரர்களின் அல்லது கடன்தருநரின் அல்லது ஏதேனும் வகுப்பினரான கடன்தருநரின் கூட்டமொன்றை அல்லது கூட்டங்களை நடாத்தும்படி பணிக்கின்ற கட்டளை ; நீதிமன்றம் அந்நோக்கத்துக்காக, கம்பெனியொன்றின் ஒரு வகுப்பினரான பங்குதாரர்களாக அல்லது கடன்தருநராக அமைகின்ற பங்குதாரர்களை அல்லது கடன்தருநரைத் தீர்மானிக்கலாம்;

(இ) முன்மொழியப்பட்ட ஒழுங்கேற்பாடு அல்லது ஒன்றிணைப்பு அல்லது இணக்கம் என்பனமீதான அறிக்கையொன்று நீதிமன்றத்தினால் குறித்துரைக்கப்பட்ட ஆளினால் நீதிமன்றத்துக்காகத் தயாரிக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்துகின்ற கட்டளை நீதிமன்றம் தகுதியானதென எண்ணின், அது, கம்பெனியொன்றன் பங்குதாரர்களுக்கு அல்லது ஏதேனும் வகுப்பினரான பங்குதாரர்களுக்கு அல்லது

கடன்தருநருக்கு அல்லது ஏதேனும் வகுப்பினரான கடன்தருநருக்கு அல்லது அக்கறை கொண்டுள்ள வரென நீதிமன்றத்துக்குத் தோன்றுகின்ற வேறெவ ரேனும் ஆளுக்கு வழங்கப்படல் வேண்டும் ;

(ஈ) அத்தகைய ஏதேனும் அறிக்கையைத் தயாரிப்பதில் உறப்பட்ட செலவுகளைக் கொடுப்பனவு செய்தல் பற்றிய கட்டளை ;

(உ) ஒழுங்கேற்பாட்டை அல்லது ஒன்றிணைப்பை அல்லது இணக்கத்தை அங்கீகரிப்பதற்கான விண்ணப்பத்தின் மேல் தோன்றுவதற்கும் கேட்கப்படுவதற்கும் உரித் துள்ள ஆட்களைக் குறித்துரைக்கின்ற கட்டளை.

(3) இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளை, அக்கட்டளையிற் குறித் துரைக்கப்பட்ட தேதியன்றும் அத்தேதியிலிருந்தும் பயனுடையதா தல் வேண்டும்.

(4) இப்பிரிவின்கீழான கட்டளை நீதிமன்றத்தினால் ஆக்கப்பட்ட திலிருந்து பத்து வேலைநாட்களினுள், அதன் பிரதியொன்று பதிவாளரிடம் ஒப்படைக்கப்படுதலைக் கம்பெனி உறுதிப்படுத்து தல் வேண்டும்.

(5) கம்பெனியொன்று (4) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக் கிணங்கியொழுகத் தவறுகின்றவிடத்து,

(அ) கம்பெனியானது தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஓரிலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்துக்கு ஆளாதலும் வேண்டும் ; அத்துடன்

(ஆ) தவறுகைபுரிகின்ற கம்பெனியின் அலுவலர் ஒவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பண மொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

நீதிமன்றம் மேலதிகக் கட்டளைகளை ஆக்கலாம்.

**257.** (1) பிரிவு 256 இன் கீழ் அளிக்கப்பட்ட தத்துவங்களை வரையறுக்காமல், நீதிமன்றம் அப்பிரிவின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்கேற்பாட்டுக்கு அல்லது ஒன்றிணைப்புக்கு அல்லது இணக்கத்துக்குப் பயன்கொடுக்கும் தோற்றத்துக்காக, ஒன்றில் அந்த ஒழுங்கேற்பாட்டை அல்லது ஒன்றிணைப்பை அல்லது இணக்கத்தை அங்கீகரிக்கின்ற கட்டளைமூலம் அல்லது ஏதேனும் அடுத்துப்பின்னரான கட்டளைமூலம், பின்வருவன தொடர்பான நியதிநிபந்தனைகளுக்கு ஏற்பாடு செய்து அவற்றை விதித்துரைக்கலாம் —

(அ) அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை, இருப்புச் சொத்துக்களை, உரிமைகளை, தத்துவங்களை, அக்கறைகளை, பொறுப்புக்களை ஒப்பந்தங்களை மற்றும் ஈடுபடுதல்களைக் கைப்பற்றுதல் அல்லது உரித்தாக்குதல் ;

(ஆ) ஏதேனும் வகையினவான பங்குகள், பிணைப் பொறுப்புக்கள் அல்லது பூட்கைகள் என்பவற்றை வழங்குதல் ;

(இ) சட்ட நடவடிக்கைகளைத் தொடர்ந்து நடாத்துதல் ;

(ஈ) ஏதேனும் கம்பெனியை ஒழித்துக்கட்டுதல் அல்லது ஒழித்துக்கட்டுதல் இன்றி ஏதேனும் கம்பெனியின் பெயரையும் விவரங்களையும் இடாப்பிலிருந்து அகற்றுதல் ;

(உ) 256 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றிற்கிணங்க அழைக்கப்பட்ட ஏதேனும் கூட்டத்தில் ஒழுங்கேற்பாட்டுக்கு அல்லது ஒன்றிணைப்புக்கு அல்லது இணக்கத்துக்கு எதிராக, வாக்களித்த ஆட்களுக்காக அல்லது அந்த ஒழுங்கேற்பாட்டை அல்லது ஒன்றிணைப்பை அல்லது இணக்கத்தை அங்கீகரிப்பதற்கான விண்ணப்பத்தை எதிர்த்து நீதிமன்றத்தின்முன்னர் தோன்றிய ஆட்களுக்காகச் செய்யப்படவேண்டிய ஏற்பாடு ;

(ஊ) ஒழுங்கேற்பாட்டுக்கு அல்லது ஒன்றிணைப்புக்கு அல்லது இணக்கத்துக்குப் பயன்கொடுப்பதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான அத்தகைய வேறு கருமங்கள்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் நீதிமன்றத்தினால் ஆக்கப்பட்ட கட்டளையொன்று அதன் தாற்பரியத்துக்கிணங்கப் பயனுடைய தாதல் வேண்டும்.

(3) இப்பிரிவின்கீழான கட்டளை நீதிமன்றத்தினால் ஆக்கப் பட்டதிலிருந்து பத்து வேலை நாட்களினுள், கட்டளையின் பிரதிப் பதிவாளருக்கு ஒப்படைக்கப்படுதலைக் கம்பெனியானது உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(4) கம்பெனியானது (3) ஆம் உட்பிரிவின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுமிடத்து –

(அ) கம்பெனியானது தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஓரிலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பண மொன்றுக்கு ஆளாதலும் வேண்டும் ; அத்துடன்

(ஆ) தவறுகைபுரிகின்ற கம்பெனியின் அலுவலர் ஒவ் வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பண மொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

*VIII ஆம் பாகத்தின் ஏற்புடைமை.*

**258.** பிரிவு 256 இன் கீழான ஓர் ஒழுங்கேற்பாடு அல்லது ஒன்றிணைப்பு அல்லது இணக்கம் VIII ஆம் பாகத்தின்கீழ் அல்லது இப்பாகத்தின்கீழ் அதனைப் பயனுறுத்தக்கூடியதாக விருப்பின் அல்லது இச்சட்டத்தின் வேறெவையேனும் ஏற்பாடு களின்கீழ் அதனைப் பயனுறுத்தக்கூடியதாகவிருப்பின், நீதிமன் றம், அவ்வாறு செய்வது நியாயமானமுறையாகச் செயல்முறைக்கு கந்ததல்லதென அது திருப்திப்பட்டாலொழிய, அதனை அங்கீ கரித்தலாகாது.

*இப்பாகத்தின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட இணக்கத்துக்கு 253 ஆம் பிரிவு ஏற்புடைய தாதல்.*

**259.** பிரிவு 253 இன் ஏற்பாடுகள், 256 ஆம் பிரிவின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் இணக்கம் தொடர்பாக அவசியமாகக் கூடியவாறான அத்தகைய திரிபுகளுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

## பாகம் XI

### கரைகடந்த கம்பெனிகள் தொடர்பான ஏற்பாடுகள்

இப்பாகத்தின் பொருள் கோடல்.

**260.** இச்சட்டத்தின் இப்பாகத்தில் "கம்பெனி" என்பது, ஏதேனும் வெளிநாட்டுச் சட்டங்களின்கீழ் கூட்டிணைக்கப்பட்ட ஒரு கம்பெனியையும் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவையும் உள்ளடக்கும்.

இலங்கைக்கு வெளியே தொழிலுக்காகக் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனி.

**261.** (1) கரைகடந்த கம்பெனியொன்றாக இலங்கையில் பதிவு செய்யப்படுவதற்கெனவும், அவ்வாறு குறிப்பீடு செய்யப்படுவதற்கெனவும், வெளிநாட்டில் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியொன்றன் விடயத்தில், இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அது கூட்டிணைக்கப்பட்டது என்றாற்போன்று, இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டதாகக் கருதப்படுவதற்கெனவும், ஏதேனும் கம்பெனி இச்சட்டத்தின் இப்பாகத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க பதிவாளருக்கு ஒரு விண்ணப்பஞ்செய்யலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் பதிவுசெய்யப்படுவதற்கென விண்ணப்பமொன்றுடன் பின்வரும் ஆவணங்கள் இணைக்கப்பட்ட தாகவிருத்தல் வேண்டும் :—

(அ) கம்பெனியின் பட்டயம், நியதிச்சட்டம் அல்லது அமைப்புப்புறவிதிகள், மற்றும் அமைப்பகவிதிகள் அல்லது கம்பெனியின் யாப்பாக அமையும் அல்லது அதற்கு வரைவிலக்கணம் கூறும் வேறு ஆவணம் ஆகியவற்றின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்று, அத்துடன் அத்தகைய ஆதனம் அரசகருமமொழியொன்றில் அல்லது ஆங்கிலத்தில் இருந்திருப்பின், பதிவாளரினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய மொழியில் அதன் மொழிபெயர்ப்பு ;

(ஆ) கம்பெனியின் பணிப்பாளர்களின் அல்லது அதன் அலுவல்களை முகாமைசெய்கின்றவர்களின் நிரலொன்று, அவர்களின் முழுப்பெயர்களையும், முகவரிகளையும், தான் புரிதொழில்களையும், கம்பெனியில் அவர்கள் வகிக்கும் பதவிகளையும் அது கொண்டிருத்தல் வேண்டும் ;

(இ) கம்பெனியைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளவரும் அல்லது அதிகார மளிக்கப்பட்டுள்ளவர்களும் இலங்கையில் வதிபவராய் இலங்கைப் பிரசைகளாகவுள்ளவரும் அல்லது உள்ள வர்களுமான ஓராளின் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஆட்களின் பெயர்களும் முகவரிகளும் ;

(ஈ) பின்வருவனவற்றின் முழு முகவரியையும் கொண்ட கூற்றொன்று ;

(i) கூட்டிணைக்கப்பட்ட நாட்டில் கம்பெனியின் பதிவு செய்யப்பட்ட அல்லது பிரதான அலுவ லகம் ; அத்துடன்

(ii) இலங்கையில் கம்பெனியின் அலுவலகம் ;

(உ) கம்பெனியின் கூட்டிணைப்புப்பற்றி (அண்மைய வொரு தேதியில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட) அத்தாட் சிப்படுத்திய பிரதியொன்று.

(3) கம்பெனியானது, விதித்துரைக்கப்பட்ட காலத்தினுள்ளும், விதித்துரைக்கப்பட்ட படிவத்திலும், மேற்கூறப்பட்ட விபரங்களுள் ஏதேனுமொன்று தொடர்பிலான எவையேனும் திருத்தங்களை அல்லது மாற்றங்களைப் பதிவாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

*கரைகடந்த கம்பெனிக்குப் பதிவுச் சான்றிதழ் அளித்தல்.*

**262.** (1) மூன்றாம், நான்காம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக் கமைய, பதிவாளர், தேசிய நலனைக் கவனத்துட்கொண்டு அல்லது தேசியப் பொருளாதாரத்தின் நலன்கருதி, கரைகடந்த கம்பெனியொன்று —

(அ) விதித்துரைக்கப்பட்ட கட்டணத்தைக் கொடுப்பனவு செய்வதன்மேல் ; அத்துடன்

(ஆ) இலங்கையிலுள்ள அதன் அலுவலகத்தின் நோக்கங்க ளுக்காகக் கரைகடந்த கம்பெனியின் செலவுகளைக் கொடுத்துத்தீர்ப்பதற்கான விதித்துரைக்கப்பட்ட பணத் தொகை, அத்தகைய கரைகடந்த கம்பெனியின் பெயரில் வங்கியொன்றிலான கணக்கொன்றின் வரவுக்கு

வைப்பிலிடப்பட்டுள்ளதெனக் கூறுவதும் அவ்வங்கி யிடமிருந்து பெறப்பட்டதுமான சான்றிதழொன்றைப் பதிவாளருக்குக் காண்பிக்குமிடத்து,

இலங்கைக்கு வெளியே அதன் தொழிலைக் கொண்டுநடாத்து வதற்குக் கரைகடந்த கம்பெனிக்குப் பதிவுச் சான்றிதழொன்றை வழங்கலாம்.

(2) இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் கரைகடந்த கம்பெனியொன் றுக்கு வழங்கப்பட்ட பதிவுச்சான்றிதழொன்று, இச்சட்டத்தின் வேறேதேனும் ஏற்பாட்டுக்குக் கம்பெனியானது இணங்கியொழுகு வதிலிருந்து அத்தகைய கம்பெனிக்கு விலக்களித்தல் வேண்டும்.

(3) பதிவுச் சான்றிதழ் எதுவும் –

(அ) அத்தகைய கம்பெனியின் ஒடுக்குதல் அல்லது ஒழித்துக்கட்டுதல் தொடங்கியுள்ளவிடத்து ;

(ஆ) அத்தகைய கம்பெனியினது ஆதனத்தின் பெறுநர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளவிடத்து ;

(இ) அத்தகைய கம்பெனி தொடர்பாகக் கடன்தருநரின் உரிமைகள் எந்தத் திட்டத்தின் கீழ் அல்லது கட்டளை யின்கீழ் இடைநிறுத்தப்படுகின்றனவோ அல்லது மட்டுப்படுத்தப்படுகின்றனவோ அந்தத் திட்டம் அல் லது கட்டளை எதுவும் வலுவிலுள்ளவிடத்து,

இப்பிரிவின்கீழ் கம்பெனியொன்றுக்கு அளிக்கப்படுதலாகாது.

(4) இப்பிரிவின்கீழ் கரைகடந்த கம்பெனியொன்றுக்குப் பதிவுச் சான்றிதழொன்றை வழங்குமுன்னர் பதிவாளர் –

(அ) வெளிநாட்டில் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியொன் றின் விடயத்தில் அத்தகைய கம்பெனியானது கரை கடந்த கம்பெனியொன்றின் தொழிலில் ஈடுபடுவதற்கு கூட்டிணைக்கப்பட்ட நாட்டில் சட்டமுறையான தடை யெதுவும் இல்லையென்றும் ;

(ஆ) அத்தகைய சான்றிதழின் வழங்குகை, கம்பெனியினால் அல்லது கம்பெனிக்கெதிராகத் தொடுக்கப்பட்ட அல்லது தொடுக்கப்படவுள்ள எவையேனும் சட்ட அல்லது வேறு நடவடிக்கைகளைக் குறைபாடுடையதாக்குவதில்லையென்றும்

தம்மைத் திருப்திப்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதுடன், தேசிய நலன்கருதி அல்லது தேசிய பொருளாதார நலன்கருதி அவர் அவசியமெனக் கருதக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளைச் சான்றிதழில் சேர்த்துக் கொள்ளுதலும் வேண்டும்.

(5) பதிவாளர், எந்தக்காரணத்துக்காக, இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் கரைகடந்த கம்பெனியொன்றன் பதிவை இல்லாதாக்கலாம் ; அத்தகைய இல்லாதாக்குகையின்மீது, கரைகடந்த கம்பெனியானது, கரைகடந்த கம்பெனிகள் தொடர்பாக இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் அளிக்கப்பட்ட சிறப்புரிமைகளையும் நன்மைகளையும் துய்க்காதொழிதல் வேண்டும்.

கரைகடந்த கம்பெனி தொழிலைத் தொடர்ந்து நடாத்துதல்.

**263.** இச்சட்டத்தின்கீழ் கரைகடந்த கம்பெனியொன்றாக அதன் தொழிலைத் தொடர்ந்துநடாத்துவதற்கு முன்னங்கொண்டுள்ள கரைகடந்த கம்பெனியொன்று, ஒவ்வொரு பஞ்சாங்க ஆண்டிலும் —

(அ) அவ்வாண்டின் தொடக்கத்திலும், அவ்வாண்டின் சனவரி முப்பத்தோராம் நாளுக்குப் பிந்தாமலும் விதித்துரைக்கப்பட்ட கட்டணத்தை விதித்துரைக்கப்பட்ட முறையில் கொடுப்பனவு செய்தமைக்கான எண்பிப்பைப் பதிவாளருக்குக்கு காண்பித்தல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) அவ்வாண்டின் சனவரி முப்பத்தோராம் நாளுக்கு அல்லது பதிவாளர் அங்கீகரிக்கக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதிக்குப் பிந்தாமல் அவ்வாண்டுக்காகக் கரைகடந்த கம்பெனியின் செலவுகளைக் கொடுத்துத்தீர்ப்பது தொடர்பாக 262 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறான வங்கிச் சான்றிதழொன்றைப் பதிவாளருக்குக் காண்பித்தல் வேண்டும்.

**264.** (1) கரைகடந்த கம்பெனியொன்று இலங்கைக்கு வெளியே ஏதேனும் தொழிலைக் கொண்டுநடாத்துவதற்குத் தத்துவமுடைய தாதல் வேண்டும்; ஆனால் இலங்கையினுள் ஏதேனும் தொழிலைக் கொண்டுநடாத்துவதற்கு உரித்துடையவராதலாகாது.

*இலங்கையில் தொழில் கொண்டு நடாத்துதலைத் தடைசெய்தல்.*

(2) ஒராம் உட்பிரிவிலுள்ளதெதுவும், கரைகடந்த கம்பெனியொன்றுக்கு ஏற்புடையதாகக்கூடிய ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் கிடைக்கக்கூடிய எவையேனும் நன்மைகளை அலலது அனுகூலங்களைக் கரைகடந்த கம்பெனியொன்று இலங்கையில் பெறுவதனை விலக்குதலாகாது.

**265.** கரைகடந்த கம்பெனியொன்று, கரைகடந்த கம்பெனியாகத் தொழில் கொண்டு நடாத்தாதொழிகின்ற அதன் முன்னம் பற்றி விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் பதிவாளருக்கு அறிவித்தல் கொடுப்பதன்மூலம் அவ்வாறு தொழில் கொண்டுநடாத்தா தொழியலாம்.

*கரைகடந்த கம்பெனி என்ற தொழிலைப் புரியாதொழிதல்.*

## பாகம் XII

## ஒடுக்குதல்

### (I) முதனிலையானவை

### *ஒடுக்கும்முறைகள்*

**266.** இச்சட்டத்தின் இப்பாகத்தில் "உதவுதொகை செலுத்துநர்" என்ற சொல்லமைப்பு, ஒடுக்கப்படும் பட்சத்தில் கம்பெனியின் ஒவ்வொரு பங்குதாரர் என்றும் ; அதன்இருப்புச் சொத்துக்களுக்கு உதவுதொகை செலுத்துவதற்கு ஆளாகவுள்ள வேறு ஆள் ஒவ்வொருவரும் எனப்பொருள்படும் என்பதுடன் உதவுதொகை செலுத்துநர்களாகக் கருதப்படவேண்டிய ஆட்களைத் தீர்மானிப்பதற்கான எல்லா நடவடிக்கைகளினதும், உதவுதொகை செலுத்துநர்களாகக் கருதப்பட வேண்டிய ஆட்களை இறுதியாகத் தீர்மானிப்பதற்கு முன்னரான எல்லா நடவடிக்கைகளினதும் நோக்கங்களுக்காகவும் உதவுதொகை செலுத்துநரெனச் சார்த்தப்பட்ட எவரேனும் ஆளையும் உள்ளடக்கும்.

*உதவுதொகை செலுத்துநர் என்பதன் வரைவிலக்கணம்.*

**267.** (1) ஒரு கம்பெனியின் ஒடுக்குதலானது ஒன்றில் —

*ஒடுக்கும் முறை.*

(அ) நீதிமன்றத்தினால் ;

(ஆ) தன்னிச்சையாக ; அல்லது

(இ) நீதிமன்றத்தின் மேற்பார்வைக்கமைய ;

இருக்கலாம்.

(2) ஒடுக்குதல் தொடர்பில் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் முரணானது எனத் தோன்றினாலொழிய (1) ஆம் உட்பிரிவில் தரப்பட்டுள்ள ஏதேனும் முறையில் கம்பெனியொன்று ஒடுக்கப்படுதலுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

**உதவுதொகை செலுத்துநர்**

பங்குதாரர்களினதும் கடந்தகால பங்குதாரர்களினதும் பொறுப்பை வலுவுறுத்துவதற்கு ஒழிப்போனுக்குள்ள தத்துவம்.

**268.** (1) ஒழிப்போன் –

(அ) பங்குதாரரொருவர் அழைப்புகளுக்கு ஆளாகவிருப்பின், அப்பங்குதாரரினால் வைத்திருக்கப்பட்ட பங்குகளின் மீது அழைப்புகள் விடுக்கலாம் ;

(ஆ) பங்குதாரரொருவர் அல்லது கடந்த கால பங்குதாரரொருவர் வேறுவகையில் கம்பெனிக்கு ஆளாகவிருப்பின், அப்பொறுப்பை வலுவுறுத்தலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழான அழைப்பொன்று, எழுத்தில் செய்யப்படல் வேண்டும்.

பணஞ் செலுத்தப்படாத அழைப்புகளுக்காக கடந்த கால பங்குதாரர்களுக்குள்ள பொறுப்பு.

**269.** (1) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, ஒழித்துக் கட்டுதலிலுள்ள கம்பெனியொன்றன் பங்குதாரர், ஒரு பங்கு தொடர்பில் வருமதியான ஏதேனும் தொகையைச் செலுத்துவதற்குத் தவறினால், அத்தொகையானது, பின்வரும் காலப்பகுதிகளுள் எந்நேரத்திலும் பங்கை வைத்திருப்பவராகப் பதிவுசெய்யப்பட்ட வேறெவரேனுமாளினாற் செலுத்தப்படற்பாலதாதல் வேண்டுமென்பதுடன், அவரிடமிருந்து ஒழிப்போனினால் அறவிடப்படலாம் –

(அ) ஒழித்துக்கட்டுதல் தொடங்குவதற்கு முன்னர் ஓராண்டுக் காலப்பகுதியினுள் ; அல்லது

(ஆ) நீதிமன்றத்தினால் ஒழித்துக்கட்டுதலில் இடப்பட்ட கம்பெனியொன்றின் விடயத்தில், நீதிமன்றத்துக்கு விண்ணப்பம் செய்யப்பட்டதற்கு ஓராண்டுக்கு முன்னரான காலப்பகுதியினுள் அத்துடன் அவ்விண்ணப்பம் செய்யப்பட்ட தேதியன்று தொடங்கி நீதிமன்றக் கட்டளை ஆக்கப்பட்ட தேதியன்று முடிகின்ற காலப்பகுதியினுள்.

(2) கடந்தகால பங்குதாரரொருவர், (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட காலப்பகுதியின்போது அவர் பங்கை வைத்திருப்பவராகப் பதிவுசெய்யப்பட்ட எல்லா நேரங்களிலும், கம்பெனியானது அதன் தனிசுகளை, அவை வருமதியாக வருகையில் செலுத்த முடியுமானதாகவிருந்திருப்பின், (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆளாதலாகாது.

(3) ஒரு பங்குக்கு இணைந்துள்ள பொறுப்பு கடந்தகால பங்குதாரர் பங்கை வைத்திருப்பவராகப் பதிவுசெய்யப்பட்ட நேரத்துக்குப் பின்னர் அதிகரித்துள்ளவிடத்து, பங்கானது அவரினால் வைத்திருக்கப்பட்ட நேரத்தில் பங்குக்கு இணைந்திருந்த ஏதேனும் பொறுப்பின் தொகைக்காக மட்டுமே அவர் ஆளாதல் வேண்டும்.

### (II) நீதிமன்றத்தின்மூலம் ஒடுக்கப்படுதல்

### *கம்பெனியானது நீதிமன்றத்தின்மூலம் ஒடுக்கப்படக்கூடிய சந்தர்ப்பங்கள்*

*கம்பெனியானது நீதிமன்றத்தின் மூலம் ஒடுக்கப்படக்கூடிய சந்தர்ப்பங்கள்.*

**270.** (அ) கம்பெனியொன்று விசேட தீர்மானத்தினால் நீதிமன்றத்தின்மூலம் ஒடுக்கப்படவேண்டுமென அக்கம்பெனி தீர்மானித்திருப்பின் ;

(ஆ) கம்பெனி கூட்டிணைக்கப்பட்டதிலிருந்து ஓராண்டினுள் அதன் தொழிலைத் தொடங்காதிருப்பின், அல்லது ஓராண்டுக்கு அதன் தொழிலை இடைநிறுத்தியிருப்பின் ;

(இ) உறுப்பினர்களின் எண்ணிக்கை, இச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் தேவைப்பட்ட ஆகக்குறைந்த எண்ணிக்கையிலும் குறைவானதாக இருப்பின் ;

(ஈ) கம்பெனிக்குப் பணிப்பாளர்கள் எவரும் இல்லையாயின் ;

(உ) கம்பெனியானது அதன் தனிசுகளைச் செலுத்துவதற்கு இயலாததாகவிருப்பின் ; அல்லது

(ஊ) கம்பெனியானது ஒடுக்கப்படுதல் நீதியானதும் ஒப்புரவானதும் என நீதிமன்றம் அபிப்பிராயப்படின்,

நீதிமன்றத்தினால் அக்கம்பெனி ஒடுக்கப்படலாம்.

*தனிசுகளைச் செலுத்த முடியாமை பற்றியதன் வரைவிலக்கணம்.*

**271.** கம்பெனியொன்று பின்வரும் சந்தர்ப்பங்களில் அதன் தனிசுகளைச் செலுத்தமுடியாததெனக் கருதப்படுதல் வேண்டும் :—

(அ) அப்போது வருமதியாகவுள்ளதும் ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சுகின்றதுமான ஒரு பணத்தொகையில் கம்பெனியானது எந்தக் கடன்தருநருக்குக் கடனாளியாகவுள்ளதோ அந்தக் கடன்தருநர் சாட்டுதல்மூலம் அல்லது வேறுவகையாக அவ்வாறு வருமதியாகவுள்ள பணத்தொகையைச் செலுத்தும்படி கம்பெனியைத் தேவைப்படுத்தி பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தில் அவரது கைப்பட்ட ஒரு கோருதலை விட்டுவிடுவதன்மூலம் கம்பெனிக்குச் சேர்ப்பித்து, கம்பெனியானது அவ்வாறு விட்டுவிடப்பட்ட தேதியிலிருந்து மூன்று கிழமைகளுக்கு, அப்பணத்தொகையைச் செலுத்துவதற்கு அல்லது கடன்தருநரின் நியாயமான திருப்திக்கு அதற்காகப் பிணைப்பொறுப்பளிப்பதற்கு அல்லது அதனை இணக்குவதற்கு அலட்சியமாகவிருந்துள்ளவிடத்து ; அல்லது

(ஆ) கம்பெனியின் கடன்தருநர் ஒருவருக்குச் சாதகமாக ஏதேனும் நீதிமன்றத்தின் தீர்ப்பு, தீர்வை அல்லது கட்டளை என்பவற்றின்மீது வழங்கப்பட்ட நிறைவேற்றுகை அல்லது வேறு மன்றாணை முதலியன, முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ திருப்திப்படுத்தப்படாமல் திருப்பியனுப்பப்படுமிடத்து ; அல்லது

(இ) கம்பெனியானது அதன் தனிசுகளைச் செலுத்துவதற்கு இயலாமலுள்ளதென நீதிமன்றத்தின் திருப்திக்கு எண்பிக்கப்படுமிடத்தும், அத்துடன் கம்பெனியொன்று அதன் தனிசுகளைச் செலுத்துவதற்கு இயலாமலுள்ளதாவென்பதைத் தீர்மானிக்கையில் நீதிமன்றம் கம்பெனியின் எதிர்பாரா மற்றும் உத்தேசப் பொறுப்புக்களைக் கணக்குக்கு எடுத்தல் வேண்டும்.

**ஒடுக்குவதற்கான மனுவும் அதன் பயன்களும்**

ஒடுக்குவதற்கான விண்ணப்பம்.

**272.** (1) ஒரு கம்பெனியை ஒடுக்குவதற்காக நீதிமன்றத்துக்கான விண்ணப்பமொன்று, ஒன்றில் கம்பெனியினால் அல்லது எவரேனும் கடன்தருநரினால் அல்லது கடன்தருநர்களினால் (எவரேனும் எதிர்பாரா அல்லது உத்தேசக் கடன்தருநர் அல்லது கடன்தருநர்கள் உட்பட), உதவுதொகை செலுத்துநரினால் அல்லது உதவுதொகை செலுத்துநர்களினால், அல்லது அத்திறத்தவர்கள் எல்லோரினாலும் அல்லது எவரினாலும், கூட்டாக அல்லது தனியாக, இப்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, முன்வைக்கப்பட்ட மனுமூலமானதாதல் வேண்டும் :

ஆயின்,-

(அ) உதவுதொகை செலுத்துநரொருவர்,

(i) உறுப்பினர்களின் எண்ணிக்கை, இச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் தேவைப்பட்ட ஆகக்குறைந்த எண்ணிக்கையிலும் குறைவாகவிருந்தாலொழியவும் ; அல்லது

(ii) எப்பங்குகள் தொடர்பில் அவர் உதவுதொகை செலுத்துநராகவிருக்கின்றாரோ அந்தப் பங்குகள் அல்லது அவற்றுட்சில, ஒடுக்குதல் தொடங்கிய தேதிக்கு நேர்முற்போந்த பதினெட்டு மாதங்களின்போது ஆறு மாதங்களுக்காவது, ஒன்றில் அவருக்குத் தொடக்கத்தில்

குறித்தொதுக்கப்பட்டிருந்தாலொழியவும் அல்லது அவரினால் வைத்திருக்கப்பட்டிருந்தாலொழியவும், அத்துடன் அவரின் பெயரில் பதிவுசெய்யப்பட்டிருந்தாலொழியவும், அல்லது முன்னையதான பங்கு வைத்திருப்பவரொருவரின் இறப்பின்மூலம் அவரை வந்தடைந்திருந்தாலொழியவும் ;

ஒடுக்குதல் மனுவை முன்வைப்பதற்கு உரித்துடையவராதல் ஆகாது ;

(ஆ) நீதிமன்றம் நியாயமானதென எண்ணுகின்றவாறாகச் செலவுகளுக்கான அத்தகைய பிணைப்பொறுப்புக் கொடுக்கப்படும் வரையும், அத்துடன் நீதிமன்றத்தின் திருப்திக்கு ஒடுக்குவதற்கான முதற்றோற்ற வழக்கு நிலைநாட்டப்படும் வரையும், எதிர்பாரா அல்லது உத்தேசக் கடன்தருநரினால் முன்வைக்கப்பட்ட ஒடுக்குதல் மனுவை நீதிமன்றமானது கேட்கலாகாது ; அத்துடன்

(இ) நூற்றெழுபத்தேழாம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட கம்பெனியொன்றின் விடயத்தில் பதிவாளர் ஒடுக்குதல் மனுவொன்றை முன்வைக்கலாம்.

(2) கம்பெனியொன்று தன்னிச்சையாக அல்லது மேற்பார்வைக்காக ஒடுக்கப்பட்டுக்கொண்டிருக்குமிடத்து, ஒடுக்குவதற்கான மனுவொன்று நீதிமன்றத்தைச் சேர்ந்த அலுவலகமுறையான பெறுநரினாலும் இப்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனும் ஆளினாலும் முன்வைக்கப்படலாம், ஆனால் நீதிமன்றமானது, தன்னிச்சையான ஒடுக்குதல் அல்லது மேற்பார்வைக்கமைந்துள்ள ஒடுக்குதல், கடன்தருநரின் அல்லது உதவுதொகை செலுத்துநரின் அக்கறைகளுக்கு உரிய கவனஞ்செலுத்தித் தொடர்ந்து செய்யமுடியாதென அது திருப்திப்பட்டாலொழிய, மனுவின்மீதான ஒடுக்குதற் கட்டளையை ஆக்குதலாகாது.

மனுவைக் கேட்பதன்மீது நீதிமன்றத்துக்குள்ள தத்துவங்கள்.

**273.** (1) ஒடுக்குதல் மனுவொன்றைக் கேட்பதன்மீது, நீதிமன்றம் அதனைத் தள்ளுபடிசெய்யலாம், அல்லது நிபந்தனையுடனோ நிபந்தனையின்றியோ கேட்பை ஒத்திவைக்கலாம், அல்லது தகுதியானதென அது எண்ணக்கூடியவாறான ஏதேனும் இடைக்காலக் கட்டளையை, வேறேதேனும் கட்டளையை ஆக்கலாம். ஆனால் நீதிமன்றமானது, கம்பெனியின் இருப்புச் சொத்துக்கள்

அச்சொத்துக்களுக்குச் சமமான அல்லது விஞ்சுதலாகவுள்ள ஒரு தொகைக்கு ஈடுவைக்கப்பட்டுள்ளன, அல்லது கம்பெனிக்கு இருப்புச்சொத்துக்கள் எவையுமில்லை என்ற ஏதுவின்மீது ஒடுக்குதற் கட்டளையொன்றை ஆக்குவதற்கு மறுத்தலாகாது.

(2) உதவுதொகை செலுத்துநர் என்ற முறையில் கம்பெனியின் பங்குதாரர்களினால் கம்பெனியானது ஒடுக்கப்படுவது நீதியானதும் ஒப்புரவானதும் என்ற ஏதுவின்மீது ஒடுக்குதற்கான மனுவொன்று முன்வைக்கப்படுமிடத்து, நீதிமன்றம்,-

(அ) ஒன்றில் கம்பெனியை ஒடுக்குதல்மூலம் அல்லது வேறெந்த வழிகளிலும் மனுதாரர்கள் நிவாரணத்துக்கு உரித்துடையவர்களெனவும் ; அத்துடன்

(ஆ) வேறேதேனும் பரிகாரம் இல்லாதவிடத்து கம்பெனி ஒடுக்கப்படுவது நீதியானதாகவும் ஒப்புரவானதாகவும் இருக்குமெனவும்,

அது அபிப்பிராயப்படுமிடத்து, மனுதாரர்களுக்கு வேறேதேனும் பரிகாரம் கிடைக்கக் கூடியதாகவுள்ளதெனவும், அந்த வேறு பரிகாரத்தைப் பின்பற்றுவதற்குப் பதிலாகக் கம்பெனியை ஒடுக்குவதற்கு நாடுவதில் அவர்கள் நியாயமற்ற முறையில் செயலாற்றுகின்றனரெனவும் அது அபிப்பிராயம் கொண்டாலொழிய, ஒடுக்குதற் கட்டளையொன்றை ஆக்குதல் வேண்டும்.

*கம்பெனிக்கெதிரான வழக்கு நடவடிக்கைகளை நிறுத்துவதற்கான அல்லது மட்டுப்படுத்துவதற்கான தத்துவம்.*

**274.** ஒடுக்குதல் மனு முன்வைக்கப்பட்ட பின்னரும், ஒடுக்குதற் கட்டளையொன்று ஆக்கப்படுமுன்னரும் கம்பெனியானது அல்லது எவரேனும் கடன்தருநர் அல்லது உதவுதொகை செலுத்துநர் —

(அ) கம்பெனிக்கெதிரான ஏதேனும் வழக்கு அல்லது வழக்கு நடவடிக்கை இலங்கையிலுள்ள ஏதேனும் நீதிமன்றத்தில் முடிவுறாதிருக்குமிடத்து அத்தகைய வழக்கு அல்லது வழக்கு நடவடிக்கை எந்த நீதிமன்றத்தில் முடிவுறாதுள்ளதோ அந்த நீதிமன்றத்துக்கு அதன் கண்ணுள்ள வழக்கு நடவடிக்கைகள் நிறுத்தப்படுவதற்கான விண்ணப்பமொன்றைச் செய்யலாம்; அத்துடன்

(ஆ) கம்பெனிக்கெதிராக வேறேதேனும் வழக்கு அல்லது வழக்கு நடவடிக்கை முடிவுறாதுள்ளவிடத்து, கம்பெனியை ஒடுக்குவதற்கு நியாயாதிக்கமுள்ள நீதிமன்றத்துக்கு, அத்தகைய வழக்கிலான அல்லது வழக்கு நடவடிக்கையிலான மேலதிக வழக்கு நடவடிக்கைகளை மட்டுப்படுத்துமாறு விண்ணப்பமொன்றைச் செய்யலாம். அத்துடன் அவ்வாறு விண்ணப்பஞ்செய்யப்படுகின்ற நீதிமன்றம் தகுதியானதென அது எண்ணக்கூடியவாறான அத்தகைய நியதிகளின்கீழ் அதற்கிணங்க வழக்கு நடவடிக்கைகளை விடயத்துக்கேற்ப நிறுத்திவைக்கலாம் அல்லது தடுத்துவைக்கலாம்.

ஒடுக்குதல் தொடங்கப்பட்ட பின்னர் ஆதனக் கையாளுதல்கள் முதலியவற்றை வறிதாக்குதல்.

**275.** நீதிமன்றத்தினாலான ஒடுக்குதலொன்றில், ஒடுக்குதல் தொடங்கிய பின்னர் செய்யப்பட்ட கம்பெனியின் ஏதேனும் ஆதனக் கையாளுகை (வழக்கிலுள்ள பொருட்கள் உட்பட), அத்துடன் பங்குகளின் ஏதேனும் கைமாற்றம், அல்லது கம்பெனியின் உறுப்பினர்களினது அந்தஸ்து மாற்றம் என்பன, நீதிமன்றம் வேறு வகையாகக் கட்டளை ஆக்கினாலொழிய, வறிதாதல் வேண்டும்.

பற்றுகை முதலியவற்றை வறிதாக்கல்.

**276.** (1) ஏதேனும் கம்பெனி நீதிமன்றத்தினால் ஒடுக்கப்படுமிடத்து, (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, ஒடுக்குதலுக்கான மனு முன்வைக்கப்பட்ட நேரத்துக்குப் பின்னர் கம்பெனியின் சொத்துக்கு அல்லது பொருட்களுக்கு எதிராக, வலுவுக்கிடப்பட்ட ஏதேனும் பற்றுகை, நடுக்கட்டல் அல்லது நிறைவேற்றுதல் எல்லா நோக்கங்களுக்காகவும் வறிதானதாதல் வேண்டும்.

(2) இப்பிரிவிலுள்ளதெதுவும், ஏதேனும் ஆதனம் தொடர்பில் இறுப்பனவொன்றுக்கு உரித்துடையவராகவுள்ள கடன்தருநரினால் அல்லது அவரின் நன்மைக்காக அவ்வாதனத்துக்கெதிரான நிறைவேற்றுதல் நடைமுறைக்கு அல்லது பற்றுகைக்கு ஏற்புடையதாதலாகாது.

**ஒடுக்குதலைத் தொடங்குதல்**

*நீதிமன்றத்தின் மூலமான ஒடுக்குதல் தொடங்கப்படுதல்.*

**277.** (1) நீதிமன்றத்தின்மூலம் கம்பெனியொன்று ஒடுக்கப்படுவதற்கான மனு முன்வைக்கப்படுமுன்னர், தன்னிச்சையான ஒடுக்குதலுக்கு தீர்மானம் கம்பெனியினால் நிறைவேற்றப் பட்டுள்ளவிடத்து, தீர்மானம் நிறைவேற்றப்பட்ட நேரத்தில் கம்பெனியின் ஒடுக்குதல் தொடங்கியுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், நீதிமன்றம், மோசடி பற்றிய அல்லது பிழை பற்றிய எண்பிப்பின்மேல் வேறுவகையாகப் பணிப்பது தகுதியானதென எண்ணினாலொழிய, தன்னிச்சையான ஒடுக்குதலில் எடுக்கப்பட்ட எல்லா நடவடிக்கைகளும் செல்லுபடியாக எடுக்கப்பட்டுள்ளனவெனக் கருதப்படுதலும் வேண்டும்.

(2) வேறேதேனும் விடயத்தில், கம்பெனியொன்று நீதிமன்றத் தின்மூலம் ஒடுக்கப்படுதலானது, ஒடுக்குதற்கான மனு முன் வைக்கப்படுகின்ற நேரத்தில் தொடங்குவதாகக் கருதப்படுதல் வேண்டும்.

**ஒடுக்குதல் கட்டளையின் விளைவுகள்**

*கட்டளையின் பிரதி பதிவாளருக்கு அனுப்பி வைத்தல்.*

**278.** ஒடுக்குதல் கட்டளையொன்று ஆக்கப்பட்டதன்மேல், கட்டளையின் பிரதி உடனடியாகக் கம்பெனியினால் அல்லது விதித்துரைக்கப்படக்கூடியவாறான வேறுவகையில் பதிவாளருக்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்; கம்பெனி தொடர்பாக அவர் அதுபற்றிய குறிப்பொன்றை தமது புத்தகங்களில் செய்தல் வேண்டும்.

*ஒடுக்குதலின் மீது வழக்கு நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப் படுதல்.*

**279.** (1) ஒடுக்குதல் கட்டளையொன்று ஆக்கப்பட்டுள்ளவிடத்து, அல்லது தற்காலிக ஒழிப்போன் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ள விடத்து, (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, வழக்கு அல்லது வழக்கு நடவடிக்கை எதுவும், நீதிமன்ற அனுமதியு மன்றியும், நீதிமன்றம் விதிக்கக்கூடிய அத்தகைய நியதிகளுக் கமையவன்றியும், கம்பெனிக்கெதிராகத் தொடர்ந்துநடாத்தப் படுதலோ அல்லது தொடங்கப்படுதலோ ஆகாது.

(2) இப்பிரிவிலுள்ளதெதுவும், ஏதேனும் ஆதனம் தொடர்பில் இறுப்பனவானதுக்கு உரித்துடையவரான கடன்தருநரினால் அல்லது அவரின் நன்மைக்காக அந்த ஆதனத்துக்கெதிரான நிறைவேற்றுதல் நடைமுறைக்கு அல்லது கைப்பற்றுகைக்கு ஏற் புடையதாதலாகாது.

ஒடுக்குதல் கட்டளையின் பயன்.

**280.** ஒரு கம்பெனியை ஒடுக்குவதற்கான கட்டளை கடன்தருநரினதும் உதவுதொகை செலுத்துநரினதும் கூட்டுமனுவின்மீது ஆக்கப்பட்டாற்போன்று, கம்பெனியின் எல்லாக் கடன் தருநருக்கும் எல்லா உதவுதொகைசெலுத்துநர்களுக்கும் சாதகமாகத் தொழிற்படுதல் வேண்டும்.

**ஒடுக்குதலில் உத்தியோகபூர்வமான பெறுநர்**

அலுவலக முறையான பெறுநர்.

**281.** இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக "அலுவலக முறையான பெறுநர்" என்பது, நீதிமன்றத்தினால் கம்பெனியொன்று ஒடுக்கப்படுதலுடன் அது தொடர்புபட்ட அளவுக்கு, கடனிறுக்கவகையின்மை நோக்கங்களுக்காக நீதிமன்றத்தைச் சேர்ந்த உத்தியோகபூர்வமான பெறுநர், எவரேனுமிருப்பின், அவர் என்று அல்லது அவ்வாறு சேர்ந்தவராகவுள்ள அத்தகைய அலுவலக முறையான பெறுநர் எவரும் இல்லாதிருப்பின், அப்போது அந்நீதிமன்றத்துக்கான அலுவலக முறையான பெறுநராக அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய ஆள் என்று பொருளாகும்.

குறித்தசில விடயங்களில் அலுவலக முறையான பெறுநர் நீதிமன்றத்தினால் நியமிக்கப்படுதல்.

**282.** நீதிமன்றத்தின்மூலம் ஏதேனும் கம்பெனி ஒடுக்கப்படும் விடயத்தில், அத்தகைய ஒடுக்குதலை கூடுதல் சரியானதாகவும் சிக்கனமானதாகவும் நடாத்துவதினை உறுதிப்படுத்தும் நோக்குடன், 281 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பயனாக அலுவலக முறையான பெறுநராகவிருக்கும் ஆள் தவிர்ந்த எவரேனும் அலுவலர் அந்த ஒடுக்குதலின் நோக்கங்களுக்காக அலுவலக முறையான பெறுநராகவிருப்பது விரும்பத்தக்கதென நீதிமன்றத்துக்குத் தோன்றினால், அந்த ஒடுக்கலின் அலுவலக முறையான பெறுநராகச் செயலாற்றுவதற்கு நீதிமன்றம் அந்த வேறு அலுவலராக நியமிக்கலாம் என்பதுடன், அவ்வாறு நியமிக்கப்பட்ட ஆள், இச்சட்டத்தின் எல்லா நோக்கங்களுக்காகவும் அந்த ஒடுக்கலில் அலுவலக முறையான பெறுநராகக் கருதப்படுதலும் வேண்டும்.

கம்பெனியின் அலுவல்கள் பற்றிய கூற்று அலுவலக முறையான பெறுநருக்குச் சமர்ப்பிக்கப்படுதல்.

**283.** (1) நீதிமன்றம் ஒடுக்குதல் கட்டளையொன்றை ஆக்கியுள்ள விடத்து அல்லது தற்காலிக ஒழிப்போரின் நியமித்துள்ளவிடத்து, வேறுவகையாகக் கட்டளையிடுவது தகுதியானதென நீதிமன்றம் எண்ணி அவ்வாறு கட்டளையிட்டாலொழிய விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் உள்ளதும் சத்தியக்கடதாசியினால் உறுதிப்படுத்தப்பட்டதும், அத்துடன் கம்பெனியின் சொத்துக்கள், தனிசுகள் மற்றும் பொறுப்புக்கள் என்பவற்றினதும், அதன் கடன்தருநரின் பெயர்கள், வதிவிடங்கள் மற்றும் தான்புரிதொழில்கள்

என்பவற்றினதும், முறையே அவர்களினால் வைத்திருக்கப்பட்ட பிணைப்பொறுப்புக்கள், பிணையப்பொறுப்புக்கள் முறையே கொடுக்கப்பட்ட தேதிகள் பற்றிய விபரங்களையும் அத்துடன் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அல்லது அலுவலக முறை யான பெறுநர் தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய மேலதிக அல்லது வேறு தகவலில் முதலிய விபரங்களையும் காட்டுவதான கம்பெனியின் அலுவலர்கள் பற்றிய கூற்றொன்று தயாரிக்கப்பட்டு அலுவலக முறையான பெறுநருக்குச் சமர்ப்பிக் கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட கூற்று, இயைபான தேதியன்று கம்பெனியின் பணிப்பாளர்களாகவுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்களினாலும் அத்தேதியன்று கம்பெனியின் செயலாளராகவுள்ள ஆளினாலும் அல்லது கீழே குறிப்பிட்டோரும் அலுவலக முறையான பெறுநராக நீதிமன் றத்தினால் நியமிக்கப்படக்கூடியவர்களுமான ஆட்களுள் அத்த கையோரினாலும், நீதிமன்றத்தின் பணிப்பிற்கமைய, சமர்ப்பிக்கப் பட்டுச் சரிபார்க்கப்படுதல் வேண்டும் :-

(அ) கம்பெனியின் அலுவலர்களாகவுள்ளவர்களான அல்லது இருந்துள்ளவர்களான ஆட்கள் ;

(ஆ) இயைபான தேதிக்கு முன்னர் ஓராண்டினுள் எந்நேரத்திலும் கம்பெனியை அமைத்துருவாக்குவதில் பங்குபற்றியுள்ளவர்களான ஆட்கள் ;

(இ) கம்பெனியின் ஊழியத்திலுள்ளவர்களான அல்லது சொல்லப்பட்ட ஆண்டினுள் கம்பெனியின் ஊழியத் தில் இருந்துள்ளவர்களான அத்துடன் அலுவலக முறையான பெறுநரின் அபிப்பிராயப்படி, தேவைப் பட்ட தகவலைக் கொடுக்க இயலுமானவர்களான ஆட்கள் ;

(ஈ) சொல்லப்பட்ட ஆண்டினுள் கூற்று தொடர்புபடுத்தும் கம்பெனியின் அலுவலர்களாகவுள்ள அல்லது அலுவலர்களாகவிருந்திருக்கின்ற அல்லது தொழி லாளர்களாகவுள்ள அல்லது தொழிலாளர்களாக விருந்திருக்கின்ற ஆட்கள்.

(3) இயைபான தேதியிலிருந்து பதினான்கு நாட்களினுள் அல்லது விசேட காரணங்களுக்காக அலுவலக முறையான பெறுநர் அல்லது நீதிமன்றம் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய நீடிக்கப்பட்ட காலத்தினுள் ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட கூற்று சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவின் ஏற்பாடுகளினால் தேவைப்பட்ட கூற்றையும் சத்தியக்கடதாசியையும் அளிக்கின்ற அல்லது அளிப்பதில் ஒருப்பாடுடைய எவரேனுமாளுக்கு கம்பெனியின் இருப்புச் சொத்துக்களிலிருந்து அலுவலக முறையான பெறுநர் நியாயமானதெனக் கருதக்கூடியவாறாகக் கூற்றைத்தயாரிப்பதிலும் அளிப்பதிலும் அது தொடர்பாகவும் உறப்பட்ட அத்தகைய செலவுத்தொகைகளையும் செலவுகளையும், நீதிமன்றத்துக்குச் செய்யப்படும் மேன்முறையீட்டுக்கமைய, விடயத்துக்கேற்ப அலுவலக முறையான பெறுநர் அல்லது தற்காலிக ஒழிப்போன் அனுமதித்தலும் செலுத்துதலும் வேண்டும்.

(5) நியாயமான காரணமின்றி எவரேனுமாள் இப்பிரிவின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுமிடத்து, அவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

(6) கம்பெனியின் கடன்தருநர் அல்லது உதவுதொகை செலுத்துநர் ஒருவராக இருக்கின்றாரென எழுத்தில் உரிமைகோருகின்ற எவரேனுமாள், விதித்துரைக்கப்பட்ட கட்டணத்தைக் கொடுப்பனவு செய்வதன்மேல் தானாகவோ அல்லது அவரது முகவர் மூலமாகவோ நியாயமான எல்லா நேரங்களிலும், இப்பிரிவின் ஏற்பாடுகளைப் பின்பற்றிச் சமர்ப்பிக்கப்பட்ட கூற்றைச் சோதனையிடுவதற்கும், அத்தகைய கூற்றிலிருந்தான பிரதியொன்றை, பொழிப்பொன்றைப் பெற்றுக்கொள்வதற்கும் உரித்துடையவராதல் வேண்டும்.

(7) பொய்யானதென அறிந்துகொண்டு கடன்தருநர் அல்லது உதவுதொகைசெலுத்துநர் ஒருவரென உரிமைகோருகின்ற எவரேனுமாள், நீதிமன்றத்தை அவமதித்த தவறுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், ஒழிப்போனின் அல்லது அலுவலக முறையான பெறுநரின் விண்ணப்பத்தின்மீது, அத்தகைய அவமதிப்புக்குத் தண்டிக்கப்படற்பாலராதலும் வேண்டும்.

(8) இப்பிரிவில் "இயைபானதேதி" என்ற சொல்லமைப்பு, தற்காலிக ஒழிப்போன் ஒருவர் நியமிக்கப்படும் விடயத்தில் அவரது நியமனத் தேதியென்றும், அத்தகைய நியமனமெதுவும் செய்யப்படாதவிடயத்தில் ஒடுக்குதற் கட்டணத் தேதியென்றும் பொருளாகும்.

அலுவலக முறையான பெறுநரினாலான அறிக்கை.

**284.** (1) ஒடுக்குதற் கட்டளையொன்று ஆக்கப்படும் ஏதேனும் விடயத்தில் 283 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கூற்றைப் பெற்றதன்பின்னர் செயல்முறைக்குகந்தவரை விரைவாக அல்லது அத்தகைய கூற்றெதுவும் சமர்ப்பிக்கப்பட லாகாதென நீதிமன்றம் கட்டளையிடுகின்ற ஏதேனும் விடயத்தில், கட்டளைத் தேதிக்குப் பின்னர் செயல்முறைக்குகந்தவரை விரைவாக, அலுவலக முறையான பெறுநர் —

(அ) வழங்கப்பட்ட பங்குகளின் எண்ணிக்கையும் வகைகளும், கூறப்பட்ட மூலதனமும் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் மதிப்பிடப்பட்ட தொகையும் ;

(ஆ) கம்பெனி தொழிற்பாட்டு முறையில் தவறியிருந்தால் அத்தவறுகைக்கான காரணங்களும் ; அத்துடன்

(இ) அவரது அபிப்பிராயப்படி கம்பெனியின் மேம்பாடு, அமைப்பு அல்லது கம்பெனியின் தோல்வி தொடர்பிலான அல்லது அதன் அலுவல்களைக் கொண்டு நடாத்துதல் தொடர்பான ஏதேனும் மேலதிக விசாரணை விரும்பத்தக்கதாவென்றும்,

நீதிமன்றத்துக்குப் பூர்வாங்க அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்க வேண்டும்.

(2) அலுவலக முறையான பெறுநர், தகுதியானதென அவர் எண்ணினால், கம்பெனியானது அமைக்கப்பட்ட முறையையும் அவரது அபிப்பிராயப்படி அதன்மேம்பாட்டில் அல்லது அமைப்பில் எவரேனும் ஆளினால் அல்லது அத்தகைய கம்பெனி அமைக்கப்பட்டதிலிருந்து கம்பெனி தொடர்பாகக் கம்பெனியின் எவரேனும் அலுவலரினால் மோசடியெதுவும் புரியப்பட்டுள்ளதாவென்பதையும் அத்துடன் அவரது அபிப்பிராயப்படி நீதிமன்

றத்தின் கவனத்துக்குக் கொண்டுவருவது விரும்பத்தக்கதாக வுள்ள வேறெவையேனும் கருமங்களையும் கூறுகின்ற மேலதிக அறிக்கையொன்றையும் அல்லது அறிக்கைகளையும் செய்யலாம்.

(3) அலுவலக முறையான பெறுநர், தனது அபிப்பிராயப்படி மோசடியொன்று புரியப்பட்டுள்ளதென (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்படுகின்றவாறான அத்தகைய ஏதேனும் மேலதிக அறிக்கையில் கூறுமிடத்து, நீதிமன்றம், அத்தகைய அறிக்கையைக் கையாளுகையில் 311 ஆம் பிரிவிற் தரப்பட்டுள்ள தத்துவத்தைப் பிரயோகித்தல் வேண்டும்.

## ஒழிப்போர்

*ஒழிப்போரை நியமிப்பதற்கு நீதிமன்றத்துக்குள்ள தத்துவம்.*

**285.** ஒரு கம்பெனியை ஒடுக்குவதிலான நடவடிக்கைகளை நடாத்தும், அத்துடன் நீதிமன்றம் சுமத்தப்படக்கூடிய அதுதொடர்பான அத்தகைய கடமைகளைப் புரியும் நோக்கங்களுக்காக, நீதிமன்றமானது ஓர் ஒழிப்போனை அல்லது ஒழிப்போரை நியமிக்கலாம்.

*தற்கால ஒழிப்போரின் நியமனமும் தத்தவங்களும்.*

**286.** (1) ஒடுக்குதல் மனுவொன்றை முன்வைத்த பின்னரும் ஒடுக்குதற் கட்டளையொன்றை ஆக்கமுன்னரும் எந்நேரத்திலேனும் நீதிமன்றம் தற்கால ஒழிப்போனொருவரை நியமிக்கலாம் என்பதுடன், ஒன்றில் அலுவலக முறையான பெறுநர் அல்லது வெறெவரேனும் தகுதியான ஆள் அவ்வாறு நியமிக்கப்படலாம்.

(2) நீதிமன்றத்தினால் ஒழிப்போனொருவர் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, அவரை நியமிக்கின்ற கட்டளைமூலம் நீதிமன்றம் அவரது தத்துவங்களை வரையறுத்து மட்டுப்படுத்தலாம்.

*ஒழிப்போனின் நியமனம், மகுடம் முதலியன.*

**287.** ஒடுக்குதற் கட்டளையொன்று ஆக்கப்பட்டதன்மேல், ஒழிப்போர் தொடர்பில் பின்வரும் ஏற்பாடுகள் பயனுடையனவாதல் வேண்டும் —

(அ) அலுவலக முறையான பெறுநர் அவரது பதவியின் பயனைக்கொண்டு தற்காலிக ஒழிப்போனாதல் வேண்டுமென்பதுடன், அவர் அல்லது இன்னோராள்

ஒழிப்போனாக வந்து அத்தகையவராகச் செயலாற்று வதற்கு இயன்றவராகும் வரையில் அத்தகையவராகத் தொடர்ந்தும் செயலாற்றுதல் வேண்டும் ;

(ஆ) அலுவலக முறையான பெறுநரின் இடத்தில் ஒழிப்போனொருவரை நியமிப்பதற்காக நீதிமன்றத்துக்கு விண்ணப்பஞ்செய்யப்படவேண்டுமா அல்லவாவென்பதைத் தீர்மானிக்கும் நோக்கங்களுக்காக, உத்தியோகபூர்வமான பெறுநர் கம்பெனியின் கடன்தருநர்களினதும் உதவுதொகை செலுத்துநர்களினதும் தனித்தனியான கூட்டங்களை அழைத்தல் வேண்டும் ;

(இ) அத்தகைய ஏதேனும் தீர்மானத்துக்குப் பயன்கொடுப்பதற்குத் தேவைப்பட்ட ஏதேனும் நியமனத்தையும் கட்டளையையும் நீதிமன்றம் ஆக்கலாமென்பதுடன், மேற்கூறப்பட்ட கருமம்தொடர்பில் கடன்தருநர்களினதும் உதவுதொகை செலுத்துநர்களினதும் கூட்டங்களிலான தீர்மானங்களுக்கிடையே வித்தியாசமொன்றிருப்பின், நீதிமன்றமானது, வித்தியாசத்தை முடிவு செய்து, நீதிமன்றம் தகுதியானதென எண்ணக்கூடியவாறாக அதன்மீதான அத்தகைய கட்டளையை ஆக்கலாம் ;

(ஈ) நீதிமன்றத்தினால் ஒழிப்போன் நியமிக்கப்படாத விடயத்தில் அலுவலக முறையான பெறுநர் கம்பெனியின் ஒழிப்போனாக இருத்தல் வேண்டும் ;

(உ) அலுவலக முறையான பெறுநர் அவரது பதவி காரணமாக, ஒழிப்போன் என்ற பதவியில் ஏதேனும் வெற்றிடம் ஏற்படும்போது ஒழிப்போனாக இருத்தல் வேண்டும் ;

(ஊ) அலுவலக முறையான பெறுநரல்லாத ஆளொருவர் ஒழிப்போனாக இருக்குமிடத்து “ஒழிப்போன்” என்ற மகுடத்தினால் “ஒழிப்போன்” ஒருவர் விவரணங்கூறப்படுதல் வேண்டுமென்பதுடன், அலுவலக முறையான பெறுநர் ஒழிப்போனாகவிருக்குமிடத்து, எவர் எந்தக் குறிப்பிட்ட கம்பெனி தொடர்பில் நியமிக்

கப்படுகின்றாரோ அந்தக் குறிப்பிட்ட கம்பெனியின் "அலுவலக முறையான பெறுநரும் ஒழிப்போனும்" என்ற மகுடத்தினால் விவரணங் கூறப்படுதல் வேண்டும் ; அவரது தனிப்பட்ட பெயரினால் விவரணம் செய்யப்படுதல் ஆகாது.

*அலுவலக முறையான பெறுநர் அல்லாத ஆள் ஒழிப்போனாக நியமிக்கப் படுமிடத்தான ஏற்பாடுகள்.*

**288.** நீதிமன்றத்தினால் கம்பெனியொன்று ஒடுக்கப்படுகையில் அலுவலக முறையான பெறுநர் அல்லாத ஆள் ஒருவர் ஒழிப் போனாக நியமிக்கப்படுமிடத்து, அவ்வாள் –

(அ) பதிவாளருக்கு அத்தகைய நியமனம் பற்றி அறிவித்தல் கொடுத்து, விதித்துரைக்கப்பட்ட முறையில் பிணைப் பொறுப்பு அளிக்கும்வரை ஒழிப்போனாக செயலாற்றுவதற்கு இயன்றவராதலாகாது ;

(ஆ) கம்பெனியின் புத்தகங்களையும் ஆவணங்களையும் சோதனையிடுவதற்கான அத்தகைய தகவலையும் அத்தகைய அனுகுகையையும், வசதிகளையும், அத்துடன் பொதுவில் இச்சட்டத்தின்கீழ் தமது கடமைகளைப் புரிவதற்கு அவ்வலுவலரை இயலச் செய்வதற்குத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய உதவியையும் அலுவலக முறையான பெறுநருக்குக் கொடுத்தல் வேண்டும்.

*ஒழிப்போர் பற்றிய பொது ஏற்பாடுகள்.*

**289.** (1) நீதிமன்றத்தினால் நியமிக்கப்பட்ட ஒழிப்போன் ஒருவர் பதவிதுறக்கலாம் அல்லது காட்டப்பட்ட காரணத்தின்மீது நீதிமன்றத்தினால் அகற்றப்படலாம்.

(2) அலுவலக முறையான பெறுநரல்லாத ஆளொருவர் ஒழிப்போனாக நியமிக்கப்படுமிடத்து நீதிமன்றம் பணிக்கக்கூடியவாறு நூற்றுவீதம் என்ற வகையாக அல்லது வேறுவகையாக அவர் அத்தகைய சம்பளத்தை அல்லது ஊதியத்தைப் பெறுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆட்களுள் ஒன்றுக்கு மேற்பட்டோர் ஒழிப்போராக நியமிக்கப்படுமிடத்து, அவர்களது ஊதியம், நீதிமன்றம் பணிக்கக்கூடியவாறான அத்தகைய விகிதாசாரங்களில் அவர்களிடையே பகிர்ந்தளிக்கப்படலும் வேண்டும்.

(3) நீதிமன்றத்தினால் நியமிக்கப்பட்ட ஒழிப்போன் ஒருவரின் பதவியிலான வெற்றிடம் நீதிமன்றத்தினால் நிரப்பப்படல் வேண்டும்.

(4) ஒன்றுக்கதிகமான ஒழிப்போர் நீதிமன்றத்தினால் நியமிக் கப்படுமிடத்து, நீதிமன்றமானது ஒழிப்போனினால் இச்சட்டத் தின் ஏற்பாடுகளின்கீழ் செய்யப்படவேண்டுமெனத் தேவைப் படுத் தப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் செயல், அவ்வாறு நியமிக்கப்பட்ட எல்லா ஆட்களினாலும் அல்லது அவர் களுள் எவரேனும் ஒருவரினால் அல்லது அதற்கதிகமானோரி னால் செய்யப்படவேண்டுமாவென்பதை பிரகடனம் செய்தல் வேண்டும்.

(5) ஒழிப்போன் ஒருவரின் செயல், அத்தகைய ஒழிப்போனின் நியமனத்தில் அல்லது தகைமையில் ஏதேனும் குறைபாடு உள்ளமை காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாகவிருத்தலோ அல்லது செல்லுபடியற்றதாகக் கருதப்படுதலோ ஆகாது.

கம்பெனியின் ஆதனத்தினது கட்டுக்காப்பு.

**290.** ஒடுக்குதற் கட்டளையொன்று ஆக்கப்பட்டுள்ளவிடத்து அல்லது தற்காலிக ஒழிப்போன் நியமிக்கப்பட்டுள்ளவிடத்து விடயத்துக்கேற்ப ஒழிப்போன் அல்லது தற்காலிக ஒழிப்போன், கம்பெனியானது உரித்தாகவுள்ள அல்லது உரித்தாகவுள்ள தெனத் தோன்றுகின்ற எல்லா ஆதனத்தையும் வழக்கிலுள்ள பொருட்களையும் அவரது கட்டுக்காப்பினுள் அல்லது கட்டுப்பாட் டின்கீழ் எடுத்தல் வேண்டும்.

கம்பெனியின் ஆதனத்தை ஒழிப்போனுக்கு உரித்தாக்கல்.

**291.** கம்பெனியொன்று நீதிமன்றத்தினால் ஒடுக்கப்பட்டுக் கொண்டிருக்குமிடத்து, நீதிமன்றமானது ஒழிப்போனின், விண்ணப்பத்தின்மீது, கம்பெனிக்குச் சொந்தமான அல்லது அதன்சார்பில் நம்பிக்கைப் பொறுப்பாளர்களினால் வைத்திருக் கப்பட்ட அத்தகையதுமான எவ்விவரணத்தினதான ஆதனமெல் லாம் அல்லது அதன் ஏதேனும் பாகம், ஒழிப்போனின் அலுவலக முறையான பெயரினால் அவருக்கு உரித்தாதல் வேண்டு மெனக் கட்டளைமூலம் பணிக்கலாம் ;அதன்மேல் கட்டளையுடன் தொடர்புபட்ட ஆதனம் அதற்கிணங்க உரித்தாதல் வேண்டுமென்ப துடன், ஒழிப்போன், நீதிமன்றம் பணிக்கக்கூடியவாறான அத்த கைய நட்டோத்தரவாதம் ஏதேனுமிருப்பின் அதனைக் கொடுத்த பின்னர், அவ்வாதனத்துடன் தொடர்புபட்ட அல்லது கம்பெனி யைப் பயனுள்ளவகையில் ஒடுக்கி அதன் ஆதனத்தை அறவிடும் நோக்கத்துக்காகக் கொண்டுவருதற்கு அல்லது எதிர்வாதிடுவ தற்கு அவசியமான ஏதேனும் வழக்கை அல்லது வழக்கு நடவடிக் கைகளை அவரது அலுவலக முறையான பெயரில் கொண்டுவருத லும் அல்லது எதிர்வாதிடுதலும் வேண்டும்.

ஒழிப்போனின் தத்துவங்கள்.

***292.*** (1) நீதிமன்றத்தின்மூலம் செய்யப்படும் ஒடுக்குதலில் ஒழிப்போன், ஒன்றில் நீதிமன்றத்தின் அல்லது பரிசோதனைக் குழுவின் அனுமதியுடன் பின்வருவனவற்றைச் செய்வதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டும் :—

(அ) கம்பெனியின் பெயரிலும் கம்பெனியின் சார்பிலும் ஏதேனும் வழக்கை அல்லது வேறு சட்ட நடவடிக்கையைக் கொண்டுவருவதற்கும் அல்லது எதிர்வாதிடுவதற்கும் ;

(ஆ) கம்பெனியின் தொழில் நன்மை பயக்கும் முறையில் ஒடுக்குவதற்கு அவசியமாகக்கூடியவாறான அளவுக்கு அத்தகைய கம்பெனியின் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கும் ;

(இ) அவரது கடமைகளைப் புரிவதில் அவரக்கு உதவுதற்கெனச் சட்டத்தரணியொருவரை நியமிப்பதற்கும் ;

(ஈ) ஏதேனும் வகுப்பினரான கடன்தருநருக்கு முழுமையாகப் பணஞ்செலுத்துவதற்கும் ;

(உ) கடன் தருநர்களுடன் அல்லது கடன் தருநர்களென உரிமைகோருகின்ற அல்லது கம்பெனிக்கெதிரான அல்லது அவற்றின்மூலம் கம்பெனி ஆளாக்கப்படக் கூடிய, தற்போதைய அல்லது எதிர்கால, திட்டவட்டமான அல்லது எதிர்பாராத நிச்சயிக்கப்பட்ட அல்லது சேதவீடுகளில் மட்டும் உள்ள ஏதேனும் உரிமைக் கோரிக்கையைக் கொண்டிருக்கின்ற அல்லது தாம் உடையவராயுள்ளனரெனச் சார்த்துகின்ற ஆட்களுடன் ஏதேனும் இணக்கத்தை அல்லது ஒழுங்கேற்பாட்டைச் செய்வதற்கும் அல்லது எந்த இணக்கத்தின் அல்லது ஒழுங்கேற்பாட்டின் மூலம் கம்பெனியானது பொறுப்பாகக்கூடியதோ அந்த இணக்கத்தை அல்லது ஒழுங்கேற்பாட்டைச் செய்வதற்கும் ;

(ஊ) உடன்பட்டுக்கொள்ளக்கூடியவாறான அத்தகைய நியதிகளின்மீது தற்போதைய அல்லது எதிர்கால, திட்டவட்டான அல்லது எதிர்பாராத, நிச்சயிக்கப்பட்ட

அல்லது சேதவீடுகளில் மட்டும் உள்ளவையும், உளதாயுள்ள அல்லது கம்பெனிக்கும் உதவுதொகை செலுத்துநருக்கும் அல்லது சார்த்தப்பட்ட உதவு தொகை செலுத்துநருக்கும் அல்லது வேறு கடனாளிக்கும் அல்லது கம்பெனிக்கான பொறுப்பு வருமென அஞ்சுகின்ற ஆளுக்கும் இடையே உளதாகவுள்ள தெனச் சார்த்தப்படுகின்றவையுமான எல்லா அழைப்புக்களையும், அழைப்புக்களுக்கான பொறுப்புகளையும், தனிசுகளையும், தனிசுகளை விளைவிக்கக்கூடிய பொறுப்புகளையும் எல்லா உரிமைக்கோரிக்கைகளையும், கம்பெனியின் சொத்துக்களுடன் அல்லது கம்பெனியின் ஒடுக்குதலுடன் எவ்வகையிலும் தொடர்புபட்ட அல்லது அவற்றைப் பாதிக்கின்ற எல்லாக் கேள்விகளையும் இணக்குவதற்கும் அத்தகைய ஏதேனும் அழைப்பை, தனிசை, பொறுப்பை அல்லது உரிமைக்கோரிக்கையைப் பொறுப்பு விடுவிப்பதற்கு ஏதேனும் பிணைப்பொறுப்பை எடுப்பதற்கும், அது தொடர்பில் பூரணப் பொறுப்பு விடுவிப்பைக் கொடுப்பதற்கும்.

(2) நீதிமன்றத்தினாலான ஒடுக்குதலில் ஒழிப்போன், பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) கம்பெனியின் அசைவுள்ள அசைவற்ற ஆதனத்தையும் வழக்கிலுள்ள பொருட்களையும், அவற்றின் முழுமையையும் எவரேனுமாளுக்கு அல்லது கம்பெனிக்குக் கைமாற்றுவதற்கான அல்லது அவற்றைத் துண்டங்களாக விற்பதற்கான தத்துவத்துடன், பகிரங்க ஏலத்தில் அல்லது தனிப்பட்ட ஒப்பந்தத்தின்மூலம் விற்பதற்கும் ;

(ஆ) கம்பெனியின் பெயரிலும் அதன்சார்பிலும், எந்தச் செயல்களையும் செய்வதற்கும் எல்லா உறுதிகளையும், பற்றுச்சீட்டுக்களையும், ஏனைய வேறு ஆவணங்களையும் எழுதிநிறைவேற்றுவதற்கும், அந்நோக்கத்துக்காக அவசியமானபோது, கம்பெனியின் இலச்சினை ஏதேனுமிருப்பின் அதனைப் பயன்படுத்துவதற்கும் ;

(இ) எவரேனும் உதவுதொகை செலுத்துநரின் வங்கி முறித்தமையில், கடனிறுக்க வகையின்மையில் அல்லது நடுக்கடலில் அவரது மரணச் சொத்துக் கெதிரான ஏதேனும் மிகுதியை எண்பித்தலும், வரிசைப்படுத்தலும் உரிமை கோருதலும், அம்மிகுதி தொடர்பில் வங்கிமுறித்தமையில், கடனிறுக்க வகையின்மையில் அல்லது நடுக்கட்டலில் ஆன பங்கி லாபங்களை, வங்கி முறித்தவரிடமிருந்து அல்லது கடனிறுக்க வகையற்றவரிடமிருந்து வருமதியான தனிவேறான தனிசொன்றென்றாற்போன்றும் ஏனைய தனிவேறான கடன்தருநர்களுடன் விகிதசமமாகப் பெறுவதற்கும் ;

(ஈ) கம்பெனியின் பெயரிலும் அதன்சார்பிலும் எவையே னும் ஏனைய மாற்றுண்டியல்களை அல்லது வாக்குறுதிப்பத்திரங்களை அந்த உண்டியல் அல்லது பத்திரம் கம்பெனியினால் அதன் தொழில் நடைமுறை யின்போது அதனால் அல்லது அதன் சார்பில் வரை யப்பட்டது, ஏற்றுக்கொள்ளப்பட்டது, ஆக்கப்பட்டது அல்லது புறக்குறிப்பிடப்பட்டது என்றாற் போன்று, கம்பெனியின் பொறுப்பு தொடர்பில் அதே பயனுடன் வரைவதற்கும் ஏற்றுக்கொள்வதற்கும், ஆக்குவதற்கும், புறக்குறிப்பிடுவதற்கும் ;

(உ) கம்பெனியின் சொத்துக்களினது பிணைப்பொறுப் பின் மீது தேவையான ஏதேனும் பணத்தைத் திரட்டு வதற்கும் ;

(ஊ) கம்பெனியின் பெயரில் வசதியாகச் செய்யமுடியா துள்ள, இறந்துபோன எவரேனும் உதவுதொகை செலுத்துநருக்கு நிருவாகத் தத்துவப்பத்திரங்களை அவரது அலுவலக முறையான பெயரில் எடுப்பதற் கும், ஓர் உதவுதொகை செலுத்துநரிடமிருந்து அல்லது அவரது மரணச் சொத்திலிருந்து வருமதியாகவுள்ள ஏதேனும் பணக்கொடுப்பனவைப் பெறுவதற்கு அவசி யமான வேறேதேனும் செயலை அவரது அலுவலக முறையான பெயரில் செய்வதற்கும் ; அத்துடன் அத்த கைய எல்லா விடயங்களிலும் வருமதியாகவுள்ள

பணம், ஒழிப்போன் நிருவாகத்தத்துவப் பத்திரங்களை எடுப்பதற்கு அல்லது பணத்தை அறவிடுவதற்கு அவரை இயலச் செய்யும் நோக்கத்துக்காக ஒழிப் போனுக்கே வருமதியாகவுள்ளதெனக் கருதப்படுதல் வேண்டும் :

ஆயின், இதன்கண் தத்துவமளிக்கப்பட்டுள்ள எதுவும் (88 ஆம் அத்தியாயமான) நம்பிக்கைப் பொறுப்புக்கள் கட்டளைச் சட்டத்தின்கீழ் நியமிக்கப் பட்ட பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளரின் உரிமை கள், கடமைகள் மற்றும் சிறப்புரிமைகள் என்பவற்றைப் பாதிப்பதாகக் கருதப்படுதலாகாது ;

(எ) அத்தகைய ஒழிப்போனின் சார்பில் ஏதேனும் தொழி லைச் செய்வதற்கு முகவரொருவரை நியமிப்பதற்கும் ;

(ஏ) கம்பெனியின் அலுவல்களை ஒடுக்குவதற்கும் அதன் சொத்துக்களைப் பகிர்ந்தளிப்பதற்கும் அவசியமாகக் கூடியவாறான அத்தகைய வேறெல்லாக் காரியங்களை யும் செய்வதற்கும்.

(3) இப்பிரிவின் ஏற்பாடுகளினால் அளிக்கப்பட்ட தத்துவங் களை நீதிமன்றத்திலான ஒடுக்கலில் ஒழிப்போன் பிரயோகித்த லானது நீதிமன்றக் கட்டுப்பாட்டுக்கு அமைந்ததாதல் வேண்டு மென்பதுடன், எவரேனும் கடன்தருநர் அல்லது உதவுதொகை செலுத்துநர், அத்தத்துவங்களுள் எவற்றினதும் பிரயோகத்துக் காக அல்லது உத்தேசப் பிரயோகத்துக்காக நீதிமன்றத்துக்கு விண் ணப்பமொன்றைச் செய்யலாம்.

ஒழிப்போனின் தத்துவங்களின் பிரயோகமும் கட்டுப்பாடும்.

**293.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, நீதிமன்றத்தினால் ஒடுக்கப்பட்டுக்கொண்டிருக்கும் கம்பெனியொன்றின் ஒழிப்போன் கம்பெனியின் சொத்துக்களை நிருவகிப்பதிலும் கடன்தருநர் களிடையே அதனைப் பகிர்ந்தளிப்பதிலும், ஏதேனும் பொதுக்கூட் டத்தில் கடன்தருநர்களின் அல்லது உதவுதொகை செலுத்துநரின் தீர்மானத்தினால் அல்லது பரிசோதனைக் குழுவினால் விடுக்கப் படக்கூடிய எவையேனும் பணிப்புகளைக் கவனத்துட்கொள்ளுதல் வேண்டும் என்பதுடன், ஏதேனும் பொதுக்கூட்டத்தில் கடன்தருநர்

களினால் அல்லது உதவுதொகை செலுத்துநர்களினால் விடுக்கப் பட்ட எவையேனும் பணிப்புகள், முரண்பாட்டின் விடயத்தில், சோதனைக் குழுவினால் விடுக்கப்பட்ட எவையேனும் பணிப்புக ளிலும் மேலோங்கி நிற்பனவாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(2) ஒழிப்போன், கடன்தருநர்களினதும் உதவுதொகை செலுத்து நர்களினதும் விருப்பங்களை நிச்சயிக்கும் நோக்கத்துக்காக அவர்க ளின் பொதுக்கூட்டங்களைக் கூட்டலாமென்பதுடன், ஒன்றில் ஒழிப்போனை நியமிக்கும் கூட்டத்தில் அல்லது வேறுவகையாக, தீர்மானத்தின்மூலம், கடன்தருநர் அல்லது உதவு தொகை செலுத்துநர்கள் பணிக்கக்கூடியவாறான அத்தகைய நேரங்களில் அல்லது விடயத்துக்கேற்ப கடன்தருநர்களினது அல்லது உதவுதொகை செலுத்துநர்களினது மொத்த எண்ணிக்கையில் பத்திலொரு பங்கினரால் அவ்வாறு செய்யும்படி எழுத்தில் வேண்டுகோள் விடுக்கப்படும்போதெல்லாம் கூட்டங்களைக் கூட்டுதல் அவரது கடமையாதலும் வேண்டும்.

(3) ஒடுக்குதலின்கீழ் எழுகின்ற குறிப்பிட்ட ஏதேனும் கருமம் தொடர்பாக, ஒழிப்போன் பணிப்புகளுக்காக விதித்துரைக்கப்பட்ட முறையில் நீதிமன்றத்துக்கு விண்ணப்பஞ்செய்யலாம்.

(4) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, ஒழிப்போன், கடன் தருநரிடையே மரணச்சொத்தினதும் அதன் பகிர்ந்தளிப்பையும் முகாமைசெய்வதில் தனது சொந்தத் தற்றுணிபைப் பயன்படுத்து தல் வேண்டும்.

(5) ஒழிப்போனின் ஏதேனும் செயலினால் அல்லது முடிவி னால் இன்னலுறும் எவரேனுமாள், அந்த ஆள் அத்தகைய செய லுக்கு அல்லது முடிவுக்கு எதிராக நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்யலாமென்பதுடன், நீதிமன்றம் முறைப்பாடு செய்யப்பட்ட செயலை அல்லது முடிவை உறுதிப்படுத்தலாம், எதிர்மாறாக்க லாம் அல்லது திரிபுபடுத்தலாம் ; அத்துடன் நீதியானதென அது எண்ணுகின்றவாறான அத்தகைய கட்டளையை ஆக்கலாம்.

ஒழிப்போனால் வைத்திருக்கப்பட வேண்டிய புத்தகங்கள்.

**294.** நீதிமன்றத்தினால் ஒடுக்கப்படுகின்ற கம்பெனியொன்றின் ஒவ்வோர் ஒழிப்போனும் கூட்டங்களின் நடவடிக்கை பற்றிய பதிவீடுகளை அல்லது குறிப்புக்களையும் விதித்துரைக்கப்படக்

கூடியவாறான அத்தகைய வேறு விடயங்களையும் பதிவுசெய்விப்ப தற்கென விதித்துரைக்கப்பட்ட முறையில் புத்தகங்கள் வைத்திருத் தல் வேண்டும் என்பதுடன் எவரேனும் கடன்தருநர் அல்லது உதவுதொகை செலுத்துநர் நீதிமன்றத்தின் கட்டுப்பாட்டுக்கமைய அத்தகைய எவையேனும் புத்தகங்களைத் தாமாகவோ அல்லது தமது முகவர் மூலமாகவோ பார்வையிடவும் செய்யலாம்.

வங்கிக்கு ஒழிப்போனின் கொடுப்பனவு கள்.

**295.** (1) நீதிமன்றத்தினால் ஒடுக்கப்படும் கம்பெனியொன்றின் ஒவ்வோர் ஒழிப்போனும், தம்மால் பெற்றுக்கொள்ளப்பட்ட பணத்தை, உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் அல்லது பலவற்றில் அந்நோக்கத்திற்கெனத் தாபிக்கப்பட்ட கணக்கொன் றிற்கு அல்லது கணக்குகளுக்குச் செலுத்துதல் வேண்டும்.

(2) நீதிமன்றத்தினால் ஒடுக்கப்படும் கம்பெனியொன்றின் ஒழிப்போன் என்ற வகையில் அவரால் பெறப்பட்ட எவையேனும் பணத்தொகைகளை அவரது தனிப்பட்ட வங்கிக் கணக்கிற்குச் செலுத்துதலாகாது.

ஒழிப்போனின் கணக்குகள் பற்றிய கணக்காய்வு,

**296.** (1) நீதிமன்றத்தால் ஒடுக்கப்படும் கம்பெனியொன்றின் ஒவ்வோர் ஒழிப்போனும் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நேரங்களில் ஆனால் தமது பதவிக்காலத்தில் ஒவ்வோர் ஆண்டும் இரண்டு தடவைகளுக்குக் குறையாமல் ஒழிப் போன் என்ற வகையில் அவரது வரவுகள் கொடுப்பனவுகள் பற் றிய கணக்கொன்றைப் பதிவாளருக்கு அனுப்பிவைத்தில் வேண் டும்.

(2) கணக்கானது, விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் இருத்தல் வேண்டும் என்பதுடன் இணைப்பிரதியில் செய்யப்படுதலும் வேண்டும். அத்துடன் விதித்துரைக்கப்பட்ட படிவத்திலான நியதிச் சட்ட வெளிப்படுத்துகையொன்றினால் அத்தாட்சிப்படுத் தப்படுதலும் வேண்டும்.

(3) பதிவாளர் கணக்கை கணக்காய்வு செய்வித்தல் வேண்டும் என்பதுடன் கணக்காய்வின் நோக்கத்திற்காக பதிவாளருக்குத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய உறுதிச்சீட்டுக்களையும் தகவலையும் பதிவாளருக்கு ஒழிப்போன் கொடுத்துதவுதலும் வேண்டும். அத்துடன் ஒழிப்போனால் வைத்திருக்கப்படும் எவை யேனும் புத்தகங்களை அல்லது கணக்கை எந்நேரத்திலும் சமர்பிக் கும்படி பதிவாளர் தேவைப்படுத்தலாம் என்பதுடன் அவற்றை அவர் எந்த நேரத்திலும் பார்வையுமிடலாம்.

(4) கணக்கு கணக்காய்வு செய்யப்பட்டதும் அதன் பிரதியொன்று பதிவாளரால் கோப்பிடப்பட்டு வைத்திருக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் மற்றப்பிரதி கோப்பிடப்படுவதற்கென நீதிமன்றத் திற்கு அனுப்பி வைக்கப்படுதலும் வேண்டும்; அத்துடன் ஒவ்வொரு பிரதியும் விதித்துரைக்கப்பட்ட கட்டணம் செலுத்தப்பட்டதன்மேல் எவரேனும் ஆளினால் பார்வையிடப்படுவதற்கு வைக்கப்படுதல் வேண்டும்.

(5) ஒழிப்போன், அவ்வாறு செய்வதற்கான செலவையும் கம்பெனிச் சொத்துக்களின் பெறுமதியையும் கருத்திற்கொண்டு அவ்வாறு செய்வது சாத்தியமல்ல என அவர் கருதினாலன்றி, கணக்கின் அல்லது பொழிப்பின் பிரதியொன்றை ஒவ்வொரு கடன்தருநருக்கும் உதவுதொகை செலுத்துநருக்கும் அஞ்சலில் அனுப்புதல் வேண்டும்.

*ஒழிப்போன்மீது பதிவாளரின் கட்டுப்பாடு.*

**297.** (1) பதிவாளர், நீதிமன்றத்தால் ஒடுக்கப்படும் கம்பெனிக ளின் ஒழிப்போனின் நடத்தையை அங்கீகரித்தல் வேண்டும் என்பதுடன் ஒழிப்போன் ஒருவர் அவரது கடமைகளை நிறைவேற் றுதல் தொடர்பில் ஏதேனும் எழுத்திலான சட்டத்தால் அல்லது வேறுவகையில் அவர்மீது சுமத்தப்பட்ட தேவைப்பாடுகள் அனைத்தையும் முறையாக அனுசரிக்காதவிடத்தும் அவரது கடமைகளை விசுவாசத்துடன் நிறைவேற்றாதவிடத்தும் அல்லது அது தொடர்பில் எவரேனும் கடன்தருநரால் அல்லது உதவு தொகை செலுத்துநரால் ஏதேனும் முறைப்பாடு செய்யப்படு மிடத்து, பதிவாளர் அவ்விடயத்தையிட்டு விசாரணை செய்தலும் அவசியமாயின் நீதிமன்றத்திற்கு அறிவித்தலும் வேண்டும்.

(2) பதிவாளர், ஏதேனும் நேரத்தில் நீதிமன்றத்தால் ஒடுக்கப் படும் கம்பெனியொன்றின் ஒழிப்போன் எவரையும், அவர் சம்பந்தப்பட்டுள்ள ஏதேனும் ஒடுக்கல் தொடர்பிலான ஏதேனும் விசாரணைக்கு மறுமொழி அளிக்குமாறு தேவைப்படுத்தலாம் என்பதுடன் அவ்வாறு செய்வது பொருத்தமானதென பதிவாளர் கருதுமிடத்து, ஒடுக்கல் சம்பந்தமான ஏதேனும் விடயத்தின்மீது அவரையோ அல்லது வேறு எவரேனும் ஆளையோ சோதனை செய்யுமாறு நீதிமன்றத்திற்கு விண்ணப்பமொன்றும் செய்யலாம்.

(3) பதிவாளர், ஒழிப்போரின் புத்தகங்களினதும் உறுதிச் சீட்டுக் களினதும் இடப்புலனாய்வொன்று செய்யப்படவேண்டுமெனவும் பணிக்கலாம்.

ஒழிப்போர்களை விடுவித்தல்.

**298.** (1) நீதிமன்றத்தினால் ஒடுக்கப்படும் கம்பெனியொன்றின் ஒழிப்போர் ,கம்பெனியொன்றின் ஆதனம் எல்லாவற்றையும் தேறிப்பெற்றுக்கொண்டவுடன் அல்லது தேவையில்லாமல் ஒடுக்கலை நீடிக்காமல் தமது அபிப்பிராயப்படி தேறிப் பெற்றுக் கொள்ள முடியுமான கம்பெனியின் அத்தகைய அளவு ஆதனத்தைத் தேறிப் பெற்றுக்கொண்டவுடன், அத்துடன் இறுதிப் பங்கிலாபம் ஏதேனும் இருந்தால், அதைக் கடன்தருநர்களுக்குப் பகிர்ந்தளித்து உதவுதொகை செலுத்துநர்களின் உரிமைகளை அவர்களுக்கிடையில் சீராக்கி, அத்துடன் இறுதி விவரத்திரட்டொன்று ஏதேனும் இருந்தால், அதை உதவுதொகை செலுத்துநர்களுக்குத் தயாரித்தவுடன் அல்லது தாம் பதவி துறந்தவுடன் அல்லது தம் பதவியிலிருந்து நீக்கப்பட்டவுடன் ஒழிப்போரை பதவியிலிருந்து விடுவிக்குமாறு கோரும் அவரது விண்ணப்பத்தின் மேல், நீதிமன்றமானது கணக்கு பற்றிய அறிக்கையொன்றைத் தயாரிக்கச் செய்வித்தலும் வேண்டும் என்பதுடன், அவர் நீதிமன்றத்தின் எல்லாத் தேவைப்பாடுகளுக்கும் இணங்கியொழுகியதன்மேல் அறிக்கையுயும் ஒழிப்போனின் விடுவிப்புக்கெதிராக எவரேனும் கடன்தருநரால் அல்லது உதவு தொகை செலுத்துநரால் அல்லது அக்கறையுள்ள எவரேனும் ஆளினால் வற்புறுத்த வேண்டப்பட்ட ஏதேனும் ஆட்சேபனையையும் கருத்திற்கொள்ளுதல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்க அத்தகைய விடுவிப்பை ஒன்றில் வழங்குதல் வேண்டும் அல்லது வழங்காது விட்டுவிடுதல் வேண்டும்.

(2) ஒழிப்போனொருவரின் விடுவிப்பு வழங்கப்படாதிருக்குமிடத்து, நீதிமன்றமானது எவரேனும் கடன்தருநரின் அல்லது உதவுதொகை செலுத்துநரின் அல்லது அக்கறையுள்ள எவரேனும் ஆளின் விண்ணப்பத்தின்மீது கம்பெனியின் அலுவல்களை நிர்வகிப்பதில் ஒழிப்போனால் புரியப்பட்ட ஏதேனும் செயலின் அல்லது அவரின் தவறுகையின் விளைவுக்கு அவரைப் பொறுப்பித்து நீதிமன்றம் நீதியானதெனக் கருதும் அத்தகைய கட்டளையை ஆக்கலாம்.

(3) ஒழிப்போனை விடுவிக்கும் நீதிமன்றத்தின் கட்டளையொன்றானது கம்பெனியின் அலுவல்களை நிர்வகிப்பதில் அவரால் புரியப்பட்ட ஏதேனும் செயல் அல்லது தவறுகை தொடர்பில் அல்லது வேறு வகையில் ஒழிப்போனாக அவரது நடத்தை தொடர்பில் ஆன எல்லாப் பொறுப்புக்களிலிருந்தும் அவரை விடு

வித்தல் வேண்டும். ஆனால் அத்தகைய ஏதேனும் கட்டளையானது அது மோசடி மூலம் பெறப்பட்டதென அல்லது ஏதேனும் முக்கிய மான நிகழ்வினை மறைத்தடக்கி வைப்பதன் மூலம் அல்லது மறைத்து வைப்பதன் மூலம் பெறப்பட்டதென எண்பிக்கப்பட்ட தன்மேல் இல்லாதொழிக்கப்படலாம்.

(4) ஒழிப்போன் முன்னரே பதவி துறக்காமலிருந்தால் அல்லது பதவியிலிருந்து நீக்கப்படாமலிருந்தால் அவரை விடுவித்தல் அவரைப் பதவியிலிருந்து நீக்கினாற்போன்று பயனுடையதாதல் வேண்டும்.

### பரிசோதனைக்குழு

*பரிசோதனைக் குழு நியமிக்கப் படல் வேண்டுமா என்பதைத் தீர்மானிப்பதற்கு கடன் தருநர்களினதும் உதவுதொகை செலுத்து நர்களினதும் கூட்டங்கள்.*

**299.** (1) நீதிமன்றத்தால் ஒடுக்குதற் கட்டளையொன்று ஆக்கப்பட்டவுடன் அலுவலக முறையான பெறுநரின் இடத்திற்குப் பதிலாக ஒழிப்போன் ஒருவரை நியமிப்பதற்கு நீதிமன்றத்திற்கு விண்ணப்பமொன்று செய்யப்படவேண்டாமா என்பதைத் தீர்மானிக்கும் நோக்கத்திற்கென கூட்டப்பட்ட கடன்தருநர்களினதும் உதவுதொகை செலுத்துநர்களினதும் தனித்தனியான கூட்டங்கள், ஒழிப்போனுடன் சேர்ந்து செயலாற்றுவதற்கான பரிசோதனைக் குழுவொன்று நியமிக்கப்படுவதற்கென நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் ஒன்று செய்யப்பட வேண்டுமா வேண்டாமா என்பது பற்றியும், அப்படி நியமிக்கப்பட்டால் அத்தகைய குழுவில் எவ்வாட்கள் உறுப்பினர்களாய் இருத்தல் வேண்டும் என்பது பற்றியும் மேற்கொண்டு தீர்மானித்தல் அத்தகைய கூட்டங்களின் அலுவலாதல் வேண்டும்.

(2) நீதிமன்றம், அத்தகைய ஏதேனும் தீர்மானத்தைப் பயனுறுத்துவதற்குத் தேவைப்படுகின்ற நியமனத்தைச் செய்யலாம் அல்லது கட்டளையை ஆக்கலாம் என்பதுடன் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட விடயங்கள் தொடர்பில் கடன்தருநர்களினதும் உதவுதொகை செலுத்துநர்களினதும் கூட்டங்களின் தீர்மானங்களுக்கிடையில் வேறுபாடு எதுவும் காணப்பட்டால் நீதிமன்றம் அவ்வேறுபாடுகள் பற்றித் தீர்மானித்தல் வேண்டும் என்பதுடன் அதன்மீது நீதிமன்றம் பொருத்தமானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய கட்டளையை ஆக்குதலும் வேண்டும்.

பரிசோதனைக் குழுவின் அமைப்பும் நடவடிக்கைகளும்.

**300.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளைப் பின்பற்றி நியமிக்கப் படும் பரிசோதனைக் குழுவொன்று கம்பெனியின் கடன்தருநர் களையும் உதவுதொகை செலுத்துநர்களையும் அல்லது கடன்தருநர் களிடமிருந்து அல்லது உதவுதொகை செலுத்துநர்களிடமிருந்து பெறப்பட்ட பொது அற்றோனித் தத்துவங்களையுடைய ஆட்களை யும் கடன்தருநர்களினதும் உதவுதொகை செலுத்துநர்களினதும் கூட்டங்களினால் உடன்பட்டுக்கொள்ளக்கூடியவாறான அத்த கைய விகிதாசாரங்களின்படி அல்லது ஏதேனும் வேறுபாடு காணப்படும் விடயத்தில் நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய விகிதாரசாரங்களின்படி கொண்டிருத் தல் வேண்டும்.

(2) குழு காலத்துக்குக் காலம் அது நியமிக்கக்கூடியவாறான அத்தகைய நேரங்களில் கூடுதல் வேண்டும். ஆயினும் ஒவ்வொரு மூன்று மாதங்களில் ஒரு தடவையாவது கூட்டமொன்று நடாத்தப் படுதல் வேண்டும். விடயத்திற்கேற்ப ஒழிப்போன் அல்லது குழுவின் உறுப்பினர் எவரும் தாம் அவசியமானதென எண்ணு கின்றவாறாகவும் எண்ணும்பொழுதும் அத்தகைய ஒழிப்போன் அல்லது உறுப்பினர் குழுவின் கூட்டமொன்றையும் கூட்டலாம்.

(3) குழுவின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் கூட்டத்தில் சமுகமாயிருந்தாலொழிய, குழுவானது செயலாற்றுதலாகாது.

(4) குழுவின் உறுப்பினர் ஒருவர் தம்மால் ஒப்பமிடப்பட்ட எழுத்திலான அறிவித்தலை ஒழிப்போனிடம் ஒப்படைப்பதன் மூலம் பதவி துறக்கலாம்.

(5) குழுவின் உறுப்பினரொருவர் விடயத்திற்கேற்றவாறு கடனிறுக்க வகையற்றவராகுமிடத்து அல்லது வங்கிமுறிந்தவராகு மிடத்து அல்லது தமது கடன்தருநர்களுடன் இணங்கித் தீர்த்துக் கொள்ளுமிடத்து அல்லது ஒழுங்கேற்பாடுகள் செய்துகொள்ளு மிடத்து அல்லது குழுவின் அடுத்தடுத்து மூன்று கூட்டங்களுக்கு தம்முடன் சேர்த்துக் கடன்தருநர்களின் அல்லது உதவுதொகை செலுத்துநர்களின் பிரதிநிதிகளாய் இருக்கும் உறுப்பினர்களின் அனுமதியின்றி வருகை தராமலிருக்குமிடத்து அவரது பதவி வெற்றானதாதல் வேண்டும்.

(6) குழுவின் உறுப்பினர் ஒருவர், அவர் கடன்தருநர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தினால் கடன்தருநர்களின் கூட்டமொன்றிலும் அல்லது அவர் உதவுதொகை செலுத்துநர்களைப் பிரதிநிதித்துப்படுத்தினால் உதவுதொகை செலுத்துநர்களின் கூட்டமொன்றிலும் சாதாரணத் தீர்மானமொன்றின் மூலம் அகற்றப்படலாம். அத்தகைய கூட்டம் பற்றிய அறிவித்தல் அத்தகைய கூட்டத் தேதிக்கு ஏழு நாட்களுக்கு முன்னர் கொடுக்கப்படுதலும் அத்தகைய கூட்டத்தின் குறிக்கோள்களைக் கூறுதலும் வேண்டும்.

(7) குழுவில் வெற்றிடமொன்று ஏற்படுவதன்மேல் வெற்றிடத்தை நிரப்புவதற்கும், ஒழிப்போன் விடயத்திற்கேற்ப கடன்தருநர்களின் அல்லது உதவுதொகை செலுத்துநர்களின் கூட்டமொன்றை உடனடியாகக் கூட்டுதல் வேண்டும் என்பதுடன் கூட்டமானது தீர்மானத்தின்மூலம் வெற்றிடத்தை நிரப்புவதற்கு அதே கடன்தருநரை அல்லது உதவுதொகை செலுத்துநரை மீள நியமிக்கலாம் அல்லது வேறொரு கடன்தருநரை அல்லது உதவுதொகை செலுத்துநரை நியமிக்கலாம் :

ஆயினும், ஒடுக்குதலின் நிலைமையைக் கருத்திற்கொண்டு வெற்றிடத்தை நிரப்புவது அவசியமில்லையென ஒழிப்போன் அபிப்பிராயப்படுமிடத்து, வெற்றிடம் நிரப்பப்படலாகாது என்ற கட்டளையொன்றுக்காக அவர் நீதிமன்றத்திற்கு விண்ணப்பமொன்றைச் செய்யலாம் ; அத்துடன் நீதிமன்றம் அத்தகைய கட்டளையொன்றை ஆக்கலாம் அல்லது கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய சூழ்நிலைகளிற் தவிர வெற்றிடம் நிரப்பப்படுதலாகாது என்ற கட்டளையொன்றை ஆக்கலாம்.

*பரிசோதனைக் குழு இல்லாதவிடத்து நீதிமன்றத் திற்குள்ள தத்துவம்.*

**301.** ஒடுக்குதலொன்றின் விடயத்தில் பரிசோதனைக் குழு இல்லாதவிடத்து, ஒழிப்போனின் விண்ணப்பத்தின் மீது, நீதிமன்றம், குழுவினால் செய்யப்படவேண்டுமென அல்லது கொடுக்கப்பட வேண்டுமென இச்சட்டத்தால் அதிகாரமளிக்கப்பட்ட அல்லது தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் செயலைச் செய்யலாம் அல்லது ஏதேனும் பணிப்பை அல்லது அனுமதியை வழங்கலாம்.

## நீதிமன்றத்தினால் செய்யப்படும் ஒடுக்குதலின் விடயத்தில் நீதிமன்றத்திற்குள்ள பொதுத் தத்துவங்கள்

ஒடுக்குதலை நிறுத்திவைப் பதற்கான தத்துவம்.

**302.** (1) ஒடுக்குதலுக்கான கட்டளையொன்று ஆக்கப்பட்ட பின்னர் ஒழிப்போனின் அல்லது அலுவலகமுறையான பெறுநரின் அல்லது கடன்தருநர் அல்லது உதவுதொகை செலுத்துநர் எவரினதும் விண்ணப்பத்தின்மீதும் அத்துடன் ஒடுக்குதல் தொடர்பான எல்லா நடவடிக்கைகளும் நிறுத்திவைக்கப்படுதல் வேண்டும் என நீதிமன்றம் திருப்தியுறும் வகையில் எண்பிக்கப் பட்டதன்மேலும் நீதிமன்றம் தகுந்ததெனக் கருதும் அத்தகைய நியதி நிபந்தனைகளின்மீது ஒன்றில் முற்றாகவோ அல்லது வரையறுக்கப்பட்ட ஒரு காலத்துக்கோ நடவடிக்கைகளை நிறுத்திவைக்கும் கட்டளையொன்றை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் விண்ணப்பத்தின்மீது கட்டளையொன்றை ஆக்குமுன்னர், நீதிமன்றம் அலுவலகமுறையான பெறுநரின் அபிப்பிராயப்படி விண்ணப்பத்திற்கு இயைபான எவையேனும் நிகழ்வுகள் அல்லது கருமங்கள் தொடர்பில் அறிக்கையொன்றை நீதிமன்றத்திற்குக் கொடுத்துதவுமாறு அலுவலகமுறையான பெறுநரைத் தேவைப் படுத்தலாம்.

(3) இப்பிரிவின் ஏற்பாடுகளின்மீது ஆக்கப்படும் கட்டளை ஒவ்வொன்றினதும் பிரதியொன்று கம்பெனியால் பதிவாளருக்கு உடனடியாக அல்லது வேறுவகையில் விதித்துரைக்கப்படக் கூடியவாறு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். அத்துடன் அவர் கம்பெனி தொடர்பிலான தம் புத்தகங்களில் கட்டளை பற்றிய குறிப்பொன்றை உடனடியாகச் செய்தலும் வேண்டும்.

உதவுதொகை செலுத்துநர்களின் நிரலை நிர்ணயித்தலும் சொத்துக்களைப் பயன்படுத்தலும்.

**303.** (1) ஒடுக்குதற் கட்டளையொன்றை ஆக்கிய பின்னர் கூடிய விரைவில் இச்சட்டத்தைப் பின்பற்றி சீராக்கம் தேவைப்படுகின்ற எல்லா விடயங்களிலும் பங்கு இடாப்பைச் சீராக்குவதற்குள்ள தத்துவத்துடன் உதவுதொகை செலுத்துநர்களின் நிரலொன்றை நீதிமன்றம் நிர்ணயித்தல் வேண்டும் என்பதுடன் கம்பெனியின் சொத்துக்களைச் சேகரித்து அதன் பொறுப்புகளை விடுவிப்பதில் பயன்படுத்தச் செய்வித்தலும் வேண்டும்.

ஆயின், உதவுதொகை செலுத்துநர்களின் உரிமைகளின்மீது அழைப்புகள் விடுப்பதற்கு அல்லது அவற்றைச் சீராக்குவதற்கு அவசியமிராதென நீதிமன்றத்திற்குத் தோன்றுமிடத்து உதவுதொகை செலுத்துநரின் நிரலொன்றை நிர்ணயிப்பதை நீதிமன்றம் தவிர்க்கலாம்.

(2) உதவுதொகை செலுத்துநர்களின் நிரலை நிர்ணயிக்கையில், தம் சொந்த உரிமையின்பேரில் உதவுதொகை செலுத்துநர்களாய் இருப்பவர்களையும் ஏனையவர்களின் பிரதிநிதிகளாய் இருப்பவர்களையும் அல்லது அவர்களின் கடன்களுக்குப் பொறுப்பாய் இருப்பதனால் உதவுதொகை செலுத்துநர்களாய் இருப்பவர்களையும் வெவ்வேறாகப் பிரித்துக்காட்டுதல் வேண்டும்.

ஒழிப்போனிடம் ஆதனம் ஒப்படைக்கப்படுதல்.

**304.** ஒடுக்குதற் கட்டளையொன்று ஆக்கப்பட்ட பின்னர் எந்நேரத்திலும் உதவுதொகை செலுத்துநர்களின் நிரலில் அப்போதைக்கிருக்கும் உதவுதொகை செலுத்துநர் எவரையும், அத்துடன் கம்பெனியின் நம்பிக்கைப் பொறுப்பாளர், பெறுநர், வங்கியாளர், முகவர் அல்லது அலுவலர் எவரையும் கம்பெனி முதற்றோற்றளவில் உரித்துடையதாகவுள்ளதும் தம் கையில் இருப்பதுமான ஏதேனும் பணத்தை அல்லது ஆதனத்தை அல்லது கம்பெனி முதற்றோறளவில் உரித்துடையதாகவுள்ளனவும் தம்கையில் இருப்பனவுமான எவையேனும் புத்தகங்களை அல்லது பத்திரங்களை உடனடியாக அல்லது நீதிமன்றம் பணிக்கக்கூடியவாறான அத்தகைய காலத்துக்குள் ஒழிப்போனிடம் செலுத்தும்படி, ஒப்படைக்கும்படி, உரித்து மாற்றும்படி அல்லது கைமாற்றும்படி நீதிமன்றம் தேவைப்படுத்தலாம்.

உதவுதொகை செலுத்துநரால் கம்பெனிக்கு போமதியாகவுள்ள தனிசுகளைக் கொடுப்பனவு செய்தலும் எந்த அளவுக்கு எதிரீடு அனுமதிக்கப் படும் என்பதும்.

**305.** (1) ஒடுக்குதற் கட்டளையை ஆக்கியபின்னர் எந்த நேரத்திலும், நீதிமன்றமானது, அப்போதைக்கு உதவுதொகை செலுத்துநர்களின் நிரலிலிருக்கும் உதவுதொகை செலுத்துநர் எவரின்மீதும் இச்சட்டத்தைப் பின்பற்றி விடுக்கப்படும் ஏதேனும் அழைப்பின் பயனாக அவரால் செலுத்தப்படக்கூடிய ஏதேனும் பணத்தை உள்ளடக்காததும் அவரிடமிருந்து அல்லது அத்தகைய மரணச்சொத்திலிருந்து கம்பெனிக்குப் போமதியாகவுள்ளதுமான ஏதேனும் பணத்தைக் கட்டளையால் பணிக்கப்பட்ட முறையில் கம்பெனிக்குச் செலுத்துமாறு கட்டளையொன்றை ஆக்கலாம்.

(2) அத்தகைய கட்டளையொன்றை ஆக்குகையில், நீதிமன்றம், வரையறுக்கப்படாத கம்பெனியொன்றின் விடயத்தில், கம்பெனியுடனான ஏதேனும் சுயாதீனமான கையாளுகைகளின்மீது அல்லது ஒப்பந்தத்தின் மீது அவருக்குக் அல்லது அவர் பிரதிநிதித்துவப்படுத்தும் மரணச் சொத்துக்குக் கம்பெனியிலிருந்து வருமதியாகவுள்ள ஏதேனும் பணத்தின் எதிரீடு என்ற வகையில் உதவுதொகை செலுத்துநருக்கு அனுமதிக்கலாம் ; ஆனால் கம்பெனியின் உறுப்பினர் ஒருவர் என்ற முறையில் ஏதேனும் பங்கிலாபம் அல்லது இலாபம் தொடர்பில் அவருக்கு வருமதியாகவுள்ள பணம் எதனையும் அனுமதித்தல் ஆகாது.

(3) ஏதேனும் கம்பெனியின் விடயத்தில் அது வரையறுக்கப்பட்டதாயினுஞ்சரி, வரையறுக்கப்படாததாயினுஞ்சரி, எல்லாக் கடன்தருநர்களுக்கும் முழுமையாகக் கொடுப்பனவு செய்யப்படும்போது எத்தகையதுமான எந்தக் கணக்கிலிருந்தும் உதவுதொகை செலுத்துநர் ஒருவருக்குக் கம்பெனியிலிருந்து வருமதியாக விருக்கும் பணமெதுவும் பின்னர் விடுக்கப்படும் ஏதேனும் அழைப்புக்கெதிராக எதிரீடு என்றவகையில் அனுமதிக்கப்படலாம்.

கம்பெனிக்குப் போமதியாகவுள்ள பணங்கள் வங்கிக்குச் செலுத்தப்படுதல்.

**306.** (1) எந்த உதவுதொகை செலுத்துநரிடமிருந்து, கொள்வனவாளரிடமிருந்து அல்லது வேறு ஆளிடமிருந்து கம்பெனிக்குப் பணம் போமதியாயிருக்கின்றதோ அந்த உதவுதொகை செலுத்துநரை, கொள்வனவாளரை அல்லது வேறு ஆளை, வருமதியாகவுள்ள தொகையை ஒழிப்போனிடம் செலுத்துவதற்குப் பதிலாக குறித்துரைக்கப்பட்ட வங்கியொன்றில் அல்லது அதன் ஏதேனும் கிளையில் ஒழிப்போனின் கணக்கிற்குச் செலுத்துமாறு நீதிமன்றம் கட்டளையிடலாம் என்பதுடன் அத்தகைய கட்டளையெதுவும் ஒழிப்போனுக்குச் செலுத்தப்படவேண்டுமென்று பணித்திருந்தாற் போன்று அதேமுறையில் வலுவுக்கிடவும்படலாம்.

(2) நீதிமன்றத்தினால் ஒடுக்கப்படும் சந்தர்ப்பமொன்றில் குறித்துரைக்கப்பட்ட வங்கியொன்றுக்கு அல்லது அதன் ஏதேனும் கிளைக்குச் செலுத்தப்படும் அல்லது அதில் ஒப்படைக்கப்படும் எல்லாப் பணங்களும் பிணைப்பொறுப்புகளும் எல்லா வகையிலும் நீதிமன்றத்தின் கட்டளைக்கு அமைந்தனவாயிருத்தல் வேண்டும்.

*விசேட முகாமை யாளரை நியமித்தல்.*

**307.** (1) அலுவலக முறையிலான பெறுநர் தற்காலிகமாகவோ அல்லது வேறுவகையிலோ கம்பெனியொன்றின் ஒழிப்போனாக வருகின்றவிடத்து, கம்பெனியின் சொத்தின் தன்மை அல்லது பொதுவில் கடன்தருநர்களின் அல்லது உதவுதொகை செலுத்துநர்களின் அக்கறைகள் கம்பெனியின் சொத்துக்கு அல்லது கம்பெனியின் தொழிலுக்குத் தம்மை தவிர்ந்த விசேட முகாமையாளர் ஒருவரின் நியமனத்தைத் தேவைப்படுத்துகின்றது அல்லது தேவைப்படுத்துகின்றன எனத் தாம் திருப்திப்படுமிடத்து கம்பெனியின் சொத்துக்கு அல்லது கம்பெனியின் தொழிலுக்கு விசேட முகாமையாளரொருவரை நியமிப்பதற்காக நீதிமன்றத் திற்கு விண்ணப்பம் ஒன்றைச் செய்யலாம்; அத்துடன் அத்தகைய விண்ணப்பத்தின்மேல், நீதிமன்றம் பணிக்கக்கூடிய அத்தகைய காலப்பகுதியின்போது செயலாற்றுவதற்கென நீதிமன்றமானது சொல்லப்பட்ட சொத்திற்கான அல்லது தொழிலுக்கான விசேட முகாமையாளர் ஒருவரை நியமிக்கலாம், நீதிமன்றத்தினால் அவருக்குப் பொறுப்பிக்கப்படக்கூடியவாறாக பெறுநர் ஒருவரின் அல்லது முகாமையாளர் ஒருவரின் தத்துவங்களுள் எவற்றையும் உள்ளடக்கிய அத்தகைய தத்துவங்களை அவர் கொண்டிருப்பார்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் நியமிக்கப்பட்ட விசேட முகாமையாளர் நீதிமன்றம் பணிக்கின்றவாறான அத்தகைய முறையில் அத்தகைய பிணைப்பொறுப்பும் கணக்கும் கொடுத்தல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் நியமிக்கப்பட்ட விசேட முகாமையாளர் நீதிமன்றத்தினால் நிர்ணயிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய ஊதியத்தைப் பெறுதல் வேண்டும்.

*கடன்தருநர் களாலும் உதவுதொகை செலுத்து நர்களாலும் புத்தகங்கள் பார்வை யிடப்படுதல்.*

**308.** ஒடுக்குதல் கட்டளையொன்றை ஆக்கிய பின்னர் எந்நேரத்திலேனும் நீதிமன்றம் கம்பெனியின் புத்தகங்களும் பத்திரங்களும் கடன்தருநர்களாலும் உதவுதொகை செலுத்துநர் களாலும் பார்வையிடப்படுவதற்கென நீதியானதெனத் தாம் கருதும் அத்தகைய கட்டளையை ஆக்கலாம் என்பதுடன் கம்பெனி யின் உடைமையிலிருக்கும் புத்தகங்கள் மற்றும் பத்திரங்கள் எவையும் கடன்தருநர்களாலும் உதவுதொகை செலுத்துநர்களாலும் அதற்கிணங்கப் பார்வையிடவும்படலாம்.

ஒதுக்குதலுக்கான செலவுத் தொகைகளை இருப்புச் சொத்துக் களிலிருந்து செலுத்துமாறு கட்டளையிடுவதற்கான தத்துவம்.

***309.*** பொறுப்புகளை ஈடுசெய்வதற்கு இருப்புச் சொத்துக்கள் போதுமானவையாக இல்லாதிருக்கும் சந்தர்ப்பத்தில், நீதிமன்றம் நீதியானதென அது கருதும் முன்னுரிமை வரிசைக்கிரமத்தில் ஒடுக்குதலில் உறப்பட்ட செலவுத்தொகைகளையும் விதிப்பனவுகளையும் செலவுகளையும் இருப்புச் சொத்துக்களிலிருந்து கொடுப்பனவு செய்வது பற்றி நீதிமன்றம் கட்டளையொன்றை ஆக்கலாம்.

கம்பெனியின் ஆதனத்தை வைத்திருப்பவரெனச் சந்தேகிக்கப்படும் ஆட்களை கட்டளையிட்டழைப்பதற்கான தத்துவம்.

***310.*** *(1)* தற்காலிக ஒழிப்போன் ஒருவரின் நியமனத்தின் பின்னர் அல்லது ஒடுக்குதற் கட்டளையொன்றை ஆக்கியதன் பின்னர் எந்நேரத்திலேனும், கம்பெனியின் ஆதனம் எதனையும் தமது உடைமையில் வைத்திருப்பவரென அறியப்படுகின்ற அல்லது சந்தேகிக்கப்படுகின்ற அல்லது கம்பெனியுடன் கடன்பட்டிருப்பவரென சார்த்துரைக்கப்படுகின்ற கம்பெனியின் அலுவலர் எவரையும் அல்லது ஆள் எவரையும் அல்லது கம்பெனியின் ஊக்குவிப்பு, அமைத்துருவாக்கல், வியாபாரம், கொடுக்கல் வாங்கல், அலுவல்கள் அல்லது ஆதனம் சம்பந்தமாகத் தகவல் கொடுக்க முடிந்தவர் என நீதிமன்றம் கருதும் ஆள் எவரையும் அதன்முன் வருமாறு கட்டளையிட்டழைக்கலாம்.

*(2)* ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் கட்டளையிட்டழைக்கப்பட்ட எவரேனும் அலுவலரை அல்லது ஆளை, அவ்வுட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் கருமம் தொடர்பில் சத்தியத்தின்மீது, வாய்மொழிமூலமாக அல்லது எழுத்திலான கேள்விக்கொத்துக்களின் மூலமாக நீதிமன்றம் விசாரணை செய்யலாம் என்பதுடன் அத்தகைய விசாரணை வாய்மொழிமூலமாக நடாத்தப்படுமிடத்து மறுமொழிகளை எழுத்திலிடலாம் என்பதுடன் அத்தகைய அலுவலரை அல்லது ஆளை அதில் ஒப்பமிடும்படியும் தேவைப்படுத்தலாம்.

*(3)* ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் கட்டளையிட்டழைக்கப்பட்ட எவரேனும் அலுவலரை அல்லது ஆளை, கம்பெனி தொடர்பில் அவரின் கட்டுக்காப்பில் அல்லது தத்துவத்தில் இருக்கும் புத்தகங்கள் மற்றும் பத்திரங்கள் எவற்றையும் காண்பிக்குமாறு நீதிமன்றம் தேவைப்படுத்தலாம் ; ஆனால் தம்மால் காண்பிக்கப்பட்ட அத்தகைய புத்தகங்கள்மீது அல்லது

பத்திரங்கள்மீது அத்தகைய அலுவலர் அல்லது ஆள் ஏதேனும் சோந்தையைக் கோருமிடத்து, காண்பித்தலானது அச்சோந்தைக்குப் பங்கமின்றி இருத்தல் வேண்டும் என்பதுடன் ஒடுக்குதலில் அந்சோந்தை தொடர்பான எல்லாப் பிரச்சினைகளையும் தீர்மானிப்பதற்கு நீதிமன்றம் நியாயாதிக்கமுடையதாயிருத்தலும் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் கட்டளையிட்டழைக்கப் பட்டவரும் நியாயமான காரணமின்றி அழைப்புக்கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட நேரத்திலும் தேதியிலும் நீதிமன்றத்தின் முன்னிலையில் தோன்றுவதற்கு அல்லது அவரினால் காண்பிக்கும்படி தேவைப்படுத்தப்பட்ட எவையேனும் புத்தகங்களை அல்லது பத்திரங்களைக் காண்பிப்பதற்கு மறுக்கின்றவருமான எவரேனும் அலுவலர் அல்லது ஆள், கைதுசெய்யப்படுவதற்கும் விசாரணைக்கென நீதிமன்றத்தின் முன்னிலைக்குக் கொண்டு வரப்படுவதற்கும் ஆளாதல் வேண்டும்.

*ஊக்குவிப்போர் பணிப்பாளர்கள் முதலானவர் களைப் பகிரங்க விசாரணை செய்யும்படி கட்டளையிடு வதற்கான தத்துவம்.*

**311.** (1) கம்பெனியொன்றை ஒடுக்குவதற்கு நீதிமன்றத்தினால் கட்டளையொன்று ஆக்கப்பட்டுள்ளவிடத்தும் அத்துடன் கம்பெனியை ஊக்குவித்தலில் அல்லது அமைத்துருவாக்கலில் தமது அபிப்பிராயப்படி மோசடியொன்று புரியப்பட்டுள்ளது அல்லது கம்பெனி தொடர்பில் கம்பெனியின் அலுவலர் எவரினாலும் மோசடியொன்று புரியப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டு இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் மேலும் அறிக்கையொன்றை அலுவலகமுறையான பெறுநர் செய்துள்ளவிடத்தும் அத்தகைய அறிக்கையைப் பரிசீலனை செய்தபின்னர் அந்நோக்கத்திற்கென நீதிமன்றத்திற்கு நியமிக்கப்பட்ட தினமொன்றில் அவ்வாள் அல்லது அலுவலர் நீதிமன்றத்திற்கு வருகைதருதல் வேண்டும் எனவும் அத்துடன் கம்பெனியின் ஊக்குவிப்பு, அல்லது அமைத்துருவாக்கல் அல்லது தொழில்நடத்தப்படுதல் பற்றி அல்லது அதன் அலுவலர் என்ற முறையில் அவரது நடத்தையைப் பற்றி அல்லது கொடுக்கல் வாங்கலைப் பற்றி பகிரங்கமாக விசாரணை நடத்தப்படுதல் வேண்டுமெனவும் நீதிமன்றம் பணிக்கலாம்.

(2) அலுவலகமுறையான பெறுநர் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட விசாரணையில் முறையீடுகளைச் செய்யலாம் என்பதுடன் அந்நோக்கத்திற்கென சட்டத்தரணியொருவரால் பிரதிநிதித்துவப்படுத்தவும்படலாம்.

(3) அலுவலகமுறையான பெறுநர் ஒழிப்போனாக இல்லாத விடத்து ஒழிப்போனும் அத்துடன் கடன்தருநர் அல்லது உதவு தொகை செலுத்துநர் எவரும் ஒன்றில் தாமாகவோ அல்லது சட்டத் தரணிமூலமாகவோ விசாரணையில் பங்குபற்றலாம்.

(4) இப்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் விசாரணை செய்யப்படும் ஆள் அல்லது அலுவலர் சத்தியத்தின்மீது அல்லது உறுதியுரை யின்மீது விசாரணை செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன் நீதிமன்றம் கேட்கக்கூடியவாறான அல்லது அவரிடம் கேட்பதற்கு நீதிமன்றம் அனுமதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாக் கேள்விகளுக்கும் அவர் மறுமொழி கூறுதலும் வேண்டும்.

விசாரணை செய்யப்படுகின்ற ஆள் அல்லது அலுவலர் சட்டத்தரணி யொருவரினால் பிரதிநிதித்துவம் செய்யப்படுதல்.

**312.** (1) முன்னூற்றி பதினோராம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் விசாரணை செய்யப்படும்படி பணிக்கப்பட்ட ஆளொருவருக்கு அவ்வாறு விசாரணை செய்யப்படுவதற்கு முன்னர் அவரின் சொந்தச் செலவில் அலுவலகமுறையான பெறுநரின் அறிக்கை யின் பிரதியொன்று கொடுத்துதவப்படுதல் வேண்டும் என்பது டன் தமது சொந்தச் செலவிலேயே சட்டத்தரணியொருவரினால் பிரதிநிதித்துவப்படுத்தவும்படலாம். அத்துடன் அவர் தம்மால் கொடுக்கப்படும் மறுமொழிகளை விளங்கிப்படுத்துவதற்கு அல் லது வரைவுபடுத்துவதற்கு அவரை இயலச்செய்யும் நோக்கத் திற்கென நீதிமன்றம் நியாயமானதெனக் கருதும் அத்தகைய கேள்விகளை அத்தகைய ஆளிடம் அல்லது அலுவலரிடம் கேட்பதற்கு அத்தகைய சட்டத்தரணி சுதந்திரமுடையவராயிருத்தல் வேண்டும் :

ஆயினும், அத்தகைய எவரேனும் ஆள் அல்லது அலுவலர் தமக்கெதிராகச் செய்யப்பட்ட அல்லது சார்த்துரைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் எவற்றினின்றும் விடுவிக்கப்படுவதற்காக நீதிமன்றத்திற்கு விண்ணப்பமொன்றைச் செய்யுமிடத்து விண்ணப்பம் விசாரிக்கப்படும்போது தோன்றுதலும் இயைபான வையென அலுவலகமுறையான பெறுநருக்குத் தோன்றும் கருமங்கள் எவற்றுக்கும் நீதிமன்றத்தின் கவனத்தை ஈர்த்தலும் அலுவலகமுறையான பெறுநரின் கடமையாதல் வேண்டும் ; அத்துடன் அலுவலகமுறையான பெறுநரால் கொடுக்கப்படும் ஏதேனும் சான்றைக் கேட்டபின் அல்லது அவரால் அழைக்கப் பட்ட சாட்சிக்காரர்களை விசாரித்தபின் நீதிமன்றம் விண்ணப்

பத்தை ஏற்றுக்கொள்ளுமிடத்து நீதிமன்றம் அதன் தற்றுணி பின்படி தகுந்ததெனக் கருதக்கூடியவாறான அத்தகைய செலவுத் தொகைகளை விண்ணப்பக்காரருக்கு அனுமதிக்கலாம்.

(2) முன்னூற்றிப் பதினோராம் பிரிவின்கீழ் நடாத்தப்படும் விசாரணைகளின் நடவடிக்கைகள் எழுத்தில் வழங்கப்படுதல் வேண்டும் என்பதுடன் விசாரணை செய்யப்படும் ஆளுக்கு அல்லது அலுவலருக்கு வாசித்துக்காட்டப்படுதலும் வேண்டும் அல்லது அவரால் வாசிக்கப்படுதலும் ஒப்பமிடப்படுதலும் வேண்டும் என்பதுடன் அதன் பின்னர் அவருக்கெதிரான சான்றாகவும் பயன்படுத்தப்படலாம், அத்துடன் நியாயமான எல்லா நேரங்களிலும் கடன்தருநர் அல்லது உதவுதொகை செலுத்துநர் எவரினதும் பார்வைக்கு விடுப்படுதல் வேண்டும்.

(3) நீதிமன்றம் தகுந்ததெனக் கருதினால் விசாரணையை காலத்துக்குக்காலம் ஒத்திவைக்கலாம்.

*தலைமறைவாயிருக்கும் உதவுதொகை செலுத்துநரைக் கைதுசெய்வதற்கான தத்துவம்.*

**313.** உதவுதொகை செலுத்துநர் ஒருவர், இலங்கையைவிட்டு வெளியேறவிருக்கின்றார் அல்லது வேறுவகையில் தலைமறைவாகப் போகின்றார் அல்லது அழைப்புகள் செலுத்துவதைத் தட்டிக்கழிக்கும் நோக்கத்திற்கென அல்லது கம்பெனியின் அலுவல்கள் தொடர்பில் விசாரணையைத் தவிர்க்கும் நோக்கத்திற்கென அவரின் ஆதனம் எதனையும் அகற்றப்போகின்றார் அல்லது மறைக்கப்போகின்றார் என நம்புவதற்கு நியாயமான காரணம் காட்டப்படுவதன்மேல் ஒடுக்குதற் கட்டளையொன்று ஆக்கப்படுவதற்கு முன்னரோ அல்லது ஆக்கப்பட்ட பின்னரோ எந்நேரத்திலாயினும் நீதிமன்றம் உதவுதொகை செலுத்துநரைக் கைதுசெய்விக்கலாம் என்பதுடன் அவரின் புத்தகங்கள், பத்திரங்கள், அசைவுள்ள சொந்த ஆதனம் என்பவற்றையும் கைப்பற்றச் செய்விக்கலாம்.

*நீதிமன்றத்தின் தத்துவங்கள் திரண்டவையாதல்.*

**314.** நீதிமன்றத்திற்கு இச்சட்டத்தினால் அளிக்கப்படும் தத்துவங்கள் எவையும், ஏதேனும் அழைப்பை அல்லது வேறு பணத் தொகைகள் எவற்றையும் அறவிடுவதற்குக் கம்பெனியின் உதவு தொகை செலுத்துநர் அல்லது கடனாளி எவருக்கும் எதிராக அல்லது எவரேனும் உதவுதொகை செலுத்துநரின் அல்லது கடனாளியின் மரணச் சொத்துக்கு எதிராக வழக்கு நடவடிக்கைகள் தொடுப்பதற்கு ஏற்கனவே இருக்கும் தத்துவங்களுக்கு மேலதிகமானவையாக இருத்தல் வேண்டுமேயொழிய அவற்றை மட்டுப்படுத்துவனவாக இருத்தலாகாது.

*நீதிமன்றத்தின் குறித்தசில தத்துவங்களை ஒழிப்போனுக்குக் கையளித்தல்.*

**315.** பின்வருவன தொடர்பில் இச்சட்டத்தினால் நீதிமன்றத்திற்கு அளிக்கப்படுபவையும் உரித்தாக்கப்படுபவையுமான எல்லாத் தத்துவங்களும் கடமைகளும் அல்லது அவற்றுள் எவையும் நீதிமன்றத்தின் அலுவலரொருவராகவும் நீதிமன்றத்தின் கட்டுப்பாட்டிற்கு அமைந்தவராகவுமுள்ள ஒழிப்போனால் பிரயோகிக்கப்படுவதனை அல்லது புரியப்படுவதனை இயலச் செய்வதற்கு அல்லது தேவைப்படுத்துவதற்கு அமைச்சர் விதிகளை ஆக்கலாம்.

(அ) கடன்தருநர்களினதும் உதவுதொகை செலுத்துநர்களினதும் விருப்பங்களை ஆய்ந்தறிவதற்குக் கூட்டங்கள் வைத்தலும் நடத்துதலும் ;

(ஆ) உதவுதொகை செலுத்துநர்களின் நிரல்களை நிர்ணயித்தலும் தேவைப்படுமிடத்து உறுப்பினர்களின் இடாப்பைச் சீராக்குதலும் இருப்புச் சொத்துக்களைச் சேகரித்தலும் பிரயோகித்தலும் ;

(இ) ஒழிப்போனுக்குப் பணத்தை, ஆதனத்தை, புத்தகங்களை அல்லது பத்திரங்களைக் கொடுப்பனவு செய்தல், ஒப்படைத்தல், உரித்து மாற்றுதல், கையளித்தல் அல்லது கைமாற்றுதல் ;

(ஈ) எந்தக் காலத்திற்குள் கடன்களும் உரிமைக் கோரிக்கைகளும் எண்பிக்கப்படவேண்டுமோ அந்தக் காலத்தை நிர்ணயித்தல்,

ஆயின், நீதிமன்றத்தின் விசேட அனுமதியின்றி, ஒழிப்போன் உறுப்பினர்களின் இடாப்பைச் சீராக்குதல் ஆகாது என்பதுடன் நீதிமன்றத்தின் விசேட அனுமதியோ அல்லது சோதனைக் குழுவின் ஏற்பனுமதியோ இன்றி அழைப்பு எதனையும் விடுத்தலும் ஆகாது.

*கம்பெனியைக் கலைத்தல்.*

**316.** (1) கம்பெனியொன்றின் அலுவல்கள் பூரணமாக ஒடுக்கப் பட்டுள்ளபோது, அதற்கென ஒழிப்போன் விண்ணப்பமொன்றைச் செய்யுமிடத்து, கட்டளை ஆக்கப்படும் தேதியிலிருந்து கம்பெனி கலைக்கப்படவேண்டுமெனக் கூறும் அத்தகைய கட்டளை யொன்றை நீதிமன்றம் ஆக்குதல் வேண்டும் என்பதுடன் அதற் கிணங்க கம்பெனி கலைக்கப்படுதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளை யின் பிரதியொன்று அத்தகைய கட்டளைத் தேதியிலிருந்து பதினான்கு நாட்களுக்குள் ஒழிப்போனால் பதிவாளருக்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அவர் கலைத்த லைப் பற்றித் தமது புத்தகங்களில் குறிப்பொன்றைச் செய்தலும் வேண்டும்.

(3) ஒழிப்போன் இப்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கி யொழுகத் தவறுமிடத்து அவர் தவறொன்றுக்குக் குற்றவாளி யாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஓரிலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு ஆளாத லும் வேண்டும்.

*நீதிமன்றத்தின் கட்டளையை வலுவுக்கிடும் முறை.*

**317.** இச்சட்டத்தின்கீழ் நீதிமன்றமொன்றினால் ஆக்கப்படும் ஏதேனும் கட்டளை, அந்நீதிமன்றத்தில் முடிவுறாதுள்ள துடர்ச்சி எதிலும் ஆக்கப்படும் அத்தகைய நீதிமன்றத்தின் வலுவுக்கிடப்படக் கூடியவாறான அதேமுறையில் வலுவுக்கிடப்படலாம்.

*ஒடுக்குதல் கட்டளையை வேறொரு நீதிமன்றத்தில் வலுவுக்கிடுதல்.*

**318.** ஒரு நீதிமன்றத்தினால் ஆக்கப்பட்ட கட்டளையெதுவும் வேறேதேனும் நீதிமன்றத்தினால் வலுவுக்கிடுவதற்குத் தேவைப் படுத்தப்படுமிடத்து அதனை வலுவுக்கிடுவதற்குத் தேவைப் படுத்தப்பட்ட நீதிமன்றத்திற்குக் கட்டளையின் அத்தாட்சிப்படுத் தப்பட்ட பிரதியொன்று காண்பிக்கப்படுதல் வேண்டும் என்பது டன் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்று காண்பிக்கப்படுவது கட்டளை பற்றிய போதிய சான்றாதல் வேண்டும் என்பதுடன் அதன்மேல் அத்தகைய வேறு நீதிமன்றம் அக்கட்டளையானது அந்நீதிமன்றத்தினாலேயே ஆக்கப்பட்டிருந்ததென்றாற்போன்று அதேமுறையில் அக்கட்டளையை வலுவுக்கிடுதற்காக கட்டளையை வலுவுக்கிடும் கருமத்தில் தேவையான நடவடிக்கைகளை எடுத்த லும் வேண்டும்.

## (III) தன்னிச்சையான ஒடுக்குதல்

### *தன்னிச்சையான ஒடுக்குதலுக்கான தீர்மானங்களும் தன்னிச்சையான ஒடுக்குதலின் ஆரம்பமும்*

*கம்பெனி எந்தச் சூழ்நிலைகளில் தன்னிச்சையாக ஒடுக்கப்படலாம் என்பது.*

**319.** (1) (அ) கம்பெனியின் காலவரையறைக்கென அமைப்பக விதியால் நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதி ஏதுமிருப்பின் அது முடிவுறும்போது அல்லது எந்தச் சம்பவம் நிகழ்வதன்மீது கம்பெனி கலைக்கப்படவுள்ளதென உறுப்புரைகள் ஏற்பாடு செய்கின்றனவோ அந்த ஏதேனும் சம்பவம் இருப்பின் அது நிகழும்போதும் அத்துடன் கம்பெனி தன்னிச்சையாக ஒடுக்கப்படவேண்டுமெனக் கம்பெனியைத் தேவைப்படுத்தி கம்பெனி பொதுக்கூட்டமொன்றில் தீர்மானமொன்றை நிறைவேற்றும்போதும்;

(ஆ) கம்பெனி தன்னிச்சையாக ஒடுக்கப்படும் என கம்பெனி விசேட தீர்மானத்தின்மூலம் கம்பெனி தீர்மானிக்குமிடத்து ;

(இ) கம்பெனி அதன் பொறுப்புகளின் காரணமாக அதன் தொழிலைத் தொடர்ந்து நடாத்தமுடியாதெனவும் ஒடுக்குதல் புத்திசாலித்தனமானதெனவும் விசேட தீர்மானத்தின்மூலம் கம்பெனி தீர்மானிக்குமிடத்து கம்பெனியொன்று தன்னிச்சையாக ஒடுக்கப்படலாம்.

(2) இச்சட்டத்தில் "தன்னிச்சையான ஒடுக்குதலுக்கான ஒரு தீர்மானம்" என்ற சொல்லமைப்பு (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானம் எனப் பொருள்படும்.

*தன்னிச்சையான ஒடுக்குதலுக்கான தீர்மானம் பற்றிய அறிவித்தல்.*

**320.** (1) தன்னிச்சையான ஒடுக்குதலுக்கான தீர்மானமொன்றைக் கம்பெனி நிறைவேற்றியுள்ளவிடத்து, தீர்மானம் நிறைவேற்றப்பட்ட திகதியிலிருந்து பதினான்கு நாட்களுக்குள் வர்த்தமானியில் வெளியிடுவதன்மூலம் அத்தீர்மானம் பற்றிய அறிவித்தலைக் கொடுத்தல் வேண்டும்.

(2) கம்பெனி இப்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுமிடத்து –

(அ) கம்பெனி தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஓரிலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப் பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

(ஆ) தவறுகையிலுள்ள கம்பெனியின் அலுவலர் ஒவ்வொருவரும் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

(3) இப்பிரிவின் நோக்கங்களுக்காக கம்பெனியின் ஒழிப்போன் கம்பெனியின் அலுவலரொருவராகக் கருதப்படுதல் வேண்டும்.

தன்னிச்சையான ஒடுக்குதலின் ஆரம்பம்.

**321.** தன்னிச்சையான ஒடுக்குதலுக்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்ட நேரத்தில் தன்னிச்சையான ஒடுக்குதலொன்று ஆரம்பமாவதாகக் கருதப்படுதல் வேண்டும்.

### தன்னிச்சையான ஒடுக்குதலின் விளைவுகள்

கம்பெனியின் தொழில், நிலைவரம் என்பனமீது தன்னிச்சையான ஒடுக்குதலின் பயன்.

**322.** தன்னிச்சையான ஒடுக்குதல் ஒன்றின் விடயத்தில், கம்பெனியானது ஒடுக்குதலின் தேதியிலிருந்து நலனார்ந்த ஒடுக்குதலுக்குத் தேவைப்படக்கூடியவாறான அளவுக்குத் தவிர, அதன் தொழிலை நடாத்தாதொழிதல் வேண்டும் :

ஆயினும், கம்பெனியின் அமைப்பகவிதியில் முரணாக எது எவ்வாறிருப்பினும் அத்தகைய கம்பெனி கலைக்கப்படும்வரை அதன் கூட்டிணைக்கப்பட்ட நிலையும் கூட்டிணைக்கப்பட்ட தத்துவங்களும் தொடர்ந்திருத்தல் வேண்டும்.

தன்னிச்சையான ஒடுக்குதல் ஆரம்பமான பின்னர் கைமாற்றங்கள் முதலியனவற்றைத் தவிர்த்தல்.

**323.** தன்னிச்சையான ஒடுக்குதலொன்று ஆரம்பமான தேதியின் பின்னர் செய்யப்பட்டதும் ஒழிப்போனுக்கு அல்லது அவரின் அனுமதியுடன் செய்யப்பட்ட கைமாற்றலாக இராததுமான பங்குகளின் ஏதேனும் கைமாற்றமும் அத்துடன் கம்பெனியிலுள்ள உறுப்பினர்களின் அந்தஸ்தில் செய்யப்படும் ஏதேனும் மாற்றமும் வறிதானதாதல் வேண்டும்.

### கடனிறுக்க வகையுடைமை பற்றிய வெளிப்படுத்துகை

*தன்னிச்சையாக ஒடுக்குவதற்கான உத்தேசத்தின் விடயத்தில் கடனிறுக்க வகையுடைமை பற்றிய சட்டமுறையான வெளிப்படுத்துகை.*

**324.** (1) கம்பெனியொன்றைத் தன்னிச்சையாக ஒடுக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளவிடத்து, கம்பெனியின் பணிப்பாளர்கள் அல்லது இரண்டிற்கு மேற்பட்ட பணிப்பாளர்களையுடைய கம்பெனியொன்றின் விடயத்தில், பணிப்பாளர்களுட் பெரும்பான்மையோர் பணிப்பாளர்களின் கூட்டமொன்றில் தாம் கம்பெனியின் அலுவல்களைப் பற்றி முழு விசாரணை நடத்தியுள்ளனரெனவும் ஒடுக்குதல் ஆரம்பித்த தேதியிலிருந்து பன்னிரண்டு மாதங்களை விஞ்சாமல் வெளிப்படுத்துகையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்குள் கம்பெனி அதன் தனிசுகளை முழுமையாகச் செலுத்தக்கூடியதாயிருக்குமெனத் தாம் அபிப்பிராயப்படுகின்றனரெனவும் நியதிச்சட்ட வெளிப்படுத்துகையொன்றைச் செய்யலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட வெளிப்படுத்துகையொன்று —

(அ) கம்பெனியை ஒடுக்குதலுக்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்ட தேதிக்கு நேர்முந்திய ஐந்து வாரங்களுக்குள் செய்யப்பட்டு பதிவுசெய்யப்படுவதற்கென அத்தேதியளவில் பதிவாளருக்க ஒப்படைக்கப்பட்டிருந்தாலன்றி; அத்துடன்

(ஆ) அத்தகைய வெளிப்படுத்துகை செய்யப்படுவதற்கு முன்னர் செயல்முறைக்குகந்த ஆகப்பிந்திய தேதியில் உள்ளவாறான கம்பெனியின் இருப்புச் சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய கூற்றொன்றைக் கொண்டுள்ளதாய் இருந்தாலொழிய,

இச்சட்டத்தின் நோக்கங்களுக்குப் பயனெதுவும் உடையதாதல் ஆகாது.

(3) எந்த ஒடுக்குதலொன்றின் விடயத்தில் வெளிப்படுத்துகையொன்று செய்யப்பட்டு இப்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க ஒப்படைக்கப்பட்டுள்ளதோ அந்த ஒடுக்குதலொன்று இச்சட்டத்தில் “பங்குதாரர்களின் தன்னிச்சையான ஒடுக்குதல்” எனக் குறிப்பீடு செய்யப்படுகின்றது ; அத்துடன் எந்த ஒடுக்குதலின் விடயத்தில்

வெளிப்படுத்துகையொன்று அவ்வாறு செய்யப்படாமலும் ஒப்படைக்கப்படாமலுமிருக்கின்றதோ அந்த வெளிப்படுத்துகை இச்சட்டத்தில் “கடன்தருநர்களின் தன்னிச்சையான ஒடுக்குதல்” எனக் குறிப்பீடு செய்யப்படுகின்றது.

## பங்குதாரர்களின் தன்னிச்சையான ஒடுக்குதலுக்கு ஏற்புடைத்தான ஏற்பாடுகள்

*பங்குதாரர்களின் தன்னிச்சையான ஒடுக்குதல் தொடர்பிலான ஏற்பாடுகள்.*

**325.** இச்சட்டத்தின் 326 முதல் 332 வரையிலான பிரிவுகளின் (இவையிரண்டும் உட்பட) ஏற்பாடுகள் 326 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பங்குதாரர்களின் தன்னிச்சையான ஒடுக்குதல் தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்.

*ஒழிப்போரை நியமிப்பதற்கும் அவர்களின் ஊதியத்தை நிர்ணயிப்பதற்கும் கம்பெனிக்குள்ள தத்துவம்.*

**326.** (1) கம்பெனியின் அலுவல்களை ஒடுக்கும் நோக்கத்துக்காகவும் அதன் இருப்புச் சொத்துக்களை பகிர்ந்தளிக்கும் நோக்கத்துக்காகவும் பொதுக்கூட்டத்தில் கம்பெனியானது ஒழிப்போனை அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஒழிப்போரை நியமித்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஒழிப்போன் ஒவ்வொருவருக்கும் செலுத்தப்படவேண்டிய ஊதியத்தையும் நிர்ணயிக்கலாம்.

(2) ஒழிப்போனொருவரை நியமிப்பதன்மேல் கம்பெனியானது பணிப்பாளர்களின் தத்துவங்களின் தொடர்ச்சியைப் பொதுக்கூட்டத்தில் ஏற்பனுமதிக்கும் அளவுவரை தவிர, பணிப்பாளர்களின் எல்லாத் தத்துவங்களும் இல்லாதொழிதல் வேண்டும்.

*ஒழிப்போனின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புவதற்கான தத்துவம்.*

**327.** (1) கம்பெனியினால் நியமிக்கப்பட்ட ஒழிப்போனின் பதவியில் இறப்பினால், பதவி விலகினால் அல்லது வேறு விதமாக வெற்றிடமொன்று ஏற்படுமிடத்து கம்பெனியானது, அதன் கடன்தருநர்களுடனான ஏதேனும் ஒழுங்கேற்பாட்டுக்கு அமைய பொதுக்கூட்டமொன்றில் அவ்வெற்றிடத்தை நிரப்பலாம்.

(2) ஒழிப்போனின் பதவியிலான வெற்றிடமொன்றை நிரப்பும் நோக்கத்துக்கென, உதவுதொகை செலுத்துநர் எவரினாலும் கம்பெனியின் பொதுக்கூட்டமொன்று கூட்டப்படலாம் அல்லது ஒருவருக்கு மேற்பட்ட ஒழிப்போர் இருக்குமிடத்து, தொடர்ந்திருக்கும் ஒழிப்போரினால் கம்பெனியினால் பொதுக்கூட்டமொன்று கூட்டப்படலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட கூட்டமானது, இச்சட்டத்தினால் அல்லது அமைப்பகவிதியினால் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் அல்லது உதவுதொகை செலுத்துநர் எவரினாலும் அல்லது தொடர்ந்திருக்கும் ஒழிப்போரினால் செய்யப்படும் விண்ணப்பத்தின்பேரில் நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படக்கூடிய அத்தகைய முறையில் நடாத்தப்படுதல் வேண்டும்.

*கம்பெனிக்குரிய ஆதனத்தின் விற்பனைக்கு கிரயமாக பங்குகள் முதலியவற்றை ஏற்றுக் கொள்வதற்கு ஒழிப்போனுக்குள்ள தத்துவம்.*

***328.*** (1) கம்பெனியொன்றைத் தன்னிச்சையாக ஒடுக்குவதற்கு உத்தேசிக்கப்படுமிடத்தும் அல்லது கம்பெனியொன்று தன்னிச்சையாக ஒடுக்கப்பட்டுக்கொண்டிருக்குமிடத்தும் அத்துடன் இச்சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட்ட கம்பெனியொன்றாகவோ அல்லது அவ்வாறில்லாமலோ இருக்கின்றதும் (இப்பிரிவில் “கைமாற்றம் பெறும் கம்பெனி” என அழைக்கப்படுவதுமான) வேறொரு கம்பெனிக்கு முதற் குறிப்பிடப்பட்ட கம்பெனியின் தொழில் அல்லது ஆதனம் முழுவதும் அல்லது அதன் பகுதி கைமாற்றப்படுவதற்கு அல்லது விற்கப்படுவதற்கு உத்தேசிக்கப்படுமிடத்தும் முதற்குறிப்பிடப்பட்ட கம்பெனியின் ஒழிப்போன் (அது இப்பிரிவில் “கைமாற்றும் கம்பெனி” எனக் குறிப்பீடு செய்யப்படும் ) பொது அதிகாரமொன்றை அல்லது ஏதேனும் குறிப்பிட்ட ஒழுங்கேற்பாடு தொடர்பிலான அதிகாரமொன்றை ஒழிப்போனுக்கு அளிக்கும் அக்கம்பெனியின் விசேட தீர்மானமொன்றின் ஏற்பனுமதியுடன் கைமாற்றும் கம்பெனியின் உறுப்பினர்களுக்கிடையில் பகிர்ந்தளிப்பதற்காக கைமாற்றம் பெறும் கம்பெனியிலுள்ள பங்குகளை அல்லது பூட்கைகளை அல்லது அவைபோன்ற வேறு அக்கறைகளை கைமாற்றத்திற்கான அல்லது விற்பனைக்கான நட்டஈடாக அல்லது பகுதியளவிலான நட்டஈடாகப் பெற்றுக்கொள்ளலாம் அல்லது காசு, பங்குகள், பூட்கைகள் அல்லது அவைபோன்ற வேறு அக்கறைகள் என்பவற்றைப் பெற்றுக் கொள்வதற்குப் பதிலாக அல்லது அவற்றுடன் மேலதிகமாக கைமாற்றம் பெறும் கம்பெனியின் இலாபங்களிற் பங்குபற்றுவதற்கு அல்லது அக்கம்பெனியிலிருந்து வேறு ஏதேனும் நலனைப் பெறுவதற்குக் கைமாற்றம் கம்பெனியின் உறுப்பினர்களுக்கு வழிவகை செய்யும் வேறு ஏதேனும் ஒழுங்கேற்பாட்டைச் செய்துகொள்ளலாம்.

(2) இப்பிரிவின் ஏற்பாடுகளைப் பின்பற்றிச் செய்யப்படும் விற்பனை அல்லது ஒழுங்கேற்பாடு எதுவும் கைமாற்றும் கம்பெனியின் உறுப்பினர்களைப் பிணிப்பதாதல் வேண்டும்.

(3) விசேட தீர்மானத்துக்குச் சாதகமாக வாக்களிக்காத கைமாற்றும் கம்பெனியின் உறுப்பினர் எவரும் அதற்கெதிராகத் தமது ஒருப்படாமையை ஒழிப்போனுக்கு முகவரியிடப்பட்ட எழுத்தின்மூலம் தெரிவித்து, அத்துடன் அதை, தீர்மானம் நிறைவேற்றப்பட்ட தேதியிலிருந்து ஏழு நாட்களுக்குள் கம்பெனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தில் விட்டுவிடுமிடத்து, ஒன்றில் அவர் தீர்மானத்தைப் பயனுறுத்தாது விடுமாறு ஒழிப்போனை தேவைப்படுத்தலாம் ; அல்லது உடன்படிக்கையினால் அல்லது இப்பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் உறுப்பினரினால் அல்லது ஒழிப்போனால் நீதிமன்றத்திற்குச் செய்யப்படும் விண்ணப்பத்தின் மேல், நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்பட வேண்டிய விலையில் தமது அக்கறையைக் கொள்வனவு செய்யும்படி தேவைப்படுத்தலாம்.

(4) உறுப்பினர்களின் அக்கறையைக் கொள்வனவு செய்வதற்கு ஒழிப்போன் விருப்பம் தெரிவித்தால் கம்பெனி கலைக்கப்படுவதற்கு முன்னர் கொள்வனவுப் பணம் செலுத்தப்பட வேண்டும் என்பதுடன் விசேட தீர்மானத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் ஒழிப்போனால் திரட்டப்படுதலும் வேண்டும்.

(5) விசேட தீர்மானமொன்றானது தன்னிச்சையான ஒடுக்கலுக்கான அல்லது நியமிப்பதற்கான தீர்மானமொன்றுக்கு முன்னர் அல்லது சமகாலத்தில் நிறைவேற்றப்பட்டது என்ற காரணத்தினால் இப்பிரிவின் நோக்கங்களுக்காக செல்லுபடியற்றதாதல் ஆகாது ; ஆனால் கம்பெனியின் ஒடுக்கலுக்கான கட்டளையொன்று நீதிமன்றத்தினால் அல்லது நீதிமன்றத்தின் மேற்பார்வைக்கமைய, தீர்மானம் நிறைவேற்றப்பட்ட தேதியிலிருந்து ஓராண்டிற்குள் ஆக்கப்படுமிடத்து, நீதிமன்றத்தினால் ஏற்பனுமதிக்கப்பட்டாலொழிய விசேட தீர்மானம் செல்லுபடியாதல் ஆகாது.

**329.** (1) கம்பெனியானது அதன் தனிசுகளை 324 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் செய்யப்பட்ட வெளிப்படுத்துகையில் குறிப்பிடப் பட்ட காலப்பகுதிக்குள் முழுமையாகச் செலுத்த இயலாதிருக்கு மென எந்நேரத்திலாயினும் ஒழிப்போன் அபிப்பிராயப்படு மிடத்து, அவர் உடனடியாக, கடன்தருநர்களின் கூட்டமொன்றைக் கூட்டுதல் வேண்டும் என்பதுடன் கம்பெனியின் இருப்புச் சொத்துக் கள், பொறுப்புக்கள் பற்றிய கூற்றொன்றைக் கூட்டத்தில் சமர்ப்பித் தலும் வேண்டும்.

*கடனிறுக்க வகை யின்மையின் விடயத்தில் கடன் தருநர்களின் கூட்டத்தை அழைப்பதற்கு ஒழிப்போனுக் குள்ள தத்துவம்.*

(2) ஒழிப்போன் இப்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழு கத் தவறுகின்றவிடத்து, அவர் தவறொன்றுக்குக் குற்றவாளியா தல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்துக்கு ஆளாத லும் வேண்டும்.

**330.** (1) ஒடுக்குதல் ஓராண்டிற்கு மேலாகத் தொடர்ந்து நடைபெறும் பட்சத்தில் 332 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, ஒழிப்போன் ஒடுக்குதல் ஆரம்பமான தேதியிலிருந்து முதல் ஆண்டின் முடிவிலும் அடுத்துவரும் ஒவ்வோர் ஆண்டின் முடி விலும் அல்லது ஆண்டின் முடிவிலிருந்து மூன்று மாதங்களுக்குள் வரும் முதல் வசதியான தேதியில் அல்லது பதிவாளர் அனுமதிக்கக் கூடிய அத்தகைய நீண்ட காலப்பகுதியினுள் வரும் முதலாவது வசதியான தேதியில் கம்பெனியின் பொதுக்கூட்ட மொன்றைக் கூட்டுதல் வேண்டும் என்பதுடன் அவர் முற்போந்த ஆண்டின் போது தமது செயல்களும் கையாளுகைகளும் பற்றிய கணக்கொன்றையும் ஒடுக்குதல் நடாத்தியமை பற்றிய விவரமொன் றையும் கூட்டத்தில் சமர்ப்பித்தலும் வேண்டும்.

*ஒவ்வோர் ஆண்டின் இறுதியிலும் பொதுக் கூட்டத்தை அழைப்பதற்கு ஒழிப்போனுக் குள்ள கடமை.*

(2) ஒழிப்போன் இப்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழு கத் தவறுமிடத்து அவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐம்பதி னாயிரம் ரூபாவை விஞ்சாவொரு குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

**331.** பிரிவு 332 என்பதன் ஏற்பாடுகளுக்கமைய, ஒழிப்போன் கம்பெனியின் அலுவல்கள் முழுமையாக ஒடுக்கப்பட்டவுடன் ஒழிப்போன் ஒடுக்குதல் எப்படி நடாத்தப்பட்டதென்பதையும் கம்பெனியின் ஆதனம் எப்படி கையுதிர்க்கப்பட்டதென்பதையும்

*இறுதிக் கூட்டமும் கலைத்தலும்.*

காட்டுகின்றதான ஒடுக்குதல் பற்றிய கணக்கொன்றைத் தயாரித்தல் வேண்டும் என்பதுடன் அதன்மேல் கணக்கைச் சமர்ப்பிக்கும் நோக்கத்திற்காகவும் அதுபற்றிய விளக்கம் எதனையும் கொடுக்கும் நோக்கத்திற்காகவும் அவர் கம்பெனியின் பொதுக் கூட்டமொன்றை அழைத்தலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட கூட்டமானது, அதற்கான தேதி, நேரம், இடம், குறிக்கோள் என்பவற்றைக் குறித்துரைத்து அத்தகைய தேதிக்கு ஆகக்குறைந்தது ஒரு மாதத்திற்கு முன்னராவது வர்த்தமானியில் வெளியிடப்படும் அறிவித்தலொன்றின்மூலம் அழைக்கப்படுதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட கூட்டத்தின்பின் ஒரு வாரத்திற்குள் ஒழிப்போன், கணக்கின் பிரதியொன்றைப் பதிவாளருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும் என்பதுடன் கூட்டத்தை நடாத்தியமை பற்றியதும் அதன் தேதி பற்றியதுமான விவரத்திரட்டொன்றையும் அவருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன், இவ்வுட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க பிரதி அனுப்பப்படாதவிடத்து அல்லது விவரத்திரட்டு தயாரிக்கப் படாதவிடத்து, ஒழிப்போன் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு ஆனாதலும் வேண்டும் ;

ஆயினும், கூட்டத்தில் கூட்டநடப்பெண்ணொன்று இல்லாதவிடத்து, ஒழிப்போன், முற்போந்த ஏற்பாடுகளில் குறிப்பீடு செய்யப்பட்ட விவரத்திரட்டுக்குப் பதிலாக, கூட்டம் முறையாகக் கூட்டப்பட்டதென்றும் அதில் கூட்டநடப்பெண் இருக்கவில்லையென்றும் குறிப்பிடும் விவரத்திரட்டொன்றினை ஒழிப்போன் தயாரித்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய விவரத்திட்டொன்று தயாரிக்கப்பட்டதன்மேல், விவரத்திரட்டு தயாரிக்கப்படுதல் பற்றிய இவ்வுட்பிரிவின் ஏற்பாடுகள் இணங்கியொழுகப்பட்டுள்ளனவெனக் கருதப்படுதலும் வேண்டும்.

(4) பதிவாளர் (3) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட கணக்கையும் இரண்டு விவரத்திரட்டுக்களில் ஒன்றையும் பெற்றுக்கொண்டதன்மேல் அவற்றை உடனடியாகப் பதிவுசெய்தல் வேண்டும் என்பதுடன் விவரத்திரட்டு பதிவுசெய்யப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவுற்றதன்மேல் கம்பெனி கலைக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதலும் வேண்டும் :

ஆயினும், ஒழிப்போனின் அல்லது அக்கறை கொண்டுள்ளவர் என நீதிமன்றத்திற்குத் தோன்றும் வேறு எவரேனும் ஆளின் விண்ணப்பத்தின்மீது கம்பெனியின் கலைத்தல் பயனுறவிருக்கும் தேதியை நீதிமன்றம் தகுந்ததெனக் கருதும் அத்தகைய காலத்துக் குப் பிற்போடும் கட்டளையொன்றை ஆக்கலாம்.

(5) எவ்வாளின் விண்ணப்பத்தின்மீது இப்பிரிவின் ஏற்பாடுக ளின்கீழ் கட்டளையொன்று ஆக்கப்படுகின்றதோ அவ்வாள் கட்டளை ஆக்கப்பட்ட தேதியிலிருந்து ஏழு நாட்களுக்குள் கட்ட ளையின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றைப் பதிவுசெய்வ தற்காக பதிவாளரிடம் ஒப்படைத்தல் அவரது கடமையாதல் வேண் டும். அத்துடன் அந்த ஆள் அவ்வாறு செய்யத்தவறுமிடத்து, அவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

(6) இப்பிரிவின் ஏற்பாடுகளினால் தேவைப்படுத்தப்பட்ட வாறாக கம்பெனியின் பொதுக்கூட்டமொன்றைக் கூட்டுவதற்கு ஒழிப்போன் ஒருவர் தவறுகின்றவிடத்து, அவர் தவறொன்றுக்குக் குற்றவாளியால் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட தன்மேல் ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

கடனிறுக்க வகையின்மையின் விடயத்தில் ஆண்டுக் கூட்டங்கள், இறுதிக் கூட்டங்கள் என்பன பற்றிய மாற்று ஏற்பாடு.

**332.** பிரிவு 329 என்பதன் ஏற்பாடுகள் பயனுறுகின்ற ஏதேனும் விடயத்தில் 340 ஆம், 341 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள், ஒடுக்கு தலானது கடன்தருநர்களின் தன்னிச்சையான ஒடுக்குதலேயன்றி, உறுப்பினர்களின் தன்னிச்சையான ஒடுக்குதலொன்றல்ல என்றாற்போன்று 330 ஆம், 331 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுக ளுக்குப் புறநீங்கலாக, அந்த ஒடுக்குதலுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும் :

ஆயினும், 329 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் நடத்தப்பட்ட கூட்டம் அவ்வாண்டின் முடிவுக்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் நடாத்தப்பட்டாலன்றி, ஒடுக்குதல் ஆரம்பிக்கப்பட்ட தேதியிலி ருந்து முதலாவது ஆண்டின் முடிவில் 340 ஆம் பிரிவின் ஏற்பாடு களின்கீழ் கடன்தருநர்களின் கூட்டமொன்றைக் கூட்டுமாறு ஒழிப்போன் தேவைப்படுத்தபடுதலாகாது.

## கடன்தருநர்களின் தன்னிச்சையான ஒடுக்குதலொன்றுக்கு ஏற்புடைத்தான ஏற்பாடுகள்

*கடன்தருநர்களின் ஒடுக்குதல் ஒன்றுக்கு ஏற்புடைத்தான ஏற்பாடுகள்.*

**333.** கடன்தருநர்களின் தன்னிச்சையான ஒடுக்குதலொன்றுக்குக்கு 334 முதல் 341 வரையிலான பிரிவுகளின் (இரண்டு முட்பட) ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

*கடன்தருநர்களின் கூட்டம்.*

**334.** (1) எந்தக் கூட்டத்தில் ஒடுக்குதலுக்கான தீர்மானம் முன்மொழியப்படவிருக்கின்றதோ அந்தக் கூட்டம் நடைபெறவுள்ள நாளன்று அல்லது அந்த நாளை அடுத்துவரும் நாளன்று கம்பெனியானது, கம்பெனியின் கடன்தருநர்களின் கூட்டமொன்றைக் கூட்டுதல் வேண்டும் என்பதுடன் கம்பெனியின் சொல்லப்பட்ட கூட்டம் அறிவித்தல்களை அனுப்பும் அதேநேரத்தில் கடன்தருநர்களின் கூட்டம் பற்றிய அத்தகைய கூட்டம் பற்றிய அறிவித் தல்களை கடன்தருநர்களுக்கு அஞ்சல் மூலம் அனுப்புவித்தலும் வேண்டும்.

(2) கம்பெனியானது கடன்தருநர்களின் கூட்டம் பற்றிய அறிவித்தலை வர்த்தமானியிலும் கம்பெனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் அல்லது பிரதான தொழிலிடம் அமைந்துள்ள மாவட்டத்தில் புழக்கத்திலிருக்கும் இரண்டு உள்ளூர் செய்தித் தாள்களிலும் வெளியிடப்படச் செய்வித்தல் வேண்டும்.

(3) கம்பெனியின் பணிப்பாளர்கள் —

(அ) கம்பெனியின் கடன்தருநர்களின் நிரலொன்றுடன் கம்பெனியின் அலுவல்களின் நிலைமை பற்றியதும் அவர்களது உரிமைக்கோரிக்கைகளது மதிப்பீடு செய்யப்பட்ட தொகையைப் பற்றியதுமான முழுமையான கூற்றொன்றை (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவாறு நடாத்தப்படவுள்ள கடன்தருநர்களின் கூட்டமொன்றில் முன்வைக்கச் செய்வித்தல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) அத்தகைய கூட்டத்திற்குத் தலைமைதாங்குவதற்கென தங்கள் உறுப்பினர்களுள் ஒருவரை நியமித்தலும் வேண்டும்.

(4) கடன்தருநர்களின் கூட்டத்திற்குத் தலைமை தாங்குவதற்கென நியமிக்கப்பட்ட பணிப்பாளர் கூட்டத்திற்கு வருகை தந்து அதற்குத் தலைமை தாங்குவது அவரது கடமையாதல் வேண்டும்.

(5) கம்பெனியின் எந்தக் கூட்டத்தில் தன்னிச்சையான ஒடுக்கலுக்கான தீர்மானமொன்று முன்மொழியப்படவிருக்கின்றதோ அந்தக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டு அத்துடன் ஒத்திவைக்கப்பட்ட கூட்டமொன்றில் தீர்மானம் நிறைவேற்றப்படுமிடத்து, (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளைப் பின்பற்றி நடாத்தப்பட்ட கடன்தருநர்களின் ஏதேனும் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட ஏதேனும் தீர்மானம் கம்பெனியின் ஒடுக்கலுக்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டதற்கு உடன்பின்னர் அது நிறைவேற்றப்பட்டது என்றாற்போன்று பயனுடையதாதல் வேண்டும்.

(6) (அ) ஒராம், (2) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதில் கம்பெனியால் தவறுகை புரியப்படுமிடத்து ;

(ஆ) மூன்றாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதில் கம்பெனியின் பணிப்பாளர்களால் தவறுகை புரியப்படுமிடத்து ;

(இ) நான்காம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதில் கம்பெனியின் எவரேனும் பணிப்பாளரால் தவறுகை புரியப்படுமிடத்து,

விடயத்துக்கேற்ப அத்தகைய கம்பெனி அல்லது அத்தகைய எவரேனும் பணிப்பாளர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு ஆளாதல் வேண்டும் என்பதுடன் தவறுகை கம்பெனியால் புரியப்படும் விடயத்தில் தவறுகை புரிந்துள்ள கம்பெனியின் அலுவலர் ஒவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஓரிலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

ஒழிப்போனை நியமித்தல்.

***335.*** கடன்தருநர்களும் கம்பெனியும் 334 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட தத்தமது கூட்டங்களில் கம்பெனியின் அலுவல்களை ஒடுக்கும் நோக்கத்திற்காகவும் அதன் இருப்புச் சொத்துக்களைப் பகிர்ந்தளிக்கும் நோக்கத்திற்காகவும் ஒழிப்போனாக இருப்பதற்கென ஆளொருவரைப் பெயர்குறித்து நியமிக்கலாம் கடன்தருநர்களும் வெவ்வேறு ஆட்களைப் பெயர்குறித்து நியமிக்குமிடத்து கடன்தருநர்களால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஆள் ஒழிப்போனாதல் வேண்டும் என்பதுடன் கடன்தருநர்களால் ஆளெவரும் பெயர்குறித்து நியமிக்கப்படாதவிடத்து, கம்பெனியால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஆள் எவரேனுமிருப்பின் அவர் ஒழிப்போனாதலும் வேண்டும் :

ஆயினும், வெவ்வேறு ஆட்கள் பெயர்குறித்து நியமிக்கப்படும் விடயத்தில், கம்பெனியின் பணிப்பாளர், உறுப்பினர் அல்லது கடன்தருநர் எவரும் கடன்தருநர்களால் பெயர்குறித்து நியமனம் செய்யப்பட்ட தேதியிலிருந்து ஏழு நாட்களுள், கம்பெனியால் ஒழிப்போனாக பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஆள், கடன்தருநர்களால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஆளுக்குப் பதிலாக அல்லது அவருடன் கூட்டாக ஒழிப்போனாக இருத்தல் வேண்டும் எனப் பணிக்கும் கட்டளையொன்றுக்காக அல்லது கடன்தருநர்களால் நியமிக்கப்பட்ட ஆளுக்குப் பதிலாக வேறோர் ஆளை ஒழிப்போனாக நியமிப்பதற்கான கட்டளையொன்றுக்காக நீதிமன்றத்திற்கு விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.

சோதனைக் குழுவை நியமித்தல்.

***336.*** (1) கடன்தருநர்கள், 334 ஆம் பிரிவின் ஏற்பாடுகளைப் பின்பற்றி நடத்தப்படும் கூட்டத்தில் அல்லது அதற்குப் பின்னரான ஏதேனும் கூட்டத்தில், தாங்கள் தகுந்ததென எண்ணினால் ஐந்து ஆட்களுக்கு மேற்படாதவர்களைக் கொண்ட சோதனைக்குழுவொன்றை நியமிக்கலாம் என்பதுடன் அத்தகைய குழுவொன்று நியமிக்கப்படுமிடத்து, கம்பெனியானது தன்னிச்சையான ஒடுக்குதலுக்கான தீர்மானம் நிறைவேற்றப்படும் கூட்டத்தில் அல்லது அதன் பின்னர் ஏதேனும் நேரத்தில் பொதுக்கூட்டமொன்றில் குழுவின் உறுப்பினர்களாகச் செயலாற்றுவதற்கு, தகுந்தவர்களென அது எண்ணும் ஐந்து பேர்களை விஞ்சாத அத்தகைய எண்ணிக்கையினரான ஆட்களை நியமிக்கலாம்.

ஆயினும், கடன்தருநர்கள், தாம் தகுந்ததென எண்ணினால் கம்பெனியால் அவ்வாறு நியமிக்கப்பட்ட எல்லா ஆட்களும் அல்லது அவர்களுள் எவரும் சோதனைக்குழுவின் உறுப்பினர்களாக

இருக்கவேண்டியதில்லை எனத் தீர்மானிக்கலாம் அத்துடன் கடன்தருநர்கள் அவ்வாறு தீர்மானிக்குமிடத்து, தீர்மானத்திற் குறித்துரைக்கப்பட்ட ஆட்கள், நீதிமன்றம் வேறுவிதமாகப் பணித்தாலன்றி, குழுவிற் செயலாற்றுவதற்குத் தகைமையுடைய வர்களாதல் ஆகாது என்பதுடன் இப்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் நீதிமன்றத்திற்குச் செய்யப்படும் ஏதேனும் விண்ணப்பத்தின்மேல் நீதிமன்றம் தகுந்ததென அது எண்ணினால் தீர்மானத்திற் குறித்துரைக்கப்பட்ட ஆட்களுக்குப் பதிலாக அத்தகைய உறுப்பினர் களாகச் செயலாற்றுவதற்கென வேறு ஆட்களை நியமிக்கலாம்.

(2) இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் விதியின் ஏற்பாடு களுக்கமைய, 300 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளைத் தவிர, நீதிமன்றத்தினால் செய்யப் பட்ட ஒடுக்குதல் ஒன்றில் நியமிக்கப்பட்ட ஒரு சோதனைக்குழு தொடர்பில் அவை ஏற்புடையனவாதல்போன்று, இப்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் நியமிக்கப்படும் சோதனைக்குழுவொன்று தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்.

*ஒழிப்போனின் ஊதியத்தை நிர்ணயித்தலும் பணிப்பாளர்களின் தத்துவங்கள் இல்லாதொழிதலும்.*

**337.** (1) சோதனைக்குழு அல்லது அத்தகைய குழு எதுவும் இல்லாதவிடத்து, கடன்தருநர்கள், ஒழிப்போனுக்கு அல்லது ஒழிப் போருக்குச் செலுத்தப்படவேண்டிய ஊதியத்தை நிர்ணயிக்கலாம்.

(2) ஒழிப்போர் ஒருவர் நியமிக்கப்பட்டதன்மேல், சோதனைக் குழு அல்லது அத்தகைய குழு எதுவும் இல்லாவிடத்து, கடன்தரு நர்கள் தத்துவங்களின் தொடர்ச்சியை ஏற்பனுமதிக்கும் அளவு வரை தவிர, பணிப்பாளர்களின் எல்லாத் தத்துவங்களும் இல்லா தொழிதல் வேண்டும்.

*ஒழிப்போனின் பதவியில் ஏற்படும் வெற்றிடத்தை நிரப்புவதற்கான தத்துவம்.*

**338.** நீதிமன்றத்தினால் அல்லது நீதிமன்றத்தின் பணிப்பின் பேரில் நியமிக்கப்பட்ட ஒழிப்போன் ஒருவர் அல்லாத வேறு ஒழிப் போனொருவரின் பதவியில் இறப்பினால், பதவிவிலகலினால் அல்லது வேறுவகையான வெற்றிடமொன்று ஏற்படுமிடத்து, கடன்தருநர்கள் அவ்வெற்றிடத்தை நிரப்பலாம்.

*கடன் தருநர்களின் தன்னிச்சையான ஒடுக்குத லொன்றுக்கு*

**339.** பிரிவு 328 என்பதன் ஏற்பாடுகள் சொல்லப்பட்ட பிரிவின் கீழான ஒழிப்போனின் தத்துவங்கள் நீதிமன்றத்தின் அல்லது சோதனைக் குழுவின் ஏற்பனுமதியுடன் தவிர, பிரயோகிக்கப்படு தலாகாது என்ற திரிவுடன் உறுப்பினர்களின் தன்னிச்சையான

328 ஆம் பிரிவு ஏற்புடையதாதல்.

ஒடுக்குதலொன்றின் விடயத்தில் ஏற்புடையதாகின்றாற்போன்று கடன்தருநர்களின் தன்னிச்சையான ஒடுக்குதல் ஒன்றின் விடயத்திலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

ஒவ்வோராண்டின் முடிவிலும் கம்பெனியின் கூட்டங்களையும் கடன்தருநர்களின் கூட்டங்களையும் அழைப்பதற்கு ஒழிப்போனுக்குள்ள கடமை.

**340.** (1) ஒடுக்குதல் ஓராண்டிற்குமேல் தொடர்ந்து நடைபெறும் பட்சத்தில், ஒடுக்குதல் ஆரம்பமானதிலிருந்து முதலாவது ஆண்டின் முடிவிலும் அத்துடன் அடுத்துவரும் ஒவ்வோராண்டின் முடிவிலும் அல்லது ஆண்டு முடிவடைந்ததலிருந்து மூன்று மாதங்களுக்குள் முதலாவது வசதியான தேதியில் அல்லது பதிவாளர் அனுமதிக்கக்கூடிய அத்தகைய நீண்ட காலப்பகுதியினுள்வரும் முதல் வசதியான தேதியில் ஒழிப்போன் கம்பெனியின் பொதுக்கூட்டமொன்றையும் கடன்தருநர்களின் கூட்டமொன்றையும் கூட்டுதல் வேண்டும் என்பதுடன் முற்போந்த ஆண்டின் போது தமது செயல்கள், கையாளுகைகள் பற்றியதும் அத்துடன் ஒடுக்குதலை நடத்தியமை பற்றியதுமான கணக்கொன்றை கூட்டங்களில் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(2) ஒழிப்போன் இப்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுமிடத்து அவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்துக்கு ஆளாதலும் வேண்டும்.

இறுதிக் கூட்டமும் கலைக்கப்படுதலும்.

**341.** (1) கம்பெனியின் அலுவல்கள் முழுமையாக ஒடுக்கப்பட்டவுடன் ஒழிப்போன் கம்பெனியின் ஒடுக்குதல் எப்படி நடாத்தப்பட்டதென்பதையும் கம்பெனியின் ஆதனம் எப்படி கையுதிர்க்கப்பட்டிருக்கின்றதென்பதையும் காட்டி, ஒடுக்குதல் பற்றிய கணக்கொன்றைத் தயாரித்தல் வேண்டும் ; அத்துடன் அதன்மேல் கூட்டங்களில் கணக்கைச் சமர்ப்பிக்கும் நோக்கத்திற்காகவும் அதுபற்றிய விளக்கமொன்றைக் கொடுக்கும் நோக்கத்திற்காகவும் கம்பெனியின் பொதுக் கூட்டமொன்றையும் கடன்தருநர்களின் கூட்டமொன்றையும் அழைத்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்படும் கூட்டம் ஒவ்வொன்றும் அதற்கான தேதி, நேரம், இடம் அத்துடன் குறிக்கோள் என்பவற்றைக் குறித்துரைத்து, ஆகக்குறைந்தது

அத்தகைய தேதிக்கு ஒரு மாதத்திற்கு முன்னராவது வர்த்தமானியில் வெளியிடப்படும் அறிவித்தல்மூலம் அழைக்கப்படுதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட கூட்டங்கள் நடாத்தப்பட்ட தேதியிலிருந்து, அல்லது அத்தகைய கூட்டங்கள் ஒரே நாளில் நடாத்தப்படாதவிடத்து, பிந்திய கூட்டத்தின் தேதியிலிருந்து ஒரு வாரகாலத்திற்குள் ஒழிப்போன் கணக்கின் பிரதியொன்றை கம்பெனிகள் பதிவாளருக்கு அனுப்புதல் வேண்டும் ; அத்துடன் கூட்டங்கள் நடாத்துதல் பற்றியும் அவற்றின் தேதிகள் பற்றியும் அவருக்கு விவரத்திரட்டொன்றினைச் சமர்ப்பித்தல் வேண்டும் ; இவ்வுட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க பிரதி அனுப்பப்படாதவிடத்து அல்லது விவரத்திரட்டு சமர்ப்பிக்கப் படாதவிடத்து, ஒழிப்போன் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும் :

ஆயின், அத்தகைய இரண்டு கூட்டங்களில் ஏதேனும் ஒன்றில் கூட்ட நடப்பெண் இல்லாதவிடத்து, ஒழிப்போன், முற்போந்த ஏற்பாடுகளில் குறிப்பீடுசெய்யப்பட்ட விவரத்திரட்டிற்குப் பதிலாக, கூட்டம் முறைப்படி நடத்தப்பட்டது எனவும் அதில் கூட்ட நடப்பெண் இருக்கவில்லை எனவும் விவரத்திரட்டொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய விவரத் திரட்டொன்று சமர்ப்பிக்கப்படுவதன்மேல் விவரத்திரட்டைச் சமர்ப்பித்தல் தொடர்பில் இணங்கியொழுகப்பட்டதாகக் கருதப் படுதல் வேண்டும்.

(4) பதிவாளர் கணக்கையும் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஒவ்வொரு கூட்டம் தொடர்பிலும் (3) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட இரண்டு விவரத்திரட்டுக்களுள் ஒன்றையும் பெற்றுக்கொண்டதன்மேல் அவற்றை உடனடியாகப் பதிவுசெய்தல் வேண்டும் என்பதுடன் அவற்றைப் பதிவுசெய்ததிலிருந்து மூன்று மாதங்கள் முடிவுற்றதன்மேல் கம்பெனியானது கலைக்கப் பட்டதாகக் கருதப்படுதலும் வேண்டும் :

ஆயினும், நீதிமன்றமானது, ஒழிப்போனின் அல்லது அக்கறை கொண்டவரென நீதிமன்றத்திற்குத் தோன்றும் வேறு எவரேனும் ஆளின் விண்ணப்பத்தின்மேல் எந்தத் தேதியில் கம்பெனியின் கலைத்தல் பயனுறவிருக்கின்றதோ அந்தத் தேதியை நீதிமன்றம் தகுந்ததெனக் கருதும் அத்தகைய காலத்துக்குப் பிற்போடும் கட்டளையொன்றை ஆக்கலாம்.

(5) பதிவுசெய்யப்படுவதற்கான கட்டளையின் அத்தாட்சிப் படுத்தப்பட்ட பிரதியொன்றை, கட்டளை ஆக்கப்பட்ட தேதியிலிருந்து ஏழு நாட்களுக்குள் பதிவாளருக்கு ஒப்படைத்தல், எந்த ஆளின் விண்ணப்பத்தின்மீது நீதிமன்றத்தின் கட்டளையானது இப்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் ஆக்கப்பட்டதோ அந்த ஆளின் கடமையாதல் வேண்டும் என்பதுடன் அந்த ஆள் அவ்வாறு செய்யத் தவறுமிடத்து, தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

(6) இப்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் தேவைப்படுத்தப்பட்ட வாறு ஒழிப்போன் ஒருவர் கம்பெனியின் கூட்டமொன்றை அல்லது கடன்தருநர்களின் கூட்டமொன்றை அழைக்கத் தவறுமிடத்து, அவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

### தன்னிச்சையான ஒடுக்குதல் ஒவ்வொன்றுக்கும் ஏற்புடைத்தான ஏற்பாடுகள்

*தன்னிச்சையான ஒடுக்குதல் ஒவ்வொன்றுக்கும் ஏற்புடைத்தான ஏற்பாடுகள்.*

***342.*** பிரிவு 343 முதல் பிரிவு 350 வரையிலான பிரிவுகளின் ஏற்பாடுகள் (இரண்டும் உட்பட) தன்னிச்சையான ஒடுக்குதல் ஒவ்வொன்றுக்கும், அது பங்குதாரர்களின் ஒடுக்குதலாயிருப்பினுஞ்சரி, கடன்தருநர்களின் ஒடுக்குதலாயிருப்பினுஞ்சரி, ஏற்புடையனவாதல் வேண்டும்.

**343.** முன்னுரிமைக் கொடுப்பனவுகள் பற்றிய இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, கம்பெனியின் ஆதனம், அதன் ஒடுக்குதலின்மீது சமமான இணை நிலையான அதன் பொறுப்புக்களைத் தீர்த்து வைப்பதில் பிரயோகிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய பிரயோகத்திற்கமைய அமைப்பகவிதி வேறுவிதமாக ஏற்பாடு செய்தாலன்றி, பங்கு தாரர்களிடையே, கம்பெனியிலுள்ள அவர்களது உரிமைகளுக்கும் அக்கறைகளுக்கும் இணங்க, பகிர்ந்தளிக்கப்படுதல் வேண்டும். *கம்பெனியின் ஆதனத்தைப் பகிர்ந்தளித்தல்.*

**344.** (1) ஒழிப்போன் – *தன்னிச்சையான ஒடுக்குதலின் ஒழிப்போனுக்குள்ள தத்துவங்களும் கடமைகளும்.*

(அ) பங்குதாரர்களின் தன்னிச்சையான ஒடுக்குதலொன்றின் விடயத்தில், கம்பெனியின் விசேட தீர்மானமொன்றின் ஏற்பனுமதியுடனும், கடன்தருநர்களின் தன்னிச்சையான ஒடுக்குதலொன்றின் விடயத்தில் நீதிமன்றத்தின் அல்லது சோதனைக் குழுவின் அல்லது (அத்தகைய சோதனைக்குழு எதுவும் இல்லாவிடில்) கடன்தருநர்களின் கூட்டமொன்றின் ஏற்பனுமதியுடன், நீதிமன்றத்தால் செய்யப்படும் ஒடுக்குதலொன்றில் ஒழிப்போன் ஒருவர் தொடர்பில் 292 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஈ), (உ) அத்துடன் (ஊ) என்னும் பந்திகளில் ஏற்பாடுகளில் குறித்துரைக்கப்படும் தத்துவங்களுள் எவற்றையும் பிரயோகிக்கலாம் ;

(ஆ) ஏற்பனுமதியின்றி, நீதிமன்றத்தால் செய்யப்படும் ஒடுக்குதல் ஒன்றில் ஒழிப்போனுக்கு இச்சட்டத்தால் கொடுக்கப்பட்டவையும் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவையுமான தத்துவங்களைத் தவிர வேறு ஏதேனும் தத்துவத்தைப் பிரயோகிக்கலாம் ;

(இ) உதவுதொகை செலுத்துநர்களின் நிரலை தீர்த்துக்கட்டுவதற்கு இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் நீதிமன்றத்திற்குள்ள தத்துவங்களைப் பிரயோகிக்கலாம் என்பதுடன் உதவுதொகை செலுத்துநர்களின் நிரல் உதவுதொகை செலுத்துநர்களாக அதில் பெயர்குறிப்பிடப்பட்டுள்ள ஆட்களின் பொறுப்புக்கு முதற்றோற்றச் சான்றாயிருத்தலும் வேண்டும் ;

(ஈ) அழைப்புகள் விடுப்பதற்கு நீதிமன்றத்திற்குள்ள தத்துவங்களைப் பிரயோகிக்கலாம் ;

(உ) விசேட தீர்மானத்தின் மூலம் கம்பெனியின் ஏற்பனு மதியைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்திற்கென அல்லது தகுந்ததென ஒழிப்போன் கருதக்கூடிய வேறு ஏதேனும் நோக்கத்திற்கென கம்பெனியின் பொதுக் கூட்டங்களைக் கூட்டலாம்.

(2) ஒழிப்போன் கம்பெனியின் தனிசுளைச் செலுத்துதல் வேண்டும் என்பதுடன் உதவுதொகை செலுத்துநர்களின் உரிமை களை அவர்களிடையே சீராக்குதலும் வேண்டும்.

(3) ஒழிப்போர் பலர் நியமிக்கப்படும்போது, இச்சட்டத்தால் அளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவம் அவர்களது நியமனத்தின் போது தீர்மானிக்கப்படக் கூடியவாறு அவர்களுள் ஒருவரால் அல் லது ஒன்றுக்கு மேற்பட்டவர்களால் அல்லது அத்தகைய தீர்மானத் தைச் செய்வதில் தவறுகை புரியப்பட்டிருப்பின் இரண்டிற்குக் குறையாத ஏதேனும் எண்ணிக்கையினரால் பிரயோகிக்கப்படலாம்.

*தன்னிச்சையான ஒடுக்குதலில் ஒழிப்போனை நியமிப்பதற்கும் அகற்றுவதற்கும் நீதிமன்றத்திற் குள்ள தத்துவம்.*

**345.** (1) எத்தகையதுமான எக்காரணத்தினாலாவது ஒழிப் போன் ஒருவர் செயலாற்றாவிடத்து, நீதிமன்றம் ஒழிப்போன் ஒருவரை நியமிக்கலாம்.

(2) நீதிமன்றமானது காட்டப்பட்ட காரணத்தின்மீது ஒழிப் போன் ஒருவரை அகற்றிவிட்டு வேறொரு ஒழிப்போனை நியமிக்கலாம்.

*ஒழிப்போனை தமது நியமனம் பற்றி அறிவித்தல் கொடுத்தல்.*

**346.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுள் எவற்றின் கீழும் நியமிக்கப்பட்ட ஒழிப்போன் ஒருவர் தமது நியமனத் தேதியிலிருந்து பதினான்கு நாட்களுக்குள் தமது நியமனம் பற்றிய அறிவித்த லொன்றை, விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் வர்த்தமானியில் வெளியிடப்படவேண்டுமென்பதுடன் பதிவு செய்வதற்கென பதிவாளரிடம் ஒப்படைத்தலும் வேண்டும்.

(2) ஒழிப்போன் (1) ஆம் உட்பிரிவின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுமிடத்து, அவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக் கப்படுவதன்மேல் ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

ஒழுங்கேற்பாடு எப்போது கடன்தருநர் களைப் பிணிக்கும் என்பது.

***347.*** *(1)* ஒடுக்கப்படவிருக்கும் அல்லது ஒடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு கம்பெனிக்கும் அதன் கடன்தருநர் களுக்குமிடையில் செய்துகொள்ளப்படும் ஏதேனும் ஒழுங்கேற் பாடு, இப்பிரிவின் ஏற்பாடுகளின் கீழான மேன்முறையீட்டு ரிமைக்கு அமைய அதிவிசேட தீர்மானமொன்றினால் ஏற்பனுமதிக்கப்படுமிடத்து, கம்பெனியையும், கடன்தருநர்களின் எண்ணிக்கையிலும் பெறுமதியிலும் நாலில் மூன்று பகுதியினரால் இணங்கிக்கொள்ளப்படுமிடத்து, கடன்தருநர்களையும் பிணித்தல் வேண்டும்.

*(2)* ஒழுங்கேற்பாடு பூர்த்தியாக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று வாரங்களுக்குள் எவரேனும் கடன்தருநர் அல்லது உதவுதொகை செலுத்துநர் அத்தகைய ஒழுங்கேற்பாட்டிற்கெதிராக நீதிமன்றத் திற்கு மேன்முறையீடு செய்யலாம் என்பதுடன் அதன்மேல் நீதிமன் றம் நீதியானதென அது எண்ணுகின்றவாறு ஒழுங்கேற்பாட்டைத் திருத்தலாம், வேறுபடுத்தலாம் அல்லது உறுதிப்படுத்தலாம்.

கேள்விகளைத் தீர்மானித்துக் கொள்வதற்கென அல்லது தத்துவங்களைப் பிரயோகித்துக் கொள்வதற்கென நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்கும் தத்துவம்.

***348.*** *(1)* கம்பெனியின் ஒடுக்குதலிலிருந்து எழும் ஏதேனும் கேள்வியைத் தீர்மானிப்பதற்கென அல்லது கம்பெனியானது நீதிமன்றத்தால் ஒடுக்கப்படுவதாயிருப்பின் அழைப்புகளை வலுவுக்கிடுதல் தொடர்பில் அல்லது வேறு ஏதேனும் கருமம் தொடர்பில் நீதிமன்றம் பிரயோகிக்கக்கூடிய தத்துவங்கள் எல்லா வற்றையும் அல்லது அதனுள் எவற்றையும் பிரயோகிப்பதற்கென ஒழிப்போன் அல்லது எவரேனும் உதவுதொகை செலுத்துநர் அல்லது கடன்தருநர் நீதிமன்றத்திற்கு விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.

*(2)* கேள்வியின் தீர்மானம் அல்லது தத்துவத்தின் தேவைப் படுத்தப்பட்ட பிரயோகம் நீதியானதாகவும் நன்மை பயப்பதாகவும் இருக்குமென நீதிமன்றம் திருப்திப்படின் அது தகுந்தவையென எண்ணும் அத்தகைய நியதிகளினதும் நிபந்தனைகளினதும் பேரில் முழுமையாக அல்லது பகுதியளவில் விண்ணப்பத்திற்கு இணங்கலாம். அல்லது நீதியானதென அது எண்ணுகின்ற வாறான அத்தகைய வேறு கட்டளையை விண்ணப்பத்தின்மீது ஆக்கலாம்.

(3) ஒடுக்கலினான நடவடிக்கைகளை நிறுத்திவைத்து (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் பயனைக்கொண்டு ஆக்கப்பட்ட ஒரு கட்டளையின் பிரதியொன்று, உடனடியாக அல்லது விதித் துரைக்கப்படக்கூடியவாறான வேறுவகையாகக் கம்பெனியால் பதிவாளருக்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். இவர் கம்பெனி தொடர்பிலான தமது புத்தகங்களில் கட்டளை பற்றிய குறிப்பொன்றைச் செய்தல் வேண்டும்.

*தன்னிச்சையான ஒடுக்கலுக்கான செலவுத் தொகைகள்.*

**349.** ஒழிப்போனின் ஊதியம் உட்பட ஒடுக்குதலில் முறையாக உதவப்பட்ட எல்லாச் செலவுத்தொகைகளும், விதிப்பனவுகளும் செலவுகளும் வேறு எல்லா உரிமைக்கோரிக்கைகளுக்கும் மேலான முந்துரிமையாக கம்பெனியின் இருப்புச் சொத்துக்களிலிருந்து செலுத்தப்படற்பாலனவாதல் வேண்டும்.

*கடன்தருநர் களினதும் உதவுதொகை செலுத்துநர் களினதும் உரிமைகளுக்கான பேணல்.*

**350.** கம்பெனியொன்றின் ஒடுக்குதலானது, அதனை நீதிமன்றத்தின் மூலம் ஒடுக்குவதற்கு எவரேனும் கடன்தரு நருக்குள்ள அல்லது உதவுதொகை செலுத்துநருக்குள்ள உரிமையைத் தடைசெய்தலாகாது. ஆனால் உதவுதொகை செலுத்துநர் ஒருவரால் ஒடுக்கலுக்கான ஒரு விண்ணப்பம் செய்யப்படுமிடத்து, தன்னிச்சையான ஒடுக்குதலினால் உதவுதொகை செலுத்துநர்களின் உரிமைகள் பங்கப்படுத்தப்படும் என நீதிமன்றம் திருப்தியடைதல் வேண்டும்.

## (IV) ஒடுக்குதல் நீதிமன்றத்தின் மேற்பார்வைக்கு அமைந்தது

*மேற்பார்வைக் கமைய ஒடுக்குதல் செய்யும்படி கட்டளையிடு வதற்கான தத்துவம்.*

**351.** கம்பெனியொன்று தன்னிச்சையான ஒடுக்கலுக்கான தீர்மானமொன்றை நிறைவேற்றியிருக்கும்போது தன்னிச்சையான ஒடுக்குதல் தொடர செய்யப்படவேண்டும் ஆனால், நீதிமன்றத் தின் அத்தகைய மேற்பார்வைக்கு அமையவும், அத்துடன் கடன்தருநர்களுக்கு உதவுதொகை செலுத்துநர்களுக்கு அல்லது ஏனையோருக்கு நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் செய்வதற்கான அத்தகைய சுதந்திரத்துடனும் பொதுவில் நீதியானதென நீதிமன்றம் எண்ணக்கூடியவாறான அத்தகைய நியதி நிபந்தனை கள்மீதுமே செய்யப்பட வேண்டுமென நீதிமன்றம் கட்டளை யொன்றை ஆக்கலாம்.

***352.*** நீதிமன்றத்தின் மேற்பார்வைக்கமைய தன்னிச்சையான ஒடுக்குதலொன்று தொடர்ந்து செய்யப்படுவதற்கான மனுவொன்று வழக்குகளின் மீது நீதிமன்றத்திற்கு நியாயாதிக்கம் அளிக்கும் நோக்கத்திற்கென நீதிமன்றத்தால் செய்யப்படும் ஒடுக்குதலுக்கான மனுவொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

*மேற்பார்வைக் கமைய செய்யப்படும் ஒடுக்குதலுக்கான மனுவின் பயன்.*

***353.*** நீதிமன்றத்தின் மேற்பார்வைக்கு அமைந்த ஒடுக்குதலொன்று 275 ஆம் , 276 ஆம் பிரிவின் நோக்கத்திற்காக நீதிமன்றத்தினால் செய்யப்படும் ஒடுக்குதலொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

*மேற்பார்வைக் கமைய செய்யப் படும் ஒடுக்கு தலுக்கு 275ஆம், 276 ஆம் பிரிவு கள் ஏற்புடை யனவாதல்.*

***354.*** (1) மேற்பார்வைக்கமைந்த ஒடுக்குதல் ஒன்றுக்கான கட்டளையொன்று நீதிமன்றத்தால் ஆக்கப்படுமிடத்து, நீதிமன்றம் அக்கட்டளைமூலம் அல்லது அடுத்துறும் ஏதேனும் கட்டளை மூலம் ஒரு மேலதிக ஒழிப்போனை நியமிக்கலாம்.

*ஒழிப்போரை நியமிப்பதற்கு அல்லது அகற்றுவதற்கு நீதிமன்றத் திற்குள்ள தத்துவம்.*

(2) ஒராம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட ஒழிப்போன் ஒருவர் தன்னிச்சையான ஓர் ஒடுக்குதலில் ஒழிப்போனின் நியமனம் தொடர்பில் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க அவர் முறையாக நியமிக்கப்பட்டிருந்தாற்போன்று அதே தத்துவங்களைக் கொண்டிருத்தலும் அதே கடப்பாடுகளுக்கு அமைந்தவராயிருத்தலும் எல்லாவிதத்திலும் அதே நிலைமையைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

(3) நீதிமன்றமானது, (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் நியமிக்கப்பட்ட எவரேனும் ஒழிப்போனை அல்லது நீதிமன்றத்தின் மேற்பார்வைக்கமைந்த ஓர் ஒடுக்குதலில் தொடர்ந்திருக்கும் எவரேனும் ஒழிப்போனை அகற்றலாம் என்பதுடன் அத்தகைய அகற்றலினால் அல்லது இறப்பினால் அல்லது பதவி விலகலினால் ஏற்பட்ட ஏதேனும் வெற்றிடத்தையும் நிரப்பலாம்.

***355.*** (1) மேற்பார்வைக்கமைந்த ஒடுக்குதலொன்றிற்கான கட்டளையொன்று 351 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் செய்யப்படுமிடத்து, ஒழிப்போன், நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட எவையேனும் மட்டுப்பாடுகளுக்கமைய, கம்பெனி தன்னிச்சையாக ஒடுக்கப்படுகின்றது என்றாற்போன்று, நீதிமன்றத்தின் ஏற்பனுமதியோ அல்லது தலையீடோ இன்றி தமக்குரிய எல்லாத் தத்துவங்களையும் பிரயோகிக்கலாம் :

*மேற்பார்வைக் கட்டளையின் பயன்.*

ஆயினும், 292 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஈ), (உ), (ஊ) என்னும் பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட தத்துவங்கள், நீதிமன்றத்தின் ஏற்பனுமதியுடனன்றி அல்லது கட்டளைக்குமுன் ஒடுக்குதலானது கடன்தருநர்களின் தன்னிச்சையான ஒடுக்குதல் ஒன்றாயிருந்த விடயத்தில் நீதிமன்றத்தின் ஏற்பனுமதியுடனன்றி அல்லது அத்தகைய குழு எதுவும் இல்லாதவிடத்து, கடன்தருநர்களின் கூட்டமொன்றின் ஏற்பனுமதியுடனன்றி, ஒழிப்போனால் பிரயோகிக்கப்படுதலாகாது.

(2) நீதிமன்றத்தின் மேற்பார்வைக்கமைந்த ஒடுக்குதலொன்று, இதற்கான எட்டாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் நோக்கத்திற்காக, நீதிமன்றத்தால் செய்யப்படும் ஒடுக்கல் ஒன்றாக அமைதலாகாது, ஆனால், மேற்கூறப்பட்டவாறாக மேற்பார்வைக்கமைந்த ஒடுக்கலொன்றிற்கான கட்டளை எல்லா நோக்கங்களுக்கும், நீதிமன்றத்தால் செய்யப்படும் ஒடுக்கலுக்கான ஒரு கட்டளையாகக் கருதப்படல் வேண்டும் :

ஆயினும், மேற்பார்வைக்கமைந்த ஒடுக்கலுக்கான கட்டளை, சோதனைக்குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்த, கடன்தருநர்களின் தன்னிச்சையான ஒடுக்குதல் ஒன்று தொடர்பாக ஆக்கப்பட்டதாயிருக்குமிடத்து, கட்டளையானது, 300 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் நோக்கங்களுக்கென, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளைத் தவிர, இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளினால் தன்னிச்சையான ஒடுக்குதல் ஒன்றில் அப்பிரிவின் நடைமுறை புறநீக்கம் செய்யப்பட்டுள்ள அளவு வரை தவிர, நீதிமன்றத்தால் செய்யப்படும் ஒடுக்குதலுக்கான ஒரு கட்டளையாகக் கருதப்படுதல் வேண்டும்.

## உரிமைக்கோரிக்கைகளை எண்பித்தலும் வகைப்படுத்தலும்

ஏல்தகவான உரிமைக் கோரிக்கைகள்.

**356.** தற்கால அல்லது வருங்கால, நிச்சயமான அல்லது எதிர்பாரா தனிசு அல்லது பொறுப்பொன்று, அது ஆய்ந்தறியப்பட்ட தனிசாகவோ அல்லது பொறுப்பாகவோ இருப்பினுஞ்சரி சேதவீட்டிற்கான பொறுப்பொன்றாகவிருப்பினுஞ்சரி, கலைத்தலிலுள்ள கம்பெனியொன்றிற்கெதிரான உரிமைக்கோரிக்கையொன்றாக ஏற்றுக்கொள்ளப்படலாம்.

*பிணைப்பொறுப் பற்ற கடன்தரு நர்களால் செய்யப்படும் உரிமைக் கோரிக்கை.*

**357.** (1) ஒடுக்குதலிலுள்ள கம்பெனியொன்றுக்கெதிராக பிணைப்பொறுப்பற்ற கடன்தருநரால் செய்யப்படும் உரிமைக் கோரிக்கையொன்று விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் செய்யப்பட வேண்டும் என்பதுடன் —

(அ) உரிமைக்கோரிக்கையின் முழு விவரங்களையும் கொண்டிருத்தலும் ; அத்துடன்

(ஆ) உரிமைக் கோரிக்கையை சான்றுப்படுத்துகின்ற அல்லது ஆதாரப்படுத்துகின்ற எவையேனும் ஆவணங்களை இனம் காணுதலும்,

வேண்டும்.

(2) ஒழிப்போன் —

(அ) ஒராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆவணமொன்று முன்வைக்கப்படுதலைத் தேவைப்படுத்தலாம் ; அத்துடன்

(ஆ) உரிமைக்கோரிக்கையொன்று சத்தியக்கடதாசியொன்றினால் செம்மைப்படுத்தப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தலாம்.

(3) ஒழிப்போன் சாத்தியப்படக்கூடியவிரைவில் உரிமைக் கோரிக்கையொன்றை முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ ஒன்றில் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும் அன்றேல் நிராகரித்தல் வேண்டும். ஒழிப்போன் உரிமைக்கோரிக்கையொன்று முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ தவறாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது அல்லது நிராகரிக்கப்பட்டுள்ளது எனப் பின்னராகக் கருதினால் அவர் அம்முடிவை இல்லாதொழிக்கலாம் அல்லது திருத்தலாம்.

(4) ஒழிப்போன் ஒருவர் உரிமைக்கோரிக்கையொன்றை முழுமையாகவாயினுஞ்சரி அல்லது பகுதியளவிலாயினுஞ்சரி, நிராகரிப்பாராயின், அவர் உடனடியாக நிராகரிப்பு பற்றிய அறிவித்தலொன்றை கடன்தருநருக்கு எழுத்தில் கொடுத்தல் வேண்டும்.

(5) ஓராம் உட்பிரிவின்கீழ் உரிமைக்கோரிக்கையொன்றைச் செய்வதற்கான அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழ் ஆவணமொன்றை முன்வைப்பதற்கான செலவுகள் உரிமைக்கோரிக்கையைச் செய்யும் கடன்தருநரால் பொறுப்பேற்கப்படுதல் வேண்டும்.

(6) (அ) இப்பிரிவின்கீழான கோரிக்கையொன்று பொய்யானதாக அல்லது பிறழ்வழி இட்டுச்செல்வதாக உள்ளதென அறிந்திருந்தும் முக்கியமான விவரமொன்றில் பொய்யான அல்லது பிறழ்வழி இட்டுச் செல்கின்ற உரிமைக்கோரிக்கையைச் செய்கின்ற அல்லது செய்யப்படுவதற்கு அதிகாரமளிக்கின்ற ; அல்லது

(ஆ) இப்பிரிவின் கீழான உரிமைக் கோரிக்கையொன்றிலிருந்து ஏதேனும் விடயத்தை, விட்டுவிடுதலானது, முக்கியமான விவரத்தில் உரிமைக்கோரிக்கையை பொய்யானதாக்குகின்றது அல்லது பிறழ்வழி இட்டுச் செல்கின்றது என அறிந்திருந்தும் அதனை விட்டுவிடுகின்ற அல்லது விட்டுவிடுவதற்கு அதிகாரமளிக்கின்ற,

ஒவ்வோராளும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு அல்லது ஐந்தாண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

*பிணைப் பொறுப்புடைய கடன்தருநர்களின் உரிமைகளும் கடமைகளும்.*

**358.** (1) பிணைப்பொறுப்புடைய கடன்தருநர் ஒருவர் –

(அ) பொறுப்பொன்றுக்கு அமைவான ஆதனம் தொடர்பில், அவ்வாறு செய்வதற்கு உரித்துடையவராயின், அதனைப் பறிமுதல் செய்யலாம், நடுக்கட்டலாம் அத்துடன் பணமாக்கலாம், அதற்கெதிராக உறுதி முடிப்பை வழங்கலாம் அல்லது பெறுநர் ஒருவரை நியமிக்கலாம் ;

(ஆ) பொறுப்புக்கமைவான ஆதனத்தை மதிப்பீடு செய்து கலைத்தலில் –

(i) பிணைப்பொறுப்புள்ள கடன்தருநர் ஒருவராக பிணைப்பொறுப்பின் பெறுமதிவரை அவரது உரிமைக் கோரிக்கையின் தொகைக்கும் ; அத்துடன்

(ii) பிணைப்பொறுப்பற்ற கடன்தருநர் ஒருவராக வருமதியான மீதித்தொகை எதுவுமிருப்பின் அதற்கும்.

உரிமைகோரலாம் ; அல்லது

(இ) பொறுப்பை கடன்தருநர்களின் பொதுநன்மைக்காக ஒழிப்போனுக்கு கையளிக்கலாம் என்பதுடன் முழுத் தனிசுக்கும் பிணைப்பொறுப்பற்ற கடன்தருநர் ஒருவராக கலைத்தலில் உரிமை கோரலாம்.

(2) பிணைப்பொறுப்புள்ள கடன்தருநர் ஒருவர் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட தத்துவத்தைப் பிரயோகித்திருப்பினுஞ்சரி, இல்லாவிடினுஞ்சரி, அவர் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட தத்துவத்தைப் பிரயோகிக்கலாம்.

(3) பொறுப்பொன்றுக்கு அமைவாக ஆதனத்தைப் பணமாக மாற்றுகின்ற பிணைப்பொறுப்புள்ள கடன்தருநர் ஒருவர் -

(அ) பணமாகப் பெறப்பட்ட தேறிய தொகையை கழிப்பனவு செய்தபின்னர் வருமதியான ஏதேனும் மீதிக்கு பிணைப் பொறுப்பற்ற கடன்தருநர் ஒருவராக உரிமைக் கோரிக்கை செய்யலாம்.

(ஆ) தனிசு தொடர்பில் அது செலுத்தித் தீர்க்கப்படும் வரை செலுத்தப்படற்பாலதான வட்டி உட்பட அத்தனிசைச் செலுத்தித் தீர்த்த பின்னரும் அத்துடன் பொறுப்பிற் கமைந்த ஆதனத்தின்மீதான வேறு ஏதேனும் பொறுப் பைக் கொண்டிருப்பவருக்கு எவையேனும் தகுந்த கொடுப்பனவுகளைச் செய்த பின்னரும் பணமாகப் பெறப்பட்ட தேறிய தொகையிலிருந்து எஞ்சியிருக்கும் ஏதேனும் மிகுதொகைக்கு ஒழிப்போனுக்கு கணக்கு அளித்தல் வேண்டும்.

(4) பிணைப்பொறுப்புள்ள கடன்தருநர் ஒருவர் பிணைப் பொறுப்பை விலைமதிப்பீடு செய்து பிணைப்பொறுப்புடைய கடன்தருநர் ஒருவராக உரிமைக்கோரிக்கை செய்தால், விலைமதிப் பீடும் உரிமைக்கோரிக்கையும் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன் —

(அ) விலைமதிப்பீட்டினதும் உரிமைக்கோரிக்கையினதும் முழு விவரங்களையும் கொண்டிருத்தலும் ;

(ஆ) அது கொடுக்கப்பட்ட தேதி உட்பட அறவீட்டின் முழு விவரங்களையும் கொண்டிருத்தலும் ; அத்துடன்

(இ) உரிமைக்கோரிக்கைக்கும் பொறுப்புக்கும் ஆதார மளிக்கும் எவையேனும் ஆவணங்களை இனம் காணுதலும்,

வேண்டும் என்பதுடன் 359 ஆம், 360 ஆம், 362 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள் பிணைப்பொறுப்புள்ள கடன்தருநர் ஒருவராக ஏதே னும் உரிமைக்கோரிக்கைக்கு ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(5) ஒழிப்போன் -

(அ) நாலாம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்படும் ஏதேனும் ஆவணத்தின் முன்வைத் தலைத் தேவைப்படுத்தலாம் ; அத்துடன்

(ஆ) நாலாம் உட்பிரிவின்கீழான உரிமைக்கோரிக்கை யொன்று சத்தியக்கடதாசியால் செம்மைப்படுத்தப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தலாம்.

(6) நாலாம் உட்பிரிவின்கீழ் பிணைப்பொறுப்புள்ள கடன் தருநர் ஒருவரால் உரிமைக்கோரிக்கையொன்று செய்யப்படு மிடத்து, ஒழிப்போன் ஒன்றில் -

(அ) விலைமதிப்பீட்டையும் உரிமைக்கோரிக்கையையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் ; அன்றேல்

(ஆ) விலைமதிப்பீட்டையும் உரிமைக்கோரிக்கையையும் முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ நிராகரித்தல் வேண்டும் ; ஆனால்

(i) விலைமதிப்பீடும் உரிமைக்கோரிக்கையும் முழுமையாகவோ பகுதியளவிலோ நிராகரிக்கப் படுமிடத்து, கடன்தருநர் நிராகரிப்பு பற்றிய அறி வித்தல் கிடைக்கப்பெற்ற பத்து வேலை நாட் களுள் மீளாய்வு செய்யப்பட்ட விலைமதிப் பீடொன்றையும் உரிமைக்கோரிக்கையொன்றை யும் செய்தல் வேண்டும் ; அத்துடன்

(ii) ஒழிப்போன், விலைமதிப்பீடொன்றும் உரிமைக் கோரிக்கையும் தவறாக முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ நிராகரிக்கப்பட்டது எனப் பின்னராகக் கருதினால் அம்முடிவை இல்லாதொழிக்கலாம் அல்லது திருத்தலாம்.

(7) ஒழிப்போன் -

(அ) ஆறாம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் விலை மதிப்பீடொன்றையும் உரிமைக்கோரிக்கையையும் ஏற்றுக்கொள்ளுமிடத்து ;

(ஆ) ஆறாம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (i) ஆம் உட்பந்தியின்கீழ் மீளாய்வு செய்யப்பட்ட விலைமதிப் பீடொன்றையும் உரிமைக்கோரிக்கையையும் ஏற்றுக் கொள்ளுமிடத்து ; அல்லது

(இ) ஆறாம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியின்கீழ் உரிமைக்கோரிக்கையொன்றை நிராகரிக்கும் முடிவொன்றை திருத்துவதன்மீது அல் லது இல்லாதொழிப்பதன்மீது விலைமதிப்பீடொன் றையும் உரிமைக்கோரிக்கையையும் ஏற்றுக்கொள்ளு மிடத்து,

ஒழிப்போன், பிணைப்பொறுப்புள்ள கடன்தருநர் ஆதனத்தைப் பணமாக மாற்றியிருந்தாலன்றி, உரிமைக்கோரிக்கையின் தொகை, விலைமதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி என்பவற்றுள் எந்தத் தொகை குறைவானதோ அந்தத் தொகையின் கொடுப்பன வின்மீது பிணைப்பொறுப்பை மீட்டல் வேண்டும்.

(8) ஒழிப்போன், ஏதேனும் நேரத்தில், எழுத்திலான அறிவித் தலின்மூலம், அறிவித்தல் கிடைக்கப்பெற்ற பின்னர் இருபது வேலை நாட்களுள் -

(அ) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட தத்துவங் களுள் எதனை கடன்தருநர் பிரயோகிக்க விரும்புகின் றார் என்பதைத் தெரிவுசெய்யுமாறும் ; அத்துடன்

(ஆ) கடன்தருநர் அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் அல்லது (இ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட தத்துவத்தைப் பிரயோகிக்கத் தெரிவுசெய்தால் அத்தத் துவத்தை அக்காலப்பகுதிக்குள் பிரயோகிக்குமாறும்,

பிணைப்பொறுப்புள்ள கடன்தருநரைத் தேவைப்படுத்தலாம்.

(9) எட்டாம் உட்பிரிவின்கீழ் அறிவித்தல் சேர்ப்பிக்கப்பட் டுள்ளவரும் அறிவித்தலுக்கு இணங்கியொழுகத் தவறுகின்றவரு மான, பிணைப்பொறுப்புள்ள கடன்தருநர் ஒருவர், கடன்தருநர் களின் பொதுநலனுக்காக (1) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின்கீழ் பொறுப்பை ஒழிப்போனுக்கு ஒப்படைத்துள்ளதாகக் கொள்ளுதல் வேண்டும் என்பதுடன் கலைத்தலில் முழுத்தனிசுக் கும் பிணைப்பொறுப்பற்ற கடன்தருநர் ஒருவராக உரிமையும் கோரலாம்.

(10) ஓராம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின்கீழ் பொறுப் பொன்றை ஒப்படைத்துள்ள அல்லது (9) ஆம் உட்பிரிவின்கீழ் பொறுப்பொன்றை ஒப்படைத்துள்ளதாகக் கருதப்படும் பிணைப் பொறுப்புள்ள கடன்தருநர் ஒருவர், நீதிமன்றத்தின் அல்லது ஒழிப் போனின் அனுமதியுடனும் அத்துடன் நீதிமன்றம் அல்லது ஒழிப் போன் தகுந்ததெனக் கருதுகின்றவாறாக அத்தகைய நியதி நிபந் தனைகளுக்கமையவும், பொறுப்பாக்கப்பட்ட ஆதனத்தை ஒழிப் போன் பணமாக மாற்றியிருப்பதற்கு முன்னர் ஏதேனும் நேரத்தில் -

(அ) ஒப்படைப்பைக் கைவாங்கி பொறுப்பில் தங்கியிருக்கலாம் ; அல்லது

(ஆ) இப்பிரிவின்கீழ் புதிய உரிமைக்கோரிக்கையொன்றைச் சமர்ப்பிக்கலாம்.

(II) (அ) உரிமைக்கோரிக்கையொன்று பொய்யானதாக அல்லது பிறழ்வழி இட்டுச்செல்வதாக உள்ளதென அறிந்திருந்தும் (4) ஆம் உட்பிரிவின்கீழ் முக்கியமான விவரமொன்றில் பொய்யான அல்லது பிறழ்வழி இட்டுச்செல்லும் உரிமைக்கோரிக்கையொன்றைச் செய்கின்ற அல்லது செய்வதற்கு அதிகாரமளிக்கின்ற ; அல்லது

(ஆ) நாலாம் உட்பிரிவின்கீழ் உரிமைக் கோரிக்கையொன்றிலிருந்து ஏதேனும் விடயத்தை விட்டுவிடுதலானது, அவ்வுரிமைக்கோரிக்கையை முக்கியமான விவரமொன்றில் பொய்யாக்குகின்றது அல்லது பிறழ்வழி இட்டுச்செல்லுகின்றது என அறிந்திருந்தும் அதனை விட்டுவிடுகின்ற அல்லது விட்டுவிடுவதற்கு அதிகாரமளிக்கின்ற,

ஒவ்வோராளும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு அல்லது ஐந்து ஆண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

**359.** (1) உரிமைக் கோரிக்கையொன்றின் தொகை, கம்பெனியின் ஒடுக்குதல் ஆரம்பமாகும் தேதியன்றுள்ளவாறு ஆய்ந்தறியப்படுதல் வேண்டும். *உரிமைக் கோரிக்கையின் தொகையை ஆய்ந்தறிதல்.*

(2) இலங்கை நாணயத்தைத் தவிர்ந்த வேறு நாணயமொன்றில் வகுத்துரைக்கப்பட்ட தனிசு அல்லது பொறுப்பு ஒன்றை அடிப்படையாகக் கொண்ட உரிமைக்கோரிக்கையொன்றின் தொகையானது, கம்பெனியின் ஒடுக்குதல் ஆரம்பமான தேதியின் முடிவில் ஏற்புடைத்தான செலாவணி வீதத்தில் இலங்கை நாணயமாக மாற்றப்படுதல் வேண்டும்.

ஆய்ந்தறியப்பட்ட தொகையொன்றல்லாத உரிமைக் கோரிக்கை.

**360.** (1) உரிமைக்கோரிக்கையொன்று எதிர்பாரா நிகழ்வொன்றுக்கு அமைந்ததாயிருப்பின் அல்லது நட்டவீட்டிற்கானதாயிருப்பின் அல்லது வேறு காரணத்தினால் உரிமைக்கோரிக்கையின் தொகை நிச்சயமில்லாதிருப்பின், ஒழிப்போன் உரிமைக் கோரிக்கைத் தொகையின் மதிப்பீடொன்றைச் செய்தலும் ; அத்துடன் கடன்தருநருக்கு அம்மதிப்பீடு பற்றிய அறிவித்தலைக் கொடுத்தலும் வேண்டும்.

(2) ஒழிப்போனால் செய்யப்பட்ட மதிப்பீடொன்றினால் இடருற்ற உரிமைக்கோரிக்கையாளரின் விண்ணப்பமொன்றின் மீது நீதிமன்றம் உரிமைக்கோரிக்கையின் தொகையைத் தீர்மானித்தல் வேண்டும்.

குற்றப் பணங்களும் தண்டங்களும் மற்றும் அறவிடுதல்களும்.

**361.** இச்சட்டத்தின் இப்பாகத்திலுள்ள எதுவும் -

(அ) கம்பெனியின் ஒடுக்குதல் ஆரம்பமாவதற்கு முன்னராயினுஞ்சரி, பின்னராயினுஞ்சரி, தவறொன்று புரிந்தமைக்கு கம்பெனியொன்றின்மீது விதிக்கப்படும் குற்றப்பணமொன்று ;

(ஆ) ஏதேனும் சட்டவாக்கத்தின் மீறுகைக்கு கம்பெனியின் ஒடுக்குதல் ஆரம்பமாவதற்கு முன்னராயினுஞ்சரி, பின்னராயினுஞ்சரி, ஒரு நீதிமன்றத்தால் கம்பெனியொன்றின்மீது விதிக்கப்பட்ட, அரசுக்குச் செலுத்தப்படற்பாலதான தண்டப்பணமொன்று ; அல்லது

(இ) அத்தகைய தவறுக்கு அல்லது மீறுகைக்கு வழக்கு நடவடிக்கை தொடர்பில் கம்பெனியால் செலுத்தப்பட வேண்டுமெனக் கட்டளையிடப்பட்ட செலவுகள்,

(ஈ) ஏதேனும் சொத்தை உத்தரவாதமாக வைப்பதற்கு முன்னர் செலுத்தப்படற்பாலதான எல்லா சகாயநிதியக் கொடுப்பனவுகளும், ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியக் கொடுப்பனவுகளும் மற்றும் திரண்டுள்ள பணிக்கொடைக் கொடுப்பனவுகளும் அத்தகைய உத்தரவாதமளிக்கப்பட்ட சொத்தை விற்பதிலிருந்து பெறப்பட்ட வரும்படிகளிலிருந்து, அறவிடுதலை வரையறுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

ஒடுக்குதல் ஆரம்பமான பின்னர் செலுத்தப்படற்பாலதான தனிசுகள் தொடர்பிலான உரிமைக் கோரிக்கைகள்.

**362.** (1) ஒடுக்குதலுக்காக அல்லாமல், ஒடுக்குதல் ஆரம்பித்த பின்னர் ஆறு மாதங்களுக்கு மேற்பட்டவொரு திகதிவரை செலுத்தப்படற்பாலதல்லாதிருக்கும் தனிசு ஒன்று தொடர்பிலான உரிமைக்கோரிக்கையொன்று இச்சட்டத்தின் இப்பாகத்தின் நோக்கங்களுக்கு தனிசின் தற்காலப் பெறுமதிக்கான உரிமைக் கோரிக்கையொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

*(2)* ஓராம் உட்பிரவின் நோக்கங்களுக்கு தனிசொன்றின் தற் காலப் பெறுமதி தனிசுத் தொகையிலிருந்து ஒடுக்குதல் ஆரம்பித்த தேதியிலிருந்து தனிசு வருமதியான தேதிவரையிலான காலப் பகுதிக்கு விதித்துரைக்கப்பட்ட வீதத்தில் வட்டியைக் கழிப்பதன் மூலம் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

*பரஸ்பர வரவும் எதிரீடும்.*

***363.*** *(1)* கம்பெனிக்கும் கம்பெனியின் ஒடுக்குதலில் உரிமைக் கோரிக்கையொன்றை ஏற்றுக்கொள்ளுவிக்க நாடுகின்ற அல்லது இப்பிரிவு நடைமுறையில் இல்லாவிடில், நாடவிருக்கும் ஆளொரு வருக்கும் இடையில் பரஸ்பர வரவுகள், பரஸ்பர தனிசுகள் அல்லது வேறு கொடுக்கல்வாங்கல்கள் இருக்குமிடத்து -

*(அ)* அந்த வரவுகள், தனிசுகள் அல்லது கையாளுகைகள் தொடர்பில் ஒரு திறத்தவரிடமிருந்து மறுதிறத்த வருக்கு வருமதியாவதன் கணக்கொன்று எடுக்கப் படுதல் வேண்டும் ;

*(ஆ)* ஒரு திறத்தவரிடமிருந்து வருமதியான தொகை யொன்று மறுதிறத்தவரிடமிருந்து வருமதியான தொகையொன்றிற்கெதிராக எதிரீடு செய்யப்படுதல் வேண்டும் ;

*(இ)* ஒடுக்குதலில் விடயத்திற்கேற்ப கணக்கின் மிகுதி மாத்திரம் உரிமைகோரப்படுதல் வேண்டும் அல்லது கம்பெனிக்குச் செலுத்தப்படற்பாலதாதல் வேண்டும்.

*(2)* இப்பிரிவு, பங்குதாரர் ஒருவரால் -

*(அ)* பங்கொன்றின் வழங்கீட்டிற்கான பிரதிபலனாக அல்லது பிரதிபலனின் பாகமாக ; அல்லது

*(ஆ)* சபையால் அல்லது ஒழிப்போனால் ஆக்கப்பட்ட நிலுவையிலுள்ள பொறுப்பொன்று தொடர்பில் அழைப்பொன்றைச் செலுத்தித் தீர்த்தலில், செலுத் தப்பட்ட அல்லது செலுத்தப்படற்பாலதான தொகை யொன்றுக்கு ஏற்புடையதாதலாகாது.

*உரிமைக் கோரிக்கைகள் மீதான வட்டி.*

**364.** (1) உரிமைக்கோரிக்கையொன்றின் தொகையில் ஒடுக்குதலின் ஆரம்பம் வரை -

(அ) அத்தொகையின்மீது வட்டியின் கொடுப்பனவுக்கு ஏற்பாடு செய்யும் ஏதேனும் ஒப்பந்தத்தில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அல்லது அடங்கியிருக்கக்கூடிய வாறான அத்தகைய வீதப்படி ; அல்லது

(ஆ) தீர்ப்புக்கடன் ஒன்றின் விடயத்தில் தீர்ப்புக்கடன்மீது செலுத்தப்படற்பாலதான அத்தகைய வீதப்படி,

வட்டியும் அடங்கியிருக்கும்.

(2) ஏற்றுக்கொள்ளப்பட்ட எல்லா உரிமைக்கோரிக்கைகளினதும் கொடுப்பனவின் பின்னர் மிதமிஞ்சிய சொத்துக்கள் எவையும் எஞ்சியிருப்பின், அந்த உரிமைக்கோரிக்கைகள்மீது, ஒடுக்குதல் ஆரம்பமான தேதியிலிருந்து ஒவ்வொரு உரிமைக் கோரிக்கையும் செலுத்தப்பட்ட தேதிவரை விதித்துரைக்கப்பட்ட வீதப்படி வட்டி செலுத்தப்படுதல் வேண்டும். இருப்புச்சொத்து மிகுதொகையின் தொகை எல்லா உரிமைக்கோரிக்கைகள் மீதான முழுமையான வட்டியை செலுத்தப்போதாதாயின், செலுத்துகையானது எல்லா உரிமைக்கோரிக்கைகளிடையேயும் விகிதாசார ரீதியில் குறைக்கப்படுதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவிற்கிணங்க வட்டியின் கொடுப்பனவின் பின்னர் மிதமிஞ்சிய இருப்புச் சொத்துக்கள் எவையும் எஞ்சியிருப்பின் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏற்றுக் கொள்ளப்பட்ட எல்லா உரிமைக்கோரிக்கைகள்மீதும் ஒடுக்குதலின் ஆரம்பத்திலிருந்து உரிமைக்கோரிக்கை செலுத்தப்படும் தேதிவரை விடயத்திற்கேற்ப (அ) என்னும் பந்தியில் அல்லது (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்படும் வீதத்திற்கும் விதித்துரைக்கப்பட்ட வீதத்திற்கும் இடையிலான வித்தியாசப்படி வட்டி செலுத்தப்படுதல் வேண்டும். மிதமிஞ்சிய சொத்துக்களின் தொகை எல்லா உரிமைக்கோரிக்கைகள்மீதும் வட்டியை முழுமையாகச் செலுத்துவதற்குப் போதாதிருப்பின் செலுத்துகையானது எல்லா உரிமைக்கோரிக்கைகளிடையேயும் விகிதாசாரரீதியில் குறைந்து செலுத்துதல் வேண்டும்.

முன்னுரிமை உரிமைக் கோரிக்கைகள்.

**365.** (1) ஒழிப்போன் கம்பெனியின் சொத்துக்களிலிருந்து ஒன்பதாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள செலவுகளையும், கட்டணங்களையும் உரிமைக்கோரிக்கைகளையும் அந்த அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட அளவுக்கும் முன்னுரிமை வரிசைக் கிரமத்திலும் செலுத்துதல் வேண்டும் என்பதுடன் அந்த அட்டவணை அதன் தாற்பரியத்திற்கிணங்க, அச்செலவுகளினதும் கட்டணங்களினதும் செலுத்துகைக்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

(2) ஒன்பதாம் அட்டவணையில் 7(ஆ) என்னும் பந்தியை வரையறுக்காமல், (1) ஆம் உட்பந்தியிலுள்ள "இருப்புச்சொத்துக்கள்" என்னும் பதம் -

(அ) தாக்கீடானது 358 ஆம் பிரிவின்கீழ் ஒப்படைக்கப்பட்டாலன்றி, அல்லது ஒப்படைக்கப்பட்டதாகக் கொள்ளப்பட்டாலன்றி, அல்லது மீட்கப்பட்டாலன்றி ; அல்லது

(ஆ) பொறுப்பு உருவாக்கப்பட்டபோது அது அவ்விருப்புச் சொத்துக்கள் தொடர்பில் மிதக்கும் தாக்கீடொன்றாக இருந்தாலன்றி,

பொறுப்பொன்றுக்கமைவான இருப்புச்சொத்துக்களை உள்ளடக்குதலாகாது.

வேறு கடன்தருநர்களின் உரிமைக் கோரிக்கைகளும் மிதமிஞ்சிய இருப்புச் சொத்துக்களைப் பகிர்ந்தளித்தலும்.

**366.** (1) பிரிவு 365 என்பதற்கிணங்க, முன்னுரிமை உரிமைக் கோரிக்கைகளைச் செலுத்திய பின்னர், ஒழிப்போன் கம்பெனியின் இருப்புச் சொத்துக்களை வேறு எல்லா உரிமைக் கோரிக்கைகளையும் செலுத்தித் தீர்ப்பதில் பிரயோகித்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட உரிமைக்கோரிக்கைகள், அவற்றிற்கு இடையே சமமாக வரிசைக்கிரமப்படுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் அவற்றை ஈடுசெய்வதற்கு சொத்துக்கள் போதுமானதாயில்லாதிருந்தாலன்றி, (அத்தகைய விடயத்தில் கொடுப்பனவு எல்லா உரிமைக்கோரிக்கைகளிடையேயும் விகிதாசாரரீதியில் குறைந்து செல்லுதல் வேண்டும்.) முழுமையாகச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) ஒடுக்குதல் ஆரம்பமாவதற்கு முன்னர் கடன்தருநர் ஒருவர், தனிசு ஒன்று தொடர்பில், இப்பிரிவின்கீழ் வேறு வகையில் அது கொண்டிருக்கக்கூடியதைவிட தாழ்ந்த முன்னுரிமையொன்றை ஏற்றுக்கொள்ள உடன்படுமிடத்து, இப்பிரிவிலுள்ள எதுவும் உடன்படிக்கையை அதன் நியதிகளுக்கிணங்க பயனுறுவதிலிருந்து தடைசெய்தலாகாது.

(4) பிரிவு 364 என்பதற்கமைய, (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட உரிமைக்கோரிக்கைகளைச் செலுத்திய பின்னர் ஒழிப் போன் கம்பெனியின் மிதமிஞ்சிய இருப்புச் சொத்துக்களை —

(அ) கம்பெனியின் புறவிதிகளில் அடங்கியுள்ள ஏற்பாடு களுக்கிணங்க ; அல்லது

(ஆ) கம்பெனியின் புறவிதிகள், மிதமிஞ்சிய இருப்புச் சொத்துக்களின் பகிர்ந்தளிப்புக்கான ஏற்பாடுகளைக் கொண்டிராவிடில், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக் கிணங்க,

பகிர்ந்தளித்தல் வேண்டும்.

(5) பத்தாம் அட்டவணையின் ஏற்பாடுகள் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட உரிமைக்கோரிக்கைகளின் கொடுப்பனவு தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்.

### வறிதாகக்கூடிய கொடுக்கல் வாங்கல்கள்

முன்னுரிமைப் பயனுடைய கொடுக்கல் வாங்கல்கள்.

**367.** (1) கம்பெனியொன்றினால் மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல் —

(அ) (i) கம்பெனியின் தனிசுகள் வருமதியாகும்போது கம்பெனியால் அதனைச் செலுத்த முடியாதிருந்த ஒரு நேரத்திலும் ;

(ii) குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள்ளும் இடம் பெற்றால் ; அத்துடன்

(ஆ) கலைத்தலின் வேறோர் ஆள், வேறு வகையில் அவ்வாள் பெற்றிருப்பதை அல்லது பெற்றிருக்கக்கூடிய சாத்தியமுள்ளதைவிடக் கூடுதலாக தனிசொன்றின் தீர்வு தொடர்பாக பெறுவதனை இயலச் செய்யுமாயின்,

ஒழிப்போனின் விண்ணப்பத்தின்மீது வெற்றானதாகும்.

(2) முரணானது எண்பிக்கப்பட்டாலன்றி, (1) ஆம் உட்பிரிவின் நோக்கங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட காலப்பகுதிக்குள் இடம் பெற்ற கொடுக்கல் வாங்கலொன்று கம்பெனியின் தனிசுகள் வருமதியானபோது கம்பெனியால் அதனைச் செலுத்த முடியாதிருந்த ஒரு நேரத்தில் செய்யப்பட்டதாக ஊகிக்கப்படும்.

(3) ஆளொருவருடனான கொடுக்கல் வாங்கலொன்று, அவ்வாள் தொடர்பில் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பிடப்பட்ட பயனை உண்டுபண்ணுவதற்கான விருப்பமொன்றினால் கொடுக்கல் வாங்கலில் பிரவேசிப்பதில் கம்பெனி செல்வாக்கிற்குட்பட்டிருந்தாலன்றி, இப்பிரிவின்கீழ் ஒதுக்கிவைக்கப்படுதலாகாது.

(4) எவரேனும் தொடர்புடைய ஆளுடன் கொடுக்கல் வாங்கலொன்றில் பிரவேசித்துள்ள கம்பெனியொன்று, முரணாகக் காண்பிக்கப்பட்டாலன்றி, அவ்வாள் தொடர்பில் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பிடப்பட்ட பயனை உண்டுபண்ணுவதற்கான விருப்பமொன்றினால் செல்வாக்கிற்குட்படுத்தப்படுவதாக ஊகிக்கப்படுதல் வேண்டும்.

வறிதாக்கற்படற்பாலதான அறவீடு.

**368.** (1) கம்பெனியொன்றின் ஏதேனும் ஆதனத்தின் அல்லது பொறுப்புமுயற்சியின்மீது தாக்கீடொன்று —

(அ) தாக்கீடானது —

(i) கம்பெனிக்கு உள்ளவாறு முற்பணமாகக் கொடுக்கப்பட்ட அல்லது செலுத்தப்பட்ட பணத்தை அல்லது விற்பனை செய்யப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஆதனத்தின் உள்ளவாறான விலையை அல்

லது பெறுமதியை அல்லது தாக்கீடு கொடுக்கப் பட்ட நேரத்தில் அல்லது அதன்பின்னர் ஏதேனும் நேரத்தில் தாக்கீட்டின் கொடையாளியால் நல் லெண்ணத்துடன் கொடுக்கப்பட்ட வேறு ஏதேனும் பெறுமதியுள்ள பிரதிபயனை ; அத்துடன்

(ii) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட தொகை யொன்றின் மீது செலுத்தப்படற்பாலதான ஏதே னும் வட்டியை பிணைப்பொறுப்பாகக் கொண்டாலன்றி ;

(ஆ) தாக்கீடு கொடுக்கப்பட்ட பின்னர் உடனடியாக கம்பெனி அதன் தனிசுகள் வருமதியாகும்போது அதனைச் செலுத்த இயலாதிருந்தாலன்றி ; அல்லது

(இ) தாக்கீடானது, குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்கு முன்னர் கொடுக்கப்பட்ட தாக்கீடொன்றுக்கு பதிலீடான தாக்கீடாக,

இருந்தாலன்றி, குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் கொடுக்கப்பட்டதாயின் ஒழிப்போனின் விண்ணப்பத்தின் மீது வறிதாக்கப்படற்பாலதாதல் வேண்டும்.

(2) முரணானது எண்பிக்கப்பட்டாலன்றி, குறித்துரைக்கப் பட்ட காலப்பகுதிக்குள் தாக்கீடொன்றைக் கொடுக்கும் கம்பெனி யொன்று தாக்கீட்டைக் கொடுத்தபின்னர் உடனடியாக தனிசுகள் வருமதியாகும்போது அவற்றைச் செலுத்த இயலாதிருந்திருப்பதாக ஊகிக்கப்படுதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின் ஏற்பாடுகள் –

(அ) பதிலீடுசெய்யப்பட்ட தாக்கீட்டினால் பிணைப்பொறுப் பளிக்கப்பட்ட தொகை உளதாம் தாக்கீட்டின் பிணைப் பொறுப்பாக்கப்பட்ட தொகையை விஞ்சும் அளவுக்கு ; அல்லது

(ஆ) பதிலீட்டின் தேதியன்று பதிலீடுசெய்யப்பட்ட தாக்கீட்டிற்கு அமைந்த ஆதனத்தின் பெறுமதி, அத்தேதியன்று உளதாம் தாக்கீட்டிற்கு அமைந்த ஆதனத்தின் பெறுமதியை விஞ்சும் அளவுக்கு,

ஏற்புடையதாதலாகாது.

(4) ஓராம் உட்பிரிவிலுள்ள எதுவும், செலுத்தப்படாத கொள்வனவு விலையைப் பிணைப்பொறுப்பாக்குகின்ற அத்துடன் அத்தொகைமீதான செலுத்தப்படற்பாலதான ஏதேனும் அக்கறையைப் பிணைப்பொறுப்பாக்குகின்ற கம்பெனியொன்றால் கொடுக்கப்பட்ட தாக்கீடொன்று ஆதனத்தின்மீது கொடுக்கப்பட்டாலுஞ்சரி இல்லாவிடினுஞ்சரி தாக்கீட்டை உருவாக்கும் சாதனம் ஆதனத்தின் விற்பனையின் பின்னர் முப்பது நாட்களுக்குப் பிந்தாமல் அல்லது சொத்தொன்றின் அல்லது காணியிலான அக்கறையின் விற்பனையின் விடயத்தில் விற்பனை இறுதியாகத் தீர்க்கப்பட்ட பின்னர் முப்பது நாட்களுக்குப் பிந்தாமல் நிறைவேற்றப்படின், அப்பொறுப்புக்கு ஏற்புடையதாதலாகாது.

(5) ஓராம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட காலப் பகுதிக்குள் ஏதேனும் தாக்கீடு கம்பெனியால் கொடுக்கப்பட்டவிடத்து, (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியினதும் (4) ஆம் உட்பிரிவினதும் நோக்கங்களுக்கு தாக்கீடு கொடுக்கப்பட்டபின்னர் அதன் கொடையாளியால் பெறப்பட்ட எல்லாக் கொடுப்பனவுகளும் —

(அ) தாக்கீடு கொடுக்கப்பட்டதன்மீது அல்லது அதன் பின்னர் கொடையாளியால் கம்பெனிக்கு உள்ளவாறாக முற்பணமாகக் கொடுக்கப்பட்ட அல்லது செலுத்தப்பட்ட பணத்தின் மீளக்கொடுப்பனவின் பொருட்டு ;

(ஆ) தாக்கீடு கொடுக்கப்பட்டதன்மீது அல்லது அதன் பின்னர் கொடையாளியால் கம்பெனிக்கு விற்பனை செய்யப்பட்ட ஆதனத்தின் உள்ளவாறான விலையின் அல்லது பெறுமதியின் கொடுப்பனவின் பொருட்டு ;

(இ) தாக்கீடு கொடுக்கப்பட்டதன்மீது அல்லது அதன் பின்னர் நல்லெண்ணத்துடன் கொடுக்கப்பட்ட வேறு ஏதேனும் பெறுமதிவாய்ந்த பிரதிபலன் தொடர்பில் கொடையாளிக்கு கம்பெனியின் வேறு ஏதேனும் பொறுப்பின் கொடுப்பனவின் பொருட்டு ; அல்லது

(ஈ) பந்திகள் (அ), (ஆ) அல்லது (இ) என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் தொகையின் மீது செலுத்தப் படற்பாலதான வட்டியின் பொருட்டு,

அவசியமாகக்கூடியவாறான அத்தகைய அளவுக்கு பிரித் தொதுக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

வர்த்தகமில்லாத கொடுக்கல் வாங்கல்கள்.

**369.** (1) கம்பெனியொன்றின் கொடுக்கல் வாங்கலானது –

(அ) கொடுக்கல் வாங்கல் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் இடம்பெற்றிருப்பின் ;

(ஆ) கொடுக்கல் வாங்கல் வர்த்தகமில்லாத ஒரு கொடுக்கல் வாங்கலாக இருந்திருப்பின் ;

(இ) கொடுக்கல் வாங்கல் இடம்பெற்றபோது –

(i) கம்பெனி அதன் வருமதியான தனிசுகளைச் செலுத்த இயலாதிருந்திருப்பின் ;

(ii) எந்தத் தொழிலுக்கு அதன் நிதி வளங்கள் முற்றி லும் போதாததாயிருந்ததோ அந்தத் தொழிலில் ஈடுபட்டிருந்திருப்பின் அல்லது ஈடுபடவிருந் திருப்பின் ; அல்லது

(iii) கம்பெனி கடப்பாட்டை நிறைவேற்றுமாறு தேவைப்படுத்தப்படும்போது அவ்வாறு நிறை வேற்ற இயலாதிருக்கும் என்பதை அறிந்திருந்தும் கடப்பாடொன்றை ஏற்றிருப்பின்,

ஒழிப்போனின் விண்ணப்பத்தின் மீது வறிதாக்கப்படற் பாலதாதல் வேண்டும்.

(2) கம்பெனியொன்றால் மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கலொன்றானது, கம்பெனியின் சூழ்நிலைகளில் நியாயமான ஆளொருவர் —

(அ) கொடுக்கல்வாங்கலில் ஈடுபடுவதனால் கம்பெனிக்கான நன்மைகளை (எவையுமிருப்பின்) ;

(ஆ) கொடுக்கல்வாங்கலில் ஈடுபடுவதனால் கம்பெனிக்கான பாதகத்தை ;

(இ) முறையே கொடுக்கல்வாங்கலுக்கான வேறு திறத்தவர்களுக்கான நன்மைகளை ;

(ஈ) இயைபான வேறு எவையேனும் கருமங்களை,

கருத்திற்கொண்டு கொடுக்கல் வாங்கலில் ஈடுபட்டிராவிடில் மட்டும் "வர்த்தகமற்ற கொடுக்கல் வாங்கல்" ஆகும்.

(3) கொடுக்கல் வாங்கலொன்று, இப்பிரிவின் நோக்கங்களுக்கு—

(அ) கம்பெனியின் கடன்தருநர் ஒருவர் கொடுக்கல் வாங்கலுக்கு திறத்தவரொருவராக இருந்தாலுஞ்சரி, இல்லாவிடினுஞ்சரி ; அத்துடன்

(ஆ) நீதிமன்றமொன்றினால் ஆக்கப்பட்ட கட்டளையொன்றின் காரணமாக கொடுக்கல் வாங்கல் பயனுறுத்தப்பட்டாலுங்கூட அல்லது பயனுறுத்தப்படவேண்டுமெனத் தேவைப்பட்டாலுங்கூட,

வர்த்தகமற்ற கொடுக்கல் வாங்கலொன்றாகலாம்.

(4) முரணானது எண்பிக்கப்பட்டாலன்றி, (1) ஆம் உட்பிரிவின் நோக்கங்களுக்கு, மட்டுப்படுத்தப்பட்ட காலப்பகுதிக்குள் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கலொன்று, கம்பெனி அதன் தனுசுகள் வருமதியானபோது அவற்றைச் செலுத்த இயலாதிருந்த ஒரு நேரத்தில் செய்யப்பட்டிருப்பதாக ஊகிக்கப்படும்.

வறிதாக்கப்படற்பாலதான கொடுக்கல் வாங்கல்களையும் தாக்கீடுகளையும் தள்ளுபடி செய்வதற்கான நடவடிக்கை முறை.

**370.** (1) பிரிவு 367 என்பதன்கீழ் அல்லது பிரிவு 369 என்பதன் கீழ் வறிதாக்கப்படற்பாலதான கொடுக்கல் வாங்கலொன்றை அல்லது பிரிவு 368 என்பதன்கீழ் வறிதாக்கப்படற்பாலதான தாக்கீடொன்றை தள்ளுபடி செய்ய விரும்பும் ஒழிப்போன் ஒருவர் —

(அ) தள்ளுபடி செய்யப்படவுள்ள கொடுக்கல் வாங்கலை அல்லது தாக்கீட்டைக் குறித்துரைத்து, அத்துடன் கொடுக்கல் வாங்கலொன்றின் விடயத்தில் ஒழிப்போன் அறவிடவிரும்பும் ஆதனத்தை அல்லது பெறுமதியைக் குறித்துரைத்து, அத்துடன் இப்பிரிவின் (2) ஆம், (3) ஆம், (4) ஆம் உட்பிரிவுகளின் பயனைக் கொடுத்து அதன் பயன்பாட்டிற்கு ஒரு பிரேரணை என்ற வகையில் அறிவித்தலொன்றை நீதிமன்றத்தில் கோப்பிடுதல் வேண்டும் ;

(ஆ) பந்தி (அ) என்பதன்கீழ் நீதிமன்றத்தில் கோப்பிடப்பட்டவாறான அறிவித்தலின் பிரதியொன்றை கொடுக்கல் வாங்கலுக்கான மற்றைய திறத்தவருக்கு அல்லது தாக்கீட்டின் கொடையாளிக்கு வேறு எந்த ஆளிடமிருந்து ஒழிப்போன் ஆதனத்தை அல்லது பெறுமதியை அறவிட விரும்புகின்றாரோ அந்த வேறு ஆள் ஒவ்வொருவருக்கும் சேர்ப்பித்தல் வேண்டும்.

(2) (அ) அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட கொடுக்கல் வாங்கலை அல்லது தாக்கீட்டை தள்ளுபடி செய்வதன் மூலம் பாதிக்கப்படுபவரான ; அத்துடன்

(ஆ) கொடுக்கல் வாங்கல் அல்லது தாக்கீடு வறிதாக்கப்படற்பாலதல்ல எனக் கருதுகின்றவாறான,

ஆளொருவர், கொடுக்கல் வாங்கல் அல்லது தாக்கீடு தள்ளுபடி செய்யப்படக்கூடாது என்ற கட்டளையொன்றுக்காக நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

(3) எந்த ஆளுக்கு அறிவித்தல் சேர்க்கப்பட்டதோ அந்த ஆள் (2) ஆம் உட்பிரிவின்கீழ் நீதிமன்றத்திற்கு விண்ணப்பித்திருந்தாலன்றி, கொடுக்கல் வாங்கல் அல்லது தாக்கீடு அறிவித்தல் சேர்ப்பிக்கப்பட்ட பின்னர் இருபதாவது வேலை நாளில் தள்ளுபடி செய்யப்படுவதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஓர் ஆள் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஆட்கள் (2) ஆம் உட்பிரிவின்கீழ் நீதிமன்றத்திற்கு விண்ணப்பித்திருந்தால், நீதிமன்றம் வேறு வகையாகக் கட்டளையிட்டாலன்றி, கொடுக்கல் வாங்கல் அல்லது தாக்கீடு கடைசி விண்ணப்பம் இறுதியாகத் தீர்மானிக்கப்பட்ட தினத்தன்று தள்ளுபடி செய்யப்படுவதாகக் கருதப்படுதல் வேண்டும்.

**371.** ஒரு கொடுக்கல் வாங்கல் அல்லது தாக்கீடு 370 ஆம் பிரிவின்கீழ் தள்ளுபடி செய்யப்படின் நீதிமன்றம் பின்வரும் கட்டளைகளுள் ஒன்றையோ அல்லது பலவற்றையோ ஆக்கலாம்:— வேறு கட்டளைகள்.

(அ) கொடுக்கல் வாங்கலின் அல்லது தாக்கீட்டின் பெறு பேறாக ஆளொருவரால் பெறப்பட்ட நன்மைகள் தொடர்பில் அந்நன்மைகள் நியாயமாகக் குறிக்கின்ற வாறான அத்தகைய பணத்தொகைகளைச் செலுத்து மாறு அவ்வாளைத் தேவைப்படுத்தும் கட்டளை யொன்று ;

(ஆ) கொடுக்கல் வாங்கலின் பகுதியாக ஆளொருவருக்கு அறுதி மாற்றம் செய்யப்பட்ட ஆதனம் கம்பெனிக்குத் திருப்பிக் கொடுக்கப்படவேண்டும் எனத் தேவைப் படுத்தும் கட்டளையொன்று ;

(இ) ஆதனம், அல்லது ஆதனம் விண்ணப்பத்தைக் குறிக்கு மாயின் ஒன்றில் அவ்வாறு அறுதிமாற்றம் செய்யப் பட்ட ஆதனத்தின் விற்பனை வருவாய் அல்லது பணம், கம்பெனிக்கு உரித்தாக்கப்படவேண்டுமெனத் தேவைப் படுத்தும் கட்டளையொன்று ;

(ஈ) கம்பெனியால் உறப்பட்ட தனிசு ஒன்றை அல்லது அளிக்கப்பட்ட உத்தரவாதம் அல்லது தாக்கீடொன்றை முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ விடுவிக்கும் கட்டளையொன்று ;

(உ) கொடுக்கல் வாங்கலாக அல்லது தாக்கீடாக அமை கின்ற, அதன் பாகமாக அமைகின்ற அல்லது தொடர் பிலான உடன்படிக்கையொன்றை அல்லது அத்தகைய

உடன்படிக்கையொன்றின் குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உடன்படிக்கை செய்துகொள்ளப்படும் நேரத்திலும் அதன்பின்னரும் அல்லது குறித் துரைக்கப்பட்ட பிந்திய நேரத்திலும் அதன்பின்னரும் வறிதானதாயிருப்பதாக வெளிப்படுத்தும் கட்டளை யொன்று ;

(ஊ) அத்தகைய உடன்படிக்கையொன்றை கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட முறையில் வேறுபடுத்துவதும் அத்துடன் பொருத்தமானதென நீதிமன்றம் கருதி னால், உடன்படிக்கையானது, உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்ட நேரத்திலும் அதன் பின்னரும் அல் லது குறித்துரைக்கப்பட்ட பிந்திய நேரத்திலும் அதன் பின்னரும் அவ்வாறு வேறுபடுத்தப்பட்டவாறான பயனுடையதாக வெளிப்படுத்துவதுமான கட்டளை யொன்று ;

(எ) அத்தகைய உடன்படிக்கையொன்று அல்லது அத்த கைய உடன்படிக்கையொன்றின் குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகள் வலுவுக்கிடப்படற்பாலதல்ல என வெளிப்படுத்தும் கட்டளையொன்று ;

(ஏ) இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்று விடு விப்பதற்கான பிணைப்பொறுப்பொன்று கொடுக் கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தும் கட்டளை யொன்று ;

(ஐ) கொடுக்கல் வாங்கலொன்றை தள்ளுபடி செய்வத னால் அல்லது இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளை யொன்றினால் ஒழித்தலின் கடன்தருநர் ஒருவராக உரிமை கோருவதற்கு எந்த அளவுக்கு உரித்துடையவ ராவார் என்பதைக்குறித்துரைக்கும்கட்டளையொன்று.

**372.** (1) பிரிவு 371 என்பதன்கீழ் செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல் அல்லது கட்டளையொன்றை தள்ளுபடி செய்தலானது, அத்தகைய ஆள் -

கொடுக்கல் வாங்கல்களையும் தாக்கீடுகளையும் தள்ளுபடி செய்தல் தொடர்பிலான மேலதிக ஏற்பாடுகள்.

(அ) கம்பெனியல்லாத வேறோர் ஆளிடமிருந்து ;

(ஆ) பெறுமதிவாய்ந்த பிரதிபயனுக்கு ; அத்துடன்

(இ) நல்லெண்ணத்துடன்,

பெற்றுக்கொண்டுள்ள அத்தகைய ஆதனத்தில் ஆளொருவரின் உரித்தை அல்லது அக்கறையைப் பாதித்தலாகாது.

(2) பிரிவு 371 என்பதன்கீழ் ஆக்கப்பட்ட தாக்கீடொன்றை அல்லது கட்டளையொன்றை தள்ளுபடி செய்தலானது, அவ்வாள் -

(அ) தாக்கீட்டின் கொடையாளியால் விற்பனைத் தத்துவமொன்றைப் பிரயோகிப்பதன் பெறுபேறாக ;

(ஆ) பெறுமதிவாய்ந்த பிரதிபயனுக்கு ; அத்துடன்

(இ) நல்லெண்ணத்துடன்,

பெற்றுக்கொண்டுள்ள அத்தகைய ஆதனத்தின் ஆளொருவரின் உரித்தை அல்லது அக்கறையைப் பாதித்தலாகாது.

(3) இச்சட்டத்தின் 371 ஆம் பிரிவின் கீழாயினுஞ்சரி அல்லது இச்சட்டத்தின் வேறு ஏதேனும் பிரிவின் கீழாயினுஞ்சரி அல்லது வேறு ஏதேனும் சட்டவாக்கத்தின் கீழாயினுஞ்சரி, அல்லது ஒப்புரவில் அல்லது வேறுவகையில் ஒழிப்போனினால் ஆதனத்தை அல்லது அதன் சமமான பெறுமதியை அறவிடுதலானது -

(அ) எந்த ஆளிடமிருந்து அறவீடு நாடப்படுகின்றதோ அந்த ஆள் ஆதனத்தை நல்லெண்ணத்துடன் பெற்று அவ்வாளுக்கு அறுதிமாற்றம் செல்லுபடியாகும் முறையில் மாற்றப்பட்டது என்ற நியாயமாகக் கொண்டிருக்கப்பட்ட நம்பிக்கையில் அவரது நிலைப்பாட்டை மாறியிருந்தால் ; அத்துடன்

(ஆ) நீதிமன்றத்தின் அபிப்பிராயப்படி அறவீடு அல்லது முழுமையாக அறவீட்டைக் கட்டளையிடுவது ஒப்புரவற்றதாயின்,

முழுமையான அல்லது பகுதியளவில் மறுக்கப்படலாம்.

*முன்னுரிமைகள் முதலிய தொடர்பில் பொருள்கோடல்.*

**373.** (1) பிரிவுகள் 367, மற்றும் 369 என்பதில் கம்பெனியொன்று தொடர்பில் “கொடுக்கல் வாங்கல்” என்பது -

(அ) கம்பெனியால் ஆதனமொன்றின் உரித்து மாற்றம், அல்லது அறுதி அல்லது வேறு ஏதேனும் கையளிப்பு ;

(ஆ) கம்பெனியின் ஆதனத்தின்மீது பிணைப்பொறுப்பொன்றை அல்லது தாக்கீட்டை அளித்தல் ;

(இ) கம்பெனியால் கடப்பாடொன்று உறப்படுதல் ;

(ஈ) நீதிச்சேவை நடவடிக்கையொன்றின் கீழ் நிறைவேற்றுகை கம்பெனியால் ஏற்றுக்கொள்ளப்படல் ;

(உ) நீதிமன்றமொன்றின் வழக்குத்தீர்ப்பு அல்லது கட்டளையொன்றின்கீழ் பணக்கொடுப்பனவு உட்பட, கம்பெனியால் பணக்கொடுப்பனவு,

என்பவற்றை உள்ளடக்கும்.

(2) பிரிவுகள் 367, 368, 369 என்பவற்றின் நோக்கங்களுக்கு “குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதி” என்பது —

(அ) தொடர்புடைய ஆளொருவருடன் செய்துகொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல் ஒன்றின் அல்லது அவருக்கு அளிக்கப்பட்ட தாக்கீடொன்றின் விடயத்தில் -

(i) ஒடுக்குதல் ஆரம்பமாவதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முந்திய காலப்பகுதி ; அத்துடன்

(ii) நீதிமன்றத்தால் ஒடுக்கப்படும் கம்பெனியொன்றின் விடயத்தில், நீதிமன்றத்தில் மனு இணைக்கப்படுவதற்கு முந்திய இரண்டு ஆண்டுகளைக்

கொண்டவொரு காலப்பகுதியுடன் அந்த மனு இணைக்கப்படும் தேதியன்று ஆரம்பித்து நீதிமன்றத்தின் கட்டளை ஆக்கப்படும் தேதியன்று முடிவடையும் காலப்பகுதி ;

(ஆ) வேறு ஏதேனும் விடயத்தில் –

(i) ஒடுக்குதல் ஆரம்பமாவதற்கு முந்திய ஓராண்டைக்கொண்ட காலப்பகுதி ; அத்துடன்

(ii) நீதிமன்றத்தால் ஒடுக்கப்படும் கம்பெனியொன்றின் விடயத்தில் நீதிமன்றத்தில் மனு இணைக்கப்படுவதற்கு முந்திய ஓராண்டைக்கொண்டவொரு காலப்பகுதியுடன் அந்த மனு இணைக்கப்பட்ட தேதியன்று ஆரம்பித்து நீதிமன்றத்தின் கட்டளை ஆக்கப்பட்ட தேதியன்று முடிவடையும் காலப்பகுதி,

என்று பொருள்படும்.

(3) உட்பிரிவு (2) அத்துடன் பிரிவு 367 என்பதன் நோக்கங்களுக்கு, ஆளொருவர் -

(அ) கொடுக்கல் வாங்கலின் நேரத்தில் கம்பெனியின் பணிப்பாளர் ஒருவராக அல்லது கம்பெனியின் பணிப்பாளர் ஒருவரின் நியமத்தர் ஒருவராக அல்லது அவருக்கான நம்பிக்கைப்பொறுப்பாளர் ஒருவராக அல்லது அவரது உறவினர் ஒருவருக்கான நம்பிக்கைப் பொறுப்பாளர் ஒருவராக இருந்த ஆளொருவராக ;

(ஆ) கொடுக்கல் வாங்கலின் நேரத்தில் கம்பெனியின் கட்டுப்பாட்டைக் கொண்டிருந்த ஆளொருவராக அத்தகைய ஆளொருவரின் உறவினரொருவராக ;

(இ) கொடுக்கல் வாங்கலின் நேரத்தில் கம்பெனியொன்றின் பணிப்பாளர் ஒருவரால் அல்லது கம்பெனியின் பணிப்பாளர் ஒருவரின் நியமத்தர் அல்லது உறவினர்

ஒருவரால் அல்லது அவருக்கான நம்பிக்கைப் பொறுப்பாளர் ஒருவரால் அல்லது அவரின் உறவினர் ஒருவருக்கான நம்பிக்கைப்பொறுப்பாளர் ஒருவரால் கட்டுப்படுத்தப்பட்ட வேறொரு கம்பெனியான ; அல்லது

(ஈ) கொடுக்கல் வாங்கலின் நேரத்தில் சார்புடைய கம்பெனியொன்றாக இருந்த வேறொரு கம்பெனியாக,

இருப்பின் அவ்வாள் "தொடர்புடைய ஆள்" ஒருவராவார்.

(4) பிரிவுகள் 367, 368 மற்றும் 369 என்பவற்றின் நோக்கங்களுக்கு "மட்டுப்படுத்தப்பட்ட காலப்பகுதி" என்பது,—

(அ) ஒடுக்குதல் ஆரம்பமாவதற்கு முந்திய ஒரு மாதத்தைக்கொண்ட காலப்பகுதி ; அத்துடன்

(ஆ) நீதிமன்றத்தால் ஒடுக்கப்படும் கம்பெனியொன்றின் விடயத்தில், நீதிமன்றத்தில் மனு இணைக்கப்படுவதற்கு முந்திய ஒரு மாதத்தைக் கொண்டவொரு காலப் பகுதியுடன், அந்த மனு இணைக்கப்பட்ட தேதியன்று ஆரம்பித்து நீதிமன்றத்தின் கட்டளை ஆக்கப்படும் தேதியன்று முடிவடையும் காலப்பகுதி.

## ஒடுக்குதலுக்கு முன்னரான துர்ப்பழக்கங்களும் அலுவலர்களின் பொறுப்புகளும்

ஒடுக்குதலை எதிர்பார்த்து புரியப்படும் மோசடி முதலியன.

**374.** (1) கம்பெனியொன்று ஒடுக்கப்படும்போது, ஒடுக்குதல் ஆரம்பிப்பதற்கு முன்னரான இரண்டு ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்குள் கம்பெனியின் கடந்தகால அல்லது தற்கால அலுவலரொருவராயிருந்த ஆளொருவர் -

(அ) பத்தாயிரம் ரூபா அல்லது அதற்கு மேற்பட்ட பெறுமதியுடைய கம்பெனி ஆதனத்தின் ஏதேனும் பாகத்தை மறைத்திருப்பாராயின் அல்லது கம்பெனிக்கு அல்லது கம்பெனியிடமிருந்து வருமதியான ஏதேனும் தனிசை மறைத்திருப்பாராயின் ;

(ஆ) பத்தாயிரம் ரூபா அல்லது அதற்கு மேற்பட்ட பெறுமதி வாய்ந்த கம்பெனி ஆதனத்தின் ஏதேனும் பாகத்தை மோசடியாக அப்புறப்படுத்தியிருப்பாராயின் ;

(இ) கம்பெனியின் ஆதனத்தை அல்லது அலுவல்களைப் பாதிக்கும் அல்லது அவை தொடர்பிலான ஏதேனும் புத்தகத்தை அல்லது ஆவணத்தை மறைத்திருப்பாராயின், கழித்திருப்பாராயின், சிதைத்திருப்பாராயின் அல்லது பொய்ப்பித்திருப்பாராயின் ;

(ஈ) கம்பெனியின் ஆதனத்தை அல்லது அலுவல்களைப் பாதிக்கும் அல்லது அவை தொடர்பான ஏதேனும் புத்தகத்தில் அல்லது ஆவணத்தில் ஏதேனும் பொய்ப்பதிவை செய்திருப்பாராயின் ;

(உ) கம்பெனியின் ஆதனத்தை அல்லது அலுவல்களைப் பாதிக்கும் அல்லது அவை தொடர்பான ஏதேனும் ஆவணத்தை மோசடியாக அப்புறப்படுத்தியிருப்பாராயின், மாற்றியிருப்பாராயின் அல்லது ஏதேனும் விட்டுவிடுகையைச் செய்திருப்பாராயின் ;

(ஊ) அடைமானம் வைத்தல், ஈடுவைத்தல் அல்லது கையுதிர்த்தல் கம்பெனியின் அலுவலது சாதாரண நெறிமுறையிலாக இருந்தாலன்றி, கடனுக்குப் பெறப்பட்டு அதற்கான கொடுப்பனவு செய்யப்பட்டிராத கம்பெனியின் ஆதனம் எதனையும் அடைமானம் வைத்திருப்பாராயின், ஈடுவைத்திருப்பாராயின் அல்லது கையுதிர்த்திருப்பாராயின் ;

(எ) கம்பெனியின் கடன்தருநர்களை மோசடி செய்யும் எண்ணத்துடன் கம்பெனி ஆதனத்தை நன்கொடையளித்திருப்பாராயின் அறுதிமாற்றியிருப்பாராயின், அல்லது அதன்மீது தாக்கீட்டை ஏற்படுத்தியிருப்பாராயின் அல்லது நன்கொடையளிக்கச் செய்திருப்பாராயின் அறுதிமாற்றச் செய்வித்திருப்பாராயின் அல்லது அதன்மீது தாக்கீட்டை ஏற்படுத்தச் செய்திருப்பாரா

யின் அல்லது அதற்கெதிரான ஏதேனும் நிறைவேற்று கையின் விதிப்பனவைச் செய்வித்திருப்பாராயின் அல்லது அவற்றுக்கு மறைமுகமாக ஆதரவளித்திருப் பாராயின் ; அல்லது

(ஏ) கம்பெனியின் கடன்தருநர்களை மோசடி செய்யும் எண்ணத்துடன் பணக்கொடுப்பனவுக்கு கம்பெனிக் கெதிராகப் பெறப்பட்ட திருப்திப்படுத்தப்படாத ஏதே னும் வழக்குத் தீர்ப்பின் அல்லது கட்டளையின் தேதியிலிருந்து அல்லது அதற்கு முந்திய இரண்டு மாதங்களுக்குள் கம்பெனி ஆதனத்தின் ஏதேனும் பாகத்தை மறைத்து வைத்திருப்பாராயின் அல்லது அப்புறப்படுத்தியிருப்பாராயின்,

அவர் தவறொன்றைப் புரிந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) (அ) ஓராம் உட்பந்தியின் (அ) என்னும் அல்லது (ஊ) என்னும் பந்தியின்கீழ் குற்றஞ்சாட்டப்பட்ட ஆளொரு வர் மோசடி செய்யும் முன்னம் தமக்கிருக்கவில்லை என எண்பிப்பது ;

(ஆ) ஓராம் உட்பிரிவின் (இ) அல்லது (ஈ) என்னும் பந்தி யின்கீழ் குற்றஞ்சாட்டப்பட்ட ஆளொருவர் கம்பெனி அலுவல்களின் நிலைமையை மறைப்பதற்கான அல்லது சட்டத்தை முறியடிப்பதற்கான முன்னம் தமக்கிருக்கவில்லை என எண்பிப்பது,

எதிர்காப்பொன்றாகும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் தவறொன்றைப் புரியும் ஆளொருவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு அல்லது ஐந்தாண்டுகளுக்கு மேற்படாத ஒரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

**375.** (1) ஒடுக்கப்பட்டுள்ள கம்பெனியொன்றின் தொழில் எதுவும் கம்பெனியின் கடன்தருநர்களை அல்லது வேறு எவரேனும் ஆளின் கடன்தருநர்களை மோசடி செய்யும் எண்ணத்துடன் அல்லது ஏதேனும் மோசடியான நோக்கத்திற்காக கொண்டுநடாத்தப்பட்டுள்ளவிடத்து, அறிந்திருந்தும் அம்முறையில் தொழிலைக் கொண்டுநடாத்துவதற்குத் திறத்தவரொருவராயிருந்த ஒவ்வோராளும் தவறொன்றைப் புரிந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு அல்லது ஐந்து ஆண்டுகளுக்கு மேற்படாத ஒரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

மோசடியான வியாபாரம்.

(2) கம்பெனியொன்று ஒடுக்கப்பட்டுவரும்பொழுது கம்பெனியின் ஏதேனும் தொழில் கம்பெனியின் கடன்தருநர்களை அல்லது வேறு எவரேனும் ஆளின் கடன்தருநர்களை மோசடி செய்யும் எண்ணத்துடன் அல்லது ஏதேனும் மோசடியான நோக்கத்துடன் கொண்டுநடாத்தப்பட்டுள்ளது எனத் தோன்றுமிடத்து, நீதிமன்றமானது ஒழிப்போனின் அல்லது கம்பெனியின் எவரேனும் கடன்தருநரின் விண்ணப்பத்தின்மீது அறிந்திருந்தும் அந்த முறையில் தொழிலைக் கொண்டுநடாத்துவதற்குத் திறத்தவர்களாயிருந்த ஆட்கள் எவரும், நீதிமன்றம் தகுந்ததெனக் கருதக்கூடியவாறான -

(அ) அத்தகைய உதவுதொகையை கம்பெனியின் இருப்புச் சொத்துகளுக்குச் செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும் என ; அல்லது

(ஆ) கம்பெனியின் அத்தகைய தனிசுகளுக்கு அல்லது வேறு பொறுப்புகளுக்கு ஆளுக்குரிய முறையில் பொறுப்பாதல் வேண்டும் என,

வெளிப்படுத்தலாம்.

**376.** (1) கம்பெனியொன்று ஒடுக்கப்பட்டு வரும்போது கம்பெனியை உருவாக்குவதில் அல்லது ஊக்குவிப்பதில் பங்கெடுத்துக் கொண்டுள்ள ஆளொருவர், அல்லது கம்பெனியின் கடந்தகால அல்லது தற்காலிக பணிப்பாளர், முகாமையாளர், ஒழிப்போன் அல்லது பெறுநர் ஒருவர் கம்பெனியின் பணத்தை அல்லது ஆதனத்தை துஷ்பிரயோகம் செய்துள்ளார், தடுத்துவைத்துள்ளார் அல்லது அதற்கு ஆளாகியுள்ளோர் அல்லது பொறுப்பாகியுள்ளோர் என, அல்லது கம்பெனி தொடர்பில் கவனயீனத்

பணத்தை மீளச் செலுத்துமாறு அல்லது ஆதனத்தை திருப்பிக் கொடுக்குமாறு ஆட்களை தேவைப்படுத்துவதற்கு நீதிமன்றத்திற்குள்ள தத்துவம்.

துக்கு, தவறுகைக்கு அல்லது கடமையின் அல்லது நம்பிக்கையின் மீறுகைக்குக் குற்றவாளியாக இருந்துள்ளார் என நீதிமன்றத்துக்குத் தோன்றுமிடத்து நீதிமன்றமானது, ஒழிப்போன் அல்லது கடன்தருநர் அல்லது பங்குதாரர் ஒருவரின் விண்ணப்பத்தின் மீது —

(அ) ஊக்குவிப்போனின், பணிப்பாளரின், முகாமையாளரின் ஒழிப்போனின் அல்லது பெறுநரின் நடத்தையையிட்டு விசாரணை செய்தலும் ; அத்துடன்

(ஆ) அவ்வாளுக்கு—

(i) பணத்தை அல்லது ஆதனத்தை அல்லது அதன் ஏதேனும் பாகத்தை நீதிமன்றம் நீதியானதென கருதும் வீதமொன்றிலான வட்டியுடன் மீளச் செலுத்துமாறு அல்லது மீள ஒப்படைக்குமாறு ; அல்லது

(ii) அத்தகைய பணத்தொகையை நீதிமன்றம் நீதியானதெனக் கருதும் சேதவீடு என்றவகையில் கம்பெனியின் சொத்துக்களுக்கு உதவுதொகையாகச் செலுத்துமாறு கட்டளையிடலாம் ; அல்லது

(இ) விண்ணப்பம் கடன்தருநர் ஒருவரால் செய்யப்படுமிடத்து, பணத்தை அல்லது ஆதனத்தை அல்லது அதன் ஏதேனும் பாகத்தை நீதிமன்றம் நீதியானதெனக் கருதும் வீதமொன்றிலான வட்டியுடன் கடன்தருநருக்குச் செலுத்துமாறு அவ்வாளுக்குக் கட்டளையிடலாம்.

(2) நடத்தையானது இச்சட்டத்தின்கீழான தவறொன்றாக அமையக்கூடுமாயினுங்கூட இப்பிரிவின் ஏற்பாடுகள் பயனுறுதல் வேண்டும்.

(3) இப்பிரிவின்கீழ் பணக்கொடுப்பனவுக்கான கட்டளையொன்று ஆக்கப்படுமிடத்து, அது (97 ஆம் அத்தியாயமான)

கடனிறுக்க வகையின்மைக் கட்டளைச் சட்டத்தின் நோக்கங்களுக்கு, அக்கட்டளைச் சட்டத்தின் 12 ஆம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட தனிசு அல்லது பணக்கோரிக்கையொன்றின் அறவீட்டிற்கான நீதித் தீர்ப்பொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

பாரபந்தமுள்ள ஆதனத்தை உரிமை கோரிக்கை கைவிடல்.

**377.** (1) ஒடுக்கப்பட்டவரும் கம்பெனியொன்றின் ஆதனத்தின் ஏதேனும் பாகம், வில்லங்கமான பொருத்தனைகளால் பாரபந் தப்படுத்தப்பட்ட ஏதேனும் நிபந்தனைகளுக்குட்பட்ட ஏதேனும் காணியை, கம்பெனிகளில் பங்குகளை அல்லது பங்குத் தொகுதியை இலாபகரமற்ற, ஒப்பந்தங்களை அல்லது அது, அதனை ஆட்சியுடைமை கொண்டிருப்பவரை ஏதேனும் வில்லங்க மான செயலைச் செய்யுமாறு அல்லது ஏதேனும் பணத்தொகை யைச் செலுத்துமாறு பிணிக்கும் காரணத்தினால், விற்பனை செய்யப்பட முடியாத அல்லது உடனடியாக விற்பனை செய்யப்பட முடியாத வேறு ஏதேனும் ஆதனத்தைக் கொண்டிருக்குமிடத்து, கம்பெனியின் ஒழிப்போன், ஆதனத்தை விற்பனை செய்வதற்கு முயற்சி செய்துள்ளார் அல்லது ஆதனத்தை ஆட்சியுடைமைக்கு எடுத்துள்ளார் அல்லது அது தொடர்பில் சொத்துவம் சார்ந்த ஏதேனும் செயலைப் பிரயோகித்துள்ளார் என்பது எவ்வாறிருப் பினும், நீதிமன்றத்தின் அனுமதியுடனும் இப்பிரிவின் ஏற்பாடு களுக்கமையவும் ஒடுக்குதல் ஆரம்பித்த தேதியிலிருந்து பன்னிரண்டு மாதங்களுக்குள் அல்லது நீதிமன்றத்தால் அனுமதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நீடிக்கப்பட்ட காலப் பகுதிக்குள் ஏதேனும் நேரத்தில் அவரால் கையொப்பமிடப்பட்ட எழுத்தின்மூலம் ஆதனத்திற்கு உரிமைக்கோரிக்கையை கைவிடலாம்.

ஆயினும், ஒடுக்குதல் ஆரம்பிக்கப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் அத்தகைய ஆதனம் எதுவும் ஒழிப்போனின் அறிவுக்கு எட்டாதவிடத்து, இப்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் ஆதனத்திற்கு உரிமைகோராதுவிடும் தத்துவம், அதனைப் பற்றி அவர் அறிந்துகொண்ட தேதியிலிருந்து பன்னிரண்டு மாதங் களுக்குள் அல்லது நீதிமன்றத்தால் அனுமதிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய நீடிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் ஏதேனும் நேரத்தில் பிரயோகிக்கப்படலாம்.

(2) உரிமைக்கோரிக்கையை கைவிடுதலானது, உரிமை கோராது விடப்படும் தேதியிலிருந்து உரிமைகோராது விடப்படும் ஆதனத்தில் அல்லது அது தொடர்பில் கம்பெனியின் உரிமைகளையும், அக்கறையையும், பொறுப்புக்களையும், கம்பெனியின் ஆதனத்தையும் தீர்மானிப்பதற்கு செயற்படுதல் வேண்டும், ஆனால் கம்பெனியையும் கம்பெனியின் ஆதனத்தையும் பொறுப்பிலிருந்து விடுவிக்கும் நோக்கத்திற்கு அவசியமாகக்கூடிய வாறான அளவுக்குத் தவிர, வேறு எவரேனும் ஆளின் உரிமைகளையோ அல்லது பொறுப்புக்களையோ பாதித்தலாகாது.

(3) நீதிமன்றமானது, உரிமைக்கோரிக்கையை கைவிடுவதற்கு அனுமதி அளிப்பதற்கு முன் அல்லது அளிப்பதன்மீது நீதிமன்றம் நீதியானதெனக் கருதுகின்றவாறான அத்தகைய அறிவித்தல்கள் அக்கறையுடைய ஆட்களுக்குக் கொடுக்கப்படல் வேண்டுமெனத் தேவைப்படுத்தலாம் என்பதுடன் அத்தகைய அனுமதி அளிப்பதற்கான நிபந்தனையொன்றாக அத்தகைய நியதிகளையும் விதிக்கலாம் ; அத்துடன் இந்த விடயத்தில் அத்தகைய வேறு கட்டளையையும் ஆக்கலாம்.

(4) ஒழிப்போன் இப்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் ஏதேனும் ஆதனத்தை உரிமைகோராது விடுவதற்கு உரித்துடையவராதலாகாது ; ஆதனத்தில் அக்கறையுடைய எவரேனும் ஆளினால், ஒழிப்போனுக்கு அவர் உரிமைகோராதுவிடுவாரா அல்லது உரிமைகோருவாரா என அவரைத் தேவைப்படுத்தும் எழுத்திலான விண்ணப்பமொன்று அவருக்குச் செய்யப்பட்டுள்ள ஏதேனும் விடயத்திலும் அத்துடன் விண்ணப்பம் கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து இருபத்தெட்டு நாட்களைக் கொண்டவொரு காலப்பகுதிக்குள் அல்லது நீதிமன்றத்தால் அனுமதிக்கப்படக்கூடியவாறான மேலும் அத்தகைய காலப்பகுதிக்குள் ஒழிப்போன், உரிமை கோராது விடுவதற்கான அனுமதிக்காக நீதிமன்றத்திற்கு விண்ணப்பமொன்றைச் செய்ய உத்தேசிக்கின்றார் என விண்ணப்பகாரருக்கு அறிவித்தல் கொடுத்திராதவிடத்தும், அத்துடன் ஒப்பந்தமொன்றின் விடயத்தில், ஒழிப்போன் மேலே சொல்லப்பட்டவாறு விண்ணப்பமொன்று கிடைக்கப் பெற்றதன்மீது சொல்லப்பட்ட காலப்பகுதிக்குள் அல்லது மேலதிக காலப்பகுதிக்குள் ஒப்பந்தத்திற்கு உரிமைக்கோரிக்கையை கைவிடுமிடத்து, கம்பெனி அதனை ஏற்றங்கீகரித்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) ஒழிப்போனுக்கெதிராக, கம்பெனியுடன் செய்துகொண்ட ஒப்பந்தமொன்றின் அனுகூலங்களுக்கு உரித்துடையவரான அல்லது அதன் பாரபந்தத்திற்கு அமைந்த எவரேனும் ஆளின் விண்ணப்பத்தின்மீது நீதிமன்றமானது, இரு திறத்தவர்களுக்குள் எவரேனும் திறத்தவருக்கு அல்லது திறத்தவரால் ஒப்பந்தத்தை நிறைவேற்றாமைக்குச் சேதவீட்டின் கொடுப்பனவு பற்றி அல்லது வேறு வகையில் நீதிமன்றம் நியாயமானதெனக் கருதுகின்றவாறு அத்தகைய நியதிகளின்மீது ஒப்பந்தத்தை இல்லாதொழிக்கும் கட்டளையொன்றை ஆக்கலாம் என்பதுடன் அத்தகைய கட்டளையின்கீழ் எவரேனும் அத்தகைய ஆளுக்குச் செலுத்தப் படற்பாலதான சேதவீடுகள் எவையும் ஒடுக்குதலில் தனிசொன்றாக அவரால் எண்பிக்கவும்படலாம்.

(6) உரிமைகோரப்படாத ஏதேனும் ஆதனத்தில் ஏதேனும் அக்கறைக்கு உரிமைகோருகின்ற அல்லது உரிமைகோரிக்கை கைவிடப்பட்ட ஏதேனும் ஆதனம் தொடர்பில், இச்சட்டத்தால் விடுவிக்கப்படாத ஏதேனும் பொறுப்பின்கீழுள்ள எவரேனும் ஆளினால் விண்ணப்பமொன்றின்மீது நீதிமன்றமானது, அது தகுந்ததெனக் கருதும் எவரேனும் அத்தகைய ஆளை கேட்பின் பின்னர், ஆதனத்தை அதற்கு உரித்துடையவர்களான எவரேனும் ஆட்களுக்கு அல்லது மேலே சொல்லப்பட்டவாறு அத்தகைய பொறுப்புக்கு சேதவீடு என்ற வகையில் ஆதனம் எந்த ஆளுக்கு ஒப்படைக்கப்படவேண்டும் என்பது நீதியானதெனத் தோன்றக் கூடுமோ அந்த ஆளுக்கு அல்லது அவரின் நம்பிக்கைப்பொறுப் பாளர் ஒருவருக்கு, நீதிமன்றம் நீதியானதெனக் கருதும் அத்தகைய நியதிகளின்மீது உரித்தாக்கும் அல்லது ஆதனத்தை ஒப்படைக்கும் கட்டளையொன்றை ஆக்கலாம் என்பதுடன் அதற்கிணங்க அத்தகைய ஏதேனும் உரித்தாக்கும் கட்டளை ஆக்கப்படுவதன்மீது அதில் அடங்கியுள்ள ஆதனம் அந்நோக்கத்திற்கான உரித்துமாற்றம் அல்லது சாட்டுதல் எதுவுமின்றி அதன் சார்பில் அதன்கண் பெயர் குறிப்பிடப்பட்ட ஆளுக்கு உரித்தாதலும் வேண்டும் :

ஆயினும், உரிமைக் கோரிக்கை கைவிடப்படும் ஆதனம் குத்தகையின் இயல்பினதொன்றாக இருக்குமிடத்து, நீதிமன்ற மானது, கம்பெனியின்கீழ் உரிமைகோரும் எவரேனும் ஆளுக்குச் சாதகமாக அவ்வாளை கீழ்குத்தகைப் பெறுநராகவாயினுஞ்சரி, அல்லது ஈடுபெறுநராகவாயினுஞ்சரி —

(அ) ஒடுக்குதல் ஆரம்பித்த தேதியன்று ஆதனம் தொடர்பில் குத்தகையின்கீழ் கம்பெனியானது எந்தப் பொறுப்புகளுக்கும் கடப்பாடுகளுக்கும் அமைந்திருந்ததோ அதே பொறுப்புகளுக்கும் கடப்பாடுகளுக்கும் அமைந்தவராக்கி ; அல்லது

(ஆ) நீதிமன்றம் தகுந்ததெனக் கருதுமிடத்து, குத்தகையானது அத்தேதியன்று அவ்வாளுக்குச் சாட்டுதல் செய்யப்பட்டிருந்தாற்போன்று அதே பொறுப்புகளுக்கும் கடப்பாடுகளுக்கும் மட்டும் அமைந்தவராக்கி அவ்வாளை ஆக்குகின்ற நியதிகளின் மேலன்றி உரித்தாக்கும் கட்டளையொன்றை ஆக்குதலாகாது. அத்துடன் எந்தவொரு விடயத்திலும் (விடயம் அவ்வாறு தேவைப்படுத்தினால்) குத்தகை உரித்தாக்கும் கட்டளையில் அடங்கியிருந்த ஆதனத்தை மட்டுமே கொண்டிருந்தது என்றாற்போன்றும் அத்துடன் கீழ்குத்தகைப் பெறுநர் அல்லது ஈடுபெறுநர் எவரும் அத்தகைய நியதிகளின்மீது உரித்தாகும் கட்டளையொன்றை ஏற்க மறுக்கின்றார் என்றாற்போன்றும் ஆதனத்திலுள்ள எல்லா அக்கறையிலிருந்தும் அதன்மீதான பிணைப் பொறுப்பிலிருந்தும் புறநீக்கம் செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய நியதிகளின்மீது கட்டளையொன்றை ஏற்றுக்கொள்ள விரும்புகின்றவரான கம்பெனியின் கீழ் உரிமைகோரும் ஆளெவரும் இல்லாதவிடத்து நீதிமன்றமானது, சொத்தையும் கம்பெனியின் ஆதனத்திலுள்ள அக்கறையையும் ஆளுக்குரிய தன்மையிலோ அல்லது பிரதிநிதித்துவ இயல்பொன்றிலோ அத்துடன் தாமாகவோ அல்லது கம்பெனியுடன் கூட்டாகவோ, கம்பெனியால் அதன்கண் உருவாக்கப்பட்ட எல்லா சொத்துக்களிலிருந்தும் பாரபந்தங்களிலிருந்தும் அக்கறைகளிலிருந்தும் கட்டவிழ்க்கப்பட்டவராகவும் விடுவிக்கப்பட்டவராகவும் குத்தகையில் குத்தகை விடுநரின் பொருத்தனைகளை நிறைவேற்றுவதற்கு ஆளான எவரேனும் ஆளுக்கு உரித்தாக்கும் தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(7) இப்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் உரிமைகோரப்படாமையின் தொழிற்பாட்டால் ஊறுற்ற ஆளெவரும் ஊறின் அளவுக்குக் கம்பெனியின் கடன்தருநர் ஒருவராகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்க ஒடுக்குதலில் தனிச்சொன்றாகத் தொகையையும் எண்பிக்கலாம்.

கம்பெனியின் விடயத்தில் தீர்வை நிறைவேற்றல் அல்லது நடுக்கட்டல் பற்றி கடன் தருநருக்குள்ள உரிமைகளின் மட்டுப்பாடு.

**378.** (1) கடன்தருநரொருவர் கம்பெனியொன்றின் பொருட்களுக்கு அல்லதுகாணிகளுக்கு எதிராகத் தீர்வை நிறைவேற்றுகை வழங்கியுள்ளவிடத்தும் அல்லது கம்பெனிக்குப் போமதியாகவுள்ள ஏதேனும் தனிசை நடுக்கட்டியுள்ளவிடத்தும் அத்துடன் அதனையடுத்து கம்பெனியானது ஒடுக்கப்படுமிடத்தும், ஒடுக்குதல் ஆரம்பிக்கும் தேதிக்கு முன்னர் அவர் தீர்வை நிறைவேற்றுகையை அல்லது நடுக்கட்டலைப் பூர்த்திசெய்திருந்தாலன்றி, கம்பெனியின் ஒடுக்குதலில் ஒழிப்போனுக்கு எதிராகத் தீர்வை நிறைவேற்றுகையின் அல்லது நடுக்கட்டலின் நலனைத் தமக்கென வைத்திருப்பதற்கு அவர் உரித்துடையவராதல் ஆகாது –

ஆயின், –

(அ) எந்தக் கூட்டத்தில் தன்னிச்சையான ஒடுக்குதலுக்கான தீர்மானமொன்று முன்மொழியப்படவுள்ளதோ அந்தக் கூட்டமொன்று அழைக்கப்பட்டுள்ளமை பற்றி எவரேனும் கடன்தருநருக்கு அறிவித்தல் கிடைக்கப் பெற்றுள்ளவிடத்து, எத்தேதியில் கடன்தருநருக்கு அவ்வாறு அறிவித்தல் கிடைக்கப் பெற்றதோ அத்தேதி, முற்போந்த ஏற்பாடுகளின் நோக்கங்களுக்காக, ஒடுக்குதல் ஆரம்பிக்கும் தேதிக்காகப் பதிலீடு செய்யப்படுதல் வேண்டும்;

(ஆ) ஒரு கம்பெனியின் எந்தப் பொருட்களின்மீது தீர்வை நிறைவேற்றுகையொன்று விதிக்கப்பட்டுள்ளதோ அந்த எவையேனும் பொருட்களை நீதிமன்றக் கட்டளையினாலான ஒரு விற்பனையின்கீழ், நல்லெண்ணத்துடன் கொள்வனவு செய்யும் ஆள் ஒருவர், எல்லாவிடயங்களிலும் ஒழிப்போனுக்கெதிராக அவற்றில் நல்ல உரித்தொன்றைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்;

(இ) இவ்வுட்பிரிவின் ஏற்பாடுகளினால் ஒழிப்போனுக்கு அளிக்கப்பட்ட உரிமைகள், நீதிமன்றம் தகுந்ததென எண்ணக்கூடியவாறான அத்தகைய அளவுக்கும் அத்தகைய நியதிகளுக்கு அமையவும் கடன்தருநருக்குச் சாதகமாக நீதிமன்றத்தால் ஒதுக்கிவைக்கப்படலாம்.

(2) இப்பிரிவின் நோக்கங்களுக்காக பொருட்களுக்கு எதிரான தீர்வை நிறைவேற்றுகை ஒன்று கைப்பற்றுதலினாலும் விற்பனையினாலும் பூர்த்திசெய்யப்படும் என எடுத்துக்கொள்ளப்படல் வேண்டும். தனிசொன்றின் நடுக்கட்டலொன்று தனிசு கிடைக்கப் பெறுவதினால் பூர்த்திசெய்யப்படுமெனக் கருதப்படல் வேண்டும்; அத்துடன், காணிக்கு எதிரான தீர்வை நிறைவேற்றுகையொன்று கைப்பற்றுதலின்மூலமும் அத்துடன், ஒப்புரவான அக்கறையொன்றின் விடயத்தில், பெறுநர் ஒருவரை நியமிப்பதன் மூலமும் பூர்த்திசெய்யப்படுமெனக் கருதப்படல் வேண்டும்.

(3) இப்பிரிவில் "பொருட்கள்" என்ற சொல்லமைப்பு அசைவுள்ள எல்லா ஆதனங்களையும் உள்ளடக்கும்.

(4) இப்பிரிவிலுள்ள எதுவும் ஏதேனும் ஆதனம் தொடர்பில் பொறுப்பொன்றுக்கு உரித்துடையவரான கடன்தருநர் ஒருவரால் அல்லது அவரின் நலனுக்காக ஏதேனும் ஆதனத்திற்கெதிராக தீர்வை நிறைவேற்றலுக்கு அல்லது நடுக்கட்டலுக்கு ஏற்புடையதாதலாகாது.

*தீர்வை நிறைவேற்றுகையில் எடுக்கப்பட்ட பொருட்கள் தொடர்பில் பிசுக்காலுக்குள்ள கடமைகள்.*

**379.** (1) மூன்றாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, கம்பெனியொன்றின் எவையேனும் பொருட்கள் தீர்வை நிறைவேற்றுகையில் எடுக்கப்பட்டுள்ளவிடத்தும், அத்துடன், அவற்றின் விற்பனைக்கு முன்னர் அல்லது இறையின் முழுத்தொகையையும் பெற்றுக்கொள்ளப்படுவதன் மூலம் அல்லது அறவிடப்படுவதன் மூலம் தீர்வை நிறைவேற்றுகை பூர்த்தியாகுமுன்னர் ஒரு தற்கால ஒழிப்போன் நியமிக்கப்பட்டுள்ளார் என அல்லது ஒடுக்குதற் கட்டளையொன்று ஆக்கப்பட்டுள்ளது என அல்லது தன்னிச்சையான ஒடுக்குதலுக்கான தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டுள்ளது என அறிவித்தலொன்று பிசுக்காலுக்கு சேர்ப்பிக்கப்பட்டுள்ளவிடத்து, பிசுக்கால், அவ்வாறு தேவைப்படுத்தப்படுவதன்

மேல் தீர்வை நிறைவேற்றுகையின் பொருட்டு பகுதியளவிலான தீர்த்துவைத்தலாகக் கைப்பற்றப்பட்ட அல்லது பெறப்பட்ட பொருட்களையும் ஏதேனும் பணத்தையும் ஒழிப்போனிடம் ஒப்படைத்தல் வேண்டும் ; ஆனால், தீர்வை நிறைவேற்றுகையின் செலவுத்தொகைகள், அவ்வாறு ஒப்படைக்கப்பட்ட பொருட்களின் மீதான அல்லது பணத்தின்மீதான ஒரு முதற்தாக்கீடாக இருத்தல் வேண்டும் என்பதுடன், அத்தாக்கீட்டைத் தீர்த்துவைக்கும் நோக்கத்துக்கென ஒழிப்போன் பொருட்களை அல்லது அதில் போதியதானவொரு பகுதியை விற்பனையும் செய்யலாம்.

(2) மூன்றாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, இருநூற்றைம்பது ரூபாவை விஞ்சுகின்ற ஒரு பணத்தொகைக்கான தீர்ப்பொன்று தொடர்பான தீர்வை நிறைவேற்றுகையொன்றின் கீழ், கம்பெனியொன்றின் பொருட்கள் விற்பனை செய்யப்படு மிடத்து அல்லது விற்பனையைத் தவிர்ப்பதற்காக பணம் செலுத் தப்படுமிடத்து. பிசுக்கால், தீர்வை நிறைவேற்றுகையின் செலவுத் தொகைகளை விற்பனையின் விற்று வரவிலிருந்து அல்லது செலுத்தப்பட்ட பணத்திலிருந்து கழித்து மிகுதியை பதினான்கு நாட்களுக்குத் தடுத்துவைத்திருத்தல் வேண்டுமென்பதுடன், அக் காலத்துக்குள் கம்பெனி தன்னிச்சையாக ஒடுக்கப்படுவதற்காக மனுவொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை பற்றி அல்லது எந்தக் கூட்டத்தில் கம்பெனியின் தன்னிச்சையான ஒடுக்குதலுக்கான தீர்மானமொன்று முன்மொழியப்பட்டுள்ளதோ அந்தக் கூட்ட மொன்று அழைக்கப்பட்டுள்ளமைபற்றி அவருக்கு அறிவித்த லொன்று சேர்ப்பிக்கப்பட்டிருப்பின், அத்துடன், விடயத்திற்கேற் றாற்போல கம்பெனியை ஒடுக்குவதற்காகக் கட்டளையொன்று ஆக்கப்பட்டிருப்பின் அல்லது தீர்மானமொன்று நிறைவேற்றப் பட்டிருப்பின், தீர்வை நிறைவேற்றுக் கடன்தருநருக்கு எதிராக அம்மிகுதியைத் தடுத்துவைத்திருக்க உரித்துடையவராக இருக்க வேண்டிய ஒழிப்போனுக்கு, மிகுதியை பிசுக்கால் செலுத்துதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் ஏற்பாடுகளினால் ஒழிப்போனுக்கு அளிக்கப் பட்ட உரிமைகள், நீதிமன்றம் தகுந்ததென எண்ணக்கூடியவாறான அத்தகைய அளவுக்கும் அத்தகைய நியதிகளுக்கு அமையவும் கடன்தருநருக்குச் சாதகமாக நீதிமன்றத்தால் புறத்தொதுக்கி வைக்கப்படலாம்.

(4) இப்பிரிவில் "பொருட்கள்" என்ற சொல்லமைப்பு அசைவுள்ள எல்லா ஆதனங்களையும் உள்ளடக்கும் என்பதுடன், "பிசுக்கால்" என்னும் சொல்லமைப்பு, எழுத்தாணை ஒன்றை அல்லது வேறு மன்றாணையை நிறைவேற்றுவதற்கான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள எவரேனும் அலுவலரையும் உள்ளடக்கும்.

(5) இப்பிரிவிலுள்ள எதுவும், ஏதேனும் ஆதனம் தொடர்பில் தாக்கீடொன்றுக்கு உரித்துடையவரான கடன்தருநர் ஒருவரால் அல்லது அவரின் நலனுக்கு ஏதேனும் ஆதனத்திற்கெதிரான தீர்வை நிறைவேற்றல் அல்லது நடுக்கட்டல் ஒன்றுக்கு ஏற்புடைய தாதலாகாது.

**ஒடுக்குதலுக்கு முன்னிகழ்ந்த அல்லது ஒடுக்குதலின் போக்கிலான தவறுகள்**

ஒழித்துக் கட்டப்படும் கம்பெனிகளின் அலுவலர்களால் புரியப்படும் தவறுகள்.

**380.** (1) சார்த்தப்பட்ட தவறு புரியப்பட்ட நேரத்தில், நீதிமன்றத்தின் மேற்பார்வையினாலாயினுஞ்சரி அல்லது மேற்பார்வையின் கீழாயினுஞ்சரி அல்லது தன்னிச்சையாகவாயினுஞ்சரி, ஒடுக்கப்பட்டு வருகின்ற அல்லது ஒடுக்கப்படுமாறு நீதிமன்றத்தால் அதன் பின்னர் கட்டளையிடப்பட்டுள்ள அல்லது தன்னிச்சையான ஒடுக்குதலுக்கான தீர்மானமொன்றை அதன்பின்னர் நிறைவேற்றுகின்ற ஒரு கம்பெனியின் கடந்தகால அல்லது தற்போதைய அலுவலராயிருக்கும் எவரேனும் ஆள் —

(அ) கம்பெனியின், அசைவுள்ளனவும் அசைவற்றனவுமான எல்லா ஆதனங்களையும், கம்பெனியினது தொழிலின் சாதாரணப் போக்கில் கையுதிர்க்கப்பட்டுள்ளவாறான அத்தகைய பாகம் தவிர, அதன் ஏதேனும் பகுதியைக் கம்பெனி எப்படி, எவருக்கு, என்ன பிரதிபயனுக்கு, எப்போது கையுதிர்த்தது என்பதனை அவரது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரை ஒழிப்போனுக்கு முற்றாகவும் உண்மையாகவும் அறியத்தராதவிடத்து ;

(ஆ) அவரது கட்டுக்காவலில் அல்லது அவரது கட்டுப்பாட்டின்கீழ் உள்ளவையும், அத்துடன் ஒப்படைக்கும்படி சட்டத்தால் அவர் தேவைப்படுத்தப்பட்டவையு

மான கம்பெனியின் அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தினது அத்தகைய எல்லாப் பகுதிகளையும் ஒழிப்போனுக்கு அல்லது அவர் பணிக்கின்றவாறாக ஒப்படைக்காதவிடத்து ;

(இ) கம்பெனிக்குச் சொந்தமானவையும் அவரது கட்டுக்காவலில் அல்லது அவரது கட்டுப்பாட்டின்கீழ் உள்ளவையும், ஒப்படைக்கும்படி அவர் சட்டத்தால் தேவைப்படுத்தப்படுவையுமான எல்லாப் புத்தகங்களையும் பத்திரங்களையும் ஒழிப்போனுக்கு அல்லது அவர் பணிக்கின்றவாறாக ஒப்படைக்காதவிடத்து ;

(ஈ) கம்பெனியின் அலுவல்கள் தொடர்பான ஏதேனும் கூற்றில் ஏதேனும் முக்கியமான விட்டுவிடுகையைச் செய்யுமிடத்து ;

(உ) ஒடுக்குதலின்கீழ் எவரேனும் ஆளினால் பொய்யான தனிசொன்று எண்பிக்கப்பட்டுள்ளதென அறிந்திருந்தும் அல்லது நம்பியிருந்தும் ஒருமாத காலப்பகுதிக்கு அதனைப்பற்றி ஒழிப்போனுக்கு அறிவிக்கத் தவறுமிடத்து ;

(ஊ) ஒடுக்குதல் ஆரம்பமாகும் தேதிக்குப் பின்னர் கம்பெனியின் ஆதனத்தை அல்லது அலுவல்களைப் பாதிக்கும் அல்லது ஆதனம் அல்லது அலுவல்கள் தொடர்பான ஏதேனும் புத்தகம் அல்லது பத்திரம் காண்பிக்கப்படுதலைத் தடுக்குமிடத்து ;

(எ) ஒடுக்குதல் ஆரம்பமாகும் தேதிக்குப் பின்னர் அல்லது ஒடுக்குதல் ஆரம்பமாகும் தேதிக்கு நேர்முன்னரான பன்னிரண்டு மாதங்களுள், கம்பெனியின் கடன்தருநர்களின் ஏதேனும் கூட்டத்தில் கம்பெனியினது ஆதனத்தின் ஏதேனும் பகுதிக்கும் புனைந்த நட்டங்களினால் அல்லது செலவுகளினால் கணக்குக்கூற முயற்சி செய்யுமிடத்து ;

(ஏ) ஒடுக்குதல் ஆரம்பமாகும் தேதிக்கு நேர்முன்னரான பன்னிரண்டு மாதங்களுள் அதன்பின்னர் எந்நேரத்திலும் ஏதேனும் பொய்ப்பகர்வின்மூலம் அல்லது வேறு மோசடியின் மூலம், கம்பெனியானது எந்த ஆதனத்துக்கான பணத்தை அதன் பின்னர் செலுத்தாது விடுகின்றதோ அந்த ஏதேனும் ஆதனத்தைக் கம்பெனிக்காக அல்லது கம்பெனியின் சார்பில் கடனுக்குப் பெற்றுள்ளவிடத்து ;

(ஐ) ஒடுக்குதல் ஆரம்பமாகும் தேதிக்கு நேர்முன்னரான பன்னிரண்டு மாதங்களுள் அல்லது அதன்பின்னர் எந்நேரத்திலும் கம்பெனியானது அதன் தொழிலைக் கொண்டுநடாத்துகின்றது என்ற பொய்யான பாவனையில் எந்த ஆதனத்திற்கான பணத்தைக் கம்பெனி அதன்பின்னர் செலுத்தாதுவிடுகின்றதோ, அந்த ஏதேனும் ஆதனத்தைக் கம்பெனிக்காக அல்லது கம்பெனியின் சார்பில் கடனுக்குப் பெறுமிடத்து ;

(ஒ) கம்பெனியின் அலுவல்கள் தொடர்பிலான அல்லது ஒடுக்குதல் தொடர்பிலான உடன்படிக்கையொன்றுக்குக் கம்பெனியின் கடன்பெறுநர்களின் அல்லது அவர்களுள் எவரினதும் சம்மதத்தைப் பெற்றுக் கொள்ளும் நோக்கத்திற்காக ஏதேனும் பொய்யான பகர்விற்கு அல்லது வேறு மோசடிக்குக் குற்றவாளியாயிருக்குமிடத்து,

அவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், (ஏ), (ஐ), (ஒ) என்னும் பந்திகளில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள தவறுகளின் விடயத்தில், ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு அல்லது ஐந்து ஆண்டுகளுக்கு மேற்படாதவொரு காலத்திற்கான மறியற்றண்டனைக்கும் அல்லது அத்தகைய குற்றப்பணம் மறியற்றண்டனை இரண்டிற்கும் இவ்வுட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ், வேறு எவையேனும் தவறுகளின் விடயத்தில் ஐந்து இலட்சம் ரூபாவுக்கு மேற்படாதவொரு குற்றப்பணத்திற்கு அல்லது இரண்டு ஆண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மறியற்றண்டனை இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும் :

ஆயின், குற்றஞ்சாட்டப்பட்டவர், மோசடிசெய்யும் முன்னம் தமக்கு இருக்கவில்லையென்று எண்பிப்பது, (அ), (ஆ), (இ), (ஈ), (ஐ) என்னும் பந்திகளுள் ஏதேனும் பந்தியின் ஏற்பாடுகளின் கீழான ஒரு குற்றச்சாட்டுக்கும், கம்பெனியின் அலுவல்களை மறைக்கும் முன்னம் அல்லது சட்டத்தை முறியடிக்கும் முன்னம் தமக்கு இருக்கவில்லை என்று எண்பிப்பது (ஊ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளின் கீழான ஒரு குற்றச் சாட்டுக்கும் எதிராக நல்ல எதிர்வாதமாதல் வேண்டும்.

(2) இப்பிரிவின் நோக்கங்களுக்காக "அலுவலர்" என்ற சொல் லமைப்பு, எந்த ஆளின் பணிப்புகளுக்கிணங்க அல்லது அறிவுறுத் துரைகளுக்கிணங்க கம்பெனிப் பணிப்பாளர்கள் வழமையாகச் செயலாற்றுகின்றார்களோ அந்த எவரேனும் ஆளையும் உள்ளடக்குதல் வேண்டும்.

முறையான கணக்குகள் வைக்கப்படாத விடத்து எழும் பொறுப்பு.

**381.** (1) கம்பெனியொன்று ஒடுக்கப்படும் போக்கில், ஒடுக்குதல் ஆரம்பித்த தேதிக்கு நேர்முன்னரான இரண்டு ஆண்டுகளைக் கொண்ட காலப்பகுதி முழுவதும் அல்லது கம்பெனியின் கூட்டி ணைப்புக்கும் ஒடுக்குதல் ஆரம்பிக்கும் தேதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதி முழுவதும், இவற்றுள் எது குறுகியதோ, அக்காலப் பகுதியில் கம்பெனியால் முறையான கணக்குகள் வைக்கப்பட வில்லையென்பது காட்டப்படின், கம்பெனியின் தவறுகையிலுள்ள அலுவலர் ஒவ்வொருவரும், அவர் நேர்மையாகவே செயலாற்றி னார் என்னும், எந்தச் சூழ்நிலைகளில் கம்பெனியின் அலுவல்கள் கொண்டுநடாத்தப்பட்டனவோ அந்தச் சூழ்நிலைகளில் தவறுகை தவிர்க்கமுடியாததாக இருந்தது என்றும் காட்டினாலன்றி, தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், ஓரிலட்சம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதல் வேண்டும்.

(2) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, பெறப்பட்ட எல்லாப் பணம் பற்றியும் செலுத்தப்பட்ட பணம் பற்றியும் போதிய விபரத் தில் நாளாந்தப் பதிவீடுகளும், அத்துடன் வியாபாரம் அல்லது தொழில், பொருட்களிலான கொடுக்கல் வாங்கல்களை உட்படுத்தி யிருக்குமிடத்து, பொருட்களையும் அவற்றின் வாங்குநர்களையும் விற்பனையாளர்களையும் அடையாளம் கண்டுகொள்வதை

இயலச்செய்வதற்கு போதிய விவரத்தில் காட்டும் ஆண்டுக் கையிருப்புக் கொள்கலன்களினதும், (சாதாரண சில்லறை வியாபாரத்தின் வழியாக விதிக்கப்பட்ட பொருட்களின் விடயத் தில் தவிர) விற்பனை செய்யப்பட்டவையும் கொள்வனவு செய்யப் பட்டவையுமான பொருட்களினதும் கூற்றுக்களும் அடங்கிய புத்தகங்கள் உட்பட, கம்பெனியினது வியாபாரத்தின் அல்லது தொழிலின் கொடுக்கல் வாங்கல்களையும் நிதிநிலைமையையும் வெளிக்காட்டவும் விளக்கவும் அவசியமாகவுள்ள அத்தகைய புத்தகங்கள் அல்லது கணக்குகள் வைத்திருக்கப்பட்டிராவிடில், ஏதேனும் கம்பெனியின் விடயத்தில், முறையான கணக்குப் புத்தகங்கள் வைத்திருக்கப்படவில்லையெனக் கருதப்படல் வேண்டும்.

கம்பெனியின் ஒழுக்கறை அலுவலர் களுக்கும் உறுப்பினர் களுக்கும் எதிரான குற்றவழக்கு.

**382.** (1) நீதிமன்றத்தால் அல்லது நீதிமன்றத்தின் மேற்பார் வைக்கமைய செய்யப்படும் ஒடுக்குதல் ஒன்றின் போக்கில் கம்பெனி யின் எவரேனும் கடந்தகால அல்லது தற்போதைய அலுவலர் அல்லது எவரேனும் பங்குதாரர், கம்பெனி தொடர்பாக எந்தத் தவறுக்கு அவர் குற்றவியற் பொறுப்புள்ளவராயிருக்கின்றாரோ, அந்த ஏதேனும் தவறுக்குக் குற்றவாளியாக இருந்துள்ளாரென நீதிமன்றத்துக்குத் தோன்றுவிடத்து, நீதிமன்றம் ஒடுக்குதலில் அக்கறையுடைய எவரேனும் ஆளின் விண்ணப்பத்தின்மீதோ அல் லது அதன் சொந்தப் பிரேரணையின்மீதோ ஒழிப்போனையே தவறாளருக்கெதிராகக் குற்றவழக்குத் தொடுக்கும்படி பணிக்க லாம், அல்லது கருமத்தைச் சட்டத்துறைத் தலைமை அதிபதிக்கு ஆற்றுப்படுத்தும்படி பணிக்கலாம்.

(2) தன்னிச்சையான ஒடுக்குதல் ஒன்றின் போக்கில் கம்பெனி யின் எவரேனும் கடந்தகால அல்லது தற்போதைய அலுவலர் அல்லது எவரேனும் பங்குதாரர், கம்பெனி தொடர்பாக எந்தத் தவறுக்கு அவர் குற்றவியற் பொறுப்புள்ளவராயிருக்கின்றாரோ அந்த ஏதேனும் தவறுக்குக் குற்றவாளியாயிருந்துள்ளரென ஒழிப் போனுக்குத் தோற்றுமிடத்து, அவர் உடனடியாக அக்கருமத்தைச் சட்டத்துறைத் தலைமை அதிபதிக்கு அறிவிக்க வேண்டும் என்பதுடன், அவருக்குத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய தகவல்களை அவருக்குக் கொடுத்துதவுதலும், ஒழிப்போனின் உடைமையில் அல்லது கட்டுப்பாட்டின்கீழ் உள்ளவையும், சம்பந்

தப்பட்ட கருமத்துடன் தொடர்புடையவையுமான தகவல்களாக வுள்ள அல்லது ஆவணங்களாகவுள்ள எவையேனும் ஆவணங் களைப் பெறுவதற்கான ஏற்பாடுசெய்தலும், அவற்றைப் பார்வை யிடுவதற்கும் அவற்றின் பிரதிகளையெடுப்பதற்குமான வசதி களை அவருக்கு அளித்தலும் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு ஏதேனும் அறிக்கை செய்யப்படுமிடத்து, அவர், தகுந்ததென எண்ணினால் விசாரணைக்கெனப் பதிவாள ருக்கு அக்கருமத்தை ஆற்றுப்படுத்தலாம் ; அதன்மேல் பதிவாளர் அக்கருமத்தைப் புலனாய்வு செய்தல் வேண்டும் என்பதுடன், உகந்ததென அவர் எண்ணுமிடத்து நீதிமன்றத்தினால் செய்யப் படும் ஓர் ஒடுக்குதலின் விடயத்தில் சம்பந்தப்பட்ட கம்பெனி தொடர்பில், கம்பெனியின் அலுவல்களைப் புலனாய்வு செய்வதற் கும் இச்சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டவாறான அத்தகைய எல்லாத் தத்துவங்களையும் அவருக்கு அல்லது அந்நோக்கத் துக்கென அவரால் பதவிப் பெயர் குறிக்கப்பட்ட எவரேனும் ஆளுக்கு அளிக்கும் கட்டளையொன்றுக்காக நீதிமன்றத்துக்கு ஒரு விண்ணப்பஞ் செய்யலாம்.

(4) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ், சட்டத்துறைத் தலைமை அதிபதிக்குச் செய்யப்பட்ட ஏதேனும் அறிக்கையின்மேல் இவ்விடயம், அவரால் வழக்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டிய ஒரு விடயம் அல்லவெனச் சட்டத்துறைத் தலைமை அதிபதிக்குத் தோன்றும் இடத்து, அவர் அதற்கிணங்க ஒழிப்போனுக்கு அறிவிக்கவேண்டும் என்பதுடன் அதன்மேல் நீதிமன்றத்தின் முன்னைய ஏற்பனுமதிக்கமைய, ஒழிப்போன் தாமே தவறாளருக் கெதிராக வழக்கு நடவடிக்கை எடுக்கலாம்.

(5) தன்னிச்சையான ஒடுக்குதல் ஒன்றின் போக்கில் கம்பெனி யின் எவரேனும் கடந்தகால அல்லது தற்போதைய அலுவலர் அல்லது எவரேனும் பங்குதாரர், மேலே சொல்லப்பட்டவாறு குற்றவாளியாக இருந்துள்ளார் எனவும் அக்கருமம் தொடர்பில் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ், ஒழிப்போனால் சட்டத் துறைத் தலைமை அதிபதிக்கு அறிக்கையெதுவும் செய்யப்பட் டிருக்கவில்லையெனவும் தோன்றுமிடத்து, நீதிமன்றமானது, ஒடுக்குதலில் அக்கறை கொண்டுள்ள எவரேனும் ஆளின் விண்ணப்பத்தின்மேல் அல்லது அதன் சொந்தப் பிரேரணை யின்மீது, அத்தகைய அறிக்கையைச் செய்யுமாறு ஒழிப்போனைப்

பணிக்கலாம் என்பதுடன், அதற்கிணங்க அறிக்கையொன்று செய்யப்படுவதன்மேல், இப்பிரிவின் ஏற்பாடுகள் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளைப் பின்பற்றியே அறிக்கை செய்யப் பட்டிருந்தது என்றாற்போன்று பயனுடையனவாதலும் வேண்டும்.

(6) இப்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ், ஏதேனும் கருமம் சட்டத் துறைத் தலைமையதிபதிக்கு அறிவிக்கப்பட்டுள்ளவிடத்து அல்லது ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளவிடத்து, இவ்விடயம் குற்ற வழக்கொன்று தொடுக்கப்பட வேண்டிய ஒரு விடயம் என சட்டத் துறைத் தலைமை அதிபதி கொண்டால், அவர் அதற்கிணங்க வழக்கு நடவடிக்கைகள் தொடுத்தல் வேண்டும் என்பதுடன், குற்றவழக்கு சம்பந்தமாக எந்த உதவியை தம்மால் நியாயமாகக் கொடுக்க முடியுமோ அந்த எல்லா உதவியையும் அவருக்குக் கொடுப்பது ஒழிப்போனினதும், கம்பெனியினதும் கடந்தகால, தற்போதைய அலுவலர், மற்றும் முகவர் (வழக்கு நடவடிக்கை களிலுள்ள குற்றஞ் சாட்டப்பட்டவர் தவிர) ஒவ்வொருவரினதும் கடமையாதலும் வேண்டும்.

இந்த உட்பிரிவின் நோக்கங்களுக்காக, ஒரு கம்பெனி தொடர்பாக "முகவர்" என்ற சொல்லமைப்பு, கம்பெனியின் எவரேனும் வங்கியாளரையும் அல்லது சட்டத்தரணியையும் அத்துடன், கணக்காய்வாளராகக் கம்பெனியால் ஊழியத்துக்கமர்த்தப்பட்டுள்ள எவரேனும் ஆளையும், அந்த ஆள், கம்பெனியின் ஓர் அலுவலராக இருப்பினுஞ்சரி, இல்லாவிடினுஞ்சரி, உள்ளடக்குதல் வேண்டும்.

(7) ஆறாம் உட்பிரிவினால் தேவைப்படுத்தப்பட்ட முறையில் உதவியளிப்பதற்கு எவரேனும் ஆள் தவறுமிடத்து அல்லது அசட்டை செய்யுமிடத்து நீதிமன்றமானது, சட்டத்துறைத் தலைமை அதிபதியின் விண்ணப்பத்தின்மேல், சொல்லப்பட்ட உட்பிரிவின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுமாறு அந்த ஆளைப் பணிக்கலாம் என்பதுடன், அத்தகைய ஏதேனும் விண்ணப்பம் ஒழிப்போன் ஒருவர் தொடர்பில் செய்யப்படும் இடத்து இணங்கியொழுகத் தவறியமைக்கான அல்லது அசட்டை செய்தமைக்கான காரணம், ஒழிப்போன் அவ்விதம் செய்வதை இயலச்செய்வதற்குக் கம்பெனியின் போதியளவு இருப்புச் சொத்துக்களைத் தம் கையில் ஒழிப்போன் வைத்திராததே எனத் தோன்றினாலன்றி, விண்ணப்பத்திற்கான செலவுத் தொகைகளை ஒழிப்போன் தாமே தனிப்பட்ட ரீதியில் தாங்குதல் வேண்டுமென நீதிமன்றம் பணிக்கலாம்.

## ஒடுக்குதல் தொடர்பான குறைநிரப்பு ஏற்பாடுகள்

**383.** (1) பின்வரும் ஆட்களுள் எவரும் கம்பெனியொன்றின் ஒழிப்போன் ஒருவராக நியமிக்கப்படுதலோ அல்லது செயற் படுதலோ ஆகாது. ஒழிப்போரின் தகைமைகள்.

(அ) பதினெட்டு வயதுக்குக் குறைந்த ஆளொருவர் ;

(ஆ) கலைத்தலிலுள்ள கம்பெனியின் கடன்தருநர் ஒருவர் ;

(இ) ஒடுக்குதல் ஆரம்பமாவதற்கு உடன் முன்னரான ஆண்டுகளுக்குள் கம்பெனியின் அல்லது சார்புடைய கம்பெனியொன்றின் ஒரு பங்குதாரராக, பணிப்பாள ராக, கணக்காய்வாளராக அல்லது பெறுநராக இருந் துள்ளவரான ஆளொருவர் ;

(ஈ) பொறுப்பு விடுவிக்கப்படாத வங்கி முறிந்தவரொருவர் ;

(உ) மனநோய் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் (அத்தியாயம் 227) சித்தசுவாதீனமற்றவராக நீதித் தீர்க்கப்பட்ட ஆளொருவர் ;

(ஊ) எந்த ஆள் தொடர்பில் 468 ஆம் பிரிவின்கீழ் கட்டளை யொன்று ஆக்கப்பட்டுள்ளதோ அந்த ஆளொருவர் ;

(எ) 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் 186 ஆம் பிரிவின்கீழ் கம்பெனியொன்றின் பணிப்பாள் அல்லது ஊக்குவிப்பாளர் ஒருவராக இருப்பதினின்று அல்லது கம்பெனியின் முகாமைத் துவத்தில் அக்கறைகொண்டிருப்பதினின்று அல்லது பங்குபற்றுவதினின்று தடைசெய்யப்பட்டுள்ளவரான அல்லது அச்சட்டம் நீக்கஞ்செய்யப்படாவிட்டால் அவ்வாறு தடைசெய்யப்படுபவரான ஆளொருவர் ;

(ஏ) பிரிவு 213 அல்லது 214 என்பதன்கீழ் கம்பெனியின் பணிப்பாளராக அல்லது ஊக்குவிப்பாளராக இருப் பதினின்று அல்லது கம்பெனியின் முகாமைத்துவத் தில் அக்கறைகொண்டிருப்பதினின்று அல்லது பங்கேற்றுவதினின்று தடைசெய்யப்பட்டுள்ளவரான ஆளொருவர்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்று ஒழிப்போன் ஒருவராக நியமிக்கப்படுதலோ செயற்படுதலோ ஆகாது.

(3) ஒராம் உட்பிரிவின் அல்லது (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாகச் செயலாற்றுகின்ற ஒவ்வோராளும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மீது இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

*ஒழிப்போனாக நியமித்தலை பாதிக்கும் ஊழல் தூண்டுகை.*

**384.** கம்பெனியொன்றின் எவரேனும் பங்குதாரருக்கு அல்லது கடன்தருநருக்கு தமது சொந்த நியமனத்தை அல்லது பெயர் நியமனத்தைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் அல்லது தம்மைத் தவிர்ந்த வேறு எவரேனும் ஆளின் நியமனத்தை அல்லது பெயர் நியமனத்தைப் பெற்றுக்கொள்ளும் அல்லது தடுக்கும் நோக்குடன் பெறுமதியுடைய பிரதிபயனைக் கொடுக்கின்ற அல்லது கொடுக்க உடன்படுகின்ற, அல்லது கொடைமுனைகின்ற எவரேனும் ஆள், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் இரண்டு இலட்சம் ரூபாவுக்கு மேற்படாதவொரு குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

*விபரத் திரட்டுகள் முதலியவற்றைத் தயாரிப்பதற்கு ஒழிப் போனுக்குள்ள கடமையை வலியுறுத்துதல்.*

**385.** (1) கோப்பிடுமாறு, தயாரிக்குமாறு அல்லது கொடுக்குமாறு ஒழிப்போன் சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட விடயத்திற்கேற்ப ஏதேனும் கணக்கை, ஆவணத்தை அல்லது விபரத் திரட்டைக் கோப்பிடுவதில், ஒப்படைப்பதில் அல்லது தயாரிப்பதில் ஏதேனும் தவறுகைபுரிந்துள்ள எவரேனும் ஒழிப்போன் தவறுகையை ஈடுசெய்யுமாறு அவரைத் தேவைப்படுத்துகின்ற அறிவித்தலொன்று அவருக்குச் சேர்ப்பிக்கப்பட்ட தேதியில் இருந்து பதினான்கு நாட்களுக்குள் அவ்வாறு செய்யத் தவறுமிடத்து, நீதிமன்றமானது, கம்பெனியின் எவரேனும் உதவு தொகை செலுத்துநரினால், அல்லது கடன்தருநரால் அல்லது பதிவாளரால் நீதிமன்றத்துக்குச் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றின்மேல், கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலத்திற்குள் தவறுகையை ஈடுசெய்யுமாறு ஒழிப்போனைப் பணிக்கும் கட்டளையொன்றை ஆக்கலாம்.

(2) ஒராம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ், ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளை, விண்ணப்பத்திற்கானவையும் விண்ணப்பத்தின் இடைநேர்விளைவானவையுமான எல்லாச் செலவுத் தொகைகளையும் ஒழிப்போனே தாங்குதல் வேண்டுமென ஏற்பாடு செய்யலாம்.

(3) இப்பிரிவிலுள்ள எதுவும், (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான அத்தகைய ஏதேனும் தவறுகை தொடர்பில் ஒழிப்போன்மீது தண்டங்களை விதிக்கும் ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் நடைமுறைக்குப் பங்கம் ஏற்படுத்துவதாக எடுத்துக் கொள்ளப்படலாகாது.

*கம்பெனியொன்று கலைத்தலில் உள்ளமை பற்றிய அறிவிப்பு.*

**386.** (1) கம்பெனியொன்று, நீதிமன்றத்தினால் அல்லது அதன் மேற்பார்வையின் கீழாயினுஞ்சரி, தன்னிச்சையாக வாயினுஞ்சரி கலைக்கப்பட்டு வருமிடத்து, எந்த ஆவணத்தின்மீது அல்லது ஆவணத்தில் கம்பெனியின் பெயர் தோன்றுகின்றதோ அந்த ஆவணமாயிருப்பதும் கம்பெனியால் அல்லது கம்பெனியின் சார்பில் அல்லது கம்பெனிக்கு ஓர் ஒழிப்போனால் அல்லது ஒழிப் போன் சார்பில் அல்லது கம்பெனியினது ஆதனத்தின் பெறு நரால் அல்லது பெறுநர் சார்பில் அல்லது முகாமையாளரால் அல்லது முகாமையாளர் சார்பில் வழங்கப்பட்டதுமான அனுப்பு பொருட்பட்டியல், பொருட்களைப் பெறுவதற்கான தேவைக் கட்டளை அல்லது தொழில்சார் கடிதம் ஒவ்வொன்றும், கம்பெனி கலைக்கப்பட்டு வருகின்றது என்னும் கூற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) இப்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதில் தவறுகை புரியப்படுமிடத்து கம்பெனியும், அத்துடன், அறிந்து கொண்டும், வேண்டுமென்றும் தவறுகையை அதிகாரமளிக்கின்ற அல்லது அனுமதிக்கின்ற பின்வரும் ஆட்களுள் எவரும், அதாவது கம்பெனியின் எவரேனும் அலுவலர், கம்பெனியின் எவரேனும் ஒழிப்போன் அத்துடன் எவரேனும் பெறுநர் அல்லது முகாமை யாளர், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பது டன், ஐம்பதினாயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

*கம்பெனிகளின் ஒடுக்குதலின் மீது முத்திரை வரியிலிருந்து குறித்தசில ஆவணங்களுக்கு விலக்களித்தல்.*

**387.** கம்பெனியொன்று நீதிமன்றத்தால் ஒடுக்கப்படும் விடயத்தில் அல்லது கம்பெனியொன்று கடன்தருநர்களினால் தன்னிச்சையாக ஒடுக்கப்படும் விடயத்தில் -

(அ) தனியே, அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் தொடர்பான, அல்லது கம்பெனியின் இருப்புச்

சொத்துக்களில் பாகமாக அமைகின்றதும் அத்துடன் உறுதி நிறைவேற்றப்பட்டதன்பின் கம்பெனியின் இருப்புச்சொத்துக்களின் பாகமாக உள்ளதும் அல்லது தொடர்ந்திருப்பதுமான அத்தகைய ஏதேனும் ஆதனத்தின் மீதான ஏதேனும் ஈட்டை, தாக்கீட்டை அல்லது வேறு பாரிப்பை அல்லது அத்தகைய ஆதனத்தில் ஏதேனும் சொத்தை, உரிமையை அல்லது அக்கறையை உருவாக்குகின்ற ஒவ்வோர் உறுதியும் ; அத்துடன்

(ஆ) அவ்வாறு ஒடுக்கப்பட்டுவரும் ஏதேனும் கம்பெனியின் ஆதனத்துடன் அல்லது அத்தகைய ஏதேனும் ஒடுக்குதலின் கீழான ஏதேனும் நடவடிக்கையுடன் தனியே தொடர்புடைய அற்றோனித் தத்துவம், பதிவுப் பத்திரம், எழுத்தாணை, கட்டளை, சான்றிதழ், சத்தியக்கடுதாசி, முறி அல்லது வேறு சாதனம் அல்லது எழுத்தாவணம் ஒவ்வொன்றும்,

முத்திரை வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

*கம்பெனியின் புத்தகங்கள் சான்றாதல்.*

**388.** கம்பெனியொன்று ஒடுக்கப்பட்டு வருமிடத்து, கம்பெனியினதும் ஒழிப்போரினதும் எல்லாப் புத்தகங்களும் பத்திரங்களும், கம்பெனியின் உதவுதொகை செலுத்துநர்களுக்கிடையில் அதனகத்தே பதியப்பட்டு இருப்பதாகக் கொள்ளப்பட்ட எல்லாக் கருமங்களினதும் உண்மை பற்றி முதற்றோற்றச் சான்றாதல் வேண்டும்.

*கம்பெனியின் புத்தகங்களையும் பத்திரங்களையும் கையுதிர்த்தல்.*

**389.** (1) கம்பெனியொன்று ஒடுக்கப்பட்டிருந்து, கலைக்கப்படவிருக்கும்போது, கம்பெனியினதும் ஒழிப்போரினதும் புத்தகங்களும் பத்திரங்களும் பின்வருமாறு கையுதிர்க்கப்படலாம் ; அதாவது -

(அ) நீதிமன்றத்தால் அல்லது நீதிமன்றத்தின் மேற்பார்வைக்கமைய செய்யப்படும் ஓர் ஒடுக்குதலின் விடயத்தில் நீதிமன்றம் பணிக்கின்றவாறான அத்தகைய வகையில் ;

(ஆ) பங்குதாரர்களின் தன்னிச்சையான ஒடுக்குதலின் விடயத்தில், கம்பெனியானது அதிவிசேட தீர்மானத்தின்மூலம் பணிக்கின்றவாறான அத்தகைய வகையிலும், அத்துடன், கடன்தருநர்களின் தன்னிச்சையான ஒடுக்குதலின் விடயத்தில், சோதனைக்குழு பணிக்கின்றவாறான அத்தகைய வகையிலும், அத்துடன், கடன்தருநர்களின் தன்னிச்சையான ஒடுக்குதலின் விடயத்தில், சோதனைக்குழு பணிக்கின்றவாறான அத்தகைய வகையிலும், அல்லது அத்தகைய குழு எதுவும் இல்லாதவிடத்து, கம்பெனியின் கடன்தருநர்கள் பணிக்கின்றவாறான அத்தகையவகையிலும்.

(2) கம்பெனி கலைக்கப்பட்ட தேதியிலிருந்து ஐந்து ஆண்டுகளின் பின்னர், ஏதேனும் புத்தகம் அல்லது பத்திரம், அதில் அக்கறைகொண்டுள்ளவராக உரிமைகோரும் எவரேனுமாளுக்குக் கிடைக்கப்பெறாதிருக்கின்றமை காரணமாக, கம்பெனி மீதோ, ஒழிப்போன் மீதோ அல்லது புத்தகங்களும் பத்திரங்களும் எந்த ஆளின் கட்டுக்காவலுக்குப் பாரப்படுத்தப்பட்டுள்ளனவோ அந்த எவரேனும் ஆளின் மீதோ அந்தப் பொறுப்புடைமையெதுவும் இருத்தலாகாது.

(3) ஒடுக்கப்பட்டுள்ள ஒரு கம்பெனியின் புத்தகங்களினதும் பத்திரங்களினதும் அழிப்பை, பதிவாளர் தகுந்ததென அவர் எண்ணக்கூடியவாறான அத்தகைய காலத்துக்கு (அக்காலம் கம்பெனி கலைக்கப்பட்ட தேதியிலிருந்து ஐந்து ஆண்டுகளுக்கு மேற்படாததாயிருத்தல் வேண்டும்) தடுப்பதை இயலச்செய்வதற்கும் கம்பெனியின் எவரேனும் கடன்தருநர் அல்லது உதவுதொகை செலுத்துநர் பதிவாளருக்கு முறையீடுகள் செய்வதையும் இக்கருமத்தில் பதிவாளரால் விடுக்கப்படக்கூடியதான ஏதேனும் பணிப்புக்கெதிராக நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்வதையும் இயலச்செய்வதற்கும் விதிகள் ஆக்கப்படலாம்.

(4) ஆளெவரும் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளுக்கு அல்லது அதன்கீழ் பதிவாளரினால் விடுக்கப்படும் ஏதேனும் பணிப்புக்கு முரணாகச் செயலாற்றுகின்றவிடத்து, அவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் இரண்டு இலட்ச ரூபாவுக்கு மேற்படாதவொரு குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

*முடிவுறாதிருக்கும் ஒழித்துக் கட்டுதல்கள் பற்றிய தகவல்.*

**390.** (1) கம்பெனியொன்றின் ஒடுக்குதல், அது தொடங்கிய தேதியிலிருந்து ஓராண்டிற்குள் முடிவுறாதிருக்குமிடத்து ஒழிப்போன் ஒடுக்குதல் முடிவுறும்வரை, விதித்துரைக்கப்படக்கூடிய வாறான அத்தகைய கால இடைவெளிகளில், ஒழித்துக்கட்டுதலிலான நடவடிக்கைகள் தொடர்பிலும் விதித்துரைக்கப்பட்ட படிவத்திலான கூற்றொன்றை விதித்துரைக்கப்பட்ட விபரங்களைக் கொண்டுள்ளதாய், பதிவாளருக்கு அனுப்புதல் வேண்டும்.

(2) ஒழிப்போன் ஒருவர் இப்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுமிடத்து அவர், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐம்பதினாயிரம் ரூபாவுக்கு மேற்படாதவொரு குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

*கடன்தருநர் களினதும் உதவு தொகை வழங்கு நர்களினதும் ஒத்திவைக்கப் பட்ட கூட்டங்களில் நிறை வேற்றப்படும் தீர்மானம்.*

**391.** கம்பெனியொன்றின் எவரேனும் கடன்தருநர்களின் அல்லது உதவுதொகை வழங்குநர்களின் ஒத்திவைக்கப்பட்ட கூட்டமொன்றின் தீர்மானமொன்று நிறைவேற்றப்படுமிடத்து, அத்தீர்மானமானது, எல்லா நோக்கங்களுக்காகவும், அது உண்மையில் எந்தத் தேதியன்று நிறைவேற்றப்பட்டதோ அந்தத் தேதியில் நிறைவேற்றப்பட்டிருப்பதாகவே கருதப்படுதல் வேண்டுமேயொழிய, ஏதேனும் முந்திய தேதியில் நிறைவேற்றப்பட்டிருப்பதாகக் கருதப்படுதல் ஆகாது.

### நீதிமன்றத்துக்குள்ள குறைநிரப்புத் தத்துவங்கள்

*கடன்தருநர்களின் அல்லது உதவுதொகை செலுத்துநரின் விருப்பங்களை அறிவதற்கான கூட்டங்கள்.*

**392.** (1) நீதிமன்றமானது கம்பெனியொன்றை ஒடுக்குதல் தொடர்பிலான எல்லாக் கருமங்கள் தொடர்பாகவும், போதிய ஏதேனும் சான்று மூலம் அதற்கு எண்பிக்கப்படும் வகையிலான, கம்பெனியின் கடன்தருநர்களின் அல்லது உதவுதொகை செலுத்துநர்களின் விருப்பங்களைக் கருத்துக்கெடுக்கலாம் ; அத்துடன், அது பொருத்தமானதெனக் கருதினால், அவரவர்களுக்குள்ள விருப்பங்களைக் கண்டறியும் நோக்கத்துக்காக நீதிமன்றம் பணிக்கின்ற வாறான அத்தகைய முறையில் கடன்தருநர்களின் அல்லது உதவுதொகை செலுத்துநர்களின் கூட்டங்கள் கூட்டப்பட்டு நடாத்தப்படவேண்டுமெனப் பணிக்கலாம் ; அத்துடன், ஏதேனும் அத்தகைய கூட்டங்களுக்குத் தவிசாளராகச் செயலாற்றுவதற்கும் அக்கூட்ட முடிவு பற்றி நீதிமன்றத்துக்கு அறிவிப்பதற்குமென ஆள் ஒருவரை நியமிக்கலாம்.

(2) கடன்தருநர்களின் விடயத்தில், ஒவ்வொரு கடன்தருநரினதும் தனிசுப் பெறுமதி பற்றிக் கவனத்துக்கெடுத்தல் வேண்டும்.

(3) உதவுதொகை செலுத்துநர்களின் விடயத்தில், இச்சட்டத்தினால் அல்லது கம்பெனியின் அமைப்பகவிதியினால் உதவு தொகை செலுத்துநர் ஒவ்வொருவர்மீதும் அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை பற்றிக் கவனத்துக்கெடுத்தல் வேண்டும்.

### கலைத்தல் பற்றிய ஏற்பாடுகள்

*கம்பெனியின் கலைப்பை வறிதானதென வெளிப்படுத்துவதற்கு நீதிமன்றத்துக்கு உள்ள தத்துவம்.*

**393.** (1) கம்பெனியொன்று கலைக்கப்பட்டுள்ளவிடத்து, கலைக்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்குள்ளாக எந்நேரத்திலும் நீதிமன்றமானது, கம்பெனியின் ஒழிப்போனால் அல்லது அக்கறையுள்ளவரென நீதிமன்றத்துக்குத் தோற்றும் வேறு எவரேனும் ஆளினால் அந்நோக்கத்துக்கென விண்ணப்பமொன்று செய்யப்பட்டதன்மேல், நீதிமன்றம் பொருத்தமானதென கருதுகின்றவாறான அத்தகைய நியதிகள்மீது கலைப்பு வெற்றானதென வெளிப்படுத்திக் கட்டளையொன்றை ஆக்கலாம் ; அத்துடன், அதன்மேல் அக்கம்பெனி கலைக்கப்பட்டிராவிட்டால் எடுக்கப்பட்டிருக்கக்கூடிய அத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்படலாம்.

(2) ஓராமுட்பிரிவின் ஏற்பாடுகளின் கீழான கட்டளைத் தேதியிலிருந்து ஏழு நாட்களுக்குள்ளாக அல்லது நீதிமன்றம் அனுமதிக்கக்கூடியவாறான அத்தகைய மேலதிகக் காலத்துக்குள்ளாக, அத்தகைய கட்டளையின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்றை, பதிவுசெய்யப்படுவதற்கெனப் பதிவாளரிடம் ஒப்படைத்தல், எவ்வாளினது விண்ணப்பத்தின்மேல் அத்தகைய கட்டளை ஆக்கப்பட்டதோ அவ்வாளின் கடமையாதல் வேண்டும் ; அத்துடன் அவ்வாள் அவ்வாறு செய்யத் தவறுமிடத்து, அவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐம்பதினாயிரம் ரூபாவுக்கு மேற்படாதவொரு குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

பதிவாளர் இடாப்பில் இருந்து தொழிலறு கம்பெனியை நீக்கிவிடலாம்.

***394.*** (1) கம்பெனியொன்று தொழிலைக் கொண்டுநடாத்த வில்லை அல்லது தொழிற்படவில்லை எனப் பதிவாளர் நம்பு வதற்கு நியாயமான காரணமிருக்கின்றவிடத்து, அக்கம்பெனி தொழிலைக் கொண்டுநடாத்துகின்றதா அல்லது தொழிற்பாட் டிலுள்ளதா என விசாரிக்கும் கடிதமொன்றை அஞ்சல்மூலம் அக்கம்பெனிக்கு அவர் அனுப்பலாம்.

(2) ஒராமுட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட கடிதம் அனுப்பிய தேதியிலிருந்து ஒரு மாதத்துக்குள்ளாக பதிவாளர் அதற்கு ஏதே னும் மறுமொழியைப் பெறாவிட்டால், சொல்லப்பட்ட ஒரு மாத காலப்பகுதி முடிவடையும் தேதியிருந்து பத்து நாட்களுக்குள்ளாக முதலாவது கடிதத்தைக் குறிப்பீடுசெய்து அதற்கு மறுமொழி எதுவும் கிடைக்கவில்லை எனவும், இரண்டாவது கடிதத் தேதி யிலிருந்து ஒரு மாதத்துக்குள்ளாக மறுமொழி ஒன்று பெறப்படா விட்டால், இடாப்பிலிருந்து கம்பெனியின் பெயரை நீக்கிவிடும் கருத்துடன் வர்த்தமானியில் அறிவித்தலொன்று வெளியிடப்படும் எனவும் கூறும் கடிதமொன்றை பதிவுத் தபால்மூலம் கம்பெனிக்கு அவர் அனுப்பிவைத்தல் வேண்டும்.

(3) பதிவாளர், (2) ஆம் உட்பிரிவுகளினது ஏற்பாடுகளின்கீழ் ஒன்றில் கம்பெனி தொழிலைக் கொண்டுநடாத்தவில்லையென்று அல்லது தொழிற்படவில்லையென்ற பயன்படும் மறுமொழியைப் பெறுகின்றவிடத்து அல்லது இரண்டாவது கடிதத்தை அனுப்பிய தன் பின்னர் ஒரு மாதத்துக்குள்ளாக ஏதேனும் மறுமொழியைப் பெறாதவிடத்து, அறிவித்தற் தேதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடைந்ததும், அதன்கண் குறித்துரைக்கப்பட்ட கம்பெனியின் பெயர், முரணாகக் காரணங்காட்டப்பட்டாலொழிய இடாப்பி லிருந்து நீக்கப்படுவதோடு, கலைக்கப்பட்டும்விடும் எனக் கூறும் அறிவித்தலொன்றை வர்த்தமானியில் வெளியிடலாம் ; அத்து டன் அதைக் கம்பெனிக்கு அஞ்சல்மூலம் அனுப்பிவைக்கலாம்.

(4) கம்பெனியொன்றை ஒடுக்கலில் ஒன்றில் ஒழிப்போன் எவரும் செயற்படவில்லையென அல்லது கம்பெனியின் அலு வல்கள் பூரணமாக ஒடுக்கப்பட்டு இச்சட்டத்தினது ஏற்பாடுகளின் கீழ் ஒழிப்போனால் செய்யப்படவேண்டிய விவரத்திரட்டுகள் தொடர்ச்சியான ஆறுமாத காலப் பகுதிக்குச் செய்யப்படவில்லை

யென நம்புவதற்குப் பதிவாளருக்கு நியாயமான காரணம் இருக்கின்றவிடத்து, பதிவாளர், (3) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டவாறான அறிவித்தலொன்றைக் வர்த்தமானியில் வெளியிடுவதோடு அக்கம்பெனிக்கு அல்லது ஒழிப்போன், எவரேனுமிருந்தால், அவருக்கு அனுப்புதல் வேண்டும்.

(5) நாலாம் உட்பிரிவினது ஏற்பாடுகளின்கீழ் கொடுக்கப்பட்ட அறிவித்தற் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதி முடிவடைந்ததும், பதிவாளர், கம்பெனியினால் முரணான காரணம் முன்னதாகவே காட்டப்பட்டாலொழிய, அக்கம்பெனியின் பெயரை இடாப்பிலிருந்து நீக்கவிடலாம் என்பதுடன், அதுபற்றிய அறிவித்தலொன்றை வர்த்தமானியில் வெளியிடுதலும் வேண்டும் ; அத்துடன் அவ்வாறு வெளியிடப்பட்டதும், அக்கம்பெனி கலைக்கப்படுதல் வேண்டும் :

ஆயின் -

(அ) கம்பெனியின் பணிப்பாளர், முகாமையாளர், பங்குதாரர் ஒவ்வொருவருக்குமுள்ள பொறுப்பு, ஏதேனும் இருப்பின், அது கம்பெனி கலைக்கப்படவில்லையென்றாற்போன்று தொடர்ந்திருத்தல் வேண்டும் என்பதுடன், அது வலியுறுத்தவும்படலாம் ; அத்துடன்

(ஆ) இவ்வுட்பிரிவின் ஏற்பாடுகளிலுள்ள எதுவும், எக்கம்பெனியின் பெயர் இடாப்பிலிருந்து நீக்கப்பட்டுள்ளதோ அக்கம்பெனியின் ஒடுக்குவதற்கு நீதிமன்றத்துக்குள்ள தத்துவத்தைப் பாதித்தலாகாது.

(6) ஒரு கம்பெனி அல்லது அதன் எவரேனும் பங்குதாரர் அல்லது கடன்தருநர் இடாப்பிலிருந்து கம்பெனி நீக்கப்பட்டிருப்பதனால் இன்னலுற்றிருப்பதாக உணருமாயின் அல்லது உணருவாராயின் (5) ஆம் பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்டதிலிருந்து ஐந்து ஆண்டுகள் முடிவடைவதன் முன்னர், விடயத்திற்கேற்றாற்போல, கம்பெனியாலோ அல்லது பங்குதாரராலோ அல்லது கடன்தருநராலோ செய்யப்பட்ட ஒரு விண்ணப்பத்தின்மேல், நீதிமன்றமானது

கம்பெனி நீக்கப்பட்ட நேரத்தில் தொழிலை நடாத்திக்கொண்டிருந்தது அல்லது வேறு வகையாகக் கம்பெனியின் பெயரானது இடாப்பில் மீளப்பதியப்படல் வேண்டுமென்பது நீதியானது எனத் திருப்திப்படுமாயின், கம்பெனியின் பெயர் இடாப்பில் மீளப் பதியப் படவேண்டுமெனக் கட்டளையிடலாம் என்பதுடன் கட்டளையில் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்று பதிவுசெய்யப் படுவதற்கென பதிவாளருக்கு ஒப்படைக்கப்படுவதன்மேல், கம்பெனி, அதன் பெயர் இடாப்பிலிருந்து நீக்கப்பட்டிருக்க வில்லை என்றாற்போன்று சாத்தியமாகக்கூடியவரை அதேநிலை மையில் கம்பெனியையும் ஏனைய எல்லா ஆட்களையும் வைப்பதற்கு நியாயமானதாக அதற்குத் தோன்றும் அத்தகைய பணிப்புரைகளை வழங்கலாம் என்பதுடன், அத்தகைய ஏற்பாடுகளையும் செய்யலாம்.

(7) இப்பிரிவினது ஏற்பாடுகளின்கீழ் ஒழிப்போன் ஒருவருக்கு அனுப்பப்படவேண்டிய ஓர் அறிவித்தல் கடைசியாக அறியப்பட்ட அவரது தொழிலிடத்திற்கு முகவரியிடப்படலாம் என்பதுடன், இப்பிரிவினது ஏற்பாடுகளின்கீழ் கம்பெனி ஒன்றிற்கு அனுப்பப் படவேண்டிய ஒரு கடிதம் அல்லது ஓர் அறிவித்தல் அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்துக்கு அல்லது அலுவலகம் எதுவும் பதிவுசெய்யப்படாதிருக்குமிடத்து, ஆண்டு விபரத்திரட்டுகள், அல்லது கம்பெனியால் பதிவாளருக்கு அனுப்பப்பட்ட கம்பெனியின் சில அலுவலர்களுக்கான பதிவுசெய்யப்பட்ட மிக அண்மைய முகவரியில் அவ்வலுவலரை மேற்பார்த்து முகவரியிட்டு அனுப்பப்படலாம்.

கலைக்கப்பட்ட கம்பெனியின் ஆதனம் அரசுக்கு உரித்தாதல்.

**395.** கம்பெனியொன்று கலைக்கப்படுமிடத்து, அது கலைக் கப்படும் தேதிக்கு உடன் முன்னர், கம்பெனிக்கு உரித்தாக்கப்பட்ட அல்லது கம்பெனிக்காக நம்பிக்கைப் பொறுப்பாக வைத்திருக்கப் பட்ட எத்தகையவுமான எல்லா ஆதனங்களும் உரிமைகளும் (குத்தகை ஆதனம் உட்பட, ஆனால் வேறு எவரேனும் ஆளுக்காக நம்பிக்கைப் பொறுப்பாக கம்பெனியால் வைத்திருக்கப்பட்ட ஆதனத்தை உள்ளடக்காமல்), 393 ஆம், 394 ஆம் பிரிவுகளினது ஏற்பாடுகளின்கீழ் ஏதேனும் நேரத்தில் நீதிமன்றத்தால் செய்யப்படக்கூடிய வேறு ஏதேனும் கட்டளைக்கு அமையவும் பங்கமின்றியும் அரசுக்கு உரித்தாதலும் அரசின் கையாளுதலில் இருத்தலும் வேண்டும்.

### கம்பெனிகளின் கலைத்தல் கணக்கு

*கம்பெனிகளின் கலைத்தற் கணக்கைத் தாபித்தல்.*

**396.** (1) கம்பெனிகள் கலைத்தற் கணக்கு என அழைக்கப்பட வேண்டிய கணக்கொன்று பதிவாளரால், நிதி என்னும் விடயத் திற்குப் பொறுப்பான அமைச்சர் காலத்துக்குக் காலம் அங்கீகரிக் கக்கூடியவாறான அத்தகைய வங்கியுடன் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

(2) கம்பெனிகள் கலைத்தற் கணக்கின் வரவிலிருக்கும் மீதி பதிவாளரின் அபிப்பிராயப்படி அப்போதைக்கு 397 ஆம் பிரிவின்கீழ் உரிமைக் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான தொகையைவிட மிகையாக இருக்கும்போதெல்லாம், பதிவாளர் மிகையைப் பற்றி திறைசேரியின் பிரதிச் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும் என்பதுடன் அவர் தேவைப்படுத்தக்கூடிய அந்த மிகையின் முழுவதையும் அல்லது ஏதேனும் பாகத்தை அவர் பணிக்கக்கூடியவாறான அத்தகைய கணக்கிற்கென அவருக்குச் செலுத்துதலும் வேண்டும். பிரதிச் செயலாளர் அவருக்குச் செலுத் தப்பட்ட பணத்தொகையை அல்லது அவற்றின் ஏதேனும் பாகத்தை கம்பெனிகளின் கலைத்தற் கணக்கின் வரவில் வைத் திருக்கப்படுவதற்கென அரசாங்கப் பிணையங்களின் முதலீடு செய்யலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் பிரதிச் செயலாளருக்குச் செலுத்தப்பட்ட பணத்தின் ஏதேனும் பாகம், பதிவாளரின் அபிப்பிராயப்படி 397 ஆம் பிரிவின்கீழ் ஏதேனும் உரிமைக் கோரிக்கையை நிறைவேற்றுவதற்குத் தேவைப்படுமிடத்து பதிவாளர் அத்தேவைப்பாட்டைப் பற்றி பிரதிச் செயலாளருக்கு அறிவித்தல் கொடுத்தல் வேண்டும் ; இவர் தேவைப்படுத்தப்பட்ட தொகையை கம்பெனிகள் கலைத்தற் கணக்கின் வரவுக்கென பதிவாளருக்கு மீளச் செலுத்துதல் வேண்டும் என்பதுடன் அந்நோக்கத்திற்காக (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட எவையேனும் பிணையங்களை விற்பனையையும் செய்யலாம்.

(4) இப்பிரிவின் கீழ் செய்யப்பட்ட முதலீடுகளின்மீதான பங்கிலாபங்கள் கம்பெனிகள் கலைத்தல் கணக்கிற்குச் செலுத்தப் படுதல் வேண்டும்.

கம்பெனிகள் கலைத்தற் கணக்கிற்கும் அதிலிருந்தும் செய்யப்படும் கொடுப்பனவுகள்.

**397.** (1) ஒழிப்போன் ஒருவரின் வரவிலிருக்கும் கம்பெனியொன்றின் உரிமை கோரப்படாத இருப்புச் சொத்துக்களைக் குறிக்கும் பணம், ஒடுக்குதல் பூர்த்தியானதன் பின்னர் கம்பெனிகள் கலைத்தற் கணக்கில் வரவு வைக்கப்படுவதற்கென பதிவாளருக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(2) கம்பெனிகள் கலைத்தற் கணக்கில் வைத்திருக்கப்படும் பணங்கள், கம்பெனியொன்றின் ஒடுக்குதலில் ஏதேனும் பணத்தின் கொடுப்பனவிற்கு அல்லது எந்த மிதமிஞ்சிய சொத்துக்களின் வருவாய்கள் அக்கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டுள்ளதோ அந்த மிதமிஞ்சிய இருப்புச் சொத்துக்களுக்கு உரித்துடையவராயிருந்திருக்கக்கூடிய எவரேனும் ஆளுக்குச் செலுத்தப்படலாம் அல்லது பகிர்ந்தளிக்கப்படலாம்.

(3) ஏதேனும் கம்பெனி தொடர்பில் எவையேனும் நிதிகள் கம்பெனிகள் கலைத்தற் கணக்கிற்குச் செலுத்தப்பட்டுள்ளவிடத்தும் அத்துடன் அதனை அடுத்து கம்பெனி கலைக்கப்பட்டுள்ளவிடத்தும் அந்நிதிகள் தொடர்பில் 395 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

அத்தியாவசிய சேவைகளை விநியோகிக்க மறுத்தல் தடை செய்யப்படலாம்.

**398.** (1) இப்பிரிவின் நோக்கங்களுக்கு –

"அத்தியாவசிய சேவை" என்பது –

(அ) மின்சாரத்தின் சில்லறை வழங்கல் ;

(ஆ) நீர் வழங்கல் ; அத்துடன்

(இ) தொலைத் தொடர்புகள் சேவைகள் வழங்கல்,

என்று பொருள்படும்.

(2) எழுத்திலான ஏதேனும் சட்டத்தில் முரணாக அடங்கியுள்ள ஏற்பாடுகள் அல்லது ஏதேனும் ஒப்பந்தம் எவ்வாறிருப்பினும் அத்தியாவசிய சேவையொன்றின் வழங்குநர் ஒருவர் –

(அ) கலைத்தல் ஆரம்பமாவதற்கு முந்திய காலப்பகுதியொன்று தொடர்பில், சேவைக்கு வருமதியான கட்டணங்களின் கொடுப்பனவில் கம்பெனியின் தவணை தவறுகையின் காரணமாக ஒழிப்போன்

ஒருவருக்கு அல்லது கலைத்தலில் உள்ள கம்பெனி யொன்றுக்கு அத்தகைய சேவையை வழங்கலுக்கு மறுத்தலாகாது ;

(ஆ) ஒழிப்போன் ஒருவருக்கு அல்லது கலைத்தலில் உள்ள கம்பெனியொன்றுக்கு அத்தகைய சேவையை வழங் கலுக்கு கலைத்தல் ஆரம்பமாவதற்கு முந்திய காலப் பகுதியொன்று தொடர்பில் சேவைக்கு வருமதியாக நிலுவையிலுள்ள அறவீடுகள் செலுத்தப்பட வேண்டும் என்பதனை ஒரு நிபந்தனையாக்குதலாகாது.

(3) ஐயப்பாட்டைத் தவிர்த்தற்கு, இப்பிரிவிலுள்ள எதுவும் கலைத்தல் ஆரம்பமானதன் பின்னரான ஏதேனும் காலப்பகுதி தொடர்பில் சேவைக்கு வருமதியான அறவீடுகளைச் செலுத்து வதில் கம்பெனியொன்றினால் புரியப்படும் தவறுகையொன்று தொடர்பில் ஏதேனும் ஒப்பந்தத்தின் கீழ் அல்லது எழுத்திலான ஏதேனும் சட்டத்தின்கீழ் ஏதேனும் உரிமையை அல்லது தத்து வத்தைப் பிரயோகிப்பதிலிருந்து அத்தியாவசிய சேவையொன்றின் வழங்கலைத் தடை செய்தலாகாது.

(4) அத்தியாவசிய சேவையொன்றை வழங்கலுக்கு ஒழிப்போன் ஒருவரால் உறப்பட்ட அறவீடுகள், இச்சட்டத்திற்கான ஒன்பதாம் அட்டவணையின் 1(அ) என்னும் பந்தியின் நோக்கங்களுக்கு ஒழிப்போனால் உறப்பட்ட செலவொன்றாதல் வேண்டும்.

## விதிகளும் கட்டணங்களும்

ஒடுக்குதலுக்கான விதிகளும் கட்டணங்களும்.

**399.** (1) இச்சட்டத்தின் குறிக்கோள்களைப் பயனுறுவதற்கு ஏற் பாடு செய்வதற்கான விதிகள் அது கம்பெனிகளின் ஒடுக்கத்தைத் தொடர்புறுத்தும் அளவுக்கு அமைச்சரால் ஆக்கப்படலாம்.

(2) கம்பெனிகளின் ஒடுக்கம் தொடர்பில் இச்சட்டத்தின் கீழான நடவடிக்கைகள் தொடர்பாக ஒழுங்குவிதிகள் மூலம் அமைச்சர் விதித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய நியாயமான கட்டணங் கள் செலுத்தப்படுதல் வேண்டும்.

## பாகம் XIII

### நிர்வாகிகள்

*நிர்வாகிகளின் நியமனம்*

பொருள்கோடல்.

**400.** இச்சட்டத்தின் இப்பாகத்தில் சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலன்றி –

(அ) "ஆரம்பக் காலப்பகுதி" என்பது, நிர்வாகியின் நியமனத் தேதியிற் தொடங்கி –

(i) 404 ஆம் பிரிவின்கீழ் கூட்டமொன்று நடைபெறும் தேதியன்று வரையிலான காலம் ;

(ii) 402 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க பெறுநர் ஒருவர் நியமிக்கப்படும் தேதி வரையிலான காலம் ; அல்லது

(iii) இருபது வேலை நாட்கள் அல்லது நீதிமன்றம் அனுமதிக்ககூடியவாறான அத்தகைய நீண்ட காலம்,

என்பனவற்றுள் எது முதலில் நிகழ்கின்றதோ அது வரையிலான காலம் என்று பொருள்படும் ; அத்துடன்

(ஆ) வாடகைக் கொள்வனவு உடன்படிக்கைகள், பற்றிய குறிப்பீடுகளில் நிபந்தனைக்குட்பட்ட விற்பனை உடன்படிக்கைகள், தட்டுமுட்டுச் சாமான்களை குத்தகைக்கு விடும் ஒழுங்குகள் அத்துடன் உரித்து உடன்படிக்கைகளைத் தொடர்ந்து வைத்திருத்தல் என்பன அடங்கும்.

நிர்வாகியை நியமிப்பதற்கு சபைக்குள்ள தத்துவம்.

**401.** (1) இப்பிரிவின் நாலாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய கம்பெனியொன்றின் சபையானது –

(அ) கம்பெனி, அதன் தனிசுகள் வருமதியாகும்போது அதனைச் செலுத்த இயலாதிருக்கின்றது அல்லது இயலாதாகக்கூடிய சாத்தியம் உண்டு என ; அத்துடன்

(ஆ) நிர்வாகி ஒருவரின் நியமனம் (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட நோக்கங்களுள் ஒன்றையோ அல்லது பலவற்றையோ எய்தும் சாத்தியமிருக்கும் எனக்,

கருதும் இடத்து சபை கம்பெனியொன்றின் நிர்வாகியொருவரை நியமிக்கத் தீர்மானிக்கலாம்.

(2) நிர்வாகியொருவர் நியமிக்கப்படக்கூடிய நோக்கங்களாவன —

(அ) கம்பெனியினதும் அத்துடன் அதன் பொறுப்பு முயற்சி முழுவதினதும் அல்லது அதன் ஏதேனும் பாகத்தினதும் தொடர்ந்துறும் நிறுவனமொன்றாக நிலைபேறானதொன்றாக்கல் ;

(ஆ) பாகம் IX என்பதன் கீழ் இணக்கமொன்றை அல்லது பாகம் X என்பதன்கீழ் இணக்கமொன்றை அல்லது ஒழுங்கேற்பாடொன்றைத் தயாரித்தலும் அங்கீகரித்தலும் ; அல்லது

(இ) ஒடுக்குதலொன்றின்மீது பெறக்கூடிய சாத்தியமொன்றைவிட கூடுதலான நன்மையடையக்கூடியதாக கம்பெனியின் இருப்புச் சொத்துக்களை பணமாகப் பெறுதல்.

(3) நிர்வாகியொருவரை நியமிப்பதற்கான தீர்மானமொன்று எந்த நோக்கத்திற்காக அல்லது நோக்கங்களுக்காக நியமனம் செய்யப்படுகின்றது என்பதைக் குறித்துரைத்தல் வேண்டும் என்பதுடன் அது நிறைவேற்றப்பட்ட பின்னர் நீதிமன்றத்தின் அனுமதியின்றி இல்லாதொழிக்கப்படாதுமிருக்கலாம்.

(4) தீர்மானமொன்று —

(அ) கம்பெனியை ஒடுக்குவதற்கான கட்டளையொன்று ஆக்கப்பட்டுள்ளவிடத்து ;

(ஆ) எந்த ஆளினால் அல்லது எந்த ஆளின் சார்பில் பெறுநர் நியமிக்கப்பட்டாரோ அந்த ஆள் கட்டளையை ஆக்குவதற்கு சம்மதித்திருந்தாலன்றி கம்பெனியின் முழு ஆதனம் மற்றும் பொறுப்பு முயற்சி தொடர்பில் பெறுநர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளவிடத்து ;

(இ) மேலும் ஒரு நியமனத்தைச் செய்வதற்கு முதலில் நீதி மன்றத்தின் அனுமதி பெறப்பட்டாலன்றி, முன்னைய சந்தர்ப்பமொன்றில் நிர்வாகியொருவர் நியமிக்கப்பட்டுள்ளவிடத்து,

சபையால் இப்பிரிவின்கீழ் நிறைவேற்றப்படுதலாகாது.

(5) நாலாம் உட்பிரிவுக்கு முரணாக நிறைவேற்றப்படும் தீர்மானமொன்று வறிதானதும் பயனற்றதாதலும் வேண்டும்.

*நிர்வாகியின் நியமனம் பற்றி பொறுப்பு வைத்திருப்பவர்களுக்கு அறிவித்தல்.*

**402.** (1) கம்பெனியொன்றின் சபை நிர்வாகியொருவரை நியமிக்குமிடத்து கம்பெனியானது உடனடியாக அத்தகைய நியமனத்தைப் பற்றியதும் அத்துடன் நிர்வாகியாக நியமிக்கப்பட்டுள்ள ஆளின் ஆளடையாளத்தைப் பற்றியதுமான அறிவித்தலை, கம்பெனியின் ஆதனத்தினதும் பொறுப்பு முயற்சியினதும் பெறுநர் ஒருவரை நியமிப்பதற்கு உரித்துடையவரான எவரேனும் ஆளுக்குக் கொடுத்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அறிவித்தலொன்று கொடுக்கப்பட்ட தேதியிலிருந்து பத்து வேலை நாட்களுக்குட்பட்ட ஏதேனும் நேரத்தில், கம்பெனியின் ஆதனத்தினதும் பொறுப்பு முயற்சியினதும் பெறுநர் ஒருவரை நியமிப்பதற்கு உரித்துடையவரான ஆளொருவர் அத்தகைய நியமனம் ஒன்றைச் செய்யலாம். அத்தகைய பெறுநர் ஒருவரின் நியமனத்தின்மீது நிர்வாகி பதவி வகித்தலை உடனடியாக இல்லாதொழித்தல் வேண்டும்.

*நிர்வாகியின் நியமனத்தின் பயன்பாடு.*

**403.** (1) நிர்வாகியொருவரின் நியமனத்திலிருந்தும் அதன் பின்னரும், ஆரம்ப காலப்பகுதியின் இறுதிவரை —

(அ) கம்பெனியைக் கலைப்பதற்கான தீர்மானம் எதுவும் நிறைவேற்றப்படுதலாகாது அல்லது கட்டளை எதுவும் ஆக்கப்படுதலாகாது ;

(ஆ) பிரிவு 402 என்பதன் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய நிர்வாகியின் சம்மத்துடன் தவிர அல்லது நீதிமன்றத்தின் அனுமதியுடனும் நீதிமன்றம் விதிக்கக்கூடியவாறான அத்தகைய நியதிகளுக்கமையவும், தவிர, கம்பெனியின் ஏதேனும் ஆதனத்தின்மீது ஏதேனும் பிணைப்பொறுப்பை வலுவுக்கிடுவதற்கு அல்லது ஏதேனும் வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் கம்பெனியின் பாவனையில் அல்லது உடைமையிலிருக்கும் எவையேனும் பொருட்களை மீள் உடைமை கொள்வதற்கு நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படாதிருக்கலாம் ;

(இ) நிர்வாகியின் சம்மதத்துடன் தவிர அல்லது நீதிமன்றத்தின் அனுமதியுடனும் நீதிமன்றம் விதிக்கக்கூடியவாறான அத்தகைய நியதிகளுக்கமையவும் தவிர, கம்பெனிக்கு அல்லது அதன் ஆதனத்திற்கு எதிராக வேறு நடவடிக்கைகள் எவையும் அத்துடன் நிறைவேற்றுகை அல்லது வேறு சட்ட நடைமுறைகள் எவையும் ஆரம்பிக்கப்படுதலோ அல்லது தொடரப்படுதலோ ஆகாது, அத்துடன் கைப்பற்றாணை எதுவும் விதிக்கப்படுதலாகாது.

(2) ஓராம் உட்பிரிவிலுள்ள எதுவும் —

(அ) கம்பெனியை ஒடுக்குவதற்கான மனுவொன்றை அணைப்பதற்கு ; அல்லது

(ஆ) கம்பெனியின் ஆதனத்தின்மீதான தாக்கீடொன்றின் கீழ் அல்லது கம்பெனியின் பாவனையில் உடைமையில் அல்லது இருப்பாட்சியில் உள்ள ஆதனம் தொடர்பிலான உடன்படிக்கையொன்றின்கீழ் தவணை தவறுகையொன்று தொடர்பில் அறிவித்தல் கொடுப்பதற்கு,

நீதிமன்றத்தின் அனுமதியைத் தேவைப்படுத்தமாட்டாது.

## ஆரம்பநிலைக் கூட்டமும் நியமனத்தின் உறுதிப்படுத்துகையும்

ஆரம்ப நிலைக் கூட்டத்தைக் கூட்டுவதற்கு நிர்வாகிக்குள்ள கடமை.

**404.** (1) நிர்வாகியொருவர், நியமிக்கப்பட்டதிலிருந்து பத்து வேலை நாட்களுக்குள் கம்பெனியின் எல்லா கடன்தருநர்களுக்கும் அவரவர்களின் முகவரிகள் தெரிந்த அளவுக்கு—

(அ) நிர்வாகியொருவரின் நியமனம் பற்றி அவர்களுக்கு அறிவித்தும் ; அத்துடன்

(ஆ) நியமனம் உறுதிப்படுத்தப்படவேண்டுமோ எனப் பரிசீலனை செய்வதற்கு கடன் தருநர்களின் கூட்ட மொன்றை அழைத்தும்,

எழுத்திலான அறிவித்தலொன்றை அனுப்புதல் வேண்டும்.

(2) ஆரம்பக் காலப்பகுதி முடிவடைவதற்கு முன்னர் கடன் தருநர்களின் கூட்டமெதுவும் நடைபெறாதவிடத்து நிர்வாகி அக்காலப்பகுதி முடிவில் பதவி வகித்தலை இல்லாதொழித்தல் வேண்டும்.

(3) இப்பிரிவின் கீழ் அழைக்கப்படும் கடன்தருநர்களின் கூட்ட மொன்று, எல்லாக் கடன்தருநர்களும் ஒரே வகுப்பினர்களாக வாக்களிக்க வேண்டும் என்பதைத் தவிர, ஏழாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட நடவடிக்கைக்கு இணங்க நடாத்தப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவின்கீழ் கடன்தருநர்களின் கூட்டமொன்று நிர்வாகியின் நியமனத்தை உறுப்படுத்தாதவிடத்து, நிர்வாகி கூட்டம் முடிவுற்றதில் இருந்து பதவி வகித்தலை இல்லாதொழித்தல் வேண்டும்.

(5) இப்பிரிவின்கீழ் கடன்தருநர்களின் கூட்டமொன்று நிர்வாகியின் நியமனத்தை உறுதிப்படுத்துமிடத்து, நிர்வாகி பதவியில் தொடர்ந்திருத்தல் வேண்டும் என்பதுடன் 406 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க பிரேரணைகளைத் தயாரித்தலும் வேண்டும்.

நிர்வாகியின் உறுதிப் படுத்துகையின் பயன்.

**405.** (1) நிர்வாகியொருவர் ஆரம்பகாலப் பகுதி முடிவுற்றதன் பின்னர் பதவி வகிக்கும் காலப்பகுதியின்போது —

(அ) கம்பெனியை ஒடுக்குவதற்கு தீர்மானம் எதுவும் நிறைவேற்றாது இருக்கலாம் அல்லது கட்டளை எதுவும் ஆக்கப்படாதிருக்கலாம் ;

(ஆ) கம்பெனியின் ஆனத்தின் பெறுநர் எவரும் நியமிக்கப்படாதிருக்கலாம் ;

(இ) (i) நிர்வாகியின் சம்மதத்துடன் தவிர ; அல்லது

(ii) நீதிமன்றத்தின் அனுமதியுடனும் நீதிமன்றம் விதிக்கக்கூடியவாறான அத்தகைய நியதிகளுக்கமையவும் தவிர,

கம்பெனியின் ஏதேனும் ஆதனத்தின்மீது ஏதேனும் பிணைப் பொறுப்பை வலுவுக்கிடுவதற்கு ஏதேனும் தவணைக் கொள்வனவு உடன்படிக்கையின்கீழ் கம்பெனியின் பாவனையில் அல்லது உடைமையில் உள்ள எவையேனும் பொருட்களை மீள் உடைமை கொள்வதற்கு வேறு நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படாதிருக்கலாம் ;

(ஈ) (i) நிர்வாகியின் சம்மத்துடன் தவிர ; அல்லது

(ii) நீதிமன்றத்தின் அனுமதியுடனும் அத்துடன் நீதிமன்றம் விதிக்கக்கூடியவாறான அத்தகைய நியதிகளுக்கு அமையவும் தவிர,

கம்பெனிக்கு அல்லது அதன் ஆதனத்திற்கு எதிராக வேறு நடவடிக்கைகள் எவையும் அத்துடன் நிறைவேற்றுகை எதுவும் அல்லது வேறு சட்ட நடவடிக்கை முறை எதுவும் ஆரம்பிக்கப்படாதிருக்கலாம் அல்லது தொடர்ந்து மேற்கொள்ளப்படாதிருக்கலாம் என்பதுடன் கைப்பற்றாணை எதுவும் விதிக்கப்படாதுமிருக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவிலுள்ள எதுவும் —

(அ) கம்பெனியை ஒடுக்குவதற்கான மனுவொன்றை அணைப்பதற்கு ; அல்லது

(ஆ) கம்பெனியின் ஆதனத்தின்மீதான தாக்கீடொன்றின் கீழ் அல்லது கம்பெனியின் பாவனைகள், உடைமையில் அல்லது இருப்பாட்சியில் உள்ள ஆதனம் தொடர்பிலான உடன்படிக்கையொன்றின்கீழ் தவறுகையொன்று தொடர்பில் அறிவித்தல் கொடுப்பதற்கு,

நிர்வாகியின் சம்மதத்தை அல்லது நீதிமன்றத்தின் அனுமதியைத் தேவைப்படுத்தமாட்டாது.

### நிர்வாகியின் பிரேரணைகள்

பிரேரணைகள் பற்றிய கூற்று.

**406**. (1) ஆரம்பகாலப் பகுதியின் முடிவின் பின்னர் இரண்டு மாதங்களுக்குள் அல்லது நீதிமன்றம் அனுமதிக்கக்கூடியவாறான அத்தகைய நீண்ட காலப்பகுதிக்குள் நிர்வாகி —

(அ) அவரை நியமிக்கும் கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட நோக்கத்தை அல்லது நோக்கங்களை எய்துவதற்கு அவரது பிரேரணைகள் பற்றிய கூற்றொன்றைத் தயாரித்தல் வேண்டும் ;

(ஆ) கூற்றின் பிரதியொன்றைப் பதிவாளருக்கு ஒப்படைத்தல் வேண்டும் ;

(இ) கம்பெனியின் எல்லாக் கடன்தருநர்களுக்கும் அவர் அவர்களது முகவரிகளை அறிந்திருக்கும் அளவுக்கு கூற்றின் பிரதியொன்றை அனுப்பிவைத்தல் வேண்டும்.

(2) கூற்றைப் பரிசீலனை செய்வதற்கு கூற்றின் பிரதிகள் கடன்தருநர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட தேதியின் பின்னர் ஐந்து வேலை நாட்களுக்குக் குறையாமலும் பத்து வேலை நாட்களுக்குப் பிந்தாமலும் நிர்வாகி, கடன்தருநர்களின் கூட்டமொன்றைக் கூட்டுதல் வேண்டும்.

(3) நிர்வாகி, அவரது நியமனத் தேதியிலிருந்து இரண்டு மாதங்களுக்குள்ளும் அத்துடன் கடன்தருநர்களின் கூட்டத்தின் தேதிக்கு முன்னரும் கூற்றைப் பரிசீலனை செய்வதற்கு, ஒன்றில் -

(அ) கூற்றின் பிரதியொன்றை கம்பெனியின் எல்லாப் பங்குதாரர்களுக்கும் அனுப்பி வைத்தல் வேண்டும் ; அல்லது

(ஆ) கம்பெனியின் பங்குதாரர்கள் கூற்றின் பிரதியொன்றைக் கட்டணம் இன்றி பெற்றுக்கொள்ளக்கூடிய முகவரியொன்றைப் பற்றிப் பகிரங்க அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.

(4) நிர்வாகி ஒருவர் இப்பிரிவின் தேவைப்பாடுகளுக்கு இணங்கி ஒழுகத் தவறுமிடத்து அவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

*கடன்தருநர்களின் கூட்டத்தால் பிரேரணைகள் பரிசீலனை செய்யப்படல்.*

**407.** (1) பிரிவு 406 என்பதன் ஏற்பாடுகளின்கீழ் அழைக்கப்பட்ட கடன்தருநர்களின் கூட்டமொன்று நிர்வாகியின் பிரேரணைகளை அங்கீகரிப்பதா எனத் தீர்மானித்தல் வேண்டும்.

(2) கூட்டமானது, திரிபுபடுத்துதல்களுக்கு நிர்வாகி சம்மதித்தால் பிரேரணைகளை திரிபுபடுத்துதல்களுடன் அங்கீகரிக்கலாம்.

(3) கூட்டம் ஏழாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட நடவடிக்கைமுறைக்கிணங்க நடத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய கூட்டம் நடைபெற்று பத்து வேலை நாட்களுக்குள் நிர்வாகி கூட்டத்தின் பெறுபேறு பற்றி பதிவாளருக்கு அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.

(4) நிர்வாகியின் பிரேரணை அங்கீகரிக்கப்படுமிடத்து, பிரேரணைகள் அவ்வாறு ஏற்பாடு செய்தால் நிர்வாகி பதவியில் தொடர்ந்திருத்தல் வேண்டும் அல்லது பிரேரணைகளில் தரப்பட்டுள்ள சூழ்நிலைகளில் பதவி வகிப்பதனை இல்லாதொழித்தல் வேண்டும்.

(5) நிர்வாகியின் பிரேரணைகள் அங்கீகரிக்கப்படாதவிடத்து, நிர்வாகி, கூட்டத் தேதியின் பின்னர் ஐந்து வேலை நாட்களுள் பதவி வகித்தலை இல்லாதொழித்தல் வேண்டும்.

(6) நிர்வாகி (4) உட்பிரிவின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுமிடத்து, அவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

*நிர்வாகி பதவி வகித்தலை இல்லா தொழிக்கு மிடத்து விளைவாந் தன்மையதான கட்டளைகள்.*

**408.** கம்பெனியொன்றின் அல்லது நிர்வாகியொருவரின் அல்லது முன்னாள் நிர்வாகியொருவரின் விண்ணப்பத்தினின்று நீதிமன்றமானது, அது தகுந்ததெனக் கருதுகின்றவாறு, நிர்வாகி யொருவரின் விருப்பத்தின்மீது விளைவாந்தன்மையதான அத்த கைய கட்டளைகளை ஆக்கலாம்.

*பிரேரணை களுக்கான பொருளள விலான மீளாய்வுகளின் அங்கீகாரம்.*

**409.** (1) (அ) நிர்வாகியின் பிரேரணைகள் 407 ஆம் பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ளவிடத்து ; அத்துடன்

(ஆ) அப்பிரேரணைகளுக்கு நிர்வாகி பொருளள விலான மீளாய்வுகளைச் செய்வதற்குப் பிரேரிக்குமிடத்து,

நிர்வாகி கம்பெனியின் எல்லாக் கடன்தருநர்களுக்கும் அவர், அவரவர்களின் முகவரிகளை அறிந்திருக்கும் அளவுக்குப் பிரேரிக்கப்பட்ட மீளாய்வுகள் பற்றி எழுத்திலான கூற்றொன்றை அனுப்பிவைத்தல் வேண்டும்.

(2) நிர்வாகி, மீளாய்வுகளை பரிசீலனை செய்வதற்கு கூற்றின் பிரதிகள் கடன்தருநர்களுக்கு அனுப்பப்பட்ட தேதியின் பின்னர் ஐந்து வேலை நாட்களுக்குக் குறையாமலும் பத்து வேலை நாட் களுக்குப் பிந்தாமலும் கடன்தருநர்களின் கூட்டம் ஒன்றை அழைத் தல் வேண்டும்.

(3) கூற்றைப் பரிசீலனை செய்வதற்கு கடன்தருநர்களின் நிய மிக்கப்பட்ட கூட்டத்தின் தேதிக்கு முன்னர், நிர்வாகி, ஒன்றில் -

(அ) கூற்றின் பிரதியொன்றை கம்பெனியின் எல்லாப் பங்குதாரர்களுக்கும் அனுப்பிவைத்தல் வேண்டும் ; அல்லது

(ஆ) கம்பெனியின் பங்குதாரர்கள் கூற்றின் பிரதியொன் றைக் கட்டணம் இன்றிப் பெற்றுக்கொள்ளக்கூடிய முகவரியொன்றைப் பற்றிய பகிரங்க அறிவித்தல் ஒன்றைக் கொடுத்தலும் வேண்டும்.

(4) நிர்வாகி, திரிபுபடுத்துதல்களுக்கு சம்மதம் அளித்தால், கூட்டமானது பிரேரிக்கப்பட்ட மீளாய்வுகளை திரிபுபடுத்துதல் களுடன் அங்கீகரிக்கலாம்.

(5) ஏழாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள நடவடிக்கைமுறைக்கு இணங்கக் கூட்டம் நடாத்தப்படுதல் வேண்டும், அத்துடன் அத்தகைய கூட்டம் முடிவடைந்தும், நிருவாகியானவர், கூட்டத்தின் முடிவு பற்றிப் பதிவாளருக்கு அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.

## நிருவாகம் பற்றிய அறிவித்தல்

**410.** (1) நிருவாகியொருவர், நியமிக்கப்பட்ட பின்னர் உடனடியாக - *நிருவாகியின் நியமனம் பற்றிய அறிவித்தல்.*

(அ) பின்வருவன உட்பட, அவருடைய நியமனம் பற்றிப் பகிரங்க அறிவித்தல் கொடுத்தல் வேண்டும் :-

(i) அவருடைய முழுப்பெயர் ;

(ii) அவருடைய நியமனத் தேதி ;

(iii) அவரது அலுவலக முகவரி ; அத்துடன்

(ஆ) பகிரங்க அறிவித்தலின் பிரதி ஒன்றைப் பதிவாளருக்கு அனுப்புதல் வேண்டும்.

(2) நிருவாகி இப்பிரிவின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகத் தவறுகின்றவிடத்து, அவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கு ஆளாதலும் வேண்டும்.

**411.** (1) கம்பெனியொன்று தொடர்பில் நிருவாகியொருவர் நியமிக்கப்படுகின்றவிடத்து, கம்பெனியினால் அல்லது அதன் சார்பில் அல்லது நிருவாகியினால், அவர் சார்பில் செய்யப்படும் *நிருவாகம் பற்றிய அறிவித்தல்.*

அவ்வுடன்படிக்கைமேல் அத்துடன் வழங்கப்படும் அவ்வாவணத்தின்மேல் கம்பெனியின் பெயர் காணப்படுகிறதோ, அவ்வொவ்வொரு உடன்படிக்கையும், ஆவணமும், நிருவாகியொருவர் நியமிக்கப்பட்டுவிட்டாரெனத் தெளிவாகக் கூறுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகத் தவறுதலானது, உடன்படிக்கையின் அல்லது ஆவணத்தின் வலிதுடையதாந்தன்மையைப் பாதித்தலாகாது.

(3) (அ) ஓராம் உட்பிரிவின் தேவைப்பாடுகளை மீறுகின்ற ; அல்லது

(ஆ) ஓராம் உட்பிரிவின் மீறுகை ஒன்றுக்குத் தெரிந்துகொண்டே அல்லது வேண்டுமென்றே அதிகாரமளிக்கின்ற அல்லது மீறுகையொன்றைத் தெரிந்துகொண்டே அல்லது வேண்டுமென்றே அனுமதிக்கின்ற,

ஆள் ஒவ்வொருவரும், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு ஆளாதல் வேண்டும்.

### நிருவாகி

நிருவாகியின் தகைமைகள்.

**412.** (1) பின்வரும் ஆட்கள் கம்பெனி ஒன்றின் நிர்வாகியாக நியமிக்கப்படுதலோ அல்லது செயற்படுதலோ ஆகாது :-

(அ) பதினெட்டு வயதுக்குக் கீழ்ப்பட்ட ஆளொருவர் ;

(ஆ) கம்பெனியின் கடன்தருநர் ஒருவர் ;

(இ) பொறுப்பேற்பு ஆரம்பிப்பதற்கு உடனடி முன்னரான இரண்டாண்டு காலப்பகுதியொன்றுக்குள் கம்பெனியின் அலுவலர் ஒருவராக அல்லது ஊழியர் ஒருவராக இருந்த அல்லது இருந்திருந்திருக்கின்ற ஆளொருவர் ;

(ஈ) நிருவாகம் ஆரம்பிப்பதற்கு இரண்டாண்டுகள் முன்னரான காலப்பகுதியொன்றுக்குள், கம்பெனியினால் வழங்கப்பட்ட பங்கொன்றில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அக்கறையொன்றைக் கொண்டுள்ள அல்லது கொண்டிருந்த ஆளொருவர் ;

(உ) விடுவிக்கப்படாத கடனிறுக்க வகையற்றவராக இருக்கின்ற ஆள் ஒருவர் ;

(ஊ) (227 ஆம் அத்தியாயமான) மனநோய்கள் கட்டளைச் சட்டத்தின்கீழ் சித்தசுவாதீனம் அற்றவர் எனத் தீர்ப்பளிக்கப்பட்டிருக்கின்ற ஆள் ஒருவர் ;

(எ) 468 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின்கீழ் எவ்வாள் ஒருவர் தொடர்பில் கட்டளையொன்று ஆக்கப்பட்டிருக்கின்றதோ அவ்வாள் ;

(ஏ) கம்பெனியின் பணிப்பாளர் ஒருவராக இருப்பதிலிருந்து அல்லது கம்பெனியின் மேம்பாட்டில், உருவாக்கத்தில் அல்லது முகாமையில் சம்பந்தப்படுவதிலிருந்து அல்லது பங்குபற்றுதலிலிருந்து 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் 188 ஆம் பிரிவின்கீழ் தடைசெய்யப்பட்ட அல்லது அச்சட்டம் நீக்கப்படாதிருந்தால் அவ்வாறு தடைசெய்யப்படும் ஆள் ஒருவர் ;

(ஐ) 213 அல்லது 214 ஆம் பிரிவுகளின்கீழ் கம்பெனியொன்றின் பணிப்பாளர் அல்லது மேம்பாட்டாளர் ஒருவராக இருப்பதிலிருந்து அல்லது கம்பெனியின் முகாமையில் சம்பந்தப்பட்டவராக இருப்பதிலிருந்து அல்லது பங்குபற்றுவதிலிருந்து தடைசெய்யப்பட்ட ஆள் ஒருவர்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றானது, நிருவாகியொருவராக நியமிக்கப்படுதலோ அல்லது செயற்படுதலோ ஆகாது.

(3) ஒராம் அல்லது (2) ஆம் உட்பிரிவை மீறிச் செயலாற்று கின்ற ஆளொருவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டு மென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு ஆளாத லும் வேண்டும்.

நிருவாகியின் செயல்களின் வலிதுடையதாம் தன்மை.

**413.** நிருவாகியொருவராக ஆளொருவரினால் செய்யப்படும் செயல் எதுவும், அத்தகைய ஆள் நிருவாகி ஒருவராகச் செயலாற்றுவதற்குத் தகைமைபெற்றிருக்கவில்லை என்ற நிகழ்வு எப்படியிருப்பினும், வலிதுடையதாதல் வேண்டும்.

நியமனத்துக்கான சம்மதம்.

**414.** நிருவாகியொருவராகச் செய்யப்படும் ஆளொருவரின் நியமனமானது, அத்தகைய ஆள், நிருவாகியொருவராக அவர் நியமிக்கப்படுவதற்கு அவ்வாள் எழுத்திலான சம்மதம் கொடுத்தா லன்றி, எப்பயனும் கொண்டிருத்தல் ஆகாது.

நிருவாகியின் பதவியில் வெற்றிடம்.

**415.** (1) நிருவாகியின் பதவியானது, அப்பதவியை வகிக்கின்ற ஆள் பதவியிலிருந்து விலகினால், மரணித்தால், நீதிமன்றத் தினால் பதவியிலிருந்து அகற்றப்பட்டால் அல்லது 412 ஆம் பிரிவின்கீழ் தகைமையற்றவராக்கப்பட்டால், வெற்றானதாதல் வேண்டும்.

(2) ஆளொருவர், தம்மை அடுத்து வருபவராக இன்னோ ராளை நியமித்து, அத்துடன் கம்பெனிக்கும், பதிவாளருக்கும் தம்மை அடுத்துவருபவரின் நியமனம் பற்றிய எழுத்திலான அறிவித்தலொன்றை ஒப்படைப்பதன்மூலம், நிருவாகிப் பதவி யிலிருந்து விலகலாம்.

(3) நீதிமன்றம், கம்பெனியினால் அல்லது கம்பெனியின் பங்குதாரர் ஒருவரினால் அல்லது பணிப்பாளர் ஒருவரினால் அல்லது கடன்தருநர் ஒருவரினால் செய்யப்பட்ட விண்ணப்பத் தின்மேல், நிருவாகியொருவரை அடுத்துவருபவர் ஒருவரின் நியமனத்தை மீளாய்வு செய்யலாம், அத்துடன் அது பொருத்த மானதெனக் கருதினால், அவருடைய இடத்தில் கம்பெனியின் நிருவாகியாக இருப்பதற்கு இன்னோர் ஆளை நியமிக்கலாம்.

*(4) பதவிவிலகல் தவிர்ந்த வேறு ஏதேனும் காரணத்துக்காக, நிருவாகியின் பதவியில் வெற்றிடமொன்று ஏற்படுகின்றவிடத்து, பதவியை வறிதாக்குகின்ற ஆளினால் அல்லது அவ்வாளினால் செயலாற்ற இயலாமலிருந்தால், அவருடைய தனிப்பட்ட பிரதிநிதியினால் கம்பெனிக்கும் பதிவாளருக்கும் வெற்றிடம் பற்றிய எழுத்திலான அறிவித்தல் உடனடியாக ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.*

*(5) நிருவாகியொருவர் பதவி விலகியதன் விளைவாக, நிருவாகியொருவராகச் செயற்படுவதற்கு ஆளெவரும் நியமிக்கப்படாவிட்டால், கம்பெனியின் சபையானது, நிருவாகியாகச் செயற்படுவதற்கு ஆளொருவரை நியமிக்கலாம்.*

*(6) விடயத்துக்கேற்றவாறு, நிருவாகியின் பதவியில் வெற்றிடமொன்று ஏற்படுகின்றவிடத்து அல்லது (5) ஆம் உட்பிரிவின்கீழ் நிருவாகியொருவராக செயற்படுவதற்கு நியமிக்கப்பட்டிருக்கின்றவிடத்து, நீதிமன்றமானது, கம்பெனியினால் அல்லது கம்பெனியின் பங்குதாரர் அல்லது பணிப்பாளர் அல்லது கடன்தருநர் ஒருவரால் அல்லது பதிவாளரினால் விண்ணப்பம் செய்யப்பட்டதன்மேல், கம்பெனியின் நிருவாகியாகவிருப்பதற்கு இன்னோராளை நியமிக்கலாம்.*

*(7) ஐந்தாம் உட்பிரிவின்கீழ் அல்லது (6) ஆம் உட்பிரவின்கீழ் நியமிக்கப்பட்ட நிருவாகியொருவர், அவர் நியமிக்கப்பட்ட பத்து வேலைநாட்களுக்குள் தமது நியமனம் பற்றிய அறிவித்தலொன்றைப் பதிவாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.*

*(8) நிருவாகியொருவர் நீதிமன்றமொன்றினால் எந்நேரத்திலும் பதவியிலிருந்து நீக்கப்படலாம்.*

*(9) நிருவாகிப் பதவியை வறிதாக்குகின்ற ஆளொருவர், செயல்முறைக்கு உகந்ததாகவிருக்கின்றவிடத்து, தம்மையடுத்து வருபவருக்கு அவ்வாள் நியாயமான முறையில் தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய தகவலை வழங்குதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய உதவியை அளித்தலும் வேண்டும்.*

(10) நிருவாகியின் பதவியில் உள்ள வெற்றிடமொன்றை நிரப்புவதற்கு நியமிக்கப்பட்ட ஆளொருவரினால் விண்ணப்ப மொன்று செய்யப்பட்டதன்மேல், நீதிமன்றமானது, நிருவாகியின் கடமைகள் புரியப்படுவதற்கு வசதியளிப்பதற்கு அவசியமான தென அல்லது விரும்பத்தக்கதென அது கருதுகின்ற கட்டளை யெதனையும் ஆக்கலாம்.

(11) நியாயமான காரணம் எதுவுமின்றி (4) ஆம் உட்பிரிவின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற அல்லது (7) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகத் தவறு கின்ற ஆளொருவர், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டு மென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்துக்கு ஆளாதலும் வேண்டும்.

### நிருவாகியின் தத்துவங்கள்

*நிருவாகியின் தத்துவங்கள்.*

**416.** (1) நிருவாகியொருவர் -

(அ) கம்பெனியின் அலுவல்களை, தொழில் அத்துடன் ஆதனத்தை முகாமை செய்தல் வேண்டும் ;

(ஆ) கம்பெனியின் அலுவல்களை, தொழிலை அத்துடன் ஆதனத்தை முகாமை செய்வதற்கு அவசியமாகக்கூடிய வாறான அல்லது விரும்பத்தக்கதானதாகக் கூடிய வாறான அத்தகைய எல்லாக் கருமங்களையும் செய்ய லாம் ;

(இ) பந்திகள் (அ) மற்றும் (ஆ) என்பவற்றின் குறித்துரைக் கப்பட்டுள்ள தத்துவங்களை மட்டுப்படுத்தாமல், 443, 445 மற்றும் 446 என்னும் பிரிவுகளின்கீழ் கம்பெனி யின் ஆதனம் மற்றும் பொறுப்புமுயற்சி முழுவதி னதும் பெறுநர் ஒருவரினால் பிரயோகிக்கப்படக்கூடிய தான எல்லாத் தத்துவங்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) நிர்வாகி தனது பணிகளைக் கொண்டுநடாத்துவது தொடர்பில் எழுகின்ற ஏதேனும் கருமம் தொடர்பில் பணிப்புரைகளுக்கு நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

(3) இச்சட்டத்தினால் அல்லது கம்பெனியின் அமைப்பக விதிகளினால் கம்பெனிக்கு அல்லது அதன் சபைக்கு அல்லது அலுவலர்களுக்கு அளிக்கப்பட்ட தத்துவம் எதுவும், நிருவாகி தமது தத்துவங்களைப் பிரயோகிப்பதில் தலையிடக்கூடியவாறு இருக்கின்றவிடத்து, பொதுவாக வழங்கப்படக்கூடிய அல்லது குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பில் வழங்கப்படக்கூடியவாறான அத்தகைய தத்துவமானது, நிருவாகியின் சம்மதத்துடன் தவிர, விடயத்துக்கேற்றவாறு, கம்பெனியினால், அதன் சபையினால் அல்லது அலுவலர்களினால் பிரயோகிக்கப்படுதலாகாது.

(4) மூன்றாம் உட்பிரிவின் பொதுமையை மட்டுப்படுத்தாமல், பொதுவாக அல்லது குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பில் வழங்கப்படக்கூடிய நிருவாகியின் சம்மதத்தை முதலில் பெற்றுக் கொள்ளாமல் கம்பெனியின் ஆதனம் தொடர்பில் செய்யப்படும் கையுதிர்த்தல் அல்லது வேறு கொடுக்கல் வாங்கல் எதுவும், நீதிமன்றம் வேறுவகையில் கட்டளை ஆக்கினாலொழிய, வறிதான தாதல் வேண்டும்.

(5) நிருவாகியானவர், தமது தத்துவங்களைப் பிரயோகிக்கையில் கம்பெனியின் முகவராகச் செயற்படுகிறார் எனக் கருதப்பட வேண்டும், அத்துடன் நிருவாகியுடன் நல்லெண்ணத்துடனும், பணப்பெறுமதிக்காகவும் தொடர்புகொள்ளும் ஆளொருவர், நிருவாகி தமது தத்துவ எல்லைகளுக்குள் செயலாற்றுகின்றாரா என விசாரணை செய்யத் தேவைப்படுத்தப்படுதலாகாது.

பொறுப்பிக்கப்பட்ட ஆதனம் முதலியவற்றை கையாளுவதற்கான தத்துவம்.

**417.** (1) கம்பெனியொன்றின் நிருவாகியானவர், பிணைப் பொறுப்பொன்றுக்கு அமைவாக இருக்கின்ற கம்பெனியின் எவ்வாதனத்துக்கு இவ்வுட்பிரிவு ஏற்புடையதாகின்றதோ, அவ்வாதனம் தொடர்பில், அவ்வாதனம் அப்பிணைப்பொறுப்புக்கு அமைவாக இருக்கவில்லை என்றாற்போன்று கம்பெனியின் ஏதேனும் ஆதனம் தொடர்பில் தமது தத்துவங்களை கையுதிர்க்கலாம் அல்லது வேறுவகையில் பிரயோகிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அது உருவாக்கப்பட்ட போது மிதக்கும் தாக்கீடு ஒன்றாக இருந்த பிணைப்பொறுப்பு எதற்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) நிருவாகியினால் விண்ணப்பமொன்று செய்யப்பட்டதன் மேல்,—

(அ) ஓராம் உட்பிரிவு, எப்பிணைப்பொறுப்பொன்றுக்கு ஏற்புடையத்தானதாக இல்லையோ அப்பிணைப் பொறுப்புக்கு அமைவாக இருக்கின்ற ஆதனம் எதனையும் ; அல்லது

(ஆ) வாடகைக் கொள்வனவு உடன்படிக்கை ஒன்றின்கீழ் கம்பெனியின் உடைமையில் உள்ள பொருட்கள் எவற்றையும்,

(ஏனைய சொத்துக்களுடனோ அல்லது சொத்துக்களுடன் அல்லாமலோ) கையுதிர்த்தல், நிருவாகியை நியமிக்கின்ற கட்டளையில் குறித்துரைக்கப்பட்டுள்ள நோக்கத்தை அல்லது அந்நோக்கங்களில் ஒன்றையோ அல்லது அதற்கு மேற்பட்டவையையோ மேம்படுத்துவதற்கான சாத்தியக்கூறு இருக்கின்றதென நீதிமன்றம் திருப்திப்படுகின்றவிடத்து, நீதிமன்றம் —

(இ) ஆதனம், பிணைப்பொறுப்புக்கு அமைவாக இருக்கவில்லை என்றாற்போன்று அதைக் கையுதிர்ப்பதற்கு ; அல்லது

(ஈ) வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையின்கீழ் சொந்தக்காரரின் எல்லா உரிமைகளும் கம்பெனிக்கு உரித்தாக்கப்பட்டிருக்கின்றன என்றாற்போன்று, பொருட்களை கையுதிர்ப்பதற்கு,

கட்டளை ஆக்கலாம்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆதனம் கையுதிர்க்கப்படுகின்றவிடத்து, கையுதிர்க்கப்படும் ஆதனத்தை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பிரதிநிதித்துவம் செய்கின்ற கம்பெனியின் ஏதேனும் ஆதனம் தொடர்பில் பிணைப்பொறுப்பை வைத்திருப்பவருக்கு பிணைப்பொறுப்புக்கு அமைவாக ஆதனம் தொடர்பில் அவருக்கு இருந்திருக்கக்கூடியவாறான அதே முன்னுரிமை இருத்தல் வேண்டும்.

(5) (அ) விற்றுத்தீர்ப்பதிலிருந்து கிடைக்கும் தேறிய வரும்படிகள் ; அத்துடன்

(ஆ) அத்தகைய வரும்படிகள் பகிரங்கச் சந்தையில் ஆதனத்தை அல்லது பண்டங்ளை விற்பனை செய்வதன்மூலம் காசாகப் பெறக்கூடிய தேறிய பணத்தொகையென நீதிமன்றத்தால் தீர்மானிக்கப் படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகை யிலும் குறைவானதாக இருக்கின்றவிடத்து, அக் குறைபாட்டைச் சரிசெய்வதற்கு தேவைப்படக்கூடிய வாறான அத்தகைய பணத்தொகைகள்,

பிணைப்பொறுப்பினால் பொறுப்பாக்கப்பட்ட அல்லது வாட கைக் கொள்வனவு உடன்படிக்கையின்கீழ் கொடுபடற்பாலதான பணத்தொகைகளைக் கொடுத்துத் தீர்ப்பது தொடர்பில் பிரயோகிக்கப்படல் வேண்டும் என்பது, (3) ஆம் உட்பிரிவின்கீழ் நீதிமன்றத்தினால் ஆக்கப்பட்ட கட்டளையொன்றின் நிபந்தனை ஒன்றாதல் வேண்டும்.

(6) ஐந்தாம் உட்பிரிவின்கீழ் சுமத்தப்பட்ட நிபந்தனை ஒன்றா னது, இரண்டோ அல்லது அதற்கு மேற்பட்ட பிணைப்பொறுப்புகள் தொடர்பானதாக இருக்கின்றவிடத்து, அந்நிபந்தனையானது, கையுதிர்த்தலின் தேறிய வரும்படிகளும் அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் பணத்தொகை யும், அம்முன்னுரிமைகளின் வரிசைக்கிரமத்தின் பிரகாரம், அப்பிணைப்பொறுப்புகளினால் பிணைப்பொறுப்பாக்கப்பட்ட பணத்தொகைகளை விடுவிப்பதற்காக பிரயோகிக்கப்படுதல் வேண்டுமெனத் தேவைப்படுத்துகின்றது.

(7) மூன்றாம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளை யின் பிரதியொன்று, கட்டளை ஆக்கப்பட்டதன் பின்னர் பத்து வேலை நாட்களுக்குள் நிருவாகியினால் பதிவாளருக்கு அனுப்பப் படுதல் வேண்டும்.

(8) ஏழாம் உட்பிரிவின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழு குவதற்கு நிருவாகி தவறுகின்றவிடத்து, அவர், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாத ஒரு குற்றப்பணத்துக்கு ஆளாதலும் வேண்டும்.

*நிருவாகியின் பொதுவான கடமைகள்.*

**418.** (1) நியமனம் செய்யப்பட்டதன்மேல் நிருவாகியானவர், கம்பெனியானது எவ்வாதனத்துக்கு உரித்துடையதாயிருக்கின்றதோ அல்லது உரித்துடையதாயிருக்கின்றதெனத் தோன்றுகின்றதோ, அவ்வாதனம் எல்லாவற்றையும் தமது கட்டுக்காவலுக்குள் அல்லது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருத்தல் வேண்டும்.

(2) நிருவாகியானவர் கம்பெனியின் அலுவல்களை, தொழிலை அத்துடன் ஆதனத்தை —

(அ) நீதிமன்றத்தின் எவையேனும் பணிப்புகளுக்கு இணங்க 407 ஆம் பிரிவின்கீழ் பிரேரணையொன்றுக்கு அங்கீகாரத்திற்கு வழங்கப்படுவதற்குமுன் எந்நேரத்திலும் ; அத்துடன்

(ஆ) காலத்துக்குக்காலம் மீளாய்வு செய்யப்படக்கூடியவாறான பிரேரணைக்கு இணங்கவும் நீதிமன்றத்தின் எவையேனும்பணிப்புகளுக்கு இணங்கவும், பிரேரணையொன்றுக்கு அவ்வாறு அங்கீகாரம் வழங்கப்படுவதற்கு முன்னர் எந்நேரத்திலும்,

முகாமைசெய்தல் வேண்டும்.

(3) நிருவாகியானவர் —

(அ) கடன்தருநர்களின் பெறுமதியில் பத்திலொரு பங்கினர் அவ்வாறு செய்யும்படி எழுத்தில் அவருக்கு வேண்டுகோள் விடுத்தால் ; அல்லது

(ஆ) அவ்வாறு செய்யும்படி நீதிமன்றத்தினால் அவர் பணிக்கப்பட்டால்,

கம்பெனியினது கடன்தருநர்களின் கூட்டமொன்றைக் கூட்டுதல் வேண்டும்.

*நிருவாகியை விடுவித்தல் அல்லது நிருவாகியை நியமிக்கின்ற தீர்மானத்தை வேறுபடுத்தல்.*

**419.** (1) நிருவாகியானவர் —

(அ) அவரை நியமிக்கின்ற தீர்மானத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள நோக்கம் அல்லது நோக்கங்களில் ஒவ்வொன்றும் ஒன்றில் எய்தப்பட்டுவிட்டது அல்லது எய்தப்பட முடியாது என நிருவாகிக்குத் தோன்றுகின்ற விடத்து ; அல்லது

(ஆ) அந்நோக்கத்துக்கென கூட்டப்பட்ட கம்பெனியின் கடன் தருநர்களின் கூட்டமொன்றில் அவ்வாறு செய்யும்படி அவர் தேவைப்படுத்தப்படுகின்றவிடத்து,

எந்நேரத்திலும் கம்பெனிக்கு—

(இ) நிருவாகம் முடிவுறுத்தப்படுதல் வேண்டுமென ; அல்லது

(ஈ) நிருவாகியாக அவரை நியமிக்கின்ற தீர்மானமானது, ஏதேனும் மேலதிக நோக்கத்தைக் குறித்துரைப்பதற்காக வேறுபடுத்தற்படுதல் வேண்டுமென,

தெரிவிக்கும் அறிவித்தலைக் கொடுக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின்கீழ் அறிவித்தல் கொடுத்தபின்னர் ஐந்து வேலைநாட்களுக்குள் அல்லது அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று, ஆனால் எத்தேதியன்று அறிவித்தல் கொடுக்கப்பட்டதோ, அத்தேதியிலிருந்து பத்து நாட்களுக்குப் மேற்படாத நாட்களுக்குப் பிந்தாமல் நிருவாகி பதவியிலில்லாதொழிதல் வேண்டும்.

(3) நிருவாகி (1) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியின் கீழ் அறிவித்தல் கொடுக்கின்றவிடத்து, தீர்மானம் அதற்கிணங்கத் திருத்தப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழ் அறிவித்தலொன்று கொடுக்கப்படுகின்றவிடத்து, நிருவாகி, அறிவித்தல் கொடுத்தபின்னர் பத்து நாட்களுக்குள் அறிவித்தலின் பிரதியொன்றை பதிவாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

(5) நிருவாகி, (4) ஆம் உட்பிரிவின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகத் தவறுகின்றவிடத்து, அவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப் பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

*நிருவாகியின் ஊதியமும் செலவுகளும்.*

***420.*** *(1) நிருவாகிக்குச் செலுத்தப்படவேண்டிய ஊதியம் மற்றும் அவரின் வேறு செலவுகள் அத்துடன் அவர் 421 ஆம் பிரிவின்கீழ் உரித்துடையவராய் இருக்கும் ஏதேனும் நட்டோத்தர வாதம் என்பன கம்பெனியின் சொத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும், அத்துடன் மிதக்கும் தாக்கீடொன்றாக உருவாக்கப்பட்ட ஏதேனும் பிணைப்பொறுப்பின்மீது முன்னுரிமை கொண்டிருத்தல் வேண்டும்.*

*(2) நீதிமன்றம், நிருவாகியினால் அல்லது கம்பெனியால் அல்லது கம்பெனியின் எவரேனும் கடன்தருநரினால் விண்ணப்பம் செய்யப்பட்டதன்மேல், ஏதேனும் காலப்பகுதி தொடர்பில் சூழ்நிலைகளில் நியாயமானதாக இருக்கின்ற ஒரு மட்டத்தில் நிருவாகியின் ஊதியத்தை மீளாய்வு செய்யலாம் அல்லது நிர்ணயிக்கலாம்.*

*நிருவாகிக்குள்ள பொறுப்பு.*

***421.*** *(1) இரண்டாம் மற்றும் (3) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய, நிருவாகியானவர் —*

*(அ) நிருவாகியின் தத்துவங்கள் எவற்றையும் பிரயோகிக்கையில் , நிருவாகியினால் செய்யப்பட்ட ஒப்பந்தமொன்றுக்கு ; அத்துடன்*

*(ஆ) அவரது நியமனத் தேதிக்குப் பின்னர் பத்து வேலை நாட்களுக்குள் ஒப்பந்தம் முடிவுறுத்தப்படுதல் பற்றிய அறிவித்தல் சட்டமுறையாகக் கொடுக்கப்படாவிட்டால், அவரது நியமனத்துக்கு முன்னர் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தமொன்றின்கீழ் அவரது நிருவாகத்தின்போது வந்துறும் வேதனங்கள் அல்லது சம்பளங்கள் என்பவற்றின் கொடுப்பனவுக்கு,*

*தனிப்பட்டமுறையில் தாமே பொறுப்பாளியாதல் வேண்டும்.*

*(2) நீதிமன்றமானது, நிருவாகியொருவர் விண்ணப்பம் செய்ததன்மேல், ஒப்பந்தமொன்றின் முடிவுறுத்தல் பற்றிய அறிவித்தல், (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் எக்காலப்பகுதிக்குள் கொடுக்கப்படுதல் வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்*

டிருக்கின்றதோ, அக்காலப்பகுதியை, அத்தகைய பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டிருக்கும் காலப்பகுதி முடிவுறுவதற்குள் அவ்விண்ணப்பம் செய்யப்பட்டிருந்தால், நீதிமன்றம் பொருத்த மானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய நியதி, நிபந்தனை களின்மேல் நீடிக்கலாம்.

(3) ஆறாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, நிருவாகியொரு வர், கம்பெனியால் ஆதனம் பயன்படுத்தப்படுதல், உடைமையில் வைத்திருக்கப்படுதல் அல்லது இருப்பாட்சி செய்யப்படுதல் தொடர்பில் அவரின் நியமனத் தேதியன்று இருந்து வருகின்ற தான உடன்படிக்கையொன்றின்கீழ் போமதியாகவரும் வாடகை மற்றும் எவையேனும் வேறு கொடுப்பனவுகள் ஆகியவற்றுக்கு (4) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள அளவுக்குத் தனிப் பட்ட முறையில் பொறுப்புடையவராதல் வேண்டும்.

(4) நிருவாகியொருவருக்கு (3) ஆம் உட்பிரிவின் கீழுள்ள பொறுப்பானது, நிருவாகியின் நியமனத் தேதிக்குப் பத்து வேலை நாட்கள் பின்னர் ஆரம்பித்து —

(அ) நிருவாகம் எத்தேதியன்று முடிவுறுகின்றதோ, அத் தேதியன்று ; அல்லது

(ஆ) கம்பெனியானது ஆதனத்தை எத்தேதியன்று பயன் படுத்துவதிலிருந்து, உடைமையில் வைத்திருப்பதிலி ருந்து அல்லது இருப்பாட்சி செய்வதில் இருந்து இல்லா தொழிகின்றதோ, அத்தேதியன்று —

முடிவுறுகின்ற காலப்பகுதிக்கு, இதில் எக்காலப்பகுதி முந்தி யதோ, அக்காலப்பகுதிக்குச் சார்த்தப்படற்பாலதான வாடகை யின் அல்லது வேறு கொடுப்பனவுகளின் அப்பகுதிக்கு மட்டுப் படுத்தப்படுதல் வேண்டும்.

(5) நீதிமன்றமானது, நிருவாகியொருவர் விண்ணப்பம் செய்ததன்மேல் —

(அ) நாலாம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள அளவை விட மிக அதிகமான அளவுக்குப் பொறுப்பை மட்டுப்படுத்தலாம் ; அல்லது

(ஆ) மூன்றாம் உட்பிரிவின் கீழான பொறுப்பிலிருந்து நிருவாகிக்கு விலக்களிக்கலாம்.

(6) மூன்றாம் உட்பிரிவில் அல்லது (4) ஆம் உட்பிரிவில் உள்ள எதுவும் –

(அ) மூன்றாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட உடன்படிக்கையொன்றை நிருவாகியொருவர் ஏற்றுக் கொள்வதற்குச் சந்தர்ப்பம் அளிப்பதாகக் கருதப்பட லாகாது ; அல்லது

(ஆ) அத்தகைய உடன்படிக்கையொன்றின்கீழ் வேறு ஏதே னும் கடப்பாட்டைப் புரிவதற்கு நிருவாகியொருவரைப் பொறுப்புடையவராக்குதலாகாது.

(7) இப்பிரிவின்கீழான அவரது தனிப்பட்ட பொறுப்பு தொடர் பில் கம்பெனியின் ஆதனத்திலிருந்து நட்டோத்தரவாதம் பெறு வதற்கு நிருவாகி ஒருவர் உரித்துடையவராதல் வேண்டும்.

பொறுப்பிலிருந்து விடுவிப்பு.

**422.** (1) நிருவாகியொருவராகச் செயலாற்றியிருக்கின்ற ஆளொருவரை, நீதிமன்றமானது –

(அ) நிருவாகியின் நியமனத்தில் உள்ள குறைபாடொன்று காரணமாக மட்டுமே பொறுப்பு ஏற்பட்டது அல்லது நீதிமன்றத்தின் எக்கட்டளையின் கீழ் நிருவாகி நியமிக் கப்பட்டதோ, அக்கட்டளையிலுள்ள குறைபாடொன்று காரணமாக மட்டுமே பொறுப்பு ஏற்பட்டது ; அத்துடன்

(ஆ) நிருவாகி நேர்மையாகவும் நியாயமாகவும் செயலாற் றினார், எனவே, இச்சூழ்நிலைகளில் அவருக்கு விலக் களிக்கப்படுதல் வேண்டும்,

எனத் திருப்திப்பட்டால், அது, நிருவாகத்தின்போது ஏற்பட்ட எல்லாப் பொறுப்பிலிருந்தும் அல்லது ஏதேனும் தனிப்பட்ட பொறுப்பிலிருந்தும் விடுவிக்கலாம்.

(2) நீதிமன்றம், பொருத்தமானவையென அது கருதக்கூடிய வாறான அத்தகைய நியதி, நிபந்தனைகளுக்கமைய, (1) ஆம் உட்பிரிவின்கீழான அதன் தத்துவங்களை, பிரயோகிக்கலாம்.

## கம்பெனியின் அலுவல்களைக் கண்டறிதலும் புலனாய்வு செய்தலும்

*தகவல் முதலியன வழங்குவதற்காக கம்பெனிக்கும் பணிப்பாளர் களுக்கும் உள்ள கடப்பாடுகள்.*

**423.** (1) நிருவாகியொருவர் நியமிக்கப்படுகின்றவிடத்து, கம்பெனியும் கம்பெனியின் பணிப்பாளர் ஒவ்வொருவரும் –

(அ) கம்பெனியின் உடைமையில் அல்லது கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கம்பெனியின் தொழில், அலுவல்கள் அத்துடன் ஆதனம் தொடர்பிலான எல்லாப் புத்தகங் களையும் ஆவணங்களையும் மற்றும் தகவல்களையும் நிருவாகிக்குக் கிடைக்கக்கூடியதாகச் செய்தல் வேண்டும் ;

(ஆ) நிருவாகியினால் அவ்வாறு செய்யுமாறு தேவைப்படுத் தப்பட்டால், புத்தகங்கள், ஆவணங்கள் மற்றும் தகவல் ஆகியன பூரணமானவையெனவும் சரியானவை யெனவும் சத்தியக்கடதாசி மூலம் உறுதிப்படுத்துதல் வேண்டும் ;

(இ) நிருவாகிக்கு, அவர் நியாயமானமுறையில் தேவைப் படுத்தக்ககூடியவாறான அத்தகை உதவியை வழங்கு தல் வேண்டும் ;

(ஈ) கம்பெனிக்குப் பொது இலச்சினையொன்று இருந்தால், நிருவாகியின் உபயோகத்துக்குப் பொது இலச்சினை யைக் கிடைக்கக்கூடியதாகச் செய்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகு வதற்கு கம்பெனி அல்லது பணிப்பாளர் ஒருவர் தவறுகின்ற விடத்து, நிருவாகி விண்ணப்பம் செய்ததன்மேல், நீதிமன்றம், அவற்றோடு இணங்கியொழுகுமாறு கம்பெனியை அல்லது கம்பெனியின் பணிப்பாளர் ஒருவரைத் தேவைப்படுத்துகின்ற கட்டளையொன்றை ஆக்கலாம்.

### நானாவிதமானவை

கடன்தருநர்களின் குழு.

**424.** (1) கடன்தருநர்களின் கூட்டமொன்று நிருவாகியின் பிரேரணைகளுக்கு அங்கீகாரம் வழங்கியிருக்கின்றவிடத்து, கூட்டம், பொருத்தமானதென அது கருதினால், (இதனகத்துப்பின்னர் "கடன்தருநர்கள் குழு" எனக்குறிப்பீடு செய்யப்படும்) குழுவொன்றை, இச்சட்டத்தின்கீழ் அதற்களிக்கப்பட்ட பணிகளைப் பிரயோகிப்பதற்காகத் தாபிக்கலாம்.

(2) கடன்தருநர்கள் குழுவொன்று தாபிக்கப்படுகின்றவிடத்து, அது, ஐந்து வேலைநாட்களுக்குக் குறையாத அறிவித்தல் கொடுத்ததன் பின்னர், ஏதேனும் நியாயமான நேரத்தில் அதற்குமுன் சமுகமளித்து, நிருவாகி தமது பணிகளை நிறைவேற்றுகின்றது தொடர்பிலானதும், அது நியாயமாகத் தேவைப்படுத்தக்கூடியவாறானதுமான அத்தகைய தகவலை அதற்கு வழங்குமாறு நிருவாகியைத் தேவைப்படுத்தலாம்.

கடன்தருநர்களினதும் உறுப்பினர்களினதும் அக்கறைகளைப் பாதுகாத்தல்.

**425.** (1) நிருவாகியொருவர் பதவி வகிக்கின்ற ஏதேனும் காலத்தின்போது, கம்பெனியொன்றின் கடன்தருநர் அல்லது பங்குதாரர் ஒருவர் —

(அ) கம்பெனியின் அலுவல்கள், தொழில் மற்றும் ஆதனம், நியாயமற்ற பாரபட்சமான முறையில் அல்லது அத்தகைய கடன்தருநரின் அக்கறைகளுக்கு நியாயமற்ற பங்கம் விளைவிக்கின்றமுறையில் நிருவாகியினால் முகாமைசெய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றது அல்லது முகாமை செய்யப்பட்டிருக்கின்றது ; அல்லது

(ஆ) நிருவாகியின் உண்மையான அல்லது உத்தேசிக்கப்பட்ட செயல் எதுவும் அல்லது செய்யாதுவிட்டுவிடுகை எதுவும், நியாயமற்ற பாரபட்சமாக இருக்கிறது அல்லது இருக்கும் அல்லது அத்தகைய கடன்தருநரின் அல்லது பங்குதாரரின் அக்கறைகளுக்கு நியாயமற்ற பங்கம விளைவிக்கிறது அல்லது விளைவிக்கும்,

என்ற எதுவின்மீது, இப்பிரிவின்கீழ் கட்டளை ஒன்றுக்காக நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்கலாம்.

(2) இப்பிரிவின்கீழ் நீதிமன்றத்துக்கு விண்ணப்பமொன்று செய்யப்பட்டவிடத்து, நீதிமன்றம், அவ்வாறு செய்வது நீதியானதும் ஒப்புரவானதும் என அது கருதுகின்றவிடத்தும், (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமையவும், இவ்வுட்பிரிவின் பொதுமையை மட்டுப்படுத்தாமலும் –

(அ) நிருவாகியினால் கம்பெனியின் அலுவல்கள், தொழில் மற்றும் ஆதனம் என்பன வருங்காலத்தில் முகாமை செய்யப்படுவதை ஒழுங்குபடுத்துகின்ற ;

(ஆ) விண்ணப்பகாரரால் முறைப்பாடு செய்யப்பட்ட செயலொன்றைச் செய்வதை அல்லது தொடர்ந்து செய்வதை விட்டுவிடுமாறு நிருவாகியைத் தேவைப்படுத்துகின்ற அல்லது அவர் செய்யாது விட்டுவிட்டார் என விண்ணப்பகாரர் முறைப்பாடுசெய்த செயலைச் செய்யுமாறு நிருவாகியைத் தேவைப்படுத்துகின்ற ;

(இ) நீதிமன்றம் பணிக்கக்கூடியவாறான அத்தகைய விடயங்களைப் பரிசீலிக்கும் நோக்கத்துக்காகக் கடன் தருநர்களின் அல்லது பங்குதாரர்களின் கூட்டமொன்று கூட்டப்படுவதைத் தேவைப்படுத்துகின்ற ;

(ஈ) நிருவாகியை விடுவிக்கின்ற அத்துடன் நீதிமன்றம் பொருத்தமானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய விளைவாந்தன்மையினவான ஏற்பாடுகளை ஆக்குகின்ற,

கட்டளையொன்று உட்பட, அது பொருத்தமானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய கட்டளையை நீதிமன்றம் ஆக்கலாம்.

(3) இப்பிரிவின்கீழான கட்டளையொன்று –

(அ) இச்சட்டத்தின் IX ஆம் பாகத்தின்கீழ் அல்லது X ஆம் பாகத்தின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட சமரச இணக்கமொன்று அல்லது ஒப்பந்தம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படுவதை ; அல்லது

(ஆ) கட்டளைக்கான விண்ணப்பம், விடயத்துக்கு ஏற்றவாறு 407 ஆம் பிரிவின்கீழான அல்லது 409 ஆம் பிரிவின் கீழான எவையேனும் பிரேரிப்புகளுக்கு அல்லது எவையேனும் மீளாய்வு செய்யப்பட்ட பிரேரிப்புகளுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்ட இருபதுக்கு மேற்பட்ட வேலைநாட்களுக்குப் பின்னர் செய்யப்பட்டதாக இருக்கின்றவிடத்து, அப்பிரேரிப்புகளை அல்லது மீளாய்வு செய்யப்பட்ட பிரேரிப்புகளை,

பங்கப்படுத்துதலோ அல்லது தடைசெய்தலோ ஆகாது.

*பெறுநர்கள் தொடர்பிலான ஏற்பாடுகளின் நிருவாகிக்கு விண்ணப்பம் செய்தல்.*

**426.** பிரிவுகள் 453, 454, 460, 468, 469 அத்துடன் 470 என்பவற்றில் உள்ள ஏற்பாடுகள் குறிப்பாக —

(அ) நிருவாகி நீதிமன்றத்தினால் நியமிக்கப்பட்ட பெறுநர் ஒருவர் என்றாற்போன்று ;

(ஆ) பெறுகையிலுள்ள ஆதனம் பற்றிய குறிப்பீடுகள் கம்பெனியின் ஆதனத்துக்கான மற்றும் பொறுப்பு முயற்சி பற்றிய குறிப்பீடுகள் என்றாற்போன்று ; அத்துடன்

(இ) கொடையாளி பற்றிய குறிப்பீடுகள் கம்பெனி பற்றிய குறிப்பீடுகள் என்றாற்போன்று,

அவசியமான எல்லாத் திரிபுகளோடும் நிருவாகியொருவருக்கும், நிருவாகத்தின்கீழ் உள்ள கம்பெனி ஒன்றுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

## பாகம் XIV

### மிதக்கும் தாக்கீடுகள்

*கம்பெனி மிதக்கும் தாக்கீடு வழங்கலாம்.*

**427.** (1) கம்பெனியினால் அல்லது வேறு எவரேனும் ஆளினால் உறப்பட்ட அல்லது உறப்பட இருக்கும் ஏதேனும் தனிசு ஒன்றை அல்லது வேறு ஏதேனும் கடப்பாட்டை பிணைப்பொறுப்பாக்கும் நோக்கத்துக்காக, கம்பெனியின் எவ்வாதனத்துக்கு அல்லது பொறுப்பு முயற்சிக்கு (இச்சட்டத்தில் “மிதக்கும் தாக்கீடு”

ஒன்று எனக் குறிப்பீடு செய்யப்படும்) இச்சட்டத்தின் இப்பாகம் ஏற்புடைத்தாகின்றதோ, அவ்வாதனம் மற்றும் பொறுப்பு முயற்சி முழுவதின்மீது அல்லது அவற்றின் ஏதேனும் பாகத்தின்மீது கம்பெனியொன்று தாக்கீடு ஒன்றை வழங்கலாம்.

(2) பின்வருவன உட்பட, மிதக்கும் தாக்கீடு உருவாக்கப்பட்ட நேரத்தில் கம்பெனியால் வைத்திருக்கப்பட்ட அல்லது அதற்குப் பின்னர் கம்பெனியால் கொள்ளப்பட்ட கம்பெனியின் ஏதேனும் ஆதனத்துக்கு மிதக்கும் தாக்கீடொன்று ஏற்புடையதாகலாம் —

(அ) அசைவுள்ள மற்றும் அசைவற்ற ஆதனம் ;

(ஆ) அழைக்கப்படா மூலதனம் ;

(இ) காசு, வியாபாரக் கையிருப்பு, மூலப்பொருட்கள், புத்தகத் தனிசுகள் மற்றும் வேறு பெறப்படற்பாலனவை உட்பட புழங்கும் இருப்புச் சொத்துக்கள்.

(3) இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் உருவாக்கப்பட்ட மிதக்கும் தாக்கீடொன்று, வேறு ஏதேனும் சட்டத்தின் உள்ள ஏற்பாடுகள் எப்படியிருப்பினும் —

(அ) ஏற்புடைத்தானவிடத்து, (117 ஆம் அத்தியாயமான) ஆவணங்கள் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய ; அத்துடன்

(ஆ) (89 ஆம் அத்தியாயமான) ஈட்டுச் சட்டத்தின் 103 ஆம் பிரிவுக்கு அமைய,

கம்பெனியின் எவ்வாதனத்தின்மீது இப்பாகத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறானமுறையிலும் அளவிலும் அது பொருந்துமெனக் கூறப்பட்டுள்ளதோ அவ்வாறான பிணைப்பொறுப்பு ஒன்றாகப் பயனுறுதல் வேண்டும்.

*மிதக்கும் தாக்கீட்டை உருவாக்கும் சாதனம்.*

***428.*** *(1) மிதக்கும் தாக்கீடொன்று, எச்சானமொன்று அத்தகைய தாக்கீடொன்றை, உருவாக்குமெனக் கூறப்பட்டுள்ளதோ அச்சாதனம் 19 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளுக்கு இணங்க, கம்பெனியின் பெயரின்கீழ் நிறைவேற்றப்படுவதன்மூலம் மாத்திரமே கம்பெனியொன்றினால் உருவாக்கப்படலாம்.*

*(2) காணியை உள்ளடக்குகின்ற ஆதனத்தின்மீது மிதக்கும் தாக்கீடொன்றை உருவாக்குகின்ற சாதனமொன்று, (117 ஆம் அத்தியாயமான) ஆவணங்கள் பதிவுக் கட்டளைச் சட்டத்தின்கீழ் அக்காணியைப் பாதிக்கின்ற சாதனமொன்றாகப் பதிவுசெய்யப்படுதல் வேண்டும்.*

*(3) அசைவுள்ள ஆதனத்தை உள்ளடக்குகின்ற ஆதனத்தின் மீது மிதக்கும் தாக்கீடொன்றை உருவாக்குகின்ற சாதனமொன்றானது, (117 ஆம் அத்தியாயமான) ஆவணங்கள் பதிவுக் கட்டளைச் சட்டத்தின்கீழ் அது விற்பனை உண்டியல் ஒன்று என்றவாறாக பதிவுசெய்யப்படுதல் வேண்டும். மிதக்கும் தாக்கீடானது காணியையும் உள்ளடக்குகின்றவிடத்து, (117 ஆம் அத்தியாயமான) ஆவணங்கள் பதிவுக் கட்டளைச்சட்டத்தின் 16இல் இருந்து 22 வரையிலான பிரிவுகளின் ஏற்பாடுகள், சாதனத்தை, அது காணி தொடர்பானதாக இருக்கின்ற அளவுவரை எவ்விதத்திலும் பாதித்தலாகாது.*

*(4) (117 ஆம் அத்தியாயமான) ஆவணங்கள் பதிவுக்கட்டளைச் சட்டத்தின் 17 ஆம், 20 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள் -*

*(அ) கம்பெனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் எம் மாவட்டத்தில் அமைந்திருக்கின்றதோ அக்கட்டளைச் சட்டத்தின்* IV *ஆம் அத்தியாயத்தின்கீழ்* ; *அத்துடன்*

*(ஆ) இச்சட்டத்தின்* VI *ஆம் பாகத்தின்கீழ்* ;

*செய்யப்பட்ட அம்மிதக்கும் தாக்கீட்டின் பதிவானது, அக்கட்டளைச்சட்டத்தின்* IV *ஆம் அத்தியாயத்தின்கீழ் இலங்கையிலுள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் செய்யப்பட்ட பதிவொன்றாற் போன்று, மிதக்கும் தாக்கீடொன்று தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்.*

(5) ஐயத்தைத் தவிரப்பதற்கான, (89 ஆம் அத்தியாயமான) ஈட்டுச் சட்டத்தின் 63 ஆம் பிரிவிலுள்ள எதுவும், மிதக்கும் தாக்கீடொன்றை உருவாக்குகின்ற ஏதேனும் சாதனத்துக்கு அல்லது சாதனம் தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்.

மிதக்கும் தாக்கீடொன்றை உருவாக்கும் சாதனத்தின் ஏற்பாடுகள்.

**429.** (1) இதற்கான பதினோராம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள நியதிகள், அத்தகைய ஏதேனும் சாதனத்தின் நியதிகள் வெளிப்படையாக அவ்வுட்கிடையான நியதிகளை புறநீக்கம் செய்கின்ற அளவு வரை தவிர அல்லது அவற்றோடு ஒவ்வாதிருக்கின்ற அளவு தவிர, மிதக்கும் தாக்கீடொன்றை உருவாக்கும் ஒவ்வொரு சாதனத்தினதும் உட்கிடையான நியதிகளாதல் வேண்டும்.

(2) மிதக்கும் தாக்கீடொன்றை உருவாக்குகின்ற சாதனமொன்று -

(அ) மிதக்கும் தாக்கீடுமீது முன்னுரிமைகொண்ட அல்லது அதற்குச் சமனான வரிசையிலான ஏதேனும் நிலையான பிணைப்பொறுப்பு அல்லது ஏதேனும் வேறு மிதக்கும் தாக்கீடு உருவாக்கப்படுவதைத் தடுக்கின்ற அல்லது மட்டுப்படுத்துகின்ற ; அல்லது

(ஆ) எக்கட்டளையில் மிதக்கும் தாக்கீடானது, பதிலீடான வேறு எவையேனும் அல்லது எதிர்கால மிதக்கும் தாக்கீடுகளுடன் அல்லது அவ்வாதனத்தின் மீதான அல்லது அதன் ஏதேனும் பாகத்தின் மீதான பிணைப் பொறுப்புகளுடன் வரிசையிட வேண்டுமோ, அக்கட்டளையை ஒழுங்குபடுத்துகின்ற,

ஏற்பாடுகளைக் கொண்டிருக்கலாம்.

மிதக்கும் தாக்கீட்டுக்கு அமைய உள்ள ஆதனத்தை நடுக்கட்டலுக்கு முன்கையாளுதல்.

**430.** (1) மிதக்கும் தாக்கீடு எச்சாதனத்தின்கீழ் உருவாக்கப்பட்டதோ அச்சாதனத்தின் நியதிகளுக்கமைய, ஏதேனும் ஆதனம் தொடர்பு மிதக்கும் தாக்கீடொன்று உருவாக்கப்படுதலானது வழமையான தொழில் நெறிமுறையின்போது, அவ்வாதனத்தைக் கையாளுவதற்கான கம்பெனியின் இயலுமாந்தன்மையினைப் பாதித்தலாகாது.

(2) (அ) கம்பெனி ஒன்றின் ஆதனம் எதுவும், அவ்வாதனத்துக்கு நடுக்கட்டல் செய்யப்படாத மிதக்கும் தாக்கீடொன்றுக்கு அமைவாக இருக்கின்றவிடத்து ; அத்துடன்

(ஆ) கம்பெனியானது அவ்வாதனத்தை விற்றிருக்கின்றவிடத்து அல்லது கையுதிர்த்திருக்கின்றவிடத்து,

கம்பெனியிடமிருந்து அவ்வாதனத்தைப் பெறுகின்ற ஆளெவரும், (3) ஆம் உட்பிரிவில் அல்லது (4) ஆம் உட்பிரிவில் தரப்பட்டுள்ள சூழ்நிலைகளில் அவ்வாதனத்தின் பெறுமதிக்கான மிதக்கும் தாக்கீட்டின் நன்மைக்கு உரித்துடைய ஆளுக்கு வகை சொல்வதற்கு ஆளாதல் வேண்டும்.

(3) (அ) ஆதனத்தின் விற்பனை அல்லது கையுதிர்த்தலானது கம்பெனியின் வழமையான தொழில் நெறிமுறையின்போது நிகழவில்லையாயின் ; அத்துடன்

(ஆ) ஆதனத்தின் விற்பனை அல்லது கையுதிர்த்தலானது கம்பெனியின் வழமையான தொழில் நெறிமுறையின்போது நிகழவில்லையென அவ்வாளுக்குத் தெரிந்திருந்தால் அல்லது கம்பெனியுடன் அவருக்கிருந்த தொடர்பு காரணமாக அவருக்குத் தெரிந்திருக்க வேண்டும் என இருந்தால்,

(2) ஆம் உட்பிரிவின்கீழ் அவ்வாளினால் பெறப்பட்ட ஆதனத்தின் பெறுமதிக்கு வகைசொல்வதற்கு ஆளொருவர் ஆளாகலாம்.

(4) (அ) ஆதனத்தின் விற்பனை அல்லது கையுதிர்த்தல், மிதக்கும் தாக்கீட்டை உருவாக்கிய சாதனத்தை மீறிய செயலொன்றாக இருந்தால் ; அத்துடன்

(ஆ) சாதனத்தின் நியதிகளையும் அந்நியதிகளின் மீறுகைக்குக் காரணமாகவிருந்த சூழ்நிலைகளையும் அவ்வாள் அறிந்திருந்தாரானால் அல்லது கம்பெனியுடன் அவருக்கிருந்த தொடர்பு காரணமாக அவர் அது பற்றி அறிந்திருக்க வேண்டுமென இருந்தால்,

(2) ஆம் உட்பிரிவின்கீழ் அவ்வாளினால் பெறப்பட்ட ஆதனத்தின் பெறுமதிக்கு வகைசொல்வதற்கு ஆளொருவர் ஆளாகலாம்.

*மிதக்கும் தாக்கீடுகளின் வரிசை.*

***431.*** (1) கம்பெனியொன்றின் ஆதனம் எதுவும் சட்டத்தின் நடைமுறை காரணமாக மிதக்கும் தாக்கீடொன்று மற்றும் நிலையான பிணைப்பொறுப்பொன்று ஆகிய இரண்டுக்கும் அமைவாக இருக்கின்றவிடத்து, மிதக்கும் தாக்கீடுமீது நிலையான தாக்கீட்டுக்கு முன்னுரிமை இருத்தல் வேண்டும்.

(2) கம்பெனியொன்றின் ஆதனம் எதுவும், கம்பெனியினால் வழங்கப்பட்ட மிதக்கும் தாக்கீடு ஒன்று மற்றும் நிலையான பிணைப்பொறுப்பு ஒன்று ஆகிய இரண்டுக்கும் அமைவாக இருக்கின்றவிடத்து -

(அ) மிதக்கும் தாக்கீட்டை உருவாக்கிய சாதனம் -

(i) அந்நிலையான பிணைப்பொறுப்பு கம்பெனியினால் வழங்கப்படுவதை தடைசெய்திருந்தாலொழிய ; அத்துடன்

(ii) எத்தேதியன்று கம்பெனியினால் நிலையான பிணைப்பொறுப்பு வழங்கப்பட்டதோ அத்தேதிக்கு முன்னர் இச்சட்டத்தின் VI ஆம் பாகத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டிருந்தாலொழிய ; அல்லது

(ஆ) மிதக்கும் தாக்கீட்டை உருவாக்குகின்ற சாதனம் நிலையான பிணைப்பொறுப்புமீது முன்னுரிமை எடுப்பதற்குக் கூறப்பட்டிருந்தாலொழிய, அத்துடன் நிலையான பிணைப்பொறுப்பு நன்மைக்கு உரித்துடையவரான ஆள் அம்முன்னுரிமைக்கு எழுத்தில் சம்மதம் தெரிவித்திருந்தாலொழிய ; அல்லது

(இ) கம்பெனியால் நிலையான பிணைப்பொறுப்பு எத்தேதியன்று வழங்கப்பட்டதோ, அத்தேதிக்குமுன் 433 ஆம் பிரிவின் நியதிகளின்கீழ் மிதக்கும் தாக்கீடானது ஆதனத்துக்கு நடுக்கட்டல் செய்யப்பட்டிருந்தால் ஒழிய, அத்துடன், ஒன்றில் -

(i) ஆதனம் தொடர்பில் பெறுநர் ஒருவர் நியமிக்கப் பட்டு, அத்துடன் எவ்வாளுக்கு நிலையான பிணைப்பொறுப்பு வழங்கப்பட்டதோ, அவ்வாள் பெறுநர் நியமனம் பற்றி அறிவித்தல் பெற்றிருந் தால் ஒழிய ; அல்லது

(ii) எவ்வாளுக்கு நிலையான பிணைப்பொறுப்பு வழங்கப்பட்டதோ, அவ்வாளுக்கு –

(அ) மிதக்கும் தாக்கீடு அவ்வாதனத்துக்கு நடுக்கட்டல் செய்யப்பட்டிருந்தன ;

(ஆ) நிலையான பிணைப்பொறுப்பு வழங்கப் பட்டதானது, மிதக்கும் தாக்கீட்டை உருவாக்கிய சாதனத்தை மீறிய செயல் ஒன்று என ; அல்லது

(இ) நிலையான பிணைப்பொறுப்பு வழங்கப் பட்டதானது, கம்பெனியின் வழமையான தொழில்புரிகையின்போது நிகழ்ந்ததல்ல வென,

இருந்தாலொழிய, நிலையான பிணைப்பொறுப்புக்கு, மிதக்கும் தாக்கீடுமீது முன்னுரிமை இருத்தல் வேண்டும்.

(3) கம்பெனியொன்றின் ஆதனம் எதுவும், ஒன்றுக்கு மேற்பட்ட மிதக்கும் தாக்கீட்டுக்கு அமைய இருக்கின்றவிடத்து, அம்மிதக்கும் தாக்கீடுகள், எம்மிதக்கும் தாக்கீடொன்றின் முன்னுரிமை அவ் வேற்பாட்டினால் பின்போடப்பட்டதோ, அம்மிதக்கும் தாக்கீட் டின் நன்மைக்கு உரித்துடைய ஆளினால் எழுத்தில் எம்மிதக்கும் தாக்கீட்டுக் குச் சம்மதம் தெரிவிக்கப்பட்டுள்ளதோ, அம்மிதக்கும் தாக்கீடொன்றை உருவாக்கும் சாதனமொன்றில் முரணாக ஏதேனும் ஏற்பாடு இருப்பதற்கு அமைய, அவை, VI ஆம் பாகத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட தேதியின் பிரகாரம் தங்களுக்குள் வரிசைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(4) ஐயத்தைத் தவிர்ப்பதற்கானவும், எச்சாதனத்தின்கீழ் அது உருவாக்கப்பட்டதோ, அச்சாதனத்தின் நியதிகளுக்கு அமைவாகவும், மிதக்கும் தாக்கீடொன்றின் முன்னுரிமையானது, அம் மிதக்கும் தாக்கீட்டினால் பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட எல்லாத் தனிசுகளும் அல்லது கடப்பாடுகளும் அல்லது அவற்றில் பாகம் எதுவும் —

(அ) அதைத் தொடர்ந்து கம்பெனியினால் உருவாக்கப்பட்டுப் பதிவுசெய்ப்பட்ட ஒரு மிதக்கும் தாக்கீடு ஒன்றின் பின்னர் ; அல்லது

(ஆ) மிதக்கும் தாக்கீட்டில் அடங்கியுள்ள முழு ஆதனம் அல்லது அதன் ஏதேனும் பாகம் தொடர்பிலான ஏதேனும் நிலையான பிணைப்பொறுப்பு கம்பெனியினால் வழங்கப்பட்ட பின்னர்,

உறப்பட்ட அல்லது எழுந்தன என்ற நிகழ்வினால் பாதிக்கப்படுதலாகாது.

(5) இரண்டாம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, ஆளொருவர் -

(அ) பெறுநர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார் என அவ்வாளுக்குத் தெரிந்திருந்தால் அல்லது அவ்வாறு ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார் என, கம்பெனியுடன் அவருக்கிருந்த தொடர்பு காரணமாக அவருக்குத் தெரிந்திருக்கவேண்டுமென இருந்தால் ; அல்லது

(ஆ) பெறுநரின் நியமனம் பற்றிப் பகிரங்க அறிவித்தல், 440 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரவின் (ஆ) என்னும் பந்திக்கிணங்கக் கொடுக்கப்பட்டிருந்தால்,

பெறுநர் ஒருவரின் நியமனம் பற்றிய அறிவித்தலைப் பெற்றுவிட்டாரெனக் கருதப்படுதல் வேண்டும்.

(6) நானூற்று இருபத்தேழாம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவிலுள்ள ஏற்பாடுகளை மட்டுப்படுத்தாமல், (117 ஆம் அத்தியாயமான ஆவணங்கள் பதிவுக் கட்டளைச்சட்டத்தின் பதிவுசெய்யப்பட்டிருக்கின்ற மிதக்கும் தாக்கீடொன்றுக்கும், நிலையான பிணைப்பொறுப்

பொன்றுக்கும் அமைவாகக் கம்பெனியொன்றுக்குச் சொந்தமான காணியொன்று இருக்கின்றவிடத்து, நிலையான தாக்கீடானது, மிதக்கும் தாக்கீடானது அக்காணி தொடர்பில், நிலையான பிணைப்பொறுப்பு பதிவுசெய்யப்படுவதற்குமுன் 117 ஆம் அத்தியாயமான ஆவணங்கள் பதிவுக் கட்டளைச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தாலொழிய, மிதக்கும் தாக்கீடுமீது முன்னுரிமை கொண்டிருத்தல் வேண்டும்.

*மிதக்கும் தாக்கீடுகளை மாற்றுதலும் விடுவித்தலும்.*

**432.** (1) மிதக்கும் தாக்கீடு ஒன்றை உருவாக்கும் சாதனமொன்றின் நியதிகள், கம்பெனியினால் சாதனம் ஒன்று எம்முறையில் நிறைவேற்றப்படலாமோ, அம்முறையில் வேறுபடுத்தப்படலாம்.

(2) இப்பிரிவின் (3) உட்பிரிவில் உள்ள திரிபுகளுக்கு அமைய, 102 ஆம் பிரிவின் (1) ஆம் மற்றும் (3) ஆம் உட்பிரிவுகளின், 103 மற்றும் 108 ஆம் பிரிவுகளின் (1) ஆம், (3) ஆம் உட்பிரிவுகள், இப்பிரிவின்கீழான எம்மாற்றுதல் சாதனமொன்று -

(அ) மிதக்கும் தாக்கீடுமீது முன்னுரிமைகொண்டுள்ள அல்லது அதற்குச் சமனாக உள்ள ஏதேனும் நிலையான பிணைப்பொறுப்பு அல்லது வேறு ஏதேனும் மிதக்கும் தாக்கீடு உருவாக்கப்படுவதைத் தடைசெய்கின்றதோ அல்லது மட்டுப்படுத்துகின்றதோ ;

(ஆ) நிலையான பிணைப்பொறுப்புகள் அல்லது வேறு மிதக்கும் தாக்கீடுகள் தொடர்பில், மிதக்கும் தாக்கீட்டின் கட்டளையை அத்துடன் அது வரிசைப்படுத்தப்படுதலை வேறுபடுத்துகின்றதோ அல்லது வேறுவகையில் ஒழுங்குபடுத்துகின்றதோ ;

(இ) மிதக்கும் தாக்கீட்டிலிருந்து ஆதனத்தை விடுவிக்கின்றதோ ; அல்லது

(ஈ) மிதக்கும் தாக்கீடு, குறிக்கப்பட்ட கடப்பாட்டை அல்லது குறிக்கப்பட்ட தொகையொன்றை பிணைப்பொறுப்பாக்குகின்றவிடத்து, விடயத்துக்கேற்றவாறு, அக்கடப்பாட்டை மாற்றுகின்றதோ அல்லது அத்தொகையை அதிகரிக்கின்றதோ,

அச்சாதனம் தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) நூற்றி இரண்டாம் பிரிவின் (1) ஆம், (3) ஆம் உட்பிரிவுகளின் 103 ஆம் மற்றும் 108 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள் -

(அ) தாக்கீடொன்று பற்றிய குறிப்பீடுகள், மிதக்கும் தாக்கீடொன்றுக்கான மாற்றல் ஒன்று பற்றிய குறிப்பீடுகள் என்றாற்போன்று ; அத்துடன்

(ஆ) தாக்கீடொன்று உருவாக்கப்படுதல் பற்றிய குறிப்பீடுகள் மாற்றல் சாதனம் நிறைவேற்றப்படுதல் பற்றிய குறிப்பீடுகள் என்றாற்போன்று,

எம்மாற்றல் சாதனமொன்று, தொடர்பில் (2) ஆம் உட்பிரிவு ஏற்புடையதாகுமோ அம்மாற்றல் சாதனம் தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) மிதக்கும் தாக்கீடொன்றை உருவாக்கும் சாதனமொன்றில் நியதிகளுக்கான மாற்றல், மிதக்கும் தாக்கீட்டில் முன்பு இருக்காத ஆதனத்துக்கு மிதக்கும் தாக்கீட்டை விரிவாக்கும் பயனைக்கொண்டுள்ளவிடத்து, மேலதிக ஆதனம் தொடர்பிலான மிதக்கும் தாக்கீட்டின் முன்னுரிமையானது, எச்சாதனத்தின்மூலம் திருத்தம் செய்யப்பட்டதோ, அச்சாதனம், அம்மேலதிக சாதனம் தொடர்பில் புதியதொரு மிதக்கும் தாக்கீடொன்றை உருவாக்குகின்ற சாதனமொன்று என்றாற்போன்று தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(5) மிதக்கும் தாக்கீடொன்று, அதில் அடங்கியுள்ள முழு ஆதனம் தொடர்பில் அல்லது அதன் ஏதேனும் பாகம் தொடர்பில், அத்தகைய தாக்கீடொன்று எம்முறையில் உருவாக்கப்படலாமோ, அம்முறையில் விடுவிக்கப்படலாம்.

ஆதனத்துக்கு எச்சூழ்நிலைகளில் மிதக்கும் தாக்கீடு நடுக்கட்டல் செய்கிறது.

**433.** (1) மிதக்கும் தாக்கீடொன்று, அத்தாக்கீட்டில் அடங்கியுள்ள எல்லா ஆதனம் தொடர்பிலும், பின்வரும் எவையேனும் சம்பவங்கள் நிகழ்ந்ததன்மேல், நிலையான பிணைப்பொறுப்பொன்றுக்கு நடுக்கட்டல் செய்தல் வேண்டுமென்பதுடன், அதன் நிலையான தாக்கீடு ஒன்றாக அமைதலும் வேண்டும் :-

(அ) மிதக்கும் தாக்கீட்டை உருவாக்கும் சாதனத்தின் நியதிகளின்கீழ் அல்லது வேறுவகையில் இருந்தாலென்ன,

கம்பெனியின் முழு ஆதனத்தின் அல்லது பொறுப்பு முயற்சியின் அல்லது அவற்றின் ஏதேனும் பாகத்தின் பெறுநர் ஒருவர் நியமிக்கப்படுதல் ;

(ஆ) கம்பெனி ஒடுக்கப்படுதலின் ஆரம்பம் ;

(இ) கம்பெனியானது, அதன் வழமையான தொழில்புரிகையின்போது அல்லாமல், அதன் முழுப்பொறுப்பு முயற்சியும் அல்லது அதன் பாகம் எதுவும் கம்பெனியால் கையுதிர்க்கப்படல் ;

(ஈ) கம்பெனி, தொழில் கொண்டுநடாத்தாது ஒழிதல் ;

(உ) அத்தாக்கீடானது, அதில் அடங்கியுள்ள ஆதனத்துக்கு நடுக்கட்டல் செய்விக்கும் பயனைக்கொண்ட மிதக்கும் தாக்கீட்டை உருவாக்கும் சாதனத்தில் எவ்வேறு சம்பவத்தின் நிகழ்வு பற்றிக் கூறப்பட்டுள்ளதோ, அவ்வேறு சம்பவம்.

(2) (அ) மிதக்கும் தாக்கீடொன்று, கம்பெனி ஒன்றின் ஏதேனும் ஆதனத்துக்கு நடுக்கட்டல் செய்திருக்கின்றவிடத்து ; அத்துடன்

(ஆ) எவ்வாதனத்துக்குத் தாக்கீடு நடுக்கட்டல் செய்திருக்கின்றதோ, அவ்வாதனத்தை, கம்பெனி விற்கின்றவிடத்து அல்லது வேறுவகையில் கையுதிர்க்கின்றவிடத்து,

எவ்வாளுக்கு ஆதனம் விற்கப்பட்டதோ அல்லது வேறுவகையில் கையுதிர்க்கப்பட்டதோ, அவ்வாள், ஆதனத்தின் பெறுமதிக்கான மிதக்கும் தாக்கீட்டின் நன்மைக்கு உரித்துடைய ஆளுக்கு -

(இ) ஆதனம் தொடர்பில் பெறுநர் ஒருவர் நியமிக்கப்பட்டு, அவ்வாளுக்கு பெறுநர் நியமிக்கப்பட்டது பற்றிய அறிவித்தல் கிடைத்திருந்தால் ; அல்லது

(ஈ) அவ்வாளுக்கு -

(i) மிதக்கும் தாக்கீடு அவ்வாதனத்துக்கு நடுக் கட்டல் செய்திருக்கின்றது ;

(ii) விற்பனை அல்லது கையுதிர்த்தல், மிதக்கும் தாக்கீட்டை உருவாக்கிய சாதனத்தை மீறிய செயல் ; அல்லது

(iii) விற்பனை அல்லது கையுதிர்த்தல், கம்பெனி யின் வழமையான தொழில்புரிகையின்போது நிகழவில்லை,

எனத் தெரிந்திருந்தால் அல்லது கம்பெனியுடன் அவருக்கு இருந்த தொடர்பு காரணமாக அவருக்குத் தெரிந்திருக்கவேண்டுமென இருந்தால்.

(3) இரண்டாம் உட்பிரிவில் உள்ள எதுவும் -

(அ) ஆதனம் தொடர்பில் நியமிக்கப்பட்ட பெறுநர் ஒருவரின் அதிகாரத்தின்மூலம் அல்லது அதிகாரத்தின்கீழ், மிதக்கும் தாக்கீட்டின் நன்மைக்கு உரித்துடைய ஆளினால் ;

(ஆ) எம்மிதக்கும் தாக்கீட்டின் நன்மைக்கு உரிமைக் கோரிக்கை விடுகின்ற ஆள் உரித்துடையவராக இருக்கின்றாரோ, அம்மிதக்கும் தாக்கீட்டுக்கு முன்னர் வரிசைப்படுத்தப்பட்ட ஆதனம் தொடர்பிலான மிதக் கும் தாக்கீடொன்றை அல்லது வேறு பிணைப்பொறுப் பைப் பின்பற்றி ; அல்லது

(இ) நீதிமன்றத்தினால்,

செய்யப்படும் ஆதனத்தின் விற்பனையொன்றுக்கு ஏற்புடைய தாதலாகாது.

(4) கம்பெனியினால் கையுதிர்க்கப்பட்ட ஆதனத்தின் பெறுமதிக்கான மிதக்கும் தாக்கீடு ஒன்றை வைத்திருப்பவருக்கு வகைசொல்ல ஆளான ஆளொருவருக்கு, மிதக்கும் தாக்கீட்டை வைத்திருக்கின்ற ஆளுக்கு எவ்வாதனம் கிடைக்கக்கூடியதாக வந்திருக்கின்றதோ, அவ்வாதனத்துக்குப் பதிலாக, கம்பெனிக்கு வழங்கப்பட்ட ஏதேனும் பிரதிபயனின் பெறுமதிக்கான வரவு கொடுக்கப்படுதல் வேண்டும்.

(5) இரண்டாம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக -

(அ) பெறுநர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கின்றார் என ஆளொருவருக்குத் தெரிந்தால் அல்லது கம்பெனியுடன் அவருக்கிருந்த தொடர்பு காரணமாக அவருக்குத் தெரிந்திருக்கவேண்டுமென இருந்தால் ; அல்லது

(ஆ) நானூற்று நாற்பதாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்திக்கிணங்க, பெறுநரின் நியமனம் பற்றிய பகிரங்க அறிவித்தல் கொடுக்கப்பட்டுவிட்டது என இருந்தால்,

ஆளொருவர், பெறுநர் ஒருவரின் நியமனம் பற்றிய அறிவித்தலைப் பெற்றுக்கொண்டுவிட்டாரெனக் கருதப்படல் வேண்டும்.

(6) ஐயத்தைத் தவிர்ப்பதற்காக, இப்பிரிவின்கீழ் மிதக்கும் தாக்கீடொன்று நிலையான தாக்கீடொன்றாக வந்திருக்கின்றவிடத்து, கொடைபெறுநர், XV ஆம் பாகத்தின்கீழ் பெறுநர் ஒருவரை நியமிப்பதற்கு அவருக்கின்ற ஏதேனும் உரிமைக்குப் பங்கமின்றி, (89 ஆம் அத்தியாயமான) ஈட்டுச் சட்டத்தின்கீழ் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின்கீழ், நிலையான தாக்கீடு ஒன்றை வைத்திருப்பவருக்குக் கிடைக்கக்கூடியதாக இருக்கும் வேறு ஏதேனும் பரிகாரத்தைப் பிரயோகிக்கலாம்.

## பாகம் XV

### பெறுநர்களும் முகாமையளர்களும்

**434.** இச்சட்டத்தின் இப்பாகத்தில், சந்தர்ப்பம் வேறுவகையில் தேவைப்படுத்தினாலொழிய - பொருள்கோடல்.

"கடன்தருநர்" என்பது, தற்போதோ அல்லது வருங்காலத்திலோ, நிச்சயமாகவோ அல்லது பின்னிகழ்வதாகவோ, அத்துடன் நிச்சயப்படுத்தப்பட்ட தனிசொன்றாகவோ அல்லது பொறுப்பொன்றாகவோ அல்லது சேதஈட்டுப் பொறுப்பொன்றாகவோ, எவ்வாள் ஒருவருக்குக் கொடையாளி தனிசு ஒன்றைக் கொடுக்கவேண்டியவராகவோ அல்லது பொறுப்பொன்றின்கீழ் உள்ளவராகவோ இருக்கின்றாரோ, அவ்வாளை உள்ளடக்கும் ;

"கொடைபெறுநர்" என்பது, மிதக்கும் தாக்கீடு ஒன்றை உருவாக்கும் சாதனம் ஒன்று தொடர்பில், சாதனத்தின் நன்மைக்கு உரித்துடைய ஆள் எனப் பொருள்படும் ;

"கொடையாளி" என்பது, எவ்வாளின் ஆதனம் தொடர்பில் பெறுநர் ஒருவர் நியமிக்கப்படுகின்றாரோ அல்லது நியமிக்கப்படக்கூடுமோ, அவ்வாள் எனப் பொருள்படும் ;

"ஒழிப்போன்" என்பது, XII ஆம் பாகத்தின்கீழ் நியமிக்கப்பட்ட ஒழிப்போன் ஒருவர் எனப் பொருள்படும் ;

"ஈடு" என்பது, பணம்பெறுவதற்காக அல்லது பணத்தின் பெறுமதியைப் பிணைப்பொறுப்பளிப்பதற்காக ஆதனத்தின்மீதான தாக்கீடொன்றை உள்ளடக்கும் ;

"ஈடுபெறுபவர்" என்பது, மூல ஈடுபெறுபவரின்கீழ் காலத்துக்குக்காலம் உரித்துப் பெறுகின்ற ஆள் ஒருவரை உள்ளடக்கும், ஆனால் பெறுநர் ஒருவரை உள்ளடக்காது ;

"முன்னுரிமையுள்ள உரிமைக் கோரிக்கைகள்" என்பது, ஒன்பதாம் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள (அவ்வட்டவணையின் 1 ஆம் பந்தி தவிர) உரிமைக் கோரிக்கைகள் எனப் பொருள்படும் ;

"ஆதனம்" என்பது –

(அ) அசைவுள்ள மற்றும் அசைவற்ற ஆதனம் ;

(ஆ) அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம்மீதான அக்கறையொன்று ;

(இ) தனிசு ஒன்று ;

(ஈ) வழக்குநடவடிக்கையில் உள்ள ஏதேனும் பொருள் ;

(உ) வேறு ஏதேனும் உரிமை அல்லது அக்கறை,

ஆகியவற்றை உள்ளடக்கும் ;

"பெறுநராண்மையிலுள்ள ஆதனம்" என்பது, எவ்வாதனம் தொடர்பில் பெறுநர் ஒருவர் நியமிக்கப்படுகின்றாரோ, அவ்வாதனம் எனப்பொருள்படும்.

"பெறுநர்" என்பது –

(அ) ஏதேனும் சாதனத்தின்கீழ் ; அல்லது

(ஆ) இச்சட்டத்தினால் நீதிமன்றத்துக்கு அளிக்கப்பட்ட தத்துவம் ஒன்றைப் பிரயோகிக்கையில், நீதிமன்றத் தால்,

நியமிக்கப்பட்ட ஆளுக்கு பெறுநராண்மையிலுள்ள ஆதனத்தை விற்பதற்கான தத்துவம் வழங்கப்பட்டிருந்தாலுஞ்சரி அல்லது இல்லாவிடினுஞ்சரி ஏதேனும் சாதனம் தொடர்பில் நியமிக்கப் பட்ட பெறுநர் ஒருவர் அல்லது முகாமையாளர் ஒருவர் அல்லது பெறுநர் மற்றும் முகாமையாளர் ஒருவர் எனப்பொருள்படும் ஆனால், அது பின்வருவோரை உள்ளடக்காது :–

(இ) (i) ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தில் இருந்து வருமானம் பெறுவதற்கு ;

(ii) ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தில் உடைமையைப் பெறுவதற்கு அல்லது அதன் கட்டுப்பாட்டை எடுத்துக் கொள்வதற்கு ; அல்லது

(iii) ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தை விற்பதற்கு அல்லது வேறுவகையில் பராதீனப்படுத்துவதற்கு,

தாம் தனிப்பட்ட ரீதியாகவோ அல்லது முகவர் ஒருவர் மூலமாகவோ தத்துவம் ஒன்றைப் பிரயோகிக்கும் ஈடுபெறுகின்ற ஒருவர் ; அல்லது

(ஈ) அத்தகைய எவரேனும் ஈடுபெறுபவரின் முகவர் ஒருவர்,

### பெறுநரை நியமிப்பதற்குள்ள தத்துவம்

*பெறுநரை நியமிப்பதற்கான தத்துவத்தை சாதனம் அளிக்கலாம்.*

**435.** கம்பெனி ஒன்றின் முழு ஆதனம் மற்றும் பொறுப்பு முயற்சி தொடர்பில் மிதக்கும் தாக்கீடொன்றை உருவாக்குகின்ற சாதனமொன்று கொடைபெறுநருக்கு கம்பெனியின் ஆதனத்தின் மற்றும் பொறுப்புமுயற்சியின் பெறுநர் ஒருவரை நியமிப்பதற்கான தத்துவத்தை அளிக்கலாம்.

### பெறுநர்களின் தகைமைகள்

*பெறுநர்களின் தகைமைகள்.*

**436.** (1) பின்வருவோர் பெறுநர் ஒருவராக நியமிக்கப்படுதலோ அல்லது செயற்படுதலோ ஆகாது :—

(அ) பதினெட்டு வயதுக்குக் கீழ்ப்பட்ட ஆளொருவர் ;

(ஆ) கொடையாளியின் கடன்தருநர் ஒருவர் ;

(இ) பெறுநராண்மை ஆரம்பிப்பதற்கு நேரடி முன்னரான இரண்டாண்டு காலப்பகுதியொன்றுக்குள் —

(i) கொடையாளி அலுவலர் ஒருவராக இருக்கின்ற அல்லது இருந்திருக்கின்ற ; அல்லது

(ii) பெறுநராண்மையிலுள்ள ஆதனத்தை ஈடாகப் பெற்றவரின் அலுவலர் அல்லது ஊழியர் ஒருவராக இருக்கின்ற அல்லது இருந்திருக்கின்ற,

ஆளொருவர் ;

(ஈ) பெறுநராண்மை ஆரம்பிப்பதற்கு முன்னரான இரண்டாண்டு காலப்பகுதிக்குள் கொடையாளியினால் வழங்கப்பட்ட பங்கொன்றில் நேரடியான அல்லது மறைமுகமான அக்கறையொன்றைக் கொண்டிருக்கின்ற அல்லது கொண்டிருந்திருக்கின்ற ஆளொருவர் ;

(உ) பொறுப்பு விடுவிக்கப்படாத கடனிறுக்க வகையற்ற ஒருவராக இருக்கின்ற ஆளொருவர் ;

(ஊ) (227 ஆம் அத்தியாயமான) மனநோய்கள் கட்டளைச் சட்டத்தின்கீழ் சித்தசுவாதீனமற்றவர் எனத் தீர்ப்பளிக்கப்பட்ட ஆளொருவர் ;

(எ) எவ்வாள் ஒருவர் தொடர்பில் 468 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின்கீழ் கட்டளையொன்று ஆக்கப்பட்டிருக்கின்றதோ அவ்வாள் ;

(ஏ) ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்திரண்டாம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் 186 ஆம் பிரிவின் கீழ் கம்பெனி ஒன்றின் பணிப்பாளர் ஒருவராக அல்லது ஊக்குநர் ஒருவராக இருப்பதிலிருந்து அல்லது அக்கம்பெனியின் முகாமையுடன் சம்பந்தப்பட்டிருப்பதில் இருந்து அல்லது அம்முகாமையில் பங்குபற்றுவதிலிருந்து தடைசெய்யப்பட்ட அல்லது அச்சட்டம் நீக்கப்பட்டிருக்காவிட்டால் அவ்வாறு தடைசெய்யப்பட்டிருக்கக்கூடிய ஆளொருவர் ;

(ஐ) இருநூற்றுப் பதின்மூன்று அல்லது 214 ஆம் பிரிவின் கீழ் கம்பெனியொன்றின் பணிப்பாளர் ஒருவராக அல்லது ஊக்குநர் ஒருவராக இருப்பதில் இருந்து அல்லது அம்முகாமையுடன் சம்பந்தப்பட்டிருப்பதில் இருந்து அல்லது அம்முகாமையில் பங்குபற்றுவதிலிருந்து தடைசெய்யப்பட்ட ஆளொருவர் ;

(ஓ) பெறுநர் ஒருவரை நியமிப்பதற்கான தத்துவத்தை அளிக்கின்ற சாதனத்தினால், பெறுநர் ஒருவராகச் செயற்படுவதிலிருந்து தகைமை இழப்பிக்கப்பட்ட ஆளொருவர்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்று பெறுநர் ஒருவராக நியமிக்கப்படுதலோ அல்லது செயற்படுதலோ ஆகாது.

(3) ஒராம் உட்பிரிவை அல்லது (2) ஆம் உட்பிரிவை மீறிச் செயற்படுகின்ற ஆளொருவர், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

### பெறுநரை நியமித்தல்

**437.** (1) கம்பெனியொன்றின் ஆதனத்தின் மற்றும் பொறுப்பு முயற்சியின் பெறுநர் ஒருவரை நியமிப்பதற்கான தத்துவத்தை சாதனமொன்றானது கொடைபெறுநருக்கு அளிக்கின்றவிடத்து, கொடையைப் பெறுநரானவர், கொடைபெறுநரினால் அல்லது அவரின் சார்பில் ஒப்பமிடப்பட்ட எழுத்திலான சாதனமொன்றின்மூலம் பெறுநர் ஒருவரை கொடைபெறுநர் நியமிக்கலாம்.

*சாதனத்தின்கீழ் பெறுநரை நியமித்தல்.*

(2) சாதனமொன்றினால் அளிக்கப்படும் தத்துவத்தினால் அல்லது தத்துவம் ஒன்றின்கீழ் நியமிக்கப்படும் பெறுநர் ஒருவர், சாதனமானது வேறுவகையில் வெளிப்படையாக ஏற்பாடுசெய்தாலொழிய, கொடையாளியின் முகவராக இருத்தல் வேண்டும்.

(3) இப்பிரிவின் கீழ் பெறுநர் ஒருவர் —

(அ) வேறு ஏதேனும் சட்டத்தில் முரணாக உள்ளது எது எப்படியிருப்பினும் ; அத்துடன்

(ஆ) எவ்வாதனம் தொடர்பில் பெறுநர் நியமிக்கப்படுகின்றாரோ அவ்வாதனம் அசைவற்ற ஆதனத்தை உள்ளடக்கினாலுஞ்சரி அல்லது உள்ளடக்காவிட்டாலுஞ்சரி,

நியமிக்கப்படலாம்.

(4) ஐயத்தைத் தவிர்ப்பதற்காக —

(அ) இப்பிரிவின்கீழ் பெறுநர் ஒருவரை நியமிப்பதானது ஈடுசார் வழக்கொன்றல்ல ; அத்துடன்

(ஆ) (89 ஆம் அத்தியாயமான) ஈட்டுச் சட்டத்தின் 46 ஆம் பிரிவிலுள்ளது எதுவும், இப்பிரிவின்கீழ் பெறுநர் ஒருவரின் நியமனத்தைப் பாதித்தலோ அல்லது அந்நியமனம் தொடர்பில் ஏற்புடையதாதலோ ஆகாது.

*பெறுநரை நியமிப்பதற்கான தத்துவத்தின் எல்லை.*

**438.** (1) பெறுநர் ஒருவரை நியமிப்பதற்குச் சாதனமொன்றினால் அளிக்கப்படும் தத்துவம் ஒன்று, சாதனம் வேறுவகையில் வெளிப்படையாக ஏற்பாடு செய்தாலொழிய —

(அ) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பெறுநர்களை ;

(ஆ) தற்போது பதவியிலுள்ள ஒரு பெறுநரோடு அல்லது அதற்கு மேற்பட்ட பெறுநர்களோடு மேலதிகமாக ஒரு பெறுநரை ; அல்லது

(இ) எப்பெறுநரின் பதவி வெற்றாக வந்துவிட்டதோ அப்பெறுநரை அடுத்து வருவதற்காக, பெறுநர் ஒருவரை,

நியமிப்பதற்கான தத்துவத்தையும் உள்ளடக்கும்.

(2) பெறுநர்கள் எச்சாதனத்தின்கீழ் அல்லது நீதிமன்றத்தின் எக்கட்டளைமூலம் நியமிக்கப்பட்டார்களோ அச்சாதனம் அல்லது கட்டளை வெளிப்படையாக வேறுவகையில் ஏற்பாடு செய்தாலொழிய, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பெறுநர்கள் அவர்களுக்குள்ள அதே தத்துவங்களின் அளவு வரை கூட்டாகவோ அல்லது தனியாகவோ செயற்படலாம்.

நீதிமன்றம் பெறுநரை நியமிக்கலாம்.

**439.** (1) நீதிமன்றத்தின் உள்ளார்ந்த நியாயாதிக்கத்தை அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்புடைமையை மட்டுப்படுத்தாமல், நீதிமன்றம், கம்பெனியொன்றினால் வழங்கப்பட்ட நிலையான பிணைப்பொறுப்பொன்றுக்கு அல்லது மிதக்கும் தாக்கீடு ஒன்றுக்கு அமைய எவ்வாதனம் இருக்கின்றதோ அவ்வாதனத்தின் பெறுநர் ஒருவரை, அப்பிணைப்பொறுப்பின் அல்லது தாக்கீட்டின் கொடைபெறுநரினால் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மேல் —

(அ) கம்பெனியானது, கொடைபெறுநருக்குப் போமதியான தனிசொன்றைச் செலுத்துவதற்குத் தவறியுள்ளது அல்லது கொடைபெறுநருக்கான ஏதேனும் கடப்பாட்டை நிறைவேற்றுவதற்கு வேறு வகையில் தவறியுள்ளது ;

(ஆ) பிணைப்பொறுப்பை அல்லது தாக்கீட்டை உருவாக்கிய ஏதேனும் சாதனத்தின் நியதிகளை மீறி, பிணைப்பொறுப்புக்கு உட்படுத்தப்பட்ட ஆதனத்தை விற்பதற்கு அல்லது வேறுவகையில் கையுதிர்ப்பதற்குக் கம்பெனி உத்தேசித்திருக்கின்றது ; அல்லது

(இ) கொடைபெறுநரின் நன்மைக்காக, பிணைப்பொறுப்புக்கு உட்படுத்தப்பட்ட ஆதனம் பேணிப்பாதுகாக்கப்படுவதை உறுதி செய்வதற்கு அவ்வாறு செய்வது அவசியமானது,

எனத் திருப்திப்படுகின்றவிடத்து, நியமிக்கலாம்.

(2) இப்பிரிவின் கீழ் பெறுநர் ஒருவர் –

(அ) வேறு ஏதேனும் சட்டத்தில் முரணாக உள்ளது எது எப்படியிருப்பினும் ; அத்துடன்

(ஆ) எவ்வாதனம் தொடர்பில் பெறுநர் நியமிக்கப்படுகின்றாரோ அவ்வாதனம் அசைவற்ற ஆதனத்தை உள்ளடக்கினாலுஞ்சரி அல்லது உள்ளடக்காவிட்டாலுஞ் சரி,

நியமிக்கப்படலாம்.

(3) ஐயத்தைத் தவிர்ப்பதற்காக –

(அ) இப்பிரிவின்கீழ் பெறுநர் ஒருவரை நியமிப்பதானது, ஈடுசார் வழக்கொன்றல்ல ; அத்துடன்

(ஆ) (89 ஆம் அத்தியாயமான) ஈட்டுச் சட்டத்தின் 46 ஆம் பிரிவிலுள்ளது எதுவும், இப்பிரிவின்கீழ் பெறுநர் ஒருவரின் நியமனத்தைப் பாதித்தலோ அல்லது அந்நியமனம் தொடர்பில் ஏற்புடையதாதலோ ஆகாது.

பெறுநரின் நியமனம் பற்றிய அறிவித்தல்.

**440.** (1) பெறுநர் ஒருவர் நியமிக்கப்பட்டதன் பின்னர் உடனடியாக, அத்துடன் எச்சந்தர்ப்பத்திலும் நியமிக்கப்பட்டதன் பின்னர் பத்து வேலை நாட்களுக்குப் பிந்தாமல் –

(அ) கொடையாளிக்கு அவரது நியமனம் பற்றிய அறிவித்தல் கொடுத்தல் வேண்டும் ;

(ஆ) (i) பெறுநருடைய முழுப்பெயர் ;

(ii) நியமனத் தேதி ;

(iii) பெறுநரின் அலுவலக முகவரி ; அத்துடன்

(iv) பெறுநராண்மையிலுள்ள ஆதனம் பற்றிய சுருக்கமான ஒரு விவரணம்,

என்பவற்றை உள்ளடக்கிய அவரது நியமனம் பற்றிய பகிரங்க அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்; அத்துடன்

(இ) பகிரங்க அறிவித்தலின் பிரதியொன்றைப் பதிவாளருக்கு அனுப்புதல் வேண்டும்.

(2) பெறுநரின் நியமனமானது, விடயத்துக்கேற்றவாறு ஏற்கனவே பதவி வகிக்கின்ற பெறுநர் ஒருவருக்கு மேலதிகமாக அல்லது பெறுநராக பதவியை வறிதாக்கியிருக்கின்ற ஆள் ஒருவரின் இடத்துக்காக இருக்கின்றவிடத்து, இப்பிரிவின்கீழான அறிவித்தல் ஒவ்வொன்றும் அந்நிகழ்வு பற்றிக் கூறுதல் வேண்டும்.

(3) இப்பிரிவை மீறுகின்றவகையில் செயலாற்றுகின்ற பெறுநர் ஒவ்வொருவரும், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

*பெறுநராண்மை பற்றிய அறிவித்தல்.*

**441.** (1) கம்பெனியொன்றின் ஆதனம் மற்றும் பொறுப்பு முயற்சி தொடர்பில் பெறுநர் ஒருவர் நியமிக்கப்படுகின்றவிடத்து கொடையாளியினால் அல்லது பெறுநரால் அல்லது அவரின் சார்பில் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கை ஒவ்வொன்றும் அத்துடன் வழங்கப்பட்ட ஆவணம் ஒவ்வொன்றும் அத்துடன் எவ்வுடன்படிக்கைமீது அல்லது ஆவணத்தின்மீது கொடையாளியின் பெயர் காணப்படுகின்றதோ, அவ்வுடன்படிக்கை ஒவ்வொன்றும் அத்துடன் ஆவணம் ஒவ்வொன்றும் பெறுநர் ஒருவர் நியமிக்கப் பட்டுள்ளார் என்பதைத் தெளிவாகக் கூறுதல் வேண்டும்.

(2) குறிப்பிட்ட சொத்தொன்று அல்லது சொத்துக்கள் தொடர்பில் பெறுநர் ஒருவர் நியமிக்கப்டுகின்றவிடத்து, சொத்து அல்லது சொத்துக்கள் தொடர்பில் கொடையாளியினால் அல்லது பெறுநரினால் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கை ஒவ்வொன் றும் அத்துடன் வழங்கப்பட்ட ஆவணம் ஒவ்வொன்றும் அத்துடன் எவ்வுடன்படிக்கையின்மீது அத்துடன் ஆவணத்தின்மீது கொடை யாளியின் பெயர் காணப்படுகின்றதோ, அவ்வுடன்படிக்கை ஒவ் வொன்றும் அத்துடன் ஆவணம் ஒவ்வொன்றும் பெறுநர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கின்றார் என்பதைத் தெளிவாகக் கூறுதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவுடன் இணங்கியொழுகத் தவறுதல், உடன்படிக்கையின் அல்லது ஆவணத்தின் வலிதுடைமையைப் பாதித்தலாகாது.

(4) (அ) ஓராம் உட்பிரிவின் அல்லது (2) ஆம் உட்பிரிவின் மீறுகையாகச் செயற்படுகின்ற ; அல்லது

(ஆ) ஓராம் உட்பிரிவை அல்லது (2) ஆம் உட்பிரிவை மீறுவதற்கு தெரிந்துகொண்டோ அல்லது வேண்டுமென்றோ அதிகாரமளிக்கின்ற அல்லது அனுமதிக்கின்ற,

ஆள் ஒவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐம்பதினாயிரும் ரூபாவை விஞ்சாவொரு குற்றப்பணத்துக்கு ஆளாதலும் வேண்டும்.

பெறுநர் பதவியில் வெற்றிடம் இருத்தல்.

**442.** (1) பெறுநர் பதவியை வகிக்கின்ற ஆள் பதவியிலிருந்து விலகினால், இறந்தால் அல்லது 436 ஆம் பிரிவின்கீழ் தகைமை இழப்பிக்கப்பட்டவராக வந்தால், பெறுநர் பதவியொன்று வெற்றாதல் வேண்டும்.

(2) சாதனமொன்றினால் அளிக்கப்பட்ட தத்துவமொன்றின் கீழ் நியமிக்கப்பட்ட பெறுநர் ஒருவர், அவர் எவ்வாளினால் நியமிக்கப்பட்டாரோ அவ்வாளுக்கு பதவியிலிருந்து தான் விலகப் போவது பற்றிய தமது முன்னத்தை ஐந்து வேலைநாட்களுக்குக் குறையாத எழுத்திலான அறிவித்தல் கொடுப்பதன்மூலம் பதவியிலிருந்து விலகலாம்.

(3) பதவி விலகல் தவிர்ந்த வேறு ஏதேனும் காரணத்துக்காக பெறுநரின் பதவியில் வெற்றிடமொன்று ஏற்பட்டால், அப்பதவியை வறிதாக்குகின்ற ஆளினால் பதிவாளருக்கு அவ்வெற்றிடம் பற்றிய எழுத்திலான அறிவித்தல் உடனடியாகக் கொடுக்கப்படுதல் வேண்டும் அல்லது அவ்வாளினால் செயற்பட இயலாமலிருந்தால் அவ்வறிவித்தல் அவருடைய சட்டப் பிரதிநிதியால் கொடுக்கப்படுதல் வேண்டும்.

(4) நீதிமன்றத்தால் நியமிக்கப்படும் பெறுநர் ஒருவர் நீதிமன்றத்தின் முன் அனுமதி இல்லாமல் பதவியிலிருந்து விலகுதலாகாது.

(5) பெறுநர் பதவியை வறிதாக்குகின்ற ஆள் ஒருவர், இயலுமானவிடத்து, பொறுப்பாண்மையை நடாத்துகையில், அவரை அடுத்து வருபவர் நியாயமாகத் தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய தகவலையும், அத்தகைய உதவியையும் அவருக்கு வழங்குதல் வேண்டும்.

(6) பெறுநர் பதவியில் உள்ள வெற்றிடமொன்றை நிரப்புவதற்காக நியமிக்கப்பட்ட ஆளொருவர் விண்ணப்பம் செய்ததன் மேல், நீதிமன்றம் , பெறுநரின் கடமைகளைப் புரிவதற்கு வசதி செய்வதற்கு அவசியமானதென அல்லது விரும்பத்தக்கதென அது கருதுகின்ற வேறு ஏதேனும் கட்டளையை ஆக்கலாம்.

(7) நியாயமான காரணமின்றி (3) ஆம் உட்பிரிவின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற ஆள் ஒவ்வொருவரும், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டதன்மேல், ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்துக்கு ஆளாதலும் வேண்டும்.

## பெறுநர்களின் தத்துவங்கள்

**443.** (1) பெறுநர் ஒருவர், எச்சாதனத்தினால் அல்லது சாதனத்தின் கீழ் அல்லது நீதிமன்றத்தின் எக்கட்டளையினால் அல்லது கட்டளையின்கீழ் நியமனம் செய்யப்பட்டாரோ அச் சாதனத்தினால் அல்லது சாதனத்தின்கீழ் அல்லது நீதிமன்றத்தின் கட்டளையினால் அல்லது கட்டளையின்கீழ் வெளிப்படையாகவோ அல்லது உட்கிடையாகவோ அளிக்கப்பட்ட தத்துவங்களையும், அதிகாரங்களையும் கொண்டிருத்தல் வேண்டும். பெறுநர்களின் தத்துவங்கள்.

(2) எச்சாதனத்தினால் அல்லது சாதனத்தின்கீழ் அல்லது நீதிமன்றக் கட்டளையினால் அல்லது கட்டளையின்கீழ் நியமனம் செய்யப்பட்டதோ அச்சாதனத்துக்கு அல்லது கட்டளைக்கு அமைய, பெறுநர் ஒருவர், இதற்கான பன்னிரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டிருக்கலாம் என்பதுடன் அவற்றைப் பிரயோகிக்கலாம்.

பெறுநர் களிடையேயுள்ள முன்னுரிமை.

**444.** (1) கம்பெனியின் எல்லா ஆதனத்தின்மீதும் அல்லது அதன் ஏதேனும் பாகத்தின்மீது இரண்டு அல்லது அதற்கு மேற் பட்ட மிதக்கும் தாக்கீடுகள் இருந்துவருகின்றவிடத்து, அத்தகைய ஒவ்வொரு மிதக்கும் தாக்கீட்டின் பயனைக்கொண்டும் இச்சட் டத்தின் இப்பாகத்தின்கீழ் பெறுநர் ஒருவர் நியமிக்கப்படலாம். எந்த வேறு ஏதேனும் மிதக்கும் தாக்கீட்டின் பயனாக பெறுநர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கின்றாரோ அந்த வேறு ஏதேனும் மிதக்கும் தாக்கீடு மீது முன்னுரிமை கொண்டுள்ள மிதக்கும் தாக் கீடொன்றை வைத்திருப்பவரால் செய்யப்பட்ட விண்ணப்பத்தி னால் அல்லது அவரால் செய்யப்பட்ட விண்ணப்பத்தின்மேல் நியமிக்கப்பட்ட பெறுநர் ஒருவருக்கு, வேறு எவரேனும் பெறுநர் புறநீங்கலாக, இச்சட்டத்தினால் பெறுநர் ஒருவருக்கு அளிக் கப்படும் தத்துவங் கள் இருத்தல் வேண்டும்.

(2) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மிதக்கும் தாக்கீடுகள் ஒன்றுடன் மற்றொன்று சமமாக இருக்கின்றவிடத்தும் அத்துடன், அத்தகைய தாக்கீடுகளின் பயனைக்கொண்டு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பெறுநர்கள் நியமிக்கப்பட்டிருக்குமிடத்தும், அவ்வாறு நியமிக்கப்பட்ட பெறுநர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார் கள் எனக் கருதப்படுதல் வேண்டும், அத்துடன், நியமனச் சாதனம் அல்லது நியமனத்தின் அவ்வச்சாதனங்கள் வேறுவகையில் ஏற்பாடு செய்தாலொழிய, கூட்டாகச் செயற்படுதல் வேண்டும்.

(3) நாலாம் உட்பிரிவுக்கு அமைய, மிதக்கும் தாக்கீடொன்றை வைத்திருப்பவரால் செய்யப்பட்ட விண்ணப்பத்தினால் அல்லது விண்ணப்பத்தின் மீது நியமிக்கப்பட்ட பெறுநர் ஒருவரின் தத்து வங்கள், அத்தாக்கீடுமீது முன்னுரிமை கொண்டுள்ள மிதக்கும் தாக்கீடொன்றை வைத்திருப்பவரால் செய்யப்படும் விண்ணப்பத் தினால் அல்லது விண்ணப்பத்தின்மேல், இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்டுள்ள பெறுநர் இச்சட்டத்தின்கீழ் தமது தத்துவங் களைப் பிரயோகிப்பதை இயலச் செய்வதற்கு அவசியமாகக்கூடிய வாறான அத்தகைய அளவுக்கும், பெறுநர் இருவரின் நியமனத் தேதியிலிருந்தும் இடைநிறுத்தம் செய்யப்படுதல் வேண்டும். அவ்வாறு இடைநிறுத்தம் செய்யப்பட்ட தத்துவங்கள் எவையும், முந்திய மிதக்கும் தாக்கீடு, தாக்கீட்டுக்கு அமைவாகவுள்ள ஆதன நடுக்கட்டல்மீது இல்லாதொழியும்போது அல்லது முந்திய மிதக்கும் தாக்கீட்டின்கீழ் செய்யப்பட்ட பெறுநர் ஒருவரின் நியமன மானது, அவ்வாதனம் தொடர்பில் இல்லாதொழியும்போது, இவற்றில் எது முதலில் நிகழ்கின்றதோ, அப்போது மீண்டும் பயனுக்கு வருதல் வேண்டும்.

*(4)* மூன்றாம் உட்பிரிவின்கீழ் பெறுநர் ஒருவரின் தத்துவங்களை இடைநிறுத்தம் செய்தலானது, பெறுநராக அவர் தமது பணியைப் புரிகையில் அவரினால் உறப்பட்டிருக்கக்கூடிய எவையேனும் செலவுகள், இறுப்பனவுகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பில், அவரை அடுத்துவரும் பெறுநரிடமிருந்து வலிதுடையதான நட்டோத்தரவாதம் ஒன்று பெற்றுக்கொள்ளும்வரை (அவர் அத்தாக்கீட்டுக்கு அமைவாக உள்ள ஆதனத்தின் அத்தகைய பாகத்தின் பெறுமதியின் மட்டுப்பாட்டுக்கு அமைய), தமது கட்டுப்பாட்டிலிருந்து கம்பெனியின் ஆதனத்தின் ஏதேனும் பாகத்தை (கடிதங்கள் அல்லது ஆவணங்கள் எவையும் உட்பட) விடுவிப்பதற்கு அவரைத் தேவைப்படுத்துகின்ற பயனைக் கொண்டிருத்தலாகாது.

*(5)* இப்பிரிவின்கீழ் பெறுநர் ஒருவரின் தத்துவங்களை இடைநிறுத்தம் செய்தலானது, அவர் எம்மிதக்கும் தாக்கீட்டின் பயனைக் கொண்டு நியமிக்கப்பட்டாரோ, அம்மிதக்கும் தாக்கீடு, அவர் நியமிக்கப்பட்ட ஆதனம் தொடர்பில் நடுக்கட்டப்படாதொழியச் செய்தல் ஆகாது.

*(6)* இப்பிரிவிலுள்ள எதுவும், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மிதக்கும் தாக்கீடுகளின் பயனைக்கொண்டு ஒரே பெறுநர் நியமிக்கப்படுவதைத் தடைசெய்தலாகாது.

*பங்குகள் மீதான அழைப்புகள் விடுப்பதற்கான தத்துவம்.*

**445.** *(1)* பெறுநர் எச்சாதனத்தினால் அல்லது எச்சாதனத்தின் கீழ் நியமிக்கப்பட்டாரோ அச்சாதனத்தின்கீழ் பொறுப்பிக்கப்பட்ட அழைக்கப்படா மூலதனம் தொடர்பில் கம்பெனியின் பங்குதாரர்களுக்கு அழைப்புகள் விடுப்பதற்கும், அழைப்புகள்மீது வட்டி விதிப்பதற்கும் அத்துடன் அழைப்புகளுக்கான கொடுப்பனவை வலுவுறுத்துவதற்கும், பெறுநர் ஒருவர் கம்பெனியொன்றின் சபைக்கு உள்ளதுபோன்ற அதே தத்துவங்களைக் கொண்டவராக விருத்தல் வேண்டும், அல்லது கம்பெனியானது ஒடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றதாயின், அது ஒடுக்கப்பட்டுக் கொண்டிருக்காவிடில் சபைக்கு இருந்திருக்கக்கூடியவாறான அதே தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*(2)* ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக “அழைக்கப்படா மூலதனம்” என்னும் சொல்லமைப்பானது, பங்குகள் வழங்குதல் தொடர்பில் அல்லது கம்பெனியின் அமைப்பு அகவிதிகளின்கீழ் செலுத்தப்படற்பாலதான தொகை எதனையும் உள்ளடக்கும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் அழைப்பொன்றைச் செய்வது அல்லது தத்துவமொன்றைப் பிரயோகிப்பது, பாதிக்கப்பட்ட கம்பெனியினதும், கம்பெனியினதும் பங்குதாரர்களுக்கிடையே கம்பெனியின் பணிப்பாளர்களால் செய்யப்பட்ட முறையான அழைப்பொன்றாக அல்லது பிரயோகிக்கப்பட்ட தத்துவமொன்றாகக் கருதப்படல் வேண்டும்.

ஆவணங்களை நிறைவேற்றுதல்.

**446.** (1) பெறுநர் ஒருவர் கம்பெனியின் பெயரிலும் கம்பெனியின் சார்பிலும் பெறுநரின் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு அவசியமான அல்லது அப்பிரயோகித்தலின் இடைநேர்விளைவான எல்லா ஆவணங்களையும் நிறைவேற்றலாம்.

(2) பெறுநர் ஒருவரினால் கம்பெனி ஒன்றின் சார்பில் ஒப்பமிடப்பட்ட ஆவணமொன்று, 19 ஆம் பிரிவின் நோக்கங்களுக்காக கம்பெனியின் சார்பில் ஒப்பமிடப்பட்டு இருக்கின்றதெனக் கருதப்படுதல் வேண்டும்.

(3) வேறு ஏதேனும் சட்டத்தில் அல்லது கம்பெனி ஒன்றின் அமைப்பகவிதிகளில் முரணாகவுள்ளது எது எப்படியிருப் பினும், எச்சாதனத்தின்கீழ் பெறுநர் நியமிக்கப்பட்டாரோ, அச்சாதனமானது, அந்நோக்கத்துக்கென ஆவணங்களை நிறைவேற்றுவதற்கும் கம்பெனியின் பொது இலச்சினையைப் பயன்படுத்துவதற்கும் அப்பெறுநருக்குத் தத்துவமளிக்கின்றவிடத்து, ஆவணங்களுக்கு கம்பெனியின் பொது இலச்சினையைப் பொறிப்பதன்மூலமும் பொது இலச்சினை பொறிக்கப்பட்டதை அத்தாட்சிப்படுத்துவதன் மூலமும், கம்பெனியின் பேரிலும், கம்பெனியின் சார்பிலும் பெறுநர் ஆவணங்களை நிறைவேற்றலாம்.

(4) மூன்றாம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு நிறைவேற்றப்பட்ட ஆவணம் எதுவும், கம்பெனியினால் சரியாக நிறைவேற்றப்பட்டுள்ளதெனக் கருதப்படுதல் வேண்டும்.

கம்பெனியினதும், பணிப் பாளர்களினதும் கடப்பாடுகள்.

**447.** (1) கம்பெனியொன்றின் முழு ஆதனம் தொடர்பிலும் அல்லது அவ்வாதனத்தின் ஏதேனும் பாகம் தொடர்பில் பெறுநர் ஒருவர் நியமிக்கப்படுகின்றவிடத்து, கம்பெனியும், கம்பெனியின் பணிப்பாளர் ஒவ்வொருவருவரும் —

*(அ)* கம்பெனியின் உடைமையில் அல்லது கம்பெனியின் கட்டுப்பாட்டின்கீழ் பெறுநராண்மையிலுள்ள ஆதனம் தொடர்பிலான எல்லாப் புத்தகங்களையும், ஆவணங் களையும், அத்துடன் தகவலையும் பெறுநருக்குக் கிடைக்கக்கூடியதாகச் செய்தல் வேண்டும் ;

*(ஆ)* பெறுநரால் அவ்வாறு செய்யவேண்டுமென தேவைப் படுத்தப்பட்டால், புத்தகங்கள், ஆவணங்கள் மற்றும் தகவல் பூரணமானவை எனவும் சரியானவை எனவும் சத்தியக்கடதாசி மூலம் உறுதி செய்தல் வேண்டும் ;

*(இ)* பெறுநர், நியாயமாகத் தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய உதவியை வழங்குதல் வேண்டும் ;

*(ஈ)* கம்பெனிக்கு பொது இலச்சினை ஒன்றிருந்தால், அது பெறுநரால் பயன்படுத்தப்படுவதற்கு அதை அவருக் குக் கிடைக்கக்கூடியதாகச் செய்தல் வேண்டும்.

(2) பெறுநர் விண்ணப்பம் செய்ததன்மேல், நீதிமன்றம் ஓராம் உட்பிரிவின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்கு கம்பெனியை அல்லது கம்பெனியின் பணிப்பாளர் ஒருவரைத் தேவைப்படுத்துகின்ற கட்டளையொன்றை ஆக்கலாம்.

பெறுநர்களினது செயல்களின் வலிதுடைமை.

**448.** (1) இரண்டாம் உட்பிரிவுக்கு அமைய, பெறுநர் வலிது டையவாறு நியமிக்கப்படவில்லை அல்லது பெறுநர் ஒருவராக செயற்படுவதிலிருந்து தகைமை இழப்பிக்கப்பட்டார் அல்லது செயலைச் செய்வதற்கு அவருக்கு அதிகாரமளிக்கப்படவில்லை என்ற காரணத்தினால் மட்டுமே பெறுநர் ஒருவரின் செயல், செல்லுபடியற்றது எனக் கருதப்படுதலாகாது.

(2) பெறுநர் ஒருவரால் செய்துகொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல் எதுவும், பெறுநருடன் தொடர்பு கொண்டுள்ள ஆள், பெறுநருடன் அல்லது பெறுநர் எவ்வாளினால் நியமிக்கப் பட்டாரோ அவ்வாளுடன் அவருக்குள்ள தொடர்பு காரணமாக, பெறுநர் வலிதுடைய முறையில் நியமிக்கப்படவில்லை அல்லது அக்கொடுக்கல் வாங்கலைச் செய்துகொள்வதற்கு அவருக்கு

அதிகாரம் இருக்கவில்லையென அறிந்திருந்தாலொழிய அல்லது அறிந்திருக்க வேண்டுமென இருந்தாலொழிய, பெறுநர் வலிதுடைய முறையில் நியமிக்கப்படவில்லை அல்லது அக்கொடுக்கல் வாங்கலைச் செய்வதற்கு அவருக்கு அதிகாரம் அளிக்கப்படவில்லை என்ற காரணத்தினால் மட்டுமே செல்லுபடியற்றதாகக் கருதப்படுதலாகாது.

ஆதன விற்பனைக்கு ஈடுபெறுபவரின் சம்மதம்.

**449.** (1) பெறுநராண்மையிலுள்ள ஆதனத்தின் விற்பனைக்கு ஈடுபெறுபவர் ஒருவரின் சம்மதம் தேவைப்படுகின்றவிடத்தும், அச்சம்மதத்தைப் பெறுநரால் பெற்றுக்கொள்ள இயலாமிருக்கின்றவிடத்தும், பெறுநர் ஒன்றில் தனியாக அவ்வாதனத்தை மட்டுமே அல்லது வேறு சொத்துக்களுடனும் சேர்த்து அவ்வாதனத்தின் விற்பனைக்கு அதிகாரமளிக்கின்ற கட்டளையொன்றுக்காக விண்ணப்பிக்கலாம்.

(2) நீதிமன்றம், இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் விண்ணப்பம் ஒன்று செய்யப்பட்டதன்மேல் —

(அ) ஈடுபெற்றவரின் சம்மதத்தைப் பெறுவதற்கு பெறுநர் நியாயமான முயற்சிகள் எடுத்திருக்கின்றார் என ; அத்துடன்

(ஆ) விற்பனையானது —

(i) கொடையாளியின் அத்துடன் கொடையாளியின் கடன் தருநர்களின் அக்கறைக்கு நல்லதென ; அத்துடன்

(ii) ஈடுபெறுபவரின் அக்கறைகளுக்குப் பொருளளவில் பங்கம் விளைவிக்காது என,

திருப்திப்பட்டால், பெறுநரால் ஆதனம் விற்கப்படுவதற்கு அதிகாரமளிக்கின்றதும் பொருத்தமானதும் என அது கருதுகின்றவாறான அத்தகைய கட்டளையை ஆக்கலாம்.

(3) இப்பிரிவின்கீழான கட்டளை ஒன்று, பொருத்தமானதென நீதிமன்றம் கருதக்கூடியவாறான அத்தகைய நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய ஆக்கப்படலாம்.

## பெறுநர்களின் கடமைகள்

*பெறுநர்களின் பொதுவான கடமைகள்.*

**450.** (1) பெறுநர் ஒருவர், தமது தத்துவங்களை நல்லெண்ணத்துடன் பிரயோகித்தல் வேண்டும்.

(2) பெறுநர் ஒருவர், அவர் எவ்வாளின் நலன்களுக்காக நியமிக்கப்பட்டாரோ அவ்வாளின் நலன்களுக்கு நல்லதென நியாயமான ஏதுக்களின் மீது அவர் நம்புகின்றமுறையில் அவரது தத்துவங்களைப் பிரயோகித்தல் வேண்டும்.

(3) ஓராம் மற்றும் (2) ஆம் உட்பிரிவுகளில் உள்ள ஏற்பாடுகளுக்குப் பங்கமின்றி, பெறுநர் ஒருவர் பின்வருவோரின் அக்கறைகளை நியாயமான அளவில் கருத்தில் கொண்டு தமது தத்துவங்களைப் பிரயோகித்தல் வேண்டும் :—

(அ) கொடையாளி ;

(ஆ) பெறுநராண்மையிலுள்ள ஆதனத்திலுள்ள அக்கறைகளுக்கு கொடையாளிக்கூடாக உரிமை கோரும் ஆட்கள் ;

(இ) கொடையாளியின் பிணைப்பொறுப்பில்லாத கடன்தருநர்கள் ; அத்துடன்

(ஈ) கொடையாளியின் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு அழைக்கப்படக்கூடிய பிணைகாரர்கள்.

(4) சாதனம் ஒன்றின்கீழ் நியமிக்கப்பட்ட பெறுநர் ஒருவர், அவர் எவ்வாளின் அக்கறைகளுக்காக நியமிக்கப்பட்டாரோ அவ்வாளினால் விடுக்கப்படும் எவையேனும் பணிப்புகளுக்கு இணங்கச் செயற்படுகின்றவிடத்து அல்லது செயற்படாதிருக்கின்றவிடத்து, பெறுநர், (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள கடமையை மீறிவிட்டாரெனக் கருதப்படுதலாகாது. ஆனால் (1) ஆம் உட்பிரிவில் அல்லது (3) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள கடமையை மீறிய எதற்கும் ஆளானவராக இருத்தல் வேண்டும்.

(5) இப்பிரிவிலுள்ள எதுவும் 451 ஆம் பிரிவு ஏற்புடையதாதலை மட்டுப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

ஆதனத்தை விற்கும் பெறுநரின் கடமை.

**451.** பெறுநராண்மையிலுள்ள ஆதனத்தை விற்பனை செய்வதற்கான தத்துவம் ஒன்றைப் பிரயோகிக்கின்ற பெறுநர் ஒருவர், விற்பனையின் நேரத்தில் நியாயமான அளவு பெற்றுக்கொள்ளப்படக்கூடியதான அதிகூடிய விலையை கொடையாளிக்கும் பெற்றுக் கொடுக்கவேண்டிய கடமை ஒன்று உடையவராவார்.

பாதுகாப்போ அல்லது நட்டோத்தர வாதமோ கிடையாது.

**452.** வேறு ஏதேனும் சட்டத்தில் அல்லது எச்சாதனத்தின் மூலம் அல்லது எச்சாதனத்தின்கீழ் பெறுநர் ஒருவர் நியமிக்கப்பட்டாரோ, அச்சாதனத்தில் உள்ள எதற்கும் முரணாகவுள்ளது எது எப்படியிருப்பினும் —

(அ) பெறுநர் கொடையாளியின் முகவராக அல்லது அவரிடமிருந்து பெற்ற அற்றோனித் தத்துவத்தின்கீழ் செயலாற்றினார் என்பது, 451 ஆம் பிரிவினால் சுமத்தப்பட்ட கடமையை மீறியதற்காக பெறுநர் ஒருவருக்கு எதிரான வழக்கு நடவடிக்கைகளில் பாதுகாப்பொன்றாக இருத்தலாகாது ;

(ஆ) பெறுநர் ஒருவர், 451 ஆம் பிரிவினால் சுமத்தப்பட்ட கடமையை மீறியதனால் பெறுநருக்கு வந்துறுகின்ற ஏதேனும் பொறுப்பு தொடர்பில், பெறுநராண்மையிலுள்ள ஆதனத்திலிருந்து அல்லது கொடையாளியிடமிருந்து நட்டஈடு அல்லது நட்டோத்தரவாதம் பெறுவதற்கு உரித்துடையவராதலாகாது.

பணம் தொடர்பிலான கடமை.

**453.** பெறுநர் ஒருவர், பெறுநராண்மையிலுள்ள ஆதனம் தொடர்பிலான பணத்தை, பெறுநராண்மையின்போது ஆனால் பெறுநராண்மையுடன் தொடர்பில்லாமல் பெறப்பட்ட வேறு பணத்திலிருந்தும் அத்துடன் பெறுநரினால் வைத்திருக்கப்படும் அல்லது பெறுநரின் கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருக்கப்படும் வேறு பணத்திலிருந்தும் தனிவேறாக வைத்திருத்தல் வேண்டும்.

கணக்கீட்டுப் பதிவுகள்.

**454.** (1) பெறுநர் ஒருவர் பெறுநராண்மையிலுள்ள ஆதனம் தொடர்பிலான எல்லாப் பற்றுச்சீட்டுகளையும் செலவினத்தையும் அத்துடன் வேறு கொடுக்கல் வாங்கல்களையும் சரியாகப் பதிவு செய்து விளக்கமளிக்கின்ற கணக்கீட்டுப் பதிவேடுகளை எல்லா நேரங்களிலும் வைத்திருத்தல் வேண்டும்.

(2) கணக்கீட்டுப் பதிவேடுகள், பெறுநராண்மை முடிவடைந்த பின்னர் ஐந்து ஆண்டுகளுக்குக் குறையாத காலப்பகுதியொன்றுக்கு பெறுநரினால் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

**பெறுநர்களின் அறிக்கைகள்**

**455.** (1) பெறுநர் ஒருவர், அவர் நியமிக்கப்பட்டதன் பின்னர் இரண்டு மாதங்களுக்குப் பிந்தாமல், பின்வருவன உட்பட, பெறுநராண்மையிலுள்ள ஆதனம் தொடர்பிலான நிலைமை பற்றிய அறிக்கையொன்றைத் தயாரித்தல் வேண்டும் :—

பெறுநரால் செய்யப்படும் முதலாவது அறிக்கை.

(அ) பெறுநராண்மையிலுள்ள ஆதனம் உட்பட இருப்புச் சொத்துக்கள் பற்றிய விபரங்கள் ;

(ஆ) பெறுநராண்மையிலுள்ள ஆதனத்திலிருந்து திருப்திப் படுத்தப்படவேண்டிய தனிசுகள் மற்றும் பொறுப்புகள் பற்றிய விவரங்கள் ;

(இ) பெறுநராண்மையிலுள்ள ஆதனத்தில் அக்கறை யொன்று கொண்டுள்ள கடன்தருநர்களின் பெயர் களும் முகவரிகளும் ;

(ஈ) கடன்தருநரால் வைத்திருக்கப்படும் பெறுநராண்மை யிலுள்ள ஆதனத்தின் மீதான ஏதேனும் பாரபந்தம் பற்றிய, அது எத்தேதியன்று உருவாக்கப்பட்டதோ அத் தேதி உட்பட, விபரங்கள் ;

(உ) இயைபான தகவல் கிடைக்கக்கூடியதாகச் செய்வதில் கொடையாளியினால் புரியப்பட்ட ஏதேனும் தவறுகை பற்றிய விபரங்கள் ; அத்துடன்

(ஊ) விதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு தகவல்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள அறிக்கை, பின்வரும் விபரங்களையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும் :—

(அ) பெறுநருக்குச் சம்பவங்கள் பற்றித் தெரிவிக்கின்ற அளவுவரை, அவரின் நியமனத்துக்கு இட்டுச் செல்லும் சம்பவங்கள் ;

(ஆ) கையுதிர்க்கப்பட்ட ஆதனம் அத்துடன் பெறுநராண்மையிலுள்ள ஆதனத்தைக் கையுதிர்ப்பதற்கான பிரேரணைகள் ;

(இ) எவ்வாளின் அக்கறைகள் கருதிப் பெறுநர் நியமிக்கப்பட்டாரோ, அவ்வாளின் நியமனத் தேதியன்று உள்ளவாறாக அவருக்குப் போமதியான தொகைகள் ;

(ஈ) முன்னுரிமையுள்ள உரிமைக் கோரிக்கைகளைக் கொண்டுள்ள கொடையாளியின் கடன்தருநர்களுக்கு, நியமனத் தேதியன்று உள்ளவாறாக, போமதியான தொகைகள் ; அத்துடன்

(உ) பந்தி (இ) இல் அல்லது (ஈ) இல் குறிப்பீடு செய்யப்பட்டிருப்பவர்கள் தவிர்ந்த, வேறு கடன்தருநர்களுக்குக் கொடுப்பனவுக்காகக் கிடைக்கக்கூடியனவாக இருக்கக் கூடிய தொகைகள்.

(3) பெறுநராண்மையிலுள்ள ஆதனத்தைக் கையுதிர்ப்பதற்கான எவையேனும் பிரேரணைகள் பற்றிய விபரங்களை, அறிக்கையில் உள்ளடக்குவது, தமது பணிகளைப் பிரயோகிப்பதற்கு முக்கிய பாதிப்பை ஏற்படுத்தும் எனப் பெறுநர் ஒருவர் கருதினால், அவர், அப்பிரேரணைகள் பற்றிய விபரங்களை அறிக்கையிலிருந்து விட்டுவிடலாம்.

(4) இப்பிரிவுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற பெறுநர் ஒருவர், தவறு ஒன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாத ஒரு குற்றப்பணத்துக்கு ஆளாதலும் வேண்டும்.

*பெறுநரினாற் செய்யப்படும் மேலதிக அறிக்கைகள்.*

**456.** (1) விடயத்துக்கேற்றவாறு, பெறுநர் ஒருவர் அல்லது பெறுநராண்மையின் முடிவில் பெறுநர் ஒருவராக இருந்த ஆள் ஒருவர் —

(அ) பெறுநராக அவர் நியமிக்கப்பட்ட பின்னர் ஒவ்வோர் ஆறுமாதகாலப்பகுதி முடிந்த பின்னர் ; அத்துடன்

(ஆ) எத்தேதியன்று பெறுநராண்மை முடிவடைகின்றதோ, அத்தேதிக்குப் பின்னர்,

இரண்டு மாதங்களுக்குப் பிந்தாமல், அத்தேதிகளில் உள்ளவாறாக பெறுநராண்மையிலிருந்த ஆதனம் தொடர்பிலான விவகாரங் களின் நிலைபற்றிச் சுருக்கமாகக் கூறுகின்றதும் அத்துடன், அறிக்கை எக்காலப்பகுதி தொடர்பானதோ, அக்காலப் பகுதியின் போது பெறப்பட்ட அத்துடன் செலுத்தப்பட்ட எல்லாத் தொகை களும் உட்பட பெறுநராண்மை கொண்டு நடாத்தப்பட்டது பற்றிச் சுருக்கமாகக் கூறுகின்றதுமான, மேலதிக அறிக்கை ஒன்றைத் தயாரித்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள அறிக்கை, பின்வரும் விபரங்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும் :—

(அ) ஏதேனும் முந்திய அறிக்கை தயாரிக்கப்பட்ட தேதி யிலிருந்து கையுதிர்க்கப்பட்ட ஆதனம் அத்துடன் பெறு நராண்மையிலுள்ள ஆதனத்தைக் கையுதிர்ப்பதற்கான எவையேனும் பிரேரணைகள் ;

(ஆ) எவ்வாளின் அக்கறைகளின் பேரில் பெறுநர் நியமிக்கப்பட்டாரோ, அவ்வாளுக்கு அறிக்கை தயாரிக் கப்பட்ட தேதியன்று, உள்ளவாறாகப் போமதியான தொகைகள் ;

(இ) முன்னுரிமையுள்ள உரிமைக்கோரிக்கைகள் கொண்ட கொடையாளியின் கடன்தருநர்களுக்கு அறிக்கை தயாரிக்கப்பட்ட தேதியன்று உள்ளவாறாகப் போமதி யான தொகைகள் ; அத்துடன்

(ஈ) பந்தி (ஆ) இல் அல்லது பந்தி (இ) இல் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள கடன்தருநர்கள் தவிர்ந்த வேறு கடன்தருநர்களுக்கு கொடுப்பனவுக்காக அறிக்கை தயாரிக்கப்பட்ட தேதியன்று உள்ளவாறாகக் கிடைக்கக்கூடியனவாக இருக்கக்கூடிய தொகைகள்.

(3) பெறுநர் ஒருவர், (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்திக்கு இணங்கத் தயாரிக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட அறிக்கையிலிருந்து, பெறுநராண்மையிலுள்ள ஏதேனும் ஆதனம் கையுதிர்க்கப்படுவதற்கான எவையேனும் பிரேரணைகள் பற்றிய விபரங்களை, அவற்றை உள்ளடக்குவது, அவரது பணிகள் பிரயோகிப்பதற்கு முக்கிய பாதிப்பை உண்டாக்கும் என அவர் கருதினால் விட்டுவிடலாம்.

(4) இப்பிரிவின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற ஆள் ஒவ்வொருவரும், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாத ஒரு குற்றப்பணத்துக்கு ஆளாதலும் வேண்டும்.

*அறிக்கைகள் தயாரிப்பதற்கான கால நீடிப்பு.*

**457.** எக்காலப்பகுதியொன்றுக்குள் 455 ஆம் பிரிவின்கீழ் அல்லது 456 ஆம் பிரிவின்கீழ் அறிக்கையொன்றைத் தயாரிப்பதற்கு ஆளொருவர் தேவைப்படுத்தப்படுகின்றாரோ, அக்காலப் பகுதியானது, அவ்வாளினால், விண்ணப்பம் செய்யப்பட்டதன் மேல் —

(அ) அவ்வாள் எந்நீதிமன்றத்தினால் பெறுநர் ஒருவராக நியமிக்கப்பட்டாரோ, அந்நீதிமன்றத்தினால் ;

(ஆ) அவ்வாள் சாதனமொன்றினால் அல்லது சாதனமொன்றின் கீழ் பெறுநர் ஒருவராக நியமிக்கப்பட்டிருக்கின்றவிடத்து, பதிவாளரினால்,

நீடிக்கப்படலாம்.

*அறிக்கைகளைப் பெறுவதற்கு உரித்துடைய ஆட்கள்.*

**458.** (1) பிரிவு 455 இன் கீழ் அல்லது பிரிவு 456 இன் கீழ் தயாரிக்கப்பட்ட அறிக்கை ஒவ்வொன்றினதும் பிரதியொன்று, அதைத் தயாரிப்பதற்குத் தேவைப்படுத்தப்பட்ட ஆளினால் —

(அ) கொடையாளிக்கு ; அத்துடன்

(ஆ) எவ்வாளின் அக்கறைகளுக்காகப் பெறுநர் நியமிக்கப் பட்டாரோ, அவ்வாள் ஒவ்வொருவருக்கும்,

அனுப்பப்படுதல் வேண்டும்.

(2) நீதிமன்றத்தினால் பெறுநர் ஒருவராக நியமிக்கப்பட்ட ஆளொருவர், 455 ஆம் அல்லது 456 ஆம் பிரிவின்கீழ் தயாரிக் கப்பட்ட அறிக்கை ஒவ்வொன்றினதும் பிரதியொன்றை, நீதிமன் றத்தின் அலுவலகத்தில் கோப்பிடுதல் வேண்டும்.

(3) பிரிவு 455 அல்லது 456 இன் கீழ் தயாரிக்கப்பட்ட ஏதேனும் அறிக்கையின் பிரதியொன்றுக்கான எழுத்திலான வேண்டுகோள் ஒன்றை —

(அ) கடன்தருநர் ஒருவரிடமிருந்து, பணிப்பாளர் ஒருவரிட மிருந்து அல்லது கொடையாளியின் பிணைகாரரிட மிருந்து ; அல்லது

(ஆ) பெறுநராண்மையிலுள்ள ஏதேனும் ஆதனத்தின் அக்கறையொன்றைக்கொண்டிருக்கும் வேறு எவரே னும் ஆளிடமிருந்து,

பெற்றுக்கொண்ட பின்னர், பதினைந்து வேலை நாட்களுக்குப் பிந்தாமல் அத்துடன் பிரதியைத் தயாரிப்பதற்கான அத்துடன் அனுப்புவதற்கான நியாயமான செலவுகள் செலுத்தப்பட்டதன் மேல், அறிக்கையைத் தயாரித்த ஆள் அறிக்கைக்கு வேண்டுகோள் விடுத்த ஆளுக்கு அறிக்கையின் பிரதியொன்றை அனுப்பிவைத்தல் வேண்டும்.

(4) பிரிவு 455 என்பதன் அல்லது 456 என்பதன்கீழ் அறிக்கை யொன்றைத் தயாரித்த பின்னர் பத்து வேலை நாட்களுக்குள், அறிக்கையைத் தயாரித்த ஆள், அவ்வறிக்கையின் பிரதியொன் றைப் பதிவாளருக்கு அனுப்பிவைத்தல் வேண்டும் அல்லது பதிவாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

(5) இப்பிரிவின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற ஆள் ஒவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்துக்கு ஆளாதலும் வேண்டும்.

*அறிக்கைகளைப் பார்வை யிடுவதற்கு உரித்துடைய ஆட்கள்.*

**459.** நானூற்று ஐம்பத்தெட்டாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க, எவ்வாளுக்கு அறிக்கையொன்று அனுப்பப்படுதல் வேண்டுமோ, அவ்வாள், எவ்வாள் அவ்வறிக்கையை அனுப்புவதற்குத் தேவைப்படுத்தப்பட்டாரோ, அவ்வாளின் அலுவலகத்தில் வழமையான அலுவலக நேரங்களில் அறிக்கையைப் பார்வையிடுவதற்கு உரித்துடையவராவார்.

*இச்சட்டத்தின் ஏற்பாடுகள் எவையும் மீறப்படுதல் பற்றி அறிவிப்பது கடமையாதல்.*

**460.** (1) இச்சட்டத்தின்கீழ் அல்லது 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின்கீழ் தவறொன்றை கம்பெனி அல்லது கம்பெனியின் எவரேனும் பணிப்பாளர் அல்லது அலுவலர் புரிந்திருக்கிறார் எனக் கருதுகின்ற கம்பெனியொன்றில் பெறுநர் ஒருவர், அந்நிகழ்வுபற்றிப் பதிவாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

(2) ஒராம் உட்பிரிவிலுள்ள எதுவும், அவ்வுட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள வகையைச் சேர்ந்த தவறெதுவும் புரியப்பட்டிருக்கின்றதோ என்பதுபற்றி புலன் விசாரணை செய்வதற்கான கடமை எதனையும் பெறுநர் ஒருவரின்மீது சுமத்துதல் ஆகாது.

(3) ஒராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற பெறுநர் ஒருவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்துக்கு ஆளாதலும் வேண்டும்.

*பெறுநராண்மை முடிவடைதல் பற்றிய அறிவித்தல்.*

**461.** (1) கம்பெனியொன்றின் பெறுநராண்மை இல்லாதொழிந்த பின்னர் பத்து வேலை நாட்களுக்குப் பிந்தாமல், பெறுநராண்மை முடிவடைந்தபோது பெறுநராக எவ்வாள் பதவி வகித்தாரோ, அவ்வாள், பதிவாளருக்கு பெறுநராண்மை இல்லாதொழிந்துவிட்டது என்பது பற்றிய நிகழ்வு பற்றி எழுத்திலான அறிவித்தலொன்றை அனுப்புதல் வேண்டும் அல்லது பதிவாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழு கத் தவறுகின்ற ஆள் ஒவ்வொருவரும், தவறொன்றுக்குக் குற்ற வாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத் துக்கு ஆளாதலும் வேண்டும்.

## கம்பெனியின் கடப்பாடுகளுக்காக ஆதனத்தையும் பொறுப்பையும் பிரயோகித்தல்

**462.** (1) இப்பிரிவின் ஏற்பாடுகள், மிதக்கும் தங்கீடொன்றை உருவாக்கிய சாதனமொன்றின்கீழ் நியமிக்கப்பட்ட பெறுநர் ஒருவருக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

*முன்னுரிமையுள்ள உரிமைக் கோரிக்கைகள்.*

(2) நானூற்று நாற்பத்தொன்பதாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கும், (3) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள எவரேனும் ஆட்களின் உரிமைகளுக்கும் அமைய, எப்பெறுநருக்கு இப்பிரிவு ஏற்புடைத்தாகுமோ, அப்பெறுநர் மிதக்கும் தாக்கீட்டினால் பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட தனிசைத் திருப்திப்படுத்துகையில் அல்லது திருப்திப்படுத்தும்முகமாக, அம்மிதக்கும் தாக்கீட்டின் பயனாகப் பெறுநர் நியமிக்கப்பட்டாரோ, அம்மிதக்கும் தாக்கீட்டின் கொடை பெறுநருக்குத் தம்மால் பெறப்பட்ட பணங்களைச் செலுத்துதல் வேண்டும்.

(3) பின்வரும் ஆட்கள், தாக்கீட்டின் கொடை பெறுநருக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு, அத்துடன் பின்வரும் முன்னுரிமை வரிசையில், மிதக்கும் தாக்கீடொன்றுக்கு அமைவாக இருக்கின்ற கம்பெனியொன்றின் ஆதனத்தில் இருந்தான கொடுப்பனவுக்கு உரித்துடையவர்களாதல் வேண்டும் :-

(அ) முதலாவதாக, மிதக்கும் தாக்கீட்டுக்கு முன்னரான வரிசைக்கிரமத்தில் இருக்கின்ற ஆதனத்தின் ஏதேனும் பாகத்தின்மீது ஏதேனும் நிலையான பிணைப் பொறுப்பை வைத்திருப்பவர் ;

(ஆ) இரண்டாவதாக, பெறுநர் அவரது செலவுகளுக்காகவும் ஊதியத்துக்காகவும், அத்துடன் கம்பெனியின் ஆதனத்திலிருந்து எந்நட்டோத்தரவாதத்தைப் பெறுவதற்கு அவர் உரித்துடையவராக இருக்கின்றாரோ, அந்நட்டோத்தரவாதம் ; அத்துடன்

(இ) மூன்றாவதாக, ஒன்பதாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள அளவுக்கு முன்னுரிமை வரிசைக் கிரமத்திலும் (முதலாம் பந்தி மற்றும் 7(ஆ) என்னும் பந்தி தவிர) முன்னுரிமையுள்ள உரிமைக்கோரிக்கைகளுக்கு உரித்துடைய ஆட்கள்.

(4) மூன்றாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க ஒன்பதாம் அட்டவணையின் ஏற்பாடுகள் ஏற்புடையதாக்கப்படுகையில் -

(அ) "ஒழிப்போன்" ஒருவருக்கான குறிப்பீடுகள், "பெறுநர்" ஒருவருக்கான குறிப்பீடுகளாக வாசிக்கப்படுதல் வேண்டும் ;

(ஆ) "ஒடுக்குதலுக்கான ஆரம்பம்" என்பதற்கான குறிப்பீடுகள், "பெறுநரின் நியமனத்துக்கான" குறிப்பீடுகளாக வாசிக்கப்படல் வேண்டும் ;

(இ) "கம்பெனியொன்று ஒடுக்கப்படவேண்டுமெனக் கட்டளை ஆக்கப்படல்" என்பதற்கான குறிப்பீடுகள் அல்லது "கம்பெனி ஒடுக்கப்படுதல்" என்பதற்கான குறிப்பீடுகள், கம்பெனி, பெறுநராண்மைக்கு உள்ளடக்கப்படுவது அல்லது பெறுநராண்மையில் இருக்கிறது என வாசிக்கப்படல் வேண்டும்.

ஒழிக்கப்பட்ட தன்மேல் பெறுநருக்குள்ள தத்துவங்கள்.

**463**. (1) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, பெறுநர் ஒருவர், நீதிமன்றம் வேறுவகையில் கட்டளை ஆக்கினாலொழிய ஒடுக்கப்பட்டுக்கொண்டிருக்கும் கம்பெனி ஒன்றின் ஆதனம் தொடர்பில், நியமிக்கப்படலாம் அல்லது பெறுநர் ஒருவராகத் தொடர்ந்து செயலாற்றலாம் ; அத்துடன் பெறுநர் ஒருவரின் எல்லாத் தத்துவங்களையும் பிரயோகிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள ஆதனம் தொடர்பில் பதவி வகிக்கின்ற பெறுநர் ஒருவர், நீதிமன்றத்தின் அங்கீகாரத்தின்பேரில் அல்லது ஒழிப்போனின் எழுத்திலான சம்மதத்துடன் மாத்திரமே, கொடையாளியின் முகவராகச் செயலாற்றலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவின் காரணமாக, கொடையாளியின் முகவராகச் செயற்பட இயலாத பெறுநர் ஒருவர், அந்த நிகழ்வின் காரணத்தினால் மட்டுமே, பெறுநர் எவ்வாளினால் அல்லது எவ்வாளின் அக்கறைகளுக்காக நியமிக்கப்பட்டாரோ, அவ்வாளின் முகவராக வரமாட்டார்.

(4) இரண்டாம் உட்பிரிவுக்கு இணங்க, கொடையாளியின் முகவராகச் செயற்படுகின்ற பெறுநர் ஒருவரின் செயல்கள்மூலம் கொடையாளி ஒருவரால் உறப்பட்ட தனிசு அல்லது பொறுப்பு ஒன்றானது, ஒழித்தலின் செலவுத்தொகையோ இறுப்பனவோ அல்லது செலவோ அல்ல.

பெறுநருக்குள்ள பொறுப்பு.

**464.** (1) இரண்டாம் மற்றும் (3) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய, பெறுநர் ஒருவர் -

(அ) பெறுநரின் தத்துவங்கள் எவற்றையும் பிரயோகிக்கையில் பெறுநரால் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தம் ஒன்றின்மீது ; அத்துடன்

(ஆ) பெறுநராண்மையிலுள்ள ஆதனம் தொடர்பில் அத்துடன் அவரது நியமனத்துக்கு முன்செய்யப்பட்ட ஒப்பந்தமொன்றின்கீழ் பெறுநராண்மைக் காலப் பகுதியின்போது வந்துசேரக்கூடிய வேதனங்கள் அல்லது சம்பளக்கொடுப்பனவுக்கு, நியமனத்தேதியின் பின்னர் பத்து வேலை நாட்களுக்குள் ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டது பற்றிய அறிவித்தல் சட்டப்படி கொடுக்கப்படாவிட்டால்,

தாமே பொறுப்பாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள ஒப்பந்தமொன்றின் நியதிகள், நீதிமன்றத்தினால் நியமிக்கப்பட்ட பெறுநர் ஒருவர் தவிர்ந்த வேறு பெறுநர் ஒருவரின் தனிப்பட்ட பொறுப்பை புறநீக்கம் செய்யலாம் அல்லது மட்டுப்படுத்தலாம்.

(3) பெறுநர் ஒருவர் விண்ணப்பம் செய்ததன்மேல், நீதிமன்றம், (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் எக்காலப் பகுதிக்குள் ஒப்பந்தமொன்று முடிவுறுத்தப்பட்டது பற்றிய அறிவித்தல் கொடுக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்டதோ, அக்காலப்பகுதியை நீடிக்கலாம், அத்துடன் அக்காலப்பகுதியை, நீதிமன்றம் தகுந்ததெனக் கருதக்கூடியவாறான அத்தகைய நியதி, நிபந்தனைகளின்மீது நீடிக்கலாம்.

(4) மூன்றாம் உட்பிரிவின்கீழ் செய்யப்படும் விண்ணப்பம் ஒவ்வொன்றும், குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள காலப்பகுதி முடிவுறுவதற்கு முன்னர் செய்யப்படுதல் வேண்டும்.

(5) ஏழாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, பெறுநராண்மையிலுள்ள ஆதனத்தைக் கொடையாளி பயன்படுத்துதல், உடைமையில் வைத்திருத்தல் அல்லது இருப்பாட்சிசெய்தல் தொடர்பிலான அவரது நியமனத் தேதியன்று இருந்துவருகின்றதான உடன்படிக்கையொன்றின்கீழ் போமதியாக வருகின்ற வாடகைக்கு மற்றும் வேறு எவையேனும் கொடுப்பனவுகளுக்கு, (6) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டிருக்கின்ற அளவுக்கு, பெறுநர் ஒருவர் தாமே பொறுப்பாதல் வேண்டும்.

(6) ஐந்தாம் உட்பிரிவின்கீழ் பெறுநர் ஒருவருக்குள்ள பொறுப்பானது, பெறுநரின் நியமனத் தேதிக்குப் பத்து நாட்கள் பின்னர் ஆரம்பித்து, பெறுநராண்மை எத்தேதியன்று முடிவடைகின்றதோ அத்தேதியன்று அல்லது கொடையாளி எத்தேதியன்று ஆதனத்தை பயன்படுத்துவதை, உடைமையில் வைத்திருப்பதை அல்லது இருப்பாட்சி செய்வதை நிறுத்துகின்றாரோ இவற்றுள் எது முந்தியதோ அத்தேதியன்று முடிவடையும் காலப்பகுதிக்குச் சாட்டப்படற்பாலனவான வாடகையின் அல்லது வேறு கொடுப்பனவுகளின் அப்பகுதிக்கு மட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது.

(7) பெறுநர் ஒருவர் விண்ணப்பம் செய்ததன்மேல், நீதிமன்றம் -

(அ) ஆறாம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ளதைவிட அதிகளவுக்கு பெறுநரின் பொறுப்பை மட்டுப்படுத்தலாம் ; அல்லது

(ஆ) ஐந்தாம் உட்பிரிவின் கீழான பொறுப்பிலிருந்து பெறுநருக்கு விலக்களிக்கலாம்.

(8) ஐந்தாம் அல்லது (6) ஆம் உட்பிரிவில் உள்ள எதுவும் -

(அ) ஐந்தாம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள உடன்படிக்கையொன்று பெறுநர் ஒருவரால் ஏற்றுக்கொள்ளப்படும் நிலைமையொன்றை உருவாக்குகின்றதென எடுத்துக்கொள்ளப்படுதலாகாது ; அல்லது

(ஆ) உடன்படிக்கையின்கீழ் வேறு ஏதேனும் கடப்பாட்டை நிறைவேற்றுவதற்குப் பெறுநர் ஒருவரை ஆளாக்குதல் ஆகாது.

(9) இப்பிரிவின்கீழ் பெறுநர் ஒருவரின் தனிப்பட்ட பொறுப்பு தொடர்பில் பெறுநராண்மையிலுள்ள ஆதனத்திலிருந்து நட்டோத்தரவாதம் ஒன்று பெறுவதற்கு அவர் உரித்துடையவராதல் வேண்டும்.

(10) இப்பிரிவிலுள்ள எதுவும் -

(அ) பெறுநர் ஒருவர் எவ்வேறேதேனும் நட்டோத்தரவாத உரிமைக்கு உரித்துடையவராகக்கூடுமோ அந்நட்டோத்தரவாதத்துக்கான உரிமையை மட்டுப்படுத்துதலாகாது ;

(ஆ) அதிகாரமில்லாமல் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தமொன்றின் மீதுள்ள பெறுநர் ஒருவரின் பொறுப்பை மட்டுப்படுத்தலாகாது ; அல்லது

(இ) அதிகாரமில்லாமல் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தமொன்றின் மீதான பொறுப்பு தொடர்பிலான நட்டோத்தரவாதம் ஒன்றுக்கான உரிமையொன்றைப் பெறுநர் ஒருவருக்கு அளித்தலாகாது.

பொறுப்பிலிருந் தான நிவாரணம்.

**465.** (1) நீதிமன்றம் -

(அ) பெறுநரின் நியமனத்திலுள்ள குறைபாடொன்று காரணமாக மட்டுமே பொறுப்பானது உறப்பட்டது அல்லது நீதிமன்றத்தின் எச்சாதனத்தினால் அல்லது எக்கட்டளையினால் அல்லது நீதிமன்றத்தின் எச்சாதனத்தின்கீழ் அல்லது கட்டளையின்கீழ் பெறுநர் நியமிக்கப்பட்டாரோ அச்சாதனத்தில் அல்லது கட்டளையில் உள்ள குறைபாடொன்று காரணமாக மட்டுமே பொறுப்பானது உறப்பட்டது என ; அத்துடன்

(ஆ) பெறுநர் நேர்மையாகவும் நியாயமான முறையிலும் செயற்பட்டிருக்கிறார் அத்துடன் இச்சூழ்நிலைகளில் பொறுப்பிலிருந்து அவருக்கு விலக்கு அளிக்கப்பட வேண்டுமென,

நீதிமன்றம் திருப்திப்பட்டால், அது பெறுநர் ஒருவராக செயற்பட்டிருக்கின்ற ஆளொருவருக்கு, அவர் பொறுப்பேற்புக் கடமையில் ஈடுபட்டிருந்தபோது உறப்பட்ட எல்லாப் பொறுப்பிலிருந்தும் அல்லது ஏதேனும் தனிப்பட்ட பொறுப்பிலிருந்தும் விடுவிக்கலாம்.

(2) நீதிமன்றம் அது பொருத்தமானதெனக் கருதுகின்றவாறான அத்தகைய நியதி நிபந்தனைகளுக்கமைய, (1) ஆம் உட்பிரிவின்கீழ் அதன் தத்துவங்களைப் பிரயோகிக்கலாம்.

(3) எவ்வாள் ஒருவரின் அக்கறைகள் கருதி பெறுநர் ஒருவர் நியமிக்கப்பட்டாரோ அவ்வாள், நீதிமன்றம் பொருத்தமானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய நியதி மற்றும் நிபந்தனைகளுக்கு அமைய, அவர் (1) ஆம் உட்பிரிவின்கீழ் பெறுநர் பொறுப்பிலிருந்து எந்த அளவுக்கு விடுவிக்கப்பட்டாரோ, அந்த அளவுக்குப் பொறுப்புடையவராதல் வேண்டும்.

### பெறுநர்களை நீதிமன்றம் மேற்பார்வை செய்தல்

**466.** (1) பெறுநர் ஒருவர் விண்ணப்பம் செய்ததன்மேல், நீதிமன்றம் — பெறுநர்களை நீதிமன்றம் மேற்பார்வை செய்தல்.

(அ) பெறுநரின் பணிகள் புரியப்படுவது தொடர்பில் எழுகின்ற ஏதேனும் விடயம் தொடர்பில் பணிப்புகள் வழங்கலாம் ; அல்லது

(ஆ) அத்தகைய எவையேனும் பணிப்புகளை இல்லாதாக்கலாம் அல்லது மாறுபடுத்தலாம்.

(2) நீதிமன்றம், (3) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள ஆட்கள் எவரும் விண்ணப்பம் செய்ததன்மேல் -

(அ) ஏதேனும் காலப்பகுதி தொடர்பில், சூழ்நிலைகளில் நியாயமாகப்படுகின்ற ஒருமட்டத்தில் பெறுநரின் ஒருவரின் ஊதியத்தை மீளாய்வு அல்லது நிர்ணயம் செய்யலாம் ;

(ஆ) பெறுநர் ஒருவரால் ஊதியமாக வைத்துக்கொள்ளப்படும் தொகையொன்று, சூழ்நிலைகளில் நியாய மற்றது என நீதிமன்றத்தினால் காணப்படும் அளவுக்கு, அத்தொகையை மீளளிக்குமாறு கட்டளை ஆக்கலாம் ;

(இ) பெறுநர் ஒருவர், ஏதேனும் ஆதனம் தொடர்பில் வலிதுடைய முறையில் நியமிக்கப்பட்டாரா அல்லது அல்லவா அல்லது பெறுநர் ஒருவர் ஏதேனும் ஆதனத்தை வலிதுடைய முறையில் உடைமையில் எடுத்துக்கொண்டாரா அல்லது அல்லவா அல்லது ஏதேனும் ஆதனத்தின் கட்டுப்பாட்டை வலிதுடைய முறையில் ஏற்றுக்கொண்டாரா அல்லது அல்லவா, என்பது பற்றி வெளிப்படுத்தலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் நீதிமன்றத்துக்கு பின்வரும் ஆட்களில் எவரும் விண்ணப்பம் ஒன்றைச் செய்யலாம் :-

(அ) பெறுநர் ;

(ஆ) கொடையாளி ;

(இ) கொடையாளியின் கடன்தருநர் ;

(ஈ) பெறுநராண்மையிலுள்ள ஆதனத்தில் அக்கறையொன்றை கொடையாளி ஊடாகக் கோருகின்ற ஆளொருவர் ;

(உ) ஒழிப்போன் ஒருவர்.

(4) ஒராம் மற்றும் (2) ஆம் உட்பிரிவுகளின்கீழ் அளிக்கப்பட்டுள்ள தத்துவங்கள் -

(அ) இச்சட்டத்தின்கீழ் நீதிமன்றம் பிரயோகிக்கக்கூடியவாறான வேறு எவையேனும் தத்துவங்களுடன் மேலதிகமாக வேறு ஏதேனும் சட்டவாக்கமாக அல்லது அதன் உள்ளார்ந்த நியாயாதிக்கமாக இருத்தல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) விண்ணப்பம் செய்யப்படும்போது பெறுநர் பெறுநராகச் செயலாற்றுவதிலிருந்து இல்லாதொழிந்துவிட்டாலென்ன, அல்லது இல்லாதொழியாவிட்டாலென்ன, பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

(5) நீதிமன்றம், (3) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆளொருவர் விண்ணப்பம் செய்வதன்மேல், (2) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றை இல்லாதாக்கலாம் அல்லது வேறுபடுத்தலாம்.

(6) ஏழாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, பெறுநரின் ஏதேனும் செயல் அல்லது விட்டுவிடுகை தொடர்பில், அத்தகைய செயல் செய்யப்பட்டது அல்லது செய்யாதுவிடப்பட்டது, (1) ஆம் உட்பிரிவின்கீழ் கொடுக்கப்பட்ட பணிப்பொன்றுக்கு இணங்கவே என்றாற்போன்று, பெறுநர் ஒருவருக்கு எதிரான உரிமைக் கோரிக்கை ஒன்றுக்கு எதிர்க்காப்பொன்றாதல் வேண்டும்.

(7) நீதிமன்றம், (3) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆளொருவர் விண்ணப்பம் செய்ததன்மேல், எச்சூழ்நிலைகள் காரணமாக (1) ஆம் உட்பிரிவின்கீழ் பணிப்பொன்று பெறப்பட்டதோ, அச்சூழ்நிலைகள் காரணமாக, (6) ஆம் உட்பிரிவினால் வழங்கப்படும் பாதுகாப்புக்குப் பெறுநர் உரித்துடையவராதலாகாது எனக் கட்டளையாக்கலாம்.

*நீதிமன்றம் பெறுநராண்மையை முடிவுறுத்தலாம் அல்லது மட்டுப் படுத்தலாம்.*

**467.** (1) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, நீதிமன்றம், கொடையாளி அல்லது கொடையாளியின் ஒழிப்போன் ஒருவர் விண்ணப்பம் செய்ததன்மேல் -

(அ) குறித்துரைக்கப்பட்ட தேதி ஒன்றிலிருந்து பெறுநர் ஒருவர், அவ்வாறு பெறுநர் ஒருவராகச் செயலாற்றுவதிலிருந்து இல்லாதொழிதல் வேண்டும் எனக் கட்டளையிடலாம் அத்துடன் பெறுநராண்மையிலுள்ள ஆதனம் தொடர்பில் வேறு எவரேனும் பெறுநரின் நியமனத்தைத் தடைசெய்யலாம் ;

(ஆ) பெறுநர் ஒருவர், குறித்துரைக்கப்பட்ட தேதியொன்றிலிருந்து, பெறுநராண்மையிலுள்ள ஆதனத்தின் பாகமாக அமைகின்ற குறித்துரைக்கப்பட்ட இருப்புச் சொத்துக்கள் தொடர்பில் மட்டுமே செயலாற்றலாம் எனக் கட்டளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழான கட்டளையொன்று -

(அ) இயலக்கூடியவாறான அளவுக்கு பெறுநராண்மையின் நோக்கம் திருப்தி செய்யப்பட்டிருக்கிறதென ; அல்லது

(ஆ) அது தொடர்ந்திருத்தலை சூழ்நிலைகள் இனிமேலும் நியாயப்படுத்தவில்லை என,

நீதிமன்றம் திருப்திப்படுகின்றவிடத்து மட்டுமே (1) ஆம் உட்பிரிவின்கீழ் கட்டளையொன்று ஆக்கப்படலாம்.

(3) நீதிமன்றம் வேறுவகையில் கட்டளையிட்டாலொழிய, பிரிவின் கீழான விண்ணப்பமொன்றின் பிரதியொன்று, விண்ணப்பம் கேட்கப்படுவதற்கு முன்னர் ஐந்து வேலைநாட்களுக்குக் குறையாத காலப்பகுதியொன்றுக்குள் பெறுநரிடம் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அத்துடன் பெறுநர் கேட்பின்போது தோன்றி அவருரை கேட்கப்படலாம்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழான கட்டளையொன்று பொருத்தமானதென நீதிமன்றம் கருதக்கூடியவாறான அத்தகைய நியதி நிபந்தனைகளின் மேல் ஆக்கப்படலாம்.

(5) இப்பிரிவின்கீழான கட்டளையொன்று, எவ்வாதனம் தொடர்பில் கட்டளையொன்று ஆக்கப்பட்டதோ, அவ்வாதனத்தின் மீதுள்ள பிணைப்பொறுப்பொன்றையோ அல்லது தாக்கீடொன்றையோ பாதித்தலாகாது.

(6) நீதிமன்றம், கட்டளைக்கு விண்ணப்பித்த அல்லது கட்டளையினால் பாதிக்கப்பட்ட எவரேனும் ஆள் விண்ணப்பம் செய்ததன்மேல், இக்கட்டளையின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றை இல்லாதாக்கலாம் அல்லது திருத்தலாம்.

பெறுநரின் கடமைகளை வலுவுறுத்துவதற்கான கட்டளைகள்.

**468.** (1) இப்பிரிவின் கீழான கட்டளையொன்றுக்கான விண்ணப்பமொன்று, பின்வருவோரினால் செய்யப்படலாம் :—

(அ) பதிவாளர் ;

(ஆ) பெறுநர் ;

(இ) பெறுநர் ஒருவராக நியமனத்தை நாடுகின்ற ஆள் ஒருவர் ;

(ஈ) கொடையாளி ;

(உ) கொடை பெறுநர் ;

(ஊ) பெறுநராண்மையிலுள்ள ஆதனத்தில் அக்கறையொன்று கொண்டுள்ள ஆள் ஒருவர் ;

(எ) கொடையாளியின் கடன்தருநர் ஒருவர் ;

(ஏ) கொடையாளியின் கடப்பாடொன்றின் உத்தரவாதமா யிருப்பவர் ஒருவர் ;

(ஐ) கொடையாளியின் ஒழிப்போன் ஒருவர் ;

(ஒ) கொடையாளியின் ஆதனத்தின் இன்னொரு பெறுநர் இணங்கியொழுகுவதற்குத் தவறுகை புரிந்தமை தொடர்பில் கொடையாளி ஒருவரின் ஆதனத்தின் பெறுநர் ஒருவர்.

(2) இணங்கியொழுகுவதற்குத் தவறுகை புரியப்பட்டது தொடர்பில், அத்தகைய இணங்கியொழுகுவதற்குத் தவறுகை புரியப்பட்டது பற்றிய அறிவித்தல், விண்ணப்பத்தேதிக்கு முன்னர் ஐந்து வேலை நாட்களுக்குக் குறையாத காலப்பகுதிக்கு பெறுநரிடம் சேர்ப்பிக்கப்பட்டிருந்தாலொழியவும் அத்துடன் விண்ணப்ப தேதியன்று உள்ளவாறாக இணங்கி ஒழுகுவதற்குத் தொடர்ந்தும் தவறுகை புரியப்பட்டாலொழியவும், (1) ஆம் உட்பிரிவின் (ஒ) என்னும் பந்தியின்கீழ் நீதிமன்றத்துக்கு விண்ணப்பம் எதுவும் செய்யப்படுதலாகாது.

(3) இணங்கியொழுகுவதற்குத் தவறுகை புரியப்பட்டிருக்கிறது அல்லது புரியப்பட்டிருந்திருக்கிறது என நீதிமன்றம் திருப்திப் படுகின்றவிடத்து நீதிமன்றம் —

(அ) இணங்கியொழுகுவதற்கான கடமையில் இருந்து பெறுநரை முழுமையாகவோ அல்லது பகுதியளவிலே விடுவிக்கலாம் ; அல்லது

(ஆ) பெறுநரினால் கடமை மீறப்பட்டது தொடர்பில் கிடைக் கக்கூடியதாக இருக்கக்கூடிய வேறு ஏதேனும் பரிகாரத் துக்குப் பங்கமின்றி, கட்டளையில் குறித்துரைக்கப் பட்டிருக்கின்ற அளவுக்கு இணங்கியொழுகுமாறு பெறுநருக்குக் கட்டளையிடலாம்.

(4) நீதிமன்றம், (3) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற

ஆளொருவர் தொடர்பில் அல்லது பெறுநர் ஒருவராக வருவதற்கு அல்லது தொடர்ந்திருப்பதற்கு, 436 ஆம் பிரிவின்கீழ் தகைமை இழப்பிக்கப்பட்ட அல்லது தகைமையிழப்பிக்கப்பட்டவராக வருகின்ற ஆளொருவர் தொடர்பில் —

(அ) பெறுநரைப் பதவியிலிருந்து அகற்றலாம் ; அல்லது

(ஆ) நானூற்று முப்பத்தாறாம் பிரிவின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், பெறுநர் ஒருவராகச் செயலாற்றுவதற்கு நியமிக்கப்பட்ட ஆள் செயலாற்றலாம் அல்லது தொடர்ந்து செயலாற்றலாம் எனக் கட்டளையிடலாம்.

(5) (அ) இணங்கியொழுகுவதற்குத் தொடர்ந்தும் தவறுகைகள் புரிகின்ற காரணத்தால் ; அல்லது

(ஆ) இணங்கியொழுகத் தவறுகை புரிந்ததனால் விளைந்த பாரதூரமான காரணத்தால்,

பெறுநர் ஒருவராகச் செயலாற்றுவதற்கு ஆளொருவர் தகுந்தவரல்லர் என நீதிமன்றம் திருப்திப்படும் வகையில் காட்டப்பட்டால், நீதிமன்றம் அவ்வாள் தொடர்பில், ஐந்தாண்டுகளை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்குத் தடைக்கட்டளையொன்றை ஆக்குதல் வேண்டும்.

(6) எவ்வாள் ஒருவருக்குத் தடைக்கட்டளை ஒன்று ஏற்புடைத்தாகுமோ, அவ்வாள் —

(அ) பெறுநராண்மை எதிலும் பெறுநர் ஒருவராகச் செயலாற்றுதலாகாது ;

(ஆ) ஒடுக்குதல் எதிலும் ஒழிப்போன் ஒருவராகச் செயலாற்றுதலாகாது ; அல்லது

(இ) பாகம் XIII இன் கீழ் நிர்வாகியொருவராகச் செயலாற்றுதல் ஆகாது.

(7) இப்பிரிவின்கீழ் கட்டளையொன்றை ஆக்குதலில் நீதிமன்றம், பொருத்தமானதென அது கருதினால் —

(அ) இணங்கியொழுகுவதற்கான காலத்தை நீடிப்பதற்கான கட்டளையொன்றை ஆக்கலாம் ;

(ஆ) ஏதேனும் நியதியை அல்லது நிபந்தனையை விதிக்கலாம் ; அல்லது

(இ) ஏதேனும் வேறு துணை நிலைக்கட்டளையை ஆக்கலாம்.

(8) ஐந்தாம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒவ்வொரு கட்டளையினதும் பிரதியொன்று, கட்டளையாக்கப்பட்ட பத்து வேலை நாட்களுக்குள் விண்ணப்பகாரரினால் பதிவாளரிடம் ஒப்படைக்கப்படுதல் வேண்டும். பதிவாளர், அதை சம்பந்தப்பட்ட பெறுநரின் பெயர் குறிப்பீட்டினால் அட்டவணைப்படுத்தப்பட்ட பகிரங்கக் கோப்பொன்றில் வைத்திருத்தல் வேண்டும்.

(9) நேர்முந்திய ஐந்து ஆண்டுகளுக்குள் இரண்டோ அல்லது அதற்கு மேற்பட்ட தடவைகளில் —

(அ) அதே ஆள் தொடர்பில் இப்பிரிவின்கீழ் இணங்கியொழுகுவதற்கான கட்டளையொன்றை நீதிமன்றமொன்று ஆக்கியிருக்கின்றது என்ற சான்று ; அல்லது

(ஆ) அதே ஆள் தொடர்பில் இப்பிரிவின்கீழ் இணங்கியொழுகுவதற்கான கட்டளையொன்றுக்கான விண்ணப்பமொன்று செய்யப்பட்டிருக்கிறது அத்துடன் ஒவ்வொரு விடயத்திலும் அவ்வாள் விண்ணப்பம் செய்ததன் பின்னரும் கேட்புக்கு முந்தியும் இணங்கியொழுகியிருக்கிறார் என்ற சான்று,

முரணான சிறப்புக்காரணங்கள் இல்லாதிருக்கும் போது, இப்பிரிவின் நோக்கங்களுக்காக இணங்கியொழுகுவதற்குத் தொடர்ந்து தவறுகை புரிந்ததற்கான சான்றாதல் வேண்டும்.

(10) இப்பிரிவின் நோக்கத்துக்காக பெறுநர் ஒருவர் தொடர்பில் "இணங்கியொழுகுவற்குத் தவறுதல்" என்பது, —

(அ) நீதிமன்றத்தின் எச்சாதனத்தினால் அல்லது கட்டளை யினால் அல்லது எச்சாதனத்தின்கீழ் அல்லது கட்டளையின்கீழ் பெறுநர் நியமிக்கப்பட்டாரோ, அச் சாதனத்தின் அல்லது கட்டளையின்கீழ் எழுகின்ற இயைபான கடமையொன்றுடன் இணங்கியொழுகு வதற்கு பெறுநர் ஒருவரினால் புரியப்பட்ட தவறுகை யொன்று என ; அல்லது

(ஆ) இந்த அல்லது ஏதேனும் வேறு சட்டத்தின் அல்லது சட்டவிதியின் அல்லது நீதிமன்ற விதிகளின்கீழ் எழு கின்ற இயைபான கட்டளையுடன் இணங்கியொழுகு வதற்கு பெறுநர் ஒருவரினால் புரியப்பட்ட தவறுகை ஒன்று என ;

(இ) அப்பிரிவின்கீழ் இணங்கியொழுகுவதற்குச் செய்யப் பட்ட கட்டளையொன்று தவிர்ந்த நீதிமன்றத்தின் வேறு ஏதேனும் கட்டளையின் அல்லது பணிப்பின்கீழ் எழு கின்ற இயைபான கடமையுடன் இணங்கியொழுகு வதற்கு பெறுநர் ஒருவரினால் புரியப்பட்ட தவறுகை யொன்று என ;

பொருள்படும்.

அத்துடன் "இணங்கியொழுகு", "இணங்கியொழுகுதல்" அத்துடன் "இணங்கியொழுகத் தவறுதல்" என்பனவற்றுக்கு நேரொத்த கருத்துக்கள் இருத்தல் வேண்டும்.

பெறுநராண்மை யிலுள்ள ஆதனத்தைப் பாதுகாக்கின்ற கட்டளைகள்.

**469.** பெறுநர் ஒருவரைப் பதவியிலிருந்து அகற்றுகின்ற அல்லது அகற்றுகின்ற பயனைக்கொண்டதான கட்டளையொன்றை நீதிமன்றம் —

(அ) பெறுநராண்மையிலுள்ள ஆதனத்தைப் பேணிக்காப் பதற்கு ;

(ஆ) அத்தகைய பெறுநரின் உடைமையில் அல்லது கட்டுப் பாட்டின்கீழ் உள்ள ஏதேனும் தகவலை அல்லது எவை யேனும் ஆவணங்களை, கட்டளையில் குறித்துரைக் கப்பட்ட எவரேனும் ஆளுக்குக் கிடைக்கக்கூடியதாகச் செய்யும் அந்நோக்கத்துக்காக, பெறுநரைத் தேவைப் படுத்துகின்றனவும்,

அது பொருத்தமானவையெனக் கருதுகின்றவாறானவையுமான அத்தகைய கட்டளைகளை ஆக்கலாம்.

**அவசிய சேவைகளை வழங்குவதற்கு மறுத்தல்**

*அவசிய சேவைகளை வழங்குவதற்கு மறுத்தலைத் தடை செய்தல்.*

**470.** (1) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, ஒரு “அவசியசேவை” என்பது —

(அ) மின்சாரத்தை சிறிய அளவில் வழங்குதல் ;

(ஆ) நீர்வழங்குதல் ; அத்துடன்

(இ) தொலைத்தொடர்பு சேவைகள்,

எனப் பொருள்படும்.

(2) ஏதேனும் வேறு எழுத்திலான சட்டத்தில் முரணாக உள்ளது அல்லது ஏதேனும் ஒப்பந்தத்தின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், அவசர சேவையொன்றின் வழங்குநர் ஒருவர் —

(அ) பெறுநர் ஒருவருக்கு அல்லது பெறுநரின் நியமனத் தேதிக்கு முன்னரான காலப்பகுதியொன்று தொடர்பி லான சேவைக்காக போமதியான விதிப்பனவுகளைச் செலுத்துவதில் கொடையாளியின் தவறுகை காரண மாக பெறுநராண்மையிலுள்ள ஆதனத்தின் சொந்தக் காரருக்கு சேவை வழங்க மறுத்தலாகாது ; அல்லது

(ஆ) பெறுநர் ஒருவருக்கு அல்லது பெறுநராண்மையிலுள்ள ஆதனத்தின் சொந்தக்காரருக்கு சேவையின் மேலும் வழங்கலுக்கான நிபந்தனையாக பெறுநரின் நியமனத் தேதிக்கு முன்னரான காலப்பகுதியொன்று

தொடர்பிலான சேவைக்கு போமதியாக வெளி நிலுவை யிலுருக்கும் விதிப்பனவுக்கான கொடுப்பனவு செய்யப் படுதல் வேண்டும் என்ற நிபந்தனையை விதித்தலாகாது.

(3) ஐயத்தைத் தவிர்ப்பதற்காக, இப்பிரிவில் உள்ள எதுவும், ஒழித்துக்கட்டுதல் ஆரம்பித்த பின்னரான ஏதேனும் காலப் பகுதி தொடர்பிலான சேவைக்காகப் போமதியான விதிப்பனவுகளைச் செலுத்துவதற்குக் கம்பெனியொன்று தவறியது தொடர்பில், அவசிய சேவை ஒன்றை வழங்குபவரை, ஏதேனும் ஒப்பந்தத்தின் கீழ் அல்லது எழுத்திலான ஏதேனும் சட்டத்தின்கீழ் ஏதேனும் உரிமையை அல்லது தத்துவத்தைப் பிரயோகித்தலில் இருந்து தடைசெய்தலாகாது.

## பாகம் XVI

### கம்பெனிகள் பதிவாளர் தலைமையதிபதியும் பதிவுசெய்தலும்

*அலுவலர்களை நியமித்தல்*

அலுவலர்களை நியமித்தல்.

**471.** (1) (அ) கம்பெனிகள் பதிவாளர் தலைமையதிபதியாக இருப்பதற்கு அல்லது செயலாற்றுவதற்கு பெயர்குறிக்கப்பட்டு அல்லது பதவி குறிக்கப் பட்டு ஆளொருவர் ;

(ஆ) கம்பெனிகள் பிரதிப் பதிவாளர் தலைமையதி பதிகளாக இருப்பதற்கு அல்லது செயலாற்று வதற்கு பெயர் குறித்து அல்லது பதவிகுறித்து ஆட்கள் ;

(இ) கம்பெனிகள் உதவிப் பதிவாளர் தலைமையதி பதிகளாக இருப்பதற்கு அல்லது செயலாற்று வதற்கு பெயர் குறித்து அல்லது பதவி குறித்து ஆட்கள் ; அத்துடன்

(ஈ) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக காலத்துக் குக்காலம் தேவைப்படக்கூடியவாறான அத்த கைய வேறு அலுவலர்கள் அத்துடன் சேவை யாளர்கள்,

நியமிக்கப்படலாம்.

(2) கம்பெனிகள் பிரதிப் பதிவாளர் தலைமையதிபதியாக ஒருவராக அல்லது கம்பெனிகள் உதவிப் பதிவாளர் தலைமையதிபதியாக ஒருவராக (1) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட ஆளெவரும், பதிவாளரின் பொதுவான பணிப்புகளுக்கு அமைய, இச்சட்டத்தின்கீழ் எல்லாத் தத்துவங்களையும் பிரயோகிக்கலாம், எல்லாக் கடமைகளையும் புரியலாம் அத்துடன் எல்லாப் பணிகளையும் நிறைவேற்றலாம்.

பதிவாளர் முடிவுகளிலிருந்ததான மேன் முறையீடுகள்.

**472.** (1) பதிவாளரின் செயலொன்றினால் அல்லது முடிவொன்றினால் இன்னலுற்ற ஆளொருவர், அச்செயல் அல்லது முடிபுபற்றிய அறிவித்தல் பெறப்பட்ட தேதிக்குப் பின்னர் பதினைந்து வேலை நாட்களுக்குள் அல்லது நீதிமன்றம் அனுமதிக்கக்கூடியவாறான அத்தகைய மேலதிக காலத்துக்குள் நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்யலாம்.

(2) நீதிமன்றமானது இப்பிரிவின்கீழ் மேன்முறையீடொன்று செய்யப்பட்டதன்மேல், எச்செயலுக்கு அல்லது முடிபுக்கு எதிராக மேன்முறையீடு செய்யப்பட்டதோ அச்செயலை அல்லது முடிபை உறுதிப்படுத்தலாம், மீளாய்வு செய்யலாம், திரிபுபடுத்தலாம் அத்துடன் தள்ளுபடி செய்யலாம் அத்துடன் நீதிசார் அக்கறை தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய ஏதேனும் வேறு கட்டளையை ஆக்கலாம்.

### இடாப்புக்களும் ஆவணங்களைப் பதிவுசெய்தலும்

இடாப்புகள் வைத்திருக்கப் படுதல் வேண்டும்.

**473.** (1) பதிவாளர் –

(அ) இச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்பட்டதாகக் கருதப்படும் கம்பெனிகள் பற்றிய ; அத்துடன்

(ஆ) இச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்பட்டதாகக் கருதப்படும் வெளிநாட்டுக் கம்பெனிகள் பற்றிய,

பதிவேடு ஒன்றைக் கொண்டிருக்கும் இடாப்பொன்றைத் தாபித்துப் பேணுதல் வேண்டும்.

(2) இடாப்பானது –

(அ) தகவலை இலத்திரனியல் முறையில் அல்லது வேறு வழிவகைகள் மூலம் பதிவுசெய்கின்ற அல்லது களஞ்சியப்படுத்துகின்ற ; அத்துடன்

(ஆ) அத்தகவல் தெளிவாகத் தெரியக்கூடியவிதமாக உடனடியாகப் பார்வையிடப்படுவதை அல்லது மீள உருவாக்கப்படுவதை அனுமதிக்கின்ற,

ஓர் உபாயம் அல்லது வசதிமூலம் முழுமையாக அல்லது பகுதியள வில் வைத்திருப்பது உட்பட, பதிவாளர் தலைமையதிபதி பொருத் தம் எனக் கருதப்படும் அத்தகைய முறையில், வைத்திருக்கப்படலாம்.

(3) அமைச்சரானவர், —

(அ) நாலாம் உட்பிரிவின்கீழ் பதிவாளரால் எவ்வாவணங் கள் அழிக்கப்படக்கூடுமோ அவ்வாவணங்களை அடையாளம் காணுகின்ற அல்லது வகுப்பாக்கம் செய்கின்ற ; அத்துடன்

(ஆ) தகவல்களைப் பதிவுசெய்வதற்கு (2) ஆம் உட்பிரிவின் கீழ் பதிவாளரால் பேணப்படும் ஏதேனும் உபாயம் அல்லது வசதிக்கு பயன்கொடுப்பதற்கு அவசியமான வாறாக வரக்கூடியவாறான எல்லா அத்தகைய கருமங் களுக்கும் ஏற்பாடு செய்கின்ற,

ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(4) பதிவாளர் (3) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் விதித்துரைக்கப்பட்ட அத்தகைய எல்லா ஆவணங்களையும் அழிப் பதற்கு தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(5) பதிவாளர் ஆவணத்தினது அழிப்புக்கு முன்னர் ஏதேனும் ஆவணத்தை இலத்திரனியல் முறைமூலம் அல்லது ஏதேனும் வேறு வழிவகைமூலம் மீள உருவாக்குமிடத்து, அத்தகைய மீள உருவாக்கப்பட்ட ஆவணம், வேறு சட்டத்தின் முரணாக எது எவ்வாறிருப்பினும் மூல ஆவணம் என்றாற்போன்று எல்லா நோக்கங்களுக்கும் எடுத்துக்கொள்ளப்படுதல் வேண்டும்.

(6) இப்பிரிவின் மேலே தரப்பட்ட ஏற்பாடுகளுக்கு பங்கமின்றி, பதிவாளர் கோப்பிடப்பட்டிருக்கும் அல்லது அவரது கட்டுக் காவலில் இருக்கும் ஆவணம் எதுவும் சேதமுற்றிருக்கின்றவிடத்து அல்லது வாசிக்கப்பட முடியாமல் வரக்கூடிய அபாயத்தில்

இருக்கின்றவிடத்து, பதிவாளர், அவர் பொருத்தமானதெனக் கருதினால், அவர் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் அதன் பிரதி ஒன்று ஆக்கப்பட்டு, சரிபார்க்கப்பட்டு, அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டுமெனப் பணிக்கலாம். அத்துடன், அப்பிரதியானது, சேதமடைந்து ஆவணத்துக்கு அல்லது வாசிக்கப்பட முடியாமல் வரக்கூடிய ஆபத்தில் இருக்கும் ஆவணத்துக்குப் பதிலாக இடப்படலாம். அத்துடன் அப்பிரதியானது, இச்சட்டத்தின் எல்லா நோக்கங்களுக்காகவும், சேதமடைந்த ஆவணமாக அல்லது வாசிக்கப்பட முடியாததாக வரக்கூடிய ஆபத்தில் இருக்கும் ஆவணமாகக் கருதப்படுதல் வேண்டும்.

*இலச்சினை மூலம் ஆவணங்களை உண்மைப் படுத்தல்.*

**474.** பதிவாளர் தலைமையதிபதி, கம்பெனிகள் பதிவுசெய்யப் படுவதற்குத் தேவைப்படும் அல்லது கம்பெனிகள் பதிவு செய்யப் படுவது தொடர்பிலான ஆவணங்களை உண்மைப்படுத்து வதற்காக இலச்சினை ஒன்று அல்லது இலச்சினைகள் உருவாக் கப்பட வேண்டுமெனப் பணிக்கலாம்.

*ஆவணங்கள் ஆவணங்களின் பிரதிகள், அறிவித்தல்கள் முதலியனவற்றைப் பதிவுசெய்தல்.*

**475.** (1) பதிவாளர், இரண்டாம் மற்றும் (3) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கு அமைய –

(அ) எவ்வாவணம், இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டினால் பதிவுசெய்யப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்டதோ அல்லது அதிகாரமளிக்கப்பட்டிருக்கின்றதோ அல்லது பதிவாளர் தலைமையதிபதியினால் பதிவுசெய்யப்பட்டிருக்கின்றதோ அல்லது பதிவாளரிடம் கோப்பிடப்பட்டிருக்கின்றதோ, அவ்வாவணத்தை; அத்துடன்

(ஆ) எவ்வாவணம் அல்லது ஆவணமொன்றின் எப்பிரதி அத்துடன் எவ்விபரத்திரட்டு அல்லது எவ்வறிவித்தல், அத்தகைய ஏதேனும் இச்சட்டத்தின் ஏற்பாட்டினால் பதிவாளருக்கு அனுப்பப்பட வேண்டுமென, பதிவாளர் முன்வைக்கப்படவேண்டுமென, அவரிடம் கொடுக்கப்படவேண்டுமென, ஒப்படைக்கப்பட வேண்டுமென, சமர்ப்பிக்கப்பட வேண்டுமென அதிகாரமளிக்கப்படும் அல்லது அவருக்கு எந்த விதத்திலும் அறிவிக்கப்பட வேண்டுமெனத் தேவைப் படுத்தப்பட்டதோ அவ்வாவணத்தை, ஆவண மொன்றின் அப்பிரதியை அத்துடன் அவ்விபரத் திரட்டை அல்லது அவ்வறிவித்தலை,

ஏற்றுக்கொண்டு பதிவுசெய்யலாம் அல்லது பதியலாம் அல்லது கோப்பிடலாம்.

(2) அவ்வாவணம், இச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்படுவதற்கு பதிவாளரால் பெறப்படுகின்றதோ அவ்வாவணம் -

(அ) விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென தேவைப்படுத்தப்பட்ட ஆவணம் அத்தகைய விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் இல்லாதவிடத்து ;

(ஆ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளுடன் இணங்கியொழுகாதவிடத்து ;

(இ) அச்சிடப்படாதவிடத்து அல்லது தட்டச்சு செய்யப்படாதவிடத்து ;

(ஈ) சரியான முறையில் பூர்த்திசெய்யப்பட்டிருக்காதவிடத்து ; அல்லது

(உ) தெளிவாக வாசிக்கப்படமுடியாத விடயத்தைக் கொண்டிருக்கின்றவிடத்து ;

பதிவாளர், அத்தகைய ஆவணத்தைப் பதிவுசெய்ய மறுக்கலாம், அத்துடன் அச்சந்தர்ப்பத்தில், ஒன்றில் -

(ஊ) ஆவணம் தோதானமுறையில் திருத்தப்பட்டு அல்லது பூர்த்திசெய்யப்பட்டு, பதிவுசெய்யப்படுவதற்கு மீண்டும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என ; அல்லது

(எ) அதற்குப் பதிலாகப் புதிய ஆவணமொன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென,

வேண்டுகோள் விடுத்தல் வேண்டும்.

ஆவணங்களின் மொழி பெயர்ப்புகள் கோப்பிடப்படுதல் வேண்டும்.

**476.** (1) இச்சட்டத்தின்கீழ் பதிவாளர் ஒப்படைக்கப்படல் வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட ஆவணம் எதுவும் அரசகருமமொழி அல்லது ஆங்கிலம் தவிர்ந்த வேறு மொழியொன்றில் இருக்கின்றவிடத்து, பதிவாளர் முடிவுசெய்யப்படக்கூடியவாறான

அத்தகைய மொழியில் சரியான மொழிபெயர்ப்பொன்று என விதித்துரைக்கப்பட்ட முறையில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட, அச்சடிக்கப்பட்ட மொழிபெயர்ப்பொன்றை ஒப்படைக்குமாறு பதிவாளர் எழுத்தில் வேண்டுகோள் விடுக்கலாம்.

(2) இரண்டாம் உட்பிரிவின் கீழான வேண்டுகோளொன்று இணங்கியொழுகப்படாதவிடத்து, பதிவாளர் அத்தகைய ஆவணத்தின்மீது மேலும் நடவடிக்கை எதுவும் எடுத்தலாகாது.

**477.** (1) (அ) வரையறுக்கப்பட்ட கம்பெனியொன்றைப் பதிவுசெய்வதற்கு ; — கட்டணங்கள்.

(ஆ) வரையறுக்கப்படாத கம்பெனியொன்றைப் பதிவுசெய்வதற்கு ;

(இ) உத்தரவாதத்தின்மூலம் வரையறுக்கப்பட்ட கம்பெனியொன்றைப் பதிவுசெய்வதற்கு ;

(ஈ) பெறுநர் ஒருவரால் அல்லது முகாமையாளர் ஒருவரால், நிருவாகி ஒருவரால் அல்லது ஒழிப்போன் ஒருவரால் பதிவாளரிடம் ஒப்படைக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட அறிவித்தல்கள் மற்றும் அறிக்கைகள் தவிர்ந்தனவும் பதிவாளரிடம் ஒப்படைக்கப்படுவதற்கு பதிவாளர் அனுப்பப்படுவதற்கு, பதிவாளர் தலைமையதிபதியிடம் கொடுக்கப்படுவதற்கு அல்லது பதிவாளர் முன்வைக்கப்படுவதற்கு அல்லது கோப்பிடப்படுவதற்கு பதிவுசெய்யப்பட வேண்டுமென அல்லது தேவைப்படுத்தப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் ஆவணத்தைப் பதிவு செய்வதற்கு ;

(உ) பதிவாளரினால் பதிவுசெய்யப்பட வேண்டுமென தேவைப்படுத்தப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் நிகழ்வைப் பதிவுசெய்வதற்கு ;

(ஊ) XI ஆம் பாகத்தின்கீழ் கரைகடந்த கம்பெனிகளைப் பதிவுசெய்வதற்கு ; அத்துடன்

(எ) XVIII ஆம் பாகத்தின்கீழ் வெளிநாட்டுக் கம்பெனிகளைப் பதிவுசெய்வதற்கு,

பதிவாளருக்குச் செலுத்தப்படற்பாலனவான கட்டணங்களை விதித்துரைப்பதற்கு இச்சட்டத்தின்கீழ் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படலாம்.

(2) ஏதேனும் ஆவணத்தைப் பதிவுசெய்தல், பதிதல் அல்லது கோப்பிடுதல் தொடர்பில் கட்டணமொன்று செலுத்தப்படுவதற்குச் சிறப்பு ஏற்பாடு எதுவும் செய்யப்படாதிருக்கின்றவிடத்து, அப் பதிவு செய்தல், பதிதல் அல்லது கோப்பிடுதல் தொடர்பில் பதிவாளருக்குச் செலுத்தப்படவேண்டிய கட்டணம், ஏதேனும் நிகழ்வைப் பதிவீடுசெய்வதற்குச் செலுத்தப்படும் கட்டணத்தைப் போன்ற அதே கட்டணமாக இருத்தல் வேண்டும்.

(3) பதிவாளர் அத்தகைய பணி தொடர்பிலான விதித்துரைக்கப்பட்ட கட்டணம் செலுத்தப்படும்வரை தத்துவமொன்றைப் பிரயோகிப்பதற்கு அல்லது பணியொன்றைப் புரிவதற்கு மறுக்கலாம்.

செலவுகளையும் கட்டணங்களையும் அறவிடுதல்.

**478.** இச்சட்டத்தின்கீழ் பதிவாளருக்குச் செலுத்தப்படற்பாலனவான செலவுகள் அல்லது கட்டணங்கள் எவையும், கோரப்பட்டதன்மேல் அவற்றைச் செலுத்துவதற்கு பொறுப்புடையவரான ஆளினால் செலுத்தப்படாதவிடத்து, அத்தவறுகை பற்றி நீதிவான் ஒருவருக்கு அறிவிக்கப்படலாம், அத்துடன் அச்செலவுகளின் அல்லது கட்டணங்களின் தொகை அது நீதிவானால் சுமத்தப்பட்ட குற்றப்பணமொன்று என்றாற் போன்ற அதேமுறையில் அறவிடப்படுதல் வேண்டும். நீதிவான், தவறுகைக்கான தொகை நிதியத்தில் வரவுவைக்கப்படுதல் வேண்டுமெனப் பணித்தல் வேண்டும்.

## நிதியம்

**479.** (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, நிதியமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். அது பதிவாளருடனான கலந்தாலோசனையுடன் அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளர் பணிக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் பேணப்படுதல் வேண்டும். நிதியம்.

(2) பதிவாளரினால் இச்சட்டத்தின்கீழ் விதித்துரைக்கப்படும் அல்லது அறவிடப்படும் கட்டணம் அல்லது விதிப்பனவு ஒவ்வொன்றினதும் மூன்றிலிரண்டு பங்கு, நிதியத்துக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) பதிவாளரினால் இச்சட்டத்தின்கீழ் விதித்துரைக்கப்படும், விதிக்கப்படும் அல்லது அறவிடப்படும் கட்டணம் அல்லது விதிப்பனவு ஒவ்வொன்றினதும் மூன்றிலொரு பங்கானது, திரட்டுநிதியத்துக்குச் செலுத்தப்படல் வேண்டும்.

(4) இச்சட்டத்தின்கீழ் பதிவாளர் தலைமையதிபதி, தமது தத்துவங்களை, பணிகளை மற்றும் கடமைகளைப் பிரயோகிக்கையில், நிறைவேற்றுகையில் அத்துடன் புரிகையில் அவரால் உறப்பட்ட செலவினம் எதனையும் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்படும் எல்லாப் பணத்தொகைகளும் அத்துடன் இச்சட்டத்தின்கீழ் அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின்கீழ் நிதியத்தில் இருந்து செலுத்தப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்டவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

(5) அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளர், ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்த பின்னர் இயலக்கூடியவாறு விரைவாக நிதியத்தின் நிருவாகம் பற்றிய அறிக்கையொன்றைத் தயாரித்தல் வேண்டும், அத்துடன் அவர், ஒவ்வொரு நிதியாண்டு தொடர்பிலும் நிதியத்தின் முழுமையான அத்துடன் பொருத்தமான கணக்கொன்றைப் பேணுவித்தல் வேண்டும்.

(6) கணக்காய்வாளர் தலைமையதிபதி அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரைக்கிணங்க நிதியத்தின் கணக்குகளைக் கணக்காய்வு செய்தல் வேண்டும்.

## ஆவணங்களைப் பார்வையிடலும் காண்பித்தலும், விவரத் திரட்டுக்களை ஆக்குவதற்கும் புத்தகங்களைக் காண்பித் தலுக்கும் பார்வையிடலுக்கும் கம்பெனிக்குள்ள கடமையை வலியுறுத்தலும்

*பதிவாளரினால் வைத்திருக்கப் படும் ஆவணங்களை பார்வையிடுதலும் காண்பித்தலும் அவை பற்றிய சான்றும்.*

**480.** (1) எவரேனும் ஆள், விதித்துரைக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்தியதன்மேல்,-

(அ) இடாப்பின் பாகமாக அமைகின்றதுமான ஏதேனும் ஆவணத்தை ; அல்லது

(ஆ) பிரிவு 473 இன் (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப் பட்டுள்ள ஏதேனும் உபாயத்தில் அல்லது அதைச் சார்ந்த வசதியில் பதியப்பட்டனவுமான ஏதேனும் பதிவுசெய்யப்பட்ட ஆவணத்தின் விபரங்கள்,

என்பவற்றைப் பார்வையிடலாம்.

(2) எவரேனும் ஆள், விதித்துரைக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத் தியதன்மேல்,-

(அ) கம்பெனியொன்றின் கூட்டிணைத்தற் சான்றிதழை ;

(ஆ) இடாப்பின் பாகமாக அமைகின்றதான வேறேதேனும் ஆவணத்தின் பிரதி ஒன்றை அல்லது பிரித்தெடுக்கப் பட்ட பகுதியை ;

(இ) பிரிவு 473 இன் (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப் பட்டுள்ள ஏதேனும் உபாயத்தின் அல்லது அதைச் சார்ந்த வசதியில் பதியப்பட்டனவுமான ஏதேனும் பதிவுசெய்யப்பட்ட ஆவணத்தின் விவரங்களை ; அல்லது

(ஈ) எந்த பதிவுசெய்யப்பட்ட ஆவணத்தின் விபரங்கள் பிரிவு 473இன் (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப் பட்டுள்ள ஏதேனும் உபாயத்தில் அல்லது அதைச் சார்ந்த வசதியில் பதியப்பட்டுள்ளனவோ அந்த ஏதே னும் பதிவுசெய்யப்பட்டுள்ள ஆவணத்தின் பிரதியை அல்லது அதிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட பகுதியை,

வழங்குமாறும் சான்றுப்படுத்துமாறும் பதிவாளரைத் தேவைப்படுத்தலாம்.

(3) ஓராம் அல்லது (2) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளால் அடங்கியுள்ளவை எவையும் -

(அ) பதிவாளர் வேறுவகையில் பணித்தால் அன்றி 172, 173 அல்லது 180 ஆம் பிரிவுகளின்கீழ் நியமிக்கப்பட்ட பரிசோதகர் ஒருவரின் அறிக்கை எதற்கும் ;

(ஆ) ஆவணத்தைப் பார்வையிடுதலுக்கு விண்ணப்பிக்கின்ற அல்லது அதன் பிரதி ஒன்றை அல்லது பிரித்தெடுக்கப்பட்ட பகுதியை தேவைப்படுத்துகின்ற ஆள் அக்கம்பெனியின் பங்குதாரர் ஒருவராக அல்லது கடன்தருநராக இருந்தாலன்றி, 170 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் தனியார் கம்பெனி ஒன்றினால் பதிவாளருக்கு ஒப்படைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் எதற்கும் ;

(இ) ஆவணத்தைப் பார்வையிடுவதற்கு விண்ணப்பிக்கின்ற அல்லது அதன் பிரதி ஒன்றை அல்லது பிரித்தெடுக்கப்பட்ட பகுதியைத் தேவைப்படுத்துகின்ற ஆள் அக்கம்பெனியின் பங்குதாரரொருவராக அல்லது கடன்தருநரொருவராக இருந்தாலன்றி, கம்பெனி ஒன்றின் பெறுநர் அல்லது நிருவாகி ஒருவரினால் கோப்பிடப்பட்ட அறிக்கைக்கு,

ஏற்புடைத்தாதலாகாது.

(4) பதிவாளரினால் வைத்திருக்கப்படும் ஏதேனும்ஆவணத்தைக் காண்பிக்குமாறு கட்டாயப்படுத்துவதற்கான மன்றாணை எதுவும் அந்நீதிமன்றத்தின் அனுமதியுடன் தவிர, ஏதேனும் நீதிமன்றத்தால் வழங்கப்படுதலாகாது ; அத்துடன் ஏதேனும் அத்தகைய மன்றாணை நீதிமன்றத்தின் அனுமதியுடன் வழங்கப்பட்டதென்ற கூற்றொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(5) பதிவாளரினால் உண்மையான பிரதி அல்லது பிரித்தெடுக்கப்பட்ட பகுதி எனச் சான்றுப்படுத்தப்பட்டு இலங்கையில் கம்பெனிகளைப் பதிவுசெய்வதற்கு அலுவலகத்தில் எதனிலேனும் வைத்திருக்கப்பட்டு பதிவுசெய்யப்படும் ஏதேனும் ஆவணத்தின் பிரதி அல்லது பிரித்தெடுத்த பகுதி மூல ஆவணத்தைப் போன்ற அதே செல்லுபடியுடன் எல்லாச் சட்ட நடவடிக்கைகளி லும் சான்றாக ஏற்றுக்கொள்ளப்படற்பாலதாதல் வேண்டும்.

(6) மூன்றாம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, கம்பெனி ஒன்றின் பங்குதாரர் ஒருவராக அல்லது கடன்தருநராக இருப்பதாக தம்மைப் பொய்யாகக் கூறிக்கொள்கின்ற ஆள் எவரும், தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் இரண்டு இலட்சம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணமொன்றிற்கு ஆளாதலும் வேண்டும்.

பதிவாளருக்கு விவரத் திரட்டுக்களைச் செய்வதற்கு கம்பெனிக்கு உள்ள கடமையை வலியுறுத்தல்.

**481.** (1) ஏதேனும் ஆவணத்தைப் பதிவாளரிடம் கோப்பிடுமாறு, ஒப்படைக்குமாறும் அல்லது அவருக்கு அனுப்பிவைக்குமாறு அல்லது ஏதேனும் கருமம் பற்றி அவருக்கு அறிவித்தல் கொடுக்குமாறு தேவைப்படுத்துகின்றவாறான இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுக கம்பெனி ஒன்று தவறுகின்றவிடத்தும் அவ்வாறு செய்யுமாறு அதனைத் தேவைப்படுத்தும் அறிவித்தலொன்று அக்கம்பெனியிடம் சேர்ப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து பத்து வேலை நாட்களினுள் அத்தவறுகையைச் சரிசெய்யத் தவறினால், நீதிமன்றமானது, பதிவாளர் தலைமையதிபதியினால் அல்லது கம்பெனியின் எவரேனும் கடன்தருநரினால் நீதிமன்றத்திற்குச் செய்யப்பட்ட விண்ணப்பத்தின்மேல், கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலத்துக்குள்ளாக அத்தவறுகையை நிவர்த்தி செய்யுமாறு அக்கம்பெனியையும் அதன் எவரேனும் அலுவலரையும் பணிக்கும் கட்டளை ஒன்றை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளை ஒன்றானது, அவ்விண்ணப்பத்துக்கான எல்லாச் செலவுகளும் அதன் இடை

நேர்விளைவான எல்லாச் செலவுகளும் தவறுகைக்குப் பொறுப்பான கம்பெனியினால் அல்லது அக்கம்பெனியின் எவரேனும் அலுவலரினால் பொறுத்துக்கொள்ளப்பட வேண்டுமென ஏற்பாடு செய்யலாம்.

(3) ஓராம் உட்பிரிவானது ஏற்புடைத்தாகின்ற ஏதேனும் தவறுகை தொடர்பில் கம்பெனி ஒன்றின்மீது அல்லது அதன் அலுவலர்கள்மீது தண்டங்களை விதிக்கும் ஏதேனும் சட்டவாக்கத்தின் நடைமுறையை இப்பிரிவில் உள்ளதெதுவும் பங்கப்படுத்துதலாகாது.

கம்பெனிகள் தொடர்பான தகவலைச் சட்டமுறையற்று வெளிப்படுத்துதல்.

**482.** இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் கம்பெனி ஒன்றினால் பதிவாளர் தலைமையதிபதியிடம் கோப்பிடப்பட்ட எவையேனும் ஆவணங்கள் தொடர்பான ஏதேனும் தகவலை அல்லது பதிவாளர் தலைமையதிபதி திணைக்களத்தில் வேலையிலிருக்கும் காலத்தின்போது அத்தகவலோடு தொடர்புடையதாகத் தம்மால் பெறப்பட்ட விடயங்கள் அத்தகைய தகவலை கிடைக்கப்பெறுவதற்கு உரித்துடையவராயில்லாத அல்லது அதிகாரமளிக்கப்பட்டவராயில்லாத எவரேனும் ஆளுக்குத் தெரியப்படுத்துகின்றவரும் அல்லது அத்தகைய தகவலின் வேறேதேனும் சட்டமுறையற்ற பயன்பாட்டைச் செய்கின்றவரும் பதிவாளர் தலைமையதிபதி திணைக்களத்தில் ஊழியத்திலுள்ளவரும் ஊழியத்திலிருந்தவருமான எவரேனும் ஆள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐந்து இலட்சம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணமொன்றிற்கு அல்லது இரண்டு ஆண்டுகளுக்கு மேற்படாத காலப்பகுதி ஒன்றிற்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

தவறு சந்தேகிக்கிப் படுமிடத்து புத்தகங்கள் காண்பித்தலும் பார்வையிடலும்.

**483.** (1) நீதிவானொருவருக்கு அவருக்கு அமர்வு அறையில் சட்டத்துறைத் தலைமை அதிபதியினால், பதிவாளரினால் அல்லது உதவிக் கண்காணிப்பாளர் பதவி வரிசைக்குக் குறையாத பதவியிலுள்ள எவரேனும் பொலிசு அலுவலரினால் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மீது எவரேனும் ஆள், அக்கம்பெனியின்

அலுவலர் ஒருவராக இருக்கும்போது கம்பெனியின் அலுவல்களின் முகாமை தொடர்பாகத் தவறொன்றைப் புரிந்துள்ளார் என நம்புவதற்கு நியாயமான காரணம் காட்டப்பட்டு அவற்றைப் புரிந்தமை பற்றிய சான்று கம்பெனியின் கட்டுப்பாட்டில் அல்லது கட்டுப்பாட்டின் கீழுள்ள எவையேனும் புத்தகங்களில் அல்லது பத்திரங்களில் காணப்பட்டவிடத்து, கட்டளை ஒன்றானது —

(அ) தவறு பற்றிப் புலனாய்வு செய்யும் நோக்கத்திற்காகவும் அது பற்றிய சான்றைப் பெறும் நோக்கத்திற்காகவும் அப்புத்தகங்களை அல்லது பத்திரங்களை அல்லது அவற்றுள் எதனையும் பார்வையிடுமாறு அதில் பெயர் குறிக்கப்பட்டுள்ள எவரேனும் ஆளுக்கு அதிகார மளித்து ; அல்லது

(ஆ) கட்டளையில் பெயர் குறிக்கப்படும் ஆளுக்கு, அவ்வாறு பெயர் குறிக்கப்படும் இடத்தில் அப்புத்தகங்களை அல் லது பத்திரங்களை அல்லது அவற்றுள் எதனையும் காண்பிக்குமாறு கம்பெனியின் செயலாளரை அல்லது அதன் அத்தகைய வேறு அலுவலரை தேவைப்படுத்தி,

ஆக்கப்படலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள், வங்கித் தொழிலைக் கொண்டுநடாத்துகின்ற ஆளொருவரின் எவையேனும் புத்தகங்கள் அல்லது பத்திரங்கள் தொடர்பிலும் கம்பெனி அலுவலகங்களுக்கு அவை தொடர்புடையனவாக இருக்கும் அளவுக்கு கம்பெனியின் கட்டுப்பாட்டில் அல்லது கட்டுப்பாட்டின் கீழுள்ள எவையேனும் புத்தகங்களுக்கு அல்லது பத்திரங்களுக்கு அது ஏற்புடையதாகுமாறு அவ்வுட்பிரிவின் (ஆ) எனும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ளதை ஒத்த கட்டளை எதுவும் இவ்வுட்பிரிவின் ஏற்பாடுகளின் பயனைக்கொண்டு ஆக்கப்படுதலாகாது என்பது தவிர, ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) இப்பிரிவின்கீழ் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றின்மீது நீதிவானின் முடிவுக்கெதிராக மேன்முறையீடெதுவும் இருத்தலாகாது.

*தகவல்கள் கோருவதற்கும் புத்தகங்கள், இடாப்புகள் மற்றும் ஆவணங்களைப் பார்வை யிடுவதற்கும் பதிவாள ருக்குள்ள தத்துவம்.*

**484.** (1) பதிவாளர் எழுத்திலான அறிவித்தல் மூலம் ஏதேனும் கம்பெனியை, அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டுள்ள தேதிக்கு முன்னர் —

(அ) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக பதிவாளர் தேவைப்படுத்தக்கூடியவாறான கம்பெனி தொடர்பான அத்தகைய தகவலை ; அல்லது

(ஆ) (i) கம்பெனியால் கொடுத்துதவப்படும் ஏதேனும் விபரத்திரட்டில், வெளிப்படுத்துகையில் அல்லது வேறு ஆவணத்தில் கூறப்பட்டுள்ள அல்லது கூறப்பட்டிருக்கவேண்டிய ; அல்லது

(ii) கம்பெனியால் ஏதேனும் விபரத்திரட்டில் அல்லது வேறு ஆவணத்தில் கூறப்பட்டிருக்க வேண்டிய ஆனால், உண்மையிலேயே கம்பெனியால் கொடுத்துதவப்பட்டிராத,

கம்பெனியால் கொடுத்துவப்படும் ஏதேனும் விபரத்திரட்டில், வெளிப்படுத்துகையை அல்லது வேறு ஆவணத்தில் கூறப்பட்டுள்ள ஏதேனும் விபரங்கள் தொடர்பில் பதிவாளர் தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய தகவலை அல்லது விளக்கங்களை, அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட தேதியில் அல்லது தேதிகளில் உள்ளவாறாக ; அத்துடன்

(இ) கம்பெனியால் அதன் தொழில் அல்லது கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக வைத்திருக்கப்பட்ட அல்லது வைத்திருக்கவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் புத்தகத்தை, இடாப்பை அல்லது வேறு ஆவணத்தை அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட தேதிக்கு முன்னர் முன்வைக்குமாறும்,

பணிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் பதிவாளரினால் வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புரையுடன் கம்பெனி ஒன்று இணங்கியொழுகத் தவறுகின்றவிடத்து —

(அ) கம்பெனி தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஓரிலட்சம் ரூபாவிற்கு மேற்படாத குற்றப்பணம் ஒன்றிற்கு ஆளாதலும் வேண்டும் ;

(ஆ) தவறுகையில் உள்ளவாறான கம்பெனியின் ஒவ்வொரு அலுவலரும் தவறொன்றிற்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐம்பதினாயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணமொன்றிற்கு ஆளாதலும் வேண்டும்.

பாகம் XVII

**உளதாயிருக்கும் கம்பெனிகளுக்கு சட்டத்தை ஏற்புடைத்தாக்கல்**

*உளதாயிருக்கும் கம்பெனிகளுக்கு சட்டத்தை ஏற்புடைத்தாக்கல்.*

**485.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளை, உளதாயிருக்கும் கம்பெனிகளுக்கு ஏற்புடையதாக்குகையில் —

(அ) உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட ஒரு கம்பெனியைத் தவிர, வரையறுக்கப்பட்ட ஒரு கம்பெனியின் விடயத்தில், கம்பெனியானது இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வரையறுக்கப்பட்ட ஒரு கம்பெனியாக உருவாக்கப்பட்டும் பதிவு செய்யப்பட்டும் இருக்கின்றவாறு ;

(ஆ) உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட ஒரு கம்பெனியின் விடயத்தில், கம்பெனியானது, இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட ஒரு கம்பெனியாக உருவாக்கப்பட்டும் பதிவு செய்யப்பட்டும் இருக்கின்றவாறு ;

(இ) வரையறுக்கப்பட்ட ஒரு கம்பெனியைத் தவிர்ந்த ஒரு கம்பெனியின் விடயத்தில், இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வரையறுக்கப்படாத ஒரு கம்பெனியாக உருவாக்கப்பட்டும் பதிவு செய்யப்பட்டும் இருக்கின்றவாறு ; அத்துடன்

(ஈ) மக்கள் கம்பெனியாகவுள்ள கம்பெனி ஒன்றின் விடயத்தில், இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் வரையறுக்கப்பட்ட ஒரு கம்பெனியாக உருவாக்கப்பட்டும் பதிவுசெய்யப்பட்டும் இருக்கின்றவாறு,

அதேவிதத்தில் ஏற்புடையதாதல் வேண்டும்.

(2) தனியார் கம்பெனி ஒன்றாகவுள்ள உளதாயிருக்கும் கம்பெனி ஒன்று, இச்சட்டத்தின் II ஆம் பாகமான ஏற்புடைத் தாக்குகின்றவாறான ஒரு தனியார் கம்பெனியாக இச்சட்டத்தின் கீழ் தொடர்ந்திருத்தல் வேண்டும்.

(3) கரைகடந்த கம்பெனி ஒன்றான உளதாயிருக்கும் கம்பெனி ஒன்று, இச்சட்டத்தின் XI ஆம் பாகமானது ஏற்புடைத்தாகின்ற தான கரைகடந்த கம்பெனி ஒன்றாக இச்சட்டத்தின்கீழ் தொடர்ந்து இருத்தல் வேண்டும்.

(4) உளதாயிருக்கும் கம்பெனி ஒன்றன் பதிவுத்தேதி பற்றிய ஏதேனும் வெளிப்படையான அல்லது உட்கிடையான குறிப்பீடு, ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் கம்பெனியானது முதலில் கூட்டிணைக்கப்பட்டதான தேதிக்கான குறிப்பீடொன்றாகப் பொருள்கொள்ளப்படல் வேண்டும்.

(5) உளதாம் கம்பெனி –

(அ) ஆயிரத்து எண்ணூற்றி அறுபத்தோராம் ஆண்டின் கூட்டுப்பங்குத் தொகுதிக் கம்பெனிகள் கட்டளைச் சட்டம், 1897 ஆம் ஆண்டின் கூட்டுப் பங்குத் தொகுதி கள் வங்கித்தொழிற் கட்டளைச் சட்டம் மற்றும் (145 ஆம் அத்தியாயமான கம்பெனிகள் கட்டளைச் சட்டம் என்ப வற்றின் கீழ் உருவாக்கப்பட்டு பதிவுசெய்யப்பட்ட தனியார் வரையறுக்கப்பட்ட கம்பெனி ஒன்று எனில், "வரையறுக்கப்பட்ட (தனியார்)" அல்லது "வ/ப (தனி)" என்ற சுருக்கங்களை உள்ளடக்க அதனது பெயரை மாற்றிக்கொண்டிருப்பதாக கருதப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) பகிரங்க நிரல்படுத்தப்பட்ட கம்பெனியொன்று எனில் "வரையறுக்கப்பட்ட பகிரங்கக் கம்பெனி" என அல்லது "வ.ப.க." என்ற சுருக்கங்களை உள்ளடக்க அதனது பெயரை மாற்றிக்கொண்டதாக கருதப்படுதல் வேண்டும்.

(6) (அ) பதிவாளர் (5) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் பெயரில் கருதப்பட்ட மாற்றத்தின் விளைவாக முன்னைய பெயரின் இடத்தில் புதிய பெயரை இடாப்பில் பதிவிடுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய கூட்டிணைப்புச் சான்றிதழில் விடயத்திற்கேற்றவாறு சொல்லப்பட்ட சொற்கள் அல்லது சொல்லப்பட்ட சுருக்கங்கள் உள்ளிட புதிய கூட்டிணைப்புச் சான்றிதழை வழங்குதல் வேண்டும் ;

(ஆ) அத்தகைய புதிய சான்றிதழ், பதிவாளர் 487 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி புதிய இலக்கமொன்றை ஒதுக்கிய பின்னர் வழங்கப்படுதல் வேண்டும்.

உளதாயிருக்கும் கம்பெனிகளின் அமைப்பக விதிகள் தொடர்பிலான ஏற்பாடுகள்.

**486.** (1) மாதிரி அமைப்பக விதிகள், 15 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) எனும் பந்தியின்கீழ் அவை ஏற்புடைத்தாதல் வேண்டுமென அது தீர்மானித்தாலொழிய உளதாயிருக்கும் கம்பெனி ஒன்றிற்கு ஏற்புடைத்தாதலாகாது.

(2) உளதாயிருக்கும் கம்பெனி ஒன்றின் அமைப்புப்புற விதிகள் கம்பெனியின் அமைப்பக விதிகளின் பாகமாக உருவாகுவதாகக் கருதப்படல் வேண்டும்.

(3) உளதாயிருக்கும் கம்பெனி ஒன்றின் அமைப்பக விதிகள் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக அத்தகைய கம்பெனியின் அமைப்பக விதிகளாகத் தொடர்ந்திருத்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய அமைப்பகவிதிகள் 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்திற்கான முதலாம் அட்டவணையின் (அ) எனும் பட்டியலில் காட்டப்பட்டுள்ள எல்லா அல்லது ஏதேனும் விதிகளை ஏற்றுக்கொண்டுள்ளவிடத்து, அத்தகைய விதிகளின் முழுமையாகக் காட்டப்பட்டிருந்தால் அதேபோன்று, கம்பெனியின் அத்தகைய அமைப்பகவிதிகளில் கூட்டிணைக்கப்பட வேண்டுமென அவ்விதிகள் கருதப்படல் வேண்டும்.

உளதாயிருக்கும் கம்பெனிகளின் கம்பெனி இலக்கங்கள் தொடர்பிலான ஏற்பாடுகள்.

**487.** (1) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, நிருவாக நோக்கங்களுக்காக, பதிவாளரினால் உளதாயிருக்கும் கம்பெனிக்குக் குறித்தொதுக்கப்பட்ட இலக்கமானது, அக்கம்பெனியின் கம்பெனி இலக்கமாகவிருத்தல் வேண்டும்.

(2) இச்சட்டம் வலுவுக்கு வந்ததிலிருந்து பன்னிரண்டு மாத காலப்பகுதியொன்றினுள், எல்லா உளதாம் கம்பெனிகளும் பதிவாளரால் விதித்துரைக்கப்பட்டவாறான அதனது கம்பெனி இலக்கம் போன்று புதிய இலக்கமொன்றை ஒதுக்குவதற்கு பதிவாளருக்கு விண்ணப்பித்தல் வேண்டும். அவ்வாறு ஒதுக்கப் பட்ட புதிய இலக்கம் இடாப்பிலும், 485 ஆம் பிரிவின் (6) உட்பிரி வின் ஏற்பாடுகளின்கீழ் வழங்கப்படவேண்டிய புதிய கூட்டிணைப் புச் சான்றிதழிலும் பதிவீடுசெய்யப்படுதல் வேண்டும்.

(3) உளதாம் கம்பெனியொன்று,அப்பிரிவின் (2) ஆம் உட்பிரி வின்கீழ் விதிக்கப்பட்ட தேவைப்பாடுகளுடன் அதன்கண் குறித் துரைக்கப்பட்ட காலத்தினுள் இணங்கியொழுகத் தவறுகின்ற விடத்து, பதிவாளர் அத்தகைய கம்பெனியின் பெயரை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளின் நாளாந்த புதினத்தாள்களி லொன்றில் வெளியிடச் செய்வித்தல் வேண்டும், அத்துடன் அத்தகைய கம்பெனி அதன்பின்னரும் அத்தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுக தவறுகையை தொடருகின்றவிடத்து, பதிவாளர் புதினத்தாள்களில் அதனது பெயர் வெளியீட்டிலிருந்து ஆறு மாதங்களினுள் 473 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் அவரினால் பராமரிக்கப்படும் இடாப்பிலிருந்து அத்தகைய கம்பெனியின் பெயரை வெட்டிவிடுதல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்படும் ஆறுமாத காலத்தின்போது, கம்பெனியின் பணிப்பாளர் ஒருவருக்கு மேலதிகமாக, அத்தகைய கம்பெனியின் பங்குதாரர் ஒருவர் அல் லது 102 ஆம் பிரிவின்கீழ் தாக்கீடொன்றைப் பதிவீடு செய்துள்ள ஆளொருவர் அல்லது ஒரு நீதிமன்றத்தின் முன்னர் அல்லது நடுத்தீர்ப்பு நடவடிக்கைகளில் முடிவுறாதுள்ள பண உரிமைக் கோரிக்கையொன்றைக்கொண்டவரான ஆளொருவர், (2) ஆம் உட்பிரிவின்கீழ் அத்தகைய கம்பெனிக்கு புதிய இலக்கமொன்று குறித்தொதுக்கப்படுவதற்கு பதிவாளருக்கு விண்ணப்பிப்பதற்கு உரித்துடையவராதலும் வேண்டும்.

(5) கம்பெனியொன்றின் பெயர் (3) ஆம் உட்பிரிவின்கீழ் இடாப் பிலிருந்து வெட்டப்படுமிடத்து, எத்தேதியில் வெட்டப்படுகின் றதோ அத்தேதிக்கு நேர்முன்னர் கம்பெனியில் உடமையாக்கப் பட்ட அல்லது கம்பெனிக்காக நம்பிக்கைப் பொறுப்பில் வைத் திருக்கப்படும் எவையேனும் எல்லா ஆதனங்களும் உரிமைகளும் (குத்தகைக்குவிடப்பட்ட ஆதனங்கள் உள்ளடங்கலாக, ஆனால் வேறு எவரேனும் ஆளுக்காக நம்பிக்கைப்பொறுப்பின் மீது கம்பெனி யால் வைத்திருக்கப்படும் ஆதனங்கள் உள்ளடங்காமல்) கையுதிர்ப் பில் அரசுடமையாதலும் அரசுக்கானதாதலும் வேண்டும்.

## பாகம் XVIII

### கடல் கடந்த கம்பெனிகள்

பொருள்கோடல்.

**488.** இச்சட்டத்தின் இப்பாகத்தின் நோக்கங்களுக்காக –

கம்பெனி ஒன்று தொடர்பில், "பணிப்பாளர்" என்பது, எவ்வாளின் பணிப்புரைகளுக்கு அல்லது அறிவுறுத்தல்களுக்கமைய கம்பெனியின் பணிப்பாளர்கள் செயலாற்றுவதற்கு பழக்கப்பட்டுள்ளனரோ அத்தகைய எவரேனும் ஆளை உள்ளடக்குகிறது.

"கடல் கடந்த கம்பெனி" என்பது –

(அ) நியமிக்கப்பட்ட தேதிக்குப் பின்னர் இலங்கையினுள் ஒரு தொழில் இடத்தைத் தாபித்திருக்கின்ற ; அல்லது

(ஆ) நியமிக்கப்பட்ட தேதிக்கு முன்னர், இலங்கையினுள் ஒரு தொழில் இடத்தைத் தாபித்திருப்பதுடன் நியமிக்கப்பட்ட தேதியன்று இலங்கையினுள் தாபிக்கப்பட்ட தொழில் இடமொன்றைத் தொடர்ந்து கொண்டிருப்பதான,

இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட ஏதேனும் கம்பெனி அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழு என்று பொருள்படும்.

"தொழில் இடம்" என்பது, ஒரு பங்கு கைமாற்று அல்லது பங்கு பதிவு செய்தல் அலுவலகத்தை உள்ளடக்குகிறது ;

"பதிவு செய்யப்பட்ட கடல் கடந்த கம்பெனி" என்பது, 489 ஆம் பிரிவின் கீழ் தேவைப்படுத்தப்பட்ட ஆவணங்களையும் விபரங்களையும் பதிவாளருக்கு ஒப்படைத்த அல்லது ஒப்படைப்பதாகக் கருதுகின்ற கடல் கடந்த கம்பெனி ஒன்று என்று பொருள்படும் ; அத்துடன்

"செயலாளர்" என்பது, எப்பெயரினால் அழைப்பதாயினுஞ் சரி செயலாளர் எனும் பதவியை வகிக்கின்ற எவரேனும் ஆளை உள்ளடக்குகின்றது.

கடல் கடந்த கம்பெனி களினால் ஆதனங்களும் விபரங்களும் பதிவாளருக்கு ஒப்படைக்கப்படல் வேண்டும் என்பது.

**489.** (1) நியமிக்கப்பட்ட தேதிக்குப் பின்னர், இலங்கையினுள் தொழில் இடமொன்றைத் தாபிக்கின்றதான இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பெனி ஒவ்வொன்றும் அதன் தொழில் இடத்தைத் தாபித்த தேதியிலிருந்து ஒரு மாதத்தினுள், பதிவுசெய்யும் நோக்கத்திற்காக, பதிவாளருக்குப் பின்வருவன வற்றை ஒப்படைத்தல் வேண்டும் :-

(அ) கம்பெனியின் பட்டயம், நியதிச்சட்டங்கள் அல்லது அமைப்புப் புறவிதிகளும் அமைப்பக விதிகளும் என்ப வற்றின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி ஒன்று அல் லது கம்பெனியின் யாப்பினை அமைக்கின்ற அல்லது வரையறுக்கின்ற பிற சாதனம் அத்துடன் அச்சாதன மானது இலங்கையின் அலுவலக மொழி யில் அல்லது ஆங்கிலத்தில் இல்லாதிருக்குமிடத்து பதிவாளரினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய மொழி யில் அச்சாதனத்தின் மொழி பெயர்ப்பொன்று ;

(ஆ) கம்பெனியின் பணிப்பாளர் இடாப்பில் பணிப்பாளர் கள் தொடர்பில் கொண்டிருக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறானவை யான, பணிப்பாளர்கள் தொடர்பான அத்தகைய விபரங்களைக் கொண்டிருக்கின்ற, கம்பெனியின் பணிப்பாளர் பற்றிய ஒரு நிரல் ;

(இ) ஆவணங்களின் சேர்ப்பிப்பு அத்துடன் கம்பெனி யிடத்துச் சேர்ப்பிக்கப்படவேண்டுமெனத் தேவைப் படுத்தப்பட்ட எவையேனும் அறிவித்தல்கள் என்ப வற்றை கம்பெனியின் சார்பில் ஏற்றுக்கொள்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட, இலங்கையில் வசிப்பவரான ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்களின் பெயர் களும் முகவரிகளும் ;

(ஈ) (i) கம்பெனியின் பதிவுசெய்யப்பட்ட அல்லது பிரதான அலுவலகத்தின் ; அத்துடன்

(ii) இலங்கையினுள் கம்பெனியின் பிரதான தொழி லிடத்தின் முழு முகவரியைக் கொண்டுள்ள கூற்றொன்று ;

(உ) கம்பெனியின் கூட்டிணைப்பை பயனுறுத்துகின்ற அல்லது சான்றுப்படுத்துகின்ற ஏதேனும் ஆவணத்தின் சமீபத்திய தேதியில் அத்தாட்சிப்படுத்தப்பட்டதான, அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி ஒன்று.

(2) பதிவாளர், தவறுகைபுரியும் கம்பெனியினால் போதுமான காரணம் காண்பிக்கப்படுவதன்மேல், (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒரு மாத காலப்பகுதியை நீடிக்கலாம்.

(3) நியமிக்கப்பட்ட தேதியன்று அல்லது அதன் முன்னர் இலங்கையினுள் தொழிலிடமொன்றைத் தாபிக்கின்ற அல்லது தாபித்துள்ள, இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டுள்ள கம்பெனி ஒவ்வொன்றும் (4) ஆம் உட்பிரிவுக்கமைய, அத்தேதியிலிருந்து ஒரு மாத காலப்பகுதிக்குள், (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆவணங்களையும் விபரங்களையும் பதிவு செய்வதற்காக பதிவாளருக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

(4) கடல்கடந்த கம்பெனி நியமிக்கப்பட்ட தேதிக்கு முன்னர் இலங்கைக்குள் தொழிலிடமொன்றைத் தாபித்துள்ளவிடத்தும் ஆவணங்களையும் விபரங்களையும் பதிவாளரிடம் ஒப்படைத்தல் தொடர்பில் 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் XIII ஆம் பாகத்தின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகியுள்ளவிடத்தும் :-

(அ) அத்தகைய கம்பெனி (3) ஆம் உட்பிரிவுடன் இணங்கியொழுகுவதாகக் கருதப்படல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) கடல்கடந்த கம்பெனிகளின் இடாப்பில், 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் XIII ஆம் பாகத்தின்கீழ் ஒப்படைக்கப்பட்ட ஆவணங்களையும் பதிவாளர் பதிவீடு செய்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய கடல்கடந்த கம்பெனிக்குப் பதிவுச் சான்றிதழொன்றை வழங்குதலும் வேண்டும்.

(5) பதிவாளர் விடயத்துக்கேற்ப, (1) ஆம் அல்லது (3) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆவணங்களைப் பெற்றுக்கொண்டதன்மேல், கம்பெனியை, பதிவுசெய்யப்பட்ட கடல்கடந்த கம்பெனியொன்றாகப் பதிவுசெய்யலாம் என்பதுடன், அதன் பெயரைக் கடல்கடந்த கம்பெனிகளின் இடாப்பில் பதிவீடு செய்யலாம். ஒவ்வொரு கடல் கடந்த கம்பெனியும் பதிவுசெய்யப்பட்டதன்மேல், பதிவுச் சான்றிதழொன்று அதற்கு வழங்கப்படுதல் வேண்டும்.

(6) பதிவாளர், ஏதேனும் குறிப்பிட்டதொரு விடயத்தின் சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு, அவ்வாறு செய்வது உசிதமானதென அவருக்குத் தோன்றினால், (3) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள ஒரு மாத காலப்பகுதியை நீடிக்கலாம்.

(7) இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியொன்று, அக்கம்பெனியினாற் கொண்டுநடாத்தப்படும் தொழில், செலாவணிக்கட்டுப்பாட்டுச் சட்டத்தினால் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட விதிப்புகளுக்கு இசைந்தொழுகாதவிடத்து, இலங்கையினுள் தொழிலிடமொன்றைத் தாபித்தலாகாது அல்லது கடல்கடந்த கம்பெனியொன்றாகப் பதிவுசெய்யப்படுதலாகாது.

*கடல் கடந்த கம்பெனிகள் நிலங்களை வைத்திருப் பதற்குள்ள தத்துவம்.*

**490.** பதிவுசெய்யப்பட்ட கடல்கடந்த கம்பெனி ஒன்று, இச்சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ளதொரு கம்பெனி என்றாற் போன்று, இலங்கையில் காணிகளை வைத்திருப்பதற்குள்ள அதே தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*ஆவணங்கள் முதலிய மாற்றப் பட்டவிடத்து விபரத்திரட்டு பதிவாளரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்பது.*

**491.** பதிவுசெய்யப்பட்ட கடல்கடந்த கம்பெனி ஒன்றன் விடயத்தில் -

(அ) அந்தக் கம்பெனியின் பட்டயத்தில், நியதிச்சட்டங்களில், அல்லது அமைப்புற விதிகளிலும் அமைப்பக விதிகளிலும் அல்லது கம்பெனியின் யாப்பினை அமைகின்ற அல்லது வரையறுக்கின்ற ஏதேனும் பிற சாதனத்தில் ;

(ஆ) கம்பெனியின் பணிப்பாளர்களில் அல்லது பணிப்பாளர்களின் நிரலில் அடங்கியுள்ள விபரங்களில் ;

(இ) கம்பெனியின் சார்பில் சேர்ப்பினை ஏற்றுக்கொள்வதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஆட்களின் பெயர்களிலும் முகவரிகளிலும் ; அல்லது

(ஈ) (i) கம்பெனியின் பதிவுசெய்யப்பட்ட அல்லது பிரதான அலுவலகத்தின் முகவரியில் ; அல்லது

(ii) இலங்கையினுள் கம்பெனியின் பிரதான தொழிலிடத்தின் முகவரியில்,

ஏதேனும் திருத்தம் செய்யப்பட்டவிடத்து, கம்பெனியானது, விதித்துரைக்கப்பட்ட விபரங்களைக் கொண்டுள்ள விவரத்திரட்டொன்றை பதிவுசெய்வதற்காக பதிவாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

கடல்கடந்த கம்பெனியின் நிதிக் கூற்றுக்கள்.

***492.*** (1) பதிவுசெய்யப்பட்ட கடல்கடந்த கம்பெனி ஒவ்வொன்றும், ஒவ்வொரு பஞ்சாங்க ஆண்டிலும், நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் வேண்டுமென்பதுடன், கம்பெனியானது, கொளிக்கம்பெனியாகவிருக்குமிடத்து, இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் (எவ்வாறாயினும் ஏதேனும் விதித்துரைக்கப்பட்ட விதிவிலக்குகளுக்கு அமைவாக) இச்சட்டத்தின் கருத்திற்குட்பட்ட அதே விவரணத்தினதுமான கம்பெனி ஒன்றின் அவ்வாவணங்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளைத் தயாரித்து பதிவுசெய்வதற்கென பதிவாளரிடம் ஒப்படைக்கும்படி தேவைப்படுத்தப்பட்டுள்ளது என்றாற்போன்று அத்தகைய மாதிரியிலும் அத்தகைய ஆவணங்களை உள்ளடக்குவதுமான தொகுதி நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள ஆவணம் எதுவும் இலங்கையின் அலுவலக மொழியில் அல்லது ஆங்கிலத்தில் இல்லாதவிடத்து, விதித்துரைக்கப்பட்ட முறையில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பதிவாளரினால் குறித்துரைக்கப்படும் மொழியில் உள்ள மொழிபெயர்ப்பு ஒன்று அதனுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

கடல்கடந்த கம்பெனியின் பெயர்.

***493.*** (1) பதிவுசெய்யப்பட்ட கடல்கடந்த கம்பெனி ஒன்றின் கூட்டிணைப்புப் பெயரானது, இச்சட்டத்தின்கீழ் அது உருவாக்கப்பட்டிருந்தால், இச்சட்டத்தின் 7 ஆம் பிரிவின்கீழ் பதிவுசெய்யப்படுவதிலிருந்து இயைபான தேதியன்று தடுக்கப்பட்டிருக்குமென அல்லது 10 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அது தொடர்பில் பணிப்பொன்று கொடுக்கப்பட்டிருக்குமென பதிவாளருக்குத் தோற்றுகின்றவிடத்து விடயத்திற்கேற்றாற்போல அப்பெயர் ஏன் பதிவுசெய்யப்படுதலாகாதென அல்லது அத்தகைய பணிப்பொன்று கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய ஏதுக்களைக் கூறும் அறிவித்தலொன்றை பதிவுசெய்யப்பட்ட கடல்கடந்த அக்கம்பெனிக்கு பதிவாளர் சேர்ப்பிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழான அறிவித்தல் எதுவும், இயைபான தேதிக்குப் பின்னர் பன்னிரண்டு மாதங்களுக்குப் பிந்தி கம்பெனி ஒன்றிற்குச் சேர்ப்பிக்கப்படுதலாகாது.

(3) இரண்டாம் மற்றும் (3) ஆம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக "இயைபான தேதி" என்பது -

(அ) எத்தேதியில் கடல்கடந்த கம்பெனியானது 489 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகியுள்ளதோ அத்தேதி ; அல்லது

(ஆ) கடல்கடந்த கம்பெனியின் கூட்டிணைக்கப்பட்ட பெயரில் மாற்றம் ஒன்று ஏற்பட்டுள்ளவிடத்து, அம் மாற்றம் பற்றிய அறிவித்தலானது 491 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்டதான தேதி.

(4) எந்த பதிவுசெய்யப்பட்ட கடல்கடந்த கம்பெனிமீது (1) ஆம் உட்பிரிவின்கீழ் அறிவித்தலொன்று சேர்ப்பிக்கப்பட்டதோ அந்த பதிவுசெய்யப்பட்ட கடல்கடந்த கம்பெனி -

(அ) எக்கூட்டிணைப்புப் பெயரின்கீழ் அது இலங்கையில் தொழிலைக் கொண்டுநடாத்த உத்தேசித்துள்ளதோ அந்த அதன் கூட்டிணைப்புப் பெயரில் தவிர, பதிவாளரினால் அங்கீகரிக்கப்பட்ட பெயர் ஒன்றைக் குறித்துரைத்து விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் அறிவித்தலொன்றை பதிவாளரிடம் ஒப்படைக்கலாம் ; அத்துடன்

(ஆ) அப்பெயரானது பதிவுசெய்யப்பட்டதன் பின்னர், எந்நேரத்திலும் முன்னர் பதிவுசெய்யப்பட்ட பெயருக்குப் பதிலீடாக, அதன் கூட்டிணைப்புப் பெயர் தவிர்ந்த, பதிவாளரினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பெயரைக் குறித்துரைத்து விதித்துரைக்கப்பட்ட படிவத்திலான அறிவித்தலொன்றை பதிவாளரிடம் ஒப்படைக்கலாம்.

(5) நான்காம் உட்பிரிவின்கீழ் எப்பெயரினால் கடல்கடந்த கம்பெனி ஒன்று அப்போதைக்குப் பதிவுசெய்யப்பட்டுள்ளதோ அப்பெயரானது இலங்கையின் எல்லாச் சட்ட நோக்கங்களுக்காக கம்பெனியின் பெயராகக் கருதப்படுதல் வேண்டும். இவ்வுட்பிரிவின் ஏற்பாடுகள் —

(அ) இப்பிரிவின் கம்பெனியின் கூட்டிணைப்புப் பெயருக்கான குறிப்பீடுகளைப் பாதித்தலாகாது ;

(ஆ) கம்பெனியின் ஏதேனும் உரிமைகளை அல்லது கடப்பாடுகளைப் பாதித்தலாகாது அல்லது கம்பெனியினால் அல்லது கம்பெனிக்கெதிராக எடுக்கப்பட்ட

எவையேனும் சட்டநடவடிக்கைகளை குறைபாடுடையனவாக்குதலாகாது. அதன் கூட்டிணைப்புப் பெயரால் கம்பெனிக்கெதிராக ஆரம்பிக்கப்பட்டிருக்கக் கூடிய அல்லது தொடரப்பட்டிருக்கக்கூடிய சட்ட நடவடிக்கை எதுவும், எப்பெயரினால் அது அப்போதைக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளதோ அப்பெயர் மூலம் அதற்கெதிராக ஆரம்பிக்கப்படலாம் அல்லது தொடரப்படலாம்.

(6) பதிவாளர், (1) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அறிவித்தலொன்றை, அது வழங்கப்பட்டிருக்கக்கூடாதென அல்லது அது வழங்கப்பட்டதான சூழ்நிலைகள் மாறியுள்ளதென அவர் திருப்திப்பட்டால் மீளப்பெறலாம். அத்துடன் அம்மீளப் பெறுகையின்போது எந்த ஏதுக்களின்மீது அத்தகைய ஒரு அறிவித்தலானது வழங்கப்படக்கூடுமோ அந்த ஏதேனும் ஏதுக்கள் எவையும் இருத்தல் ஆகாது. (7) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் இவ்வுட்பிரிவின்கீழ் மீளப்பெறப்பட்ட அறிவித்தல் ஒன்று தொடர்பில் ஏற்புடைத்தாதலாகாது.

(7) ஒராம் உட்பிரிவின்கீழ் அறிவித்தலொன்று சேர்ப்பிக் கப்பட்டதான பதிவுசெய்யப்பட்ட கடல்கடந்த கம்பெனி ஒன்றானது, அவ்வறிவித்தல் சேர்ப்பிக்கப்பட்டதிலிருந்து இரண்டு மாதங்கள் (அல்லது அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நீண்ட காலப்பகுதி) முடிந்ததன் பின்னர் எந்நேரத் திலும் அதன் கூட்டிணைப்புப் பெயரில் இலங்கையில் தொழிலைக் கொண்டுநடாத்துதல் ஆகாது.

(8) பதிவுசெய்யப்பட்ட கடல்கடந்த கம்பெனி ஒன்று (7) ஆம் உட்பிரிவின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகத் தவறுகின்றவிடத்து -

(அ) கம்பெனி தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் இரண்டு இலட்சம் ரூபாவிற்கு மேற்படாத குற்றப் பணமொன்றிற்கு ஆளாதலும் வேண்டும் ;

(ஆ) தவறுகையில் உள்ளவாறான கம்பெனியின் அலுவலர் ஒவ்வொருவரும் தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஒரிலட்சம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப் பணமொன்றிற்கு ஆளாதலும் வேண்டும்.

**494.** பதிவுசெய்யப்பட்ட கடல்கடந்த கம்பெனி ஒவ்வொன்றும் - கம்பெனியின் பெயரையும் விபரங்களையும் குறிப்பிடு வதற்குள்ள கடப்பாடு.

(அ) இலங்கையின் அதன் பங்குகளுக்கான அல்லது தொகுதிக்கடன்களுக்கான ஒப்பப்பணங்களைக் கோரும் முற்பகர்வு ஒன்றிலும் எந்த நாட்டில் அக் கம்பெனி கூட்டிணைக்கப்பட்டதோ அந்த நாட்டினைக் குறிப்பிடுதல் வேண்டும் ;

(ஆ) இலங்கையில் எந்த இடத்தில் தொழிலைக் கொண்டு நடாத்துகின்றதோ அந்த இடம் ஒவ்வொன்றிலும் கம்பெனியின் பெயரும் எந்த நாட்டில் அக்கம்பெனி கூட்டிணைக்கப்பட்டதோ அந்த நாட்டின் பெயரும் தெளிவாக வெளிக்காட்டி வைக்கப்பட்டுள்ளதென் பதை உறுதிப்படுத்துதல் வேண்டும் ;

(இ) (i) கம்பெனியின் எல்லா தொழில் கடிதங்களிலும் ;

(ii) கம்பெனியின் எல்லா அறிவித்தல்களிலும் வேறு அலுவலக வெளியீடுகளிலும் ;

(iii) நாணயமாற்று உண்டியல்கள், வாக்குறுதிப் பத்திரங்கள், புறக்குறிப்புகள் காசோலைகள் அல்லது கம்பெனியின் சார்பில் ஒப்பமிடப்பட்ட பணத்திற்கான அல்லது பண்டங்களுக்கான கட்டளைகள் என்பவற்றிலும் ;

(iv) கம்பெனியின் சகல பணக்கொடுப்பனவுப் பட்டியல்கள் பற்றுச்சீட்டுக்கள் மற்றும் கடன் பத்திரங்கள் என்பவற்றிலும் ;

(V) கம்பெனியின் சட்ட கடப்பாடு ஒன்றை சான்றுப் படுத்துகின்ற அல்லது உருவாக்குகின்ற, கம் பெனியால் வழங்கப்பட்ட அல்லது கையொப்ப மிடப்பட்ட எல்லாப் பிற ஆவணங் களிலும் ;

அதன் பெயரும் எந்த நாட்டில் அது கூட்டிணைக் கப்பட்டுள்ளதோ அந்த நாட்டின் பெயரும் தெளி வாகக் குறிப்பிடப்பட்டுள்ளதென்பதை உறுதிப்படுத்து தல் வேண்டும் ; அத்துடன்

(ஈ) கம்பெனியின் உறுப்பினர்களின் பொறுப்பு வரையறுக் கப்பட்டவிடத்து அத்தகைய முற்பகர்வு ஒவ்வொன் றிலும் (இ) எனும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள எல்லாக் கடிதங்கள் மற்றும் வேறு ஆவணங்களிலும் அந்நிகழ்வு பற்றிய அறிவித்தலைத் தெளிவாகக் குறிப் பிடுவித்தல் வேண்டும். அத்துடன் அதன் தொழிலைக் கொண்டுநடாத்துகின்ற ஒவ்வொரு இடத்திலும் தெளிவாக வெளிக்காட்டி வைத்தலும் வேண்டும்.

கடல்கடந்த கம்பெனி மீதான சேர்ப்பித்தல்.

**495.** (1) இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் எந்த ஆளின் பெயர் பதிவாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதோ அந்த ஆள் எவருக்கும் முகவரியிடப்பட்டு அவ்வாறு ஒப்படைக்கப்பட்டுள்ள முகவரியில் விடப்பட்டு அல்லது அந்த முகவரிக்கு தபால்மூலம் அனுப்பப் பட்டிருந்தால் பதிவுசெய்யப்பட்ட கடல்கடந்த கம்பெனி ஒன்றின் மீது சேர்ப்பிக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் ஆவணம் அல்லது அறிவித்தல் போதுமான அளவில் சேர்ப்பிக்கப்பட்டதாதல் வேண்டும்.

(2) (அ) கம்பெனியின் சார்பில் ஆவணங்களை அல்லது அறிவித்தல்களைச் சேர்ப்பித்தலை ஏற்றுக்கொள் வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட, இலங்கையில் வதிபவரான ஆளொருவரின் பெயரையும் முகவரி யையும் பதிவாளரிடம் ஒப்படைப்பதில் ஏதேனும் பதிவுசெய்யப்பட்ட கடல்கடந்த கம்பெனி தவறுகை செய்கின்றவிடத்து ; அல்லது

(ஆ) எந்த ஆட்களுடைய பெயர்களும் முகவரிகளும் அவ்வாறு ஒப்படைக்கப்பட்டனவோ அந்த ஆட்கள்

எல்லோரும் இறந்தவிடத்து அல்லது இலங்கையில் வதியாதொழிந்த விடத்து அல்லது கம்பெனியின் சார்பிலான சேர்ப்பனவை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றவிடத்து அல்லது ஏதேனும் காரணத்திற்காகச் சேர்ப்பிக்கப்பட முடியாதிருக்குமிடத்து,

அந்த ஆவணத்தை இலங்கைக்குள் அக்கம்பெனியினால் தாபிக்கப்பட்ட தொழிலிடம் எதனிலும் விட்டுவைப்பதன்மூலம் அல்லது அத்தகைய இடம் எதற்கும் தபால்மூலம் கம்பெனியிடம் ஓர் ஆவணம் சேர்ப்பிக்கப்படலாம்.

இலங்கையில் கம்பெனியானது தொழிலிடம் ஒன்றைக் கொண்டிராதொழியும்போது பதிவாளருக்கு அறிவிக்கப்பட வேண்டும் என்பது.

**496.** பதிவுசெய்யப்பட்ட கடல்கடந்த கம்பெனி எதுவும், இலங்கையில் தொழிலிடம் ஒன்றைக் கொண்டிராதொழியும் இடத்து, உடனே பதிவாளருக்கு அந்நிகழ்வு பற்றிய அறிவித்தலை அது கொடுத்தல் வேண்டும். அறிவித்தலானது அவ்வாறு வழங்கப்பட்ட தேதியிலிருந்து, பதிவாளரிடம் ஏதேனும் ஆவணத்தை ஒப்படைப்பதற்குள்ள கம்பெனியின் கடப்பாடு இல்லாதொழிதல் வேண்டும்.

கடல் கடந்த கம்பெனியின் இலங்கையில் உள்ள சொத்துக்களை ஒழித்தல்.

**497.** (1) பதின்மூன்றாம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள திரிபுகளுக்கும் விலக்குகளுக்கும் அமைய, XII ஆம் பாகத் திறகிணங்க, கடல்கடந்த கம்பெனி ஒன்றின் இலங்கையிலுள்ள இருப்புச் சொத்துக்களை ஒடுக்குவதற்காக நீதிமன்றத்திற்கு விண்ணப்பமொன்று செய்யப்படலாம்.

(2) கடல்கடந்த கம்பெனியானது -

(அ) பதிவுசெய்யப்பட்ட கடல் கடந்த கம்பெனி ஒன்றாக விருக்குமிடத்து அல்லது இல்லாதிருக்குமிடத்து ;

(ஆ) இலங்கையில் தொழிலிடமொன்றைக் கொண்டிரா தொழிந்துள்ளதென, 496 ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளவிடத்து, அல்லது வழங்கப்பட்டிராதவிடத்து ; அல்லது

(இ) வேறேதேனும் நாட்டின் சட்டங்களின்கீழ் அல்லது அவற்றின் பயனைக்கொண்டு கலைக்கப்பட்டுள்ள அல்லது வேறுவகையாக கம்பெனி ஒன்றாக இல்லாதொழிந்துள்ளவிடத்து,

(1) ஆம் உட்பிரிவின்கீழ் விண்ணப்பமொன்று செய்யப்படலாம்.

*இணங்கி ஒழுகாமைக்கான தண்டங்கள்.*

**498.** இச்சட்டத்தின் இப்பாகமானது, ஏற்புடைத்தாகின்ற கம்பெனி எதுவும், 493 ஆம் பிரிவைத் தவிர, இப்பாகத்தின் ஏற்பாடுகள் எதனுடனும் இணங்கியொழுகத் தவறுகின்றவிடத்து, கம்பெனியும், தவறுகையை தெரிந்துகொண்டும் வேண்டும் என்றும் தவறுகைக்கு அதிகாரமளிக்கின்ற அல்லது அனுமதிக்கின்ற கம்பெனியின் அலுவலர் அல்லது முகவர் ஒவ்வொருவரும், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டதன்மேல் ஐம்பதினாயிரம் ரூபாவிற்கு மேற்படாத குற்றப்பணமொன்றிற்கு ஆளாதலும் வேண்டும்.

*இப்பாகத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்கான கடமையை வலுவுக்கு கொண்டுவருதல்.*

**499.** (1) கடல் கடந்த கம்பெனி எதுவும் இச்சட்டத்தின் இப்பாகத்தின் ஏதேனும் ஏற்பாட்டுடன் இணங்கியொழுகத் தவறியுள்ளவிடத்தும் அவ்வாறு அத்தவறுகையை நிவர்த்தி செய்யும்படி தேவைப்படுத்துகின்றதான அறிவித்தல் கம்பெனிக்குச் சேர்ப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து பத்து வேலை நாட்களினுள் அவ்வாறு நிவர்த்திசெய்யத் தவறுகின்றவிடத்தும் பதிவாளரினால் அல்லது கம்பெனியின் எவரேனும் கடன்தருநரினால் அல்லது அக்கறை கொண்டிருப்பவர் என நீதிமன்றத்திற்குத் தோன்றும் வேறு எவரேனும் ஆளினால் நீதிமன்றத்திற்குச் செய்யப்பட்ட விண்ணப்பத்தின்மேல் நீதிமன்றமானது கம்பெனியையும், கம்பெனியின் எவரேனும் அலுவலரையும் கட்டளையில் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய காலத்திற்குள்ளாகத் தவறுகையை நிவர்த்திசெய்யுமாறு பணிக்கின்ற கட்டளை ஒன்றை ஆக்கலாம்.

(2) ஒராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளை எதுவும், அந்த செலவுகள் யாவும் அத்துடன் அதன் இடைநேர்விளைவான செலவுகள் யாவும் அத்தவறுகைக்குப் பொறுப்பான கம்பெனியால் அல்லது கம்பெனியின் எவரேனும் அலுவலரினால் தாங்கிக் கொள்ளப்படல் வேண்டுமென ஏற்பாடுசெய்யலாம்.

(3) இப்பிரிவில் உள்ள எதுவும் (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் தவறுகை தொடர்பாக ஒரு கம்பெனிமீது அல்லது அதன் அலுவலர்கள்மீது தண்டங்களை விதிக்கின்றதான ஏதேனும் சட்டவாக்கத்தின் தொழிற்பாட்டிற்குப் பங்கமாதலாகாது.

## பங்குகளின் விற்பனைமீதும், பங்குகளின் விற்பனைக்கான கொடை முனைவுமீதும் உள்ள மட்டுப்பாடுகள்

**500.** (1) இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படவுள்ள கம்பெனியிலுள்ள ஏதேனும் பங்குகளுக்கு அல்லது அதன் தொகுதிக்கடன்களுக்கு ஒப்பப்பணத்திற்காக கொடைமுனைவு செய்கின்றதான ஏதேனும் முற்பகர்வினை, அக் கம்பெனி இலங்கையில் தொழிலிடம் ஒன்றைத் தாபித்திருந்தாலுஞ் சரி இல்லாவிடினும்சரி, அல்லது உருவாகும்போது தாபித்தாலும்சரி, தாபிக்காவிடினுஞ்சரி முற்பகர்வானது தேதியிடப்பட்டாலன்றியும் ; அத்துடன் –

முற்பகர்வுக்குத் தேதியிடலும் அதனகத்து அடங்கியிருக்கப்பட வேண்டிய விபரங்களும்.

(அ) பின்வரும் கருமங்கள் தொடர்பான விபரங்களைக் கொண்டிருந்தாலன்றியும் ;

(i) கம்பெனியின் யாப்பை அமைக்கின்ற அல்லது அதற்கு வரைவிலக்கணம் கூறுகின்ற சாதனம் ;

(ii) எந்தச் சட்டவாக்கத்தினாலும் அல்லது எந்தச் சட்டவாக்கத்தின்கீழும் கம்பெனியின் கூட்டிணைப்பானது பயனுறுத்தப்பட்டுள்ளதோ அந்தச் சட்டவாக்கத்தின் வலுவினைக் கொண்டிருக்கின்றனவான சட்டவாக்கங்கள் அல்லது ஏற்பாடுகள் ;

(iii) சொல்லப்பட்ட சாதனம், சட்டவாக்கங்கள், அல்லது ஏற்பாடுகள் அல்லது அதன் பிரதிகள், அவை இலங்கையின் அலுவலக மொழி அல்லது ஆங்கிலம் தவிர்ந்த வேறொரு மொழியில் இருப்பின் பதிவாளரினால் குறித்துரைக்கப்பட்ட ஒரு மொழியானதும் விதித்துரைக்கப்பட்ட முறையில் அத்தாட்சிப்படுத்தப்பட்டதான அதன் மொழிபெயர்ப்பு என்பன இலங்கையில் எந்த இடத்தில் பார்வையிடப்படக்கூடுமோ அந்த இடத்து முகவரி ;

(iv) எந்தத் தேதியிலும் எந்த நாட்டிலும் கம்பெனியானது கூட்டிணைக்கப்பட்டதோ அந்தத் தேதியும் நாடும் ;

(v) கம்பெனியானது இலங்கையில் தொழிலிடம் ஒன்றைத் தாபித்துள்ளதா என்பதுடன் அவ்வாறாயின் இலங்கையின் அதன் பிரதான அலுவலகத்தின் முகவரி ;

(ஆ) இதற்கான நான்காம் அட்டவணையில் I ஆம் பாகத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள கருமங்களைக் குறிப்பிட்டு அத்துடன் III ஆம் பாகத்தில் அடங்கியுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக அவ்வட்டவணையின் II ஆம் பாகத்தில் குறித்துரைக்கப்பட்ட அறிக்கைகளை எடுத்துக்காட்டினாலன்றியும் ;

ஆளெவரும் இலங்கையில் வழங்குதல், சுற்றறிக்கை விடுதல் அல்லது விநியோகித்தல் சட்டபூர்வமானதாதலாகாது.

ஆயின், (அ) எனும் பந்தியின் (i), (ii) அத்துடன் (iii) ஆம் உட்பந்திகளின் ஏற்பாடுகள், எந்தத் தேதியில் தொழிலைத் தொடங்குவதற்குக் கம்பெனியானது உரித்துடையதாக்கப்பட்டதோ அந்தத் தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் வழங்கப்பட்ட முற்பகர்வின் விடயத்தில் ஏற்புடையதாதலாகாது என்பதுடன், இவ்வுட்பிரிவின் நோக்கங்களுக்காக இதற்கான நான்காம் அட்டவணையின் I ஆம் பாகத்தின் ஏற்புடைமையில், அத்தகைய அட்டவணையின் I ஆம் பாகத்தின் 3 ஆம் பந்தியானது, அமைப்பக விதிகளுக்கான குறிப்பீட்டுக்குப் பதிலாக கம்பெனியின் யாப்பிற்கான குறிப்பீட்டினை இடுவதன் மூலம் பயனுடையனவாதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் (அ) எனும் பந்தியின் அல்லது (ஆ) எனும் பந்தியின் பயனைக்கொண்டு சுமத்தப்பட்ட தேவைப்பாடுகள் எவற்றுடனும் இணங்கியொழுகுவதை விட்டுவிடும்படி பங்குகளுக்கான அல்லது தொகுதிக் கடன்களுக்கான விண்ணப்பதாரரைத் தேவைப்படுத்துகின்ற அல்லது பிணிக்கின்றதான

அல்லது முற்பகர்வில் குறிப்பாக குறிப்பீடு செய்யப்படாத ஏதேனும் ஒப்பந்தம், ஆவணம் அல்லது கருமம் பற்றிய அறிவித்தலை அவருக்குக் கொடுப்பதாகக் கொள்ளப்படுகின்றதான நிபந்தனை எதுவும் வறிதாதல் வேண்டும்.

(3) இப்பாகத்துடன் இணங்கியொழுகுகின்றதான முற்பகர்வொன்றுடன் படிவம் வழங்கப்பட்டாலன்றியும் இலங்கையில் வழங்கப்பட்ட அந்த வழங்குகையானது 501 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறாவிட்டலான்றியும், அத்தகைய கம்பெனியில் அல்லது (1) உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளவாறான முன்னப்பட்ட கம்பெனியில் பங்குகளுக்கான அல்லது அதன் தொகுதிக் கடன்களுக்கான விண்ணப்பப் படிவமொன்றை, இலங்கையிலுள்ள ஆளெவருக்கும் ஆளெவரும் வழங்குதலானது சட்டபூர்வமானதாதலாகாது :

ஆயின், பங்குகள் அல்லது தொகுதிக் கடன்கள் தொடர்பாக கீழ்வரைதல் உடன்படிக்கையொன்றைச் செய்யும்படி ஆளொருவருக்கு நன்னோக்கத்துடன் விடுக்கப்பட்ட ஓர் அழைப்புத் தொடர்பாக அவ்விண்ணப்பப்படிவம் வழங்கப்பட்டது எனக்காட்டப்பட்டவிடத்து, இவ்வுட்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதலாகாது.

(4) ஓராம் உட்பிரிவின் (அ) மற்றும் (ஆ) எனும் பந்திகளினால் விதிக்கப்பட்ட தேவைப்பாடுகள் எவற்றுடனுமான இணங்கியொழுகாமையின்போது அல்லது அவற்றின் மீறுகையின்போது பணிப்பாளர் ஒருவர் அல்லது முற்பகர்வினை வழங்குவதற்குப் பொறுப்பான வேறு ஆள் –

(அ) வெளிவிடப்படாத ஏதேனும் கருமம் குறித்து அவர் அது பற்றி அறிந்திருக்கவில்லை என எண்பிக்கின்றவிடத்து ;

(ஆ) அத்தகைய இணங்கியொழுகாமை அல்லது மீறுகையானது தம்பக்கத்தின் நன்னோக்கமானதொரு நிகழ்வுப் பிழையினின்று எழுந்ததென எண்பிக்கின்றவிடத்து ; அல்லது

(இ) அத்தகைய இணங்கியொழுகாமை அல்லது மீறுகை யானது வழக்கைக் கையாளுகின்ற நீதிமன்றத்தின் அபிப்பிராயப்படி பொருண்மையற்றனவான கருமங்கள் தொடர்பானதாயின் அல்லது வேறு வகையில் வழக்கின் சூழ்நிலைகள் யாவற்றையும் கருத்திற் கொண்டு நியாயமான அளவில் மன்னிக்கப்பட வேண்டியனவாகவுள்ள கருமங்கள் தொடர்பானதாக விருக்குமிடத்து,

அத்தகை இணங்கியொழுகாமை அல்லது மீறுகை காரணமாக ஏற்பட்ட பொறுப்பு எதனையும் உறுதலாகாது :

ஆயின், இதற்கான நான்காம் அட்டவணையின் 17 ஆம் பந்தியில் அடங்கியுள்ள கருமங்கள் தொடர்பான கூற்றொன்றினை முற்பகர்வில் உள்ளடக்குவதற்குத் தவறும்போது, வெளிவிடப் படாத கருமங்கள் பற்றி அவர் அறிந்திருந்தார் என எண்பிக்கப் பட்டாலன்றி, பணிப்பாளர் அல்லது வேறு ஆள் எவரும், அத்தவறு தல் தொடர்பாக ஏற்பட்ட பொறுப்பு எதனையும் உறுதலாகாது.

(5) இப்பிரிவின் ஏற்பாடுகள் —

(அ) பங்குகள் அல்லது தொகுதிக்கடன்களுக்காக விண்ணப் பித்தோர் பிறருக்காகப் பதவி துறக்கும் உரிமையைக் கொண்டிருந்தாலுஞ்சரி விட்டாலுஞ்சரி, கம்பெனியின் உளதாய் இருக்கின்ற உறுப்பினர்களுக்கான அல்லது தொகுதிக்கடன் வைத்திருப்போருக்கான கம்பெனியின் பங்குகள் தொகுதிக்கடன் தொடர்பில் முற்பகர் வொன்றை அல்லது விண்ணப்பப்படிவத்தின் வழங்குகைக்கு ஏற்புடையனவாதலாகாது ; அத்துடன்

(ஆ) முற்பகர்வொன்று தேதியிடப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தும்வரை தவிர முன்னர் வழங்கப்பட்ட பங்குகளுடன் அல்லது தொகுதிக்கடன்களுடன் எந்தப் பங்குகள் அல்லது தொகுதிக் கடன்கள் எல்லா விதத் திலும் ஒரு சீர்மையினவாக இருக்கின்றனவோ அல் லது இருக்க வேண்டியனவோ அப்பங்குகள் அல்லது தொகுதிக்கடன்கள் தொடர்பான முற்பகர்வொன்றின் வழங்குகைக்கு ஏற்புடையனவாதலாகாது.

ஆனால், மேற்சொல்லப்பட்டவற்றிற்கு அமைவாக, இப் பிரிவின் ஏற்பாடுகள், ஒரு முற்பகர்வுக்கு அல்லது விண்ணப்பப் படிவத்திற்கு, அவை கம்பெனியின் உருவாக்கத்தின்போது அல்லது உருவாக்கம் பற்றிய குறிப்பீட்டுடன் அல்லது அதனை அடுத்து வழங்கப்பட்டாலுஞ்சரி, ஏற்புடையதாதல் வேண்டும்.

(6) இப்பிரிவிலுள்ளது எதுவும், இப்பிரிவினைத் தவிர, இச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் எப்பொறுப்பை ஆளெவரும் உறக் கூடுமோ அல்லது அந்தப் பொறுப்பு எதனையும் வரையறுத்தலோ குறைத்தலோ ஆகாது.

நிபுணரின் இசைவு, ஒதுக்குகை என்பன பற்றிய ஏற்பாடுகள்.

**501.** (1) இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பெனி ஒன்றில், அக்கம்பெனி இலங்கையில் தாபித்தலுஞ்சரி தாபிக் காதுவிட்டாலுஞ்சரி அல்லது அது உருவாக்கப்பட்டபோது தாபிக்குமாயினுஞ்சரி தாபிக்கமாட்டாதாயினுஞ்சரி அதிலுள்ள பங்குகளுக்கான அல்லது தொகுதிக் கடன்களுக்கான ஒப்பப் பணத் திற்கு கொடை முனைவு செய்கின்ற முற்பகர்வு எதனையும்—

(அ) அந்த முற்பகர்வு நிபுணரொருவரால் செய்யப்பட்ட தாகக் கொள்ளப்படுகின்ற கூற்றொன்றை உள்ளடக்கு கின்றவிடத்து, படிவத்தில் உள்ளடக்கப்பட்ட கூற்றுட னும் அத்துடன் எந்தச் சந்தர்ப்பத்தில் அது உள்ளடக் கப்பட்டதோ அந்தச் சந்தர்ப்பத்துடனும் கூடியதான அந்த முற்பகர்வு வழங்குகைக்கு அவரது எழுத்திலான சம்மதத்தைக் கொடுக்காதுவிட்டால் அல்லது பதிவு செய்வதற்காக முற்பகர்வை ஒபடைக்கு முன்பு தனது எழுத்திலான சம்மதத்தை மீளப் பெற்றிருந்தால் அல்லது அவர் கொடுத்த கூற்று முற்பகர்விற் காணப் படாதும் தமது சம்மதத்தை மேற்சொல்லியவாறு மீளப்பெறாதும் விட்டால் ; அல்லது

(ஆ) இதனைப் பின்பற்றி விண்ணப்பமொன்று செய்யப் பட்டிருக்குமிடத்து, அதற்கு ஏற்புடைத்தாகும் வரை யில் 47 ஆம் பிரிவின் தண்டனை ஏற்பாடுகள் தவிர்ந்த ஏற்பாடுகள் அனைத்தினாலும் சம்பந்தப்பட்ட ஆட்கள் யாவரும் பிணிக்கப்படும் வகையில் முற்பகர்வு பயன்கொண்டதாக இல்லாவிட்டால்,

ஆளெவரும் இலங்கையில் வழங்குவது, சுற்றறிவிப்பு விடுவது அல்லது விநியோகிப்பது அவருக்குச் சட்டபூர்வமானதாதலாகாது.

(2) இப்பிரிவில் "நிபுணர்" என்ற சொல், ஒரு எந்திரி, ஒரு மதிப்பீட்டாளர், ஒரு கணக்காளர் என்போரையும் எந்த ஆளினது உயர் தொழிலானது அவரால் செய்யப்படுகின்ற ஒரு கூற்றிற்கு அதிகாரமளிக்கின்றதோ அந்த வேறெவரேனும் ஆளையும் உள்ளடக்குகின்றது என்பதுடன் இப்பிரிவின் நோக்கங்களுக்காக அக்கூற்றானது அத்தகைய முற்பகர்வில் அல்லது அதன் முகப்பில் காணப்படுகின்ற ஏதேனும் அறிக்கையில் அல்லது அமைப்புபுறவிதியில் அல்லது அதில் இணைக்கப்பட்ட அல்லது அதனுடன் வழங்கப்பட்ட குறிப்பீடு மூலம் அடக்கப்பட்டிருந்தால் கூற்றொன்று முற்பகர்வில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

முற்பகர்வினை பதிவு செய்தல்.

**502.** இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படவுள்ள கம்பெனியொன்றில், அக்கம்பெனி இலங்கையில் தொழிலிடமொன்றைத் தாபித்தாலுஞ்சரி, தாபிக்காதுவிட்டாலுஞ்சரி அல்லது அது அமைக்கும்போது தாபித்தாலுஞ்சரி, தாபிக்காதுவிட்டாலுஞ்சரி, இலங்கையில் முற்பகர்வினை வழங்குவதற்கு முன்பு, சுற்றறிவிப்பு விடுவதற்கு முன்பு அல்லது விநியோகிப்பதற்கு முன்பு கம்பெனியின் தவிசாளரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அதன் பிரதியொன்று முகாமைக்குழு வின் தீர்மானத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்றாற் போன்று ஒப்படைக்கப்பட்டும் —

(அ) பிரிவு 501 இன் ஏற்பாடுகளினால் தேவைப்படுத்தப்பட்ட முற்பகர்வின் வழங்குகைக்கான ஏதேனும் சம்மதம் ; அத்துடன்

(ஆ) இதற்கான நான்காம் அட்டவணையின் II ஆம் பாகத்திற்கிணங்க ஏதேனும் அறிக்கையைச் செய்கின்ற ஆட்கள், அதனகத்து அவ்வட்டணையின் 30 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டவாறான அத்தகைய சீராக்கல்

கள் எவற்றையும் செய்துள்ளவிடத்து அல்லது காரணங்காட்டாது சுட்டிக்காட்டியுள்ளவிடத்து, அச் சீராக்கங்களை எடுத்துக்காட்டி அதற்கான காரணங் களைக் கொடுக்கின்றவர்களான அந்த ஆட்களினால் கையொப்பமிடப்பட்ட கூற்றொன்று,

என்பன அதன்மீது புறக்குறிப்பிடப்பட்டால் அல்லது அந்தப் பிரதியுடன் இணைக்கப்பட்டாலன்றி ஒப்பப்பணப் பங்குகளுக்காக அல்லது அக்கம்பெனியின் தொகுதிக் கடன்களுக்காக கொடை முனைவு செய்கின்ற முற்பகர்வு எதனையும் ஆளெவரும் வழங்குதல், சுற்றறிக்கை விடுதல் அல்லது விநியோகித்தல் அவருக்குச் சட்டபூர்வமானதாதலாகாது.

*பிரிவு 500, பிரிவு 501 அல்லது பிரிவு 502 என்பவற்றை மீறுவதற்கான தண்டம்.*

**503.** பிரிவு 500, பிரிவு 501 அல்லது 502 என்பவற்றின் ஏற்பாடுகள் எவற்றினாலும் மீறுகையாக முற்பகர்வொன்றினை வழங்குவதற்கு, சுற்றறிவிப்பு வழங்குவதற்கு அல்லது விநியோகிப்பதற்கு அல்லது பங்குகளுக்கான அல்லது தொகுதிக் கடன்களுக்கான விண்ணப்பத்தை வழங்குவதற்கு தெரிந்து கொண்டு பொறுப்பாகவுள்ள ஆளெவரும் தவறு ஒன்றிற்கு குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப் பட்டதன்மேல் ஐயாயிரம் ரூபாவிற்கு மேற்படாத குற்றப்பணம் ஒன்றிற்கு ஆளாதலும் வேண்டும்.

*முற்பகர்வில் உள்ள பிறழ்கூற்று களுக்கான குடியியல் பொறுப்பு.*

**504.** இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டுள்ள அல்லது கூட்டிணைக்கப்படவுள்ள கம்பெனியொன்றினால், இலங்கையில் அக்கம்பெனி தொழிலிடமொன்றைத் தாபித்தாலுஞ்சரி தாபிக்காதுவிட்டாலுஞ்சரி அல்லது உருவாக்கப்படும் அல்லது உருவாக்கப்படும் போது தாபித்தாலுஞ்சரி, தாபிக்காது விட்டாலுஞ்சரி, கம்பெனியில் உள்ள பங்குகளுக்கான அல்லது தொகுதிக்கடன்களுக்கான ஒப்பப்பணத்திற்கென கொடைமுனைவு செய்கின்ற முற்பகர்வொவ்வொன்றும் 38 ஆம் பிரிவுக்கான குறிப்பீடெதற்கும் பதிலாக 501 ஆம் பிரிவுக்கான குறிப்பீட்டை இடுவதுடன் 41 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் அவற்றிற்கு விசாலித்தலும் வேண்டும்.

*முற்பகர்வுகள் பற்றிய ஏற்பாடுகளின் பொருள் கோடல்.*

**505.** (1) எந்த ஆவணத்தினால் இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டுள்ள கம்பெனி ஒன்றிலுள்ள பங்குகள் அல்லது அதன் தொகுதிக்கடன்கள், பொதுமக்களுக்கு விற்பனைக்காக கொடைமுனைவு செய்யப்படுகின்றனவோ, அந்த ஆவணம் எதுவும், சம்பந்தப்பட்ட கம்பெனியானது இச்சட்டத்தின் கருத்திற்குட்பட்ட கம்பெனியொன்றாகவிருக்குமிடத்து, 43 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பயனைக்கொண்டு கம்பெனியால் வழங்கப்பட்டதொரு முற்பகர்வாகக் கருதப்பட்டுள்ளவிடத்து, அந்த ஆவணமானது, இச்சட்டத்தின் இப்பாகத்தின் நோக்கங்களுக்காக, அக் கம்பெனியால் வழங்கப்பட்ட ஒரு முற்பகர்வாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(2) எந்த ஆள் முதல்வராகவோ முகவராகவோ பங்குகளை அல்லது தொகுதிக்கடன்களை வாங்குவதனை அல்லது விற்பதனைத் தனது சாதாரண தொழிலாகக் கொண்டுள்ளாரோ அந்த ஆள் எவருக்கும், ஒப்பப் பணத்திற்காக அல்லது விற்பனைக்காகச் செய்யப்பட்ட பங்குகளினது அல்லது தொகுதிக் கடன்களினது கொடை முனைவொன்று, இப்பாகத்தின் நோக்கங்களுக்காக பொதுமக்களுக்கச் செய்யப்பட்டதொரு கொடைமுனைவாகக் கருதப்படுதலாகாது.

(3) இப்பாகத்தில் "முற்பகர்வு", "பங்குகள்", "தொகுதிக் கடன்கள்" ஆகிய சொல்லமைப்புக்கள், இச்சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்ட ஒரு கம்பெனி தொடர்பாகப் பயன்படுத்தப்பட்ட கருத்தையொத்த கருத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.

## பாகம் XIX

## மதியுரை ஆணைக்குழு

*மதியுரை ஆணைக் குழுவை நியமித்தல் முதலியன.*

**506.** (1) அமைச்சருக்கு, கம்பெனிகள் தொடர்பான சட்டம் தொடர்பிலான ஏதேனும் கருமங்கள்மீது மதியுரை வழங்கும் நோக்கங்களுக்கென அமைச்சர் —

(அ) ஐந்துக்குக் குறையாதவர்களும் பத்துக்கு மேற்படாதவர்களுமான பொருத்தமான தகைமைகளைக் கொண்ட ஆட்களைக் கொண்ட (இதனகத்துப்பின்னர் "மதியுரை ஆணைக்குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஆணைக்குழுவொன்றை அமைக்கலாம் ; அத்துடன்

(ஆ) சொல்லப்பட்ட மதியுரை ஆணைக்குழுவின் தவிசாளராக இருப்பதற்கென அத்தகைய ஆட்களுள் ஒருவரை நியமிக்கலாம்.

(2) பின்வருவன மதியுரை ஆணைக்குழுவின் கடமைகளாதல் வேண்டும் :—

(அ) அமைச்சரால் காலத்துக்குக்காலம் அதற்கு ஆற்றுப் படுத்தப்படக்கூடியதும் கம்பெனிகள் மற்றும் கம்பெனிகளுக்கு ஏற்புடைத்தான சட்டங்கள் தொடர்பானதுமான ஏதேனும் கருமம் அல்லது விடயத்தின்மீது அமைச்சருக்கு விசாரணை செய்தலும் அறிக்கையிடுதலும் ;

(ஆ) கம்பெனிகள் தொடர்பிலான சட்டத்தைக் காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்தலும் அத்தகைய சட்டத்திற்கு மாற்றம், திரிபு அல்லது சேர்ப்பு செய்வதற்கென அமைச்சருக்குப் பிரேரணைகள் ஆக்குதலும் ;

(இ) பந்தி (அ) அல்லது (ஆ) வில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள விதப்புரைகளைச் செய்வதில், மதியுரை ஆணைக்குழுவானது அவசியமெனக் கருதுகின்றவிடத்து, வர்த்தக மன்றங்களினதும் , உயர் தொழில் ஒழுங்கமைப்புகளினதும், நாணய நிறுவனங்களினதும், அரசாங்க அதிகார சபைகளினதும் பொதுமக்களினதும் கருத்துக்களைக் கலந்தாலோசித்தலும் அவற்றைக் கவனத்திற்கெடுத்துக்கொள்ளுதலும்.

(3) பதிவாளர், மதியுரை ஆணைக்குழுவின் பதவிவழி வந்த உறுப்பினர் ஒருவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் அதன் கூட்டத்தைக் கூட்டுநராகவும் அதன் செயலாளராகவும் பணியாற்றுதலும் வேண்டும்.

(4) உட்பிரிவுகள், (6), (7) மற்றும் (8) இன் ஏற்பாடுகளுக்கமைய, மதியுரை ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் பதவிக்காலம் மூன்றாண்டுகளாதல் வேண்டும்.

ஆயின், பதவி விலகுகின்ற அல்லது பதவியிலிருந்து அகற்றப் படுகின்ற அல்லது வேறு வகையில் பதவியை வறிதாக்குகின்ற உறுப்பினர் ஒருவரின் இடத்திற்கு நியமிக்கப்படும் உறுப்பினர் ஒருவர், அவர் எவ்வுறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அவ்வுறுப் பினரின் முடிவுறாதெஞ்சியிருக்கும் பதவிக்காலத்திற்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(5) காலம் கடத்தலால் தம்பதவியை வறிதாக்குகின்ற மதி யுரைக்குழுவின் உறுப்பினர் எவரும், மீள் நியமனத்திற்குத் தகுதி யுடையவராதல் வேண்டும்.

(6) மதியுரை ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர், அப் பயன்பட அமைச்சருக்கு முகவரியிடப்பட்ட கடிதம் மூலம் பதவி யிலிருந்து விலகலாம்.

(7) மதியுரை ஆணைக்குழுவின் எல்லா உறுப்பினர்களும் நன்னடத்தை உள்ளவராக இருக்கும் காலத்தின்போது பதவி வகித்தல் வேண்டுமென்பதுடன் அமைச்சரினால் பதவியிலிருந்து அகற்றவும் படலாம்.

(8) உறுப்பினர் ஒருவர் சுகவீனம் காரணமாக, இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணத் துக்காத் தமது பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்குத் தற்காலிகமாக இயலாதவராயிருக்கின்றவிடத்து, அமைச்சர், அவரின் இடத்தில் உறுப்பினராகப் பதிற்கடமையாற்றுவதற்கு வேறு எவரேனும் ஆளை நியமிக்கலாம்.

(9) மதியுரை ஆணைக்குழுவானது, இச்சட்டத்தின் இப்பாகத் தின் கீழ் அதன் கடமைகளைக் கொண்டு நடாத்துவதில் மதியுரை ஆணைக்குழுவுக்கு உதவுவதற்கு பொருத்தமானவர்களென அது கருதுகின்ற அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் அமைச்சரின் அங்கீகாரத்துடன் நியமிக்கலாம்.

(10) மதியுரை ஆணைக்குழுவின் உறுப்பினர்கள், அதன் செய லாளர் மற்றும் வேறு அலுவலர்கள் மற்றும் செயலாளர்களுக்கு அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஊதியம் நிதியத்திலிருந்து வழங்கப்படலாம்.

## பாகம் XX

### கம்பெனிகள் பிணக்குகள் சபை

கம்பெனிகள் பிணக்குகள் சபை.

**507.** (1) அமைச்சர், இச்சட்டத்தின் இப்பாகத்தின் ஏற்பாடுகளினால் அத்தகைய சபைக்கு அளிக்கப்பட்டுள்ள பணிகளைக் கொண்டுநடாத்தும் நோக்கங்களுக்காக, (இச்சட்டத்தில் "கம்பெனிகள் பிணக்குகள் சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) சபை ஒன்றை அமைக்கலாம்.

(2) கம்பெனிகள் பிணக்குகள் சபை, கம்பெனிகள் அல்லது கம்பெனிகளின் நிருவாகம் தொடர்பிலான சட்டம் தொடர்பில் உள்ளபடியான அனுபவத்துடன் அமைச்சரினால் நியமிக்கப்படும் மூன்றிற்கும் குறையாததும் ஐந்திற்கு மேற்படாததுமான ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) அமைச்சர், சபையின் தலைவராக, கம்பெனிகள் பிணக்குகள் சபையின் உறுப்பினர்களுள் ஒருவரை நியமிக்கலாம்.

(4) ஆறாம், (7) ஆம் மற்றும் (8) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய, கம்பெனிகள் பிணக்குகள் சபையின் உறுப்பினர்களின் பதவிக்காலம் ஐந்தாண்டுகளாகவிருத்தல் வேண்டும்.

ஆயின், பதவி விலகுகின்ற அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுகின்ற அல்லது வேறு வகையில் பதவியை வறிதாக்குகின்ற உறுப்பினர் ஒருவரின் இடத்தில் நியமிக்கப்படும் உறுப்பினர் ஒருவர் அவர் எவ்வுறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அவ்வுறுப்பினரின் பதவிக்காலத்தின் முடிவுறதாதெஞ்சியுள்ள காலத்திற்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(5) காலம் கடத்தலால் தமது பதவியை வறிதாக்குகின்ற கம்பெனிகள் பிணக்குகள் சபையின் உறுப்பினர் எவரும், மீள் நியமனத்திற்கு தகுதியுடையவராதல் வேண்டும்.

(6) கம்பெனிகள் பிணக்குகள் சபையின் உறுப்பினர் ஒருவர் அமைச்சருக்கு முகவரியிட்டு அப்பயன்பட எழுதப்படும் கடிதம் மூலம் பதவியிலிருந்து விலகலாம்.

(7) கம்பெனிகள் பிணக்குகள் சபையின் உறுப்பினர் ஒருவர் நன்னடத்தை உள்ளவராக இருக்கும் காலத்தின்போது பதவி வகித்தல் வேண்டும் என்பதுடன் அமைச்சரினால் பதவியிலிருந்து அகற்றவும்படலாம்.

(8) சுகவீனம் காரணமாக, இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறேதேனும் காரணத்துக்காக தமது பதவிக்குரிய கடமைகளைத் தற்காலிகமாகப் புரிய இயலாதவராக இருக்குமிடத்து அமைச்சர், வேறோர் ஆளை அவரின் இடத்தில் உறுப்பினர் ஒருவராகச் செயலாற்றுவதற்கு நியமிக்கலாம்.

(9) கம்பெனிகள் பிணக்குகள் சபையானது, அமைச்சரின் அங்கீகாரத்துடன், இச்சட்டத்தின் இப்பாகத்தின் கீழ் கம்பெனிகள் பிணக்குகள் சபையின் கடமைகளைக் கொண்டு நடாத்துவதில் உதவுவதற்குப் பொருத்தமானவர்களென அது கருதுகின்ற அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமிக்கலாம்.

(10) கம்பெனிகள் பிணக்குகள் சபையின் உறுப்பினர்களுக்கும், அதன் அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஊதியம் நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்படலாம்.

*சபை உறுப்பினர்கள் பிணக்குகளை மத்தியஸ்தம் செய்யலாம்.*

**508.** (1) (அ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு பயன் கொடுப்பதில் எழுகின்ற ; அல்லது

(ஆ) கம்பெனி எதனதும் அலுவல்கள் அல்லது முகாமை தொடர்பிலான,

பிணக்கொன்றிற்கான திறத்தவர்கள், கம்பெனிகள் பிணக்குகள் சபையின் தலைவரின் அங்கீகாரத்துடன் மத்தியஸ்தத்திற்காக சபையின் உறுப்பினர் ஒருவருக்கு முன் அத்தகைய பிணக்கை ஆற்றுப்படுத்தலாம்.

(2) நீதிமன்றமொன்றானது, அது பொருத்தமெனக் கருதினால் அவ்வழக்கு நடவடிக்கைக்கான எல்லாத் திறத்தவர்களின் சம்மதத்துடன், கம்பெனிகள் பிணக்குகள் சபையின் உறுப்பினர் ஒருவருக்கு

முன் மத்தியஸ்தத்திற்கென, அத்தகைய நீதிமன்றத்தின் முன் முடிவுறாதுள்ள ஏதேனும் வழக்கு நடவடிக்கைகளை ஆற்றுப்படுத்தலாம். வழக்கு நடவடிக்கைகள், ஒன்றில் இணக்கமொன்று காணப்படும்வரை அல்லது இணக்கம் ஒன்று கிடைக்கவில்லை என அத்தகைய சபையினால் நீதிமன்றத்திற்கு அறிவித்தலொன்று வழங்கப்படும்வரை நிறுத்தி வைக்கப்படுதல் வேண்டும்.

(3) பிணக்கொன்றிற்கான அல்லது இப்பிரிவின் கீழ் மத்தியஸ்தத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட வழக்கு நடவடிக்கைக்கான திறத்தவர்கள் அப்பிணக்கை அல்லது வழக்கு நடவடிக்கையை இணங்குவதற்கு உடன்படுகின்றவிடத்து, —

(அ) இணக்க உடன்படிக்கையானது எழுத்தில் பதியப்பட்டு திறத்தவர்களாலும் மத்தியஸ்தராகச் செயலாற்றிய, சபையின் உறுப்பினராலும் ஒப்பமிடப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) இணக்க உடன்படிக்கையின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி ஒன்று நீதிமன்றத்தில் கோப்பிடப்பட்டு அது நீதிமன்றத்தின் தீர்ப்பொன்று என்றாற்போன்று பயன் கொண்டதாதல் வேண்டும்.

(4) இப்பிரிவின்கீழ் மத்தியஸ்தத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் பிணக்கில் வழக்கு நடவடிக்கைகளின் நடவடிக்கைக்கான நடவடிக்கைமுறையை விதித்துரைக்கும் ஒழுங்கு விதிகள் ஆக்கப்படலாம்.

(5) இப்பிரிவின்கீழ் மத்தியஸ்தத்திற்கு ஆற்றப்படுத்தப்பட்ட பிணக்கு அல்லது வழக்கு நடவடிக்கை ஒன்றிற்கான திறத்தவர்கள், மத்தியஸ்தத்திற்கு ஆற்றப்படுத்தப்பட்டதிலிருந்து மூன்று மாதங்களுக்குள் அல்லது அவ்வெல்லாத் திறத்தவர்களினாலும் உடன்பட்டுக்கொள்ளப்பட்ட ஏதேனும் நீடிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் அப்பிணக்கை அல்லது வழக்கு நடவடிக்கையை இணங்குவதற்கு உடன்படாதிருக்கும் இடத்து, சபையின் உறுப்பினர் —

(அ) திறத்தவர்களுக்கு ; அத்துடன்

(ஆ) அவ்விடயமானது நீதிமன்றத்தினால் மத்தியஸ்தத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டிருந்தால், அந்நீதிமன்றத்திற்கு,

அம்மத்தியஸ்தமானது இணக்கமொன்றை ஏற்படுத்தவில்லை என உடனடியாக அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.

மத்தியஸ்த நடவடிக்கை தொடர்பில் சிறப்புரிமை.

**509.** கம்பெனிகள் பிணக்குகள் சபையின் உறுப்பினர் ஒருவரின் முன்னிலையிலான மத்தியஸ்தமொன்றின்போது அல்லது அதன் தொடர்பில் செய்யப்பட்ட கூற்றுக்கள் யாவும் —

(அ) மத்தியஸ்தத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட பிணக்கு அல்லது வழக்கு நடவடிக்கையின் தீர்வொன்றை அடையும் நோக்கத்திற்காகச் செய்யப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும் ;

(ஆ) மத்தியஸ்தத்திற்கான எல்லாத் திறத்தவர்களின் சம்மதமன்றி, மத்தியஸ்தத்திற்கான திறத்தவர்களுக்கும் அவர்களது சட்ட ஆலோசகர்களுக்கும் தவிர ஆள் எவருக்கும் வெளிவிடப்படுதலாகாது ;

(இ) மத்தியஸ்தத்திற்கான எல்லாத் திறத்தவர்களின் சம்மதமன்றி ஏதேனும் குடியியல் அல்லது குற்றவியல் வழக்கு நடவடிக்கைகள் சான்றாக அனுமதிக்கப்படுதலாகாது.

மத்தியஸ்தம் தொடர்பில் கொடுபடற்பாலதான கட்டணங்கள்.

**510.** (1) பிரிவு 508 இன் கீழ் விடயமொன்று மத்தியஸ்தத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளவிடத்து, திறத்தவர்கள், கம்பெனிகள் பிணக்குகள் சபைக்கு உறப்பட்ட செலவுகள் தொடர்பில் அத்தகைய தொகையையும் சபையின் தலைவரினாலும் மத்தியஸ்தத்திற்கான திறத்தவர்களினாலும் உடன்பட்டுக்கொள்ளப்படக்கூடியவாறான அத்தகைய கட்டணத்தையும் செலுத்துதல் வேண்டும். திறத்தவர்கள் ஏதேனும் முரணான உடன்பாட்டிற்கு அமைவாக செலுத்த வேண்டிய செலவுகளையும் கட்டணங்களையும் சமமாக தாங்கிக் கொள்ள வேண்டும்.

(2) மூன்றாம் உட்பிரிவுக்கமைய, இப்பிரிவின்கீழ் கொடுபடற்பாலதான தொகைகள் எல்லாம் இச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட நிதியத்திற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

(3) தலைவர், மத்தியஸ்தம் ஒன்று தொடர்பில் இப்பிரிவின்கீழ் கொடுபடற்பாலதான ஏதேனும் கட்டணமானது மத்தியஸ்தராகச் செயலாற்றிய சபையின் உறுப்பினருக்கு முழுமையாக அல்லது பகுதியளவில் சபையினால் செலுத்தப்படுதல் வேண்டுமெனப் பணிக்கலாம்.

## பாகம் XXI

### தவறுகள்

*பல்லினத் தவறுகள்*

*பிழையான கூற்றிற்கான தண்டனை.*

**511.** இச்சட்டத்தின் நோக்கங்களினால் அல்லது நோக்கங்களுக்காகத் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் விபரத்திரட்டில், அறிக்கையில், சான்றிதழில், ஐந்தொகையில் அல்லது வேறு ஆவணத்தில், அது பொய்யானதென அறிந்து கொண்டு வேண்டுமென்றே ஏதேனும் முக்கியமான விவரத்தில் பொய்யான ஒரு கூற்றை எவரேனும் ஆள் செய்கின்றவிடத்து, அவர் தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், பத்து இலட்சம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஐந்து ஆண்டுகளுக்கு மேற்படாத காலப்பகுதி ஒன்றிற்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

*பதிவேடுகளைப் பொய்யாக்குவதற்கான தண்டம்.*

**512.** ஆளொருவருக்கு மோசடி செய்யும் அல்லது ஏமாற்றும் உளக்கருத்துடன் —

(அ) கம்பெனி ஒன்றிற்குச் சொந்தமான அல்லது கம்பெனி ஒன்று தொடர்பிலான ஏதேனும் இடாப்பு, கணக்குப் பதிவேடுகள், கணக்குப் புத்தகம், பத்திரம் அல்லது வேறு ஆவணம் என்பவற்றை சேதப்படுத்துகின்ற, கைவிட்டுவிடுகின்ற, உருவழிக்கின்ற, மாற்றுகின்ற அல்லது பொய்யாக்குகின்ற அல்லது அழிப்பதற்கு, சேதப்படுத்துவதற்கு, மாற்றுவதற்கு ஒரு திறத்தவராயிருக்கின்ற ; அல்லது

(ஆ) கம்பெனிக்குச் சொந்தமான அல்லது கம்பெனி தொடர்பான ஏதேனும் இடாப்பில் கணக்குப் பதிவேடு களை கணக்குப் புத்தகத்தில் அல்லது வேறு ஆவணத் தில் பொய்யான பதிவேடு ஒன்றை ஆக்குகின்ற அல் லது ஆக்குவதற்கு திறத்தவர் ஒருவராக இருக்கின்ற,

ஆள் எவரும் தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டு மென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், பத்து இலட்சம் ரூபாவிற்கு மேற்படாத குற்றப்பப்பணம் ஒன்றிக்கு அல்லது ஐந்தாண்டுகளுக்கு மேற்படாத காலப்பகுதியொன்றிற்கான மறியற் றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

*"வரையறுக்கப் பட்டது" என்ற சொல்லை முறைகேடாகப் பயன்படுத்து வதற்குள்ள தண்டம்.*

**513.** "வரையறுக்கப்பட்டது" என்ற சொல்லை அல்லது அதனு டைய ஏதேனும் குறுக்கத்தை அல்லது போலியை கடைசிச் சொல் லாகக் கொண்ட ஏதேனும் பெயரின் அல்லது மகுடப் பெயரின்கீழ் ஆள் அல்லது ஆட்கள் எவரும் வியாபாரம் செய்கின்றவிடத்து அல்லது தொழிலைக்கொண்டு நடாத்துகின்றவிடத்து, அவ்வாள் அல்லது அவ்வாட்கள், வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் முறை யாகக் கூட்டிணைக்கப்பட்டிருந்தாலொழிய, தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப் பட்டதன்மேல் ஐம்பதினாயிரம் ரூபாவிற்கு மேற்படாத குற்றப் பணமொன்றிற்கு ஆளாதலும் வேண்டும்.

## தவறுகள் பற்றிய பொது ஏற்பாடுகள்

*குறித்தசில தவறுகளை இணங்குதல்.*

**514.** (1) ஏதேனும் கம்பெனியானது, ஏதேனும் கணக்கை, ஆவணத்தை அல்லது விவரத் திரட்டைப் பதிவாளரிடம் கோப் பிடும்படி அல்லது அவருக்கு அனுப்பும்படி அல்லது ஏதேனும் கருமம் பற்றி அவருக்கு அறிவித்தல் கொடுக்கும்படி அதனைத் தேவைப்படுத்துகின்ற இச்சட்டத்துக்கான ஏதேனும் ஏற்பாட்டுடன் இணங்கியொழுகுவதில் தவறிழைத்துள்ளதோடு அத்தவறுகை காரணமாக இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிந்துள்ள விடத்து, பதிவாளர், தகுந்ததென அவர் கருதினால் அத்தகைய தவறு தொடர்பாக அக்கம்பெனிக்கு அல்லது கம்பெனியின் எவ ரேனும் அலுவலருக்கெதிராக நீதிமன்றத்தில் நடவடிக்கைகளைத் தொடருவதற்குப் பதிலாக அல்லது அத்தகைய நடவடிக்கைகள்

ஏற்கனவே தொடரப்பட்டிருந்தால் அவற்றைத் தொடர்ந்து நடாத்துவதற்குப் பதிலாக, அத்தவறை இணக்குகையில் பதிவாளர் தகுந்ததெனக் கருதக்கூடியவாறான அத்தகைய பணத்தொகையை அக்கம்பெனியிடமிருந்து அல்லது அலுவலரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். அவ்வாறு ஏற்றுக்கொள்ளப்படும் ஏதேனும் தொகையானது இச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்படும் நிதியத்தில் வரவுவைக்கப்படல் வேண்டும்.

(2) ஏதேனும் தவறை இணக்குகையில் (1) ஆம் உட்பிரிவுகளின் கீழ் பதிவாளர் ஏதேனும் பணத்தொகையைப் பெற்றுக்கொண்டுள்ளவிடத்து, அக்கம்பெனிக்கு அல்லது கம்பெனியின் எவரேனும் அலுவலருக்கெதிராக அத்தவறு தொடர்பில் வழக்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் ஆகாது அல்லது ஏலவே எடுக்கப்பட்டிருப்பின் தொடர்ந்து நடாத்தப்படுதலாகாது.

(3) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் கீழான தவறொன்றை இணக்குகையில் கொடுபடற்பாலதான ஏதேனும் பணத்தொகை, பதிவாளரினால் அதனைக் கொடுப்பதற்கென நிர்ணயிக்கப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள்ளாக அல்லது பதிவாளர் அனுமதிக்கக்கூடிய அத்தகைய நீடித்த காலப்பகுதிக்குள்ளாகச் செலுத்தப்படாதிருக்கின்றவிடத்து, பதிவாளர் கொடுப்பனவில் ஏற்பட்ட அத்தவறுகை பற்றி நீதிவான் ஒருவருக்கு அறிக்கையிடலாம். செலுத்தப்படாத தொகையானது, நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட குற்றப்பணம் ஒன்றென்றாற்போன்று அதே முறையில் அத்தவறுகை தொடர்பில் கம்பெனியிடமிருந்து அல்லது கம்பெனியின் எவரேனும் அலுவலரிடமிருந்து அறவிடப்படுதல் வேண்டும் என்பதுடன் தவறுகையிலுள்ள அப்பணமானது நிதியத்தில் வரவு வைக்கப்படுதல் வேண்டும் என நீதிமன்றம் பணித்தலும் வேண்டும்.

**515.** வேறேதேனும் சட்டத்தில் முரணாக அடங்கியுள்ளது எப்படியிருப்பினும் இச்சட்டத்தின்கீழான தவறுகள் எல்லாம் நீதிவானொருவரால் சுருக்க முறையில் விளங்கப்படலாம். *சுருக்க முறையாக விளங்கற்பாலனவான தவறுகள்.*

குற்றப் பணங்களை விதித்தலும் பிரயோகித்தலும்.

**516.** (1) நீதிமன்றமானது அதன் சாதாரண நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில் விதிக்கக்கூடிய குற்றப்பணத்தொகையை அக்குற்றப்பணம் விஞ்சுகின்றதென்பது எப்படியிருப்பினும், இச் சட்டத்தின்கீழ் ஏதேனும் தவறுக்காக நீதிமன்றத்தில் குற்றப்பணமொன்று நீதிமன்றத்தினால் விதிக்கப்படலாம்.

(2) இச்சட்டத்தின்கீழ் ஏதேனும் குற்றப்பணத்தை விதிக்கின்ற நீதிமன்றமானது, அக்குற்றப்பணம் முழுவதும் அல்லது அதன் ஏதேனும் பாகம், வழக்கு நடவடிக்கைச் செலவுகளைக் கொடுப்பதில் அல்லது கொடுக்கும்முகமாக அல்லது எவர்களுடைய தகவலின்பேரில் அல்லது எவர்களுடைய துடர்ச்சியில் அக் குற்றப்பணம் அறவிடப்பட்டதோ அவ்வாட்களுக்கு வெகுமதி கொடுப்பதில் அல்லது கொடுக்குமுகமாகப் பிரயோகிக்கப்படல் வேண்டுமெனப் பணிக்கலாம்.

தனிப்பட்ட வழக்குத் தொடுநர்கள் தொடர்பிலான பேணல்கள்.

**517.** சட்டத்துறைத் தலைமையதிபதியினால் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளைத் தொடுத்தல் தொடர்பாக இச்சட்டத்தில் உள்ளது எதுவும் ஏதேனும் அத்தகைய நடவடிக்கைகளைத் தொடுப்பதில் இருந்து அல்லது மேற்கொண்டு நடாத்துவதிலிருந்து எவரேனும் ஆளைத் தடைசெய்வதாகக் கொள்ளப்படுதலாகாது.

சிறப்புரிமைத் தகவல்கள் தொடர்பிலான பேணல்கள்.

**518.** இச்சட்டத்தின்கீழ் எவரேனும் ஆளுக்கெதிராகச் சட்டத்துறைத் தலைமையதிபதியினால் வழக்கு நடவடிக்கைகள் தொடுக்கப்பட்டுள்ளவிடத்து, குற்றஞ்சாட்டப்பட்டுள்ளவருக்கான சட்டத்தரணியாகச் செயலாற்றிய எவரேனும் ஆளை, அத்தன்மையில் அவருக்குத் தெரிவிக்கப்பட்ட சிறப்புரிமைத் தகவல் எதனையும் வெளியிடுமாறு இச்சட்டத்திலுள்ளது எதுவும் தேவைப்படுத்துவதாகக் கொள்ளப்படுதலாகாது.

## பாகம் XXII

### பல்லினமானவை

### *இருபதுக்கு மேற்பட்ட உறுப்பினர்களோடு கூடிய பங்காண்மையைத் தடை செய்தல்*

இருபதுக்கு மேற்பட்ட உறுப்பினர்களோடு கூடிய பங்காண்மையை தடைசெய்தல்.

**519.** (1) இருபதுக்கு மேற்பட்ட ஆட்களைக் கொண்டுள்ள கம்பெனி, கழகம் அல்லது பங்காண்மை எதுவும், இச்சட்டத்தின் கீழ் அல்லது வேறு ஏதேனும் சட்டவாக்கத்தின்கீழ் கம்பெனியொன்றாகப் பதிவு செய்யப்பட்டிருந்தாலொழிய, அக்கம்பெனியினால்,

கழகத்தினால் அல்லது பங்காண்மையினால் அல்லது அதன் தனிப்பட்ட உறுப்பினர்களினால் ஆதாயம் பெறுதலை அதனது குறிக்கோளாகக் கொண்டுள்ள ஏதேனும் தொழிலைக் கொண்டு நடாத்தும் நோக்கத்துக்காக அமைக்கப்படலாகாது.

(2) இலங்கைக்கு வெளியே அமைக்கப்பட்டு, இருபதுக்கு மேற்பட்ட ஆட்களைக் கொண்டுள்ள கம்பெனி, கழகம் அல்லது பங்காண்மை எதுவும் —

(அ) இலங்கைக்கு வெளியே கம்பெனி ஒன்றாக முறையாகக் கூட்டிணைக்கப்பட்டும் ; அத்துடன்

(ஆ) இலங்கையினுள் தாபிக்கப்பட்ட தொழிலிடத்தைக் கொண்டும்,

இருந்தாலொழிய, அக்கம்பெனியினால், கழகத்தினால் அல்லது அதன் தனிப்பட்ட உறுப்பினர்களினால் ஆதாயம் பெறுதலை அதன் குறிக்கோளாகக் கொண்டுள்ள ஏதேனும் தொழிலை இலங்கையில் கொண்டு நடாத்துதல் ஆகாது.

(3) ஓராம் அல்லது (2) ஆம் உட்பிரிவுகளில் உள்ளது எதுவும் —

(அ) அதன் ஒவ்வொருவரும் சட்டத்தரணி ஒருவராகவுள்ள ஆட்களைக்கொண்டுள்ள, சட்டத்தரணிகளாகத் தொழிலைக்கொண்டு நடாத்தும் நோக்கத்திற்காகத் உருவாக்கப்பட்ட ஒரு பங்காண்மைக்கு ;

(ஆ) அதன் ஒவ்வொருவரும் பட்டயக் கணக்காளராகவுள்ள ஆட்களைக்கொண்டுள்ள, கணக்காளராகத் தொழிலைக் கொண்டு நடாத்தும் நோக்கத்திற்காக உருவாக்கப்பட்ட ஒரு பங்காண்மைக்கு ;

(இ) அதன் ஒவ்வொருவரும் அந்த உரிமமளிக்கப்பட்ட பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையில் உறுப்பினரொருவராகவுள்ள ஆட்களைக் கொண்டுள்ள, உரிமமளிக்கப்பட்ட பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை ஒன்றின் உறுப்பினர்களாக தொழிலைக் கொண்டுநடாத்தும் நோக்கத்திற்காக உருவாக்கப்பட்ட ஒரு பங்காண்மைக்கு ;

(ஈ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஆட்களைக் கொண்டுள்ள, விதித்துரைக்கப்படக்கூடிய ஏதேனும் நோக்கத்திற்காக உருவாக்கப்பட்ட ஒரு பங்காண்மைக்கு,

ஏற்புடைத்தாதலாகாது.

(4) இருபதுக்கு மேற்பட்ட ஆட்களைக்கொண்டுள்ள ஏதேனும் கம்பெனி, கழகம் அல்லது பங்காண்மை (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக அமைந்திருக்குமிடத்து அல்லது (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக ஏதேனும் தொழிலைக் கொண்டு நடாத்துகின்றவிடத்து, அத்தகைய ஆட்கள் ஒவ்வொருவரும் —

(அ) தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐம்பதினாயிரம் ரூபாவிற்கு மேற்படாத குற்றப்பணம் ஒன்றிற்கு ஆளாதலும் வேண்டும் ; அத்துடன்

(ஆ) பந்தி (அ) என்பதற்குப் பங்கமின்றி, அவர் உறுப்பினராக இருக்கின்ற அல்லது இருந்த கம்பெனியின், கம்பெனியின் கழகத்தின் அல்லது பங்காண்மையின் தனிசுகள் முழுவதையும் கொடுப்பதற்கும் தனித் தனியே பொறுப்புடையவர்களாதல் வேண்டுமென்பதுடன், கம்பெனியின், கழகத்தின் அல்லது பங்காண்மையின் வேறெவரேனும் உறுப்பினரின் துடர்ச்சியில் இணைக்கப்படாமலேயே அதற்கிணங்க அவர்களுக்கெதிராக வழக்குத் தொடரவும் படலாம்.

### நீதிமன்றத்துக்கான விண்ணப்பமும் ஆற்றுப்படுத்துகையும்

நடவடிக்கை முறை.

**520.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் நீதிமன்றத்திற்குச் செய்யப்படும் விண்ணப்பம் அல்லது ஆற்றுப்படுத்துகை ஒவ்வொன்றும், வேறுவகையாக வெளிப்படையாக ஏற்பாடு செய்யப்பட்டாலொழிய, அல்லது வேறுவகையாக நீதிமன்றம் பணித்தாலொழிய, மனுவும் சத்தியக்கடதாசியும் மூலமாதல் வேண்டு

மென்பதுடன், எவ்வாளுக்கெதிராக அத்தகைய விண்ணப்பம் அல்லது ஆற்றுப்படுத்துகை செய்யப்படவேண்டுமோ அவ்வாள் ஒவ்வொருவரும் மனுவில் எதிர்வாதியாகப் பெயர் குறிப்பிடப் படுதலும் அது பற்றிய அறிவித்தல் கொடுக்கப்படுதலும் வேண்டு மென்பதுடன், அத்தகைய விண்ணபத்தை அல்லது ஆற்றுப் படுத்துகையை ஆட்சேபிப்பதற்கு உரித்துடையவர்களாதலும் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் கீழான அல்லது கழகத்திற்கு இடைநேர் விளைவான ஏதேனும் வழக்கு நடவடிக்கையின்போது நீதிமன் றத்திற்கு செய்யப்படும் விண்ணப்பம் அல்லது ஆற்றுப்படுத்துகை ஒவ்வொன்றும், எழுத்தில் பிரேரணை மூலம் செய்யப்படுதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழ் நீதிமன்றத்திற்குச் செய்யப்படும் ஏதே னும் விண்ணப்பம் அல்லது ஆற்றுப்படுத்துகையில் அத்தகைய விண்ணப்பம் அல்லது ஆற்றுப்படுத்துகையின் எந்த நடவடிக்கை நிலையிலும் கேட்கப்படுவதற்கு அல்லது பிரதிநிதித்துவப்படுத் தப்படுவதற்கு பதிவாளர் உரித்துடையவராதல் வேண்டும்.

(4) இச்சட்டத்தின்கீழ் விண்ணப்பம் அல்லது ஆற்றுப்படுத் துகை என்ற வகையாக நீதிமன்றத்தின் முன்னரான எல்லா வழக்கு நடவடிக்கைகளிலும், செலவு தொகைகளுக்கான கட்டளை எதுவும் பதிவாளருக்கெதிராகச் செய்யப்படுதலாகாது.

*இடைக்கால நிவாரணம் வழங்கல்.*

**521.** (1) இச்சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட நீதிமன்றத்திற்கான ஏதேனும் விண்ணபத்தில் அல்லது ஆற்றுப்படுத்துகையில் இறுதிக் கட்டளை ஒன்று ஆக்கப்படும் வரை (2) ஆம், (3) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய, வழக்கு நடவடிக்கை களுக்கான திறத்தவர் ஒருவரின் விண்ணப்பத்தின்மேல், நீதிமன்றமானது அது, பொருத்தமானதெனக் கருதுகின்ற வாறான தடைப்படுத்தற் கட்டளையொன்று உட்பட அத்தகைய இடைக்கால கட்டளையை ஆக்கலாம். அத்தகைய கட்டளையானது, நீதிமன்றத்தின் தற்றுணிபில் மறுகட்சியின்றி அல்லது எதிர் வாதிக்கான அறிவித்தலின் பின்னர் செய்யப்படலாம். எதிர்வாதி மனுதாரருக்கான அறிவித்தலுடன் மறுகட்சிக்காரரில்லா கட்டளையை நீக்குவதற்கான அல்லது வேறுபடுத்துவதற்கான கட்டளை ஒன்றிற்காக விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.

(2) நாடப்படும் கட்டளையானது வழங்கப்பட்டிருந்தாலும் விண்ணப்பகாரர் பொறுத்துக்கொள்வதற்கு நியாயமானதும் ஒப்புரவானதுமென நீதிமன்றம் கருதுகின்ற இழப்பை அல்லது சேதத்தை கம்பெனி அல்லது வேறு ஆளை விண்ணப்பதாரர் நட்டோத்திரவாதம் செய்வார் எனும் பொறுப்பேற்பு ஒன்றை எழுத்தில் விண்ணப்பதாரர் முதலில் நீதிமன்றத்திற்குச் செய் திருந்தாலன்றி, பங்குதாரரொருவரின் முன்னைய பங்குதார ரொருவரின் அல்லது பணிப்பாளரொருவரின் விண்ணப்பத்தின் மீது, இச்சட்டத்தின் கீழ், நீதிமன்றமானது இடைக்காலத் தடைக் கட்டளை ஒன்றை அல்லது வேறு ஏதேனும் படிவத்திலான இடைக்காலக் கட்டளை ஒன்றை வழங்குதலாகாது.

(3) நீதிமன்றமானது, இடைக்காலத் தடைக்கட்டளை ஒன்றை அல்லது வேறு ஏதேனும் வடிவத்திலான இடைக்காலக் கட்டளை ஒன்றை வழங்க முன்னர் அல்லது வழங்கும் நேரத்தில், (2) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட பொறுப்பேற்பிற்கு விண்ணப்பதாரர் வழங்கவேண்டிய பிணைப்பொறுப்பின் தொகையை நிர்ணயித்தல் வேண்டும். பிணைப்பொறுப்பானது, நீதிமன்றத்தில் நிதிகளை வைப்பிலிடுதல்மூலம் அல்லது வங்கி உத்தரவாதமொன்றை ஏற்பாடுசெய்வதன்மூலம் அல்லது நீதிமன்றம் போதுமானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய வேறுமுறையில் ஏற்பாடுசெய் யப்படலாம்.

(4) நீதிமன்றமானது காலத்திற்குக்காலம், கம்பெனியின் அல்லது இடைக்காலக் கட்டளை ஒன்றைச் செய்வதன் அல்லது இடைக்காலக் கட்டளை ஒன்று தொடர்ந்து வலுவிலிருப்பதன் விளைவாக இழப்பை அல்லது சேதத்தை அனுபவிக்கக்கூடிய வாறான வேறெவரேனும் ஆளின் விண்ணப்பத்தின்மீது, (2) ஆம் உட்பந்தியின்கீழ் வழங்கப்பட்ட பொறுப்பேற்கு விண்ணப்பகார ரினால் வழங்கப்படவேண்டிய பிணைப்பொறுப்புத் தொகையை அதிகரிக்கலாம். வழங்கப்படவேண்டிய பிணைப்பொறுப்புத் தொகையினை அதிகரிப்பதற்கான கட்டளை ஒன்றானது செய்யப் பட்டுள்ளவிடத்து, அதிகரிக்கப்பட்ட பிணைப்பொறுப்பானது நீதிமன்றத்தினால் குறித்துரைக்கப்படும் காலப்பகுதியினுள் வழங்கப்பட வேண்டும் என்பது இடைக்காலக் கட்டளையின் தொடர்ச்சியின் நிபந்தனை ஒன்றாதல் வேண்டும்.

(5) நீதிமன்றமானது -

(அ) இரண்டாம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட பொறுப் பேற்பு ஒன்றை வலுவுறுத்துவதன்மூலம் ;

(ஆ) மூன்றாம் உட்பிரிவின்கீழ் பிணைப்பொறுப்பாக வைப்பிலிடப்பட்டுள்ள நிதிகளிலிருந்து எவரேனும் ஆளுக்கான கொடுப்பனவுக்காக ;

(இ) மூன்றாம் உட்பிரிவின்கீழ் பிணைப்பொறுப்பாக வைப்பிலிடப்பட்ட ஏதேனும் நிதிகளை வட்டி ஈட்டும் ஒரு வங்கிக்கணக்கில் முதலீடு செய்வதற்காக ;

நீதியானதும் ஒப்புரவானதுமென அது கருதுகின்றவாறான அத்தகைய கட்டளையை ஆக்கலாம்.

சட்டத்தரணிகளுக்கும் வங்கியாளர்களுக்குமான பேணல்கள்.

**522.** இச்சட்டத்தில் உள்ளது எதுவும், பதிவாளருக்கு அல்லது பதிவாளரினால் நியமிக்கப்பட்ட பரிசோதகர் ஒருவருக்கு எவரேனும் ஆளினால் -

(அ) அவர் சட்டத்தரணி ஒருவராக இருந்தால் தமது வழக்காடுநரின் பெயரையும் முகவரியையும் தவிர சட்ட உயர்தொழில் சிறப்புரிமை காரணமாக எத் தகவலை நீதிமன்ற நடவடிக்கைகளில் வெளியிட மறுப்பதற்கு உரித்துடையவராக இருப்பாரோ அத் தகவல் எதுவும் ; அல்லது

(ஆ) நீதிமன்றம் வேறுவகையாகக் கட்டளையிட்டால் ஒழிய கம்பெனி தவிர்ந்த அதன் வாடிக்கையாளர்கள் எவரினதும் அலுவல்கள் பற்றிய ஏதேனும் தகவலை கம்பெனியின் வங்கியாளர்களினால்,

வெளியிடுமாறு தேவைப்படுத்துதல் ஆகாது.

*கம்பெனிமீது ஆவணங்களைச் சேர்ப்பித்தல்.*

**523.** ஆவணமொன்று -

(அ) கம்பெனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தில் விட்டுவைக்கப்படுவதன்மூலம் அல்லது அலுவலகத்திற்கு அஞ்சல் மூலம் அனுப்பப்படுவதன்மூலம் கம்பெனி ஒன்றின்மீது சேர்ப்பிக்கப்படலாம் ; அல்லது

(ஆ) கம்பெனியின் எவரேனும் பணிப்பாளரிடம், செயலாளரிடம், முகாமையாளரிடம் அல்லது வேறு அலுவலரிடம் ஒப்படைப்பதன்மூலம் அல்லது அவருக்கு அஞ்சலில் அனுப்பப்படுவதன்மூலம் கம்பெனி ஒன்றன்மீது சேர்ப்பிக்கப்படலாம் ; அல்லது

(இ) அதனை ஒப்படைப்பதன்மூலம் அல்லது அஞ்சலில் அனுப்புவதன்மூலம் அத்தகைய பணிப்பாளர், செயலாளர், முகாமையாளர் அல்லது வேறு அலுவலர்மீது எக்காரணத்துக்காகவேனும் மேற்சொல்லப்பட்டவாறாகச் சேர்ப்பிக்கப்பட முடியாதவிடத்து, நீதிமன்றத்தினால் கட்டளையிடப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் சேர்ப்பிக்கப்படுவதன்மூலம் கம்பெனி ஒன்றன்மீது சேர்ப்பிக்கப்படலாம்.

*சான்றாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய ஆவணங்கள்.*

**524.** இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக ஒரு கம்பெனியினால் அல்லது அதன் சார்பில் அல்லது எவரேனும் ஆளினால் ஆக்கப்படவேண்டியதாக அல்லது கொடுத்துதவப்படவேண்டியதாகக் கொள்ளப்படும் ஆவணங்கள் எவையும் எல்லா நோக்கங்களுக்காகவும், முரணானது எண்பிக்கப்படும்வரை விடயத்துக்கேற்றாற்போல அத்தகைய கம்பெனியினால் அல்லது ஆளினால் ஆக்கப்பட்டிருப்பதாக அல்லது கொடுத்துதவப்பட்டிருப்பதாக கருதப்படுதல் வேண்டும். ஏதேனும் அத்தகைய ஆவணத்தில் ஒப்பமிடுகின்ற எவரேனும் ஆள் அதன்கண்ணுள்ள எல்லா விடயங்கள் பற்றியும் அறிந்திருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

குறித்தசில வரையறுக்கப்பட்ட கம்பெனியினால் தொடரப்படும் வழக்குகளிலான செலவுத் தொகைகள்.

**525.** வரையறுக்கப்பட்ட ஒரு கம்பெனி ஏதேனும் வழக்கில் அல்லது வேறு சட்ட நடவடிக்கையில் வழக்காளியாக இருக்கின்ற விடத்து, அக்கருமத்தில் நியாயாதிக்கம் கொண்டுள்ள எவரேனும் நீதிபதி, எதிர்வாதி தன்னுடைய எதிர்வாதத்தில் வெற்றியடைந் தால் அவ்வெதிர்வாதியினுடைய செலவுத் தொகைகளை அக்கம்பெனி கொடுப்பதற்கு இயலாததாக இருக்குமென நம்பு வதற்குக் காரணமிருப்பதாக நம்பத்தகுந்த சான்றுமூலம் தோன் றினால், அச்செலவுத் தொகைகளுக்காகப் போதிய பிணைப் பொறுப்புக் கொடுபடவேண்டுமெனத் தேவைப்படுத்தலாம். அத்துடன் அத்தகைய பிணைப்பொறுப்புக் கொடுக்கப்படும்வரை எல்லா நடவடிக்கைகளையும் நிறுத்திவைக்கலாம்.

குறித்தசில விடயங்களில் நிவாரணம் வழங்குவதற்கு நீதிமன்றத் துக்குள்ள தத்துவம்.

**526.** (1) அலட்சியத்துக்காக, தவறுகைக்காக, கடமை மீறுகைக் காக அல்லது நம்பிக்கை மோசடிக்காக கம்பெனியொன்றின் அலு வலருக்கெதிராக அல்லது (கம்பெனியின் அலுவலரொருவராக இருப்பினுஞ்சரி இல்லாதிருப்பினும்சரி) கணக்காய்வாளர் ஒருவராகக் கம்பெனியினால் தொழிலுக்கமர்த்தப்பட்ட ஆளொருவருக்கெதிராகவுள்ள எந்த நடவடிக்கையிலாவது அந்த அலுவலர் அல்லது ஆள் அலட்சியம், தவறுகை கடமை மீறுகை அல்லது நம்பிக்கை மோசடி தொடர்பில் பொறுப்புடையவராவார் அல்லது பொறுப்புடையவராகலாம் எனவும் ஆனால் அவர் நேர்மையாகவும் நியாயமான முறையிலும் செயலாற்றியுள்ளார் எனவும், அவரது நியமனத்தோடு தொடர்புபட்டவை உட்பட அவ்விடயத்தில் எல்லாச் சூழ்நிலைகளையும் கருத்திற்கொண்டு அந்த அலட்சியத்துக்காக, தவறுகைக்காக, கடமை மீறுகைக்காக அல்லது நம்பிக்கை மோசடிக்காக அவர் நேர்மையான முறையில் மன்னிக்கப்படல் வேண்டுமெனவும் அவ்வழக்கை விசாரிக்கின்ற நீதிமன்றத்திற்கு தோன்றுகின்றவிடத்து அந்நீதிமன்றம் பொருத்த மானதென எண்ணக்கூடியவாறான அத்தகைய நியதிகள்மீது அத்தகைய பொறுப்புக்களின்றும் அவரை முழுமையாக அல்லது பகுதியளவில் விடுவிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட எவரேனும் அத்தகைய அலுவலர் அல்லது ஆள், ஏதேனும் அலட்சியம், தவறுகை, கடமை மீறுகை அல்லது நம்பிக்கை மோசடி தொடர்பில் அவருக்கெதிராக ஏதேனும் உரிமைக்கோரிக்கை செய்யப்படுவதென

அல்லது செய்யப்படக்கூடுமென அஞ்சுவதற்குக் காரணம் இருக்கின்றவிடத்து, அவர் நிவாரணத்துக்காக நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்கலாமென்பதுடன் அந்நீதிமன்றம் அத்தகைய ஏதேனும் விண்ணப்பத்தின்மீது அலட்சியத்துக்காக, தவறுகைக்காக, கடமை மீறுகைக்காக அல்லது நம்பிக்கை மோசடிக்காக, அந்த ஆளுக்கெதிராக எந்த நீதிமன்றத்தின் முன்னர் நடவடிக்கை கொண்டுவரப்பட்டனவோ அந்த நீதிமன்றமாக அது இருந்திருப்பின், இப்பிரிவின்கீழ் அவருக்கு நிவாரணமளிப்பதற்கு அது பெற்றிருக்கக்கூடிய அதே தத்துவத்தை அது உடையதாதல் வேண்டும்.

ஒழுங்கு விதிகள்.

**527.** (1) விதித்துரைக்கப்படவேண்டுமென இச்சட்டத்தால் கூறப்பட்ட அல்லது தேவைப்படுத்தப்பட்ட அல்லது இச்சட்டத்தால் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட எல்லாக் கருமங்களுக்காகவும் அவை தொடர்பிலும் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அமைச்சரால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், வர்த்தமானியில் அது வெளியிடப்பட்டதன் பின்னர் இயலக்கூடியதான விரைவாக அங்கீகரிக்கப்படுவதற்கென பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி எதுவும் அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும். ஏதேனும் ஒழுங்குவிதி அவ்வாறு நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்பட வேண்டிய தேதி பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

**528.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**529.** (1) இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப் படுத்தினாலன்றி -

*பொருள் கோடல்.*

"கணக்கீட்டுக் காலப்பகுதி", என்பது ஏதேனும் கூட்டிணைக் கப்பட்ட குழு தொடர்பில், சொல்லப்பட்ட காலப்பகுதி யானது ஆண்டொன்றாகவிருப்பினுஞ்சரி இல்லாவிடி னுஞ்சரி, எக்காலப் பகுதி தொடர்பில் அத்தகைய கூட்டி ணைக்கப்பட்ட குழுவின் நிதிக்கூற்றுக்கள் செய்யப் பட்டனவோ அக்காலப்பகுதி என்று பொருள்படும் ;

"முகவர்" என்பது, அத்தகையவராகச் செயற்படும் எவரேனும் ஆளின் சட்டத்தரணியை உள்ளடக்காது ;

"ஆண்டு விவரத்திரட்டு" என்பது 131 ஆம் பிரிவின்கீழ் கம் பெனியொன்றால் செய்யப்படவேண்டுமெனத் தேவைப் படுத்தப்பட்ட விவரத்திரட்டு என்று பொருளாகும் ;

"அமைப்பகவிதிகள்" என்பது 1861 ஆம் ஆண்டின் கூட்டுப் பங்குத் தொகுதிக் கம்பெனிகள் கட்டளைச் சட்டத்துக் கான அட்டவணையின் 'இ' எனும் பாகத்தில் அல்லது 1897 ஆம் ஆண்டின் கூட்டுப்பங்குத் தொகுதி வங்கித் தொழிற்கட்டளைச் சட்டத்துக்கான அட்டவணையில் 'ஆ' என்னும் பட்டியலில் அல்லது (145 ஆம் அத்தியாயமான) கம்பெனிகள் கட்டளைச் சட்டத்திற் கான முதலாம் அட்டவணையில் உள்ள 'அ' எனும் பட்டியலில் அல்லது 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்துக்கான முதலாம் அட்ட வணையில் உள்ள 'அ' எனும் பட்டியலில் அல்லது மாதிரி அகவிதிகளில் அடங்கியுள்ள ஒழுங்குவிதிகள், அவை கம்பெனிக்கு ஏற்புடையனவாக இருக்கும் அள வுக்கு உட்பட, ஆரம்பத்திலேயே வகுக்கப்பட்டனவான அல்லது சிறப்புத் தீர்மானம்மூலம் மாற்றப்பட்டனவு மான கம்பெனி ஒன்றில் அமைப்பக விதிகள் என்று பொருளாகும் ;

"ஐந்தொகைத் திகதி" என்பது மார்ச் 31 ஆம் நாள் அல்லது கம்பெனியின் ஐந்தொகைத் தேதியாக கம்பெனியின் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அத்தகைய வேறு தேதி என்று பொருள்படும் என்பதுடன் இது பற்றிய அறிவித்தல் பதிவாளருக்கு உடனடியாக வழங்கப்படும் ;

கம்பெனி ஒன்று தொடர்பில் "சபை" மற்றும் "பணிப்பாளர்கள் சபை" என்பது -

(அ) பணிப்பாளர்கள் சபையாகச் சேர்ந்து செயலாற்றுகின்றவர்களான தேவைப்படும் கூட்ட நடப்பெண்ணுக்குக் குறையாத எண்ணிக்கையினரான கம்பெனியின் பணிப்பாளர்கள் ; அல்லது

(ஆ) கம்பெனியானது ஆக ஒரு பணிப்பாளரையே கொண்டிருக்குமானால் அப்பணிப்பாளர்,

என்று பொருள்படும் ;

"புத்தகமும் பத்திரமும்" அத்துடன் "புத்தகம் அல்லது பத்திரம்" என்பது கணக்குகளையும் உறுதிகளையும் எழுத்துருக்களையும் ஆவணங்களையும் உள்ளடக்குகின்றது ;

"அத்தாட்சிப்படுத்தப்பட்ட" என்பது விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய முறையில் அத்தாட்சிப் படுத்தப்பட்ட அல்லது அத்தாட்சிப்படுத்தல்முறை எதுவும் விதித்துரைக்கப்பட்டிராவிடின், ஏதேனும் ஆவணம் அல்லது ஆவணங்களின் வகுப்பு தொடர்பில் பதிவாளரினால் தேவைப்படுத்தப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட என்று பொருளாகும் ;

"வகுப்பு" என்பது, ஒத்த உரிமைகள், சிறப்புரிமைகள், மட்டுப்பாடுகள் அத்துடன் நிபந்தனைகள் அவற்றோடு இணைக்கப்பட்ட பங்குகளின் வகுப்பு என்று பொருளாகும் ;

"கம்பெனி" என்பது இச்சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்ட ஒரு கம்பெனி என்று அல்லது ஏலவேயுள்ள கம்பெனி யென்று பொருளாகும் ;

"நீதிமன்றம்" என்பது எம்மாகாணத்திற்கென மேல் நீதிமன்றம் தாபிக்கப்பட்டுள்ளதோ அம்மாகாணத்தினுள் 1996 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, மாகாண மேல் நீதிமன்ற (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் குடியியல் நியாயாதிக்கத்தினால் தத்துவமளிக்கப்பட்ட மாகாணமொன்றிற்கான அரசியலமைப்பின் 154ஒ எனும் உறுப்புரையின்கீழ் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்ற மொன்று அல்லது அத்தகைய குடியியல் நியாயாதிக்கம் அளிக்கப்பட்ட அத்தகைய மேல்நீதிமன்றம் ஏதேனும் மாகாணத்திற்கென தாபிக்கப்படாதவிடத்து, மேல் மாகாணத்திற்காக தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றம் என்று பொருளாகும் ;

"தொகுதிக்கடன்" என்பது, தொகுதிக்கடன் தொக்கையும் முறி களையும் கம்பெனியின் சொத்துக்களின்மீது தாக்கீடு ஒன்றாக அமையினுஞ்சரி, அல்லாவிடினுஞ்சரி ஒரு கம்பெனியின் வேறு எவையேனும் பிணைப்பொறுப்புக் களையும் உள்ளடக்குகின்றது ;

"பணிப்பாளர்" என்பது –

(அ) அவர், எப்பெயரினால் அழைக்கப்படினும் கம்பெனி யின் பணிப்பாளர் பதவியைக் கொண்டிருக்கும் ஆளொருவர் ; அத்துடன்

(ஆ) நூற்றி எண்பத்தேழாம், 188 ஆம், 189 ஆம், 190 ஆம், 197 ஆம், 374 ஆம் அத்துடன் 377 ஆம் பிரிவுகளின் நோக்கங்களுக்காக –

(i) எந்த ஆளின் பணிப்புரைகளுக்கு அல்லது அறிவுறுத்துரைகளுக்கிணங்க பந்தி (அ) என்

பதில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆளொருவர் செயலாற்றுவதற்குத் தேவைப்படுத்தப்படக்கூடுமோ அல்லது பழக்கப்படுத்திக் கொண்டாரோ அந்த ஆளொருவர் ;

(ii) எந்த ஆளின் பணிப்புரைகளுக்கு அல்லது அறிவுறுத்துரைகளுக்கிணங்க கம்பெனியின் சபையானது செயலாற்றுவதற்குத் தேவைப்படுத்தப்படக்கூடுமோ அல்லது பழக்கப்படுத்திக்கொள்ளுமோ அந்த ஆளொருவர் ; அத்துடன்

(iii) கம்பெனியின் அமைப்பகவிதிகள் நீங்கலாக, சபையினால் பிரயோகிக்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிக்கும் பிரயோகித்தலுக்குரித்துடைய அல்லது தத்துவங்களைப் பிரயோகித்தலைக் கட்டுப்படுத்தும் அல்லது கட்டுப்படுத்தலுக்குரித்துடைய ஆளொருவர் ; அத்துடன்

(இ) நூற்றி எண்பத்தேழாம் பிரிவிலிருந்து 195 ஆம் பிரிவுகள் வரை (இரண்டும் உள்ளடங்கலாக) மற்றும் 197, 374 அத்துடன் 377 ஆகிய பிரிவுகளின் நோக்கங்களுக்காக, அவ்வாளின் சம்மதத்துடன் அல்லது உடன்பாட்டுடன் சபையினால் தத்துவமொன்று அல்லது கடமையொன்று நேரடியாகக் கையளிக்கப்பட்ட அல்லது சபையின் சம்மதத்துடன் அல்லது உடன்பாட்டுடன் தத்துவத்தை அல்லது கடமையைப் பிரயோகிக்கும் ஆளொருவரை உள்ளடக்கும்,

(ஆ) மற்றும் (இ) என்னும் பந்திகளின் ஏற்பாடுகள் ஆளொருவர் தொடர்பில் அவ்வாள் உயர்தொழிற்றன்மையொன்றின் மாத்திரம் செயலாற்றுகின்ற அளவுக்கு அவ்வாளுக்கு ஏற்புடையதாகாது ;

"பகிர்ந்தளிப்பு" என்பது -

(அ) அப்பங்குதாரருக்கு அல்லது அவரின் நன்மைக்காக, கம்பெனி ஒன்றின் பங்குகள் தவிர்ந்த, பணம் அல்லது ஆதனம் நேரடியாக அல்லது மறைமுகமாக கைமாற்றுதல் ; அல்லது

(ஆ) பங்கிலாமொன்றைக் கொடுப்பதன் மூலம் அல்லது பங்கை அல்லது பங்குகளை மீட்பதன் மூலம் அல்லது வேறு கொள்ளுகை மூலம், அல்லது கடன்படு நிலைமை அல்லது வேறு வகையாக பகிர்ந்தளிப் பொன்றைச் செய்வதன் மூலம் அப்பங்குதாரரினால் வைத்திருக்கப்படும் ஒரு பங்கு அல்லது பங்குகள் தொடர்பில் அப்பங்குதாரருக்கு அல்லது அவரின் நன்மைக்காக தனிசு ஒன்றை கூறுதல்,

என்றுபொருளாகும்.

"பங்கிலாபம்" என்பது, 60 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள வாறான அதே கருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

"ஆவணம்" என்பது –

(அ) பொருள் ஒன்றின் மீதான ஏதேனும் எழுத்து ;

(ஆ) ஒலிப்பதிவுக் கருவி, கணனி அல்லது வேறு உபாயம் மூலமாகப் பதிவு செய்யப்பட்டு அல்லது களஞ்சியப் படுத்தப்பட்டு இருக்கும் தகவல் அத்துடன் அவ்வாறு பதிவுசெய்யப்பட்ட அல்லது களஞ்சியப்படுத்தப்பட்ட தகவலிலிருந்து பின்னர் பெறப்பட்ட ஏதேனும் விடயம் ;

(இ) ஒரு புத்தகம், வரைபடம் அல்லது சித்திரம் ; அத்து டன்

(ஈ) மீளப் பிறப்பிக்கப்படக்கூடிய (உபகரணத்தின் உதவி யுடனோ உதவியில்லாமலோ) ஒன்றோ பலவோ ஆய கட்புல பிம்பங்கள் உள்ளடக்கப்பட்டுள்ள ஒரு புகைப் படம், புகைப்படச்சுருள், புகைப்பட நேரெதிர் தகடு, ஒலி நாடா அல்லது வேறு உபாயம்,

என்பன உட்பட எந்த வகையிலுமான ஆவணம் ஒன்று என்று பொருளாகும் ;

"கம்பெனி ஒன்று தொடர்பில் ஊழியர் பங்குத் திட்டம்" என்பது –

(அ) கம்பெனியின் அல்லது ஏதேனும் தொடர்புபட்ட கம்பெனியின் நன்னோக்க ஊழியர்களினால் அல்லது கடந்தகால ஊழியர்களினால் ; அல்லது

(ஆ) அத்தகைய ஊழியர்களின் அல்லது கடந்த கால ஊழியர்களின் மனைவிமார்கள், கணவன்மார்கள், விதவைகள், தாரமிழந்தவர்கள் அல்லது பிள்ளைகள் அல்லது பெறாமக்களினால்,

அல்லது அவர்களின் நன்மைக்காக கம்பெனியில் பங்குகளை வைத்திருப்பதனை ஊக்குவிப்பதற்கான அல்லது வசதிப்படுத்துவதற்கான ஒரு திட்டம் என்று பொருளாகும் ;

"உளதாயிருக்கும் கம்பெனி" என்பது, 1861 ஆம் ஆண்டின் கூட்டுப் பங்குத் தொகுதி கம்பெனிகள் கட்டளைச் சட்டத்தின்கீழ், 1897 ஆம் ஆண்டின் கூட்டுப் பங்குத் தொகுதி வங்கித் தொழிற் கட்டளைச் சட்டத்தின்கீழ் (145 ஆம் அத்தியாயமான) கம்பெனிகள் கட்டளைச் சட்டத்தின்கீழ் அல்லது 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுப் பதிவு செய்யப்பட்டதொரு கம்பெனி என்று பொருளாகும் ;

"நிதிக் கூற்றுக்கள்" என்பது –

(அ) ஐந்தொகைத் தேதியொன்றிலுள்ள கம்பெனிக்குரிய ஓர் ஐந்தொகை அத்துடன்

(ஆ) ஐந்தொகை அல்லது கூற்றுத் தொடர்பில் தகவல்தரும் ஏதேனும் குறிப்புகள் அல்லது ஆவணங்களுடன் சேர்த்து,–

(i) இலாப நோக்கில் தொழில் நடாத்தும் கம்பெனியொன்றின் விடயத்தில் ஐந்தொகைத் தேதியன்று முடிவிலும் கணக்கீட்டுக் காலப்பகுதி தொடர்பில் கம்பெனிக்கான இலாப நட்டக் கூற்று ஒன்று, ; அத்துடன்

(ii) இலாபநோக்கில் தொழில் நடாத்தாது கம்பெனியொன்றின் விடயத்தில், ஐந்தொகைத் தேதியன்று முடிவுறும் கணக்கீட்டுக் காலப்பகுதி தொடர்பில் கம்பெனிக்கான வரவு மற்றும் செலவுக் கூற்றொன்று,

எனப்பொருள்படும்.

"நிதியம்" என்பது, 479 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட நிதியம் என்று பொருள்படும் ;

"தொகுதி நிதிக் கூற்றுக்கள்" என்பது, ஐந்தொகை அல்லது கூற்றுத் தொடர்பில் தகவல்களைத் தரும் ஏதேனும் குறிப்புகள் அல்லது ஆவணங்களுடன் சேர்த்து,

(அ) ஐந்தொகைத் தேதியொன்றிலுள்ள தொகுதிக்கான திரட்டப்பட்ட ஐந்தொகையொன்று ;

(ஆ) தொகுதியின் உறுப்பினர் ஒருவர் இலாபத்திற்காகத் தொழில் நடாத்துமிடத்து, அந்த ஐந்தொகை முடிவுறும் கணக்கீட்டுக் காலப்பகுதி தொடர்பில் தொகுதிக்கான திரட்டப்பட்ட இலாப நட்டக் கூற்றொன்று ; அத்துடன்

(இ) தொகுதியின் உறுப்பினர் எவரும் இலாபத்திற்குத் தொழில் நடத்தாதவிடத்து, அவ்வைந்தொகைத் தேதியன்று முடிவுறும் கணக்கீட்டுக் காலப்பகுதி தொடர்பில், தொகுதிக்கான திரட்டப்பட்ட வரவு மற்றும் செலவுக் கூற்றொன்று,

எனப் பொருள்படும்.

"கொளிக்கம்பெனி" என்பது, அவ்வேறு கம்பெனியானது அதாவது துணைநிலைக் கம்பெனியாக இருந்தால், அத்துடன் இருந்தால் மாத்திரமே ஒரு கம்பெனி வேறொரு கம்பெனியின் கொளிக்கம்பெனி எனக் கருதப்படுதல் வேண்டும். இவ்வரைவிலக்கணத்தின் நோக்கத்திற்கு "கம்பெனி" ஏதேனும் கூட்டிணைக்கப்பட்ட குழுவை உள்ளடக்குகிறது ;

பங்குகளோடு இணைந்த உரிமைகளைப் பாதிக்கின்ற ஏதேனும் வழக்கு நடவடிக்கை அல்லது பிரேரிப்பு தொடர்பில் ;

“அக்கறையுள்ள தொகுதி” என்பது –

(அ) எப்பங்குதாரர்களின் தொகுதியின் பாதிக்கப்பட்ட உரிமைகள் ஒரேமாதிரியானவையோ, ; அத்துடன்

(ஆ) எப்பங்குதாரர்களின் தொகுதியின் உரிமைகள் வழக்கு நடவடிக்கையினால் அல்லது பிரேரிப்பினால் ஒரே மாதிரி பாதிக்கப்பட்டுள்ளனவோ,

அப்பங்குதாரர்களின் தொகுதி என்று பொருள்படும் ;

“சட்டப்பிரதிநிதி” என்பது, நிறைவேற்றுநர் அல்லது நிருவாகி ஒருவர் என்று அல்லது சட்டப்படி நிருவகிக்கப்படற் பாலதல்லாத மரணச் சொத்தொன்றின் விடயத்தில் மரபுரிமைக்கு உரித்தானவராக வந்த ஆகக் கிட்டிய உறவினர் என்று பொருள்படும் ;

“நிரற்படுத்தப்பட்ட கம்பெனி” என்பது, எக்கம்பெனியின் ஏதேனும் பங்குகள் அல்லது பிணைப்பொறுப்புக்கள் ஒரு உரிமமளிக்கப்பட்ட பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையில் குறிப்பிடப்பட்டுள்ளனவோ அக்கம்பெனி என்று பொருளாகும் ;

“உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி” என்பது, உரிமமளிக் கப்பட்ட வர்த்தக வங்கி ஒன்றாகத் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கு, 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித் தொழிற் சட்டத்தின்கீழ் உரிமம் ஒன்று வழங்கப் பெற்ற கம்பெனி அல்லது நிறுவனம் ஒன்று என்று பொருளாகும் ;

“முகாமையாளர்” என்பது எப்பெயராலழைக்கப்படினுஞ்சரி, முகாமையாளர் பதவியை வகிக்கின்ற எவரேனும் ஆளையும் உள்ளடக்குகின்றது ;

"ஆகக் குறைந்த ஒப்பப்பணம்" என்பது, பணிப்பாளர்களின் அபிப்பிராயத்தில் பங்குமூலதனத்தை வழங்குவதன் மூலம் திரட்டப்படவேண்டியதும் காசாகத் தவிர வேறு வகையில் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் பணத் தொகையில் புறநீங்கலாகக் கணக்கிடப்படுவதுமான ஆகக் குறைந்த பணத்தொகையென்று முற்பகர்வில் கூறப்பட்ட பணத்தொகை என்று பொருள்படும் ;

"அலுவலர்" என்பது, கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்று தொடர்பில் ஒரு பணிப்பாளரையும் அல்லது செயலாளரையும் உள்ளடக்குகிறது ;

"சாதாரண தீர்மானம்" என்பது, வாக்களிக்க உரித்துடையவர்களும் அவ்விடயம் பற்றி வாக்களிப்பவர்களுமான பங்குதாரர்களின் வாக்குகளின் சாதாரண பெரும்பான்மை மூலம் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம் ஒன்று என்று பொருளாகும் ;

"கடல்கடந்த கம்பெனி" என்பது, 488 ஆம் பிரிவில் தரப்பட்டுள்ளவாறான அதே கருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

"விதித்துரைக்கப்பட்ட" என்பது, ஒழுங்குவிதி மூலம் விதித்துரைக்கப்பட்ட என்று பொருளாகும் ;

"முற்பகர்வு" என்பது, கம்பெனி ஒன்றின் எவையேனும் பங்குகளுக்கான அல்லது தொகுதிக் கடன்களுக்கான ஒப்பப்பணங்களுக்கான அல்லது இவற்றைக் கொள்வனவு செய்வதற்காக பொதுமக்களுக்கு கொடைமுனைவு செய்யும் ஏதேனும் முற்பகர்வு, அறிவித்தல், சுற்றறிக்கை, விளம்பரம் அல்லது வேறு அழைப்பு என்று பொருளாவதோடு அது ஒரு முற்பகர்வு அல்லது பொதுமக்களுக்குப் பங்குகளை கொடைமுனைவு செய்யும் பத்திரம் ஒன்றல்லவென அதன் முகப்பில் குறிப்பொன்றிருப்பது எப்படியிருப்பினும், ஏதேனும் அத்தகைய அறிவித்தலையும் சுற்றறிக்கையையும், விளம்பரத்தையும் அல்லது வேறு அழைப்பையும் உள்ளடக்குகின்றது.

"பெறுநர்" என்பது, XV எனும் பாகத்தின்கீழ் நியமிக்கப்பட்ட கம்பெனி ஒன்றின் ஆதனம் மற்றும் பொறுப்பு முயற்சி முழுவதையும் அல்லது அவற்றின் ஒரு பாகத்தைப் பெறுபவர் ஒருவர் என்று பொருளாகும் ;

"மீட்கப்படற்பாலதான" என்பது, 66 ஆம் பிரிவில் தரப்பட்டுள்ளவாறான அதே கருத்தைக்கொண்டிருத்தல் வேண்டும் ;

"இடாப்பு" என்பது, 473 ஆம் பிரிவின் கீழ் வைத்திருக்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட இடாப்பு என்று பொருளாகும் ;

"பதிவாளர்" என்பது, கம்பெனிகள் பதிவாளர் தலைமையதிபதி அல்லது கம்பெனிகளைப்பதிவு செய்யும் கடமையை இச்சட்டத்தின்கீழ் புரிகின்ற வேறு அலுவலர் என்று பொருளாகும் ;

"அமைப்பு அகவிதிகள் மாற்றும் தீர்மானம்" என்பது, 15 ஆம் பிரிவில் தரப்பட்டுள்ளவாறான அதே கருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

"பங்கு" என்பது, கம்பெனி ஒன்றினால் வழங்கப்பட்ட ஒரு பங்கு என்று பொருளாகும் ;

"பங்கு இடாப்பு" என்பது, 123 ஆம் பிரிவின்கீழ் வைத்திருக்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட இடாப்பு என்று பொருளாகும் ;

"பங்குதாரர்" என்பது, 86 ஆம் பிரிவில் தரப்பட்டுள்ளவாறான அதே கருத்ததைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

"கூறப்பட்ட மூலதனம்" என்பது, 58 ஆம் பிரிவில் தரப்பட்டுள்ளவாறான அதே கருத்தைக்கொண்டிருத்தல் வேண்டும் ;

"துணைநிலை" என்பது,

(1) ஒரு கம்பெனியானது –

(அ) இன்னொரு கம்பெனி –

(i) அதன் பணிப்பாளர்கள் சபையின் அமைப்பைக் கட்டுப்படுத்துவதாக இருந்தால் ; அல்லது

(ii) கம்பெனியின் கூட்டமொன்றில் பிரயோகிக்கப் பட்ட முடியுமான வாக்குகளின் அதிகூடிய எண்ணிக்கையின் அரைவாசிக்கு மேற்பட்டதைப் பிரயோகிக்கும் அல்லது பிரயோகித்தலைக் கட்டுப்படுத்தும் ஒரு நிலையில் இருந்தால் ;

(iii) இலாபங்கள் அல்லது மூலதனப் பகிர்வொன் றில் குறித்துரைக்கப்பட்ட தொகையொன்றுக்கு அப்பால் பங்கு பெறுவதற்கு எந்த உரிமையையும் கொண்டிராத பங்குகள் அல்லாத கம்பெனியின் வழங்கப்பட்ட பங்குகளின் அரைவாசிக்கு மேற் பட்ட பங்குகளை வைத்திருந்தால் ; அல்லது

(iv) இலாபங்கள் அல்லது மூலதனப் பகிர்வொன் றில் குறித்துரைக்கப்பட்ட தொகையொன்றுக்கு அப்பால் பங்கு பெறுவதற்கு எவ்வுரிமையையும் கொண்டிராத பங்குகளல்லாத, கம்பெனியால் வழங்கப்பட்ட பங்குகள் மீது செலுத்தப்படும் ஒவ்வொரு பங்கிலாபத்தினது அரைவாசிக்கும் மேலானதைப் பெறுவதற்கு உரித்துடையவராய் இருந்தால் ; அல்லது

(ஆ) முதலாவது குறிப்பிடப்பட்ட கம்பெனியானது, அந்த வேறு கம்பெனியின் துணைநிலைக் கம்பெனியாய் உள்ள ஏதேனும் கம்பெனியின் துணைநிலைக் கம்பெனியொன்றாக இருந்தால், அவ்வாறு இருந்தால் மாத்திரமே, அக்கம்பெனி அந்த இன்னொரு கம்பெனி யின் துணைநிலைக் கம்பெனியாகக் கருதப்படல் வேண்டும்.

இவ்வரைவிலக்கணத்தின் நோக்கங்களுக்காக, கம்பெனியொன்றின் பணிப்பாளர்கள் சபையின் அமைப்பானது, அந்த வேறொரு கம்பெனி, வேறெவரேனும் ஆளின் சம்மதம் அல்லது ஒருப்பாடின்றி அதனால் பிரயோகிக்கப்படற்பாலதான ஏதேனும் தத்துவத்தைப் பிரயோகித்து பணிப்பாளர்கள் எல்லோரையும் அல்லது பெரும்பான்மையினரை நியமிக்க முடிந்தால் அல்லது பதவியிலிருந்து அகற்ற முடிந்தால், அவ்வாறிருந்தால் மட்டும், வேறு கம்பெனியால் கட்டுப்படுத்தப்படுவதாகக் கருதப்படல் வேண்டும் ; அத்துடன் அந்த வேறு கம்பெனியானது —

(ஆ) ஆளொருவர், அந்த வேறு கம்பெனியால் அவர் சார்பாக, அவ்வாறு நியமிப்பதற்கான தத்துவமொன்றைப் பிரயோகிக்காமல், ஒரு பணிப்பாளராக நியமிக்கப்பட முடியாது என்றால் ; அல்லது

(ஆ) பணிப்பாளர் ஒருவராக ஆளொருவரின் நியமனமானது, அந்த வேறு கம்பெனியின் பணிப்பாளர் ஒருவராக அவரது நியமனத்திலிருந்து, அவசியமாகப் பின்னடுத்து வந்தால்,

பணிப்பாளர் ஒருவரை நியமிப்பதற்குத் தத்துவமுடையது எனக் கருதப்படல் வேண்டும்.

ஒரு கம்பெனி வேறொரு கம்பெனியின் ஒரு துணைநிலைக் கம்பெனியான உள்ளதா எனத் தீர்மானிக்கையில் -

(அ) கம்பெனியொன்றால் ஒரு நம்பகத்தன்மையில் வைத்திருக்கப்படும் எவையேனும் பங்குகள் அல்லது பிரயோகிக்கற்பாலதான ஏதேனும் தத்துவமானது, அதனால் வைத்திருக்கப்படாததாக அல்லது பிரயோகிக்கப்படற்பாலதல்லாததாகக் கொள்ளப்படல் வேண்டும்.

(ஆ) பந்தி (இ) மற்றும் (ஈ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளுக்கு அமைய,

(i) (அந்த வேறு கம்பெனியானது நம்பகத்தன்மையில் மாத்திரம் உள்ளதாகக் கருதப்படுமிடத்து தவிர) அந்த வேறு கம்பெனிக்கான நியமித்தர் என்றவகையில், எவரேனும் ஆளினால், அல்லது

(ii) ஒரு நம்பகத்தன்மையில் மாத்திரம் உள்ளதாகக் கருதப்படுகின்ற ஒரு துணைநிலைக் கம்பெனியாக இராத, அந்த வேறு கம்பெனியின் துணைநிலைக் கம்பெனியொன்றினால் அல்லது அதற்கான நியமத்தர் ஒருவரால்,

வைத்திருக்கப்படும் எவையேனும் பங்குகள் அல்லது பிரயோகிக்கற்பாலதான ஏதேனும் தத்துவம் அந்த வேறு கம்பெனியால் வைத்திருக்கப்படுவதாக அல்லது பிரயோகிக்கற்பாலதாகக் கொள்ளப்படல் வேண்டும்.

(இ) முதலாவதாக கூறப்பட்ட கம்பெனியின் ஏதேனும் தொகுதிக்கடன்முறியின், அல்லது அத்தகைய தொகுதிக்கடன் முறிகளின் ஏதேனும் வழங்கலை உறுதிப்படுத்தும் நம்பிக்கைப்பொறுப்புறுதியின் ஏற்பாடுகளின் பயனைக்கொண்டு எவரேனும் ஆளினால் வைத்திருக்கப்படும் எவையேனும் பங்குகள் அல்லது பிரயோகிக்கப்படற்பாலதான ஏதேனும் தத்துவம் புறக்கணிக்கப்படல் வேண்டும் ;

(ஈ) அந்த வேறு கம்பெனியின் அல்லது அதன் துணைநிலைக் கம்பெனியின் சாதாரண தொழிலானது, விடயத்துக்கேற்றவாறு, பணம் இரவல் கொடுத்தலையும் உள்ளடக்கியிருப்பதுடன், அந்தத் தொழிலின் சாதாரண போக்கில் செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல் ஒன்றின் நோக்கங்களுக்காக, பிணைப்பொறுப்பு வழியால் மாத்திரம், பங்குகள் வைத்திருக்கப்பட்டிருந்தால் அல்லது தத்துவம் பிரயோகிக்கற்பாலதாய் இருந்தால், பந்தி (இ) இல் குறிப்பிடப்பட்டவாறு வைத்திருக்கப்படாததாக அல்லது பிரயோகிக்கற்பாலதல்லாததாக

இருக்கின்ற) அந்த வேறு கம்பெனியால், அல்லது அதற்கான நியமத்தர் ஒருவரால் அல்லது அதன் துணைநிலைக் கம்பெனியால் வைத்திருக்கப்படும் எவையேனும் பங்குகள் அல்லது பிரயோகிக்கற்பால தான ஏதேனும் தத்துவமானது, அந்த வேறு கம்பெனி யால் வைத்திருக்கப்படாததாக, அல்லது பிரயோகிக்கற் பாலதல்லாததாகக் கொள்ளப்படல் வேண்டும்,

இவ்வரைவிலக்கணத்தின் நோக்கத்திற்கு "கம்பெனி" கூட்டிணைக் கப்பட்ட குழுவொன்றை உள்ளடக்குகிறது ; அத்துடன்

"வேலைநாள்" என்பது, சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை அல்லது ஒரு பகிரங்க விடுமுறை நாள் தவிர்ந்த ஒரு நாள் என்று பொருளாகும்.

(2) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக -

(அ) (i) ஒரு கம்பெனியானது தொகுதிக் கம்பெனியின் துணை நிலை அல்லது கொளிக்கம்பெனியாக இருந்தால் ;

(ii) ஒரு கம்பெனியின் கொளிக்கம்பெனி, வேறொரு கம்பெனியின் கொளிக்கம்பெனியாகவும் இருந்தால் ; அல்லது

(iii) ஒரு கம்பெனி வேறொரு கம்பெனியுடன் தொடர்பு டையதான கம்பெனி ஒன்றுடன் தொடர்புடையதாக விருந்தால் ;

அக்கம்பெனி மற்றைய கம்பெனியுடன் தொடர்புடையதாகும்.

(ஆ) இச்சட்டத்தில் உள்ள ஏதேனும் பிரிவானது, தவறுகை யிலுள்ளவரான, கம்பெனி ஒன்றின் அலுவலரொருவர் தண்டம் ஒன்றுக்கு ஆளாதல் வேண்டுமென ஏற்பாடு செய்கின்றவிடத்து "தவறுகையிலுள்ள அலுவலர்" எனும் சொல்லமைப்பானது அப்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள தவறுகையை, மறுப்பை அல்லது

மீறுகையை அறிந்துகொண்டும் வேண்டும் என்றும் அதிகாரமளிக்கின்ற அல்லது அனுமதிக்கின்ற எவரேனும் பணிப்பாளர், முகாமையாளர், செயலாளர் அல்லது கம்பெனியின் வேறு அலுவலர் என்று பொருளாகும் ; அத்துடன்

(இ) (i) ஒன்று அல்ல அதற்கு மேற்பட்ட அக்கறையுள்ள தொகுதிகள் ஏதேனும் நடவடிக்கை அல்லது முன்மொழிவு தொடர்பில் உளதாய் இருக்கலாம் ; அத்துடன்

(ii) (அ) ஒரு வகுப்பில் பங்குகளை வைத்திருக்கும் சிலர் தொடர்பிலும் ஏனையோர் தொடர்பாக அல்லாமலும் நடவடிக்கை எடுக்கப்பட்டால் ; அல்லது

(ஆ) ஒரு வகுப்பில் பங்குகளை வைத்திருக்கும் சிலருக்கும் அவ்வகுப்பின் பங்குகளை வைத்திருக்கும் ஏனையோருக்கும் இடையில் முன்மொழிவு ஒன்று வெளிப்படையாகப் பிரித்துக்காட்டினால்,

ஒரே வகுப்பில் பங்குகளை வைத்திருப்போர், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அக்கறையுள்ள தொகுதிகளுக்குள் அடங்கலாம்.

(3) (அ) (i) கம்பெனி ஒன்றின் பங்குதாரர்களைப் பற்றிய இச்சட்டத்தில் உள்ள குறிப்பீடு எதுவும் ஒரே ஒரு பங்குதாரரை மட்டும் கொண்டுள்ள கம்பெனி ஒன்று தொடர்பில், அப்பங்குதாரர்கள் பற்றிய குறிப்பீடொன்றை உள்ளடக்குகின்றது ;

(ii) கம்பெனி ஒன்றின் பணிப்பாளர்கள் பற்றி, இச்சட்டத்தில் உள்ள குறிப்பீடு எதுவும் ஒரே ஒரு பணிப்பாளரை மட்டும் கொண்டுள்ள கம்பெனி ஒன்று தொடர்பில் அப்பணிப்பாளர் பற்றிய குறிப்பீடு ஒன்றை உள்ளடக்குகின்றது ;

(ஆ) கூட்டிணைக்கப்பட்ட குழு ஒன்று பற்றிய அல்லது கூட்டுத்தாபனம் ஒன்று பற்றிய இச்சட்டத்தில் உள்ள குறிப்பீடு எதுவும், தனிக் கூட்டுத்தாபனத்தை உள்ளடக்கவில்லை என்றாற்போல ஆனால் இலங்கைக்கு வெளியே கூட்டிணைக் கப்பட்ட கம்பெனி ஒன்றை உள்ளடக்குகின்றவாறு பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

(இ) சந்தர்ப்பம் வேறுவகையில் தேவைப்படுத்தினாலொழிய எவ்வாளினால் அல்லது எவ்வாளின் அக்கறையில் பெறுநர் ஒருவர் நியமிக்கப்பட்டாரோ அவ்வாள் பற்றிய இச்சட்டத்தில் உள்ள குறிப்பீடு எதுவும் எந்த உறுதியினால் அல்லது உடன்படிக் கையினால் அல்லது எந்த உறுதியின் அல்லது உடன்படிக்கையின்கீழ் பெறுநர் நியமிக்கப்பட் டாரோ அந்த ஏதேனும் உறுதியின் அல்லது உடன் படிக்கையின் கீழான உரிமைகளும் அக்கறைகளும் எவ்வாளுக்குக் கைமாற்றப்பட்டுள்ளனவோ அல் லது குறித்தொதுக்கப்பட்டுள்ளனவோ அவ்வாள் பற்றிய குறிப்பீடொன்றை உள்ளடக்குகின்றது.

(4) ஏதேனும் கருமத்தில் பகிரங்க அறிவித்தலொன்று இச் சட்டத்தின்கீழ் வழங்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத் தப்பட்டுள்ளவிடத்து அவ்வறிவித்தலானது, அக்கருமம் பற்றிய அறிவித்தலை –

(அ) வர்த்தமானியின் ஆகக்குறைந்தது ஒரு வெளியீட்டில் ; அத்துடன்

(ஆ) (i) கம்பெனியின் தொழில் இடம் ;

(ii) கம்பெனியானது ஒன்றுக்கு மேற்பட்ட அத்தகைய இடத்தைக்கொண்டிருந்தால், கம்பெனியின் பிரதான தொழில் இடம் ; அல்லது

(iii) கம்பெனியானது தொழில் இடமொன்றைக் கொண்டிருக்கவில்லையானால் அல்லது அதன் பிரதான தொழில் இடம் அல்லது

வேறேதேனும் தொழில் இடத்தின் அமைவிடமானது அறிவித்தலை வழங்குமாறு தேவைப்படுத்தப்பட்டுள்ள ஆளுக்குத் தெரியவில்லையெனில், கம்பெனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்,

அமைந்துள்ள இடப்பரப்பில் விற்பனையாகின்ற சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகள் உள்ள நாளாந்த செய்தித்தாள்களில் ஆகக்குறைந்தது ஒரு வெளியீட்டில் வெளியிடுவதன்மூலம் வழங்கப்படுதல் வேண்டும்.

### நிலைபெயர்கால ஏற்பாடுகளும் பேணல்களும்

*நிலை பெயர்கால ஏற்பாடுகள்.*

**530.** *(1)* பொருள்கோடல் கட்டளைச் சட்டத்தின் 5 ஆம், 10 ஆம் பிரிவுகளில் அடங்கியுள்ள ஏற்பாடுகளுக்குப் பங்கமின்றி -

(அ) கம்பெனிகள் தொடர்பிலான முன்னைய ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் நீக்கத்திலுள்ளது எதுவும், கம்பெனிகள் தொடர்பிலான முன்னைய ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையை, விதியை, ஒழுங்குவிதியை கட்டளை அளவு விகிதத்தை, நியமனத்தை, உரித்து மாற்றத்தை, ஈட்டை, ஆக்கப்பட்ட உறுதியை அல்லது உடன்படிக்கையை, நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை, கொடுக்கப்பட்ட பணிப்புரையை எடுக்கப்பட்ட நடவடிக்கையை, வழங்கப்பட்ட சாதனத்தை அல்லது செய்யப்பட்ட செயலைப் பாதித்தலாகாது, ஆனால் நியமித்த தேதியன்று அத்தகைய ஏதேனும் கட்டளை, விதி, ஒழுங்குவிதி, கட்டளை அளவு விகிதம், நியமனம், உரித்துமாற்றம், ஈடு, உறுதி, உடன்படிக்கை, தீர்மானம், பணிப்புரை, நடவடிக்கை, சாதனம் அல்லது செயல் வலுவுடையதாக இருந்தால், தொடர்ந்து வலுவுடையதாக இருத்தல் வேண்டுமென்பதுடன், இச்சட்டத்தின்கீழ் அது ஆக்கப்பட்டிருக்கக்கூடிய, நிறைவேற்றப்பட்டிருக்கக்கூடிய, கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய, வழங்கப்பட்டிருக்கக்கூடிய அல்லது செய்யப்பட்

டிருக்கக்கூடிய அளவுக்கு இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் ஆக்கப்பட்டிருந்தாற்போன்று, நிறைவேற்றப்பட்டிருந்தாற்போன்று, கொடுக்கப்பட்டிருந்தாற்போன்று, எடுக்கப்பட்டிருந்தாற்போன்று வழங்கப்பட்டிருந்தாற் போன்று, அல்லது செய்யப்பட்டிருந்தாற்போன்று, பயனுடையதாதலும் வேண்டும் ;

(ஆ) கம்பெனிகள் தொடர்பிலான முன்னைய ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடொன்று குறிப்பீடு செய்கின்ற ஏதேனும் ஆவணம் இச்சட்டத்தின் அடங்கியுள்ள நேரொத்த ஏற்பாட்டை குறிப்பீடுசெய்வதாகப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும் ;

(இ) கம்பெனிகள் தொடர்பிலான முன்னைய ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் அல்லது சட்டத்தின் பயனைக்கொண்டு ஏதேனும் பதவிக்கு நியமிக்கப்பட்ட எவரேனும் ஆள் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அல்லது அதன் பயனைக்கொண்டு அப்பதவிக்கு நியமிக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும் ;

(ஈ) கம்பெனிகள் தொடர்பிலான முன்னைய ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் வைத்திருக்கப்படும் ஏதேனும் இடாப்பு இச்சட்டத்தில் நேரொத்த ஏற்பாடுகளின்கீழ் வைத்திருக்கப்படவேண்டிய இடாப்பின் பாகமாகக் கருதப்படுதல் வேண்டும் ;

(உ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அமைக்கப்படும் எல்லா நிதியங்களும் கணக்குகளும் கம்பெனிகள் தொடர்பிலான முன்னைய எழுத்திலான சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட நேரொத்த நிதியங்களினதும் கணக்குகளினதும் தொடர்ச்சி எனக் கருதப்படுதல் வேண்டும்.

(2) இப்பிரிவின் "கம்பெனிகள் தொடர்பிலான முன்னைய எழுத்திலான சட்டம்" எனும் சொல்லமைப்பானது (145 ஆம் அத்தியாயமான) கம்பெனிகள் கட்டளைச் சட்டத்தினால் அல்லது

1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தினால் நீக்கஞ் செய்யப்பட்ட ஏதேனும் எழுத்திலான சட்டம் என்று பொருளாகும்.

(3) எத்தேதியில் இச்சட்டம் நடைமுறைக்கு வந்ததோ அத் தேதிக்கு நேர்முந்திய நாளன்று மாவட்ட நீதிமன்றமொன்றில் 532 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டிராத முடிவுறாத எல்லா வழக்குகள், வழக்கு நடவடிக்கைகள் அல்லது கருமங்கள் இச்சட்டத் தால் வரைவிலக்கணப்படுத்தப்பட்டவாறான நீதிமன்றத்திற்கு அகற்றப்பட்டதாகக்கொள்ளுதல் வேண்டும். அத்துடன் அத்த கைய நீதிமன்றம் அவற்றை நீதிமுறைக் கவனத்திற்கெடுப்பதற்கு, கேட்டுத் தீர்மானிப்பதற்கு அல்லது தொடருவதற்கும் முடிப்பதற்கும் நியாயாதிக்கத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் :

ஆயின், எத்தேதியில் இச்சட்டம் நடைமுறைக்கு வந்ததோ அத் தேதிக்கு நேர்முந்திய நாளன்று மாவட்ட நீதிமன்றத்தில் எந்த வழக்கு, வழக்கு நடவடிக்கை அல்லது கருமத்தில் சான்று சமர்ப் பிக்க ஆரம்பித்திருக்கிறதோ அத்தகைய ஏதேனும் வழக்கு, வழக்கு நடவடிக்கை அல்லது கருமம் சொல்லப்பட்ட மாவட்ட நீதிமன்றத் தினால் கேட்கப்படுதலும் தீர்மானிக்கப்படுதலும் வேண்டும்.

**531.** இச்சட்டத்தில் உள்ளது எதுவும் - பேணல்கள்.

(அ) (145 ஆம் அத்தியாயமான) கம்பெனிகள் கட்டளைச் சட்டத்தினால் அல்லது 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தினால் அல்லது இச் சட்டத்தினால் நீக்கஞ்செய்யப்பட்ட எழுத்திலான ஏதேனும் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் கம்பெனியைக் கூட்டிணைப்பதையும் ;

(ஆ) 1861 ஆம் ஆண்டின் கூட்டுப்பங்குத் தொகுதிக் கம்பெனி கள் கட்டளைச் சட்டத்திற்கான அட்டவணை யின் 'இ' எனும் பாகத்தை அல்லது அதன் ஏதேனும் பாகத்தை நியமித்த தேதியன்று உளதாயிருக்கின்ற ஏதேனும் கம் பெனிக்கு அது ஏற்புடையதாக இருக்கும் அளவுக்கும் ;

(இ) 1897 ஆம் ஆண்டின் கூட்டுப் பங்குத்தொகுதி வங்கித் தொழிற் கட்டளைச் சட்டத்திற்கான அட்டவணையின் 'ஆ' எனும் பட்டியலை அல்லது அதன் ஏதேனும் பாகத்தை நியமித்த தேதியன்று உளதாயிருக்கின்ற ஏதேனும் கம்பெனிக்கு அது ஏற்புடையதாக இருக்கும் அளவுக்கும் ;

(ஈ) (145 ஆம் அத்தியாயமான) கம்பெனிகள் கட்டளைச் சட்டத்துக்கான முதலாம் அட்டவணையில் உள்ள 'அ' மற்றும் 'இ' எனும் பட்டியல்களை அல்லது அதன் ஏதேனும் பாகத்தை நியமித்த தேதியன்று உளதாயிருக்கின்ற ஏதேனும் கம்பெனிக்கு அது ஏற்புடையதாக இருக்கும் அளவுக்கும் ;

(உ) 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்திற்கான முதலாம் அட்டவணையில் உள்ள 'அ' மற்றும் 'இ' பட்டியல்களை அல்லது அதன் ஏதேனும் பாகத்தை நியமித்த தேதியன்று உளதாயிருக்கின்ற ஏதேனும் கம்பெனிக்கு அது ஏற்புடையதாக இருக்கும் அளவுக்கும்,

பாதித்தலாகாது.

ஒடுக்குவதற்காக முடிவுறாதிருக்கும் நடவடிக்கைகளுக்கான பேணல்கள்.

**532.** (1) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, ஒடுக்குதல் தொடர்பாக இச்சட்டத்தின் ஏற்பாடுகள், நியமித்த தேதிக்கு முன்னர் அதன் ஒடுக்கல் ஆரம்பமாகியுள்ள எக் கம்பெனிக்கும் ஏற்புடையனவாதலாகாது, அத்தகைய ஒவ்வொரு கம்பெனியும் இச்சட்டம் சட்டமாக்கப்படவில்லையென்றாற் போன்று அதேமுறையிலும் அதே நிகழ்ச்சிகளுடனும் ஒடுக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் ஒடுக்கும் நோக்கங்களுக்காக, எவ்வெழுத்திலான சட்டத்தின்கீழ் ஒடுக்கல் ஆரம்பமாகியதோ அச்சட்டம் முழுவலுவுடன் இருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) ஏதேனும் கம்பெனி (1) ஆம் உட்பிரிவுக்கிணங்க ஒடுக்கப்படுமிடத்து, நீதிமன்றமானது, பதிவாளரினால் அல்லது கம்பெனியின் எவரேனும் கடன்தருநரினால் செய்யப்பட்ட

விண்ணப்பத்தின்மீது, அத்துடன் விடயத்தில் சூழ்நிலைகளில் அவ்வாறு செய்வது உசிதமானதென நீதிமன்றம் அபிப்பிராயப் பட்டால், ஒழித்துக்கட்டுதல் தொடர்பிலான இச்சட்டத்தின் ஏற் பாட்டில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் ஏற்பாடு அக்கம்பெனியை ஒடுக்குதல் தொடர்பில் ஏற்புடையதாதல் வேண்டுமெனக் கட்டளை ஆக்கலாம் என்பதுடன் அத்தகைய ஏற்பாட்டை ஏற்புடையதாக்கும் நோக்கங்களுக்காக அவசியமானவையென நீதிமன்றத்திற்குத் தோற்றக்கூடிய அத்தகைய இடைநேர்விளைவான அல்லது குறை நிரப்புப் பணிப்புரைகளைக் கொடுக்கலாம். நீதிமன்றம் அத்தகைய ஏதேனும் கட்டளையை ஆக்குகின்றவிடத்து, கட்டளையிற் குறித்துரைக்கப்பட்ட இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாடு, அத்தகைய ஏதேனும் பணிப்புரைகளுக்கு அமைவாக, அதற்கிணங்க ஏற்புடையதாதல் வேண்டும்.

## பாகம் XXIII

### நீக்கங்களும் திருத்தங்களும்

**533.** (1) 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டம் இத்தால் நீக்கஞ்செய்யப்படுகின்றது. *நீக்கங்கள்.*

(2) 1974 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, கம்பெனிகள் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டமும் 1975 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, வெளிநாட்டுக் கம்பெனிகள் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டமும் இத்தால் நீக்கஞ் செய்யப்படுகின்றன.

*1996 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தின் முதலாம் அட்டவணைக்கான திருத்தம்.*

**534.** ஆயிரத்துத்தொளாயிரத்துத் தொண்ணூற்றாறாம் ஆண்டின் 10 ஆம் இலக்க, மாகாணங்களின் மேல்நீதிமன்ற (விசேட ஏற்பாடுகள்) சட்டத்திற்கான முதலாவது அட்டவணை, அவ்வட்டணையின் (2) ஆம் விடயத்திற்காக பின்வரும் விடயத்தைப் பதிலிடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(2) 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழான எல்லா விண்ணப்பங்களும் வழக்கு நடவடிக்கைகளும்.".

**முதலாம் அட்டவணை** *(பிரிவு 14)*

*மாதிரி அமைப்பக விதிகள்*

***அ. பங்குகள்***

*1. பங்குகளை வழங்கல்.*

*(1) இவ்வமைப்பக விதிகளின் 1(2) மற்றும், 1(3) ஆம் அமைப்பக விதிகளுக்கமைய, சபையானது இச்சட்டத்தின் 51 ஆம் பிரிவுக்கிணங்க அது பொருத்தமெனக் கருதப்படுகின்றவாறான அத்தகைய ஆட்களுக்கு அத்தகைய பங்குகளை வழங்கலாம். இச்சட்டத்தின் 49 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட உரிமைகள் தவிர்ந்த உரிமைகளைப் பங்குகள் அளிக்கின்றவிடத்து அல்லது பங்குதாரர் மீது ஏதேனும் கடப்பாட்டை விதிக்கின்ற விடத்து, சபையானது, 51 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் தேவைப்படுத்தப்பட்டுள்ளவாறான பங்குகளுக்கான உரிமைகளையும் கடப்பாடுகளையும் காட்டுகின்ற வழங்கல் நியதிகளை அங்கீகரித்தல் வேண்டும்.*

*(2) சபையானது, அது பங்குகளை வழங்க முன்பு, எப்பிரதிபயனுக்காக பங்குகள் வழங்கப்படுமோ அப்பிரதிபயனைத் தீர்மானித்தல் வேண்டும். அப்பிரதிபயனானது கம்பெனிக்கும் அப்போதுள்ள எல்லாப் பங்குதாரர்களுக்கும் நீதியானதும் நியாயமானதுமாயிருத்தல் வேண்டும்.*

*(3) உளதான பங்குகளுக்குச் சமமான அல்லது முன்னரான தரத்தினதான பங்குகளைக் கம்பெனி வழங்குகின்றவிடத்து. அப்பங்குகள் அப்பங்குதாரர்களின் உறவடிப்படையிலான வாக்களிக்கும் உரிமையையும் பகிர்ந்தளிக்கும் உரிமைகளையும் அவை ஏற்றுக்கொள்ளப்பட்டால், பேணக்கூடிய அத்தகைய முறையில் உளதாம் பங்குகளை வைத்திருப்பவருக்கு கொடை முனையப்படுதல் வேண்டும். கொடைமுனைவானது ஏற்றுக்கொள்ளுகைக்கான நியாயமான காலத்துக்குத் திறந்திருத்தல் வேண்டும்.*

*2. பங்குகள் மீதான அழைப்புக்கள் –*

*(1) (அ) நிர்ணயிக்கப்பட்ட தேதி அன்று பணத்தொகையைச் செலுத்துவதற்கு பங்குதாரர்மீது ஏதேனும் கடப்பாட்டை பங்கு ஒன்று விதிக்கின்றவிடத்து அப்பங்குதாரர் அத்தேதியன்று அத்தொகையைச் செலுத்துதல் வேண்டும் ;*

*(ஆ) சபையினால் அவ்வாறு செய்யுமாறு அழைக்கப்படும் போது பணத்தொகையைச் செலுத்துவதற்கு பங்குதாரர்மீது ஏதேனும் கடப்பாட்டை பங்கு என்று விதிக்கின்றவிடத்து சபையானது எந்நேரத்திலும், இருபதுக்குக் குறையாத வேலை நாட்களைக் கொண்ட குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றினுள் கொடுப்பனவு செய்யப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தும் எழுத்திலான அறிவித்தலொன்றை வழங்கலாமென்பதுடன், கொடுப்பனவானது அவ்வறிவித்தலுக்கிணங்கச் செய்யப்படுதலும் வேண்டும்.*

உரிய தேதியில் செலுத்தப்படாத தொகை எதுவும் நாளாந்தம் கணக்கிடப்படும் ஆண்டொன்றுக்குப் பத்து சதவிகிதத்திற்கு மேற்படாத, சபையினால் நிர்ண யிக்கப்பட்ட வீதத்தில் வட்டியைக் கொண்டிருத்தல் வேண்டும். சபையானது வட்டிக் கொடுப்பனவை விட்டுவிடலாம்.

(2) ஒரு கூட்டுப்பங்கு வைத்திருப்பவர்கள் அமைப்பக விதியின் (1) ஆம் பந்தியின் கீழ் செய்யப்படவேண்டிய எல்லாக் கொடுப் பனவுகளும் கூட்டாகவும் தனித்தும் கொடுப்பதற்குக் கடப்பாடு டையவராதல் வேண்டும்.

(3) கம்பெனியானது, எப்பங்குக்கு 1 ஆம் அமைப்பக விதியின் (1) ஆம் பந்தி ஏற்புடையதாகின்றதோ அப்பங்கு ஒவ்வொன்றின் மீதும், தற்போது வருமதியாகவுள்ள எல்லாத் தொகைகளுக்கு மாக அப்பங்கு தொடர்பில் செலுத்தப்படற்பாலதானதும் அப்பங்கு தொடர்பில் கம்பெனிக்குச் செலுத்தப்படற்பாலதுமான பகிர்ந்தளிப்பு ஒவ்வொன்று மீதும் சோந்தை ஒன்றைக் கொண்டுள்ளது.

(4) எப்பங்குகளின்மீது கம்பெனியானது சோந்தை ஒன்றைக் கொண் டுள்ளதோ அந்த எவையேனும் பங்குகளை, சபையானது பொருத் தமானதென எண்ணுகின்றவாறான அத்தகைய முறையில் —

(அ) கம்பெனியானது பங்குதாரருக்கு அவ்வாறு செய்வதற் கான அதன் எண்ணம் பற்றிய எழுத்திலான அறிவித் தலைக் கொடுத்திருந்தால் ; அத்துடன்

(ஆ) எக்கொடுப்பனவு தொடர்பில் சோந்தை எழுந்துள்ளதோ அக்கொடுப்பனவை அவ்வறிவித்தல் கொடுத்தலிருந்து பத்து வேலை நாட்களினுள் செய்வதற்குப் பங்குதாரர் தவறியிருந்தால்,

கம்பெனியானது விற்கலாம்.

கைமாற்றமானது கொள்வனைகாரரின் சார்பில், சபையினால் அவ்வாறு செய்வதற்கு நியமிக்கப்பட்ட எவரேனும் ஆளினால் கையொப்பம் இடலாம் என்பதுடன் கொள்வனைகாரர், கைமாற்றப்பட்ட பங்குகளை வைத்திருப்பவராகப் பதிவு செய்யப்படுதலும் வேண்டும். அத்துடன் அவரின் உரித்தானது விற்பனையில் உள்ள ஒழுங்கீனம் அல்லது வலுவின்மை எதனாலும் பாதிக்கப்படமாட்டாது.

(5) அமைப்பகவிதியின் (4) ஆம் பந்தியின் கீழான விற்பனை ஒன்றின் வருவாய்கள் கம்பெனியினால் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண் டும் என்பதுடன் விற்பனையின் செலவுகளைக் கொடுப்பதற்கு முதலிலும் பின்பு எத்தொகை தொடர்பாக சோந்தை எழுந்ததோ அத்தொகையைக் கொடுப்பதற்கும் பிரயோகிக்கப்படலும் வேண்டும். எஞ்சிய பாகம் அவ்விற்பனை நடைபெறும் நேரத்தில் அப்பங்குகளுக்கு உரித்துடைய ஆளுக்குக் கொடுபடல் வேண்டும்.

3. பகிர்ந்தளிப்புகள்

(1) கம்பெனியானது இச்சட்டத்தின் 56 ஆம் பிரிவுக்கிணங்க பங்கு தாரர்களுக்கு பகிர்ந்தளிப்புகளைச் செய்யலாம். இவ்அமைப்பக விதியின் (2) பந்திக்கமைவாக பங்கிலாபம் ஒவ்வொன்றும் சபையினாலும் பங்குதாரர்களின் சாதாரண தீர்மானம் ஒன்றினாலும் அங்கீகரிப்படுதல் வேண்டும். கம்பெனியானது பகிர்ந் தளிப்பை உடனடுத்து கடனிறுக்க வகையுடமைப் பரீட்சையைத் திருப்திப்படுத்தும் என சபையானது திருப்திப்படுதல் வேண்டும். பகிர்ந்தளிப்புக்குச் சார்பாக வாக்களிக்கும் பணிப்பாளர்கள், அப் பயன்பட தமது அபிப்பிராயம் பற்றிய சான்றிதழொன்றில் கையொப்பமிடப்படல் வேண்டும்.

(2) சபையானது காலத்துக்காலம், பங்குதாரர்களின் சாதாரண தீர்மானம் ஒன்றினால் அங்கீகரிப்பதற்கான தேவை இன்றி, கம்பெனியின் இலாபங்களிலும் நீதியானதெனத் தோன்று கின்றவிடத்து, பங்குதாரர்களுக்கு இடைக்கால பங்கிலாபமொன் றைக் கொடுப்பதனை அங்கீகரிக்கலாம். கம்பெனியானது இடைக்காலப் பங்கிலாபம் செலுத்தப்பட்டதனை உடனடுத்து கடனிறுக்க வகையுடைமைப் பரீட்சையைத் திருப்திப்படுத்தும் என சபையானது திருப்திப்படல் வேண்டும். இடைக்காலப் பங்கிலாபத்திற்குச் சார்பாக வாக்களிக்கும் பணிப்பாளர்கள், அப் பயன்பட தமது கருத்துப் பற்றிய சான்றிதழொன்றில் கையொப்ப மிடப்படல் வேண்டும்.

(3) கம்பெனியானது –

(அ) தொழிலின் வழமையான நெறிமுறையில் வருமதியாக வருகின்றவாறான கம்பெனியின் கடன்களைச் செலுத்து வதற்கு அது இயலுமானதாக இருந்தால் ; அத்துடன்

(ஆ) அதன் சொத்துக்களின் பெறுமதியானது அதன் பொறுப் புக்களினதும் அதன் உறப்பட்டுள்ள மூலதனத்தினதும் பெறுமதியின் தொகையிலும் பார்க்கக்கூடியதாகவிருந்தால்,

கடனிறுக்க வகையுடைமைப் பரீட்சையை அக்கம்பெனி திருப்திப்படுத்தி யுள்ளதாகக் கருதப்படும்.

4. பங்கு இடாப்பு, பங்குச் சான்றிதழ்கள் மற்றும் பங்குகளைக் கைமாற்றுதலும் பங்குகள் சென்றடைதலும்.

(1) கம்பெனியானது சட்டத்தின் 123 ஆம் பிரிவுடன் இணங்கு கின்றதான பங்கு இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டும். இது பற்றிய அறிவித்தல் இச்சட்டத்தின் 124 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவுக்கிணங்க பதிவாளருக்கு வழங்கப்பட்ட பங்கு இடாப்பானது கம்பெனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலத்தில் அல்லது இலங்கையில் வேறு ஏதேனும் இடத்தில் வைக்கப்படல் வேண்டும்.

(2) பங்குகள் கைமாற்றப்படவேண்டியுள்ளவிடத்து, அதனை வைத்திருப்பவரினால் அல்லது அவரது சட்டப் பிரதிநிதியினால் கையொப்பமிடப்பட்ட கைமாற்றல் படிவமானது கம்பெனியிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும். பங்கானது அதனை வைத்திருப் பவர்மீது ஏதேனும் பொறுப்பை விதித்தால் கைமாற்றமானது, கைமாற்றுபவரினால் கையொப்பமிடப்படல் வேண்டும்.

(3) பங்கு தொடர்பில் கம்பெனிக்குச் செலுத்தப்படற்பாலதான ஏதே னும் தொகையானது வரவேண்டியிருந்தால், ஆனால் செலுத்தப் படாதிருந்தால், கைமாற்றம் பெறப்பட்டு ஆறு கிழமைகளினுள் பங்கொன்றின் கைமாற்றத்தினைப் பதிவு செய்வதற்கு மறுப் பதற்கு சபையானது தீர்மானிக்கலாம். இக் காரணத்திற்காக கைமாற்றமொன்றைப் பதிவு செய்வதற்கு மறுப்பதற்குச் சபை யானது தீர்மானித்தால், அத்தீர்மானத் தேதியிலிருந்து ஒரு கிழமைக்குள் பங்குதாரருக்கு மறுப்புப் பற்றிய அறிவித்தலை வழங்குதல் வேண்டும்.

(4) பங்கு ஒன்றின் கூட்டுப் பங்குதாரர் ஒருவர் இறக்கின்றவிடத்து, எஞ்சியிருக்கும் பங்குதாரர்கள் அப்பங்கை வைத்திருப்பவர்களாக கம்பெனியினால் கருதப்படுதல் வேண்டும். பங்கு ஒன்றைத் தனி யொருவராக வைத்திருப்பவர் இறக்கின்றவிடத்து, அப்பங்கு தாரரின் சட்டப்பிரதிநிதி, பங்கில் ஏதேனும் உரித்தை அல்லது அக்கறையைக் கொண்டிருக்கும் ஒரே ஒரு ஆளாக, கம்பெனி யினால் ஏற்று அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

(5) பங்குதாரர் ஒருவரின் இறப்பின், வங்கி முறிவின் கடனிறுக்க இயலாமையின் அல்லது திறனின்மையின் விளைவாக ஒரு பங்குக்கு உரித்துடையவராக வரும் எவரேனும் ஆள், சபைக்கு அவ்வுரித்துடைமை பற்றிய திருப்தியான எண்பிப்புடன் சேர்த்து, அவ்வாறு பதிவு செய்யப்படுவதற்கு கம்பெனிக்கு எழுத்தில் வேண்டுகோள் ஒன்றைச் செய்வதன் மேல் அப்பங்குதாரரின் பங்குகளை வைத்திருப்பவராகப் பதிவு செய்யப்படலாம், சபை யானது இவ்வமைப்பகவிதியின் (3) ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள சூழ்நிலைகளில் இவ்வுறுப்புரையின்கீழ் கைமாற்றமொன்றைப் பதிவு செய்வதற்கு மறுக்கலாம்.

(6) கம்பெனி பங்குகளை வழங்குகின்றவிடத்து அல்லது ஏதேனும் பங்குகளின் கைமாற்றமானது பங்கு இடாப்பில் பதியப்பட்டுள்ள விடத்து, கம்பெனியானது, இரண்டு மாதங்களினுள், பங்குகள் தொடர்பில் பங்குச் சான்றிதழொன்றைப் பூரணப்படுத்துவதுடன் ஒப்படைப்பதற்கு ஆயத்தமாக வைத்திருத்தலும் வேண்டும்.

**ஆ. பங்குதாரர்களின் கூட்டங்கள்.**

5. பங்குதாரர்களின் கூட்டங்கள் தொடர்பான விதிகள்.

பங்குதாரர்களின் கூட்டமானது இவ்வமைப்பகவிதிகளினால் அவை ஆளப்படாதவரைக்கும், அதன் சொந்த நடவடிக்கை முறையைத் தீர்மானிக்கலாம்.

6. *கூட்டங்கள் பற்றிய அறிவித்தல்.*

(1) பங்குதாரர்களின் கூட்டமொன்றின் நேரம் மற்றும் இடம் பற்றிய எழுத்திலான அறிவித்தல், கூட்டத்தின் அறிவித்தலைப் பெறுவதற்கு உரித்துடையவரான பங்குதாரர் ஒவ்வொருவருக்கும் கம்பெனியின் ஒவ்வொரு பணிப்பாளருக்கும் கணக்காய்வாளர் ஒருவருக்கும் –

(அ) கம்பெனியானது தனியார் கம்பெனி ஒன்றாகவிராதிருந்தாலும் தீர்மானமொன்றைக் கூட்டத்தில் விசேட தீர்மானம் ஒன்றாகப் பிரேரிப்பதற்குக் கருதியிருந்தாலும் கூட்டம் நடைபெற முன்னர் பதினைந்து வேலை நாட்களுக்குக் குறையாமலும் ;

(ஆ) வேறேதேனும் சந்தர்ப்பத்தில், கூட்டம் நடைபெற முன்னர் பத்து வேலைநாட்களுக்குக் குறையாமல்,

வழங்கப்படுதல் வேண்டும்.

(2) அறிவித்தலில் –

(அ) அது தொடர்பான நியாயமான தீர்மானம் ஒன்றை பங்குதாரர் எடுப்பதற்கு இயலச்செய்யும் விதமாக போதுமான விபரங்களுடன் கூட்டத்தில் கொண்டு நடாத்தப்படவுள்ள அலுவலின் தன்மை ; அத்துடன்

(ஆ) கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஏதேனும் தீர்மானத்தின் உரை,

என்பன காட்டப்படல் வேண்டும்.

(3) கூட்டத்திற்குச் சமுகளித்து வாக்களிக்க உரித்துடையவர்களான எல்லாப் பங்குதாரர்களும் ஒழுங்கீனத்தை எதிர்க்காமல் கூட்டத்தில் சமுகமளித்தால் அல்லது அத்தகைய எல்லாப் பங்குதாரர்களும் விட்டுவிடுவதற்கு உடன்பட்டால் கூட்டம் ஒன்றின் அறிவித்தல் ஒன்றில் உள்ள ஏதேனும் ஒழுங்கீனம் விட்டு விடப்படும்.

(4) பங்குதாரர்களின் கூட்டமொன்று முப்பது நாட்களுக்குக் குறைய ஒத்திவைக்கப்பட்டால், ஒத்திவைக்கப்பட்ட கூட்டத்தில் அறிவிப்பதன் மூலம் தவிர, ஒத்திவைக்கப்பட்ட கூட்டத்தின் நேரம் மற்றும் இடம் பற்றிய அறிவித்தலை வழங்குவது அவசியமற்றதாகும்.

7. கூட்டங்களை நடாத்துவதற்கான முறைகள்.

பங்குதாரர்களின் கூட்டமொன்றானது ஒன்றில் —

(அ) கூட்டத்திற்காக நியமிக்கப்பட்ட இடத்திலும் தேதியிலும் நேரத்திலும் ஒன்றாகக் கூடியுள்ளவர்களான கூட்ட நடப்பெண் ஒன்றை உருவாக்குகின்ற, ஒரு எண்ணிக்கையினரான பங்குதாரர்களினால் ; அல்லது

(ஆ) பங்கு பற்றி கூட்ட நடப்பெண் ஒன்றை உருவாக்குகின்ற எல்லாப் பங்குதாரர்களினாலும் கூட்டத்தின்போது ஒரே நேரத்தில் ஒருவரையொருவர் கேட்கக்கூடியதாக இருக்கக்கூடியதான செவிப்புல அல்லது செவிப்புல மற்றும் கட்புல தொடர்பு வாயிலாக,

நடாத்தப்படலாம்.

8. கூட்ட நடப்பெண்.

(1) இவ்வமைப்பக விதியின் மூன்றாம் பந்திக்கமைய, கூட்ட நடப்பெண்ணானது சமுகமாயிருக்கவில்லையெனில், அலுவல் எதுவும் கூட்டமொன்றில் நடைபெறுதலாகாது.

(2) தமக்கிடையே கூட்டத்தில் கொண்டு நடாத்தப்படும் அலுவல்கள் மீது வழங்கப்படவுள்ள வாக்குகளின் பெரும்பான்மையைப் பிரயோகிக்கக்கூடியவர்களான பங்குதாரர்கள் அல்லது அவர்களது பதிலிகள் சமுகமாய் இருந்தால், பங்குதாரர்களின் கூட்டமொன்றிற்கான நடப்பெண் ஒன்று இருக்கும்.

(3) கூட்டத்திற்கு நியமிக்கப்பட்ட நேரத்திற்குப் பின்னர் முப்பது நிமிடங்களுக்குள் கூட்ட நடப்பெண் சமுகளித்திருக்கவில்லையெனில், கூட்டமானது தொடர்ந்து வரும் கிழமையில் அதே நாளில் அதே நேரத்திலும் இடத்திலும் அல்லது பணிப்பாளரினால் நியமிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு தேதியிலும் நேரத்திலும் இடத்திலும் ஒத்திவைக்கப்படும். ஒத்தி வைக்கப்பட்ட கூட்டத்தில், கூட்டத்திற்கு நியமிக்கப்பட்ட நேரத்திற்குப் பின்னர் முப்பது நிமிடங்களினுள் கூட்டநடப்பெண்ணினர் சமுகமளித்திருக்கவில்லையெனில், சமுகமளித்திருக்கும் பங்குதார்கள் அல்லது அவர்களின் பதிலிகள் கூட்ட நடப்பெண் ஒன்றை உருவாக்குபவர்களாகக் கருதப்படல் வேண்டும்.

9. தலைமைதாங்குபவர்.

(1) பணிப்பாளர்கள், சபையின் தலைமை தாங்குபவர் ஒருவரைத் தெரிவு செய்து, சபையின் அத்தலைமை தாங்குபவர் பங்குதாரர்களின் கூட்டமொன்றில் சமுகளித்திருந்தால், அவர் கூட்டத்திற்குத் தலைமை வகித்தல் வேண்டும்.

(2) சபையின் தலைமை தாங்குபவர் ஒருவர் தெரிவு செய்யப்படவில்லையெனில் அல்லது பங்குதாரர்களின் ஏதேனும் கூட்டத்தில், கூட்டம் ஆரம்பமாவதற்கு நியமிக்கப்பட்ட நேரத்திலிருந்து பதினைந்து நிமிடங்களினுள் சபையின் தலைமை தாங்குபவர் சமுகமளித்திருக்கவில்லையெனில், சமுகமளித்திருக்கும் பங்குதாரர்கள் தமது எண்ணிக்கையிலிருந்து ஒருவரைக் கூட்டத்தின் தலைமை தாங்குபவராக இருப்பதற்காகத் தெரிவு செய்யலாம்.

10. வாக்களித்தல்.

(1) அமைப்பகவிதி 7இன் (அ) என்னும் பந்தியின்கீழ் நடாத்தப்பட்ட பங்குதாரர்களின் கூட்டமொன்றின் விடயத்தில் வாக்களிப்பு ஒன்று கோரப்பட்டாலொழிய கூட்டத்தில் வாக்களித்தலானது, கூட்டத்தில் தலைமைதாங்குபவரினால் தீர்மானிக்கப்பட்டவாறாக, பின்வரும் முறைகளுள் எதினாலும் இருத்தல் வேண்டும் –

(அ) குரல் மூலம் வாக்களித்தல் ; அல்லது

(ஆ) கைகளைக் காட்டுவதன் மூலம் வாக்களித்தல்

(2) அமைப்பகவிதி 7இன் (ஆ) என்னும் பந்தியின்கீழ் நடாத்தப்பட்ட பங்குதாரர்களின் கூட்டமொன்றின் விடயத்தில், வாக்களிப்பொன்று கோரப்பட்டால் ஒழிய, கூட்டத்தில் வாக்களித்தலானது, பங்குதாரர்கள் தனித்தனியாக குரல் மூலம் தமது உடன்பாட்டை அல்லது உடன்பாடின்மையைக் குறிப்பிட்டுக் காட்டுவதன் மூலமாகவிருத்தல் வேண்டும்.

(3) நாலாம் பந்திக்கிணங்க, வாக்களிப்பொன்று கோரப்பட்டாலன்றி, தேவைப்படும் பெரும்பான்மையினால் தீர்மானம் ஒன்றானது செய்யப்பட்டுள்ளது எனும் கூட்டத்தின் தலைமை தாங்குபவரினால் செய்யப்பட்ட வெளிப்படுத்துகை ஒன்றானது அந்நிகழ்வுக்கான முடிவான சான்றாகும்.

(4) பங்குதாரர்களின் கூட்டமொன்றில் –

(அ) கூட்டத்தில் வாக்களிக்க உரித்துடைய ஐந்திற்குக் குறையாத பங்குதாரர்களினால் ; அல்லது

(ஆ) கூட்டத்தில் வாக்களிக்க உரித்துடைய எல்லாப் பங்குதாரர்களினதும் மொத்த வாக்களிக்கும் உரித்தில் பத்துசதவீதத்திற்குக் குறையாது பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பங்குதாரர் ஒருவரினால் அல்லது பங்குதாரர்களினால்,

வாக்களிப்பொன்றானது கோரப்படலாம்.

(5) தீர்மானம் ஒன்றின்மீது வாக்கானது ஒன்றில் எடுக்கப்பட முன்னர் அல்லது பின்னர் வாக்களிப்பொன்றானது கோரப்படலாம்.

(6) வாக்களிப்பு ஒன்று எடுக்கப்பட்டால், சமுகமளித்து வாக்களித்த ஒவ்வொரு பங்குதாரரினதும் பங்குகளுக்கான வாக்குகளுக் கிணங்க வாக்குகள் எண்ணப்படல் வேண்டும்.

(7) பங்குதாரர்களின் கூட்டமொன்றில் தலைமைதாங்குபவர் அனுமதி யிடும் வாக்கொன்றிற்கு உரித்துடையவராகார்.

11. பதிலிகள்.

(1) பங்குதாரர் ஒருவர் ஒன்றில் நேரடியாக சமுகமளிப்பதன் மூலம் அல்லது பதிலி மூலம் வாக்களிப்பதற்கான உரிமையைப் பிரயோகிக்கலாம்.

(2) பங்குதாரர் ஒருவருக்கான பதிலி ஒருவர், பதிலியே பங்குதாரர் என்றாற்போன்று, பங்குதாரர்களின் கூட்டமொன்றில் சமுகமளிப் பதற்கும் கேட்கப்படுவதற்கும் உரித்துடையவராவார்.

(3) பங்குதாரினால் கையொப்பமிடப்பட்ட எழுத்திலான அறிவித்தல் மூலம் பதிலி ஒருவர் நியமிக்கப்படுதல் வேண்டும். அந்த நியமனம் குறிப்பிட்ட ஒரு கூட்டத்திற்காக அல்லது குறிப்பிட்டதொரு காலப்குதிக்கானதா என்பதை அறிவித்தல் குறிப்பிடல் வேண் டும்.

(4) கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் இருபத்தி நான்கு மணித் தியாலங்களுக்குக் குறையாமல் நியமனம் பற்றிய அறிவித்தலின் பிரதி ஒன்றை கம்பெனிக்கு வழங்கினாலன்றி கூட்டம் தொடர்பில் பதிலி எவரும் பயனுடையவராகார்.

12. கூட்டக் குறிப்புகள்.

(1) பங்குதாரர்களின் கூட்டங்களின் எல்லா நடவடிக்கைகள் பற்றிய குறிப்புக்கள் வைக்கப்பட்டுள்ளன என்பதை சபையானது உறுதிப் படுத்துதல் வேண்டும்.

(2) கூட்டத்தின் தலைமைதாங்குபவரின் சரியெனக் கையொப்பமிடப் பட்ட குறிப்புகள், அந்நடவடிக்கைகளுக்கான முதற்றோற்றச் சான்றாகும்.

13. பங்குதாரர் பிரேரிப்புகள்

அவ்வாறு செய்வதற்கு உரித்துடையவர்களான பங்குதாரர்கள், இச் சட்டத்தின் 142 ஆம் பிரவுகளுக்கிணங்க கம்பெனிக்கு தீர்மானங்கள் பற்றிய அறிவித்தலை வழங்கலாமென்பதுடன், 142 ஆம் பிரிவுக்

கிணங்க, விடயத்துக்கேற்றாற்போன்று, தீர்மானம் பற்றிய அறிவித்தலை வழங்குதல் அல்லது கூற்றை சுற்றறிக்கையிடல் அல்லது இரண்டையும் செய்தல் கம்பெனியின் கடமையாதலும் வேண்டும். கம்பெனியானது 142 ஆம் பிரிவின் (4) அல்லது (5) ஆம் உட்பிரிவுகளில் காட்டப்பட்டுள்ள சூழ்நிலைகளில் தீர்மானம் பற்றிய அறிவித்தலை வழங்குவதற்கு அல்லது கூற்றொன்றைச் சுற்றறிக்கையிடுவதற்கு தேவைப்படுத்தப்பட மாட்டாது.

14. பிரதிநிதிகள் மூலம் கூட்டுத்தாபனங்கள் செயலாற்றலாம்.

பங்குதாரர் ஒருவராகவுள்ள கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றானது, பதிலி ஒருவரை அது நியமிக்கக்கூடியதாகவிருந்தாற்போன்று, அதே முறையில் அதன் சார்பில் பங்குதாரர்களின் கூட்டமொன்றில் சமுகமளிப்பதற்கு பிரதிநிதி ஒருவரை நியமிக்கலாம்.

15. கூட்டுப் பங்கு வைத்திருப்பவர்களின் வாக்குகள்.

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்கள், பங்கு ஒன்றை வைத்திருப்பவர்களாகப் பதிவு செய்யப்பட்டிருக்குமிடத்து, பங்கு இடாப்பில் முதலாவதாகப் பெயருள்ளவரும் அவ்விடயம் மீது வாக்களிப்பவருமான ஆளின் வாக்கானது, ஏனைய கூட்டுப்பங்கு வைத்திருப்பவர்களின் வாக்குகளுக்குப் புறநீங்கலாக, ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

16. அழைப்புக்கள் செலுத்தப்படாவிட்டால் வாக்களிக்கும் உரிமையை இழத்தல்.

பங்கொன்று தொடர்பில் கம்பெனிக்குச் செலுத்தப்பட வேண்டிதான பணத்தொகையொன்று செலுத்தப்படாவிட்டால், அக்கறைத் தொகுதியொன்றினது கூட்டமொன்று தவிர்ந்த, பங்குதாரர்களின் கூட்டமொன்றில் அந்தப்பங்கு வாக்களிக்கப்பட முடியாது.

17. பங்குதாரர்களின் ஆண்டுக் கூட்டங்களும் அதிவிசேட கூட்டங்களும்.

(1) இந்த அமைப்பகவிதியின் (2) ஆம், (3) ஆம் பந்திகளுக்கு அமைவாக, சபையானது,–

(அ) ஒவ்வொரு பஞ்சாங்க ஆண்டிலும் ஒரு தடவை ;

(ஆ) கம்பெனியின் ஐந்தொகைத் திகதியின் பின்னர் ஆறு மாதங்களுக்குப் பிந்தாமல் ; அத்துடன்

(இ) முன்னைய ஆண்டுக் கூட்டத்தின் பின்னர் பதினைந்து மாதங்களுக்குப் பிந்தாமல்,

கம்பெனியின் ஆண்டுப் பொதுக்கூட்டமொன்றைக் கூட்டுதல் வேண்டும்.

எத்திகதியில் கூட்டம் நடாத்தப்படவேண்டியிருக்கின்றது என அழைக்கப்படுகின்றதோ அத்திகதியில் அது நடாத்தப்படுதல் வேண்டும்.

(2) கம்பெனியானது அது கூட்டிணைக்கப்பட்ட பஞ்சாங்க ஆண்டில் அதனது முதலாவது ஆண்டுக் கூட்டத்தை நடாத்தத் தேவையில்லை. ஆனால் அது கூட்டிணைக்கப்பட்டதான பதினெட்டு மாதங்களுக்குள் அந்தக் கூட்டத்தை நடாத்துதல் வேண்டும்.

(3) விடயமொன்றின்மீது வாக்களிப்பதற்கு உரித்துடையவர்களான பங்குதாரர்களின் அதிவிசேட கூட்டமொன்று சபையினால் எந்நேரத்திலும் கூட்டப்படலாம், அத்துடன் அந்த விடயத்தின் மீது வாக்களிக்கப்படக்கூடிய வாக்குகளின் பத்து வீதத்தைவிட குறையாத பங்குகளை வைத்திருக்கும் பங்குதாரர்களின் எழுத்திலான வேண்டுகோளின் மீது சபையினால் கூட்டப்படல் வேண்டும்.

(4) தீர்மானமொன்றின் மீது வாக்களிப்பதற்கு உரித்துடைய வாக்குகளின் எண்பத்தைந்து வீதத்தை விட குறையாதவற்றை ஒன்று சேர்த்துக்கொண்டிருக்கும் பங்குதாரர்களின் கூட்டமொன்றில் அத்தீர்மானத்தின்மீது வாக்களிப்பதற்கு உரித்துடையவர்களான பங்குதாரர்களின் எண்பத்தைந்து வீதத்தை விட குறையாதவர்களால் ஒப்பமிடப்பட்ட எழுத்திலான தீர்மானமொன்று அப்பங்குதாரர்களின் கூட்டமொன்றில் நிறைவேற்றப்பட்டாற் போன்று வலிதானதாகவிருக்கும் ; இவ்வாசகத்திற்கு இணங்க (தீர்மானமூலம் அல்லது வேறுவகையாக) அக்கூட்டத்தில் செய்யப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட சகல காரியங்களும் தீர்மானமூலம் செய்யப்பட்டால் கம்பெனியானது ஆண்டுக் கூட்டமொன்றை நடாத்தத் தேவையில்லை.

(5) கம்பெனியானது, இந்த அமைப்பகவிதியின் (4) ஆம் பந்தியின்கீழ் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்ட ஐந்து வேலைநாட்களுக்குள்ளாக அத்தீர்மானத்தில் ஒப்பமிடாத ஒவ்வொரு பங்குதாரருக்கும் அத்தீர்மானத்தின் பிரதியொன்றை அனுப்புதல் வேண்டும்.

(6) பங்குதாரருக்கு முன்னறிவித்தல் எதுவும் கொடுக்காமல் இந்த அமைப்பகவிதியின் (4) ஆம் பந்தியின்கீழ் தீர்மானமொன்று நிறைவேற்றப்படலாம்.

18. அக்கறைத் தொகுதிகளில் வாக்களித்தல்.

இச்சட்டத்தின் 99 ஆம் பிரிவின் கருத்தெல்லைக்குள்ளாகப் பங்குகளுடன் சேர்ந்த உரிமைகளைப் பாதிக்கின்றதான நடவடிக்கை எடுப்பதற்குக் கம்பெனியானது உத்தேசிக்கின்றவிடத்து, இச்சட்டத்தில் வரைவிலக்கணங்கூறப்பட்டவாறாக, ஒவ்வொரு அக்கறைத் தொகுதியிலும் விசேட தீர்மானமொன்றின் மூலம் அங்கீகரிக்கப்பட்டாலொழிய, நடவடிக்கை எடுக்கப்படல் ஆகாது.

19. *பகிர்ந்தளிப்பைப் பெறுவதற்கும் முற்கொள் உரிமைகளைப் பிர யோகிப்பதற்கும் கூட்டங்களில் சமுகமளித்து வாக்களிப்பதற்கும் உரித்துடைய பங்குதாரர்கள்*

(1) எந்நோக்கத்திற்கும் பங்குதாரர்களின் கூட்டமொன்று பற்றிய அறிவித்தலைப் பெறுவற்கு உரித்துடையவர்களாக இருக்கின்ற பங்குதாரர்கள் —

(அ) அந்நோக்கத்திற்கெனச் சபையானது திகதியொன்றை நிர்ண யித்தால், அந்தத் திகதியன்று பங்கு இடாப்பில் அவரது பெயர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளவர்களான அப்பங்குதாரர் கள் ; அல்லது

(ஆ) அந்நோக்கத்திற்கெனச் சபையானது திகதியொன்றை நிர்ண யிக்காவிட்டால், அறிவித்தல் எத்திகதியன்று கொடுக்கப்பட்டுள் ளதோ அத்திகதிக்கு உடன்முன்னராகவுள்ள தொழில் முடிவு நாளில் பங்கு இடாப்பில் அவரது பெயர்கள் பதிவு செய்யப்பட் டுள்ளவர்களான அப்பங்குதாரர்கள்,

ஆவர்.

(2) இந்த அமைப்பகவிதியின் (1) ஆம் பந்தியின்கீழ் நிர்ணயிக்கப்பட்ட ஒரு திகதி கூட்டம் எத்திகதியில் நடாத்தப்படவிருக்கின்றதோ அத்திகதி யிலிருந்து முப்பது வேலைநாட்களை விட அதிகமாக முந்தியதாதல் ஆகாது.

(3) பங்குதார்களின் கூட்டமொன்றுக்கு முன்னர், கம்பெனியானது —

(அ) இந்த அமைப்பக விதியின் (1) ஆம் பந்தியின்கீழ் திகதியொன்று நிர்ணயிக்கப்பட்டால், அந்தத் திகதியின் பின்னர் பத்து நாட்களை விட பிந்தமால் ; அல்லது

(ஆ) அத்தகைய திகதி எதுவும் நிர்ணயிக்கப்படாவிட்டால், எத்திகதி யில் அறிவித்தல் கொடுக்கப்பட்டதோ அத்திகதிக்கு உடன் முன்னரான தொழில் முடிவு திகதியன்று,

கூட்டம்பற்றிய அறிவித்தலைப் பெறுவதற்கு உரித்துடையவர்களான பங்குதாரர்களின் அகரவரிசைப்படி ஒழுங்குபடுத்தப்பட்டு அத் துடன் ஒவ்வொரு பங்குதாரரும் வைத்திருக்கும் பங்குகளின் எண்ணிக் கையைக் காட்டும் நிரலொன்றைத் தயாரிக்கலாம்.

(4) இந்த அமைப்பகவிதியின் (3) ஆம் பந்தியின்கீழ் தயாரிக்கப்பட்ட நிரலொன்றில் பெயர் குறிப்பிடப்பட்ட ஆளொருவர் –

(அ) அந்த ஆள், கூட்டம்பற்றிய அறிவித்தலைப் பெறுவதற்கு உரித்துடையவர்களான பங்குதாரர்கள் பற்றித் தீர்மானித்த திகதி தொடக்கம் அவருடைய பங்குகள் எவற்றையும் வேறு ஓர் ஆளுக்குக் கைமாற்றஞ்செய்துள்ள அளவுக்குக் தவிரவும் ; அத்துடன்

(ஆ) அப்பங்குகளைக் கைமாற்றிப் பெற்றவர் அப்பங்குகளை வைத்திருப்பவராகப் பதிவுசெய்யப்பட்டு அத்துடன் கூட்டம் தொடங்க முன்னர் இந்த அமைப்பகவிதியின் (3) ஆம் பந்தியின்கீழ் தயாரிக்கப்பட்ட நிரலில் பதியப்படல் வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்துள்ள அளவுக்குத் தவிரவும்,

கூட்டத்தில் சமுகமளித்து அவருடைய பெயருக்கு எதிராக காட்டப்பட்டுள்ள பங்குகள் தொடர்பில் நேரடியாக அல்லது பதிலிமூலம் வாக்களிப்பதற்கு உரித்துடையவராவார்.

(5) பங்குதாரரொருவர், இந்த அமைப்பகவிதியின் (3) ஆம் பந்தியின்கீழ் தயாரிக்கப்பட்ட நிரலொன்றை, அக்கம்பெனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தில் வழமையான அலுவல் நேரங்களில் பார்வையிடலாம்.

**இ. பணிப்பாளர்களும் செயலாளரும்**

20. பணிப்பாளர்களின் நியமனமும் அவர்களைப் பதவியிலிருந்து அகற்றலும்.

(1) பங்குதாரர்கள், கம்பெனியின் பணிப்பாளர்களின் எண்ணிக்கையை சாதாரண தீர்மானம்மூலம் நிர்ணயிக்கலாம்.

(2) பணிப்பாளரொருவர் அந்நோக்கத்திற்கெனக் கூட்டப்பட்ட கூட்டமொன்றில் நிறைவேற்றப்பட்ட சாதாரண தீர்மானம்மூலம் அல்லது 17 ஆம் அமைப்பக விதியின் (4) ஆம் பந்திக்கிணங்கவுள்ள எழுத்திலான தீர்மானமொன்றின்மூலம் நியமிக்கப்படலாம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படலாம் ; கம்பெனியானது தனியார் கம்பெனியொன்றாக இருந்தாலொழிய, பணிப்பாளரை நியமிப்பதற்கான தீர்மானமொன்றின்மீது -

(அ) அத்தீர்மானம் ஒரு பணிப்பாளரை நியமிப்பதற்கானதாக இருந்தால், அல்லது

(ஆ) அத்தீர்மானம் பணிப்பாளர்களாக இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்களை நியமிப்பதற்கான தனியொரு தீர்மானமாக இருந்தால், அத்துடன் அவ்வாறு வாக்களிக்கப்பட வேண்டுமென, அதற்கெதிராக வாக்கு எதுவும் அளிக்கப்படாமல் தனிவேறான தீர்மானமொன்று முதலில் நிறைவேற்றப்பட்டிருந்தால்,

பங்குதாரர்கள் வாக்களிக்கலாம்.

(3) பணிப்பாளர் ஒருவர், பதவிவிலகல் பற்றிய ஒப்பமிடப்பட்ட எழுத்திலான அறிவித்தலொன்றைக் கம்பெனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தில் ஒப்படைப்பதன்மூலம் பதவி விலகலாம் ; இச்சட்டத்தின் 208 ஆம் பிரிவிற்கமைவாக, அவ் அறிவித்தலானது, அது பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தில் பெறப்பட்டதும் அல்லது அவ் அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட பிந்திய ஏதேனும் நேரத்தில் பயனுறுவதாகும்.

(4) பணிப்பாளர் ஒருவர் -

(அ) அவர் இந்த அமைப்பகவிதியின் (3) ஆம் பந்திக்கு இணங்க பதவிவிலகினால் ;

(ஆ) அவர் இந்தச் சட்டத்தின் அல்லது இந்த அமைப்பகவிதிகளின் ஏற்பாடுகளுக்கிணங்க பதவியிலிருந்து அகற்றப்பட்டால் ;

(இ) அவர் இச்சட்டத்தின் 202 ஆம் பிரிவைப் பின்பற்றி பணிப்பாளர் ஒருவராக இருப்பதற்கு தகுதியற்றவராக வந்தால் ;

(ஈ) அவர் இறந்தால் ; அல்லது

(உ) அவர், அவருடைய வயது காரணமாக இச்சட்டத்தின் 210 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவினைப் பின்பற்றி பதவியை வறிதாக்கினால்,

அவரது பதவியை வறிதாக்கியவராவார்.

21. பணிப்பாளர்களின் தத்துவங்களும் கடமைகளும்.

(1) பாரிய கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான இச்சட்டத்தின் 185 ஆம் பிரிவிற்கமைவாக, கம்பெனியின் தொழில் மற்றும் அலுவல்கள் சபையின் பணிப்பின்கீழ் அல்லது சபையின் மேற்பார்வை

யின்கீழ் அல்லது சபையினால் முகாமை செய்யப்படல் வேண்டும். சபையானது, கம்பெனியின் தொழில் மற்றும் அலுவல்களை முகாமை செய்வதற்கும் அத்துடன் கம்பெனி முகாமைத்துவத்தை நெறிப்படுத்துவதற்கும் மேற்பார்வை செய்வதற்கும் அவசியமான எல்லாத் தத்துவங்களையும் உடையதாதல் வேண்டும்.

(2) சபையானது, இச்சட்டத்தின் 186 ஆம் பிரிவின்கீழ் கையளிப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கின்றதான அதனது தத்துவங்களுள் எதனையும் பணிப்பாளர் குழுவொன்றுக்கு அல்லது பணிப்பாளர் அல்லது ஊழியர் ஒருவருக்கு கையளிக்கலாம்.

(3) பணிப்பாளர்கள் இச்சட்டத்தில் தரப்பட்ட கடமைகளுடன் குறிப்பாக பின்வரும் கடமைகளையும் உடையவர்களாதல் வேண்டும் :-

(அ) ஒவ்வொரு பணிப்பாளரும் நல்ல விசுவாசத்துடனும் கம்பெனியின் நலன்களுக்கு சிறந்ததாக இருப்பதாக எதனை நம்புகின்றாரோ அதன்படியும் செயற்படுதல் வேண்டும் ;

(ஆ) பணிப்பாளர் எவரும் இந்தச் சட்டத்தின் அல்லது இதன் அமைப்பகவிதிகளின் எவையேனும் ஏற்பாடுகளுடன் முரண்படுகின்ற முறையில், செயற்படுதலோ அல்லது கம்பெனி செயற்பட உடன்படுதலோ ஆகாது.

22. அக்கறையுள்ள பணிப்பாளர்கள்

(1) எந்தக் கொடுக்கல் வாங்கலொன்றிற்கு கம்பெனி கட்சிக்காரரொருவராக இருக்கின்றதோ அந்தக் கொடுக்கல்வாங்கல் நடவடிக்கை ஒன்றில் அக்கறையுள்ளவராக இருக்கும் பணிப்பாளரொருவர் இச்சட்டத்தின் 192 ஆம் பிரிவிற்கிணங்க அந்த அக்கறை பற்றி வெளிவிடுதல் வேண்டும்.

(2) இந்த அமைப்பகவிதியின் (3) ஆம் பந்திக்கு அமைவாக, கம்பெனியின் பணிப்பாளர் ஒருவர்

(அ) கொடுக்கல்வாங்கலுக்கு திறத்தவர் ஒருவராக இருந்தால் அல்லது அக்கொடுக்கல்வாங்கலிலிருந்து முக்கியமான நிதிசார் நலனைப் பெறுவார் எனில் அல்லது பெறக்கூடும் எனில்,

(ஆ) கொடுக்கல்வாங்கலுக்கான வேறொரு திறத்தவரில் முக்கியமான நிதிசார் அக்கறை ஒன்றைக் கொண்டிருந்தால்,

(இ) (i) கம்பெனியானது முழுமையாக சொந்தங்கொள்ளப்பட்ட துணைநிலைக் கம்பெனியாக இருக்கும் அந்தக் கம்பெனியினது கொளிக்கம்பெனியாக இருக்கின்ற கம்பெனியினது கொளிக்கம்பெனியாக,

(ii) அக்கம்பெனியினது முழுமையாக சொந்தங்கொள் ளப்பட்ட துணைநிலைக் கம்பெனியொன்றாக ; அல்லது

(iii) எந்தக் கம்பெனி முழுமையாக சொந்தங்கொள்ளப் பட்ட துணைநிலைக் கம்பெனியாக இருக்கின்றதோ அந்தக் கொளிக்கம்பெனியொன்றினது முழுமையாக சொந்தங்கொள்ளப்பட்ட துணைநிலைக் கம்பெனியொன்றாக,

அதாவது திறத்தவராக அல்லது ஆளாக இராது, கொடுக் கல் வாங்கலுக்கான வேறொரு திறத்தவரின் அல்லது கொடுக்கல்வாங்கலிலிருந்து முக்கிய நிதிசார் நலனைப் பெறும் அல்லது பெறக்கூடிய பணிப்பாளராக, அலுவல ராக அல்லது ஆளின் நம்பிக்கைப்பொறுப்பாளராக இருந் தால்,

(ஈ) கொடுக்கல்வாங்கலுக்கான வேறொரு திறத்தவரின் அல்லது அக்கொடுக்கல்வாங்கலிலிருந்து முக்கியமான நன்மை ஒன்றைப் பெறும் அல்லது பெறக்கூடிய அவரின் பெற்றோர், பிள்ளை அல்லது வாழ்க்கைத்துணையாக இருந்தால், அல்லது

(உ) கொடுக்கல்வாங்கலில் முக்கியமான நலனை வேறுவகை யில் நேரடியாக அல்லது மறைமுகமாக கொண்டிருந்தால்,

அவ்வாறிருந்தால் மட்டுமே, கம்பெனியொன்று திறத்தவராக வுள்ள கொடுக்கல் வாங்கலில் கம்பெனியொன்றன் பணிப்பாளர் அக்கறைகொண்டவராக இருப்பார்.

(3) கம்பெனியானது எந்தக் கடன் தொடர்பில் அல்லது கடப்பாடு தொடர்பில் பணிப்பாளர் அல்லது வேறு ஒரு ஆள் உத்தரவாதத் தின்கீழ், நட்டோத்தரவாதத்தின்கீழ் அல்லது பிணைப்பொறுப் பொன்றை வைப்பிலிடுவதன்மூலம் முழுமையாக அல்லது பகுதி யளவில் தனிப்பட்ட ரீதியாக பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக் கின்றாரோ அந்தக் கடன் அல்லது கடப்பாடு தொடர்பில், மூன்றாம் திறத்தவரின் வேண்டுகோளின்பேரில் பணிப்பாள ருடன் எவ்வித தொடர்புமற்ற மூன்றாம் திறத்தவருக்கு பிணைப் பொறுப்புக் கம்பெனியால் கொடுக்கப்படுவதை மாத்திரம் கொடுக்கல்வாங்கல் ஒன்று உள்ளடக்கினால், எந்தக் கொடுக்கல் வாங்கலுக்கு கம்பெனி திறத்தவர் ஒருவராக இருக்கின்றதோ அக்கொடுக்கல்வாங்கலில் கம்பெனியின் பணிப்பாளர் அக்கறை கொண்டிராதவராவார்.

(4) இச்சட்டத்தின் 216 ஆம் பிரிவிற்கிணங்க பணிப்பாளரொருவருக்குக் கொடுக்கப்பட்டுள்ள ஏதேனும் ஊதியத்திற்கு அல்லது வேறுநலனுக்கு அல்லது இச்சட்டத்தின் 218 ஆம் பிரிவிற்கிணங்க ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள ஏதேனும் காப்புறுதிக்கு அல்லது நட்டோத்தரவாதத்திற்கு இந்த அமைப்பகவிதியின் (2) ஆம் பந்தி ஏற்புடையதாகாது.

(5) கம்பெனியால் செய்துகொள்ளப்பட்டுள்ள அல்லது செய்துகொள்ளப்படவிருக்கின்ற கொடுக்கல்வாங்கலொன்றில் அக்கறை கொண்டுள்ளவரான கம்பெனியின் பணிப்பாளர் ஒருவர், அவர் அக்கொடுக்கல்வாங்கலில் அக்கறைகொண்டிருக்கவில்லை என்றாற்போன்று -

(அ) அக்கொடுக்கல்வாங்கல் தொடர்பிலான விடயமொன்றின் மீது வாக்களிக்கலாம் ;

(ஆ) அக்கொடுக்கல் வாங்கல் தொடர்பிலான விடயமொன்று எழுகின்ற பணிப்பாளர்களின் கூட்டம் ஒன்றில் சமுகமளிக்கலாம், அத்துடன் நடப்பெண்ணொன்றின் நோக்கத்திற்கான ஒரு கூட்டத்தில் சமுகமளித்திருக்கும் பணிப்பாளர்களிடையே உள்ளடக்கப்பட்டிருக்கலாம் ;

(இ) கம்பெனியின் சார்பில் அக்கொடுக்கல்வாங்கல் தொடர்பில் ஆவணமொன்றில் கையொப்பமிடலாம் ; அத்துடன்

(ஈ) அக்கொடுக்கல் வாங்கல் தொடர்பில் பணிப்பாளர் ஒருவர் என்றவகையில் அவருடைய தன்மையில் வேறு ஏதேனும் விடயத்தைச் செய்யலாம்.

(6) வேறுவகையில் அவருக்குக் கிடைக்கப்பெறாத கம்பெனியின் பணிப்பாளர் அல்லது ஊழியர் என்ற தன்மையில், தகவலை வைத்திருக்கும் கம்பெனியின் பணிப்பாளர் ஒருவர் –

(அ) கம்பெனியின் நோக்கங்களுக்காக ;

(ஆ) சட்டத்தால் தேவைப்படுத்தப்பட்டவாறாக ; அல்லது

(இ) இந்த அமைப்பகவிதியின் (7) ஆம் பந்திக்கு இணங்க,

தவிர, எவரேனும் ஆளுக்கு அத்தகவலை வெளிப்படுத்துதலாகாது அல்லது அத்தகவலை பயன்படுத்தவோ அல்லது அதன் மீது செயற்படவோ கூடாது.

(7) கம்பெனியின் பணிப்பாளர் ஒருவர் -

(அ) பணிப்பாளர் இந்த அமைப்பகவிதியின் (8) ஆம் பந்தியின் கீழ் சபையினால் அவ்வாறு செய்வதற்கு முதலில் அதிகார மளிக்கப்பட்டால் ; அத்துடன்

(ஆ) அதிகாரவளிப்பு பற்றிய விபரங்கள் அக்கறைகள் பற்றிய இடாப்பில் பதியப்பட்டிருந்தால்,

அத்தகவலை வெளிவிடலாம், பயன்படுத்தலாம் அல்லது அத்தகவல்மீது செயற்படலாம்.

(8) சபையானது, அவ்வாறு செய்வது கம்பெனியைப் பாதிக்கும் சாத்தியமில்லை என்று திருப்திப்பட்டால் அது, தகவலை வெளியிடுவதற்கு, பயன்படுத்துவதற்கு அல்லது தகவல்மீது செயற்படுவதற்கு பணிப்பாளர் ஒருவருக்கு அதிகாரமளிக்கலாம்.

(9) பணிப்பாளர் ஒருவர் இச்சட்டத்தின் 198 ஆம், 199 ஆம் மற்றும் 200 ஆம் பிரிவுக்கிணங்க, அவர் இயைபான அக்கறைகொண்டிருக்கின்ற கம்பெனியின் பங்குகளின் எல்லாக் கையாளுகைகளையும் வெளிவிடுதல் வேண்டும்.

23. பணிப்பாளர்களின் கூட்டங்களிலான நடைமுறை.

(1) 24 தொடக்கம் 30 வரையிலான அமைப்பகவிதிகள் பணிப்பாளர்களின் கூட்டங்களில் பின்பற்றப்படவேண்டிய நடைமுறையைத் தருகின்றன.

(2) பணிப்பாளர்களின் கூட்டம் ஒன்று இந்த அமைப்பகவிதிகளினால் ஆளப்படாத அந்த அளவுக்கு, அதனது சொந்த நடைமுறையைத் தீர்மானிக்கலாம்.

24. தலைமைதாங்குபவர்.

(1) பணிப்பாளர்கள், சபையின் தலைமைதாங்குபவராக தம்முள் ஒருவரைத் தெரிந்தெடுக்கலாம் என்பதுடன் அத்தலைமைதாங்குபவர் எக்காலத்திற்கு பதவி வகிக்க வேண்டும் என்பதையும் தீர்மானிக்கலாம்.

(2) தலைமைதாங்குபவர் எவரும் தெரிவுசெய்யப்படாவிடில் அல்லது சபையின் கூட்டமொன்றில் அக்கூட்டத்தை ஆரம்பிப்பதற்கு நியமிக்கப்பட்ட நேரத்திற்கு பின்னர் ஐந்து நிமிடங்களுக்குள் தலைமைதாங்குபவர் சமுகமளிக்காவிடில் சமுகமளித்துள்ள பணிப்பாளர்கள் தம்முள் ஒருவரை கூட்டத்தில் தலைமைதாங்குபவராக இருப்பதற்கெனத் தெரிவுசெய்யலாம்.

25. கூட்டம் பற்றிய அறிவித்தல்

(1) பணிப்பாளர் அல்லது செயலாளர் அல்லது அவ்வாறு செய்வதற்கு பணிப்பாளர் ஒருவரினால் வேண்டப்பட்டால் கம்பெனியின் ஊழியர் ஒருவர் இந்த அமைப்பகவிதிக்கிணங்க அறிவித்தல் கொடுப்பதன்மூலம் சபையின் கூட்டமொன்றைக் கூட்டலாம்.

(2) இலங்கையில் இருக்கின்ற ஒவ்வொரு பணிப்பாளருக்கும், சபையின் கூட்டம் ஒன்று பற்றிய அறிவித்தல் இருபத்துநான்கு மணித்தியாலங்களை விடப் பிந்தாமல் கொடுக்கப்படுதல் வேண்டும்.

(3) கூட்டம் பற்றிய அறிவித்தலைப் பெறுவதற்கு உரித்துடையவர்களான எல்லாப் பணிப்பாளர்களும் ஒழுங்கீனத்துக்கான எதிர்ப்பின்றி கூட்டத்திற்குச் சமுகமளித்திருந்தால் அல்லது கூட்டம் பற்றிய அறிவித்தலைப் பெறுவதற்கு உரித்துடையவர்களான எல்லாப் பணிப்பாளர்களும் விட்டுவிடுவதற்கு உடன்பட்டால், கூட்டம் பற்றிய அறிவித்தலில் உள்ள ஒழுங்கீனமொன்று விட்டுவிடப் பட்டாகிவிடும்.

26. கூட்டங்களை நடாத்தும்முறைகள்

சபையின் கூட்டமொன்று, ஒன்றில் –

(அ) கூட்டநடப்பெண், ஒன்றாக அமையும் பணிப்பாளர்களின் ஓர் எண்ணிக்கையினர், அக்கூட்டத்திற்கென நியமிக்கப்பட்ட இடத்திலும் தேதியிலும் அத்துடன் நேரத்திலும் ஒன்று சேர்ந்திருப்பதன்மூலம் நடாத்தப்படலாம் ; அல்லது

(ஆ) கூட்டத்தில் பங்குபற்றி கூட்டநடப்பெண் ஒன்றாக அமையும் எல்லாப் பணிப்பாளர்களும் அக்கூட்டம் முடிவடையும்வரை ஒவ்வொருவரையும் எந்நேரத்தில் கேட்கக்கூடியதாக இருக்கும் செவிப்புல அல்லது செவிப்புல மற்றும் கட்புல தொடர்பாடல் வழிகள்மூலம் நடாத்தப்படலாம்.

27. கூட்ட நடப்பெண்

(1) சபையின் கூட்டமொன்றிற்கான கூட்டநடப்பெண் ஆனது பணிப்பாளர்களின் ஒரு பெரும்பான்மையாக இருக்கும்.

(2) பணிப்பாளர்களின் கூட்டமொன்றில் கூட்டநடப்பெண் ஒன்று சமுகமளிக்காதுவிட்டால், எந்த அலுவலும் கையாளப்படுதல் ஆகாது.

28. வாக்களித்தல்

(1) ஒவ்வொரு பணிப்பாளரும் ஒரு வாக்கினை உடையவராயிருப்பார்.

(2) தலைமைதாங்குபவர் அறுதியிடும் வாக்கு ஒன்றை உடையவராயிருப்பார்.

(3) சபையின் தீர்மானமொன்று, சமுகமளிக்கும் எல்லாப் பணிப்பாளர்களாலும் ஒருப்படாமை இன்றி, உடன்படப்பட்டால் அல்லது அதன்மீது அளிக்கப்பட்ட வாக்குகளின் பெரும்பான்மை அதன் சார்பில் இருந்தால், அத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக இருக்கும்.

(4) சபையின் கூட்டமொன்றில் சமுகமளிக்கும் பணிப்பாளர் ஒருவர், அவர் அக்கூட்டத்தில் தீர்மானித்ததிலிருந்து வெளிப்படையாக ஒருப்படாதிருந்தாலொழிய அல்லது அத்தீர்மானத்திற்கு எதிராக வாக்களித்தாலொழிய சபையின் தீர்மானமொன்றுக்கு உடன்பட்டிருக்கின்றார் எனவும் அதன் சார்பில் வாக்களித்தும் இருக்கின்றார் எனவும் ஊகிக்கப்படும்.

29. கூட்டக்குறிப்புகள்.

சபையானது சபையினது கூட்டங்களின் எல்லா நடவடிக்கைகளினதும் கூட்டக்குறிப்புகள் வைத்திருக்கப்பட்டிருக்கின்றன என்று உறுதிப்படுத்தல் வேண்டும்.

30. ஏகமனதான தீர்மானம்.

(1) சபையின் கூட்டம் பற்றிய அறிவித்தலைப் பெறுவதற்கு உரித்துடையவர்களான எல்லாப் பணிப்பாளர்களாலும் ஒப்பமிடப்பட்ட அல்லது இசைந்து கொள்ளப்பட்ட எழுத்திலான தீர்மானமொன்று, முறையாகக்கூட்டப்பட்டு நடாத்தப்பட்ட சபையின் கூட்டமொன்றில் நிறைவேற்றப்பட்டிருந்தாற்போன்று, வலிதானதாகவும் பயனுறுவதாகவும் இருக்கும்.

(2) ஏதேனும் அத்தகைய தீர்மானம் அவை ஒவ்வொன்றும் ஒரு பணிப்பாளரினால் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பணிப்பாளர்களால் ஒப்பமிடப்பட்ட அல்லது இசைந்து கொள்ளப்பட்ட அதே படிவத்திலான பல ஆவணங்களை (தொலை அஞ்சல் அல்லது வேறு அதேபோன்ற தொடர்பாடல் வழிகள் உள்ளடங்கலாக) கொண்டிருக்கலாம்.

(3) அத்தகைய ஏதேனும் தீர்மானத்தின் பிரதியொன்றை சபையின் நடவடிக்கைகள் பற்றிய கூட்டக்குறிப்புப் புத்தகத்தில் பதிவுசெய்யப்பட்டிருந்தல் வேண்டும்.

31. *முகாமைப் பணிப்பாளரும் வேறு நிறைவேற்றுப் பணிப்பாளர்களும்.*

(1) சபையானது காலத்திற்குக் காலம் அது பொருத்தமானது எனக் கருதுகின்றவாறான அத்தகைய காலப்பகுதிக்கும் அத்தகைய நியதிகளின் மீதும் பணிப்பாளர் ஒருவரை முகாமைப் பணிப் பாளராக நியமிக்கலாம்.

(2) ஒரு முகாமைப் பணிப்பாளரினது நியமனத்தின் நியதிகளுக்கு அமைவாக சபையானது, எந்நேரத்திலும் முகாமைப் பணிப்பாள ராகப் பணிப்பாளர் ஒருவரின் நியமனத்தை நீக்கஞ் செய்யலாம்.

(3) முகாமைப் பணிப்பாளராகப் பதவிவகிக்கும் பணிப்பாளர் ஒருவர், அவர் கம்பெனியின் பணிப்பாளர் ஒருவராக இல்லா தொழிந்திருந்தால் முகாமைப் பணிப்பாளராக பதவி வகிக்கா தொழிவார்.

(4) முகாமைப் பணிப்பாளருக்கு, அவரும் சபையும் உடன்படக்கூடிய வாறான அத்தகைய ஊதியம் செலுத்தப்படுதல் வேண்டும். அவரது ஊதியமானது சம்பளம், தரகு, இலாபங்களில் பங்கு பற்றுதல் அல்லது இம்முறைகளின் ஏதேனும் இணைப்பு அல்லது ஊதியத்தை நிர்ணயிக்கின்ற ஏதேனும் வேறு முறை போன்ற வழிகள் மூலமானதாக இருக்கலாம்.

(5) சபையானது அதன் தத்துவங்களுள் எத்தத்துவங்கள் சட்டரீதி யாக முகாமைப் பணிப்பாளருக்குக் கையளிக்கப்பட முடியுமோ அவற்றுள் ஏதேனும் தத்துவத்தை, எந்த நிபந்தனைகள் அல்லது மட்டுப்பாடுகள் பொருத்தமானவையென அது கருதுகின்றதோ அந் நிபந்தனைகள் அல்லது மட்டுப்பாடுகள் எவற்றுக்கும் அமை வாக, கையளிக்கலாம். அத்தகைய ஏதேனும் கையளிப்பு சபை யினால் எந்நேரத்திலும் மீளப் பெறப்படலாம் அல்லது வேறுபடுத் தப்படலாம் ; சபையினது தத்துவமொன்றை முகாமைப்பணிப் பாளருக்கு கையளித்தமை கையளிப்பின் நியதிகள் வெளிப்படை யாக வேறுவகையில் ஏற்பாடு செய்திருந்தாலொழிய, சபை யினால் அத்தத்துவம் பிரயோகிக்கப்படுவதைத் தடுக்காது.

(6) கம்பெனியால் ஊழியத்திலமர்த்தப்பட்டிருக்கும் முகாமைப் பணிப்பாளர் அல்லாத பணிப்பாளர் ஒருவருக்கு, அவரும் சபை யும் உடன்பட்டிருக்கக் கூடியவாறான அத்தகைய ஊதியம் செலுத் தப்படுதல் வேண்டும். அவருடைய ஊதியமானது சம்பளம், தரகு, இலாபங்களில் பங்குபற்றல் அல்லது அம்முறைகளின் ஏதேனும் இணைப்பு அல்லது ஊதியத்தை நிர்ணயிக்கின்ற வேறு ஏதேனும் முறை போன்ற வழிகள் மூலமானதாக இருக்கலாம்.

32. செயலாளர்.

(1) கம்பெனியானது எல்லா நேரங்களிலும் செயலாளர் ஒருவரைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) சபையானது, அது பொருத்தமானதெனக் கருதுகின்றதான அத்தகைய நியதிகள் மீதும் நிபந்தனைகள் மீதும் செயலாளரை நியமிக்கலாம். செயலாளரின் ஊதியமானது சபையினாலும் செயலாளரினாலும் உடன்பட்டிருத்தல் வேண்டும்.

(3) சபையானது செயலாளரைப் பதவியிலிருந்து அகற்றலாம்.

(4) செயலாளரானவர் –

(அ) கம்பெனியின் தனிப் பணிப்பாளராக இருத்தலாகாது ; அல்லது

(ஆ) அதன் தனிப் பணிப்பாளர் கம்பெனியின் தனிப் பணிப்பாளராகவுள்ள கூட்டுத்தாபனமாக இருத்தலாகாது.

(5) இச்சட்டம் அல்லது இந்த அமைப்பகவிதிகள் பணிப்பாளர் ஒருவராலும் செயலாளராலும் ஏதாவது செய்யப்படுவதற்கு தேவைப்படுத்துமிடத்து, அந்த விடயத்தை இரு தன்மைகளிலும் செயற்படும் ஒரே ஆளினால் செய்யப்படுவதன் காரணமாக திருப்திப்படுத்தப்பட்டதாகமாட்டாது.

**ஈ. கணக்குகளும் கணக்காய்வும் –**

33. கணக்கீட்டுப் பதிவேடுகள், நீதிக்கூற்றுக்கள், கணக்காய்வு முதலியன

(1) சபையானது, –

(அ) கம்பெனியின் கொடுக்கல்வாங்கல்களை சரியான முறையில் பதிவுசெய்கின்றதும் விளக்குகின்றதும் ;

(ஆ) நியாயமான செம்மையுடன் கம்பெனியின் நிதிநிலைமையை எந்நேரத்திலும் தீர்மானிக்க இயலச் செய்கின்ற ;

(இ) இச்சடத்திற்கிணங்க நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு சபையை இயலச் செய்கின்ற ; அத்துடன்

(ஈ) கம்பெனியின் நிதிக் கூற்றுக்களை மறுப்பேதுமின்றியும் தகுந்த முறையிலும் கணக்காய்வுக்குட்பட்டிருப்பதற்கு இயலச்செய்கின்ற,

கணக்கீட்டுப் பதிவேடுகளை வைத்திருப்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(2) கணக்குப் பதிவேடுகள் இச்சட்டத்தின் 148 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவுடன் இணங்கியொழுகுதல் வேண்டும்.

(3) இச்சடத்தின் 151 ஆம் பிரிவுக்கு இணங்கியொழுகின்ற நிதிக்கூற்றுக்கள் (அத்துடன், ஏற்புடையதாயின் இச்சட்டத்தின் 153 ஆம் பிரிவுடன் இணங்கியொழுகுகின்ற தொகுதி நிதிக்கூற்றுக்கள்) ஐந்தொகைத் திகதி தொடர்பில் பூர்த்தி செய்யப்பட்டது என்பதையும் அத்துடன் சபையின் சார்பில் இரண்டு பணிப்பாளர்களால் அல்லது கம்பெனி ஒரு பணிப்பாளரை மட்டும் கொண்டிருந்தால் அந்தப் பணிப்பாளரால் திகதியிடப்பட்டு ஒப்பமிடப்பட்டது என்பதையும் கம்பெனியின் ஐந்தொகை திகதியின் பின்னர் ஐந்து மாதங்களுள் சபையானது உறுதிப்படுத்தல் வேண்டும்.

(4) இச்சட்டத்தின் 154 ஆம் பிரிவிற்கிணங்க ஒவ்வொரு ஆண்டுக் கூட்டத்திலும் அடுத்துவரும் ஆண்டிற்காக கம்பெனியானது கணக்காய்வாளர் ஒருவரை நியமித்தல் வேண்டும். ஆண்டுக் கூட்டமொன்றில் நியமிக்கப்பட்ட கணக்காய்வாளரொருவர் –

(அ) அவர் மீள் நியமனத்திற்காகத் தகுதியற்றவராக இருந்தாலொழிய ;

(ஆ) அக்கூட்டத்தல் கம்பெனியானது அவரது இடத்தில் வேறொர் ஆளை நியமிக்கப்பதற்குத் தீர்மானம் நிறைவேற்றினாலொழிய ; அல்லது

(இ) கணக்காய்வாளர், தாம் மீள நியமிக்கப்பட்டிருப்பதற்கு விரும்பவில்லை என்று கம்பெனிக்கு அறிவித்தல் கொடுத்திருந்தாலொழிய,

அடுத்துவரும் ஆண்டுக் கூட்டத்தில் மீள நியமிக்கப்பட்டதாகக் கருதப்படுவார்.

(5) சபையானது, கம்பெனியின் ஐந்தொகைத் திகதியின் பின்னர் ஐந்து மாதங்களுக்குள்ளாக அத்திகதியன்று முடிவடைகின்ற கணக்கீட்டுக் காலத்தின் போதான கம்பெனியின் அலுவல்களை பற்றி இச்சட்டத்தின் 166 ஆம் பிரிவுடன் இணங்கியொழுகுகின்றதான ஆண்டறிக்கை ஒன்றைத் தயாரித்தல் வேண்டும். சபையானது, பங்குதாரர்களின் ஆண்டுக் கூட்டத்தை நடத்துவதற்காக நிர்ணயிக்கப்பட்ட திகதிக்கு முன்னர் இருபது வேலைநாட்களுக்குப் பிந்தாமல் ஒவ்வொரு பங்குதாரருக்கும் ஆண்டறிக்கையின் பிரதியொன்றை அனுப்புதல் வேண்டும்.

**(உ) ஒழிப்பும் இடாப்பிலிருந்து அகற்றுதலும்**

34. ஒழிப்போனை நியமிப்பதற்கான தீர்மானம்.

பங்குதாரர்கள் விசேட தீர்மானத்தின் மூலம் கம்பெனியை தன்னிச்சையாக ஒடுக்குவதற்குத் தீர்மானம் நிறைவேற்றலாம்.

35. மேன்மிகைச் சொத்துக்களைப் பகிர்ந்தளித்தல்.

(1) கம்பெனியின் எல்லாக் கடன் தருநர்களுக்கும் செலுத்தப்பட்ட பின்னர் பங்குதாரர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுவதற்காக கிடைக்கக்கூடிய கம்பெனியின் மேன்மிகைச் சொத்துக்கள், எவையேனும் பங்குகள் வழங்கப்படும் நியதிகளுக்கு அமைவாக, ஒவ்வொரு பங்குதாரராலும் வைத்திருக்கப்படும் பங்குகளின் எண்ணிக்கையின் விகிதாசாரத்தில் பகிர்ந்தளிக்கப்படல் வேண்டும்.

(2) ஒழிப்போன், விசேட தீர்மானமொன்றின் அங்கீகாரத்துடன் பங்குதாரர்களிடையே கம்பெனியின் மேன்மிகைச் சொத்துக்களைப் பொருளாகப் பிரிக்கலாம். இந்நோக்கத்துக்காக அவர், பிரிக்கப்படவிருக்கின்ற ஏதேனும் ஆதனத்தின்மீது அவர் நியாயமானதெனக் கருதுகின்றவாறான அத்தகைய பெறுமதியை நிர்ணயிக்கலாம். அத்துடன் பிரிவிடலானது எவ்வாறு பங்குதாரர்களிடையே அல்லது பங்குதாரர்களின் வெவ்வேறு வகுப்பினரிடையே நடைமுறைப்படுத்தப்படும் என்று தீர்மானிக்கலாம்.

**(ஊ) பல்லினமானவை**

36. கம்பெனியால் வைத்திருக்கப்படவேண்டிய ஆவணங்கள்.

(1) கம்பெனியானது அதனது பதிவுசெய்யப்பட்ட அலுவலலகத்தில் அல்லது இச்சட்டத்தின் 116 ஆம் பிரிவிற்கிணங்க அறிவித்தல் கொடுப்பதற்காக பதிவாளருக்கு கொடுக்கப்பட்டுள்ள வேறுசில இடத்தில் பின்வரும் ஆவணங்களை வைத்திருத்தல் வேண்டும் :—

(அ) கம்பெனியின் அமைப்பகவிதிகள் ;

(ஆ) கடந்த பத்து வருடங்களின் போதான பங்குதாரர்களின் எல்லாக் கூட்டங்களினது கூட்டக்குறிப்புகளும் தீர்மானங்களும் ;

(இ) அக்கறை இடாப்பு ஒன்றை வைத்திருப்பதற்கான தேவையிலிருந்து விதிவிலக்களிக்கப்பட்டதான தனியார் கம்பெனி ஒன்றாக இருந்தாலொழிய அக்கறைகள் பற்றிய இடாப்பு;

(ஈ) கடந்த பத்து வருடங்களின்போதான பணிப்பாளர்களினதும் பணிப்பாளர் குழுக்களினதும் எல்லாக் கூட்டங்களினதும் கூட்டக்குறிப்புகளும் தீர்மானங்களும் ;

(உ) கடந்த பத்து வருடங்களுக்குள்ளாக இச்சட்டத்தின்கீழ் பணிப் பாளர்களால் கொடுக்கப்பட்ட சான்றிதழ்கள் ;

(ஊ) இச்சட்டத்தின் 223 ஆம் பிரிவின்கீழ் வைத்திருக்கப்பட வேண்டுமென தேவைப்படுத்தப்பட்ட பணிப்பாளர்களின தும் செயலாளர்களினதும் இடாப்பு ;

(எ) 33 (5) ஆம் அமைப்பகவிதியின்கீழ் தயாரிக்கப்பட்ட ஆண்டறிக் கைகள் உள்ளடங்கலாக, கடந்த பத்து வருடங்களின்போது எல்லாப் பங்குதாரர்களுக்கும் அல்லது அதே வகுப்பைச் சார்ந்த பங்குகளை வைத்திருக்கும் எல்லோருக்கும் அனுப்பி வைக்கப்பட்ட எழுத்திலான எல்லாத் தொடர்பாடல்களி னதும் பிரதிகள் ;

(ஏ) கம்பெனியின் பூரணமாக்கப்பட்ட இறுதிப் பத்துக் கணக் கீட்டுக் காலப்பகுதிகளுக்கான இச்சட்டத்தின்கீழ் பூர்த்தி செய்யப்பட்ட தேவைப்படுத்தப்பட்ட எல்லா நிதிக் கூற்றுக் களினதும் தொகுதி நிதிக் கூற்றுக்களினதும் பிரதிகள் ;

(ஐ) இச்சட்டத்தின் 109 ஆம் , 110 ஆம் பிரிவுகளின் கீழ் வைத் திருக்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்டுள்ள தாக்கீடு களை உருவாக்கும் அல்லது சான்றளிக்கும் சாதனங்களி னதும் தாக்கீடுகள் இடாப்பினதும் பிரதிகள் ;

(ஒ) இச்சட்டத்தின் 123 ஆம் பிரிவின்கீழ் வைத்திருக்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட பங்கு இடாப்பு ; அத்துடன்

(ஓ) இச்சட்டத்தின் 148 ஆம் பிரிவினால் தேவைப்படுத்தப்பட்ட நடப்புக் கணக்கீட்டுக் காலப்பகுதிக்கும் கம்பெனியின் பூரண மாக்கப்பட்ட இறுதிப் பத்துக் கணக்கீட்டு காலப்பகுதிக்கு மான கணக்கீட்டுப் பதிவேடுகள்.

(2) இவ்வமைப்பகவிதியின் (1) ஆம் பந்தியில் “பத்து வருடங்கள்” அத்துடன் “பூரணமாக்கப்பட்ட பத்து கணக்கீட்டுக் காலப்பகுதி கள்” என்பது, பற்றிய குறிப்பீடுகள் கம்பெனிக்கு எழுத்திலான அறிவித்தல் மூலம் பதிவாளரால் அங்கீகரிக்கப்படக் கூடிய வாறான அத்தகைய குறைவான காலப்பகுதிகளையும் உள்ளடக் குதல் வேண்டும்.

37. ஆவணங்கள் முதலியவற்றில் பணிப்பாளர்களுக்கும் பங்குதாரர்களுக்கும் உள்ள உரிமைகள்.

(1) இச்சட்டத்தின் 118 ஆம் பிரிவிற்கிணங்க கம்பெனிப் பணிப்பாளர்கள் கம்பெனிப் பதிவேடுகளை அணுகிப் பார்வையிடுவதற்கு உரித்துடையவர்களாவர்.

(2) கம்பெனியின் பங்குதாரரொருவர் –

(அ) இச்சட்டத்தின் 119 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட முறையில் இச்சட்டத்தின் 121 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆவணங்களைப் பார்வையிடுவதற்கு உரித்துடையவராவார் ; அத்துடன்

(ஆ) கம்பெனியினால் தீர்மானிக்கப்பட்ட ஏதேனும் நியாயமான பிரதிசெய்யும் கட்டணத்தையும் நிர்வாகக் கட்டணத்தையும் செலுத்துவன் மேல் பிரதிக்காக அல்லது பிரித்தெடுத்த பகுதிக்காக எழுத்திலான வேண்டுகோள் செய்த ஐந்து வேலைநாட்களுக்குள் அவர் பார்வையிடக்கூடியதான ஏதேனும் ஆவணத்திலிருந்து பிரதிகளை அல்லது பிரித்தெடுத்த பகுதிகளை வேண்டுவதற்கு உரித்துடையவராவார். சபையின் எவையேனும் பணிப்புரைகளுக்கு அமைவாக, எவரேனும் பணிப்பாளரால் அல்லது செயலாளரால் கட்டணம் தீர்மானிக்கப்படலாம்.

38. கம்பெனியின் பெயர்.

கம்பெனியானது இச்சட்டத்தின் 8 ஆம் பிரிவிற்கிணங்க அதனது பெயரை விசேட தீர்மானத்தின் மூலம் மாற்றலாம்.

39. அறிவித்தல்கள்.

(1) கம்பெனியானது, பங்குதாரரொருவருக்கு ஆவணமொன்றை அனுப்புவதற்கு அல்லது பங்குதாரரொருவருக்கு ஏதேனும் விடயம் பற்றி அறிவித்தல் கொடுப்பதற்குத் தேவைப்படுத்தப்படுமிடத்து, பங்குதாரரின் பதிவுசெய்யப்பட்ட முகவரிக்கு ஆவணத்தை அல்லது அல்லது அறிவித்தலை சாதாரண தபால் மூலம் அனுப்புதல் கம்பெனிக்குப் போதுமானதாகவிருத்தல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்பட்ட ஏதேனும் ஆவணம் அல்லது அறிவித்தலானது, முறையாக முகவரியிடப்பட்டு

ஆவணத்தை அல்லது அறிவித்தலைக் கொண்டுள்ள முற்செலுத் தப்பட்ட கடிதம் தபாலில் இடப்பட்டு மூன்று வேலை நாட்களுக்குள் பங்குதாரரால் பெறப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) இலங்கைக்கு வெளியே பதிவுசெய்யப்பட்ட முகவரியை உடைய பங்குதாரரொருவர், எல்லா ஆவணங்களும் அறிவித்தல்களும் அனுப்பப்பட வேண்டிய இலங்கையில் உள்ள முகவரி பற்றி கம்பெனிக்கு அறிவித்தல் கொடுக்கலாம். அத்துடன் கம்பெனி யானது, எல்லா நோக்கங்களுக்காகவும் அம்முகவரியை பங்கு தாரரின் பதிவுசெய்யப்பட்ட முகவரியாகக் கருதுதல் வேண்டும்.

(3) பங்கொன்றினைக் கூட்டாக வைத்திருப்பவர்களுள் அப்பங்கு தொடர்பில் பங்கு இடாப்பில் முதலாவதாகப் பெயரிடப்பட்ட வைத்திருப்பவருக்கு அறிவித்தல் கொடுப்பதன் மூலம் கம்பெனி யினால் ஆவணமொன்று அனுப்பப்படலாம் அல்லது அறிவித் தல் கொடுக்கப்படலாம்.

(4) பங்குதாரரொருவர் இறந்துள்ளவிடத்து அல்லது வங்குரோத் தானவராக அல்லது கடனிறுக்க வகையற்றறவராக வந்துள்ள விடத்து, அத்தகைய இறப்பு, வங்குறோத்து அல்லது கடனிறுக்க வகையின்மை காரணமாக வேறோர் ஆள் அப்பங்குகளுக்கு உரித்துடையவராக வந்திருப்பது எவ்வாறிருப்பினும், கம்பெனி யானது அவருடைய பங்குகள் தொடர்பிலான எல்லா அறிவித் தல்களையும் ஆவணங்களையும் அவருடைய பதிவுசெய்யப்பட்ட முகவரிக்கு தொடர்ந்து அனுப்பி வைக்கலாம் அல்லது அந்த வேறு ஆள் எந்த முகவரிக்கு அத்தகைய அறிவித்தல்களை அனுப்புமாறு கம்பெனியை வேண்டுகின்றாரோ அந்த முகவரிக்கு ஏதேனும் அறிவித்தலை அல்லது ஆவணத்தை அனுப்பி வைக்க லாம்.

(5) எல்லாப் பங்குதாரர்களுக்கும் அனுப்பப்படுகின்ற ஒவ்வோர் அறிவித்தலின் அல்லது ஆவணத்தின் பிரதியொன்று கம்பெனியின் கணக்காய்வாளருக்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

40. காப்புறுதியும் நட்டோத்தரவாதமும்

(1) கம்பெனியானது, அப்போதைக்கான கம்பெனியின் பணிப் பாளர், கணக்காய்வாளர் மற்றும் செயலாளர் ஒவ்வொரு வருக்கும் அவர் பணிப்பாளர், கணக்காய்வாளர் அல்லது செயலாளர் என்ற தன்மையிலான ஏதேனும் செயல் அல்லது செய்யாமை தொடர்பில் எந்த நடவடிக்கையில் அவரது சார்பில் தீர்ப்பு வழங்கப்பட்டதோ அல்லது எந்த நடவடிக்கையில் அவர் விடுக்கப்பட்டாரோ அல்லது எந்த நடவடிக்கை இடைநிறுத்தப்

பட்டதோ அந்த நடவடிக்கையின் எதிர்வாதமளிப்பின் போது உறப்பட்ட எவையேனும் செலவுத் தொகைகளுக்கு எதிராக, நட்டோத்தரவாதமளித்தல் வேண்டும்.

(2) கம்பெனியானது (1) ஆம் பந்தி ஏற்புடையதாகாதவிடத்து, 218 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவினால் அனுமதிக்கப்பட்ட அளவுக்கு அச்சூழ்நிலைகளின் அவ்வாறு செய்வது பொருத்த மானதென சபை கருதினால் பணிப்பாளர் ஒருவருக்கு அல்லது ஊழியர் ஒருவருக்கு நட்டோத்தரவாதம் அளிக்கலாம்.

41. தனியார் கம்பெனிகள் தொடர்பிலான திரிபுபடுத்தல்கள்.

(1) கம்பெனியானது தனியார் கம்பெனியொன்றாகப் பதிவுசெய்யப் பட்டிருந்தால் அந்தக் கம்பெனிக்கு இந்த அமைப்பகவிதி ஏற்புடையதாதல் வேண்டும்.

(2) கம்பெனியானது, அதனால் வழங்கப்பட்ட எவையேனும் பங்கு களை அல்லது வேறு பிணையங்களை பொதுமக்களுக்கு கொடை முனைவு செய்தலாகாது.

(3) கம்பெனியானது —

(அ) கம்பெனியின் ஊழியர்கள் ; அல்லது

(ஆ) கம்பெனியால் வேலைக்கமர்த்தப்பட்டிருக்கையில் அதன் பங்கதாரர்களாக வந்த கடந்தகால ஊழியர்கள், அத்துடன் கம்பெனியால் வேலைக்கமர்த்தப்பட்டிருந்ததிலிருந்து நிறுத் தப்பட்ட பின்னர் பங்குதாரர்களாக தொடர்ந்திருப்பவர் கள்,

ஆகிய பங்குதாரர்கள் உட்படாமல், ஐம்பது பங்குதாரர்களுக்கு மேல் எந்நேரத்திலும் கொண்டிருத்தலாகாது.

(4) கம்பெனி, அதன் பங்குதாரர்களின் ஏகமனதான தீர்மானத்தின் மூலம் அக்கறைகள் பற்றிய இடாப்பை வைத்திருப்பதிலிருந்து தவிர்க்கலாம். எவரேனும் பங்குதாரர், அவர் அக்கறைகள் பற்றிய இடாப்பை அது வைத்திருப்பதை வேண்டுகிறார் என்று கம்பெனிக்கு எழுத்திலான அறிவித்தல் கொடுத்தால், அத்தகைய ஏதேனும் தீர்மானம் பயனுடையதாகாதொழிதல் வேண்டும்.

(5) கம்பெனியால் எந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதோ அல்லது எடுக் கப்படவிருக்கின்றதோ அந்த ஏதேனும் நடவடிக்கைக்கு கம்பெனி யின் எல்லாப் பங்குதாரர்களும் உடன்படுகின்றவிடத்து அல்லது ஒருப்படுகின்றவிடத்து —

(அ) இந்த அமைப்பகவிதிகளில் உள்ளது எது எவ்வாறிருப் பினும், அந்த நடவடிக்கையை எடுத்தல் கம்பெனியால் வலிதானதாக அதிகாரமளிக்கப்பட்டிருப்பதாகக் கருதப் படுதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) இந்தச் சட்டத்தின் இரண்டாம் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட இச்சட்டத்தின் ஏற்பாடுகள் இச்சட்டத்தின் 31 ஆம் பிரிவைப் பின்பற்றி அந்த நடவடிக்கை தொடர்பில் ஏற்புடையனவாதலாகாது.

42. பொருள்கோடல்.

இந்த அமைப்பகவிதியில் -

(அ) "சட்டம்" என்பது 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டம் எனப் பொருள்படும் ;

(ஆ) இந்தச் சட்டத்தில் வரைவிலக்கணங் கூறப்பட்ட பதங்கள் இந்த அமைப்பக விதியில் உள்ள அதே கருத்தைக் கொண் டிருத்தல் வேண்டும்.

**இரண்டாவது அட்டவணை** (பிரிவு 31 (1))

பங்குதாரர்களின் ஏகமனதான அங்கீகாரத்துடன் செயற்படும் தனியார் கம்பெனிகளுக்கு ஏற்புடைத்தாகாத ஏற்பாடுகள்.

பிரிவு 52 (பங்குகள் வழங்கப்படுவதற்கான பிரதிபயன்)

பிரிவு 53 (புதிய வழங்கல்களுக்கான முற்கொள் உரிமைகள்)

பிரிவு 56 (பகிர்ந்தளிப்புகள்)

பிரிவு 60 (பங்கிலாபங்கள்)

பிரிவு 61 (பகிர்ந்தளிப்புகளை மீளப்பெறல்)

பிரிவு 64 (சொந்தப் பங்குகளைக் கொள்வனவுசெய்தல்)

பிரிவு 70 (நிதி உதவிகள் கொடுப்பதன் மீதான மட்டுப்பாடுகள்)

பிரிவு 90 (பங்குதாரர்களுக்கென ஒதுக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகித்தல்)

பிரிவு 92 (1)(ஆ) (விசேட தீர்மானத்தின் மூலம் பிரயோகிக்கப்படும் தத்துவங்கள்)

பிரிவு 99 (பங்குதாரரின் உரிமை மாற்றம்)

பிரிவு 185 (பாரிய கொடுக்கல் வாங்கல்கள்)

பிரிவு 192 (அக்கறையை வெளிவிடுதல்)

பிரிவு 193 (கொடுக்கல் வாங்கலைத் தவிர்த்தல்)

பிரிவு 216 (ஊதியமும் வேறு நலன்களும்)

பிரிவு 217 (பணிப்பாளர்களுக்கான கடன்களின் மீதான மட்டுப்பாடுகள்)

பிரிவு 218 (நட்டோத்தரவாதமும் காப்புறுதியும்)

**மூன்றாவது அட்டவணை** (பிரிவு 35 (1))

உத்தரவாதமூலம் வரையறுக்கப்பட்ட கம்பெனிகளுக்கு ஏற்புடைத் தாகாத ஏற்பாடுகள்.

பகுதி IV (பங்குகளும் தொகுதிக்கடன்களும்)

பிரிவுகள் 93 இலிருந்து 98 வரை (சிறுபான்மை உடைமை நீக்கு உரிமை)

பிரிவு 99 இலிருந்து 101 வரை (அக்கறைத் தொகுதிகள்)

பிரிவு 123 (1) (ஆ) அத்துடன் (இ) (கம்பெனி பங்கு இடாப்பைப் பேணி வருதல்)

பிரிவு 124 (1) அத்துடன் (3) (பங்கு இடாப்பு வைத்திருக்கப்படும் இடாப்பு)

பிரிவுகள் 198 இலிருந்து 200 வரை (பங்குகளில் பணிப்பாளர் களுக்குள்ள அக்கறையை வெளியிடுதல்)

பிரிவு 220 (கடும் மூலதன இழப்பின் மீதான பணிப்பாளர்களின் கடமை)

பாகம் VIII (ஒன்றிணைத்தல்கள்)

ஐந்தாம் அட்டவணையின் உப-பந்திகள் (ஆ) அத்துடன் (உ) தொடக் கம் (ஓ) வரை (ஆண்டு விபரத்திரட்டில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள்)

**நான்காவது அட்டவணை** (பிரிவு 37 (1))

முற்பகர்வில் குறித்துரைக்கப்படவேண்டிய விடயங்களும் அதன்கண் தரப்பட வேண்டிய அறிக்கைகளும்

## பாகம் I

**குறித்துரைக்கப்படவேண்டிய விடயங்கள்**

1. கம்பெனியால் தொழில் தொடங்கப்பட்ட திகதியிலிருந்து ஐந்து வருட காலத்தின்போது கம்பெனி கொண்டுநடாத்த வேண்டும் என்று ஒப்பப்பணம் செலுத்துநர் அல்லது ஊக்குநர் கருதுகின்றதான தொழில்.

2. தாபகர்களின் அல்லது முகாமைக்குழுவின் எண்ணிக்கையும் அல்லது பிற்போடப்பட்ட பங்குகள் எவையேனுமிருந்தால், அவற்றின் எண்ணிக்கையும் கம்பெனியின் ஆதனத்திலும் இலாபங்களிலும் அவற்றைக் கொண்டிருப்போருக்குள்ள அக்கறையின் தன்மையும் அளவும்.

3. பணிப்பாளரொருவரின் தகைமைகளாக அமைப்பகவிதிகளினால் நிர்ணயிக்கப்படும் பங்குகள் எவையேனுமிருப்பின் அவற்றின் எண்ணிக்கையும் பணிப்பாளர்களின் ஊதியம் பற்றி அமைப்பக விதிகளில் உள்ள ஏதேனும் ஏற்பாடும்.

4. பணிப்பாளர்களின் அல்லது உத்தேச பணிப்பாளர்களின் பெயர்களும், விவரணங்களும், முகவரிகளும்.

5. பங்குகள் ஒப்பப்பணத்திற்காகப் பொதுமக்களுக்கு கொடை முனைவு செய்யப்படுகின்றவிடத்து —

(அ) பணிப்பாளர்களின் அபிப்பிராயத்தில், பின்வரும் கருமங்கள் ஒவ்வொன்று தொடர்பிலும் ஏற்பாடு செய்யப்படுவதற்கு தேவைப்படுத்தப்பட்ட பணத்தொகைகளுக்கு ஏற்பாடு செய்வதற்காக அப்பங்குகளை வழங்குவதன்மூலம் திரட்டப்பட வேண்டிய ஆகக்குறைந்த தொகை அல்லது அப்பணத் தொகையில் ஏதேனும் பாகம் வேறு ஏதேனும் முறையில் கொடுத்துத் தீர்க்கப்படவேண்டியிருந்தால் மிகுதித்தொகை பற்றிய விபரங்கள் :—

(i) வழங்கலின் வரும்படியிலிருந்து முழுமையாக அல்லது பகுதியளவில் கொடுத்துத் தீர்க்கப்படவுள்ளதான, கொள்வனை செய்யப்பட்ட அல்லது கொள்வனை செய்யப்படவிருக்கின்ற ஏதேனும் ஆதனத்தின் கொள்வனை விலை ;

(ii) கம்பெனியினால் செலுத்தப்படற்பாலதான எவையேனும் பூர்வாங்கச் செலவினங்கள், அத்துடன் கம்பெனியிலுள்ள எவையேனும் பங்குகளுக்காக எவரேனும் ஆள் ஒப்பப்பணம் செலுத்துவதற்கு உடன்பட்டதற்கு அல்லது ஒப்பப்பணம் பெற்றுக்கொடுத்ததற்கு அல்லது ஒப்பப்பணம் பெற்றுக்கொடுக்க உடன்பட்டதற்கு பிரதிபயனாக அவருக்குச் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் தரகு ;

(iii) மேற்கூறப்பட்ட விடயங்களுள் எது தொடர்பாகவும் கம்பெனியினால் கடனாகப் பெறப்பட்ட எவையேனும் பணங்களின் மீள்செலுத்துகை.

(iv) தொழிற்படு மூலதனம் ; அத்துடன்

(ஆ) மேற்கூறப்பட்ட விடயங்கள் தொடர்பில் வழங்கலிலிருந்து பெறப்பட்ட பணத்திலிருந்தல்லாமல் வேறுவகையாக ஏற்பாடு செய்யப்படவேண்டிய தொகைகள், அத்துடன் அத் தொகைகள் எம்மூலங்களிலிருந்து ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளனவோ அம்மூலங்களின் விபரங்கள்.

6. ஒப்பப்பண நிரல்கள் திறக்கப்படும் நேரமும் மூடப்படும் நேரமும்.

7. ஒவ்வொரு பங்கின் மீதான விண்ணப்பத்தின் மீதும் பிரித்தொதுக்கலின்மீதும் செலுத்தப்படற்பாலதான தொகை அத்துடன் இரண்டாவது அல்லது பின்னரான பங்குகளின் கொடைமுனைவின் விடயத்தில், முற்போந்த இரண்டு ஆண்டுகளுக்குள் செய்யப்பட்ட முந்திய பிரித்தொதுக்கல் ஒவ்வொன்றின் மீதுமான ஒப்பப்பணத்துக்காக கொடை முனைவு செய்யப்பட்ட தொகை அத்துடன் உள்ளபடி பிரித்தொகுக்கப்பட்ட தொகை அவ்வாறு பிரித்தொதுக்கப்பட்ட பங்குகள் மீது செலுத்தப்பட்ட தொகை, ஏதேனுமிருப்பின் அத்தொகை.

8. கம்பெனியிலுள்ள எந்த பங்குகளுக்கு அல்லது கம்பெனியின் எந்தத் தொகுதிக்கடன்களுக்கு ஆளெவரும் ஒப்பப்பணம் செலுத்துவதற்கு விருப்புரிமையுடையவராக உள்ளாரோ அல்லது விருப்புரிமை கொடுக்கப்படுவதற்கு உரித்துடையவராக இருக்கின்றாரோ, அந்த ஏதேனும் பங்குகளின் அல்லது தொகுதிக்கடன்களின் எண்ணிக்கையும் விவரணமும் பணத்தொகையும் அத்துடன் விருப்புரிமை பற்றிய பின்வரும் விவரங்களும், அவையாவன :—

(அ) எக்காலப்பகுதியின்போது அது பிரயோகிக்கப்படற்பாலதோ அக்காலப்பகுதி ;

(ஆ) அதன்கீழ் ஒப்பப்பணம் செலுத்தப்பட்ட பங்குகளுக்காக அல்லது தொகுதிக்கடன்களுக்காகச் செலுத்தப்படவேண்டிய விலை ;

(இ) அதற்காக அல்லது அதற்கான உரிமைக்காக கொடுக்கப்பட்ட அல்லது கொடுக்கப்படவேண்டிய பிரதிபயன் (ஏதேனு மிருப்பின்)

(ஈ) அது அல்லது அதற்கான உரிமை எவ்வாட்களுக்குக் கொடுக் கப்பட்டதோ அவ்வாட்களின் பெயர்களும் முகவரிகளும் அல் லது உளதாயிருக்கும் பங்குதாரர்களுக்கு அல்லது தொகுதிக் கடன் வைத்திருப்பவர்களுக்கு அவ்வாறு கொடுக்கப்பட் டிருப்பின், இயைபான பங்குகள் அல்லது தொகுதிக் கடன்கள்.

9. முற்போந்த இரண்டு ஆண்டுகளுக்குள் காசாகவன்றி வேறுவகை யிலான பிரதிபயனுக்காக முழுமையாக செலுத்தப்பட்டவையாக அல்லது பகுதியளவில் செலுத்தப்பட்டவையாக வழங்கப்பட்ட அல்லது வழங்குவதற்கு உடன்பட்ட பங்குகளினதும் தொகுதிக் கடன்களினதும் எண்ணிக்கையும் பணத்தொகையும் அத்துடன், எந்தப் பிரதிபயனுக்காக அந்தப் பங்குகள் அல்லது தொகுதிக் கடன்கள் வழங்கப்பட்டனவோ அல்லது வழங்குவதற்கு உத்தேசிக் கப்பட்டுள்ளனவோ அல்லது கருதப்பட்டனவோ அந்தப் பிரதிபயன்.

10. (1) இப்பந்தி எந்த ஆதனத்துக்கு ஏற்புடையதாகின்றதோ அந்த ஏதேனும் ஆதனம் தொடர்பாக -

(அ) விற்போரின் பெயர்களும் முகவரிகளும் ;

(ஆ) விற்போருக்கு காசாக பங்குகளாக அல்லது தொகுதிக் கடன்களாக செலுத்தப்படற்பாலதான பணத்தொகை யும் அத்துடன், ஒரு தனியான விற்போனுக்கு மேற்பட்ட விற்போர் இருக்குமிடத்து அல்லது கம்பெனி ஓர் உபகொள்வனவுக்காரராக இருக்குமிடத்து, ஒவ்வொரு விற்போனுக்கும் அவ்வாறு செலுத்தப்படற்பாலதான பணத்தொகை ;

(இ) எந்த ஆதனத்தில், கம்பெனிக்கு ஆதனத்தை விற்றவர் எவரும் அல்லது கொடுக்கல் வாங்கலின் நேரத்தில் கம்பெனியின் ஊக்குநர் ஒருவராக அல்லது பணிப் பாளர் ஒருவராக அல்லது உத்தேசப் பணிப்பாளர் ஒருவராக இருக்கின்ற அல்லது இருந்த ஆளெவரும், நேரடியாக அல்லது மறைமுகமாக அக்கறை கொண்டிருந்தாரோ, அந்த ஆதனம் தொடர்பில், முற்போந்த இரண்டு ஆண்டுகளுக்குள் பூரணமாக்கப் பட்ட ஏதேனும் கொடுக்கல் வாங்கல் பற்றிய சுருக்க மான விபரங்கள்.

(2) இப்பந்தி எந்த ஆதனத்துக்கு ஏற்புடையதாகின்றதோ அந்த ஆதனமானது கம்பெனியினால் கொள்வனை செய்யப்பட்ட அல்லது கொள்ளப்பட்ட அல்லது அவ்வாறு கொள்வனை

செய்வதற்கு அல்லது கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்ட ஆதன மாகவும் முற்பகர்வுமூலம் ஒப்பப்பணத்துக்கு கொடை முனைவுசெய்யப்பட்ட வழங்கலின் வரும்படிகளிலிருந்து முழுமையாக அல்லது பகுதியளவில் செலுத்தப்படவேண்டிய தாகவும் இருக்குமிடத்து அல்லது அந்த ஆதனத்தின் கொள் வனவானது அல்லது கொள்ளலானது முற்பகர்வு வழங்கப் பட்ட தேதியில் பூரணமாக்கப்படாமல் இருக்குமிடத்து,

(அ) எந்த ஆதனத்தைக் கொள்வனவு செய்வதற்கான அல்லது கொள்ளுதற்கான ஒப்பந்தம், கம்பெனியின் சாதாரண தொழில்நெறிமுறையின்போது செய்யப் பட்டதாக அல்லது ஒப்பந்தமானது வழங்கீட்டையோ அல்லது ஒப்பந்தத்தின் விளைவாந்தன்மையிலான வழங்கீட்டையோ கருத்திற்கொண்டு செய்யப்படாத தாக உள்ளதோ அந்த ஆதனம், அல்லது

(ஆ) எந்த ஆதனந் தொடர்பாக கொள்வனவுப் பணத்தின் தொகை முக்கியமானதாக இல்லாதிருக்கின்றதோ, அந்த ஆதனம்,

தவிர்ந்த ஆதனமாகும்.

11. கடைசியாக முற்போந்த பந்தி எவ்வாதனத்திற்கு ஏற்புடையதோ அவ்வாதனம் எதற்கும், நன்மதிப்புக்காக செலுத்தப்படற்பாலதான தொகை ஏதேனுமிருப்பின் அத்தொகையைக் குறிப்பிட்டு கொள்வ னவுப்பணம் என்றவகையில் காசாக, பங்குகளாக அல்லது தொகுதிக் கடன்களாக செலுத்தப்பட்ட அல்லது செலுத்தப்படற்பாலதான தொகை ஏதேனுமிருப்பின் அத்தொகை ;

12. கம்பெனியிலுள்ள எவையேனும் பங்குகளுக்கு அல்லது கம்பெனியின் எவையேனும் தொகுதிக்கடன்களுக்கு ஒப்பப்பணம் செலுத்துவதற்கு அல்லது செலுத்த உடன்படுவதற்கு அல்லது ஒப்பப்பணங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு அல்லது பெற்றுக்கொடுக்க உடன்படு வதற்கு தரகாக (ஆனால் உப பொறுப்பேற்பாளருக்கான தரகை உள்ளடக்காமல்) முற்போந்த இரண்டாண்டுகளிற்குள் செலுத்தப் பட்ட அல்லது செலுத்தப்படற்பாலதான தொகை ஏதேனுமிருப்பின் அத்தொகை அல்லது அத்தகைய ஏதேனும் தரகின் விகிதம்.

13. முதனிலைச் செலவினங்களின் தொகையும் அல்லது மதிப்பிடப்பட்ட தொகையும் அச்செலவினங்களுள் எதுவும் எவ்வாட்களினால் செலுத்தப்பட்டுள்ளனவோ அல்லது செலுத்தப்படற்பாலனவோ அவ்வாட்களும் அத்துடன் வழங்கலின் செலவுத்தொகையும் அல்லது மதிப்பிடப்பட்ட செலவுத்தொகையும் அச்செலவினங்களுள் எதுவும் எவ்வாட்களினால் செலுத்தப்பட்டுள்ளனவோ அல்லது செலுத்தப்படற்பாலனவோ அவ்வாட்களும்.

14. முற்போந்த இரண்டு ஆண்டுகளிற்குள் எவரேனும் ஊக்குநருக்குச் செலுத்தப்பட்டுள்ள அல்லது கொடுக்கப்பட்டுள்ள அல்லது செலுத்துவதற்கு முன்னப்பட்டுள்ள அல்லது கொடுப்பதற்கு முன்னப்பட்டுள்ள ஏதேனும் பணத்தொகை அல்லது நன்மை அத்துடன், கொடுப்பனவிற்கான அல்லது நன்மையை அளிப்பதற்கான பிரதிபயன்.

15. கம்பெனியினால் கொண்டுநடாத்தப்பட்ட அல்லது கொண்டு நடாத்துவதற்கு முன்னப்பட்ட தொழிலின் சாதாரண நெறிமுறையின்போது செய்துகொள்ளப்பட்ட ஓர் ஒப்பந்தமாயிராத அல்லது முற்பகர்வு வழங்கப்பட்ட தேதிக்கு இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்துக்கு முன்னர் செய்துகொள்ளப்பட்ட ஓர் ஒப்பந்தமாயிராத முக்கிய ஒப்பந்தம் ஒவ்வொன்றினதும் தேதிகளும் அதற்கான திறத்தவர்களும் அதனது பொதுவான தன்மையும்.

16. கம்பெனியின் கணக்காளர்கள் எவரேனுமிருப்பின், அவர்களது பெயர்களும், முகவரிகளும்.

17. கம்பெனியை ஊக்குவிப்பதில் அல்லது கம்பெனியினால் கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள ஆதனத்தில் ஒவ்வொரு பணிப்பாளரும் கொண்டுள்ள அக்கறை ஏதேனுமிருப்பின், அவ்வக்கறையின் தன்மையையும் அளவையும் பற்றிய அல்லது அத்தகைய ஒரு பணிப்பாளருடைய அக்கறையானது ஒரு குழுமத்தில் பங்காளியாக இருப்பதில் அடங்கியிருக்குமிடத்து, ஒன்றில் அவரைப் பணிப்பாளராகுமாறு தூண்டுவதற்காக அல்லது பணிப்பாளராகத் தகைமை பெறச் செய்வதற்காக பணமாக அல்லது பங்குகளாக அல்லது வேறுவகையில், அக்கம்பெனியின் ஊக்குவிப்பு அல்லது உருவாக்கம் தொடர்பாக அவரால் அல்லது குழுமத்தால் ஆற்றப்பட்ட சேவைகளுக்காக அவருக்கு அல்லது குழுமத்துக்கு வேறுவகையில் செலுத்தப்பட்ட அல்லது செலுத்துவதற்கு உடன்பட்டுள்ள எல்லாப் பணத்தொகைகளும் பற்றிய கூற்றொன்றுடன் அக்குழுமத்தின் அக்கறையின் தன்மையையும் அளவையும் பற்றிய முழு விவரங்களும்.

18. முற்பகர்வானது கம்பெனியிலுள்ள பங்குகளுக்காக ஒப்பப்பணம் செலுத்துமாறு பொதுமக்களை அழைக்குமிடத்தும், அத்துடன், கம்பெனியின் பங்கு மூலதனம் வெவ்வேறு வகுப்பினவான பங்குகளாகப் பிரிக்கப்பட்டிருக்குமிடத்தும், முறையே அப்பல்வேறு வகுப்புகளைச் சார்ந்த பங்குகளினால் வழங்கப்பட்ட கம்பெனிக் கூட்டங்களில் வாக்களிக்கும் உரிமையும் அவற்றோடிணைந்த வேறு உரிமைகளும் கடப்பாடுகளும்.

19. மூன்றாண்டுகளுக்குக் குறைந்த காலத்திற்குத் தொழிலைக் கொண்டு நடாத்துகின்றதான ஒரு கம்பெனியின் அல்லது மூன்றாண்டுகளுக்குக் குறைந்த காலத்திற்குக் கொண்டுநடாத்தப்பட்ட ஒரு தொழிலின் விடயத்தில், விடயத்திற்கேற்றாற்போன்று, அக்கம்பெனியின் தொழில் அல்லது கொள்ளப்படவுள்ள தொழில் கொண்டுநடாத்தப்பட்டு வந்த காலஅளவு.

பாகம் II

**தரப்படவேண்டிய அறிக்கைகள்**

20\. (1) பின்வருவன தொடர்பில் கம்பெனியின் கணக்காய்வாளர்களின் அறிக்கையொன்று -

(அ) விடயம் தேவைப்படுத்துமாற்போன்று, இப்பந்தியின் (2) ஆம் உட்பந்தியின் அல்லது (3) ஆம் உட்பந்தியின் ஏற்பாடுகளுக்கிணங்க, இலாபங்களும், நட்டங்களும், சொத்துக்களும், பொறுப்புக்களும் ; அத்துடன்

(ஆ) முற்பகர்வு வழங்கப்படுவதற்கு உடன் முற்போந்த ஐந்து நிதியாண்டுகளுள் ஒவ்வோராண்டு தொடர்பிலும் கம்பெனியிலுள்ள ஒவ்வொரு வகுப்பினவான பங்குகள் தொடர்பாகவும் கம்பெனியினால் செலுத்தப்பட்ட பங்கிலாபங்கள் எவையேனுமிருப்பின் அவற்றின் வீதங்களும் ; அத்தகைய பங்கிலாபங்கள் எந்த வகுப்பினவான பங்குகளின்மீது செலுத்தப்பட்டனவோ அத்தகைய வகுப்பினவான பங்குகளின் விபரங்களும் அத்துடன் அவ்வாண்டுகளுடன் ஏதேனும் ஆண்டு தொடர்பாக எந்த வகுப்பினவான பங்குகள் தொடர்பாக பங்கிலாபங்கள் எவையேனும் செலுத்தப்படாத விடயங்கள் பற்றிய விபரங்களும்,

அத்துடன், முற்பகர்வு வழங்கப்படுவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னரான தேதியொன்றில் முடிவடையும் ஐந்து ஆண்டுகளைக் கொண்ட காலப்பகுதியின் ஏதேனும் பாகம் தொடர்பாக கணக்குகள் எவையும் தயாரிக்கப்படாவிடின், அந்நிகழ்வு பற்றிய ஒரு கூற்றொன்றும்.

(2) கம்பெனிக்குத் துணைநிலைக் கம்பெனி எதுவுமிராதவிடத்து, அறிக்கையானது -

(அ) இலாபங்களையும் நட்டங்களையும் பொறுத்தளவில், முற்பகர்வு வழங்கப்படுவதற்கு உடன் முற்போந்த ஐந்து நிதியாண்டுகளுள் ஒவ்வோராண்டு தொடர்பிலும் கம்பெனியின் இலாபங்களை அல்லது நட்டங்களை எடுத்துக்காட்டுதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) சொத்துக்களையும் பொறுப்புக்களையும் பொறுத்தளவில், கம்பெனியின் கணக்குகள் எந்தக் கடைசித் தேதி வரை தயாரிக்கப்பட்டுள்ளனவோ அந்தக் கடைசித் தேதியன்றுள்ளவாறு கம்பெனியின் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் எடுத்துக்காட்டுதல் வேண்டும்.

(3) கம்பெனிக்கு துணைநிலைக் கம்பெனிகள் இருக்குமிடத்து, அறிக்கையானது -

(அ) இலாப நட்டங்களைப் பொறுத்தளவில் இப்பந்தியின் (2) ஆம் உட்பந்தியின் ஏற்பாடுகளினால் ஏற்பாடு செய்யப்பட்டவாறு கம்பெனியின் இலாபங்களை அல்லது நட்டங்களை தனித்தனியாக எடுத்துக்காட்டுதலும் அத்துடன், மேலதிகமாக, ஒன்றில் -

(i) அவை கம்பெனியின் உறுப்பினர்கள் சம்பந்தமானதாக இருக்கும் வரையில் அதனது துணை நிலைக் கம்பெனிகளினது ஒன்றிணைந்த இலாபங்களை அல்லது நட்டங்களை முழுமையாக எடுத்துக்காட்டுதலும் வேண்டும் ; அல்லது

(ii) அவை கம்பெனியின் உறுப்பினர்கள் சம்பந்தமானதாக இருக்கும் வரையில், ஒவ்வொரு துணைநிலைக் கம்பெனியினதும் இலாபங்களை அல்லது நட்டங்களைத் தனித்தனியாக, எடுத்துக்காட்டுதலும் வேண்டும்,

அல்லது கம்பெனியின் இலாபங்களை அல்லது நட்டங்களைத் தனித்தனியாக எடுத்துக்காட்டுவதற்குப் பதிலாக, கம்பெனியின் இலாபங்களை அல்லது நட்டங்களை முழுமையாகவும், அத்துடன் அவை கம்பெனியின் உறுப்பினர்கள் சம்பந்தமானதாக இருக்கும்வரையில் அதனது துணைநிலைக் கம்பெனிகளின் ஒன்றிணைந்த இலாபங்களையும் அல்லது நட்டங்களையும் எடுத்துக்காட்டுதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) சொத்துக்களையும் பொறுப்புக்களையும் பொறுத்தளவில் மேலே (அ) எனும் உட்பந்தியின் ஏற்பாடுகளினால் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக கம்பெனியின் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வேறு வேறாக எடுத்துக்காட்டுதல் வேண்டும், என்பதுடன் மேலதிகமாக ஒன்றில் -

(i) ஒன்றாக அதனது துணைநிலைக் கம்பெனிகளின் ஒன்றிணைந்த சொத்துக்களையும் பொறுப்புக்களையும் கம்பெனியின் சொத்துக்களுடனும் பொறுப்புக்களுடனும் அல்லது அவை இல்லாமலும் எடுத்துக்காட்டுதல் வேண்டும் ;

(ii) ஒவ்வொரு துணைநிலைக் கம்பெனியினதும் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் தனித் தனியாக எடுத்துக்காட்டுதல் வேண்டும் ;

அத்துடன் துணைநிலைக் கம்பெனிகளின் சொத்துக் களும் பொறுப்புக்களும் தொடர்பாக, கம்பெனியின் உறுப்பினர்களல்லாத ஆட்களுக்கு கொடுக்கப்பட வேண்டிய படிகளை எடுத்துக்காட்டுதலும் வேண் டும்.

21. பங்குகளை அல்லது தொகுதிக்கடன்களை வழங்குவதிலிருந்து கிடைத்த வரும்படிகள் அல்லது வரும்படிகளின் ஏதேனும் பாகம் ஏதேனும் தொழிலின் கொள்வனவில் நேரடியாக அல்லது மறை முகமாகப் பிரயோகிக்கப்படவிருக்குமிடத்து, (முற்பகர்வில் பெயர் குறிப்பிடப்படவேண்டிய) கணக்காளர்களினால் –

(அ) முற்பகர்வு வழங்கப்படுவதற்கு உடன்முற்போந்த ஐந்து நிதியாண்டுகளுள் ஒவ்வோராண்டு தொடர்பாகவும், தொழிலின் இலாபங்கள் மீதும் அல்லது நட்டங்கள் மீதும், ; அத்துடன்

(ஆ) தொழிலின் கணக்குகள் எந்தக் கடைசித் தேதிவரை தயாரிக்கப்பட்டனவோ அக்கடைசித் தேதியன்று தொழிலின் சொத்துக்கள் பொறுப்புக்கள் என்பன மீதும்,

செய்யப்பட்ட ஓர் அறிக்கை.

22. (1) (அ) பங்குகளை அல்லது தொகுதிக்கடன்களை வழங்குவதி லிருந்து கிடைத்த வரும்படிகள் அல்லது வரும்படிகளின் ஏதேனும் பாகம் கம்பெனியினால் வேறு ஏதேனும் கூட்டி ணைக்கப்பட்ட குழுவில் பங்குகளைக் கொள்ளுதற்காக ஏதேனும் முறையில் நேரடியாக அல்லது மறைமுகமாகப் பிரயோகிக்கப்படவிருக்குமிடத்து ; அத்துடன்

(ஆ) அந்தக் கொள்ளலின் காரணத்தால் அல்லது அதனது விளைவாக அல்லது அதன் தொடர்பாக செய்யப்படவுள்ள எதனதும் காரணத்தினால் கூட்டிணைக்கப்பட்ட குழு, கம்பெனியின் துணைக் கம்பெனியொன்றாக வருமிடத்தும் ;

(முற்பகர்வில் பெயர்குறிப்பிடப்படவேண்டிய) கணக்காளர்களினால்–

(i) முற்பகர்வு வழங்கப்படுவதற்கு உடன் முற்போந்த ஐந்து நிதியாண்டுகளுள் ஒவ்வோராண்டு தொடர் பாகவும் வேறு கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இலாபங் கள் அல்லது நட்டங்கள் மீது ; அத்துடன்

(ii) மற்றக் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் கணக்குகள் எந்தக் கடைசித் தேதியில் தயாரிக்கப்பட்டுள்ளனவோ அக்கூட்டிணைக்கப்பட்ட குழுவின் சொத்துக்கள் பொறுப்புக்கள் என்பனமீது,

செய்யப்பட்ட அறிக்கை.

(2) (i) என்பதில் உட்பந்தி குறிப்பீடு செய்யப்பட்ட அறிக்கையானது –

(அ) கொள்ளப்படவுள்ள பங்குகள், தொடர்பாக, அறிக்கையில் எடுத்துக்காட்டப்பட்ட மற்றக் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இலாபங்கள் அல்லது நட்டங்கள் கம்பெனியின் உறுப்பினர்களை எவ்வாறு சம்பந்தப்படுத்தியுள்ளனவென்றும், முக்கியமான எல்லா நேரங்களிலும் கொள்ளப்பட வேண்டிய பங்குகளைக் கம்பெனி வைத்திருந்தால், அறிக்கையில் அவ்வாறு எடுத்துக்காட்டப்பட்ட சொத்துக்கள் பொறுப்புக்கள் தொடர்பில் மற்றப் பங்குகளை வைத்திருப்பவர்கள் என்ன படிகள் வழங்கப்பட வேண்டி வந்திருக்கும் எனவும் ; அத்துடன்

(ஆ) மற்றக் கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்கு துணைநிலைக் கம்பெனிகள் இருக்குமிடத்து, கம்பெனியினதும் அதன் துணைநிலைக் கம்பெனிகளினதும் தொடர்பில் 20 ஆம் பந்தியின் (3) ஆம் உட்பந்தியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள முறையில் கூட்டிணைக்கப்பட்ட குழுவினதும் அதன் துணைநிலைக் கம்பெனிகளினதும் இலாபங்களையும் அல்லது நட்டங்களையும் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பனவற்றையும் எடுத்துக்காட்டுதல் வேண்டும்.

## பாகம் III

### 1 தொடக்கம் 22 ஆம் வரையான பந்திகளுக்கு ஏற்புடையனவான ஏற்பாடுகள்

23. மூன்றாம், 4 ஆம், 13 ஆம் (அவை முதனிலைச் செலவினங்கள் தொடர்பானவையாக இருக்கும் வரையில்) அத்துடன் 17 ஆம் பந்திகளின் ஏற்பாடுகள் கம்பெனி தொழிலைத் தொடங்குவதற்கு உரித்துடைய தேதிக்கு இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்திற்குப் பின்னர் வழங்கப்பட்ட முற்பகர்வு ஒன்றின் விடயத்தில் ஏற்புடையனவாதல் ஆகாது.

24. இவ்வட்டணையின் நோக்கத்திற்காக –

(அ) முற்பகர்வு வெளியிடப்பட்ட தேதியன்று கொள்வனவுப் பணம் முழுமையாகச் செலுத்தப்படாதிருக்குமிடத்து ;

(ஆ) ஒப்பப்பணத்திற்கென முற்பகர்வினால் கொடைமுனைவு செய்யப்பட்ட வழங்கீட்டினின்று கிடைத்த வரும்படிகளிலிருந்து கொள்வனவுப் பணம் முழுமையாக அல்லது பகுதியளவில் செலுத்தப்பட அல்லது கொடுத்துத் தீர்க்கப் படவிருக்குமிடத்து ;

(இ) ஒப்பந்தத்தின் வலிதுடைமை அல்லது நிறைவேற்றம் அவ் வழங்கீட்டின் விளைவில் தங்கியிருக்குமிடத்து,

கம்பெனியால் கொள்ளப்படவுள்ள ஏதேனும் ஆதனத்தின் விற்பனைக்காக அல்லது கொள்வனவுக்காக அல்லது கொள்வனவுக்கான ஏதேனும் விருப்புரிமைக்காக முழுமையாக அல்லது நிபந்தனையுடன் ஏதேனும் ஒப்பந்தத்திலீடுபட்டுள்ள ஒவ்வோராளும் ஒரு விற்போனாகக் கருதப்படுதல் வேண்டும்.

25. கம்பெனியினால் கொள்ளப்படவுள்ள ஆதனம் எதுவும் குத்தகைக்கு எடுக்கப்படவிருக்குமிடத்து "விற்போன்" எனும் சொல்லமைப்பு குத்தகை கொடுப்பவரை உள்ளடக்கியிருந்தாற்போன்றும் "கொள்வனவுப் பணம்" என்னும் சொல்லமைப்பு குத்தகைக்கான பிரதிபலனை உள்ளடக்கியிருந்தாற்போன்றும் "உப கொள்வனவுக்காரர்" என்னும் சொல்லமைப்பு உப குத்தகைக்காரர் ஒருவரை உள்ளடக்கியிருந்தாற்போன்றும் இவ்வட்டணை பயனுறுதல் வேண்டும்.

26. எட்டாம் பந்தியில், பங்குகளுக்கு அல்லது தொகுதிக்கடன்களுக்கு ஒப்பப்பணம் செலுத்துதல் பற்றிய எவையேனும் குறிப்பீடுகள் அவற்றை விற்பதற்கென அவர் கொடைமுனைவு செய்யும் நோக்கத்துடன் அவை எவ்வாளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டனவோ அல்லது ஒதுக்கீடு செய்ய உடன்பட்டுள்ளனரோ அவ்வாளிடமிருந்து அவற்றைக் கொள்ளலையும் உள்ளடக்குதல் வேண்டும்.

27. பத்தாம் பந்தியின் நோக்கங்களுக்காக, விற்போர் அல்லது அவர்களுள் எவரேனும் குழுமம் ஒன்றாக இருக்குமிடத்து, குழுமத்தின் உறுப்பினர்கள் வேறுவேறான விற்போராகக் கருதப்படுதலாகாது.

28. ஐந்தாண்டுகளுக்குக் குறைவான காலத்துக்குத் தொழிலைக் கொண்டு நடாத்தும் கம்பெனியொன்றின் விடயத்தில் அல்லது ஐந்து வருடங்களுக்குக் குறைவாகக் கொண்டுநடாத்தப்பட்ட தொழிலொன்றின் விடயத்தில், அக்கம்பெனியினது அல்லது அத்தொழிலினது கணக்குகள் நான்கு ஆண்டுகள் தொடர்பாக, மூன்று ஆண்டுகள் தொடர்பாக, இரண்டு ஆண்டுகள் தொடர்பாக அல்லது ஓராண்டு தொடர்பாக மட்டுமே தயாரிக்கப்பட்டிருக்குமிடத்து, விடயத்துக்கேற்றாற்போன்று, நான்கு ஆண்டுகள், மூன்று ஆண்டுகள், இரண்டு ஆண்டுகள், ஓராண்டு பற்றிய குறிப்பீடுகள் ஐந்தாண்டுகள் பற்றிய குறிப்பீடுகளுக்குப் பதிலாக இடப்பட்டாற் போன்று 20 ஆம், 21 ஆம், அத்துடன் 22 ஆம் பந்திகளினது ஏற்பாடுகள் பயனுறுவனவாதல் வேண்டும்.

29. இருபதாம், 21 ஆம், அத்துடன் 22 ஆம் பந்திகளில் "நிதியாண்டு" என்னும் சொல்லமைப்பு, விடயத்திற்கேற்றாற்போன்று கம்பெனியினது அல்லது தொழிலினது கணக்குகள் எந்த ஆண்டு தொடர்பாகத் தயாரிக்கப்பட்டுள்ளனவோ அந்த ஆண்டு என்று பொருளாகும் என்பதுடன் கம்பெனியின் அல்லது தொழிலின் நிதியாண்டு முடிவடையும் தேதியில் உள்ள ஏதேனும் மாற்றத்தின் காரணத்தினால் கம்பெனியின் அல்லது தொழிலின் கணக்குகள் ஓராண்டிற்குக் கூடுதலான அல்லது குறைவான காலப்பகுதிக்கெனத் தயாரிக்கப்பட்டிருக்குமிடத்து, கூடுதலான அல்லது குறைவான அந்தக் காலப்பகுதியானது அத்தகைய பந்திகளின் நோக்கத்திற்காக நிதியாண்டொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

30. இருபதாம், 21 ஆம் அத்துடன் 22 ஆம் பந்திகளினால் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் அறிக்கை அதில் கையாளப்படும் எவையேனும் இலாபங்களின் அல்லது நட்டங்களின் அல்லது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பவற்றின் தொகைகள் தொடர்பான சீராக்கங்களைச் செய்வது அவசியமானது என அறிக்கையைத் தயாரிக்கும் ஆளுக்குத் தோன்றும் தொகைகள் தொடர்பில் எவையேனும் சீராக்கங்களைக் குறிப்பொன்றின் மூலம் சுட்டிக்காட்டுதல் வேண்டும் அல்லது அச்சீராக்கங்களைச் செய்துவிட்டு, சீராக்கங்கள் செய்யப்பட்டுள்ளன எனச் சுட்டிக்காட்டுதல் வேண்டும்.

31. இருபதாம், 21 ஆம் அத்துடன் 22 ஆம் பந்திகளினால் தேவைப்படுத்தப்பட்ட கணக்காளர்களினாலான அறிக்கை எதுவும், கம்பெனியொன்றின் கணக்காய்வாளர்களாக நியமிக்கப்படுவதற்கு இச்சட்டத்தின்கீழ் தகைமைபெற்ற கணக்காளர்களினால் ஆக்கப்படுதல் வேண்டும் என்பதுடன, கம்பெனியின் அல்லது கம்பெனியின் துணைக்கம்பெனியின் அல்லது கொளிக் கம்பெனியின் அல்லது கம்பெனியின் கொளிக் கம்பெனியின் துணைக்கம்பெனியின் அலுவலர் ஒருவராக அல்லது சேவையாளர் ஒருவராக அல்லது பங்காளர் ஒருவராக அல்லது கம்பெனியின் அலுவலர் ஒருவராலோ அல்லது சேவையாளர் ஒருவராலோ தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள ஒருவராகவுள்ள எவரேனும் கணக்காளரால் தயாரிக்கப்படுதலுமாகாது ; அத்துடன் இப்பந்தியின் நோக்கத்திற்காக "அலுவலர்" என்னும் சொல்லமைப்பு உத்தேசப் பணிப்பாளர் ஒருவரை உள்ளடக்குதல் வேண்டும், ஆனால் கணக்காய்வாளர் ஒருவரை உள்ளடக்குதலாகாது.

**ஐந்தாவது அட்டவணை** (பிரிவு 131)

**ஆண்டு விபரத்திரட்டில் உள்ளடக்கப்படவேண்டிய விடயங்கள்**

எல்லாக் கம்பெனிகளும் அல்லது கம்பெனிகளின் ஏதேனும் வகுப்பு தமது ஆண்டு விபரத்திரட்டிலிருந்து தவிர்க்கக் கூடியனவான விடயங்களென இந்தச்

சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்ட எவையேனும் விடயங்கள் தவிர, கம்பெனியின் ஆண்டு விபரத்திரட்டில் பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்படுதல் வேண்டும் :—

(அ) அவ்வாண்டின் முதலாவது அல்லது ஒரே ஒரு சாதாரண பொதுக் கூட்டத் திகதியிலிருந்து பதினான்காம் நாளன்று கம்பெனியின் பங்குதாரர்களாக இருக்கும் எல்லா ஆட்களினது அத்துடன் கடைசி விபரத்திரட்டுத் திகதியிலிருந்து அல்லது முதலாவது விபரத்திரட்டின் விடயத்தில், கம்பெனி கூட்டிணைக்கப்பட்ட தேதியிலிருந்து பங்குதாரர்களாக இல்லாதொழிந்த எல்லா ஆட்களினதும் , நிரலொன்று ;

(ஆ) விபரத்திரட்டில் குறிப்பிடப்பட்டுள்ள கடந்தகால மற்றும் தற்போதைய எல்லாப் பங்குதாரர்களினதும் பெயர்கள் மற்றும் முகவரிகள் ; அத்துடன் விபரத்திட்டுத் தேதியில் இருந்துவரும் பங்குதாரர்கள் ஒவ்வொருவராலும் வைத்திருக்கப்படும் பங்குகளின் எண்ணிக்கையும், கடைசி விபரத்திரட்டுத் தேதியிலிருந்து அல்லது முதலாவது விபரத்திரட்டின் விடயத்தின், கம்பெனிக் கூட்டிணைப்புத் தேதியிலிருந்து முறையே இன்னமும் பங்குதாரர்களாகவிருக்கின்ற ஆட்களாலும் பங்குதாரர்களாக இல்லாதொழிந்தோரான ஆட்களாலும் கைமாற்றஞ் செய்யப்பட்ட பங்குகளையும் அந்தக் கைமாற்றங்கள் பதிவு செய்யப்பட்ட திகதிகளையும் குறித்துரைத்தல் வேண்டும் ; பெயர்கள் அகரவரிசைப்படி ஒழுங்குசெய்யப்பட்டிரா விட்டால், அத்தகைய நிரலில் உள்ள எவரேனும் ஆளின் பெயர் இலகுவில் கண்டுபிடிக்கக்கூடியமையை இயலச்செய்யும் வகையில் போதுமான சுட்டியொன்று அதனுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும் ;

(இ) கூட்டிணைக்கப்பட்ட திகதியும், அத்துடன் கம்பெனியின் பெயரிலான ஏதேனும் மாற்றமும் ;

(ஈ) கம்பெனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தின் முகவரி ;

(உ) கம்பெனியால் வழங்கப்பட்ட பங்குகளின் மொத்த எண்ணிக்கை ;

(ஊ) கம்பெனியின் கூறப்பட்ட மூலதனம் ;

(எ) இழப்பிக்கப்பட்ட பங்குகளின் மொத்த எண்ணிக்கை ;

(ஏ) விபரத்திரட்டுத் தேதியில் எப்பங்குகளுக்காக பங்கு ஆணைப்பத்திரங்கள் வெளிநிலுவையாக இருக்கின்றனவோ அப்பங்குகளின் மொத்தத் தொகை ;

(ஐ) கடைசி விபரத்திரட்டுத் தேதியிலிருந்து முறையே வழங்கப்பட்டவையும் கையொப்பமிடப்பட்டவையுமான பங்கு ஆணைப்பத்திரங்களின் மொத்தத் தொகை ;

(ஓ) ஒவ்வொரு பங்கு ஆணைப்பத்திரத்திலும் அடக்கப்பட்டுள்ள பங்குகளின் எண்ணிக்கை ;

(ஓ) கம்பெனிப் பணிப்பாளர்களினதும் செயலாளர்களினதும் இடாப்பில் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்று தேவைப்படுத்தப் பட்டவாறான, விபரத்திரட்டுத் தேதியில் கம்பெனியின் பணிப் பாளர்களாக அல்லது செயலாளர்களாக இருக்கின்ற ஆட்கள் தொடர்பிலான அத்தகைய எல்லா விபரங்களும் ;

(ஔ) இச்சட்டத்தின்கீழ் பதிவாளரிடம் பதிவுசெய்யப்படத் தேவைப் படுத்தப்பட்டுள்ள எல்லா ஈடுகளும், தாக்கீடுகளும் தொடர்பில் கம்பெனியின் கடனாழ் நிலையின் மொத்தத் தொகை ;

(க) விபரத்திரட்டுத் தேதியன்று கம்பெனியின் கணக்காய்வாளரது பெயரும் முகவரியும்.

**ஆறாவது அட்டவணை** (பிரிவு 186)

**கையளிக்கப்பட முடியாத தத்துவங்களை சபைக்கு வழங்கும் ஏற்பாடுகள்**

பிரிவு 51 (பங்குகளை வழங்குதல்)

பிரிவு 52 (பங்குகளை வழங்குவதற்கான பிரதிபயன்)

பிரிவு 56 (பகிர்தல்)

பிரிவு 58 (2) மற்றும் (3) (கூறப்பட்ட மூலதனம்)

பிரிவு 59 (4) (கூறப்பட்ட மூலதனக் குறைப்பு)

பிரிவு 64 (சொந்தப் பங்குகளைக் கொள்வனவு செய்தல்)

பிரிவு 67 (கம்பெனியின் விருப்புத்தெரிவின்பேரில் மீட்பு)

பிரிவு 70 (நிதிசார் உதவியை வழங்குவதிலான மட்டுப்பாடுகள்)

பிரிவு 114 (பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தின் மாற்றம்)

பிரிவு 241 (ஒன்றிணைக்கும் உத்தேசத்தை அங்கீகரித்தல்)

பிரிவு 242 (குறுகிய மாதிரியிலான ஒன்றிணைத்தல்)

பிரிவு 401 (நிர்வாகியை நியமிப்பதற்கான சபையின் தத்துவம்)

பிரிவு 415 (நிர்வாகி பதவியில் வெற்றிடம்)

**ஏழாவது அட்டவணை** (பிரிவு 249 (2))

**கடன்தருநர்களின் கூட்டங்களிலான நடவடிக்கைகள்**

1. கூட்டங்கள் நடாத்தும் முறைகள்

கடன்தருநர்களின் கூட்டமொன்று –

(அ) பங்குபற்றுவதற்கு உரித்துடைய கடன்தருநர்களும் மற்றும் அக்கூட்டத்திற்காக நியமிக்கப்பட்ட இடத்திலும் திகதியிலும் நேரத்திலும் சமுகமளிப்பதற்குத் தெரிவுசெய்துள்ள கடன் தருநர்களும் ஒன்றாகச் சேர்ந்த இருப்பதன்மூலம் நடாத்தப் படலாம் ;

(ஆ) எல்லாக் கடன்தருநர்களும் அதன் மூலம் பங்குபற்றி அக்கூட்டத் தினூடாக மற்றவர் ஒவ்வொருவரையும் ஒரேநேரத்தில் கேட்கக் கூடியதாக இருக்கும் செவிப்புல அல்லது செவிப்புல மற்றும் கட்புல தொடர்பாடல் வழிகள் மூலம் நடாத்தப்படலாம் ;அல்லது

(இ) பங்குபற்றுவதற்கு உரித்துடைய அக்கடன்தருநர்களிடையே இந்த அட்டவணையின் 7 ஆம் பந்திக்கிணங்க அஞ்சல் வாக்கெடுப்பு மூலம் நடாத்தப்படலாம்.

2. கூட்டம் பற்றிய அறிவித்தல்.

(1) (அ) இந்த அட்டவணையின் 1(அ) என்னும் பந்தியின்கீழ் நடாத் தப்படவிருக்கின்ற ஒவ்வொரு கூட்டத்தினதும் நேரமும் இடமும் பற்றிய எழுத்திலான அறிவித்தல் ; அல்லது

(ஆ) இந்த அட்டவணையின் 1(ஆ) என்னும் பந்தியின் கீழ் நடாத்தப் படவிருக்கின்ற ஒவ்வொரு கூட்டத்திற்கான நேரமும் தொடர் பாடல் முறையும் பற்றிய எழுத்திலான அறிவித்தல் ; அல்லது

(இ) இந்த அட்டணையின் 1(அ) அல்லது (ஆ) அல்லது (இ) என்னும் பந்தியின்கீழ் நடாத்தப்படவிருக்கின்ற ஒவ்வொரு கூட்டத் திற்காக வாக்களிக்கும் சீட்டுக்கள் திருப்பியனுப்பப்பட வேண்டிய நேரமும் முகவரியும் பற்றிய எழுத்திலான அறிவித்தல் ;

கூட்டத்திற்கு முன்னராக ஐந்து வேலை நாட்களுக்குப் பிந்தாமல் கூட்டத்தில் சமுகமளிப்பதற்கு உரித்துடைய ஒவ்வொரு கடன்தருநருக்கும் எவரேனும் ஒழிப்போனுக்கும் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

(2) அறிவித்தலானது –

(அ) கூட்டத்தில் கையாளப்படவிருக்கின்ற அலுவலின் தன்மை பற்றி போதுமான விபரத்துடன் கடன்தருநர், அது தொடர்பில் நியாயமான அபிப்பிராயத்தைக் கொள்ள இயலச்செய்யும் வகையில் கூறுதல் வேண்டும் ;

(ஆ) கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள ஏதேனும் தீர்மானத்தின் உரையைத் தருதல் வேண்டும் ; அத்துடன்

(இ) அத்தகைய ஒவ்வொரு தீர்மானம் தொடர்பில் வாக்களிக்கும் சீட்டு ஒன்றையும் வாக்களித்தல் மற்றும் அஞ்சலில் இடல் தொடர்பான அறிவுறுத்தல்களையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

(3) கடன்தருநர்களின் ஏதேனும் கூட்டம் பற்றிய அறிவித்தலொன்றில் உள்ள ஒழுங்கீனமொன்று அல்லது அவ்வறித்தலைப் பெறுவதிலான தவறுகை ஒன்று –

(அ) அவ்வொழுங்கீனம் அல்லது தவறுகை முக்கியமானதாக இல்லாவிட்டால் ;

(ஆ) கூட்டத்தில் சமுகமளித்து வாக்களிப்பதற்கு உரித்துடைய எல்லாக் கடன்தருநர்களும் ஒழுங்கீனம் அல்லது தவறுகை தொடர்பில் எதிர்ப்பின்றிக் கூட்டத்திற்கு சமுகமளித்தால் ; அல்லது

(இ) அத்தகைய எல்லாக் கடன்தருநர்களும் அவ்வொழுங்கீனத்தை அல்லது தவறுகையை விட்டுவிடுவதற்கு உடன்பட்டால்,

கடன்தருநர்களின் கூட்டம் ஒன்றின் மூலம் செய்யப்பட்ட எதனையும் வலிதற்றதாக்காது.

(4) கடன்தருநர்களின் கூட்டம் உடன்பட்டால், தலைமைதாங்குபவர், காலத்திற்குக் காலமும் இடத்திற்கிடமும் கூட்டத்தை ஒத்திவைக்கலாம்.

(5) ஒத்திவைக்கப்பட்ட கூட்டமொன்று ஒத்திவைப்பதற்கான தீர்மானத்தில் வேறோர் இடம் குறிப்பிட்டிருக்கப்படாவிட்டால், அதே இடத்தில் நடாத்தப்படல் வேண்டும்.

(6) இந்த அட்டவணையின் 1(அ) அல்லது (ஆ) என்னும் பந்தியின்கீழ் கடன்தருநர்களின் கூட்டமொன்று முப்பது நாட்களைவிடக் குறைவாக ஒத்திவைக்கப்படுகின்றவிடத்து, ஒத்திவைக்கப்பட்ட கூட்டத்தில் அறிவிக்கப்படல் மூலம் தவிர ஒத்திவைக்கப்பட்ட கூட்டத்தின் நேரம் மற்றும் இடம் பற்றிய அறிவித்தல் கொடுப்பது அத்தியாவசியமாகாது.

3. *தலைமைதாங்குபவர் –*

(1) ஒழிப்போன் ஒருவர் நியமிக்கப்பட்டு அத்துடன் அவர் சமுகமளித்திருக்குமிடத்து அல்லது ஒழிப்போன் நியமத்தர் ஒருவரை நியமித்து அந்த நியமத்தர் சமுகமளித்திருந்தால், அவர் இந்த அட்டவணையில் 1(அ) அல்லது (ஆ) என்னும் பந்திக்கு இணங்க நடாத்தப்படும் கூட்டமொன்றில் தலைமைதாங்குபவராகச் செயற்படுதல் வேண்டும்.

(2) ஒழிப்போன் எவரும் அல்லது ஒழிப்போன் அல்லது ஒழிப்போனின் எவரேனும் நியமத்தர் சமுகமளிக்காத ஏதேனும் விடயத்தில் பங்குபற்றும் கடன்தருநர் தம்முள் ஒருவரை கூட்டத்தில் தலைமைதாங்குபவராக செயலாற்றுவதற்கெனத் தெரிவுசெய்தல் வேண்டும்.

(3) இந்த அட்டவணையின் 1(இ) என்னும் பந்தியின்கீழ் கூட்டமொன்றைக் கூட்டுகின்ற ஆள், கூட்டத்தில் தலைமைதாங்குபவரினால் செய்யப்படவேண்டிய அவசியமான எல்லாவற்றையும் செய்தல் வேண்டும்.

4. *கூட்ட நடப்பெண்*

(1) (அ) வாக்களிப்பதற்கு உரித்துடைய மூன்று கடன்தருநர்கள் அல்லது அவர்களது பதிலிகள் சமுகமளித்திருந்தால் அல்லது அஞ்சல் வாக்குகள் மூலம் வாக்களித்திருந்தால் ; அல்லது

(ஆ) வாக்களிப்பதற்கு உரித்துடைய கடன்தருநர்களின் எண்ணிக்கை மூன்றை விஞ்சாததாகவிருந்தால், வாக்களிப்பதற்கு உரித்துடைய அக் கடன்தருநர்கள் அல்லது அவர்களுடைய பதிலிகள் சமுகமளித்திருந்தால் அல்லது அஞ்சல் வாக்குகள்மூலம் வாக்களித்திருந்தால்,

அது கடன்தருநர்களின் கூட்டமொன்றிற்கான கூட்ட நடப்பெண் ஒன்றாக அமையும்.

(2) கூட்டத்திற்கென நியமிக்கப்பட்ட நேரத்தின் பின்னர் முப்பது நிமிடங்களுக்குள் கூட்டநடப்பெண் ஒன்று சமுகமளித்திருக்காதவிடத்து, கூட்டமானது, அடுத்த கிழமையில் அதே நாளிற்கும், அதே நேரத்திற்கும் அதே இடத்திற்கும் அல்லது தலைமைதாங்குபவரினால் நியமிக்கப்படக்கூடியவாறாக அத்தகைய வேறு நாளிற்கும், நேரத்திற்கும், இடத்திற்கும் ஒத்திவைக்கப்படுதல் வேண்டும். அத்துடன் அந்த ஒத்திவைக்கப்பட்ட கூட்டத்தில் கூட்டத்திற்காக நியமிக்கப்பட்ட நேரத்திற்குப் பின்னர் முப்பது நிமிடங்களுக்குள்

கூட்ட நடப்பெண் ஒன்று சமுகமளிக்காது இருந்தால், சமுகமளித்துள்ள கடன்தருநர் அல்லது அவர்களது பதிலிகள் கூட்ட நடப்பெண் ஒன்றாக அமைவதாகக் கருதப்படுதல் வேண்டும்.

5. வாக்களித்தல்.

(1) பிரிவு 250 என்பதன் அல்லது பிரிவு 407 என்பதன் நோக்கங்களுக்காக நடாத்தப்படும் கூட்டமொன்று தவிர்ந்த, கடன்தருநர்களின் அல்லது கடன்தருநர்களின் வகுப்பொன்றின் ஏதேனும் கூட்டத்தில் நேரடியாக அல்லது பதிலி மூலமாக வாக்களிக்கும் அக் கடன்தருநர்களின் அல்லது கடன்தருநர்களின் அவ்வகுப்பின் எண்ணிக்கையிலும் ஒரு பெரும்பான்மை தீர்மானமொன்றுக்குச் சாதகமாக வாக்களித்தால் அத்தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகின்றது.

(2) பிரிவு 250 என்பதன் அல்லது பிரிவு 407 என்பதன் நோக்கங்களுக்காக நடாத்தப்படும் கடன்தருநர்களின் அல்லது கடன்தருநர்களின் வகுப்பொன்றின் ஏதேனும் கூட்டத்தில் நேரடியாக அல்லது பதிலி மூலமாக வாக்களிக்கும் அக் கடன்தருநர்களின் அல்லது கடன்தருநர்களின் வகுப்பில் எழுபத்தைந்து வீதத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் எண்ணிக்கையில் ஒரு பெரும்பான்மை தீர்மானமொன்றின் சார்பில் வாக்களித்தல் அத்தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகின்றது.

(3) கூட்டத்தில் தலைமைதாங்குபவர் அறுதியிடும் வாக்கொன்றைக் கொண்டிருக்க மாட்டார்.

6. பதிலிகள்

(1) கடன்தருநர் ஒருவர் வாக்களிக்கும் உரிமையை ஒன்றில் நேரடியாகச் சமுகமளித்திருப்பதன்மூலம் அல்லது பதிலி மூலம் பிரயோகிக்கலாம்.

(2) கடன்தருநர் ஒருவருக்கான பதிலியொருவர், அப்பதிலியே அக் கடன்தருநராக இருந்தாற்போன்று கடன்தருநர்களின் கூட்டமொன்றில் சமுகமளித்து தம் திறம் கேட்கப்படுவதற்கு உரித்துடையவராவார்.

(3) பதிலியொருவர், கடன்தருநரால் கையொப்பமிடப்பட்ட எழுத்திலான அறிவித்தல்மூலம் நியமிக்கப்படல் வேண்டும் ; அத்துடன் அந்த அறிவித்தலானது அந்நியமனம் குறிப்பிட்ட கூட்டமொன்றிற்கானதா அல்லது பன்னிரண்டு மாதங்களை விஞ்சாத குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்கானதா என்று கூறுதல் வேண்டும்.

(4) ஒழிப்போனுக்கு அல்லது ஒழிப்போன் செயற்படாவிட்டால், அக்கூட்டத்தைக் கூட்டுவதற்கான அறிவித்தல் எவ்வாளினால் கொடுக்கப்படுகின்றதோ அவ்வாளுக்கு அக்கூட்டம் தொடங்கு வதற்கு முன்னர் இருபத்து நான்கு மணித்தியாலங்களுக்குப் பிந்தாமல் பதிலி நியமனம் பற்றி அறிவித்தலின் பிரதியொன்று ஒப்படைக்கப்பட்டாலொழிய, கூட்டமொன்று தொடர்பிலான பதிலி நியமனமானது பயனுறுவதாகாது.

7. அஞ்சல் வாக்குகள்

(1) இந்த அட்டவணையின் 1(அ), (ஆ) அல்லது (இ) என்னும் பந்திக்கு இணங்க நடாத்தப்படும் கடன்தருநர்களின் கூட்டமொன்றில் வாக்களிப்பதற்கு உரித்துடைய கடன்தருநர் ஒருவர், அக்கூட் டத்தில் தீர்மானிக்கப்படவிருக்கின்ற கருமமொன்று தொடர்பில் அஞ்சல் வாக்கொன்றை அளிப்பதன்மூலம் வாக்களிப்பதற்கான உரிமையைப் பிரயோகிக்கலாம்.

(2) கூட்டம் பற்றிய அறிவித்தலானது, அக்கூட்டம் தொடர்பில் அஞ்சல் வாக்குகளைப் பெற்றுக்கொள்வதற்கும் கணக்கிடுவதற்கும் அதிகாரமளிக்கப்பட்ட ஆளின் பெயரைக் கூறுதல் வேண்டும்.

(3) கூட்டம் ஒன்று தொடர்பில் அஞ்சல் வாக்குகளை பெற்றுக்கொள் வதற்கும் கணக்கிடுவதற்கும் ஆளொருவர் அதிகாரமளிக்கப் படாவிட்டால் அல்லது அக்கூட்டம் பற்றிய அறிவித்தலில் அவ் வாறு அதிகாரமளிக்கப்பட்டிருப்பதாக ஆளெவரும் பெயரிடப் படாவிட்டால் -

(அ) ஒவ்வொரு பணிப்பாளரும் ;

(ஆ) கம்பெனியானது நிர்வாகத்தின்கீழ் இருந்தால், நிர்வாகி ; அல்லது

(இ) கம்பெனியானது ஒழித்துக்கட்டுகையில் இருந்தால், ஒழிப் போன், அவ்வாறு அதிகாரமளிக்கப்பட்டதாகக் கருதப்படு தல் வேண்டும்.

(4) அந்தக் கூட்டம் தொடர்பில் அஞ்சல் வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்கும் கணக்கிடுவதற்கும் அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஆளொருவருக்கு, அக்கூட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னர் இருபத்து நான்கு மணித்தியாலங்களுக்குப் பிந்தாமல் அவ்வாளை அடையக் கூடியவாறாக, அல்லது இந்த அட்டவணையின் 1(இ) பந்தியின்கீழ் கூட்டம் நடத்தப்பட்டால் வாக்களிக்கும் சீட்டு திருப்பி அனுப் பப்படுவதற்கெனக் குறிப்பிடப்பட்ட திகதியைவிடப் பிந்தாமல், வாக்களிக்கும் சீட்டில் அடையாளம் ஒன்றை இட்டு அனுப்புவதன் மூலம், கடன்தருநர் ஒருவர் அக்கூட்டத்தில் வாக்களிக்கப்பட விருக்கின்ற எல்லா விடயங்கள் அல்லது ஏதேனும் விடயத்தின் மீது அஞ்சல் வாக்கொன்றை அளிக்கலாம்.

(5) கூட்டமொன்று தொடர்பில் அஞ்சல் வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்கும் கணக்கிடுவதற்கும் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர் -

(அ) அவரால் பெற்றுக்கொள்ளப்பட்ட எல்லா அஞ்சல் வாக்குகளையும் ஒன்றாகச் சேகரித்தலும் ; அத்துடன்

(ஆ) வாக்களிக்கப்படவிருக்கின்ற ஒவ்வொரு தீர்மானம் தொடர்பிலும் -

(i) அத்தீர்மானத்திற்குச் சார்பாக வாக்களிக்கின்ற விடயத்திற்கேற்றாற்போல, கடன்தருநர்கள் அல்லது கடன்தருநர்களின் வகுப்பொன்றுக்குரிய கடன்தருநர்களின் எண்ணிக்கையைக் கணக்கிடுதலும், அத்துடன் அக்கடன்தருநர்களுக்கு கம்பெனியினால் செலுத்தப்படவிருக்கின்ற கடன்களின் முழுத் தொகையைத் தீர்மானித்தலும் ; அத்துடன்

(ii) அத்தீர்மானத்திற்கு எதிராக வாக்களிக்கின்ற, விடயத்திற்கேற்றாற்போல கடன்தருநர்களின் அல்லது கடன்தருநர்களின் வகுப்பொன்றுக்குரிய கடன்தருநர்களின் எண்ணிக்கையைக் கணக்கிடுதலும் அத்துடன் அக்கடன்தருநர்களுக்கு கம்பெனியினால் செலுத்தப்படவிருக்கின்ற கடன்களின் முழுத் தொகையைத் தீர்மானித்தலும் ; அத்துடன்

(இ) (i) அவர் (அ) மற்றும் (ஆ) என்னும் உட்பந்திகளில் தரப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்றினார் என்றும் ; அத்துடன்

(ii) உட்பந்தி (ஆ) என்பதனால் தேவைப்படுத்தப்பட்ட கணக்கிடுதலினதும், தீர்மானங்களினதும் விளைவுகளைக் குறிப்பிட்டும்,

சான்றிதழொன்றில் ஒப்பமிடுதலும் ; அத்துடன்

(ஈ) மேலே (இ) என்னும் உட்பந்தியினால் தேவைப்படுத்தப்பட்ட சான்றிதழ் கூட்டத்தில் தலைமைதாங்குகின்ற அல்லது கூட்டத்தைக் கூட்டுகின்ற ஆளுக்குச் சமர்ப்பிக்கப்பட்டது என்று உறுதிப்படுத்தலும்,

அவரது கடமையாகும்.

(6) அஞ்சல் வாக்குகள் அளிக்கப்பட்ட ஒரு தீர்மானத்தின்மீது இந்த அட்டவணையின் 1(அ) அல்லது (ஆ) என்னும் பந்தியின்கீழ் நடாத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் வாக்கெடுப்பொன்று எடுக்கப்பட்டால், கூட்டத்திற்குத் தலைமைதாங்கும் ஆள், அத்தீர்மானத்திற்குச் சாதகமாக அல்லது அத்தீர்மானத்திற்கெதிராக முறையாக அடையாளமிட்டு வாக்களிக்கும் சீட்டு ஒன்றில் எல்லாக் கடன்தருநர்களாலும் அனுப்பப்பட்டுள்ள வாக்களிப்பின் முடிவுகளை உள்ளடக்குதல் வேண்டும்.

(7) கடன்தருநர்களின் கூட்டமொன்று தொடர்பில் அளிக்கப்பட்ட அஞ்சல் வாக்குகள் தொடர்பில் (2) ஆம் உட்பந்தியின்கீழ் கொடுக்கப்பட்ட சான்றிதழொன்று கூட்டத்தின் நிகழ்ச்சிக் குறிப்புகளுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

8. கூட்டக் குறிப்புகள்

(1) கடன்தருநர்களின் கூட்டமொன்றுக்கு தலைமைதாங்கும் ஆள் அல்லது இந்த அட்டவணையின் 1(இ) என்னும் பந்தியின்கீழ் நடாத்தப்படும் கூட்டமொன்றின் விடயத்தில், கூட்டத்தைக் கூட்டுகின்ற ஆள் எல்லா நடவடிக்கைகளினதும் கூட்டக் குறிப்புகள் வைத்திருக்கப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(2) கூட்டத்திற்கு தலைமைதாங்கும் ஆளினால் அல்லது கூட்டத்தைக் கூட்டும் ஆளினால் சரியானவை என ஒப்பமிடப்பட்ட கூட்டக் குறிப்புகள் வழக்கு நடவடிக்கைகளின் முகத்தோற்றளவிலான சான்றாகவிருக்கும்.

9. கூட்டுத்தாபனங்கள் பிரதிநிதிகள்மூலம் செயற்படலாம்.

கடன்தருநர் ஒருவராக இருக்கின்ற கூட்டிணைக்கப்பட்ட குழு ஒன்று அதன் சார்பில் கடன்தருநர்களின் கூட்டமொன்றில் சமுகமளிப்பதற்கெனப் பிரதிநிதி ஒருவரை நியமிக்கலாம்.

10. ஏனைய நடவடிக்கைகள்

இந்த அட்டவணையிலும் இந்தச் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளிலும் ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர, கடன்தருநர்களின் கூட்டமொன்று அதனது சொந்த நடைமுறையை ஒழுங்குபடுத்தலாம்.

**எட்டாவது அட்டவணை** (பிரிவு-355 (2))

## நீதிமன்றத்தின் மேற்பார்வைக்கு அமைந்ததான ஒடுக்கலொன்றின் விடயத்தில் ஏற்புடையனவாகாத ஏற்பாடுகள்

பிரிவு-283 (உத்தியோகபூர்வமான பெறுநருக்கு சமர்ப்பிக்கப்படவேண்டிய கம்பெனியினது அலுவல்கள் பற்றிய கூற்று.)

பிரிவு-284 (உத்தியோகபூர்வ பெறுநரினால் செய்யப்படும் அறிக்கை.)

பிரிவு-285 (ஒழிப்போனை நியமிப்பதற்கு நீதிமன்றத்திற்குள்ள தத்துவம்.)

பிரிவு-286 (தற்காலிக ஒழிப்போனின் நியமனமும் தத்துவங்களும்.)

பிரிவு-287 (ஒடுக்கலில் ஒழிப்போனின் நியமனம், மகுடம் என்பன.)

பிரிவு-288 (உத்தியோகபூர்வமான பெறுநர் அல்லாத ஆள் ஒழிப்போனாக நியமிக்கப்பட்டவிடத்தான ஏற்பாடுகள்.)

பிரிவு-289 (ஒழிப்போர் பற்றிய பொதுவான ஏற்பாடுகள்.)

பிரிவு-293 (ஒழிப்போனினது தத்துவங்களைப் பிரயோகித்தலும் கட்டுப்படுத்தலும்.)

பிரிவு-294 (ஒழிப்போரால் வைத்திருக்கப்படவேண்டிய புத்தகங்கள்)

பிரிவு-295 (ஒழிப்போனின் கொடுப்பனவுகள் வங்கிக்குக் கொடுக்கப்படுதல்.)

பிரிவு-296 (ஒழிப்போர்களது கணக்குகளின் கணக்காய்வு.)

பிரிவு-297 (ஒழிப்போர்மீது பதிவாளரின் கட்டுப்பாடு.)

பிரிவு-298 (ஒழிப்போரை விடுவித்தல்.)

பிரிவு-299 (பரிசோதனைக்குழு நியமிக்கப்பட வேண்டுமா எனத் தீர்மானிப்பதற்கான கடன்தருநர்களினதும் உதவுதொகை செலுத்துநர்களினதும் கூட்டம்.)

பிரிவு-300 (பரிசோதனைக் குழுவின் அமைப்பும் நடவடிக்கைகளும்)

பிரிவு-301 (பரிசோதனைக்குழு இல்லாதவிடத்து நீதிமன்றத்திற்குள்ள தத்துவங்கள்.)

பிரிவு-307 (விசேட முகாமையாளரை நியமித்தல்.)

பிரிவு 311 (ஊக்குநர், பணிப்பாளர் என்போரைப் பகிரங்க விசாரணை செய்யும்படி கட்டளையிடுவதற்கான தத்துவம்.)

பிரிவு 213 (கம்பெனிகளை முகாமை செய்வதிலிருந்து தடுக்கப்பட்டதும்)

பிரிவு 315 (நீதிமன்றத்தின் குறித்தசில தத்துவங்களை ஒழிப்போனுக்கு கையளித்தல்.)

**ஒன்பதாவது அட்டவணை** (பிரிவு 365(2))

**முன்னுரிமை உரிமைக் கோரிக்கைகள்**

1. ஒழிப்போன், அவை நிரலிடப்பட்டுள்ள முன்னுரிமை ஒழுங்கில் பின்வருவனவற்றை முதலாவதாகச் செலுத்துதல் வேண்டும் :-

(அ) ஒழிப்போனின் கடமைகளை நிறைவேற்றுகையிலும் தத்துவங்களைப் பிரயோகிக்கையிலும் ஒழிப்போனால் முறையாக உறப்பட்ட கட்டணங்களும் செலவுகளும் அத்துடன் ஒழிப்போனின் ஊதியமும் ;

(ஆ) எவ்வாளினது செலவுகள் நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனவோ அவ்வாள் விண்ணப்பத்தின்மீது தோற்றுவது தொடர்பான நியாயமான செலவுகள் உட்பட கம்பெனி ஒழித்துக்கட்டப்படல் வேண்டும் என்ற கட்டளை ஒன்றுக்காக நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் செய்துள்ள ஆள் ஒருவரின் நியாயமான செலவுகள் ;

(இ) ஒழித்துக்கட்டல் குழு ஒன்றினால் அவசியமாக உறப்பட்ட உண்மையாக அதிகமாகச் செலவுசெய்த செலவுகள்.

2. முதலாம் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட உரிமைக்கோரிக்கைகளைக் கொடுத்த பின்னர் அடுத்ததாக ஒழிப்போன் பின்வரும் உரிமைக் கோரிக்கைகளைச் செலுத்துதல் வேண்டும் :-

(அ) எவரேனும் ஊழியருக்கான எல்லாச் சகாயநிதிய வருமதிகளும், ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதிய வருமதிகளும் பணிக்கொடைக் கொடுப்பனவு வருமதிகளும் ;";

(ஆ) ஒழித்துக்கட்டல் ஆரம்பிக்க முன்னரான ஒரு முழு ஆண்டிற்கென விதிக்கப்படும் அல்லது விதிக்கப்படற்பாலதான வருமான வரி, அத்தகைய ஆண்டு உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதியால், 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கத் தெரிவுசெய்யப்படும் ;

(இ) ஒழித்துக்கட்டல் ஆரம்பிக்க முன்னரான ஒரு முழு ஆண்டிற்கென விதிக்கப்படும் அல்லது விதிக்கப்படற்பாலதான மொத்த விற்பனவு வரவு வரி ;

(ஈ) ஒழித்துக்கட்டல் ஆரம்பிக்க முன்னரான நான்கு வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிகளுக்கு விதிக்கப்படும் அல்லது விதிக்கப்படற்பாலதான பெறுமதி சேர்க்கப்பட்ட வரி,

அத்தகைய வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிகள் உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதியால் 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, பெறுமதிசேர்க்கப்பட்ட வரிச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கத் தெரிவுசெய்யப்படும் ;

(ஊ) ஒழித்துக்கட்டல் ஆரம்பிக்கையில் கம்பெனியிடமிருந்து சென்மதியாகவுள்ளதும் அத்தேதிக்கு நேர்முன்னரான பன்னிரண்டு மாதங்களுக்குள் சென்மதியாக வந்துள்ளனவும் செலுத்தப்படற்பாலனவுமான (வருமானவரி தவிர்ந்த) எல்லா வீதவரிகளும் அல்லது வரிகளும் ;

(ஊ) காலத்திற்குக்காலம் அளிக்கப்பட்ட அல்லது ஆற்றப்பட்ட எவையேனும் சேவைகளுக்காக மீண்டுவரும் கொடுப்பனவுகள் என்றவகையில் அரசாங்கத்துக்குப் போகுமதியான எல்லா சென்மதிகளும் ;

(எ) எவரேனும் ஊழியருக்குச் செலுத்தப்படற்பாலனவான கைத்தொழில் நீதிமன்ற அளிப்புகளும், வேறு நியதிச்சட்ட வருமதிகளும் ;

(ஏ) நாலாம் பந்திக்கு அமைவாக, ஒழித்துக்கட்டல் ஆரம்பிக்க முன்னரான நான்கு மாதங்களின்போது கம்பெனிக்கு ஆற்றிய சேவைகள் தொடர்பில் எவரேனும் ஊழியரின் எல்லாக் கூலிகளும் அல்லது சம்பளங்களும், தரகு என்றவகையில் முற்றாக உழைக்கப்பட்டனவாயினுஞ்சரி, இல்லையாயினுஞ்சரி, அத்துடன் அவ்வாறு ஆற்றப்பட்ட சேவைகள் தொடர்பில் எவரேனும் சேவையாளின் வேலைநேர அடிப்படையில் அல்லது துண்டுவேலை அடிப்படையில் செலுத்தப்படற்பாலனவாயினுஞ்சரி ;

(ஐ) ஒழித்துக்கட்டல் ஆரம்பமாக முன்னர் அல்லது ஒழித்துக்கட்டல் ஆரம்பித்ததன் காரணத்தால் தொழில் முடிவுறுத்தப்படுவதன்மீது ஊழியர் ஒருவருக்கு (அல்லது ஊழியர் இறக்கின்றவிடத்து ஊழியரின் உரிமையில் உள்ள வேறு எவரேனும் ஆளுக்கு) செலுத்தப்படற்பாலதாக வருகின்ற விடுமுறைக் கொடுப்பனவு ;

(ஒ) ஒழித்துக்கட்டலின் ஆரம்பத்தில் கம்பெனியானது, வேலையாட்கள் நட்டஈட்டுக் கட்டளைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ளவாறான அவ்வகையான ஒப்பந்தத்தின்கீழ் ஊழியருக்கு கைமாற்றப்படவும் உரித்தாக்கப்படவும்கூடிய உரிமைகளை கொண்டிருந்தாலொழிய, ஒழித்

துக்கட்டல் ஆரம்பிப்பதற்கு முன்னர் திரண்டிருக்கும் தொகைகளாக உள்ளனவும் அத்தகைய கட்டளைச் சட்டத்தின்கீழ் ஏதேனும் நட்டஈடு தொடர்பில் அல்லது நட்டஈட்டிற்கான பொறுப்புத் தொடர்பில் சென்மதியாகவுள்ளனவுமான எல்லாத் தொகைகளும் ;

(ஓ) நான்காவது பந்திக்கு அமைவாக, ஊழியரின் கடப்பாடுகளைத் திருப்தி செய்வதற்காக ஓர் ஊழியரின் கூலிகளிலிருந்து அல்லது சம்பளத்திலிருந்து கம்பெனியால் கழிக்கப்பட்ட தொகைகள்.

3. இரண்டாம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட உரிமைக் கோரிக்கைகளைச் செலுத்தியதன் பின்னர், ஒழிப்போன் அடுத்ததாக இச்சட்டத்தின் 254 ஆம் பிரிவின்(ஈ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட எவையேனும் செலவுகளின் தொகையைச் செலுத்துதல் வேண்டும்.

4. 2 (ஏ) என்னும் பந்தியில் எத்தொகைக்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டுமோ அத்தொகை, எவரேனும் ஊழியர் ஒருவரின் விடயத்தில் பன்னிரெண்டாயிரம் ரூபாவை அல்லது ஒழித்துக்கட்டல் தொடங்குகையில் தீர்மானிக்கப்பட்டவாறான அத்தகைய கூடுதலான தொகையை விஞ்சுதலாகாது.

5. வேலையாட்கள் நட்டஈட்டுக் கட்டளைச் சட்டத்தின்கீழ் ஏதேனும் நட்டஈடு இருவார காலத்துக்கொருமுறையான ஒரு கொடுப்பனவாக இருக்குமிடத்து, அந்த நட்டஈடு தொடர்பில் செலுத்தப்பட வேண்டியதான தொகை, 2(ஐ) என்னும் பந்தியின் நோக்கங்களுக்காக அந்தக் கட்டளைச் சட்டத்தின் கீழ் எந்த மொத்தப் பணத்துக்காக அந்தக் கொடுப்பனவுகள் மாற்றுத் தொகையாகக் கொடுக்கப்படக்கூடுமோ, அந்த மொத்தப் பணத்தின் தொகையாக இருத்தல் வேண்டும்.

6. பின்வருமாறு கொடுப்பனவுசெய்யும் நோக்கத்துக்காக எவரேனும் ஆளினால் முற்பணமாகக் கொடுக்கப்பட்ட பணத்திலிருந்து கொடுப்பனவொன்று, —

(அ) கூலிகள் அல்லது சம்பளம் என்ற கணக்கால் கம்பெனியொன்றின் ஊழியரொருவருக்குச் செய்யப்பட்டுள்ளவிடத்து ; அல்லது

(ஆ) அத்தகைய எவரேனும் ஊழியருக்கு அல்லது ஊழியர் இறந்திருக்கின்றவிடத்து ஊழியரின் சார்பில் வேறு எவரேனும் ஆளுக்கு விடுமுறை கொடுப்பனவுக் கணக்கால் செய்யப்பட்டுள்ளவிடத்து,

பணமானது எந்த ஆளினால் முற்பணமாகக் கொடுப்பனவு செய்யப் பட்டதோ அந்த ஆள் ஒழித்துக்கட்டலில் அவ்விதம் முற்பணமாகக் கொடுக்கப்பட்ட பணம் தொடர்பில் அக்கொடுப்பனவு செய்யப்படா விட்டால் அந்த ஊழியர் அல்லது அந்த ஊழியரின் சார்பில் கொடுப் பனவைப் பெறுகின்ற வேறு ஆள் கொண்டுள்ள முன்னுரிமையைப் போன்ற அதே உரிமையைக் கொண்டவராக இருப்பார்.

7. முதலாம், இரண்டாம் அத்துடன் மூன்றாம் பந்திகள் ஒவ்வொன்றிலும் நிரலிடப்பட்டுள்ள உரிமைக் கோரிக்கைகள் –

(அ) அவற்றை ஈடுசெய்வதற்கான சொத்துக்கள் போதாதனவாக இருந்தாலொழிய, அவற்றிடையே சமமாக வரிசைப்படுத் தப்படுதல் வேண்டும் என்பதுடன் முற்றாகச் செலுத்தப் படுதலும் வேண்டும் ; அத்துடன் சொத்துக்கள் போதாதன வாக இருக்கும் விடயத்தில், அவை சம விகிதாசாரமாகத் தணிந்தற்றுப்போதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) பொதுக் கடன்தருநர்களுக்குக் கொடுப்பனவு செய்வதற்காகக் கிடைக்கத்தக்கனவாக இருக்கும் கம்பெனியின் சொத்துக்கள் அவற்றை ஈடுசெய்வதற்குப் போதாதவையாக இருக்குமள வுக்கு, மிதக்கும் தாக்கீடொன்றுக்கு அமைவாக உள்ள சொத் துக்கள் தொடர்பில் ஆட்களின் உரிமைக் கோரிக்கைகளுக்கு மேலாக முன்னுரிமை கொண்டிருத்தல் வேண்டும் என் பதுடன் அந்தச் சொத்துக்களிலிருந்து அதற்கிணங்கச் செலுத் தப்படுதலும் வேண்டும்.

இப்பந்தியின் நோக்கங்களுக்காக, "மிதக்கும் தாக்கீடு" என்னும் பதம் அது உருவாக்கப்படும் நேரத்தில் மிதக்கும் தாக்கீடொன்றை அளித்த, ஆனால் அதன்பின்னர் நிலையான அல்லது குறிப்பான பொறுப்பான வந்துள்ள பிணைப்பொறுப்பு ஒன்றை உள்ளடக்கும்.

8. இந்த அட்டவணையின் நோக்கங்களுக்காக –

(அ) ஒரு விடுமுறைக் காலப்பகுதி தொடர்பிலான அல்லது சுகவீனத்தினால் அல்லது வேறு நியாயமான காரணத்தி னால் வேலைக்கு வருகைதராதிருக்கும் ஒரு காலப்பகுதி தொடர்பிலான ஏதேனும் ஊதியம், அந்தக் காலப்பகுதி யின்போது கம்பெனிக்கு ஆற்றிய சேவைகள் தொடர்பிலான கூலிகளாகக் கருதப்படல் வேண்டும் ;

(ஆ) "விடுமுறை ஊதியம்" என்னும் சொல்லமைப்பு எவரேனும் ஆள் தொடர்பில், அவரது ஊழிய ஒப்பந்தத்தின் அல்லது (எழுத்திலான ஏதேனும் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளை அல்லது விடுக்கப்பட்ட பணிப்பு உட்பட) ஏதேனும்

சட்டவாக்கத்தின் பயனைக் கொண்டு விடுமுறை அனுமதிக் கப்படுவதற்கு அவர் உரித்துடையவராக வரும்வரை கம்பெனியுடனான அவரது ஊழியம் தொடர்ந்திருக்கு மாயின், சாதாரண நெறிமுறையின்போது விடுமுறை காலப் பகுதி தொடர்பில் அவருக்குச் செலுத்தப்படற்பாலதாக வந்திருக்கும் ஊதியத்தின் கணக்கால் செலுத்தப்படற்பாலன வாகும் எல்லாப் பணத்தொகைகளையும் உள்ளடக்கும் ;

(இ) “வீதவரிகள்” அல்லது “வரிகள்” என்னும் சொல்லமைப்பு அரசாங்கத்தால் அல்லது ஏதேனும் மாகாண சபையால் அல்லது உள்ளூர் அதிகாரசபையால் அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் அதிகாரசபையால் விதிக்கப்பட்ட அல்லது ஏதேனும் வீதவரி, விதிப்பனவு, வரி அல்லது வரிமதிப்பீடு எனப்பொருள்படும்.

**பத்தாவது அட்டவணை** (பிரிவு 366 (5))

**ஒழித்துக்கட்டுதலில் உரிமைக் கோரிக்கைகளின் கொடுப்பனவு**

1. ஒழித்துக்கட்டுதலில் உரிமைக்கோரிக்கை ஒன்றைச் செய்துள்ள கடன்தருநர்களுக்கு, ஒழிப்போன் தம்மால் வைத்திருக்கப்படும் நிதிகளில் அவர் பொருத்தமானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய தொகையை, காலத்திற்குக் காலம், பகிர்ந்தளிக்கலாம்.

2. ஒழிப்போன், கடன்தருநர்களுக்கு ஏதேனும் கொடுப்பனவைச் செய்ய முன் பெற்றுக்கொள்ளப்பட்ட எல்லா உரிமைக் கோரிக்கைகள், உரிமைக்கோரிக்கையின் தொகை, அத்துடன் கோரிக்கை ஒன்றைச் செய்த ஒவ்வோர் ஆளுக்கும் செலுத்தப்படவிருக்கின்ற தொகை என்பவற்றைக் காட்டும் நிரலொன்றைத் தயாரித்தல் வேண்டும்.

3. கொடுப்பனவு ஒன்றைச் செய்ய முன்னர் ஒழிப்போன் –

(அ) கொடுப்பனவில் பங்குபற்ற விரும்புகின்ற எவரேனும் கடன்தருநர் தமது உரிமைக்கோரிக்கையை எத்தேதிக்கு முன்னர் கோப்பிடல் வேண்டுமோ அத்தேதியை நிர்ண யிக்கலாம் ; அத்துடன்

(ஆ) கொடுப்பனவு செய்யப்படவிருக்கின்றது என்றும், (அ) எனும் உட்பந்தியின்கீழ் நிர்ணயிக்கப்பட்ட திகதி பற்றியும் பகிரங்க அறிவித்தல் கொடுக்கலாம்.

4. மூன்றாம் பந்தியின் (அ) என்னும் உட்பந்தியின் நோக்கத்திற்காக நிர்ணயிக்கப்பட்ட திகதி ஒன்று, 3 ஆம் பந்தியின் (ஆ) என்னும் உட்பந்தியின்கீழ் கொடுக்கப்பட்ட பகிரங்க அறிவித்தலின் திகதிக்குப் பின்னர் இருபது வேலை நாட்களுக்குக் குறைவானதாகவோ அல்லது உத்தேசிக்கப்பட்ட கொடுப்பனவுத் திகதிக்கு முன்னர் இருபது வேலை நாட்களுக்கு அதிகமானதாகவோ இருத்தலாகாது.

5. ஒழிப்போன், 3 ஆம் பந்தியின் கீழ் கொடுக்கப்பட்ட அறிவித்த லொன்றில் குறித்துரைக்கப்பட்ட திகதிக்கு முன்னர் உரிமைக் கோரிக்கை ஒன்றைச் செய்யாத எவரேனம் கடன்தருநரை கொடுப் பனவு ஒன்றிலிருந்து விலக்கிவிடலாம்.

6. இரண்டாம் பந்தியின்கீழ் ஒழிப்போனால் தயாரிக்கப்பட்ட நிரலானது, கொடுப்பனவுத் திகதிக்கு முன்னர் பத்து வேலைநாட்களுக்குக் குறைவாக எந்த வேலைநாட்கள் உள்ளனவோ அந்த ஒவ்வொரு வேலை நாளிலும், உரிமைக் கோரிக்கை ஒன்றைச் செய்துள்ள எவரே னும் கடன்தருநரால் அல்லது கம்பெனியின் எவரேனும் பங்குதாரரால் பார்வையிடப்படுவதற்கு கிடைக்கத்தக்கதாக இருத்தல் வேண்டும்.

7. ஒழிப்போன், நிரலில் காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு கடன்தருநருக்கும் 3 ஆம் பந்தியின்கீழ் கொடுக்கப்பட்டுள்ள பகிரங்க அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருக்கும் திகதியன்று, அக்கடன்தருநரின் உரிமைக் கோரிக்கையை ஏற்றுக்கொள்வது பற்றிய ஒழிப்போனின் முடிவை நேர்மாறாக்கும் அல்லது திரிபுபடுத்தும் கட்டளையொன்றுக்காக 292 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது 348 ஆம் பிரிவின்கீழ் விண்ணப்பம் பற்றிய அறிவித்தல் அத்திகதிக்கு முன்னர் ஒழிப்போனுக்குச் சேர்ப்பிக்கப்பட்டிருந்தாலொழிய, கொடுப்பன வைச் செய்தல் வேண்டும். இப்பந்திக்கிணங்கச் செய்யப்பட்ட கொடுப்பனவு எதுவும், உரிமைக்கோரிக்கை ஒன்றன் ஒழிப்போனின் ஏற்றுக்கொள்ளுகைக்கான ஏதேனும் பின்னரான தட்டிக்கேட்பின் விளைவாக, குழப்பப்படுவதற்கு ஏதுவாதல் ஆகாது.

8. ஒழிப்போனால், கடன்தருநர்களுக்கு ஒன்று அல்லது அதற்கு மேற் பட்ட கொடுப்பனவுகள் செய்யப்பட்டதன் பின்னர் கடன்தருநர் ஒருவர் உரிமைக் கோரிக்கை ஒன்றைச் செய்கின்றவிடத்து —

(அ) அக்கடன்தருநர் அவருடைய உரிமைக்கோரிக்கை தொடர் பில், ஏனைய எல்லாக் கடன்தருநர்களும் போல முன்னரே கொடுக்கப்பட்ட உரிமைக் கோரிக்கைகளுக்குச் சமமான நிலையில் அவ்வாறு செய்வதற்கு கம்பெனியின் சொத்துக்கள் போதுமானதாகவுள்ள அளவுக்கு, கொடுக்கப்படுதல் வேண்டும் ;

(ஆ) ஏனைய கடன்தருநர்களுக்கு ஏற்கனவே செய்யப்பட்ட எவை யேனும் கொடுப்பனவுகள் குழப்பப்படமாட்டாது ;

(இ) அந்தக் கடன்தருநர் சமமான உரிமைக்கோரிக்கைகள் கொண்ட ஏனைய கடன்தருநர்களைப் போன்று அதே முறையில் அத்தகைய கடன்தருநர்களுக்கான ஏதேனும் மேலதிகக் கொடுப்பனவுகளில் பங்குபற்றுவதற்கு உரித்துடையவர்களாதல் வேண்டும்.

9. கடன்தருநர்களுக்கு கொடுப்பனவு ஒன்று செய்யப்படுகின்ற நேரத்தில், எவரேனும் கடன்தருநரால் செய்யப்படும் உரிமைக்கோரிக்கை ஒன்று —

(அ) ஒழிப்போனால் நிராகரிக்கப்பட்டுள்ளவிடத்தும், அத்துடன் கடன்தருநர் ஒழிப்போனின் முடிவை நேர்மாறாக்கும் அல்லது திரிபுபடுத்தும் கட்டளை ஒன்றுக்காக 292 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது 348 ஆம் பிரிவின்கீழ் நீதிமன்றத்திற்கு விண்ணப்பித்துள்ளவிடத்தும் ; அல்லது

(ஆ) ஒழிப்போனால் அனுமதிக்கப்பட்டிருக்கின்றவிடத்து, ஆனால் ஒழிப்போனின் முடிவை நேர்மாறாக்கும் அல்லது திரிபுபடுத்தும் கட்டளை ஒன்றுக்காக 292 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழான அல்லது 348 ஆம் பிரிவின் கீழான விண்ணப்பம் ஒன்று பற்றிய அறிவித்தல் ஒழிப்போனுக்குச் சேர்ப்பிக்கப்பட்டிருக்குமிடத்து,

ஒழிப்போன் —

(இ) அந்த உரிமைக்கோரிக்கை தொடர்பில் அந்தக் கடன்தருநருக்குச் செலுத்துகை ஒன்றைச் செய்தலாகாது ;

(ஈ) அவர் பொருத்தமானதெனக் கருதினால் அந்த உரிமைக் கோரிக்கை தொடர்பில் செய்யப்படவிருக்கின்ற கொடுப்பனவுக்காகவும் ஏனைய கடன்தருநர்களுக்கு ஏதேனும் கொடுப்பனவு செய்ய முன்னர் உரிமைக் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டால், விண்ணப்பம் தொடர்பான சாத்தியமான செலவுக்காகவும் ஏற்பாடுகளைச் செய்யலாம்.

10. ஒழித்துக்கட்டல் தொடங்குவதற்கு முன்னராயினுஞ்சரி அல்லது அதன் பின்னராயினுஞ்சரி, முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ கம்பெனிக்குள்ள ஏதேனும் தனிசை அல்லது கடப்பாட்டைச் செலுத்தியுள்ளவரான அல்லது நிறைவேற்றியுள்ளவரான தனிசுக்கு அல்லது கடப்பாட்டுக்கு உத்தரவாதமளிப்பவர் ஒருவர் பிரதான கடன்தருநருடனான முரணாகவுள்ள ஏதேனும் உடன்படிக்கைக்கு அமைவாக, —

(அ) கொடுக்கப்பட்டுள்ளதான அல்லது நிறைவேற்றப்பட்டுள்ளதான பணத்தொகை தொடர்பில் பிரதான கடன்தருநர் ஒழித்துக்கட்டலில் உரிமைக் கோரிக்கையொன்றைச் செய்

திருப்பாராயின், அப்பணத்தொகை தொடர்பிலான உரிமைக்கோரிக்கை சம்பந்தப்பட்டவரை பிரதான கடன்தரு நரின் இடத்தில் நிற்பவராகலாம் ; அல்லது

(ஆ) வேறுவகையாக, செலுத்தப்பட்ட அல்லது நிறைவேற்றப்பட்ட தனிசுத்தொகை தொடர்பில் அல்லது கடப்பாடு தொடர்பில் உரிமைக்கோரிக்கையொன்றைச் செய்யலாம்.

**பதினொராவது அட்டவணை** (பிரிவு 429 (1))

## மிதக்கும் தாக்கீடுகளை உருவாக்கும் சாதனங்களிலுள்ள உட்கிடையான நியதிகள்

1. கம்பெனியானது, மிதக்கும் தாக்கீட்டில் (இந்த அட்டவணையில் "பிணைப்பொறுப்புடைய ஆதனம்" என்று குறிப்பீடு செய்யப்படும்) உள்ளடக்கப்பட்டுள்ள ஆதனத்தை, வழமையான தொழில் நெறிமுறை யின்போது தவிர, விற்றலோ வேறுவகையில் கையுதிர்த்தலோ ஆகாது.

2. மிதக்கும் தாக்கீடானது காலத்திற்குக்காலம் கொடைபெறுநருக்கு கம்பெனியால் செலுத்தப்படவேண்டியிருக்கின்ற எல்லாப் பணத் தொகைகளினதும் கொடுப்பனவுக்கான பிணைப்பொறுப்பாகவிருத் தல் வேண்டும்.

3. ஏதேனும் பணத்தொகை அல்லது எவையேனும் பணத்தொகைகள் கொடைபெறுநருக்கு செலுத்தப்படலாம் என்பதும் அத்துடன் காலத் திற்குக்காலம் கம்பெனிக்கும் கொடைபெறுநருக்கும் இடையில் ஏதே னும் கணக்கு வரவில் இருக்கலாம் என்பதும் எவ்வாறிருப்பினும், அத்துடன், மிதக்கும் தாக்கீட்டின் இறுதியான விடுப்பு, அதில் உள்ளடக்கப்பட்டுள்ள ஆதனம் தொடர்பில் கொடைபெறுநரால் நிறைவேற்றப்படும் வரை, கணக்குப் பற்றிய ஏதேனும் தீர்வு அல்லது எத்தன்மைத்தான வேறு கருமம் அல்லது விடயம் எவ்வாறிருப்பினும், மிதக்கும் தாக்கீடும் அதனை உருவாக்கும் சாதனமும் முழுமையாக வலுவுள்ளதாகவும் பயனுள்ளதாகவும் இருத்தல் வேண்டும் என் பதுடன் காலத்திற்குக்காலம் கொடைபெறுநருக்கு கம்பெனியால் செலுத்தப்படவேண்டிய எவையேனும் பணத்தொகைகள் கொடுப் பனவுக்காக தொடர்ந்திருக்கும் பணப்பொறுப்பொன்றாக இருத்தலும் வேண்டும்.

4. கம்பெனி பின்வருவனவற்றுக்குப் பொறுப்பேற்றுக் கொள்கிறது :—

(அ) அதனைப் பிணிக்கும் எல்லாச் சட்டங்களுடனும் முறையாக வும் காலந்தவறாமலும் இணங்கியொழுகுதல் ;

(ஆ) கம்பெனிக்கும், கொடைபெறுநருக்கும் இடையிலான எல்லா உடன்படிக்கைகளினதும் நியதிகளை முறையாகவும் காலந் தவறாமலும் நிறைவேற்றுவதுடன் அவற்றுக்கு இணங்கி யொழுகுதல் ;

(இ) பிணைப்பொறுப்புடை ஆதனம் தொடர்பிலான வாடகைகள், வரிகள், காப்புறுதிக் கட்டுப்பணங்கள் மற்றும் வேறு கொடுப்பனவுகள் உட்பட பணவகையான அதன் எல்லாப் பொறுப்புகளையும் தனிசுகளையும், கொடுப்பனவுகளையும் செலவுகளையும் அத்துடன் கடப்பாடுகளையும் செலுத்த வேண்டிய தேதியன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்துதல் அல்லது விடுவித்தல் ;

(ஈ) பிணைப்பொறுப்புடை ஆதனம் தொடர்பிலான எல்லாக் குத்தகைகள், உபகுத்தகைகள், குத்தகைக்கான உடன்படிக் கைகள், வாடகை உடன்படிக்கைகள் அல்லது அனுமதிப் பத்திரங்கள் உட்பட, ஒப்பந்தத்திலிருந்து எழுவதாயினுஞ்சரி அல்லது வேறு வகையில் எழுவதாயினுஞ்சரி கம்பெனியைப் பிணிக்கும் எல்லாக் கடப்பாடுகள், கடமைகள் மற்றும் மட்டுப் பாடுகள் என்பவற்றுக்கு இணங்கியொழுகுதல் ;

(உ) அதன் சொத்துக்கள் எல்லாவற்றையும் நல்ல ஒழுங்கிலும் நல்ல நிலைமையிலும் வைத்திருத்தல் அத்துடன் நல்ல வர்த்தக பழக்கத்துக்கிணங்க அதனது வியாபாரத்திற்கு அவசியமான சொத்துக்களை பராமரித்தல், சீராக்குதல், புதுப்பித்தல் அல்லது மாற்றீடு செய்தல் ;

(ஊ) அதன் வியாபாரத்தைக் கொண்டுநடாத்துவதற்காக தற்போது தேவைப்படும் அல்லது வர்த்தகரீதியாக நன்மையாக அமையும் அல்லது தேவைப்படுவதாக வரக்கூடிய அல்லது வர்த்தகரீதியாக நன்மையாக அமையக்கூடிய ஏதேனும் அதிகாரவளிப்புகளைப் பெறுதல், நடைமுறையில் வைத்திருத்தல் அத்துடன் அதனைக் கையுதிர்க்காதிருத்தல் அல்லது காலங்கழிந்துபோக அனுமதிக்காதிருத்தல், அத்துடன் அந்த அதிகாரமளிப்புகளிலுள்ள எல்லா நிபந்தனைகளுக்கும் விதிப்புரைகளுக்கும் இணங்கியொழுகுதல் ;

(எ) தீ, விபத்து, களவு, வன்மமான சேதம், வெள்ளப்பெருக்கு, மற்றும் பூகம்பம் போன்றவற்றாலான இழப்புக்கு அல்லது சேதத்துக்கு எதிராக அப்போதைக்குக் காப்புறுதி செய்யத் தகு தன்மைத்தான பிணைப்பொறுப்புடைய ஆதனத்தின் அத்தகைய பாகங்களைக் காப்புறுதி செய்தலும் ; அத்துடன் காப்புறுதி செய்து வைத்திருத்தலும் ;

(ஏ) அத்தகைய எல்லாக் காப்புறுதிகள் தொடர்பிலும் செலுத் தப்படக்கூடியதான கட்டுப்பணங்களை முறையாகச் செலுத்துதல்.

5. கம்பெனியானது, சாதனத்தில் உள்ள வெளிப்படுத்தப்பட்ட அல்லது உட்கிடையான நியதிகளுள் எதனையும் அல்லது கம்பெனிக்கும் கொடைபெறுநருக்கும் இடையிலான ஏதேனும் உடன்படிக்கையின் நியதிகளுள் எதனையும் நிறைவேற்றுவதற்கு அல்லது அவதானிப் பதற்கு அசட்டையாகவிருக்கின்றவிடத்து அல்லது தவறுகின்ற விடத்து, கொடைபெறுநர், கம்பெனியின் சார்பில் கொடுப்பனவைச் செய்வதன்மூலமோ அல்லது செயற்பாடு மூலமோ அத்தகைய ஏதேனும் நியதியை நிறைவேற்றுவதற்கான அல்லது அவதானிப் பதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும். ஆனால், அவ்வாறு செய்வதற்கு கட்டுப்பட்டவராகார். இந்தப் பந்தியின்கீழ் கொடை பெறுநரால் செலுத்தப்பட்ட அல்லது உறப்பட்ட எல்லாச் செலவுகள், செலவினங்கள் அத்துடன் இறுப்பனவுகள் மிதக்கும் தாக்கீட்டினால் பிணைப்பொறுப்பாக்கப்பட்ட பணங்களுடன் சேர்க் கப்படுதல் வேண்டுமென்பதுடன் அவற்றின் பாகமாக அமைதலும் வேண்டும்.

6. கம்பெனியானது –

(அ) கணக்காய்வாளர்களின் அறிக்கைகள், ஆண்டறிக்கைகள் மற்றும் கம்பெனியால் தயாரிக்கப்பட்டு பங்குதாரர்களுக்கு அனுப்பப்பட வேண்டும் எனச் சட்டத்தின்மூலம் தேவைப் படுத்தப்பட்ட வேறு ஆவணங்கள் எல்லாவற்றுடனும் தயாரிக் கப்பட வேண்டும் என்று சட்டத்தின்மூலம் தேவைப்படுத்தப் பட்ட எல்லா நிதிக் கூற்றுக்களையும் சாத்தியமாகக்கூடியளவு விரைவாக, அத்துடன் எச்சந்தர்ப்பத்திலும் அதன் ஒவ் வொரு நிதி ஆண்டுகளின் இறுதித் திகதியின் பின்னர் மூன்று மாதங்களுக்குள்ளாக கொடைபெறுநருக்கு ஒப்படைத்தல் வேண்டும் ;

(ஆ) கொடைபெறுநர், எழுத்திலான அறிவித்தல்மூலம் நியாய மாகத் தேவைப்படுத்தக்கூடியவாறான, கம்பெனியின் வியாபாரம், நிதி நிலைமை மற்றும் தொழிற்பாடுகள் பற்றிய அத்தகைய ஏனைய தகவல்களை வழங்குதல் வேண்டும் ;

(இ) அதன் பங்குதாரர்களுக்கு எவையேனும் அறிவித்தல்கள், ஆவணங்கள் அல்லது தகவல்கள் அனுப்பப்படும் அதே நேரத்தில், அத்தகைய அறிவித்தல்களின், ஆவணங்களின் அல்லது தகவலின் பிரதிகளை கொடைபெறுநருக்கு வழங்கு தலும் வேண்டும்.

7. கம்பெனிக்கும் கொடைபெறுநருக்கும் இடையேயுள்ள வேறு ஏதேனும் உடன்படிக்கை எவ்வாறிருப்பினும், மிதக்கும் தாக்கீட்டினால் பிணைப்பொறுப்பாக்கப்பட்ட எல்லாப் பணத்தொகைகளும் பின் வரும் நிகழ்ச்சிகளுள் ஏதேனும் ஒன்று சம்பவிப்பதன்மீது கொடையாளியின் கோரிக்கையின்மீது உடனடியாகப் சென்மதியாக வருதல் வேண்டும் என்பதுடன் கொடை பெறுநரால் செலுத்தப்படற்பாலதாக வருதலும் வேண்டும் :—

(அ) கம்பெனியினால் கொடைபெறுநருக்குக் கொடுபடற்பாலதான ஏதேனும் தொகையைச் செலுத்தவேண்டிய திகதியன்று கம்பெனி செலுத்தத் தவறுதல் ;

(ஆ) சாதனத்தில் உள்ள வேறு எவையேனும் நியதிகளை அல்லது கம்பெனிக்கும் கொடைபெறுநருக்கும் இடையிலான உடன்படிக்கையில் வேறு எவையேனும் நியதிகளை கம்பெனி நிறைவேற்றுவதற்கு அல்லது அவதானிப்பதற்குத் தவறுதல் ;

(இ) கம்பெனியின் ஏதேனும் ஆதனத்தில் பிணைப்பொறுப்பு அக்கறை ஒன்றை வைத்திருப்பவர் எவரும் உடைமையில் எடுத்தல் அல்லது பிணைப்பொறுப்புடை ஆதனம் முழுவதும் தொடர்பாக அல்லது அதன் ஏதேனும் பாகம் தொடர்பாக பெறுநர் ஒருவர் அல்லது ஒழிப்போன் நியமிக்கப்படுதல் ;

(ஈ) கம்பெனியின் எவரேனும் கடன்தருநர் பிணைப்பொறுப்புடை ஆதனம் முழுவதற்கும் அல்லது அதன் ஏதேனும் பாகத்திற்கு எதிராக நிறைவேற்றுகை பெறுதல் ;

(உ) கம்பெனி ஒடுக்கப்பட ஆரம்பித்தல் ;

(ஊ) கம்பெனியின் நிர்வாகி ஒருவர் நியமிக்கப்படுதல் ;

(எ) வழமையான தொழில்நெறிமுறையின்போது தவிர அதன் பொறுப்புமுயற்சி முழுவதும் அல்லது அதன் ஏதேனும் பாகம் கம்பெனியால் கையுதிர்க்கப்படுதல் ;

(ஏ) கம்பெனி வியாபாரத்தைக் கொண்டு நடாத்தாதொழிதல்.

8. கம்பெனியின் எல்லா ஆதனங்களையும் பொறுப்பு முயற்சியையும் பிணைப்பொறுப்புடை ஆதனம் உள்ளடக்கியிருக்குமிடத்து, 7 ஆம் பந்தியின்கீழ் கோரிக்கை செய்யப்பட முன்னரோ அல்லது செய்யப்பட்ட பின்னரோ அப்பந்தியில் குறித்துரைக்கப்பட்ட நிகழ்ச்சிகளுள் எதுவும் சம்பவிப்பதன்மீது கொடைபெறுநர் பிணைப்பொறுப்புடை ஆதனத்தின் பெறுநர் ஒருவரை நியமிக்கலாம்.

**பன்னிரெண்டாவது அட்டவணை** (பிரிவு 443 (2))

**பெறுநர்களுக்குள்ள தத்துவங்கள்**

1. பாகம் XV என்பதன்கீழ் நியமிக்கப்பட்ட ஒவ்வொரு பெறுநரும் நீதிமன்றத்தின் எந்தச் சாதனத்தினால் அல்லது கட்டளையின்கீழ் நியமனம் செய்யப்பட்டதோ அந்தச் சாதனத்திற்கு அல்லது கட்டளைக்கு அமைய, பின்வருவனவற்றைச் செய்வதற்குத் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) பெறுநராண்மையிலுள்ள ஆதனத்தின் வருமானத்தை வழக்குமூலம் அல்லது வேறுவகையில் கோரிக்கை செய்தலும் மீளப்பெறுதலும் ;

(ஆ) அறவிடப்பட்ட வருமானத்துக்காகப் பற்றுச்சீட்டுகளை வழங்குதல் ;

(இ) பெறுநராண்மையிலுள்ள ஆதனத்தை முகாமைசெய்தல் ;

(ஈ) பெறுநராண்மையிலுள்ள ஆதனத்தைக் காப்புறுதி செய்தல் ;

(உ) பெறுநராண்மையிலுள்ள ஆதனத்தைத் திருத்துதலும் பராமரித்தலும் ;

(ஊ) பெறுநராண்மையிலுள்ள ஆதனம் தொடர்பிலானவையும் அத்துடன் கொடைதருநரின் உடைமையில் அல்லது கட்டுப்பாட்டின்கீழ் இருக்கின்றவையுமான புத்தகங்களை அல்லது ஆவணங்களை நியாயமான எந்நேரத்திலும் பரிசோதித்தல் ;

(எ) பெறுநராண்மையிலுள்ள ஆதனம் தொடர்பிலானவையும் அத்துடன் கொடையாளி அல்லதா வேறு ஆளொருவரின் உடைமையில் அல்லது கட்டுப்பாட்டின் கீழ் இருக்கின்றனவுமான புத்தகங்களை அல்லது ஆவணங்களைப் பரிசோதிக்கும் உரிமை ஒன்றை கொடையாளியின் சார்பில் பிரயோகித்தல் ;

(ஏ) எல்லா ஆதனங்கள் அல்லது பொருளளவில் எல்லா ஆதனங்கள் தொடர்பிலும் அத்துடன் கம்பெனியொன்றின் பொறுப்புமுயற்சி தொடர்பிலும் பெறுநர் நியமிக்கப்பட்டிருக்கின்ற விடயமொன்றில் கம்பெனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தை மாற்றுதல் ;

(ஐ) இந்தப் பந்தியில் எடுத்துக்காட்டப்பட்ட அல்லது இந்தச் சட்டத்தின் வேறு ஏதேனும் ஏற்பாட்டினால் அளிக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிப்பதன் இடைநேர்விளைவான மற்றெல்லா விடயங்களையும் செய்தல்.

2. ஓராம் பந்தியின் ஏற்பாடுகளை மட்டுப்படுத்தாமல் கம்பெனியின் முழு ஆதனம் தொடர்பிலும் அத்துடன் அதன் பொறுப்புமுயற்சி தொடர்பிலும் நியமிக்கப்பட்டிருக்கின்ற பெறுநர் ஒருவர், நீதிமன்றத்தின் எந்தச் சாதனத்தால் அல்லது கட்டளையின்கீழ் அந்நியமனம் செய்யப்பட்டதோ அந்தச் சாதனத்துக்கு அல்லது கட்டளைக்கு அமைவாக, பின்வருவனவற்றைச் செய்வதற்குத் தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) கம்பெனியின் ஆதனத்தை உடைமையில் எடுத்தலும் சேகரித்தலும் பெறுதலும், அந்த நோக்கத்திற்காக தமக்குப் பொருத்தமானதெனத் தோன்றக்கூடியவாறான அத்தகைய நடவடிக்கைகளை எடுத்தலும் ;

(ஆ) பகிரங்க ஏலவிற்பனை மூலம் அல்லது தனிப்பட்ட ஏலவிற்பனை மூலம் அல்லது தனிப்பட்ட ஒப்பந்தம்மூலம் விற்றல் அல்லது வேறுவகையில் கையுதிர்த்தல் ;

(இ) பணம் திரட்டல் அல்லது பணம் கடனெடுத்தல் அத்துடன் கம்பெனியின் ஆதனத்தின்மீது அத்தகைய பணத்திற்காக பிணைப்பொறுப்பை அளித்தல் ;

(ஈ) அவரது பணிகளைப் புரிவதில், அவருக்கு உதவுவதற்கென மன்றாடியார் ஒருவரை அல்லது கணக்காளர் ஒருவரை அல்லது வேறு தொழில்சார் தகைமைவாய்ந்த ஆளொருவரை நியமித்தல் ;

(உ) கம்பெனியின் பெயரிலும் கம்பெனியின் சார்பிலும் ஏதேனும் வழக்கை அல்லது சட்ட நடவடிக்கைகளைக் கொண்டுவருதல் அல்லது எதிர்வாதிடல் ;

(ஊ) கம்பெனியைப் பாதிக்கின்ற ஏதேனும் விடயத்தை நடுத்தீர்ப்புக்கு ஆற்றுப்படுத்தல் ;

(எ) கம்பெனி அதனது இலச்சினையை வைத்திருந்தால், அதனைப் பயன்படுத்துதல் ;

(ஏ) எல்லாச் செயல்களையும் செய்தலும் அத்துடன் கம்பெனியின் பெயரிலும் கம்பெனியின் சார்பிலும் ஏதேனும் ஆவணத்தை நிறைவேற்றுதலும் ;

(ஐ) கம்பெனியின் பெயரிலும் கம்பெனியின் சார்பிலும் ஏதேனும் நாணய மாற்றுண்டியலை அல்லது வாக்குறுதிப்பத்திரத்தை வரைதல், ஏற்றுக்கொள்ளல், ஆக்குதல் அத்துடன் புறக்குறிப்பிடுதல் ;

(ஒ) எந்தத் தொழிலை அவர் தாமாகவே செய்வதற்கு முடியாதிருக்கின்றதோ அல்லது எந்தத் தொழில் முகவர் ஒருவரால் கூடியளவு வசதியாகச் செய்யக்கூடியதாக இருக்கின்றதோ அந்த ஏதேனும் தொழிலைச் செய்வதற்காக எவரேனும் முகவரை நியமித்தல் அத்துடன் ஊழியர்களை வேலைக் கமர்த்தலும் பதவி விலக்கலும் ;

(ஓ) கம்பெனியின் ஆதனத்தைக் காசாகத் திரட்டிக் கொள்வதற்கு அவசியமாகக்கூடியவாறான (வேலைகளைக் கொண்டு நடாத்துதல் உட்பட) அத்தகைய எல்லா விடயங்களையும் செய்தல் ;

(ஔ) அவருடைய பணிகளை பிரயோகிப்பதற்கு அவசியமானதாக வுள்ள அல்லது அதன் நேர்விளைவானதாக இருக்கின்ற ஏதேனும் கொடுப்பனவைச் செய்தல் ;

(க) கம்பெனியினது தொழில் மற்றும் ஆதனம் தொடர்பில் காப்புறுதிகளைப் பயனுறுத்தலும் பேணுதலும் ;

(ங) கம்பெனியின் தொழிலைக் கொண்டுநடாத்துதல் ;

(ச) கம்பெனியினது துணைநிலைக் கம்பெனிகளைத் தாபித்தல் ;

(ஞ) கம்பெனியினது தொழிலையும் ஆதனத்தினையும் முழுமை யாக அல்லது அவற்றின் ஏதேனும் பாகத்தை கம்பெனி யினது துணைநிலைக் கம்பெனிகளுக்கு கைமாற்றுதல் ;

(ட) கம்பெனியின் ஏதேனும் ஆதனத்தின் குத்தகை அல்லது வாடகை ஒன்றில் ஒப்படைப்பை வழங்குதல் அல்லது ஏற்றல், அத்துடன் கம்பெனியின் தொழிலுக்குத் தேவைப்படும் அல்லது வசதியான ஏதேனும் ஆதனத்தை குத்தகைக்கு அல்லது வாடகைக்கு எடுத்தல் ;

(ண) கம்பெனியின் சார்பில் ஏதேனும் உடன்பாட்டொழுங்கை அல்லது இணக்கத்தைச் செய்தல் ;

(த) கம்பெனிக்கு கடன்கொடுக்க வேண்டியவரான எவரேனும் ஆளின் வங்குறோத்தில், கடனிறுக்க வகையின்மையில், நடுக் கட்டலில் அல்லது ஒழித்துக்கட்டலில் வரிசையாக நிற்றலும் உரிமைக் கோரிக்கை செய்தலும் பங்கிலாபங்களைப் பெறுதலும் அத்துடன் அத்தகைய எவரேனும் ஆளின் கடன் தருநர்களுக்கான நம்பிக்கைப்பொறுப்பு வசதிகளுக்கு இசைவளித்தலும் ;

(ந) கம்பெனியின் ஒழிப்போன் ஒருவரின் நியமனத்திற்காக விண்ணப்பித்தல் ;

(ப) இந்தப் பந்தியில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகிப்பதன் இடைநேர்விளைவான மற்றெல்லா விடயங் களையும் செய்தல்.

**பதின்மூன்றாம் அட்டவணை** (பிரிவு 497 (1))

**கடல்கடந்த கம்பெனிகளின் சொத்துக்களை ஒழித்துக்கட்டுதல்**

1. அவசியமான எல்லா திரிபுகள் மற்றும் விலக்குகளுடனும் அத்துடன் குறிப்பாகப் பின்வரும் திரிபுகள், விலக்குகளுடனும் பாகம் XII என்பதானது கடல்கடந்த கம்பெனி ஒன்றின் இலங்கையில் உள்ள சொத்துக்களை ஒழித்துக்கட்டுவதற்கு ஏற்புடையதாதல் வேண்டும் –

(அ) சொத்துக்கள் தொடர்பான குறிப்பீடுகள் இலங்கையில் உள்ள சொத்துக்கள் பற்றிய குறிப்பீடுகளாகக் கொள்ளப் படுதல் வேண்டும் ;

(ஆ) கம்பெனி ஒன்று பற்றிய குறிப்பீடுகள் கடல்கடந்த கம்பெனி யொன்று பற்றிய குறிப்பீடுகளை உள்ளடக்குவதாகக் கொள் ளப்படுதல் வேண்டும் ;

(இ) கலைத்தல் பற்றிய குறிப்பீடுகள் இலங்கையில் தொழிலைக் கொண்டு நடத்தாதொழிதல் பற்றிய குறிப்பீடுகளாகக் கொள்ளப்படுதல் வேண்டும் ;

(ஈ) பின்வரும் ஏற்பாடுகள் அத்தகைய ஒடுக்குதலொன்றுக்கு ஏற்புடையனவாகா :–

(i) 267 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) மற்றும் (இ) பந்திகள் ;

(ii) பிரிவுகள் 268, 269, 315, 319 தொடக்கம் 355 வரை (இரண்டும் உட்பட) 393, 394 மற்றும் 395 ;

(உ) ஒடுக்குதல் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து கடல்கடந்த கம்பெனி களும் அதன் பணிப்பாளர்களும், பாகம் XII இன் கீழ் பிரயோகிக்கப்படுவதற்கு தேவைப்படுவன அல்லது அனு மதிக்கப்படுவன அல்லாதனவான இலங்கையில் உள்ள கம்பெனியின் சொத்துக்களுடன் தொடர்புடைய எவை யேனும் தத்துவங்கள், பணிகள், அத்துடன் கடமைகள் என்பவற்றைக் கொண்டிராதொழிதல் வேண்டும்.

2. இந்தச் சட்டத்தில் அடங்கியுள்ளது எதுவும் எந்தச் சொத்துக்கள் தொடர்பில் ஒழிப்போன் நியமிக்கப்பட்டிருக்கின்றாரோ அந்தச் சொத்துக்கள் தொடர்பில் —

(அ) ஒழித்துக்கட்டுதலில் உரிமைக் கோரிக்கை செய்யப்பட்டிராத தனிசு ஒன்று அல்லது ஒழித்துக்கட்டுதல் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் செலுத்தப்படாது மீந்திருக்கும் தனிசொன்றன் மிகுதி தொடர்பில், கடல் கடந்த கம்பெனிக்கு எதிராக இலங்கைக்கு வெளியே வழக்கு நடவடிக்கைகளைக் கொண்டுவருவதற்கு ; அல்லது

(ஆ) ஒழித்துக்கட்டுதல் பூர்த்திசெய்யப்பட்ட பின்னர் செலுத்தப் படாது மீந்திருக்கும் தனிசு ஒன்றில் மிகுதி தொடர்பில் இலங் கையில் வழக்கு நடவடிக்கைகளைக் கொண்டுவருவதற்கு,

கடல்கடந்த கம்பெனியொன்றின் கடன்தருநர் ஒருவருக்குள்ள உரிமையை விலக்குதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்